# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
மூன்றாவது கூட்டத்தொடர்

**1981** ஆகஸ்ட் 27, 28, 29, 31 மற்றும் செப்டம்பர்
1 ஆம் நாட்கள்
(தொகுதி XXV - எண்கள் 1 முதல் 5 வரை)

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.
[விலை ரூ. 1]

D
N211,31 N81
N83.25
122211

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

**திரு. சாதிக் அலி**

### அமைச்சரவையில் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு இராம எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)-வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மைப் பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு–சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம்; கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராம தானம் நெடுஞ். ா. லகள்

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி—(போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி–கதர்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவு சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்–அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU SADIQ ALI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU. M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for finance)—finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON THIRU. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)– Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical. Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. Dr H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition ecluding grant of Liquor permits and Passports.

17. Hon. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Traning.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Childdren Welfare, Animal Husbandary, Beggars Home Orphanages, Indians Overseas Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்**

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

**பேரவைத் துணைத் தலைவர்**

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. வி. வி. சுவாமிநாதன்,
2. திரு. ஜே. எஸ். இராசு,
3. திரு. என். எஸ். வி. சித்தன்,
4. திரு. எஸ். சிவசாமி.

**சட்டமன்றப் பேரவை செயலாளர்**

திரு. கி. மு. அழகர்சாமி, பி. எ., பி. எல்.

**துணைச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.,

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ., பி. ஜி.எல்.,

**குழு அலுவலர்.**

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்).

**சார்புச் செயலாளர்கள்**

திரு. வி. சீதாராமன். பி. காம்.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ, பி. எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ., பி, எல்.,

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி. எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ., (எஸ்டேட் அதிகாரி).

திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21-6-1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
23-1-1981 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.



தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ், | தர்மபுரி |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 12 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 | இராசரத்தினம், திரு. து, | பூந்தமல்லி |
| 23 | இராசாம்பாள், திருமதி, தா. | தலைவாசல் (செ.வ.) |
| 24 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே. கே. | சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 | இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி | செஞ்சி |
| 32 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 34 | இராமலிங்கம், திரு. எ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 35 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ணநகர் |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ) |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 43 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 45 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 46 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 48 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 49 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 51 | கந்தசாமி. திரு. பி. | பொங்கலூர் |
| 52 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 53 | கருணாநிதி. டாக்டர், மு. | அண்ணாநகர் |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 55 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 57 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ.வ.) |
| 61 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 62 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 65 | கிருஷ்ணமூர்த்தி. திரு. சா. | ஆண்டிமடம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்ப |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 69 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 70 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 71 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 72 | குமரிஅனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 73 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 72 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 79 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 83 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 84 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என் எஸ் வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டமுத்தூர் |
| 107 | சுந்த்ரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந் யம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகை ர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ) |
| 122 | செல்வராசன். திரு. அ. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி: நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிபபாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம் |
| 139 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 | திருமாறன். திரு. பெ. | ஆலங்குடி |
| 142 | திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.). |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 150 | நடராசன். திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153 | நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி ஜி. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி. திரு. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 168 | பாண்டியன். திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 172 | பாலகிருஷ்னன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | சிவகாசி |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன். திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 178 பீச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180 புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181 பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182 பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 183 பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 184 பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185 பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186 பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 187 பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 188 பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189 மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190 மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191 மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192 மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 193 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 194 முசிறிப்புத்தன், திரு. ம | திருச்சி-11 |
| 195 முத்துகிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197 முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 முத்துவேல், திரு. என. | வானூர் (செ. வ.) |
| 199 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 201 முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 202 மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 203 மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 204 யசோதா, திருமதி. டி. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.). |
| 205 ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 207 ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 208 ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 209 ராமசாமி, திரு. எஸ். என். | சாத்தன்குளம் |
| 210 ராஜமாணிக்கம், திரு.எஸ்.கே. | முசிறி |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 212 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |

(வெற்றிடம்)



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 215 வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216 விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 217 விஜயபாலல், திரு. என். | பூம்புகார் |
| 218 விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 219 விஜயராகவன் திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 221 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 222 வீரானம்பலம், திரு. க வெ | மேலூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | சாஞ்சி |
| 224 வெங்கடரெட்டி. திரு. டி. | ஓசூர் |
| 225 வெங்கடேசன். திரு. பி. எம் | பெரணமல்லூர் |
| 226 வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 227 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 228 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 230 ஜான் வின்செண்ட், திரு .மு | நாங்குனேரி |
| 231 ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு.ஜே. | திருவட்டார் |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் —அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராசவானந்தம் —அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே —அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது —அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர்.

1981 ஆகஸ்ட் 27, 28, 29, 31 மற்றும் செப்டம்பர் 1 ஆம் நாட்கள் (தொகுதி 25-எண்கள் 1 முதல் 5 வரை.)


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i-iv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் v

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்.) vii xiv

அமைச்சரின் அறிக்கை—

மின்சாரக் கட்டுப்பாடு நீக்கப்பெறுவது 89

அரசினர் சட்ட முன்வடிவுகள்—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 355—395

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981 255—260

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 637—653

கூடுதல் மானியக் கோரிக்கைகள் 1981-82 விவாதம்-தொடர்ச்சி 165—215

சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981. 445—446

636—637

திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் பேத்து வாரம்தாரர்கள் சட்டமுன்வடிவு 1981 சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981. 653—654

நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981. 216

பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1981. 446—447

பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981. 505—516

354

519—524

591—635

அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

| | பக்கங்கள் |
|---|---|
| பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981 | 354—519, 591—635 |
| மதுரை-காமராஜர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 486—502 |
| மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981 | 217—245, 246—255 |
| **அரசினர் தனித் தீர்மானம்—** | |
| நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்துதல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுதல் | 475—476 |
| **அரசினர் தீர்மானங்கள்—** | 475, 518 |
| அலுவல் வரிசையில் மாற்றம் | 637 |
| | 645—655 |
| தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை-விவாதம் | 63—116, 119—137 |
| பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது குறித்து நடவடிக்கை | 503—504 |
| பேரவை நாள் குறுப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 662 |
| விதி 30 (3)-ஐத் தளர்த்தல் | 354—355 |
| விதி 31ஐத் தளர்த்தல் | 119 |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 63 |
| **அறிக்கைகள் அளித்தல்—** | 590 |
| உரிமைக் குழு | 590—591 |
| பொது நிறுவனங்கள் குழு | 354, 461 |
| மதிப்பீட்டுக் குழு | 590 |
| **அறிவிப்புகள்—** | |
| அவைக் குறிப்பிலிருந்து ஓர் அமைச்சரின் சில கருத்துக்கள் நீக்கம் | 8 |
| ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981 (ஆ.இ) | 25 |
| கூடுதல் மானியக் கோரிக்கைகள், 1981-82 (ஆ.இ) | 16 |



| | பக்கங்கள் |
|---|---|
| **அறிவிப்புகள்—தொடர்ச்சி** | |
| சட்டமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் என்.வி.என். சோமு, து. புருஷோத்தமன் கைது செய்யப் பெற்றுள்ளது | 395,439 |
| சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ) | 636 |
| நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள். | 246 |
| நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) | 216 |
| பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது. | 502—503 |
| பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டமுன் வடிவு, 1981 (ஆ.இ) | 518 |
| பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ) | 518 |
| பேரவை அலுவல் | 63 |
| மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி | 43,217 |
| வெள்ளை அறிக்கைமீதான விவாதம் தொடர்வது | 116—117 |
| **உரிமைப் பிரச்சினைகள்—** | |
| மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது | 43—46 |
| வானொலி நிலையத்தின் மீது | 574—576 |
| **ஏடுகள்—** | |
| பேரவை முன் வைக்கப் பெற்றவை | 117—118, 289—290, 396—397, 524, 662—666 |
| **ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—** | |
| சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தேர்வு ஒத்தி வைப்பு. | 437—438 |
| தமிழகத்தின் எல்லையோர கடற்பிராந்தியத்தில் இலங்கை கடற்படை போர் ஒத்திகை நடத்தல். | 46—51 |
| பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் | 119—137 |
| வடாற்காடு மாவட்டம், நாங்குநேரி கிராமத்தில் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கி சூடு | 332—340 |
| ஹோசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம். | 577—581 |

பக்கங்கள்


கவன ஈர்ப்புகள்

- கரூரில் நெசவாளர்கள் உண்ணாவிரதம் குறித்து 353
- சென்னை குடிசைப் பகுதிகளில் குடிதண்ணீர் தொட்டிகள் அமைத்தல். 51—60
- திருவல்லிக்கேணி இந்து மேல்நிலைப் பள்ளி மூடப்பெற்றுள்ளது. 582—586
- நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் விவசாயிகளை வெளியேற்றுதல். 340—353
- பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறைகேடு. 586—590
- மதுரை மாவட்டம், ஆயக்குடி குடிநீர் திட்டம் 60—63
- மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து. 439—440
- வடாற்காடு மாவட்டம் விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல். 441

தகவல் கோரல்

- இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒருநாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம் கூட்டுவது குறித்து. 322—331, 437

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 39—43, 319—322, 570—571

- கைதான உறுப்பினர்களை விடுதலை செய்வது குறித்து. 569—571, 661—662
- சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் வரும் தண்ணீர் 436
- டைரக்டர்—ஜெனரல் ஆப் போலீஸ் பதவி. 39
- 'தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்' ரயில் விபத்து. 569
- பேரவை அலுவல்—அரசினர் சட்டமுன் வடிவுகள். 504—505
- மணக்காடு கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் இரண்டு பேர் மறைவு. 570
- வேதாரண்யம் கரையோரம் பிணங்கள் ஒதுங்கி இருப்பதாக வந்துள்ள செய்தி. 216—217




பக்கங்கள்


தனித் தீர்மானம்

- மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்—(தொடர்ச்சி) 660—661

பேரவை முன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள்.—

- ஊர்வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை 970ஆம் எண் அரசாணை திருத்தங்கள். 655—660

வினாக்கள்—விடைகள்—

- உடுக்குறியிட்ட வினாக்கள் 1—39, 291—319, 399—435, 525—568
- உடுக்குறியிடாத வினாக்கள் 568, 667—741

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்த அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக(தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன் வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)' 'மன்றம்(கள்), 'மநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் 'தலைவர்' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.



அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரை மணி நேர விவாதம் |
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| அ.நி. | .. | சட்ட முன் வடிவின் அறிமுக நிலை |
| ஆ.நி. | .. | சட்ட முன்வடிவின்ஆய்வு நிலை—<br>இந்நிலையில்,—<br>1. ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.<br>2. ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.<br>3. சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.<br>4. ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.<br>5. ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு-பிரிவு வாரியாக ஆய்தல். |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | .. | பேரவையின் அலுவல் |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர்.

1981 ஆகஸ்ட் 27, 28, 29, 31 மற்றும் செப்டம்பர் 1-ஆம் நாட்கள்.

(தொகுதி 25—எண்கள் 1 முதல் 5 வரை.)

அ


| | பக்கங்கள் |
|---|---|
| அங்குசாமி, திரு. சு.— | |
| கால்நடை மருத்துவ மனைகள் மருந்துகள் | 718 |
| தேவகோட்டை கால்நடை மருத்துவமனை. | 719 |
| தேவகோட்டை, வனத்துறை சரக அலுவலகம் அமைத்தல் | 300—301 |
| அப்பாதுரை திரு மு— | |
| ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், விளைபொருள்கள் | 720 |
| தூத்துக்குடி நகர் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம். | 426—427 |
| பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981 | |
| பாரதிதாசன் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு. 1981 | 622—625 |
| மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு 1981. | 493—493 |
| வடாற்காடு மாவட்டம் நாங்குநேரி கிராமம் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தி). | 322 |
| அம்பிகாபதி, திரு. மு.— | |
| இலங்கை கடற்படை தமிழகக் கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தி.) | 46—47 |
| இலங்கை தமிழர் இன்னல்கள் சர்வகட்சி கூட்டம் (த.கோ) | 322—323 |
| தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து (த. கோ.). | 569 |
| மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன் வடிவு, 1981. | 238—243 |
| வடாற்காடு மாவட்டம், நாங்குநேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தி.) | 312 |




அ—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல்பதனிடும் தொழிற்சாலை மூடல் (க. ஈ.) | 441 |
| அரங்கங்கள்— | |
| கலை அரங்கங்கள் கட்டுதல், | 296—298 |
| அரங்கநாதன் திரு மு.— | |
| குன்னூர் நகர விநாயகர் ஆலயம் கல்யாண மண்டபம் | 675—676 |
| அரங்கநாதன், திரு. மு. தொடர்ச்சி— | |
| குன்னூர் நகர விநாயகர் ஆலயம்—வெள்ளத்தடுப்பு சுவர் | 676 |
| நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ. | 340<br>349—350 |
| அரங்கநாயகம் திரு. செ.— | |
| இந்து மேல்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி, மூடப்பெற்றுள்ளது (க.ஈ.அ.) | 582—583<br>584 |
| பச்சையப்பன் பொறுப்புக்கழகம் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல், சட்டமுன்வடிவு; 1981 | 585—586<br>505—506<br>507—509<br>512—513<br>515—516 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1981 | 354 |
| பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு 1981 | 354<br>625—634 |
| பாரதியார் பல்கலை கழக சட்ட முன்வடிவு 1981 | 519—523 |
| பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு 1981 | 625—634 |
| பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறைகேடு (க.ஈ.அ.) | 586—587<br>588—589<br>590 |

அ—தொடர்ச்சி — பக்கங்கள்

மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்...) சட்ட முன்வடிவு, 1981 — 476—477, 480, 487—488, 498—502
விதி 30 (3) ஐத் தளர்த்தல் (நீ). .. 354—355

அலுவலகங்கள்—
வனத்துறை சரக அலுவலகம் அமைத்தல், தேவகோட்டை. — 300—301
விற்பனைவரி மேல் முறையீட்டு உதவி ஆணையாளர் அலுவலகம், காஞ்சீபுரம் .. 706—707

அலுவலர்கள்—
ஆணையர்கள் (கூடுதல்) நியமனம், ஊராட்சி ஒன்றியங்கள். .. 309—311
இ.எஸ்.ஐ. ஊழியர்கள், ஊதிய நிர்ணய நிபுணர் குழு .. 694—695
உதவி பயிற்சி அலுவலர் பதவிகள், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள். .. 735
ஊர் நல அலுவலர்கள், பயணப்படி .. 674—675
கால்நடை பராமரிப்புத் துறை, நிரப்பப்படாத பதவியிடங்கள். .. 316—317
கால்நடை பராமரிப்புப் பணியாளர்கள் சங்கம், கோரிக்கை. .. 33
கூட்டுறவுத் துறை இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வாளர்கள்—ஒரே தகுதியாக்கும் திட்டம். — 416—417
கூட்டுறவு வங்கிகள், பட்டதாரி எழுத்தாளர்கள் ஊதிய உயர்வு .. 417—419
சட்டம் பயின்ற அரசுத்துறை பணியாளர்கள், முன்சீப் மாஜிஸ்டிரேட்டு பதவிகள் .. 706
நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை பணியாளர்கள் — 540—542
பட்டுப்பூச்சி வளர்ப்புப் பண்ணை, நன்னகரம் — 678—679
பெரிய கிராமங்கள் கூடுதல் தலையாரிகள் நியமித்தல் .. 410—411
மார்க்கெட்டிங் கமிட்டி ஊழியர்கள் கோரிக்கை — 536—537
விவசாயத்துறை களப்பணியாளர். .. 689—690
வேலூர் கல்வி மைய மேற்பார்வையாளர், ஊழல் புகார்கள் .. 691—692



அ—தொடர்ச்சி — பக்கங்கள்

அழகர்சாமி திரு. சோ.—
பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 127—129

அன்பழகன், திரு க.—
இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வகட்சிக் கூட்டம் (த.கோ.) .. 329—330
உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம். .. 98—117
மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 .. 228, 229, 230, 231
வேதாரண்யம் கரையோரம் பிணங்கள் ஒதுங்கியிருப்பதாக வந்துள்ள செய்தி (த.கோ.) .. 216—217

அன்பழகன், திரு. தி.—
கூடுதல் து.மா.கோ., 1981-82, விவாதம் .. 186—188
பொது நிறுவனங்கள் குழு, பத்தாவது, பதினொன்றாவது அறிக்கைகள் அளித்தல். .. 590—591

'ஆ'

ஆசிரியர்கள்—
ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆரம்ப ஆசிரியர்கள், — 671

ஆண்டிஆம்பலம், திரு. மெ—
காகித ஆலை, நத்தம் தொகுதி .. 695—696

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—
அரசு மருத்துவமனை, விக்ரமங்கலம் .. 718
பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 129—130

ஆதிதிராவிடர் நலன்—
ஆதிதிராவிட மக்கள், வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் .. 434—436
கரூர் தொகுதி மூர்த்திபாளையம், வீட்டுமனைப் பட்டா வழங்கல் .. 711—712
ஆதிதிராவிடர் நெல்லை மாவட்டம், காலனி தாட்கோ வீடுகள், ஆக்கிரமிப்பு .. 669—670
புகுமுக வகுப்பு (பி.யூ.சி.) மாணவர்கள், உதவித் தொகை .. 430—434

பக்கங்கள்

ஆலயங்கள்—
பூலத்தூர், ஆதித் திராவிடர்கள். .. 722
வீடுகள், ஆரல்வாய்மொழி. .. 726

ஆராய்ச்சிக் கூடங்கள்—
வேளாண்மை, குமரி மாவட்டம். .. 301—302
ஆத்தங்கரை பள்ளி வாசல். ... 687
எத்தையம்மன் ஆலயம், மானிஹாடா மஞ்சக்கம்பை ... 733
குன்னூர் நகர விநாயகர், கல்யாண மண்டபம் 675—676
குன்னூர் நகர விநாயகர், வெள்ளத்தடுப்பு சுவர் வேலை தாமதம் .. 676
தண்டாயுதபாணி, காணிக்கை முடி ஏலம் .. 672
தீர்த்தொட்டி சுப்பிரமணிய சுவாமி .. 693

ஆறுமுகம், திரு. எம்.—
அரசு பாலிடெக்னிக்குகள், ஆய்வகப் பணியாளர்கள் .. 689
அன்னூர் நகரப் பேருந்து நிலையம் .. 688—689
கூடுதல் துணை மானியக் கோரிக்கை .. 1981-82, விவாதம் 172—177
தாயனூர் பள்ளம் (காரனூர்—பில்லூர் ரோடு) பாலம் .. 543
தெர்மல் மின்நிலையம், கோவை மாவட்டம் .. 736
நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ) .. 340, 345—346
பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஓ.தீ.) .. 119—120
வடஆற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் (க.ஈ.) .. 441

ஆறுமுகம், திரு. த.—
இந்து மேல்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி, மூடப்பெற்றுள்ளது. 582

ஆனூர் ஜெகதீசன், திரு. பு.கோ.—
ஊராட்சி ஒன்றியங்கள், சாலை உருளைகள் வாங்குதல் .. 311—313



பக்கங்கள்

இயற்கைச் சீற்றங்கள்—
முதுகுளத்தூர் தொகுதி, நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவித்தல் .. 408—410

இயற்கைச் சீற்றங்கள்—தொடர்ச்சி.
வறட்சி, விதைகள் தட்டுப்பாட்டை நீக்குதல் 303—305

இரத்தினம் திரு. எம்.பி.—
அரசு பேருந்து ஓட்டுநர்கள் பரிசு .. 561—564
மின் கட்டணம், பொள்ளாட்சி நகராட்சி .. 702—703

இராகவானந்தம், திரு. எஸ்.—
ஆயக்குடி குடிநீர்த் திட்டம் (க.ஈ.) .. 60—63
கரூரில் நெசவாளர்கள் உண்ணாவிரதம் (க.ஈ.அ) 353
சென்னை குடிசைப் பகுதி, குடிநீர் தொட்டி (க.ஈ) .. 52—60
ஹோசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் (ஓ.தீ) .. 580—581

இராசகுமார் திரு. மே.அ.—
நிரந்தரமாக்கப்படாமலுள்ள குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் .. 414

இராசமாணிக்கம் திரு இரெ.—
கழிப்பிடங்கள் (திருவள்ளுவர் விரைவு பேருந்து நிலையங்கள்) .. 553—554
சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் வரும் தண்ணீர் (த.கோ) .. 436

இராசாம்பாள், திருமதி, தா.—
ஓதியத்தூர், ஆடுவளர்ப்புக் கூட்டுறவு சங்கம்.. 34

இராசாராமன், திரு எஸ்.—
செயற்கை இழைத் துணிகள், டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் .. 728
பால் சப்ளை நட்சத்திர ஓட்டல்கள் .. 8

இராசு, திரு. ஜே. எஸ்.—
மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பெரம்பலூர், 678

இராமசாமி, திரு. எஸ். என்.—
இந்து மேல்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி, மூடப்பெற்றுள்ளது (க.ஈ) .. 582, 585
பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஓ.தீ) . 119—120

பக்கங்கள்

இ—தொடர்ச்சி


இராமச்சந்திரன், திரு. ச.—

இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வகட்சிக் கூட்டம் (த. கோ) .. 325—327, 329, 330, 331

இராமச்சந்திரன் திரு ச.—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த. கோ) .. 322

நிதி ஒதுக்க எண் (4) சட்டமுன்வடிவு 1981 .. 456, 468

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியமை (தி) .. 502—504

மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 .. 488

மின்சாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்பெறுவது (அ) 89

மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து (க.ஈ.) .. 439—441

வடாற்காடு மாவட்டம் நாங்குநேரி கிராமம் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தி) 339—340

இராமச்சந்திரன், திரு செஞ்சி ந.—

கிராமச்சாலைகள் திட்டம், வெள்ளிமேடு பேட்டை .. 701

நுகர் பொருள் வாணிபக் கழகம் செஞ்சி தானியக் கிடங்கு .. 701

வல்லம் ஊராட்சி ஒன்றியம், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் .. 702

இராமலிங்கம், திரு. செ.—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 .. 378—382, 394

சீனிவாச நல்லூர் கிராமம் .. 638

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம், ஆண்டு கணக்குகள் தணிக்கை .. 412—413

திருநாகேஸ்வரம் பேரூராட்சி, கால்நடை மருத்துவ நிலையம் அமைத்தல் .. 317—319

விவசாயக் கல்லூரி ஆடுதுறையில் அமைத்தல் .. 385—539




இ—தொடர்ச்சி

பக்கங்கள்


இளையபெருமாள் திரு. எல்.—

அரசாங்க கட்டடங்கள் தோட்டத்தில் உள்ளவை 546—548

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 .. 372—378, 392

இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வகட்சிக் கூட்டம் (த. கோ) .. 330

கைதான உறுப்பினர்கள் விடுதலை (த. கோ) .. 661

சிதம்பரம் சாக்கடை அமைக்கும் திட்டம் .. 422—423

சென்னை குடிசைப்பகுதி. குடிநீர்த் தொட்டி (க. ஈ) .. 51, 57, 58, 59, 60

பச்சையப்பன் பொறுப்புக்கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு சட்டமுன்வடிவு (ஆ. நி) .. 516

பாரதியார் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1981 பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1971 .. 591—594

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.—

இலங்கை கடற்படை தமிழகக் கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ. தீ) .. 46, 48

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1981 .. 225—25

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவ, 1981 .. 639—640

கப்பல் ஈ.வெ.ரா விற்பனை .. 708

குற்றாலம் அருவி, குளியல் கட்டணம் 35

சமையல் எண்ணெய் ஆலை, துவங்குதல் 707

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தேர்வு ஒத்திவைப்பு (ஒ. தீ.) .. 437

தாமிரபரணி, மணிமுத்தாறு, கோதையாறு, லோயர் கோதையாறு பாசன மேம்பாட்டுத் திட்டங்கள் .. 403—407

தாழ்த்தப்பட்டோர் கல்வி நிலையங்கள், வேலை வாய்ப்பு அலுவலகங்களில், சதவிகிதத்தை மாற்றி அமைத்தல் 713

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க ஈ.) .. 340

நுகர்பொருள் வாணிபக் கழகம், நஷ்ட விவரம் 675

பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ. தீ.) .. 119—120

ஈ—தொடர்ச்சி

பக்கங்கள்.

ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம், திரு. பி.—தொடர்ச்சி.

- பாபநாசம், பெரியபாலம் .. 14
- புதைபொருள்கள் ஈரோடு, கொடுமணல் .. 679
- மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள், நீண்ட காலக் கடன்கள் .. 531—533
- மன்னார் வளைகுடாப் பகுதி, செயற்கை முத்து உற்பத்தி .. 400, 401—402
- முதலமைச்சர்கள் கூட்டம், விற்பனைவரி மாற்றம் 709—710
- மாநில நுகர்பொருள் வாணிபக் கழகம் .. 680
- வடாற்காடு மாவட்டம், நாங்குநேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) 322
- வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் (க.ஈ.) 441

உ

உகம்சந்த், திரு. எஸ். டி.—

- கள், சாராயக் கடைகள் ஏலம் .. 730—731
- தமிழ்நாடு விற்பனை இணையம், விற்பனை செய்யப்பட்ட உரங்கள் .. 419—420
- மணிலாப்பயிர், மதுராந்தகம் வட்டம் .. 725

உச்சி, திரு. கே.—

- எத்தையம்மன் ஆலயம், மானிஹாடா மஞ்சக் கம்பை .. 733
- நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340, 341—342

உத்திராபதி, திரு. பொ.—

- திருத்துறைப் பூண்டி, பேருந்து நிலையத்தை மாற்றுதல். .. 308—309
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119—120
- வேளாண் தொழிலாளர் நியாய ஊழிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. 274
- வேளாண் தொழிலாளர் நியாய ஊழியர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981. .. 278—287



'உ'—தொடர்ச்சி.

பக்கங்கள்.

உமாநாத், திரு. ரா.—

- இலங்கை அகதிகள், திருச்சி மாவட்டம் .. 731
- இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வ கட்சிக் கூட்டம் (த.கோ.) .. 323
- உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 319—320
- கால்நடை பராமரிப்பு பணியாளர் சங்கம், கோரிக்கை .. 33
- நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340, 347
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 120—122
- பேரவைமுன் வைக்கப் பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள் (த.தீ.) .. 655—659
- வானொலி நிலையத்தின் மீது (உ.பி.) 571—576

உரிமைப் பிரச்சினைகள்—

- பார்க்க—தலைவர்

உள்ளாட்சிகள்—

- ஊராட்சி ஒன்றியங்கள், சாலை உருளைகள் வாங்குதல். .. 310—311
- டிராக்டர்கள் 674
- தன்னிறைவுத் திட்டம். 699
- தனித் தொழில் விரிவாக்க அலுவலர்கள் .. 720
- ஊராட்சி மன்றங்கள், பகுதிநேர ஊழியர்கள். 727—728
- தாந்தோணி ஒன்றியம், பெரியாண்டாங் கோவில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் .. 714
- பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் பொதுப் பணித்துறை குளங்கள். .. 681
- பெரியகுளம் நகராட்சி, சினிமா கொட்டகை கட்டும் திட்டம். .. 695
- மணச்சநல்லூர் ஒன்றியம், நொச்சி கிராமம், பஞ்சாயத்து கழிப்பிடம். .. 685—686
- வல்லம் ஊராட்சி ஒன்றியம், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் .. 702

பக்கங்கள்

'எ'

எரிபொருள்—
நிலக்கரி சுரங்கத் திட்டம், நெய்வேலி .. 291—29
மானாமதுரைத் தொகுதி, உசம் விநியோகம் .. 27—29

'ஏ'

ஏடுகள்—
பேரவைமுன் வைக்கப்பெற்றவை 117—118, 396—397, 521

'க'

கடற்கரை—
கல்லுரணி வைப்பார் கிராமம், கருப்புநிற மணல் ஏலம் .. 673
நுகர்பொருள் ..
கடன்கள், முன்பணங்கள்—
கூட்டுறவு சங்கங்கள், கடன்கள் .. 737
மண் வளப்பாதுகாப்பு திட்டங்கள், நீண்ட காலக் கடன்கள் .. 531—533
கணேசன், திரு. இ.—
பாலம், மணல்ஏரி ஓடை .. 726
மண் பரிசோதனை நிலையம், சேலத்தில் அமைப்பது .. 738
மீன்காட்சி சாலை, சென்னை .. 738
கருணாநிதி, டாக்டர் மு.—
இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வகட்சிக் கூட்டம் (த.நோ.) .. 323—325, 327—329, 330—331
கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981–82, விவாதம் .. 189—190
மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 .. 234



பக்கங்கள்

'க'—தொடர்ச்சி.

கருப்பையா, திரு. இரா.—
இலங்கை கடற்படை தமிழகக் கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தீ.) .. 46
உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம் .. 64—69
தொழிலாளர்கள், கல்வி மண்டல நிலையங்கள் .. 683—684
நிதி ஒதுக்க எண் (4) சட்ட முன்வடிவு, 1981 .. 466—471
வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டேனரி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் (க.ஈ.) .. 441—443, 444
கருப்பையா, திரு. ஏ. டி.—
உப்பாறு பாலம் .. 543—544
தேயிலைத் தோட்டங்கள், தொழிலாளர்கள் சம்பள விகிதம் .. 298—300
நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340, 345
கலையரசன், திரு நன்னிலம் அ.—
வறட்சி, விதைத் தட்டுப்பாட்டை நீக்குதல் .. 303—305
கல்லன், திரு. கே.—
நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340, 348
கல்வி—
சட்டமேற்படிப்பு, அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தகுதி .. 719
கல்விக்கூடங்கள்—
அரசு உயர் கல்விக்கூடங்கள், பின்தங்கிய மாணவர்கள் .. 684—685
அரசு பாலிடெக்னிக்குகள், ஆய்வகப் பணியாளர்கள் .. 689
இந்து மேல்நிலைப் பள்ளி மூடப்பெற்றுள்ளது (க.ஈ.) .. 582—586
ஏர்வாடி அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் .. 413
பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறைகேடு (க.ஈ.) .. 586—590
விவசாயக் கல்லூரி ஆடுதுறையில் அமைத்தல் .. 538—539

பக்கங்கள்

'க' —தொடர்ச்சி


கவன ஈர்ப்புகள் —

- ஆயக்குடி குடிநீர்த் திட்டம் .. 60—63
- இந்து மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி மூடப்பெற்றுள்ளது .. 582—586
- கரூரில் நெசவாளர்கள் உண்ணாவிரதம் .. 353
- சென்னை குடிசைப்பகுதி, குடிநீர் தொட்டி .. 51—60
- நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் .. 349—353
- பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறைகேடு .. 586—590
- மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து .. 439—441
- வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் .. 441—445

கால்நடைகள்—

- ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை, பொட்டனேரி. 739
- கேந்திர கிராமக் கால்நடைத் திட்டம், பேராவூரணி .. 729
- தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் (செங்கை மாவட்டம்) .. 552—553
- தேவக்கோட்டை மருத்துவமனை .. 719
- மருத்துவ நிலையம் அமைத்தல், திருநாகேஸ்வரம் பேரூராட்சி .. 317—319
- மருத்துவ மனைகள், மருந்துகள் .. 718
- மருத்துவர்கள் விடுப்புச் சலுகைகள் .. 721

கிட்டப்பா, திரு. என்—

- சிற்பங்கள், வரலாற்றுச் சின்னங்கள் .. 685
- திருச்சி மாவட்டம், போலி குடும்ப அட்டைகள். 677
- பத்திரிகை நிருபர்கள், அரசு அங்கீகாரம் .. 526—529
- மாவட்டங்கள், கலை அரங்கங்கள் கட்டுதல் .. 296—298
- யானைக்கால் நோய், பரவல் .. 677—678

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

- பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல் (தீ.) .. 662
- வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் (க.ஈ.) 441—454




பக்கங்கள்

க—தொடர்ச்சி


கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—

- உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 319
- ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 643—645
- மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 .. 218—233

கிருஷ்ணன், திரு. ரா.—

- ஆதிதிராவிடர் காலனி, தாட்கோ வீடுகள், நெல்லை மாவட்டம், ஆக்கிரமிப்பு .. 669—670
- சுருளியாறு, மின் வாரியப் பொருட்கள் திருட்டு .. 296
- பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்ட முன்வடிவு, 1981 .. 513
- பட்டுப்பூச்சி வளர்ப்புப் பண்ணை, நன்னகரம் .. 678—679
- மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 489—493

குடிநீர்—

- ஆயக்குடி, திட்டம் (க.ஈ.) .. 60—63
- கல்பட்டு கிராமம், விழுப்புரம் தாலுக்கா .. 717—718
- கூட்டுக்குடி நீர்த் திட்டம், மொடக்குறிச்சி தொகுதி .. 696
- சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்கள், குடிநீர் வழங்கும் திட்டம் .. 427
- சென்னை குடிசைப் பகுதி, வழங்கல் .. 52—60
- நேர்த்தியாயிருப்பு கிராமம், குடிநீர் வழங்கும் திட்டம் .. 424—426
- புதூர் பேரூராட்சி, குடிநீர் வழங்கல் .. 712

குடிபெயர்ந்தோர்—

- இலங்கை அகதிகள், திருச்சி மாவட்டம் .. 731
- பர்மா அகதிகள், மறுவாழ்வுக் கடன்கள் .. 548—552

குமரி அனந்தன், திரு.—

- உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம் (தீ.) .. 73—85
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 125—127

க—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| குலசேகரபாண்டியன், திரு. ந.— | |
| அனல் மின் நிலையம், ஆம்பூர்—வாணியம்பாடி .. | 730 |
| வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் (க.ஈ.) | 441, 444—445 |
| குழந்தைவேலு, திரு. ப.— | |
| அலுவல் வரிசை மாற்றம் (தீ) .. | 637 |
| ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1981 .. | 255, 257 260 |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 | |
| ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன் வடிவு 1981 ... | 261, 268—270 |
| ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1981 .. | 637—638 646—653 |
| சென்னை சட்டக் கல்லூரி, மாணவர் தேர்வு ஒத்திவைப்பு (ஒ.தீ.) .. | 437—438 |
| பேரவை முன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள் (த.தீ.) .. | 659—660 |
| குழுக்கள்— | |
| உரிமைக் குழு, அறிக்கை அளித்தல் .. | 590 |
| பொது நிறுவனங்கள் குழு, பத்தாவது, பதினொன்றாவது அறிக்கை, அளித்தல் .. | 590—591 |
| மதிப்பீட்டுக் குழு, ஆறாவது அறிக்கை அளித்தல் | 591 |
| ஏழாவது அறிக்கை, அளித்தல் .. | 25 |
| எட்டாவது அறிக்கை, அளித்தல். | 590 |
| கூட்டுறவு— | |
| ஆதியந்தூர், தலைவாசல் தொகுதி, ஆடு வளர்ப்பு சங்கம் .. | 4—35 |
| காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம் .. | 737 |
| தமிழ்நாடு விற்பனை இணையம், விற்பனை செய்யப்பட்ட உரங்கள் .. | 419—421 |




க—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| கூட்டுறவு—தொடர்ச்சி. | |
| நிலவள வங்கி கடன் .. | 723 |
| நிலவள வங்கி, கடலூர் .. | 723 |
| மத்திய வங்கிகள், நகைக் கடன் .. | 729 |
| **சே** | |
| சேவை ஆதித்தன், திரு. சி.— | |
| திருச்செந்தூர் பேருந்து நிலையம் .. | 16 |
| **கை** | |
| கைத்தறி— | |
| கரூரில் நெசவாளர்கள் உண்ணாவிரதம் (க.ஈ.) .. | 353 |
| **கோ** | |
| கோபால், திரு. சி.— | |
| ஊராட்சி ஒன்றியங்கள், தன்னிறைவுத் திட்டம் .. | 629 |
| ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆரம்ப ஆசிரியர்கள். | 671 |
| கோபாலகிருஷ்ணன், திரு. ா.— | |
| ஆதிதிராவிடர்கள், வீடுகள். புலத்தூர் .. | 722 |
| பாலாறு, கேடைக்கால் ஏரி .. | 704 |
| பெரியகுளம் நகராட்சி, சினிமா கொட்டகை கட்டும் திட்டம் .. | 695 |
| கோபாலன் திரு. ஆர். டி.— | |
| சர்க்கரை ஆலை, கரும்பு பகுதி .. | 715 |
| வாழைப்பழ பயன்படுத்தும் தொழிற்சாலை கரும்பு பகுதி .. | 715 |
| கோவிந்தன், திரு. எம். ஆர்.— | |
| கேந்திர கிராமக் கால்நடைத் திட்டம், பேராவூரணி .. | 729 |
| கோவைத்தம்பி, திரு— | |
| பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன் வடிவு 1981, | |
| பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981 .. | 618—622 |

சங்கரய்யா, திரு. என்.—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 364—369

இலங்கைத் தமிழர் இன்னல்கள், அனைத்துக் கட்சிக் கூட்டம் (த.கோ.) .. 325, 330

நிதி ஒதுக்க எண் (4) சட்ட முன்வடிவு, 1981 461—466

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க. ஈ.) .. 340, 343

பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119—120

.. 132—133

சங்கரய்யா, திரு. என்.—

பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981.

பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981 .. 598—604

சட்ட முன்வடிவுகள்—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

ஆ. நி. .. 355—394

பிரி. ஆ.

நிறைவேற்றுதல் .. 395

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981

ஆ. இ. 255

ஆ. நி.

பிரி. ஆ. .. 256—259

நிறைவேற்றுதல்

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981

ஊராட்சிகள் ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981

ஆ. நி.

பிரி. ஆ. 261—269

நிறைவேற்றுதல் 270



சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981—

அ. நி. 137—138

ஆ. நி. 637—653

பிரி. ஆ.

நிறைவேற்றுதல் .. 653

சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981—

அ. நி. .. 445—446

ஆ. நி. .. 636

பிரி. ஆ.

நிறைவேற்றுதல் .. 637

திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள், பேத்து வாரம்தாரர்கள் சட்ட முன்வடிவு, 1981—

ஆ. நி. .. 653—654

நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1981

அ. நி. .. 216

ஆ. இ. .. 216

ஆ. நி. .. 446—474

பிரி. ஆ. .. 474

நிறைவேற்றுதல் .. 575

பச்சையப்பன் பொறுப்புக்கழகம் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு, 198 —

ஆ. நி. 505—516

பிரி. ஆ. 515

நிறைவேற்றுதல் 516

பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981.

பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981.

ஆ. இ. .. 518

ஆ. நி. .. 591—635

பிரி. ஆ. .. 635

நிறைவேற்றுதல் .. 635

| ச தொடர்ச்சி | பக்கங்கள் |
| --- | --- |
| சட்டமுன் வடிவுகள்— தொடர்ச்சி | |
| மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | |
| ஆ. நி. .. | 476—502 |
| பிரி. ஆ. .. | 502 |
| நிறைவேற்றுதல் .. | 501 |
| மதுவிலக்கு இரண்டாம் (திருத்தச்) சட்ட முன் வடிவு, 1981 | |
| ஆ. நி. .. | |
| பிரி. ஆ. நி. .. | 217—255 |
| நிறைவேற்றுதல் .. | |
| வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்டமுன் வடிவு, 1981— .. | |
| வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1981. | |
| ஆ.நி. | |
| பிரி.ஆ. | |
| நிறைவேற்றுதல் .. | 271—289 |
| 1981 ஆம் ஆண்டு பொது மக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 52/1981) .. | |
| மே.செ. .. | 438 |
| 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1981) .. | 438 |
| சண்முகம், திரு. இரா.— | |
| சென்னை பிராட்வே பேருந்து நிலையம் .. | 723—724 |
| பஸ் சேசிஸ்கள் (தமிழகத்திற்கு) மாதா மாதம் ஒதுக்கப்படுவது .. | 567—568 |
| வீட்டுமனைப் பட்டா, பேரம்பாக்கம் .. | 736 |
| வேளாண்மை-பொறியியல் மையம், கடம்பத்தூர் ஒன்றியம் .. | 734 |
| சண்முகம், திரு. ஏ. சி.— | |
| கூடுதல் துணை மானியக் கோரிக்கை. 1981–82 விவாதம் .. | 189 |





| ச தொடர்ச்சி. | பக்கங்கள் |
| --- | --- |
| சண்முகம், திரு. ஏ. சி. தொடர்ச்சி— | |
| பஸ் சேஸ்கள் (தமிழகத்திற்கு) மாதா மாதம் ஒதுக்கப்படுவது .. | 567—568 |
| மதிப்பீட்டுக்குழு, எட்டாவது அறிக்கை, அளித்தல் .. | 590 |
| சந்தைகள் | |
| ஜவஹர்லால்நேரு, ராஜாஜி மார்க்கெட்டுகள், காஞ்சிபுரம், .. | 696—697 |
| சமரசம் டாக்டர் கே.— | |
| கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981–82, விவாதம். .. | 203—206 |
| மதிப்பீட்டுக்குழு, ஆறாவது அறிக்கை அளித்தல். .. | 354 |
| மதிப்பீட்டுக்குழு, ஏழாவது அறிக்கை அளித்தல் .. | 445 |
| மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 1981. .. | 235—238 |
| சர்க்கரை — | |
| ஆலை, கம்பம் தொகுதி, .. | 715 |
| சாகுல்ஹமீது, திரு. ஏ.— | |
| உமறுப்புலவர், நினைவு மண்டபம் .. | 59[illegible] |
| சாலைகள்— | |
| கிராமச்சாலைகள் திட்டம், வெள்ளிமேடு பேட்டை. .. | 701 |
| கொடைக்கானல் மூனாறு சாலை. .. | 716 |
| சித்தூர் நட்டு-முள்ளுக்குறிச்சிசாலை. .. | 691 |
| மதுரை–தேனி–குமுளி சாலை, நெடுஞ்சாலையாக மாற்றுதல். .. | 306—308 |
| சித்தன், திரு. என். எஸ். வி. — | |
| இலங்கை கடற்படை தமிழகக் கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தீ.). .. | 46.48 |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.). .. | 321—322 |
| கைதான உறுப்பினர்கள் விடுதலை (த.கோ.). .. | 569 |
| டைரக்டர்–ஜெனரல் ஆப் போலீஸ் பதவி (த.கோ.). .. | 39 |

ச தொடர்ச்சி — பக்கங்கள்


சித்தன், திரு. என். எஸ். வி. தொடர்ச்சி—

- தன்னிறைவுத் திட்டம், மதுரை மாவட்டம் .. 16
- நிதி ஒதுக்க எண் (4) சட்டமுன் வடிவு, 1981 .. 459—461
- நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல். (க.ஈ) .. 340, .. 351—352
- பேரவை அலுவல் (த.கோ.) .. 505
- மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு, 1981 .. 496—498
- மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 1981 .. 235
- வடாற்காடு மாவட்டம் நாங்குனேரி கிராமம். நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. 322—339

சிவசாமி, திரு. செ—

- ஊராட்சிகள் (இராண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1981 .. 256—259
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119—120
- பரமக்குடி, விதைப்பண்ணை .. 12—13
- வடாற்காடு மாவட்டம் நாங்குனேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. 322

சிவப்பிரகாசம், திரு. சீ—

- சித்தூர்நாடு முள்ளுககுறிச்சி சாலை .. 691
- நகரப் பேருந்துகள் இரண்டு நடத்துனர்கள் நியமித்தல் .. 555—551

சிவராமன், திரு எ.—

- கால்நடை பாரமரிப்புத் துறை, நிரப்பப்படாத பதவியிடங்கள். .. 631—317

சின்னசாமி, திரு எம்—

- ஆதிதிராவிடர்கள், கரூர் தொகுதி மூர்த்தி பாளையம், வீட்டு மனைப்பட்டா வழங்கல் .. 711—712
- கரூரில் நெசவாளர்கள் உண்ணாவிரதம் (க.ஈ.) 353
- காவிரி நதி நீர் திருப்பி விடுதல் .. 722,723
- காவிரி நதி, மின் திட்டங்கள் .. 2




பக்கங்கள்.

'ச'— தொடர்ச்சி.


சின்னசாமி, திரு. எம்.—தொடர்ச்சி.

- தாந்தோணி ஒன்றியம் பெரியாண்டார் கோவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதில் முறைகேடு .. 714
- நில உச்சவரம்புச் சட்டம்—
- நிலங்கள் .. 729,730
- நிலவள வங்கி கடன் .. 723
- லிங்கத்தூர்—உப்பிடமங்கலம் பாலம் .. 698

சின்னராசு, திரு. மா.—

- பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981 .. } 597—598
- பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981 }

சுந்தரம், திரு. கே. ஆர்.—

- இலங்கைக் கடற்படை தமிழகக் கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தீ.) .. 46
- ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 ..
- ஊராட்சிகள் ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன் வடிவு, 1981 .. 263—265
- கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, குடியாத்தம் .. 537,538
- சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தேர்வு ஒத்தி வைப்பு (ஒ.தீ.) .. 437
- நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ) .. 340
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119,120
- வடாற்காடு மாவட்டம், நாங்குனேரி கிராமம் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. 322, 335—337
- வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல் (க.ஈ.) .. 441—443, .. 444
- ஓசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் (ஒ.தீ) .. 570—580

பக்கங்கள்.

'ச'— தொடர்ச்சி.

சுந்தரம், திரு. ப.—
- திருப்பத்தூர் அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி .. 428
- வடாற்காடு மாவட்டம், நாங்குனேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. 322

சுந்தரராஜன், திரு. மு.—
- பாலம், அர்ஜுனா நதி விருதுநகர் தாலுகா, .. 716

சுந்தரராஜ், திரு. நா.—
- கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981-82 விவாதம் .. 177—185

சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.—
- தீர்த்த தொட்டி சுப்பிரமணிய சுவாமி ஆலயம் .. 693
- போடி விவசாய நிலங்கள் யானையால் ஏற்பட்ட சேதம் .. 530,531

சுவாமிநாதன், திரு. வி. வி.—
- நிலவள வங்கி, கடலூர் .. 733

சுற்றுலா—
- குற்றாலம் அருவி, குளியல் கட்டணம் .. 35—39

'செ'

செங்கோட்டையன், திரு. கு. அ.—
- ஊராட்சி ஒன்றியங்கள், தன்னிறைவுத் திட்டம் .. 704
- தடப்பள்ளி வாய்க்கால் தூர் எடுக்கும் பணி .. 404

செம்மலை, திரு. செ.—
- ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை, பொட்டனேரி .. 739
- உதவி பயிற்சி அலுவலர் பதவிகள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் .. 735
- ஊராட்சி ஒன்றியங்கள் தனித் தொழில் விரிவாக்க அலுவலர்கள் .. 720
- கிராமப்புற வீட்டு வசதி சங்கம் .. 734
- சட்டம் பயின்ற அரசுத்துறை பணியாளர்கள், முன்சீப் மாஜிஸ்டிரேட்டு பதவிகள் .. 706
- மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து (க.ஈ.) .. 439—441



பக்கங்கள்.

'ச'—தொடர்ச்சி.

செய்தித்தாள்கள், ஏடுகள்—
- பத்திரிகை நிருபர்கள், அரசு அங்கீகாரம் .. 526—529

செல்லமுத்து, திரு. எம்.—
- ஆயக்குடி குடிநீர்த் திட்டம் .. 60
- நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340
- வடாற்காடு மாவட்டம், நாங்குனேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. 322

செல்லமுத்து, திரு. எம்.—தொடர்ச்சி.
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் திருத்த சட்ட முன்வடிவு, 1981
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1981 .. } 271—274

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—
- விளம்பர பேனர்கள், சென்னை மாநகராட்சி அனுமதி .. 544—546

சேதுராமன், திரு. ஏ. எம்.—
- தோல் பதனிடும் தொழிற்சாலைகள், வட ஆற்காடு, கழிவுநீர் .. 23

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—
- அலுவல் வரிசை மாற்றம் (தீ) .. 654 655
- திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள், பேத்துவாரம்தாரர்கள் சட்ட முன்வடிவு, 1981 .. 653,654
- மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 .. 218, 228,229, 230,231, 233,234, 247—254
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 271
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1981 .. 282—288, 289

பக்கங்கள்.

'ச'—தொடர்ச்சி.

சோமு, திரு. என். வி. என்.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) .. 39—43

சௌரிராஜன், டாக்டர் கே.—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 369—371, 393

பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1981 (ஆ.நி.) .. 506,507

'த'

தகவல் கோரல்—

பேரவை அலுவல் .. 504,505

தங்கமணி, திரு. கே. எம்.—

சுதந்திர போராட்ட வீரர்கள், பட்டா வழங்குதல் .. 710

தங்கவேலு, திரு. பி.—

வனஸ்பதி தொழிற்சாலை, உடையார் பாளையம் .. 700

தலைவர்—

அறிவிப்புகள்—

அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது குறித்து .. 83

ஆளுநரிடமிருந்து செய்தி .. 113

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. என். வி. என். சோமு, திரு. து. புருஷோத்தமன் கைது .. 395

திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன் காவலில் வைக்கப் பெற்றுள்ளது .. 439

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள் .. 246

பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியமை .. 473, 502—504

பேரவை அலுவல் .. 63



'த'—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி ... 217

வெள்ளை அறிக்கை மீதான விவாதம் தொடர்வது குறித்து .. 116—117

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அவையில் பயன்படுத்தப்பட்ட சொற்கள்—

'மசாலா மந்திரவாதிகள்'-இவ்வார்த்தையை பயன்படுத்திய அமைச்சரின் மீது அவையில் ஓர் உரிமைப் பிரச்னை எழுந்தது.

தவறான நோக்கத்தில் யாரையும் புண்படுத்துகின்ற நோக்கத்தில் அவைகள் பயன்படுத்தவில்லை என்று அமைச்சரும் கூறினார். உரிமைப் பிரச்னை வற்புறுத்தப்படவில்லை. (உ.பி.) .. 43—46

உரிமைப் பிரச்னை—

உறுப்பினர்களுக்கு உரிமைப் பிரச்னை கொடுக்க உரிமை உண்டு. அதை அனுமதிப்பதோ, அனுமதிக்காததோ பேரவைத் தலைவருடைய உரிமையாகும். (உ.பி.) .. 576

வானொலி நிலையத்தின் மீது நாம் 29-8-81 அன்று அவையில் எழுப்பிய பிரச்னைப் பற்றி வானொலியில் அன்று எவ்வித செய்தியும் தெரிவிக்கப்படாது இருட்டடிப்பு செய்தது உரிமை மீறிய செயலாகும் என்று ஓர் உறுப்பினர் 1-9-81 அன்று அவையில் வானொலி நிலையத்தின் மீது உரிமைப் பிரச்னையை எழுப்பினார். அதன் மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—

''ஒரு உறுப்பினர் பேச்சு வெளியிடப்படவில்லை என்பது உரிமை மீறல் ஆகாது. வேண்டுமென்றே அப்பேச்சு திருத்தப்பட்டோ, மாற்றப்பட்டோ, வெளியிடப்படுமானால் தான் அவை உரிமை மீறல் பிரச்னை எழும்.

ஆயினும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை வானொலி நிலையத்தார் கருத்தில் கொண்டு செயல்படுவர் என்று நம்புகிறேன்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (உ.பி.) .. 571—576

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களின் தேர்வுகள் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் அந்த மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து—

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது 437—438

தமிழகத்தின் எல்லையோரப் பகுதி கடற்பிராந்தியத்தில் இலங்கை கடற்படை போர் ஒத்திகை நடத்துவதால் கடல் பகுதியில் மீன்வளம் குறைவதோடு மீனவர்கள் மத்தியில் மற்றும் பொது மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து—

நிதித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. .. 46—51

தமிழகத்தைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய தமிழ் மக்கள் தம் பிழைப்புக்காக பம்பாய் நகர சலையோரங்களில் நீண்டகாலமாகக் குடியிருந்து வரும் இருப்பிடங்கள் தரை மட்டமாக ஆக்கப்பட்டு, அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவதால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து—

மாண்புமிகு நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 119—137

24-8-81 அன்று வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் அருகே உள்ள நாங்குனேரி கிராமத்தில் நக்சலைட் என்று கூறி மூன்று இளைஞர்களைச் சுட்டுக் கொன்றுள்ளதால், அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து—

மின்சாரத் துறை அமைச்சர் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 340



தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு—

அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பும் எந்தப் பிரச்னையாக இருந்தாலும் அதை முறையாகக் கொண்டு வரவேமேயாழிய திடீர், திடீரென்று அவையில் எழுப்பக் கூடாது. (த.கோ) .. 570

உறுப்பினர்களுக்குள் அவையில் நேரடியாக விவாதம் நடைபெறுதல் கூடாது (அ.ச.மு.) 620

உறுப்பினர்கள் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கக் கூடாது (அ.ச.மு.) .. 489

தொகுதி சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்னை என்று உறுப்பினர்கள் அவையில் எழுந்திருந்து கேட்க ஆரம்பித்தால் அவையை ஒழுங்காக நடத்திச் செல்ல முடியாது. தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் தலைவரின் அறையில் சென்று கேட்க வேண்டும் (த.கோ.) .. 40

நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருள்களின் மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றி குறிப்பிடவோ கூடாது (அ.ச.மு.) .. 489

கவன ஈர்ப்புகள்—

கவன ஈர்ப்புகள் மீது உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கலாமே தவிர விவாதமாகப் பேசக்கூடாது. 58

குற்றச்சாட்டு—

அவையில் ஒருவர் மீது பர்சனல் குற்றச்சாட்டை பேரவைத் தலைவர் அனுமதியின்றி திடீரென்று சொல்லக் கூடாது. (அ.ச.மு.) .. 456

அவையில் சொல்வதற்கு முன் அதற்கான ஆதாரத்தை முன் கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி, அவரது அனுமதியைப் பெற்றே சொல்ல வேண்டும். (அ.ச.மு.) .. 234

நடைமுறை—

அவை நடவடிக்கைக் குறித்து பத்திரிகையில் வெளியாகியிருப்பதை ஒழுங்குப் பிரச்னையாக எழுப்ப முடியாது. அவை நடவடிக்கைக்கு முரண்பாடாக வந்திருக்கிறது என்றால் பத்திரிகை பேரில் உரிமைப் பிரச்னை கொடுக்கலாம். (த.கோ.) 322

'த'—தொடர்ச்சி	பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒவ்வொரு நாளும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கு பதிலாக ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானங்களை எடுத்துக் கொள்ள தலைவர் முன் வரவேண்டும் என வற்புறுத்தியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

"அலுவல் ஆய்வுக் குழு என்று ஒன்றிருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து விவாதித்து எந்தவிதமான முடிவை எடுக்கிறார்களோ அதன்படி இந்த அவையை நடத்திச் செல்ல தயாராக இருக்கிறேன்." (த.கோ.) 42

மேலவையில் விவாதிக்கும் அனைத்தையும் நாம் இங்கே விவாதித்துத் தான் ஆக வேண்டும் என்கிற அவசியம் இல்லை. (து.மா.கோ.) .. 164

வழக்கு மன்றத்திலிருந்து பேரவைத் தலைவருக்கு ஏதாவது 'சம்மன்' அனுப்பப் பெற்றால் பேரவைத் தலைவர் என்ன செய்ய வேண்டும் என்பதை ஓர் உறுப்பினர் எடுத்துக் காட்டிய போது தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

"இதை இப்போது விவாதிக்க வேண்டாம். வழக்கு மன்றத்திலிருந்து தலைவருக்கு எந்த நோட்டீஸ் வந்தாலும் அவர் தனிப்பட்ட முறையில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து பேரவையின் முடிவுபடியே செயல்படுவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்." (த.கோ.) .. 319—320

நீக்கம்—

தகுந்த ஆதாரங்களைப் பேரவைத் தலைவரிடம் முன்கூட்டியே காட்டி அவரது அனுமதி பெறாமல் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் நீக்கப்பெற்றன. (அ. ச. மு.) .. 246

மூலக்கேள்விக்கு சம்பந்தமில்லாதது என அதற்கு அனுமதி மறுக்கப் பெற்றது. (து.வி.) .. 533

ஸப்ஜுடிஸ் மேட்டர் பற்றி பேச வேண்டாம் என்று குறிப்புரைக்கப் பெற்று அப்பகுதி நீக்கப் பெற்றது. (அ.ச.மு.) .. 455



'த'—தொடர்ச்சி	பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

பேசும் முறை—

நீதிமன்றத்தின் முன்னுள்ள பிரச்னைகளைப் பற்றி சட்டமுன்வடிவின் மீது பேசும் போது பேசக்கூடாது. (அ.ச.மு.) 228—229

வினாக்கள்—விடைகள்—

கேள்வியை சுருக்கமாகக் கேட்க வேண்டும். (து.வி.) .. 425

சொற்பொழிவாக ஆற்றக்கூடாது. கேள்வியாகக் கேட்கவேண்டும். (து.வி.) .. 293

மூலக்கேள்விக்கு தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். (து.வி.) .. 18

தனுஷ்கோடித் தேவர், திரு. கே.—

பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119—120

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் முதுகுளத்தூர் .. 697—698

முதுகுளத்தூர் நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவித்தல் .. 408

தாமரைக்கனி, திரு. இரா.—

இராயகிரி கிராம ஆற்று புறம்போக்கு நிலம் 734

எண்ணெய் வித்துவளர்ச்சி, தனித்துறை .. 710—711

எரிசாராயத் தொழிற்சாலை சேலத்திலும் அமைத்தல் .. 668

கண்மாய்கள், குளங்கள், திருவில்லிபுத்தூர் ரெவின்யூ கிராமங்கள் .. 683

கோவை மத்திய கூட்டுறவு வங்கிகள் பட்டதாரி எழுத்தாளர்கள் .. 417—419

தண்டாயுதபாணி ஆலயம், காணிக்கை முடி ஏலம் .. 672

'த'—தொடர்ச்சி பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தாமரைக்கனி திரு இரா. தொடர்ச்சி

- தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் (செங்கை மாவட்டம்) 552—553

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340

350—351

பருத்தி அரவை ஆலை, உடுமலைப்பேட்டை .. 725

பருத்தி பெருக்குத்திட்ட அலுவலகம் திருவில்லிபுத்தூர் 692—693

பிள்ளையார் நத்தம், பழப்பண்ணை ஏற்படுத்துதல் .. 305—306

பேண்டேஜ்—காஸ் துணி கொள்முதல் .. 21

திட்டப்பணிகள்—

தன்னிறைவுத் திட்டம், மதுரை மாவட்டம் .. 16—21

திருவேங்கடம் திரு. பெ. சு.

மார்க்கெட்டிங் கமிட்டி ஊழியர்கள் கோரிக்கை 536—53

நெல் வில்வராயநல்லூர் கிராம ஆதி திராவிட மக்கள்—வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம் 434

வடஆற்காடு மாவட்டம், நாங்குநேரி கிராமம், நக்ஸலைட்டுகள்மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) 322

தீர்த்தராமன் திரு. ப.—

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவு, 1981 ஊராட்சிகள், ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 265

காகித ஆலை, பொன்னகரத்தில் ஆரம்பிக்கும் செய்திக்குறிப்பு .. 687

பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119—120

தீர்மானங்கள்—

அலுவல் வரிசையில் மாற்றம் 475,518

631

654—655





தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தீர்த்தராமன் திரு. ப—தொடர்ச்சி

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம் 138—163

நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்தியச்சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுதல் (த.தீ.) 475—476

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியமை .. 502—504

போவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல் .. 692

பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கள் திருத்தங்கள் .. 655 660

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (த.தீ) .. 660 661

.. 354 355

விதி 30(3) ஐத் தளர்த்தல். .. 119

விதி 31-ஐத் தளர்த்தல் .. 63

விதி 32 ஐத் தளர்த்தல்

துணிகள்—

செயற்கை இழைத்துணிகள், டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் .. 728

துரைசாமி, திரு. பி. எஸ்.—

குன்னத்தூர், தர்மபுரி மாவட்டம்—புதிய பாலம்.. 15

துரைமுருகன், திரு.—

இந்து சமய அறக்கட்டளைகள (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 393

பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு சட்ட முன் வடிவு .. 508—513

பாரதியார் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு 1981 பாரததாசன் பல்கலைக் கழக சட்ட முன் வடிவு, 1981 (ஆ.நி.) .. 523

பேரவை அலுவல்—அ.ச.மு. (த. கோ.) .. 505

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தொல் பொருள்—

சிற்பங்கள், வரலாற்றுச் சின்னங்கள் .. 685

புதைபொருள், ஆய்வு, ஈரோடு கொடுமணல் .. 679

புதைபொருள்கள், ஈரோடு கொடுமணல் .. 676

தொழிலாளர்கள்—

கல்வி மண்டல நிலையங்கள் .. 683 684

சம்பள விகிதம், தேயிலைத் தோட்டங்கள் 298 300

தொழிற்சாலைகள்—

அண்ணா இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொழிற்சாலை .. 29—33

எரிசாராய தொழிற்சாலை, சேலத்தில் அமைத்தல் .. 668

காகித ஆலை, குலசேகரம்பதி .. 715

காகித ஆலை, நத்தம் தொகுதி .. 695 696

காகித ஆலை, பொன்னகரம் .. 687

சமையல் எண்ணெய் ஆலை, துவங்குதல் .. 707

சிமெண்ட் தொழிற்சாலை, சேடப்பட்டி .. 717

டான்சியில் உற்பத்தியாகும் பொருள்கள் .. 525—526

பருத்தி அரவை ஆலை, உடுமலைப்பேட்டை .. 725

மரவள்ளிக்கிழங்கு ஆலை, சேலம் மாவட்டம் .. 691

வனஸ்பதி தொழிற்சாலை, ஆலங்குடி .. 694

வனஸ்பதி தொழிற்சாலை, உடையார்பாளையம் .. 700

வாழைப் பழத்தை பக்குவப்படுத்தும் தொழிற்சாலை, கம்பம் பகுதி .. 715

நரசிம்மன், திரு. பூ. மு.—

ஊராட்சி மன்றங்கள், பகுதி நேர ஊழியர்கள் 727—728

பாலாபுரம் கிராமம், புதிய ஏரி அமைக்கும் திட்டம் .. 404

நல்லப்பன், திரு. தி. கா.—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 358—359







ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 641—642

பெருந்துறை ஒன்றியம், ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் .. 313—315

பெருந்துறை மையம், நகரப் பேருந்து திட்டம் .. 689

வடாற்காடு மாவட்டம், நாங்குநேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ. தீ.) .. 322

நவநீத கிருஷ்ணபாண்டியன் திரு. ஆர்.—

கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981–82 விவாதம் .. 195—198

பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ. தீ.) 119—120

பெரிய கிராமங்கள், கூடுதல் தலையாரிகள் நியமிக்கும் திட்டம் .. 410

நிதி அலுவல்கள்—

கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981–82, விவாதமும் வாக்கெடுப்பும். .. 163—215

நிலங்கள்—

நில உச்சவரம்புச் சட்டம், நிலங்கள் .. 729—730

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க. ஈ.) .. 340—353

புறம்போக்கு நிலம், இராயகிரி .. 734

நினைவுச் சின்னங்கள்

உமறுப்புலவர், நினைவு மண்டபம். .. 690

நீக்கம்— 172, 222, 224, 225, 227, 232, 233, 319, 320, 327, 337, 576, 619, 620, 621, 650, 651

நினைவுச் சின்னங்கள்— பக்கங்கள்

'ந'—தொடர்ச்சி

நீதிமன்றங்கள்—
- சாட்சியம், டேப் மூலம் பதிவு .. 735
- சைதாப்பேட்டை ஜூடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் .. 421—422
- நிரந்தரமாக்கப்படாமலுள்ள குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் .. 414—416
- மாவட்ட முன்சீப், பெரம்பலூர் .. 678

நுகர்பொருள்—
- அரசு நியாய விலைக் கடைகள், விளவங்கோடு தாலுக்கா .. 672
- கிராமப்புற நியாய விலைக் கடைகள் .. 728
- திருச்சி வட்டம் போலி குடும்ப அட்டைகள் .. 677
- நுகர்பொருள் வாணிபக்கழகம் நஷ்டம் விவரம் .. 675
- மாநில நுகர்பொருள் வாணிபக் கழகம் .. 680
- வாணிபக் கழகம், செஞ்சி, தானியக் கிடங்கு .. 701

நூலகங்கள்—
- தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம், ஆண்டுக் கணக்குகள் தணிக்கை .. 413—415

நெடுஞ்செழியன்: டாக்டர் ரா.—
- அலுவல் வரிசையில் மாற்றம் (அ.தீ) .. 518
- இலங்கை கடற்படை தமிழகக் கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தீ.) .. 49—51
- இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒரு நாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம் கூட்டுதல் (த.கோ.) .. 516—518

நெடுஞ்செழியன் டாக்டர், இரா.—தொடர்ச்சி
- ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 137—138
- கூடுதல் துணைமானியக் கோரிக்கை 1981–82, விவாதம் .. 164, 206—213
- சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1981 .. 445—446, 474—475



பக்கங்கள்

'ந'—தொடர்ச்சி

- தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம் (தீ.). 1[illegible]8—163
- நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1981 216
- (ஆ.நி.) .. 446, 471—475
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 1[illegible]4—137
- பாரதியார் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு 1981, பாரதிதாசன் பல்கலைக்கழக சட்ட முன் வடிவு, 1981 .. 524
- விதி 31-ஐத் தளர்த்தல் (தீ.) .. 19
- விதி 32-ஐத் தளர்த்தல் (தீ.) .. 6[illegible]
- வேதாரண்யம் கரையோரம் பிணங்கள் ஒதுங்கியிருப்பதாக வந்துள்ள செய்தி (த.கோ.) .. 260—261

நெடுமாறன், திரு. ப.—
- இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 359—364
- இலங்கை கடற்படை தமிழக கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தீ.) .. 4[illegible]
- இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வகட்சிக் கூட்டம் (த.கோ.) .. 325, 3[illegible]1
- பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 123—125
- பாரதியார் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு, 1981 பாரதிதாசன் பல்கலைக்கழக சட்ட முன் வடிவு, 1981 .. 604—612, 614, 615, 620, 633
- வனஸ்பதி தொழிற்சாலை, ஆலங்குடி .. 694

நோய்கள்—
- யானைக்கால் பரவல் .. 677 - 678

பக்கங்கள்.

'ப'


பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம்.—

குப்பகோணம் மருத்துவமனை, குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு விரிவாக்குதல் .. 315—316

கூட்டுறவு பால் வழங்கும் சங்கம், பம்பப்படையூர் 731—732

பணப்பயிர்கள்—

கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, குடியாத்தம் 537—538

வாழைப் பண்ணை, விரிஞ்சிபுரம். 302—303

பத்திரப் பதிப்பு—

பத்திரம் எழுதும் பணி 707

பம்மல் நல்லதம்பி திரு—

சைதாப்பேட்டை ஜுடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் மாஜிஸ்ட்ரேட். 421

பர்மா அகதிகள், மறுவாழ்வுக் கடன்கள் 548—552

பருத்தி—

பெருக்குத் திட்ட அலுவலகம் 692—693

பல்கலைக் கழகங்கள்—

அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம், ஆராய்ச்சி முடிவு .. 697

வேளாண்மை பல்கலைக் கழகம், கோவை 739

பலராமன், திரு. இல.—

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981 .. 640—641

புதைபொருள் ஆய்வு, ஈரோடு கொடு மணல் 679

பெரு விளக்கப் பண்ணைகள் (வ.ஆ.மாவட்டம்) 534—535

வடாற்காடு மாவட்டம் நாங்குநேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு. (ஒ.தீ.) 322

விரிஞ்சிபுரம், வாழைப் பண்ணை செயல்படுதல். 302—303

விவசாயத் துறை களப்பணியாளர் 689—690

பழனியப்பன், திரு கு. பா.—

இந்து மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி, மூடப்பெற்றுள்ளது. (க.ஈ.) .. 582




பக்கங்கள்.

ப—தொடர்ச்சி


பழனியப்பன், திரு. கு. பா. — தொடர்ச்சி.

குடிநீர், கல்பட்டு கிராமம், விழுப்புரம் தாலுக்கா. 717—718

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை பணியாளர்கள் .. 540—542

பழனிவேல், திரு. என்.—

அரசுத் திட்டங்கள், கண்காணிப்பு .. 705

ஆயக்குடி குடிநீர்த் திட்டம் .. 60, 61, 62

கொடைக்கானல்—மூனாறு சாலை .. 716

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தேர்வு ஒத்தி வைப்பு (ஒ.தீ.) .. 437

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340

பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஒ.தீ.) .. 119—120

பழனி டான்சியில் உற்பத்தியாகும் பொருள்கள் .. 525—526

பாசனம்—

கண்மாய்கள், குளங்கள், திருவில்லிப்புத்தூர் ரெவின்யூ கிராமங்கள் .. 683

காவிரி நதி நீர், திருப்பிவிடுதல் .. 722—723

தடப்பள்ளி வாய்க்கால் தூர் எடுக்கும் பணி .. 404

தாமிரபரணி, மணிமுத்தாறு, கோதையாறு, மேம்பாட்டுத் திட்டங்கள் .. 406—408

தாளவாடி மலைப் பகுதி நிலங்கள் பாசன வசதி 403—404

பாலாபுரம் கிராமம், புதிய ஏரி அமைத்தல் 404—405

முகவை மாவட்டத்தில் கண்மாய்கள் மேம்பாடு செய்யும் திட்டம் .. 405—406

பாண்டியன், திரு. பி. எச்.—

உரிமைக்குழு, அறிக்கை அளித்தல் (திரு. அ. ரகுமான்கான் மீது) .. 590

பக்கங்கள்.

பா—தொடர்ச்சி

பாபு ஜனார்த்தனன், திரு—

இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 355—358
சூரியகாந்தி விதைத் தட்டுப்பாடு .. 11
மத்திய வங்கிகள், நகைக் கடன் .. 729
வடாற்காடு மாவட்டம், நாங்குநேரி கிராமம் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு(ஒ.தீ)... 322, 337—338

பாரமலை, திரு. க—

கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981-82, விவாதம் .. 198—202
நேர்த்தியாயிருப்பு கிராமம் குடிநீர் வழங்கும் திட்டம் .. 421—425
பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறைகேடு (க.ஈ.) .. 586, .. 587—588
மானாமதுரை தொகுதி, டீசல் விநியோகம். 27—29

பால்வளம்—

காஞ்சி, விநியோக நிறுவனம் அமைத்தல் .. 7—8
கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்
பம்பப்படையூர் .. 731—732

பாலகிருஷ்ணன், திரு. ச.—

அரசு பேருந்து ஓட்டுநர்கள் பரிசு .. 561—564
ஏழுமத்தூர், துணை மின் நிலையம் அமைத்தல் 295
கூட்டுக் குடிநீர் திட்டம், மொடக்குறிச்சி தொகுதி .. 696

பாலகிருஷ்ணன், திரு. வி.—

ஊராட்சி ஒன்றியங்கள், கூடுதல் ஆணையர்கள் நியமித்தல் .. 309—311

பாலங்கள்—

அர்ஜுனா நதி, விருதுநகர் தாலூக்கா .. 716
உப்பாற்று பாலம். .. 543—544
கனிமாவூர்—விராலிமலை சாலை, பேரம்பூர் பாலம் 539—540



பக்கங்கள்

பா—தொடர்ச்சி

பாலங்கள்— தொடர்ச்சி

குழித்துறை ஆறு, கணபதியான் கடலில் பாலம் அமைத்தல். .. .. .. 713—714
குன்னத்தூர், தர்மபுரி மாவட்டம், புதியபாலம். 15
கோடைக்கானல். 704
தாயனூர் பள்ளம், (காரனூர்-பில்லூர் ரோடு) பாலம். 543
பாபநாசம் பெரியபாலம் 14—15
மணல்ஏரி 726
லிங்கத்தூர் உப்பிடமங்கலம், பாலம் 698

பாலசுப்பிரமணியன், வேடசந்தூர் திரு வி. பி.

அண்ணா தொழில் நுட்ப பல்கலைக்கழகம் ஆரய்ச்சிமுடிவு 697
அரசு உயர்கல்விக் கூடங்கள்
பின்தங்கிய மாணவர்கள், அரசு மருத்துவ 684-685
மனைகள், மருத்துவர்கள் தனியாக தொழில்
நடத்தத் தடை திட்டம் 667
ஊராட்சி ஒன்றியங்கள், டிராக்டர்கள் 674
ஊராட்சி ஒன்றியங்கள், தனித்தொழில்
விரிவாக்க அலுவலர்கள் 720
கால்நடைமருத்துவர்கள், விடுப்புச் சலுகைகள் 721
கூட்டுறவு சங்கங்கள் கடன்கள் 737
சட்ட மேற்படிப்பு, அரசு ஊழியர்களின்
பிள்ளைகளுக்கு தகுதி 719
தருவிளக்குகள், வோல்டேஜ் ஸ்டெபிலைசா
பாருத்துதல். 6—7
நீதிமன்றங்கள், டேப் மூலம் சாட்சியம் பதிவு 735
பத்திரம் எழுதும் பணி 707
பேருந்து நிலையங்கள் உணவு விடுதிகள் 564—567
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) 570—572

பாலன், திரு. சு.—

ஊராட்சிகள்(மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981 628—639
சென்னை குடிசைப் பகுதி, குடிநீர் தொட்டி. (க. ஈ.) 51, 55, 60

பக்கங்கள்

பா—தொடர்சி.


பால் சப்ளை நட்சத்திர ஓட்டல்கள் 8—9

பிச்சை திரு. எம்.—

முகவை மாவட்டம், கம்பிக்குடி, கட்டிடக்குளம் கண்மாய்கள் மேம்பாடு செய்யும் திட்டம் 405, 406

பிற்பட்டோர் நலன் அரசு திட்டங்கள்,

கண்காணிப்பு— 705

கல்வி நிலையங்கள், வேலைவாய்ப்பு அலுவலகங்கள், தாழ்த்தப்பட்டோர் சதவிகிதத்தை மாற்றி அமைத்தல் 713

புருஷோத்தமன், திரு. து.—

பேருந்துகள் வழித்தடங்கள் (இரவுநேரம்) சென்னை நகரம் 673

மீன்பிடிப்பு, சிறிய கண்வலைகள் 721—722

வேளாண்தொழில் கழகம், சூரிய காந்தி எண்ணெய் 9—11

பூங்காவனம் திரு. என். ஏ.—

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவு, 1981 ஊராட்சிகள் ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள்) நியமனம் இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 261—262

கொசுத் தொல்லை, வேலூர்கோட்டை அகழிகள் 698 699

வடாற்காடு மாவட்டம் நாங்குநேரி கிராமம் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) 332 335

வேலூர் கல்வி மைய மேற்பார்வையாளர், ஊழல்புகார்கள் 691 692

பெருமாள், திரு. ரா. கு.—

கல்லூரணி, வைப்பார் கிராம கடற்கரைப்பகுதி கருப்பு நிற மணல் ஏலம் 673

தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் பேருந்துப்பணி 27

புதூர் பேரூராட்சி குடிநீர் வழங்கல் 712




பக்கங்கள்


பொதுச்சுகாதாரம்—

சிதம்பரம் சாக்கடை அமைக்கும் திட்டம் 422—424

தூத்துக்குடி நகர் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் 426—427

யானைக்கால் வியாதி, குமரிமாவட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகள் 669

பொதுப்பணி—

அரசாங்க தோட்டத்தில் உள்ள கட்டிடங்கள் 546—548

பொன்னம்மாள் திருமதி, ஏ. எஸ்.— 85—89

உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம்— 85—89

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 ஊராட்சிகள் ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 266—268

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன் முடிவு, 1981 645

பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் பொதுப் பணித் துறை குளங்கள் 681

பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறையீடு (க.ஈ) 586, 588, 589

பொன்னுரங்கம், திரு. ப.—

இந்து மேல் நிலைப்பள்ளி திருவல்லிக்கேணி, மூடப்பெற்றுள்ளது (க.ஈ) 582 583—584

இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒரு நாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம் கூட்டுதல் (த.கோ) 436

மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 1981 218

சென்னை பிராட்வே பேருந்து நிலையம், 723—724

திருச்செந்தூர் பேருந்து நிலையம் அபிவிருத்தி 16

நகரப் பேருந்துகள், இரண்டு நடத்துனர்கள் நியமித்தல் 555—557

பஸ்சேசிஸ்கள் (தமிழகத்திற்கு) மாதாமாதம் ஒதுக்கப்படுவது 567—568

பக்கங்கள்

பாண்டியன் போக்குவரத்துக் கழகம், முதுகுளத்தூர் 697—698
பெருந்துறை மையம், நகரப் பேருந்து திட்டம் 686
பேருந்து நிலையங்கள் உணவு விடுதிகள் 564—567
பேருந்து நிலையம் (புதியது), குழித்துறை நகராட்சி 716—717
பேருந்து நிலையம் மாற்றுதல், திருத்துறைப்பூண்டி 308—309
பேருந்துகள் வழித்தடங்கள் (இரவு நேரம்), சென்னை நகரம், 673
போக்குவரத்து தொழிலாளர்கள்பணி இறுதி சலுகைகள் 557—560

'ம'

மக்கள் நல்வாழ்வு—
கொசுத்தொல்லை, வேலூர்கோட்டை 698—699
தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர் 23—27

பொன்னையன் திரு. சி.—
சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 636—637

போக்குவரத்து—
அரசு பேருந்து ஓட்டுநர்கள் பரிசு 561—564
அன்னூர் நகரப் பேருந்து நிலையம் 688—689
கப்பல் ஈ. வெ.ரா. விற்பனை 708
கழகங்கள் தொழிலாளர்கள், வருங்கால வைப்பு நிதி கணக்கு 700
கழிப்பிடங்கள் (திருவள்ளுவர் விரைவு பேருந்து நிலையங்கள்) 553—554
காஞ்சிபுரம்-கன்னியாகுமரி பேருந்துப்பணி 354—355
காஞ்சிபுரம்-தருமபுரி வழித்தடம், 732
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், விரைவுப் பேருந்துகள் 682
தூத்துக்குடி துரைச்சாமி 27

மணி, திரு. டி.—
அரசு கண்மாய்கள் மீன்பிடிக்க ஏலம் .. 727
அரசு நியாய விலைக்கடைகள், விளவங்கோடு தாலுக்கா .. 672
ஆதி திராவிடர் வீடுகள், ஆரல் வாய்மொழி 726
இலங்கை கடற்படை தமிழக கடற்கரையில் போர் ஒத்திகை (ஒ.தீ) .. 46
காகித ஆலை, குலசேகரம் பகுதி .. 715



'ம'—தொடர்ச்சி

மணி, திரு. டி.—தொடர்ச்சி

பக்கங்கள்

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.) .. 340, 349
பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்ற படுதல் (ஒ தீ.) 119—120
பேருந்து நிலையம் (புதியது), குழித்துறை நகராட்சி .. 716, 717
மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 .. 243—245
வடாற்காடு மாவட்டம் நாங்குநேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) 322

மணிமாறன், திரு. ஆர்—
இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வகட்சிக் கூட்டம் (த.கோ.) .. 331

மதுவிலக்கு—
கள், சாராயக் கடைகள் ஏலம் .. 730—731

மருத்துவமனைகள்—
அரசு மருத்துவமனை, விக்ரமங்கலம் ... 718
அரசு மருத்துவர்கள் தனியாக தொழில் நடத்துதல் தடை திட்டம் .. 667
ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், பெருந்துறை ஒன்றியம் .. 313—315
கும்பகோணம், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விரிவாக்குதல் .. 315—316
பேண்டேஜ் காஸ் துணி, கொள்முதல் .. 21—23

மாணிக்கம், திரு. எம். எஸ்.—
உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம் .. 69—73
வறட்சி, விதைகள் தட்டுப்பாட்டை நீக்குதல் 303—305
வேளாண் தொழிலாளர், நியாய ஊதியத் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981
வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 .. 281—282

மாநாடுகள்—
முதலமைச்சர்கள் கூட்டம், விற்பனை வரி மாற்றம் 709—710

ம—தொடர்ச்சி


மாரிமுத்து, திரு. த— பக்கங்கள்

கனிமாவூர்—விராலிமலை சாலை, பேரம்பூர் பாலம் .. 539—540
புதுமுக வகுப்பு மாணவர்கள் உதவித் தொகை 430, 431

மாவட்ட நிர்வாகம்—

சீனிவாசநல்லூர் கிராமம் .. 638
அனல் மின் நிலையம், ஆம்பூர்-வாணியம்பாடி 730
அனல் மின் நிலையம், தூத்துக்குடி .. 682—683
துணை மின் நிலையம் அமைத்தல், ஏழுமத்தூர் 295
தெரு விளக்குகள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர் பொருத்துதல் .. 6—7

மின்சாரம்—

தெர்மல் நிலையம், கோவை மாவட்டம் .. 736
தேசிய கிரிட், தென் மாநிலங்கள் .. 4—6
மின் கட்டணம், பொள்ளாட்சி நகராட்சி .. 702—703
மின் திட்டங்கள், காவிரி நதி .. 1—4
மின் வாரியப் பொருட்கள் திருட்டு, சுருளியாறு 296

மீனளம்—

மீன் காட்சி சாலை—

சென்னை .. 738
அரசு கண்மாய்கள், மீன் பிடிக்க ஏலம் .. 727
சிறிய கண்வலைகள் .. 721—722
சின்னமுட்ட மீன்பிடி துறைமுகம் .. 399—400
மன்னார் வளைகுடாப் பகுதி, செயற்கை முத்து உற்பத்தித் திட்டம் .. 400—403
விசைப்படகு, தங்கச்சிமடம், இலங்கை கடற் படையினரால் இழுந்துச் செல்லப் பெற்றது 670

முத்துகிருஷ்ணன், திரு.ச. சு.—

சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் .. 399
தென் மாநிலங்கள், தேசிய மின்கிரிட் .. 4

முத்துராமலிங்கம், திரு. இ.—

ஆத்தங்கரை பள்ளி வாசல், .. 687
இந்து மேல் நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி, மூடப்பெற்றுள்ளது. .. 533




ம தொடர்ச்சி


முத்துராமலிங்கம், திரு. —தொடர்ச்சி பக்கங்கள்.

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன் வடிவு, 1981
ஊராட்சிகள் ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்டமுன் வடிவு 1981 ..

முத்தையா திரு. இரா. .. 263

சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்கள் குடிநீர் வழங்கும் திட்டம் .. 427
சிமெண்ட் தொழிற்சாலை, சேடப்பட்டி பகுதி .. 717

மூர்த்தி திரு. ஜி

மது விலக்கு—(இரண்டாம் திருத்தச்) சட்ட முன் வடிவு, 1981 .. 235

ர

ரகுமான்கான், திரு. ர.அ

உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது (உ.பி.) .. 43—46
கூடுதல் துணைமானியக் கோரிக்கை 1981—82, விவாதம் .. 165—169
நிதி ஒதுக்க எண் (4) சட்டமுன் வடிவு. 1981 .. 446—455
.. 457—458
பம்பாய் நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல் (ஓ.தீ.) .. 472
பாரதியார் பல்கலைக் கழக சட்டமுன் வடிவு, 1981 .. 131—133
பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டமுன் வடிவு, 1981 ..
.. 612—618
619—920
631—632
பேரவை அலுவல் (த.கோ) 633—634
மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு 1981 .. 505
மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு 1981 .. 476—477
486
வடாற்காடு மாவட்டம் நாங்குனேரி கிராமம், நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு. (ஓ.தீ.) .. 217
.. 322

ர—தொடர்ச்சி

பக்கங்கள்

ரங்கசாமி, திரு. ஆர்.
- தாளவாடி மலைப்பகுதி நிலங்கள் பாசன வசதித் திட்டம் .. 403

ரமணி, திரு. கு–
- அண்ணா என்ஜினியரிங் கார்ப்ரேஷன் தொழிற்சாலை .. 29
- இ.எஸ்.ஐ. ஊழியர்கள் ஊதிய நிர்ணய நிபுணர் குழு .. 694—695
- ஊர் நல அலுவலர்கள், பயணப்படி .. 674—675
- கூடுதல் 8. மா.கோ. 1981–82, விவாதம் .. 191—195
- கோவை காந்தி இர்வின் ஸ்டேடியம், .. 692
- கோவை டாடாபாத் அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி வீடுகள், .. 667—668
- கோவை டாட்டாபுரம் அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி வீடுகள் .. 668
- திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், விரைவுப் பேருந்துகள் .. 682
- நெய்வேலி, நிலக்கரி சுரங்கல் திட்டம். .. 291—295

ராமசாமி, திரு. டி.
- விசைப்படகு, தங்கச்சி மடம், இலங்கை கடற்படையினரால் இழுத்துச் செல்லப் பெற்றது. .. 679

ராஜமாணிக்கம், திரு. எம். கே
- மணச்சநல்லூர் ஒன்றியம் நொச்சி கிராமம், பஞ்சாயத்து கழிப்படம் .. 685—686

ரத்தினராஜ், திரு. எஸ்—
- யாணைக்கால் வியாதி, குமரி மாவட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகள் .. 669

'வ'

வரதராஜன் திரு. என்—
- மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (த.தீ.) .. 660—661
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்டமுன் வடிவு, 1981 ..
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1981 .. 278—281

விசயலட்சுமி செல்வி. வி.
- கூட்டுறவுத்துறை இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வாளர்கள் .. 41



வ—தொடர்ச்சி

பக்கங்கள்.

விசயலட்சுமி செல்வி, வி.—தொடர்ச்சி
- மரவள்ளிக்கிழங்கு ஆலை, சேலம் மாவட்டம் .. 691

விடுதிகள்—
- திருப்பத்தூரிலுள்ள அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி .. 428—429

விபத்துகள்—
- மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து (க.ஈ.) .. 439—441

விளம்பரம்—
- விளம்பர பேனர்கள், சென்னை மாநகராட்சி அனுமதி .. 544—546

விளையாட்டுகள்—
- கோவை காந்தி இர்வின் ஸ்டேடியம் .. 692

வின்செண்ட். திரு. மி.—
- மணக்காடு கிராமத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மறைவு (த.கோ.) .. 570

விஜயராகவன், திரு. பொ.—
- உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம். .. 90—96
- குழித்துறை ஆறு கணபதியான் கடலில் பாலம் அமைத்தல். .. 713—714

விஸ்வநாதன், திரு. கோ.—
- ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு 1981 .. 642—643
- கூடுதல் துணை மானியக் கோரிக்கை 1981-82, விவாதம் .. 169—172

வீட்டு வசதி—
- கிராமப்புற வீட்டு வசதி சங்கம் .. 734
- கோவை டாடாபாத் அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி வீடுகள் .. 667—668
- கோவை டாடாபுரம் அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி வீடுகள் .. 668
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் வீட்டுமனை நிலப் பட்டா வழங்குதல் .. 710

வீட்டு மனைப்பட்டா, பேரம்பாக்கம் .. 736

பக்கங்கள்.

வ—தொடர்ச்சி


வீரப்பன் திரு. ஆர். எம்.—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. .. 355,
.. 382—395

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், விவசாயிகளை வெளியேற்றுதல் (க.ஈ.அ.) .. 341—343
344—345
347—349
350, 351
352—353

வீராசாமி, திரு. த.—

வறட்சி, விதைகள் தட்டுப்பாட்டை நீக்குதல். .. 303—305

வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.

இந்து மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி மூடப்பெற்றுள்ளது (க.ஈ.) .. 582—583
காஞ்சி பால் விநியோக நிறுவனம் அமைத்தல் 7—8
காஞ்சிபுரம்—கன்னியாகுமரி பேருந்துப் பணி .. 354—355
காஞ்சிபுரம்-தருமபுரி வழித்தடம், .. 732
காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம் .. .. 737
விற்பனைவரி மேல் முறையீட்டு உதவி ஆணையாளர் அலுவலகம், காஞ்சிபுரம் .. 706—707
ஜவஹர்லால் நேரு, ராஜாஜி மார்க்கெட்டுகள், காஞ்சிபுரம் .. .. 696—697

வெளிநடப்பு— .. ..234,235,246

வேளாண்மை—

எண்ணெய் வித்து வளர்ச்சி, தனித்துறை .. 710—711
ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், விளைப் பொருட்கள் .. .. 720
சூரியகாந்தி விதை, தட்டுப்பாடு .. 11—12
தொழில் கழகம், சூரியகாந்தி எண்ணெய் .. 9—11
பரமக்குடி விதைப் பண்ணை .. 12—13
பழத்தோட்டங்கள் — பிள்ளையார் நத்தம் அருகே அமைத்தல் .. 305—306
பெரு விளக்கப்பண்ணைகள் (வ. ஆ. மாவட்டம்) 534—535
போடி விவசாய நிலங்கள் யானையால் ஏற்பட்ட சேதம் .. .. 530—531
மணிலாப் பயிர், மதுராந்தகம் வட்டம் .. 725




பக்கங்கள்.

வ—தொடர்ச்சி


வேளாண்மை—தொடர்ச்சி

மண் பரிசோதனை நிலையம், சேலம் .. 738
வேளாண்மை— பொறியியல் மையம், கடம்பத்தூர் ஒன்றியம் .. .. 734

‘ஜ’

ஜான் வின்சென்ட், திரு. மு.—

ஏர்வாடி அரசினர் உயர் நிலைப் பள்ளிக் கட்டிடம் 413

ஜெயராமன், திரு. வே. இரா—

மதுரை—தேனி—குமுளி சாலை, தேசிய நெடுஞ் சாலையாக மாற்றுதல் .. .. 306—398

‘ஹ’

ஹண்டே மாண்புமிகு டாக்டர் எச். வி.

அலுவல் வரிசையில் மாற்றம் (தீ) .. 475
நிதி ஒதுக்க எண் (4) சட்டமுன் வடிவு, 1981 (ஆ.நி) 453, 454
455,456
நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்துதல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுதல் (அ.த.தீ.) .. 475—476
மதுரை காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 .. 488—489

ஹாஜா செரீபு, திரு. கே. எஸ். ஜி.—

இலங்கைத் தமிழர் இன்னல்கள், சர்வக் கட்சிக் கூட்டம் (த. கோ.) .. 325
உணவு நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை மீது விவாதம் .. .. 96—98
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ) .. .. 571
ஹோசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் (ஒ.தீ) .. 577

ஹேமச்சந்திரன், திரு. ஜே.—

அனல்மின் நிலையம், தூத்துக்குடி .. 682—68
குமரி மாவட்டம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் .. .. 301—302
போக்குவரத்துக் கழகங்கள், வருங்கால வைப்பு நிதிக் கணக்கு .. 700
போக்குவரத்துத் தொழிலாளர்கள் பணி இறுதிச் சலுகைகள் .. .. 557—560

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வியாழக்கிழமை, 1981 ஆகஸ்ட் 27

## ஆவணி 11, துன்மதி—திருவள்ளுவர் *2012*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.''

தம் கடமையில் வழுவாமல் கண்ணோட்டமும் தாட்சண்யமும் உடையவராகச் செயல்படும் திறமை உடையவர்களுக்கு இவ் வுலகம் உரிமை உடையதாகும்.

### வினாக்கள் — விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### காவிரி நதியின்கீழ் அமைக்கப்படவுள்ள மின்திட்டங்கள்.

*வினா எண். 81—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதியின் கீழ் மின் திட்டம் எத்தனை இடங்களில் அமைக்கப்பட உள்ளது; எங்கெங்கு?

(ஆ) ஒவ்வொரு திட்டத்திற்கும் எவ்வளவு மதிப்பீடு ?

(இ) எப்பொழுது துவக்கப்பட இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தலைவர் அவர்களே, காவிரி நதியின் கீழ் மூன்று இடங்களில் நீர்மின் திட்டங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அவை (1) கீழ்மேட்டூர் நீர்மின் திட்டம் ; மேட்டூர் அணைக்கும் பவானி நகருக்கும் இடையில் ஒன்று. (2) பவானி நகருக்கும் கல்லணைக்கும் இடையில்—ஒன்று. (3) ஒகனேகல் மின் திட்டம் ; மேகதாதுக்கும் மேட்டூருக்கும் இடையில் ஒன்று.

(ஆ) மற்றும் (இ) : கீழ் மேட்டூர் மின்திட்ட மதிப்பீடு ரூ. 89.72 கோடியாகும். இத்திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன. இரண்டாவது மின் திட்டம் மின்வாரியத்தில் முன்னோடி ஆய்வு நிலையிலே உள்ளது. மூன்றாவது திட்டமான ஒகனேக்கல் திட்ட மதிப்பீடு ரூ. 109.72 கோடியாகும். இத்திட்டம் குறித்து மைய அரசுடனும், கர்நாடக மாநில அரசுடனும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவுபெறும்போது எவ்வளவு மெகாவாட் மின்சாரம் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கீழ் மேட்டூர் நீர் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் 120 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்றும் இன்னொரு 145 மெகாவாட் மின்சாரம் கல்லணைக்கும், பவானிக்கும் இடையிலே உள்ள மின் திட்டத்தில் கிடைக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. ஒகனேக்கல் திட்டத்தைப் பொறுத்த வரையில் கர்நாடக அரசோடு பேசி அந்த விவரங்களை நாம் தயாரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இருந்தாலும் 600 மெகாவாட் மின்சாரம் அந்தத் திடட்டத்தின் மூலம் கிடைக்கும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, ஒகனேக்கல் நீர் மின் திட்டம் சம்பந்தமாக கர்நாடக மாநில அரசோடு பேசி அதை நிறைவேற்றுகின்ற வகையிலே அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இவ்வரசு இது சம்பந்தமாக கர்நாடக அரசுக்கு எழுதிய கடிதத் திற்கு கொள்கை அளவிலே இந்தத் திட்டத்தை ஒப்புக்கொள் வதாக கர்நாடக அரசு எழுதியுள்ளது. நம்முடைய முதல்வர் அவர்கள் கர்நாடக முதல்வர் அவர்களைச் சந்திக்கும் வகையிலே கடிதம் எழுதி இருக்கிறார்கள். மேற்கொண்டும் விவரங்களைப் பேச வேண்டி உள்ளது. விரைவிலே கர்நாடக மாநில அரசினுடைய சம்மதத்தைப் பெற்று, வேண்டுமானால் பெங்களூருக்கே கூட சென்று பேசுவதாக இந்த அரசு இருக் கின்றது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது நிதியுதவியினை நம்முடைய மாநில அரசுக்குச் செய்திருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம் மாநில அரசால் மேற்கொள்ளப் படுகின்ற திட்டம்.

அது மாநில திட்டத்தில் சேர்ந்தது. ஒட்டுமொத்தமாக மாநிலத்தில் வருகின்ற திட்டங்களுக்கு மத்திய அரசு காட்கில் பார்முலா என்ற வகையில் நிதியுதவி வழங்குகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கு என்றும் தனித்தனியாக உதவிகள் வருவதில்லை. இந்த திட்டத்தைப் பொறுத்தவரையில் மைய அரசு கூட ஏற்று நடத்துவதற்கு தயாராக இருக்கின்றது. ஆனால் கர்நாடக அரசு அதை ஏற்கவில்லை, நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.



திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நாள் தோறும் பெருகிக் கொண்டு வருகின்ற மின்சார பற்றாக்குறையை போக்குகின்ற வகையிலே தற்போது எந்தெந்த நீர்த்தேக்கங்களில் நீர்மின் திட்டம் இல்லையோ அங்கெல்லாம் சிறிய அளவிலே யாவது மின் திட்டத்தை ஏற்படுத்த அரசு உத்தேசித்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆற்றுப் படுகைகளிலே குறைவான உயரம் அதாவது 16 அடி உயரம் தான் உள்ளது. இப்படிப்பட்ட பகுதிகளில் பல்க் டர்பைனைப் பொருத்தி மின்சாரம் தயாரிக்கலாமா என்ற வகை யிலே கீழ் மேட்டூர் நீர்மின் திட்டத்திலே செயல்படுத்த இருக் கிறோம். மற்ற இடங்களிலும் இது சம்பந்தமாக மேலெழுந்த வாரியாகத் திட்டங்களை உருவாக்கி வருகிறோம். ஆகவே இதன் வெற்றியைப் பொறுத்தவரையில்தான் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரி நதியின் மேல் கட்டப்படும் 3 திட்டங்களின் மூலமாக மொத்தம் எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது? இந்த மின்சாரம் கிடைத்த பிற்பாடு, கேரளத்திலிருந்து வாங்கக் கூடிய மின்சாரம் நிறுத்தப்படுமா அல்லது தொடர்ந்து வாங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு கிடைக்கும் என்பதை நான் முன்கூட்டியே சொல்லி விட்டேன். ஆனால் நம்முடைய பசி யானைப் பசி ஆகையா இவைகள் எல்லாம் அதற்கு சோளப்பொரிகள்தாம்.

திரு. சு. முந்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பரளி யாறு மின்திட்டம் என்ற ஒரு திட்டம் அரசினுடைய ஆய்வில் இருப்பதாக அறிகிறேன். மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில் இந்தத் திட்டத்தையும் ஆய்வில் எடுத்துக்கொள்வார் களா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அறிந்திருப்பதற்கு என் நன்றி.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நம்முடைய தேவையைப் பொறுத்தவரையில் யானைப்பசி என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய தேவைகள் என்ன என்பதைப் பற்றி ஒரு திட்டம் தயாரித்து, அதை சென்டிரல் கவர்ன்மெண் டினுடைய சென்டிரல் எலக்ட்ரிசிட்டி அத்தாரிட்டிகளுக்கு அனுப்பி, அவர்கள் அதை ஒப்புக் கொண்டார்களா ? அல்லது

[1981 ஆகஸ்ட் 27

நம்முடையதேவைக்கும் குறைவான திட்டத்தைத்தான் அவர்கள் தயார் செய்தார்களா? அதற்கு இந்த அரசினுடைய ரி-ஆக்ஷன் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தருகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒகனேக்கல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கர்நாடக அரசினுடைய ப்புதல் வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஒகனேக்கல் திட்டம் கர்நாடக அரசினுடைய எல்லைக்குள்ளே இருப்பதனால், அவர்களுடைய ஒப்புதல் தேவையா? அல்லது காவிரி நதி அங்கேயிருந்து உற்பத்தியாவதால் அவர்கள் ஏதாவது தாவா செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய எல்லைக்குள்ளேயே ஒரு திட்டத்தைப் போட்டு, மீதி தண்ணீரை இந்தத் திட்டத்திற்கு தரலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றினால், இரு மாநிலங்களும் பயன் அடையலாம் என்று மத்திய சர்க்காரும் வற்புறுத்துகிறார்கள், நாமும் சொல்லி வருகிறோம். ஏனென்றால் அந்த ஆற்றின் ஒரு கரை கர்நாடகத்திலும் மற்றொரு கரை தமிழ்நாட்டிலும் இருப்பதால், பாதி வரை அணைக்கட்ட நம்மால் முடியவில்லை.

தென்மாநிலங்களுக்கான தேசிய மின்கிரிட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 82—திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாநிலங்களுக்கு ஆன தேசிய மின் கிரிட் அமைக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) தமிழக அரசு மின் கிரிட் திட்டத்தை ஆதரிக்கிறதா?

(இ) தேசிய மின்கிரிட் திட்டத்தை ஏற்காத தென்மாநிலம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தேசிய மின்கிரிட் அமைப்பதற்கு முன்னோடியாக தென்மண்டலத்தில் மாநிலங்களுக்கு இடையே சில கம்பித் தொடர்கள் ஏற்கனவே அமைக்கப் பட்டுவிட்டன. மற்றும் சில இணைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) ஆம்.

(இ) இல்லை.



1981 ஆகஸ்ட் 27]

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசிய மின்கிரிட் திட்டத்திலே புதிதாக மின் இணைப்புகள் ஏற்படுத்துகின்ற திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் மின்சாரப் பற்றாக்குறை என்பது இருந்து கொண்டேயிருக்கிறது. 1980–81 ஆம் ஆண்டிலே வெளி மாநிலங்களிலேயிருந்து, அதுவும் குறிப்பாக கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து நம் அரசு எவ்வளவு மின்சாரத்தைப் பெற்றுள்ள? தமிழகத்தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்கிற அளவிலே, இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கயிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தேசிய அளவிலே கிரிட் அமைப்பதைப்பற்றி, அதாவது லைன்கள் அமைப்பதைப் பற்றி மூலக்கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது மின் உற்பத்தியைப் பற்றியும், மின்சாரம் வெளியிடங்களிலிருந்து வாங்குவது பற்றியும் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அனைத்திந்திய ரீதியிலான இந்த மின்கிரிட் திட்டத்தினை ஏற்படுத்துவதன் மூலம் தமிழகத்திற்கு தற்போதுள்ள மின் தட்டுப்பாட்டை தடுப்பதற்கு ஏதாவது லாபம் கிடைக்குமா? அல்லது பக்கத்தில் இருக்குப்படியான மாநிலங்களோடு நாம் பேசி ஏற்பாடு செய்து கொண்டு வருகிற மின்சாரம்கூட கிடைப்பதற்கு இடையூறு ஏற்படுமா? ஏனென்றால் இந்தத் திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தால், அப்படிப்பட்ட இடையூறு ஏற்படாதா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் தேசிய மின்கிரிட் என்று சொல்கிறபோது அந்த அமைப்பினால் பாதிப்பு ஏற்படும் என்று நான் கருதவில்லை. தென் மாநிலங்களுக்கு இடையே தான் பெரும்பாலும் இந்த மின்சார பரிவர்த்தனைகளை வைத்துக் கொள்கிறோம். ஏனென்றால் அவைகள்தான் நம் அண்டை மாநிலங்கள், ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பொறுத்தவரையில் வேண்டுமானால் அவைகள் வடபுல மாநிலங்களோடு தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே நம்மைப் பொறுத்தவரையில் இந்த நான்கு மாநிலங்களிடையேதான் இந்த தேசிய கிரிட் என்பது பயன்படும். இந்த நான்கு மாநிலங்களைப் பார்க்கிறபோது தென்னகத்தில் ஏற்படுகிற மிகப் பெரிய பற்றாக்குறைக்கு முழுமுதல் காரணமாக இருப்பது தமிழகம்தான். மற்ற மாநிலங்களில் இருக்கிற மின்சார உற்பத்தியும் எதிர்காலத்தில் நிறைவேற்ற இருக்கிற மின் உற்பத்தி வாய்ப்புகளும் அதிகம். ஆகவே இந்த தேசிய மின் கிரிட் அமைவதால் அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை நாம் எளிதாக டிரான்ஸ்மிஷன் செய்ய—வாங்குவதற்கு அவர்களோடு பேசித்தான் செய்ய

வேண்டும்—இதற்கு 400 கே. வி.லைன் போட வேண்டும். டிரான்ஸ்மிஷன் செய்து கொள்ள வசதியாக இருக்கும். பெயர் தான் தேசிய கிரிட், நடைமுறையில் அது தமிழ்நாடு கிரிட்டாக இருக்கும்.

(முற்பகல் 9.10

திரு. ப. நெடுமாறன்: இந்தத் தேசிய மின் கிரிட் அமைக்கப் பட இருப்பதை விளக்கி அது தென் மாநிலங்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு தென் மாநில கிரிட்டிலிருந்து மின்சாரம் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த தேசிய மின் கிரிட் அமைக்கிற திட்டம் மத்திய அரசு மின் உற்பத்தியை யும் மின் விநியோகத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறதே, அதற்கு முன்னோடியாக இது அமைந்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாம் எல்லாம் இங்கே இருக்கிறபோது அவ்வளவு இலேசாக விட்டுவிடமாட்டோம்.

திரு. என். வி. என். சோமு: சென்னை நகரில் பல தெருக் களில் இருக்கிற விளக்குகள் எரியாமல் இருளடைந்து கிடக்கிறது. மாநகராட்சியிடம் சொல்லியும்கூட எந்தவிதப் பயனும் இல்லை. இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: இது உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் போட வேண்டிய கேள்வி.

திரு. தி. அன்பழகன்: இந்தத் தெரு விளக்குகள் அடிக்கடி ப்யூஸாகி விடுவதால் கூடுமான வரையில் தெரு விளக்கு பல்புகளை குழாய் விளக்குகளாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களின் அடிப்படையில் படிப்படியாக அவைகள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

தெருவிளக்குகளுக்கு வோல்டேஜ் ஸ்டேபிலைசர் பொருத்தும் திட்டம்.

*வினா எண்.83—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

தமிழகத்திலுள்ள தெரு விளக்குகள் பியூஸ் போகாமலிருக்க voltage stabilizer பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை. எல்லா தெரு விளக்குகளுக்கும் வோல்டேஜ் ஸ்டேபிலைசர் பொருத்துவதற்கு ரூ. 6 கோடிக்கு மேல் செலவு ஆகும். இதற்கு பதிலாக 250 வோல்ட் மின் அழுத்த ஏற்புடைய பல்புகளை வாங்குவதற்கும் மின் கட்டமைப்பில் (கிரிட்)முனைமாற்றிகளை பொருத்துவதற்கும் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.



திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: தமிழகத்தில் இருக்கிற கிராமங்களில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலும் எரியாமல் இருப்பதற்கு காரணம், அங்கே பணியாற்றுகிற ஊழியர்கள் லைனிலிருந்து நேரடியாக கனக்ஷன் கொடுத்துவிடுகிறார்கள். தெரு விளக்குகள் அடிக்கடி ப்யூஸாக அது ஒரு காரணம். ஆகவே லைனிலிருந்து நேரடியாக தெரு விளக்குகளுக்கு கனக்ஷன் கொடுக்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதற்குத் தகுந்த ஆதாரங்களைத் தந்தால் அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; இந்த குமிழ், உருண்டை பல்புகளில் திடீரென்று மின்சாரம் பாய்கிற காரணத்தால் அதிகமான அளவிற்கு பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. ரூ. 1.25 கொடுத்து வால்டேஜ் ஸ்டெபிலைசர் கருவி மாட்ட முடியும் என்று சொல்கிறார்களே, அதைப் பற்றி மின்சார வாரியம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 'வால்டேஜ் ஸ்டெபி லைஸர்' போட்டால் ரூபாய் ஆறு கோடிக்கு மேல் செலவாகும். மிகப் பெருமளவில் செலவாகும். அதற்குமாறாக இப்போது அரசாங்கத்தால் 230 வோல்ட்ஸ் மின்விளக்குகள் போடப்படு கின்றன. இரவிலோ அல்லது லோட் இல்லாதபோதோ வோல்டேஜ் அதிகமாக ஆகிவிடுவதால் இந்தப் பல்புகள் ப்யூஸாகின்றன. 300 வோட்ஸ் பல்புகள் வேண்டுமென்ற வகையில் நாம் வாங்கவேண்டியிருக்கிறது. மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் லோயஸ்ட் டெண்டர் என்ற அடிப்படையில் வாங்கும்போது பலவகையான பிரச்னைகள் எழுகின்றன. சிலபேர்கள் 230 வோட்ஸ் பல்புகளை 250 வோட்ஸ் பல்புகள் என்று கொடுக்கிறவர்களும் இருக்கிறார்கள். முக்கியமான நிறுவனங்களான பிலிப்ஸ், ஜெனரல் எலக்ட்ரிக்கல்ஸ் போன்ற பெரிய நிறுவனங்களோடு பேசி மின்வாரியம் 250 வோல்ட்ஸ் பல்புகளை, தரமான பல்புகளைத் தரவேண்டும் என்று ஒரு நீண்ட கால அடிப்படையில் அவர்களோடு பேச வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

காஞ்சி நகரில் பால்விநியோக நிறுவனம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 84—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

காஞ்சி நகரத்திலுள்ள மக்களுக்கு சென்னை நகரிலுள்ளது போல பால் விநியோக நிறுவனம் ஒன்றை அரசு அமைக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் பல ஊர்களில் பால் மற்றும் பால் பொருள் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அமைப்பதாக உள்ளது. அதுபோது காஞ்சி மாநகரத்தில் இவ்வித விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

## Supply of Milk to Starred Hotels in Madras City

*Q. No.85—THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether the Tamil Nadu Milk Producers Co-operative Federation is supplying Milk for the starred hotels at Madras City;

(b) the quantum of milk being supplied per day; and

(c) the price of the milk?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) அவற்றிற்கு ஒரு நாளில் 280 லிட்டர் பால் வழங்கப்படுகிறது.

(இ) ஒரு லிட்டருக்கு ரூ. 2. 75 என்ற விலையில் வழங்கப்படுகிறது.

திரு. என் .ஸ்எ .வி. சிந்தன். மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 280 லிட்டர் என்ற அளவு ஒரு ஓட்டலுக்கா அல்லது மொத்த ஓட்டல்களுக்கும் சேர்த்து சொல்லப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. மாண்புமிகு தலைவர் அவர்களே, 7 நிறுவனங்கள் தங்களுக்குத் தேவை என்று விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்த 7 நிறுவனங்களுக்கு காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளுக்கும் சேர்த்துத்தான் இந்த 280 லிட்டர்.

திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் பால்வள நிறுவனத்திற்கு நேரடியாக இருக்கின்ற வகையில் தமிழகத்திலே பரவலாக பால் அரைக்கும் எந்திரங்களை லைசன்ஸ் பெறாமலேயே வைத்து, பால்வள நிறுவனத்திற்கு எதிராக வியாபாரம் நடத்தப்படுவது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படி உரிமம் இல்லாமல் பால் அரைக்கும் எந்திரங்களை வைத்து வியாபாரம் செய்யப்படுவது தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

## உசிலை வட்டத்தில் மணற் காற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்.

*வினா எண் 86—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மதுரை மாவட்டம் உசிலை வட்ட சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய கிராமங்களில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் பெருமளவில் மணற்காற்று வீசுவதும், அதனால் ஆயிரக்கணக்கில் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதும் அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் உரிய காற்றுத்தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து. (அ) ஆம்.

(ஆ) சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய பாதிக்கப்பட்ட கிராமங்களில் காற்றுத்தடுப்பு மரச்சாலைகள் (shelter belts) போடப்பட்டுள்ளன. இப்பகுதியில் தற்போது 1658 மீட்டர் நீளம் தடுப்புச் சாலை நிலையாக உள்ளது. மீதம் உள்ள பரப்புகளில் புதிய மரங்கள் நடுதலும், நிலையான பராமரிப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன. உசிலம்பட்டி தாலுக்காவில் உள்ள பாதிக்கப்பட்டுள்ள பரப்புகள் யாவற்றையும், மேற்கண்ட பணிகள் மூலம் சீர்செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு எஸ். ஆண்டித்தேவர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம். உசிலம்பட்டி வட்டம், சூலப்புரம், மள்ளப்புரம் ஆகிய பகுதிகளில் தடுப்பு வேலை நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, உசிலம்பட்டி வட்டமும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், வெள்ளம்-மலைப்பட்டு, போன்ற பல கிராமங்களும் இந்தக் காற்றினால் பாதிக்கப்பட்டு, விளைச்சல் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பகுதிகளுக்கும் தடுப்பு நிவாரண வேலைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி, போடிநாயக்கனூர், ஆண்டிப்பட்டி ஆகிய இந்தச் சுற்று வட்டாரங்கள் அனைத்திற்கும் போடிநாயக்கனூரை தலைமை இடமாக வைத்து செயல்பட்டு வருகிறது. அது உசிலம்பட்டி வட்டாரத்தையும் கவனிக்கும்.

## வேளாண் தொழில்கள் கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சூரியகாந்தி எண்ணெய்.

*வினா எண் 87—திரு து. புருஷோத்தமன்:—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

சூரியகாந்தி எண்ணெய் 1978-1979, 1979-1980 ஆம் ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான கழகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தில் 1978–1979, 1979–1980 ஆம் ஆண்டுகளில் முறையே 98,647 மெ. டன், 412,18? மெ. டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது.

[1981 ஆகஸ்ட் 27

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற சூரியகாந்தி எண்ணெய், அந்த அளவுக்கு விற்பனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பாமோலின் எண்ணெய் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அந்த எண்ணெய் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் ரேஷன் கடைகளில் கிடைப்பதில்லை. ஆனால், எல்லா மளிகைக் கடைகளிலும் அதிக விலைக்கு கிடைக்கின்றது. ஆனால், பாமோலின் எண்ணெயை விரும்பி வாங்குவது போல், மக்கள் சூரியகாந்தி எண்ணெயை வாங்குவதில்லை. அதிலே இருக்கின்ற சுவை இதிலே இல்லையென்ற காரணத்தினால், மக்கள் விரும்பி வாங்கும் அளவுக்கு சூரியகாந்தி எண்ணெயை சுவையாகத் தயாரிப்பதற்கோ அல்லது மக்கள் விரும்புகின்ற அளவுக்கு அதனை விளம்பரம் செய்யவோ அரசு முன்வருமா.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: போதுமான விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. எதையும் தாங்கும் இதயம் வேண்டுமானால் சூரியகாந்தி எண்ணெய்தான் உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதுதான் கொழுப்புச் சத்து சேராமல் தடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் அறிவார்கள். அதைப் பற்றிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவது நல்லது.

திரு. கோவைத்தம்பி: ஒருபுறம் சூரியகாந்தி பயிர் வளர்ப்பது குறைந்து கொண்டே வருகிறது. விவசாயிகள் அந்தப் பயிரை உற்பத்திச் செய்யும் வகையில் ஊக்கப்படுத்த அதிக விலை அவர்களுக்குக் கொடுக்கப்படுமா? அதே சமயத்தில் அந்த எண்ணெயின் விலை அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: முன்பு கொள்முதல் விலை ரூ. 3.60 ஆக இருந்தது இப்போது ரூ. 4.20 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனுடைய விலையைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போதே நஷ்டத்தில் இருக்கிறது.

திரு. மு. அப்பதுரை: சூரியகாந்தி எண்ணெய் ஒரு கிலோ அடக்க விலை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கடையில் கேட்டால் தெரிந்து கொள்ளலாம்.

திரு. ஏ.சி. சண்முகம்: சூரியகாந்தி எண்ணெய் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை தமிழகத்தில் எவ்வளவு அது ஏற்றுமதி சய்யப் படுகிறதா?



1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தற்போது பொஞ்சப்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெய் ஆலை இருக்கிறது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உற்பத்தியாகும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களை கொண்டு அது இயங்கி வருகிறது தற்போது சூரியகாந்தி எண்ணெய் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்க சூரியகாந்தி விதை எப்படிக் கொள்முதல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

திரு. க. இரா. சின்னராசு: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சூரியகாந்தி தயாரிக்கும் ஆலைக்கு போதிய சூரியகாந்தி எண்ணெய் வித்துகள் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு மாற்றுத் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது விவசாயிகளை உற்சாகப்படுத்தும் வகையில் அதற்கான மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. அதிகமான விலைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆகவே, அந்தச் சிக்கல் இனிமேல் தீரும் என்று கருதுகிறேன்.

சூரியகாந்தி விதை கட்டுப்பாடு

*வினா எண் 88—திருபாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிண்டி தொழிற்பேட்டையில் வேளாண்மைத் துறையின் தாய் இணையகம் தயாரிக்கும் சனோலா எண்ணெய்க்கு மூலப் பொருளான சூரியகாந்தி விதை கிடைக்கவில்லையென்பது உண்மையா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: (அ) ஆம், போதுமான அளவு கிடைக்கவில்லை.

(ஆ) (1) சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. (2) சூரியகாந்தி விதை கொள்முதல் ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. கொள்முதல் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (3) சூரியகாந்தி சாகுப்படியை அதிகரிக்கும் நோக்கத்துடன் சூரியகாந்தி சாகுபடித் திட்டம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் பலவித மானியச் சலுகைகளுடன் எண்ணெய் வித்துக்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

திரு. து. புருஷோத்தமன்: கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை சைதைத் தொகுதியில் இருக்கிறது. அதை விரிவுபடுத்தும் வகையில் அரசுக்கு ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது உத்தேசம் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: சூரியகாந்தி எண்ணெய் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமானால் தேவை என்று சொன்னார்கள். ஏற்கனவே மறைந்த பெரியவர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தபோது அதிகமான அளவுக்கு சூரியகாந்தி பயிரிட முயற்சி எடுக்கப்பட்டது. அந்த அளவுக்கு தற்சமயம் அதிலே ஊக்குவிக்கப்படவில்லை என்று அறிகிறேன். ஆகவே, வேளாண்மை மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அதிகமான சூரியகாந்தியை உற்பத்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்தான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டேன். விவசாயிகளுக்குத் திருந்திய சாகுபடி முறைகள் கண்கூடாகச் செய்து காட்டி பாத்திகள் அமைப்பது பற்றியெல்லாம் எடுத்துக் கூறப்படுகிறது. மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. புதிய ரகங்களைச் சாகுபடி செய்யவும், செயல் விளக்கப் பாத்திகள் என்ற முறையில் சூரிய காந்தியை உற்பத்திச் செய்ய தரமான விதைகளைக் கொடுக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. டன் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

### பரமக்குடியிலுள்ள விதைப்பண்ணை.

*வினா எண் 89—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரமக்குடியிலுள்ள விதைப்பண்ணையில் என்னென்ன விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(ஆ) இப்பண்ணை இலாபகரமாக நடக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இப்பொழுது பல பயிர் பரிசோதனை நிலையம் ஒன்று 14-11-78 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) பரிசோதனை நிலையங்களில், லாப நஷ்டக் கணக்கு போட இயலாது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, பரமக்குடியிலே உள்ள விவசாயப் பண்ணையிலே வருஷம் முழுவதும் பெரும் பகுதியில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்த எந்த நிலையில் விவசாயம் எந்த அளவிற்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது? அந்தப் பண்ணையை டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் எப்போதாவது இன்ஸ்பெக்ட் செய்திருக்கிறார்களா?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது பண்ணையல்ல. 18-10-78 முதல் பரிசோதனை உப நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. பரிசோதனையிலே இழப்பு, ஆதாயம் என்று கணக்குப் போடுவதில்லை. இதிலே நடைபெறுகின்ற சோதனை மூலம் நல்ல பலன்கள் கிடைத்து வருகின்றன. இந்தப் பரிசோதனையின் ஆராய்ச்சியின் பயனாக ஒட்டுச் சேர்க்கப்பட்ட பயிர் வகை என்ற முறையில் பி எம். 1121 என்கிற வளர்ப்பு தற்போது மான வாரி முறையில் அதிக மகசூல் தருகிற டி. கே. 9 என்ற தனி ரகத்தைவிடச் சிறந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் பார்மர்ஸ் டிரெயினிங் சென்டர் ஒன்று ஏற்படுத்துவதற்காக கட்டடம் கட்டுவதற்கு புரப்போஸல் அரசுக்கு வந்திருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறதா? ஆம் எனில் அது குறித்து மேல் ஏற்பாடுகள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படி வந்திருந்தால் அரசு அதுகுறித்து மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, பரமக்குடியிலே உள்ள விதைப்பண்ணை பற்றி அமைச்சர் அவர்கள் பெருமையாகச் சொன்னார்கள். புதிய நெல் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு விவசாயம் செய்யத் தெரியவில்லை என்றும் பஞ்சாபிலே உள்ள விவசாயிகள் சிறப்பாகச் செய்கிறார்கள் என்றும் சொன்னார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதைப் பண்ணையிலே ராவ் பிரேந்திர சிங் அவர்களைக் கொண்டுவந்து நிறுத்தினால் என்ன செய்வது? அது வேண்டாம்.

திரு. ப. நெடுமாறன்: பரமக்குடி விதைப்பண்ணையிலே உள்ள ஆராய்ச்சியாளர்களை பஞ்சாபிற்கு அனுப்பி, அங்கே உள்ள முறைகளை அறிந்து வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விவசாயத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு கற்றுக் கொடுக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறதே தவிர கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இல்லை.

திரு. ந. குலசேகரபாண்டியன்: தமிழகத்திலே இதுபோன்ற விதைப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன? மாவட்டத்திற்கு ஒரு விதைப் பண்ணை என்ற முறையில் நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தனிக் கேள்வி போட வேண்டும்.

[1981 ஆகஸ்ட் 27

அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பாபநாசத்தில் கட்டப்பட்டுள்ள பெரிய பாலம்.

*வினா எண். 90—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பாபநாசத்தில் ஒரு பெரிய பாலம் கட்டப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் போக்குவரத்திற்கு திறந்துவிடப்படவில்லையென்பதுஉண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): அம்பாசமுத்திரம்—பாபநாசம் சாலையில் கி. மீ 9/6இல் பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு அம்பாசமுத்திரம் பக்கம் செல்லும் அணுகு சாலைக்கு தற்சமயம் கப்பி போடப்பட்டுள்ளது. இச்சாலையில் தார் பரப்பும் பணி முடிவுற்றதும், பாலம் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: கேள்வி கேட்டது ரொம்ப காலத்திற்கு முன்னாலே, அதற்குப் பதில் கிடைத்ததும் ரொம்ப காலத்திற்கு முன்னாலே என்று நினைக்கிறேன். இப்போது இங்கே பதில் வந்திருக்கிறது, ஆனால் அங்கே பஸ்கள் எல்லாம் ஓடிக்கொண்டிருக்கின்றன, இதற்கென்று போடப்பட்ட திட்ட மதிப்பீடு எவ்வளவு; செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பாலம் ஏற்கெனவே திறந்து விடப்பட்ட காரணத்தினால் இனிமேல் போய் திட்டத்தின் மதிப்பு எவ்வளவு என்று கேட்பது எப்படிச் சரியாக இருக்கும்?

திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த பாபநாசம் ஒரு புகழ்பெற்ற யாத்திரிகர்கள் ஸ்தலம். அந்த ஆற்றிலே குளிப்பதற்காக மக்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்துகொண்டு இருக்கிறார்கள். பாபநாசத்திலே உள்ள படித்துறைகள் எல்லாம் 500,600 வருடங்களுக்கு முன்னாலே கட்டப்பட்ட காரணத்தினால் அவையெல்லாம் இடிந்து சரிந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அவற்றைச் செம்மைபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கு இது சம்பந்தம் இல்லாதது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே, தவறான தகவலை அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்கள். பால வேலை முடிந்த பிறகு அதிகாரிகள் உடனடி



1981 ஆகஸ்ட் 27]

யாகத் தகவல் தராமல் அதிகாரிகள் மெத்தனப் போக்கோடு இருந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டது பல மாதங்களுக்கு முன்பாக. கேள்வி கேட்ட உடனே உடனடியாக வேலைகளை அவர்கள் முடிக்கவேண்டுமென்ற முறையிலே முடித்து இருக்கிறார்கள், அதற்காக நன்றி சொல்லவேண்டும், பாராட்டுச் சொல்லவேண்டுமே தவிர நடவடிக்கை எடுப்பது சரியாக இருக்காது. நில ஆர்ஜிதம் காரணமாகத்தான் பாலம் தடைபட்டதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு பட்ஜெட் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பாலம் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கும் நிலை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

தர்மபுரி மாவட்டம் குன்னத்தூரில் புதிய பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 91—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் குன்னத்தூரில் புதிய பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இப்பணி அரசு அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணி நிதி நிலைக்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவரவர்களே, குன்னத்தூர் கிராமத்திற்கு அருகில் ஆற்றுக்குக் குறுக்கே இந்தப் பாலத்தைக் கட்ட வேண்டும் என்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது திருப்பத்தூரில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலைக்கு கரும்புகள் செல்ல வேண்டும்; வாகனங்கள் செல்ல வேண்டும் என்றால் அந்த வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அந்தக் குறுகிய பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கான திட்டத்தைத் தீட்ட முயற்சியெடுத்துக் கொள்ளுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதை இந்த ஆண்டுக்குள்ளாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது பாம்பாற்றுக்குக் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம்; பார்த்துத்தான் செய்ய வேண்டும்.

**திருச்செந்தூர் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்.**

*வினா எண். 92—**திரு. சி. கேசவ ஆதித்தன்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்செந்தூர் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : (அ) மற்றும் (ஆ) இதற்கான நிலம் திருச்செந்தூர் ஒன்றியம் கொடுத்துள்ளது. உத்தேச வடிவ அமைப்பிற்கு திருநெல்வேலி நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர் அனுமதி வழங்கியுள்ளார். இப்பணியை செய்து முடிக்க ரூ. 7·5 இலட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு தயார் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இதற்கான செலவிற்கு அரசிடம் கடன் பெறலாம் என முதலில் உத்தேசிக்கப்பட்டது. இதற்கிடையில் ஒருங்கிணைந்த நகர திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறலாம் எனக் கருதி தக்க நடவடிக்கை மாவட்ட ஆட்சித்தலைவர் எடுத்து வருகிறார்.

**தன்னிறைவு திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சிகள்.**

*வினா எண். 93—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற 1981–82 ஆம் ஆண்டுக்கு மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : (அ) 1981–82 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(ஆ) கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நடப்பாண்டிலிருந்து தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும். ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டம் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் விரிவாக்கப்படவுள்ளது.





ஆகவே திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு அரசு அப்போது பரிசீலனை செய்யும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. கள்ளிக்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அந்த ஊர் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் சொல்லி இந்தத் திட்டத்திலே சேர்க்கப் பட்டிருந்தாலும் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களானாலும்கூட இன்னும் பூர்வாங்க வேலைகள்கூட நடைபெறவில்லை. எனவே, குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் துரிதப்படுத்தி இந்த ஆண்டுக்குள்ளாகச் செய்து முடிக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். உடனடியாக இந்த ஆண்டிலே கள்ளிக்குடியில் ஒரு குடிநீர்த் தேக்கத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டுக்குள் முடிவடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவரவர்களே, இப்படித் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள், அதற்கான செலவு, மதிப்பீடு ஆகியவற்றைப்பற்றி, அடுத்த ஆண்டில் எந்தெந்த ஒன்றியங்களை எடுத்துக் கொள்ளப் போகிறோமோ அவைகளைப்பற்றி இந்த ஆண்டிலேயே புள்ளிவிவரங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டால் அதை எடுத்துக்கொள்ளும் ஆண்டின் தொடக்கத்திலேயே வேலைகளைத் துவங்குவது எளிதாக இருக்கும். இப்படி முதலாண்டிலேயே நடவடிக்கை எடுத்துக்கொள்ளாத காரணத்தினாலேதான் கள்ளிக்குடியிலே மூன்று, நான்கு மாதங்கள் கழித்து வேலைகளைத் தொடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அடுத்த ஆண்டில் எடுத்துக்கொள்ள வேண்டிய திட்டங்களைப்பற்றி இந்த ஆண்டிலேயே விவரங்களைச் சேகரித்துக்கொள்ள ஆரம்பித்தால் எந்தவிதமான காலதாமதமும் இல்லாமல் வேலைகளை ஆரம்பிக்க உதவியாக இருக்கும். அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இனி எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது 159 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு முடிந்தது போக, அடுத்த ஆண்டில் 159 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்படும். அதற்குண்டான மதிப்பீடுகளை இந்த ஆண்டே தயார் செய்யும்

திருச்செந்தூர் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 92—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்செந்தூர் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இதற்கான நிலம் திருச்செந்தூர் ஒன்றியம் கொடுத்துள்ளது. உத்தேச வடிவ அமைப்பிற்கு திருநெல்வேலி நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர் அனுமதி வழங்கியுள்ளார். இப்பணியை செய்து முடிக்க ரூ. 7·5 இலட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு தயார் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இதற்கான செலவிற்கு அரசிடம் கடன் பெறலாம் என முதலில் உத்தேசிக்கப்பட்டது. இதற்கிடையில் ஒருங்கிணைந்த நகர திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறலாம் எனக் கருதி தக்க நடவடிக்கை மாவட்ட ஆட்சித்தலைவர் எடுத்து வருகிறார்.

தன்னிறைவு திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சிகள்.

*வினா எண். 93—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்துவதற்கு 1981-82 ஆம் ஆண்டுக்கு மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 1981-82 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(ஆ) கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டிலிருந்து ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டம் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் விரிவாக்கப்படவுள்ளது.



ஆகவே திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு அரசு அப்போது பரிசீலனை செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. கள்ளிக்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அந்த ஊர் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் சொல்லி இந்தத் திட்டத்திலே சேர்க்கப் பட்டிருந்தாலும் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களானாலும்கூட இன்னும் பூர்வாங்க வேலைகள்கூட நடைபெறவில்லை. எனவே, குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் துரிதப்படுத்தி இந்த ஆண்டுக்குள்ளாகச் செய்து முடிக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். உடனடியாக இந்த ஆண்டிலே கள்ளிக்குடியில் ஒரு குடிநீர்த் தேக்கத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டுக்குள் முடிவடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இப்படித் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள், அதற்கான செலவு, மதிப்பீடு ஆகிய வற்றைப்பற்றி, அடுத்த ஆண்டில் எந்தெந்த ஒன்றியங்களை எடுத்துக் கொள்ளப் போகிறோமோ அவைகளைப்பற்றி இந்த ஆண்டிலேயே புள்ளிவிவரங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டால் அதை எடுத்துக்கொள்ளும் ஆண்டின் தொடக்கத் திலேயே வேலைகளைத் துவங்குவது எளிதாக இருக்கும். இப்படி முதலாண்டிலேயே நடவடிக்கை எடுத்துக்கொள்ளாத காரணத் தினாலேதான் கள்ளிக்குடியிலே மூன்று, நான்கு மாதங்கள் கழித்து வேலைகளைத் தொடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அடுத்த ஆண்டில் எடுத்துக்கொள்ள வேண்டிய திட்டங்களைப்பற்றி இந்த ஆண்டிலேயே விவரங்களைச் சேகரித்துக்கொள்ள ஆரம்பித்தால் எந்தவிதமான காலதாமதமும் இல்லாமல் வேலைகளை ஆரம்பிக்க உதவியாக இருக்கும். அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இனி எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது 159 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு முடிந்தது போக, அடுத்த ஆண்டில் 159 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்படும். அதற்குண்டான மதிப்பீடுகளை இந்த ஆண்டே தயார் செய்யும்

படி ஏற்கனவே ஆணையாளர்களுக்கு ஆணைகள் அனுப்பப் பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுக்கு இப்படிப்பட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அதனால் சீக்கிரமாக முடிந்து விடும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லுகின்றபொழுது தன்னிறைவுத் திட்டத்திலே தென்னார்க்காடு மாவட்டத்திலே திண்டிவனம், காட்டுமன்னார்குடி தாலுக்காக்கள் எடுக்கப்பட்டு, இடையிலே கைவிடப்பட்டது ஏன் என்பதை அறிய விரும்பு கிறேன். என்ன முறையில் இந்தத் தன்னிறைவுத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி திருமங்கலம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியங்களைப் பற்றியது. தன்னிறைவுத் திட்டம் என்று எடுத்துக் கொண்டு 376 ஊராட்சி ஒன்றியங் களையும் பற்றிக் கேட்க முடியாது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் செயல்படுகிற ஒன்றியங்களில் செலவழிக்கப் படுகிற தொகை முழுவதும் அரசு மானியமாகக் கொடுக்கப் படுகிறதா அல்லது ஒரு பகுதி மட்டும் அரசு மானியமாகக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்தின் நிதிநிலைக்கேற்ப அவர்களுக்கு மானியம் கொடுக்கப்படுகிறது. அது 6 வகைகளாகப் பிரிக்கப் படுகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலே நிதிநிலை நன்றாக இருந்தால் அதற்கேற்ப மானியங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டங்களுக்காக ரூ. 30 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? எல்லா ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நல்லமுறையில் நடக்கிறது. சில ஒன்றியங்களில் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று அதிகாரிகள் தன்னிறைவுத் திட்டத்தை, தன் நிறைவு திட்டமாகச் செயல் படுத்துகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்காணிக்க 'விஜிலன்ஸ் செல்'——பறக்கும் படை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆலோசனைக்கு நன்றி.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டம் நமக்கு மிகவும் நல்ல ஒரு திட்டம். இருந்தாலும் தன்னிறைவுத் திட்டங்கள்





முடிந்துவிட்ட ஓராண்டுக் காலத்திற்குள்ளாக அந்த ஒன்றியங்களில் பூராப் பிரச்னைகளும் தீர்ந்துவிடவில்லை. ஆகவே, ஒன்றிரண்டு செய்து முடிக்கப்படாமல் அல்லது விடுபட்ட வேலைகளை, மீண்டும் செய்து முடிப்பதற்காகத் தன்னிறைவுத் திட்டம் ஓராண்டு என்று இருப்பதை இரண்டு ஆண்டுகளாக உயர்த்தப் படுமா? ஏற்கனவே சென்ற ஆண்டு செய்து முடிக்கப்பட்ட ஒன்றியங்களில் குறையாக விடப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு மீண்டும் அதை எடுத்துக்கொள்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் அந்தத் தன்னிறைவுத் திட்டம் முடிவடைந்தால் எல்லா பிரச்னைகளும் முடிந்ததாக அரசும் கருதவில்லை. காரணம், அடிப்படை வசதிகளைக் கொடுப்பதற்குத்தான் தன்னிறைவுத் திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். 9 வகையான வேலைகளை நாம் எடுத்துக் கொண்டு இப்பொழுது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனாலும் பிரச்னைகள் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் கண்காணித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆணை யாளர்களைக் கேட்டிருக்கிறோம். தன்னிறைவுத் திட்டம் முடிவடைந்த ஒன்றியங்களிலேகூட ஒருசில ஊர்கள் விடுபட்டுப் போனால் அவைகளை எல்லாம் மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம்.

இந்தத் தன்னிறைவுத் திட்டம் ஓராண்டு என்பதை இரண்டு ஆண்டாக விஸ்தரிப்பது உண்மையிலேயே சரியாக இருக்காது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நம்முடைய பதவிக் காலமே 5 ஆண்டுகள் என்று தான் கொடுத்து இருக்கிறார்கள். இன்று 3 கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் நடைபெற்று வருகிறது. ஒரு கட்டத்திற்கு இரண்டு ஆண்டுக் காலம் என்று வைத்துக்கொண்டால் 6 ஆண்டு களாகிவிடும். ஆகவேதான் அது ஓராண்டாகவே இருப்பதைப் போலவே நடத்தப்பட்டு வருவது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள்கூட, அந்த வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றனவா என்பதைக் கண்காணித்து வந்தால் சிறப்பாக இருக்கும். ஆகவே, அவைகளையெல்லாம் 3 ஆண்டுகளில் முடிக்க வேண்டுமென்ற அவாவோடு இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஊராட்சி ஒன்றியங்களிலே ஏப்ரல் முதல் மாதத்திலே அத்தனை வேலைகளும் எடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தாலே அந்த வேலைகள் துவங்கப்படாமல் இருக்கின்றன. அதை உடனடியாக விரைந்து துவக்கி பணிகளை விரைந்து முடிக்கக்கூடிய அளவுக்கு அரசு அறிவுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னாலும் It is a time bound programme; ஆகவே, காலக் குறியோடு, காலவரையறை செய்துதான் அந்தத் திட்டத்தை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்கே வேண்டிய மெட்டீரியல்ஸ் உடனடியாகக் கிடைக்கவில்லை. அதன் காரணமாகத்தான் சில இடங்களில் அந்த வேலைகள் ஸ்தம்பித்து நிற்கின்றனவே தவிர வேறு காரணத்தினாலே இல்லை. ஆகவே, அவைகளையெல்லாம் எவ்வளவு சீக்கிரமாக பெற்று, எவ்வளவு சீக்கிரமாக அந்த வேலைகளை முடிக்க முடியுமோ. அவ்வளவு சீக்கிரமாக முடிப்போம்.

திரு. செ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்குத் திட்ட மதிப்பீடுகளும் போட்டுவிட்டு வேலையும் துவங்கப்பட்டு, பல ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பண ஒதுக்கீடு இதுவரையில் சேராமல் இருப்பது அரசுக்கு தெரியுமா? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பல ஊராட்சி ஒன்றியங்கள் என்று பொதுவாகச் சொல்வது சரியல்ல, ஏனென்றால் ஏற்கனவே,அங்கீகாரம் கொடுத்து அதற்குண்டான பணத்தையும் கொடுத்துவிட்டோம். மெட்டீரியலையும், தேவையானவைகளையும் சேமிப்பதற்குண்டான நிலைமைகளையெல்லாம் ஆய்வு செய்து உடனடியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவில்லையென்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: பேரவை தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் குடிநீர் பிரச்னையை நிச்சயமாக எடுத்துக் கொண்டு பணியாற்றுகிற பொழுது, சில கிராமங்களில் ஒதுக்கப்படுகிற நிதி பற்றாக்குறை என்பதற்காக, அந்தப் பணியை மேற்கொள்வதே கிடையாது. அங்கே தோண்டினாலும் உப்புத் தண்ணீர் வருகிறது என்று காரணம் காட்டிவிடுகிறார்கள். சில நேரங்களிலே அந்தக் கிராமங்களுக்குப் பக்கத்திலே உள்ள ஆறுகளிலிருந்து, வாய்க்கால்களிலிருந்து குடிநீர் எடுப்பதற்கு பைப் போட அதிகமான பணம் செலவாகிறது என்று ஒதுக்கி விடுகிறார்கள். அதற்காக, ஏதாவது ஸ்பெஷல் ஆர்டர் என்ற முறையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதனை நிறைவேற்ற முன்வருவதற்கு அரசு தகுந்த ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே குடிநீரைப் பொறுத்த அளவிலே எந்தெந்த கிராமங்களில் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை என்று சொன்னால் அதை காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் கூட்டு குடிநீர் திட்டம் போட்டு





பக்கத்திலே அணை குளம் இருந்தால் அதிலிருந்து தண்ணீரை எடுத்துப் பல கிராமங்களை ஒன்றாக இணைக்கும் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். ஆகவே எந்தெந்த கிராமங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கூறினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**பேண்டேஜ் காஸ் துணிகளைக் கொள்முதல் செய்யும் திட்டம்**

*வினா எண். 94 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

"தமிழக அரசு ஆஸ்பத்திரிக்குத் தேவையான பேண்டேஜ் மற்றும் காஸ் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வரும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஆஸ்பத்திரிகளில் இந்த பாண்டேஜ், காஸ் துணிகள் ஆண்டுக்கு எவ்வளவு வாங்கப்படுகிறது. அது நல்ல முறையில் இருந்தால் மத்திய அரசும் இதை வாங்குவதற்கு தமிழக அரசு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பாண்டேஜைப் பொறுத்த வரையில், 1979-80, 80-81 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் மூலம், 21.58,974 95 ரூபாயுக்கும் டி. எம். எஸ். மூலம் இந்த 2 ஆண்டுகளுக்கும் 30 லட்சம் ரூபாய்க்கும் வாங்கப்பட்டது. காஸ் துணியைப்பொறுத்தவரையில் டி. எம். இ மூலம் 39,92,203 ரூபாய்க்கும் டி. எம். எஸ்-ஐப் பொறுத்தவரையில் 33 லட்சம் ரூபாய்க்கும் வாங்கப்பட்டது. மொத்தமாக இந்த இரண்டு இலாக்காக்களையும் சேர்த்து இரண்டு ஆண்டுகளில் 72, 97, 608 ரூபாய் மதிப்புள்ள பாண்டேஜ், காஸ் துணி ஆகியவற்றை வாங்கி இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர்அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் மூலம் இப்போது பான்டேஜ், காஸ் போன்றவைகள்தான் வாங்கப்படுகின்றன. ஆனால் ஆஸ்பத்திரிகளில் பயன்படுத்தப்படும் பெட்ஷீட்டுகள், தலையணை உறைகள், கடைநிலை ஊழியர்கள் போட்டுக்கொள்ளுகின்ற யூனிபார்ம்கள் போன்றவைகள் இருக்கின்றன. தற்போது கோ-ஆப்டெக்சில் துணிகள் அதிகம் தேங்கி இருக்கின்ற காரணத்தினால், அவைகளை அரசே வாங்குகின்ற வகையில் இந்த ஆஸ்பத்திரிகளில் கைத்தறித் துணியை அதிகமாக ஏற்பாடு செய்யுமா? அவைகள் நன்றாக இருந்தால் மத்திய அரசு வாங்குவதற்கு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நம்முடைய ஆஸ்பத்திரிகளுக்குத் தேவைப்படுகின்ற இந்தப் பொருள்களை ஏறத்தாழ 60 சதவிகிதம்தான் கோ-ஆப்டேக்சினால் கொடுக்க முடிகிறது. இன்னும் 40 சதவிகிதம் நாம் வெவ்வேறு இடங்களில் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இரண்டாண்டுகளுக்கு முன்பு 13–10–79 நாளிட்ட ஜி. ஓ. எம், எஸ் 1824-ன் படி உத்தரவு போட்டு, அந்த உத்தரவின்படி இரண்டாண்டுகளாக வாங்கிக் கொண்டு வருகிறோம். மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யும்படி கேட்டார்கள். நம்முடைய தேவையையே அவர்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை நமக்கு இருக்கின்ற தேவை 72 லட்சம் மதிப்புள்ள பாண்டேஜ் காஸ் துணிகள், அதையே அவர்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

திரு. கி. சட்டநாத கரையாளர்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான பாண்டேஜ் காஸ் துணிகள் இரண்டாண்டுகளுக்கு முன்புவரை சேலம் சிறைச்சாலையிலே உள்ள கைதிகளாலும், திருச்சி சிறையில் இருந்த கைதிகளாலும் உற்பத்தி செய்யப்பட்டது. அப்போது அவர்களுக்கு மிகவும் குறைவான சட்டணம் ஒரு நாளைக்கு 40 காசுகள்தான் அவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. அந்த விலைக்கும் இப்போது கொடுக்கின்ற விலைக்கும் அதிகமாக இருக்கின்றது. இந்த நிலையில் அரசு 40 சதவிகிதம் துணி வேறு இடத்தில் வாங்குவதாகச் சொன்னார்கள். அந்தத் துணிகளை இந்த சிறைக் கைதிகள் தயாரித்து தருவதற்கு அவர்களுக்கு அதிகமான கூலி கொடுத்து, தயாரிக்கச் சொல்லிவாங்கிக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. நமக்கு தேவைப்படுகின்றவை ஹேன்டுலூம். கோ-ஆப்டெக்ஸ் மூலமாக வாங்குகிறோம். 40 சதவிகிதம் வேறு பகுதியிலே வாங்கிக் கொண்டு இருக்கிறோம். அவைகளைச் சிறையிலே உற்பத்தி செய்வதற்கு முதலிடம் கொடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தமிழகத்திலே அரசு மருத்துவமனைகளிலே முக்கியமாகப் பயன்படுத்தப்படும். இந்த பேன்டேஜ் காஸ் போன்றவைகள் இந்த ஆண்டிலேயே 72 லட்சம் ரூபாய்க்கு வருகிறது. வருகின்ற ஆண்டுகளில் கோடிக்கணக்காகப் பெருகுகின்ற வாய்ப்பிருக்கிறது. அதன் காரணமாகத் தமிழகத்திலே எல்லா மாவட்டத்திலும் கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கிற காரணத்தினாலே இந்த பாண்டேஜ் துணிகளை அரசே தயாரிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகவும் சங்கடமாக இருக்கும். இப்போது கூட கோ-ஆப்டெக்ஸ் என்றால் குவாசி-கவர்ன்மெண்ட் மாதிரிதான் வரும். கோ-ஆப்டெக்ஸ் மூலம் தரமுள்ள



காஸ், பான்டேஜ் துணிகளை வாங்கிக் கொண்டால் நல்லதாக இருக்கும். மாண்புமிகு கரையாளர் அவர்கள் சொன்னதைப் போல ஜெயில் துறையிலிருந்தும் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

### வடாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர்

*வினா எண். 95. திரு. ஏ. எம். சேதுராமன்: மற்றும் திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தோல் பதனிடும் தொழிலுக்கு பெயர் போன வடாற்காடு மாவட்டத்தில் அத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு உவர் நீரால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாழாவதை தடுக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆம்.

திரு. ஏ. எம். சேதுராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடை அடுத்து முத்துப்பேட்டை கிராமத்தில் இருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்தும், ராணிப்பேட்டையில் இருக்கிற சுமார் 60-க்கும் மேற்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்தும்கழிவுநீர் உவர்நீர்வெளியாகி பாலாற்றில்கலந்து சாத்தூர் கிராமத்திலிருக்கிற 3000 ஏக்கர் நிலங்களை பாதிக்கிற சூழ்நிலை இருக்கிறது. பாலாற்றிலிருந்து ராணிப்பேட்டைக்கும், ஆற்காட்டிற்கும், திமிரிக்கும், விளாப்பாக்கத்திற்கும் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்தக் குடிதண்ணீரிலே கழிவு நீர் கலக்காமல் இருக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா, அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்களிடம், இந்த வேலையை ஒப்படைத்திருக்கிறோம். அவர் அப்போதைக்கப்போது சாம்பிள் எடுத்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 264 டேனரிஸ் இருக்கின்றன. அதிலே 'ஹெல்த் கிளியரன்ஸ் சர்டிபிகேட்' வாங்கியிருக்கக் கூடிய டேனரிஸ் 47, இன்னும் சிலபேர்களை நாம் கடுமையான தண்டனை விதிக்கப் போகிறோம் என்று எச்சரித்துள்ளோம். நடவடிக்கையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே டேனரிஸ் 'பெர்மெனென்ட் எப்ளுயண்ட்' என்கிற கழிவு நீரை சுத்தப்படுத்தி அகற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நம்புகிறோம். கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய 264 தொழிற்சாலைகளில் 120-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள்

என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. இவைகள் நிலங்களை பாழாக்குவதோடு மட்டுமல்லாமல் 3 இலட்சம் மக்களுடைய குடி தண்ணீரை இன்றைக்கு பாழ்படுத்தி இருக்கிறது. இதிலே அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழ், தொழிற்சாலை அதிபர்கள், விவசாயிகள், சம்பந்தப்பட்ட துறைகள் — தொழிற் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறை போன்றவை — சேர்ந்து ஒரு குழுவாக அமைத்து உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் 60 இடங்களில் பீனல் ஆக்ஷன் போன்ற கடுமையான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது பெரிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரியாக அண்மையில் பாரத் லெதர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற டெல்லியிலே இருக்கிற கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா அண்டர் டேக்கிங் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் மற்ற எல்லோரும் வந்து என்னைப் பார்த்தார்கள். அவர்கள் அதற்கு 50 இலட்சம் ரூபாய் கொடுக்க தயாராக இருக்கிறோம், ஒரு 'காமன் எப்ளுவண்ட் பிளான்', எல்லா தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து ஒன்று வைத்து கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய கேட்டிருக்கிறார்கள். அதை உடனடியாக கவனிக்கச் சொல்லி நம்முடைய டி.பி.எச். அவர்களிடம் கேட்டிருக்கிறோம். நடைமுறைப்படுத்துவோமானால் அதில் நாம் வெற்றி காணலாம்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லாத் தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியாகக் கூடிய கழிவு நீர் ஒரே மாதிரியாகத்தான் வெளியாகிக் கொண்டிருக்கிறது. இதிலே சில அதிகாரிகள், அங்கே இருக்கக் கூடியவர்கள், விருப்பு, வெறுப்போடு, வேண்டியவர்களை விட்டு விடுவது, வேண்டாதவர்கள் மீது வழக்குகளைப் போடுவது என்ற அளவிலே இருப்பதால் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீர் மக்களுக்கு ஏற்படுத்துகிற பாதகம் ஒரேமாதிரியாகத் தான் இருக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமான அளவில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன. கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்கு சரியான திட்டம் எதுவும் இதுவரை இந்திய அரசோ, சி.எல்.ஆர்.ஐ. ஸ்தாபனமோ கொடுக்க இயலவில்லை என்ற காரணத்தால், அனைத்து கழிவு நீரையும் ஒரே குழாய் மூலம் கொண்டு வந்து அதை கடலிலே கலப்பதற்கு — 100 மைல்கள் தான் இருக்கும் - திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, 100 மைல்களுக்கு அப்பால் கடலிலே கொண்டு விடுவது என்பது இயலாத காரியம். நான் ஏற்கெனவே சொன்னமாதிரி பாரத் லெதர் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் தெரிவித்ததைப்போல 'காமன் எஃப்லூயன்ட் பிளான்ட்' நிறுவப்பட்டு, கழிவு நீரை சுத்தப்படுத்துவதாக இருந்தால் நல்லமுறையில் அமையும் என்று எதிர்பார்க்கிறோம். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொன்றையும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அதிகாரிகள் யாராவது விருப்பு வெறுப்புகளுடன் செயல்படுவதாகத் தெரிந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நாங்கள் ஏற்கெனவே பாரபட்சம் காட்டக் கூடாது என்று அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னமாதிரி இத்தொழிலின் மூலம் நிறைய 'பாரின் எக்சேஞ்' கிடைக்கும் இடமாக இருப்பதால் திட்டவட்டமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

[முற்பகல் 9-50]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் நிலங்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் பாலாறு படுகை குடி நீரும் பாதிக்கப்படுவது குறித்து பல்லாண்டுக் காலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அந்த நிலைமை அப்படியே இருக்கிறது, நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் ஒரு கால வரையறையை நிர்ணயம் செய்து, அந்தக் காலகட்டத்திற்குள் இந்த கேடுகளைப் போக்கி, நிலங்களும் குடிநீரும் பாதிக்கப்படாத ஒரு நிலையை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் சொனனமாதிரி No. against whom penal act on initiated is 60 and the number of tanneries which have completed satisfactory treatment measures is 23. என்று குறிப்பு இருக்கிறது. ஆகையால் கடந்த 2, 3 ஆண்டுகளில் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதனால் கொஞ்சம் எதிர்ப்பு கூட வந்திருக்கிறது அது அரசியல் ரீதியாக கூட வந்திருக்கிறது. இன்னும் கடுமையாக இருந்தால் கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த அளவுக்கு அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரியவில்லை. இது ஒரு 'ஃபாரின் எக்சேஞ் ஏர்னிங் காம்பிளக்ஸ்' ஆக இருப்பதால் கடுமையான நடவடிக்கை எடுத்து, எல்லா லைசென்ஸ்களும் ரத்து செய்யப்படும் என்று சொன்னாலும் பெரிய ரீ ஆக்ஷன் ஏற்படுவதாக இருக்கும். ஆகையால் படிப்படியாக நடவடிக்கை எடுத்து, பரிகாரம் தேட வேண்டுமென்றால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், எல்லா ஆலைகளுக்குமாகச் சேர்த்து 'காமன் எஃப்லூ

யன்ட் பிளான்ட்' வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் சுத்தப் படுத்த முடியும். அதுபற்றி பாரத் லெதர் கார்ப்பரேஷன் ஆலோசனைத் தெரிவித்திருக்கிறார்கள். உடனடியாக அதுபற்றி பரிசீலனை செய்து, அதிலே என்ன சட்ட சிக்கல் இருக்கிறது என்று பார்த்து, விரைவிலே முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படும் கேடுகளைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும், இன்றைக்குத் தமிழ் நாடு முழுவதும் தோல் பதனிடும் தொழில் நடக்கிறது. அதைப் போல மரவள்ளிக் கிழங்கு சம்பந்தப்பட்ட தொழிலும் வேறுபல இரசாயன தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அவைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதைக் கண்காணிக்க 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள். அன்றாட நடை முறையில் இருக்கிற பல்வேறு பணிகளைச் செய்துவருகின்ற சுகாதார அதிகாரிகள் இதைக் கவனிப்பதற்குப் பதிலாக தமிழ் நாடு முழுவதும் இப்பிரச்சனை பற்றி முழு நேரமும் கவனிப்பதற் காக ஏற்கெனவே இருந்த ஒரு அமைப்பைப்போல தனி அமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் எழுப்பியது ஒரு நியாயமான கேள்வி. ஏனென்றால் இப்போது இருக்கக்கூடிய அமைப்பு – டி.பி.எச்சை வைத்துக் கொண்டு முழுமையாக இந்தப் பணியிலே கவனம் செலுத்தும் வாய்ப்பு இருக்காது. மேலும் இப்படி அசுத்தம் ஏற்படுவதைத் தடுக்க நம்மிடம் ஒரு 'என்விரான்மென்ட் ஆக்டும்' இல்லை. பொல்லூஷன் கன்ட்ரோல் ஆக்டும் இல்லை. இதுபற்றி மத்திய அரசு ஏர் பொல்லூஷன் ஆக்ட் என்று ஒரு சட்டத்தைத் தீட்டி இருக்கிறது. எல்லா ம நிலங்களிலும் அந்தச் சட்டத்தைக் கடை பிடித்து வருவதாகத் தெரிகிறது. நாமும் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தலாம் என்று நினைத்திருக்கிறோம். முடிந்தால் இந்தக் கூட்டத்தொடரிலேயே ஒரு ரெசலூஷன் கொண்டுவந்து அந்தச் சட்டத்தை அமுல்படுத்தலாம் என்று கருதுகிறோம். அப்போது பேராசிரியர் அவர்கள் சொன்னதுபோல, We can arm ourselves with better powers so that we can control this better. என்ற முறையில் ஒரு நல்ல ஆயுதம் நமக்கு இருக்கும். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இத்தகையத் தொழிற்சாலைகளினால் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க ஒரு சரியான ஆயுதம் நம்மிடம் இருக்கும். ஆகவே, அந்தச் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 264 தொழிற் சாலைகள் இருக்கின்றன. அவற்றிலே பல தொழிற்சாலைகள் சுகாதார இலாக்காவின் சான்றிதழைப் பெறாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படிச் சான்றிதழ் வாங்காத தொழிற் சாலைகளை மூடிவிடுவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா? தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்ற இத் தொழிற் சாலைகளுக்கெல்லாம் இவ்வாறு கழிவு நீரை ஆவியாக்கி வெளி யேற்றும் செலவிற்காக நாமே கடன் கொடுத்து கண்டிப்பாக இந்த முறையினைப் பின்பற்ற வேண்டும் என்ற வகையிலே நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்பது எளிது. ஆனால் அதிலே பல பிரச்சினைகள் எழும். இருந்தாலும் தாட்சண்யம் காட்டாமல் படிப்படியாக உறுதியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

### தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் பேருந்துப் பணி.

* வினா எண்.96— திரு ரா. கு. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-மேல அரசடி வழியாக துரைச்சாமிபுரம் வரை முன்பு ஓடிக் கொண்டிருந்த லயன் பஸ் வெகு நாட்களாக நின்றுவிட்டது. மேற்படி ரூட்டில் பஸ் விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி— துரைச்சாமிபுரம் தடத்தில் சாலை பழுதுபட்டிருந்ததால் பேருந்து ஓடவில்லை. தற்போது சாலை சீர் செய்யப்பட்டு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசி வாரத்திலிருந்து பேருந்து ஓடு கிறது.

### மானாமதுரைத் தொகுதியில் டீசல் விநியோகம்.

* வினா எண்97.— திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மானாமதுரைத் தொகுதியில் டீசல் சரிவர விநியோகம் செய்யப்படாததின் காரணமாக பம்பு செட்டுகள் ஓடாமல் இருப்பதாலும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் இயங்காமல் இருப்பதாலும் விவசாயிகள் படும் அல்லலைப்போக்க ஏதாவது [illegible] செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

யன்ட் பிளான்ட்' வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் சுத்தப் படுத்த முடியும். அதுபற்றி பாரத் லெதர் கார்ப்பரேஷன் ஆலோசனைத் தெரிவித்திருக்கிறார்கள். உடனடியாக அதுபற்றி பரிசீலனை செய்து, அதிலே என்ன சட்ட சிக்கல் இருக்கிறது என்று பார்த்து, விரைவிலே முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படும் கேடுகளைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும், இன்றைக்குத் தமிழ் நாடு முழுவதும் தோல் பதனிடும் தொழில் நடக்கிறது. அதைப் போல மரவள்ளிக் கிழங்கு சம்பந்தப்பட்ட தொழிலும் வேறுபல இரசாயன தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அவைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதைக் கண்காணிக்க 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள். அன்றாட நடைமுறையில் இருக்கிற பல்வேறு பணிகளைச் செய்துவருகின்ற சுகாதார அதிகாரிகள் இதைக் கவனிப்பதற்குப் பதிலாக தமிழ் நாடு முழுவதும் இப்பிரச்சனை பற்றி முழு நேரமும் கவனிப்பதற்காக ஏற்கெனவே இருந்த ஒரு அமைப்பைப்போல தனி அமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் எழுப்பியது ஒரு நியாயமான கேள்வி. ஏனென்றால் இப்போது இருக்கக்கூடிய அமைப்பு — டி.பி.எச்சை வைத்துக் கொண்டு முழுமையாக இந்தப் பணியிலே கவனம் செலுத்தும் வாய்ப்பு இருக்காது. மேலும் இப்படி அசுத்தம் ஏற்படுவதைத் தடுக்க நம்மிடம் ஒரு 'என்விரான்மென்ட் ஆக்டும்' இல்லை. பொல்லூஷன் கன்ட்ரோல் ஆக்டும் இல்லை. இதுபற்றி மத்திய அரசு ஏர் பொல்லூஷன் ஆக்ட் என்று ஒரு சட்டத்தைத் தீட்டி இருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் அந்தச் சட்டத்தைக் கடைபிடித்து வருவதாகத் தெரிகிறது. நாமும் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தலாம் என்று நினைத்திருக்கிறோம். முடிந்தால் இந்தக் கூட்டத்தொடரிலேயே ஒரு ரெசலூஷன் கொண்டுவந்து அந்தச் சட்டத்தை அமுல்படுத்தலாம் என்று கருதுகிறோம். அப்போது பேராசிரியர் அவர்கள் சொன்னதுபோல, We can arm ourselves with better powers so that we can control this better. என்ற முறையில் ஒரு நல்ல ஆயுதம் நமக்கு இருக்கும். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இத்தகைய தொழிற்சாலைகளினால் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க ஒரு சரியான ஆயுதம் நம்மிடம் இருக்கும். ஆகவே, அந்தச் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 264 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றிலே பல தொழிற்சாலைகள் சுகாதார இலாக்காவின் சான்றிதழைப் பெறாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படிச் சான்றிதழ் வாங்காத தொழிற்சாலைகளை மூடிவிடுவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா? தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்ற இத் தொழிற்சாலைகளுக்கெல்லாம் இவ்வாறு கழிவு நீரை ஆவியாக்கி வெளியேற்றும் செலவிற்காக நாமே கடன் கொடுத்து கண்டிப்பாக இந்த முறையினைப் பின்பற்ற வேண்டும் என்ற வகையிலே நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்பது எளிது. ஆனால் அதிலே பல பிரச்சினைகள் எழும். இருந்தாலும் தாட்சண்யம் காட்டாமல் படிப்படியாக உறுதியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் பேருந்துப் பணி.

* வினா எண். 96— திரு ரா. கு. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-மேல அரசடி வழியாக துரைச்சாமிபுரம் வரை முன்பு ஓடிக் கொண்டிருந்த லயன் பஸ் வெகு நாட்களாக நின்றுவிட்டது. மேற்படி ரூட்டில் பஸ் விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் தடத்தில் சாலை பழுதுபட்டிருந்ததால் பேருந்து ஓடவில்லை. தற்போது சாலை சீர் செய்யப்பட்டு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசி வாரத்திலிருந்து பேருந்து ஓடுகிறது.

### மானாமதுரைத் தொகுதியில் டீசல் விநியோகம்.

* வினா எண் 97.— திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் டீசல் சரிவர விநியோகம் செய்யப்படாததின் காரணமாக பம்பு செட்டுகள் ஓடாமல் இருப்பதாலும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் இயங்காமல் இருப்பதாலும் விவசாயிகள் படும் அல்லலைப்போக்க ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துச்ாமி : தலைவர் அவர்களே, மானாமதுரைத் தொகுதியில் பம்ப் செட்டுகளுக்கும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகளுக்கும் எந்த அளவுக்கு டீசல் தேவையோ அந்த அளவுக்கு டீசல் வினியோகிக்கப்படுகிறது. எனவே மாற்று ஏற்பாடுகள் செய்வது பற்றி மறுபரிசீலனை தேவையில்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டில் தமிழக அரசு மத்திய அரசிடம் எவ்வளவு டீசல் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டது? மைய அரசு தமிழக அரசிற்கு எவ்வளவு டீசல் ஒதுக்கியது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் மைய அரசு நம்முடைய மாநில அரசுக்கு ஒதுக்கிய டீசல் எண்ணெயின் அளவு 73,700 மெட்ரிக் டன். அதற்குப் பின்னாலே பிப்ரவரி மாதத்திலே 72,500 மெட்ரிக் டன்னும் மார்ச் மாதத்திலே 98,300 மெட்ரிக் டன்னும் ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே, இன்னும் கூட அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நாம் மைய அரசிடம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, வெல்லம் ஆடக் கூடிய நேரத்திலே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகின்றது. டீசலும் கிடைப்பதில்லை. அதன் காரணமாக சாதாரண விவசாயிகள் கூட மிகப்பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே இதற்கு மாற்று எற்பாடு செய்வார்களா? இக் கேள்விக்கு நேரடியாகப் பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு. திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மின்சாரம், டீசல் இவற்றைத் தவிர வேறு ஏதாவது மாற்று ஏற்பாட்டைக் கேட்கிறார்களா என்பது தெரியவில்லை, அப்படி எது என்று சொன்னால் அதைப் பற்றி பரிசீலித்து அரசாங்கம் பதிலளிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே. கேட்டிருக்கிற கேள்வி மின்சாரம் சரியாக இல்லாத காரணத்தால் பம்ப் செட்கள் இயங்காமல் இருக்கின்றன என்பது, மேலும் சரியான முறையிலே டீசலும் கிடைக்கவில்லை. ஆகவே விவசாயிகள் நல்ல முறையிலே உணவு உற்பத்தியினைப் பெருக்கக்கூடிய அளவில் அங்கே டீசல் எண்ணெயை அதிகமாக்கிக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து எற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்குதான் நானும் பதிலைச் சொன்னேன். தேவையான அளவுக்கு அங்கே டீசல் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே எந்தவிதமான இடையூறும் இல்லை. ஏறத்தாழ அங்கே ஒதுக்கப்பட்ட டீசல் 4481 கிலோ லிட்டர், ஆனால் அங்கே பயன்படுத்தப்பட்ட எண்ணெயின் அளவு 4146





கிலோ லிட்டர்தான். ஆக 335 லிட்டர் அதிகமாகவே கொடுத்திருக்கிறோம். ஆகவே அந்தப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷன் தொழிற்சாலை.

* வினா எண்.—98 திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷன் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் என்ன ?

(ஆ) செயல்படும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(இ) சென்ற ஆண்டில் எவ்வளவு லாபம் சம்பாதித்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ மோட்டார் வாகன உதிரி உறுப்புகள் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் உபயோகிக்கத் தக்க வகையில் புதுப்பிக்கப்படுகின்றன. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளுக்கு கூடுகள் கட்டப்படுகின்றன. டயர்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

(ஆ) 336 பேர்கள்.

(இ) 1979-80-ல் வருமான வரி போக நிகர லாபம் 3 லட்சத்து 71 ஆயிரம்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்:பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே. அண்ணா கார்ப்பரேஷனின் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பல பேருந்துகளை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய அந்த நிறுவனம் உபயோகப்படுத்தப்பட்ட இன்ஜின் ஆயிலை திரும்பவும் சுத்தப்படுத்தி குறைந்த செலவிலே அதைப் பயன்படுத்திவதற்கான ஏற்பாட்டை அந்த இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் மூலம் செய்ய முடியுமா ? அதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட காரியத்தை போக்குவரத்துக் கழகங்களிலே செய்ய முடியும். செய்துக் கொண்டிருக்கிறோம், அண்ணா போக்குவரத்துக் கழகங்களிலும் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கு, ரமணி: தலைவர் அவர்களே, அதிலே வேலை செய்யக் கூடிய 300க்கும் மேற்படும்படியான தொழிலாளர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கும் வகையில், உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தூண்டுகிற அளவிற்கு, ஊக்க போனஸ் அதாவது

இன்சென்டிவ்ஸ் என்று ஏதாவது கொடுக்க அமைச்சர் அவர்கள் திட்டம் வைத்திருக்கிறார்களா? அல்லது கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எத்தனை பேருந்துகள் கூடுகள் கட்டுகிறார்களோ அதற்கேற்ப அவர்களுக்கு இன்சென்டிவ்ஸ் கொடுப்பது என்ற முறையிலும், என்ஜினியரிங் பொருள்களின் உற்பத்தியிலும், அவ்வாறு ஏற்கெனவே இன்சென்டிவ்ஸ் கொடுப்பது என்ற முறையிலும் அமுலாக்கப்பட்டு தற்போது அது நல்ல முறையில் அமுலாக்கிக் கொண்டு இருக்கிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் தொழிற்சாலைகள் எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களில் உள்ளன. அவைகள் இல்லாத போக்குவரத்துக் கழகங்களில் லாபகரமான அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு எண்ணியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு. திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற 9 போக்குவரத்துக் கழகங்களிலே, பல்லவன் பாண்டியன், அண்ணா, சேரன், சோழன் ஆகிய 5 போக்குவரத்துக் கழகங்களிலே இந்த என்ஜினீயரிங் கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. இப்போது நாம் புதிதாக 4 போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆக, மீதம் இருக்கிற இந்த 8 போக்குவரத்துக் கழகங்களிலும் என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் அமைக்க படிப்படியாக நடவடிக்கை எடுப்போம். எதை முதலில் செய்வோம் என்று சொல்ல தற்போது இயலாது எனினும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு நிச்சயமாக செய்வதாக இருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு, அதாவது மூன்றாவது கேள்வி என்று நினைக்கிறேன்–பதில் அளிக்கும்போது, வருமான வரி போக ஏறத்தாழ 3லட்சம் ரூபாய்க்கு மேலே லாபம் கிடைத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால், அந்த என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் சார்பிலே வருமான வரி எவ்வளவு கட்டப்பட்டது? ஆந்திர மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வருமான வரி கட்டுவதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கை எடுத்துச் சென்றிருக்கிறார்களே, அதைப்போல நம்முடைய அரசும் தமிழக அரசு கார்ப்பரேஷன்களுக்கு வருமான வரி கட்டுவதிலிருந்து விலக்கு வேண்டும் என்று மத்திய அரசை கேட்குமா? மத்திய அரசு மறுத்தால் சுப்ரீம் கோர்ட்டுக்கு போகுமா என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மொத்த வருமானம் 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய். இதிலே வருமான வரியாக கட்டியத்தொகை 4 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய். இதில் மொத்த நிகர லாபம் 3 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய். மாநில அளவிலே இந்தத் தொகையை வரியாகக் கட்டுவதை எதிர்த்து மத்திய அரசை நாம் கேட்கலாம். ஆனால் மத்திய அரசு மறுத்தால், நாம் சுப்ரீம் கோர்ட்டுக்கும் போகலாம். ஆனால் இப்படி ஒவ்வொன்றிற்கும் நீதிமன்றத்திற்குத்தான் செல்லவேண்டும் என்றால், தமிழக அரசு நீதிமன்றத்திற்கு தினந்தோறும் சென்று கொண்டிருக்க வேண்டியிருக்குமே என்ற அச்சம் இருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை பிரதிபலிக்க இந்த அரசு தயாராக இருக்கும்.

திரு. பொ. விஜயராகவன்; தலைவர் அவர்களே, வருமான வரியிலிருந்து விலக்கு பெறுகிற வகையில், கிராமப்புறங்களுக்கு அவைகளின் மேம்பாட்டிற்காக செலவு செய்கிறபோது, செக்ஷன் 35 சி. சி. என்கிற செச்ஷனின் அடிப்படையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே, அந்த விதிவிலக்கைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த வருமான வரியாகக் கொடுக்கக் கூடிய பணத்தை கிராமப்புறங்களுக்கு மேம்பாட்டிற்காக செலவழிக்கக் கூடிய திட்டங்களை ஏதாவது எடுத்து இந்த வருமான வரி விலக்கைப் பெற்றால் என்ன? அதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் சில திட்டங்களைப் போட்டு சில காரியங்களைச் இதுமாதிரி செய்து வருகிறோம். சில இடங்களில் சாலை மேம்பாட்டு திட்டம் என்ற வகையில், ரோடு போடும் பணியைக் கூட எடுத்திருக்கிறோம். ஆனால் இந்த கார்ப்பரேஷன் என்ஜினீயரிங் கார்ப்பரேஷனாக இருப்பதால் இதுவரையில் செய்யாமல் இருக்கிறோம். அதையும் கூட இனி மேற்கொண்டு செய்வதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம். தனிப்பட்ட முறையிலே தனி கார்ப்பரேஷனாக இருக்கிற காரணத்தினால்தான் இதுவரை இது போன்ற மேம்பாட்டு வேலைகள் எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை இனி யோசித்து நடவடிக்கையை எடுக்கலாம்.

திரு கி. சட்டநாத கரையாளர்: தலைவர் அவர்களே, இந்தக் கார்ப்பரேஷன் லாபகரமாக செயல்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். லாபம் கணக்கு பார்ப்பதிலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விலை எண்ணின் அடிப்படையிலே நிர்ணயம் செய்கிறார்களா? அதாவது காஸ்ட் அக்கவுன்டிங் என்ற அடிப்படை அல்லது மார்க்கெட்டிலே உற்பத்தியாகக் கூடிய இதர கம்பெனிகளின் விலைவாசியை ஒப்பிட்டு மார்க்கெட்டிங் பிரைஸ் என்கிற அடிப்படையிலே நிர்ணயம்

செய்கிறார்களா? அல்லது நமக்கு செலவாகக் கூடிய செலவை மாத்திரம் அடிப்படையாக கணக்கிட்டு நிர்ணயிக்கிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நமக்காகிற செலவை மட்டும் கணக்கிட்டால் லாபம் வராது. வெளியே அதே பொருளைக் கொடுத்து அல்லது டயர்களைப் புதுப்பித்தல் அதற்கு என்ன செலவாகுமோ அந்தச் செலவையும் நாம் செலவழிக்கிற அந்தத் தொகையையும் கணக்கிட்டு மீதம் உள்ள தொகையைத் தான் லாபம் என்று சொல்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இந்த அண்ணா என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் தான் அண்ணா போக்குவரத்துக் கழகத்தினுடைய கூடுகள் கட்டும் பணி பூராவையும் செய்கிறதா? அல்லது இந்தக் கார்ப்பரேஷனில் கட்டுகிற கூடுகள் போக மீதியுள்ளவை தனியார்களிடம் தரப்படுகிறதா? அப்படி தனியார்களிடம் இந்தப் பணி தரப்படுவதாக இருந்தால் இதை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எல்லா மாதங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பேருந்துகள் சில மாதங்களில் அதிகமாக வருகின்றன, சில மாதங்களில் குறைவாக வருகின்றன. குறைவாக வருகிற மாதங்களில் நாம் எல்லாவற்றையும் அங்கேயே செய்து கொள்கிறோம். சில நேரங்களில் அதிகமான பேருந்து வருகிறபோது — சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடத்திலிருந்து கோரிக்கைகள் வருகிறபோது, அதிகமாக பேருந்துகள் விடவேண்டுமென்று கோரிக்கைகள் வரும்போது — வெளியே கொடுக்கிறோம். இதை விரிவுபடுத்துவது என்றால் பலநேரங்களில் பேருந்துகள் குறைவாக வரும்பொழுது அதிகமான தொழிலாளர்களை நாம் வைத்துக் கொள்ளும்படியான ஒரு சூழ்நிலை ஏற்படும். எல்லாப் போக்குவரத்து கழகங்களிலும் இதை செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே தவிர இதை விரிவாக்கவேண்டும் என்ற எண்ணம் இப்போது இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: அண்ணா போக்குவரத்துக் கழகமா கட்டும் அல்லது என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் ஆகட்டும் சூப்பர் டீலக்ஸ் பஸ்கள், தனியரிடத்தில் கொடுக்கிற பஸ்கள் — பெங்களூரில், கண்ணப்பா என்று நினைக்கிறேன், அங்கு கட்டப்படுகிற பேருந்துகள் நன்றாக இருக்கின்றன. டி. வி. எஸ். யிலிருந்து வரக்கூடிய பேருந்துகள் நன்றாக இல்லை. எனவே அங்கே கண்ணப்பவில் கட்டுகிறமாதிரி நம் கழகங்களிலும் கட்ட அரசாங்கம் முயற்சி எடுக்கும ? அவை 'பைன் அன்ட் நைஸாக' இருக்கின்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பெரிய யோசனையை ஏற்று அதைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். இதைப் பார்த்து இப்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருச்சியில் இதுபோன்ற



ஒரு அமைப்பை ஏற்படுத்தி அந்தக் கூண்டுகளை, உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் பைன் அன்ட் நைஸாக, கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

Memorandum from Tamil Nadu Animal Husbandry Attendants Association.

*Q. No. 99. THIRU R. UMANATH : Will the Hon the Minister for Social Welfare be pleased to state.—

(a) Whether the Government have received any memorandum, dated 19th March, 1981 from the Tamil Nadu Animal Husbandry Attendants Association?

(b) If so, the action taken by the Government ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அ இல்லை. இருப்பினும் கால்நடை பராமரிப்பு பணியாளர் சங்கத்தின் 6.3.1981 நாளிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநத் : அந்தக் கோரிக்கைகளைப் பார்க்கிறபோது பரிசீலனையில் இருக்கவேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. ஏனெனில் மருந்தகத்தில் இரண்டு கால்நடைப் பணியாளர்கள், பேஸிக் வொர்க்கேர்ஸ் ஸ்டாட்டஸ்—ல் உள்ள பணியாளர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு பணியாளர்களும் டே அன்ட் நைட் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால் 12 மணி நேர வேலை ஒரு ஆளுக்கு வருகிறது. ஆனால் ஒருவருக்கு எட்டு மணி நேரம் தான் வேலை நேரம் என்றிருக்கவேண்டும். டே அன்ட் நைட் என்று வரும்போது ஒருவர் லீவில் போனால் மற்றவர் 24 மணி நேரமும், அவர் ஒருவர்தான் வேலை செய்யவேண்டும் என்ற நிலை. 1979-ல் நைட்வாச்மென் தனியாக அப்பாயின்ட் செய்ய ரெக்கமன்ட் செய்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்த பரிசீலனை என்ன தேவை ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : ஒரு மருந்தகத்திற்கு இரண்டு பணியாளர்கள் வீதம் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இரவு காவலரை அமைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி அரசு பரிசீலித்து சீக்கிரம் முடிவு எடுக்கும்.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்களின் இன்றைய நிலையில் நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ஐந்து கோரிக்கைகள் இருக்கின்றன. சீக்கிரம் என்றால் எப்போது, ஒரு காலவரையறையாவது சொன்னால் பரவாயில்லை. தங்கள் பிரசவத்திற்கு முன்னால் அதை முடித்துவிட்டால் தேவலை.

[பதில் இல்லை.]

ஒதியத்தூரிலுள்ள ஆடுவளர்ப்புக் கூட்டுறவு சங்கம்.

*வினா எண் 100— திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி ஒதியத்தூரிலுள்ள ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் இயங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) இந்தச் சங்கத்தினர், தீர்மானம் நிறைவேற்றி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக்கு கடன் மனுக்கள் கொடுத்து நிதி உதவி பெற்றபின் சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசின் மானியம் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 10-10]

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கம் தற்போது இயங்குகிறதா அல்லது இயங்கவில்லையா என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டும். அதோடு, அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் அலுவலர்கள், சிப்பந்திகள் ஆகியோர்களுக்கு இதுவரை சம்பளம் கொடுக்கப்பட்டு வருகின்றதா ? இந்தச் சங்கத்தின் மூலம் மக்கள் பயனடையவில்லை ; இது அரசாங்கத்திற்கு ஒரு பேரிழப்பாக இருப்பதால், அதற்கு என்ன மாற்று யோசனை என்பதையும், இந்த இழப்பை இந்த அரசு எப்படி ஈடுகட்டப் போகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்த ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் 22.12.76-லே பதிவு செய்யப்பட்டது. 195 நபர்கள் தலா ரூ. 10 வீதம் கட்டி உறுப்பினர்களாகச் சேர்ந்தவர். முதலில் இந்த உறுப்பினர்கள் கடன் பெறுவதற்கு பாரத வங்கியை நாடினர். இந்த உறுப்பினர்கள் அவர்களுக்குச் ஷுயூரிடி தரமுடியாத காரணத்தினால், அவர்கள் கடன் மனுக்கள் பாரத வங்கிக்கு அனுப்பப்படவில்லை. அதேமாதிரி, கங்கைவெள்ளியில் இந்தியன் பாங்கியில் பீல்ட் ஆபீசர் இல்லாததால் கடன் பெற முடியவில்லை. இருப்பினும் நடப்பு ஆண்டில் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன்பெற தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்ட இந்தச் சங்கத்தில் கடன் கோரும்போது



பழைய கடனைக் கொடுத்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்ற நிபந்தனை இருப்பதால், அவர்களால் கடன்பெற இயலவில்லை. மேலும், அப்படியே ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் பொருளாதார நிலையில் உயர்மட்டத்தில் இருப்பவர்களிடமிருந்து ஜாமீன் பெறவேண்டும். அப்போது அவர்களுக்கு அவர்கள் கடமைப்பட்டவர்களாக ஆகிவிடுகிறார்கள். உண்மையாக, இந்த அரசாங்கம் அவர்களுக்கு உதவ வேண்டுமென்றால், அந்தக் கடன் தொகையை நேரடியாக அவர்கள் பெறக்கூடிய சூழ்நிலையில் இருக்கவேண்டும். அந்த வகையில் ஏழை எளிய மக்களுக்கு ஷுயூரிடி இல்லாமல் கடன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அங்கத்தினர்களுக்குள் நல்லமுறையில் அவர்களே ஷுயூரிடி கொடுக்கலாம் ; அதற்கு அவர்களுக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும். அப்போதுதான் அதை நல்லமுறையில் செயல்படுத்தமுடியும். அப்படி இல்லையென்றால், எப்படி கடன் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி டி. யசோதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் கொடுக்கின்ற விஷயத்தில் மனு செய்கின்றவர்கள் கணவன் கடன் பெற்றிருந்தால், மனைவிக்கு அதிலே கடன் கொடுக்கக் கூடாது என்ற முறையிருப்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதைப்பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

குற்றாலம் அருவியில் குளிப்பதற்கான கட்டணம்

குறுகியகால வினா எண். 1—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலத்தில் உள்ள அருவியில் குளிக்கும் அனைவரிடமிருந்தும் கட்டணம் வசூலிக்க நகரியம் முடிவு செய்துள்ளதென்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அடுத்த சீசன் (1.6.82) முதல் குற்றாலம் அருவிகளில் குளிப்பவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க நகரியம் முடிவு செய்துள்ளது.

(ஆ) நகரியத் தீர்மானத்தின்படி அருவிகளில் குளிக்க, பெரியவர்களுக்கு 50 காசும், சிறார்களுக்கு 25 காசும், கட்டணமாக வசூலிக்க முடிவு செய்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே எல்லாம் அந்தச் சிற்றருவியில் மாத்திரம் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு, அங்கே மாத்திரம் 30 பைசா வசூல் செய்யப்பட்டது. ஆனால், இப்போது மற்ற அருவிகளிலும் அதாவது சிற்றருவி, புலி அருவி ஐந் ருவி, பிரதான அருவி, அதேபோல் பழைய அருவி, ஆகியவைகளில் இப்படி வசூலிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது, அதனால், அங்கு ஒட்டப்பட்டுள்ள வால்போஸ்டர் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது; அது நியாயம்கூட. கட்டபொம்மன் சொல்வான் வானம் பொழிகிறது: பூமி விளைகிறது; மன்னனுக்கு ஏன் கட்டணம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: 'வானம் பொழியுது, அருவி நீர் வருகிறது. நகரியம் ஏன் கட்டணம் வசூலிக்க வேண்டும், என்று வால்போஸ்டர் போட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சேபணையை அரசாங்கம் கவனத்தில் கொண்டு ஏழை எளியவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கக்கூடிய போக்கைக் கைவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, வரி ஏன் கொடுக்கவேண்டும்?' என்று எல்லோரும் இருந்துவிட்டால் அரசாங்கம் நடத்த முடியாது. ஆனால் குற்றாலத்தைப் பொறுத்த அளவில் நீர்வீழ்ச்சி மட்டுமல்ல, பொதிகை மலைச் சாரல், அதிலே தவழ்ந்து வரும் தென்றல் காற்று இருக்கிறது. நீர்வீழ்ச்சியில் வரும் நீர் மூலிகைச் சத்து நிறைந்தது. அது தீராத நோய் தீர்க்கும் தீர்த்தம்; கண்ணுக்கு விருந்து, உடம்புக்கு சுகம், களிப்புக்கு இடம் இவற்றையெல்லாம் ஒரே நேரத்தில் அனுபவிக்க 50 காசு கட்டணம் கொடுத்தால் நகரியம் அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். அந்த நகரியத்தில் வருமானம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அங்கே வாழ்கின்ற மக்கள் தொகை மிக மிகக் குறைவாக இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்தில் வைத்துக் கொண்டு 50 காசுகள் விதிக்கலாம் என்ற தீர்மானத்தை நகரியத்தினர் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தென்றலைக் கொண்டு வருவதற்கு, மூலிகைகளைக் கொண்டு வருவதற்கு நகரியத்திலிருந்து எந்த விதமான முயற்சியும் கிடையாது. அது இயற்கையாக வருகிறது. இயற்கையாகவே வருவதற்கு வரி போட்டு வசூலிப்பது இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரைக் கொண்டு வரும். ஆகவே, அந்தக் கெட்ட பெயரை நீக்குகின்ற வகையில் இந்த வரியைப் போட வேண்டாமென்று அரசாங்கம் வற்புறுத்தி நிறுத்த முன்வருமா?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இயற்கை எவ்வளவோ கொடுக்கிறது. ஆனாலும் அவைகளை எல்லாம் ஒழுங்குப் படுத்திக் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. சமீபத்தில் அதே நீர்வீழ்ச்சியில் தண்ணீர் விழும்போது கல்லும் சேர்ந்து விழுந்த பல பேருக்குக் காயம் ஏற்பட்டது. அந்த மாதிரி கற்கள் வராமல் பாதுகாத்து கிடைக்கின்ற நீர் சுத்தமான நீராக இருக்கமான சூழ்நிலைகளை உருவாக்கத் தான் இந்தக் கட்டணம் வசூல் செய்யவேண்டுமென்று கருதி இருக்கிறோம். ஆகவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குற்றாலத்திற்குப் போகின்றவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 70,000 அல்லது 80,000 இருக்கும். அவர்கள் அனைவரும் வெளியூரில் இருந்து வருகிறவர்கள். உள்ளூரில் 2,307 பேர்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நகரியத்தின் வருமானம் தற்போது ரூ. 9,38,000; செலவு ரூ. 9,42,000 ஆகும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் நகரியத்தை நடத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். இங்கே பல்வேறு உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் — டவுன்ஷிப்பில் கட்டப்பட்டிருக்கும் குடியிருப்பில் வசதிகள் இல்லையென்பதை எல்லாம் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கட்டண விதிப்பின் மூலம் ஏறத்தாழ 12 லட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அப்படி வந்தால் உறுப்பினர்களுக்கும் மற்றவர் களுக்கும் வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க முடியும் என்பதைக் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: குற்றாலத்திற்கு ஆண்டுதோறும் சுமார் 70,000 பேர் குளிக்க வருகிறார்கள் என்று சொன்னார்கள். இன்னும் அதிகமாக ஆண்டுதோறும் பயணிகள் வந்து குளிக்க வாய்ப்பு இருக்கிறது, இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் உலகத்தில் நல்ல முறையில் குளிக்க ஏற்ற இடம் என்ற அளவுக்கு குற்றாலம் பிரசித்தி பெற்றிருக்கிறது. இன்று நீங்கள் அதற்கு வரி போடுகிற நிலைமை வருமானால் அதைத் தொடர்ந்து மெரினா கடற்கரையில் காற்று வாங்கக் கூட வரி போடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இந்த மாதிரி எண்ணத்தை வளர்க்காமல் வரி போடுகின்ற திட்டத்தை அரசாங்கம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்திலுள்ள நீர்வீழ்ச்சியில் குளிக்க வரி அல்ல — கட்டணம் விதிக்கலாமா என்பது பற்றி ஒரு யோசனை இருந்து வருகிறது வரி வேறு, கட்டணம் வேறு. குற்றாலத்தைப் பொறுத்தவரை அங்கு பழைய அருவி, புலியருவி, பெரிய அருவி, ஐந்தருவி, தேனருவி, சிற்றருவி என்று இருக்கின்றன. சிற்றருவியைப் பொறுத்தவரை நீண்ட பெருங் காலமாகவே கட்டணம் விதிக்கப்பட்டு வருகிறது. மற்றைய அருவியில் இலவசமாகக் குளிக்கலாம் என்ற முறைதான் இருக்கிறது

[1981 ஆகஸ்ட் 27

[முற்பகல் 10.20]

ஆகவே நகரியத்தைப் பொறுத்தவரைக்கும் மக்கள் ஏராளமாக ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக வருகிறார்கள் ஏழையிலிருந்து பணக்காரர் வரையில் பலபேர்கள் அங்கே வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் எல்லா வாய்ப்பு வசதிகளையும் செய்ய வேண்டிய பொறுப்பு இருக்கிறது. 30 ஆண்டுகளுக்கு முன்னாலே குற்றாலம் இருந்த நிலைமையைவிட அதற்குப் பிறகு இப்போது வளர்ந்து இருக்கின்ற நிலைமையையும் பார்க்கிறபோது செலவினங்கள் கூடுதலாக இருக்கிற நிலைமையும் வசதிகள் அதிகமாகச் செய்யவேண்டிய கடப்பாடுஉடையவர்களாகவும் இருக்கிறோம். நகரியத்தைப் பொறுத்தவரையில் வீட்டு வரியைத் தவிர வேறு வருமானம் இல்லை. அங்கே வருகின்றவர்களுக்கு போக்குவரத்து வசதி, காவல் துறை வசதி, விளக்கு வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, போன்ற எல்லா வசதிகளையும் செய்யவேண்டுமென்றால் நகரியத்திற்கு வருவாய் தேவைப்படுகிறது. அதையொட்டி இப்போது போட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் இயற்கையால் வருகின்றன என்றாலும் நயாகரா பால்ஸை பார்ப்பதற்கு 5 டாலர் கொடுக்கவேண்டியிருக்கிறது, சிலோனிலே உள்ள மெட்டிர் ஊற்றுக்கள், 7 ஊற்றுகளிலே குளிக்க வேண்டுமென்றால் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே சிற்றருவிக்கு இருப்பதன் காரணமாக ஏழை எளிய மக்கள் சாதாரண மக்கள் குற்றாலத்திற்கு வருகிற சூழ்நிலை இருப்பதன் காரணமாக எல்லா அருவிகளுக்கும் விதிக்கிற நிலைமை இல்லாமல் பார்த்துக் கொள்ள அரசு மீண்டும் பரிசீலனை செய்யும், உள்ளாட்சித் துறை மூலமாக என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சிற்றருவிக்கும் ஐந்தருவிக்கும் மட்டும் போட்டுவிட்டு பெரிய அருவி, பழைய அருவி மற்றவைகளையெல்லாம் விட்டுவிடலாம். ஆனாலும் அதிலே 50 காசு, 25 காசு கட்டணம் என்பதை 5, 6 குளியல் போடுகிறவர்களுக்கு அதிகமாக இருந்தாலும் கூட எடுத்த எடுப்பிலேயே குறைந்த அளவு கட்டணத்தில் துவக்கி பரிட்சார்த்தமாகப் பார்த்து அதிலே நல்ல பலன்கள் வருமானால் பார்க்கலாம், பெரிய அருவியையும் பழைய அருவியையும் பொதுமக்களுக்காக விட்டுவிடலாம். ஐந்தருவிக்கு பெரும் வசதிபடைத்தவர்கள், கார் வசதியுள்ளவர்கள் போகிறார்கள், ஆகவே அதற்கு வைத்துக் கொள்ளலாம். எண்ணெய்க்கே ஒரு தரம் குளிக்க வேண்டுமென்றால் 75 காசு அல்லது 1 ரூபாய் இல்லாமல் ஒரு குளியல் நடத்த முடியாது. ஆகவே எண்ணெய்க்கே 1 ரூபாய் செலவழிக்கிறபோது குளிர்ந்த தண்ணீருக்கு 50 காசு, 25 காசு செலவழித்தால் கஷ்டம் இராது. ஆகவே பரிட்சார்த்தமாகப் பார்த்து இந்த ஆண்டு வேண்டாம், இது முடிவடையும் தன்மையில் இருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்த ஐந்தருவிக்கும் விதித்து பரிட்சார்த்தமாகப் பார்த்து அதற்குப் பிறகு ஏற்படுகிற நிலைமைகளையொட்டிச் செய்யலாம். ஆகவே பரிசீலித்து முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு துரை முருகன்:** தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் சொன்னது மாதிரி........



1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார், உட்காருங்கள்.

**திரு துரைமுருகன்:** முக்கியமான கேள்வி. குற்றலாத்திற்கு வருகிறவர்களுக்கு வசதிகள் செய்யவேண்டுமென்ற முறையிலே அப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள். இப்படியே போனால் பீச்சிலே காற்று வாங்குவதற்குக்கூட— நாங்கள் இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டி இருக்கிறது—என்று சொல்லி வரிப்போட கூடிய நிலைமை வரும் அதை யோசிப்பார்களா? (பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. நாவல் கோரல்

### அ. டைரக்டர்—ஜெனரல் ஆப் போலீஸ் பதவி

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழகத்திலே டைரக்டர்—ஜெனரல் ஆப் போலீஸ் என்ற உயர் பதவி இந்த ஆட்சி கடந்த முறை பதவியிலே இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட பதவியாகும். அந்தப் பதவி கடந்த சில மாதங்களாகவே நிரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலே தமிழகத்திலே உள்ள உயர் போலீஸ் அதிகாரிகள் மத்தியிலே ஒரு நிம்மதி இல்லாத நிலைமை இருப்பதோடு அந்த அதிகாரிகள் ஹோம் டிபார்ட்மெண்டிலே உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குக் கட்டுப்பட்டு நல்ல முறையிலே செயலாற்ற வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பதவி விரைவிலே நிரப்பப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. ஆகவே அனுமதி மறுக்கப்படுகிறது.

### ஆ. உறுப்பினர்கள் எடுத்துள்ள அறிவிக்கைகள்

**திரு என். வி. என். சோமு:** நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றிப் பிறகு வருகிறேன்.

திரு. என். வி. என். சோமு: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்குறிப்பிலே இவையெல்லாம் ஏறாது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. சபையை நடத்திச் செல்வதற்கு அதற்கு உட்பட்டுத்தான் நடந்து கொள்ளவேண்டும். தினசரி ஒவ்வொரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவசரமான பிரச்சனை என்றால், உதாரணமாக, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இலங்கையிலே ஒருவர் கொல்லப்பட்டது சம்பந்தமாக கொடுத்தபோது உடனே அது எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. நேற்றையதினம் ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, இன்றையதினமும் ஒன்று வர இருக்கிறது, அப்படியிருக்கும்பொழுது திடீரென்று எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சனை என்று 234 உறுப்பினர்களும் அவையிலேயே எழுந்திருந்து கேட்க ஆரம்பித்தால் சபையை எவ்வாறு நடத்த முடியும்? எனவே, பேரவைத் தலைவருக்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தந்துதான் தீரவேண்டும்.

*திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எதையும் அனுமதிக்கவில்லை, ஏதேனும் சொல்ல வேண்டுமென்றால் என் அறையில் வந்து சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலும்கூட, வேறு நாட்களிலே அதை எடுப்பதாக இருந்தாலும்கூட, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசரத்தைக் கருதி அந்தத் தீர்மானம் தங்களிடத்திலே வரும்பொழுது அதை அரசுத் துறையினருக்கு அனுப்பிவைப்பதன் மூலம், அந்தப் பிரச்சனைகளை அவர்களே கவனித்து அவர்களே ஒரு வழி வகுக்கின்ற முறையிலே ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே எடுத்துக்கொள்வதற்கு நாளானாலுங்கூட, அந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வநது என்ன பயன் ஏற்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறார்களோ அதை அரசாங்கத்தின் மூலம் கவனிக்க ஒரு வழிவகை செய்ய, மாண்புமிகு தலைவரவர்களே அதற்கு ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன், அது கவனிக்கப் படுகிறது, இடையிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே வலியுறுத்த வேண்டாம், பின்னல் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகின்ற முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்று தங்களைப் பணிவோடு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்கும், அவை உறுப்பினர்களுக்கும் நான் சொல்லவேண்டுமென்பதில்லை. இங்குள்ள முறைகளைப்பற்றி அவர்களுக்கு ஏற்கனவே தெரியும்.



கொடுக்கப்படுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அரசினுடைய கவனத்திற்கு உடனடியாக என்னுடைய அலுவலகத்திலேயிருந்து அனுப்பப்பட்டு, அந்தந்த இலாக்காக்கள் பரிசீலித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானங்களின் முக்கியத்துவத்தை எந்த வகையிலும் குறைத்து மதிப்பிடவில்லை.

சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரைப் பொறுத்த வரையில், இது குறைந்த நாட்கள் நடைபெறுகின்ற ஒரு கூட்டத் தொடராகும், எனினும், நாடு தழுவிய பல்வேறு பிரச்னைகள் வந்தபோது அவை முறையாக எடுதது்க் கொள்ளப்பட்டுத்தான் வருகின்றன, ஒரேநாளில் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை; ஆதலால் உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

[முற்பகல் 10.30]

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நடைமுறையிலே இருப்பதை நான் ஓரளவு அறிவேன், இருந்தாலும் அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகிற ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் அரசாங்கத்திற்குத் தங்கள் மூலமாக அனுப்பப்படுகிற அதனுடைய கருத்துக்கள், இந்த அவையிலே எடுக்கப்படுகிறபொழுது தான் அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற காரணத்தால், அதைப்பற்றி உடனடியாகச் சரியாக கவனிப்பதில்லை. எனவே, மாண்புமிகு தலைவர் அவர்கள், அவர்களுக்கு அனுப்பப்படுகிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கவனிக்கிற அளவுக்கு, தங்களுக்கு அவ்வப்போது இரண்டு நாளைக்கு ஒரு முறையாவது தாங்கள் என்ன கவனித்திருக்கிறோம், தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று தங்களுக்குக் குறிப்பு தருகிற அளவுக்கு இருக்குமானால், ஒத்திவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்த ஏற்படுகிற அந்த உணர்வுகள் கூட அதிகம் ஏற்படாது. இல்லையானால், அவர்கள் எப்படி கேள்விக்கு நீண்ட நாள் கழித்துப்பதில் சொல்லலாம் என்ற காரணத்தால் உடனடியாகக் கவனிப்பதில்லையோ, அதைப் போல் ஒத்திவைப்புத் தீர்மானங்களாக வருகிற கருத்துக்களை அரசு விரைவாகக் கவனிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்த முடியாத நிலைமை வருகிறது, ஆகவே, அதைக் கவனித்து, தங்களுக்கு, சபாநாயகர் அவர்களுக்கு, அவர்கள் அவ்வப்போது கருத்து தெரிவிக்க தாங்கள் ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ காலம் தாழ்த்த வேண்டுமென்றோ, ஒத்திவைப்புத் தீர்மானங்களையோ, கேள்விகளுக்குப் பதில் சொல்வதையோ நாங்கள்

தள்ளி வைப்பதில்லை என்பதையும், இந்த அரசு அப்படிப் பட்ட பொறுப்பற்ற தன்மையில் பணியாற்றவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ் வி. சித்தன்: சட்டமன்றம் குறுகிய காலம் நடைபெறுகிற காரணத்தாலே, நம்முடைய தேவைகளைப் பொறுத்து, நாளொன்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள நீங்கள் முயலலாமே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழு என்ற ஒன்று இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவிலே இதைப்பற்றியெல்லாம் ஏதாவது புதிய கருத்துக்களைச் சொன்னால், அதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் 'மிக அவசரம் பேரவை அலுவல் ஒத்தி வைப்பு அறிவிப்பு பேரவைத் துறைக்கு கொடுக்கப்பட்ட தேதி, நேரம் ஆக அனைத்தையும் அச்சிட்ட ஒரு சிறு அட்டை இணைக்கப்பட்டு, அமைச்சருடைய நேரடி கவனத்திற்கு அனுப்படுகிறது. ஆகவே, அது அரசினுடைய கவனத்திற்கு எவ்வளவு வேகமாகப் போக வேண்டுமோ, அவ்வளவு வேகமாகப் போகிறது. ஏனென்றால், தினசரி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்துகொண்டுதானிருக்கிறது, பதில் சொல்லிக் கொண்டுதானிருக்கிறார்கள், ஆக, ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு வேகமாகப் போக வேண்டுமோ, அவ்வளவு வேகமாகப் போகிறோம், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண்ணம் இருக்கிறது, நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் வருவதில்லை, ஆனால் இன்னொருவர் கொடுத்தது வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்,

இங்கே இன்னொரு பிரச்னையை நான் சொல்லிவிடுகிறேன், பல்வேறு கட்சிகள் இந்த மன்றத்திலே இருக்கின்றன, இரண்டு மூன்று கட்சிகள் சேர்ந்து சில ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறார்கள், நாடு தழுவிய பிரச்னையாகச் சிலவற்றைக் கொடுக்கிறார்கள், ஒருவரேகூட தனியாக ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுக்கிறார்கள், அப்படி கொடுக்கிறபொழுது முன்னுரிமைக் கூடக் கொடுப்பதில்லை. வரிசையாக நாங்கள் எடுத்துக் கொண்டு வருகிறோம். அப்படியிருக்கும் போது, எவ்வளவு வேகமாக எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு வேகமாக எடுத்துக் கொள்கிறோம். எல்லோரையும் திருப்தி படுத்த முடியாத நிலையிலேதான் சபையை நடத்திச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எல்லாக் கட்சிகளையும் மதிக்க வேண்டிய சூழ்நிலையிலே இந்த மாமன்றம் இருக்கிறது. அந்த வகையிலேதான் நாங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கிறோமேதவிர, யாரையும் புறக்கணித்து, அவர்கள் கொடுத்ததை கவனிக்கக்கூடாது என்ற நிலையில் இந்த சபை நடத்தப்படவில்லையென்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, நான் சொல்லிய பிரச்னை ஒரு தடவை மட்டும் நடந்திருந்தால் பரவாயில்லை, பல தடவைகள் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதிலே குறைபாடு இருக்கிறது. நான் சபாநாயகராக இருந்து பதில் சொல்லக் கூடாது. அது முறையல்ல, ஆகவே சொல்லவில்லை. நீங்கள் சொல்வதிலே எந்தக் கொந்தளிப்பும் இல்லை.

### 3. உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னை கொடுத்துள்ளார், அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார், அமைச்சர் தற்போது கருத்து தெரிவிப்பார்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே நான் என்ன உரிமைப் பிரச்சினைக் கொடுத்திருக்கிறேன் என்று நீங்கள் முதலிலே வாசித்து விடுங்கள். இதற்கு நீங்கள் ஏற்கனவே கன்சன்ட் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்சன்ட் கொடுக்கவில்லை. எந்தப் பிரச்சினை வந்தாலும் அதை நான் குறிப்பிட்ட, சம்பந்தப்பட்ட இலாகா அல்லது அமைச்சர்க்கு அனுப்பி வைக்கிறேன். அதுபற்றி அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சட்டசபை விதிகளுக்குக்கட்டுப்பட்டுதான் நீங்கள் முடிவெடுக்க வேண்டும். அந்தப் பிரச்சினையை அவையில் நீங்கள் வைத்தாக வேண்டும். அதற்குப் பிறகுதான் உறுப்பினர்களை பேச அனுமதிக்க வேண்டும். சட்டசபை விதிகளுக்குப் புறம்பாக போக முடியாது. எனவே தயவு செய்து அதை வாசித்து விடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஏதோ ஒரு பிரச்சினையை திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களை பேச அழைக்கும் முன்பாக அந்தப் பிரச்சினை சம்பந்தமாகச் சொல்லிவிடுங்கள்.

[1981 ஆகஸ்ட் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் அவர்கள் தனது உரிமைப் பிரச்சினையில் கூறியதாவது:

22-8-1981 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாகக் கூடும் இடங்கள் திருத்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசினேன், பொது இடங்களில், பொருட்காட்சிகளில், கலை நிகழ்ச்சிகளில், சூதாட்டங்களையும், ஆபாசத்தையும் ஒழிக்க மசோதா கொண்டு வரும் இந்த அரசு சென்னை நகரத்தில் நடைபெறும் குதிரைப் பந்தயம் ஏன் ஒழிக்கவில்லை......... இதைப்போலவே ஆபாசம் ஒழிக்கப்பட வேண்டுமானால், சென்னை நகரில் பெரிய ஓட்டல்களில் காபரே நடனம் ஆபாசமாக இல்லையா? அது ஏன் ஒழிக்கப்படவில்லை? சினிமாக்களில் ஆபாசமாக இருக்கிறது படுக்கையறைக் காட்சி முதலிரவுக் காட்சிகள் ஆபாசமாக இருக்கின்றன. சினிமா சுவரொட்டிகளில் ஆபாசக் காட்சிகள் இருக்கின்றன......... சென்னையில் மவுன்ட்ரோட்டில் மசாலா மந்திரவாதி என்னும் சினிமா விளம்பரத்தட்டி, ஆபாசமாக இருக்கின்றது. பொது இடங்களில் ஆபாசத்தை ஒழிக்க சட்டம் கொண்டுவரும் அரசு இதுகுறித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பேசினேன். இதற்கு பதில் உரைத்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மசாலா மந்திரவாதி படத்தின் பேனரைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆபாசம் என்பது மசாலா மந்திரவாதிகள் மூலமும் வருகிறது. சிலைகளிலும் உள்ளது. புகாரி ஓட்டலுக்கு எதிரிலும், பிலால் ஓட்டலுக்கு எதிரிலும், சங்கம் ஓட்டலுக்கு எதிரிலும் மசாலா மந்திரவாதிகள் சிலைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். ........ உடனே நான் ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பி அமைச்சர் சொல்லிய இடத்தில் அமைச்சர் சொல்வது போல ஆபாசமான மசாலா மந்திரவாதிகள் சிலைகள் இருக்கின்றனவா? அமைச்சர் சொல்வது உண்மையா? அந்த ஆபாச சிலைகளை அகற்ற அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டேன். உடனே அமைச்சர், அந்த ஆபாச சிலைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும் என அவையில் அறிவித்தார். அமைச்சர் அவையில் குறிப்பிட்டதைப் போல புகாரி ஓட்டலுக்கு எதிரிலும், பிலால் ஓட்டலுக்கு எதிரிலும், சங்கம் ஓட்டலுக்கு எதிரிலும் எந்த மசாலா மந்திரவாதிகளின் சிலையும் இல்லை. உண்மை இப்படி இருக்க அமைச்சர் குழந்தைவேலு உண்மைக்கு புறம்பாக வேண்டும் என்றே அவையை திசை திருப்பும் நோக்கத்தோடு புகாரி ஓட்டலுக்கு எதிரிலும், பிலால் ஓட்டலுக்கு எதிரிலும், சங்கம் ஓட்டலுக்கு எதிரிலும் மசாலா மந்திரவாதிகளின் சிலைகள் இருக்கின்றன. அவைகள் அகற்றப் படும் என்று தவறான தகவலை அவைக்கு தந்துள்ளார். இது அவையின் உரிமை மீறிய செயலாகும். ஆதலின் இதுகுறித்து தாங்கள் விசாரித்து அமைச்சரை உரிமைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுகிறேன்.

இது குறித்து மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் கருத்துத் தெரிவிப்பார்.



1981 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நடந்த 22 ஆம் தேதி நடந்த விவாதத்திலே பங்கு கொண்டு ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே நான் பேசினேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஆபாசங்களை பற்றி எல்லாம் விளக்குகின்ற நேரத்தில் புகாரி ஓட்டலுக்கு முன்னாலே மசாலா மந்திரவாதிகள் என்று அங்கே பேனர் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதனை எடுத்துச் சொன்னார். நான் அதில் கூறுகின்ற நேரத்தில் மசாலா மந்திரவாதியின் பேனரை நான் பார்க்கவில்லை. ஆனால் புகாரி ஓட்டலுக்கு முன்னாலும் பிலால் ஓட்டலுக்கு முன்னாலும் சங்கம் ஓட்டலுக்கு முன்னாலும் மசாலா மந்திரவாதிகளின் சிலைகள் இருக்கின்றன என்று நான் கூறினேன்.

[முற்பகல் 10.40]

நான் கூறியதனுடைய நோக்கம் எல்லாம் அங்கே யாரையும் புண்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தோடு அந்தக் கருத்தைக் கூறவில்லை. அப்படி யாருக்காவது அப்படிப்பட்டக் கருத்துக்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக வருத்தம் அடைகிற சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு நானும் பொறுப்பாளி ஆக முடியாது.

* * *

என்பதை நான் சுட்டிக்காட்டி வேறு எந்த எண்ணத்தோடும் அவைகளை கூறவில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே இரவு நேரங்களில் நானும் பல்வேறு நேரங்களில் பார்த்து இருக்கிறேன். அங்கே பிலால் ஓட்டல், புகாரி ஓட்டல், சங்கம் ஓட்டல்களுக்கு முன்னால் கார்களை நிறுத்திக் கொண்டு அங்கேயே உணவு சாப்பிடுகிற நிலை இருக்கிறது. அப்படி உணவு சாப்பிட வருகிறவர்களில் பெண்களில் கூட ஒரு சிலர் அங்கே வருகிறார்கள்.

* * *

என்ற எண்ணத்தோடு தான் கூறினேனே தவிர வேறு எந்த எண்ணத்தோடும் நான் கூறவில்லை. ஆகவே உரிமைப் பிரச்சினை வருவதற்கும் இடமில்லை. காரணம் யாரையும் கோடிட்டு, குறிப்பிட்டு கூறியிருந்தால் உரிமைப் பிரச்சினை வருவதற்கு நியாயம் உண்டு. இந்த சட்ட மன்றத்திலே இருக்கிற எந்த உறுப்பினர்களையும் காழ்ப்புணர்ச்சியோடு அல்லது தவறான கருத்தோடு, எண்ணத்தோடு அவைகளை நான் கூறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கனவே இழைக்கப்பட்ட ஒரு அநீதிக்கு மேலும் ஒரு அநீதி இழைக்கிற முறையிலே அமைச்சர் அவர்களுடைய வாதம் இருக்கிறது. அப்படித்தான் வாதம் நடத்த வேண்டுமென்று அவர் விரும்புவாரேயானால், அதே முறையில்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வாதம் நடத்தி ஆளும் கட்சிக்கு பெருமை தேடித்தரட்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன். இந்த தவறுக்கு வருத்தம் தெரிவிப்பதாகத் தான் சபாநாயகர் அவர்கள் எங்களிடத்திலே தெரிவித்தார்கள். வருத்தம் தெரிவிக்கவில்லை என்பது மட்டு மல்ல, 'It is adding insult to the already committed injury' என்று சொல்லத்தக்க வகையில் ஏற்கனவே செய்யப்பட்ட அநீதிக்கு மேலும் ஒரு அநீதி இழைக்கிற வகையிலும், பொதுமக்களையும் பெரும் அளவுக்கு புண்படுத்துகிற வகையிலும் அந்த பதில் அமைந்திருக்கிறது இதுதான் ஆளும் கட்சியின் கொள்கையாக இருக்குமானால், அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அது சட்டமன்றத்திலே இடம் பெறட்டும். இனி நாங்கள் உரிமைப்பிரச்சினையை வற்புறுத்தவில்லையென்றாலும் இந்த உரிமையை எப்படி நிலை நாட்டுவது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உணர்வு பூர்வமான பிரச்சினையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. எப்படி இருப்பினும் இந்த உரிமைப் பிரச்சினையை வற்புறுத்தவில்லை என்று எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், என்ற காரணத்தால் நான் அமைச்சரவையின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் பேசியதில் தவறான கருத்துக்கள் என்று இருக்குமானால் அதற்கு இந்த அமைச்சரவை வருத்தம் தெரிவித்துக் கொள்கிறது.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தமிழகத்தின் எல்லையோரக் கடற் பிராந்தியத்தில் இலங்கை கடற்படை போர் ஒத்திகை நடத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, கே. ஆர். சுந்தரம், என். எஸ். வி. சித்தன், ப. நெடுமாறன் ஆகியோர்,

"தமிழகத்தின் எல்லையோரப் பகுதி கடற் பிராந்தியத்தில் இலங்கை கடற்படை போர் ஒத்திகை நடத்துவதால் கடல் பகுதியில் மீன் வளம் குறைவதோடு மீனவர்கள் மத்தியில் மற்றும் பொது மக்களிடையே எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்".

என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.





திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நம்முடைய தமிழக கடற்கரைப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப்படை வருகின்ற செப்டம்பர் மாதத்தில் விமானப்படை பயிற்சிக்கான ஒத்திகை நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா விமானப் படையினர் மத்திய அரசை அணுகி, அந்த ஒத்திகை நடத்த அனுமதி பெற்றிருப்பதாகவும் சொல்லப்படுகிறது; ஸ்ரீலங்கா அரசினுடைய விமானப்படை ஒத்திகை நடத்தப்படுமானால் தமிழகத்தினுடைய கடல் வளம் மிகவும் பாதிக்கப்படும். கடலில் இருக்கிற மீன் வளம் அழிந்து போவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படும். இந்த ஒத்திகையினால் தஞ்சை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்கரை எல்லையோர மக்கள், அன்றாடம் மீன்பிடித்து வாழ்க்கை நடத்துகின்றமீனவர்கள் பெரிதும்பாதிக்கப்படுவார்கள். அந்தக் காலத்தில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

விமானப்படை ஒத்திகை நடத்தும் போது, குண்டு வீசி பயிற்சிகள் நடத்துவார்கள். அந்த குண்டு வீச்சினால் மீன்வளம் சுத்தமாக அழிந்துவிடும். அது மட்டுமல்லாமல் மீன்பிடித் தொழிலை நம்பி, கடற்கரை ஓரங்களில் வாழ்கின்ற இலட்சக் கணக்கான மீனவர்கள் பயிற்சி நடக்கும் போது மீன்பிடிக்கப் போகமுடியாது. பயிற்சிக்குப் பின் கடலிலே இருக்கும் மீன்வளம் முற்றிலும் அழிந்துவிடும் அபாயம் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு திக்கோகாஷியாவில் அமெரிக்க ராணுவத் தளம் இருக்கிறது. அந்த இராணுவத் தளத்தில் இருக்கிறவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக ஸ்ரீலங்காவில் வந்து தங்குகிறார்கள். அப்படித் தங்கக்கூடியவர்கள் ஸ்ரீலங்காவில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். இது நம்முடைய எல்லையில் பந்தோபஸ்தை பாதிப்பது மட்டுமல்லாமல் கடல் எல்லையில் ஒரு நாட்டுக்கு 150 அல்லது 200 மைல்தூரம் சொந்தமாக இருந்தாலும் நம்முடைய தமிழகம் ஸ்ரீலங்காவுக்கு மிகவும் அருகாமையில் இருப்பதால் தமிழ்நாடு மாபெரும் அபாயத்தைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஸ்ரீலங்கா நடத்தவிருக்கும் இந்த விமானப்படை ஒத்திகை பயிற்சியை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக் கிறது. அப்படித் தடுத்து நிறுத்த,நாம் உடனடியாக மத்தியஅரசை தொடர்பு கொள்ளவேண்டும். இந்த விமானப் பயிற்சி ஒத்திகை யினால் இலட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்க்கைப் பாதிக்கப் படுவதாலும், நம்முடைய கடல்வளம் முற்றிலும் அழிந்து போகும் சூழ்நிலை இருப்பதாலும், நம்முடைய எல்லை பந்தோபஸ்துக்கு பேரபாயம் ஏற்பட்டிருப்பதாலும் செப்டம்பர் மாதத்தில் ஸ்ரீலங்கா விமானப்படை நடத்தவிருக்கும் பயிற்சியை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட் டிருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி விரிவாகப் பேசவேண்டியிருப்பதால், பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, சமீபத்திலே ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது செப்டம்பர் மாதத் திலே நம்முடைய கடற்கரை எல்லையில் ஸ்ரீலங்கா விமானப் படை ஒத்திகை நடத் இருப்பதாக அந்த அறிவிப்பு கூறுகிறது. இந் முறையிலே ஒத்திகை நடைபெற்றால் அது விமானப்படை யினர் பயிற்சி ஒத்திகை என்றாலும் வறு ஒத்திகை என்றாலும் அந்த ஒத்திகையின் போது குண்டு வீசி அல்லது வேறுவகையில் ஒத்திகை நடத்தும் போது நம்முடைய கடல் பிராந்தியத்தில் மீன் வளம் குறைவது மட்டுமல்ல மல் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி கடற்பகுதியில் இருக்கிற முத்துச் சிப்பி வளர்ச்சியும் அழிந்து போகும் நிலை ஏற்படும். குண்டு வீச்சினால் மீன்வளம் வேறு இடங்களுக்கு நகர்ந்து போவது மட்டுமல்லாமல் அங்கே இருக்கின்ற முத்துச்சிப்பிகளும் வேறு இடங்களுக்கு நகர்ந்து போகும் பெரும் அபாயம் இருக்கிறது. இதனால் முத்துச்சிப்பி எடுக்கும் தொழிலாளர்கள் நிலையும் பாதிக்கப்படும். ஆக, இந்த ஒத்திகையினால் கடல் வளம் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதோடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மீனவர்கள் வாழ்க்கையும் பாதிக்கப் படுகின்ற ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுடைய நலனைப் பாதுகாக்கவும் மக்களின் நலனைப் பாதுகாக்கவும் பற்றிய முக்கியமான விஷயங்களை எல்லாம் விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு மென்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிக நுணுக்கமான பிரச்சினை. ஒரு தேசத் திற்கும் இன்னொரு தேசத்திற்கும் இடையிலே இருக்கின்ற ராஜிய உறவு சம்பந்தப்பட்ட பிரச்சினை. இங்கே தமிழக கடற்கரையிலே ஸ்ரீலங்காவைச் சேர்ந்த விமானப்படைகளும் கப்பற் படைகளும் நம்முடைய கரையோர எல்லைப் பகுதி களுக்கு உள்ளே வந்து போர் பயிற்சி செய்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக நமக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அண்மைக் காலத்திலேக் கூட இந்த மாதிரி பயிற்சி நடந்ததாக ஒரு செய்தி மீன்வளத் துறையின் துணை இயக்குநர் அவர்களாலே சொல்லப்பட்டு பிறகு நம்முடைய போர் பயிற்சி விமானங்கள் தான் அவை என்று கூட செய்தி வந்ததாக நினைவுக்கு வருகிறது. ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே இன்னொரு நாட்டின் விமானங்களும், கப்பல்களும் வரக்கூடாது என்று சட்டங்கள் இருந்தாலும் கூட ஸ்ரீலங்கா அரசால் அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பாலே தமிழக மக்களுக்கு கடலோரத்திலே இருக்கின்ற மக்களிடத்திலே ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று ....

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, இங்கே ஸ்ரீலங்கா என்று பெயர் கொண்ட கடற்படைக் கப்பல் இலங்கையைச் சேர்ந்த கப்பற்படை என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல. இந்தியாவுக்கு சொந்தமான ஸ்ரீலங்கா என்ற பெயருடைய ஒரு விமானதளம் இருக்கின்றது. ஆகவே, நம்முடைய விமானப்படையினர் நடத்தக்கூடிய ஒத்திகைதான் அது. ஆகவே ஸ்ரீலங்காவிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வானொலி செய்தியை நம்பித்தான் மற்ற செய்திகளைக் கொடுக்க முடியும். ஸ்ரீலங்காவின் விமானப்படை ஒத்திகை நடத்துகிறது என்று வானொலி அறிவித்தது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே' வானொலியின் செய்திகளைத் தொடர்ந்து கேட்கவேண்டும். வருந்துகிறோம் என்றும் அப்புறம் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது தவறான கருத்தின் மீது ஏற்பட்ட பிரச்சினை. இதன் மீது விவாதத்தைத் தொடர விரும்ப வில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான பதிலை அளித்து விவாதத்தை முடிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் "காமெடி ஆஃப் எரர்" என்ற அடிப்படையில் வந்ததுதான். உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்ய அவர்கள் சொல்லிய தும் மற்றவர்கள் சொல்லியதும் உண்மைதான். இதன் முழு விவரங்களையும் சொல்லிவிட்டால் நல்லது. பத்திரிகையிலே எந்த அளவுக்கு செய்திகள் வருகின்றன என்பது தெரிகிறது. ஆனால் பத்திரிகையிலே வருகின்ற செய்திகளை வைத்துத்தான் உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் பேசியதிலும் தவறு இல்லை. ஆகவே இது சம்பந்தமான உண்மை நிலையினை நான் விளக்க விரும்புகிறேன்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழகத்தின் எல்லையோர கடற்கரைப் பகுதியில் போர் பயிற்சி நடத்தப் போவது பற்றி கடிதம் எதையும் யாருக்கும் அனுப்பவில்லை. 30-4-81 நாளிட்ட கடிதத்தில் மைய அரசு சூர்யலங்கா விமானப் படையினர் (இந்திய விமானப் படையினரின் பிரிவு) 1981–82 ஆம் ஆண்டிற் கான காம்பாட் ஸ்குவாட்ரன்ஸ் பயிற்சியினை 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முடிய நடத்தப் போவதாக உள்ள நிகழ்ச்சியினை தமிழ்நாடு அரசு பொதுத்துறை (படைத்துறை) க்கு அனுப்பியது. தமிழ்நாடு அரசு பொதுத்துறை (படைத்துறை) 23-5-81 நாளிட்ட கடிதத்தில் இந்நிகழ்ச்சி பற்றி தேவையான அறிவுரையை

எல்லா துறைமுக அலுவலருக்கும் வழங்கும்படி சென்னை மாநில துறைமுக அலுவலரைக் கேட்டுக் கொண்டது. அக் கடிதத்தின் நகல் ஒன்று மீன்துறைக்கும் வரப்பெற்றது.

சூர்யலங்கா விமானப் படையினர் கடலில் பயிற்சி நடத்தப் போகும் நிகழ்ச்சியினை சம்பந்தப்பட்ட மீன்துறை சார்பு அலுவலருக்கும் அனுப்புவதற்கு முன்னர், சூர்யலங்கா எங்குள்ளது என்பது தெரியாததால் இது குறித்து தாம்பரம் விமானப்படை அலுவலகத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்ததில், இது படைத்துறையின் ரகசியமான விடயம் என்று கூறிவிட்டார். எனவே, அரசிடமிருந்து பெறப்பட்ட கடிதம் 1–6–81–ல் மீன்துறை இயக்குநரால் கடலோர எல்லா மீன்துறை உதவி இயக்குநர்கள் மற்றும் மண்டல மீன்துறை இயக்குநர்களுக்கும் உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

மீன்துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தின் நகலை, இராமநாதபுரம் மீன்துறை உதவி இயக்குநர் இராமேஸ்வரம் (அண்மைக் கடல் மீன்பிடி நிலையம்) மீன்துறை உதவி இயக்குநருக்கும் அனுப்பியுள்ளார். சூர்யலங்கா விமான படையினர் போர் பயிற்சி நடத்தப் போவதை, ஸ்ரீலங்கா விமானப் படையினர் இராமேஸ்வரத்தில் பயிற்சி நடத்தப் போகிறார்களென தவறாகக் கருதி இராமேஸ்வரத்தில் பயிற்சி மீன்துறை உதவி இயக்குநர் இராமேஸ்வரத்திலுள்ள மூன்று மீனவர் சங்கத் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பி, ஸ்ரீலங்கா விமானப்படையினர் இத்தீவை சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பிடப்பட்ட தேதிகளில் குண்டு போட்டு பரிசோதனை செய்ய எண்ணியுள்ளதால், அத்தேதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் எனவும் இவ்விடயத்தை தண்டோரா மூலம் மீனவர்களுக்கு அறிவிக்க வேண்டுமெனவும் தனது 17-7-81 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து இலங்கை கடற்படையினர் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் பயிற்சி நடத்துவதால் இராமேஸ்வரம் பகுதியிலுள்ள மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அதனால் அப்பயிற்சியினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் முறையீடு செய்தனர். இது சம்பந்தமாக இராமநாதபுரம் கோட்ட வருவாய் அலுவலர் 3–3–81 அன்று இராமேஸ்வரத்தில், துறைமுக அலுவலர், மீன்துறை அலுவலர் மற்றும் மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியவர்களை அழைத்து கூட்டம் நடத்தினார். அக்கூட்டத்தின் போது, துறைமுக அலுவலர்கள், சூர்யலங்கா விமானப்படை ஆந்திரா மநிலத்தில் உள்ளதெனவும் மற்றும் அது இந்திய விமானப்படையை சேர்ந்தது என்றும், அப்படை 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நடத்தப் போகும் விமானப் போர் பயிற்சி சென்னைக்கு வடக்கே வெகுதூரத்தில் நடைபெறப் போவதாகும் என்றும் தெளிவுபடுத்தினர். எனவே



இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரம் கடற்பகுதியில் பயிற்சி நடத்த போகிறார்கள் என்று அறிவித்தது தவறு என்பதை உணர்ந்து, உடனடியாக இராமேஸ்வரம் மீனவா சங்கங்களுக்கு முன் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு திருத்தம் ஒன்று 8–8–81-ல் வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் மேற்கண்ட தவறுக்கு வருத்தமும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சூர்யலங்கா விமானப்படை ஆந்திரா மாநிலத்தில் உள்ளது. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை நடத்தப்போகும் பயிற்சி சென்னைக்கு வடக்கே வெகுதூரத்தில் நடைபெறப்போவதென்றாகும். எனவே, இதனால் தமிழ்நாடு கடற்கரை பகுதியின்கண் மீன் வளம் எவ்வகையிலும் குன்றாது மீன்பிடிப்பு பாதிக்கப்படாது மீனவர்கள் பாதிக்கப்பட வேண்டிய அவசியமும் இல்லை. பதட்ட நிலையும் உருவாக காரணமில்லை. என்று தெளிவாக அறிக்கை கூறியிருக்கிறது. தவறாக செய்திகள் வெளிவந்ததின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டதே தவிர, வேறல்ல என்று கூறி, இதன் காரணத்தினால் சட்டப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### அ. சென்னை குடிசைப் பகுதிகளில் குடிதண்ணீர் தொட்டிகள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளில் குடிநீர் வாரியம் குடிதண்ணீர் தொட்டிகள் அமைக்க வேண்டிய அவசியம் பற்றி" திருவாளர்கள் சு. பாலன், எல். இளையபெருமாள் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இந்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன்: துணைத் தலைவர் அவர்களே, 'சென்னையில் குடிநீர் தட்டுப்பாடும், குடிநீர் வடிகால் வாரியம் நகரில் குடிநீர் வழங்கும் முறையை சரியாக நிறைவேற்றாததும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

## அறிக்கை

1980-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழலேரி ஆகிய மூன்று ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் குறைவாக பெய்ததை மாண்புமிகு அங்கத்தினர்கள் அறிவார்கள். இம்மூன்று ஏரிகளின் மொத்த கொள்ளளவு 6,483 மி. க. அடிகளாகும். ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில் மூன்று நீர்த்தேக்கங்களும் நிறைந்து இருந்தால், 13 மாத காலத்துக்கு நாள் ஒன்றுக்கு 50-லிருந்து 55 மில்லியன் காலன் என்ற அளவில் விநியோகம் செய்ய இயலும்.

1-1-1980-ல் மூன்று ஏரிகளிலும் மொத்தக் கொள்ளளவு 6,332 மி. க. அடிகளாக இருந்தது. ஆனால் 1-1-1981-ல் 3,731 மி. க.அடி தண்ணீருடன் 1981ஆம் ஆண்டு தொடங்கியது. எனவே, 1-1-81 ஜனவரி மாதத்தில் கையிருப்பில் இருந்த நீரின் கொள்ளளவை மனதில் கொண்டு அடுத்த மழை வரும் வரை இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்த பலதரப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சென்னை நகரின் குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க முன்னெச்சரிக்கையாக ரூ. 96.61 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று ஏப்ரல் மாதத்தில் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தால் வரையப்பட்டது. இத்திட்டத்தில் சென்னை நகரில் 3,000 புது குழாய் கிணறுகள் அமைத்தல். ஏற்கனவே இருந்த 2,000 குழாய்க் கிணறுகளைப் புதுப்பித்தல், பழைய பொது கிணறுகளை தூர் எடுத்தல், புதுக் கிணறுகள் தோண்டுதல் முதலிய நடவடிக்கைகளோடுகூட சென்னை நகருக்கு வெளியில் அமைந்துள்ள தாமரைப்பாக்கம்,பஞ்செட்டி பகுதிகளில் நிலத்தடி நீரை அதிக அளவில் இறைத்து சென்னை நகருக்கு குடிக்க வழங்குவது போன்ற நடவடிக்கைகளும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டன. இத்திட்டத்திற்கு இவ்வரசு ஒப்புதல் அளித்து முதற்கட்டமாக ரூபாய் 50 லட்சம் மான்யமாகவும் வழங்கியுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் மே மாதம் தொடங்கி ஜூலை மாதம் முடிய 1,280 புதுக் குழாய்க் கிணறுகள் நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 2100 பழைய குழாய்க் கிணறுகள் பழுது பார்த்து புதுப்பிக்கப்பட்டு பொது மக்களின் உபயோகத்தில் உள்ளன. 397 கிணறுகள் தூர் வாரப்பட்டு தயார் நிலையில் உள்ளன. புதிதாக பெரிய கிணறுகள் நகரின் பல இடங்களில் தோண்டப்பட்டன. இக்கிணற்று நீரும் பொது மக்களின் தேவைகளை பெருமளவு பூர்த்தி செய்யும்,



ஊற்று நன்றாக உள்ள கிணறுகளில் டீசல் பம்புகள் பொருத்தி தண்ணீரைத் தொட்டிகளில் நிரப்பிப் பொதுக் குழாய்கள் மூலம் வழங்க புதிதாக 20 டீசல் பம்புகள் வாங்கப்பட்டு ஆங்காங்கே பொருத்தப்பட்டு வருகின்றன.

நகரில் எல்லைப் பகுதிகளில் (tail end areas) குடிநீர் குறைவாக கிடைக்கும் இடங்களிலும், எளிய மக்கள் வாழும் இடங்களிலும் குடிநீர் வசதி செய்ய லாரிகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது ஏற்கனவே உள்ள 28 குடிநீர் லாரிகளுடன் நான்கு புதிய லாரிகள் வாங்கி இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட இடங்களில் எஃகு தொட்டிகளும், சிமெண்ட் தொட்டிகளும் அமைத்து லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. 1-4-81 முதல் 31-7-81 வரை புதிதாக 59 தொட்டிகள் நகரின் பல பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் புதிதாக 100 இரும்பு தொட்டிகள் வைக்க ஆயத்த நிலையில் வாரியம் இருக்கிறது. இத்தொட்டிகள் தேவைக்கேற்ப நகரின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்படும். இவற்றில் குடிநீர் நிரப்ப மேலும் மூன்று லாரிகள் தயாராகியுள்ளன. மேலும் 7 லாரிகளில் தொட்டி steel tanks கட்டப்படுகின்றன.

1981 ஆம் ஆண்டு கோடை மாதங்களிலும் எதிர்பார்த்த அளவு ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யவில்லை. பூண்டி, சோழவரம் ஆகிய ஏரிகளில் இருந்த நீர் அனைத்தும் மே மாதத்திற்குள்ளாக புழலேரிக்குக் கொண்டுவரப்பட்டது. மதகு மட்டத்துக்கு கீழே இருந்த சோழவரம் தண்ணீரும் பெரிய இறவைப் பம்புகள் மூலமாக இறைக்கப்பட்டு புழலேரிக்கு கொண்டு வரப்படுகிறது.

ஏரி நீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் சென்னை நகரின் தேவையைப் பூர்த்தி செய்ய நிலத்தடி நீரையும் பயன்படுத்த தீர்மானம் செய்யப்பட்டது. சென்னைக்கு வடக்கேயுள்ள தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மிஞ்சூர் பகுதிகளிலிருந்து வறட்சிக்கு முன் மணலி பகுதியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு சுமார் 12 மில்லியன் காலன் நீர் வழங்கப்பட்டு வந்தது. இந்தப் படுகையிலிருந்து அதிக அளவு நிலத்தடி நீரை இறைத்து சென்னைக்கு வழங்க கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) மணலியிலிருந்து வடசென்னை அண்ணா பூங்கா நீர் வழங்கு நிலையத்திற்குநிலத்தடி நீர் கொண்டு வர ரூ. 121 லட்சம் செலவில் வார்ப்பு இரும்பு குழாய்கள் போடும் பணி துரிதப்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டு குழாய்களில் தண்ணீர் பாய்ச்சி சுத்திகரிக்கும் பணி நடந்து வருகிறது. இதன் மூலம் நாளொன்றுக்கு 4 மில்லியன் காலன் நிலத்தடி நீரை தாமரைப்பாக்கம் குழாய் கிணறுகளிலிருந்து வடசென்னைக்கு கொண்டு வந்து வழங்க முடியும்.

(2) பஞ்செட்டிப் பகுதியில் மேலும் 3 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டும் பணி நடந்து வருகிறது.

(3) நிலத்தடி நீர் இறைக்க புதிதாக 50 குதிரைத் திறன் 15 பம்புகள் வாங்கப்படுகின்றன.

(4) நிலத்தடி நீர்க் கிணறுகளிலிருந்து நீரை எடுக்க நாள் முழுவதும் மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கப்பெற வேண்டும். இதற்காக 60 கே.வி.ஏ. திறன் கொண்ட 10 டீசல் மின் உற்பத்தி சாதனங்கள் வாங்கிப் பொருத்தப்பட்டுள்ளன.

இப்பணிகளின் மூலம் மொத்தம் 8 முதல் 10 மில்லியன் காலன் நிலத்தடி நீர் சென்னைக்கு கொண்டு வரப்படுகிறது.

1-8-81ல் நீர்த்தேக்கங்களில் இருந்த மொத்த குடிநீர் அளவு 813 மில்லியன் கன அடி ஆனால் சென்ற ஆண்டில் இதே நாளில் 2038 மில்லியன் கன அடி நீர் இருந்தது. குடிநீர் சாதாரண காலத்தில் நாளொன்றுக்கு 52 மில்லியன் காலன் என்ற அளவில் வழங்கப்படுவது வழக்கம். இதற்கு பதிலாக ஜூலை மாதம் முதல் வாரத்திலிருந்து சுமார் 45 லிருந்து 42 மில்லியன் காலன் நாளொன்றுக்கு வழங்கப்படுகிறது. இதில் 35 மில்லியன் காலன் ஏரிநீரிலிருந்தும் 8 முதல் 10 மில்லியன் காலன் நிலத்தடி நீர்க் கிணறுகளிலிருந்தும் வழங்கப்படுகின்றன.

கடந்த மாதத்தில் அவ்வப்போது பெய்த சிறுமழையின் காரணமாக சுமார் இரண்டு வாரங்களுக்கு வேண்டியகுடிநீர் பூண்டி சோழவரம் நீர்த்தேக்கங்களில் சேர்ந்துள்ளது. பூண்டியில் தேங்கிய சிறிதளவு நீர்கூட சோழவரம் ஏரிக்கு கொண்டு வரப்பட்டது. சோழவரம் ஏரியில் மழையில் கிடைத்த தண்ணீரை டீசல் பம்புகள் மூலம் இறைத்து தொடர்ந்து புழலேரிக்கு கொண்டு வரப்படுகிறது.

ஜனவரி முதல் தேதியன்று சாதாரணமாக இருக்கும் தண்ணீரில் சுமார் 60% தண்ணீரோடு இந்த ஆண்டைத் தொடங்கி 8 மாதங்கள் சமாளித்த பிறகு இன்னும் 700 மில்லியன் கன அடி நீர்த்தேக்கங்களில் உள்ளன, நிலத்தடி நீரையும், குழாய் கிணறுகளையும் மற்ற கிணறுகளையும் பயன்படுத்தியே இதுகாறும் சமாளித்து வந்துள்ளோம். இனி பருவ மழை பெய்யும் வரையுள்ள இருமாதங்களையும் சமாளிக்க இயலும். நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒரு பெரிய மழை பெய்தாலும் சாதாரண நிலைமை எட்டிவிட இயலும்.

செப்டம்பர் மாத இடைவரை நல்ல பலத்த மழை பெய்து நீர்த்தேக்கங்களில் நீர் வரவு ஏற்படாவிடில் செப்டம்பர் மாத மத்தியில் சென்னை நகருக்கு 1974 ல் செய்தது போல் குடிதண்ணீர் ஒன்றுவிட்டு ஒருநாள் வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறு நேர்ந்தால் குடிநீர் ஒரு நாள 40 மில்லியன் காலனும் மறுநாள் (பெருங்குழாய்களில் ஓரளவு அழுத்தம்



இருக்கும்படி) 10 மில்லியன் காலனாகவும் வழங்கப்படலாம். அந்த நிலைமையையும் சமாளிக்க கீழே கூறப்பட்ட பணிகள் தற்போதிருந்தே தொடங்கப்பட்டு விட்டன:—

(1) மேலும் 2,000 குழாய்க் கிணறுகள் அமைத்தல்

(2) மேலும் 50 புது பொதுக் கிணறுகள் அமைத்தல்

(3) தண்ணீர் தட்டுப்பாடுள்ள பகுதிகளில் சுமார் 100 இரும்புத்தொட்டிகள் வைத்து புது லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குதல்.

இப் பணிகள் மூலம் அடுத்த நவம்பர் மாத பருவமழை வரும் வரை நெருக்கடி நிலையை சமாளிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையினைச் சமாளிக்க சென்னை மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது.

Tail end areas என்று சொல்லப்படுகிற கடைமுனைப் பகுதிகள் அவ்வப்பொழுது நெருக்கடிக்குள்ளானபோது லாரிகள் மூலமும் தொட்டிகள் மூலமும் தண்ணீரை அனுப்பி கவனித்து ஆவன செய்யப்படுகிறது இந்தப் பற்றாக்குறை நிலையிலும் இருக்கும் தண்ணீரை வைத்து மற்ற பகுதிகளில் நல்ல முறையில் குடிதண்ணீர் விநியோகம் செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது. எனவே இன்னும் இரண்டு மாதங்களில் பருவமழை வரும் வரை, நிலைமையைச் சமாளிக்க பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என மாண்புமிகு சட்ட பேரவை உறுப்பினர் மூலமாக வேண்டிக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த நீண்ட அறிக்கையை பார்க்கிறபோது, தமிழகத்திலே அதுவும் நம்முடைய சென்னையிலே வாழ்கிற குடிசைவாழ் மக்கள் பகுதியானாலும் சரி, மற்ற பகுதியிலே வாழ்கிற மக்களானாலும் சரி, அவர்களுக்கு எவ்வளவு சிறப்பான முறையிலே குடி தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது என்று நினைத்து பெருமிதம் கொள்ளக்கூடிய நிலைமையிலே இந்த அறிக்கையிலே விவரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் நிலைமைகளையெல்லாம் பார்க்கிறபோது, மழை பெய்த காலத்தில் குடிநீர் வடிகால வாரியம் சென்னை மக்களுக்கு நாள் தோறும் 50லிருந்து 55 மில்லியன் காலன் குடிதண்ணீர் வினியோகிக்கப்பட்டதாக தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாக சுருக்கமாகக் கேளுங்கள். நீண்ட உரையாகப் பேசிக் கொண்டே போகவேண்டாம்,

திரு. சு. பாலன் : ஆனால் இன்றையதினம் 43 மில்லியன் காலன் தண்ணீர் தான் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையை பார்க்கிறபோது, சென்னை வாழ் மக்களுக்கு, அதிலும் குறிப்பாக எல்லைப் பகுதிகளில், குடிதண்ணீர் குறைவாக கிடைக்கும்

இடங்களில், ஏழை மக்களுக்கு குடிதண்ணீருக்கென 50 தொட்டி கள் தான் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அத்தனை மக்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க என்னுடைய தொகுதியில் வியாசர்பாடி, பெரம்பூர், புளியந் தோப்பு பேசின்–பிரிட்ஜ் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இதுவரை ஏன் குடிதண்ணீர் தொட்டிகள் வைத்து சப்ளை செய்யவில்லை என்று கேட்கவிரும்புகிறேன்? அது மட்டும் அல்ல.

(முற்பகல் 11-00)

இன்றையதினம் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமாக இருந்த எங்க தொட்டிகளை மதுரையில் நடந்த மாநாட்டுக்கு எடுத்துச்சென்றார்கள். ஏறத்தாழ 75 தொட்டி களுக்கு மேல் எடுத்துச் சென்று இதுவரை அவை திருப்பப் படாமல் இருக்கின்றன. அங்கேயே அவை தேங்கிக் கிடக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும், அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் "சரியாக நிறைவேற்றாததும் குறித்து" என்றிருக் கிறது. என்னென்ன முறைகளில் தண்ணீர் வழங்கப்பட்டு வரு கிறது என்பதுபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். 50 இலட்சம் ரூபாய் செலவு செய்து 1289 குழாய்க் கிணறுகள் போட்டிருக் கிறார்கள். 2700 பழைய குழாய்க் கிணறுகள் பழுது பார்த்து புதுப்பிக்கப்பட்டு பொது மக்களின் உபயோகத்தில் உள்ளன. 397 கிணறுகள் தூர் வாரப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இன்னும் வறட்சி ஏற்படுமானால் அதிலிருந்து தண்ணீர் எடுக்க. புதித க ஐம்பது பெரிய கிணறுகள் நகரில் தோண்டப்பட்டன. இந்தக் கிணறுகளின் நீர் பொது மக்களின் தேவையை பெருமளவு பூர்த்தி செய்யும். இப்படி பல்வேறு ஏற்பாடுகளைச் செய்திருக் கிறோம். 32 லாரிகள் தண்ணீர் கொண்டு போய் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு தயாராயிருக்கின்றன. மேலும் 7 லாரி களில் தொட்டி (ஸ்டீல் டாங்க்ஸ்) கட்டப்படுகின்றன. இப்படி பல்வேறு முயற்சிகள் நடைபெறுகின்றன.

மழை பெய்யவில்லை. அப்படி மழை பெய்யாமல் இருந்தும் கூட நாங்கள் 45 மில்லியன் காலன் தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அடுத்த மாதம் 15ம் தேதி வரை கொடுக்க என்னென்ன செய்யமுடியுமோ, அத்தனையும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

பஞ்செட்டிப் பகுதியில் மேலும் மூன்று ஆழ்துளைக்கிணறுகள் தோண்டும் பணி நடந்து வருகிறது. நிலத்தடி நீர் இறைக்க புதிதாக 50 குதிரைத்திறன் கொண்ட பத்து பம்புகள் வாங்கப் படுகின்றன. நிலத்தடி நீர்க் கிணறுகளிலிருந்து நீரை எடுக்க நாள் முழுவதும் மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கப்பெற வேண்டும். இதற்காக 60 கே. வி. ஏ. திறன் கொண்ட பத்து



டீசல் மின் உற்பத்திச் சாதனங்கள் வாங்கிப் பொருத்தப் பட்டுள்ளன. இவ்வளவும் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் குடிநீர் வடிகால் வாரியம் எதைச் செய்யத் தவறிவிட்டது என்று சொன்னால் திருத்திக் கொள்ளத் தயார். அவர்களிடமிருந்து புது ஆலோசனைகள், இதைச் செய்தால் அதிகத் தண்ணீர் கொடுக்கலாம் என்று சொன்னால் அதையும் இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் குறிப்பாக இரண்டு இடங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். 4–8–1980 அன்று சேத்துப்பட்டு, மங்கலாபுரம், சிவராஜ்நகர், மீனாம்பாள் நகர் போன்ற இடங்களில் தீயால் பாதிக்கப்பட்ட பைப்கள் சுத்தம் செய்யப்படாமல், தூர் எடுக்கப்படாமல் இருப்பதால், அந்தப் பைப்கள் பல உடைந்திருப்பதாலும் அந்தப் பகுதி மக்கள் தண்ணீர் இல்லாமல் வாடுவது அரசுக்குத் தெரியுமா? அற்காக அவற்றைச் சரிப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

அதேபோல் ஆயுதந்தாங்கிய போலீஸ், நகரப் போலீஸ் குடியிருப்புப் பகுதிகளில் இதுவரையில் உடைக்கப்பட்ட பைப்கள் ரிப்பேர் செய்யப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு கேள்விகள் போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கவன ஈர்ப்புத் தீர் மானத்தை நான் மீண்டும் படிக்கிறேன். "சென்னையில் குடிநீர் தட்டுப்பாடும், குடிநீர் வடிகால் வாரியம் நகரில் குடிநீர் வழங்கும் முறையை சரியாக நிறைவேற்றாததும் குறித்து" என்றிருக்கிறது. சரியாக எங்கே நிறைவேற்றப்படவில்லை? இருக்கிற தண்ணீரை எங்கே கொண்டுபோய் பாழாக்கி விட்டோம்? தண்ணீரை வைத்துக் கொண்டு ஸ்டோர் செய்து வைத்துக் கொண்டு கொடுக்காமல் இருக்கிறோமா? சரிவர நிறைவேற்றவில்லை என்று சொல்கிறார்கள், அது ஒரு குற்றச்சாட்டு. இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். செய்திருக்கிற ஏற்பாடுகள் பூராவையும் படிக்க நேரமாகும் என்பதால்தான் அதை ஒரு அறிக்கையாக கொடுத்திருக்கிறோம். நிலத்தடி நீரை ரெடியாக வைத்திருக்கிறோம். கிணறுகளை தோண்டி வைத்திருக்கிறோம். 55 மில்லியன் காலன் என்பதை 45 ஆகக் குறைத்திருக்கிறோம், ஸிட்டி லிமிட்டுக்குள்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 ஆகஸ்ட் 27

போதிய குடிதண்ணீர் கொடுப்பதற்கு கிணறுகள் தோண்டித் தயாராக வைத்திருக்கிறோம். எனவே, வேண்டியதை செய்து வைத்திருக்கிறோம். சென்னையைக் குறிப்பிட்ட அளவில், தண்ணீர் எங்கே வரவில்லை, போதவில்லை என்று சொன்னால் அங்கே மேலும் ஒரு டாங்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம், இப்போது மேலும் 7 லாரிகள் புதியதாக வாங்கி தயாராக வைத்திருக்கிறோம். நாங்கள் வசதிகள் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறோம். நான் சொல்வது, That is an allegation; இது அலிகேஷன். இன்ன குறிபிட்ட இடத்தில் வேண்டுமென்றுசொல்லுங்கள், இங்கே தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள் இதற்கு என்னிடம் நேராகச் சொன்னாலே போதும்; இதற்கு ஒரு கால் அட்டென்ஷன் மோஷன் தேவையில்லை. அரசு இவ்வளவு தண்ணீரை, இந்த இந்த இடங்களிலே சென்னையிலே கொடுக்கிறது என்பதை கலெக்டிவ்வாக சொல்லி இருக்கிறோம். இன்ன பகுதியிலே இன்ன அலிகேஷன் என்பதை குறிப்பாகச் சொல்லுங்கள்.

திரு. எல், இளையபெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலிலேயே நீங்கள் சொல்லிவிட்டீர்கள். கவன ஈர்ப்புக்கு இதற்கு மேல் நேரம் ஒதுக்க முடியாது.

திரு. எல். இளையபெருமாள்: I am sorry. I am requesting you: It is an allegation against the Member. I have got a right to reply.

MR. DEPUTY SPEAKER: No. The hon. Member has no right to reply. He can only ask the question.

THIRU. L. ELAYAPERUMAL: It is the duty of the Member who gave the Calling Attention motion, to reply. The Government have failed to do justice to the people. That is my point.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசின் கவனத்தை ஈர்க்கலாம்; விவாதமாகப் பேசக் கூடாது.

திரு. எல். இளையபெருமாள்: ஐ ஆம் சாரி. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் — எங்கே தண்ணீர் வரவில்லை, குறிப்பிட்ட இடத்தைச் சொல்லுங்கள் என்று சொன்னார். நான் சொல்கிறேன் — ஆயுத போலீசார் வசிக்கும் இடத்தில் தண்ணீர் வரவில்லை என்று, அரசாங்கத்திற்கு ஒரு வருஷமாகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. கமிஷனரிடமும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையிலே அங்கே தண்ணீர் வரவில்லை. ஆகவே கடைசி ஆயுதமாக இந்த அவையின் முன்கேட்கிறேன்.



1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்கிற கேள்விக்கு மட்டும் குறிப்பாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். அதற்கு மாறாகச் சொன்னால், உறுப்பினர்களுக்கு நான் வாய்ப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னுடைய பதிலிலேயே நான் சொல்லியிருக்கிறேன். எந்தவிதமான முறைகேடும் நடக்கவில்லை. மாறாக, இந்த சென்னை நகரிலே குடிநீர் பஞ்சமே தெரியாத அளவுக்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு அரசு தேவையான பணத்தைக் கொடுத்திருக்கிறது. இன்னும் இதற்குத் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் தயாராக செய்து வைத்திருக்கிறோம். வறட்சி வந்தாலும் சமாளிப்பதற்கு கிணறுகளைத் தோண்டி வைத்திருக்கிறோம்; பம்புகள் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிபிட்ட இடத்தில் தண்ணீர் தட்டுப்பாடு, வரவில்லை என்று சொன்னால் போதும்; இதற்கு கால் அட்டென்ஷன் தேவையில்லை. என்னிடம் சொன்னாலே போதும்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப் பற்றி அமைச்சரிடம் எழுதிக் கேளுங்கள்; அவையின் நேரத்தை இம் மாதிரி வீணாக்க முடியாது.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் எங்கே தண்ணீர் வரவில்லை என்று கேட்டார். ஆயுத போலீஸ் குடியிருப்பிலே தண்ணீர் வரவில்லை என்று சொல்கிறேன். அது உண்டா, இல்லையா என்று சொல்லட்டும். எங்களுக்கு அர்த்தம் தெரியாத மாதிரி அமைச்சர் அவர்கள் கேட்பது சரியல்ல. (குறுக்கீடு)

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு அர்த்தம் புரியாமல் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் போன்ற பெரியவர்கள் கூறுகிறார்கள். அவர்களை விட நான் ஏழு வயது மூத்தவன். சபையில் உள்ள அனைவரிலும் வயதில் நான் மூத்தவன். வயதுக்கு கொஞ்சம் மரியாதை கொடுங்கள். தண்ணீர் வழங்கும் முறை சரியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொன்னேன். வழங்கும் முறையில் தவறிவிடவில்லை. குறிப்பிட்ட இடத்தில் தண்ணீர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். சென்னையிலுள்ள 180 டிவிஷன்களில் ஏதாவது ஒரு இடத்தில் தண்ணீர் வரவில்லை என்று என்னை போன் மூலம் கூப்பிட்டுச் சொன்னால் கூட ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறேன். சிஸ்டத்தைப் பொறுத்தவரை இருக்கிற தண்ணீரை மேனேஜ் பண்ணி, சிறப்பாக மானேஜ் பண்ணி விநியோகிக்கட பட்டு வருகிறது. நவம்பர் வரையில் தண்ணீர் கொடுப்பதற்கு எல்லாவிதமான அரேஞ்மென்ட்சும் செய்திருக்கிறோம் என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. சு. பாலன்:** நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிதண்ணீர் கிடைக்காத பகுதிகளில் தொட்டிகள் வைத்து தண்ணீர் கொடுப்பதாக சொன்னார்கள். என்னுடைய பகுதியில் எந்த இடத்திலும் தொட்டிகள் வைக்கப்படவில்லை. தொட்டிகள் இல்லையென்றும் அவை மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன என்றும் அதிகாரிகள் செ ல்லுகிறார்கள். இது உண்மையா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** எந்தெந்த இடங்களுக்குத் தொட்டி வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோமோ அங்கே தொட்டிகள் வைத்து நாங்கள் தண்ணீர் தருகிறோம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் அங்கே இருக்கிற மக்களுக்குத் தொட்டி வைத்து தண்ணீர் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று சொல்வார்களானால் நிச்சயமாகப் பரிசீலனை செய்வோம். இன்றைக்கு ஈவ்னிங்கே ஆன் தி ஸ்பாட் இன்ஸ்பெக்ஷன் வைத்து தொட்டிகள் வைக்க ஏற்பாடு செய்கிறேன்.

## ஆ. மதுரை மாவட்டம், ஆயக்குடி குடிநீர்த் திட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "மதுரை மாவட்டம் ஆயக்குடி குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படாதது குறித்து" திருவாளர்கள் என். பழனிவேல், எம். செல்லமுத்து ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர்இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. என். பழனிவேல்;** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் —

> "மதுரை மாவட்டம் ஆயக்குடி குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படாதது குறித்து"

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்;** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

மதுரை மாவட்டத்திலுள்ள ஆயக்குடி பேரூராட்சி ஒரு முதல்தர பேரூராட்சியாகும். அப்பேரூராட்சியில் ஆறு கிராமங்கள் உள்ளன. மக்கட்தொகை 20,632. (1971 கணக்கெடுப்பின் படி) 2006-ல் மக்கட்தொகை 40,000 இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது புதிய மற்றும் பழைய ஆயக்குடி கிராமங்களுக்குத் திறந்தவெளிக் கிணறுகளிலிருந்து நீர் எடுத்து மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பி பொது நீரூற்றுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இக்கிணறுகளில் கடும் கோடையின்போது நீர்வற்றி விடுவதும் உண்டு. ஆகையால் ஆயக்குடி பேரூராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அவசியமாயிற்று.



மதுரை மாவட்டம் ஆயக்குடி பேரூராட்சிக்குக்கு வரதமாநதி அணையில் இருந்து குடிநீர் கொண்டு வர ரூ. 39.30 இலட்சம் செலவில் திட்டம் அமைக்கவும் ஆண்டு பராமரிப்புக்காக ரூ. 1.00 இலட்சம் செலவு செய்யவும் அரசு 25-1-1980-ம் தேதிய அரசு ஆணை எண் 143 (ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையில் நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை இத்திட்டத்திற்குத் தேவையான பொருள்கள் சேகரிக்கப்பட்டு, திட்டத்திலுள்ள 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத் திட்டத்திற்கு 1980-81ம் ஆண்டில் ரூ. 26.26 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் ரூ. 6.25 இலட்சங்கள் செலவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 50 லிட்டர் தண்ணீர் கிடைக்கும்.

தமிழ்நாட்டில் இவ்வாண்டில் நிலவிய வறட்சியின் காரணத்தினால் இத்திட்டத்திற்குத் தேர்ந்தெடுத்துள்ள தலைமைப் பணியிடத்திலும் (வரதமாநதி) வரதமாநதி நீர்த்தேக்கத்திலும் தண்ணீரின் அளவு குறைவாக இருந்து வருகிறது. எனவே இது குறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த போது பாலார் பரந்தலார் நீர்த் தேக்கத்தை இத்திட்டத்திற்குப் பயன்படுத்தலாம் என்று கூறியதின் பேரில் தற்போதைய தலைமையிடம் மற்றும் மேற்கண்ட பாலர் பரந்தலார் நீர்த் தேக்கம் முதலியவைகள் பற்றிய விவரங்கள் சேகரிப்பு பணி நடைபெற்று வருகிறது. இதனால் திட்டம் செயல்படுத்துவதன் வேகம் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பதிர்மானக் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகளைத் துவங்கி விரைவில் முடிக்க களப்பணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். தலைமைப் பணியிடம் முடிவு செய்தபின், மற்றைய அனைத்துப் பணிகளையும் விரைவில் முடிக்கததக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்திற்குத் தலைமைப் பணியிடம் முடிவு செய்யவும் பணிகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. என். பழனிவேல்:** இந்த ஆயக்குடி குடிநீர்த் திட்டம் பற்றி விவர அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அதிலே சொல்லப்பட்ட விஷயங்கள் முழுவதும் உண்மை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் பிரச்சினை என்னவென்றால் வறட்சி ஏற்பட்டு ஓராண்டு காலமாக முப்பதாயிரம் மக்கள் வசிக்கக் கூடிய பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் வசதி இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், திறந்தவெளிக் கிணறுகளில் இருந்து மேல்நிலைத் தொட்டிகளில் நீரை ஏற்றி ஊர் மக்களுக்கு சப்ளை செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மேல்

நிலைத் தொட்டியில் கடந்த ஓராண்டுக் காலமாகத் தண்ணீர் இல்லை. முப்பதாயிரம் மக்கள் வசிக்கக் கூடிய அந்தப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்க 40 இலட்சம் ரூபாயில் வரதமா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரத் திட்டம் தயாரித்தார்கள். இப்போது வரதமா நதியில் தண்ணீர் இல்லை. பாலார் பொரந்தலார் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்போதே 20 மாதங்கள் ஆகிவிட்டன. அமைச்சர் பெருமக்கள் வந்து அடிக்கல் நாட்டி ஓராண்டு காலம் ஆகிவிட்டது. தலைமையிடத்தைப் மாற்றுவதின் மூலம் மேலும் ஓராண்டு ஆகிறது என்று வைத்துக் கொண்டால் அந்தப் பகுதி மக்கள் நிலை என்ன ஆவது? 1982 மார்ச் 31-ம் தேதிக்குள்ளாக திட்டத்தை நிறைவேற்றி அந்தப் பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் சப்ளை செய்ய அரசு உடனடியாக அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்வன திருந்தச் செய் என்று சொல்வார்கள். வரதமா நதித் திட்டம் என்ற அடிப்படையில் குடிநீர் அங்கிருந்து கொண்டுவர 39.30 லட்சம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் வரதமா நதி நீர்த்தேக்கத்திலே தண்ணீர் அளவு குறைவாக இருந்து வருகிறது. குறைவாக இருக்கிற இடத்திலே இருந்து திட்டத்தை ஆரம்பித்தால் பிறகு அந்தக் குறையை என்றைக்கும் தீர்க்க முடியாது. அதை மனத்திலே கொண்டுதான் பாலார் பரந்தலார் நீர்த்தேக்கத்தின் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகளுடன் கலந்தபோது கூறியதின் பேரில் தற்போதைய தலைமையிடம் மற்றும் மேற்கண்ட பாலார்பரந்தார் நீர்த்தேக்கம் முதலியவைகள் பற்றிய விவரங்கள் சேகரிப்புப் பணி நடைபெற்று வருகின்றன. இதனால் இத்திட்டம் செயல்படுவதில் சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. எனினும் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பகிர்மானக் குழாய்கள் பதித்தல் ஆகிய பணிகளைத் துவங்கி விரைவில் முடிக்க களப்பணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். தலைமைப் பணியிடம் முடிவு செய்தபின், மற்றைய அனைத்துப் பணிகளையும் விரைவில் முடிக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கு முன்னதாக ஒன்றும் செய்யாமல் இல்லை. அதற்கு வேண்டிய மற்ற வேலைகளைச் செய்து ரெடியாக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மற்ற வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு அடிக்கடி சந்தித்துப் பேசுவதுண்டு. தொட்டிகள் கட்டுவது குழாய்கள் பதிப்பது சம்பந்தமாக டெண்டர்கள் விடப்பட்டபோது எஸ்டிமேட்டுக்கு அதிகமாக 30 சதவீதம் அவர்கள் கேட்டிருப்பதாகவும் ஆனால் அந்த அளவுக்கு அனுமதிக்கிற அதிகாரம் அதிகாரிகளுக்கு இல்லையென்றும் ஆகவே அரசு அனுமதி கொடுக்க வேண்டு



மென்றும் சொல்கிறார்கள். அது உண்மையா? டெண்டருக்கு அனுமதி கொடுக்கிற முறையிலே அமைச்சர் அவர்கள் இன்றே ஆணையிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பில் இதுவரை இத் திட்டத்திற்குத் தேவையான பொருள்கள் சேகரிக்கப்பட்டு, திட்டத்திலுள்ள 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் நியமனத்திலே ஏதோ சிக்கல் இருப்பதாக இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு அறிவிக்கும்.

## 6. அறிவிப்புகள்

### பேரவை அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு இணங்க, 28-8-1981 அன்று அரசினர் சட்ட முன்வடிவு என்ற இனத்தில் 1981ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 68/1981) முதலாவதாகச் சேர்க்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணங்களால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 28-8-1981 அன்று பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமல் இருப்பதால், அந்தச் சட்ட முன்வடிவு 29-8-1981 அன்று சட்ட முன்வடிவுகள் என்ற இனத்தில் கடைசியாகச் சேர்க்கப்பட இருக்கிறது என்பதைப் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 32-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் 24-8-1981 ஆம் தேதியன்று அவைக்கு அளித்த வெள்ளை அறிக்கையின் மீது விவாதம் தொடரும்.

[1981 ஆகஸ்ட் 27

திரு. இரா. கருப்பையா; துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கைகள் நாட்டிலே புழங்கி வரக்கூடிய கருப்புப்பணம், நிதிக் கொள்கைகள் விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையான காரணமாக இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன். நம்முடைய மாநில அரசு விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையான கொள்கைகள் சரியான முறையில் எடுத்துக்காட்டப்படக்கூடிய முறையிலே அறிக்கையிலே குறிப்பிடவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் ஓரளவிற்கு நியாய விலையில் கிடைக்கக்கூடிய முறையில் நியாய விலைக் கடைகள் மூலமாக பாதிக்கப்படுகிற மக்களுக்கு ஓரளவிற்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய முறையிலே பொது விநியோகம் செய்யக்கூடிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 17,400 நியாயவிலைக் கடைகள் தமிழகத்திலே இருக்கின்றன என்றும் 109 இலட்சம் குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அதன் மூலமாக விநியோகம் நடைபெற்று வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொது விநியோகம் என்பது பெயரளவிலே இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் பெருவாரியாக கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, எண்ணெய் போன்ற பொருட்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் சரியான முறையில் நடைபெறவில்லை.

[முற்பகல் 11-20]

கிராமப்புறங்களிலே நிறுவப்பட்டிருக்கும் அமுதம் போன்ற அங்காடிகள் அல்லது கூட்டுறவு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் அங்காடிகள் ஆகியவைகளில் அரிசியோ அல்லது மற்றப் பொருட்களோ மக்களுக்குக் கிடைப்பதில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. நகர்ப்புறங்களிலே நிலைமைகளை எடுத்துக் கொண்டால், நகர்ப்புறங்களிலே இருக்கும் மக்களுக்கு ஏற்கனவே அரிசி ஓரளவுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. எற்கனவே ஒரு நபருக்கு வாரத்திற்கு ஐந்து கிலோ என்ற அடிப்படையிலே அரிசி விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனல். அந்த அரிசியின் அளவு இன்றைய தினம் நபருக்கு ஒரு கிலோ என்ற அளவிலே குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகஸ்ட் ஒன்றாம் தேதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு நான்கு கிலோ அரிசிதான் கொடுக்கப்படும், அதுவும் சிறியவர்களுக்கு இரண்டு கிலோ அரிசிதான் கொடுக்கப்படும்; அதிகபட்சம் 20 கிலோ அரிசிதான் வழங்கப்படும் என்ற அளவிற்கு அரசு தன்னுடைய நிலைமையை மாற்றி உத்தரவிட்டிருக்கிறது. இதனால் பெயரளவிற்குதான் நியாய விலைக் கடைகளில் அரிசி கொடுப்பது என்ற நிலைமைகள் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு அடிப்படை காரணம் என்னவென்றால், அரசாங்கத்திடம் போதுமான அரிசி இருப்பிலே இல்லை என்ற முறையிலே கூறப்படுகிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டேன்,





நம்முடைய மாநிலத்திலே மொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்டது 65,710 டன் அரிசி; 1,11,000 டன் நெல், நம்முடைய மாநிலத்திற்கு ஒரு இலட்சம் டன் அரிசி தேவை என்று நாம் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். நவம்பர் மாதம் வரையில் 11,000 டன்கள் என்ற அளவில் நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் மாதம் ஒன்றுக்கு 75,000 டன் அரிசி தேவைப்படுகிறது. ஆகவே, ஒரு இலட்சம் டன் மத்திய அரசினிடத்திலிருந்து பெற வேண்டுமென்ற அடிப்படையிலே கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளைப் பார்க்கும்பொழுது, சென்ற நவம்பர் மாதத்திலேயே விவசாயிகளிடத்திலேயிருந்து போதுமான நெல்லை மார்க்கெட்டிலே இருந்த உபரியான நெல்லைக் கொள்முதல் செய்திருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. அன்றைக்கு விவசாயிகள், தமிழக அரசு நிர்ணயித்திருந்த விலையைவிடக் குறைந்த விலைக்கு—115 ரூபாய்க்கும் குறைவான விலைக்கு விற்றார்கள். அந்தக் குறைந்த விலைக்கு அப்போது பெரும் வியாபாரிகள் விவசாயிகளிடத்திலிருந்து கொள்முதல் செய்தார்கள். இன்றையதினம் அதையே வைத்து அதிக விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் அரசாங்கத்தினுடைய கொள்முதல் சம்பந்தமாக ஒரு புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு. மாநிலங்களில் செய்யப்படக்கூடிய அரிசி, நெல், உணவு தானியங்கள் ஆகியவற்றின் கொள்முதல் மத்திய அரசின் கணக்கிலேதான் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது; மத்திய அரசின் நிதியை வைத்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. இது எந்த அளவிற்குச் சென்றிருக்கிறது என்றால், இப்பொழுது கொள்முதல் செய்யவேண்டிய அவசியமில்லை என்று மத்திய அரசு சொல்லிவிட்டாலும் சரி, அல்லது மத்திய அரசு நிதி கொடுக்கவில்லை என்றாலும் சரி, கொள்முதல் செய்யப்படமாட்டாது ஆகவே, மாநிலத்திலேயிருக்கின்ற மக்களின் தேவைகளை முழுமையாக அறிந்து கொண்டு, மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பிலே இருக்கிற மாநில அரசு. அதற்காகத் தேவையான நெல், அரிசி ஆகியவற்றைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யவேண்டிய பொறுப்பிலே இருக்க வேண்டிய மாநில அரசு. இப்படித்தான் செய்ய வேண்டுமென்ற புதிய முறையை மத்திய அரசு வகுத்திருப்பதால் ஒரு புதிய நெருக்கடி இன்றையதினம் உருவாகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக மத்திய அரசின் இந்தக் கொள்கையை எதிர்த்து மாநில அரசு என்ன கருத்து வெளியிட்டியிருக்கிறது என்று தெரியவில்லை. இதனால் தமிழகத்தில் அரிசி தேவைக்கு முழுமையாக அவர்களை எதிர்பார்க்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் அரிசியின் அளவு குறைந்திருப்பதால் வெளிச்சந்தையில் அரிசியின் விலை

உயர்ந்திருக்கிறது. ஒரு கிலோ சன்ன ரக அரிசியின் விலை 3 ரூபாய் 80 காசு, அல்லது 4 ரூபாய் என்ற அளவிற்கு விற்கிறது. அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அறிக்கையில் மூன்றே கால் ரூபாய், மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல. கூட்டுறவு அங்காடிகளில் விற்கப்படும் விலை விவரங்களைத்தான் நான் கூறுகிறேன். அரிசியின் வெளி மார்க்கெட் விலை உயர்ந்திருக்கிறது. தற்பொழுது நியாய விலைக் கடைகளில் விநியோகிக்கப்படும் அரிசியின் அளவு குறைந்திருப்பதால், மக்கள் அதிகமாக வெளிமார்க்கெட்டிற்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் வெளிமார்க்கெட்டில் அரிசியின் விலை உயர்ந்திருக்கிறது. வெளிமார்க்கெட்டில் அரிசி வாங்காமல் மக்கள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்கு, அரசாங்கம் உடனடியாகக் கொள்முதலைத் துவக்க வேண்டும். வரும் அறுவடைக் காலத்திலாவது, மார்க்கெட்டில் உபரியாக விற்கும் நெல் முழுவதையும் கொள்முதல் செய்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு சீரான விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அரிசி உணவு தானியத்தினுடைய மொத்த வர்த்தகத்தை அரசே ஏற்றுக்கொள்வதுதான் இதற்குச் சரியான பரிகாரமாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்ற பொருள்கள் சம்பந்தமாகவும் சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். கோதுமை சம்பந்தமாக நம்முடைய தேவை 10,000 டன்கள், கிடைப்பது 4,000 டன்கள்தான். இன்றையதினம் கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள் கோதுமை எப்படி இருக்கும் என்று கூட நினைத்துப் பார்க்க முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். தமிழகத்தில் மூன்றில் இரண்டு மடங்கு மக்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். நகரத்திலேயும் எங்கு சென்றாலும் கோதுமை கிடைக்கவில்லையென்ற கூக்குரல்தான் இருக்கிறது. அதனாலே விநியோகத்திலே கோளாறா? கிடைக்கின்ற 4,000 டன்னை விநியோகிப்பதிலே கோளாறா, என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். ஆகவே, விநியோகத்திலே இருக்கிற கோளாறைப் பரிசீலனை செய்து, அரிசியும், கோதுமையும் முறையாகக் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரிதான், மைதா, ரவையைப் பொறுத்தவரையில் இரண்டையும் சேர்த்து 10 240 டன்கள் கிடைக்கின்றன. ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ ரவா, மைதாதான் கொடுக்க முடியும் மாதம் ஒன்றுக்கு. ஆனால், எவ்வளவு பேர்கள் இன்றையதினம் ரவாவையும் மைதாவையும் வாங்கி உபயோகிக்கிறார்கள்? நகர்ப்புறத்திலே இருக்கிற மக்களுக்கும் கூட மைதாவும் ரவையும் கிடைப்பதில்லை,



அதே போல்தான் பாமாலின் எண்ணெய், நல்லெண்ணெய் விலை என்றைக்கும் இல்லாத அளவு உயர்ந்திருக்கிறது. நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ. 15.50 காசு அளவுக்கு இன்றைய தினம் உயர்ந்திருக்கிறது. அதை ஈடு செய்ய ரூ. 8¼-க்கு பாமாலின் ஆயில் விற்கப்பட்டதால், அதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற பொறுப்பு நமக்கு இருக்கிறது. நமக்கு மத்திய அரசு ஒதுக்குகிறது. அப்படி ஒதுக்கக்கூடிய பாமாலின் எண்ணெய் எங்கு செல்கிறது என்று தெரியவில்லை. இன்றையதினம் அது மக்களுக்குக் கிடைப்பதில்லை, கிடைக்கக்கூடிய பாமாலின் எண்ணெய இந்த மாதம் வாங்கியவர்களுக்கே அடுத்த மாதமும் வழங்கப்படுகிறது. முறையாக ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவை நிர்ணயித்து, அனைத்துக் கார்டுகளுக்கும் அதனைக் கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். விநியோகத்திலே என்ன கோளாறு? சில நேரங்களிலே யாருக்கும் கிடைக்காத நிலைமையிருக்கிறது. ஆகவே, விநியோகத்திலே இருக்கிற இம்மாதிரியான கோளாறுகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களிலே, மண்ணெண்ணெய் நியாயவிலைக் கடைகளிலே கொடுப்பதே கிடையாது. எந்தக் கிராம அங்காடியிலும் கொடுக்கப்படுவதில்லையென்று நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன், அமைச்சர் அவர்கள் மாவட்டங்களுக்குப் பயணங்களை மேற்கொள்ளக்கூடிய நேரங்களிலே திடீரென்று கிராம அங்காடிகளுக்குச் சென்று அங்கே இம்மாதிரியான பொருள்கள், மண்ணெண்ணெய் ஆகியவை, விநியோகிக்கப்படுகிறதா என்பதைச் சோதித்துப் பார்ப்பதுகூடச் சரியாக இருக்கும். மண்ணெண்ணெய் கிராமங்களிலே இருக்கக்கூடிய அங்காடிகளிலே விநியோகிப்பதே கிடையாது, விநியோகிப்பதும் சரியான முறையிலே இல்லை. ஆகவே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்குப் பெயரளவிலேதான் மக்களுக்கு விநியோக ஏற்பாடுகள் இருக்கின்றன. அதிகாரிகள் வைத்தது, அவர்கள் சொல்வது என்று வைத்துக்கொண்டு, இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'எல்லாம் சரியாக நடக்கிறது. இதன் மூலமாக இன்றையதினம் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது' என்று கூறுவது சரியாக இருக்காது என்பதை நான் கூற விரும்புகிறேன். ஆகவே, சரியான முறையிலே, இன்றையதினம் அத்தியாவசியமான பொருள்களை முறையாக விநியோகம் செய்வதற்காக நியாயவிலைக் கடைகள் செயல்படுவதிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அரிசி போன்றவற்றை விநியோகிப்பதிலே ஏற்படுகிற கோளாறுகளை நீக்க, அனைத்துப் பொருள்களையும் அரசாங்கமே கொள்முதல் செய்து, விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும், இதர பொருள்களை நியாயமான முறையிலே கொள்முதல் செய்து, அடக்க விலையில் இல்லாவிட்டாலும், நியாயமான விலையிலே விநியோகிக்க அரசு பொறுப்பேற்க வேண்டும்,

அதை செய்யாத வரையில், அத்தியாவசியப் பொருள்களைக் கூட, வாங்குவதற்குத் தேவையானவைகளைக் கூட வழங்க நாம் தவறியவர்கள் ஆவோம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மற்ற பொருள்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் இந்த வெள்ளை அறிக்கையிலே எல்லா பொருள்களையும் பற்றி மிளகாயைப் பற்றி, மல்லியைப் பற்றி, பருப்பைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள், சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் விற்ற விலையையும் இந்த ஆண்டு விற்கிற விலையையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு மிளகாய் ஒரு கிலோ ரூ. 7½-க்கு விற்றது. இந்த ஆண்டு ரூ 16க்கு விற்கிறது. மல்லி சென்ற ஆண்டு ரூ 5½-க்கு விற்றது. இந்த ஆண்டு, அதன் விலை ரூ. 10 ஆக உயர்ந்திருக்கிறது. துவரம் பருப்பு ரூ 5.20 ஆக இருந்தது, இப்பொழுது ரூ. 5.80 ஆகி இருக்கிறது. புளி ரூ 8 50 ஆகியிருக்கிறது. அரசு உற்பத்தி செய்கிற சே புரம் மார்க் சலவை சோப்பினுடைய விலைகூட இன்றையதினம் உயர்ந்திருக்கிறது. ப லினுடைய விலை உயர்ந்திருக்கிறது. எல்லா பொருள்களுடைய விலையும் உயர்ந்திருக்கிறது. அரசு மூலமாக விநியோகிக்கப்படுபவை சொசைட்டிகள் மூலமாக விநியோகிக்கப்படுபவை அனைத்தினுடைய பொருள்களின் விலையும் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே, அதன் காரணமாக மக்கள் அவதிப்படுகிறார்கள். அத்தியாவசியப் பொருள்களை, ஓரளவுக்குச் சீரான முறையிலே விநியோகித்து, சரியான முறையிலே விநியோகித்து, அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

[முற்பகல் 11.30]

காய்கறி விலையைப் பற்றி நான் குறிப்பிடத் தேவையில்லை அதைப்பற்றி அரசாங்கமே கூறி இருக்கிறார்கள் விலை உயர்ந்திருக்கிறது என்று. ஆகவேதான் இன்றையதினம் இந்த நிலைமையிலே நம்முடைய தமிழகத்திலே அதிகமாக இன்றைய தினம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்கள் 62.5 சதவிகிதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு முழுமையாக ஒரு வேளை சாப்பாடு சாப்பிடுவதற்கு வகையில்லாமல் இருக்கக்கூடிய மக்கள் 62.5 சதவிகிதத்தினர் இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே 442 இலட்சம் விவசாயத் தோழர்கள் இருக்கிறார்கள். கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அன்றாடம் தங்களுடைய வாழ்க்கையிலே கிடைக்கக்கூடிய 2 ரூபாய், 4 ரூபாய் கூலியை வைத்துக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

ஆகவே அவர்களுக்கு முதன்மையாக இம்மாதிரியான நியாய விலைக் கடைகள் மூலமாக அரசு— அனைத்துப் பொருள்களையும் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை— அரிசி போன்ற முக்கியமான பொருள்களையாவது, அவர்களுக்கு உத்திரவாதமாகக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதே நேரத்தில் நான் குறிப்பிட விரும்புவது, கேரள மாநிலத்திலே இம்மாதிரியான அத்தியாவசியப் பொருள்கள் சீரான முறையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதும், அதை இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களும் மத்திய அரசும் பாராட்டுகின்றன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அனைத்து கிராமங்களிலும் இருக்கின்ற மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் முறையாக, சீராகக் கிடைப்பதற்கு உத்திரவாதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றைக்கு உயர்ந்து வரும் விலைவாசி காரணமாக கஷ்டப்படுகின்ற அல்லல்படுகின்ற மக்களுக்கு ஒரு சில நிவாரணத்தையாவது அளிக்கவேண்டும் என்கிற அடிப்படையிலே அதற்கான முயற்சிகளிலே, அரசு ஈடுபடவேண்டும். சீர்கேட்டடைந்து இருக்கும் விநியோக முறைகளை முறைப்படுத்துவதற்காக ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையிலே, அரசு மொத்தமாக உணவு தானியங்களின் மீது மத்திய அரசு கொல்லி இருக்கிற கொள்கையின் அடிப்படையில் பார்த்தால் நாம் தமிழகத்தில் அதைக் கொள்முதல் செய்ய முடியாது. அதற்கான பொறுப்பையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது அதற்கான உததரவாதமும் இருக்காது. ஆகவே தமிழக அரசு வரக்கூடிய அறுவடையிலே உபரி நெல்லையும், தானியத்தையும் முழுமையாகக் கொள்முதல் செய்யக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு உத்தரவாதமான முறையிலே தேவையான அரிசி இருப்பை ஏற்படுத்தி மக்களுக்குத் தேவையான அரிசி நெல் இருப்பை, விநியோகம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே அதிகமான மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு உத்தரவாதமாகக் கொடுக்கக்கூடிய முறையிலே வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு மாதத்திலே தஞ்சாவூரிலே அறுவடை வரவிருக்கிறது. அதற்கான முறையில் உபரி நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும். ஏற்கனவே நிறையக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். அது முடியாது என்பதல்ல. இன்றைக்குக் கொள்முதல் செய்வதிலே ஏற்படக்கூடிய தலக்கம், தயக்கம் அதற்கான காரணம் என்ன என்பதை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைச் செய்யாமல் அரசு விலைகளைக் கட்டுப்படுத்த முடியாது. என்பது யதார்த்தமாக அனைவரும் அறிந்த உண்மை. ஆகவே, அந்த அடிப்படையில் உடனடியாக அதற்கான ஏற்பாடுகளை இப்போதிருந்தே நமது அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கொள்முதல் என்பது பெயரளவிலே இருக்கிறது. அதை மாற்றி கறாரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பை அளித்தமைக்குத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். மாணிக்கம்] [1981 ஆகஸ்ட் 27

அரசாங்கத்தாலே அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கை தமிழகத்தினுடைய உணவு நிலைமையையும், தமிழ்நாட்டிலே நிலவக்கூடிய நிலைமைகளையும் கிடைக்கக்கூடிய அத்தியாவசிய பொருள்களை தமிழகத்தினுடைய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வகையிலே பணியாற்றி வருகிற தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அரசு ஏழை எளிய மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களுடைய பற்றாக்குறை இல்லாமல், சீரான வகையில் கிடைக்கக்கூடிய செயல்களைச் செய்து வருகிறது என்பதையும் இந்த முயற்சிக்கு மத்திய அரசாங்கத்தினுடைய ஆதரவு அதிகம் இல்லை என்றாலும், அவர்களுடைய கொள்கைகள் இந்த அரசு எடுக்கக்கூடிய— ஏழை எளிய மக்களுக்குப் பயன்தரக்கூடிய திட்டங்களுக்கு உறுதுணையாக இல்லை என்றாலும் கூட, இருக்கக்கூடிய வசதிகளை வைத்துக் கொண்டு தமிழகத்தினுடைய நலனைப் பாதுகாக்கின்ற முறையில் அந்த மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை இல்லாமல், அவர்கள் பெறக்கூடிய வகையிலே சிறப்பாக பணியாற்றி அதன் மூலமாக தமிழக மக்களுடைய ஆதரவையும் பாராட்டுதலையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பெற்றிருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்திலே வரலாறு காணாத வகையில் மிகப்பெரிய வறட்சி ஏற்பட்டு, அந்த வறட்சியைச் சமாளிப்பதற்கு அரசினுடைய அனைத்து இயந்திரங்களையும் பயன்படுத்தி, வறட்சியினுடைய கொடுமை இன்று தணிந்து இருக்கிறது. வறட்சி ஏற்பட்டிருக்கிற நேரத்திலேகூட தமிழகத்திலே பஞ்சம் வராத அளவிற்கு நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசு செய்திருக்கிற நல்ல பயனுள்ள காரியங்கள் மூலம் அத்தியாவசிய பொருள்கள் எல்லோருக்கும் பங்கிட்டுத் தந்ததால் தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1975-க்கு முன்னால் நல்ல விளைச்சல் இருந்த காலத்தில் கூட, நெல்லுடைய உற்பத்தி அதிகமாக இருந்த காலத்தில் கூட, நெல்லோ, அரிசியோ தமிழகத்திலே கிடைக்காத நிலைமை ஏற்பட்டது. தஞ்சை மாவட்டத்தின் எல்லைகள் எல்லாம் ஒரே நாளில், இரவில் வெளிமாநிலத்தின் வியாபாரிகளுக்கு திறந்து விடப்பட்டு தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய— வெளிமாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், வெளி நாடுகளுக்கும் எடுத்துக் செல்லக்கூடிய— நிலைமை உருவாக்கப்பட்டிருந்தது என்பதை மறந்து விடக் கூடாது. அப்போது கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு, சென்னைக்கு வந்திருந்த அந்த மாநிலத்தினுடைய அமைச்சர் ஒருவர் கூடச் சொன்னார்கள். நாங்கள் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஏனென்றால் எங்களுடைய மாநிலத்திலே அரிசி பற்றாக்குறை குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். காரணம் தமிழகத்தில் தஞ்சையில் இருக்கிற அரிசியை கேரளாவிற்கு எடுத்துச் செல்வதற்கு அவர்கள் அனுமதித்தார்கள்.



1981 ஆகஸ்ட் 27] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

அதேபோல சவுதி அரேபியா, குவைத் போன்ற நாடுகளிலே கூட தமிழகத்தினுடைய அரிசி பஞ்சமில்லாமல், பற்றாக்குறை இல்லாமல் கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்கியவர்கள், இன்று தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நிர்வாகத்திலே உணவு பொருள்களின் பங்கீட்டிலே தவறு என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட பங்கீட்டு முறைதான் தேவை என்று சொல்கிறார்கள். தமிழகத்திலே கடும் வறட்சி ஏற்பட்டு, வறட்சியால் மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிற இந்த நேரத்திலே கூட பொருள்கள் இன்று கிடைக்கக்கூடிய நிலைமை உருவாக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்திலே வறட்சி வந்திருக்கிற இந்த நேரத்திலே எல்லாவிதமான பொருட்களின் உற்பத்தியும் குறைந்திருக்கிறது; தேவைகள் அதிகமாக இருக்கின்றன. இருப்பினும் பற்றாக்குறை கூறிது இருந்தாலும், விலை சற்று அதிகமாக இருந்தாலும் கூட இந்தப்பொருள்கள் இல்லையென்ற நிலைமை இல்லாமல் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. எனவே பஞ்சம் இல்லை என்ற நிலை இருக்கிறது. அரசு மண்ணெண்ணெய், புளி, பருப்பு போன்ற அத்தியாவசிய பொருள்கள் தாராளமாகக் கிடைக்க வழி செய்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழகத்தில் கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகளைத் திறந்து—17,400 கடைகளைத் திறந்து—பொருள்கள் கிடைக்கக்கூடிய திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். கிராமங்களிலே இருக்கிறவர்கள் நகரங்களில் இருப்பவர்களைப் போல பொருட்களை வாங்கிப் பயன்படுத்துகிற வகையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செய்திருக்கிற திட்டம், பொருள்கள் நியாய விலை கடைகள் மூலமாக மக்களுக்குக் கிராமங்களில் கிடைப்பதற்கு வழி செய்திருக்கிறது.

[முற்பகல் 11–10]

அப்படிக் கடைகளிலே ஒன்றிரண்டு இங்கொன்றுமாக குறைகள் இருக்கின்றன என்றால் அந்தக் குறைகளுக்கு என்ன காரணம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலே கூட்டுறவு அமைப்புகளிலே இருக்கின்ற 1977–க்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் புரட்சித் தலைவர் அரசின் கொள்கைகளுக்குக் குரோதம் விளைவிக்கின்ற வகையிலே இந்த அரசுக்குக் கெட்டபெயர் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தச் சங்கங்களிலே தலைவர்களாக இருந்துகொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அத்தியாவசியப் பொருட்களை, வாங்கி வழங்குவதற்கு முன்வரவில்லை. என் தொகுதியிலே கூட அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறுவதை என்னால் சொல்ல முடியும். அங்கே இருக்கிற அதிகாரிகள் அரிசி மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வாங்கி

விநியோகிக்க வேண்டுமென்று சொல்லுகின்றபோது அந்தப் பொருட்களை வாங்கி, விநியோகிக்க அவர்கள் முன்வருவதில்லை. அதனால் அரிசி பற்றாக்குறை வருகிறது என்கிறபோது அரசு அப்படிப்பட்ட இடங்களில், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பக்கத்தில் அமுதம் அங்காடிகளைத் திறந்து, அங்கே மக்களுக்கு அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கிவருகிறது; மக்களுக்கு அரிசிப் பஞ்சம் இல்லாமல் செய்திருக்கிறது. இந்த வகையில் அந்த அங்காடிகளில், கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசின் கொள்கைகளுக்கு விரோதமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய தவறுகளைக் களைய, அவர்களைத் தண்டிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல தஞ்சை மாவட்டத்திலே 130 அமுதம் அங்காடிகளைத் திறக்க அனுமதி அளிக்கப்பட்டும் இன்னும் திறந்து, அங்கே பொருட்கள் விநியோகம் செய்ய முடியாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் இப்போது கூட்டுறவுச் சங்கங்களிலே, அங்காடிகளிலே இருக்கிற ஊழியர்களுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்களைத்தான் அங்கே நியமிக்க வேண்டுமென்றும் மற்றவர்களை நியமிக்கக்கூடாது என்றும் சொல்லி, அந்தக் கடைகள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள், அங்கே அவர்களை நியமிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருப்பதால் அங்கே வேறு யாரையும் நியமிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள், எனவே தஞ்சை மாவட்டத்தில் திறக்கப்படாமல் இருக்கிற அமுதம் அங்காடிகளை உடனடியாகத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் அங்கே வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது விவசாயப் பணிகள் நடந்து வருகின்றன. விவசாயத் தொழிலாளர்கள் மாலை 6 மணிக்குமேல்தான் தாங்கள் செய்த வேலைக்குச் சம்பளம் பெற்றுவந்து கடைகளிலே தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் கடைகளில் எல்லாம் அவர்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற வகையிலே மாலை 8.20 மணி வரையில் அங்காடிகளைத் திறந்துவைக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கடைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தாலும் அங்கே பொருட்கள் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் கண்காணிப்புகள் இருக்க வேண்டும். அந்தக் கண்காணிப்பைச் செய்வதற்காக வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அமுதம் அங்காடிகளைக் கண்காணிக்க அங்கே இருக்கிற சிவில் சப்ளை அதிகாரிகளுக்கு மட்டுமல்லாமல் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும், கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுக்கும் அதிகாரம்





வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் நல்ல முறையில் கண்காணிப்பு செய்கின்ற பணியையும் இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி பல்வேறு வகையில் அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து, தமிழ்நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படாமல், இருக்கிற உணவுப் பொருட்களை முறையாகப் பங்கிட்டுப் பணிகளைச் செய்து, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, ஒரு காலத்திலே மூவேந்தர் இந்த நாட்டை ஆண்டார்கள் என்பதை நினைவுப்படுத்துகின்ற வகையிலே அவர்களின் பிரதிநிதிகள் போலே இங்கே இருந்துகொண்டிருக்கிற மூன்றே மூன்று அமைச்சர்களும் முன் வரிசையில் இருக்கிற அமைச்சர்கள் எல்லாம் எழுந்து வெளியே நடமாடப் போய் விட்டாலும் நடமாடும் பல்கலைக் கழகமான மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இங்கே இருந்து இந்த வெள்ளை அறிக்கையிலே நாங்கள் என்ன சொல்கிறோம் என்று அறிந்துகொண்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இங்கே காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் இந்த வெள்ளை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகின்றேன்.

வெள்ளை அறிக்கை நல்ல உள்ளத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இருக்கின்ற நிலையினை எடுத்துச் சொல்வது என்பது மட்டுமல்லாமல் இருக்கின்ற சிரமங்கள் என்ன என்பதையும் புரியும்படி தந்திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே தற்போது பெட்ரோல், டீசல் போன்றவற்றின் விலைவாசிகள் ஏறி இருக்கின்ற நிலையிலே பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே இந்த அரசு நாட்டுமக்கள் நலிவுற்றுவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு செய்திருக்கின்ற நடவடிக்கைகளை எல்லாம் அதிலே குறித்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நாம் பாராட்டுகிறோம். உண்மை நிலையை நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக வறட்சியின் காரணத்தாலே 3.32 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்பட முடியாத நிலை இருந்தது என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். எனவே வறட்சி இருந்தது, அதன் மூலம் நெல் விளைச்சல் குறைவாக இருந்தது என்பதை எல்லாம் சொல்லி மத்திய அரசிடம் நாம் அவர்களிடம் ஒதுக்கவேண்டிய அளவுக்கு ஒதுக்கவேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் அவர்கள் ஒதுக்கவில்லை என்பதையும் சொல்கிறார்கள். 40 சதவீதம் லெவியை நெல் வாங்குகின்றவர்களிடமிருந்து அரசு பெற வேண்டும் என்ற முயற்சி மக்களுக்காக அதிக அளவு நெல்லை வாங்கி சேமித்து வைக்கவேண்டும் என்பதற்காகத்தான்.

ஆனால் 40 சதவீதம் என்ற அந்த லெவி இருக்கின் காரணத்தாலே அதை வாங்குகின்ற வணிகர்கள் 40 சதவீதம் நெல்லை 100 ரூபாய் என்ற அளவுக்குக் கொடுக்கவேண்டி இருக்கின்றது. அதையே அவர்கள் 150 ரூபாய்க்கு வெளியே இருந்து வாங்கி 100 ரூபாய்க்குக் கொடுக்கவேண்டிய காரணத்தாலே ஏறத்தாழ அவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு 50 ரூபாய் சுமாராக வருகின்றது. அந்த இழப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே அவர்கள் வாங்குகின்ற உணவினுடைய அளவினை வெளியே கணக்கு காட்ட மாட்டேன் என்று சொல் கின்ற நிலைமை இருக்கின்றது. அரிசி மில் வைத்து இருப்பவர் களும், இந்த வணிகத்திலே ஈடுபட்டிருப்பவர்களும் இந்த லெவி குறைவாக இருக்குமேயானால் சரியாக அதன் கணக்கை அரசாங் கத்திற்குக் கொடுப்பதற்கு முடியும் என்கின்ற தகவலை நமக்கு அடிக்கடி தந்துகொண்டு இருக்கிறார்கள். எனவே 40 சதவீதம் என்ற அதிக அளவை வைத்திருப்பதன் காரணத்தாலே நமக்கு எதிர்பார்த்த பலன் கிடைத்திருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சம் டன் வேண்டுமென்று நாம் கேட்டால் இவர்கள் 60 ஆயிரம் டன் தான் தருகிறார்கள் என்ற கணக்கு இங்கே சொல்லப்பட்டிருக் கின்றது, எப்போது 40 ஆயிரம் டன் நமக்குக் குறைவாக கிடைக் கின்றதோ அப்போது அதனாலே விலைவாசி ஏற்றமும் ஏற்படக் கூடும் என்பதனை நாம் சொல்லாமலேயே எல்லோரும் தெரிந்து கொள்வார்கள். இந்த அரசு மட்டுமே இந்த விலைவாசி ஏற்றத் திற்கு பொறுப்பல்ல என்பதைச் சொல்லாமல் சொல்கிற ஒரு வரியாக இங்கே தரப்பட்டிருக்கிறது. அது உண்மையானதாகவும் இருந்து கொண்டிருக்கின்றது.

பொது வினியோக முறையினை எடுத்துக் கொண்டால் ஏறத் தாழ 17,400 கடைகளின் மூலம் வினியோகம் நடைபெறுகிறது என்று இந்த வெள்ளை அறிக்கை கூறுகின்றது. அரசாங்கத் தினுடைய கொள்கையும் கோட்பாடும் எதுவாக இருக்கின்றது என்பதைச் சொல்லவேண்டும் என்றால் ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு நியாய விலை கடை என்பதை லட்சியமாகக் கொண்டிருக் கிறார்கள். ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று சொன்னால் கால் கடுக்க மணிக்கணக்கில் நிற்காமல், காத்து இருக்காமல் மக்கள் வாங்கிச் செல்ல முடியும். அதுவும் கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களாயினும் சரி, சென்னை நகரத்தில் இருக்கின்ற மக்களாயினும் சரி அவர்கள் எல்லாம் வேலைக்குப் போகிற நேரத்திலே இந்தக் கடைகளில் காத்திருக் கிறார்கள். அவர்கள் வேலை செய்தால் பெறுகின்ற காசும் போய் சில நேரத்திலே காத்திருந்து, காத்திருந்து, பார்த்திருந்து கடைசியிலே பாமாயில் போன்றவைகள் இல்லை என்று சொல்கிற போது வெறுங்கையோடு போகிற விரக்தி நிலையும் அவர்களுக்கு ஏற்படுவதை நாம் பார்க்கின்றோம்,



இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றவேண்டும் என்றால் போதுமான இருப்பு இருக்கவேண்டும் என்பது ஒரு புறம் இருக்க, அந்த இருப்பினை மத்திய அரசு நமக்குத் தரவேண்டும் என்பதும் ஒரு புறம் இருக்க, நீண்ட நேரம் மக்கள் காத்திருக்க வேண்டிய தேவை இல்லை என்று சொன்னால் ஆயிரம் குடும்பத் தினர்க்கு ஒரு கடை என்ற நியதியை உடனடியாக அரசாங்கம் நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி ஆயிரம் குடும்பத்திற்கு ஒரு கடை என்று வந்து விட்டால் கிராமங்களில் தற்போது ஒரு நபரை வைத்திருக் கிறார்கள். அந்த எண்ணிக்கையினை இரண்டு நபர் என்ற வகையிலே உயர்த்த வேண்டும். சென்னையிலே தற்போது 4 பேர்கள் இருக்கிறார்கள், சாரசரி 2 பேர் என்று கணக்கிட்டாலும் கூட 73,200 பேர்களுக்கு வேலை உடனடியாகக் கிடைக்குமாகை யால் அவ்வாறு 73,200 பேர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மக்களுக்குக் காத்திருக்கவேண்டிய தேவையும் இல்லை; வேலை கிடைக்காமல் காத்திருக்கின்றவர் களுக்கு வேலையும் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. 73,200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய ஒரு பெரிய நிறு வனம் ஒரு பெரிய வாய்ப்பு நமது மாநிலத்திலே உணவு அமைச்சராகவும் நிதியமைச்சராகவும் இருக்கின்ற நாவலர் அவர் களுக்கு இருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

அடுத்து ஏற்கனவே பல பெருமக்கள் சொன்னார்கள். இந்தக் கடைகள் எல்லாம் கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்கள் பணிக்குச் செல்கிற நேரத்திலே திறந்தும், பணிகளுக்குச்சென்றுவிட்டு வரு கின்ற நேரத்திலே மூடியும் இருக்கும். இந்த நிலையினை மாற்றி அவர்கள் எல்லாம் வாங்குகின்ற வகையிலே கடைகளைத் திறந்து வைக்கவேண்டும் என்ற தகவலை நான் சொல்ல விரும்புகிறேன்.

[முற்பகல் 11-50]

அடுத்து செம்பனை என்று சொல்லப்படுகின்ற மரத்திலிருந்து தயாரிக்கப்படுகின்ற பாமாயிலை நமது நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய சீதோஷ்ண நிலை அந்தமான் தீவு, கேரளா, ஊட்டி போன்ற பகுதிகளிலே இருந்தாலும் அதிகமாக அந்த முயற்சியிலே ஈடுபடவில்லையோ என்ற ஐயுணர்வு வருகின்றது. மலேசியா போன்ற பகுதிகளுக்கு நான் சென்றிருந்தபோது இந்த செம்பனை யினுடைய வளர்ச்சியைப் பார்ப்பதற்கு எனக்குவாய்ப்பு கிடைத் தது. 24 மாதங்களிலே பலனை கொடுக்கிற ஒரு மரம் இந்த செம்பனை என்று அங்கே சொல்லப்படுகிறது. அந்தச் செம்பனை யிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற இந்த எண்ணெய், மனித குலத் திற்குப் பயனற்றது என்ற நிலைமை போய், இன்று மனித குலத் திற்குத் தேவை என்று சொல்கிற ஒரு நிலை வந்திருக்கிற

காரணத்தாலே, எவ்வளவு ஒதுக்கீடு வேண்டுமோ அந்த ஒதுக்கீட்டை நம் மாநில அரசாங்கம் கேட்டிருக்கிறது. கடந்த 7 மாதங்களிலே எவ்வளவு ஒதுக்கீட்டை நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டது என்று கேட்டால், 77,000 டன் ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் ஒதுக்கியது 19,400 டன் தான் என்று சொன்னால், ஏழு பாதத்திற்குரிய தேவையைக் கேட்கிற போது, 2 பாதத்திற்குரிய தேவையைத்தான் மத்திய அரசு தந்திருக்கிறது என்று பார்க்கும்போது, தமிழக அரசு மட்டுமே இதை ஈடு செய்துவிடமுடியாது.

இறக்குமதி செய்கிற அந்த உரிமம் எல்லாம் வழங்குவதும் மத்திய அரசாங்கம் தான். அது மட்டும் அல்ல, எந்த தனிப்பட்ட வியாபாரியும் அதனைப் பெறமுடியாது. அப்படி தனிப்பட்ட வியாபாரிகள் அதனைப் பெற வேண்டும் என்று சொன்னால் 150 விழுக்காடு அதற்கு வரி செலுத்த வேண்டும், ஆனால் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அதனை வரவழைக்கிறது என்று சொன்னால், 5 சதவீதம் வரி செலுத்தினால் போதும். அப்படி 5 சதவீதம் மட்டுமே வரி செலுத்துகிற ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் இருக்கிற நேரத்தில் 150 சதவீதம் செலவு செய்து எந்த தனிப்பட்ட வியாபாரியும் அதனைக் கொண்டு வர முடியாது. அப்படி கொண்டு வர முடியாத சூழ்நிலையில் இருக்கிற காரணத்தினாலே மத்திய அரசாங்கமே தனது நிறுவனத்தின் மூலம் முழுபொறுப்பையும் ஏற்று, மாநில அரசுகளுக்கு தேவைக்கேற்ப அதனை வழங்குவார்களேயானால், நிச்சயமாக பாமாயில் எண்ணெய் இல்லை என்கிற பிரச்னையே இருக்காது.

இருப்பதை ஒதுக்கிக் கொடுத்தாலும் கூட சில இடங்களிலே, அது கடைகளுக்கே வரவில்லை என்கிற நிலைமை இருக்கிறது. அப்படியே கடைகளுக்கு வந்தாலும் கூட, சில இடங்களிலே பொது மக்களுடைய கைகளுக்கு வராத நிலையும் இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஆதாரமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், எனக்குக் காலையிலே கூட ஒருவர் மனு கொடுத்திருக்கிறார். இப்படி பல இடங்களிலே நடந்திருக்கிறது. மனு கொடுத்ததை மட்டும் சொல்கிறேன். எல்லா இடங்களிலும் மனம் இருந்திருக்கும். ஆனால் மனு கொடுப்பதற்குரிய நேரம் இருந்திருக்காது. விருகம்பாக்கம் நடேசநகர் பகுதியிலே இருக்கிற பொதுமக்களுக்கு கடந்த 2 மாதங்களாக, சரியாகச் சொல்ல வேண்டுமானால், ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாதங்களிலே பாமாயில் என்று சொல்லக்கூடிய எண்ணெய் கண்ணில்கூட காட்டப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

நிலைமை அப்படி இருக்கிறதே என்று சிவில் சப்ளைஸ் அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் நாங்கள் ஒதுக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஒதுக்கிவிட்டோம் என்று சொல்கிற போது, என்ன ஆயிற்று என்று யோசித்தால், யாராவது அதை ஒதுக்கிவிட்டார்களோ என்று சொல்கிற சூழ்நிலையிலே நமக்கு எண்ணம் தோன்றுகிறது. அப்படி நடக்காமல் இருக்க வேண்டும்



என்றுதான் நாம் ஆசைப்படுகிறோம். ஆனால் அப்படி ஒரு எண்ணம் தோன்றுகிறது. இப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் நம் மத்தியிலே ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் மத்திய அரசாங்கம் நமது தேவைக்கேற்ப அதனைத் தரவேண்டும் என்று, நமது உறுப்பினர்கள் அனைவரும், தமிழக மக்களுடைய நலன் கருதி, கட்சி வேறுபாடு இல்லாமல், மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

இதிலே ஒரே ஒரு நல்ல அம்சம் என்ன என்று சொன்னால் சில நாட்களாக சர்க்கரையின் விலை குறைந்திருக்கிறது. அப்படிக் குறைந்திருக்கும் விலை நீண்ட நாட்களுக்கு அப்படியே நிலைத்து இருக்க வேண்டும் என்றுதான் நாம் ஆசைப்படுகிறோம். நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே சொல்வதாக இருந்தால், மாண்புமிகு நிதியமைச்சராகவும் உணவு அமைச்சராகவும் இருக்கும் நாவலர் அவர்கள், கல்யாணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்காக பெற்றோர்கள் அல்லது உற்றார் உறவினர்கள், தேவையான சர்க்கரை வேண்டும் என்று கேட்டால், அதை அரசாங்கம் கிலோ 6 ரூபாய் விலைக்கு கொடுத்துக் கொண்டிருப்பதை குறைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய முன் வரவேண்டும். ஏனென்றால் வெளி மார்க்கெட்டிலே $5 1\frac{1}{4}$ அல்லது $5\frac{1}{2}$ ரூபாய் என்று கிடைத்துக் கொண்டிருக்கிற காரணத்தாலே, அரசாங்கம் அதை இன்னமும் குறைத்துக் கொடுக்க வேண்டும். ஆகவே இதையெல்லாம் பொது மக்களின் நலனை உத்தேசித்து அவ்வாறு செய்ய முடியுமா என்பதை அரசு தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டும். 6 ரூபாய்க்கு கொடுத்துக் கொண்டிருப்பதை இன்னும் குறைக்க வேண்டும் என்று நான் அன்போடு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே சில பட்டியல் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எவை, எவைகளெல்லாம் எவ்வளவு விளைந்தன என்று பார்க்கிறபோது அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து, கொண்டைக்கடலை, பாசிப்பயிறு, வேர்க்கடலை, எள், மிளகாய்வற்றல், கொத்தமல்லி ஆகிய அனைத்தும் நமது தேவைக்கேற்ப, அல்லது தேவையினுடைய அளவை ஒட்டி கிடைக்கவில்லை, இரண்டைத் தவிர, மன்னிக்க வேண்டும். போன ஆண்டைவிட இந்த ஆண்டு குறைச்சல் விளைச்சல் ஏற்பட்டதிலே இவ்வளவும் அடங்கியிருக்கிறது இரண்டைத்தவிர. துவரை போன தடவை 39, இந்தத் தடவை 40 இலட்சம் டன்கள் விளைந்திருக்கின்றன. அதாவது ஒரு புள்ளி உயர்ந்திருக்கிறது. அவ்வளவுதான். யாரோ ஒரு பெரும் புள்ளி அதனை தன்னுடைய நிலத்திலே பயிர் செய்ததின் விளைவாக, இந்த ஒரு புள்ளி அதிகமாகியிருக்கிறது.

அதைப்போலவே, பாசிப்பயிறு .32 ஆக சென்ற ஆண்டு விளைந்தது இந்த ஆண்டு .35 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த விவரங்களைத் தவிர வேறு எதுவும் சொல்வதற்கு இயலாத நிலைமையில் கிள்ளி எடுக்கிற அளவிற்கு மட்டும்தான் விளைச்சல் அதிகமாக இந்த இரண்டிலேயும் இருக்கிறதே தவிர, அதிலே கூட

அள்ளி எடுக்கிற அளவிற்கு வரவில்லை. மற்றவைகளில் எல்லாம் போன தடவை விளைச்சலை விட இந்தத் தடவை குறைந்துதான் இருக்கிறதே தவிர, அதிகமாக இல்லை. அதற்கு வறட்சி ஒரு காரணம், இன்னும் பல காரணங்கள் இருக்கலாம், உண்மை. நிலைமை இங்கே இப்படியிருக்கிறபோது, மத்திய அரசு இந்த மாநிலத்தைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டாமா என்பதைத்தான் இவைகள் எல்லாம் சுட்டிக் காட்டிக் கேட்கின்றன, நமக்கு இங்கே தெரிந்திருக்கிற புள்ளி விவரத்தைவிட அங்கே இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியக்கூடிய வாய்ப்பையும், வசதியையும் அவர்களுக்கு அதிகமாக இருக்கிற காரணத்தாலே, இங்கே இருக்கிற மக்களைப்பற்றி அவர்கள் அதிகமாக சிந்தித்து இருக்க வேண்டாமா என்பதற்காக சொல்கிறேன்.

இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில்தான் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவில் இருக்கிற உடல்நலம் பற்றி ஒரு புள்ளி விவரம் நமக்கு தரப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளி விபரத்தில் என்ன சொல்கிறார்கள்? மிக்க மரியாதைக்குரிய திரு. எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற மக்களுக்கு இன்னும் தேவைப்படுகிற புரதச்சத்து 15%. ஆனால் பருப்பு விளைச்சல் போதுமானதாக இல்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்போதுமானதாக இல்லை என்ற காரணத்திற்காக இந்தியாவிலே 56 மாவட்டங்கள் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டு அரசாங்கத்தினுடைய சலுகைகளையும் மானியங்களையும் பெற்று அங்கே பருப்பு உற்பத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் பெறத்தக்க வகையில் ஒரு பெரும் திட்டத்தை தயாரித்திருப்பதாக அறிவித்தார்கள். அப்படிப்பட்ட மாவட்டம் நம் தமிழ்நாட்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டம் நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கும். இல்லை என்றால் நாம் கேட்டுப் பெறவேண்டும். அப்படிப் பெற்றிருந்தால் அதன் மூலம் மற்ற மாவட்டங்களும் ஊக்கம் பெறுகிறஅளவிற்கு திட்டத்தை நிறைவு செய்து அதை நாற்றங்காலாக வைத்து ஊற்றாக வைத்து மற்றயிடங்களுக்கும் பரவுகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இங்கே அரசாங்கம் எல்லாவற்றையும் தொட்டுக் காட்டுகிற வகையில் இந்த வெள்ளை அறிக்கையில் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறது. காய்கறிகளின் விலைகள் அதிகமாக இருக்கின்றன என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறபடி காய்கறிகளின் விலைகள் வெளியே இல்லை. அதைவிட அதிகமாக இருக்கிறது.



ஒருவேளை இந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கும்போது அந்த நிலை இருந்திருக்கலாம். இந்த வெள்ளை அறிக்கையைத் தயாரித்தவர்கள் அதைத் தயாரித்து அதை அச்சிட்டு வெளியே அது வருவதற்குள் விலைகள் ஏறியிருக்கக்கூடும். நான் இந்த வெள்ளை அறிக்கையைத் தயாரித்தவர்களைக் குறை சொல்லவில்லை. காய்கறிகளின் உற்பத்தி பழங்காலத்தில் இருந்ததைப் போல் இப்போது செய்யப்பட இல்லை என்பதை மறந்துவிடக்கூடாது. முன்பெல்லாம் வரப்புகளில்கூட வெண்டையும், கத்திரியும் போடும் சூழ்நிலை இருந்தது, அது இப்போது இல்லை. சென்னை போன்ற நகரங்களில் பங்களாவாசிகள் புல்வெளி வளர்த்துக்கொண்டிருப்பதும், கற்றாழை வைத்துத் தண்ணீர் விட்டும் வளர்த்து வருகிறார்கள். அது தடுக்கப்பட வேண்டும். நம் நாட்டின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நம் நாட்டு மக்கள் வாழவேண்டும் என்ற நியதி சட்ட மூலமாக இல்லை என்றாலும், வெளியே அந்தக் கருத்தைப் பரவச் செய்யவேண்டும். அப்படிப் பார்க்கிற நேரத்தில் சென்னை போன்ற இடங்களிலும் சரி அல்லது வேறு இடங்களிலும் சரி அரசாங்கப் பணிமனைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் அது பி. டப்வாளியூ. டி. பங்களாக இருந்தாலும் சரி அல்லது டூரிஸ்ட் பங்களாவாக இருந்தாலும் சரி அங்கெல்லாம் பணியாளர்களை வைத்து, தோட்டக்காரர்களை வைத்து தண்ணீர் பாய்ச்சி க்ரோட்டன்ஸ், கற்றாழைகள் போன்றவற்றை வளர்த்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக அங்கெல்லாம் காய்கறிகளைப் பயிரிடவேண்டும் என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் அது ஓரளவு காய்கறி உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் 10,000 டன் கோதுமை நமக்குத்தேவை, ஆனால் நம் கண்ணில் காட்டப்படுவது 4,000 டன்தான். இப்படி 4,000 டன் கோதுமைதான் காட்டப்படுகிறது என்றால் இந்தியாவில் இருக்கிற கோதுமை விளைச்சல் பல இலட்சம் டன் குறைவாக இருப்பதால் இப்போது அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வாங்குவதாக மத்திய அரசு சொல்கிறது.

இது நம் சட்டமன்றத்தின் பிரச்னையாக இல்லையென்று சொன்னாலும், நம் மாநில அரசின் பிரச்னை இல்லையென்று சொன்னாலும், நம் மாநிலத்தில் கோதுமை பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், மக்கள் தேவையான அளவிற்கு கோதுமையை வாங்க முடியாத நிலை இருப்பதால் அது நம் தொடர்புடைய ஒரு பொருள் என்று சொல்கிறேன். அங்கிருந்து வருகிற கோதுமை இங்கிருந்து போகிற பொருளுக்கு பண்டமாற்றுப் பொருளாக இருக்கவேண்டும் என்று பாரதி சொன்னான். ''கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்'' என்று. வடக்கே

இருந்து வருகிற கோதுமைக்கு தெற்கே உள்ள வெற்றிலையைக் கொடுத்து நாம் பண்டமாற்று செய்து கொள்வோம் என்றதொரு நிலை பரதிப் பாடலில் இருக்கிறது. கோதுமை நமக்கு வேண்டிய அளவிற்கு வரமாட்டேன் என்கிறது. பல தகவல்கள் பற்றி பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். க்விண்டல் ஒன்றுக்கு ரூ. 130 கொடுத்து அங்கிருக்கிற விவசாயிகளிடமிருந்து கோதுமையை வாங்கும் அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து, அமெரிக்காவிலிருந்து அதை ரூ. 190—க்கு வாங்குவது என்ற முடிவை எடுக்கிறார்கள் என்று சொன்னால், விளைச்சல் அதிகமாக இருக்கும்போது பற்றாக்குறை எப்படி வந்தது என்பதையும் பார்க்கவேண்டும். அவ்வளவு பணத்தை அங்கே கொடுக்கும்போது அதை இங்கே கொடுத்தால் இங்குள்ள விவசாயி அதிகமாக உற்பத்தி செய்ய மாட்டனா? அந்த ஊக்கத்தை நாம் கொடுக்கக்கூடாதா? அப்படி ஊக்கம் கொடுப்பதன் மூலம் அன்னியச்செலாவணியும் மிச்சமாகும். நமக்கு நிரம்ப கோதுமையும் கிடைக்கும். மத்திய அரசு இன்னும் சிறிது கவனமாக இருந்தால் பஞ்சாப் பகுதியிலிருந்து வெளிநாட்டுக்கு கோதுமை கடத்தப்படுவதைத் தடுக்கலாம். உத்தரப் பிரதேசில் இருந்து வேறு இடங்களுக்குச் செல்கிற கோதுமையை அப்படிச் செய்வதைத் தடுத்து நிறுத்தலாம். சில அண்டை நாடுகளில் கோதுமையின் விலை க்விண்டாலுக்கு ரூ. 250 என்ற அளவிற்கு விலை இருக்கிறது என்ற தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, ரூ 250 கிடைக்கிறது என்ற காரணத்தால் அரசாங்கக் கொள்முதலுக்கு கோதுமையை உள்ளூரிலுள்ள வணிகர்களுக்குக் கொடுக்காமல் வெளிநாட்டுக்கு அது கடத்தப்படுகிறது என்ற காரணத்தால் மத்திய அரசு இதில் சிறிது விழிப்பாக இருந்தால் கூட கோதுமை நமக்கு அதிகமாகக் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து கோதுமையை வாங்கும்போது 70% விவசாயப்பெருங்குடி மக்கள் வாழ்கிற இந்தப் பெரிய ஆசிய கண்டத்தில் வெளியிலிருந்துதான் பொருள்கள், உணவுப் பொருள்களை வாங்கவேண்டுமென்று சொன்னால் ஒரு காலத்தில் பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் சொன்னார்கள். பி. எல். 480 மூலம் நாம் இங்கே கோதுமையையும் உணவுப் பொருட்களையும் வாங்கவேண்டுமென்று சொல்கிறபோது மானத்தோடு வாழவேண்டும் என்று கடற்கரையில் முழக்கமிட்டது என் நினைவிற்கு வருகிறது.

[நண்பகல் 12-00.]

அந்த அளவிறகு வானம் பார்த்த பூமியாக இருந்தாலும் சரி, அல்லது தண்ணீர் பாய்ச்சுகின்ற பூமியாக இருந்தாலும் சரி, நமது மானத்தையும் காக்கின்ற அளவிற்கு, நமது உழைப்பிற்கு ஊக்கம் கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கமும், நம்முடைய மாநில அரசாங்கமும் முன் வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே நான் இங்கே இதனைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.



இன்னும் ஒன்றை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய தேசிய வருமானம் இப்போது 7% அதிகமாக வந்து கொண்டிருப்பதாக என். எஸ். ஆர். ஓ. அதாவது நேஷனல் சாம்பிள் ரிசர்ச் ஆர்கனைசேஷன் சொல்லியிருக்கிறது. அப்படி தேசிய வருமானம் 7% பெருகியிருந்தாலும், விலைவாசி ஏறியிருப்பது 7.4% என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தேசிய வருமானத்தைவிட விலைவாசி உயர்ந்திருக்கிறது என்றால், அதாவது 7.4% விலைவாசி உயர்விற்கும், 7% வருமானம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இடைவெளி இருந்து கொண்டிருக்கிறது. இந்த இடைவெளியை நிரப்புகின்ற முயற்சியில் ஈடுபடும்போது, அதனை எட்டிப்பிடிக்கின்ற ஆற்றல் பணத்தைக் கொட்டி வைத்திருக்கின்ற கோடீஸ்வரர்களாலும், அதற்கு அடுத்தாற்போலுள்ள லட்சாதிபதிகளாலும் முடியுமே தவிர, சாதாரண மக்களால் முடியாது என்ற நிலையிலே என். எஸ். ஆர். ஓ. குறிப்பு காட்டிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, நமது உணவு உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்ல. நம்மைப் பொறுத்த வரையிலே, எல்லா நிலங்களிலும் அதாவது விவசாய நிலங்கள் எல்லாம் இப்போது வீட்டு நிலங்களாக மாறிவருகின்ற நிலைமை இருக்கிறது; பெரிய பெரிய தொழிற்கூடங்கள் கட்டுகின்ற நிலங்களாக நிலைமை மாறி வருகின்றது. அவைகளையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு, நம்முடைய அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல; சில செயற் குறிப்புகளும் வைத்திருப்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். இந்த செயற்குறிப்புகள் எல்லாம் செயல் வடிவங்களாக வர வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தீவுத் திடலிலே கட்டிடம் எழுப்ப வேண்டுமென்ற பிரச்னை வந்த போது, நியாயமான நமது உணர்வுகளை வெளியிட்டோம். என்ன நியாயமான உணர்வுகளை நாம் வெளியிட்டோம்; 'பீரித்திங் ஸ்பேஸ் வேண்டுமென்று கேட்டோம். எல்லா இடங்களிலும் கட்டிடங்களை நிரப்பி விட்டால், காற்று எப்படி வரும் என்று நாம் கேட்டோம். அதைப்போலவே, இப்போது நாம் பார்த்துக்கொண்டே போனால், வடபழனியையும் தாண்டி சென்னை போய்க் கொண்டிருக்கிறது; அதைபோல் தாம்பரத்தைத் தொட்டுவிடும் போலிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில், வயலாக இருந்த இடங்களில் எல்லாம் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று சொன்னால், என்ன செய்கிறார்கள் தெரியுமா? வயலாக இருந்தால், என்ன விலை கொடுத்தும் வாங்குகிறார்கள். அப்படி வாங்கி, அந்த நிலத்தை ஒரு வருஷத்திற்கு சும்மா போட்டுவிட்டால், அது கட்டாந்தரையாக மாறி விடுகிறது. சித்திரையில் உழுதால்தான், ஐப்பசியில் விதைக்க முடியும். எனவே, அப்படி உழாமல் இருந்தால், விதைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, அப்படி ஒரு வருஷத்தில் அப்படியே போட்டுவிட்டால், அந்த நிலம் கட்டாந்தரையாக ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகு அங்குள்ள அதிகாரியைக் கொண்டுவந்து காட்டுகிறார்கள். கட்டாந்

தரையைப் பாருங்கள், கட்டாந்தரையிலேதான் நாங்கள் வீடுகள் கட்ட வேண்டுமென்று கேட்கிறோம் என்கிறார்கள். அதிகாரியும் ஆமாம், ஆமாம் என்று சொல்லி அனுமதியைக் கொடுத்து விடுகிறார்கள். எனவே, உணவுப் பற்றாக்குறைக்கு இதுவும் ஒரு வழியாக ஆகின்றது.

அதைப்போல், ஆக்கிரமிப்பு. முதலிலே ஏரிக் கரைகளை ஆக்கிரமித்து, பிறகு ஏரியிலே ஆக்கிரமிப்பு செய்து, பிறகு ஏரியிலேயே வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள். மழை பெய்கின்ற போது, அந்தத் தண்ணீர் வெளியே போவதற்கு வழியில்லாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்த மழைத் தண்ணீர் தேங்கி, வீடுகளைச் சூழ்ந்து கொள்ளுகிறது. உடனே நாம் என்ன செய்கிறோம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற காரணத்திற்காக, நாமும் உடனே 50 கிலோ அரிசியை ஒரு சாக்கிலே போட்டு, அங்கே கொண்டுபோய் கொடுக்கிறோம். ஏற்கனவே அவர்கள் தங்கள் வீடுகளை அங்கே கட்டுவதால், உணவு உற்பத்தியைக் குறைத்திருக்கிறார்கள். அந்த இடத்திலேஅவர்கள் வீடுகள் கட்டிய காரணத்தால், வெள்ளப் பெருக்கெடுத்து நாம் வேறு அவர்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டுபோய் கொடுக்கிறோம். எனவே, இந்த இரண்டு சூழ்நிலைகளினாலே உணவு உற்பத்தி குறைகிறது. உணவைக் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட இடங்களிலே வீடுகளைக் கட்டக் கூடாது என்ற ஒரு உணர்வினையும் நாம் முதலிலே அவர்களுக்கு கொடுக்கவேண்டும். இந்த உணர்வைக் கொடுக்கின்ற காரியங்களையெல்லாம் நம் அரசாங்கம் செய்வதற்குரிய செயற்குறிப்பினை வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடிகிறது.

அதைப் பால், தவிடு, நீக்கப்பட்ட அரிசியைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள். தமிழக அரசாங்கம் அது தவறு, தவறு என்று கரடியாக கத்திப் பார்க்கிறது. கடிதங்கள் எழுதிப் பார்க்கிறது. செல்லருக்கு அடுத்த டேபேல் ஹல்லருக்குப் போகாதீர்கள் என்று சொல்லுகிறது. உமியை மட்டும் நீங்குங்கள்; தவிட்டை நீக்காதீர்கள். முனை மறைந்து போகாமற் இருக்கவேண்டும். அந்த சிவப்பு நிறமாக இருப்பதுதான், நமக்கு இரத்தத்தைத் தருகிறது என்பதனையெல்லாம் சொல்லியும் பார்க்கின்றார்கள். செல்லர் என்கின்ற அளவிற்கு, அந்த உமியை மட்டும்நீக்கட்டும்;ஹல்லர் என்கின்ற அளவிற்கு தும்பை பூ போல், மல்லிகைப் பூப் போல், நட்சத்திரம் போல் இருக்கவேண்டும் என்கின்ற எண்ணங்கள் தான் நமக்கு எல்லாம் இருக்கிறது. இது தான் சத்துணவு என்று சொன்னால், அந்தச் சத்தம் யாருடைய காதுகளிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

ஒரு மாற்று மட்டும் நாம் செய்யலாம். எல்லா இடங்களிலும் அரிசிக் கடைகளானாலும் சரி, ரேஷன் கடைகளானாலும் சரி, முதலிலே ரேஷன் கடைகளிலாவது தவிடு நீக்கப்பட்ட அரிசியைத் தனியாகவும் தவிடு நீக்கப்படாத அரிசியை தனியாகவும், வைத்து, மக்களை வற்புறுத்தவில்லை, சட்டங்கள் மூலம் கட்டாயப்படுத்தவில்லை, ஆனால் தவிடு நீக்கப்படாத



அரிசி மூட்டைகளிலே ஒரு அட்டையிலே இப்படி எழுதி வைக்கலாம். இதை வாங்குவதன் மூலம் என்னென்ன நன்மைகளைப் பெறுகிறார்கள். இதனை வாங்கிச் சாப்பிடுகின்றவர்கள்உடலுக்கு என்னென்ன நன்மைகள் என்று எழுதி வைப்பதோடு, தவிடு நீக்கப் படாத அரிசியை வாங்குகின்றவர்களுக்கு சப்சிடி கொடுக்கின்ற அளவுக்கு முன்வரவேண்டும்.

## (6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### ஆ. அவைக் குறிப்பிலிருந்து ஓர் அமைச்சரின் சில கருத்துக்கள் நீக்கம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு— இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களில் ஒரு சில பகுதிகள் நீக்கப்பட வேண்டுமென்று கருதுகிற காரணத்தால் அது பற்றிப் பேரவையில் அறிவிப்புச் செய்கிற வரையில் அது குறித்து எந்தச் செய்தியும் வெளியிடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தி சட்டமன்றத்தில் பேசப் பட்டு பத்திரிகைகளுக்குச் சென்று ஏறத்தாழ அச்சாகிவிட்டது. அந்த விவாதம் நடந்து ஏறத்தாழ இரண்டு மணி நேரம் ஆகி விட்ட நிலையில், ஏற்கனவே அச்சாகிவிட்ட நிலையில் இப்படிப் பட்ட கருத்து நாளைக்கு பத்திரிகையில் வெளிவருமானால் அது உரிமைப் பிரச்சினைக்கு உரியதாகாது என்பதை இப்போதே பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்—(ஆ) தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: எனவே, அந்தத் தவிடு நீக்கப்படாத அரிசியை உண்பதால் இன்னின்ன நன்மைகள் ஏற்படும் என்று எழுதி வைப்பதோடு தவிடு நீக்கப்பட்ட அரிசிக்கும் நீக்கப்படாத அரிசிக்கும் விலையிலும் வேறுபாடு இருத்தல் வேண்டும். குறைந்த விலையில் கொஞ்சமாவது அதனைக் குறைத்துக் கொடுக்கிற நேரத்தில் அரசாங்கத்தில் எந்த விதமான வற்புறுத் தலும் இல்லாமல் அவர்கள் இதனை வாங்கும் நிலை ஏற்படலாம். அதோடுகூட நாம் எப்படி மில் துணிக்குக் கொடுக்காத சலுகைகளைக் கைத்தறிக்கு நீட்டிக் கொடுக்கிறோமோ அதைப் பால் இந்தக் கைக்குத்தல் அரிசி போன்ற, ஆனால் தவிடு நீக்கப்

படாத அரிசிக்கு ஓரளவு சப்சிடி கொடுத்தோம் என்று சொன்னால், சலுகை விலையில் கொடுப்பது என்று சொன்னால், கொஞ்சம் குறைத்துக்கொடுப்பது என்று சொன்னால், மருந்துக்கு செலவழிக்கும் பணமும், அதற்கு அரசாங்கம் செலவழிக்கும் ஏராளமான நிதியும் கொஞ்சம் குறைத்துச் செலவழிக்கும் சூழ்நிலை உருவாகும். எனவே, தவிடு நீக்கப்படாத அரிசியை உண்பதற்கு நாம் ஊக்கத்தை க் கொடுப்போம்.

எல்லாவற்றுக்கும் மேலாக அரிசி விலை ஏறுவது என்பது உண்மை. விலைவாசி ஏற்றத்திற்குக் காரணங்கள் இருப்பது உண்மை. நாம் உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லுவது உண்மை. நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லும்போது உற்பத்தியைப் பெருக்குகிற விவசாயிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் அவர்களுடைய விலை நிர்ணயிக்கப் பட வேண்டுமென்பது உண்மை. ஆக, அவர்களுக்குக் கட்டு படியாகக் கூடிய விலை மட்டும் என்று சொல்லவில்லை; நவதானிய உற்பத்தி செய்கிறவர்களானாலும், பருப்பு போன்ற வற்றை உற்பத்தி செய்கிறவர்களானாலும், அரிசி போன்ற வற்றை உற்பத்தி செய்கிறவர்களானாலும் இவர்களுக்குக் கட்டு படியாகும் விலை என்று மட்டும் நாம் செல்லவில்லை, ஆதாயம் கிடைக்கும் வகையில் விலை கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்கிறோம். ஆனாலும் ஆதாயம் கிடைக்கிற விலையை நிர்ணயிக்கிறபோதும் இடுபொருள்களின் விலை அதிகப்பட, அதிகப்பட உற்பத்தி செய்கிற விவசாயிக்கு வருவாய் குறைந்து கொண்டே இருக்கும். மேலும், மேலும் அவர்களுடைய விளை பொருள்களுக்கு விலையை நிர்ணயிக்க நிர்ணயிக்க இங்கே வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடிக் கொண்டே போகிறது. வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடிக்கொண்டு போகப் போக அரசாங்க ஊழியர்கள் ஆர்கனைஸ்டு செக்டார் என்று சொல்லக் கூடிய தொழிலாளர்கள், மற்றவர்கள் பஞ்சப்படியைக் கூட்டிக் கொண்டே போவார்கள். பஞ்சப்படியைக் கூட்டிக் கொடுக்கக் கொடுக்க அரசாங்கத்திலிருந்து பெறும் நிதி அதற்கென்று ஒதுக்கப்பட வேண்டும். ஆக, இடுபொருள் விலை அதிகமாக அதிகமாக விலை ஏற்றி வைத்திருந்தாலும் விவசாயிக்குக் கிடைக்க வேண்டிய விலை கிடைக்கவில்லை. பஞ்சப்படி உயரு கின்ற காரணத்தால் அரசாங்கத்திற்கும், தொழிற்கூடங்களை நடத்துகிறவர்களுக்கும் அதிகப் பணம் செலவாகிறது. அது யாருக்கும் மிச்சமாவதில்லை. அதனால் அவர்களுக்கு நன்மை இல்லை; ஆர்கனைஸ்டு செக்டாரில் இருக்கிறவர்களுக்குப் பஞ்சப் படி கொடுத்துவிட்டு இப்படித்தொழில் கூடங்களிலே, அரசாங்கப் பணிமனைகளிலே வேலை செய்யாமல் இருக்கிறார்களே, சாதாரணமானவர்கள் — அவர்களுக்கு இந்த உணவுப் பொருள் விலையை எட்ட முடியாமல் போய்விடுகிறது. ஆக, விவசாயிக்கும் நன்மை இல்லை, தொழிலாளர்கள், பணியாளர்களுக்கும் நன்மை இல்லை; இவைகளில் இல்லாத மற்றப் பொதுமக்களுக்கும் நன்மை இல்லை என்ற சூழ்நிலை உருவாவதற்குப் பதிலாக, அரசாங்கம் இடுபொருள்கள் உரம், பூச்சி மருந்து போன்ற



வற்றுக்கு மானியமாக அதிகமான நிதியை ஒதுக்க வேண்டும். விவசாயிக்கு அந்த விலையில் பாதி என்றோ, 30 விழுக்காடு என்றோ, 40 விழுக்காடு என்றோ சொல்வோமானால் அவர் களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியமும் கிடைத்து விடும், ஆதாயமும் கிடைத்து உற்பத்தி செய்கிறவர்கள் நல்ல வருமானம் கிடைத்து செலவு குறைவாக இருக்கும் காரணத்தால், இங்கு வாழ்க்கைச் செலவும் அதிகப்படாது, அதனால் பஞ்சப்படி என்ற பிரச்சினை வராது. அந்த ஆர்கனைஸ்டு செக்டாராக இருப் பவர்கள் பிரச்சினையும் இராது, இவற்றைப் பரிசிலித்துப் பார்ப்போமானால், அந்த விவசாயிகளின் விளைபொருள்களுக்கு அதிகமான ஊக்கம் கொடுப்பதில் விலை நிர்ணயம் செய்வது மட்டுந்தான் என்பது இல்லை; அதையும் இப்போது செய்யவேண்டும்; அதைச் செய்வதோடு இன்னொரு மாற்று வழியும் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வெள்ளை அறிக்கையில் இருக்கும் சேதிகள் பல நல்லனவாக இருப்பதாலும் ஊக்கமுடைய திட்டங்களைத் தருகிற காரணத்தாலும் இதனைப் பற்றிய கருத்தை இதோடு முடித்து அமர்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12·10]

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட வெள்ளை அறிக்கையில் உள்ள சில கருத்துக்களை ஆதரித்து ஒரு சில விஷயங்களை என்னுடைய கட்சியின் சார்பாக சொல்ல விரும்பு கிறேன். இந்த அறிக்கையிலே எல்லாப் பொருட்களும் எல்லா இடங்களிலும் கிடைக்கிறது என்று இருக்கிறது. உண்மையிலேயே அது வரவேற்கக் கூடியது தான். இருந்தாலும்கூட பொருட்கள் கிடைக்கின்றன என்பது தவறு, சீரான விலையிலே கிடைக்கின் றனவா என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

திரு குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று ஒவ்வொரு பொருளின் விலையும் ஏறிக்கொண்டே போகிறது. பருவ மழை தவறியிருக்கின்ற நேரத்திலே பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலத்திலே நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பாதிப்பான சூழ்நிலையிலே மத்திய அரசிடமிருந்து ஒரு மாதத்திற்கு 1 இலட்சம் டன் அரிசி தரவேண்டுமென்று நம்முடைய அரசு மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் ஸ்டேட் அமைச்சர் திரு ஆர். வி. எஸ். அவர்களும் திருமதி இந்திரா காந்தி அவர்களிடத்திலே இதுகுறித்து சிபாரிசு செய்திருப்பதாகவும் அவர்கள் கொடுப்பார்கள் என்றும் சொல்லி யிருப்பதாக பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. அதை அவர்கள் முழுமையாகக் கொடுத்திருப்பார்களானால் இன்னும் முழுமையான அளவுக்கு மக்களுக்குக் கொடுப்பதற்கான வாய்ப்பு

ஏற்பட்டு இருந்து இருக்கும். 7 மாதங்களுக்கு 3.45 லட்சம் டன் தான் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இநத அரசு எப்படிச் சீராகச் செய்ய முடியும்? இன்னும் அதிகமாகக் கொடுத்திருப்பார்களானால் சிறந்ததாக இருக்கும் என்பதைத தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல் விலை 65 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு 145 ரூபாய் விற்கப்படுகிறது. ஆனால் அந்த அளவுக்கு பாடுபடுகிற உழைப்பாளிகளுக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கிறதா என்றால் கிடைக்கவில்லை, போதிய விலை கிடைக்கவில்லை, உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு. அது மட்டுமல்ல, யார் வாங்குகிறார்களோ, தொழிலாளர்கள், மற்றும் ஏழைகள், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு எல்லாம் அரிசி நியாயமான விலையில் கொடுக்க முடியவில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. டவுன்களிலும் கிராமங்களிலும் என்னதான் நியாய விலைக் கடைகள் வைத்து விநியோகம் செய்தாலும்கூட கோதுமைக்கு அவர்கள் தருகின்ற விலையை, கரும்புக்கு அவர்கள் தருகின்ற விலை ய நெல்லுக்குத் தருவதில்லை. தமிழகத்திலே உள்ள விவசாயிகளைப் பாதுகாக்கிற முறையிலே நெல்லுக்கு அதிக விலை கொடுத்தால் அது பாடுபடுகிறவர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். அதைக் கொடுப்பதற்குப் பதிலாக மத்திய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் சொல்கிறார்கள், தென் மாநிலங்களைக் காட்டிலும் வட மாநிலங்களிலே நெல் நல்ல முறையிலே உற்பத்தி செய்யப்படுகிறது, இந்தியாவிலே உற்பத்தியாகிற நெல்லில் 75 சதவீதத்தை வட மாநிலங்கள் உற்பத்தி செய்கின்றன என்றும் தமிழ்நாட்டிலே நெல் உற்பத்தி செய்யத் தெரியவில்லை, என்றும் சொல்கிறார்கள் என்றால் நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே உள்ள விவசாயிகள் கடுமையாக உழைக்கக்கூடியவர்கள் என்பது மட்டுமல்ல, நல்ல முறையிலே நெல் சாகுபடி செய்யக்கூடியவர்கள், அவர்களுக்கு நல்ல விலை கொடுக்காமல் பஞ்சாபிலே வந்து பாருங்கள் என்று சொன்னால் நன்றாக இருக்காது என்பதை நான் இந்த அவையின் மூலமாக மத்திய அரசிற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஏக்கரிலே நெல் உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் சில ஆண்டுகளுக்கு முன்பாக 45,48 ரூபாய் என்று விற்ற உரம் இன்றைக்கு காம்ப்ளக்ஸை எடுத்துக் கொண்டால் 150 ரூபாய் என்றும் யூரியா 127 ரூபாய் என்றும் பொட்டாஷ் 68.20 ரூபாய் அளவிற்கும் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி கண்ணுக்கு எட்டாத தூரத்தில் உரத்தின் விலை உயர்ந்து கொண்டிருக்கிறது. உழுபவனுக்கு கூலிகொடுத்து உற்பத்திச் செலவு அதிகமாகச் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் மத்திய அரசு இறங்கி வந்து ஒரு கண்ணுக்கு வெண்ணெய் ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்ற முறையில் இல்லாமல் சீராக விலையை கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், கோதுமைக்கு எந்த அளவிற்கு மானியம் கொடுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு நெல்லுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்





குடும்ப அட்டைகளைக் கொடுத்து நியாயவிலைக் கடைகள் மூலம் நாம் விநியோகம் செய்து வருகிறோம். கிராமப்புறங்களிலே இதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நகர்ப்புறங்களிலே கார்டுகள் நல்லமுறையிலே கொடுக்கப்பட்டு 5 கிலோ சீனி என்ற அளவிலே கொடுக்கப்படுகிறது. ஆனால் கிராமப்புறங்களிலே ஒரு கிலோ, அரைக்கிலோ என்ற அளவிலே தான் கொடுக்கப்படுகிறது. எல்லா மக்களுக்கும் அட்டைகள் கொடுக்கப்படவில்லை. ஆகவே எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்து 2 கிலோ சீனி கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். கிராமப்புறங்களிலே எல்லாம் இப்பொது காபி, டீ குடிக்காதவர்களே இல்லை என்று சொல்லலாம். ஆகவே அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும். மைதா, கோதுமை, ரவா ஆகியவற்றையும் நகர்ப்புறங்களைப் போன்று கிராமங்களுக்குக் கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும். பாம் ஆயில் வெளியிலே விற்கப்படுகிற விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இங்கே ஒரு கிலோ 4,5 ரூபாய் குறைத்து விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த விலையில கிராமப்புற மக்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஒரு மீட்டர்துணி, காடா, 5 ரூபாய்க்கு மேலே வெளியில் விற்கப்படுகிறது.

ஆனால் கிராம சொசைட்டிகளின் மூலமாக 1 ரூபாய் 90 காசோ அல்லது 2 ரூபாய் 90 காசோ எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. அந்த அளவிற்குக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு கொடுக்கின்ற அளவை இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 8 ரூபாய் சொச்சத்திற்கு விற்கப்படும் வேட்டிகளை ஏழை மக்கள் வாங்குகிறார்கள். அதையே வெளியில் வாங்க வேண்டுமென்றால் 16 ரூபாய், 20 ரூபாய், 22 ரூபாய் என்ற அளவிற்குக் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே, இந்த அளவை அதிகப்படுத்தினால் அவர்களுக்கு நல்ல துணி கிடைக்க வழியேற்படுவதற்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற உழைக்கும் விவசாயிகளுக்கு இனிமேல் எல்லா அத்தியாவசியப் பொருட்களையும் தனியார் துறைக்கு விடாமல் அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொண்டு உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் அந்த சொசைட்டிகளின் மூலம் விநியோகம் செய்தால் நாம் நினைக்கக் கூடிய அளவிற்கு மக்களுக்குச் சீரான வகையில், குறைந்த விலையில் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், எங்கள் ஏரியாவில் திராட்சை நிறைய வருகிறது. அரை ஏக்கர், 30சென்ட் 40 சென்ட் என்ற அளவில் போடுகிறார்கள். அங்கே ஒரு

கிலோ திராட்சை 2½ ரூபாய், 3 ரூபாய்க்குக் கொடுக்கப்படுகிறது. சிலசமயங்களில் ஒன்றே முக்கால் ரூபாய், இரண்டு ரூபாய்க்குக் கூட விற்கும். அந்த அளவிற்குக் குறைந்த விலைக்கு அங்கே வாங்கி வந்து சென்னையிலே ஒரு கிலோ 6 ரூபாய், 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கும் பயன் இல்லை, உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை; ஆனால் இடையிலே இருக்கின்றவர்களுக்கு அந்த இலாபம் செல்கிறது. இப்படி அதிக இலாபத்தை வைத்து அவர்கள் விற்றால் அது இலாபமாகக் கணக்கிடப்படுகிறது. ஆனால் ஒரு அரசாங்க அதிகாரி 50 ரூபாய் வாங்கி விட்டால் அதை இலஞ்சம் என்று கருதி கடுமையான தண்டனை கொடுக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட இடைத்தரகர்கள் இரண்டு ரூபாய்க்கு வாங்கி ஆறு ரூபாய்க்கு விற்கும் நிலையில் நான்கு ரூபாய் இலாபம் பெறுகிறார்கள் 100 ரூபாய்க்கு நெல்லை வாங்கி 150 ரூபாய்க்கு விற்றால் 50 ரூபாய் இலாபம் கிடைக்கும். ஆனால் அதை நாம் இலாபம் என்று விட்டுவிடுகிறோம். இதையெல்லாம் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் குடிசைகளில் வாழும் மக்கள் தங்களுக்கான வீடுகளைக் கட்டி தரையில் சிமென்ட்டால் மொழுகலாம் என்று நினைக்கிறார்கள். எங்கள் ஏரியாவைப் பொறுத்தவரையில் பர்மிட்டை ஒழுங்காகக் கொடுத்துவிடுகிறார்கள்; அதில் தொந்தரவு இல்லை. ஒரு மூட்டை சிமென்டின் விலை 28 ரூபாய் 40 பைசா. ஆனால் அதே சிமென்ட் மூட்டையை ஒரு ஏழை விவசாயி வெளிக் கடையிலே வாங்க வேண்டுமென்றால் 30 ரூபாய் 32 ரூபாய்க்கு அல்ல, 80 ரூபாய் 85 ரூபாய்க்கு வாங்கும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு கள்ள மார்க்கெட்டிலே விற்கிறார்கள். நாம் நல்லெண்ணத்தோடு நியாயமான விலையில் ஏழைகளுக்கு உரம் கிடைக்க வேண்டும், சிமென்ட் கிடைக்க வேண்டும் என்று இந்த அரசு செய்தாலும்கூட, இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையில் இடையிலே இருப்பவர்கள் ஒரு மூட்டை சிமென்டின் விலை 80 ரூபாய், 85 ரூபாய் என்று விற்கிறார்கள். இதைக் கண்டுபிடித்து இந்தச் சமூகத் துரோகிகளுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும், ஏதோ ஒரு மூட்டை சிமென்டின் விலையை 30 ரூபாய் 32 ரூபாய்க்கு விற்றால்கூடப் பரவாயில்லை. ஆனால் இப்படி ஒரேயடியாக அதிக விலைக்கு விற்கிறார்கள். இதற்கெல்லாம் தடைவிதித்தால் நாம் நினைக்கின்ற வகையில் மக்களுக்குச் சீரான முறையில் எல்லாப் பொருட்களும் குறைந்த விலையில் கிடைப்பதற்கான வசதி இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியில் மழை இல்லை; ரொம்பவும் வறண்டிருக்கிறது. குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப்படவில்லை. புஞ்சை நிலங்களில் இரண்டு, மூன்று ஆண்டுகளாக விளைவிக்கப்பட முடியாத நிலை இருக்கிறது. மழையில்லாமல் 80 சதவிகித விவசாயக் கிணறுகள் வறண்டு போய் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது எனவே, அந்தப் பகுதியை பஞ்சப் பிரதேசமாகச் சொல்லி, இரண்டொரு மாதங்களுக்குள்ளாக அரசாங்கம் பணத்தை ஒதுக்கி நிவாரணப்



பணிகளிலே ஈடுபட்டு கிணறுகளை ஆழப்படுத்துவது போன்றப் பணிகளைத் துவக்கினால் அங்கேயுள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கு மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் நான் முந்தாநாள் பஸ்ஸிலே சென்றுகொண்டிருந்தபொழுது ஒரு விவசாயி சொன்னதைச் சொல்கிறேன். இதை என் சார்பிலேயோ எங்கள் கட்சியின் சார்பிலேயோ சொல்வதாக அமைச்சர்களோ அல்லது அரசாங்கமோ நினைத்துவிடக் கூடாது அவ்வாறு சொன்ன விவசாயி நான் இருப்பதைப் பார்க்கவில்லை. அவர் சொல்கிறார், இந்த அரசாங்கம் நமக்கு கஞ்சா உற்பத்தி செய்ய பர்மிஷன் கொடுத்துவிட்டால் கஞ்சா உற்பத்தி செய்தால் நமக்கு நிறைய விலை கிடைக்கும் என்று சொல்கின்றார் அந்த அளவிற்கு கிராமப்புறங்களில் இன்றைக்கு மக்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் ஆகவே தான் நான் அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்த அத்தியாவசியப் பொருட்கள் அத்தனையும் அரசாங்கத்தின் மூலம் விநியோகம் செய்ய முழுமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அரசாங்கமே உணவுப் பொருட்களை வாங்கி விநியோகம் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

[பிற்பகல் 12·20]

மத்திய அரசும் ஏழைகளுக்குப் பல காரியங்களைச் செய்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கும் நம்முடைய அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நெல்லுக்கு அதிக விலை கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த வெள்ளையறிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

8. அமைச்சரின் அறிக்கை.

மின்சாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்பெறுவது

மாண்புமிகு திரு. ஏ. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமப் புறங்களில் விவசாய மின் இணைப்புகளுக்கு பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரம் முறை வைத்து மின்சக்தி தரப்படுகிறது. அதே போல் உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின் சக்தி வழங்குவதில் நெரிசல் நேரத் தடைகள் (peak hour restrictions) அமுலில் உள்ளன. மின் உற்பத்தியில் ஒரு சீரான நிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளதால் மேற்கூறிய கட்டுபாடுகள் அனைத்தும் 1981 செப்டம்பர் 1 திங்கள் முதல் நாளிலிருந்து அறவே நீக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதன்மூலம் விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேரமும் மின்சக்தி எவ்விதத் தடையுமின்றி வழங்கப்படும். மீண்டும் இவ்வாண்டு நவம்பர் திங்களில் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிய அவசியம்பற்றி முடிவு செய்யப்படும்.

(7) அரசினர் தீர்மானங்கள்(ஆ)—தொடர்ச்சி

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமை பற்றியும் இன்றியமையாப் பொருள்கள் விலை நிர்ணயம் பற்றியும் இந்த மாமன்றத்திலே அளிக்கப் பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையின் மீதும் நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மிகப்பெரிய நெருக்கடியில் இப்படி ஒரு அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறீர்கள். இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இன்னும் சொல்லப் போனால், இந்தியா முழுவதும், பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற மிகப்பெரிய விலைவாசி உயர்வும், அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதையும் நாம் உன்னிப்பாகக் கவனித்தாக வேண்டும். அதிலும் குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த வரையில் நாம் மிகுந்த அக்கறையோடு கவனிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால், இந்திய நாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் இருக்கிற மக்கட்தொகை 48 சதவீதம் என்கின்ற அளவு இருக்கிறதென்றால், தமிழகம் இந்திய நாட்டினுடைய அந்தச் சராசரியைவிட மிகவும் உயர்ந்த அளவில் இருக்கிறது. இங்கே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்கள் அதிக அளவில் இருந்து கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களிலே ஏறத்தாழ 62.98 சதவீதமும் நகரப் புறங்களில் ஏறத்தாழ 52.22 சதவீதமும் வறுமைக் கோட்டின் கீழே வாழ்கின்ற நிலையில் தமிழக மக்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்த வரையில், தமிழகத்தை எடுத்துக் கொள்வோமானால், அகில இந்திய சராசரி 8.5 என்றிருக்கிற அதே நேரத்தில், தமிழகத்தினுடைய சராசரி அதைவிட ஒருமடங்கு அதிகம் என்கிற அளவுக்கு, ஏறத்தாழ, 16.1 என்ற அளவுக்கு தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், நம்முடைய தமிழக சர்க்கார் மிகவும் ஜாக்கிரதையாக, மிகவும் எச்சரிக்கையாக இந்த உணவு நிலைமையில் ஏற்பட்டிருக்கிற, அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கிடைக்காத சூழ்நிலையை அவர்கள் கவனிக்க வேண்டும். இதற்கு முக்கியமாக முழுப் பொறுப்பும் இந்த மாநில சர்க்காருக்கு இல்லையென்று சொன்னாலும்கூட, முக்கியமான அத்தியாவசியமான பொருள்களின் விலையைக் குறைப்பதற்கான முழு அதிகாரங்களும், முழுத் தன்மைகளும் இந்த மாநில சர்க்காருக்கு இல்லை என்று சொன்னாலும், இந்த மாநில சர்க்காருடைய பங்கு இல்லாமல் இல்லையென்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கனவே வெளி மார்க்கெட்டில் உணவு பொருள்களின் விலை குறிப்பாக அரிசியினுடைய விலை, 1980 நவம்பர்—டிசம்பர் மாதங்களி லிருந்தே ஏறுகின்ற முகமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. அதைக் கண்ட நேரத்திலே, இந்தச் சூழ்நிலையில் நம்முடைய தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால்,





அதை ஒரு போர்க்கால நடவடிக்கையாக எடுத்துக்கொண்டு, மத்திய சர்க்காரோடு சண்டையிட்டாவது இந்த மாநிலத்தினு டைய பிரச்னையைத் தீர்த்திருக்க வேண்டும். அதல்லாமல் ஒரு சுணக்கம் காட்டி விட்டார்களோ என்ற சூழ்நிலையை நான் இங்கே எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. அந்தப் பொறுப்பு ஒரு வகையில் இந்த மாநில அரசைச் சார்ந்தது என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், வெளிச் சந்தையில் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து கொண்டே போகின்ற நேரத்தில், ரேஷன் கார்டுகளையே நம்பிக்கொண்டிருக்கின்ற வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுடைய ரேஷனுடைய அளவு குறைக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் 24 கிலோ ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு என்று இருந்தது இப்பொழுது 20 கிலோவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

20 கிலோ என்று சொன்னாலும் கூட, அதை அதிகபட்சம் என்று சுட்டிக்காட்டி, ஒரு தனி நபருக்கு ஒரு மாதத்திற்கு 4 கிலோ ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு 2 கிலோ என்ற அளவுக்கு வரம்பு வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி பார்க்கும்போது ஒரு தனி நபருக்கு ஒரு நாள் ஒன்றுக்கு 135 கிராம் கூட அரிசி கிடைக்காத நிலை இன்றைக்கு இருக்கிறது. உங்கள் வெள்ளை அறிக்கையில் 3.15 காசிலிருந்து 3.25 காசு வரை வெளிமார்க்கெட்டில் அரிசி விலை விற்கிறது என்று சொல்லி இருக்கிறீர்கள். இன்றைக்கு உண்மையிலேயே 3.15 காசுக்கு, 3.25 காசுக்கு கிடைக்கிறதா என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்கவேண்டும். ஏறத்தாழ 3.80 3,90 காசுக்குத் தான் விற்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி 4.00 ரூபாய்க்குக் கூட இப்போது விற்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிய நிலையை இப்போது சொன்னால், முன்னாலே இருந்த ஜனதா ஆட்சியின் போது ஒரு மாதத்திற்கு 30 கிலோ வழங்கப்பட்டு வந்தது. அதை 24 ஆக ஒரு 3 மாதத் திற்கு முன்னாலே குறைத்துவிட்டார்கள். இன்றைக்கு மீண்டும் அதை 20 கிலோவாகக் குறைத்துவிட்டிருக்கிறார்கள். மாநிலம் முழுமையாகக் குறைக்கவேண்டியிருக்கிறது அதனாலே குறைத்து விட்டோம் என்று காரணம் காட்டுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் அரிசிப் பற்றாக்குறை இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் இந்த மாவட்டம் கேரளமாநிலத்திற்குப் பக்கத்தில் இருக்கின்றது. கேரள மாநிலத்தின் எல்லைப் பகுதி யிலே இருக்கிற காரணத்தால் மற்ற மாவட்டங்களைவிட இந்த மாவட்டத்தில் விலைவாசி உயர்ந்திருக்கிறது. அப்படி உயர்ந்த காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வய்ப்பு இல்லை. வருமானமும் இல்லை. 100க்கு, 99 பேர்கள் ஏழை எளிய மக்கள். அந்தப் பகுதி மக்கள் ரேஷன் அரிசியை நம்பி வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். அதை கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சரிடமும் அரசாங்கத்

தினிடமும் முறையிட்டதன் பேரில், அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக விளவங்கோடு கல்குளம் பகுதிக்கு மட்டுமாவது இந்த அரிசியினுடைய அளவு குறையாமல் இருக்கும் என்ற உறுதி மொழியை அளித்தார்கள். அந்த உறுதி மொழியை இன்று காற்றில் பறக்க விட்டிருக்கிறார்கள் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் நிலையைக் கண்டு, அங்கே தாண்டவமாடும் வேலையில்லா திண்டாட்டத்தைக் கருத்தில் கொண்டு அங்கே முழு ரேஷன் கொடுக்க அரசு முன் வர வேண்டும். அப்படி கொடுக்க முடியாமல் பிரச்சினை எற்பட்டால், முன்னாலே கொடுத்திருந்த நிலையிலாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டு தேவையான அளவுக்கு அரிசி வழங்க இந்த சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எங்களைப் போன்றவர்களின் கணிப்பெல்லாம், அந்த அரசுக்கு இந்த நாட்டு மக்களைப் பற்றிக் கவலையில்லை. இன்றைக்கு மத்திய அரசு முதலாளிகளின் ஏஜெண்டாக முதலாளிகளின் கைக்கூலியாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற காரணத்தால். விலைவாசிக் கொள்கையில்திட்டவட்டமாக முடிவை எடுக்க முடியவில்லை. அதனாலேதான் விலைவாசி உயர்ந்து இருக்கின்றது. நான் ஆதாரத்தோடு சுட்டிக்காட்ட முடியும். எல்லா பொருள்களின் விலைகளும் உயர்ந்திருக்கின்றன. நான் மத்திய சர்க்காருடைய சிவில் சப்ளைஸ் மினிஸ்டிரி கொடுத்த புள்ளிவிவரங்களை இங்கே கொடுக்க ஆசைப்படுகிறேன். அதன்படி ஏறத்தாழ 51 அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. அவர்கள் கொடுத்திருக்கின்ற அளவுக்கு அனைத்துப் பொருள்களின் மொத்த விற்பனைக் குறியீடு எண். 1979 ஜூலையிலே 211.7, இப்போது 1981 ஜூலையில் அவர்கள் கணக்குப்படி பார்த்தால் 283.7; ஏறத்தாழ 72 புள்ளிகள் இன்றைய தினம் அத்தியாவசியப் பொருள்களில், 51 அத்தியாவசியப் பொருள்களில் உயர்ந்திருக்கின்றது. ஏறத்தாழ 30 சதவீதம் உயர்ந்திருக்கின்றது. குறிப்பாகப் பார்ப்போமானல் 1981 மார்ச்சிலே இருந்து ஜூலை வரையில் எடுத்துக் கொண்டால் அரிசியின் விலை 19.6 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

[பிற்பகல் 12.30]

காய்கறிகள் 27.2 சதவீதம் உயர்ந்திருக்கிறது மிளகாய் 40.7 சதவீதம் உயர்ந்திருக்கிறது. நாட்டுச் சர்க்கரை 13சதவீதம் உயர்ந்திருக்கிறது. கடலெண்ணெய் 14 சதவீதம் உயர்ந்திருக்கிறது. நான் சொல்ல வேண்டுமானால், இவைகள் உயர்ந்திருக்கின்றன என்று சொல்ல முடியவில்லை, இவைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன். அதுவும் மத்திய சர்க்கார் தான் அதை





உயர்த்தியதற்கு காரணம் என்று குற்றமாக சொல்ல முடியும் இங்கே நம்முடைய மாநிலத்திலே கோதுமை கேட்கிறோம் ஏறத்தாழ 3 ஆயிரம் டன் ஒரு மாதத்திற்கு அளித்திருந்தார்கள் 4 ஆயிரம் டன்னாக உயர்த்தியிருக்கிறோம் என்று நகலில் வருகிறது. 10 ஆயிரம் டன் ஒரு மாதத்திற்குத் தேவைப்படுகிறது அங்கே அரசாங்கத்திலே 'பம்பர் கிராப்', அதிகமாக விளைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள், அதிகமாக விளைந்திருக்கிற கோதுமையை அவர்களால் பெற்றுக் கொள்ள, கையகப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அங்கே இருக்கிற விவசாயிகள் ஒரு குவிண்டால் கோதுமைக்கு அதிகபட்சமாக 160 ரூபாய் தான் கேட்கிறார்கள். ஆனால் அதற்கு அமெரிக்காவில் 1 குவிண்டாலுக்கு 80 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். விளைந்த கோதுமை எங்கே போயிற்று என்று நான் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாப்பிலே, ஹரியானாவிலே விளைந்த கோதுமையை-புட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவிற்கு உணவு கார்ப்பரேஷனுக்குக் கொள்முதல் செய்து கொடுக்கக்கூடிய ஏஜெண்டுகள் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்காமல் மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு, அரசாங்கத்தில் கொடுக்கப்படுகிற 'சப்போர்ட்டிங்' விலையை விட இரண்டு இரண்டரை மடங்கு அதிகமாக லாபம் சம்பாதித்து இருக்கிறார்கள்.

நான் இன்னும் நேரடியாகச் சொல்வேனானால் மத்தியில் ஆளுகிற கட்சியைச் சார்ந்தவர்கள், அரசாங்கத்திலே இருக்கிற லஞ்ச லாவண்ய அதிகாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதில் தரகர்களும் சேர்ந்து 80 கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதித்து இருக்கிறார்கள்; இது தான் உண்மை, அப்படியிருந்தால். எங்களுக்கு 10 ஆயிரம் டன் கோதுமை வேண்டுமென்றால் எப்படி வரும்,

இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு அவர்களுடைய அதிகாரத்தில் வைத்திருக்கிற பொருள்களின் விலைவாசி உயர்வை நான் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது, சர்க்கரை விலை உயர்ந்திருக்கிறது, உயர்ந்திருப்பது மட்டுமல்ல மல் ஏறத்தாழ 2,5 லட்சம் டன் நாம் இறக்குமதி செய்யப் போகிறோம், கிட்டத்தட்ட 5½, 6 ரூபாய் வரையில் 1 கிலோ விற்கிற அளவில், 1 குவிண்டாலுக்கு 560 ரூபாய் என்ற அளவில் சர்க்கரையை நாம் இறக்குமதி செய்யப் போகிறோம். இந்த நிலையில் மத்திய சர்க்கார் என்ன சொல்கிறது என்று சொன்னால், சர்க்கரை ஆலை முதலாளிகள் பாதிக்கப்படக் கூடாதாம். ரூ7, 7.30 என்ற விலையில் சர்க்கரை வெளி மார்க்கெட்டில் விற்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்கார்சொல்கிறது அப்படியானால் இந்த விலைவாசி உயர்வு தானாக வந்ததா, ஏற்றப்பட்டதா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிமிண்ட் ஆலை அதிபர்கள் போய் கேட்டிருக்கிறார்கள், விலையை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். சிமிண்ட் விலை 16 சதவீதம் உயர்த்தி கொடுக்கப்பட்டிருக்கிறது பெட்ரோலிய பொருள்களின் விலையை ஜனவரி மாதத்தில் உயர்த்தினார்கள். மறுபடியும் ஜூலையில் உயர்த்தினார்கள், இதற்கு அடிப்படையான காரணம் என்ன? ஓ.பி.இ.சி. என்று சொல்கிறார்களே அவர்கள் ஜனவரிக்கு பின்னால் விலையை உயர்த்தியது காரணமா? இல்லை. இன்றைக்கு அவர்கள் போட்டிருக்கிற் பற்றாக்குறை பட்ஜெட்டை சரிக்கட்டுவதற்கு, இந்த நாட்டு மக்களுடைய தலைகளிலே அந்த சுமையை ஏற்றி யிருக்கிறார்கள். இதை நான் குற்றமாகச் சாட்ட விரும்புகிறேன். மருந்துகளின் விலையை ஏற்றியிருக்கிறார்கள். அலுமினியத்தின் விலையை ஏற்றியிருக்கிறார்கள். ஏன்? ஆலை அதிபர்கள், முதலாளிகள் இவர்களுக்கெல்லாம் விலையை உயர்த்துகின்ற இந்த சர்க்கார் இங்கே வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற 48 சதவீதம் ஏழை எளிய மக்களுக்கு இதைக் குறைத்துக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் குறைத்திருக் கிறார்கள். அதை நிச்சயமாக நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். இன்றைக்கு மத்தியிலே ஆளுகின்ற இந்திரா காங்கிரஸ் சர்க்கார் ஒன்றே ஒன்றை மட்டும் குறைத்திருப்பதை நிச்சயமாக நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இன்றைக்கு அவர்கள் ரூபாயினுடைய மதிப்பைக் குறைத்திருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1947 என்ற ஆண்டின் அடிப்படையை வைத்து நாம் பார்ப் போமானால், 1967-ல் ஒரு ரூபாயின் மதிப்பு 47.63 காசுகள் என்று இருந்தது. 1971-ல் அது 37.83 காசுகளாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. 1977-ல் அது 22.31 காசுகளாகக் குறைந்து, இன்றைக்கு இருக்கின்ற கணக்கைப் பார்த்தால் 1980-ல் 19 காசுகளாக அது குறைந்திருக்கிறது. இன்றைக்கு விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிற விலைவாசியையும் பணப்புழக்கத்தையும் பார்ப்போமானால் இன்றைக்கு உண்மையிலேயே ஒரு ரூபாயி னுடைய மதிப்பு 10 காசுகள் என்ற அளவுக்கு வந்துவிடும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் இந்த நிலையில் இந்த விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

வேண்டுமென்றே தவறான முறையில் மக்கள் தலையிலே சுமைகளைச் சுமத்தி, தேர்தலிலே தவறான வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் மக்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அப்படி மக்களைப் பற்றிக் கவலைப்படாத ஒரு சர்க்கார் இருக்கும் போது எப்படி விலைவாசியைக் குறைக்க முடியும்? ஆனால் மத்திய நிதி அமைச்சர் சொல்கிறார். மற்ற நாடுகளைவிட, அண்டை நாடுகளை விட இங்கே விலைவாசி ஒன்றும் பெரிதல்ல பணப்புழக்கம் ஒன்றும் பெரியதல்ல என்று. தயவுசெய்து அவர்கள் விலைவாசி புள்ளிவிவரங்களை மட்டும் சொல்லி, மக்களை ஏமாற்ற வேண்டாம்.





மற்ற நாடுகளின் தனி நபர் வருமானத்தைப் பார்க்க வேண்டும். மற்ற நாடுகளின் தனி நபர் வருமானம் என்ன? நம்முடைய நாட்டில் தனி நபர் வருமானம் என்ன? நம்முடைய நாட்டில் தனி நபர் வருமானம் 150 அமெரிக்கன் டாலராக இருக்கும் நேரத்தில் நம்முடைய பணவீக்கம் 8.9% என்ற நிலையில் இருக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தனி நபர் வருமானம் 8520 அமெரிக்கன் டாலராக இருக்கும்போது அங்கே பணவீக்கம் 6.8% ஆக இருக்கிறது. அந்த பணவீக்கத்தையும், அந்த விலைவாசியையும் இங்கே சுட்டிக்காட்டி, இங்கே கடைக்கோடியில் இருக்கிற மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிலையில் இன்றைக்கு முதலாளிகளின் ஏஜென்டாக, முதலாளிகளின் கூலியாக மத்திய சர்க்கார் இயங்கிக் கொண்டிருப்பதால் தான் இங்கே இந்த அளவுக்கு விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று பகிரங்கமாக நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : தலைவரவர்களே நேற்றைய தினமே மத்திய சர்க்காருடைய நடவடிக்கைகளை அவமானப் படுத்துகின்ற முறையிலே பேசக்கூடாது என்று சொல்லப்பட்டிருக் கிறது, மீண்டும் அதேமாதிரி உறுப்பினர்கள் சொல்வார் களானால் அது மிகவும் தவறானது,

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் ஒரு பழமொழி சொல்வதுண்டு "உண்மை சுடும்" என்று; அந்த சூட்டின் காரணமாக இப்படிச் சொல்கிறார்கள் என்று கருது கிறேன்.

உண்மையை எடுத்துச் சொல்கிறோம். இந்த மாநிலத்திலே இருக்கிற விலைவாசிக்கு மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று சொல்கிறோம், மத்திய சர்க்காருடைய தவறான கொள்கையால்தான் தமிழக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைப் பற்றி இந்த தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் சொல்லாமல் வேறு எங்கே போய் சொல்வது? தமிழ்நாட்டிலே இருக்கிற விலைவாசியை, தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிற பிரச்சனை களை, விலைவாசி உயர்வை இங்கே சொல்லாமல் வேறு எங்கே போய் சொல்வது? ஆகவே, இங்கே சொல்லப்படுகின்ற குற்றச் சாட்டுகளை ஒரு 'ஸ்பார்டிங்' ஆக எடுத்துக்கொண்டு, உங்களுடைய சர்க்காரிடம் சென்று உண்மை நிலையைச் சொல்லாமல், நாட்டிலே நடக்கின்ற உண்மையை இங்கே சொல்லும் போது அதற்கு எப்படி தடை போட முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகையால் இன்றைக்கு இந்த நாட்டிலே உருவாகியிருக்கிற இத்தகைய சூழ்நிலைகள் வளர்ந்துகொண்டே போகுமானால் நாட்டிலே ஜனநாயகம் இனிமேல் இருக்குமா என்ற அளவுக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கும்.

(பிற்பகல் 12-10)

ஆகவே இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு உண்மை நிலையை சீர்திருத்துவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த மாநில சர்க்கார் எடுக்க வேண்டும். அவசரத்தில் மத்திய சர்க்கார் செய்கின்ற காரியங்களைப் பொறுத்தவரையில் மாநில சர்க்காருக்கு பயம் இருக்கின்றதாகத் தெரிகிறது. அதனால் ஒருவேளை சில காரியங்களை நீங்களே பார்க்கிறீர்களோ என்று தோன்றுகிறது. பயம் வேண்டாம். மக்கள் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எந்த அளவுக்கு வாக்களித்தார்கள் என்பதையும் நமது கடந்த தேர்தல்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றன. ஆகவே அந்த பயம் இல்லாமல் நெஞ்சுரத்தோடும் துணிவோடும் நீங்கள் இந்த மாநில மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்,

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் இந்த சபையின் முன் வைத்துள்ள வெள்ளை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன், அதிலே விவரமாக புள்ளிவிவரங்களைக் கொடுத்தாலும் கூட விலைகள் ஏறி இருப்பதன் காரணங்கள் என்னென்ன, அதைக் குறைப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை அவர் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய ஜனத்தொகை 4.82 கோடி என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கார்ட் ஹோல்டர்ஸ் 109 இலட்சம் ஃபேமிலிஸ் என்று கொடுத்திருக்கிறார்கள், இந்த எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது மொத்த ஜனத்தொகையில் இது மிகவும் குறைவு அளவும் இல்லாமல் இப்போது 4.82 கோடி மக்களுக்கு 11,400 நியாய விலைக் கடைகள் தான் இருக்கின்றன என்று சொல்லி இருக்கிறார்கள். அது மிகவும் குறைவாக இருக்கின்றது. ஏன் இவ்வளவு குறைவான நியாய விலைக் கடைகள் இருக்கின்றன? மக்கள் நியாய விலைக் கடைகளுக்கு வர மறுக்கிறார்களா அல்லது அவர்கள் வந்தாலும் கூட ஆட்சிக்காரர்கள் அதிகமான கடைகளைத் திறப்பதற்கு மறுக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

அடுத்து நியாயவிலைக் கடையிலே அரிசிதான் கொடுக்கப்படுகிறது, மற்றவை கிடைப்பதில்லை என்று தெரிகிறது, கொடுக்கப்படுகின்ற அரிசி கூட ரொம்பவும் துர்நாற்றம் உள்ள அரிசியாகத்தான் இருக்கின்றது. பல கிடங்குகளிலே இலட்சக் கணக்கான டன்கள் ஸ்டாக் வைத்திருந்தாலும் அவை சீரிய முறையிலே வைக்கப்படாமல் இருப்பதன் காரணத்தால் இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படுகின்றனவோ என்ற ஐயப்பாடு தோன்று



கிறது. அதை நிவர்த்திக்கவேண்டும். ஆகவே இந்த நிலையிலே நியாயவிலைக் கடைகளில் துர்நாற்றம் வீசுகின்ற அரிசியை மக்கள் வாங்குவதற்கு விரும்ப மாட்டார்கள். இதனை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

அடுத்து ஒரு பாரகிராபிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் டிரான்ஸ்போர்ட் டிபிகல்டிஸ் பற்றி சொல்லி இருக்கிறார்கள், அப்படிச் சொல்வதற்கு எந்தக் காரணமும் இல்லை, ஆனால் வேகன்களை மட்டுமே அல்லது ரோட் ட்ரான்ஸ்போர்ட்டை மட்டுமோ நம்பிருந்தால் அது போதாது. இந்தியாவிலே நீங்கள் மஹாராஷ்டிரா, தூத்துக்குடி, கடலூர் போன்ற துறைமுகங்களிலே இருந்து இலட்சக்கணக்கான டன்கள் அரிசியை எவ்வளவு சீக்கிரத்தில் நாம் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவர முடியும். ஆகவே இந்த முறையை நீங்கள் கையாள வேண்டும். அதனால் டிரான்ஸ்போர்ட் கஷ்டம் அதிகமாக ஆகிவிடாது. குறைவாகத்தான் வரும். நான் பட்ஜெட்டிலே பேசுகின்றபோது கூட இதைச் சொன்னேன், இந்த பாதிரி கப்பலில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தால் மிக நல்ல நிலைமை ஏற்படும். இதிலே என்னால் முடிந்த ஆலோசனைகளையும் சொல்ல முடியும், ஆகவே அவசியம் அவர்கள் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் டிரான்ஸ்போர்ட் பிரச்சினை வராது. இதற்கான நல்ல வாய்ப்புக்களும் இப்போது இருக்கின்றன. ஆகவே நாம் வெறும் ரோட் டிரான்ஸ்போர்ட்டையும், வேகன் ட்ரான்ஸ்போர்ட்டையும் நம்பி இருந்தால் பலன் இல்லை. ஓஷன் ட்ரான்ஸ்போர்ட்டும் இருந்தால் தான் நன்றாக இருக்கும், பக்கிங்ஹாம் கெனால் கூட இருக்கின்றது. இதை நல்ல முறையில் வைத்திருந்தால் நதியின் மூலம் நாம் நிறைய கொண்டு வரலாம். இது பற்றி எவ்வளவோ நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள் அதை எடுக்கவும் இல்லை. அதனால் ரொம்ப கஷ்டமும் இருக்கின்றது.

I think Mr. Deputy Speaker Sir, the distribution system followed by this Goverment is absolutely incorrect. Under the existing circumstances, unless the distribution system is kept very very efficiently, all these vagaries are likely to appear. I want that the distribution system of taking more food grains to the consumer shops to the remote villages should be made more efficient.

I must say that more Fair Shops should be opened. In Madras we have got 150 Divisions. If one Fair Price shop atleast is opened in each and every division, the educated unemployed people can get employment. You can ask them to deposit about Rs.500 or 1000/-. They are prepared to come forward to deposit. More care should be bestowed in opening more number of Fair Price Shops.

I do not know why essential commodities like Rice are not available in your Fair Price Shops. Even Wheat, Rava and other Cereals are not available. Taking the whole thing into consideration, you must take appropriate steps to produce more food grains, and also ensure that whatever is produced is distributed fully at Fair Price to the people. I am afraid that the prices will be increasing more and more because of your faulty system.

I would like to ask the Government to pay adequate attention toward Storage. There may be difficulties in storage. But if proper methods are adopted in storing, the commodities will not get spoiled. If the commodities are not properly stored, the quality is bound to deteriorate. So, experts should be employed to see that the storage is kept perfectly in order to maintain the good quality of commodities like rice. Thank you.

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பிலே இன்றியமையாத பொருள்கள், அவற்றின் விலைவாசி ஏற்றம் ஆகியவைகளைப் பற்றிய ஒரு வெள்ளை அறிக்கையை இந்த மன்றத்திற்கு வழங்கி அதன்மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் உரை ஆற்றக் கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்பு கிறேன்.

இத்தகைய விவாதம் சட்டமன்றப் பேரவையிலே நடைபெறுவது, எந்த நேரத்திலே பொது மக்களுக்கு விலைவாசி ஏற்றத்தாலே ஒரு பொருளாதாரப் பிரச்னை தோன்றுகிறதோ, எந்தக் காலக்கட்டத்திலே பொது மக்கள் வேதனைப்படு கிறார்களோ, அந்தக் காலக்கட்டத்திலே தான் இப்படிப்பட்ட வாதம் சட்டமன்றத்திலே வருவது இயல்பாகும். எனவே, பொதுமக்களுடைய நலம் நாடி, வெள்ளை அறிக்கையாக வைக்கப்பட்டிருக்கிற இதன்மீது விவாதம் நடத்தவேண்டும் என்று எதிர்க் கட்சியைச் சேர்ந்த பல்வேறு கட்சித் தலைவர்களும் கேட்டுக் கொண்டதின் அடிப்படையிலே தன் இந்த விவாதம் நடைபெறுகிறது.

பொதுமக்களின் குறைகளை இந்த மன்றம் எண்ணிப் பார்க்காவிட்டால், பொதுமக்களின் குறைகளை களைவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே, அவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்காக நடக்கிற இந்த விவாதத்தில் ஆளும் கட்சியின் சார்பிலே பேசுகிறார்கள், விலைவாசி உயர்ந்திருக்கிறது, இன்றியமையாதப் பண்டங்கள் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று மற்ற எதிர்க்கட்சிகளிலே உள்ளவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர் களும் எடுத்துப் பேசுகிற அந்தக் கருத்துக்களை நேரிடையாக மறுப்பதற்கு வழியில்லாத காரணத்தால், திராவிட முன்னேற்றக்





கழக ஆட்சியிலே கூட 73-வது ஆண்டிலே 74-வது ஆண்டிலே தமிழ்நாட்டிலே செயற்கையான பஞ்சம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டிலேயிருந்து அரிசியை வேறு மாநிலங்களுக்கு கொண்டு போக வழி வகுக்கப்பட்டது. அவைகள் எல்லாம் தான் அப்போதைய விலை ஏற்றத்திற்குக் காரணம். ஆகவே, அவர்கள்தான் அப்போது விலை ஏற்றத்திற்கு காரணமாக இருந்தார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அது உண்மை தானா என்பது விவாதிக்க வேண்டிய ஒன்று. ஏனென்றால் தஞ்சை மாவட்டத்திலே உற்பத்தியாகிற அந்த உணவுப் பொருள்கள் மற்ற மாவட்டங்களுக்கும் பரவலாக கிடைத்தால் தான், மற்ற மாவட்டங்களில் உள்ள மக்களுடைய குறைகள் நீங்கும் என்ற அடிப்படையிலே கொள்கை வகுக்கப்பட்டு, அந்த அடிப்படையிலேதான் தஞ்சை மாவட்டம் அன்றைய தினம் திறந்து விடப்பட்டது.

ஏனென்றால் வட ஆற்காடு மாவட்டத்திற்கோ, கோவை மாவட்டத்திற்கோ, இராமநாதபுரம் மாவட்டத்திற்கோ, மதுரை மாவட்டத்திற்கோ, அங்கேயிருந்து தான் உணவுப் பொருள்கள் செல்லவேண்டும் என்பதற்காக திறந்து விடப் பட்டது. ஆனால் அது தவறான முறையிலே பயன்படுத்தப் பட்டது, அறியப்பட்ட காரணத்தால் 24 மணி நேரத்திலேயே அரசு விழித்துக் கொண்டு, திறந்துவிடப்பட்ட அந்த முறையைத் தடை செய்தது.

[பிற்பகல் 12.50]

அப்போது கூட அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த வருக்கும் உணவுத் துறை அமைச்சராக இருந்தவருக்கும் திறந்து விடுவதில் அவ்வளவு அக்கறை இல்லை. திறந்து விட வேண்டுமென்று கேட்டவர் யார் என்பதை இன்றையதினம் ஆளும் கட்சியில் உள்ளவர்களும், அன்றையதினம் ஆளும் கட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்களுமான நாவலர், பண்ருட்டி ஆகியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது (குறுக்கீடு) பண்ருட்டி எப்போதும் சந்தர்ப்பத்தில் தெரியாது என்றுதான் சொல்வார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சந்தர்ப்பத்தில் இல்லை, உண்மையில் எனக்குத் தெரியாது.

திரு. க. அன்பழகன்: பல சங்கதிகளை கூட தெரிந்து கொள்ளாமல் இருப்பதில் கூட அவர் வல்லவர். ஆனால் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்பதால் உண்மை தெரியாமல் போகாது. அப்படிப்பட்டவரின் ஆலோசனையை இன்றையதினம் ஆளும் கட்சி கேட்டுக்கொண்டிருக்குமானால் அவர்கள்தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமே தவிர நாங்கள் அல்ல என்பதை அவையில் உள்ளவர்கள் அதிலும் முக்கியமான பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அடுத்து, அன்றையதினம் தமிழ்நாடு ஒரு தனி ஸோனாக இருந்தது. அப்படி ஒரு தனி ஸோனாக இருந்த காரணத்தால் தமிழ்நாட்டுக்குள் வரக்கூடிய பிற மாநில அரிசி பிற மாநில உணவுப்பொருள்கள் வர முடியாத நிலைமை இருந்தது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்று காலையில் இங்கே பேசிய ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர் நல்ல புள்ளி விவரத்தோடு பேசிய காரணத்தால்—அன்று 41 இலட்சம் டன் கிடைத்தும் கூட அன்று விலைவாசி ஏறிற்று, இன்று 40 இலட்சம் டன் அளவிற்கு விளைந்தும் கூட விலைவாசி அந்தளவிற்கு வேகமாக ஏறவில்லை அரிசியைப் பொறுத்தவரையில் என்று அவர்கள் குறிப்பிட்ட வாதத்தில் ஓரளவிற்கு உண்மை இருந்தாலும் கூட, அன்றைக்குத் தமிழ்நாடு தனி ஸோனாக இருந்தது என்பதையும் இன்றையதினம் தென் மாநிலங்கள் எல்லாம் பெருமளவுக்கு திறந்து விடப்பட்டிருக்கின்றன என்ற அந்த உண்மையையும் உபரியாக விளைகிற மாநிலங்களிலிருந்து இங்கே அரிசி வர வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அப்படி வருகிற, ஆந்திராவிலிருந்து வருகிற அரிசிக்கு இருந்த லெவியை இன்று அரசாங்கம் கைவிட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் கைவிட்டிருக்கிறது என்றால் தமிழ் நாட்டுக்கு ஆந்திராவிலிருந்து அரிசி சற்று தாராளமாகக் கிடைக்க அது வாய்ப்பாக அமையும் என்று நம் முன்னவர் அவர்கள் அறிவித்திருப்பதைக் கொண்டு அந்த உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசியேற்றம் என்று சொன்னவுடன் உடனே மத்திய அரசு மீது பொறுப்பை ஏற்றி அவர்களால்தான் விலைவாசி யேற்றம் ஏற்பட்டது என்று சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நம் மீது குற்றச்சாட்டு வருகிறபோது அடுத்தவர் மீது தள்ளிவிடுவது என்பது உலகத்து இயற்கை. ஆனால் தேர்தல் நேரங்களில் ஆளும் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு முதல் அமைச்சர் எம் ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு என்ன வாக்குறுதி கொடுத்தார்கள் என்றால் நான் ஆட்சி நடத்தினால் நாட்டில் விலைவாசி ஏறாது, என்னுடைய ஆட்சி இந்த மூன்று மாதங்கள் இல்லாத காரணத்தால் இடையே விலைவாசி ஏறி விட்டது என்று பொது மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள். பொது மக்களுக்கு அந்த வாக்குறுதி கொடுத்த காரணத்தால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், அமைச்சரவையில் உள்ள மற்ற அமைச்சர்கள் விலைவாசி ஏறாமல் பார்த்துக் கொள்வதற்குத் தங்களுக்குத் தனியான ஒரு தகுதி இருக்கிறது, அவர்கள்தான் அதைச் செய்யமுடியும் என்று சொன்ன வாக்குறுதியை நீங்கள் காப்பாற்றவில்லை என்று நாங்கள் சொன்னால் அதற்காக வருத்தப்பட்டுக் கொள்ளத் தேவை இல்லை. இன்னும் சொல்லப்போனால் அப்படிச் சொன்னோமே என்பதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடையலாம். அப்படித்தானே ஓட்டு வாங்க முடியும், வாங்கினோம் என்று கூட சொல்லமுடியும். இங்கே பேசிய ஜனதாக் கட்சி உறுப்பினர் அவர்கள்



சொன்னார்கள், உங்களுக்குத்தான் வாக்களித்தார்களே என்று. அதே மக்கள்தான் ஜனதாக் கட்சியை வாக்களிக்காது கைவிட்டு விட்டார்கள் என்று இந்த இரண்டையும் சேர்த்துத்தான் எண்ணிப் பார்க்கவேண்டுமே தவிர தனித்தனியாகப் பிரித்து எண்ணக் கூடாது. எனவே நாட்டு மக்கள் இன்றைக்கு ஆளும் கட்சிக்கு வாக்களித்த காரணத்தால் இன்றைக்கு நடப்பதெல்லாம் நியாயம் என்றால் சட்டமன்றமே தேவை இல்லை. ஒருமுறை வாக்களித்துவிட்டால் ஐந்தாண்டுக் காலத்திற்கு அந்த ஆட்சி எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம், சட்டமன்றத்தில் குறை சொல்லக் கூடாது என்றால் சட்டமன்றமே தேவையில்லை. நாம் ஆளும் கட்சியாக வரவேண்டுமென்பதற்காக என்ன சொல்லி ஆளும் கட்சியாக வந்தாலும் வந்ததற்குப் பின்னால் ஆளும் கட்சியால் பொது மக்களுக்கு ஏற்படுகிற குறைகளை எடுத்து வைக்கவேண்டிய கடமை எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. அந்தக் குறைகளை முடிந்த வரை நிவர்த்தி செய்கிற, மாற்றியமைக்கிற ஒரு மாபெரும் கடமை ஆளும் கட்சிக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

விலைவாசியேற்றம் என்பது மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையால் பொதுவாக உயருகிறது என்பதை நான் ஏற்றுக் கொண்டாலும்கூட மத்திய அரசின் அதிகாரங்களுக்கு அப்பாற் பட்டு அவர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நிர்வாக முறையில் மாநில அரசுகள் தான் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஒரு கட்டத்தில் மாநில அரசு செம்மையாக இயங்காத காரணத்தால், முறையாக இயக்க முடியாத காரணத்தால், அல்லது செயல்படாத காரணத்தால் அல்லது மாநில அரசு பாரபட்சமாக நடக்கிற காரணத்தால் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகூட மாநில அரசுடைய செயலற்ற தன்மையால் சில நேரங்களில் வீழ்ச்சியடைய நேரிட்டுவிடுகிறது. அந்த முறையிலே கறுப்புப் பணம், கள்ள மார்க்கெட், லஞ்சம் இவைகள் எல்லாம் பெருகி வருகிறபோது, பொறுப்பற்ற தன்மை மக்களிடத்திலே, வியாபாரிகளிடத்திலே, மிகப் பெரிய முதலாளிகளிடத்திலே, மொத்த வியாபாரிகளிடத்திலே உருவாகு மானால், இவைகள் எல்லாம் சேர்ந்து பொதுமக்களைப் பாதிக் கிறது என்பதை நான் நினைவூட்டுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆளுங் கட்சிக்கு வழிகாட்டி என்று சொல்லப்படுகிறவர். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் வழிகாட்டி. நானும், நாவலரும் ஒரே வழிகாட்டியைப் பின்பற்றி, இப்போது தான் பாதை பிரிந்திருக்கிறோம். எனவே, அப்பேர்ப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962 ஆம் ஆண்டு தமிழகத்தில் விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஒரு போராட்டத்தை நடத்தினார். மாநில அரசாங்கம் தன் பொறுப்பை நிறைவேற்ற வில்லை என்பது அவரது முதற் குற்றச்சாட்டு. இரண்டாவது குற்றச்சாட்டு, மத்திய அரசு பெருமளவிற்கு நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு உறுதுணையாக இல்லை; பொருளாதாரக்

கொள்கையை வகுக்கவில்லை என்பது. பொருளாதாரக் கொள்கையிலே ஏற்படுகின்ற குறைபாடுகள் அல்லது வேறுபாடுகள் என்ற அளவில், ஒவ்வொரு பொருளாதாரக் கொள்கையையும் மத்திய நிதியமைச்சர் அவர்கள் வகுக்கின்றபோது, அதன் விளைவு 2, 3 ஆண்டுகள் கழித்துத்தான் தெரிகிறது. ஆனால், நிர்வாகத்திலே குறைபாடுகள் ஏற்படுகின்ற காரணத்தினால், பொதுமக்கள், சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். கைப் புண்ணைப் பார்ப்பதற்கு கண்ணாடி தேவையில்லை என்பதுபோல், அப்படி ஏற்படுகின்ற அந்தப் புண்ணைப் பொதுமக்கள் எங்களிடம் காட்டுகிறார்கள். நாங்கள் அந்தப் புண்ணை அமைச்சர்களுக்குக் காட்டுகிறோம். அமைச்சர்களுக்கும் கைப் புண்ணாகத்தான் இருக்கிறது. அந்த நிலைமையின் காரணமாக, அந்தப் புண்ணை மறைக்கின்ற கட்டாய நிலைமை அமைச்சர்களுக்கு இருக்கிறது. அந்த நிலைமை நீங்கள் அமைச்சராக இருந்தால், உங்களுக்கு இருக்கலாம் அல்லவா என்று கேட்கலாம்; ஒருவேளை இருக்கும். ஆனால், நல்லவேளையாக இப்போது அமைச்சராக இல்லை. கைப் புண்ணை மறைத்துக் கொள்ளுகின்ற நிலைமை—அரசாங்கத்தின் குறைபாடுகளை தாங்கள் மறைத்துக்கொண்டு, அதனால் அமைச்சர்கள் பொதுமக்களுக்கு நன்மைசெய்ய முடியாத நிலைமைக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'பருவ மழை பொய்த்துவிட்டது என்றும், அதனால் பயிர்கள் பெருமளவு விளையாமல், மூன்றில் இரண்டு பங்குதான் விளைந்திருக்கிறது என்பவையெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த உண்மையின் அடிப்படையிலே வறட்சி நிவாரணப் பணிகள் ஓரளவுக்கு நடைபெற்றாலும், அது காலதாமதமாக தொடங்கப்பட்டு, விரைவாக நடத்தப்படும் என்று சொல்லப்பட்டு, விரைவிலேயே பில்கள் போடப்பட்டு, போடப்பட்ட பில்களை பெறவேண்டியவர்கள் பெற்று, தனிப்பட்டவர்களின் வறட்சிக்கு நிவாரணம் அளிக்கும் பல தவறான முறைகள் நடைபெற்றிருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. என்றாலும், ஒன்றுக்குப் பாதியாவது தேறியிருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. அடியோடு குளம் வெட்டாமல், அடியோடு பாதை போடாமல், சாலை போடாமல் அந்த நிதியைப் பெற்றிருக்க முடியாது. ஆனால், ஓரளவுக்கு காரியம் நடைபெற்று, பெருமளவிற்கு காரியங்கள் நடைபெற்றதாக காட்ட வேண்டுமென்ற நிலைமை வறட்சி நிவாரணப் பணியிலே நடைபெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழைமக்கள், பட்டாளி மக்கள் வறட்சி காலத்திலே உதவி செய்யப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக தொடங்கப்பட்ட அந்த கடமையில், அவர்களிடத்திலே போய்ச் சேர்ந்திருக்க வேண்டிய முழுக் கூலி போய்ச் சேரவில்லை. அவர்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லை





தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்கள் எண்ணிக்கை 100க்கு 61, 62 பேர்கள் என்று இன்றைய தினம் வளர்ந்துகொண்டு இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் அடித்தள மக்கள் அன்றாடம் கூலி பெற முடியாமல், வறட்சிக் காலத்தில் ஓரளவுக்குக் கூலியைப் பெற்றிருந்தாலும், அவர்கள் அன்றாட உணவுப் பொருள்களை வாங்குவதற்கான கூலி பெற முடியாத அளவிற்கு நிலைமை இருந்தது என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த பற்றாக்குறை நிலைமையை மாற்றுவதற்கு ஆந்திரா மாநிலத்திலே இருந்து, ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலே இருந்து அரிசி வரவழைக்கப்படுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, அப்படி வரவழைக்கப்பட்டதிலே கால் பங்குதான் வந்திருக்கிறது; இன்னும் மீதி அரிசியாகவோ அல்லது நெல்லாகவோ வருமானால், அந்த அரிசியை ஓரளவுக்கு நியாய விலைக் கடைகளிலே போதுமான அளவிற்கு கொடுக்கலாம் என்று எதிர்பார்ப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், கொடுக்க வேண்டிய, அந்தச் செய்யவேண்டிய பொறுப்பு நம்முடைய மாநில அரசுக்கு இருக்கிறது. மாநில அரசு தந்திருக்கின்ற இந்த விளக்கத்தில், தற்போது மாதம் ஒன்றுக்கு 75,000 டன் அரிசி குடும்ப கார்டுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது என்ற செய்தி இருக்கிறது.

[பிற்பகல் 1.00]

இது கடந்த ஜூலை மாதத்தில் இருக்கக்கூடிய நிலவரம். ஆகஸ்டில் கூட அந்த நிலவரம் தொடரும். அதற்கு முன்னால் 75,000 டன்னாக இருக்காது; அப்போது 60,000 டன்னாக இருக்கும் அல்லது 40,000 டன்னாக இருக்கும். கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மேலும் குறையும். 75,000 டன் அரிசி—குடும்ப கார்டு அட்டைகள் எண்ணிக்கை 109 லட்சம்—அத்தனை குடும்ப கார்டு வைத்திருப்பவர்களும் அரிசி வாங்குவதற்கான உரிமை பெற்றிருப்பவர்கள். அந்த எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மாதம் ஒன்றுக்கு ஒரு கார்ட்டுக்கு 7 கிலோ அரிசிதான் வழங்க முடியும் அந்த அரிசியும் தரமுள்ள அரிசியாக, சாப்பிடக்கூடிய அரிசியாக இல்லை; மக்கிப் போயிருக்கிறது, நாற்றம் வருகிறது என்று இங்கே பேசிய உறுப்பினர் துரை முருகன் மட்டுமல்ல, ஹாஜா ஷெரிப் அவர்களும் பேசினார்கள். அவர்கள் அந்த அரிசியைப் பார்த்தே இருக்க மாட்டார்கள். (திரு. என். சங்கரய்யா : பார்க்கவேண்டிய அவசியமில்லை) ஹாஜா ஷெரிப் அவர்களிடம் பணியாற்றுகிறவர்களோ மற்றவர்களோ இந்த அரிசியின் தரத்தை எடுத்துச் சொன்னதன் காரணமாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரிசியும் கூட மாதத்திற்கு 7 கிலோ அல்லது 5 கிலோ தான் வழங்கப்படும் என்று காணப்படுகிறது. இந்த அரிசி வழங்கப்படுவது வாரத்தில்

[திரு. க. அன்பழகன்] [1981 ஆகஸ்ட் 27

கொள்கையை வகுக்கவில்லை என்பது. பொருளாதாரக் கொள்கையிலே ஏற்படுகின்ற குறைபாடுகள் அல்லது வேறுபாடுகள் என்ற அளவில், ஒவ்வொரு பொருளாதாரக் கொள்கையையும் மத்திய நிதியமைச்சர் அவர்கள் வகுக்கின்றபோது, அதன் விளைவு 2, 3 ஆண்டுகள் கழித்துத்தான் தெரிகிறது. ஆனால், நிர்வாகத்திலே குறைபாடுகள் ஏற்படுகின்ற காரணத்தினால், பொதுமக்கள், சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். கைப் புண்ணைப் பார்ப்பதற்கு கண்ணாடி தேவையில்லை என்பதுபோல், அப்படி ஏற்படுகின்ற அந்தப் புண்ணைப் பொதுமக்கள் எங்களிடம் காட்டுகிறார்கள். நாங்கள் அந்தப் புண்ணை அமைச்சர்களுக்குக் காட்டுகிறோம். அமைச்சர் களுக்கும் கைப் புண்ணாகத்தான் இருக்கிறது. அந்த நிலைமையின் காரணமாக, அந்தப் புண்ணை மறைக்கின்ற கட்டாய நிலைமை அமைச்சர்களுக்கு இருக்கிறது. அந்த நிலைமை நீங்கள் அமைச்சராக இருந்தால், உங்களுக்கு இருக்கலாம் அல்லவா என்று கேட்கலாம்; ஒருவேளை இருக்கும். ஆனால், நல்ல வேளையாக இப்போது அமைச்சராக இல்லை. கைப் புண்ணை மறைத்துக் கொள்ளுகின்ற நிலைமை—அரசாங் கத்தின் குறைபாடுகளை தாங்கள் மறைத்துக்கொண்டு, அதனால் அமைச்சர்கள் பொதுமக்களுக்கு நன்மைசெய்ய முடியாத நிலைமைக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பருவ மழை பொய்த்துவிட்டது என்றும், அதனால் பயிர்கள் பெருமளவு விளையாமல், மூன்றில் இரண்டு பங்குதான் விளைந் திருக்கிறது என்பவையெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த உண்மையின் அடிப்படையிலே வறட்சி நிவாரணப் பணிகள் ஓரளவுக்கு நடைபெற்றாலும், அது காலதாமதமாக தொடங்கப் பட்டு, விரைவாக நடத்தப்படும் என்று சொல்லப்பட்டு, விரைவிலேயே பில்கள் போடப்பட்டு, போடப்பட்ட பில்களை பெறவேண்டியவர்கள் பெற்று, தனிப்பட்டவர்களின் வறட்சிக்கு நிவாரணம் அளிக்கும் பல தவறான முறைகள் நடைபெற்றிருக் கின்றது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. என்றாலும், ஒன்றுக்குப் பாதியாவது தேறியிருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. அடியோடு குளம் வெட்டாமல், அடியோடு பாதை போடாமல், சாலை போடாமல் அந்த நிதியைப் பெற்றிருக்க முடியாது. ஆனால், ஓரளவுக்கு காரியம் நடைபெற்று, பெருமளவிற்கு காரியங்கள் நடைபெற்றதாக காட்ட வேண்டுமென்ற நிலைமை வறட்சி நிவாரணப் பணியிலே நடைபெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழைமக்கள், பட்டாளி மக்கள் வறட்சி காலத்திலே உதவி செய்யப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக தொடங்கப்பட்ட அந்த கடமையில், அவர்களிடத்திலே போய்ச் சேர்ந்திருக்க வேண்டிய முழுக் கூலி போய்ச் சேரவில்லை. அவர்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லை



1981 ஆகஸ்ட் 27] [திரு. க. அன்பழகன்]

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்கள் எண்ணிக்கை 100க்கு 61, 62 பேர்கள் என்று இன்றைய தினம் வளர்ந்துகொண்டு இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் அடித்தள மக்கள் அன்றாடம் கூலி பெற முடியாமல், வறட்சிக் காலத்தில் ஓரளவுக்குக் கூலியைப் பெற்றிருந்தாலும், அவர்கள் அன்றாட உணவுப் பொருள்களை வாங்குவதற்கான கூலி பெற முடியாத அளவிற்கு நிலைமை இருந்தது என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த பற்றாக்குறை நிலைமையை மாற்றுவதற்கு ஆந்திரா மாநிலத்திலே இருந்து, ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலே இருந்து அரிசி வரவழைக்கப்படுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, அப்படி வரவழைக்கப்பட்டதிலே கால் பங்குதான் வந்திருக்கிறது; இன்னும் மீதி அரிசியாகவோ அல்லது நெல்லாகவோ வருமானால், அந்த அரிசியை ஓரளவுக்கு நியாய விலைக் கடைகளிலே போதுமான அளவிற்கு கொடுக்கலாம் என்று எதிர்பார்ப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், கொடுக்க வேண்டிய, அந்தச் செய்யவேண்டிய பொறுப்பு நம்முடைய மாநில அரசுக்கு இருக்கிறது. மாநில அரசு தந்திருக்கின்ற இந்த விளக்கத்தில், தற்போது மாதம் ஒன்றுக்கு 75,000 டன் அரிசி குடும்ப கார்டுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது என்ற செய்தி இருக்கிறது.

[பிற்பகல் 1.00]

இது கடந்த ஜூலை மாதத்தில் இருக்க கூடிய நிலவரம். ஆகஸ்டில் கூட அந்த நிலவரம் தொடரும். அதற்கு முன்னால் 75,000 டன்னாக இருக்காது; அப்போது 60,000 டன்னாக இருக்கும் அல்லது 40,000 டன்னாக இருக்கும். கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மேலும் குறையும். 75,000 டன் அரிசி—குடும்ப கார்டு அட்டைகள் எண்ணிக்கை 109 லட்சம்—அத்தனை குடும்ப கார்டு வைத்திருப்பவர்களும் அரிசி வாங்குவதற்கான உரிமை பெற்றிருப்பவர்கள். அந்த எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மாதம் ஒன்றுக்கு ஒரு கார்டுக்கு 7 கிலோ அரிசிதான் வழங்க முடியும் அந்த அரிசியும் தரமுள்ள அரிசியாக, சாப்பிடக்கூடிய அரிசியாக இல்லை; மக்கிப் போயிருக்கிறது, நாற்றம் வருகிறது என்று இங்கே பேசிய உறுப்பினர் துரை முருகன் மட்டுமல்ல, ஹாஜா ஷெரிப் அவர்களும் பேசினார்கள். அவர்கள் அந்த அரிசியைப் பார்த்தே இருக்க மாட்டார்கள். (திரு. என். சங்கரய்யா: பார்க்கவேண்டிய அவசியமில்லை) ஹாஜா ஷெரிப் அவர்களிடம் பணியாற்றுகிறவர்களோ மற்றவர் களோ இந்த அரிசியின் தரத்தை எடுத்துச் சொன்னதன் காரணமாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரிசியும் கூட மாதத்திற்கு 7 கிலோ அல்லது 5 கிலோ தான் வழங்கப்படும் என்று காணப்படுகிறது. இந்த அரிசி வழங்கப்படுவது வாரத்தில்

மூன்று நாட்கள். ஒரு வாரத்திற்கு 7 கிலோ அரிசி என்பது
அதிகமாக அரிசி வழங்குகிற காலத்தில் வருகிற விகிதாசாரம்.
இந்த விகிதாசாரத்தில் அரிசி அவ்வப்போது நியாய விலைக்
கடைகளுக்குப் போய்ச் சேருவதில்லை. வாரத்திற்கு நான்கு
கிலோ அல்லது இரண்டு கிலோ அரிசிதான் வழங்கப்படுகிறது
என்ற அளவில் இருக்கிறது. அந்த இரண்டு கிலோ அரிசி கூட
கிராம மக்களுக்குக் கிடைக்கிறதா என்றால் எல்லோருக்கும்
கிடைக்கவில்லை. ஒரு வாரம் தருகிறார்கள். அதிலும் பாதிப்
பேருக்குக் கொடுக்கிறார்கள், மிச்சம் பேருக்கு [illegible] லையென்று
சொல்லுகிறார்கள். அடுத்த வாரம் வாருங்கள் என்று சொல்லி
விடுகிறார்கள். வாரத்தில் மூன்று நான்கு நாட்கள் நியாய
விலைக் கடைகளில் அரிசி கொடுப்பதில்லை. நியாய விலைக்
கடைகளில் அரிசி வாங்குகிறவர்கள் ஏழை மக்கள்; அன்றாடம்
கூலி சம்பாதித்துச் சாப்பிட வேண்டிய நிலையில் இருப்பவர்கள்.
நியாய விலைக் கடைகளைத் திறந்து வைக்கும் நேரம் கூடச்
சரியான நேரமாக இல்லை. மாலை ஐந்து மணிக்கு மேல்
திறந்து வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. வேறு வழி
இல்லாத காரணத்தால் வாங்கித் தீரவேண்டிய அரிசி, தரக்
குறைவான அரிசி. அந்த அரிசியும் வாரத்தில் மூன்று நான்கு
நாட்கள்தான் கிடைக்கிறது. நான் இந்த அரசாங்கத்தைக்
கேட்க விரும்புகிறேன். ஏழை மக்கள் பட்டினியைப் போக்க
நீங்கள் தருகிற அரிசி, நியாய விலைக் கடைகளில் தருகிற
அரிசி போதுமா? அது அரைப் பட்டினியைப் போக்குவதற்
காவது உதவுகிறதா? வாரத்தில் மூன்று நாட்கள் அரிசி
இல்லை. ரவை இல்லை, கோதுமை இல்லை, மைதா இல்லை.
பாம் ஆயில் ஓரிரு நாட்கள்தான் கிடைக்கிறது; முடக்கி
வைத்திருப்பவர்களிடம் வாங்குபவர்களுக்குத் தான் முப்பது
நாட்களும் கிடைக்கிறது. ஏழு நாட்களும் அரிசி கிடைக்க வழி
இல்லையென்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்று
ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒன்று, நம்மை நாமே ஏமாற்றிக்
கொள்வது. அப்படி நம்மை நாமே முடிந்த வரையில் ஏமாற்றிக்
கொள்ளாமல் செயல்பட வேண்டும். அரிசி குறைவாக இருக்
கிறது என்பது ஒன்று; நியாய விலைக் கடைகளுக்கு அவ்வப்
போது போய்ச் சேராமல் இருப்பது ஒன்று; கார்டு வைத்திருப்
பவர்கள் அவ்வளவு பேருக்கும் அரிசி கிடைக்க ஏற்பாடு செய்
யாமல் இருப்பது ஒன்று. இந்தக் குறைகளை உடனடியாகப்
போக்க அரசு முயல வேண்டும். நீங்களே தெரிவித்திருப்பது
போல் ரவையையோ, கோதுமையையோ, மைதாவையோ ஏழை
மக்கள் வாங்கமாட்டார்கள். நியாய விலைக் கடை என்ற பெயரில்
நடக்கிற கடைகளில் பாம் ஆயில் ஒரு நாள் தான் கொடுக்கப்
படுகிறது; நல்லெண்ணெய் இல்லை; அத்தியாவசியமான உப்பு,
புளி, மிளகாய் போன்ற பொருள்களும் இந்தக் கடைகளில்
கிடைக்க வழி இல்லை. அந்த ஏழை மக்கள் அதிக விலை
கொடுத்து அந்தப் பொருள்களை வேறு இடத்தில் வாங்க
வேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னால் நியாய விலைக்
கடை என்ற பெயரில் வெறும் அரிசி மட்டுந்தான் கிடைக்கிறது
என்று சொன்னால் அது ஃபார்ஸ்—ஒரு வேடிக்கை என்று





சொல்லும் அளவுக்கு நியாய விலைக் கடைகள் பயனற்றிருக்
கின்றன என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்பு
கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னும் தெளிவாகச் சொன்னால்
நியாய விலைக் கடைகள் ஏறத்தாழ ஒவ்வொரு ரெவின்யூ
கிராமத்திலும் ஒன்று இருக்கிறது என்று சொன்னாலும்கூட
எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் இல்லை என்ற குறை
நேற்றைய தினம் எடுத்துக் காட்டப்பட்டது. எனவே, எல்லா
ரெவின்யூ கிராமங்களிலேயும் நியாய விலைக் கடைகளை
ஏற்படுத்துவதிலே நீங்கள் அக்கறை காட்ட வேண்டும்.

மற்றொன்று. அரிசியைத் தவிர மற்ற பண்டங்கள் கடந்த
3 மாத காலத்திலே, நியாய விலைக் கடைகளிலே விற்கப்
படுகிற பண்டங்கள் மொத்தம் எவ்வளவு டன் ஆவர்,
மொத்தம் அந்தக் கடைகளுக்கு எவ்வளவு வழங்கப்பட்டது—
ஏனென்றால் கடை என்ற பெயர் இருக்கிறது. ஆனால், உள்ளே
கடையிலே பண்டம் இல்லை என்ற நிலைமையைப் பொது
மக்கள் சொல்கிறார்கள்—அந்தப் பண்டங்கள் வழங்கப்பட்டி
ருந்து, அவை அந்தக் கடைகளுக்குப் போய் இருக்குமானால்
அப்படி மொத்தம் எவ்வளவு பண்டங்கள் வழங்கப்பட்டன
என்று தெரிவிக்க வேண்டும்.

நியாய விலைக் கடைகளிலே இன்ன பண்டத்தை இன்றால்
இன்ன விலை என்று அறிவிப்பது ஒன்று. அந்தப் பண்டம்
விற்கப்படுகிறது என்று சொன்னால் மூன்று மாத காலத்திலே
எவ்வளவு பண்டங்க — அதாவது அரிசியைத் தவிர மற்ற
பண்டங்கள் சர்க்கரையோ, மண்ணெண்ணெய்யோ—வழங்கப்
பட்டன என்ற புள்ளி விவரத்தைத் தயவுசெய்து அமைச்சர்
அவர்கள் தெரிவிப்பார்களானால் 17,400 கடைகளுக்கு வழங்கப்
பட்ட மொத்த பண்டங்கள் ஒரு கடைக்கு 50 ரூபாய், 00
ரூபாய் என்ற அளவில் இருக்கும் என்று சொன்னால், நியாய
விலைக் கடைகளினால் என்ன பலன் கிடைக்கும் என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு கடையில் ஒரு நாளைக்கு
50 ரூபாய் அல்லது 100 ரூபாய் அளவுக்கு வியாபாரம் ஆகிற
அளவுக்கு இருந்தால் அல்லவா அந்தப் பொருட்கள் ஏழை
மக்களுக்குப் போய்ச் சேரும் என்ற நிலை இருக்க முடியும்?
அப்படி வழங்கப்படுவதற்கான வாய்ப்பை ஏன் சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷன் செய்யவில்லை? அந்த அப்படி வழங்குவதிலே
அவர்கள் ஏன் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அரிசி
மட்டும் வழங்கினால் போதும் என்ற எண்ணம் எப்படி வந்தது?
நியாய விலைக் கடை என்ற பெயர் நிறைவேற்றப்படுவதற்காக
மற்றப் பண்டங்கள் வழங்கப்படுகிற அளவைப்பற்றி எண்ணிப்
பார்த்து அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி மற்றப்
பண்டங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதைப்போலவே மைதா, ரவை இவை மொத்தமாக வழங்கப்பட்ட அளவைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது ரவை ஒரு கார்டுக்கு கால் கிலோ அளவுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே மைதா ஒரு கார்டுக்கு முக்கால் கிலோ அளவுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு கிலோ அளவுக்காவது வழங்கப்படுவதற்கு வழி செய்தாக வேண்டும். தமிழ்நாட்டிற்க் கொண்டுவரப்பட்டு இங்கே அரைக்கப்படுகிற மைதா, ரவை இவற்றில் ஏறத்தாழ 60 விழுக்காடு அளவிற்குப் பொது விநியோகத்திற்கு எடுத்துக் கொண்டாலும் கூட நியாய விலைக் கடைகளுக்குப் போய்ச் சேருவது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. இப்படி மற்றப் பண்டங்களின் தட்டுப்பாடு ஒருபுறமிருக்க, விலைவாசிகள் ஏற்றத்திற்கு தமிழ்நாடு அரசு என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி நான் எடுத்துச் சொல்வதற்கு முன்பு விலைவாசிகளைப்பற்றிய புள்ளி விவரங்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

கடுகு என்பது குறைவாகத்தான் குடும்பங்களிலே பயன்படுத்தப்படுகிற ஒன்றாக இருக்கிறது. ஆயினும் அதன் விலை ஏற்றம் 1976 இல் 2·80, 1978 இல் 5 ரூபாய்; இன்றைய தினம் 7.20-க்கு விற்கிறது என்றால் 4 ஆண்டுக் காலத்திலே 3 மடங்கு விலை உயர்ந்திருக்கின்ற நிலையைக் காண முடிகிறது. மிளகாய் 1976 இல் 8.90; 1978 இல் 10.90; இன்றைய தினம் 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தனியா, 1976 இல் 5 ரூபாய்; 1978 இல் 8 10 காசு வரையில் விற்கப்பட்டது; இன்றைய தினம் 9 ரூபாய் ஒரு கடையிலும் 10.20 காசு ஒரு கடையிலும் விற்கப்படுவதாக விலை தருகிறார்கள். ஏறத்தாழ 10 ரூபாய்க்கு இன்றைய தினம் விற்கப்படுகிறது. வெந்தயம், 1976 இல் 2.60; 1978 இல் 3.50; இன்றைய தினம் 5.50 காசுகள். புளி 1976 இல் 3.20; 1978 இல் 9.60; இன்றைய தினம் 9.70-க்கு விற்கப்படுகிறது. சீயக்காய் 19 6 இல் 2.70; 1978 இல் 6.36; இன்றைய தினம் 6.50-லிருந்து 6.75 வரையில் விற்கப்படுகிறது. துவரம் பருப்பு 1976 இல் 2.50; 1978 இல் 5.70; இன்றைய தினம் 6 ரூபாய்; சில இடங்களிலே 6.30, 6.40 காசுகளுக்கு விற்கப்படுகிறது. உளுத்தம் பருப்பு 1976 இல் 3.10; 1978 இல் 4.50; இன்றைய தினம் 4.75; சில இடங்களிலே 4 80க்கும் விற்கப்படுகிறது. கடலைப் பருப்பு 1976 இல் 2 10; 1978 இல் 3·10 இன்றைய தினம் 5.80-க்கு விற்கப்படுகிறது. பயத்தம் பருப்பு 1976 இல் 2.50; 1978 இல் 4.40; இன்றைய தினம் 6.30 காசுகளுக்கு விற்கப்படுகிறது. நல்லெண்ணெய் 1976 இல் 9.50; 1978 இல் 11.50; இன்றைய தினம் 15.60-க்கு 15.90-க்கு விற்கப்படுகிறது. கடலெண்ணெய் 1976 இல் 4.90; 1978 இல் 10.10; இன்றைய தினம் 16.40 என்று விற்கப்படுகிறது; சில இடங்களிலே 16 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் 1976-இல் ரூ. 11.20 ஆகவும், 1978-இல் ரூ. 14.20 ஆகவும், இப்பொழுது ரூ 19.80 வரையிலும் விற்கப்படுகிறது; நெல்லூர் பச்சரிசி 1976-இல் ரூ. 2.70 ஆகவும், 1978-இல் ரூ 2 90 ஆகவும், இப்பொழுது ரூ. 3.10 ஆகவும் சிலயிடங்



களில் ரூ. 3.25 ஆகவும் விற்கிறது. புழுங்கல் அரிசி 1976 இல் ரூ. 2.20 ஆகவும் 1978-இல் ரூ. 2.60 ஆகவும் இப்பொழுது ரூ. 4.00 ஆகவும், ரேடியோ ஆயில் 1976-இல் ரூ. 7.00 ஆகவும் 1978 இல் ரூ. 12.60 ஆகவும் இப்பொழுது ரூ. 19.50 ஆகவும், ஹார்லிக்ஸ் பெரியது 1976 இல் ரூ. 17.45 ஆகவும், 1978 இல் 17.75 ஆகவும், இப்பொழுது ரூ. 25.90 ஆகவும் விற்கிறது.

(பிற்பகல் 1-10)

ஆக, இப்படிப் பல்வேறு பொருள்களைப்பற்றி நான் சொல்லக் கூடும். ஆனால், அதற்கு அவசியம் இல்லை.

இந்த விலைவாசியேற்றம் என்பது பொருளாதாரக் கொள்கையின் காரணமாக அல்லது மத்திய அரசின் கொள்கையின் காரணமாக ஓரளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். என்றாலும் அந்த அளவு விலைவாசியேற்றத்தையும் மிஞ்சக்கூடிய அளவிற்கு விலைவாசி இப்படிப்பட்ட பண்டங்களுக்கு ஏற்றப்படுகிறது. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை அல்லது நிதிக்கொள்கையின் காரணமாக எந்த அளவிற்கு விலைவாசி ஏறுவதற்கும் இடம் இருக்கிறதோ அதைவிட இன்னும் ஒரு மடங்கு அதிகமாகிறது. பண்டங்களின் பற்றாக்குறை என்பது ஒரு புறத்தில் இருந்தாலும் கூட, விநியோக முறையில் தமிழக அரசு இந்தப் பண்டங்கள் ஏழை மக்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்திருந்தால் அதன் காரணமாக இந்த விலைவாசி ஏற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். அதனால் விலைவாசியேற்றத்தை முழுவதும் தடுக்க முடியும் என்று சொல்லி நான் ஏமாற்ற விரும்பவில்லை. விலைவாசியேற்றம் என்பது ஓரளவுக்கு ஏற்படத்தான் செய்யும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஏற்பட்டிருக்கின்ற விலைவாசியேற்றத்தைப் பார்த்து, அந்தப் பண்டங்களைப் பார்த்து, எந்தெந்தப் பண்டங்களுக்கு விலைவாசியேற்றம் ஏற்படுகிறது என்ற சரியான புள்ளிவிவரத்தை அரசாங்கம் இருக்கா அவ்வப்பொழுது பரிசீலனை செய்திருந்தால், முறையில்லாமல் பதுக்கல் காரணமாக இது ஏற்படுகிறது என்பது தெரியுமானால் அரசாங்கம் அம்மாதிரி பொருட்களை வெளி மாநிலங்களிலிருந்து வரவழைத்து அவைகளை விநியோகம் செய்வதற்கான வழிமுறையை முக்கியமான கூட்டுறவு அங்காடிகளிடம் கொடுத்து நிறைவேற்றச் செய்திருந்தால் ஓரளவுக்கு விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். கட்டுப்படுத்தவே முடியாது என்பதல்ல: ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசி ஏறுவதற்கு முற்படும்பொழுது அதை இறக்குவதற்கான பலமான முயற்சிகளையும் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு விஷயம் என்னவென்றால் பதுக்கல்காரர்கள் சம்பந்தமாக நேற்றைய தினம் பாராளுமன்றத்திலே,

Essential Commodities (Special Provisions) Bill and Prevention of Blackmarketing and Maintenance of Essential Supplies Bill

என்ற இரண்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஒரு சிலர் இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரப்படுவது நல்லதல்ல என்று கருதக்கூடும். ஆனால், இந்தச் சட்டங்களைப் பயன்படுத்தியாவது உண்மையான பதுக்கல்காரர்கள், பதுக்கி வைக்கின்ற மொத்த வியாபாரிகள், பாமாயிலைக் கிடங்குகளிலே பதுக்கி வைத்துக் கொண்டிருப்பவர்கள் போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், மக்களுக்கு அன்றாடம் தேவைப்படுகின்ற பொருட்களை இரண்டு மூன்று மாதங்கள் பதுக்கி வைத்திருந்தால் விலைவாசி ஏறும் என்று கருதி பதுக்கி வைத்திருக்கின்றவர்கள் மீது இந்தச் சட்டத்தைக் காட்டியாவது— இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியாவது நடவடிக்கை மேற்கொள்வதில் இந்த அரசு தீவிரமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் இல்லாதபொழுது அரசாங்கம் சொல்லக்கூடும். யார் யாரோ பதுக்குகிறார்கள், எங்கேயோ பண்டங்களை முடக்கி விடுகின்றார்கள், அவைகள் மக்களுக்கு வரவில்லை அல்லது கடைத் தெருவிற்கு அல்லது அங்காடிக்கு வரவில்லை என்று சொல்லக்கூடும். ஆனால், இந்தச் சட்டங்கள் இன்றையதினம் உங்களுடைய கைகளைப் பல படுத்தவிருப்பதால் எந்த மொத்த வியாபாரியாக இருந்தாலும் எவ்வளவு பண்டங்களை வைத்துக் கொள்ளலாம் என்று அளவிட்டுச் சொல்வதற்கான உரிமை உங்களுக்கிருக்கிறது.

இங்கே, பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கூடச் சொன்னார். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுக்கின்றன. அந்தக் கடன்களை வாங்குகின்றவர்கள் பண்டங்களை முடக்கிவிடுகிறார்கள். எனவே, அந்தத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் அளிக்கின்ற கடன்கள்கூட விலைவாசியேற்றத்திற்கு ஒரு காரணமாக மாறிவிடுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதிலே எனக்கு மறுப்பு இல்லை. ஆனால், வியாபார நோக்கத்திற்காகப் பண்டங்களை வாங்குவதற்குக் கடன் கொடுத்தால் 15 நாட்கள், ஒரு மாதம் வைத்திருக்க வேண்டிய பண்டங்களை 3 மாதங்கள் வைத்திருந்தால், அது என்றைக்கு ஸ்டாக் வைக்கப்பட்டது, எத்தனை நாட்களில் அந்த ஸ்டாக் மக்களுக்கோ அல்லது மற்ற வியாபாரிகளுக்கோ விநியோகம் செய்யப்பட வேண்டுமோ அவ்வாறு செய்யாதவர்கள் மீது அரசாங்க அதிகாரிகள் முறைப்படி நடவடிக்கை எடுத்து அதைத் தடுக்க அல்லது விநியோகிக்க அல்லது கைப்பற்றுவதை மேற்கொள்ள இந்தச் சட்டங்களைத் தமிழக அரசு முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்று நான் சொல்வதால் இன்னின்ன வியாபாரிகளைப் பிடிப்பதற்காக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவது என்று முதலிலேயே கணக்குப் போடக்கூடாது. பதுக்கல்காரர்களை மட்டும், கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றவர்களை மட்டும், முடக்கி வைத்திருக்கின்றவர்களை மட்டும், உண்மையான கள்ளச்சந்தைக்காரர்களை மட்டும் அந்தக்



காரியங்களில் ஈடுபடாமல் தடுப்பதற்காக இந்தச் சட்டங்களைப் பயன்படுத்தியாவது பண்டங்களை வெளியே கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பதுக்கல்காரர்கள், கொள்ளை லாபம் சம்பாதிப்பவர்கள் என்று சொல்லும்பொழுது உடனே வியாபாரிகளெல்லாம் இந்தப் பட்டியலிலே சேர்கிறார்கள் என்று தவறாகக் கருதிவிடக்கூடாது. வியாபாரிகளிலே நூற்றுக்கு 95 பேர், 97 பேர் முறையான வியாபாரம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள்; விற்பனை வரி செலுத்துகிறார்கள், கணக்கு வைக்கிறார்கள். ஆனால் அந்த வியாபாரிகளே தங்களுக்குப் போடப்படும் வரிகளுக்காக பண்டங்களினுடைய விலையை ஏற்றி உயர்த்தி அல்லது பண்டங்களின் விலையோடு விற்பனை வரியைச் சேர்த்துப் போட்டு அதன் காரணமாக 100-க்கு 2 ரூபாய், 3 ரூபாய் விலையேறும் வாய்ப்பு இருக்கிறது. ரூ.100-க்கு மளிகைக் கடையிலே பண்டம் வாங்கினால் விற்பனை வரியாக ரூ. 3, ரூ.4- சேர்த்து செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. விற்பனை வரியை அடியோடு எடுக்க வேண்டுமென்று நான் வாதாட முடியாது என்று சொன்னாலுங் கூட, அத்தியாவசியமான பண்டங்கள், உணவுப் பொருள்களாக இருக்கக்கூடிய பண்டங்கள், இப்படிப்பட்ட பண்டங்களுக்கு போடப்படுகிற விற்பனை வரியைக் கைவிடுவது பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தாது. அரசாங்கத்திற்கு இதன்மூலம் ஏறத்தாழ ரூ.470 கோடிக்கு வருமானம் வருகிறபொழுது மஞ்சள், மிளகாய், கொத்தமல்லி, புளி, மிளகாய், சீரகம், பூண்டு ஆகிய மசாலா சாமான்கள், குழம்பு வைப்பதற்கு, சாம்பார் வைப்பதற்குப் பயன்படுகிற உணவுப் பொருள்களாக இருக்கிற, அத்தியாவசியமாக இருக்கிற பருப்பு வகைகள், இவைகளுக்குப் போடுகிற விற்பனை வரிக்கு விலக்கு அளிப்பதன் காரணமாக, பெரும் இழப்பு ஏற்படாது என்று நான் நிச்சயமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ரூ. 50,000-க்கு மேல் விற்பனை செய்யாத வியாபாரிகளுக்கு விற்பனை வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று விலக்களித்திருப்பதைப் போல், இவற்றிற்கும் விற்பனை வரி விலக்களிக்கலாம்; இந்த ரூ. 50,000-க்குக் கீழே உள்ள விற்பனை நடைபெறுகிற கடைகளிலேதான் ஏராளமான ஏழை மக்கள் பண்டங்களை வாங்கக்கூடிய நிலைமை உண்டு. ஆனால், அவர்கள் மற்றவர்களிடம் வாங்கிக் கொண்டு வருகிற காரணத்தால், அவர்கள் விற்பனை வரி செலுத்த வேண்டிய நிலைமையிருக்கிறது. மொத்த வியாபாரியிடமிருந்து நடுத்தர வியாபாரி வாங்கி வைத்து, நடுத்தர வியாபாரியிடமிருந்து சில்லறை வியாபாரி வாங்குகிற காரணத்தால் ஒரு முனை விற்பனை வரியாக இல்லாமல் பலமுனையிலே வாங்குகிற வரியாக இருக்கிற காரணத்தால், உணவுப் பண்டங்களுடைய

விலை ஏறுவதற்கும் நாம் காரணமாக இருக்கிறோம். அரசாங்கத்தினுடைய கொள்கையும் காரணமாக இருக்கிறது. அரசாங்கத்தினுடைய சார்பில், இன்றைய ஆளுங்கட்சியின் சார்பில், மாண்புமிகு திரு. எஸ். டி. எஸ். அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார். ஒருமுனை வரியாக மாற்றுவதற்கு இந்த அரசு தயாராகத்தான் இருக்கிறது. விரைவிலே அது பற்றி தெரிவிக்கும் என்று தேர்தலுக்கு முன்னாலே மிகவும் அழுத்தமாகச் சொன்னார்கள். வியாபாரிகள் சங்கத்தில் பேசும்பொழுது, அப்பொழுது திரு. எஸ். டி. எஸ். சொன்னது இதுதான். 'ஒருமுனை விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி இவற்றைப் பற்றி பட்ஜெட்டில் அறிவிக்கிறேன். மற்ற கோரிக்கைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவேன். இப்பொழுது அறிவித்தால் எங்கள்மீது எதிர்க்கட்சிகள் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்து விடுவார்கள்' என்று வியாபாரிகள் சங்கத்திலே அவர் பேசியதை அச்சடித்து தந்து இருக்கிறார்கள். இந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறார். பெரும்பாலான பண்டங்களுக்கு விற்பனை வரி என்பது, வணிக வரி இலாகாவில் மேலதிகாரிகள் சற்று நேர்மையாக இருக்கிறார்கள் என்று கருதுவதற்கு இடம் இருந்தாலும் கூட அங்கங்கே, கடைகளுக்குச் சென்று வியாபாரிகளை, கணக்குகளைப் பரிசீலிக்கிற அதிகாரிகள், அந்தக் கடைக்காரர்களிடத்திலே எப்படியோ அவர்கள் பெறுகிற லாபத்தில் பங்கு பெறுகிற ஒரு வழியைத் தடுப்பதற்கும், இலஞ்சம் கொடுப்பதன் மூலமே வரிக்கான கணக்கை விற்கச் செய்ய வேண்டும் என்று வியாபாரிகள் எண்ணுவதைத் தடுப்பதற்கும் வழி கண்டாக வேண்டும். சாதாரண வியாபாரிகள், இன்னும் சொல்லப் போனால், சிறு சிறு வியாபாரிகள், ரூ. 50,000-க்கு மேற்பட்டு, ரூ. 60,000 என்று வியாபாரம் பெருகுமானால் கணக்கு வைத்துக் கொள்கிற தொல்லைக்கும் ஆளாக வேண்டும். கணக்கு வைத்ததற்குப் பிறகு வணிகவரி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளிடத்திலே கணக்கை ஒப்படைத்து, அவர்கள் அதை ஒப்புக்கொள்ள செய்ய வேண்டும், அதற்குப் பிறகு, அவர்கள் விற்பனை வரியைச் செலுத்த வேண்டிய நிலையிருக்கிறது. இதனால் விலை ஏறுகின்ற வாய்ப்பிருக்கிறது. எனவே இந்த நிலையை மாற்ற ஒருமுனை விற்பனை வரியை எல்லா பண்டங்களுக்கும் நாங்கள் மேற்கொள்ளத் தயார் என்ற முறையில் இந்த அரசு ஒருமுனை வரியை மேற்கொள்ள முன் வந்தாக வேண்டும்.

நேற்றையதினம் வியாபாரிகள் தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ ஒரு மாபெரும் ஹர்த்தால் நடத்தியிருக்கிறார்கள். சென்னை மாநகரில் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். அமைதியாக வந்து முதலமைச்சரைச் சந்தித்து தங்களது குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த குறைகளை முழுவதும் போக்க முடியாவிட்டாலும், வியாபாரிகள் மக்களிடத்திலே பண்டங்களை விற்கும்போது என்ன, என்ன காரணத்தினாலே, அவர்கள் விற்பனையிலே விலையை ஏற்றிடுவதற்கு வாய்ப்பிருக்கிறதே அந்த சில காரணங்களைக் குறைப்பதன் மூலமா





விலைவாசிகளைக் குறைக்கும் நல்ல நோக்கத்தோடு, இன்னும் சொல்லப்போனால், விலைகளைக் கட்டுப்படுத்துகிற நோக்கத்தோடு இந்த விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றிடவேண்டும்.

மற்றொன்று செஸ். ரூ.3 இலட்சத்திற்கு மேல் வியாபாரம் செய்தால் 0.3 சதவீதம் அவர்கள் கட்டுகிற விற்பனை வரிக்கு செஸ் வரி என்று இன்னொரு வரி கட்ட வேண்டுமென்ற முறையும், ரூ.10 இலட்சத்துக்கு மேல் வியாபாரம் செய்கிறவர்கள், 0.7 சதவீதம் விற்பனை வரியோடு இன்னொரு வரி சேர்த்துக் கட்ட வேண்டுமென்றும் அண்மையில் கொண்டு வரப்பட்ட அந்த முறையையும் நாம் அறிவோம். வியாபாரிகள் மொத்தமாகத்தான் கட்டுகிறார்கள் என்று சொன்னாலுங்கூட ஒவ்வொரு பண்டத்திலும் விலை ஏறுவதற்கு அது காரணமாக இருக்கிறது என்ற காரணத்தால், இந்த வரிகளில் எந்த வரி அதிக அளவில் வருமானம் தரவில்லையோ, அந்த வரியைப் போக்குவதற்கும், ஒரு முனை விற்பனை வரியாக ஆக்குவதற்கும், உணவுப் பண்டங்கள் இன்றியமையாத பொருள்கள் ஆகியவற்றின்மீது உள்ள விற்பனை வரியைக் கை விடுவதற்கும் முன்வரவேண்டும். ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், 3 மாத கால அளவு, 3 மாத காலமாக 2 முறை இந்த ஒருமுனை விற்பனை வரி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பலமுனை விற்பனை வரி கைவிடப்பட்டிருக்கிறது. உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி அடியோடு கைவிடப்பட்டு பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டது, மற்றும் பல பொருள்களுக்கும் கைவிடப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1-20]

அந்த நேரத்தில் அதனாலே வணிக வரி நமக்குக் கிடைப்பது பெருமளவிற்குக் குறைந்து போய்விடவில்லை. அதைப் பின்பற்றலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் தொடர்ந்து அந்த எண்ணத்தோடு இருந்த அரசு நீடிக்கவில்லை. எனவே இன்றைக்கு இருக்கின்ற அரசை நான் கேட்கவிரும்புவதெல்லாம், மக்களுக்கு அவசியமாக இன்றியமையாததாக இருக்கிற உணவுப் பண்டங்கள் மீது இன்றைக்குப் பொதுமக்களிடத்திலே வசூலிக்கப்படுகிற அந்த விற்பனை வரியை நீக்குவது அதிக இழப்பாக இருக்காது—மொத்த வருமானத்தைக் கருதும்போது என்ற அந்தக் காரணத்தால்—அதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். வியாபாரிகள் லஞ்சம் கொடுப்பதிலே அல்லது வேறு பல காரியங்களிலே ஈடுபடுவதற்குக் காரணமாக இருக்கிற குறைகளும் அளவும் பெருமளவுக்குக் குறையும். எனக்குத் தெரியும், சில கடைக்காரர்கள் தெரிவிக்கிறார்கள், என்னிடத்திலே, விற்பனை வரி அதிகாரிகள் வருகிறபோது 500 ரூபாயோ 1,000 ரூபாயோ கொடுத்துத்தான் சரிக்கட்டவேண்டும், இல்லை என்றால் சரிக்கட்ட முடியாது என்று தெரிவிக்கிறார்கள். அந்த லஞ்ச முறையும் குறையும். விலைவாசி குறைவதற்கும் ஒரு தூண்டுகோலாக இருக்கும்.

அரசாங்க இலாக்காவிற்கு வீண்வேலையாக இருக்கும் அந்த வேலையும் குறையும். எனவே இந்த அளவோடு வியாபாரிகளின் வேண்டுகோளை நிறைவேற்றுவதன் மூலமாக அவர்களுடைய ஒத்துழைப்பை எந்த அளவுக்குப் பெறமுடியுமோ அந்த அளவுக்குப் பெற முயற்சிக்கவேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல பண்டங்களில் கலப்படம் செய்வது என்பது மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். ஆனால் கலப்படம் என்ற குற்றத்தைச் சாதாரண சிறு வியாபாரிகள் செய்வதில்லை என்பதை ஓரளவுக்கு அறிந்திருக்கிறேன். நான் இப்படிக் கூறும் காரணத்தால் யாராவது ஒரு சிறு வியாபாரி எங்காவது கலப்படம் செய்து, வெண்ணையிலே மாவைக் கலந்தால், சிறு வியாபாரி இம்மாதிரி செய்துவிட்டான், எனவே நீங்கள் சொல்வது தவறு என்று எடுத்து வாதிடக்கூடாது. மொத்த வியாபாரிகள் தான் கலப்படம் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள். அந்தக் கலப்படம் செய்கின்றவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதற்கான சட்டம் இருக்கிறபோது, அந்த முறையைக் கையாண்டு கலப்படத்தைத் தடுக்க வேண்டுமே தவிர, சிறு வியாபாரிகளுக்குத் தருகிற தொல்லைகளைத் தருவதைப் பயனுள்ள முறையாகக் கொள்ளக்கூடாது. இந்த தொல்லைகளைக் குறைப்பதன் மூலமாக நம்மோடு ஒத்துழைக்க, அரசாங்கத்தோடு ஒத்துழைக்க, பொது மக்களுடைய நலனில் அக்கறைகாட்டி செயலாற்ற வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாவற்றையும்விட அரசாங்கத்தின் நிர்வாகத்தினாலே வியாபாரிகளுக்கு ஏற்படுகிற தொல்லைகள் இருக்கின்றனவே அது சற்று அதிகமாக இருக்கின்றது. அவர்கள் ஒவ்வொரு பண்டத்திற்கும் தனித்தனியே லைசன்சு வாங்கவேண்டும் என்கிறார்கள். அரிசிக்கோ, புளிக்கோ அல்லது எண்ணெய்க்கோ அல்லது சிலபண்டங்களுக்கோ தனித் தனியாக லைசன்சு வாங்குகின்ற முறை மளிகைக் கடைக்குத் தேவையில்லை. மளிகைக் கடையிலே வருகின்ற பண்டங்கள் அத்தனைக்கும் ஒரு பட்டியல் போட்டு மொத்தமாக லைசன்சு தருவதற்கு அரசு ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்தவில்லை. அப்படி மொத்த லைசன்சு வழங்குகிற முறை இருக்குமானால் தேவையற்ற, அநாவசியமான வேலை அரசுக்குக் குறையும், வியாபாரிகளுக்கும் குறையும்.

வியாபாரிகளிடத்திலே அக்கறை கொண்டு நான் பேசுவதாகக் கருதக்கூடாது. வியாபாரிகளுக்கு நாம் ஏற்றுகிற சுமை அத்தனையும் பொதுமக்கள் தலையிலேதான் போய் விடிகிறது. இராஜாஜி அவர்கள் முதன் முதலாக வணிக வரியைக் கொண்டு வந்தபோது, அவர்கள் சொன்னது மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப் படுத்தவேண்டுமானால் இந்த விற்பனை வரியைக் கொண்டு வரவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அதுதான் அரசுக்குக் காமதேனு என்று சொன்னார்கள். நாங்கள் அப்போதே சொன்னோம், அது பொதுமக்களைத்தான் பாதிக்கும் என்று. இருந்தாலும் வேறு வழியில்லை என்பதாலே கொண்டு வரப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசும் நிலைமை காரணமாக இருந்தபோது விற்பனை வரியை அடியோடு கைவிடுவதற்குத் தயாராக இல்லை. இன்றைக்கு இருக்கிற அரசும் விற்பனை வரியை அடியோடு கைவிடவேண்டும் என்று வாதிடுவதற்கு நான் தயாராக இல்லை. ஆனால் மதுவிலக்கை ஒரு பக்கம் தளர்த்தி பலகோடி ரூபாய்கள் வருமானம் வரக் கூடிய நிலை ஏற்பட்டதற்குப் பின்னால், அந்தப் பல்வேறு விதமான வருமானத்தை அதுவும் சாராயம் உற்பத்தி செய்கின்ற இடம், அதை மொத்தமாக விற்கின்ற இடம், அதற்குப் பின்னர் பொதுமக்களிடம் போய் பரவலாகக் கொடுக்கிற இடம் இவை அத்தனைக்கும் லைசன்சு விதித்ததற்குப் பின்னர், இதற்காக அவர்கள் ஏலம் எடுத்ததற்குப் பின்னர், ஏராளமான வருமானம் வருகிறது என்று புள்ளிவிவரத்தைச் சொன்னதற்குப் பின்னர், 150, 200 கோடி வருமானம் வருகிறது என்று சொன்னதற்குப் பின்னர், அதற்குள்ளே இருக்கிற நிர்வாகக் குறைகளைப் பற்றி நான் இப்போது பேசவில்லை—இந்த விற்பனை வரியிலே 20 கோடி 30 கோடி குறைந்து போனால் அரசுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. இந்த விற்பனை வரியைக் குறைப்பதன் மூலமாக, எந்த அளவுக்கு விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



விவாதம் நடத்துவது என்பது எதிர்க்கட்சியினர் தங்களுடைய உணர்ச்சிகளைக் கொட்டுவதற்கும், ஆளுங்கட்சியினர் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பேசுகிற விவாதமாக மட்டும் ஆகிவிடாமல் ஏதாவது ஒரு வகையில் பயன்தருவதற்காக அமைச்சரவைகூட இவைபற்றி ஆலோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

இன்றையதினம் பொதுவிநியோக முறை தட்டுப்பாடு இல்லாமல் நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படித் தெரிவித்தது குறித்து அவருடைய வெள்ளை அறிக்கையிலே இருக்கிறது. அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி வாங்குகிற காசுக்கு ஏழை மக்கட்குத் தட்டுப்பாடு ஏராளமாக இருக்கிறது. எனவே அரிசிக்கு தட்டுப்பாடு இல்லையென்று சொன்னாலும்கூட, அதற்கு மாறாக நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தந்தி ஒன்று தரப்பட்டு இன்று வந்திருக்கிறது. People starve for the past one week(.) Ration not supplied. இது தேவக்கோட்டைப் பகுதியிலிருந்து, அனுமந்தகுடியிலிருந்து வந்திருக்கிறது. இதுபோன்ற அனுமந்தகுடிகள் நாட்டி ஏராளமாக இருக்கின்றன. எத்தனையோ பகுதிகளிலே, அ வட்டாரத்து மக்கள் அரிசி வாங்கக்கூடிய வாய்ப்பு நியாய விலை கடைகள் மூலம் கிடைக்கவில்லை. இப்படி நிலைமை

இருக்குமானால் உடனுக்குடன் கவனிக்க வேண்டும். நியாய விலைக் கடைகளில் அரிசி இல்லை. எல்லா நியாய விலைக் கடைகளிலும் காலையில் கடை திறக்கும்போது பொருள் வருவதில்லை. எல்லாக் கடைகளும் திறந்திருப்பது கிடையாது. இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதை உடனடியாகக் கவனித்திட வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, காய்கறிகள் விலை குறைந்திருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நல்லவேளை சிறிது நாட்களாக மழை பொழிந்து வருகிறது. இருந்தாலும் இங்கே நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள், எல்லாக் காய்கறிகளும் விலை குறையவில்லை. பல இடங்களில் அதிக விலைக்குத் தான் விற்கிறது என்று சொன்னார்கள். இதிலே அரசாங்கம் தந்திருக்கின்ற விலை உருளைக்கிழங்கு கிலோ 1.50—ஆனால் வெளியில் விற்கிற விலை ரூபாய் 2/-. அதேபோல தக்காளி ரூபாய் 1.55 என்று தரப்பட்டிருக்கிறது. அது அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருக்கிற விலையோ என்னவோ—வெளியிலே 2.25-லிருந்து 2.40 வரை விற்கப்படுகிறது. கத்திரிக்காய் மட்டும் தான் நீங்கள் சொன்ன விலையில் கிடைக்கிறது. ஒரு வேளை விலை குறையலாம், அல்லது ஏறலாம், அது வேறு. எந்த அளவிற்கு மக்களுடைய பொருளாதார நிலை இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கிறபோது இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல எல்லாப் பொருள்களும் பொது மக்களுக்கு நியாயவிலையில் கிடைக்கவில்லை என்பதை மறுத்துவிடக் கூடாது.

ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள், காய்கறிகளை எல்லாம் கை வண்டியிலே போட்டுக் கொண்டு போய் விற்பதில் ஏழை மக்கள் கஷ்டப் படுகிறார்கள், சைக்கிள் ரிக்ஷாவிலே போட்டு பி.ஏ. பட்டதாரிகளைக் கொண்டு காய்கறிகளை விற்க ஏற்பாடு செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். ஒருவேளை அதிலே இன்னும் ஒரு ரூபாய் விலை அதிகமாகுமோ என்னவோ எனக்குத் தெரியாது. இவ்வளவு தூரம் சொல்லிவிட்டு, ஏதும் செய்யப்படவில்லை. காய்கறி விலைகளிலே, காய்கறி விற்கிற நிலையிலே பொதுமக்களுக்கு நன்மை கிடைக்கவில்லை என்பதை மறந்து விடக்கூடாது.

மற்றொன்று, நியாய விலைக் கடைகள் அட்மினிஸ்ட்ரேஷன். இதை நிர்வாகம் செய்வதில் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதைப் போல 100 ரூபாய் சம்பளத்திலே வேலை பார்க்கச் சொன்னால், எந்தப் பொருளை எப்படிப்பட்ட முறையைக் கையாண்டு தன்னுடைய லாபத்திற்கு, தன்னுடைய மறைமுகமான வருமானத்திற்குப் பயன்படுத்தலாம் என்று எண்ணுகிற எண்ணம்தான் ஏற்படும். எனவே அவர்களுடைய சம்பளத்தை 150 ரூபாய்க்கு உயர்த்தினால்தான் கொஞ்சம் நியாய உணர்ச்சியை அவர்களிடம் எதிர்பார்க்க முடியும் என்று தெரிவித்ததைக் கவனிக்கவேண்டும்.





நியாய விலைக் கடையிலே பண்டங்கள் வழங்குவது என்று சொன்னால் காலை 8 மணிக்கு மண்ணெண்ணெய் வருகிறது. காலை 8 மணிக்கு 400 பேர்கள் நியாய விலைக் கடையில் நிற்கிறார்கள். ஏனென்றால் 12 மணி ஆனால் மண்ணெண்ணெய் தீர்ந்துவிட்டது என்கிறார்கள். 8 மணியிலிருந்து 12 மணி வரை 400 பேர்கள் நின்று 150 பேர்கள் மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு, 200 பேர்கள் வாங்காமல் திரும்புகின்ற நிலை இருப்பது உங்களுடைய அரசாங்கத்தின் மீது குற்றச் சாட்டாகத்தான் அமையும்.

சென்னை நகரத்திலே புரசைவாக்கம், நுங்கம்பாக்கம், ஆயிரம்விளக்குப் பகுதிகளில் இருக்கிற நியாய விலைக் கடைகளை யாராவது அமைச்சர்கள் சுற்றிப் பார்த்தால் தெரியும், 7 நாட்களில் 2 நாட்களில்தான் பண்டங்கள் விநியோகிக்கப் படுகின்றன. 2 நாட்களிலும் பெரிய கியூ நிற்கிறது. குடிதண்ணீர் கிடைக்காத கிராமத்திலே எப்படி வரிசையாகப் பானை வைத்திருப்பார்களோ, அப்படி டின்னையோ, புட்டியையோ வைத்துக் கொண்டு கூடி நிற்கிறார்கள்.

ஒரு புட்டி மண்ணெண்ணெய் வாங்குவதற்கு ஏறத்தாழ 4 மணி நேரம் ஏழை மக்களுக்குச் செலவானால், 1 கிலோ சர்க்கரை வாங்குவதற்கு 3 மணி நேரம் செலவானால், ஒரு முறை அரிசி வாங்குவதற்கு 4 மணி நேரம் செலவானால்—நியாய விலைக்கடையிலே அந்தப் பண்டம் கிடைக்கிறது என்று நான்கு மணி நேரம் நின்றதற்குப் பின்னாலே, கிடைக்கவில்லையென்று திரும்பிப் போகக்கூடிய ஏமாற்றமான நிலை வருமானால், அதை விட வேதனையான நிகழ்ச்சி வேறு எதுவும் கிடையாது.

ஒரு பையன் போய் திரும்பி வந்தாலும், ஒரு பெண் போய் திரும்பி வந்தாலும், அந்தக் குடும்பத்திலே ஏற்படுகிற மனக்குறை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது நிச்சயமாக இதை மாற்றுவதற்கு வழி செய்யவேண்டும். நியாய விலை கடையிலே கார்டு நம்பர் கொடுத்திருக்கிறார்கள். இந்த எண்ணிலேயிருந்து இந்த எண் வரை திங்கள் கிழமை, இந்த எண்ணிலேயிருந்து இந்த எண் வரை செவ்வாய்க் கிழமை, இந்த எண் வரை புதன் கிழமை பண்டங்கள் தரப்படும் என்று ஒரு முறை வைத்துச்-செயல்படுத்தவேண்டும். முறைகள் வைப்பதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை, அதைச் செயல்படுத்தலாம். இந்த நாளிலே வந்தால் இந்தப் பண்டம் உறுதியாகக் கிடைக்கும் என்ற சில முறைகளை வைத்து வழி செய்யலாம். ... அரிசியை

[திரு. க. அன்பழகன்] [1981 ஆகஸ்ட் 27

[பிற்பகல் 1.30]

விநியோகிப்பதில் முன்னால் ஸ்டாக் செய்த அரிசியை முன்னாலும் பின்னால் வந்தால் பின்னும் விநியோகிக்கும் முறையைப் பொது விநியோகத்துறை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யாமல் பழைய ஸ்டாக் தங்கி இருந்தால் அது புழுத்துப்போகத்தான் செய்யும்; மக்கிப் போகத்தான் செய்யும். எனவே சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் அந்தநிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் தொடர்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது ஒன்றரை மணி கடந்துவிட்டது. மேலும் அவையின் நேரத்தை நீட்டிக்க வேண்டுமா அல்லது நாளை மீண்டும் விவாதத்தைத் தொடரலாமா? நாளை துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்று, சரியாக ஒரு மணிக்கு விவாதத்தை முடித்துக்கொள்ள வேண்டும். நாளை மாலையிலும் பேரவைக் கூட்டம் இருக்கிறது. ஆகவே, நம்முடைய அலுவல்களை எவ்வாறு அமைத்துக்கொள்வது என்று அவையின் கருத்தறிய விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் உரையுடன் இன்றைக்கு முடித்துக்கொள்ளலாம் நாளை மாலையும் செஷன் இருப்பதால் பதில் உரையை நாளை வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை சரியாக ஒரு மணிக்கு 'கில்லட்டின்' இருப்பதால் கேள்வி நேரத்தை ஒத்திவைத்துக் கொள்ளலாமா? இல்லை என்றால் இன்றைக்கு இன்னும் ஒரு மணி நேரம் நீட்டிக்கவேண்டும்.

திரு. என். சங்கரய்யா: ஒத்திவைப்புத் தீர்மானம் முக்கியமானது. ஆகையால் நாளை கேள்வி நேரம் இல்லாவிட்டாலும் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாளை கேள்வி நேரம் இல்லாமல், ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின் துணை மானியக் கோரிக்கைகளுக்கு முன்னால் வெள்ளை அறிக்கை மீதான பதில் உரையை வைத்துக்கொள்ளலாம். அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்தவுடன் துணை மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு, ஒரு மணிக்கு விவாதத்தை முடித்துக்கொண்ட பின்னால் வெள்ளை அறிக்கை மீதான பதில் உரையை வைத்துக் கொள்ளலாம்.



1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று பேராசிரியர் உரை முடிந்தவுடன் அவை ஒத்திவைக்கப்படும். நாளை கேள்வி நேரம் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகு வெள்ளை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் உரை; அதன் பிறகு துணை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 7. அரசினர் தீர்மானங்கள்—(ஆ) தொடர்ச்சி.

திரு. க. அன்பழகன்: எனவே, மத்திய அரசு மீது குறையைச் சொல்லி, அதன் மூலம் மாநில அரசு பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்ற முயற்சி நல்லது அல்ல. மத்திய அரசு எப்படி விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருந்தாலும் நமக்குக் கிடைக்கிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையில் பொது விநியோக முறை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், செம்மைப்படுத்தப்பட வேண்டும், அதற்கு வேண்டிய வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு இந்த வெள்ளை அறிக்கை மீதான என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 28-8-81-ந்தேதி காலை 9 00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1.33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. 24.6.1950 ஆம் நாளன்று முன்னாள் சுகாதாரத் துறையில் உருவாகி, 10.10 1950 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1-ஏ-ல் 407-408 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட 463ஆம் எண் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட சென்னை மாநகரின் செனாய்நகர் நகர அமைப்புத் திட்டத்தின் சில வேறுபாடுகளை செய்தல் குறித்து [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. கிண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தயத் திடலுக்குள் நடைபெறும் மைசூர், உதகமண்டலம், பெங்களூர், ஹைதராபாத், பம்பாய், பூனா மற்றும் கல்கத்தா ஆகிய உள்நாட்டுப் பந்தயங்கள் மீது சில குறிப்பிட்ட வரிகள் விதிப்பது குறித்து 1-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய

[1981 ஆகஸ்ட் 27

அறக்கட்டளைகள் துறையின் 744 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/935) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

92. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 7-1-1981 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 59 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

93. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தில் சில விதிகளை உருவாக்குவது குறித்து 9-5-1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 487 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

17. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

18. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1981).

19. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1981).

20. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 59/1981).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வெள்ளிக்கிழமை, 1981 ஆகஸ்டு 28

### ஆவணி 12, துன்மதி-திருவள்ளுவர்-2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.''

முயற்சி உடையவர்களுடைய செயல்கள் அவர்களுக்குச் சிறப்பைத் தரும், செல்வாக்கு, செழிப்பை உண்டாக்கும். முயற்சி செய்யாமல் இருத்தல் ஒருவனை வறுமையில் சேர்த்துவிடும்.

### 1. அரசினர் தீர்மானம்.

### விதி 31-ஐத் தளர்த்த

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐத் இன்று தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

### 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பம்பாயீ நகரில் வாழும் தமிழர்களின் குடிசைகள் அகற்றப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். சங்கரய்யா, ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனிவேல், டி. மணி, கே. ஆர். சுந்தரம், ப. நெடுமாறன், நவநீதகிருஷ்ண பாண்டியன், குமரி அனந்தன், ப தீர்த்தராமன், எஸ். என். இராமசாமி, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், செ. சிவசாமி, எஸ். ஆண்டித்தேவர், கே. தனுக்கோடித் தேவர், அ. ரகுமான்கான் ஆகியோர் ''தமிழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய தமிழ் மக்கள் தம் பிழைப்புக்காக பம்பாயீ நகர சாலையோரங்களில் நீண்ட

காலமாகக் குடியிருந்து வரும் இருப்பிடங்கள் தரை மட்டமாக ஆக்கப்பட்டு அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவதால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்; தலைவர் அவர்களே, அன்று நாம் இலங்கைவாழ் தமிழ் மக்கள் பாதுகாப்பு பற்றி சமீபத்தில் பேசினோம். ஆனால் இன்று இந்த அவையிலே பம்பாய் வாழ் தமிழ் மக்களின் பாதுகாப்பு பற்றி பேசவேண்டிய ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன் மகாராஷ்டிரியர்கள் அல்லாதவர்களின் சிறு கடைகள் தாக்கப்பட்ட செய்தினைப் பத்திரிகையிலே பார்த்தோம். இப்போது பம்பாய் நகர சாலையோரத்தில் குடியிருக்கக்கூடிய இரண்டரை இலட்சம் மக்களின் மீது தாக்குதல் நடந்திருப்பது என்பது மிகவும் சீரியஸான விஷயம். இந்த சாலையோரத்திலே குடியிருக்கும் சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் பேர்களில் கணிசமானவர்கள் ஏழைத் தமிழ்நாட்டு மக்கள் தான். கணிசமானவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அந்த இரண்டரை லட்சத்திலே ஒரு செக்ஷன் வெளியேற்றப்பட்டனர். அப்படி ஏராளமான குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு அவர்கள் தங்குவதற்கு இடம் இல்லாமல் பம்பாய் நகரத்திலே தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மனிதத் தன்மையற்ற நிலைமைகளைப் பற்றி சுப்ரீம்கோர்ட் பிரதம நீதிபதி திரு. சந்திரசூட் அவர்கள் சர்க்கார் வக்கீலைப் பார்த்து நேரடியாகவே குறிப்பிட்டதைக் கவனித்தால் நன்கு தெரிந்துகொள்ள முடியும். ''மனிதன் வாழ லாயக்கற்ற சேரிகளில் யாரும் வாழ விரும்ப மாட்டார்கள். அவர்களின் குடிசைகள் இடிக்கப்பட வேண்டுமா? அந்த ஏழைகள் எங்கே போவார்கள்,'' என்று சர்க்கார் வக்கீலைப் பார்த்து சீஃப் ஜஸ்டிஸ் அவர்கள் கேட்டார்கள். வெறும் சட்டத்தை மட்டும் நிர்வாகம் செய்யக்கூடிய நீதிமன்றத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த மனித உணர்வு பம்பாய் கார்ப்பரேஷனுக்கு இல்லையோ என்று கேட்கக்கூடும். அவர்களுக்கு மனிதத் தன்மை இல்லாமல் இல்லை. பம்பாய் நகர சாலையோரங்களைச் சுத்தப்படுத்தவேண்டும் என்பதால் ஏற்பட்ட நிலைமையல்ல, இந்த பம்பாய் நகரில் நடக்கின்ற நிகழ்ச்சி. அங்கே வசிக்கின்றவர்கள் தமிழர்கள் என்பதால் சிவசேனா வழியில் பம்பாய் கார்ப்பரேஷன் ஏழைத் தமிழ் மக்களுக்கு எதிராக ஆப்பரேஷன், டெமாலிஷன் அன்ட் டெப் போர்டேஷன் என்ற பெயரால் நடத்தப்படுகின்றது. அதாவது உடைப்பது, நாடு கடத்துவது என்ற பெயரால் ஒரு இயக்கம் அங்கே நடத்தப்படுகின்றது.



நடைபாதைகளில் பல ஆண்டுக்காலமாக வாழ்ந்து வருகின்ற அந்த தமிழ் மக்களை அடித்து, துன்புறுத்தி, அந்த புட்பாத்தில் இருந்து வெளியியேற்றுவது மட்டும் அல்லாமல் அவர்களை பலவந்தமாக ரெயில் பெட்டியில் ஏற்றி, தமிழகத்திற்கு திருப்பியனுப்புகிறார்கள். இதுதான் மிகவும் மோசமான நிலைமை. Most serious aspect of t e whole thing.

அவர்கள் நடைபாதையில் வாழ்ந்துக் கொண்டிருப்பதிலிருந்து வெளியே விரட்டுவது மட்டுமல்லாமல், அவர்களை பலவந்தமாக ரயில்பெட்டிகளில் ஏற்றி தமிழகத்திற்கு திருப்பி அனுப்புகிறார்கள் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மகாராஷ்டிர மாநில அரசின் தூண்டுதலின் பெயரால்தான் பம்பாய் மாநகராட்சி இப்படி ஒரு வேலையைச் செய்கிறது. நமது அரசியல் சட்டத்தின் படி, இந்தியாவில் எங்கே நுழைவதற்கும், தங்குவதற்கும், வியாபாரம் செய்வதற்கும் ஒவ்வொரு இந்தியனுக்கும் ஒவ்வொரு இந்தியப் பிரஜைக்கும் உரிமை உண்டு. அது அடிப்படையான சட்ட உரிமையாகும். அப்படிப்பட்ட கான்சிடிடியூஷனல் ரைட், இந்திய பிரஜையாக இருக்கக்கூடிய அனைவருக்கும் அளிக்கப்பட்டிருக்கக் கூடிய அந்த உரிமை, ஏழை தமிழ் மக்களைப் பொருத்தவரையில் பம்பாயில் தூக்கி ஏறியப்பட்டிருக்கிறது. தற்போது இந்த வெளியேற்றும் உத்தரவு பம்பாயில் 1981 அக்டோபர் மாதம் வரைக்கும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஸ்டே தான் கொடுத்திருக்கிறார்கள்.

சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி அவர்கள் மாநில அரசுக்கும் மாநகராட்சிக்கும், ஏன் இந்த உத்தரவை ரத்து செய்யக்கூடாது என்று கேட்டு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதனால் இதை தற்காலிகமாக நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த நேரத்திலே அங்கே ஆட்சி செய்யக்கூடியவர்கள் அதாவது மகாராஷ்டிர முதலமைச்சராக இருப்பவர் என்ன சொல்கிறார் என்று பார்த்தால், ''இனிமேல் பம்பாயில் நுழைவதற்கு வேலை அனுமதிச் சீட்டு அதாவது வொர்க் பெர்மிட் சிஸ்டம் என்ற'' முறையை புகுத்த உத்தேசித்திருப்பதாக முதல்வர் அவர்களே அறிவித்திருக்கிறார்கள், அன்னிய நாடுகளில் நாம் நுழைவதற்கு எப்படி விசா, பெர்மிட் தேவைப்படுமோ அது போன்று மகாராஷ்டிரத்தில் அதுவும் குறிப்பாக பம்பாயில் நுழைய வேண்டும் என்று சொன்னால், விசா சிஸ்டம் ஏற்படுத்தப்படும் என்று சொன்னால், மகாராஷ்டிரா என்ன சுதந்திரம் பெற்ற தனி மாநிலமாகி விட்டதா? துபாய் போன்ற நாடுகளில் இந்தியர்கள் போவதற்கு வொர்க்-பெர்மிட் சிஸ்டம் உண்டு. அந்த நிலைமை பம்பாய் வாழ் தமிழ் மக்களுக்கு ஏன்? இது நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஊறு செய்யக்கூடியது. ஒன்ஸ் அப்படி செய்து விட்டால், அந்தமுறை நாடு முழுவதும் எல்லா மாநிலங்களிலும் பரவிவிடும் நிலைமை வந்து விடும். ஒவ்வொரு மாநிலமும் அப்படிச் செய்து விட்டால், எங்கே இந்தியா

[திரு. ரா. உமாநாத்] [1981 ஆகஸ்டு 28

Where is India?

ஆகவே, ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதால், இந்த அக்கிரமத்தை தடுப்பதற்கும், பம்பாய் வாழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளை பாதுகாக்கவும், பிரதமர் அவர்களை உடனடியாக இந்தப் பிரச்னையில் தலையிடச் செய்ய வேண்டியிருப்பதால், நமது மாநில முதலமைச்சர் அவர்கள் பிரதமரை உடனே சந்தித்து, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசர அவசிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிரதமர் அவர்களை சந்தித்து, இதுபோன்று பம்பாய் வாழ் மக்கள் துன்புறுத்துவதிலிருந்து காப்பாற்றவும், குறிப்பாக அவர்களை திரும்பவும் தமிழகத்திற்கே திருப்பி அனுப்புவதை தடுப்பதற்கும், வொர்க் பெர்மிட் சிஸ்டம் என்று சொல்லக் கூடிய அந்த முறையை யோசிக்க ஏன் மனத்திலே எழக் கூடாது. அப்படி இடம் கொடுக்கக் கூடாது என்ற அளவிலேயும் பிரதமர் அவர் களை வறபுறுத்த வேண்டும் என்று கோருகிறேன்.

அது மட்டும் அல்லாமல், இதிலே முக்கியமான விஷயம் என்ன வென்றால் தமிழர்கள் மட்டுமே அவ்வாறு வெளியேற்றப் படு கிறார்கள் பம்பாயிலிருந்து என்பது தான். Most serious aspect of the whole thing is that Tamilnadu is deing singled out; பல் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அங்கேயிருக்கிறார்கள். ஆனாலும் தமிழ்மக்கள் மட்டுமே இவ்வாறு வெளியேற்றப்படுகிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகிறேன்; மாண்புமிகு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இதேபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்று, நானும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்களும் அப்போது எம்.பி. யாக இருந்த காரணத்தால் அங்கே இதில் தலையிட்டு, நாங்களே தாக்கப் பட்டோம் என்பது தலைவர் அவர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன்.

எனவே, இப்படிப்பட்ட ஆன்ட்டி–தமிழியன் (Anti–Tamilian) ஆன்ட்டி-இந்தியன் (Anti–Indian) பொசிஷன் அங்கே இன்னமும் இருக்கிறது. இப்படி ஆன்ட்டி–தமிழியன் என்பதும், ஆன்ட்டி இந்தியன் என்பதும், (Linguistic chauvanism) என்ற வகையில் வந்திருப்பதால் உடனடியாக பிரதமர் அவர்களை சந்தித்து ஆக்ஷன் எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதால், மிகவும் முக்கியமான இப்பிரச்னை குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையும் இருப்பதால், இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஆகஸ்டு 28]

[முற்பகல் 9–10]

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாயில் வாழ்கிற இலட்சக்கணக்கான தமிழர்கள் குடியிருந்த பிளாட்பாரம் குடிசைகள் பலவந்தமாக அகற்றப் பட்டு அந்த நகரிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு தமிழ்நாட்டுக்கு அகதிகளாக அனுப்பப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் பம்பாய் நகர பிளாட்பாரங் களில் தமிழர்கள் மட்டுமல்ல மராட்டியர்கள் உட்பட பல மாநிலங்களிலிருந்து உள்ள ஏழை எளிய மக்கள் குடிசைகள் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை எல்லாம் தொடாமல் எங்கெங்கு தமிழர்கள் அதிகமாக வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளை மட்டும் குறிப்பாக தேர்ந்தெடுத்து அந்த மக்களை சென்ற ஜூலை மாதம் 23-ம் தேதி அன்று இரவு நேரத்தில் அதுவும் மழை வரப்போகிற நேரத்தில் அந்தக் குடிசைகளை எல்லாம் அகற்றி பிய்த்தெறிந்து அவர்களை எல்லாம் லாரிகளில் பலவந்தமாக ஏற்றி அங்கிருந்து ரெயில்வே நிலையங்களுக்குக் கொண்டுசென்று அங்கிருக்கக்கூடிய ரெயில்களில் ஏற்றி தமிழ்நாட்டுக்கு விரட்டியடிக்கிற செயலினை மராட்டிய மாநில அரசு ஈவு இரக்கம் இல்லாமல் செய்திருக்கிறது. இதன் விளைவாக ஏறத்தாழ இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இன்று வீடு இல்லாமல் அவர்களுக்கு என்றிருந்த சொற்ப உடைமைகளை கூட இழந்து அகதிகளாக அவதிப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை இந்த மன்றத் தின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதைப் பற்றி கடந்த வாரம் நம் அவையிலே எல்லாக் கட்சியினரும் அதில் ஒன்றுபட்டு நின்று அவர்களது அவலநிலைமைக்கு நம் வருத்தத்தைத் தெரிவித்து அங்குள்ள தமிழர்களைக் கொடுமைப் படுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக நாம் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். அதற்கு சிங்கள வெறியர் கள் தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று இப்படி தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறார்களா, அதற்கு பதிலடி இதுதான் என்று சென்னையிலிருந்து சென்ற ஒரு தமிழனை, தனபதி என்பவரை சாகடித்து அவரது பிணத்தை அவர்கள் பரிசாக அனுப்பியிருக் கிறார்கள். இலங்கையில் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து பம்பாயில் இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் மராட்டிய மாநில முதல் அமைச்சர் அந்துலே அவர்கள் பேச்சு நமக்கு ரொம்பவும் வருத்தத்தை அளிக்கிறது. அவர் சொல்கிறார், வேலை

அனுமதிச் சீட்டு இல்லாமல் யாராக இருந்தாலும் பம்பாய் நகருக்குள்ளே வரக்கூடாது என்று அந்த அரசு முடிவு செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஏறத்தாழ சில மாதங்களுக்கு முன்னால் பங்களூர் நகரில் வாழ்கிற தமிழர்கள், மலையாளிகள் மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் இதுபோன்ற ஒரு தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அந்த மாநிலத்தின் முதல் அமைச்சராக இருக்கக்கூடிய குண்டு ராவ் அவர்கள் சொன்னார்கள். 'ஸன்ஸ் ஆப் தி ஸாயீல்' என்ற புது தத்துவத்தை அவர்கள் சொன்னார்கள். அந்த மண்ணின் மைந்தர்களுக்குத் தான் அங்கே வேலை மற்றவர்கள் அங்கிருந்து வெளியே போங்கள் என்று சொன்னார்கள். இன்று மராட்டிய மாநில முதல் அமைச்சர் அந்துலே அவர்கள் சொல்கிறார்கள். இதே பாணியை எல்லா மாநில முதல் அமைச்சர்களும் பின்பற்றத் தொடங்கினால், எல்லா மாநில மக்களும் பின்பற்றத் தொடங்கினால் இந்தியாவின் ஒற்றுமை என்னவாகும் என்பதை மதிப்பிற்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களது கட்சியைச் சேர்ந்த முதல் அமைச்சர்கள் அந்துலே அவர்களும், குண்டுராவ் அவர்களும் மற்ற மாநிலத்து மக்கள் தங்கள் மாநிலங்களில் வாழ்வதற்கு அனுமதி மறுக்கிறார்கள். அதிலும் குறிப்பாக தமிழர்கள் வாழ்வதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தமிழர்கள் அந்த மாநிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்படவேண்டும் என்பதில் அவர்கள் முனைந்திருக்கிறார்கள்.

மராட்டிய மாநிலத்தில் இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? மராட்டிய இனவெறி மிகுந்த சிவசேனையின் தூண்டுதலினால்தான் இது நடைபெற்றிருக்கிறது என்று நான் பகிரங்கமாக குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். சிவசேனைக்கும் அங்கிருக்கக் கூடிய மராட்டிய முதல் அமைச்சர் அந்துலே அவர்களுக்கும் தொடர்பிருக்கிறது. சென்ற கார்ப்பரேஷன் தேர்தலில் இனவெறி நிறைந்த சிவசேனையோடு வெட்கம் இலலாமல் தேர்தல் உறவு வைத்துக் கொண்ட விளைவுதான் இது. பம்பாய் நகரில் இருக்கக்கூடிய தமிழர்களையும் மற்றவர்களையும் விரட்டியடிக்கவேண்டும் என்று சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே பகிரங்கமாகப் பேசுகிறார். அவர் பேசிய மறுவாரம் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, மராட்டிய மாநில முதல் அமைச்சர் அந்துலே அவர்கள் பால்தாக்கரேயை மீறி எதுவும் செய்ய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அகில இந்திய தேசீய இந்திரா காங்கிரஸ் கட்சி குறுகிய இனவெறி கொண்ட சிவ சேனாவுடன் சேர்ந்ததன் விளைவாக இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் விரட்டப்படக்கூடிய பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அகில இந்திய தேசிய கட்சி என்று அவர்கள் சொல்லிக் கொள்வதில் பிரயோஜனம் இல்லை. அதைச் செயலில் காட்டுவதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர்கள் முன்வர வேண்டும். அதற்கு மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வற்புறுத்த வேண்டும், இலங்கையில் அதற்கடுத்து, பம்பாய், அதற்கடுத்து பெங்களூரில் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, தமிழகத்திற்கு அவர்கள் அகதிகளாக வரக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் அவர்கள் உணர்ந்து, தமிழக அரசின் சார்பில் இதற்கு நம்முடைய பலத்த எதிர்ப்பினை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்; மகாராஷ்டிர அரசுக்கும தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஏறத்தாழ 2½ இலட்சம் தமிழ் குடும்பங்கள் பம்பாய் நகரத்தின் வீதிகளிலே தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தவர்கள், அங்கிருந்து அப்புறப்படுத்துவதோடு, அவர்களுடைய வாழ்க்கையை வேறோடு சாய்க்கின்ற நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது: சாலை ஓரங்களிலே கூனியும், குறுகியும் சென்று குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்கள், பம்பாய் நகரத்திலுள்ள வானளாவிய கட்டிடங்களை கட்டுவதற்கு உதவியவர்கள், அந்தக் கட்டிடங்களிலே உள்ள தொழிற்கூடங்களுக்கு மனித சக்தியைக் கொடுக்கின்றவர்கள், உழைப்புச் சக்தியைக் கொடுக்கின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட மக்களை, இந்தியாவிலே பிறந்திருந்தாலும், மகாராஷ்டிர அரசாங்கத்தின் முதலமைச்சர் அவர்களுடைய ஆசீர்வாதத்தோடு, ஏன் அவர்களுடைய அறிவிப்போடு, அங்கேயிருக்கின்ற கார்ப்பரேஷன் எவிக்ஷன் ஆபரேஷன் என்று சொல்லுகின்ற வகையிலே, அதற்குப் பிறகு 'டிபோர்டேஷன்' என்று சொல்லுகின்ற வகையில் அங்கிருந்து நாடு கடத்தப்படுவது போல, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு கடத்தப்படுவதுபோல, இந்தியாவின் ஒரு பகுதியிலே இருந்து இன்னொரு பகுதிக்கு அவர்கள் கடத்தப்படுகிறார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய அருமைத் தலைவர்கள் குறிப்பிட்டதைப் போல, மண்ணின் மைந்தர்கள் என்ற தத்துவத்தைக் கொண்டு வந்தவர்கள், ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இமயத்திலிருந்து குமரி வரை அனைவரும் பாரத மாதா என்று சொல்லுகின்ற பெண்ணின் மைந்தர்களாக இருப்பவர்கள்தான் இங்கே இருக்கின்றவர்கள் என்று எண்ணாமல் ஒவ்வொருவரும் தம்தம் மண்ணின் மைந்தர்கள் என்று சொன்னால், இந்தியாவின் ஒருமைப்பாடு என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, கொட்டுகின்ற மழையில், குடிசைகள் பிரிக்கப்படுகின்ற நேரத்தில், ஒரு குடிசையிலே இருந்து வெளிவந்த தந்தை தன்னுடைய 2½ வயதான வைசூரியினால் தாக்கப்பட்ட குழந்தையை எடுத்து, அந்த அதிகாரியின் காலடியிலே போட்டு, இந்தக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு நான் எங்கே போவேன், எங்கே போவேன் என்று கேட்க, நீ நரகத்திற்குப் போ, நரகத்திற்குப் போ என்ற பதிலைச் சொல்ல, நகரத்திலிருந்து அப்படி விரட்டப்பட்ட காரணத்தினால் இந்த 2½ வயதான குழந்தை இறந்துவிட்ட செய்தியை நாம் பத்திரிகை யிலே பார்த்தோம். கர்ப்பிணிப் பெண் பஸ்ஸிலே ஏற்றப்பட்டு விரட்டப்பட்டதினால். அந்தப் பெண் வழியிலேயே பிரசவம் ஏற்பட்டது என்பதையும் நாம் பத்திரிகையிலே பார்த்தோம். இத்தனைக் கொடுமைகளும் இந்த நாட்டிலே நடந்திருக்கிறது. இந்திய மண்ணிலே நடந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இந்திரா காந்தி அவர்களுடைய கவனம் எந்த திசையில் திரும்ப வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

இங்கே பேசுகின்ற நேரத்தில், அந்தப் பம்பாயிலே இருக்கின்ற தமிழர்கள் வெளியேற்றப்படுகின்றார்கள் என்று சொன்னால், குறிப்பாக தமிழர்கள் மீது பாயும் கோபத்திற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவர்களில் ஏராளமான பேர்கள் செல்வத்தோடு செழிப்போடு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் நாளும் உழைத்து உழைத்து. உருக் குலைந்து இருக்கும் நிலையில் உள்ள தமிழர்கள் வெளியேற்றப் படுவதற்கு ஏதேனும் காரணம் இருக்குமானால் எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்த சிவ சேனையின் தூண்டுதலினால் ஏற்பட்ட இனவெறிதான். அந்த இனவெறி கூட மற்ற மாநில மக்களின் மீது பாயாமல் நம்மீது பாய்கின்றது என்று சொன்னால் அகில உலகத்திலே நமக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. பம்பாயில் நடக்கும் இனவெறியைப் பற்றிப் பேசிக் கொண்டி ருக்கும்போது, இலங்கையில் நடைபெறுகின்ற துன்பம், அங்கே யிருக்கின்ற சிங்கள இனத்து மக்கள் ஒரு கணம் இங்கே பார்த் தால், இந்தியாவிலேயே இந்திய மண்ணிலேயே தமிழர்களுக்கு மதிப்பில்லை, தமிழர்களுக்கு பெருமையில்லை நாம் ஏன் பெருமை கொடுக்கவேண்டும் என்ற சிந்தனை அவர்களுக்கு வரக்கூடும் அல்லவா? நம் நாட்டிலே மரியாதை செல்வாக்கு இல்லை என்ற சூழ்நிலை உருவானால், தமிழகத்திலே உள்ள சட்டமன்றப் பேரவையும், அதனுடைய முதல் அமைச்சர் அவர்களும் அதனைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்க முடியாது.

[முற்பகல் 9.20]

நமது கண்டனத்தைத் தெரிவிப்பது என்பது மட்டுமல்ல, இந்தக் கண்டனத்தைத் தெரிவிப்பதோடு நாம் நின்று விடாமல் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் அக்டோபர் மாதம் வரை



நிறுத்தி வைக்கின்ற நீதிமன்ற ஆணையோடு நின்றுவிடாமல் என்றுமே அவர்களைத் தொடக்கூடாது என்று சொல்லுகிற சூழ்நிலை ஏற்பட்டாக வேண்டும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உயர்ந்த தத்துவத்தை உலகத்திற்குக் கொடுத்த தமிழர்களை இப்போது உலகத்தில் எல்லாம் பார்க்கின்றபோது இப்போது மற்றவர்கள் 'தமிழர்களே யாது உம் ஊர்? என்று கேட்கிற ஒரு சூழ்நிலை வருமானால், 'யாது உம் ஊர், தமிழ் நாட்டுக்கு ஓடு' என்று பம்பாயில் இருப்பவர்களிடம் சொல்வார்களானால், எவ்வளவு பெரிய இழுக்கு வந்திருக்கிறது என்பதை எண்ணி, தமிழர்கள் மானத் திற்கும், நாகரிகத்திற்கும் ஏற்பட்டிருக்கும் இழுக்கு என்று கருதி, இந்திய ஒருமைப்பாட்டுக்கு வந்திருக்கிற பங்கம் என்று கருதி தமிழ் மக்கள் குரல் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், தமிழக முதல் அமைச்சர் அங்கிருக்கும் முதலமைச்சருக்குத் தனது கண்டனத்தைத் தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் இந்தியப் பிரதமருக்கும் சொல்லி, நிச்சயமாக இங்கிருந்து ஒரு குழு பம்பாயிலிருக்கும் மக்கள், தமிழ் மக்களுக்கு ஏற்பட் டிருக்கும் ஆபத்தை உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு அறிக்கை ஒன்று சமர்ப்பித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக, இந்தச் சபை அதைப் பற்றி விவாதிப்பதற்காக அதிக நேரம் ஒதுக்கி விவாதிக்க பிற அலுவல்களை ஒத்தி வைத்து சபையில் இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாய் நகரத்தில் இருக்கின்ற தமிழர்களுக்கும் அதே போன்று மற்ற இனத்தவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் கடுமையான பாதிப் பான நிலைமை பற்றிப் பல தலைவர்களும் பேசியிருக்கிறார்கள். பம்பாய் நகரத்திலுள்ள சிவசேனை இயக்கம் மண்ணின் மைந்தர் களுக்குத்தான் சகல வாய்ப்புகளும் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்டு வந்ததன் காரணமாக, அந்த மோச மான நிலை காரணமாக இன்றைக்குக் கடுமையான வேலையில் ஈடுபட்டிருக்கும் உழைப்பாளி மக்களுக்கு இரண்டு லட்சம் தமிழ் மக்களுக்கு கடுமையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு பார்க்கிறோம்.

இன்று அங்கு ஆளக்கூடிய முதலமைச்சர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அந்துலே ஆவார்கள். அவர், 'ஒர்க் பர்மிட் சிஸ்டத்'தை கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு மோசமான அறிவிப்பைச் செய்திருப்பதைப் பார்க்கும்போது வேதனைப்பட வேண்டியிருக்கிறது இன்றைக்கு இந்தியா பூராவிலும் தேச ஒருமைப்பாடு, என்று பேசக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் அந்துலே அவர்கள் இன வெறியைத் தூண்டி விடக்கூடிய அளவுக்கு மராட்டிய இனம் அல்லாதவர்களுக்கு எதிரான சிவசேனைக்கு ஆதரவாக இருக்கிறார் என்றால் அதைக் கண்டிக்க இந்திய நாட்டின் பிரதம மந்திரி முன்

வரவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இதை விசேஷ கவனத்தோடு எடுத்துக் கொண்டு இது சம்பந்தமாக கடுமையான ஆட்சேபணையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு நாங்கள் பம்பாய் நகரத்திற்குச் சென்றிருந்தபோது பார்த்தோம். அங்கு சட்டமன்றக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கும் இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் பத்து இருபது பேர் ஓடி வந்து 'எப்போது வந்தீர்கள்?' என்று தமிழில் பேச ஆரம்பித்தார்கள். அங்கு வந்து மூன்று மாதம் ஆகிவிட்டது என்றார்கள். அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று கேட்டதற்கு ஆங்காங்கு சிறு சிறு குடிசைகளில் தங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இங்கிருந்து சென்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் பலரும் தமிழர்கள் தங்கியிருக்கக்கூடிய பகுதிகளை எல்லாம் பார்த்தோம். அவர்கள் மனிதர்கள் வாழமுடியாத அவ்வளவு மோசமான இடங்களில் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த வாழ்க்கைக்குக் கூட இன்று இடையூறை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வகுப்பு வெளி இயக்கம், இன வெளி இயக்கம் அவர்களை வெளியேற்றுவதிலே முனைந்து நிற்கிறது. அங்கே ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியும் அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறது. ஜனநாயக எண்ணம் படைத்த அவ்வளவு பேரும் இதைக் கண்டிக்க முன்வரவேண்டும். தமிழ்நாடு அரசும் இதை வன்மையாகக் கண்டித்து உரிய நடவடிக்கையை மத்திய அரசும் பிரதமரும் எடுக்கவேண்டுமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல் அவர்களுக்குஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி என்ன என்றெல்லாம் எனக்கு முன்னாலே பேசியவர்கள் அழகாக அந்தத் துயரங்களைப் பற்றியெல்லாம் சித்தரித்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்கின்ற சிறிய குடிசைகளிலிருந்து அவர்களை அகற்றி, அவர்களைத் துன்புறுத்தி அடுத்து என்ன ஆபத்து வருமோ என்று அவர்கள் எல்லாம் பயந்து வாழக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகளின் தலைமையிலே சுதந்திரப் போராட்டம் நடத்திய இந்த தேசத்திலே அவர்களுடைய வாரிசுகள் என்று சொல்கிறவர்கள் ஆண்டுகொண்டிருக்கின்ற இந்த தேசத்திலே அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒரு முதலமைச்சரே இன வெறியை இனத் துவேஷத்தை ஆதரிக்கிற முறையிலே இன வெறிக்கு எதிராக இருக்கக்கூடியவர்களை நசுக்குகின்ற முறையிலே இனவெறிக்கு ஆதரவாக இருக்கின்றவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அவரே அதற்கு ஆதரவாக இருந்து கொண்டிருக்கிறார்.

இங்கே தென் மாநிலங்களிலிருந்து சென்றிருக்கிறவர்களுக்குத் துன்பத்தை, இடைஞ்சலை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே அந்த முதலமைச்சரின் பேச்சு அவருடைய நடவடிக்கை, அவர் சொல்லக்கூடிய வார்த்தைகள், வேலைக்கு பெர்மிட் வைத்துக்கொள்ள



வேண்டுமென்ற சிஸ்டத்தைக் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லக்கூடிய தன்மைகளைத் தடுத்து நிறுத்தக் கூடிய முறையிலே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய முறையிலே பணியைத் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்பதை நாம் வற்புறுத்தியாக வேண்டும். இது சம்பந்தமாக நம்முடைய உணர்வுகளைத் தெரிவிக்கக் கூடிய முறையிலே தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் எங்கே இருந்தாலும் வாழ்ந்தாலும் அவர்கள் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ முடியும் என்ற நிலைமையை ஏற்படுத்தக்கூடிய முறையிலே இந்த இனம் அந்த இனம் என்றில்லாது, இந்த சாதி அந்த சாதி என்ற முறை இல்லாது சாதி துவேஷம் இல்லாமல், மத துவேஷம் இல்லாமல் அவர்களை வேரோடு, வேர்மண்ணோடு அழிக்கக்கூடிய முறையிலே நம்முடைய அணுகுமுறை, நம்முடைய நடவடிக்கை எல்லாம் இந்த நாட்டில் உள்ள அத்தனை பேர்களும் சுபிட்சமாக எந்தவிதமான சண்டைசச்சரவும் இல்லாமல் சுமுகமாக வாழ்க்கையை நடத்தமுடியும் என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அமையவேண்டும். இந்த சூழ்நிலையில் பம்பாயில் உள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தை அபாயத்தைப் போக்கக் கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். இது சம்பந்தமாக நம்முடைய உணர்வுகளையெல்லாம் பேசி அதனுடைய தீவிரங்களை விவாதிப்பதற்காக இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத்திற்கு அதிர்ச்சி தரத்தக்க செய்தி இங்கே விவாதிக்கப்படுகிறது. பம்பாயிலே உள்ள தமிழர்கள் இரண்டரை லட்சம் மக்களுக்குப் பேராபத்து வந்திருக்கிறது என்பதை எனக்கு முன்னாலே பேசிய அத்தனை தலைவர்களும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அங்கேயுள்ள குடிசை வாழ் தமிழர்களை குடிசைகளிலிருந்து அகற்றி கொடுமைக்காளாக்கி ஆளுந்தரப்பிலே உள்ள அரசும் அங்கே மாநகராட்சிப் பொறுப்பிலே உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியும் அவர்களையெல்லாம் பலவந்தமாக வெளியேற்றி ரயிலில் ஏற்றி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பம்பாயிலிருந்து வந்த தமிழர்கள் சொல்கிற நிலை மிகவும் கோரமான நிலை.

இதை பம்பாயிலே உள்ள சிவசேனா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் செய்கிறார்கள். நீண்டகாலமாகவே அங்கே தமிழர்கள் தாக்குதலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழகத்திற்குத் தெரியும். இந்திரா காங்கிரஸ் இயக்கம் கார்ப்பரேஷன் பொறுப்பிலே இருக்கிறது, சிவசேனா இயக்கத்தின் ஆதரவு இல்லாமல் இந்திரா காங்கிரஸ் கட்சி அங்கே கார்ப்பரேஷன் பொறுப்பிலே இருக்கமுடியாது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே பம்பாய் மாநிலத்திலே இருக்கின்ற அரசும், அந்த கார்ப்பரேஷனுக்கு ஆதரவாக இருந்துகொண்டு அந்தக் கொடுமைகளைச் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வேதனை

யான சூழ்நிலை இங்கே ஏற்பட்டிருக்கிறது. அந்த மாநிலத்தினுடைய உயர்நீதி மன்றமும் ஒரு தடையை விதித்து இருக்கிறது. அப்படிச் செய்யக் கூடாது அதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று சொன்னாலும்கூட இந்திய அரசியல் சட்டத்தை மதிக்கவில்லை என்பதை தெளிவாக்குகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. Right to live, Right to work. and right to profession throughout the territory of India. என்று சொல்கிற அரசியலமைப்புச் சட்டத்திற்கு மாறாக இப்படிப்பட்ட ஒரு செயலை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 9-30]

அதுமட்டுமல்லாமல், மண்ணின் மைந்தர்கள் என்ற சித்தாந்தத்தை இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த முதலமைச்சரே சொல்கிறார். இதுபோலத்தான் அசாம் மாநிலத்தில் நடக்கின்ற பிரச்னைகள் அத்தனையும், வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்கக்கூடாது என்ற போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மத்தியிலே ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் அரசு இதைச் சற்று உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இருக்கின்ற உறவு, இந்தியப் பேரரசுக்கு இருக்க வேண்டிய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குப் புறம்பாக அவர்கள் ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற மாநிலங்களிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு வெளிநாட்டிலேதான் கஷ்ட நிலைமை ஏற்படுகிறது என்றால், இந்த இந்திய மண்ணிலேயும் மற்ற மாநிலங்களில் இருக்கின்ற தமிழர்களுக்கு ஏற்படுகின்ற நிலைமைகளைப் பார்த்து தமிழ்மக்கள் மிகவும் கொதித்து, வடமாநிலத்தவர்கள் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடாது என்ற நிலையை எடுத்தால் என்னவாகும்? இதைப்பற்றி மத்தியிலே ஆளும்பொறுப்பிலே இருக்கின்ற இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சற்றுச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே, ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் நிலையை, பொறுப்பிலே இருக்கின்ற இந்திராகாங்கிரஸ் சர்க்கார், அதிலும் குறிப்பாக பம்பாய் கார்ப்பரேஷன் இந்த நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறபாகத் தமிழக முதல்வர் அவர்கள் இந்திராகாந்தி அவர்களைச் சந்தித்து இந்த நிலைமைகளைப்பற்றிப் பேச வேண்டும். தமிழகத்தின் ஒட்டுமொத்தமான கருத்தைத் தெரிவிக்கின்ற வகையில், தமிழக அரசே இந்தச் சட்டமன்றத்தின் மூலம் ஒரு தீர்மானத்தைப் போட்டு, தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பதட்ட நிலையை மாற்ற வேண்டும், இப்பொழுது ஏற்பட்ட நிலையைக் கண்டிக்கிறது என்ற கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, பம்பாய் நகரத்திற்குப் பிழைப்பதற்காகச் சென்ற ஆயிரக்கணக்கான தமிழர்கள் கூலிகளாக, தங்களுடைய வாழ்க்கைப் போராட்டத்திற்காக அங்கே கூலி வேலை செய்து கொண்டிருப்பதும், அவர்களுடைய ஏழ்மைநிலையின் காரணமாகக் குடிசைகளிலே அவர்கள் வாழ்வதும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

ஆனால், பம்பாய் நகரத்தினுடைய சாலையோரப் பகுதிகளில் உள்ள குடிசைகளில் வாழுகின்ற அந்தத் தமிழர்களை யெல்லாம் அப்புறப்படுத்தி, அவர்களது குடிசைகளை நாசப்படுத்தி அன்றைக்கு அந்தக் காரியத்தைச் செய்த நேரத்தில் மழை பெய்து கொண்டிருந்தது. தொடர்ந்து இரண்டு நாட்களாக மழை பெய்தது. இதன் காரணமாக ஒரு பெண்ணுக்குப் பிரசவம் பார்ப்பதற்குக் கூட இடமில்லாமல் இரயிலிலேயே பிரசவமாகியிருக்கிறது. நான்கைந்து பேர் மழை தாங்காமல் இறந்து போயிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவர்கள் தங்குவதற்கான இடமில்லாமல் ரோடு ஓரப் பகுதிகளில் இருக்கின்ற பஸ் ஸ்டாப்புகளைத் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சோக நிகழ்ச்சிகளையெல்லாம் பற்றி இங்கேயிருக்கின்ற தமிழ்ப் பத்திரிகைகள் அதிக அளவிற்குப் போடாவிட்டாலும்கூட, ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' ரொம்பவும் கண்டித்து, அன்றைக்குத் தலையங்கம் எழுதியிருப்பதோடு அந்தப் படங்களையெல்லாம் அங்கே பிரசுரித்திருக்கிறார்கள்.

இதை எதிர்த்து பம்பாய் ஹைகோர்ட் கூட, இந்த முறை தவறு, மகாராஷ்டிரா சர்க்காராக இருந்தாலும், மகாராஷ்டிரா கார்ப்பரேஷனாக இருந்தாலும், பம்பாய் கார்ப்பரேஷனாக இருந்தாலும் இம்மாதிரியான முறைகளில் பம்பாயிலுள்ள தமிழர்களின் குடிசைகளை அகற்றுவது, மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்வது தவறு என்று கண்டித்து, அந்தக் காரியத்திற்குத் தடை விதித்துள்ளது.

இங்கே வாழுகின்ற தமிழ் மக்களாகிய நாம் நிச்சயமாக வருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால், இலங்கையிலே உள்ள தமிழர்களெல்லாம் கள்ளத் தோணிகள் என்று அழைக்கப்பட்டு, கொலை செய்யப்படுகின்ற, கொள்ளையடிக்கப்படுகின்ற, பெண்கள் கற்பழிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்றால், இன்றைக்கு இந்தியாவிலேயும் பக்கத்திலேயிருக்கின்ற மகாராஷ்டிரத்திலே உள்ள தமிழர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இது மிகவும் முக்கியமான பிரச்னை. தமிழ்நாட்டிலே இன்றைக்குப் பார்க்கிறோம், வேற்று மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இங்கே மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள், சாத்துக்களை வைத்திருக்கிறார்கள், பல மாடிக் கட்டடங்

களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், வியாபாரிகளாக இருக்கிறார்கள், பெரிய பதவிகளிலே இருக்கிறார்கள். அந்த அளவிற்குத் தமிழ்நாட்டில் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள், மதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பெரும் பொறுப்பைக் கொடுக்கின்ற அளவிற்குப் பெருந்தன்மையோடு இம்மாநிலத்து மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்ற கணக்கைப் பார்க்காமல் தமிழ்ச் சமுதாயம் நடந்துகொள்கிறது.

ஆனால் இன்றைக்குக் கர்நாடகத்தை எடுத்துக்கொண்டால் — கர்நாடகத்தில் இருக்கின்ற எல்லோரையும் நான் குற்றஞ்சாட்ட வில்லை, வட்டல் நாகராஜ் தமிழர்களுக்கு எதிராக இன வெறியைத் தூண்டுவதைப் பார்க்கிறோம்; அதைப்போல பம்பாயிலே சிவசேனை இயக்கம் தமிழர்களுக்கு எதிராக இன வெறியைத் தூண்டுவதைப் பார்க்கிறோம். கேரளாவைப் பொறுத்தவரையில் எனக்கு நன்றாகத் தெரியும். எங்கள் ஊர்ப் பகுதியில் இருக்கின்ற சிலருக்குக் கேரளாவிலே ஏலத் தோட்டங்கள் இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் பெரும்பணக்காரர்கள் அல்ல. சிலர் ஏலத்தோட்டங்கள் வைத்திருக்கிறார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்களுக்குக் கூடத் தெரியும். இன்றையதினம் அங்குள்ளவர்கள் அந்தச் சொத்துக்களை விற்றுவிட்டு ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அவர்கள் ஏலத்தோட்டங்களை வைத்துக்கொண்டு அங்கே பயிர் செய்ய முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. காரணம், அவர்களைப் பார்த்து, பாண்டி மக்களே வெளியே போ என்ற கோஷத்தைக் கூறுமாறு கேரளத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலே உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். பல பேர்கள் சொத்துக்களை விற்றுக் கொண்டிருக் கிறார்கள். தற்சமயம் ஏலக்காய் தோட்டங்களிலே வேலை பார்க்கக்கூடிய தமிழர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்குக் கூட வாய்ப்பில்லாமல் கேரளாவைச் சேர்ந்த எல்லோரையுமே நான் குறை சொல்லவில்லை—இன வெறி கொண்டு சிலர் அந்தக் காரியத்தை அங்கே செய்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : இந்த விவாதமே பம்பாய் நகரத்திலே இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்களைப் பாதுகாப்பது சம்பந்தப்பட்டது. அதைப் பற்றிப் பேசும்போது இவர் கேரளாவைப் பற்றிச் சொல்கிறார். கேரளாவிலே நடைபெறுவது என்ன? அங்கேயிருக்கிற தோட்ட முதலாளிகள் தொழிலாளர் களுக்குக் குறைந்த பட்சக் கூலியைக் கொடுக்க வேண்டுமென்று கேரள சர்க்கார் வற்புறுத்துகிறது. மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், தமிழ்நாட்டைச் சேர்ந்த முத கூளிகள் அங்கேயுள்ள தொழிலாளிகளுக்குக் குறைந்தபட்சக் லேகொடுக்கக் கூடாது என்று கேட்கிறாரா? (கூச்சல்-குழப்பம்) கேரளாவிலே உள்ள சர்க்கார் எந்த முதலாளியாக இருந்தாலும்



அரசாங்கம் நிர்ணயித்த கூலியைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழ்நாட்டிலே உள்ள முதலாளிகளுக்கு அது இடைஞ்சலாக இருக்கிறது என்று வாதாடுகிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை விவாதம் ஆக்க வேண் டாம். உறுப்பினர் திரு. ரகுமான்கான் பம்பாய் தமிழர் பிரச்னை பற்றி மட்டும் பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது யாருக்கும் எதிராக அல்ல. இன வெறியைத் தூண்டுகின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிழைக்கப்போன தமிழர்களை வெளியேற்றுகிறார்கள், கேரளாவிலும் அம்மாதிரி வெளியேற்றப் படுகிறார்கள் என்று சொல்லும்போது, தப்பான கருத்திலே அதைச் சொல்லவில்லை. தேசீய ஒருமைப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்கள் இங்கே அரசியல் தலைவராக இருக்கலாம், தொழில் நடத்தலாம், சொத்துக்கள் வாங்கலாம், இங்கே மகிழ்ச்சிகரமாக வாழலாம் என்ற நிலையிருக்கும்போது, இங்கிருந்து பிழைக்கப்போனவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத்தான். இங்கே பேசியவர்கள்கூட, மண்ணின் மைந்தன் கொள்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அதைக் குறித்து அதிகம் பேசவில்லை. ஆனால், பிழைப் பதற்காகப் போனவர்களை, சாதாரண கூலி வேலை செய்பவர் களை, பிழைக்கக்கூடாது, வாழக் கூடாது என்று துரத்துவது தான் கண்டிக்கப்பட வேண்டியது என்று குறிப்பிட்டேனே தவிர, ஒரு மாநிலம் இன, மொழி காரணமாக மற்றவர்களை வெளியேற்றுவதுதான் கண்டிக்கப்பட வேண்டியதே தவிர, மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே நிம்மதியாக வாழ்கிறார்கள். அதே அடிப்படையில் இங்கிருந்து சென்று மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இங்கிருந்து பிழைப்புக்காகப் போனவர்கள் மனிதர்கள். எனவே. மனிதாபிமான அடிப்படையில் அவர்களுடைய உரிமைகள் பாது காக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகத்திற்கு அர்த்தம் இருக்கும். பம்பாய் தமிழர்களுக்காக அனுதாபம் தெரிவிக்கின்ற விதத்தில். அவர்களுடைய பிரச்னையில் மராட்டிய சர்க்கார் தக்க பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதை வற்புறுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இந்த மாமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் கூட அது சரியாக இருக்கும் என்று சொல்லி, பிரச்னை மிகவும் முக்கிய மானது, ஆகவே சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். இதில் காங்கிரஸ் கட்சியினுடைய ஸ்டான்ட் என்ன?

**திரு. என் எஸ். வி. சித்தன் :** இது பாய்ன்ட் ஆஃப் ஆர்டரா? இது எந்த விதியின்கீழ் வருகிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒருவருடைய ஸ்டான்ட் என்ன என்று கேட்கிற வேலை எனக்குத் கிடையாது. அது தேவையற்றது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி பேசவில்லை. எல்லா கட்சிகளிலே உள்ளவர்களும் கருத்து தெரிவிக்க வேண்டுமானால், சபையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுகுறித்து விவாதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய அரசால் இங்கிருந்து பிழைக்கச் சென்ற தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைப் பற்றியும், அநீதிகளைப் பற்றியும் மன்ற உறுப்பினர்கள் இங்கே தெளிவுபடுத்தி, அவர்களைப் பற்றி எந்தத் தகவலும் வராததாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க, தகவலை வரவழைத்துப் பார்க்கின்ற பொழுது, நமக்கெல்லாம் ஆற்றொணாத் துயரைத் தருகின்ற வகையிலே அந்த நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன என்பதை ஒருமித்த தன்மையிலே எல்லா உறுப்பினர்களும் இங்கே எடுத்து தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 9.40]

உள்ளபடியே இது கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டிய ஒன்றாகும். மேலும் இப்படிப்பட்ட உணர்வுகள் இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பாதிக்காத அளவுக்குத் இருந்தாகவேண்டும். இந்தியாவிலே உள்ள 22 மாநிலங்களிலும் மத்திய அரசுக்கும் இருக்கின்ற எண்ண உணர்வில் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலவிதமான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

இங்கே இந்தியாவைத் பொறுத்தவரையில் ஒற்றுமைத் தன்மையும், ஒருமைப்பாட்டு உணர்வும் நாளுக்குநாள் வலிவுபட வேண்டும் என்ற தன்மையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று மக்களுக்கு அவ்வப் போது வற்புறுத்தி வருகிறது. இந்தியாவினுடைய முக்கியமான நகரங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியதற்கு இணங்க, சென்னை, ஹைதராபாத், பம்பாய், கல்கத்தா, டெல்லி, திருவனந்தபுரம் போன்ற பெரு நகரங்களை எல்லாம் எடுத்துக் கொண்டால், பல்வேறு மாநிலங்களைக் சேர்ந்த பல்வேறு மொழி பேசுகிற பல்வேறு இன மக்கள் அடங்கிய ஒரு பகுதியாகத்தான் இந்த மாநகரங்கள் எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். பம்பாயிலே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல அங்கே தமிழர்கள் மட்டும்தான் நடைபாதையிலே குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்கின்றார்கள் என்றில்லாமல், அங்கே போய் பார்த்தால் மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், வேறு பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல தமிழர்கள் உழைப்பதற்காக மட்டும் போயிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அலுவல் பார்க்கவும் போயிருக்கிறார்கள். பாங்கிலே வேலைபார்க்கவும், இன்சூரன்ஸ் கம்பெனிகளில் வேலை பார்க்கவும் வேறு கடைகளிலே அக்கவுன்டன்டாக வேலைபார்ப்பதற்கும், கூலி வேலை பார்ப்பதற்கும் அன்றாடம் உழைப்பதற்காகப் போயிருக்கிறார்கள்.



அங்கே ஏராளமாக குஜராத்திகள். பெரும் பெரும் தொழிலில் ஈடுபட்டு, வாணிகத்திலே ஈடுபட்டு இருக்கின்றவர்கள் குஜராத்திகள், ராஜஸ்தானிகள், பஞ்சாபை சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், தமிழர்கள் மீது ஒரு காழ்ப்புணர்ச்சி கொண்டு அவர்களை வெளியேற்றவேண்டும் என்ற உணர்வோடு அவர்கள் இருக்கிறார்களே தவிர, வேறு அரசியல் பிரச்சினை அல்ல, பொருளாதாரப் பிரச்சினை அல்ல, சட்டப்பிரச்சினை அல்ல, சட்ட சம்பந்தமான விதிமுறைகள் பிரச்சினையோ அல்ல என்பது இதிலிருந்தே தெரிகின்றது. அதுவும் தமிழர்கள் வாழும் பகுதியிலே மட்டும்தான் இந்த வெளியேற்றுகின்ற தன்மை, அவர்களை மாநிலத் தவிட்டே வெளியேற்றிவிடவேண்டும் என்றும் அகற்றப்படவேண்டும் என்று கருதி, அவர்களை எல்லாம் பலவந்தமாக ரயிலிலேயும், பஸ்ஸிலேயும், லாரிகளிலேயும் ஏற்றி, அந்த எல்லைப் புறத்திற்கு அப்பாற் விடுகிற அளவுக்குக் கூட நிலைமைகள் நடந்தன என்று செய்தித்தாள்கள் மூலம் நாம் அறிந்து, அத்தனை பேர்களும் அதிர்ச்சி அடைந்திருக்கிறோம்.

ஆகவே மன்ற உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் ஒருமித்தமாக எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை மனிதாபிமானத்தின் அடிப்படையில் கவனிக்கவேண்டும். மகாராட்டிர அரசு ஜூலை மாதம் 23-ந் தேதி பம்பாய் நகரில் குடிசைகளை அகற்றி உத்தரவிட்டது என்றும்; அதன் பேரில் பம்பாய் நகரில் நடைபாதைகள் குடிசைகள் அகற்றப்படுகிறது என்றும், பிரித்து எறியப்படுகிறது என்றும், இதனால் பாதிக்கப்படுபவர்கள் அனைவரும் தமிழர்கள் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. நமக்குக்கிடைத்திருக்கின்ற தகவலிலிருந்து மாநகராட்சியால் மட்டுமல்ல, அரசே இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பது தான் நமக்குத் கிடைத்த தகவலாகும்.

பம்பாய் வில்லி பார்லே பகுதியில் காமராஜ் நகரில் குடிசைகள் போட்டு வசித்து வந்தனர் என்றும் அவர்களது குடிசைகள் இடித்துத் தள்ளப்பட்டன என்றும் பத்திரிகையிலே செய்திகள் வந்துள்ளன. இதற்கிடையில் குடிசைகள் இடிப்பதற்குத் தடை விதிக்கக் கோரி மனித உரிமைக் கழகம் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது என்றும், அக்டோபர் 15-ந் தேதி வரையில் குடிசைகள் அகற்றப்படுவது நிறுத்திவைக்கப் படவேண்டும் என்று உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது. மற்றும் சில தொடர்ந்த வழக்குகளில் பம்பாய் உயர்நீதி மன்றம் பிரிக்கப்படாமல் இருக்கின்ற குடிசைகள் அக்டோபர் 15 வரையில் பிரிக்கக்கூடாது என்று உத்தரவிட்டது என்றும், 1979 சென்சஸ் பிரகாரம் அனுமதிக்கப்பட்டவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் அக்டோபர் 15க்குள் திரும்பவேண்டும் என்றும் எழுத்து மூலமாக வாக்குறுதி அளிக்கவேண்டும் என்றும், பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன. இதனாலே தமிழர்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மன்ற உறுப்பினர்கள் எல்லாம் கண்டனக் குரல் எழுப்பினார்கள். இது மனிதாபிமானத்தோடு கவனிக்கப்படவேண்டிய ஒன்று. இது எல்லா மாநிலத்தினுடைய தலைநகரங்களையும், முக்கியமான நகரங்களையும் பொறுத்த ஒன்று.

ஆகவே, தமிழக அரசைப் பொறுத்தவரையில், இந்தச் செய்திகளின் அடிப்படையில் குஜராத் மாநில அரசுக்கு தந்தி மூலமாக விளக்கங்கள் கேட்டு, இது உடனே தடுத்து நிறுத்தப் படவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். இதுவரையில் அவர்களிடத்தில் இருந்து எந்த பதிலும் வரவில்லை. அவர்களோடு தொடர்ந்து தொடர்பு கொள்ளும் முறையிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னதற்கிணங்க மராட்டிய மாநில அரசே அங்கே இருக்கின்ற முதலமைச்சருடைய மேற்பார்வையில் இது நடைபெறுகிறது என்றால், அவர்களிடத்திலே கூட அதிகம் நியாயம் பெற முடியாது என்ற நிலை ஏற்படுமானால். இந்தியாவினுடைய முழுபொறுப்பையும் ஏற்று, இந்தியவின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற மத்திய அரசு, காங்கிரஸ் கட்சியால் ஆளப்படுகிறது. அதே கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் மகாராட்டிரத்திலேயும் இருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துகிற உணர்வும் அரசுக்கு இருக்கிறது. உடனடியாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, மத்தியிலே இருக்கிற பிரதமர் அவர்களோடு தொடர்பு கொணடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மராட்டிய மாநிலத்திலிருந்து விரைவிலே பதில் வரும் என்றும் எதிர்ப்பார்க்கிறோம். அதை, என்ன செய்வது என்பதை, இந்த இடைகாலத்தில் தீர்த்து வைக்கிற பெரும் பொறுப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும்



சொல்லியிருக்கிற கருத்துக்களையும், கண்டன குரலையும் மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்து, அவர்கள் மூலமாக தக்க பரிகாரம் தேடுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்,

மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் சொல்கிற மாதிரி தமிழகத்தைப் பொறுத்த வரையில் திருப்பிச் செய்கிற உணர்வு இல்லை. வட மாநிலத்தைச் சேர்ந்த நிறைய பேர்கள் தமிழகத்திலே இருந்து வருகிறார்கள். காழ்ப்புணர்வு கொண்டு, மொழி உணர்வின் அடிப்படையிலே அவர்களை வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணம் தமிழர்களுக்கு எப்போதும் கிடையாது. இந்த உணர்வு அகில இநதியாவிற்கும் தெரிய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. மராட்டியத்தில் இருக்கிற தன்மைகளை உணர்ந்து மத்திய அரசு குறுக்கிட்டு அதை அடக்கி வைக்காவிட்டால், அது மாநிலத்திற்கு மாநிலம் கிளம்புமேயானால், அங்காங்கே இருக்கிறவர்களுடைய பிரச்சினைகளை மாத்திரம் கருதி, இந்தியாவையே மறந்து விடுவார்களானால், நகரை மட்டும் கவனித்து, பிற பகுதிகளை மறந்து விடுவார்களானால், எந்த ஒற்றுமையை வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அந்த ஒற்றுமை பாழ்பட்டு விடும்.

ஆகவே தான் மன்றத்திலே பலரும் எடுத்துச் சொன்னக் கருத்துக்கள் மனித உணர்வின் அடிப்படையிலே, இந்திய அரசும் மகாராஷ்டிர அரசும் தங்களுடைய கருத்துக்களை மாற்றிக் கொள்வதற்கு பயன்படும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் மிக மிகப் பயன்படும். இந்த பிரச்னையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று சொல்லி, வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்று உறுதிமொழியாகக் கூறி, இந்த அவையில் பேசவேண்டிய கருத்துக்கள் பேச வேண்டிய அளவிற்கு பேசியிருப்பதன் காரணமாக மேற்கொண்டு அவையை ஒத்தி வைத்து பேசத் தேவையில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 1. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### ஆ. தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம் — தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவையில் 24-8-1981—ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற தமிழகத்தில் உணவு, நிலைமையும் இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கைமீது மேலும் விவாதம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பதிலுரை.

**திரு என். சங்கரய்யா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை இன்றைக்கு ஒரு மணிக்கு முடிக்க வேண்டியிருப்பதால் நேரம் போதாது ஆகவே ஒரு மணிக்கு பிறகு வெள்ளை அறிக்கை மீதான பதிலுரையை வைத்துக் கொள்ளலாம்.

**திரு அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடையத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையில் விவாதத்தை முன்னால் வைத்துக் கொண்டு வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தை அதற்கு பின்னால் எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் இரண்டுக்குமே மாண்புமிகு நாவலர் அவர்கள்தான் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் வெள்ளை அறிக்கையில் பதிலுரையை முடித்துக்கொண்டு, அதற்கு பின் துணை மானியக் கோரிக்கை மீது விவாதம் வைத்துக் கொள்வது என்று நேற்றைக்கே முடிவு செய்யப்பட்டிருக்கிறது, ஆகவே வெள்ளை அறிக்கையின் மீது முதலில் பதிலுரை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உணவு நிலைமைப் பற்றியும் விலைவாசியின் தன்மை பற்றியும் அரசின் சார்பாக வெளியிடப்பட்ட கருத்துக்களை நியாயமான பண்போடும் பொறுப்போடும் மன்றத்தில் உள்ள ஆளும்கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நல்லமுறையில் விவாதித்து, சீரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கி, இந்தத் துறை மேலும் செம்மையாக நடைபெற





சிறப்பாக நடைபெற நல்லபல பரிந்துரைகளை நல்கியிருப்பதற்காக அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குப் பயன்படுகின்ற வகையில், இந்தத் துறைக்குப் பயன்படுகின்ற வகையில் சிலபல கருத்துக்களை அநேகமாக எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். எனக்கோ இந்தத் துறைக்கோ பயன்படாத கருத்துக்களைச் சிலர் சொன்னார்கள் என்றால் அதைப் பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை. எல்லாக் கருத்துக்களும் பயனுடையதாகத்தான் இருக்கும், பயனுடைய கருத்துக்களைத்தான் சொல்வார்கள் என்று நான் நினைக்கவும் இல்லை. ஆகவே பயன்படுகின்ற கருத்துக்களை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்.

இந்த துறையிலே இருக்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அங்கே நடைபெறுகின்ற சிலபல குற்றங்களை எடுத்துக் காட்டி, அவை களையப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து, அதிகாரிகள் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே கருத்துக்களை எடுத்து சொன்னவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பொறுப்பு உணர்ச்சியோடு பல கருத்துக்களைத் தெரிவித்து, இந்தத் துறையை மேலும் சீர்படுத்த வேண்டுமென்று பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்; கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் வழங்கியிருக்கிறார்கள்; மற்றவர்களும் நல்லபல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

ஆனால் ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் இந்த அறிக்கையிலே எதுவுமே இல்லை என்றும், ஒன்றுமே இல்லை என்றும், இது வெள்ளையாக தன்னுடைய கண்ணுக்குத் தெரியவில்லை என்றும் இது கறுப்பாகத்தான் இருக்கிறது என்றும் கூறினார் என்றால் எல்லோருக்கும் வைத்த அறிக்கையைத்தான் அவருக்கும் வைத்தேனே தவிர வேறு அல்ல. ஆக அறிக்கையின்மீது எந்த குற்றமும் இல்லை என்றும் அவருடைய கண்ணிலே, கருத்திலேதான் குற்றம் இருக்கவேண்டுமே தவிர வேறு எதுவும் இருக்க முடியாது என்றும் ஆகையால் அதற்கு நான் எந்த விளக்கமும் சொல்வதற்கு இல்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அவருடைய மழலைச் சொற்களை மட்டும் நான் கேட்டு மகிழ்ந்தேன். ஏனென்றால் மழலை மொழிச் சொற்களில் பெரும்பாலும் பொருள் கிடைப்பது இல்லை. ஆனால் கேட்டு மகிழ முடியும். அன்றைக்கும் அந்தவகையிலே கேட்டு மகிழ்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது என்பதற்காக அந்த வகையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு உணவுப் பிரச்சனையைப் பொறுத்த மட்டில்,
உணவு நிலைமை மற்றும் விலைவாசித் தன்மை பற்றிய நிலைமை
பொதுவான இந்த அளவுக்கு நன்றாகத் தெரியவேண்டும்; இந்த
நாட்டுக்கும் தெரியவேண்டும். மற்றவர்களும் புரிந்துகொள்ள
வேண்டும என்ற வகையில் இந்த அறிக்கை வைக்கப்
பட்டது அதன்மீது உங்களுடைய மேலான கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறீர்கள்.

பொதுவாக இன்றைக்கு உலகம் எங்கும் இந்தப் பிரச்சனை
யைப்பற்றி கவனிப்போமானால் நிலைமையை நாம் புரிந்துக்
கொள்ள முடியும். உலகத்திலே தேவைகளை நிறைவு செய்து
மகிழ்ச்சியோடு இருக்கிற நாடுகள் பல. ஆனால் தேவைகளை
முழுமையாக நிறைவேற்ற முடியாமல், அரைகுறையாக நிறை
வேற்றி அந்த அளவிலே மன ஆறுதல் பெறும் நாடுகளும் இருக்
கின்றன. ஆனால் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் அவதி
யுற்று, அதன் காரணமாக மனம் வருந்துகின்ற நாடுகள் பல
இருக்கின்றன.

இந்தியாவிலும் சரி, இந்தியாவில் இருக்கின்ற 22 மாநிலங்
களிலும் சரி, மத்திய அரசின் கீழ் இருக்கிற பகுதிகளிலும் சரி
எந்த இடத்தை எடுத்துக் கொண்டு கணக்கிட்டுப் பார்த்தாலும்
கூட இந்தியாவிலே இருக்கிற அத்தனை பேர்களும் தேவைகள்
அத்தனையையும் நிறைவேற்றிக்கொண்டு மகிழ்ச்சியோடு இருக்
கிறார்கள் என்று நானும் சொல்லவில்லை. மத்திய அரசும்
சொல்லவில்லை. நானும் இந்த உணவுப் பிரச்சனையைப் பற்றி
இங்கே பேசுகின்ற அதே நேரத்தில் மத்திய நிதி அமைச்சர்
ஆர். வெங்கட்ராமன் அவர்களும் மக்கள் அவையில் இதே
பிரச்சனை பற்றி கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இருக்கிற சூழ்நிலைகளைப்
பார்க்கிறபோது நாம் சமாளித்துக்கொண்டு வருகிறோமே தவிர
மத்திய அரசும் சமாளித்துக்கொண்டுதான் வருகிறதே தவிர
அந்த அளவிலே மன ஆறுதல் பெறக் கூடிய வகையில்தான்
இருக்கிறதே தவிர உணவுப் பிரச்சனையில் முழுத் தேவையையும்
எட்டிவிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இன்றைக்கு தமிழகத்தில் நாலேமுக்கால் கோடி மக்களுக்கும்
மகிழ்ச்சி தரும் வகையில், மன, நிறைவு தருகின்ற வகையில்
உணவுப்பிரச்சனையில் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை.
இருக்கிற நிலைமையில் எப்படி சமாளிக்கப்படுகிறது என்பதை
எடுத்துச் சொல்லுகின்ற வகையிலேதான் நாம் பல கருத்துக்
களை இங்கே எடுத்து வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல.
உலகம் முழுவதையும் எடுத்துக்கொண்டால் கூட இந்த
நிலைமை நாளுக்கு நாள் பயங்கரமாக இருக்கிறது.



நேற்றைய ஹிந்து பத்திரிகையில் ''ஃபுட் அவுட்லுக் ஃபார் எ
டிகேட்'' என்று அதாவது 10 ஆண்டுகளுக்கு பிறகு நிலைமை
எப்படி இருக்கும் என்பதை வல்லுநர் ஒருவர் உலகம் முழு
வதையும் பற்றித் தெரிந்துகொள்கின்ற வகையிலே எழுதி இருக்
கின்ற அந்தப் பாங்கின் அடிப்படையிலே பார்க்கின்ற போது
உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிலைமை இப்படித்தான்
இருக்கும் என்று கருதக்கூடிய அளவுக்கு இருக்கின்றது. எஃப். ஏ.ஓ
என்று சொல்லப்படுகின்ற உணவு வேளாண்மைக் கழகத்திலே
147 நாடுகள் இந்தப் பிரச்சினை குறித்து கவலை அடைந்திருக்
கின்றது என்றும் எனவே வருகின்ற அக்டோபர் திங்கள் 1 —ஆம்
நாளை உணவு நாளாகவே உலக நாடுகள் எல்லாம் கொண்டாட
வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றன. பட்டினியாலே
வாடுகின்ற பல நாடுகள் எல்லாம் இதைப்பற்றி பொறுப்போடு
சிந்தித்துப் பார்த்து, நம்முடைய எதிர்காலத்தின் தேவைகளை
எட்டவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் உலகப் பசியைத்
தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து அந்த வழிவகை
களை ஊக்குவிப்பதற்காகத்தான் இந்த நாள் கொண்டாடப்
படுகின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே
நாம் சிந்தித்துப் பார்த்தால் பத்தாண்டுகளிலே உலகம் புதிய
தொரு யுகத்தை அடையும் என்றும் அதாவது உணவுப்பற்றாக்
குறை என்பதான நிலைமை அமையும் . என்றும் நிலையற்ற
முறையில் விலைவாசிகள் ஏறும் என்றும் வசதி உடையவர்
களுக்கும், பட்டினி கிடப்பவர்களுக்கும் இடையில் உள்ள இடை
வெளி விரிவடையும் என்றும் உலக உணவு வல்லுநர்கள் எடுத்துச்
சொல்லி இருக்கிறார்கள்.

அப்படி எடுத்துச் சொல்கின்றபோது பட்டினியாலே வாடு
கின்ற நாடுகள் எவை என்று பார்க்கின்றபோது உலகப் படத்தை
வரைந்து அதாவது Where the worl'ds hungry live என்ற வகையிலே
அதாவது பசியானது எங்கெல்லாம் தங்கி வளர்ந்துகொண்டிருக்
கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். பல நாடு
களைக் கோடிட்டுக்காட்டி இருக்கிறார்கள். இந்தியா முழுமையும்
வங்காள தேசம், வியட்நாம், கம்போடியா, வெனிசுலா,
உகாண்டா, டான்சேனியா, கென்யா, அங்கோலியா, ஜாம்பியா
ஜோர்டான், சவுதி அரேபியா, ஏமன்' ஈராக், ஈக்வேடர், பெரு
போன்ற நாடுகளில் எல்லாம் பசி வாழ்கின்ற அளவுக்கு, உணவுப்
பிரச்சினையைத் தீர்க்க முடியாத அளவுக்கு இருக்கும் என்று
சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி இந்தியாவில் முழுக்க முழுக்க
பட்டினியால் வாடுகின்ற அளவுக்கு உணவுப் பற்றாக்குறை இருந்து
வருகிறது என்ற அந்தப் பாங்கிலே பார்க்கின்றபோது இங்குள்ள
நிலைமையினைப் புரிந்து கொள்ளவேண்டும். இதை நான் ஏன்
சொல்கிறேன் என்று சொன்னால் ஏதோ திறமையின்மையின்
காரணமாக, எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய
தன் காரணமாக, ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்படுகின்றது
என்று கருதிக்கொண்டு இங்கே பேசி இருக்கிறார்கள். எங்களைக்
குற்றம் சாட்டவேண்டும் ஆத்திரம் கொண்டு என்றால் அதற்கு

வேறு வழியைப் பின்பற்றலாமே தவிர வேறு வகைகளைத் தேட வேண்டுமே தவிர, இந்த வகை பொருந்தாது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

ஆக இந்தியா முழுமையிலும் இருக்கின்ற பட்டினி நிலைமை தமிழ் நாட்டிலேயும் இருக்கின்றது. நேற்று இங்கே அவர்கள் பேசுகின்றபோது இங்கே பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அளவுக்கு, திறமை இல்லாத அளவுக்கு, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அதேபோன்று அங்கே மத்திய அரசு பற்றியும் குறிப்பிட்டபோது அதற்கு பதிலாக மத்திய நிதியமைச்சர் அவர்கள் மிகச் சரியாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

He was not a prophet but added that if the present trend continued prices would show a greater degree of deceleration.

'நான் ஒன்றும் மகான் இல்லை இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இருக்கின்ற சூழ்நிலையை வைத்துத்தான் தீர்க்க முடியும். உலகத்திலே பண வீக்கம் ஏற்பட்டிருக்கின்றது, உலகத்திலே விலைவாசிகள் ஏற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதும் பத்தாண்டுகளில் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் விலைவாசிகள் ஏறி இருக்கின்றன. பல பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்கிறோம் என்ற நிலையில் பிரச்சினைகள் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. பண வீக்கத்தை கட்டுப்படுத்த முயற்சித்தோம். அது முழுவதும் முடியாமல் இருக்கின்றன' என்று சொல்லி இருக்கிறார்கள்.

வேறொரு சந்தர்ப்பத்திலே மத்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொல்கின்றபோது The Government of India and economics can do only this much. The rest can be done only by the co-operation, sincerety, honesty and integrity of the people. என்று எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசும் இருக்கின்ற பொருளாதாரத் தன்மையில் இவ்வளவுதான் செய்ய முடியும் இதற்கு மேல் சரிப்படுத்த வேண்டும் என்றால் பொது மக்களுடைய ஒத்துழைப்பும் பொதுமக்களுடைய நேர்மையான தன்மையும் சேர்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும் என்று அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இங்கே இருக்கின்ற நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். பொதுப் பண்டங்களை வினியோகிக்கின்றபோது விலைவாசிகள் ஏறுகின்றன என்ற தன்மையின் அடிப்படையில் மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பண்டங்களை அனைத்தையும் மத்திய அரசும், மாநில அரசும் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து மத்திய அரசே வெளியிடவேண்டும் என்ற கொள்கையை மத்திய அரசு கொண்டிருக்கின்றது.



[முற்பகல் 10.00]

நேற்று நாடாளுமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் கல்யாணசுந்தரம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நிதியமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் பதில் அளிக்கின்றபோது இரண்டு வகையான தன்மைகளும் இருக்கத்தான் செய்யும் என்று சொல்லியிருக்கிறார். ஒன்று, ஏழை எளிய மக்களுக்காக, அதிக விலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் உள்ள மக்களுக்காக நியாய விலைக்கடைகளை ஏற்படுத்தி குறைந்தவிலையில், பொருள்களை கிடைக்கச் செய்யும் முயற்சியும் நிலைமையும் இருந்துக் கொண்டேயிருக்கும் என்றும், மற்றொரு பக்கத்தில், எல்லாப் பண்டங்களும் வெளிச்சந்தையில் கிடைக்கும் வகையில், வெளி மார்க்கெட்டில் சற்று விலை கூடுதலாக கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கும். ஆகவே இந்த இரண்டு விதமான நிலைமையும் இருக்கத்தான் செய்யும் என்று அவர்கள் கூறியுள்ளார். வெளிச்சந்தையில் கிடைக்கும் பண்டங்களை வசதி உள்ளவர்கள், அதிகப் பணம் கொடுத்து வாங்கும் சக்திபடைத்தவர்கள் வாங்கி தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, இந்தியாவில் இருக்கிற அனைத்து மக்களுக்கும் 68 கோடி மக்களுக்கும், குறைந்த விலையில் பண்டங்களை கிடைக்கச் செய்கிற முழு பொறுப்பையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாநில அரசைப் பொறுத்தவரையிலும் ஓரளவு பண்டங்களை குறைந்தவிலையில் நியாயவிலைக்கடைகளில்மக்களுக்கு கிடைக்கும்படிச் செய்யலாமே தவிர, மனோப்பலி என்று சொல்லக்கூடிய அளவு எல்லாப்பொருள்களையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய முடியாது. வேண்டுமானால் பொதுவினியோக முறையில், ஒரு விலைக் கட்டுப்பாட்டின் கீழ் ஒழுங்கு படுத்தவும், சீர் படுத்தவும், ஏழை எளிய மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களை ஏதோ ஓர் அளவிற்கு கிடைக்கச்செய்யவும் பணியிலேயும் ஈடுபடலாம். அந்த நோக்கத்தோடுதான் இப்போது இந்த அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிச் சொல்கிறபோது அதை பப்ளிக் டிஸ்டிரிப்யூஷன் சிஸ்டம், என்று சொல்லக்கூடிய ஒருமுறையின் அடிப்படையிலே தான் தமிழகத்திலே கையாளப்படுகிறது. அதன் அடிப்படையில் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்னாலே 5 ஆயிரத்து சொச்சம் என்று இருந்த நியாயவிலைக்கடைகளை, இன்றியமையாத பொருள்களை தமிழக மக்களுக்கு வழங்குவதற்காக 17.400 நியாயவிலைக் கடைகளாக மாற்றி ஏற்படுத்தி வினியோகிக்கிற முறையை கொண்டு வந்திருக்கிறது.

அரிசியைப் பொறுத்தவரைக்கும் இந்த அரசு சப்சிடைஸ் வழங்கியிருக்கிறது. அதேபோல சர்க்கரை வினியோகத்தையும் சீராக்கிக் கொண்டிருக்கிறோம். லெவி சர்க்கரை தருகிற பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். சமையல் எண்ணெயை மத்திய அரசு ஒதுக்கித் தருகிற அடிப்படையில் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

லெவி கோதுமை வருகிறபோது, விலை குறைத்துக் கொடுத்திருக்கிறோம். மற்றப் பொருள்களைப் பொறுத்தவரையில், விலை அதிகமாக உயராத அளவிற்கு கட்டுப்படுத்துகின்ற ஒரு வினியோக முறையை கையாளுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதே போல கோதுமைப் பொருள்களைப் பொருத்தவரையில், லெவிப் பொருள்களை அப்படியே மொத்தமாக அரசாங்கமே கொள்முதல் செய்து 40 சதவீதம் கொடுத்து அந்த மாவு மில்களுக்கு அப்படியே கொடுத்துவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. எந்த அளவிற்கு, இன்றியமையாத பொருள்கள் மக்களுக்கு கிடைக்கவும் விலைவாசிகள் ஓரளவிற்கு கட்டுக்கடங்கியிருக்கவும், எந்த அளவிற்கு பணிகளை மாநில அரசு செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு இந்த அரசு செய்துக் கொண்டுதான் இருக்கிறது.

இன்னும் ஒருபடி அதிகமாகச் சொல்லவேண்டும் என்றால், டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் சிறப்பாகத்தான் இருக்கிறது என்று நான் உறுதியாகச் சொல்வேன். இங்கே பேசிய அங்கத்தினர்கள் பலர் பல குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். நான் மறுக்கவில்லை. குறைகளே இல்லை என்று சொல்லவில்லை. சிலர் ஆங்காங்கே சில குற்றங்களைச் செய்கிறார்கள், அவைகளை கண்டு பிடித்து குறைகளை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கொண்டுதான் இருக்கிறது. அப்படியும் சில இடங்களில் தவறுகள் நடைபெறுகிறது. குற்றங்களே இல்லை. குறைபாடுகளே இல்லை என்று நான் சொல்லவில்லை. குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. அவைகளை களைவதற்கு அரசாங்கமும் தன்னாலான முயற்சிகளை செய்துக் கொண்டுதான் இருக்கிறது. நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த பொதுவினியோக முறை சிறப்பாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், நேற்று பேசும்போது கூட நமது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் கூறுகிறபோது He said Tamil Nadu, Kerala, West Bengal and Maharashtra had been very efficient in implementing the public distribution scheme. என்று கூறியிருக்கிறார்கள். இதர மாநிலங்களைப் பார்க்கிறபோது, தமிழ்நாடு, கேரளா மேற்கு வங்கம், மகாராஷ்டிரா ஆகிய நான்கு மாநிலங்களும் பொது வினியோக முறையில் திறமையாக பணி புரிகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒருபடி மேலே போய் நான் சொல்வேன், குறைபாடு இல்லை என்று சொல்ல முடியாவிட்டாலும், ஆங்காங்கே ஒன்றிரண்டு இருந்தாலும், சிறப்பான முறையில் இந்த வினியோக முறை நடைபெற்று வருகிறது. அதன் காரணத்தால் வெளி மாநிலங்களிலிருந்து சிவில் சப்ளைஸ் பணியாளர்களையும் அதிகாரிகளையும், தமிழ்நாட்டிற்கு அனுப்பி சீரான முறையை கற்றுக்கொண்டு வரச் செய்யலாம் என்று கூட மத்திய அரசினர் சொல்லியிருக்கிறார்கள்,



தமிழ்நாட்டில் எப்படி பொதுவினியோக முறை கையாளப்படுகிறது என்பதை ஒரு டாக்குமெண்டரி படமாகக் கூட எடுத்து மற்ற மாநிலங்களில் படமாகக் கூட போட்டு காட்டவேண்டும் என்று மத்திய அரசு இந்த அரசைக் கேட்டு, ஒப்புதலும் கொடுத்திருக்கிறோம். அந்த வகையில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக சிறப்பான பணிகளை செய்யவிருக்கிறோம். இதை நான் ஏன் எடுத்துச்சொல்கிறேன் என்றால் இயன்ற அளவிற்கு, தமிழக அரசின் ஆற்றலைப் பயன்படுத்தி சீரிய முறையில் முடிந்த வரையில், நம் தகுதிக்கேற்ப நாம் செய்துக் கொண்டு வருகிறோம் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் சொன்னேன்.

பல்வேறு பிரச்னைகளைப் பற்றி எடுத்து சொல்கிறபோது விலைவாசியைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். விலைவாசி உயர்வு என்பது இங்கேமட்டும் உள்ள ஒருபிரச்னை அல்ல. அகில உலக ரீதியில் இந்தியாவைப் பாதித்திருக்கிற பிரச்னை. அகில இந்தியா என்று பார்கிறபோது, அகில இந்தியாவைப் பாதிக்கும் அனைத்துப் பிரச்னைகளும்—விலைவாசியைப் பொருத்த அளவில் தமிழ்நாட்டையும் பாதிக்கத்தான் செய்யும்.

நெல் நம்மிடத்தில் விளைகிறது. சோளம் கம்பு, கேழ்வரகு இவை நம்மிடத்தில் விளைகின்றன. அப்படியிருந்தாலும்கூட நெல்லின் விலையை நிர்ணயிக்கிற அதிகாரம் மத்திய அரசிடத்தில் தான் இருக்கிறது. பல்வேறு மாநிலங்கள் உபரி மாநிலங்களாக இருக்கின்றன. சில மாநிலங்கள் பற்றாக்குறை மாநிலங்களாக இருக்கின்றன. பற்றாக்குறை மாநிலங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆகவே நெல் விலை, கோதுமை விலை, சிமென்ட் விலை ஆகியவற்றை நிர்ணயிக்கிற பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்க வேண்டுமென்று மத்திய அரசு வாதாடி அதை வைத்துக் கொண்டிருக்கிறது. அதில் ஓரளவு நியாயமும் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அந்த வகையில் பார்க்கிறபோது நெல்லின் விலையை நிர்ணயிக்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது.

நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் 'மார்ஜினல் சர்ப்ளஸ்' மாநிலமாக நம் மாநிலம் அமைந்திருக்கிறது. ஆந்திரா மிக உபரி மாநிலம். கர்நாடகா சரிசமம். கேரளா பற்றாக்குறை மாநிலம். வேறு பல மாநிலங்கள் இருக்கின்றன. நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஆந்திராவைப் பொறுத்த வரையில் கேரளாவைப் பொறுத்த வரையில், கர்நாடகாவைப் பொறுத்தவரையில் அரிசி உணவுப் பண்டமாக இருக்கிறது. பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் அது உணவுப்பண்டமாக இல்லாமல்அது விற்பனைப்பொருளாகஅமைந்திருக்கிற அளவிற்கு அங்கே அமைந்திருக்கிறது. 65,000 டன் அளவிற்கு க்யூபா, கென்யா போன்ற நாடுகளுக்கு 1979—80ல் தமிழகம் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்தது.

ஆனால் 1980-ம் ஆண்டில் வடகிழக்கு பருவக் காற்றும் தென் மேற்குப் பருவக் காற்றும் பொய்த்ததின் காரணமாக, போதிய விளைச்சல் ஏற்படாததன் காரணமாக பற்றாக்குறை ஏற்பட்டு, அப்படி ஏற்பட்ட பற்றாக்குறையினால் 13½ இலட்சம் டன் அளவில் நமக்கு அரிசி குறைவாக கிடைத்ததன் காரணமாக நாம் பிற மாநிலங்களை எதிர்பாக்கவேண்டிய அவசியம் இருந்திருக்கின்றன.

மற்றப் பண்டங்கள் போன்றவற்றைப் பார்த்தாலும் கூட பெரும் பகுதி பருப்புகள் எல்லாம் பிற மாநிலங்களிலிருந்துதான் பெறவேண்டும். பிற மாநிலங்களில் அவர்கள் என்ன விலையை நிர்ணயிக்கிறார்களோ அதையும், அவற்றை நாம் லாரிகளில் அல்லது ரெயிலில் கொண்டு வருகின்ற டிரான்ஸ்போர்ட் சார்ஜையும் சேர்த்து நாம் விற்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பெரும்பாலான பருப்பு வகைகளோடு எண்ணெயை எடுத்துக்கொண்டால் கடலை எண்ணெய் ஒன்று தான் நம் மாநிலத்தில் நம் தேவையை நிறைவேற்றுகிற அளவிற்கு இருக்கிறது. அதில் பற்றாக்குறை ஏற்படும்போது குஜராத் போன்ற மாநிலங்களை எதிர்பார்த்து ஏற்படுகிற சிறிய அளவு பற்றாக்குறையை நீக்க வேண்டியிருக்கிறது. நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் மற்ற எண்ணெய்களை எல்லாம் நாம் பிற மாநிலங்களிருந்துதான் எதிர் பார்க்க வேண்டும். பெரும்பாலும் கேரளாவிலிருந்துதான் தேங்காய் எண்ணெய் பெறுகிறோம். கேரளாவிலும் விலை மிக அதிகமாகக் கூடியிருப்பதால் அவர்கள் நிர்ணயிக்கிற விலையின் அடிப் படையில் அங்கிருந்து கொண்டுவந்து விற்க வேண்டிய அளவில் இருக்கிறோம். நல்லெண்ணெயை ஆந்திராவிலிருந்தும் வேறு பல இடங்களிலிருந்தும் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் பார்க்கிறபோது இந்தப் பிரச்னையை நம்முடைய மாநிலத்தில் நாம் கட்டுப்படுத்திக் கொள்கிற அளவிற்கு சாதாரண மக்களுக்கு பரவலாகக் கிடைக்கிற அளவிற்கு ஒழுங்குபடுத்துகிற நிலையில், வெளிமார்க்கட்டோடு போட்டி போட்டு அதிகமான விலைக்கு போகாமல், அதிகமான விலையில் வெளி மார்க்கட் மூலம் போகமல், பார்த்துக் கொள்கிற அளவிற்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன.

பண்டங்களின் விலைகள் ஏறுகின்றன என்றால் உலக நாடு களில் எல்லாம் ரூ. 1,400க்கு விற்ற உரம் ரூ. 2,000 ஆக உயருகிறது என்ற காரணத்தால் எல்லா வகையிலும் உற்பத்திச் செலவு ஏறுகிறது. அதே மாதிரி இரும்பு, எஃகு, சிமென்ட் ஏறுகிற நிலை ஏற்பட்டு விட்டது. அண்மையில் சிமென்ட் விலையை ரூ. 34-50க்கு ஏற்றியிருக்கிறார்கள். அதிகமாக ஏற்றுகிற சூழ்நிலை ஏற்பட்டது மட்டுமல்ல. டீஸல், பெட்ரோல் விலையும் ஏறியிருக்கிறது. இதைச் சொல்லும்போது நான் மத்திய அரசைக் குற்றஞ்சாட்டுகிறேன் என்பதல்ல. பொறுப்பு மத்திய அரசுக்கு என்று நாங்கள் சொல்லுகிறோம். ஆகவே அதை குற்றமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்றுள்ள



நிலைமையைச் சொல்கிறேன். அவர்களுக்குள்ள கஷ்டங்கள் இப்போது மத்திய அரசுக்கு 5,000 கோடி ரூபாய் அளவிற்கு டெபிஸிட் இருக்கிறது. நமக்கு 20 கோடி ரூபாய் அளவிற்கு டெபிஸிட் என்று சொல்கிறபோது அவர்களுக்கு 5,000 கோடி ரூபாய் அளவிற்கு டெபிஸிட் என்று வரும்போது அதைச் சரிக்கட்ட வேண்டுமென்றால் இரண்டு மூன்று வழிகளைத் தான் பின்பற்ற வேண்டும். ஒன்று விலையை ஏற்ற வேண்டும். அல்லது பணப் புழக்கத்தை அதிகமாக விடவேண்டிவரும். பணப் புழக்கத்தை அதிகமாக விட்டுவிட்டால் பணவீக்கம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அது அதிகமான விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. நான் இதையெல்லாம் சொல்லக் காரணம் விலைவாசியேற்றத்திற்கு மத்திய அரசுதான் பெரும்பகுதி காரணமாக இருக்கிறது. பெட்ரோல், டீசல் விலை ஏறிவிட்ட தால் எல்லாப் போக்குவரத்து செலவுகளும் ஏறுகிறது என்றால் வண்டிகளில் ஏற்றி வருகிற தேங்காய் விலையும் ஏறுகிறது, கத்தரிக்காய் விலையும் ஏறுகிறது. வாழைக்காய் விலையும் ஏறுகிறது, வாழை இலை விலையும் ஏறுகிறது, வாடகையும் ஏறுகிறது. அப்படி ஏறும்போது அவரவர்கள் கொஞ்சம் கூடுதலாக ஏற்றிவிடுகிறார்கள்.

(முற்பகல் 10-10)

அது ஒன்று மட்டுமல்ல. எல்லா இடங்களிலும் நாம் கட்டுப்பாட்டை விதிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், பொதுவாக ரிசர்வ் பாங்கு புல்லட்டினிலே புள்ளிவிவரங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இருந்து நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்டெக்ஸ் நெம்பர் ஆப் ஹோல்சேல் பிரைசஸ் என்பதைப் பார்க்கும்போது, தமிழகத்திலே திறமைக் குறைவின் காரணமாக இங்கே பண்டங்களின் விலை ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அரிசி காற்றிலே பறக்கிறது, மிளகாய் மிரட்டுகிறது, புளி கிலி செய்கிறது என்றெல்லாம் எதுகை மோனையோடு எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் விநாயகம் அவர்கள்கூட ஒரு கேள்வியைக் கேட்டார்கள். புளி விலை இறங்கியதற்குக் காரணம் என்ன வென்று கேட்டபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகுபடச் சொன்னார்கள்—யார் தயவிலும் இல்லை; புளிய மரத்தின் தயவினால் விலை இறங்கிற்று என்று சொன்னார்கள்.

பண்டங்களின் விலைகள் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் காரணங்கள் இருக்கின்றன. இங்கே மட்டும்தான் விலை உயர்ந் திருக்கிறதா என்பதைப் பார்க்கும்போது, அந்த விலை ஏற்றம் அகில இந்தியாவையும் பாதித்து இருக்கிறது. இன்டெக்ஸ் நெம்பர் ஆப் ஹோல்சேல் பிரைசஸ் அதாவது ரிசர்வ் பாங்கு கொடுத்துள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால், எல்லாப் பொருள்களையும் சேர்த்துக் கணக்கெடுத்தால், அகில இந்தியாவிலே 1970 ஆம் ஆண்டு 100 என்று பேசிஸாக, அடிப் படையாக வைத்துக் கொண்டு பார்த்தால் இந்தப் பத்து

ஆண்டு காலததில் எவ்வளவு ஏறி இருக்கிறது; எல்லாப் பொருள்களும் 273 புள்ளி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது தமிழகத்திலே மட்டுமல்ல; அகில இந்தியாவிலும் உள்ள அத்தனை மாநிலங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன. செய் பொருள்கள் 250 புள்ளியாக உயந்திருக்கிறது. சர்க்கரை 490 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. இந்தப் 10 ஆண்டுகளில் 100 புள்ளியிலிருந்து 490 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. பருப்பு வகைகள் 395 புள்ளி ஆக உயர்ந்திருக்கிறது. எண்ணை வித்துக்கள் 250 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. எரிபொருள்கள் 375 புள்ளியாக ஏறியிருக்கிறது. ஆனால் 1960 ஆம் ஆண்டில் 100 என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டால், விவசாயத் தொழிலாளர்களுடைய கன்சியூமர் பிரைசஸ் இன்டெக்ஸ் நம்பரைப் பார்க்கின்றபோது அவர்கள் வாங்குகின்ற பொருள்களுடைய இன்டெக்ஸ் நெம்பரைக் குறியீட்டு எண்ணைப் பார்த்தால் 1960 ஆம் ஆண்டில் 100-ல் இருந்து இப்போது 410 ஆக ஏறியிருக்கிறது. அதேபோல், எந்திரத் தொழில் 425 ஆக உயர்ந்திருக்கிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல், இப்போது இந்த 4 ஆண்டு காலத்தில் விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால்—அவர்கள் எடுத்துச் சொன்னதை நான் மறுக்கவில்லை—விலை ஏறியிருக்கிறது அப்படி ஏறியிருக்கும்போது விவசாயத் தொழிலாளர்களுடைய பிரைஸ் இன்டெக்ஸ் 410 ஆகவும், எந்திரத் தொழிலாளர்கள் பொருள்களின் இன்டெக்ஸ் 425 ஆகவும் உயர்ந்திருக்கிறது. இது அகில இந்தியாவையும் பாதித்திருக்கிறது. அதனால், இங்கேயும் இருக்கிறது. நிதியமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள்—எந்த அளவுக்கு பணப் புழக்கத்தையும்; பிளாக் மார்க்கெட்டையும் தடுத்து நிறுத்த முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே பார்க்கின்றபோது, எந்த அளவுக்கு ஏறியிருக்கிறது? எத்தனை பர்சென்ட் போன வருஷத்திற்கும், இந்த வருஷத்திற்கும் ஏறியிருக்கிறது என்பதைப் பார்த்தால், அதாவது ஆகஸ்ட் 80லே இருந்து, இந்த ஆண்டு ஜுலை முடிய எவ்வளவு ஏறியிருக்கிறது என்று கணக்கு பார்த்தால் அரிசி மட்டும் 25 சதவீதம் விலை ஏறி இருக்கிறது. இந்த—ஓராண்டு காலத்திற்குள்ளாக.

மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள், இந்த 4 ஆண்டு காலத்திற்குள் விலை ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள்; அதுஉண்மை தான். அகில இந்திய அளவிலே அரிசி விலை 25 சதவிகிதம் ஏறியிருக்கிறது. கோதுமை 40 சதவிகிதம் ஏறியிருக்கிறது; உளுந்து 5.9 சதவிகிதம் ஏறியிருக்கிறது; துவரம் பருப்பு 20 சதவிகிதம் ஏறியிருக்கிறது; வெங்காயம் 60 சதவிகிதம் ஏறியிருக்கிறது பால் 41.2 சதவிகிதம் ஏறியிருக்கிறது; தேங்காய் எண்ணெய் 40.9 சதவிகிதம் ஏறியிருக்கிறது—இந்த ஒரு வருஷத்திற்குள் இந்த நிலைமை இங்கே மட்டும் பாதிக்கவில்லை.



அகில இந்தியாவையும் பாதித்திருக்கிறது. அது மட்டுமல்ல. அகில இந்தியாவிலும் உள்ள வாழ்க்கைத் தரத்தைப் பார்க்கிறபோது, மற்ற மாநிலங்களைவிட நம் தமிழகம் ஓரளவுக்கு சமாளித்து வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பெங்களூரைப் பொறுத்தவரை எடுத்துக் கொள்வோமானால் ஜனவரி 81ல் இருந்ததைவிட ஜுன் 31ல் ஏறியிருக்கிறது. ஜனவரி 81ல் 457 புள்ளியாக இருந்தது ஜுன் 81ல் 485 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. அதாவது 6.13 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. கேரளத்தில் ஆலவாயில் 1981ல் 424 புள்ளியாக இருந்தது ஜுன் 81ல் 456 புள்ளியாக உயர்ந்திருக்கிறது, அதாவது 7.55 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஹைதராபாத்தில் ஜனவரி 198ல் 424 புள்ளியாக இருந்தது ஜுன் 81ல் 453 புள்ளியாக உயர்ந்திருக்கிறது, அதாவ 6.84 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. பம்பாயில் ஜனவரி 81ல் 409 புள்ளியாக இருந்தது ஜுன் 81ல் 450 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 10 02 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. சென்னையில் ஜனவரி 81ல் 403 புள்ளியாக இருந்தது ஜுன் 81ல் 428 புள்ளியாக உயர்ந்திருக்கிறது; அதாவது 6.2 சதவிகிதம் ஏறியிருக்கிறது. ஆகவே, பெங்களூர் 485 ஆகவும், ஆலவாயில் 456 ஆகவும் ஹைதராபாத்தில் 453 ஆகவும் பம்பாயில் 450 ஆகவும், சென்னையில் 428 ஆகவும் புள்ளிஉயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட சமமாக வருகிறது என்றாலும் கூட அதையும ஓரளவு சமாளித்து மற்றைய மாநிலத் தலைநகரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கே குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசியை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட இங்கேதான் ஆலாகப் பறப்பது மாதிரியும் மற்ற இடங்களில் நிலைத்து நிற்கிறது என்றும் சொல்ல முடியாது. அரிசியின் மொத்த விலை குவிண்டாலுக்கு 19—8—81ல் 325 ரூபாய் சென்னையில் 280 ரூபாய் அந்த வகையில் குறைந்திருக்கிறது இங்கே.

1979-80ல் தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி 58 லட்சம் டன்னாக இருந்தது 1980-81ல் வறட்சியின் காரணமாக 39.75 லட்சம் டன்தான் உறபத்தி கிடைத்தது. கிட்டத்தட்ட 18.25 லட்சம் டன் உற்பத்தி குறைந்திருக்கிறது. இந்தக் குறைவை ஈடுகட்டும் தன்மையில் நாம் இருக்கிறோம். பொதுவாக ஜுன் ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் அக்டோபர் மாதங்கள் எப்போதும் நலிந்த மாதங்கள் என்று பெயர் பெற்றவை. உற்பத்தி மார்க்கட்டுக்கு வரமுடியாத நிலைமை இருக்கும். எந்த ஆட்சிக் காலத்தில் எடுத்துப் பார்த்தாலும் எந்த ஆண்டிலும் விலைவாசி ஏற்றம் இந்த குறிப்பிட்ட மாதங்களில் இருக்கும், ஜனவரி, பிப்ரவரி, மாதங்களில் இறங்கும்.

1978-79-ல் கூட நியாய விலைக் கடைகள் மூலமாக மாதம் ஒன்றுக்குக் கொடுத்த அரிசியின் அளவு பத்தாயிரம் அல்லது பதினோராயிரம் டன்தான், எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்டு 28

அவர்கள் கணக்குப்படி பார்த்தால் கூட ஒரு கோடியே ஒன்பது
லட்சம் குடும்ப அட்டைகளை நாம் கொடுத்திருக்கிறோம்.
ஆனால் 11,000 டன் அரிசிதான் நியாய விலைக் கடைகளின்
மூலம் நாம் கொடுத்து வந்திருக்கிறோம். நியாய விலைக் கடை
களில் அரிசி விற்கிற விலைக்கு வெளி மார்க்கட்டிலே அரிசி
கிடைத்திருக்கிறது, அப்படி வெளி மார்க்கட்டில் அதே விலைக்கு
அரிசி வாங்கலாம் என்ற நி லயில் 1979 ஜூன் ஜூலை மாதங்
களில் 11,000 டன் அரிசிதான் விநியோகித்திருக்கிறோம்.
ஆனால் வறட்சி ஏற்பட்டு வெளி மார்க்கட்டில் அரிசி விலை
ஏற ஏற விலையைக் குறைத்து சாதாரண அரிசி கிலோ ரூ.1.75
காசுக்கும். அடுத்த ரகம் இரண்டு ரூபாய்க்கும், அடுத்த ரகம்
ரூ. 2.10 காசுக்கும் கொடுக்கப்பட்டது, வெளி மார்க்கட்டில்
அரிசி கிலோ ரூ. 3, ரூ. 3.10 காசு, ரூ. 3.40 காசு, ரூ. 3.60
காசு என்று விற்கக்கூடிய நிலை ஏற்பட்டதால் நியாய விலைக்
கடைகளில் குடும்ப கார்டுக்கு அரிசி வாங்க வேண்டிய நிலைமை
ஏற்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்
அவர்கள் கூட இந்தச் சட்டமன்றத்தில் சுட்டிக் காட்டியிருக்
கிறார்கள். வெளியிலும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
நியாய விலைக் கடைகளில் குறிப்பிட்ட விலையில் விற்பது வெளி
கடைகளில் பண்டங்களின் விலை குறைந்து விற்கப்பட வேண்டு
மென்பதற்காகத்தான் என்று சொல்லி நாலைந்து கடைகளைச்
சுட்டிக்காட்டினார்கள். அதுதான் நம்முடைய நோக்கம். நியாய
விலைக் கடைகளில் உள்ள விலை வெளிக் கடைகளில் விற்கிற்
விலையைக் கட்டுப்படுத்த, கீழே இறங்கச் செய்ய வழி வகுக்
கிறது என்றால் அது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த
வகையிலே தான் நாம் நியாய விலைக் கடைகளில் கொடுத்து
வந்த அரிசியின் அளவு 11,000 டன்னாக இருந்தது. வெளியில்
விலைவாசி பெருப் பெருக இப்போது 75,000 டன் அளவுக்கு
அரிசி நியாய விலைக்கடைகளில் கொடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 10.20]

அப்படிப்பட்ட நிலை வருகின்ற பொழுதுநம்முடைய இருப்பிலே
இருப்பது போதாது. மத்திய அரசு திங்களொன்றுக்கு ஒரு லட்சம்
டன்னாவது தரவேண்டுமென்று நாம் வற்புறுத்து வற்புறுத்திக்
கூறிக் கொண்டிருக்கிறோம். நாம் அவர்களிடம் ஒரு லட்சம் தர
வேண்டுமென்று கேட்டாலும் அவர்கள் 60 ஆயிரம், 50 ஆயிரம்,
40 ஆயிரம், 35 ஆயிரம், 55 ஆயிரம் என்ற அளவுக்குத்தான்
தருகிறார்கள். அதை கூட்டியாவது பிறகு சேர்த்துத் தருகிறார்
களா என்றால் இல்லை அந்தஅந்த மாதத்தோடு கணக்கு சரியாகப்
போய்விட்டது என்று சொல்லி விடுகிறார்கள். நான் மத்திய
அரசை அதற்காக குற்றம் சொல்லவில்லை, காரணம் அவர்களுக்கு
அவர்களிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய
அளவிலே அந்த அளவிற்குத்தான் இருப்பு இருக்கிறது ஆகவே
அந்த அளவுக்குத் தான் தர முடியும் என்று சொல்கிறார்கள்.
அதை வைத்துப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே
தான் இந்த மாதம் 40 ஆயிரம டன்னை 50 ஆயிரம் டன்னாக



1981 ஆகஸ்டு 28] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆக்கியிருக்கிறோம். அரிசிக்குக் கூடுதல் விலை கொடுத்தாலும் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது, ஆனால் அரிசியே இல்லை அரிசிக்குத் தட்டுப்பாடாக இருக்கிறது, அரிசி கிடைக்காத நிலை இருக்கிறது என்ற அவலக் குரல் தமிழகத்திலே ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக ஆந்திரப் பிரதேசத்திலே, ஒரிசாவிலே மத்திய பிரதேசத்திலே, பஞ்சாபிலே, உள்ள அரிசியை வாங்கித் தாருங்கள், நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்ற முறையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். எதற்காக என்றால் அரிசி கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான். பஞ்சாபிலிருந்து 10 ஆயிரம் டன் தருவதாகச் சொன்னார்கள் அதற்காக நாம் நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 50 லட்சம் ரூபாயும் முன்பணமாகக் கட்டிவிட்டோம். அவர்களும் அரிசியைத் தரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஆதைக் கொண்டு வருவதற்கு வேகன்கள் கிடைக்கவில்லை. கோதுமையை நகர்த்துவதற்கு வேகன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்குத் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நானும் மத்திய அரசிடம் அங்கே சென்றிருந்தபோது எடுத்துச் சொன்னேன். இங்கே மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களிடம் பேசியபோது வேகன்கள் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். எப்படியாவது 10 ஆயிரம் டன்னைக் கொண்டு வருவதற்காவது வேகன்கள் தரவேண்டுமென்று கேட்டோம். ஆனால் கிடைக்கவில்லை. அவர்களும் 4,5 மாதங்கள் காத்திருந்துவிட்டு 50 லட்சம் ரூபாயை திருப்பியனுப்பி விட்டார்கள், ஆகவே அந்த 10 ஆயிரம் டன்னும் நமக்கு வரவில்லை. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து அரிசி வாங்க வேண்டுமென்ற முறையிலே நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக ஏற்பாடு செய்தோம். ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களும் அங்கே உள்ள உணவுத் துறை அமைச்சர் அவர்களும் பெருந்தன்மையோடு நமக்கு 1 லட்சம் டன் அரிசி தருவதாகச் சொல்லி, இருபதாயிரம் டன் அளவுக்கு அனுப்பி இருக்கிறார்கள். மேற்கொண்டும் தருகிறேன் என்றும் சொல்லி இருக்கிறார்கள். இப்போதும் அங்கேயும் சிலபல சங்கடங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அதனாலே அவர்களுக்கு வாங்கித் தருவதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. கூடுமான வரையில் அரிசியைக் கொண்டுவந்து அடக்கவிலைக்கு விற்க வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. திரு கருப்பையா அவர்கள் பேசியபோது சென்ற ஆண்டு மகசூலின்போது கொள்முதல் போதுமான அளவுக்குச் செய்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது என்று சொன்னார்கள். இந்திய அரசு அப்போது விலை 105 ரூபாய் என்று நிர்ணயித்து இருந்தார்கள். அப்போது வெளி மார்க்கட்டிலே விலை 120, ரூபாய் 125 ரூபாய் என்ற அளவுக்குப் போய்விட்டது தான் காரணம். மத்திய அரசாங்கமும் கொள்முதல் செய்யப்போனது, நாமும் கொள்முதல் செய்யப்போனோம். வெளிமார்க்கட்டிலே விலைஅதிகமாக இருந்த

தால் இரண்டு பேர்களுக்குமே விவசாயிகள் விற்க முன்வரவில்லை. 10,15 ரூபாய் அதிகமான விலையைப் பெறுகின்ற முறையிலே வெளி மார்க்கட்டிலே விற்று விட்டார்கள். ஆனால் வறட்சி நிலைமை வந்ததற்குப் பிறகு நியாயவிலைக் கடைகளிலே வழங்கப்பட வேண்டுமென்பதற்காக 40 சதவீதம் லெவி தரவேண்டுமென்று சொல்லி அடக்க விலைக்கு 105 ரூபாய்க்குக் கொடுக்கவேண்டு மென்று அந்த முறையிலே வாங்கினோம். அதனால் ஏற்படுகிற இழப்புகளை மீதியை அவர்கள் வெளிச் சந்தையிலே விற்பதன் மூலமாகப் பெற்றுக் கொண்டார்கள். அதனால் வெளிச்சந்தையிலே விலை கூடுதலாக ஆகியிருக்கிறது. வியாபாரிகளைப் பொறுத்த வரைக்கும், 1973–74 ஆம் ஆண்டிலே லெவி போடப்பட்டது, சில சமயங்களிலே அவசியம் ஏற்படுகிற போது லெவியைப் போடு கின்ற நிலைமை ஏற்படுகிறது. அப்போதும் கூட லெவி போட்டு வாங்குதவன் மூலமாக விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் கஷ்டம் தான் ஏற்படும். சென்ற ஆண்டு 130 ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டோம். இந்த ஆண்டு 150 ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர் களுக்கு சிபாரிசு செய்த குழுவினர் 115 ரூபாய் வரை தான் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்தார்கள். அந்த விலையை மத்திய அரசு நிர்ணயித்தது. இப்போது வெளிமார்க்கட்டிலே 180 ரூபாய் 190 ரூபாய் அளவுக்கு விலை போய்விட்டது. நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி வழங்கப்பட வேண்டிய வர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கின்ற காரணத்தினால் கொடுக்கிற அரிசியின் அளவை குறைக்க வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டது.

உச்சகட்டமாக 20 கிலோ என்றும், ஒரு கார்டுக்கு ஐந்து ஐந்து கிலோ என்றும் ஒட்டுமொத்தமாகக் கொடுத்த நிலையை மாற்றி, பெரியவர்களாக இருந்தால் ஒரு கிலோவும், சிறுவர் களாக இருந்தால் அரை கிலோவும் என்று கொண்டு வருவதன் காரணம் நாம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்க வேண்டு மென்பதற்காகத் தான்.

நாம் கேட்கின்ற அளவிற்கு ஒரு இலட்சம் டன் வருமே யானால் இந்த அளவை ஓரளவுக்கு நாம் கூட்டியும் கூடக் கொடுக்க முடியும். எல்லா மாவட்டங்களிலும் எல்லாக்கார்டுகளுக் கும் கொடுக்க வேண்டிய பொறுப்பு இருப்பதன் காரணமாக இதைச் செய்ய நாம் முற்படுகிறோம்.

ஜனவரியிலிருந்து ஜூலை வரையில் மத்திய சர்க்காரினிடத் திலே நாம் கேட்டது 6,25,000 டன்; ஆனால் கிடைத்தது 2,58, 955 டன்தான். ஒரிசா ஆந்திரா மத்திய பிரதேசத்திலிருந்து நாம் வெளிமார்க்கெட்டிலிருந்து வாங்கியது 73,000 டன். நாம் கேட்கின்ற அளவிற்கு மத்திய சர்க்கார் கொடுக்குமேயானால் நாம் இதனுடைய அளவைக் கொஞ்சம் அதிகமாக ஆக்கலாம்: அல்லது குறுவை வந்ததற்குப் பிறகு கொள்முதல் கொஞ்சம் அதிகமாகக் கிடைத்து அதிகமாக வருமேயானால் அதற்குப் பிறகு வேண்டுமானால் கொஞ்சம் கூடுதலாக ஆக்கலாம்.



நான் மற்றொன்றையும் கூறுகிறேன். மக்களின் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பை நியாய விலைக் கடைகளோ அல்லது நுகர்பொருள் வாணிபக் கழகமோ ஏற்றுக் கொள்ளவில்லை. ஓரளவுக்கு மக்களுக்குச் சகாயம் செய்யும் அளவிற்குத்தான் இருக்கின்றன, பற்றாததை, மேற்கொண்டு வேண்டியதை வெளிமார்க்கெட்டிலிருந்து வாங்கிக்கொள்ள வேண்டு மென்ற நிலை இருப்பதால்தான் இந்த நிலைமையிருக்கிறது. எனவே அவர்களே முழுப் பொறுப்பையும், முழுக்கார்டுக்கும் தருகின்ற நிலை இல்லை.

கோதுமையைப் பொறுத்தவரையிலேயும் அதே நிலைதான். கோதுமையைப் பொறுத்தவரையிலே 19–8–81 ஆம் நாளன்று மொத்த விலையைக் குவிண்டாலுக்குக் கணக்கிட்டால் சென்னையில் 225 ரூபாய்; பம்பாயில் 225 ரூபாய்; டெல்லியில் 172 ரூபாய். அது கோதுமை விளைகின்ற மாநிலமாக இருப்பதால் அங்கே கோதுமையின் விலை குறைவாக இருக்கிறது. நாம் ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் ஒரு கிலோ கோதுமை தருவதாக வைத்துக்கொண்டாலும்கூட நமக்கு மாதம் ஒன்றுக்கு 10,900 டன்கள் வேண்டும். ஆனால் மத்திய அரசு நமக்கு அனுப்புவதோ 3,000 டன்கள்தான்; சென்ற மாதம் 4,000 டன்களாக ஆக்கினார்கள். 10,000 டன்களாவது கொடுப்பார் களேயானால் ஒவ்வொரு கார்டுக்கும் ஒரு கிலோ தரலாம்.

ஆனால், எல்லோருமே கோதுமை வாங்குவது இல்லை' சிலபேர் வாங்குகிறார்கள். கோயம்புத்தூர், சென்னை போன்ற பெருநகரங்களில் கோதுமை வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே, 2 கிலோவிலிருந்து 5 கிலோவிற்கு மேல் போகாமல் கொடுக்கலாம் என்று கொடுக்கிறோம். பல கிராமங்களில் அரிசியைத்தான் வாங்குகிறார்களே தவிர கோதுமை வாங்குவதில்லை. ஆகவேதான் நாம் பரவலாக, தேவையை யொட்டி, கொடுக்கிறோமே தவிர ஒவ்வொருவருக்கும் ஒரு கிலோ ஒன்று வைத்துவிடுவோமேயானால் அதற்கே நமக்கு 10,900 டன்கள் தேவைப்படும். இரண்டு கிலோ முதல் ஐந்து கிலோ என்று போட்டிருப்பதற்குக் காரணமே, அதுவரைக்கும் கொடுக்கலாம், வசதி வாய்ப்பு ஏற்பட்டால் கொடுக்கலாம் என்ற அளவிற்குத்தான் வைத்திருக்கிறோம்.

அதேமாதிரி கோதுமை, உருளை மாவு பொறுத்தவரையில் 31 உருளை மாவு ஆலைகள் நம்மிடத்திலே இருக்கின்றன. ஏழெட்டு மாதங்களுக்கு முன்வரையிலேயும் 65,000 டன்கள் என்று இருந்தது. மைதா, ரவா உற்பத்தி செய்வதற்கு, திடீரென்று 30,000 டன்களாகக் குறைத்து விட்டார்கள். இவ்வாறு 30,000 டன்களாகக் குறைத்துவிட்ட காரணத்தினாலே அதிலே 60 சதவீதம் ரவா, மைதாவை எடுத்து குடும்ப அட்டை களுக்குத் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றியமையாத பேக்கரி போன்ற ரொட்டி, பன் போன்றவற்றைச் செய்வதற்கு நாம் குறிப்பிட்ட விலையில் தர வேண்டியிருப்பதன் காரணமாக ஓரளவுக்குத்தான் அதை தரமுடிகிறது. நாம் அதிகமாகக்

கேட்டுக் கொண்டிருக்கிறோம். அண்மையிலே கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் பெருமானமுள்ள கோதுமையை வெளிநாட்டிலிருந்து வரவழைக்க வேண்டிய நிலைக்கு இந்தியா இருக்கிறது. ஆகவே, அதிக அளவிற்குக் கோதுமை தருவதற்கில்லை, இருப்பதை வைத்துச் சமாளியுங்கள் என்றுதான் கூறுகிறார்கள்.

அதைப்போன்று, சர்க்கரையை எடுத்துக்கொண்டாலும்கூட, இப்பொழுது ஓரளவுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, பதுக்கி வைத்திருந்தவர்கள் இப்பொழுது இரண்டுவார காலமாக வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். பம்பாய் போன்ற மார்க்கெட்டிலேயெல்லாம் ஓரளவுக்கு விலை இப்பொழுது இறங்கியிருக்கிறது. ஆனாலும்கூட லெவி சர்க்கரையை ஏற்கனவே 2.85–க்குக் கொடுத்துக்கொண்டிருந்த நாம் இப்பொழுது 3 ரூபாய் 50 காசுக்குத் தந்து கொண்டு வருகிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெளிச்சந்தையில் 7 ரூபாய் 50 காசு, 7 ரூபாய் 25 காசு, 6 ரூபாய் 50 காசு, 6 ரூபாய் என்ற அளவிற்கு நாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாகத் தந்தோம்.

இப்படியாகத்தான் சோளம், கம்பு போன்றவற்றை எடுத்துக் கொண்டாலும் கூட நம்முடைய மாநில விலைகள் அதிகம் என்று சொல்ல முடியாது. நேரமில்லாத காரணத்தினால் அந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் நான் விடுகிறேன்.

துவரம்பருப்பைப் பொறுத்தவரையில் நாம் மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ஆந்திரா, உத்திரப் பிரதேசத்தை எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது.

உளுந்தைப் பொறுத்தவரையிலும் ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத், ஒரிசாவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

பாசிப்பயிரைப் பொறுத்தவரையிலும் ஆந்திரா, மகாராஷ்டிரா, ஒரிசா, இராஜஸ்தானை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

கடலைப் பருப்பைப் பொறுத்தவரையிலும் பீகார், பஞ்சாப், அரியானா போன்ற உற்பத்தி மாநிலங்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

அங்கே விலையேறுவதன் காரணமாக இங்கேயும் ஏறுகிறது. அதையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகின்ற நிலைமையையும் நாம் பெற்றுக்கொண்டு வருகிறோம்.

கடலையெண்ணெயும் அந்த அளவிற்குத்தான் விலைகளைப் பொறுத்தவரையிலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது கிட்டத்தட்ட ஒன்றாக வருகிறது, ஓரளவுக்குக் கணிசமாகக் கீழே இருக்கிறது.

மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையிலும் 30,000 மெட்ரிக் டன் தான் நமக்கு தருகிறார்கள். அந்த 30,000 மெட்ரிக் டன்னைக் கொஞ்சம் உயர்த்தி 50,000 மெட்ரிக் டன்னாகத் தருவார்களேயானால் தாராளமாகத் தரலாம்



(முற்பகல் 10-30)

இப்பொழுது நாம் வைத்திருப்பது 17,400 கடைகள். அவற்றின் மூலமாக சென்னை, அதன் புறநகர் பகுதியில் ஒரு குடும்ப அட்டைக்கு 10 லிட்டர் தரும்படியாகவும், நகராண்மைக் கழகப் பகுதியில் 6 லிட்டர் தரும்படியாகவும் நகரப் பஞ்சாயத்துப் பகுதியில் 5 லிட்டர் தரும்படியாகவும், கிராமப் பகுதிகளில் 3 லிட்டர் தரும்படியாகவும் கூறியிருக்கிறோம். அவை தவிர, 2,523 சில்லறை மண்ணெண்ணெய் வியாபாரிகள் ஒவ்வொருவருக்கும் 500 குடும்ப கார்டுகளை ஒப்படைத்து, அவர்களுக்குத் தரவேண்டுமென்று மண்ணெண்ணெய் விநியோகித்து வருகிறோம். சென்னைப் புற நகர் பகுதியில் கை வண்டிக்காரர்களுக்கு 100 லிட்டர்கள் ஒரு நாளைக்கு ஒருவருக்குக் கொடுத்து ஒரு நபருக்கு 2 லிட்டருக்கு மேற்படாத அளவுக்குத் தரலாம் என்று அவர்களுக்கும் மண்ணெண்ணெய் தந்திருக்கிறோம். மாவட்டப் பகுதியிலே 50 லிட்டர் கைவண்டிக்காரர்களுக்குத் தந்து அவர்கள் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதனுடைய அளவு கொஞ்சம் அதிகமானால், ஓரளவு செம்மைப்படுத்தி, சீர்படுத்த முடியும். மத்திய அரசையும் நான் குறை சொல்லவில்லை.

அரிசியைப் பற்றி எடுத்துச் சொல்கின்றபொழுது, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் எப்பொழுது கடைக்குப் போயிருப்பார் என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவர் கடைக்குப் போகவோ, சாமான்கள் வாங்கவோ, உடம்பு வளையுமா, நெளியுமா என்று எனக்குச் சந்தேகம்தான். ஆனால் அப்படிப் பட்ட அரிசியை வாங்கி, தின்று அவர் கஷ்டப்படுகிறார் என்று சொல்ல முடியாது. அவருடைய பளபளப்பு, மினுமினுப்பு பார்த்தாலோ, அவருடைய தன்மையைப் பார்த்தாலோ, அவருடைய கவலையற்ற தன்மையைப் பார்த்தாலுங்கூட, பட்டினியோ, வாட்டமோ அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. க. அன்பழகன் : நாவலர் அவர்கள் சொல்வதைப் போல, நியாயவிலைக் கடை அரிசியை சாப்பிடாத காரணத்தால் திரு. துரைமுருகன் கொஞ்சம் நல்ல நிலையிலே இருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதற்காகச் சொல்கிறேன் என்றால், நியாய விலைக் கடைகளிலேதான் வாங்கியிருக்கிறேன் என்று சொன்னார், அதனால்தான்.

திரு. துரைமுருகன் : அந்த அரிசி விற்கப்படுவது நியாயவிலைக் கடையில்தான். என்னுடைய தொகுதியிலே காரை என்கிற நியாயவிலைக் கடையிலிருந்துதான் அந்த அரிசியை எடுத்துக் கொண்டு வந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேகூடச் சொல்லியிருந்தேன். அவர் அந்த அரிசி விநியோகத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கிறேன் என்றுகூடச் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் விநியோகத்தில் இன்னும் இருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதற்குச் சொல்கிறேன் என்றால், இப்பொழுது வழங்குகிற 75,000 டன்னும் அப்படி இல்லை. எல்லா இடங்களிலும் அப்படியில்லை

கேட்டுக் கொண்டிருக்கிறோம் அண்மையிலே கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கோதுமையை வெளிநாட்டி விருந்து வரவழைக்க வேண்டிய நிலைக்கு இந்தியா இருக்கிறது. ஆகவே, அதிக அளவிற்குக் கோதுமை தருவதற்கில்லை, இருப்பதை வைத்துச்சமாளியுங்கள் என்றுதான் கூறுகிறார்கள்.

அதைப்போன்று, சர்க்கரையை எடுத்துக்கொண்டாலும்கூட, இப்பொழுது ஓரளவுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, பதுக்கி வைத்திருந்தவர்கள் இப்பொழுது இரண்டுவார காலமாக வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். பம்பாய் போன்ற மார்க்கெட்டிலேயெல்லாம் ஓரளவுக்கு விலை இப்பொழுது இறங்கியிருக்கிறது. ஆனாலும்கூட லெவி சர்க்கரையை ஏற்கனவே 2.85—க்குக் கொடுத்துக்கொண்டிருந்த நாம் இப்பொழுது 3 ரூபாய் 50 காசுக்குத் தந்து கொண்டு வருகிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெளிச்சந்தையில் 7 ரூபாய் 50 காசு, 7 ரூபாய் 25 காசு, 6 ரூபாய் 50 காசு, 6 ரூபாய் என்ற அளவிற்கு நாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாகத் தந்தோம்.

இப்படியாகத்தான் சோளம், கம்பு போன்றவற்றை எடுத்துக் கொண்டாலும் கூட நம்முடைய மாநில விலைகள் அதிகம் என்று சொல்ல முடியாது. நேரமில்லாத காரணத்தினால் அந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் நான் விடுகிறேன்.

துவரம்பருப்பைப் பொறுத்தவரையில் நாம் மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ஆந்திரா, உத்திரப் பிரதேசத்தை எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது.

உளுந்தைப் பொறுத்தவரையிலும் ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத், ஒரிசாவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

பாசிப்பயிரைப் பொறுத்தவரையிலும் ஆந்திரா, மகாராஷ் டிரா, ஒரிசா, இராஜஸ்தானை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

கடலைப் பருப்பைப் பொறுத்தவரையிலும் பீகார், பஞ்சாப், அரியானா போன்ற உற்பத்தி மாநிலங்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

அங்கே விலையேறுவதன் காரணமாக இங்கேயும் ஏறுகிறது. அதையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகின்ற நிலைமையையும் நாம் பெற்றுக்கொண்டு வருகிறோம்.

கடலையெண்ணெயும் அந்த அளவிற்குத்தான் விலைகளைப் பொறுத்தவரையிலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது கிட்டத்தட்ட ஒன்றாக வருகிறது, ஓரளவுக்குக் கணிசமாகக் கீழே இருக்கிறது.

மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையிலும் 30,000 மெட்ரிக் டன் தான் நமக்கு தருகிறார்கள். அந்த 30,000 மெட்ரிக் டன்னைக் கொஞ்சம் உயர்த்தி 50,000 மெட்ரிக் டன்னாகத் தருவார்களேயானால் தாராளமாகத் தரலாம்



(முற்பகல் 10-30)

இப்பொழுது நாம் வைத்திருப்பது 17,400 கடைகள். அவற்றின் மூலமாக சென்னை, அதன் புறநகர் பகுதியில் ஒரு குடும்ப அட்டைக்கு 10 லிட்டர் தரும்படியாகவும், நகராண்மைக் கழகப் பகுதியில் 6 லிட்டர் தரும்படியாகவும் நகரப் பஞ்சாயத்துப் பகுதியில் 5 லிட்டர் தரும்படியாகவும், கிராமப் பகுதிகளில் 3 லிட்டர் தரும்படியாகவும் கூறியிருக்கிறோம். அவை தவிர, 2,523 சில்லறை மண்ணெண்ணெய் வியாபாரிகள் ஒவ்வொரு வருக்கும் 500 குடும்ப கார்டுகளை ஒப்படைத்து, அவர்களுக்குத் தரவேண்டுமென்று மண்ணெண்ணெய் விநியோகித்து வருகிறோம். சென்னைப் புற நகர் பகுதியில் கை வண்டிக்காரர்களுக்கு 100 லிட்டர்கள் ஒரு நாளைக்கு ஒருவருக்குக் கொடுத்து ஒரு நபருக்கு 2 லிட்டருக்கு மேற்படாத அளவுக்குத் தரலாம் என்று அவர்களுக்கும் மண்ணெண்ணெய் தந்திருக்கிறோம். மாவட்டப் பகுதியிலே 50 லிட்டர் கைவண்டிக்காரர்களுக்குத் தந்து அவர்கள் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதனுடைய அளவு கொஞ்சம் அதிகமானால், ஓரளவு செம்மைப்படுத்தி, சீர்படுத்த முடியும். மத்திய அரசையும் நான் குறை சொல்லவில்லை.

அரிசியைப் பற்றி எடுத்துச் சொல்கின்றபொழுது, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் எப்பொழுது கடைக்குப் போயிருப்பார் என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவர் கடைக்குப் போகவோ, சாமான்கள் வாங்கவோ, உடம்பு வளையுமா, நெளியுமா என்று எனக்குச் சந்தேகம்தான். ஆனால் அப்படிப் பட்ட அரிசியை வாங்கி, தின்று அவர் கஷ்டப்படுகிறார் என்று சொல்ல முடியாது. அவருடைய பளபளப்பு, மினுமினுப்பு பார்த்தாலோ, அவருடைய தன்மையைப் பார்த்தாலோ, அவருடைய கவலையற்ற தன்மையைப் பார்த்தாலுங்கூட, பட்டினியோ, வாட்டமோ அவருக்கு இருப்பதாகத் தெரிய வில்லை.

**திரு. க. அன்பழகன் :** நாவலர் அவர்கள் சொல்வதைப் போல, நியாயவிலைக் கடை அரிசியை சாப்பிடாத காரணத்தால் திரு. துரைமுருகன் கொஞ்சம் நல்ல நிலையிலே இருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எதற்காகச் சொல் கிறேன் என்றால், நியாய விலைக் கடைகளிலேதான் வாங்கி யிருக்கிறேன் என்று சொன்னார், அதனால்தான்.

**திரு. துரைமுருகன் :** அந்த அரிசி விற்கப்படுவது நியாயவிலைக் கடையில்தான். என்னுடைய தொகுதியிலே காரை என்கிற நியாயவிலைக் கடையிலிருந்துதான் அந்த அரிசியை எடுத்துக் கொண்டு வந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேகூடச் சொல்லியிருந்தேன். அவர் அந்த அரிசி விநியோகத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கிறேன் என்றுகூடச் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் விநியோகத்தில் இன்னும் இருக்கிறது என்பதற் காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எதற்குச் சொல் கிறேன் என்றால், இப்பொழுது வழங்குகிற 75,000 டன்னும் அப்படி இல்லை. எல்லா இடங்களிலும் அப்படியில்லை

அப்படிப்பட்ட குறைபாடுகள் சில இடங்களிலே எப்போதுமே உண்டு. இதே அவையிலே, டெக்னிக் கலர் அரிசியை, காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபொழுது கொண்டு வந்து காட்டியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும்போதும் கொண்டு வந்து காட்டியிருக்கிறார்கள். இப்பொழுதும் இல்லாமல் இல்லை. 75,000 டன் கொடுக்கின்றபொழுது, ஆலையிலே உற்பத்தியாளர்கள் அனுப்புகிறார்கள். அப்படி அனுப்புகின்றபொழுது, கெட்ட, குறைபாடுகள் உடைய அரிசியை சேர்த்து அனுப்பி விடுகிறார்கள். எது, எது எங்கே போகிறது என்று தெரியாது. அப்படி போகிறது என்று தெரிகின்றபொழுது, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் அவ்வப்போது குறிப்பிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அரிசியைக் கொண்டு வந்து காட்டினார்கள். எப்படித் தேடிக் கொண்டு வந்து காட்டினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலுங்கூட ரேஷன் கடையிலே இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். இருக்கக்கூடும், இருக்கிறது, நான் மறுக்கவில்லை. இராமநாதபுரத்திலே கூட இருக்கிறது என்று நேற்று காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி கூட ஒரு தடவை என்னிடம் வந்து, கோடம்பாக்கம் பகுதியிலே, டிரஸ்ட்புரத்திலே ஒரு கடையிலே அரிசியோடு சேர்த்து கற்கள் கொடுக்கிறார்கள் என்று காட்டினார்கள். அப்படி இருக்கக்கூடும். உடனே உத்தரவிட்டு, அந்த மூட்டைகள் அகற்றப்பட்டு நல்ல அரிசி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. எல்லா கடைகளிலும் அப்படி இருக்கிறது என்ற முடிவிற்கு வர வேண்டாமென்றுதான் இதைச் சொல்கிறேன்.

அது மட்டுமல்ல, இராமநாதபுரத்தில் கெட்ட அரிசி கொடுத்தால் அதை எடுத்து விட்டு நல்ல அரிசி கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்கெங்கு கெட்டுப் போன, நாற்றம் அடிக்கின்ற அரிசியைத் தருகிறார்களோ, அங்கு, அதை நீக்கிவிட்டு நல்ல அரிசியைத் தரவேண்டுமென்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

இதிலே இன்னொன்றையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாரையும் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. சாதாரணமாக நடப்பதுதான். 75,000 டன் தருகிறபொழுது, சிலபல மூட்டைகளை இடையில் சேர்த்துவிடுகிறார்கள். அந்த அரிசி நான் தயாரித்தது அல்ல, நாங்கள் தயாரித்ததும் அல்ல. வட ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகியவற்றிற்கு மத்திய அரசாங்கம் அனுப்புகிற அரிசியைத்தான் நாங்கள் அனுப்புகிறோம். மத்திய அரசாங்கம் அவர்களுடைய கோடவுனுக்கு ஆந்திராவிலே இருந்து அனுப்பி, அது துரைமுருகன் ஊருக்கு வந்திருக்கிறதே தவிர, அதற்கு நான் பொறுப்பல்ல. அதற்காக மத்திய அரசு நுகர் பொருள் வாணிபக் கழகத்தை நான் குற்றம் சாட்டவில்லை.





திரு. என். பழனிவேல் : தமிழ்நாட்டிலே எந்த கோடவுனிலும் அரிசி அது மாதிரி இல்லையா? தமிழ்நாட்டிலே, இருக்கிறதா, இல்லையா என்பதுதான் பாய்ன்ட்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னேன், அது மாதிரி இருக்கக்கூடும் என்று. இப்பொழுதும் இருக்கிறது என்று நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், ஆகவே, மத்திய அரசாங்கத்திற்குச் சார்பாக வாதாட மாண்புமிகு உறுப்பினர் வரவேண்டாம். இருக்கிற நிலைமைகளைச் சொன்னேன். நான் இப்பொழுதே சொன்னேன். ராவ் பிரேந்திர சிங்கைக் குற்றம் சாட்டவில்லை. மத்திய அரசாங்க நுகர்பொருள் வாணிபக் கழகத்தைக் குற்றம் சாட்டவில்லை.

எதிர்பாராதவிதமாக இப்படி நடந்து விடுவதும் உண்டு. 80 ஆயிரம் டன் வருகிறபோது சிலபேர் சேர்த்துவிடுகிறார்கள். ராவ்பிரேந்திர சிங் கூட அல்ல. மத்திய நுகர்பொருள் வாணிபக் கழகமும் ஒவ்வொரு ஆலைக்கும் சென்று ஒவ்வொரு மூட்டையையும் பார்த்துப் பார்த்து ஏற்றுமதி செய்யவா முடியும். இப்படி தவறாக இவைகள் வந்துவிடுகின்றன என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, அதற்கு நான் பொறுப்பு, இந்த அரசு பொறுப்பு என்று சொல்லப்பட்டதற்காக சொன்னேனே தவிர எங்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறதோ அந்த அளவுக்கு மத்திய அரசுக்கும் கஷ்டம் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் உண்டு.

திரு. ரா. பெரியசாமி : தலைவர் அவர்களே, மாநில அரசு கொடுக்கிற கடைகளிலே இந்த அரிசி இருக்கிறதா இல்லையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே ஒப்புக்கொண்டு விட்டேன். காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மதியழகன் அவர்கள் கூட இங்கே இரண்டு இட்டிலியைக் காட்டிய போதும் நாங்கள் இங்கே இருந்திருக்கிறோம். தி.மு.க. காலத்திலும் காண்பித்தார்கள். இப்போதும் காண்பித்துக்கொண்டு இருக்கிறார்கள். சென்ற கூட்டத்திலேயும் காண்பித்தார்கள். அவையிலே மட்டுமல்ல, தனியாகவும் காட்டியிருக்கிறார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் முதலிலேயே இருக்கின்ற நிலைமையை விளக்குகிறேன் என்று சொன்னேனே தவிர, குற்றம் சாட்ட அல்ல என்றும் சொன்னேன். யாரையும் குற்றம் சாட்ட அல்ல. இயேசு கூட 12 பேர்களை நம்பினார். அதிலே ஒருவன் அவரைக் காட்டிக் கொடுத்து விட்டான். இப்படி நாங்கள் எத்தனையோ வியாபாரிகளை நம்ப வேண்டி இருக்கிறது. எத்தனையோ ஆலைக்காரர்களை நம்பிக்கொண்டிருக்க வேண்டி இருக்கிறது. எப்படியோ தவறுகள் ஏற்படுகின்றன.

ஆகவே மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஆத்திரப் படத் தேவையில்லை. இப்போது நான் அவையிலே மத்திய அரசாங்கத்திற்கும் சேர்த்துதான் பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு வெங்கட்ராமனுக்கும் சேர்த்துதான் பேசிக்

கொண்டிருக்கிறேன். அகில இந்தியாவின் நிலைமையைத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். உங்கள் சார்பாகவும் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த நிலைமையை நாம் சமாளிக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம் என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, அந்த அரிசி மாற்றப்படவேண்டியதுதான். நேற்றுக்கூட ஒரு உறுப்பினர் இராமநாதபுரத்தில் இருந்து கொண்டு வந்து காண்பித்தார். அதை உடனடியாக மாற்றச் சொல்லி இருக்கிறேன். சில இடங்களிலே வந்துவிடும் அதை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே மிகவும் தாழ்வான அளவுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே அதிகமான அளவுக்கு மக்கள் இருக்கிறார்கள். இங்கேதான் இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அந்த நிலை இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். பொதுவாக என்ன கருதப்படுகிறது என்றால் 'பாவர்டி லைன்' என்பதற்கு பொதுவாகப் பத்திரிகையிலே வறுமைக் கோடு என்று போடுகிறார்கள். உண்மையிலேயே சொல்ல வேண்டும் என்றால் 'லைன் ஆப் பாவர்டி' என்று வருகிறபோது 'ஏழ்மைக்கோடு' என்றுதான் வரும். 'லைன் ஆப் டெஸ்டிடூஷன்' என்றால் வறுமைக்கோடு, லைன் ஆப் சிவியர் டெஸ்டிடூஷன் என்றால் கடுமையான வறுமைக்கோடு என்று வரும். அமெரிக்காவில் கூட லைன் ஆப் பாவர்டிக்குக் கீழே 29% இருக்கிறார்கள். அந்த நாட்டினுடைய கணக்கு, அந்த நாட்டினுடைய வழக்கத்திற்கு அந்த நாட்டினுடைய கணக்குப்படி 29% இருக்கிறார்கள் என்று இருக்கிறது. அங்கே கூட 1979—80 அடிப்படையாக வைத்து ஏழ்மை கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் கணக்குப்படி, தனி நபர் மாத செயல்திறன் சிற்றூரில் 76 ரூபாய்களும், நகர்ப்புறங்களில் 88 ரூபாய் செலவிடும் செயல்திறன் இருக்கிறது. 5 பேர்கள் ஒரு குடும்பத்தில் இருந்து 4 பேர்கள் சம்பாதித்தால் தனிக் கணக்காக இருக்கும். அதற்குக் கீழே இருக்கிற ஏழைகள் அத்தனை பேர்களும் வாடி வறுமையுற்று சாகக் கிடக்கிறவர்கள் என்ற பொருளுக்கு வந்து விடக்கூடாது. ஏழ்மை நிலையை எடுத்துச் சொல்கிறார்கள். லைன் ஆப் டெஸ்டிடூஷன், வறுமைக்கோடு 18% என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். சிவியர் டெஸ்டிடூஷன் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 11 சதவீதம் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். ஆனால் ஏழ்மைக் கோட்டினுடைய அளவைப் பார்க்கிறபோது மொத்த மக்களிலே ஒரிசாவில் 66.40 சதவீதம் ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள்.

[முற்பகல் 10.40]

திரிபுராவில் 59.23 சதவீதமாக இருக்கிறது; உத்தர பிரதேசத்திலே 5?.?9 சதவீதமாக இருக்கிறது. மத்திய பிரதேசத்திலே 57.73 சதவீதம், பீகாரில் 57.49 சதவீதம் மேற்குவங்காளத்தில் 5?.54 சதவீதம், தமிழ்நாடு 5?.12 சதவீதம் ஆக தமிழ்நாடு 6-வது இடத்திலே மேலேயிருந்து கீழாக வருகிறது கடைசியிலே எங்கே பார்ப்போமானால், பஞ்சாப், அரியானா தான் மிகக் கீழே இருக்கிறது. பஞ்சாப் 15.13 சதவீதம் ஏழ்மை கோட்டிற்கும் கீழே இருக்கிறது.



வாழ்க்கைத்தரம் உயருகிற போது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்கள் போட்டு அதன் மூலம் வாழ்க்கைத் தரமும், வருமானமும் உயர்கிற போது மிகச் சிறப்பான நிலை அடையும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வறுமைக் கோட்டினுடைய அளவு அகில இந்திய சராசரி 48.2 ஆகத்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லும் பொழுது கார்டுகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். அரிசி மட்டும்தான் தருகிறோம், வேறு எதுவும் தரப்படுவதில்லை என்ற நிலை இல்லை. பொதுவாகச் சொல்லுறேன் 1979–80-லே மற்றைய பொருள்கள் எல்லாம் சேர்த்து 18 கோடிக்கு கூட்டுறவு கடைகளின் மூலமும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 10.91 கோடி ரூபாய் அளவிற்கும் மொத்தம் 28 கோடியே 91 இலட்சம் அளவிற்கு—இந்த நியாய விலை கடைகள் மூலம் நாம் பல பொருட்களை வழங்குகிற முயற்சிகளை எடுத்திருக்கிறோம். 1980–8 லே பல பொருட்களை 49 கோடி ரூபாய் அளவிற்கு நாம் விற்பனை செய்திருக்கிறோம். எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குத் தான் செய்கிறோமே தவிர தேவை முழுவதையும் நிறைவேற்றுகிற நிலைமை இல்லை. வெளி மார்க்கெட்டிலே கிடைப்பதை ஒழுங்குப் படுத்துவதற்குதான் நாம் இதை செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொல்வதைப் போல வியாபாரிகளுக்கு இருக்கிற பல்வேறு லைசென்ஸ் முறைகளால் அவதியுறுகிறார்கள். அதை ஒரு லைசென்ஸ் முறையாக கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதை ஏற்கெனவே வணிக வரிச் சங்கங்கள் அரசுக்கு எழுதி, இந்த அரசு இதுபற்றி முடிவு செய்து, ஏற்கெனவே ஒரு ஆணை ஒன்று 'சிங்கிள் லைசென்ஸ் ஆர்டர், எல்லா பொருள்களையும் சேர்த்து ஒரு லைசென்ஸாக பெறலாம் என்று அளித்து, மத்திய அரசுக்கு அனுப்பி அதனுடைய ஒப்புதலை கேட்டிருக்கிறோம். இதில் மத்திய அரசினுடைய ஒப்புதலை பெறவேண்டியிருக்கிறது. அதில் சர்க்கரை, மண்ணெண்ணெய் தவிர மற்ற பொருள்களுக்கு ஒரே லைசென்சாக வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவிற்கு குறிப்பிட்டு காட்டியிருக்கிறோம்.

மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது கடைகளுக்கு 80 சதவீத சர்க்கரை தான் நாம் விநியோகிக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம் 100-க்கு 100 எல்லா கார்டுகாரர்களும் சர்க்கரை வாங்க வருவதில்லை. 80 சதவீதம் நாம் தருகிறோம். மேற்கொண்டு தேவைப்படுமானால் மீதி 20 சதவீதத்தையும் தரலாம் என்று தான் வைத்திருக்கிறோம். அந்த நிலை தான் இருக்கிறது.

திரு துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, 80 சதவீதம் கொடுத்துவிட்டு மீதி 20 சதவீதம் தேவையென்று டி.எஸ்.ஓ.விடம் எழுத வேண்டும். ஆனால் இதுவரையில் கேட்கும் 20 சதவீதம் கொடுப்பதில்லை என்பதால்தான் நான் சுமைதாங்கி,

பாதவிழி, திருப்பாக்கடல் போன்ற பல ஊர்களில் தரப்படவில்லை என்பதை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். அவசியமில்லை, கொடுக்கப்படுமென்றால் நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 80 சதவீதம் நான் தரவேண்டும் என்பதில்லை. பல இடங்களில் கார்டுகள் முழு அளவிற்கு வருவதில்லை. அதுபோன்ற இடங்களில் கார்டுகளுக்குக் கொடுத்ததாகச் சொல்லி அதில் பல கேடுகள் நடைபெறுவதாக தகவல்கள் வந்தால்தான் 80 சதவீதம் என்றும், பிறகு 20 சதவீதம் தரலாமென்றும் இருக்கிறது. எங்கேயாவது 80 சதவீதம் செலவழிந்து மேற்கொண்டு கார்டுகளுக்கு 20 சதவீதம் தேவையென்று இருக்குமானால், அதைத் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

அதேபோல ரெவின்யூ கிராமங்களில் நியாயவிலை கடைகள் என்று சொல்லிவிட்டு, ரெவின்யூ கிராமத்தில் நியாயவிலைக் கடை வைக்கவில்லை என்று ஒரு புகாரை மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு 12 ஆயிரம் ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. நாம் 17,400 நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற சாம்பசிவபுரம் ரெவின்யூ கிராமமே அல்ல. அதனுடைய ரெவின்யூ கிராமம் எனபது அருங்குன்றம், அருங்குன்றத்திலே நியாயவிலைக் கடை இருக்கிறது. இதிலே கிட்டத்தட்ட 300 பேர்கள் கார்டுகளை வைத்திருக்கிறார்கள். அருங்குன்றத்திலே இருக்கிற நியாயவிலைக் கடையிலே போய் வாங்கிக் கொள்ள வேண்டும். ஆகவே ரெவின்யூ கிராமத்தில் நியாய விலைக் கடைகள் இல்லாமல் இல்லை. 12 000 ஹேம்லெட்டிற்கு 17,400 கடைகள் வைத்திருக்கிறோம்.

கடந்த 5 மாதங்களாக நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக வழங்கப்பட்ட பொருட்களின் அளவைப் பார்த்தால், 2,81,000 டன் அரிசி வழங்கியிருக்கிறோம்; 18,000 டன் கோதுமை வழங்கியிருக்கிறோம்; பாமோலின் 17,401 டன் வழங்கியிருக்கிறோம்.

பாமோலின் எண்ணெய் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். மே மாதம் இறுதியிலிருந்து ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாதங்களுககு பாமோலின் எண்ணெய் சப்ளை இல்லை. இந்த மாதங்களில் பாமோலின் எண்ணெய் சென்னையில் இறக்குமதி இல்லை; கப்பல் வரவில்லை ஆகையால் கிடைக்க வில்லை. இப்போதுதான் மறுபடியும் கிடைக்க ஆரம்பித்திருக் கிறது; வந்தபிறகு கொடுப்போம்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் சொல்லுகின்ற புள்ளிவிவரங்கள் எல்லாம் வெள்ளை அறிக்கையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அதை விட்டுவிட்டு மற்றவைகளைச் சொன்னால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்பதை என்னுடைய முடிவிற்கு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெள்ளை அறிக்கையில் இருப்பதை சொல்லக் கூடாது என்றால் நான் எதையுமே பேச முடியாது. பொருட்கள் கிடைக்கவில்லை என்று குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். கிடைக்காமல் இல்லை, கிடைக்கிறது என்பதற்கான புள்ளி விவரங்களைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 17,401 டன் வழங்கியிருக்கிறோம்; ரவை 9,727 டன் வழங்கியிருக்கிறோம்; மைதா 32,291 டன் வழங்கியிருக்கிறோம்; சர்க்கரை 1,18,000 டன் வழங்கியிருக்கிறோம். இப்படியெல்லாம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நுகர் பொருள் வாணிபக்கழக கடைகளுக்கு மத்திய அரசு மானியம் தருகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு நுகர்பொருள் வாணிபக்கழக கடைகளுக்கு ஒரு பைசாகூட மானியம் தரவில்லை; முழுச் செலவையும் நாம்தான் ஏற்றுக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களில் நடத்தும் கடை களுக்கு ஆகும் செலவில் மத்திய அரசு 50 சதவீதம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்; அவர்கள் கொடுக்க வில்லை: மீண்டும் கேட்கிறோம். இதற்காக மட்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் செலவு ஏற்படுகிறது. இப்போது வறட்சி நிவாரணப் பணிக்குப் பிறகு இந்த ஆண்டு அது கூடுதலாகுமே தவிர குறையாது: அந்த அளவுக்கு செலவழித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொருப் பிரச்னை. அரிசிக்கு மட்டும் 1980–81 ஆம் ஆண்டில் சப்சிடியாகத் தந்தது 8.08 கோடி ரூபாய். 1981–82 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் சப்சிடியாக தந்திருக்கிறோம். அடுத்தாண்டு இந்த சப்சிடி இன்னும் கொஞ்சம் கூடுதலாகுமே தவிர குறைவதற்கு வழியில்லை. ஆக இந்த வகையில் அரசுக்கு ஏற்படும் செலவு 8 கோடி, 12 கோடியாக இருந்தது, வரும் ஆண்டில் 15 கோடி அல்லது 16 கோடிக்குப் போகும் என்று கருதுகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு கடையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே கார்டுக்கு அரிசிதான் தரப் படுகிறது, வேறு எதுவும் தரப்படவில்லை என்று சொன்னார்கள். அந்தக் கடையில் விவரம் கேட்டதில் அவர்கள் குடும்பக்கார்டுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் விவரத்தைக் கொடுத்திருக் கிறார்கள். பிப்ரவரி முதல் ஜூலை வரையில் எல்லாப் பொருட்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. லெவி சர்க்கரை மார்ச்சு முதல் ஜூலை வரையில் 39 குவிண்டால் தரப்பட்டிருக்

கிறது; அரிசி 146 குவிண்டால் தரப்பட்டிருக்கிறது; மைதா 19 குவிண்டால் தரப்பட்டிருக்கிறது, ரவை 23 குவிண்டால் தரப் பட்டிருக்கிறது; பாமோலின் 5 குவிண்டால் தரப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே தரப்படவில்லை என்று சொல்வதற்கில்லை.

திரு. துரைமுருகன் : நான் கேட்டது கோதுமை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோதுமை அந்தக் கடையில கொடுத்தார்களா என்பதற்கு விவரம் இல்லை. அது மட்டுமல்ல. நுகர்பொருள் வாணிபக்கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் அந்தக் கடைகளில் வேலை பார்க்கிறவர் களுடைய சம்பளம் 100 ரூபாய் என்று இருக்கிறது. அது போதாது என்று சொன்னார்கள். இந்த அரசு அதை ஆராய்ந்து பார்த்து, 12—8—81-ல் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணையில் அவர்களுடைய சம்பளம் 150 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்ப அட்டை 1975 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அதன் பிறகு அது அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதை மறுபடியும் இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு சரியாக முடிந்த பிறகு வழங்கலாம் என்று கருதியிருக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, இந்த குடும்ப அட்டை பற்றி ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இது முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குடும்பக்கார்டு பற்றி கேட்க வேண்டுமானால் தனியாக ஒரு கேள்வி போடலாம். இப்போது அதை எல்லாம் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? பொதுவாக அமைச்சர் பதிலுரையில் குறுக்கிடுவது முறை அல்ல.

[முற்பகல் 10-50]

திரு. பாபு கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்களுக்கு இந்த நேரத்திலே ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குடும்பக் கார்டுகளைப் பொறுத்த வரையிலே 1975-லே கொடுக்கப்பட்டதற்குப் பிறகு கிராமங்களிலே உண்மையிலேயே யார் யார் வல்லவர்களோ அவர்களுக்குத்தான் குடும்பக் கார்டுகள் கிடைக்கின்றன. ஏழை எளியவர்களுக்கு குடும்பக் கார்டு கிடைக்கவில்லை. அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1975-லே கொடுக்கப்பட்டதற்குப் பிறகு அவரவர்கள் விண்ணப்பித்ததன் பேரிலே கூடுதலாகக் கார்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் இவை பற்றியெல்லாம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கவேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்



பட்டிருக்கின்றன. குடும்பக் கார்டு என்பதை ஒரு பாஸ் புத்தகம் மாதிரி கொடுத்து அதிலே முழு விவரங்களையும் தருகின்ற அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புதிய அட்டைகள் வழங்குவதன் மூலம் எல்லோருக்கும் கார்டுகள் கிடைக்கின்ற வகையிலேயும் போலி கார்டுகளை நீக்குகின்ற வகையிலேயும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறி, கருத்துக்களை எடுத்துச்சொல்லிய உறுப்பினர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் மானிய கோரிக்கைகள் 1981-82—விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981-82-ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கை கள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிட மிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:—

"In pursuance of Article 203, clause (3) of the Constitution of India I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give my recommenda- tion to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1981-82."

கூடுதல் மானியக் கோரிக்கைகள் 1981-82—விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981-82ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்கள் மீது விவாதம் தொடங்க இருக்கின்றது. இன்னும் சரியாக 128 நிமிடங்கள் தான் இருக்கின்றன. எல்லா கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று பெயர்களைத் தந்திருக்கிறார்கள். ஆளுங்கட்சி உட்பட. அவர்கள் அத்த[illegible]னபேரும் ஒவ்வொருவரும் 10 நிமிட நேரத்திற்குள்ளாக தமது உ[illegible]ரகளை முடித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அமைச்சரவர்கள் 12$\frac{3}{4}$ மணிக்கு பேச ஆரம்பித்து ஒரு மணிக்கு ஓட்டெடுப்பு நடத்தி முடிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நாகர் கோவிலில் பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. பல பேர் [illegible]கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் பாயிண்ட் ஆஃப் ஆர்டராக வராது. கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுங்கள். அடுத்து திரு. ரகுமான்கான் அவர்களை பேச அழைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர்
அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான
துணை மானிய கோரிக்கையி ன சட்டமன்றத்திலே ஒப்புதலுக்
காக நம்முடைய நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.
வருவாய் கணக்கிலே 62.35 கோடியும், மூலதனக் கணக்கிலே
93.03 கோடியும்......

(மாண்புமிகு பேரவைத் து ணத் தலைவர் த லைமை)

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்டது
கொடுக்கப்பட்ட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி. இது
மேலவையிலே விவாதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது இப்போது வேண்
டாம். து ண மானியக் கோரிக் கயின் மீது விவாதம தொடர்
கின்றபோது தாங்கள் குறுக்கிடவேண்டாம்.

திரு. சோ. அழகர்சாமி: 60 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்
கிறார்கள். இரண்டு தடியடிப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன.
மிக முக்கியமானப் பிரச் னை. (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவைகள் எல்லாம்
ஏற்கெனவே இந்த அவையில் எழுப்பப்பட்டு, அதற்கு ஒரு முற்றுப்
புள்ளி வைத்தாகிவிட்டது. இனிமேல் வேண்டாம். துணை நிதி
நிலை அறிக்கையின் மீது விவாதம் தொடரப்பட வேண்டும்.
அதனால் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே
சுமூகமான ஒரு முடிவிற்காக முதல் அமைச்சர் அவர்கள்
தாமே 7 ஆம் தேதியன்று அங்கே போகப் போவதாகச் சொல்லி
யிருக்கிறார். மேலவையிலே எழுப்பப்பட்டதற்குக் கூட பதில்
அளித்திருக்கிறார்கள் (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மேலவையில்
விவாதிக்கும் அ னைத்தையும் நாம் இங்கே விவாதித்துதான்
ஆகவேண்டும் என்கிற அவசியம் இல்லை. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணை
தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளின்
விவாதத்தின் போது நான் அங்கே அதையெல்லாம் எடுத்து
பேசினார்கள். நான் பதில் சொல்கிறபோது அதற்கான விடையை
அளித்தேன். அதேமாதிரி இங்கேயும் பேசுவார்களேயானால் நான்
பதில் சொல்கிறபோது சொல்கிறேன்.



திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்
கான துணை மானியக் கோரிக்கையை சட்டமன்றத்தினுடைய
ஒப்புதலுக்காக மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்
திருக்கிறார்கள். சுமார் 150 கோடி ரூபாய் அளவுடைய மானிய
கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வரவு—செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிற
தொகையாக இருந்தாலும், துணை மானியக் கோரிக்கையிலே
ஒதுக்கப் பட்டிருக்கிற தொகையாக இருந்தாலும், அது
மக்களுடைய நன்மைக்காக முறையாக பயன்பட
வேண்டும். அதிலே ஊழல் இருக்கக்கூடாது, தவறு இருக்கக்
கூடாது என்பதை அளும் கட்சி ஒப்புக் கொள்ளும் என்று நான்
நம்புகிறேன். அந்தத் துணை மானியக் கோரிக் கயை நான்
படித்துப் பார்த்தேன். அந்தத் துணை மானியக் கோரிக்கை
யிலே செட்டில்மெண்ட் டிபார்ட்மெண்ட் துறைக்காக பதிவேடுகள்
அடங்கிய இதர குறிப்பேடுகள் போன்றவற்றையெல்லாம் அச்சிடு
வதற்காக தனியார் அச்சகத்திற்கு 10 லட்சம் ரூபாய் வேண்டும்
என்று சொல்லி துணை மானியக் கோரிக்கை கேட்டிருக்கிறது.
நான் ஒன்றை கேட்க விரும்புகிறேன். அரசாங்கத்தின்
அச்சகத்திலேயே அச்சிடக்கூடாதா? தனியார் அச்சகங்களுக்கு
அவைகளை வழங்கி 10 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கீடு
செய்யத்தான் வேண்டுமா? இது ஊழலுக்கு வழி வகுக்காதா
என்று கேட்க விரும்புகிறேன். அகவே அரசாங்கமே அதை அச்சிட
முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று முன்பு ஒரு தடவை பாடநூல் நிறுவனம்
பாடபுத்தகங்களை அச்சிடுவதற்காக கொடுக்கும்போது ஆளும்
கட்சியைச் சேர்ந்தவர்கள் வைத்திருந்த அச்சகத்திற்கு அந்த
வேலையைக் கொடுத்ததும், அவர் அமைச்சர் ஆனதற்குப் பிறகு
அது வேறொரு உறவினரின் பெயரில் மாற்றப்பட்டதையும்
டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். அது போலவே இப்போதும் அச்சிடுவதற்காக
தனியார் அச்சகங்களுக்கு கொடுப்பதற்காக இந்த ஒதுக்கீடு
செய்திருப்பதை நாங்கள் ஒத்துக் கொள்ள தயாராக இல்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாக என்றைக்கு கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு
அந்த வேலைகளைச் செய்வதற்காக ரெவின்யூ இன்ஸ்பெக்டர்
களை போட்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக
செக்ஷன் ரைட்டர்ஸ் என்று சொல்லி 2,154 பேர்களை நிய
மித்து இருக்கிறீர்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்
காக 25 லட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கப்பட்டு, அதற்கு அவை
யினுடைய அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே
வேலை பார்த்துக் கொண்டிருந்த பகுதி நேர கிராம அதிகாரி
களை நீக்கிவிட்டு, பிறகு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு படி அவர்கள்
வேலை ... லேயே சம்பளம் கொடுத்... அதுவல்லாமல்

தற்போது அதே வேலைகளை பார்க்க ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நியமித்து, அவர்களுக்கு உதவி செய்ய செக்ஷன் ரயிட்டர்களை போட்டு, அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இவ்வளவு தொகையை ஒதுக்கீடு செய்திருப்பது நிர்வாகக் குறைவையும், அலட்சியமான போக்கையுமே காட்டுகிறது.

இன்னும் சொல்லப்போனால், மக்களுடைய வரிப்பணம் வீணாகும் நிலையையே இது அடையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் இப்படி கிராம அதிகாரிகள் நீக்கப்பட்டதினால் கிராமப்புறத்து நிர்வாகம் சீர்குலைந்து போயிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இதிலே வேலையற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் என்பதாக ஒரு திட்டத்தை சொல்லியிருக்கிறார்கள். அதாவது வேலையற்றோர் துயர் துடைப்புத் திட்டம். இந்த திட்டத்திலே வேலை வாய்ப்பு அற்று இருக்கும் இந்த வேலையற்றோர்களை சந்தித்து அவர்களுடைய துயர்களை கேட்டறிந்து, அவர்களிடமிருந்து மனுக்களை வாங்கி அவைகளைப் பரிசீலனை செய்து, அவர்களுடைய துயரை துடைப்பதற்காக பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்காக 2 லட்சத்து 70,000 ரூபாயை ஒதுக்கி இப்பேரவையின் அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் எல்லாம் இருக்கின்றன. அவைகளில் வேலைவாய்ப்பைத் தேடி தேவையானவர்கள் பதிவு செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் இதற்கு ஒரு முடிவைக் காணாமல், அந்த நிறுவனத்தின் மூலம் வேலையற்றவர்களை அழைத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கு பதிலாக அவர்களிடம் மனுக்களை வாங்கி பிறகு பரிசீலனை செய்வதற்காக ஆட்கள் போடப்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கு சம்பளம் வழங்க இந்த துணை மதிப்பீட்டிலே 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அளவிற்கு ஒதுக்கியிருப்பதாகவும் சொல்லி அதற்கு அனுமதி கேட்டிருப்பது மிகவும் மோசமான ஒன்றாகும்.

(முற்பகல் 11-00)

இது சில தனிப்பட்டவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக செய்யப்படுகிற காரியம். இன்னும் சொல்லப்போனால், ஆளும் கட்சிக்காரர்களுக்கு அந்த வாய்ப்பை கொடுப்பதற்காக செய்யக் கூடிய காரியம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த துணை மானியக் கோரிக்கைகள் 34 பக்கங்களில் நிரப்பப்பட்டிருக்கின்றன. இந்த 34 பக்கங்களிலும் வறட்சி ஒன்றைப் பற்றித்தான் நீங்கள் அதிகமாகச் சொல்லுகின்றீர்கள்.



வறட்சி பற்றி ஒரு புறம் அக்கறையோடு இருப்பதாகச் சொல் கிறீர்கள். ஆனால் இந்த துணை மதிப்பீட்டில் 80 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி வறட்சியின் பெயரால் ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக இந்த வறட்சிப் பணிகளைப் பார்த்த யார் யாருக்கு காண்ட்ராக்ட் விடப்பட்டது என்ற ஒரு பட்டியலை மாவட்ட ரீதியாக இந்த மன்றத்தில் வைக்கவேண்டும். ஏராளம் வெளியே பேசிக்கொள்ளுகிறார்கள், பினாமியாக ஆளும் கட்சிக்காரர்கள் அதில் இருக்கிறார்கள். ஆகவே நிவாரணப் பணிகள் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்று குற்றச்சாட்டு வருகிறது. அது உண்மையா இல்லை என்று கண்டுபிடிக்கவேண்டுமென்று சொன்னால் இந்தச் சர்க்கார் தாமதமாக இந்தச் சபையின் மேஜை மீது அதை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதென்னவென்றால் இது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் அறிக்கைகள் மூலம் நீங்கள் இங்கே வைக்கவேண்டும். நீங்கள் வைத்திருக்கக்கூடிய அறிக்கையில் அந்த விவரங்கள் எல்லாம் இல்லை.

நான் இன்னொன்றையும் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அண்மையில் மெட்ராஸ் ஹைகோர்ட்டில் ஒரு வேடிக்கையான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. சாராய வழக்கு கள் சம்பந்தமாக அதேபோல் பிராந்தி லைசென்ஸ் சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பல ரிட் மனுக்கள் செய்திருக் கிறார்கள். அதில் ஒருவர் ஒரு ரிட் மனு தாக்கல் செய்திருக் கிறார். அரசாங்கத்திற்கு எதிராக அந்த நீதிபதி தீர்ப்பு வழங்கியிருக்கிறார். அந்த நேரத்தில் அட்வகேட்—ஜெனரல் அவர்களும், கவர்ன்மெண்ட் ப்ளீடர் அவர்களும் அந்த நோட்டீஸை எடுத்துக்கொண்டு, அவர்கள் நீதிபதி கொடுத்த உத்தரவை ஏற்றுக்கொண்டு போய் இருக்கிறார்கள். ஆனால் அர சாங்கம் கோர்ட் உத்திரவை மதிக்காமல் நீதிபதி தீர்ப்பு கொடுத்த பிறகும் அதற்கு மாறாக நடந்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மனுதாரர் உடனடியாக நீதிமன்றத்திற்கு மீண்டும் சென்று கண்டம்ப்ட் ஆப் கோர்ட் என்று சொல்லி அரசாங்கத்திற்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் சார்பாக அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பதிலில் அரசாங்க அதிகாரிகள் எழுதியிருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய அட்வகேட்—ஜெனரலும் கவர்ன்மெண்ட் ப்ளீடரும் நீதிமன்றத்தின் இன்ஜங்க்ஷன் பற்றி எங்களுக்கு தகவல் வழங்கியதை தெரிவிக்கவேயில்லை, பொறுப் பில்லாமல் நடந்துகொண்டார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு செய்த தவறை, இந்த அரசாங்கத்தின் அலட்சியப் போக்கை, லா ஆபீஸர்ஸ் என்று சொல்லக்கூடிய அட்வகேட் ஜெனரல் மூலமும் கவர்ன்மெண்ட் ப்ளீடர் மூலமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உண்மையான நிலவரம் என்ன என்பது தெரியவேண்டும், காரணம் பொறுப்பான லா ஆபீஸர்ஸ் பற்றி

சொல்லப்பட்டிருக்கிறது. கண்டம்பட் ஆப் கோர்ட் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. மனுதாரர் சார்பாக வழக்காட முன்னாள் அட்வகேட்-ஜெனரல் அரசாங்கத்தின் மீது போடப் பட்ட இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை வாபஸ் வாங்கு கிறார்கள். காரணம், ஒரு அரசாங்கம் பொறுப்பில்லாமல் லா ஆபீஸர்ஸ் என்று சொல்லக்கூடிய அட்வேகேட்—ஜெனரலையும், கவர்ன்மெண்ட் ப்ளீடரையும் குற்றம் சொல்கிற காரணத்தால், தங்களுடைய குற்றத்தை ஏற்றுக்கொள்கிற காரணத்தால் இந்தச் சர்க்காரைக் கண்டிக்கிறேன், அதன் அடையாளமாக இந்த சர்க்கார் மீது போடப்பட்ட வழக்கை, கண்டம்ப்ட் ஆப் கோர்ட் வழக்கை வாபஸ் வாங்குகிறேன் என்று ஒப்பன் கோர்ட்டில் சொல்லி இருக்கிறார்கள். இதில் என்ன நடைபெற் றிருக்கிறது என்பது தெரிய வேண்டும். சட்டசபையில் அட்வேகேட் ஜெனரலை அழைப்பதற்கு சட்டசபை விதிப்படி உரிமை இருக்கிறது. எனவே இந்தச் சட்டசபையில் அவர்களை அழைத்து உண்மையான சம்பவம் என்ன என்பதைப்பற்றி நாம் விசாரிக்க வேண்டும். இது ஒரு முக்கியமான பிரச்னை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதேபோல் தஞ்சையில் தமிழ் பல்கலைக் கழகத் திறப்பு விழா நடத்துவதாக பத்திரிகையில் வந்திருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்களும் அமைச்சர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். யூனிவர்சிட்டி கிறான்ட்ஸ் கமிஷன் இன்னும் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்று கேள்வி படுகிறேன். அப்படி அனுமதி வழங்காதபோது எப்படி அந்த விழாவை நடத்தமுடியும்? அப்படி ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்பதில் கருத்து மாறுபாடு கிடையாது. ஆனால் என்ன கடிதம் எழுதினீர்கள்? அந்தக் கடிதத்தில் அடங்கியுள்ளவை என்ன? அந்தக் கடிதத்தின் நகலை இங்கே வைக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்து நிமிடங்கள் ஆகி விட்டன.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான பிரச்னையைப் பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு டெல்லியிலே இருக்கக் கூடிய தமிழக இல்லத்திலே அங்கே அரசாங்க அதிகாரி இருக்கிறார்; சங்கரன் என்ற அதிகாரி அங்கே இருக்கிறார். ஆனால், நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது; தமிழக அரசின் விசேஷப் பிரதிநிதியாக அகில இந்திய அண்ணா தி. மு. க. வின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகனரங்கம், எம். பி. அவர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் ஹானரரி பேசிசிலே நியமிக்கப்பட்டிருக் கிறார்களா? அல்லது அவர்களுக்கு சம்பளம் உண்டா? அப்படி யானால், அதற்காக அவருக்குக் கொடுக்கக்கூடிய ரூபாய் எவ்வளவு? நான் கேட்க விரும்புவதெல்லாம், இதே மன்றத்தில் ஹாஜா செரீப் அவர்கள் துருக்கியிலே ஒரு வேலைக்கு நியமிக்கப் பட்ட போது, அவர் சட்டசபை உறுப்பினராக இருக்கக்கூடாது என்ற பிரச்னை எழுப்பப்பட்டது. அப்படியானால்



சங்கரன், ஐ. ஏ. எஸ். அவர்கள் அங்கே அதிகாரியாக இருக் கின்றபோது. அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்த பார்லிமென்ட் உறுப்பினர் விசேஷப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றால், அந்தப் போஸ்டினுடைய தன்மை என்ன? அவர் சம்பளம் வாங்குகிறாரா? அப்படி வாங்குவதானால், தேர்தல் கமிஷனருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி தெரிவிக்கப் பட்டிருந்தால், அவருடைய நியமனம் சரியா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, .......... .. (மணியடிக்கப்பெற்றது).

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக் கையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு ரூபாயும், ஒவ்வொரு பைசாவும் ஒழுங்காகச் செலவிடப்பட வேண்டுமென் பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அப்படி ஒழுங்காக செலவிடப்படவில்லையானால், அதிலே தவறுகள் நிகழுமானால், என்ன நடக்கும் என்பதற்கு நம் கண் முன்னால் சாட்சியம் இருக்கிறது. ஆகவே, நாம் ஜாக்கிரதையாக இருப் போம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறன். பொதுவாகவே, அரசாங்கமோ அல்லது அமைச்சர் அவையோ ஒழுங்காக செயல்பட்டால் தான் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பார்கள். அண்டைத் தமிழகத்திலே நாம் உணர்ந்து பார்த்திருக்கிறோம். ஒரு அமைச்சர் ஒரு வீடுவாங்கினார் என்பதற்காக 2, 3 பேர்கள் அமைச்சரவையிலே இருந்து தூக்கியெறிப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு முன்னால் 138 ஆக எண்ணிக்கை இருந்தது 183 ஆக ஆனதும், ஆனால் அதற்குப் பிறகு ஒருவர் தன் வாழ்ந்து கொண்டிருக்கும் பகுதியைச் சுற்றி வளைக்க ஆரம்பித்ததன் விளைவாக 18-லே இருந்து, 30க்கு கொண்டு வந்து விட்டதையும் பார்க்கும்போது, மக்கள் எவ்வளவு சிறந்த நீதிபதிகளாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அந்த காரணத்தினால், நாங்கள் நிச்சயமாக ஜாக்கிரதையாக இருப் போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே, நமமுடைய அரசு இவ்வாறு பணத்தைச் செல வழித்து எப்படியெல்லாம் இந்த நாட்டு மக்களுக்குப் பாடுபட்டு வருகிறது என்பது பலருக்குத் தெரியும். விஷயம் தெரிந்தவர் களிடையே கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

குறிப்பாக, விவசாய மக்களுக்கு எந்த அளவிற்கு நன்மை செய்திருக்கிறது என்பதை நாட்டிலுள்ள நல்லவர்கள் எல்லாம் அறிவார்கள். மத்திய அரசு 1980 ஆம் ஆண்டு எக்காரணத்தை முன்னிட்டும் விவசாயக் கடனை ரத்து செய்யக்கூடாது என்று

[திரு. கோ. விஸ்வநாதன்] [1981 ஆகஸ்டு 28

உத்தரவிட்டது. மாநில அரசு கடன் நிவாரணம் கொடுத்தாலும் மீண்டும் கடன் கொடுக்க முடியாது என்று ரிசர்வ் பாங்கு அறிவித்துவிட்டது. தெளிவாக, நாச்சுரல் கலாமிடீஸ், வெள்ளம் வறட்சிபோன்ற இந்தக் காரணங்கள் இருந்தால் மட்டுந் தான் ரூ. 2400 வரை கடன் நிவாரணம் பெறலாம், மேல் தரக்கூடாது என்று ரிசர்வ் பாங்க் உத்தரவிட்டுள்ளது. அதற்கு அதற்கு அவர்கள் சொல்லுகின்ற காரணம், 5வது, 6வது திட்டக் காலத்திலே 20 அம்சத் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கு பாங்கு களிலே இருந்து கடன் நாங்கள் அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். 7லிருந்து 9 சதவிகிதமாக 1967–69லே இருந்தது, இப்போது வங்கிகளிலே 21% கடன் கொடுத்திருக் கிறோம்; ஆகவே, 21% கடனை ரத்து செய்வோமானால், அரசாங்கமே நடக்க முடியாது, வங்கிகள் நடக்காது என்று காரணத் தக்காட்டி, கடன் நிவாரணம் கூடாது என்று மத்திய அரசு சொல்லிவிட்டது. ஆனால் அதையெல்லாம் மீறி புரட்சித் தலைவர் அவர்கள், தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக இதுவரை ஏறத்தாழ 196 கோடி ரூபாய் அளவிற்கு கடன் நிவாரணம் அளித்து, சிறு விவசாயிகள் பயனடையச் செய்திருக்கிறார்கள். மேலும், நிவாரணம் அளிக்கப் போகிறோம்; அளிப்போம் என்ற உறுதிமொழியை நம் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11.10]

ஆனால் இதைப் பாராட்டுவதற்கு மாறாக இதையும் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ யானைப் பசிக்குச் சோளப் பொரி என்று சொல்லுகிறார்கள். இதுவரை இந்தியாவில் எந்த அரசும், இந்தியாவில் இருக்கும் 22 மாநிலங்களில் எந்த அரசும் இந்த அளவுக்குக் கடன் நிவாரணம் தரவில்லை. இதெல் லாம் தக்காவிக் கடன், வராத கடனைத் தள்ளினார்கள் என்று கூறினார்கள். அந்த வராத கடனைக் கூட அவர்கள் காலத்தில் ஏன் தள்ளவில்லை என்ற கேள்விக்கு அவர்கள் பதில்சொல் லட்டும். அரசாங்கம் அந்த வங்கிகளுக்கு ஏற்படுகிற நஷ்டத்தையும் சரிக் கட்டிக் கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கர்நாடகத்தில் விவசாயப் போராட்டம் மிகப் பெரிய அளவுக்கு கடந்த மார்ச் மாதத்தில் நிப்பன் என்ற இடத்தில் ஷரத் ஜோஷி தலைமையில் போராட்டம் நடந்து, துப்பாக்கிப் பிரயோகம் நடந்து 12 பேர் கொல்லப்பட்டார்கள்; 200 பேர் காயமடைந்தார்கள். இவ்வளவுக்கும் பிறகு கடன் நிவாரணம் 23 கோடி ரூபாய்தான். மராட்டியத்தில் அதிகமாகக் கடன் நிவாரணம் அளிக்கப்படுவ தாகக் கூறி அந்நாலே அவர்கள் 41 கோடி ரூபாய் என்று அறிவித் தார்கள். மத்திய சர்க்கார் கடிந்து கொண்டதன் காரணமாக அதோடு நிறுத்தி விட்டார்கள். அதற்கு மேல் கடன் நிவாரணம் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் கொடுக்கப்படவில்லை.



1981 ஆகஸ்ட் 28] [திரு. கோ. விஸ்வநாதன்]

நம்முடைய மாநிலத்தில் மட்டுந்தான் விவசாயிகள் இருக் கிறார்கள் என்று இல்லை. இந்தியாவே ஒரு விவசாய நாடு: விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள் மக்கள். நாம் இந்த அளவுக்கு விவசாயிகளுக்குச் சலுகைகளைச் செய்திருக்கிறோம். மற்ற யாரும் செய்யவில்லை. ஒரு பாராட்டு உண்டா? காழ்ப்புணர்ச்சி காரணமாக குறைகளைச் சொல்லுகிறார்களே தவிர, பாராட்டு கிடையாது.

மின் கட்டணத்தை எடுத்துக் கொண்டால் கூட இந்தியாவி லேயே நாம்தான் விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை அளித்து வருகிறோம். ஏன் விவசாயிகள் போராடு கிறார்கள் என்பதற்குச் சில நியாயமான காரணங்கள் இருக் கின்றன. அவர்களுடைய விளைபொருளுக்கு விலை கிடைக்க வில்லை ஆனால் இன்புட்ஸ் விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், விவசாயக் கருவிகள், டீசல் விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. யார் இதற்குப் பொறுப்பு? மத்திய சர்க்கார் ஏற்றிக் கொண்டே இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை அல்ல, ஆண்டுக்குப் பல முறை, ஐந்தாண்டுக் காலத்தில் ஏழு முறை உர விலை, டீசல் விலையை ஏற்றியிருக் கிறார்கள். ஆனால் கொள்முதல் விலையை ஏற்ற மறுக்கிறார்கள். மத்திய சர்க்கார் செய்கிற தவறுகள் விலைவாசி ஏறக் காரண மாக இருக்கிறது; மத்திய சர்க்கார் செய்கிற காரியங்களின் விளைவுகளை மாநில சர்க்கார் தாங்க வேண்டியிருக்கிறது. முக்கியமான பிரச்சினையில் சில நாட்களுக்கு முன்னால் மத்திய சர்க்கார் விவசாய அமைச்சர் ராவ் பீரேந்திர சிங் அவர்கள் கொள்முதல் பற்றி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கொள்முதல் பொறுப்பு முழுவதையும் மத்திய சர்க்காரே ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். அந்த மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன தேவைப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு மாநில சர்க்காருக்குத் தான் இருக்கிறது. ஆகவே, அதை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்வது என்பது சரியானது அல்ல என்பது அனைவரின் கருத் தாகும்.

நாம் மாதம் 10,000 டன் கோதுமை வேண்டுமென்று கேட்டால் 3,000 டன்தான் மத்திய சர்க்கார் கொடுக்கிறது. அரிசி நமக்கு ஒரு லட்சம் டன் வேண்டுமென்று கேட்டால் 30,000 டன் தான் கொடுத்திருக்கிறார்கள். இதை அவர்களால் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. கொள்முதல் அவசர காலத் தேவைகளுக்கு பஃபர் ஸ்டாக் வைத்திருக்கும் பொறுப்பு மாநில சர்க்காருக்குத்தான் இருக்கவேண்டும். மத்திய அரசு வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்வதாகச் சொல்லுகிறார்கள். விளைச்சல் உபரியாக இருக்கும் அந்த நேரத்தில் சர்க்கரையி லிருந்து சமையல் எண்ணெய் வரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது, அது விலை குறைக்கக் காரணமாக இருக்கும் என்று சொல்லப்

[திரு. கோ. விஸ்வநாதன்] [1981 ஆகஸ்ட் 28

படுகிறது. தற்போது நெல்லுக்குக் கொள்முதல் விலை 105 ரூபாய் என்று சொன்னாலும் நாம் ரூ. 115, ரூ. 130 வரை கொடுக்கிறோம். கொள்முதலை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்வதாக இருந்தால் கூட அந்த விலையை அவர்கள் கொடுக்க வேண்டும்.

இவ்வளவு பெரிய சிக்கல்களுக்கு மத்தியில் போலீசாருக்கு
பாதி விலையில் அத்தியாவசியப் பொருள்கள் கொடுக்கப்பட்டு
வருகிறது. வெளி மார்க்கட்டு விலையைக் கட்டுப்படுத்துவதற்காக
அரிசி விலையை ரூ. 1.75; ரூ. 2.15 என்ற அளவுக்கு வைத்து
நியாய விலைக் கடைகளில் கொடுத்து வருகிறது. சாதாரண
மாக ஒவ்வொரு அரசாங்கமும் செய்யும் திட்டத்தின் முதலீடு
குறைந்து கொண்டிருக்கும் வரலாற்றைக் காண்கிறோம். ஆனால்
600 கோடி ரூபாய்க்கு நாம் திட்டத்தைப் பெற்று நிறைவேற்றி
வருகிறோம். இதைப் பற்றி மத்திய சர்க்காரில் இருக்கும்
திட்டக் குழு உறுப்பினர் முகமது பசால், தமிழ்நாடு வளர்ச்சித்
திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகத் திறமையாகச் செயல்பட்டு
வருகிறது என்று கூறியிருக்கிறார்கள். என். டி. திவாரி அவர்கள்
தமிழ்நாடு மின்சாரத்திற்கும், சிறு தொழில் வளர்ச்சிக்கும்
கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தைப் பாராட்டிவிட்டு போயிருக்
கிறார்கள். இப்படிப் பொறுப்பிலே உள்ளவர்கள் எல்லாம்
தமிழ்நாடு அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்
பொறுப்பு இல்லாதவர்கள் சில பேர் குறை கூறிக் கொண்டிருக்
கிறார்கள். உலகம் வேகமாக வளர்ந்து வருகிறது, விஞ்ஞான
வளர்ச்சியைப் பற்றி அன்றாடம் பேசிக் கொண்டிருக்கிறோம்.
தமிழ்நாட்டிலே பல கிராமங்களிலே இன்றைக்கு பாதை வசதிகள்
இல்லை, சுடுகாட்டுக்குக் கூட பாதை வசதி இல்லாமல் இருக்கிற
நிலைமை இருக்கிறது, மக்களுக்குக் குடிநீர் கிடைக்காத நிலைமை
இருக்கிறது. இப்படிப்பட்ட குறைகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட
பகுதிகளிலே அதிகமாக இருக்கிறது காந்தியடிகள் குறிப்பிட்டார்
கள். India breathes its life in villages என்று. இன்றைக்கு அந்தத்
தத்துவத்தின் அடிப்படையிலே தான் தமிழ்நாடு அரசு புரட்சித்
தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் நிறைவேற்றிக் கொண்டிருக்
கிறது. தமிழ்நாட்டிலே தன்னிறைவுத் திட்டம், மிகப் பெரிய
மகத்தான புரட்சித் திட்டமாக இந்தியாவிலே வேறு எங்கும்
இல்லாத அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே
42 கோடி ரூபாய் செலவழித்துவிட்டோம். இந்த ஆண்டு 120
கோடி ரூபாய் செலவழிக்கின்ற முறையிலே தமிழ்நாட்டிலே
தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றப் பாடுபட்டுக் கொண்
டிருக்கிறோம். இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி
களிலே எல்லாம் மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் அதைப்பற்றிப்
பேசாமல் அருமை உடன் பிறப்பே என்று சொல்லி எரிசாரயத்
தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் யாரும்
அதைப்பற்றி கவலைப்படவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு இன்னும் அதிகமான அளவில் நிவாரணம் தேவை
என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.



1981 ஆகஸ்ட் 28]

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய
விளக்கம். இன்றைக்கு மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்
படுகிறார்கள் என்பதை அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.
அதைப்பற்றியெல்லாம் பேசவேண்டும் என்று சொல்கிறார்கள்,
குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்க
வேண்டியதுபற்றிப் பேசுவதற்குப் பதிலாக எரி சாராயத்தைப்
பற்றி உடன்பிறப்பே என்று பேசுகிறார்கள் என்று குறிப்
பிட்டார்கள். ஆனால் குடிதண்ணீர் பற்றிப் பேசாமல் **
அது என்ன நியாயம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்று சொன்ன
அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டு
மென்று ஆணையிடுகிறேன். அடுத்து திரு. எம். ஆறுமுகம்
பேசுவார்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான முதல் துணை
மானியக் கோரிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
இந்த அறிக்கையிலே வறட்சி நிலை பற்றியும் கிராமப்புற
வேலைவாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் பற்றியும்
சொல்லப்பட்டிருக்கிறது, அவற்றிற்காக அதிகமான நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, தன்னிறைவுத்
திட்டம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே அமல் படுத்தப்
படுகிறது. ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலே தன்னிறைவுத்
திட்டத்தின் மூலமாக காரியங்கள் செய்யப்பட்டாலும் ஒரு சில
அதிகாரிகளின் தவறுதலான நடவடிக்கையின் காரணமாக அந்த
அந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்துகொள்ளாமல் தான்
தோன்றித்தனமாக அவர்களாகவே தேவை இல்லாத ஒரு சில
வேலைகளைச் செய்வதன் காரணமாக செய்ய வேண்டிய
வேலைகள் தடைபடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்துகிறபோது அந்த அந்த
சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசி அந்த அந்தத்
தொகுதியின் மேம்பாட்டிற்காக எந்த வேலைகளைச் செய்ய
வேண்டும்; எந்த வேலைகளைச் செய்தால் அந்தத் தொகுதி
மக்களுக்குப் பயன்படும் என்பதை சட்ட மன்ற உறுப்பினர்களை
அழைத்துப் பேசி முடிவு செய்து வேலைகளை நிறைவேற்ற
வேண்டும்.

---

** ** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றன

[திரு. எம். ஆறுமுகம்] [1981 ஆகஸ்ட் 28

இன்று நாடு முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் கிணறுகளை ஆழப்படுத்துதல், பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல், விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல் ஆகிய வேலைகளை துரிதமாகச் செய்தாக வேண்டும். தமிழக விவசாயிகளுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்ப தால் அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். வறட்சியின் காரணமாக அவர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். மத்திய அரசு கடன் கொடுக்காத நிலைமை இருந்தாலும் ரிசர்வ் வங்கி அதை ஒத்துக் கொள்ளாத நிலைமை இருந்தாலும் தமிழக அரசு விவசாயிகளின் நலனைப் பேணுவதற் காக அவர்களுக்குக் கடன்களைக் கொடுத்து உதவ வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே கடந்த ஆண்டிலே நிறைவேற்றப் படவேண்டிய திட்டங்கள் குறிப்பாக என்னுடைய தொகுதியிலே அவசரம் அவசரமாகச் செய்யப்பட்ட காரணத்தினால் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பது மட்டுமல்ல, கடந்த ஆண்டிலே செய்யப்படவேண்டு மென்று ஒதுக்கப்பட்ட வேலைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவைகளை இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்திலே சேர்த்து, அவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

ஆதி திராவிட மக்களின் மேம்பாட்டுக்காக ஒரு தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். உடுமலைப் பேட்டைக்கு அருகாமையில் பூளவாடி என்ற இடத்தில் கிருஷ்ணசாமி என்பவர், எம்.பி.பி.எஸ். படித்துப் பட்டம்பெற்று தனியாகக் கிளினிக் நடத்திக் கொண்டிருக் கிறார். அங்கேயுள்ள மேல்ஜாதி இந்துக்கள் அவரைக் கட்டி வைத்து அடித்து உதைத்து மிகவும் தாக்கியிருக்கிறார்கள். அவருடைய குடும்பத்தினர் நான்குபேர் ஆஸ்பத்திரியிலே அட்மிட் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றே தெரியவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், அரிசனங்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் தொகை முழுமையாக ஒழுங் காகச் செலவழிக்கப்பட்டு வருகிறதா என்று பார்க்க வேண்டும். நாடு முழுவதும் ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருப்பதால், படித்த அரிசனங்களுக்குக்கூட இந்த நாட்டிலே பதுகாப்பு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. உடுமலைப்பேட்டை அருகில் உள்ள பூளவாடி கிராமத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் படித்த டாக்டருக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் இருந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறு தாக்கியவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



[1981 ஆகஸ்டு 28] [திரு. எம். ஆறுமுகம்]

கோவை மாவட்டத்தில் இன்றைக்கிருக்கின்ற சூழ்நிலை என்ன வென்றால், பல்கலைக் கழகத்தில், கல்லூரிகளில் மிகப்பெரிய போராட்டம் நடைபெறுகிறது. அவினாசிலிங்கம் அறிவியல் கல்லூரிப் பேராசிரியர்கள் கடந்த ஒருமாத காலமாக ட்ரிபிள் மேஜர் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடு களிலிருந்து இலவசமாகக் கிடைக்கின்ற புத்தகங்களை அவர்களே அக்கவுண்ட் செய்து கொண்டு ஊழல் நடத்தும் சூழ்நிலையி ருக்கிறது. கல்லூரியில் பணியாற்றும் பெண் ஆசிரியர்கள் கல்லூரி நடந்துவரும் காலங்களில் கர்ப்பம் தரிக்கக்கூடாது என்ற காரணத்தினால் அந்த நிர்வாகம் ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத் திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ட்ரிபிள் மேஜர்' ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு, ஓரே ஆசிரியருக்கு இரண்டு மூன்று அப்பாயிண்ட்மெண்ட்கள் கொடுக்கும் சூழ்நிலை, மத்திய அரசு கொடுக்கும் சலுகைகள் மற்றும் மாநில அரசு கொடுக்கும் மானியங்களைத் தவறாகப் பயன்படுத்துவது, ஆசிரியர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றினால் அவதியும் அல்லலும் உறுகின்ற அவர்கள் நடத்திய போராட்டம் மிகப் பெரிய அளவிற்கு வந்து இப்பொழுது கோவை மாவட்டம் முழுவதும் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே தமிழக அரசு கோவையிலுள்ள கல்லூரிகளின் நலனைக் கருத்திற் கொண்டு, அந்தக் கல்லூரியை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும். ஊழல் மலிந்த அந்த ட்ரஸ்டை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கின்ற ஒரு புதிய போக்கு வரத்துக் கழகத்திற்கு ஜீவாவின் பெயரை வைப்பதாக அறிவித் திருந்தது. அரசாங்கமே ஜி.ஓ.எம்.எஸ் நம்பர் 867, டிரான்ஸ் போர்ட்' தேதி 29–7–1981–இல் ஜீவாவின் பெயரை வைக்கப் போவதாகஅறிவிப்பை அறிவித்தது. ஆனால் இப்பொழுது மீண்டும் வேறு ஒரு பெயரை வைக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. இதன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் பதட்டநிலை இருந்துகொண்டு இருக்கிறது. நான் கேட்கிறேன், முதலில் ஏன் அவ்வாறு அறிவித்தீர்கள்? எதற்காக அதைத் திரும்பப் பெற வேண்டும்? இதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குப் புரியவில்லை. ஆகவே, அதன் காரணமாக அங்கேயுள்ள மக்கள் மத்தியிலே பயங்கரமான பீதி கிளம்பி மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, தமிழக அரசு ஏற்கனவே அறிவித்திருக்கின்ற அந்த நிலையை நிலைநாட்ட வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் சிறுசிறு தொழில்கள் அறிவிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் அவினாசி தொகுதியில் 18 அரிசி ஆலைகள் தேவை என்று சில அரிசி ஆலை சொந்தக் காரர்கள் புதிதாகக் கட்டிடம் கட்ட வங்கியிலிருந்து கடன் வாங்கி கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அங்கேயுள்ள

அதிகாரிகள் அரிசி ஆலை நடத்துவதற்கான அனுமதியைக் கொடுக்க மறுப்பதால் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல், அரிசி ஆலையை ஆரம்பிக்கவும் முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த 18 அரிசி ஆலைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே மனுபோட்டிருக்கிறார்கள். எனவே, அவற்றை ஆரம்பிப்பதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

யாரோ ஒருவர் செய்த சமூக விரோதச் செயலைக் காரணங் காட்டி, நக்சலைட் என்ற சீல் குத்தப்பட்டு ஒரு வாரத்திற்கு முன்பு கொல்லப்பட்டிருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் நக்சலைட்டுகள் மூன்று பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த 3 பேரும் நக்சலைட்டுகள் அல்ல. அவர்களைப் போலீசார் அடித்துக்கொன்று, ஒரு இடத்தில் கொண்டு வந்து அவர்கள் இறந்ததற்குப் பிறகு துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது. ஆகவே, தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் சாதாரண ஜனங்களின் மீதேகூட நக்சலைட்டுகள் என்ற சீலைக் குத்தி அவர்களைச் சுட்டுக் கொல்லுவது என்பது தமிழகத்திலே சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட நிலைமைகளில், அதிகாரிகள் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி, நக்சலைட்டுகள் என்ற பெயர் சூட்டிக் கொல்லுவதைத் தயவு செய்து தடுத்து நிறுத்த வேண்டும். இப்பொழுது 3 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றால், அதற்குத் தமிழக அரசு உடனடியாக நீதி விசாரணை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே வறட்சி இருக்கிறது. ஒரு பக்கத்திலே வேலையில்லாத் திண்டாட்டம். துணை மதிப்பீடுகள் தந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கக்கூடியவர்—மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய தலைநகரத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதாக அறிவித்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழகத்திலே பொருளாதார நெருக்கடி, வறட்சி, மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே தலைநகரை மாற்றுவது தேவையல்ல என்பதனை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத் தலைவராக இருக்கிற திரு. கோவிந்தராஜன் அவர்கள் பல முறை சமூக விரோதிகளால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு, தொழிலாளி வர்க்கத்தினருக்குச் சங்கம் அமைத்து, அவர்களுக்காக போராட்டம் நடத்துகிறவர்களைச் சமூக விரோதிகள் தாக்கு



கிறார்கள். சி.ஐ.டி.யூனுடைய திரு. கோவிந்தராஜன் மார்க்சிஸ்ட் கட்சியினுடைய மாநிலத் தலைவர்களில் ஒருவர். அவர் தொடர்ந்து தாக்கப்படுகிறார். அது சம்பந்தமாக போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னாலும் கூட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. பாதுகாப்பு இல்லை. அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்த பட்ஜெட் குறிப்பிலே சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர் கொடுப்பதற்காக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிங்கோனாவில் இருக்கிற தோட்டத் தொழிலாளர்கள், கொயினா விலே இருக்கிற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் விலை உயர்ந்த மருந்துகளைத் தயாரித்து, நம்முடைய நாட்டிற்கு அன்னிய செலவாணியை ஈட்டிக்கொடுக்கிற ஒரு பெரிய தொழிற்சாலையாக விளங்குகிறது. நீலகிரி மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலே வால்பாறை பகுதியிலும் சின்கோனா தொழிலாளர்கள் விலை உயர்ந்த மருந்துகளை உற்பத்தி செய்கிறார்கள். வெளி நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப் படுகிறது. இந்திய நாட்டிற்கு அன்னியச் செலவாணி ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே தனியார் துறையிலே உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வாங்கக் கூடிய சம்பளத்தைவிட மிகக் குறைவான சம்பளத்தை அரசுத் துறையிலே உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கு கிறார்கள். ஆகவே, இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பதன் அடிப்படையில் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கும்போது 1–1–1980 முதல் அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு 1981–82 ஆம் ஆண்டு செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, நமது நிதியமைச்சர் அவர்கள் ரூ. 155.38 கோடிக்கான மொத்த துணை மதிப்பீட்டுத் தொகையை அறிவித்திருக்கிறார்கள். அதில் ரூ. 62.35 கோடி வருவாய் கணக்கிலே இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இருக்கிற சூழ்நிலையிலே இந்த அரசாங்கம் சென்ற சட்டமன்றக்கூட்டத் தொடர் மூலமாக மதுவிலக்கு ரத்து செய்வது என்பதற்குப் பதிலாக, தளர்த்துகிறோம் என்ற கொள்கையின் அடிப்படையிலே, இந்த அரசாங்கத்திற்கு மொத்த வருவாய் எவ்வளவு இதுவரை எவ்வளவு கிடைத்திருக்கிறது என்பதற்கான மொத்தக் கணக்கும் கொடுக்கப்படவில்லை. இந்தத் திட்ட மதிப்பீட்டிலும் சேர்க்கப்படவில்லை. அதே நேரத்தில், மது விலக்கைத் தளர்த்துவதன் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு வருவாய் ஒருபக்கம் இருந்தாலும், மதுவிலக்கைத் தீவிரமாக

அமுல் நடத்தப்போகிறாம் என்ற கொள்கை அடிப்படையிலே இதுவரையிலே எவ்வளவு கோடி செலவு செய்யப்போகிறோம் என்று குறிட்பிடப்படவில்லை. ஆகவே, அந்த அடிப்படையிலே உங்களுக்கு மத்தியிலே எவ்வளவு குழப்பம் இருக்கிறது என்பதற்குச் சான்றுதான் இந்த நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், அது மிகையாகாது.

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே 1980-81 ஆம் ஆண்டிலே ரூ. 4.45 கோடி செலவழிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 7.4 கோடி செலவழிக்கப் போகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். இருக்கிற திட்டத்திலே என். ஆர். ஈ. பி. என்பது மத்திய அரசாங்கம் முழுத் தொகையையும் செலுத்தும் அதற்கு ஈடாக தமிழக அரசாங்கம் ஒரு கணிசமான தொகையும் அளித்து, அந்த திட்டம் தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க செயல்பட்டு வருகிறது. ஆனால், உண்மையிலே சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்குத் தமிழக அரசாங்கம் அந்தத் திட்டத்தினுடைய முழு நோக்கத்தை நிறைவேற்றுகிறதா என்றால் இல்லை. காரணம், கிராமப்புறத்திலே யார் அந்தத் திட்டத்தின்கீழ் வேலை செய்கிறார்கள் அரசாங்கத்தினுடைய ஜி. ஓ. பிரகாரம், கிராம சேவக் மூலமாக, வேலை இல்லாதவர்களுக்கு, படிக்க தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் திட்டத்தினுடைய நோக்கம்.

(முற்பகல் 11.30)

ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே கான்ட்ராக்டர்கள்தான் அந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறார்கள். அவர்கள் தான் இன்றைக்கு நம்முடைய சென்னை மாநகரத்திலே நடந்த மஸ்டர் ரோல் ஊழலைப்போல......

திரு. கோ. விஸ்வநாதன்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் தவறான தகவலை தரக்கூடாது என்பதற்காக சொல்லுகிறேன். என். ஆர். இ பி. திட்டத்தில் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஆளுக்குப் பாதி பாதி போட்டு செலவழிக்கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் தருகிற தொகைக்கு ஈடாக தமிழக அரசாங்கமும் கொடுக்கிறது என்றுதான் சொன்னேன். என்னுடைய பேச்சை உறுப்பினர் அவர்கள் சரியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே என். ஆர். இ.பி திட்டத்தின் மூலமாக பல லட்சம் ரூபாய் ஒவ்வொரு ஒன்றியத்திலும் செலவழிக்கப்படுகிறது. ஆனால் அதற்காக தனியாகப் பொறியாளர்கள் இருக்கிறார்களா? இல்லை. தனியாக உதவியாளர்கள் இருக்கிறார்களா? இல்லை. இருக்கின்ற பொறியாளர்களையும், உதவியாளர்களையும் வைத்துக்கொண்டுதான் இந்தத் திட்டத்தை செயலாற்றவேண்டி



இருக்கிறது. இன்றைக்கு பல கோடி ரூபாய்களுக்கு வேலை நடைபெறுகின்ற இந்த நேரத்தில் அங்கே 2 பொறியாளர்கள், இரண்டு உதவியாளர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களை வைத்துக் கொண்டு இத்தனை கோடி ரூபாய்க்கு இன்றைக்குத் திட்டங்கள் செயல்படுகின்றனவா? உண்மையாகவும், நிறைவாகவும அந்தக் காரியங்கள் நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்க இயலாத நிலை இருக்கிறது. ஆகவே போதிய பொறியாளர்களையும், உதவியாளர்களையும் நியமிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நம்முடைய மாநிலம் வறட்சியால் பாதிக்கப்பட்டு அதற்கு மத்திய அரசாங்கம் 49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால் ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசுகின்ற அமைச்சர்களானாலும், உறுப்பினர்களானாலும், சட்டமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, அல்லது பொது மேடைகளிலும் சரி, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கிறது, எங்களை எல்லாம் புறக்கணிக்கிறது என்று நண்பர் பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் கூட பேசுவது உண்டு. ஆனால் ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே சுமார் 9 மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன, வடநாட்டில் தமிழகத்திற்கு மட்டும் ஒதுக்கீடு செய்த நிதி 49 கோடி ரூபாய். மற்ற 9 மாநிலங்களுக்கும் சேர்த்து ஒதுக்கீடு செய்த தொகை 109 கோடி ரூபாய். சரிபாதி தொகையை இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கி இருக்கிறது என்றால், தமிழ்நாட்டை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்றா பொருள்? தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பாவிக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். மற்ற மாநிலங்களை விட 50 சதவீதம், மொத்த தொகையில் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைப் பாராட்டக் கூடாதா? அதற்கு நன்றி சொல்லக் கூடாதா? அதற்குப் பதிலாக கண்டனம் தெரிவிக்கிறார்கள். மத்திய சர்க்கார் விவசாயிகளுக்கு தக்காவிக் கடன் கொடுப்பதற்கு அனுமதி அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், adding insult to injury எங்களைப் புண்படுத்தியதற்குப் பின்னர், மேலும் அவமானப்படுத்துவதைப் போல இருக்கிறது, உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே கொடுத்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொல்லுகின்றபோது வறட்சியினுடைய நிலைமையை தன்மையைப் பார்த்துதான் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்கின்ற தன்மை ஏற்படுகிறதே தவிர, 9 மாநிலம், 10 மாநிலம் என்று மாநிலத்திற்கு மாநிலம் ஈவு செய்கிற நிலைமை வராது. ஆகவே மத்திய சர்க்காரே ஒவ்வொரு மாநிலத்திற்கும் குழுவை அனுப்பி, அங்கே இருக்கிற நிலைமைகளை கவனித்து பின்னர் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். அந்த வகையில் எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து 109 கோடி ரூபாய், தமிழகத்திற்கு 49 கோடி ஒதுக்கி

யிருக்கிறார்கள். அதற்காக திரு. சுந்தரராஜ் மூலமாக இல்லாமல் பல தடவை பாராட்டுத் தெரிவித்திருக்கிறோம். இந்த அவையிலேயும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறோம். அவர்களிடத்திலே பாராட்டுத் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் இங்கே வந்து பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். பாராட்டு தெரிவிக்க வேண்டிய வகையில் தெரிவித்திருக்கிறோம். கண்டிக்கவேண்டிய வகையில் கண்டிக்கிறோம். அவர்களும் கண்டிக்க வேண்டிய வகையில் கண்டிக்கிறார்கள். சுட்டிக்காட்ட வேண்டிய நேரத்தில் சுட்டிக் காட்டுகிறோம். அதையும் இதையும் ஒன்றாக ஆக்க வேண்டாம். அது வேறு இது வேறு, அதைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கூட, கஞ்சத்தனம் இல்லாமல், பஞ்சத்தனம் இல்லாமல் தாராளமாகப் பாராட்டுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பாராட்டுக்கு நன்றி, தொடர்ந்து பாராட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே வறட்சி நிவாரணப் பணிகள் அனைத்தும் 30-9-1981-க்குள் முடிக்கவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்று அறிகிறேன். நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், இன்றைக்கு தமிழ்நாட்டில் வறட்சி போகவில்லை. தொடர்ந்து இன்றைக்குப் பல மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது. என் மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களிலே குடிப்பதற்கு தண்ணீர் கூட கிடைக்காத நிலை இருக்கிறது.

ஆகவே நான் உங்களை டைம்-லிமிட் போடாமல் எத்தனை மாதங்களுக்கு நீடிக்க வேண்டுமோ, வறட்சி நிவாரணப் பணிகள் முழுமையாக முடிவு பெறும் வகையில் நீட்டித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் வறட்சி நிவாரணப் பணியில் நான் திருப்தி அடையவில்லை ஒரே ஒரு இலாக்காவிடம் மட்டும் நான் திருப்தி அடைந்திருக்கிறேன். அது பி. டபிள்யூ. டி. இலாக்கா. குறிப்பாக கண்மாய்கள் மராமத்து வேலைகளை முழுமையாக, செம்மையாக செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இருக்கக் கூடிய ஒரே குறை, அவர்களுக்கு சேரவேண்டிய தொகை, அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுமையாக போய்சேரவில்லை, புதுகோட்டை மாவட்டத்தில் 18 லட்சம் ரூபாய் ஒப்பந்தக்காரர்களுக்கு, வேலை செய்தும் கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இன்றைக்கு மோசமான நிலையில் வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வேலை செய்த ஒரே இலாக்கா எதுவென்று சொல்லவேண்டுமானால் அது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். யாரும் அதை மறுக்க முடியாது. அந்த இலாக்காவினிடமிருந்து எடுத்துவிட்டு, ஒரு பி. டபிள்யூ. டி-க்கோ மற்ற இலாக்காவிடமோ கொடுத்திருப்பீர்களானால் வறட்சி நிவாரணப் பணியில் தமிழ் நாட்டு மக்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைத்திருக்க முடியும். ஆனால் செலவை மட்டும் கோடிக்கணக்கான ரூபாயில் கொடுத்திருக்கிறார்கள். எப்படித்தான் செலவாயிற்றோ, தெரியவில்லை 300 அடிக்கு பைப் போடுகிறோம் என்று சொல்லிவிட்டு, 200 அடிக்கு



பைப்பை போட்டுவிட்டு 300 அடி பைப்புக்கு கணக்கைப் போட்டு விட்டு செல்கிற காட்சிகளை எல்லாம் நாம் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் நடுத்தரமாக நிவாரணப் பணிகளை செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது நெடுஞ்சாலைத் துறை. ஆக சிறப்பாக செய்திருப்பது பி. டபிள்யூ. டி., மோசமாக செய்திருப்பது குடிநீர் வடிகால் வாரியம், நடுத்தரமாக செய்திருப்பது நெடுஞ்சாலைத் துறை என்று சொன்னால் என்னுடைய ஆய்வு சரியாக இருக்குமென்று கருதுகிறேன்.

இருக்கிற சூழ்நிலையில் வறட்சி நிவாரணப் பணிகளை 30.9.81 என்ற ஒரு லிமிட் வைக்காமல் தொடர்ந்து அந்த பணிகள் செம்மையாக, முழுமையாக நிறைவேறுகிற அளவில் செயல்படுத்த வேண்டுமென்று ஒரு உத்தரவை போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த அவையிலே சென்ற முறை நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே ஒரு கோரிக்கையை வைத்தேன். இந்த மாநில சட்டமன்றத்திலே இந்தியாவின் முடிசூடா மன்னனாக, ஜனநாயகத்தின் சிற்பியாக, ஆசியாவின் ஜோதியாக விளங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவப் படத்தை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை அரசாங்கம் செவிமடுக்காமல், இதுபற்றி சிந்திக்காமல் இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் என்னுடைய சந்தேகம் என்னவென்றால் நேரு அவர்கள் நாட்டினுடைய சுதந்திரத்திற்காக பாடுபடவில்லை என்று கருதுகிறார்களோ, இந்தியா தொடர்ந்து ஜனநாயகத்தின் பூங்காவாக காட்சியளிக்கிறதே அதற்கு வித்திட்டவரின் திருவுருவ படத்தை இந்த அவையில் வைப்பதை மரியாதை இல்லையென்று நினைக்கிறார்களோ என்று தெரியவில்லை. அல்லது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திரா காந்தி அவர்களின் தந்தையாக இருந்தார் என்பதற்காக அவரின் படத்தை இந்த அவையிலே வைக்கக் கூடாது என்று எண்ணுகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அப்படியெல்லாம் இருக்க வேண்டாம். இந்த எண்ணங்களை மாற்றிவிட்டு, அருமைத் தலைவி திருமதி இந்திரா காந்தி அம்மையாரைக் கொண்டே ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான பிரச்சினை. சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நாங்கள் 29 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். இங்கேயிருந்து அமைச்சர்கள் எங்கள் தொகுதிகளுக்கு செல்கிற நேரத்தில், அங்கே இருக்கிற அரசு அதிகாரிகள் முழுமையான மரியாதையை, கவுரவத்தை அளிக்காமல் ஏனோ, தானோ என்று பத்து பேரோடு பதினொன்றாவது பேராக ஒரு அழைப்பிதழை அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

நீங்கள் வந்தால் வரலாம், இல்லையென்றால் வராமல் போங்கள் என்ற அளவில் எங்களுக்கு அழைப்பிதழை அனுப்புவது மன வேதனை அளிப்பதாக இருக்கிறது. உங்களைப் போன்று தான் நாங்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், எங்களை புறக்கணித்து விட்டுநீங்கள் தொகுதிகளிலே போய் அரசு நிகழ்ச்சிகளைமாவட்ட ஆட்சித் தலைவர்களை வைத்தோ, டி.ஆர்.ஓ.வை. வைத்தோ நிகழ்ச்சிகளை ஆர்.டி. ஓவை. தலைமை தாங்கி நடத்துவதோ, அல்லது காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதியிலே இன்னொரு தொகுதியைச் சார்ந்த அண்ணா திராவிட முன்னேற்ற கழக உறுப்பினரை வைத்தோ நடத்துவர்களானால் நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அரசு நிகழ்ச்சிகளில் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அதிலே கலந்து கொள்வது குறித்து நாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டி வரும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். எங்களை நீங்கள் மதித்தால் நாங்கள் உங்களை மதிப்போம். இல்லையென்றால் எங்களுக்கு வேறு வழியில்லை. உங்களை புறக்கணிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதைப்போல இன்றைக்கு மதுவிலக்கு சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சட்டத் திருத்தத்தில் பேசினாலும் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மதுவிலக்கைத் தளர்த்தியது சம்பந்தமாக இன்றைக்கு தமிழ்நாட்டில் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? சாராயம் குடித்தவர் கத்திக்குத்து, ஒருவர் கொலை; சாராயம் குடித்தவர் வீட்டில் மனைவியை குத்தி கொலை செய்தார்; மகனை அடித்தார் என்றெல்லாம் தினந்தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மதுவிலக்கைத் தளர்த்திய பிறகு இன்றைக்கு இதுதான் உங்கள் சாதனை, உங்கள் நடவடிக்கைக்கு இதுதான் பெருமையளிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

மதுவிலக்கைத் தளர்த்தியதால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் அதிலும் இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது; சாராயக்கடை வியாபாரிகள் இன்றைக்குஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள், நாங்கள் வரி கொடுக்க மாட்டோம்; முழுத் தொகையும் கட்ட மாட்டோம் எங்களுக்குத் தெரிவித்தபடி அரசாங்கம் சாராயம் சப்ளை செய்யவில்லை, எங்களுக்கு உரிய கோட்டாவை கொடுக்கவில்லை, ஆகையால் கட்டமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

1971-72-ல் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய தொகையைக் கட்டாமல் பாக்கியாக சுமார் 15 கோடி ரூபாய், அளவுக்கு இருக்கிறது. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் அதை ஒரு





குறையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். காரணம் அப்போது பினாமி முறையில் ஏலம் எடுத்தவர்கள், கள்ளுக்கடை, சாராயக் கடை ஏலம் எடுத்தவர்கள் பணம் கட்டாமல் ஒளிந்துகொண்டார்கள். அதே நபர்கள்தான் இன்றைக்கும் கள்ளுக்கடை, சாராயக் கடைகளை ஏலம் எடுத்திருக்கிறார்கள். அந்த நபர்களிடம் எப்படி பணத்தை வசூல் செய்யப் போகிறீர்கள் என்று தெரியவில்லை, உங்களுடைய டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் சரியில்லை. உணவு தானியப் பொருட்களை எப்படி விநியோகம் செய்கிறீர்களோ அதைப்போலதான் இதிலும் இருக்கிறது, சரியாக நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். எப்போது வரும் என்று தெரியாது. ஆக, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல் இல்லை; ஊராட்சிகளுக்குத் தேர்தல் இல்லை. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருந்த பொறுப்புகள் எல்லாம் கூட ஒவ்வொன்றாக எடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பிரதிநிதிகளை எடுத்துவிட்டீர்கள். அங்கே வேலைகள் நடைபெறுவதை தடுத்துவிட்டீர்கள். குடிநீர்த் திட்டத்தை எடுத்துவிட்டீர்கள். ஊராட்சி ஒன்றியங்களில் தனி அதிகாரிகளைப் போட்டீர்கள். அவர்களுக்கு ஒன்றியங்களைப்பற்றி கவலை இல்லை. விவசாயம் சம்பந்தப்பட்ட திட்டங்கள் செப்டம்பர் மாதம் முதல் மாற்றப்பட இருக்கின்றன. ஜமீன் மாற்றப்பட்டிருக்கிறது; சிறுபாசனத்துறை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: எல்லோருக்கும் 10 நிமிடங்கள் தான். உங்களுக்கு நேரம் அதிகமாகிவிட்டது; சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் ஏற்கெனவே, எனக்கு சற்று அதிக நேரம் வேண்டுமென்று கேட்டு, தலைவரிடம் அனுமதி பெற்றிருக்கிறேன். ஆகவே, கொஞ்சம் அதிக நேரம் எனக்கு ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில், காந்தி கண்ட கனவை பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் செயல்படுத்தி வந்தார்கள். அந்தத் திட்டங்கள் இன்றைக்கு முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். இருக்கின்ற அதிகாரிகளுக்கு அதிலே அக்கறை இல்லை. ஒன்றியங்களுக்கு இருக்கிற அதிகாரங்களும் படிப்படியாக குறைந்துகொண்டே போகின்றன. இருக்கின்ற அதிகாரங்களை குறைக்காமல், காந்தியடிகள் கனவை நிறைவேற்றுகின்ற வகையில் ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து, தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வருகின்ற நேரத்தில் கிராம முன்னேற்றத்திற்கான திட்டங்களை அவர்கள் தீட்டி செயல்படுகின்ற அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு அரசாங்கத்தின் செயல்முறை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் என்று ஒரு பதவி இருக்கிறது. அதிலே இரண்டு பேர்கள் இருந்தார்கள். ஒருவர் திரு. ஸ்ட்ரேசி, இன்னொருவர் திரு. அப்துல்லா. திரு. அப்துல்லா இப்போது சவூதி அரேபியா தூதராகப் போய்விட்டார். அந்த இடம் இப்போது காலியாக இருக்கிறது. ஏன் அந்த இடம் இன்னும் நிரப்பப்படவில்லை என்று தெரியவில்லை. இப்போது சீஃப் செக்ரெட்டரியாக ஏழு பேர்களை அறிவித்திருக்கிறார்கள். அதைப் போல இப்போது இருக்கிற ஐ.ஜி.க்களை டைரக்டர் ஜெனரலாக மாற்றிவிடுங்கள். டி. ஜி.—1, டி.ஜி-2, டி.ஜி—3 என்று வைத்துக்கொள்ளலாம். ஒரு டி.ஜி-க்கு பதிலாக 3 டி.ஜி—க்களைப் போட்டிருக்கிறார்கள் என்ற பெருமை தொடர்ந்து வருகின்ற உங்களுடைய நடவடிக்கைக்கு அடிப்படையாக இருக்கும்.

திரு.என்.எஸ்.வி. சித்தன் அவர்கள்கூட இங்கே ஒரு பிரச்சனையை எழுப்பினார்கள். அரசாங்கம் அதற்குப் பதில் சொல்லவில்லை இப்போதாவது அதற்குப் பதில் வரும் என்று கருதுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து நம்முடைய அரசாங்கத்தில் மிக முக்கியமாக இருக்கிற அட்மினிஸ்ட்ரேஷன் டிபார்ட்மென்ட் பற்றி, தலைமைச் செயலாளர் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே ஒரு சீஃப் செக்ரெட்டரி இருந்தார். அவரை மாற்றி பிளானிங் கமிஷன் சேர்மெனாகப் போட்டிருக்கிறார்கள். அவருக்கு அடுத்து இருந்த திரு. திரவியம் அவர்களை தலைமைச் செயலாளராகப் போட்டிருக்கிறார்கள். யாரை வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. சீஃப் செக்ரெட்டரி அந்தஸ்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? (1) திரவியம் (2) கார்த்திகேயன், (3) பணிக்கர் (4) எஸ்.பி. சீனிவாசன், (5) சங்கரன், (6) நடராஜன்,( 7) இராமச்சந்திரன். இப்படி 7 பேர்கள் சீஃப் செக்ரெட்டரி அந்தஸ்தில் இருக்கிறார்கள். இந்த 7 பேர்களில் ஒருவரான திரு. இராமச்சந்திரன் அவர்கள் சிட்கோ சேர்மெனாக இருக்கிறார்கள். அந்த சிட்கோ, இன்டஸ்டிரீஸ் டிபார்ட்மென்டுக்கு கீழே வருகிறது. இன்ட்ஸ்டிரீஸ் டிபார்ட்மென்ட் தலைவர் (செயலாளர்) ஜூனியர். சிட்கோ சேர்மென் சீஃப் செக்ரட்டரி அந்தஸ்தில் இருக்கிறார். ஆனால் அந்தத் துறைக்குத் தலைவராக இருப்பவர் அவருக்கு ஜூனியர்.

அதைப்போல ஜாயின்ட் செக்ரட்டரி, ஹோம் அல்லது ஜாயின்ட் செக்ரட்டரி, பப்ளிக் — இவர்கள் டெல்லியிலே ஏதாவது ஒரு பிரச்சனை என்றால் அங்கே ஸ்பெஷல் ரெப்பிரசென்டேடிவாக இருக்கிறவருக்கு எழுதி, பாருங்கள் என்று சொல்லலாம். ஆனால் அங்கே இருக்கிறவர் சீஃப் செக்ரட்டரி அந்தஸ்தில் இருக்கிறார். சீஃப் செக்ரட்டரி அந்தஸ்தில் இருக்கிற ஸ்பெஷல் ரெப்பிரசென்டேடிவுக்கு இவர்கள் எழுதினால்



அவர் இவர்களுக்கு என்ன பதில் எழுதுவார்? இவர்களை அவர் மதிப்பாரா? இவர்கள் கடிதத்திற்கு என்ன மரியாதை இருக்கும்? இதைச் சொன்னால் பற்ற மாநிலங்களில் அப்படி இல்லையா என்று கேட்கலாம், மற்ற மாநிலங்களில் இருக்கிறது என்று சொல்வார்கள். இருக்கும் எப்படி இருக்கும் என்றால், ஒருவர் சீஃப் செக்ரெட்டரியாக நியமிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் மத்திய சர்க்காருக்குப் போய், அவர்கள் அவரை வேண்டாம் என்று சொல்லி, அவர் தமிழ்நாட்டுக்கே வருவதாக இருந்தால், அவர் இந்த சீஃப் செக்ரெட்டரியாக இருக்கிறவரைவிட சீனியர் அதிகாரியாக இருந்தால், அவருக்கு அந்த சீஃப் செக்ரெட்டரி அந்தஸ்தை கொடுப்பார்கள். அதிலே தவறு இல்லை. ஆனால் இன்றைக்கு இந்த சீஃப் செக்ரெட்டரி அந்தஸ்து 7 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதில் இருக்கிற சிக்கல் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடைசியாக நம்முடைய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் ராஜினாமாச் செய்துவிட்டார் என்பது எவ்வளவு அசிங்கமான ஒரு பிரச்சினை. ஒரு சேர்மன் அங்கே பணியாற்றக்கூடிய அலுவலர்களுக்கு கேசுவல் லீவு கொடுப்பதில்லை. அதிகாரிகள் தான் லீவு கொடுப்பது. ஆனால் சேர்மன்தான் கொடுத்தார் என்று சொல்லி ''உங்களை ஏன் நீக்கக்கூடாது அந்தப் பதவியில் இருந்து என்பதற்காக 7 நாட்களுக்குள்ளாக நீங்கள் தகவல் கொடுக்கவேண்டும்'' என்று அரசாங்கத்தினுடைய செக்ரட்டரி ஆஃப் கன்சர்ன்ட் டிப்பார்ட்மென்ட் அனுப்புகிறார் என்று சொன்னால் நடைமுறையில் இது எவ்வளவு அசிங்கமான நடவடிக்கை. அவர் செய்த தவறு என்ன? ஊழல் செய்தாரா? அப்படியானால் அவர் மீது நடவடிக்கை எடுக்கலாம். நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. கேசுவல் லீவை யாரோ ஒரு அதிகாரி கொடுத்துவிட்டார். அதற்காகத் தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்களை நீக்க வேண்டும் என்று சொன்னால் அவராகவே ராஜினாமாச் செய்கிறார்கள். ''நான் தவறே செய்யவில்லை, இதுசம்பந்தமாக முன்கூட்டியே தகவல் கொடுத்திருக்கிறேன்'' என்று சொல்லி இருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

ஆனால் இதேபோல் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டைச் சேர்ந்த அதிகாரிகளும் அங்கே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள், ஆனால் அதன் தலைவரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவருக்கு எந்த விதமான ஷோ காஸ் நோட்டீசும் அனுப்பப்படவில்லை. ஆகவே இவர் உங்களோடு ஒத்துழைக்கவில்லை என்பதற்காக இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. முடித்து விடுங்கள்.

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே சென்ற முறை நான் பேசுகின்றபோது கில்ஜி ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மற்ற சமாச்சாரங்கள் எல்லாம் இப்போது வேண்டாம். நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். அடுத்து திரு. தி. அன்பழகன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*திரு. தி. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் வைக்கப் பட்டிருக்கின்ற 1981-82 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழக அரசு செய்கின்ற எந்தக் காரியமாக இருந்தாலும் திட்டங்களாக இருந்தாலும் சமுதாயத்தின் கீழ் மட்டத்திலே இருக்கின்ற உழைப்பாளிகள் பயன் அடைகிற வகையிலேதான் அவை அமைந்திருக்கின்றன என்பது கடந்த காலங்களிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு ஒவ்வொரு துறையிலும் அது எந்தத் துறையாக இருந்தாலும் மற்றவர்கள் பார்த்து பாராட்டுகின்ற அளவுக்கும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இதுதான் தலை சிறந்தது என்று சொல்கிற அளவுக்கும் மிகச் சிறப்பாக பணிபுரிந்துகொண்டு வருவதை நாம் காண முடிகிறது. இந்த ஆண்டு துணை மதிப்பீட்டில் 155.38 கோடி ரூபாய்க்கு அனுமதி கோரி இருப்பதே இந்த அரிய திட்டங்களுக்கு நாம் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை விளக்கும் என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி இந்த அரசு சிறப்பான பணியைச் செய்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

இங்கே குறிப்பிட்டுள்ளவாறு தன்னிறைவுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி ஒரு கட்டத்திலே வேலைகள் பூர்த்தி அடைந்திருக்கின்றன. இரண்டாவது கட்டமாக 150 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு, அதிலும் குறிப்பாக குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 30 கோடி ரூபாயும் ஏனைய திட்டங்களுக்கு 59 கோடி ரூபாயும் இந்த துணை நிதிநிலையிலே ஒதுக்கி அனுமதி கேட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், தன்னிறைவுத் திட்டம் என்பது இந்தியாவிலேயே தன்னிகரில்லாத் திட்டமாக தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களிலேயெல்லாம் அவை இல்லாத நிலைமையிலே தமிழகத்திலே இந்த திட்டம் கிராமப்புறங்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கிற ஒரு முன்னோடித் திட்டமாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லவேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர் பிரச்னை என்பது பயங்கரமான சூழ்நிலையிலே உருவெடுத்திருந்தாலும் கூட, அந்தப் பிரச்னையை தீர்த்து வைப்பதற்கான சிறப்பான பணிகளை அரசு நாடு முழுவதும் மேற்கொண்டு நிறைவேற்றி வருகிறது. அதேபோல வறட்சிப் பணிகளைப் பொறுத்தவரையில், பொதுமக்கள் பாதிக்கப்படாத அளவில், வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால நடவடிக்கையைப் போல அரிய பணிகளை தமிழக அரசு எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்டியே ஆகவேண்டும். அந்தப் பணிகளை முறைப்படுத்துகிற போதுகூட, இந்த நாட்டு மக்களுக்கு தேவையான, கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளை முதலில் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளபடியே தம் பணிகளை இந்த அரசு செய்து வருகிறது.



பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். அதாவது இந்த வறட்சிப் பணிகளிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக காண்டிராக்ட்கள் எடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஒன்றை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு வறட்சிப் பணிகளிலே காண்டிராக்ட் எடுத்துச் செய்து கொண்டிருப்பவர்கள் மற்ற எல்லா கட்சிகளையும் விட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான் மிக அதிகமானவர்கள் என்பதை அவர்கள் மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிரூபிக்கவும் முடியும். அவர்கள் தான் இன்றைக்கு அதிகமான அளவில் காண்டிராக்ட் எடுக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இல்லை என்பதை என்னால் நிரூபிக்க முடியும்.

அதேபோல அவர்கள் இன்றைக்கு நிர்வாகத்திலேயும் தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அதிகாரியை மாறுதல் செய்வது என்பது இந்த நாட்டிலே நடக்காத ஒரு காரியம் அல்ல. காங்கிரஸ் கால கட்டத்தில் இருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயிருந்து, இன்றைய காலக் கட்டம் வரை அது வெகு சாதாரணமான ஒன்றுதான். ஆனால் திருப்பத்தூர் பகுதியிலே ஒரு போலீஸ் அதிகாரியை மாற்றியதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அந்த நகர திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இந்த அரசுக்கு கண்டனம் தெரிவித்து எச்சரிக்கை செய்து நோட்டீஸ் வெளியிடுகிறார்கள். அவருடைய மாற்றத்தைத் திரும்பப்பெறாவிட்டால் ஹர்த்தால் நடைபெறும் என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இம்மாதிரி நிர்வாக விஷயங்களில் தலையிடுபவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரே தவிர, மற்றவர்கள் இல்லை என்பதை அவர்கள் உணரவேண்டும். (குறுக்கீடு)

அதற்கு மேலாக ஒரு படி அதிகமாகவே போய் அதிகாரிகளை அரசியல் தேவைகளுக்காக மாற்றுகிற நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். வேண்டும் என்றால், அதற்கான ஆதாரங்களை

துணைத் தலைவர் அவர்களுக்கு பிறகு, நான் அளிக்கத் தயாராக இருக்கிறேன். இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அந்த அதிகாரிககு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். கட்சியின் சார்பாக– ஒரு பாராட்டு அவருக்கு. இப்படிப்பட்ட அதிகாரி ஒருவரை உருவாக்கிய கலைஞருக்கு நன்றி என்ற நோட்டீஸும் அடித்திருக்கிறார்கள். (கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரி ஒருவரை மாற்றியது பற்றி அனேகமாக பல கட்சிகளின் சார்பிலே நோட்டீஸ் அடிக்கப்பட்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் அப்படி அடித்ததாக சொல்லப்படுகிறது. அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நோட்டீஸ் அச்சடித்தவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, கட்சியிலிருந்து அவரை விலக்கி வைத்திருக்கிறோம். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் அப்படிப்பட்ட நோட்டீஸ் அடிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ன நடவடிக்கை ய எடுத்திருக்கிறது என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன்: அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக இந்த அரசாங்கத்தைத் தாக்கியோ அல்லது போட்ட மாறுதலை திரும்பப் பெறவேண்டும் என்று அரசை எச்சரிக்கை செய்தோ யாரும் நிர்வாகத்தில் தலையிட வில்லையென்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்வதெல்லாம் நிர்வாகத்தில் நீங்கள் தலையிடுகிறீர்கள். நாங்கள் தலையிடுவதில்லை. நாங்கள் நிர்வாகத்தில் தலையிடாமல் மிக அடக்கமாக, மரியாதையாக நடந்து கொண்டிருக்கிறோம். ஆக, இந்த அரசு நலல பல அரிய காரியங்களை செய்திருக்கிறது.

பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த இந்த அரசு தக்காவிக் கடன்களாக ஐந்து கோடி ரூபாய் அளித்திருக்கிறது. ஏற்கனவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்த அரசும் செய்யாத அளவிற்கு இந்த அரசு செய்திருக்கிறது. மேலும் ஒரு படி அதிகமாகச் சென்று விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உறுதுணையாகவும் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட பல அரிய காரியங்களைச் சாதித்திருக்கிற இந்த அரசுக்கும் இந்த துணை மானியக் கோரிக்கையை சமர்ப்பித்திருக்கி நாவலர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. ப. சுந்தரம்: திருப்பத்தூரில் ஒரு அதிகாரியை திராவிட முன்னேற்றக் கழகம் தலையிட்டு அவரை மாற்றக்கூடாது என்று சொன்னதாகச் சட்டமன்ற உறுப்பினர் சொன்னார்கள். அவர்கள் நல்லமுறையில் சேவை செய்தார்கள் என்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செய்கிற செயலைக் கண்டித்



தார்கள் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல அனைத்துக் கட்சிகளும் வர்த்தகர் சங்கம் முதற்கொண்டு, பல சரக்கு மளிகை நடத்துகிற வியாபாரிகளும் அவர்களுக்கு ஆதரவாக நோட்டீஸ் அடித்தார்களே தவிர திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் அடிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு அன்பழகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் நிர்வாகத்தில் எந்தவிதமான தலையீடும் செய்யவில்லை என்றார்கள். நிர்வாகத்தில் ஒரு அதிகாரிய மாற்றிய ஒரே ஒரு செயலுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக இன்னாரை, குறிப்பாக டி. எஸ் பி. சண்முகநாதனை மாற்றியதை பகிரங்கமாக கண்டிக்கிறோம் என்று வட்டச் செயலாளர் பெயர் போட்டு திராவிட முன்னேற்றக் கழக சார்பாக நோட்டீஸ் போடப்பட்டது. அதற்காக பொதுமக்கள் அனைவரின் ஆதரவோடு ஹர்த்தால் நடத்தக்கூடிய அளவிற்கு இந்த அரசை, தமிழக அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு முதல் அமைச்சர் அவர்கள் வேலூரில் ஒரு கூட்டத்தில் அதைப் பற்றி சொன்னார்கள். சண்முகநாதன் பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக போடப்பட்ட நோட்டீஸ் பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே ஒரு வாசகம் கூட இருந்தது என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். டி. எஸ். பி. சண்முகநாதனை உருவாக்கிய மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம் என்ற வாசகம் இருந்தது. நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பகிரங்கமாக தலையிடுகிறார்கள் என்றுதான் உறுப்பினர் அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள், இதற்கு அவர்கள் கட்டம் கட்டி முரசொலியில் அவர்களை நீக்கியிருப்பதாகச் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் எச்சரித்ததற்குப் பிறகுதான் இந்தச் செய்தி வெளியாகியிருக்கிறது.

*டாக்டர். மு. கருணாநிதி: என்னுடைய பெயர் இழுக்கப்பட்டதன் காரணமாக நான் விளக்கம் அளிக்கவேண்டியவனாக இருக்கிறேன், வட ஆற்காடு மாவட்டத்தில், திருப்பத்தூரில் ஒரு போலீஸ் அதிகாரி மாற்றப்பட்டது சம்பந்தமாக அங்குள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், வர்த்தகச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கூட என்னை வந்து சந்தித்து எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் அங்கே அந்த அதிகாரி இருப்பது மிகுந்த நலன் பயக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்று முறையிட்டுக் கொண்டபோது நான் இதுபோன்ற காரியங்களில் தலையிடுவது முறையல்ல என்று அவர்களுக்கு அறிவுரை கூறி அப்போதே அனுப்பி வைத்து விட்டேன். ஆனால் பல சங்கங்களின் சார்பாக துண்டு அறிக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. திருப்பத்தூர் நகர ஜனதாக் கட்சி சார்பில் ஒரு துண்டறிக்கை வெளியிட்டு 8–8–81 ம் தேதி நகரம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டும், அதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

திருப்பத்தூரைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஜி. மணி என்ற உறுப்பினர், அவரது எண் 356758. அவரும் சண்முகநாதனை மாற்றக்கூடாது, அவரை அங்கேயே திரும்ப வைக்கவேண்டும் என்று நோட்டீஸ் அடித்துள்ளார்கள். அதைப்போலவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் முனி செட்டி என்பவர் ஒரு நோட்டீஸ் வெளியிட்டார். அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பிறகு, அதை நான் புறக்கணிக்காமல், உடனடியாக பொதுச் செயலாளர் அவர்களோடு கலந்து நேற்றையதினம் அவரைக் கட்சியிலே இருந்து நாங்கள் விலக்கி வைத்திருக்கிறோம். இதைப்போல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுபபினர்களும் செய்யப்படுவார்களா என்பதை நான் உங்களிடத்திலே இருந்து தெரிந்து கொள்ள முடியாது; ஆனால் இந்த விவரங்களைச் சொன்ன நண்பர்களுக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[நண்பகல் 12.00]

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானிய கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில முக்கியமான கருத்துக்களை தெரிவிக்க முன்வருகிறேன். ஏராளமான விஷயங்களை நான் பேச வேண்டியுள்ளது. ஆனால் நேரமில்லாத நெருக்கடியின் மத்தியிலே உள்ளோம். தமிழக அரசினுடைய தலைநகர் மாற்றுவது என்ற ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தை திருச்சியில் பேசுகின்றபோது; திருச்சிக்கும், தஞ்சைக்கும் மத்தியில் இருக்கும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு தலைநகர் அமைக்கப்படும் என்ற சொன்ன செய்திகள் வந்துள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட மட்டில், இந்தத் தலைநகரை மாற்றும் பிரச்னை சரியானது அல்ல என்று கருதுகிறது. இப்போது இருக்கின்ற தலைநகர், சென்னையே எல்லாவற்றுக்கும் சரியானது. சுமார் 200 ஆண்டு காலமாக தமிழக மக்கள் ஏற்றுக்கொண்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடம். எல்லாவிதமான போக்குவரத்தும், செய்தித் தொடர்பும் குவிந்திருக்கும்படியான ஒரு கேந்திரமான இடம் சென்னை. இப்படிப்பட்ட பெரிய நகரத்திலே இருந்து, இந்தத் தலைநகரை மாற்றி, வேறு ஒரு இடத்திலே அமைப்பது என்று சொன்னால், அதற்கு நூற்றுக்கணக்காக மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவாகும் என்பதோடு, அப்படிச் செய்வதற்கு எத்தனையோ காலமாகும். அப்படி வரும்போது, இன்றைக்கு இருக்கும்படியான பணக் கஷ்டத்தில், பண நெருக்கடி நிலைமையில், இப்படி தலைநகரை மாற்றுவது என்பது சரியாக இருக்காது என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. எல்லாவற்றிற்கும் பொருத்தமாக உள்ள சென்னை நகரமே தலைநகராக இருக்க வேண்டும் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.



அடுத்து, ஒரு முக்கியமான விஷயம். நமது தமிழ்நாட்டிலே பல தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் பலதரப்பட்ட தியாகங்களைச் செய்து, நாட்டின் விடுதலைப் போராட்டங்களிலே பங்கெடுத்து, நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தலைவர்களுக்கு, காலஞ்சென்ற அந்த நல்லவர்களுக்கு மரியாதை கொடுக்கின்ற முறையில் அவர்களது உருவச் சிலைகளை நிறுவுவதோடு, அவர்களுடைய பெயரால் சில அரசு ஸ்தாபனங்களுக்கும் பெயர்களை சூட்டுவது வழக்கம். அந்தமுறையில் தோழர் ஜீவா அவர்கள் தமிழகத்திலேயும், இந்தியாவிலும் தொண்டாற்றி, இந்திய விடுதலைக்காக சிறை சென்றவர்கள்; அவர் விடுதலை இயக்கத்திலே இருந்ததற்காக நாடு கடத்தப்பட்டு, ஏராளமான துன்பங்களை அனுபவித்தவர். இந்த நாட்டில் சோஷலிச அமைப்பு ஏற்பட வேண்டுமென்பதற்காக பாடுபட்ட ஒரு மிகப் பெரிய தியாக புருஷர் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவருடைய பெயரால், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து பெயர் சூட்டியதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜனங்கள் மத்தியிலே பெரிய எதிர்ப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக இன்றைக்கு அடக்குமுறைகளும், போராட்டங்களும் நடக்கின்றன. அதேபோல், இன்னொரு தலைவர் பெயர் சொல்லப்பட்டது. அந்த தலைவரும் தேசிய இயக்கத்தில் மிகவும் பாடுபட்ட தலைவர் என்று சொன்னால், அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

இப்படிப்பட்ட தலைவனுடைய நிலைமையை எடை போட்டுப்பார்த்து அதன் பேரில் கருத்து வேற்றுமைகளும், வித்தியாசங்களும் உருவாகி மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாமல், அரசு முதலிலேயே அப்படி உத்தரவிட்ட காரியத்தில் இந்த மாதிரி விரும்பத்தகாத நிலைமை ஏற்படாதபடி அரசு தலையிட்டு தகுந்த சமரச நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்கவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து முக்கியமான விஷயம், உழைப்பாளர் யூனியன் தலைவர், தோழர் சி. எஸ். கோவிந்தராஜன் அவர்கள் தாக்கப்பட்டது பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேசும்போது கூடக் குறிப்பிட்டார்கள். அவரைத் தாக்கியது சாதாரண விஷயம் அல்ல. முன்கூட்டி சதியிடப்பெற்ற தாக்குதல்; கொலை செய்வதற்காகவே திட்டமிட்டுச் செய்யப்பட்டது. இரண்டு பேர் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு ஒருவர் கத்தியால் குத்தியிருக்கிறார். அவருக்குச் சக்தி இருந்த காரணத்தால் இரண்டு பேரையும் வீழ்த்திவிட்டு தப்பித்தார். இல்லாவிட்டால் உயிர் துறந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. இப்படி தொழிற்சங்கத் தலைவரை சதி காரணமாக இப்படி தாக்குதல் நடத்தி கொலை செய்வது என்ற நடவடிக்கைகளில் சமூக விரோதிகள் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு உறுதியாக நடவடிக்கைகள் அரசு பக்கத்

திலிருந்து, காவல் துறை பக்கத்தில் இருந்து தேவைப்படுகிறது. தோழர் கோவிந்தராஜன் தலைமை தாங்கும் சங்கத்தில் இதற்கு முன்னாலும் பலாத்காரமான தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் பெயர்கள் கொடுக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தொழிற்சங்கத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். சென்னை நகரத்தில் முன்னாலே ஒரு பயங்கரமான நிலை ஏற்பட்டது. முக்கியமான தலைவர் வி. பி. சிந்தன் அவர்கள் குத்தப்பட்டு அந்தக் கேசிலே துப்பு துலக்கப்படாமல் அப்படியே போய்விட்டது போலீஸ் இலாகாவின் திறமையைக் காட்டுவதாக இல்லை. இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது. அரசு தொழிற்சங்கத் தலைவர்கள் உயிருக்குத் தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். குற்றவாளிகளைக் கட்டாயமாகக் கண்டுபிடித்து தகுந்த தண்டனை கொடுத்து இந்தச் சம்பவங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். கடலூரில் இருக்கும்படியான மத்திய சிறையில் தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. பல பேர் காயமடைந்திருக்கிறார்கள். அந்தச் சிறை சூப்பரின்டென்டென்ட் வித்தியாசாகர் என்று நினைக்கிறேன். இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பில் சென்னை நகர மத்திய சிறையில் எப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்தவர் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தடியடி நடந்த பிறகு 25 வயதான வாலிபன் இறந்துள்ளான். இதுபற்றி சுத்தமான நீதி விசாரணை நடத்த வேண்டும். எந்த அதிகாரியின் கோபமும் இந்த மாதிரி சம்பவங்கள் நடப்பதற்கு அனுமதிக்கப்படக் கூடாது, ஒரு ஜனநாயக ஆட்சியில் என்று சொல்ல விரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர் போராட்டத்தில் அரசு சரியான கண்ணோட்டத்தோடு பார்த்து முடித்து வைக்கவேண்டுமென்பது மார்க்சிஸ்ட் கட்சியின் கோரிக்கை. கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, ராமகிருஷ்ணா வித்தியாலயம், பு.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி ஆகியவை தனியார் துறை கல்லூரிகள். தனியார் துறை கல்லூரிக்கு இருக்கும்படியான சட்டத்தினை மீறி அங்கே கொடுமைகள் நடந்திருக்கின்றன. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆசிரியர்கள் 20, 30 பேர் சிறையில் இருக்கிறார்கள். இப்பொழுதே கூட நியாயமான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வுக்குக் கொண்டு வரவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ., பி. எஸ்சி வகுப்புகளை வேறு இடத்திற்குக் கொண்டு செல்லுவது போல் ஏற்பாடுகள் நடக்கின்றன. இதன் காரணமாக அங்கே நெருக்கடி ஏற்பட்டு 300 ஆசிரியர்கள் நேற்றும் இன்றும் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கும் நிலை இருக்கிறது. இந்த நிலை தொடராமல் பின்னால் ம நில மட்டத்தில் போராட்டமாக மாறாமல் அரசு தரப்பில் கோபதாபங்கள் இல்லாமல் பிரச்சினையைப் பேசி முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஏற்கெனவே 23-8-81-ல் ஆம்பூரில் மூன்று நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதன் மீது நீதி விசாரணை வேண்டும். ஏற்கெனவே நக்சலைட்டுகள் கொல்லப்பட்டது அநியாயமாக நடந்த கொலைகள் என்ற புகார் இருக்கிறது. போலீஸ் நடவடிக்கை திருப்திகரமான நடவடிக்கையாக இல்லை. நக்சலைட்டுகள் தவறு செய்வார்களானால் அவர்கள் செய்த குற்றங்களை மன்னித்து விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களைக் கைது செய்து சட்டத்தின் மூலமாக விசாரித்து குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம். நாயக்கனேரி மலையில் போலீசாருக்கும் மூன்று நக்சலைட்டுகளுக்கும் ஏற்பட்ட சண்டையில் போலீசார் காயமுற்று 3 நக்சலைட்டுகள் இறந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் 15 அடி தூரத்தில் ஐந்தடி வித்தியாசத்தில் மூன்று பிரேதங்கள் கிடந்தன. எங்கள் கட்சி தோழர்கள் நேரில் போய்ப் பார்த்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10.]

இந்த மாதிரியாக இருக்கக்கூடிய கொடுமை, போலீஸ் யாரையும் கொன்றுவிட்டு நக்ஸலைட்டு என்று புள்ளிபோட்டு விட்டால் பிரச்சினை தீரும் என்ற முறை தொடரக் கூடாது. ஆகவே தகுந்த முறையிலே இதுகுறித்து விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூடலூர் நில வெளியேற்றம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாதம் 3, 4 ஆம் தேதிகளில் நானும் அகில இந்திய கிஸான் சபா தலைவர் சாதுன்யமாஸ் அவர்களும் அந்த இடங்களுக்குப் போய்ப் பார்த்தோம். அங்கே இருக்கின்ற அரசியல் கட்சிக்காரர்கள் எல்லாம் கூட்டம்கூட்டி அந்த நில வெளியேற்றம் சரியல்ல என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்றன. 1,2500 ஏக்கர் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை- இந்தச் சட்டமன்றத்திலே ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தின் கீழே கொண்டுவந்து இருந்தாலும்கூட—ஆக்கிரமித்திருக்கிறார்கள். அரசு நிலம் என்ற முறையிலே 4,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. தர்மபுரியிலே நக்ஸலைட்டுகளைப் பிடிப்பதற்காக அமர்த்தப்பட்டிருக்கின்ற போலீஸ் சூப்பிரன்டென்டென்ட் தான் இந்த நிலவெளியேற்றத்திற்கும் ஆதரவான முறையிலே அவர்களை வெளியேற்றியே தீரவேண்டுமென்ற முறையிலே அடக்குமுறைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அங்கே இப்போது மழை பெய்கின்ற நேரத்திலே காப்பி, தேயிலை, இஞ்சி குறுமிளகு போன்ற பணப் பயிர்களை வேறோடு பிடுங்கி எறியக் கூடிய நிலைமையைச் செய்திருக்கிறார்கள். அந்த இடத்திலே காட்டு இலாகா மரங்களை நடக்கூடிய நிலைமை இருக்கிறது. மழை பெய்யக்கூடிய நேரத்திலே இப்படிச் செய்கிறீர்களே என்று கேட்டால் மழை பெய்கிற நேரத்திலேதான் பயிர்செய்ய வேண்டும், அப்போதுதான் மரம் நிற்கும் என்று சொல்கிறார்கள். அங்கே சர்வ கட்சி கமிட்டி கூடி அவர்கள் ஏற்கெனவே

விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் 5 ஆம் தேதி வெளி
யிட்டிருக்கின்ற அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களுக்கு அனுப்பியிருக்கிறேன். அந்த வெளியேற்றம் தற்போது
தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றதாக அறிவிக்கப்
பட்டு இருக்கிறது. வரவேற்கிறோம், ஆனால் அதனால் மட்டும்
பிரச்சினை தீர்ந்துவிடாது. 1978 ஆம் ஆண்டு வரையில் அந்த
நிலங்களிலே தொடர்ந்து இருந்து விவசாயம் செய்தவர்களுக்கு
அந்த நிலங்களைக் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு வந்தவர்
களுக்கு வேறு புலிடம் ஏற்பாடு செய்து கொடுத்து அங்கே
செல்வதற்கு பேச்சுவார்த்தைகள் மூலமாக அரசு நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அங்கே உள்ள அரசியல் கட்சிக்காரர்கள் ஜூலை 25 ஆம்
தேதி நடத்திய அர்த்தாலின்போது, பந்தின்போது சர்வ
கட்சிகளும் அதிலே கலந்து கொண்டன. சி.பி.எம்., சி.பி.ஐ.,
காங்கிரஸ். (யு) ஜனதா, முஸ்லீம் லீக் உள்பட அனைத்துக்
கட்சிகளும் சேர்ந்து நடத்திய பந்திலே அந்த ஆக்ஷன் கமிட்டி
யினரை கைது செய்து சிறையிலே அடைத்து நன்றாக
அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பஸ்ஸிலே
கொண்டுபோனபோது இருக்கையிலே அமரவிடாமல் கீழே
உட்காரச் செய்து அடித்து இருக்கிறார்கள். அவர்களை 307-வது
செக்ஷனிலே போட்டு இருக்கிறார்கள். ஜாமீன் இல்லை என்று
சொல்லப்படுகிறது. இன்றைக்கு அவர்கள் உதகையிலே
கண்டிஷன் பெயிலிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த
மாதிரி அக்கிரமங்கள் எல்லாம் அங்கே நடைபெற்று
இருக்கின்றன. இதற்கெல்லாம் அங்கே இருக்கின்ற டி.எஸ்.பி.
பாண்டியன் பிரதானமான ஆளாக இருந்திருக்கிறார். நான்
அவரிடம் பேசியபோது ஒரு நிமிடம் உட்கார்ந்து பேசுவதற்கு
இடம் கொடுக்காமல் போய்விட்டார். 15 ஆம் தேதியன்று நான்
முதலமைச்சர் அவர்களுக்கு இந்த கொடிய அடக்குமுறையைப்
பற்றி எப்படி செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி மெமோ
ரண்டம் கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்ட காரியங்களைத்
தடுக்கவேண்டும். அரசியல் கட்சிக்காரர்களுக்கு இழைக்கப்படுகிற
அநீதி, கொடுமை, துயரங்கள் தடுக்கப்படுதல் வேண்டும்.
தேவாலா சோளம்பாடி, மச்சிகொல்லி போன்ற இடங்களிலே
நிலவெளியேற்றம் கிடையாது. அங்கே பந்து நடந்தது என்பதற்
காக அரசியல் கட்சிக்காரர்களை அடித்திருக்கிறார்கள். அந்த
டி.எஸ்.பி. ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு தொடர்புடையவர்
என்று கேள்விப்படுகிறேன். ஆகவே அதைப்பற்றி விசாரிக்க
வேண்டும்.

சென்னையிலே பால்வள நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள்
பல மாதங்களாக வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அவர்
களோடு பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு வேலை கொடுக்க
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.





அடுத்து குடிநீர் வடிகால் வாரியத்தைப்பற்றி இங்கே ஏற்கெனவே பேசப்பட்டது. குழாய் கிணறுகள், பம்புகள், மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு அவை சரிவர வேலை செய்ய வில்லை என்ற நிலைமை இருக்கிறது. அவைகள் வேலை செய்வ தில்லை; அதனால் தண்ணீர் கிடைக்கவில்லை; ஆனால் பணம் முதலீடாகிறது. இதில் ஏதோ கோளாறு இருக்கிறது. அது டெக்னிக்கல் சைடில் இருக்கிறதா அல்லது நிர்வாக சைடில் இருக்கிறதா என்பதை அரசு கவனித்துப்பார்த்து, அப்படிப்பட்ட காரியங்களை ஒழுங்காக நடத்தி சீரான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகரத் தினுடைய கவுன்சில் கூட்டத்திலே கடுமையான விவாதம் நடந்திருக்கிறது. எல்லாயிடங்களிலும் இப்படிப்பட்ட அனுபவங் கள் இருக்கின்றன. எனவே, குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கிச் செலவழிக்கப்படுகின்ற பணத்திற்கு வெற்றி கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். நடராஜகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றி காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளிலுள்ள மொத்தத் தொகை ரூபாய் 155.38 கோடி ஆகும். இதிலே பெரும்பான்மை யான பணம் வறட்சி நிவாரணப் பணிகளுக்கும், வட்டாரங் களிலே தன்னிறைவுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குமாகச் செயல்பட இருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படும் பணம் நிலநேரங்களில் உபயோகமில்லாத வகையில் செலவு செய்யப்படுகின்ற வகையில் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக, வறட்சிப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டு மென்று அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும்கூட, அந்தச் சில ஒப்பந்தக்காரர்கள் தங்கள் சொந்த இலாபத்திற்காக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குளங்களை ஆழப்படுத்த வேண்டுமென்ற திட்டம் இருந்தாலும் கரையின் அருகிலேயே மண்ணை எடுத்துப்போட்டு விட்டு, கரையை அகலப்படுத்துவது போன்ற ஒரு காட்சியைத் தோற்றுவித்து ஏராளமான பணத்தைத் தங்கள் சொந்த நலன்களுக்காக எடுக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, வறட்சிப் பணிகளைச் செய்யும்பொழுது அந்தப் பணியானது, குளங்களை ஆழப்படுத்துவது இணைப்புச் சாலைகளைப் போடுவது போன்று அமைந்து அவைகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டால் மிகவும் உபயோககரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கிராமப்புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டம் என்பது சிறப்பாகச் செயல்படுவதாகச் சொல்லப்படு

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 ஆகஸ்ட் 28

இறது. 'National Rural Employment Programme' என்பது
வரவேற்கப்படக்கூடிய திட்டம்தான். ஆனால் அதிலே வேலை
பார்ப்பவர்களுக்கு இரண்டு கிலோ அரிசி, ஒரு கிலோ அரிசிக்
குண்டான பணம் ஆகியவை கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்
கள். இன்றைக்குக் கிட்டத்தட்ட அது ஆறு ரூபாய் மதிப்பிற்கு
வரும். ஆனால் சில கிராமங்களில் ஒரு நாளைக்கு பத்து
ரூபாய் கூலி கொடுத்தாலும் வேலைக்கு ஆட்கள் கிடைக்காத
சூழ்நிலை இருக்கும் பொழுது இரண்டு கிலோ அரிசி — அதுவும்
ரேஷன் அரிசி என்றால் எத்தனைபேர் வேலைக்கு வருவார்கள்
என்பதைத் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். எனவே, கிராமப்புற வேலைவாய்ப்பு
தேசியத்திட்டம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால்,
அரிசிக்குப்பதிலாக பணமாகப் கொடுத்து அந்த வேலைகளை
வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, இன்றைக்கு 150 இடங்களிலே தன்னிறைவுத்
திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டம்
தமிழ்நாட்டில் செயல் படுத்தப்படுவது குறித்து நாங்கள் உண்மை
யிலேயே பெருமைப்படுகிறோம். தன்னிறைவுத் திட்டம் ஒரு
சிறப்பான திட்டம்தான். ஆனால், இன்றைக்குத் தன்னிறைவுத்
திட்டம் எந்த முறையிலே செயல்படுகிறது என்பதையும் நாம்
எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போலச் செலவு செய்கிறார்
களே தவிர உருப்படியான நியாயமான காரியங்கள் செய்யப்
படவில்லை. அவசரம் அவசரமாக வேலைகளைச் செய்வதால்
ரோடுகள் போடுவதாகச் சொல்லி சிறிது மண்ணை அள்ளிப்
போட்டு விட்டு சாலைகள் அமைக்க என்று பணத்தை எடுத்துக்
கொள்வதாக நமக்குச் செய்திகள் வருகின்றன எனவே, இப்படிப்
பட்ட தன்னிறைவுத் திட்டங்கள், வறட்சி நிவாரணப் பணிகள்
ஆகியவைகள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா,
பணம் முழுமையாகவும், ஒழுங்காகவும் செலவு செய்யப்பட்டி
ருக்கிறதா என்பதை கண்டு ஆராய்ந்தறிவதற்காக சர்வ கட்சியும்
கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை
நியமித்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அந்தந்தப் பகுதிகளிலே
நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகள், தன்னிறைவுத் திட்ட
வேலைகள் ஆகியவை சரியாகச் செய்யப்பட்டிருக்கிறதா
என்பதைப் போய் பார்ப்பதற்காக அப்படி ஒரு குழுவை அமைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, குடித்தண்ணீரைப் பொறுத்தவரையில் மிக
வும் தட்டுப்பாடான நிலைமையிருக்கிறது. எனக்கு முன்னால்
பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதைப்பற்றிச் சிறப்பாகச்
சொன்னார்கள். குடிநீர் வடிகால் வாரியம் இன்றைக்குச் சிறப்
பாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை நானும் சொல்
லிக்கொள்ள விரும்புகிறேன்.



1981 ஆகஸ்ட் 28] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

[பிற்பகல் 12.20]

இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணிகளிலே 30 கோடி
ரூபாய் குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது
பாராட்டப்படக்கூடிய செய்திதான் என்றாலும் இன்றைக்கு
அது சரியாகச் செயல்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.
எல்லா கிராமங்களுக்கும் குடித்தண்ணீர் வசதி கிடைத்து
விட்டதா என்றால், எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர்
கிடைக்கவில்லையென்ற குறையினை சொல்ல வேண்டியதாக
இருக்கிறது. அதிலும் இந்த குடிநீர் வடிகால் வாரியத் தலைமை
அலுவலகம் எங்கோ ஒரு மாவட்டத் தலைநகரிலே இருக்கிறது.
ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு கிராமத்திலே உள்ள பம்ப் சரி
யாக வேலை செய்யவில்லை என்றாலுங்கூட, அதை சொல்வதற்
காக தலைநகரத்திலே உள்ள அந்த குடிநீர் வடிகால் வாரியப்
பொறியாளரைப் பார்த்து சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்
கள் அக்கிராமத்திற்கு வந்து யாற்றுவதற்குள் பல மாதங்கள்
ஆகிவிடுகின்றன. அதற்குப் பதிலாக, குடிநீர் வடிகால் வாரிய
அலுவலகத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலேயே வைத்தால்
தான், பக்கத்து கிராமங்களில் சில குறைகள் இருந்தாலுங்கூட,
அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய, நேரிலே சென்று சொல்ல
வசதியாக இருக்கும். குடிநீர்ப் பிரச்னையும் நல்லமுறையிலே
கூடிய விரைவிலே தீர்க்கப்படும் என்ற காரணத்தாலே, குடிநீர்
வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையிலே, அதை ஊராட்சி
ஒன்றியங்களிடமே மறுபடியும் ஒப்படைக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்குத் தமிழ்நாடு சிறப்புக் காவற்படை
7–வது அணியினருக்கு எவர்சில்வர் கூவளையும் எவர்சில்வர்
தட்டுகளும் வழங்குவதற்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்
கள், பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே
நேரத்தில், காவல் துறை அதிகாரிகளுக்கு இதுவரை மலிவு
விலையிலே வழங்கப்பட்ட உணவுப்பொருள்களை எல்லாம், இப்
பொழுது படிப்படியாக குறைத்து வருவதாக செய்திகள் வரு
கின்றன. அவர்களுக்கு துவரம் பருப்பு மட்டும் தான் குறைக்
காமல் கொடுக்கிறார்கள் என்ற குறைப்பாட்டைச் சொல்கிறார்
கள் மற்றையபடி, அரிசி, சர்க்கரை போன்றவைகள் இன்றைக்கு
மிகவும் குறைந்த அளவே கொடுக்கிறார்கள் என்ற குறைப்
பாட்டைச் சொல்கிறார்கள். அந்தக் குறைப்பாட்டை நீக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினருக்கு இப்படியெல்லாம் பல சலுகைகள்
வழங்க வேண்டுமென்று நாம் கேட்கின்ற அதே நேரத்திலே,
சில அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைச் சுட்டிக் காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். காக்கி உடை அணிந்து விட்டாலே,
அவர்கள் இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தைக் காப்பதற்குமட்டு
மல்ல, இந்த நாட்டு மக்களுடைய உடைமைகளையும். சட்டத்தை
யும், அமைதியையும் பாதுகாக்க வேண்டியவர்கள்தான். சொந்த

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 ஆகஸ்ட் 28

லாபத்திற்காக அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும்போது அது மன்னிக்க முடியாத குற்றமாகும். இன்றைக்குச் சில அதிகாரிகள் தங்களுக்கு வேண்டாதவர்களைப் பழிவாங்க வேண்டுமென்பதற்காகக் கொலைக் குற்றம் சாட்டப்படுவோர்களுக்கோ அல்லது தப்பி விடுவார்கள் என்று சொல்லக்கூடிய கிரிமினல் குற்றவாளிகளுக்கோ போடக்கூடிய கைவிலங்குகளைப் போடுகின்ற காட்சிகளை நாம் பார்க்கின்றோம். அதிலும் தங்களுக்கு வேண்டாதவர்களுக்கு அந்த அதிகாரிகள் செய்கின்ற கொடுமையைத் தடுத்து நிறுத்தக்கூடிய கடமை இன்றைய அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று இந்த மன்றத்திலே ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவப்படத்தை வைக்க வேண்டுமென்று உறுப்பினர் ஒருவர் சொன்னார். காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இங்கே ஒரு தூண் காலியாக இருக்கிறது. அதிலே வேறு தலைவர்கள் படம் வைப்பதற்கு முன்பாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவப்படத்தை வைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

அதே போன்று இன்றைக்கு யார், யார் பெயரிலோ போக்குவரத்துக் கழகங்கள் வைக்கும்போது, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலுங்கூட நாங்கள் சொன்னோம். பெருந்தலைவர் காமராஜர் 10 ஆண்டுகள் இந்த நாட்டிலே முதலமைச்சராக இருந்தார். எப்படி ஒரு அமைச்சர் வாழவேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்திருக்கிறார். தான் சாகின்ற நேரத்திலே கூட, தனக்கென்று ஒரு இம்மி அளவு கூட சொத்து சேர்க்காது, 10 ஆண்டுகாலம் முதலமைச்சராக இருந்து, பொற்காலமாக மாற்றிய அந்தத் தலைவருடைய பெயரை ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதையும் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரைக் கேட்டு, இந்த கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு சட்டப் பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற துணை மதிப்பீடுகள் மீது நடக்கின்ற விவாதத்திலே கலந்து கொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நேரத்திலே என்னுடைய தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் சார்பிலே ஓரிரு கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். பாதிக்கப்பட்ட பகுதிகளில் வறட்சி நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில வேலைகள் மிகச் சிறப்பாகக் கூட நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இருக்கிற அரசினுடைய திட்டப்படி செப்டம்பர் மாத முடிவிற்குள் வேலைகளை முடித்தாக வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒருவேளை செப்டம்பர் 30 ஆம் தேதிக்குப் பின்னாலே அது நிறுத்தப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, இராமநாதபுரம் போன்ற வறட்சியால்



1981 ஆகஸ்டு 28] [திரு. க. பாரமலை]

மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அதற்கு ஒரு கால வரையறை நிர்ணயிக்காமல், தொடர்ந்து வறட்சி நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்துகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1979 ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட பெரிய கண்மாய்கள் இன்னும் கூட சிலவற்றை அடைக்க முடியாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம் புல்டோசர் என்று சொல்லக்கூடிய பெரிய இயந்திரங்கள் தேவை என்ற காரணத்தால்தான். அவைகளை இப்போது முழுமையாக மழைக்காலத்திற்குமுன்பாக அடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு கொண்ட கட்டனூர் திருப்பாசேத்தி போன்ற கண்மாய்களுக்குத் தண்ணீர் வருகிற கால்வாய்கள் சிதைந்து கிடக்கின்றன. அதைச் சரிப்படுத்தவில்லை என்று சொன்னால், வருகின்ற மழைக்காலங்களில் போதிய தண்ணீரை தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே அவற்றை விரைவாகச் செப்பனிட அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வெள்ளை அறிக்கையில் நமக்கு ஏறக்குறைய 1 லட்சம் டன் அரிசி வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நமக்கு 50 ஆயிரம் டன்தான் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் வெளியிலே இருந்து வருகின்ற உணவு தானியத்தை வைத்துத்தான் தமிழகத்தின் உணவு நிலையைச் சரிக்கட்ட முடியும் என்ற நிலை இருப்பதன் காரணமாக, காவிரி நதி நீர் பிரச்சினையை விரைவில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நமது முதலமைச்சர் அவர்கள் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தை பல முறை கூட்டி, இறுதி அறிக்கையை தயாரித்து, டெல்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள், சென்ற முறை டெல்லியில் நடைபெறவிருந்த கூட்டத்திற்கு நமது முதலமைச்சர் சென்றார். ஆனால் கர்நாடக முதலமைச்சர் அவர்கள் வரவில்லை என்று காரணம் காட்டி, அந்தக் கூட்டம் நின்று விட்டது. அந்தக் கூட்டம் நடைபெற வேண்டும் என்றும், விரைவிலே இந்த நதி நீர்ப்பிரச்சினையில் தீர்வு காண வேண்டும் என்ற அக்கறை கர்நாடக முதல்வருக்கு இல்லை என்பதை நாம் நன்றாக அறிவோம். காரணம் அவர்கள் அத்தகைய சூழ்நிலையில் இருக்கிறார்கள். லாபகரமான சூழ்நிலையிலே இருக்கிறார்கள். தண்ணீர் அங்கே இருந்து தான் நமக்கு வருகிறது. ஆகவே நமக்குத் தேவையான தண்ணீரை, மத்திய அரசு தடுத்தாலும், பிளானிங் கமிஷன் தடுத்தாலும், பைனான்ஸ் கமிஷன் தடுத்தாலும், அணையைக் கட்டி தடுத்து எடுத்துக்கொள்ள முடியும் என்ற நிலை உள்ள காரணத்தினால் அவர்கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருக்கமாட்டார்கள். அதே நேரத்தில் நாமும் பேச்சுவார்த்தைக்கு இன்றைக்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, அவர்கள் விரும்பும் கால

அளவுவரை நாமும் காத்திராமல் விரைவிலே இந்தப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இல்லை என்றால் டிரிபுனலுக்கு நாமே கொண்டு சென்று அதன் தீர்ப்பைப் பெறுவதன் மூலமாக தமிழக விவசாயிகளுடைய அச்சத்தைப் போக்குவதற்கும் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிற பற்றாக்குறையைப் போக்குவதற்கும் சிறப்பான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு சென்ற கவர்னர் உரையின் போது தமிழகத்தில் உள்ள சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் பழைய சட்டங்கள் எல்லாம், இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற புதிய உத்வேகத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் இன்றுவரை அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் இன்றைக்குப் புதிதாக பல பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டிலே ஏற்படவிருக்கும் சூழ்நிலையில் அந்தப்புதிய சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்டு புதிய சட்டங்களை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழைய பத்தாம்பசலிக் கொள்கைகளைப் பெற்றுள்ள பல்கலைக் கழகச் சட்டங்களை மாற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்கள் முன்னேற்றத்துக்காக அரிசன நலத் துறை 2.91 லட்சம் செலவிடும் என்று இந்தத் துணை மதிப்பீட்டில் வருகிறது. அதற்காக நான் நிதியமைச்சரை பாராட்டுகிறேன். இன்னும் பல்வேறு முயற்சிகளை அரிசன நலத்துறையின் சார்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக நேற்றைய முன்தினம் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு விடையளிக்கும் போது 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறப்புத் திட்டத்தின் சார்பில் ஏறத்தாழ 500 கோடிக்கும் அதிகமான தொகை செலவழிக்கப்படவிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு டி. டி. ஓ. வைப் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த டி. டி. ஓ. பணியாற்றுவதற்கான அலுவலகம், கிளார்க்குகள் போன்றவர்கள் கொடுக்கப்படவில்லை. அரிசன நல நிர்வாகம் 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுப் போலத்தான் இன்றைக்கும் இருக்கிறது. பல புதிய திட்டங்கள் மேற்கொள்ள இருக்கின்ற இந்த நேரத்தில் அதற்கு ஏற்றபடி அரிசன நலத்துறையை விரிவாக்கம் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து "தாட்கோ" அரிசன வீட்டு வசதிக் கழகம் இன்றைக்கு செயலாற்றுகின்ற நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்குரிய நிதியை நாம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனாலும், கடந்த இரண்டு ஆண்டு காலமாக அது ஆரம்ப நிலையில் இருக்கிறதே தவிர வீடு கட்டும் முயற்சி துவங்கப்படவில்லை அதற்கு முழு நேர எம். டி. சேர்மென் போட்டிருக்கிறோம். டைரக்டர்கள் இருக்கிறார்கள். பல்வேறு என்ஜினியர்கள் இருக்கிறார்கள், என்றாலும் வீடு கட்டுவதற்குரிய முயற்சிகள்



இன்னும் நடைபெறவில்லை. ஆகவே தயவுசெய்து வீடு கட்டுவதற்கான முயற்சிகளை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். சமூகப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற வகையில் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஏற்பட்டிருக்கிற ஒரு கொந்தளிப்பான நிலையை இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். மீனாட்சிபுரம் சம்பந்தமா ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்து உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இராமநாதபுரம் நிகழ்ச்சியாக இருந்தாலும், கீழ் வெண்மணியாக இருந்தாலும் சரி, விழுப்புரமாக இருந்தாலும் சரி, இதைக் காட்டிலும் மிகக் கோரமான நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழகத்திலே இராமநாதபுரத்தில் 1957 ஆம் ஆண்டு நடைபெற்றன என்பதை மறந்து விடக்கூடாது. 3,000-க்கும் அதிகமான அரிசனங்களின் வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. மற்றும் 20-க்கும் மேற்பட்ட அரிசனங்கள் கொல்லப்பட்டார்கள், அவர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அந்த நிலையிலே கூட மதம் மாறுகிற எண்ணம் அவர்களிடம் வரவில்லை. அந்த நிகழ்ச்சியுடன் இன்றைக்கு இராமநாதபுரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு சாதாரண நிகழ்ச்சி ஆனாலும் இவ்வளவு பெரிய மாறுதல், கொந்தளிப்பு நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதை நிச்சயமாக ஏதோ பேப்பரிலே அறிக்கை விடுவதினால் மட்டும் தீர்த்துவிட முடியும் என்று சொல்லிவிட முடியாது. அல்லது ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, பணத்தைக் காட்டி மதமாற்றம் நடைபெறுகின்றன என்று சொல்வதினால் மட்டும் இந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட முடியாது. ஆகவே நான் பணிவோடு மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த பிரச்சினையைத் நிர்க்கமாக ஆராய்ந்து உண்மையான காரணம் என்ன என்பதைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு சர்வ கட்சிக் குழுவை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஏற்கனவே சட்டமன்றத்திலே ஒருமுறை பேசியபோது பார்லிமெண்டிலே இருப்பதைப்போல, மற்ற சில மாநிலங்களிலே இருப்பதைப் போல தாழ்த்தப்பட்டவர்களுக்காக நிரந்தரமான சட்டசபை குழு ஒன்று நம் மாநிலத்திலே வேண்டுமென்று கேட்டிருந்தேன்.

[பிற்பகல் 12.30]

இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரமாக ஒரு சட்டசபை கமிட்டியை அமைப்பதற்கு அரசு முன் வரவேண்டும். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், எனக்குத் தெரிந்தவரையில், அதிகாரிகளுடைய போக்கு

காரணமாகத்தான் இந்த நிலை நீடித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார்கள். அவர்களுடன் நானும் சென்றேன். பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுக்கும் மற்ற ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் சண்டை இல்லை. ஏதோ ஓரிரு வாரம் நடந்த சண்டை முடிந்துவிட்டது. இருதரப்பாரும் இன்றைக்கும் சௌஜன்யமாக இருந்து கொண்டிருக்கிறோம், அதிகாரிகள் குறிப்பாக போலீஸ் அதிகாரிகள்தான் தவறாக நடந்து வருகிறார்கள். அவர்கள் பண்ணுகிற கொடுமை தாங்கமுடியவில்லை, அவர்களிடமிருந்து பாதுகாப்பு தாருங்கள் என்று கேட்டார்கள்.

ஒரு வீட்டிலே ஒரு போலீஸ்காரர் போய் படத்தை உடைத்தார் என்பதற்காக, அவர்கள் அமைச்சரிடம் சொல்கிற போது 'பாருங்கள், அரசாங்கமே, இப்படி வந்து படங்களை உடைக்கிறார்கள்' என்று சொன்னார்கள். சாதாரண ஜனங்கள், போலீஸ்காரர் யார், சப்-இன்ஸ்பெக்டர் யார், அரசு என்ன செய்கிறது என்பதைக் கூட புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு இருக்கிறார்கள். அதிகாரிகள் செய்கிற அத்தனை தவறுகளுக்கும் அரசு பொறுப்பேற்க வேண்டிய நிலை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட அதிகாரிகளை அந்தப் பகுதிகளிலிருந்து மாற்றுவதால், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஜனங்களுக்கு அளித்து. இந்தப் பிரச்சினையில் தீர்வு காணவேண்டும்.

கடைசியாக பெயர் மாற்ற பிரச்சினையிலே இன்றைக்கு கன்னியாகுமரியிலே ஒரு பெரிய கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், போக்குவரத்துக் கழகமானாலும் சரி அல்லது மாவட்டங்கள் ஆனாலும் சரி, அரசியல் தலைவர்கள் பெயர்களை அவைகளுக்கு வைப்பதை நாங்கள் விரும்பவில்லை. விவாதத்திற்கு அப்பாற்பட்ட எத்தனையோ தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் தியாகத்தை மதிப்பதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. சாதாரண பிரச்சினைகளில் சிக்கலை ஏற்படுத்தி, அதன் காரணமாக விருப்பத்தகாத விளைவுகள் ஏற்படுவதை நாம் தவிர்க்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரிக்கு சென்று இரு தரப்பினர்களையும் சந்தித்துப் பேசி ஒரு முடிவு எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சுமுகமான முடிவிற்கு வரவேண்டும். அதற்கு பின்னாலும் இனிமேல் அரசியல் தலைவர்கள் பெயர்களை பல இடங்களுக்கும் சூட்டுவதை இந்த அரசு தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



*டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற துணை மானியக் கோரிக்கைமீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாகவே நாவலர் அவர்கள் மிகவும் சிக்கனமானவர்; எதற்கும் காரண காரியங்கள் தெரியாமல் பணம் ஒதுக்க மாட்டார். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில் இருக்கும்போதேகூட ஏதாவது ஒரு திட்டம் போனால் எதற்கு? எப்படி? ஏன்? என்று கேள்விக்கணைகளை எழுப்பி, அது சரியாக இருக்கிறது என்று தோன்றினால், அதற்கு உரிய தொகையை மட்டும் அளிப்பாரே தவிர அதிகமாக பணம் ஒதுக்கமாட்டார், எதையும் அளந்துதான் செய்வார் என்று திராவிட முன்னேற்றக் கழகம் அவருக்கு புகழாரம் கொடுத்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். அப்படிப்பட்ட நாவலர் அவர்கள் இந்த துணை மானியக் கோரிக்கை மிகவும் தேவை, அத்தியாவசியம் என்று கருதி, சீரிய கருத்துக்களை உள்ளடக்கி, இங்கே அவைத சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதால் இதை நான் வரவேற்கிறேன்.

துணைமானியக் கோரிக்கை எந்த அளவுக்கு இருந்தாலும் எதிர்க்கட்சிகளிலே இருக்கிறவர்கள் இதை எதிர்க்க வேண்டுமென்று கருதி, ஒருசில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

இங்கே பேசியபோது சிலர் கட்சி உள்ளே நுழைகிறது' அதிகாரத்திலே கட்சிக்காரர்கள் நுழைகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி எதுவும் இல்லை. எங்கள் மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவர் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அண்ணா தி.மு.க.வின் ஏஜெண்டாக இருக்கிறார் என்று குறிப்பிட்டார். அவர் அவ்வாறு குறிப்பிட்ட அடுத்தநாள் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளரும் ஒன்றியச் செயலாளரும் மற்றவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் வருகிறார்—தி.மு.க. எம்.எல்.ஏ., மாவட்ட தி.மு.க.—செயலாளர், தி.மு.க. ஒன்றிய செயலாளர் கலந்து கொள்கிறார்கள் என்று தி.மு.க.வினர் நோட்டீஸ் போட்டு நிகழ்ச்சிகளை நடத்தினர். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குக் கூட நான் அந்த நோட்டீசை அனுப்பி வைத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரை அண்ணா தி.மு.க. ஏஜென்ட் என்று சொல்லுகின்ற நீங்கள், 'நேற்று வந்து பேசிய ஒருவர் இப்படிச் சொல்லிவிட்டு சென்றார், இன்றைய தினம் தி.மு.க.வினர் இப்படி நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள், இதிலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்படி இயங்குகிறது என்பதையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எப்படி அதிகாரிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்; மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முறையிலே நீங்கள் ஏதாவது செய்வதாக இருந்தால்

நாங்கள் அதற்கு ஆதரவு தருகிறோம் என்று சொல்லி ஒரு கடிதத்தையும் எழுதி, அந்த நோட்டீசையும் வைத்து அனுப்பியிருக்கிறேன்.

இங்கே காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே பி.டபிள்யூ.டி. நன்றாக இருக்கிறது; இங்கே நேஷனல் ஹைவேய்ஸ் செம்மையாக இருக்கிறது; குடிநீர் வடிகால் வாரியம் மட்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு அனுபவப்பூர்வமாக ஒன்றை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன் இதுவரையில் அவர்கள் பிறந்து, நான் பிறந்து, இது நாள்வரை கண்டிராத வறட்சியை இப்போது பார்த்திருக்கிறோம். இந்த வறட்சியில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக 'ஹான்ட் பம்பு' போட 10 இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். 7 இடங்களில் 200 அடி, 250 அடி, 280 அடி ஆழத்திற்குப் போயிருந்தும் தண்ணீர் கிடைக்கவில்லை. ஏற்கெனவே 120 அடிக்குள் தண்ணீர் இருக்கிறது என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் 280 அடி போன பிறகும் தண்ணீர் கிடைக்காமல் அந்த சாதனங்களை எல்லாம் எடுத்து வந்துவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு கடுமையான வறட்சியின் காரணமாக நமக்கு ஏற்பட்டிருக்கிற துயரத்தைத் துடைக்க முடியாத அளவுக்கு, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இடையிலே இப்படிப்பட்ட சிக்கல் இருக்கிறது என்பதை நாங்கள் அனுபவப்பூர்வமாகப் பார்த்தோம் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 30 ஆண்டு காலத்தில் இல்லாத ஒரு பயங்கரமான வறட்சி இப்போது ஏற்பட்டிருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் குடிநீர் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டத் திட்டம் இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது அதனால் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப்பணித் திட்டத்தைப்பற்றிக்கூட இங்கே சொன்னார்கள். வறட்சி நிவாரணப்பணித் திட்டத்தை அரசாங்கம் போட்டிருந்தாலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற யார், யார் இருக்கிறார்கள் என்று பார்த்தால் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அதிலே பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கிறார்கள். வறட்சி என்று வருகிறபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது கூட ஆங்காங்கே கஞ்சித் தொட்டி வைத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுடைய வறுமையைப் போக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்; அனைவருடைய நோக்கமும் அதுதான். அதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. ஆனால் இங்கே கட்சிகாரர்களுக்கு வேலை கொடுக்க இந்த



திட்டம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். எந்த ஒரு புதியத் திட்டம் வந்தாலும் கட்சிக்காரர்களை உள்ளே நுழைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் உருவாக்கப்படுவது அல்ல அந்தத் திட்டம்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த எண்ணத்தில் செய்யவில்லை என்பதை அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

[பிற்பகல் 12.40]

அதேநேரத்தில் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரவர்கள் யூனியன் தேர்தல் தேவையா என்று கேட்டார்கள்.

எதற்காக யூனியன் தேர்தலை நடத்த வேண்டும், அதிலே உள்ள அத்தனை இலாக்காக்களும்தான் பிரிந்துபோய் விட்டனவே, அப்படிப் பிரிந்துபோனதற்குப் பிறகு அவற்றிற்கு என்ன அதிகாரம் இருக்கப் போகிறது. எதற்காகத் தேர்தல், அது தேவையே இல்லை என்று கூட அவர்கள் சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தானே திசை திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னது என்னவென்றால் இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியங்களின் வேலைகள் எல்லாம் பிரிக்கப்பட்டு விட்டன, எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிகாரம் இல்லை, ஆகவே எவ்வளவு வேகமாக தேர்தலை நடத்துகிறார்களோ அந்த அளவுக்காவது நடத்தினால்தான் நல்லது என்றுதான் சொல்லி இருக்கிறேனே தவிர தேர்தலே தேவையில்லை என்று நான் சொல்லவில்லை.

டாக்டர். கே. சமரசம்: தலைவரவர்களே, அவர்கள் வேண்டுமானால் குறிப்பைப் பார்க்கட்டும். 'ஊராட்சி ஒன்றியத்தின் எல்லா இலாக்காக்களையும் பங்கிட்டுப் பிரித்துவிட்டார்கள், ஆகவே இனிமேல் தேர்தலே தேவையில்லை' என்று அவர்கள் சொன்ன அந்த வரியைப் பார்க்கட்டும். நான் கூட அவர் சொன்னதை அப்படியே எழுதி வைத்திருக்கிறேன்.

நான் இங்கே ஒன்றை சொல்ல விரும்புகிறேன். ஒரு குடும்பம் என்று இருக்கின்றபோது பல குழந்தைகள் இருக்கும். அவர்களைக் கண்காணிக்கின்ற தகப்பன் அவர்களுக்கென்று தனித்தனியாக பணிகளை ஒதுக்கி அவரவர்கள் என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்வதுதான் தமிழ்ப் பண்பு. அதேபோன்று கல்வித் துறையிலே இருந்தும் கோரிக்கைகள் வந்தன. வேளாண்மைத் துறையிலே இருந்தும் கோரிக்கைகள் வந்தன. குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்தும் கோரிக்கைகள் வந்தன. ஆகவே அந்த

அடிப்படையிலே இருக்க வேண்டும் என்ற வகையிலே பிரித்து வைக்கப்பட்டு இருக்கின்றதே தவிர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தானாக எதையும் பிரித்துவிடவில்லை. திட்டமிட்டு பிரிக்கவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்,

''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை''

என்ற அடிப்படையிலே உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகளைத் துரிதமாக செய்யவேண்டும் என்பதற்காக அதன் அடிப்படையிலே இந்த துணை மானியக் கோரிக்கையை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றி தமது கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறி இருக்கிறார்கள். ஆனால் எனக்கு வேண்டியது 155 கோடியே 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடுதான். அதை நீங்கள் ஒதுக்கித் தந்துவிட்டால் அதுவே எனக்குப் போதுமானது. ஆனால் இந்த நிதி ஒதுக்கீடு பற்றிய கருத்துக்களுக்கு அப்பால் சென்று எல்லாப் பொருள்களைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றபோது என்னால் அதற்கெல்லாம் பதில் தரமுடியும் என்று எதிர்பார்ப்பதுதான் பொருத்தமாக இருக்காது. பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவற்றிற்கெல்லாம் உடனடியாக பதில் தருகின்ற அளவுக்கு நான் இருக்க மாட்டேன் என்பதுதான் அதற்கு விடையாக இருக்கும். எனினும் அந்தந்தத் துறையினர் அவை பற்றி எல்லாம் ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுப்பார்கள்.

மேலும் பட்ஜெட் வருகின்றபோது கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் தக்கவாறு ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு நிதியினையும் ஒதுக்கி நன்மைகளைச் செய்வார்கள். ஆனால் துணைமானியக் கோரிக்கை வருகின்றபோது, துணை மதிப்பீடுகள் வருகின்றபோது அதற்கும் நிதிநிலை அறிக்கைக்கும் இடையிலே ஏற்கெனவே இந்த அவையின் அனுமதியைப் பெறாமலே செலவழிக்கப்பட்ட தொகைக்கு அவையின் அனுமதி பெறுகின்ற நோக்கத்தில்தான் தரப்பட்டிருக்கின்றது. செலவழிக்கப்பட்ட தொகைக்கு என்ன காரணம் என்பதற்கு வேண்டுமானால் நான் பதிலுரைக்கிற சூழ்நிலை இருக்கும்.

இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை பல்வேறு துறையினுடைய அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அந்தந்த துறையைச் சேர்ந்த அமைச்சர்கள் அவ்வப்போது பதில் கூறுவார்கள் என்பதையும் நான் இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்,



மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் பேசுகிறபோது, நான் மிகவும் சிக்கனமாக செலவு செய்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். நான் ஊதாரித்தனமாக செலவு செய்பவனும் இல்லை. கஞ்சத்தனமாக செலவு செய்பவனும் இல்லை. சிக்கனமாக செலவு செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். பெரும்பாலும் நிதிலே திட்டச் செலவுகள் அதிகமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் நம்முடைய நிதிநிலையின் தன்மைகள் எல்லாம் கண்காணிக்கப் பட்டு வருகின்றன. திட்டம் அல்லாத செலவுகளுக்கு கூடுமான வரையில் செலவுகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை, எந்த அளவிற்கு நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவிற்கு நிறைவேற்றி வருகின்றோம். முக்கியமாக வறட்சிப் பணிகளுக்காக அதிகம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக, அதற்கான அனுமதியை இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் கேட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் சுந்தரராஜன் அவர்கள் கூறும்போது, வறட்சி நிவாரணப் பணி 30-9-1981 என்று அறுதியிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலும் செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே செல்லவேண்டுமா வேண்டாமா என்பதை அந்த நேரத்திலேதான் நாம் நிர்ணயிக்க வேண்டும். ஏனென்றால் திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது குறிப்பிட்ட நாளை வரையறுத்து அதற்குள் வேலைகள் முடித்தாக வேண்டும், செம்மையாகவும் நடைபெற்றாக வேண்டும் என்று சொன்னால்தான், காரியங்கள் நடைபெறுமே தவிர, வரையறை இல்லாவிட்டால் போய்க்கொண்டேயிருக்கும். ஏற்கெனவே ஜூலையில் முடிக்கவேண்டும் என்று கருதினாலும் கூட, அந்தப் பணிகள் தொடர்ந்து இருந்ததின் காரணமாகத்தான் செப்டம்பர் 30 ஆம் தேதி என்று இப்போது சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்தச் சமயத்திலே நாம் ஆராய்கிறபோது, மேலும் அந்தப் பணிகளை தொடரவேண்டிய அவசியம் எல்லா மாவட்டங்களிலும் இல்லாவிட்டாலும், எந்த மாவட்டத்திலோ அல்லது எந்தப் பகுதியிலோ, அந்தப் பணிகளை தொடர்வதற்கான சூழ்நிலை இருந்தால் இந்த அரசு ஆராயும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பணிகளில் எல்லாம் குடிதண்ணீர் பிரச்சனையை முக்கியமாக நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தனியாகவும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். வறட்சி நிவாரணப் பணிகளோடும் சேர்த்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டுக்காண்டு ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறபோது, அதனுடைய பணிகள் விரிவடைந்து, நாடு எங்கும் நடைபெற வேண்டிய அளவிலேதான் இருக்கின்றன. வேண்டுமானால் நடைபெற வேண்டிய பணிகள் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணுகிற அளவிற்கு நடைபெறாமல் இருக்கலாமே

தவிர, ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஒவ்வொன்றாகச் செய்து விட்டு, திரும்பவும் தொடங்குகிற பாங்கிலேதான் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் கூடுதலாகக் செலவழிக்கப்பட்டது. அந்தப் பணம் எல்லாம், 69 ஊராட்சி ஒன்றியங்களிலேயும், முக்கியமாக குடிதண்ணீர் வழங்குதல், சாலைகள் கட்டுதல், சிறு பாலங்கள் கட்டுதல், மருத்துவ மனைகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல், மகப் பேறு இல்லங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல், பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல், மயானங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியமான பணிகளை ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஒவ்வொரு கிராமமும் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு செலவழிக்கப்பட்டது.

இந்த ஆண்டு 150 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் கிட்டத் தட்ட 80 கோடி ரூபாய் அளவிற்கு 150 ஊராட்சி ஒன்றியங் களிலும் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக அங்கே இருக்கிற அதிகாரிகள் போதாது என்று கருதி மேற்கொண்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பி. டி. ஓ. கூடுதலாக போடப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் மூலமாக பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் மனதிலே கொண்டு அவைகள் எல்லாம் முறைப்படி நிறைவேற்றப்படும் என்பதையும், இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இது ஊனம் உற்றோர் ஆண்டாக இருப்பதால், ஊனம் உற்றோருக்குப் பல்வேறு வசதிகள் வாய்ப்புகள் செய்து தரவும், சலுகைகள் வழங்கவும், சென்ற நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்ததற்குப் பிறகு, பல முடிவுகளை எடுத்ததின் காரணமாக, அதற்கான நிதி ஒதுக்கீட்டை இதிலே காட்டியிருக் கிறோம், அதையும் தருவார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள் தமிழ் பல்கலைக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் அன்று துவங்குவது என்ற முடிவு மேற்கொள்ளப் பட்டு, அதற்கான அனுமதி பெறவும் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு, கல்வித் துறையில் இருந்து இந்த அரசின் சார்பாக எழுதியிருக்கிறார்கள். விரைவிலே அதற்கான அனுமதி கிடைத்து விடும் என்று நம்புகிறோம் கிடைக்காவிட்டாலுங் கூட, அந்தப் பல்கலைக் கழகத்தை துவக்கிய பிறகு அனுமதி பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. வேறு பல பல்கலைக் கழகங்களைப் பொறுத்த அளவிலும் அவ்வாறு ஏற்பட்டிருக்கிறது. ஆந்திராவிலே தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தி, அனுமதி பெறாமலேயே அதைத் துவக்கி, அதற்குப் பிறகு அனுமதி பெற்றார்கள். அந்த



விதமாகப் பெற முடியும். ஆகவே, அந்தத் தன்மையை அடிப் படையாகக் கொண்டாவது அது நிறுவப் பெறும் என்று கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

உணவுப் பங்கீட்டைப் பற்றி நான் முதலிலேயே எடுத்துச் சொல்லிவிட்டதின் காரணமாக மீண்டும் அதை விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். தலைமைச் செயலாளர் மாற்றத்தைப்பற்றி எல்லாம் இங்கே சிலர் கூறினார்கள். நிர்வாகத் தினுடைய செம்மையையும் சௌகரியத்தையும் ஒட்டி சில பல மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஆகவே, தலைமைச் செயலாளருக்கு உரிய அந்தஸ்தைக் கொடுத்து விட்டு, ஒருவருக்குத் தலைமைச் செயலாளர் பதவியை கொடுப்பது என்பது புதிதாக நடைபெறுகிற ஒன்று அல்ல, அதற்கு ஏற்கெனவே சில பல எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். வேறு பல மாநிலங்களிலேயிருந்தும் எடுத்துக் காட்டைச் சொல்ல முடியும். மத்திய அரசிலேயிருந்தும் சிலபல எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். ஆனால் எல்லோரும் தலைமைச் செயலாளர்கள் என்று கருதப்படுவார்கள் என்ற அர்த்தம் இல்லை. தலைமைச் செயலாளர் அந்தஸ்து கொடுக் கப்பட்டிருக்கிறதே தவிர, தலைமைச் செயலாளர் ஒருவர்தான். ஆக, தலைமைச் செயலாளர் அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக் கிறதே தவிர தலைமைச் செயலராக ஒருவர்தான் இருக்கமுடியும். இதில் சட்ட விதிமுறைகள் மற்றவற்றிற்கு மாறுபட்டு எதுவும் இல்லை.

[பிற்பகல் 12.50]

நேரு அவர்கள் படத்தை மாட்டவேண்டுமென்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாட்டககூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லவேஇல்லை ஆகவே அந்தப் படம் இங்கே அணி செய்வதில் ஒரு மாறு பட்ட அபிப்பிராயம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கோ அல்லது ஆளுங்கட்சியினருக்கோ அல்லது இருக்கிற கட்சிகளுக்கோ இல்லை. அது திறக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று எடுத்துச் சொல்கிற போது தான் அவர்கள் எங்களை இந்தக் குற்றச்சாட்டு தாக்குகிறது என்று நினைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். முதன் முதலாக அண்ணல் காந்தியடிகள் படம் மட்டுந்தான் இங்கே இருந்தது. அதற்குப் பிறகு ராஜாஜீ படம், திருவள்ளுவர் படம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பு நடத்திக் கொண்டிருந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவப்படம் இங்கே அணி செய் யப்பட்டது. அதற்குப் பிறகு திரு. காமராஜ் அவர்கள் படம், திரு. முத்துராமலிங்க தேவர் அவர்கள் படம், பெரியார் அவர்கள் படம், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் படம், காயிதேமில்லத் அவர்கள் படம் எல்லாம் வந்தன. ஆகவே இங்கே நேரு அவர்கள்

படத்தை வைக்கக்கூடாது என்பதல்ல. வைக்கக்கூடாதா என்றால் ஓமந்தூர் ராமசுவாமி ரெட்டியார் காலத்திலிருந்து, திரு. குமாரசாமி ராஜா காலத்திலிருந்து ராஜாஜீ அவர்கள் இருந்த நேரத்திலிருந்து வைத்திருக்கலாமே. நேரு அவர்கள் படத்தை வைக்கக்கூடாதா? அவர்கள் நாட்டுக்கு பணி செய்யவில்லையா என்று கேட்டார்கள். செய்யவேண்டிய நேரத்தில், செய்ய வேண்டிய முறைப்படி செய்ய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் அறிவிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எடுத்துத் தெரிவித்தபடி ஒரு பெருந் தலைவரைக் கொண்டு அவர்களின் படத்தைத் திறந்து வைப்பதற்கு ஆட்சேபணை இருக்கமுடியாது. அதற்கான முயற்சிகளைச் செய்யலாம், நல்லவேளை அதற்கு என்று ஒரு இடம் கூட காத்துக்கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் கூட அதை மாட்டி வைக்கமுடியும், அதில் தவறு இல்லையென்று குறிப்பிட விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிளர்ச்சிகள் பற்றி உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அங்கிருக்கிற கட்டபொம்மன் பஸ்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்ட காரணத்தால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற நிலை வருகிறபோது அதற்கு என்ன பெயர் வைப்பது என்பதாகும். பெயர் வைப்பது என்பதில் அங்கே மாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. போக்குவரத்துக் கழகங்களுக்கு பெயர் வைக்கும்போது தமிழ்நாட்டுக்கு பெருமை தேடித் தந்த தமிழ்நாட்டுக்கு புகழ் தேடித்தந்தவர்களின் பெயர்களை போக்குவரத்துக் கழகங்களுக்கு வைப்பதன் மூலம் தமிழ் நாட்டுமக்களுக்கு ஒரு எழுச்சி ஏற்படும் என்று பல்லவன், சோழன், பாண்டியன் என்ற பெயர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது வைக்கப்பட்டன, திருவள்ளுவர் பெயர், கட்டபொம்மன், பெரியார், அண்ணா இவர்கள் பெயர்கள் எல்லாம் வைக்கப் பட்டன. தமிழ்நாட்டுக்குப் பெயரும், பெருமையும், புகழும் தேடித் தந்தவர்கள் பெயர்கள் அமைவது மக்களிடையே ஒரு எழுச்சியை உண்டாக்கும். அவர்களுக்கு நாம் ஒரு மரியாதை செலுத்துகிறோம் அதன் மூலம் நாம் பெருமை கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் பெயர்கள் வைக்கப்படுகின்றன. அங்கே ஜீவாவின் பெயர் எடுத்துச் சொல்லப்பட்டது. பிறகு நேசமணியின் பெயர் வைக்க வேண்டும் என்று இரு பிரிவுகளாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இரண்டு பேர்களும் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இல்லைதான். இருந்தாலும் இரண்டு பேர்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள்—நாட்டுக்கு உழைத்தவர்கள், நல்லவர்கள் என்ற முறையில் மாச்சரியங்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரு சாராருடைய தலைவர்களையும் கூப்பிட்டு வைத்து ஒரு சுமுகமான முடிவு எடுக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், மாச்சரியங்கள்



இருக்கின்றன. தலைவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் தான். எந்தக் கட்சி, என்ன நிலைமை என்று பார்க்க வேண்டிய தில்லை. ஆனால் மாச்சரியங்கள் வந்து விட்டதால் ஒரு முடிவு காணும் போது பல பிரச்சனைகள் உள்ளே வந்து கலவரம் மூளாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. சில பேர்கள் இப்போது பாரதி நூற்றாண்டு விழா இருப்பதன் காரணமாக இந்தச் சங்கடம் இல்லாது பாரதி போக்குவரத்துக் கழகம் என்று வையுங்கள் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சிலபேர்கள் கவிமணி பெயரை வையுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தப் பெயரானாலும் இன்னும் முடிவு செய்யவில்லை, ஸஜஷன் என்று சொல்லப்படுகிற அளவிற்குத்தான் இருக்கிறது. விரைவில் இருசாரரையும் முதல்வர் அவர்கள் கூப்பிட்டு வைத்து முடிவு ஏற்படவேண்டும். முக்கியமாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொல்லும்போது எந்தப் பெயர் வைக்கவேண்டும் என்பதில் இல்லை, மாச்சரியம் வரக்கூடாது என்ற கருத்தைத்தான் இங்கும் சொன்னார்கள், மேலவையிலும் எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் முயன்று சில பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. வி. முகமது இஸ்மாயில்** ; பாயிண்ட் ஆப் ஆர்டர், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், நாகர்கோயிலிலே வருகின்றபோது, அந்தப் பகுதிக்கு பெயரிடுவது சம்பந்தமாக மாச்சரியங்கள் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலிலே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்படுகின்றபோதே, ஒரு பகுதியின ஜீவா பெயரை வைக்கவேண்டுமென்று முடிவெடுத்ததாகவும், பிறகு அதன் தொடர்பாக குமரி மாவட்டத்திலே ஏற்பட்ட பதட்ட நிலை காரணமாக மாவட்ட கலெக்டர் அவர்கள் சர்வ கட்சியினருடைய கூட்டத்தைக் கூட்டி அந்தக் கருத்துக்களின் கருத்துக்க அடிப்படையிலே சென்ற 13 ஆம் தேதி, பெயரை மாற்றி நேசமணி போக்குவரத்துக் கழகம் என்று பெயரிட முடிவு எடுத்ததாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டம் அமைவதற்குக் காரணமாக இருந்தவர் நேசமணி அவர்கள்தான் குமரி மாவட்ட மக்களால் அவர் அன்புத் தந்தை நேசமணி என்றும், மார்ஷல் நேசமணி என்றும் அழைக்கப்பட்டு வந்தது எல்லோருக்கும் தெரியும், ஆகவே, அந்தக் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எல்லாத் தரப்பு மக்களும், எல்லா அரசியல் கட்சிகளும் பெருவாரியான கட்சிகள் நேசமணி அவர்கள் பெயரை வைக்கவேண்டுமென்று வற்புறுத்தியதன் காரணமாகத்தான், நேசமணி அவர்கள் பெயரை வைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணிக்குள் இந்த துணை மானியக் கோரிக்கையை நாம் முடித்தாக வேண்டும். ஆகவே, எந்தப் பெயரை வைக்கவேண்டும் என்பதைச் சொன்னால்போதும்.

**திரு பி. மு மது இஸ்மாயில்:** மேலும், இதிலே எந்த முடிவுக்கும் வராமல் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தால், அங்கே பதட்ட நிலைதான் உருவாகும். நேசமணி என்ற பெயரை வைப்பதுதான் உசிதமானது என்று வலியுறுத்தி, அமர்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று அரசுத் தரப்பிலே அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் இந்தப் பெயர் சூட்டப்படும் என்று தமிழ் நாட்டு மக்களுக்கு வந்திருக்கிறது. தோழர் ஜீவா அவர்கள் நாஞ்சில் நாடு என்று சொல்லக்கூடிய அந்த நாகர் கோயிலில், திருவாங்கூரிலிருந்து தமிழகத் த, தமிழகத்தோடு ஐக்கியப்படுத்துவதற்கு இணைக்க முனைவந்தார்கள். நாகர் கோயில் வட்டத்திலே பிறந்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். தமிழ்நாட்டு மக்களால் போற்றப்பட்ட தலைவர். ஆகவே, அரசுத் தரப்பிலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, இதைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி விட்டார்கள். மாண்புமிகு நாவலர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பாச்சரியமான கருத்துக்கள் வந்திருப்பதால், அதற்கு ஒரு சுமுகமான முடிவு காணவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இதுவரையில் இறுதியாக இன்னார் பெயரை வைக்கவேண்டும் என்று ஆணையிடப்படவில்லை. இங்கேயே இரண்டு பேர்களுக்கும் இடையே சமாதானம் செய்யும் நிலைமை இருக்கின்ற காரணத்தினால், எல்லோரையும் கூப்பிட்டு வைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. அதற்கு ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் வேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், பேரவையிலே துணைக் கேள்விகள் வருகின்ற போது, முக்கியமான செய்திகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து, அதற்கான விவரங்களை அந்தந்த அமைச்சர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு, வேதாரண்யம் முன்னாள் சட்டமன்றப் உறுப்பினர் ஒரு தந்தியைக் கொடுத்திருக்கிறார்கள். வேதாரண்யம் கடற்கரையிலே, இலங்கையிலே கொல்லப்பட்டதாகக் கருதப்படுகின்ற 10 தமிழர்களின் பிணங்கள் ஒதுங்கி வந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அது அநேகமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கும், காவல் துறை மூலமாக முறைப்படி வந்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன். வந்திருந்தால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுப்பார்கள். இப்போது இந்த விஷயம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதால் அதைக்குறித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதை எடுப்பதற்கு இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்ன நிலையில், எந்தச் சூழ்நிலையில் இது ஏற்பட்டிருக்கிறது என்பதை இப்போது சொல்வதற்கில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப் பற்றி தக்க நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இங்கே பிரச்னைகள் பலவற்றைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள் என்றாலும், அதுபற்றிய கருத்துக்களை அந்தந்த அமைச்சர்கள், கேள்விகளுக்கு விடையளிக்கின்ற போதும், பலபல விவாதங்கள் வரும்போதும் தெளிவு படுத்துவார்கள் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை அந்தந்தத் துறையினர் குறித்து வைத்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று எடுத்துச் சொல்லி இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பிற்பகல் 1 மணி. எனவே பேரவை 204-வது விதி, உள்விதி (3)-ன்படி விவாதம் முடிவுறுகிறது. இப்போது வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி:

"1981-82-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-8-1981-ஆம் நாளிட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு 1981-82 ஆம் நிதி ஆண்டிற்கான கூடுதல் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற துணை மானியக் கோரிக்கைகள் 1981-82
A வருவாய்க் கணக்கில் செலவு.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 1 | நிலவரித் துறை .. .. | 2,72 |
| | 2 | மாநில ஆயம் தீர்வைத் துறை | 93,10 |
| ஷெ | 3 | மோட்டார் வண்டி வரிகள் குறித்த சட்டங்கள்-நிர்வாகம். | 70 |
| ஷெ | 8 | தேர்தல்கள் .. .. .. | 5,40 |
| ஷெ | 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், .. .. | 1,03 |
| ஷெ | 11 | மாவட்ட நிர்வாகம் .. .. | 31,29 |
| ஷெ | 15 | காவல் துறை .. .. | 5,00 |
| ஷெ | 17 | கல்வி .. .. .. | 1,65,78 |
| ஷெ | 18 | மருத்துவம் .. .. .. | 3,39 |
| ஷெ | 19 | பொதுச் சுகாதாரம் .. .. | 12,99,42 |
| ஷெ | 20 | வேளாண்மை .. .. | 1,22,19 |
| ஷெ | 22 | கால்நடை வளர்ப்பு .. .. | 1,16,40 |
| ஷெ | 23 | கூட்டுறவு .. .. .. | 2,09,85 |
| ஷெ | 25 | சின்கோனா .. .. .. | 5,40 |
| ஷெ | 28 | சமுதாய நல் வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 14,98,53 |
| ஷெ | 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். .. .. | 2,70 |
| ஷெ | 30 | சமூக நலம் .. .. .. | 1,66,80 |
| ஷெ | 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர்கள் முதலியவர்களின் நலன். | 2,90,97 |
| ஷெ | 34 | நகர்ப் பகுதி வளர்ச்சி .. | 38 |
| ஷெ | 35 | நுகர்பொருள் வழங்கல் .. | 33,04 |
| ஷெ | 36 | பாசனம் .. .. .. | 15,44,00 |
| ஷெ | 38 | பொதுப் பணிகள்—பணியாளர் அமைப்பும் கருவிகளும் தளவாடமும். .. .. .. | 15,63 |
| ஷெ | 39 | சாலைகளும் பாலங்களும் .. | 5,87,64 |
| ஷெ | 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 20,56 |
| ஷெ | 43 | பல்வகை .. .. .. | 1 |
| கோரிக்கை | 45 | காட்டுவளத் துறை .. .. | 11,00 |
| | | மொத்தம்—A.—வருவாய்க் கணக்கில் செலவு .. | 62,33,49 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 48 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. .. .. .. | 45,01 |
| ஷெ | 49 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. .. .. | 6,00 |
| ஷெ | 51 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. .. | 35,00 |
| ஷெ | 52 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. | 1,15,53 |
| ஷெ | 54 | காட்டுவள மூலதனச் செலவு .. | 90,00 |
| ஷெ | 55 | பல்வகை மூலதனச் செலவு .. | 1,38,00 |
| | | மொத்தம்—B. மூலதனக் கணக்கு | 4,29,54 |

C. கடன்களையும் முன்பணங்களையும் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 56 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். .. | 8,73,29 |
| | | மொத்தம்—C. கடன்களும் முன்பணங்களும் .. | 8,73,29 |

D. எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம்

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 57 | எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம். | 80,00,00 |
| | | மொத்தம்—D எதிர்பாராச் செலவு நிதி .. | 80,00,00 |
| | | பெரு மொத்தம் ... .. | 1,55,36,32 |

[1981 ஆகஸ்டு 28

### 4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (அ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981 (ஆ. இ)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### ஆ. நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு, 1981.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 6. தகவல் கோரல்

வேதாரண்யம் கரையோரம் பத்து பிணங்கள் ஒதுங்கி இருப்ப தாகக் வந்துள்ள செய்தி.

***திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே நான் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டாலும் கூட இன்று காலையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற தந்தியிலே ஒரு அதிர்ச்சியான வருந்தத்தக்க செய்தி வந்திருக்கின்றது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம் முன்னவர் அவர்கள் அதை கவனிக்க வேண்டும் என்பதற்காகத் தான். இந்தத் தந்தியினை வேதாரண்யத்திலே இருந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

"About 16 ead bo ' es of assasslnated Tamillians of Ceylon ashore in vedaranyam to Point Calemere sea shore. என்று இந்தத் தந்தி யிலே காணப்படுகிறது. இலங்கையிலே வாழ்கிற தமிழர்களிலே 10 பேர் கொலை செய்யப்பட்டு அவர்களுடைய உடல்கள்



1981 ஆகஸ்ட் 28] [திரு. க. அன்பழகன்]

வேதாரண்யத்திலே பாயின்ட் காலிமர் என்ற அந்தக் கடற் கரைப் பகுதியிலே ஒதுங்கி இருக்கிறது என்ற செய்தியினைத் தந்தியிலே கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்க செய்தி. அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால், அது உண்மையாக இருந்தால் அதுபற்றி உடனடியாக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் செய்தியினை முன்னவர் அவர்களின் கவனத்திற்குத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் சரியாக மாலை 4.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### இ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறை வேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 57/1981).

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 58/1981).

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### இ. மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, "21–5–1981 ஆம் தேதியன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1981) இப்பேரவை நிராகரிக்கிறது" என்று மொழிகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, "20–7–1981 ஆம் தேதியன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/1981) இப் பேரவை நிராகரிக்கிறது." என்று மொழிகிறேன்.

திரு. சு. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 71/1981) ஆய்வுக்கு * எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்." என்று மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ரகுமான்கான், பொன்னுரங்கம் ஆகியோரின் தீர்மானங்களும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் தீர்மானமும் பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தச் சட்டத்தை எதிர்த்து எங்களுடைய கட்சியின் சார்பாக நண்பர்கள் ரகுமான்கான், பொன்னுரங்கம் கொடுத்துள்ள மோஷன் ஆப் டிஸ்அப்ரூவல் என்ற வாதத்தினை ஆதரித்து இந்தச் சட்டத்திலே இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற இந்த மன்றக் கூட்டத் தொடரிலே மதுவிலக்கு தளர்த்தப்படும், மது பாட்டில்களில் அடைத்துக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மக்களுக்கு கலப்படம் இல்லாத சரக்குக் கிடைக்க வேண்டுமென்ற காரணத்தினால் அந்த எண்ணத்திலே அவ்வாறு செய்வதாக அன்றைய தினம் சொல்லப்பட்டது.

மதுக்கடைகளைத் திறந்து வைப்பதன் மூலம் ஏற்கனவே வீணாகிப் போய்க் கொண்டிருக்கின்ற ஏழைகள், பாட்டாளிகள், அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியவர்கள் என்றைக்குமே மீண்டும் தலையெடுக்க முடியாத ஒரு நிலைக்கு இன்றைய தினம் தமிழகத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். இது ஒருபுறமிருக்க, இந்தச் சட்டத்தைத்

* 1981–ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



தளர்த்தி, தமிழ்நாட்டிலே ஏறக்குறைய பத்தாயிரம் சாராயக் கடைகளும், ஐயாயிரம் கள்ளுக்கடைகளும் திறக்கப்பட்டு நடைமுறையிலே இருந்து வருகிறது. மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சொல்லுகின்ற சமயத்தில் அவர்கள் சொன்னார்கள், பாட்டிலில் தான் சாராயம் அடைத்துக் கொடுக்கப்படும் என்று. அதற்காக அரசாங்கத்தினுடைய நோட்டிபிகேஷன் மே மாதம் ஒன்பதாம் தேதி, அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கலால் இலாக்காவின் கமிஷனர் அவர்களுக்கு டெலிகேஷன் ஒதுக்கீடு செய்து இந்தக் கடைகளுக்கான அனுமதி, மதுக்கடைகள், ஐ. எம். எஃப்.எல். என்று சொல்லப்படக்கூடிய விஸ்கி, பிராந்தி விற்கும் கடைகள் இவைகளுக்கெல்லாம் அனுமதி கொடுக்கும் அதிகாரத்தை அரசாங்கம் பல உத்தரவுகள் மூலமாக எக்சைஸ் கமிஷனருக்குக்கொடுத்து அவர்கள்தான் லைசென்சிங் அத்தாரிட்டி என்றும் பேப்பரிலே விளம்பரப்படுத்தினார்கள். அப்படிச் சொன்னபிறகு மே மாதம் 9-ஆம் தேதி கெசட்டிலே விளம்பரப் படுத்தினார்கள். தமிழ்நாட்டிலே பத்து இடங்களிலே சாராயத்தை உற்பத்தி செய்யும் பாட்டிலிங் ப்ளென்டிங் யூனிட் அனுமதிப்பது என்றும், அதைத் தொடர்ந்து அந்தச் சாராயத்தை விற்க 16 மொத்த வியாபாரிகளை நியமிப்பது என்றும், அதைப்போல, ஐ.எம்.எஃப்.எல். என்று சொல்லப்படக்கூடிய விஸ்கி, பிராந்திக் கான யூனிட்டை வைத்து, அதற்கு 16 பேர்களுக்கு மொத்த வியாபாரத்திற்கான லைசென்ஸ் கொடுப்பது என்றும் நோட்டிபி கேஷனிலே அவர்கள் வெளியிட்டார்கள். அப்பொழுதிருந்த ஒரு நிலை 18-ஆம் தேதிக்குள்ளாகவே இந்த ப்ளென்டிங் யூனிட்டுகளுக்கான மனுக்கள் வரவேண்டும். அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு மே மாதம் 25 ஆம் தேதி சாராயக் கடைகள் திறக்கப்படும் என்று அறிவிப்பு வந்தது. பிறகு என்ன காரணத் தினாலேயோ அதுவும் ஒத்தி வைக்கப்பட்டு மே மாதம் 25 ஆம் தேதிக்குப் பதிலாக ஜூன் மாதம் 25 ஆம் தேதி கடைகள் திறக்கப்படும் என்று ஒரு அறிவிப்பு பிறகு வந்தது. பிறகு அது ஜூன் 25 ஆம் தேதியிலிருந்து ஜூலை 1 ஆம் தேதி நிச்சயமாகத் திறக்கப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் பத்திரிகையிலே செய்தியை வெளியிட்டார்கள். அப்படி வெளியிடப்பட்டத நான் பத்திரிகையிலே பார்த்தேன். நிச்சயமாக வருகிற புதன் கிழமை—அதாவது ஜூலை 1 ஆம் தேதி கள், சாராயம் விற்பனைக்கு வந்துவிடும் என்று மாண்புமிகு அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் கூறி னார்கள் என்று பிரபலமான பத்திரிகைகளிலேயெல்லாம் அப் பொழுது செய்திகள் வந்தன. ஆனால் அப்பொழுதும் வராமல் ஜூலை மாதம் 16 ஆம் தேதி கடைகள் திறக்கப்படும் சூழ்நிலை வந்தது.

அவ்வாறு திறக்கப்பட்ட கடைகளில் பாட்டில்களில் வந்ததா? அப்பொழுது ஒன்பது பாட்டிலிங் யூனிட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். சிலயிடங்களில் சில பாட்டில்கள் வெளி வர முடிந்தது என்றாலும் சற்றேறக்குறைய எல்லாயிடங்களி லும் இந்த பாட்டில்கள் ப்ளான்ட் சரியாகச் செயல்படவில்லை

என்றும் செய்தி சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லிய சமயத்தில் அரசாங்கம் என்ன காரணத்திற்காக இப்படிக் காலதாமதத்தை வளர்த்துகிறார்கள் என்பதை எங்களால் எண்ண முடிந்தது. அப்ளிகேஷன் போடும் சமயத்திலேயே அதிலே ஒரு கன்டிஷன் இருக்கிறது. யார் அதற்கு அப்ளிகேஷன் போட்டாலும் நான் சாராயம் செய்யக்கூடிய தொழிற்சாலை வைத்திருக்கிறேன், I am in possession of a manufactory என்று அப்ளிகேஷன் ஃபார்மிலே பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது. என்ன காரணத்திற்காக, என்ன ஏற்பாட்டின்பேரிலே அப்படிப் பிரிண்ட் செய்தார்கள் என்பது விளக்கப்பட வேண்டிய செய்தியாகும்.

[மாலை 4—10]

இந்த 10 இடங்களுக்கும் லைசன்ஸ்கள் கொடுக்கப்படும்—லைசன்ஸ்கள் கோருகின்ற சமயத்திலேயே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல இடங்களிலே 'மானுபாக்ச்சுரிங் பாட்லிங் பிளான்டுகள் கட்டப்பட்டு முடியும் தருவாயிலே இருந்தன. கோயம்புத்தூரிலே கட்டினார்கள்; கடலூரிலே கட்டினார்கள்; சென்னையிலே இருக்கக்கூடிய நீலாங்கரை போன்ற இடங்களிலே கட்டினார்கள்; திருநெல்வேலியிலே கட்டினார்கள்; மதுரை போன்ற இடங்களிலே கட்டினார்கள். எல்லா இடங்களிலும் கட்டினார்கள். என்ன காரணத்திற்காக, லைசன்ஸ் கொடுப்பதற்கு முன்னதாகவே இப்படிக் கட்டுகிறார்கள்? ஏன் கட்ட வேண்டும்? லைசன்சிங் அத்தாரிட்டி கொடுத்ததற்குப் பிறகுதானே கட்ட வேண்டும். இப்படிக் கட்டுகிறார்களே என்று எதிர்க்கட்சி சார்பிலே நாங்கள் அதனை விசாரித்த சமயத்தில் இதிலே தவறுகள் இருக்கின்றன என்று நாங்கள் எடுத்துக்காட்டிய நேரத்தில், மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள், ''அவரவர்கள், வேண்டுமென்கிறவர்கள், அப்ளிகேஷன் போடுகிறவர்கள், பிளாட்டைத் தயார் செய்துவிட்டு அப்ளிகேஷன் போடலாம். ஆனால், அவர்களுக்கெல்லாம் லைசன்ஸ்கள் கொடுக்கப்படும் என்ற கட்டாயம், இல்லை'' என்று சொன்னார்கள். நாங்களும் அதை நம்பினோம், அப்படித்தானிருக்கும் என்று. ஆனால் நடைமுறையிலே பார்த்தால், எந்த, எந்த இடங்களிலே பாட்லிங் யூனிட் வேகமாகக் கட்டி முடிக்கப்பட்டதோ—இன்னும் சொல்லப் போனால், கடலூர் போன்ற இடங்களிலே ஏறக்குறைய ரூ. 75 இலட்சம் செலவழித்து, பாட்லிங் பிளான்ட்டை ரெடி செய்து, ஜூன் மாதம் 25 ஆம் தேதியே, பாட்டில்களிலே சாராயத்தை அடைத்து, தயார் செய்யக்கூடிய நிலையிலே இருக்கிறது என்று அந்த ஊரியிலேயிருந்து வெளி வரக்கூடிய பிரதான பத்திரிகைகளிலே செய்தி வந்ததை நாங்கள் சுட்டிக்காட்டிப் பேசியுங்கூட, அமைச்சர் அவர்கள் சென்னார்கள், அது அவர்களுடைய



இஷ்டம்; அப்ளிகேஷன் போடும்போது அவர்கள் யாருக்குப் போடுகிறார்களோ, அவர்கள் வேண்டுமானால் கொடுக்கலாம்; இவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று இருக்காது என்று சொன்னார்கள், ஆனால் நிலைமை என்ன? யார் கட்டினார்களோ, அவர்களுக்கே லைசன்ஸ்கள் கொடுக்கப்பட்டன அந்த 9 இடங்களிலும். அந்த 9 இடங்களிலும் யார், யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றால், எரி சாராய ஊழலில் ஏற்கனவே சிக்கி, கேரள மாநிலத்திலே உள்ள அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட ஒருவர், அவருடைய தொடர்பாகத் தமிழ்நாட்டிலே 10 இடங்களிலே பார்ட்னர்சிப் ஏற்படுத்திக்கொண்டு, அவர்கள் பாட்லிங் பிளான்ட்டை ஏற்படுத்திச் செய்கிறார்கள் என்று சொன்னதற்குப் பிறகுங்கூட, இங்கேயுள்ள கடலூரிலே பத்திரிகையிலே வந்தது. யூனியன் பாட்லிங் என்ற கம்பெனி. அதிலே, இன்னார், இன்னார் பார்ட்னர்களாக இருக்கிறார்கள். கேரளாவைச் சேர்ந்த, தாமஸ், புருஷோத்தமன், அதே போல், ஹிப்பி, எச்.என். என்பவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ரூ. 75 இலட்சம் செலவிலே இந்த பாட்லிங் யூனிட் தயாராகியிருக்கிறது என்று செய்தி வந்ததற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் இந்த விளக்கத்தைச் சொன்னார்கள். நாங்கள் உண்மை என்று கருதினோம். ஆனால், 25 ஆம் தேதியே பாட்லிங் பிளான்ட் ரெடியான, கடலூரிலே இருக்கக்கூடிய சாராயத் தொழிற்சாலைக்கு நம்முடைய அரசாங்கம் 26 ஆம் தேதி அனுமதி கொடுக்கிறது. ஆனால், அந்த பாட்லிங் பிளான்ட் ஜூன் மாதம் 25 ஆம் தேதியே ரெடியாகிவிட்டது. அதிலேதான் முறைகேடுகள் இருக்கின்றன என்று நாங்கள் எதிர்க்கட்சிகள் சார்பிலே, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பிலே, சொன்னோம். ஏனென்றால், ஒரு பிளான்ட்டில் உற்பத்தி வேண்டுமென்றால், அதற்கு இடம் வேண்டும், உற்பத்தி செய்ய கட்டிடம் கட்ட வேண்டும். அதற்கு ரூ. 50 இலட்சம் செலவு செய்ய வேண்டும், அதற்கு மெஷினரிகள் எல்லாம் பொருத்த வேண்டும், மின்சார சப்ளை வேண்டும். இவைகளுக்கெல்லாம்—பூர்வாங்க வேலைகளுக்கே 2 மாதங்கள், 3 மாதங்கள் ஆகின்ற சமயத்தில், அப்ளிகேஷன் போட்ட உடனேயே இவர்கள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அரசாங்கம் அவர்களோடு பேசிக்கொண்டு, உங்களுக்குத்தான் லைசன்ஸ் என்று முடிவு செய்து கொண்டதற்குப் பிறகுதான் அவர்கள் முடித்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நாங்கள் சுமத்துகிறோம், நாங்கள் சுமத்தாமல் இருக்க முடியாது இப்படி 9 இடங்களிலே கட்டி முடித்தார்கள். இப்படி 9 இடங்களிலே கட்டி முடித்து, ஓரிடத்திலே கட்டி முடிக்கப்படவில்லை. எந்த ஊரில்? கோயம்புத்தூரிலே கட்டி முடிக்கப்படவில்லை. இந்தக் கோயம்புத்தூரிலே பிளான்டிங் யூனிட்டுக்கு 2, 3 பேர்களுக்கு மேல் மனு போட்டிருக்கிறார்கள். என்ன காரணத்தினால், கோயம்புத்தூரிலே லைசன்ஸ் கொடுக்கவில்லை. அரசாங்கம் அல்லது அமைச்சர்கள் விரும்புகின்ற ஒரு நபருக்கு இந்த லைசன்ஸ் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால், கோயம்புத்தூரிலே இருக்கக் கூடிய அந்த பிளென்டிங் யூனிட்டுக்கு 'லைசன்ஸ் கொடுக்காமல், இந்த

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஆகஸ்டு 28

லைசன்ஸ்கள் இப்பொழுதுதான் கொடுக்கப்பட்டு, ஏற்கனவே வந்த மனுக்களைப் பரிசீலனை பண்ணாமல், அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, அதற்குப் பிறகு இப்பொழுதுதான் அங்கே லைசன்ஸ்களைக் கொடுத்திருக்கிறார்கள். யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், ஓரியன் தொழிற்சாலையிலே, மானேஜிங் டைரக்டராக இருக்கக் கூடிய, ஏற்கனவே எரிசாராய ஊழலிலே சிக்கி, கேரளாவுக்கு அனுமதி இல்லாமல் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள் என்று கேரள அரசாங்கத்தினால், புகார் செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த நபருக்கு, அவருடைய பினாமிக்கு இன்றையதினம் லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். என்றால், அதுவும் எப்படி லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள்?

* * *

அதேபோல் கோயம்புத்தூரிலே எப்படி கொடுக்கிறார்கள் என்றால், இந்த பிளெண்டிங் யூனிட்டிலே, இந்த 10 பிளன்டிங் யூனிட்டிலே, மிகவும் தாராளமான அளவுக்கு, கேரளாவிலே இருக்கக் கூடிய நெல்லிப்புழா ஜோஸ் என்று சொல்கின்றவருடைய தலைமையிலே இயங்கக்கூடிய 10 நபர்களுக்குத்தான் அனுமதி கொடுக்கப்பட்டு தமிழ்நாட்டிலே இன்றைய தினம் சாராய பாட்டில்கள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன.

அதுவும் பாட்டில்களில் விற்கிறதா என்றால் மே மாதம் வரையில் விற்கவில்லை. இப்போது செப்டம்பர் 15 ஆம் தேதி வரையில் ஒத்திவைத்திருக்கிறார்கள். செப்டம்பர் 15 வரையில் பாட்டில்களில் இல்லாமல் டிரம்களிலே கொடுக்கலாம், மற்ற கன்டெயினரில் கொடுக்கலாம் என்று விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். செப்டம்பர் மாதமாவது கொடுக்க முடியுமா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள்தான் விளக்கவேண்டும். இது சாராயத் தொழிற்சாலையைப் பற்றி, 10 பிளான்டிங் யூனிட்டைப் பொறுத்தவரையில் உள்ள விவகாரம்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 1971 ஆம் ஆண்டிலே எக்சைஸ் ஆக்ட் கொண்டு வந்தோம். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சரும், எல்லோரும் சேர்ந்து ஒரே கட்சியாக இருந்தபோது அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஏன் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தாமல் 1937 ஆம் ஆண்டிலே கொண்டு வரப்பட்ட சட்டத்திற்கு அமென்டுமென்ட் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டால். அரசியல் சட்டத்திலே 46 வது பிரிவிலே இந்த அரசாங்கம் செய்யக்கூடிய காரியங்களுக்கு எல்லாம் ஒரு புரொட்டக்ஷன் இருக்கிறது. டிக்ளரேஷன் அதாவது அடிப்படை உரிமைகள் என்று சொல்லக்கூடிய டைரக்டிவ் பிரின்சிபிள் என்ற உரிமையின்கீழ் பாதுகாப்பு வேண்டிதான் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று குற்றம்சாட்டுகிறேன்.

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1981 ஆகஸ்டு 28] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த பிளன்டிங் லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எக்சைஸ் கமிஷனர் என்று ஒருவர் இருக்கிறார். செக்ரட்டரி அண்டு எக்சைஸ் கமிஷனர் என்று இருந்த அரிபாஸ்கர் ஜூன் 15 ஆம் நாள் டெலகிராம் அடித்து, உங்களுக்கு பர்சனல் இன்டர்வியு நடத்த இருக்கிறோம். வாருங்கள் வாருங்கள் என்று அழைத்தார். ஆனால் அன்றைய தினம் அந்த எக்சைஸ் கமிஷனர் திடீரென்று காணாமல் போய் விடுகிறார். வருகிறார்கள், வருகிறார்கள் என்று சொல்லி அப்ளிகேஷன் போட்டவர்கள் எல்லாம் பகல் 12 மணியிலிருந்து மாலை 3 வரையில் ரெவின்யூ போர்டு ஆபிசில் காத்திருந்தார்கள். மாலை 4 மணிக்கு ஹோம் செக்ரட்டரி, திரு. சொக்கலிங்கம் அவர்கள் எக்சைஸ் கமிஷனராக அடிஷனல் பொறுப்பேற்று அன்று 4.00 மணிக்கு வந்தார். வந்தபின்னர் அனைவரிடமும் உங்களுடைய ரெப்ரசன்டேஷனைக் கொடுங்கள், பரிசீலிக்கிறேன். இது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டு, அடுத்த நாள் லீவு போட்டுவிட்டு, இந்த எக்சைஸ் கமிஷனருடைய பொறுப்பைப் பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டார். இந்த நிலை ஏன் ஏற்பட்டது. ஏன் அவர் மறுத்தார் என்பதை எல்லாம் அவர்தான் விளக்கவேண்டும். அன்றிலிருந்து இன்று பொறுப்பேற்றுக்கொண்டதாக சொல்லப்படுகின்ற திரு. டி. வி. வெங்கட்டராமன் வருகின்றவரையிலும், கடந்த 2 மாதகாலமாக இந்த இலாகாவிற்கு செக்ரட்டரி வரவில்லை. யாரும் வருவதற்கு அஞ்சினார்கள். அப்படி வராதபோது அந்த எக்சைஸ் அண்டு புரொகிபிஷன் டிபார்ட்மென்டில் டிப்டி செக்ரட்டரி, அன்டர் செக்ரட்டரி போன்றவர்களை வைத்துதான் காரியங்கள் நடைபெற்று வந்தன என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு எக்சைஸ் கமிஷனருடைய பணி என்னவென்றால், இந்த பிளன்டிங் யூனிட்டுகளுக்கு லைசன்ஸ் கொடுக்கும் லைசன்சிங் அத்தாரிடி அவர். ஆராக் ஹோல்சேல் லைசன்ஸ் கொடுக்கும் அத்தாரிடியும் அவர்தான். அந்த எக்சைஸ் கமிஷனர்தான் ஐ. எம். எப். எல், அதாவது மேல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பதற்கு மாவட்டங்கள்தோறும் விநியோகஸ்தர்களை நியமிக்கும் உரிமை கொடுக்கும் லைசன்சிங் அத்தாரிடியும் அவர்தான். அந்த எக்சைஸ் கமிஷனரிடத்திலே அப்ளிகேஷன் போடுகிறார்கள். 25 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய்கள் என்று டெபாசிட் கட்டி எல்லோருக்கும் கிடைக்கும் என்று வருகிறார்கள். எல்லாவற்றையும் அலசிப் பார்த்து யாரோ ஒருவருக்குத்தான் கிடைக்கும், அந்த எக்சைஸ் லைசன்சு 7, 8 பேர்களில் யாரோ ஒருவருக்குத்தான் கிடைக்கும். அந்த ஒருவர் யாராக இருக்க வேண்டும் என்றால், நியாயமான, அந்தக் கன்டிஷன்களை எல்லாம் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது இந்த ஷரத்துக்கு உட்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களைப் பூர்த்தி செய்யக் கூடிய குவாசி ஜுடிசியல் அத்தாரிட்டி என்று லைசன்சிங் அத்தாரிட்டி அந்தக் கமிஷனரிடத்தில் இருக்கிறது. ஆனால் கமிஷனர் அவர்கள் இந்த அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தினாரா, அல்லது பயன்படுத்த விடப்பட்டாரா என்ற

கேள்வியை நான் இந்த மன்றத்திலே எழுப்புகிறேன். இந்த பிளன்டிங் யூனிட் என்று சொல்கிறார்களே அதில் 10 பேர்களிலே 9 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். கோவையிலே இவர்கள் விரும்புகிறவர்களுக்குக் கிடைக்காத காரணத்தால், அந்த அப்ளிகேஷனை நிராகரித்திருக்கிறார்கள். அப்படி நிராகரித்து மீண்டும் புதிய அப்ளிகேஷனை தருவித்தார்கள். அப்படி தருவித்து, ஏற்கனவே எரிசாராய குற்றத்தில் இன்வால்வ் ஆன வோரியன் கெமிக்கல்ஸ் மேனேஜிங் டைரக்டரின் பினாமிக்கு இன்றையதினம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி கொடுத்திருக்கிறாரா, என்றால் இல்லை. 9,10–ஐயும் கோடிட்டு காட்ட விரும்பவில்லை. 9, 10 ஐயும் காட்டினேன் ஆனால் உங்களுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

மாலை 4.20

தென்னாற்காடு மாவட்டத்தில் 'பாட்லிங்', 'பிளென்டிங்'' யூனிட்டைப் பொறுத்தவரையில் நான் சொல்லவிரும்புகிறேன். ஒன்பது பேர்கள் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது ஐந்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை, இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டியிருக்கும். முடித்து விடுகிறேன். ஒன்பது அப்ளிகேஷன்களையும் அவர் பரிசீலிக்கிறார். அப்படி போட்டவர்களில் பரிசீலித்து, ஈ. ஐ. டி. பாரீ போன்ற பழங்கால கம்பெனிகளுக்கெல்லாம் கூட கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டு மதுரை மாவட்டத்திலே தேவாரத்திற்குப் பக்கத்திலே இருக்கிற லஷ்மணதாஸ் என்பவருக்கு நான் கொடுக்கிறேன் என்று முடிவு செய்கிறார்கள். நான் இதிலே குற்றம் காண விரும்பவில்லை. 9 அப்ளிகேஷனில் இதுதான் சரி, நியாயம் என்று அவர் செய்திருப்பாரானால் நான் குற்றம் காண விரும்பவில்லை. ஆனால் என்ன நிலைமை என்றால், எக்சைஸ் கமிஷனர், குவாசி ஜுடிஷல் அத்தாரிட்டி என்று சொல்லக்கூடியவர் தன்னுடைய அதிகாரத்தை முழுமையாக செலுத்தவிடாமல், அரசாங்கம் — இவர் ஆணை போட்டது 26 6.1981–ம் தேதி; கடலூரில் லஷ்மணதாஸ்ஸுக்கு 'பிளென்டிங் லைசென்ஸ்' கொடுக்கிறார். ஆனால் 23.6.1981ல் அரசாங்கம் புரொகிபிஷன் அன்ட் எக்சைஸ் துறையில் 70–ம் நம்பர் ஜி ஓ.வில் லஷ்மணதாசுக்குக் கொடுங்கள் என்று உத்தரவு போடுகிறது. எத்தனை நாளைக்கு முன்பாக? நாலு நாட்களுக்கு முன்னதாக அரசாங்கத்திலே ஒரு உத்தரவு போடுகிறார்கள். அந்த உத்தரவுக்கு நாலு நாட்களுக்கு பின் லைசென்ஸ் அத்தாரிட்டி என்ன செய்கிறார்; அவர் என்ன டிஸ்கஷன் செய்வது? அரசாங்கத்திலே லஷ்மணதாசுக்கு கொடு என்று உத்தரவு போட்ட பிறகு, * * *

*** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





லஷ்மணதாசுக்கு கொடுக்க வேண்டுமென்று ஜி. ஓ. வாக போட்டதற்கு பிறகு எக்சைஸ் கமிஷனர் என்ன செய்யமுடியும்? ஆகவே எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டு அவர் லஷ்மணதாசுக்கு கொடுக்கிறார்.

அதேபோல் 9 மாவட்டங்களிலே கொடுக்கிறார்கள். அதே போல 16 'ஹோல் சேல் லைசென்ஸ்', சாராயத்தை விற்பனை செய்வதற்கு. மொத்த வியாபாரிகள் என்ன செய்கிறார்கள்? பிளென்டிங் இருக்கிறது, அதற்கு பக்கத்தில் ஒரு கடை வைத்துக் கொண்டு அதை எடுத்து விநியோகம் செய்கிறான். அதற்கு ஒரு ஏஜென்ட் வேண்டுமா? 16 பேர்களை நியமிக்கிற இடத்தில் அரசாங்கம் உத்தரவு போடுகிறது. உத்தரவைப்பின்பற்றி அப்ளிகேஷன் போட்டவர்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு அவர்களுக்கு நான் கொடுக்கிறேன் என்று எக்சைஸ் கமிஷனர் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்தி இருக்கிறார்.

உதாரணமாக தென்னாற்காடு மாவட்டத்திலே இராஜாராம் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். எக்சைஸ் கமிஷனர் உத்தரவு போட்ட தேதி 14.7.1981. ஆனால் அரசாங்கம் இராஜாராமுக்குக்கொடுக்க வேண்டுமென்று அப்ரூவ் செய்து, ஜி.ஓ.விலே புரொகிபிஷன் அண்டு எக்சைஸ் ஜி. ஓ. நம்பர் 106 தேதி 11.7.1981 *** அதைப்போலத் தான் ஐ.எம்.எப்.எல். திறக்கிறது, திறக்கிறது என்று சொல்லி சாராயக் கடை திறந்தாகிவிட்டது. பிராந்தி கடை ஏன் திறக்கப்படவில்லை — 3 மாதகாலமாக—என்ன காரணம்? ஹோல் சேல் வைக்க முடியவில்லை. 16 ஹோல் சேலுக்கு 16 பேர்களை நியமனம் செய்கிறார்கள். பெங்களூரிலே இருக்கிற கோடே கம்பெனிக்காரன் மூலம் மொத்த வியாபாரிகள் ஆந்திராவிலே இருக்கக் கூடிய சுப்பராய ரெட்டி மூலமாக இந்த சாராயம், பிராந்தி வியாபாரத்தை தமிழ் நாட்டிலே இருக்கிறவர்கள் வாங்கியிருக்கிறார்கள். எப்படி வாங்க முடிந்தது? 16 மாவட்டங்களிலே பினாமிகளாக அவர்கள் லைசென்ஸ் பெறுகிறார்களே தவிர — ஹோல் சேல் லைசென்ஸ் எடுத்தாலும் சரி, பிளென்டிங் லைசென்ஸ் எடுத்தாலும் சரி, ஐ. எம். எப். எல். லைசென்ஸ் எடுத்தாலும் சரி, அவர்களுடைய பார்ட்னர்ஷிப் டீட்சை எடுத்துப்பார்த்தால் 10, 15 பார்ட்னர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இங்கே இப்படி பெயர்களைக் கொடுக்கிறார்களே, அவர்களைத் தவிர இன்றைக்கு கர்நாடகத்தைச் சேர்ந்த ஒருவர், அல்லது ஆந்திராவைச் சேர்ந்த ஒருவர் அல்லது கேரளாவைச் சேர்ந்த ஒருவர்தானே வந்திருக்கிறார். இதிலே முறைகேடு இல்லையா என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு சமாச்சாரத்தையும் இங்கே சொல்வதற்குக் காரணம் லைசென்சிங் அல்லது லைசென்ஸ் வழங்குவது என்று சொல்வது ஒரு ஏமாற்று வேலை. இன்னின்னாருக்கு பிளன்டிங், கொடுப்பது, இன்னின்னாருக்கு 'ஹோல் சேல்' கொடுப்பது

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] 1981 ஆகஸ்டு 28

இன்னின்னாருக்கு ஐ. எம். எப் எல். கொடுப்பது என்று சொல்லி விட்டு, கோடேஸ்வர் கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுத்துவிட்டு, கோபாலகிருஷ்ணா அல்லது அவரைச் சேர்ந்தவர்களுக்கு லைசென்ஸை கொடுத்துவிட்டு, யார் வேண்டுமானாலும் லைசென்ஸ் கேட்கலாம், கொடுக்கிறோம் என்று சொல்வது ஒரு ஏமாற்று வேலை. கோபாலகிருஷ்ணாவின் ஏஜென்ட் நெல்லூர் மாவட்டத்தில் இருக்கிறார். அவருக்கு இங்கே சொத்து கிடையாது. அரசாங்கம் சொல்லுகிறபடி 5 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். அதை அந்த முதலாளி கொடுக்கிறார். லைசென்ஸ் கொடுப்பதற்கு முன்னதாகவே அந்த நபர் 25,000 ரூபாய் கட்டி விடுகிறார். காரணம் அவருக்குத்தான் லைசென்ஸ் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பல்வேறு காரியங்களுக்காகத்தான் ஆர்டினன்ஸ் கொண்டு வந்தார்கள். சட்டமன்றம் 12–ந்தேதி வரை நடந்தது. அப்படி இருக்கும் போது ஏன் ஆர்டினன்ஸ் கொண்டு வரவேண்டும். ஆர்டினன்ஸ் கொண்டு வராமல், சட்ட மன்றத்திலேயே சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கலாமே.

'ஃபாரின் மேக் இந்தியன் லிக்கர்' 1936–லிருந்தே இருக்கிறது. அதற்கு உரிமம் வழங்க சட்டம் இருக்கிறது. அந்த உரிமத்திற்கு எஃப். எல்–1 என்று பெயர், அந்த எஃப். எல். 1 உரிமம் பெற்றவர் 'ஹோல் சேல்' செய்யலாம், ரீட்டேல் செய்யலாம். எங்கிருந்து வேண்டுமானாலும் வாங்கலாம், விற்கலாம். அப்படிப் பட்ட உரிமங்கள் சுமார் 327 இருந்தன. அவைகளின் செல்திறன் ஏப்ரல் மாதம் முடிய இருந்ததை இந்த அரசுதான் எக்ஸ்டன்ட் செய்து அடுத்தாண்டு மார்ச்சு 31–வரை செல்லும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த லைசென்ஸை ரத்து செய்து ஏன் ஆர்டினன்ஸ் போடவேண்டும்? இந்த 327–ல் 10 லைசென்ஸ் தான் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மீதி உள்ள எல்லாம் கூட்டுறவுத் துறைக்கு வழங்கப்பட்டிருந்தன. அதை எல்லாம் ரத்து செய்துவிட்டு, ஏன் 16 மாவட்டத்திற்கும் 16 பேர்களை நியமிக்க வேண்டும்? இந்த 16 பேர்களை நியமிப்பதற்காகத்தான் அந்த லைசென்ஸை ரத்து செய்திருக்கிறீர்கள்.

அதை ரத்து செய்துவிட்டு, ஐ. எம். எஃப். எல். லைசென்ஸ் வழங்குகிறோம் என்று சொன்னவுடன் அதற்கு அந்த கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் அப்ளிகேஷன் போட்டார்கள். எங்கெல்லாம் என்றால், மதுரை, திருச்சி, கோவை மாவட்டங்களிலிருந்து அப்ளிகேஷன் போட்டார்கள். சிந்தாமணி கூட்டுறவு நிறுவனமும் அப்ளிகேஷன் போட்டது. உடனே அரசாங்கத்திலிருந்து அந்த அப்ளிகேஷன்களை எல்லாம் ரத்து செய்யுங்கள், வாபஸ் வாங்குங்கள் என்று நிர்ப்பந்தித்தது ஏன்? ஆகவே, ஏற்கெனவே இருந்த லைசென்ஸை ரத்து செய்துவிட்டு, உங்களுக்கு வேண்டியவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது தானே உங்களுடைய எண்ணம்.



1981 ஆகஸ்டு 28]

இன்னும் சொல்லப்போனால், ரஷ்யாவிலே ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள். அது என்னவென்றால் எல்லோரும் 'வோட்கா' தான் சாப்பிடவேண்டும். (குறுக்கீடு) இல்லை, பல ரகம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். தவறு என்றால் நான் திருத்திக்கொள்கிறேன். அவர்கள் அடுக்கடி ரஷ்யாவுக்குப் போய் பழக்கப்பட்டவர்கள். * * * அதனால் தெரிந்திருக்கும்; நான் அங்கே போனதில்லை.

திரு. மு. அம்பிகாபதி : துணைத்தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் சொன்னார்கள், நான் அடிக்கடி ரஷ்யாவுக்குப் போய் பழக்கப்பட்டவன் * * என்று நான் அங்கே போயிருக்கிறேனே தவிர * * ஆகையால் அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

[மாலை 4.30]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : 16 பேர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கின்றபோது கூட்டுறவு நிறுவனங்கள் தெரியாத்தனமாக அப்ளிகேஷன் போட்டு அதன்பிறகு அவை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டியதன் அவசியம் என்ன?

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். 21 ஆம் தேதியிலே ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். நாங்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ப்ரைம் மினிஸ்டர் அவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு இப்படி எல்லாம் முறைகேடுகள் நடைபெறுகின்றன என்று சொன்னதற்குப் பிறகு அரசாங்கம் 21 ஆம் தேதியன்று திடீரென்று ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. அதாவது கோவாப்பரேட்டிவ் கன்ஸ்யூமர் ஃபெடரேஷன் மாகாணம் பூராவுக்கும் லைசன்ஸ் வைத்துக் கொள்ளலாம். மாகாணம் பூராவுக்கும் ரீடெயலுக்குக் கொடுக்கலாம் அவர்கள். ஆனால் யாருக்குக் கொடுக்கலாம் என்றால் 300, 400 கடைகளுக்கு அவர்கள் ஃபீட் பண்ணலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை. கன்ஸ்யூமர் ஃபெடரேஷனுக்கு மாநிலம் பூராவிற்கும் விற்கின்ற வகையிலே ஹோல்சேல் லைசன்ஸ் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு 16 ஐ.எம்.எஃப்.எல்–க்கு ஏன் ஹோல்சேல் லைசன்ஸ்? அண்ணா அவர்கள் அழகாக முன்பு சொல்லியிருக்கிறார்கள். "அதாவது சுவற்றிலே தாய்ப்பூனை போவதற்கு ஒரு சந்து, குட்டி பூனை

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

போவதற்கு ஒரு சந்து ஏன்? தாய்ப்பூனை போகிற வழியிலேயே குட்டிப்பூனையும் போகாதா? என்று சொல்வார்கள். அது போன்று கன்ஸ்யூமர் பெடரேஷனுக்கு ஹோல்சேல் லைசன்ஸ் கொடுப்பது என்று வைத்துவிட்டதற்குப் பிறகு இந்த ஐ.எம்.எப்ப்.எல்—க்கு ஏன் ஹோல்சேல் லைசன்ஸ் கொடுக்கப்பட வேண்டும்?

அப்படியானால் உங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஹோல்சேல் லைசன்ஸ் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டினை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இறுதியாக நான் ஒன்றைச் சொல்வதற்கு விரும்புகிறேன். சாராயக் கடை திறப்பதிலும், அதேபோல் ஐ.எம். எப்.எல். ஹோல்சேல் லைசன்ஸ் கொடுப்பதிலும், மேனுஃபேக்சரில் லைசன்ஸ் கொடுப்பதிலும் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊழல்கள், ஊழல்கள் என்று முதலிலே இருந்து சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதுபற்றி நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது என்பதும் தெரியும். அவ்வாறு நீதிமன்றத்திலே இருப்பதனால் அது பற்றிப் பேசுவது சப்டிஜூடிஸாகும். ஆகவே அந்தக் குற்றச்சாட்டு அவைக்குறிப்பில் இருக்கலாமா, கூடாதா என்பது பற்றி தாங்கள் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** எனக்கு நன்றாகத் தெரியும். எங்களை இப்படிப் பேசவிடக்கூடாது என்பதற்காகத்தான் சட்ட மன்றம் தொடங்குவதற்கு முன்பாக மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே ஒரு புகார் கொடுத்திருக்கிறீர்கள். அதன்மூலம் நாங்கள் பேசுவதைத் தடுத்துவிடலாம் என்று நினைத்திருக்கிறீர்கள். கோர்ட்டிலே உள்ள பிரச்சினைக்கு நாங்கள் போகவில்லை. இந்த அரசாங்கம் ஹோல்சேல் லைசன்ஸ் கொடுப்பதில், சாராயக் கடை திறப்பதில் பல தவறுகள் செய்திருக்கிறார்கள். அவற்றைச் சொல்லவில்லை என்றால் எதிர்க்கட்சிக்கு இங்கே என்ன வேலை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீதிமன்றத்தின் முன்னுள்ள பிரச்சினைகளைப் பற்றி இங்கே பேசமுடியாது.

**திரு. க. அன்பழகன் :** துணைத்தலைவரவர்களே, நம்முடைய அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திலே இதேபோன்று இன்னொரு மசோதா இங்கே வருவது பற்றி விவாதிக்கப்பட்டது. அதற்கு நீதி மன்றத்திலே ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட விதியினைப் பார்க்கின்றபோது விவாதிக்கலாம் என்று சபாநாயகர்



அவர்களும், ஆளும் கட்சியினுடைய முன்னவர் அவர்களும் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்களும், நீதி மன்றத்திலே உள்ள வழக்கை விசாரிக்கின்ற நீதிபதியைப் பற்றி ஏதாவது ஒரு வகையிலே குறை சொல்கிற முறையிலே பேசுவது தான் தவறு, ஆனால் அங்கே பேசப்படுகின்ற செய்திகளை எல்லாம் சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் பேசுவது தவறில்லை என்று அறிவித்தார்கள். அவ்வாறு நீதிபதியைக் குறை சொல்லி குற்றம் சாட்டி பேசக்கூடாதே தவிர மற்றவற்றைப் பேசலாம் என்று அலுவல் ஆய்வுக்குழுவிலே ஒப்புக்கோள்ளப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதியை குற்றம் சாட்டுவது என்பது மட்டும் அல்ல. அவருடைய எண்ணங்களை மாற்றுகிற வகையிலும் சட்டமன்றத்தில் பேச்சுக்கள் இடம் பெறக்கூடாது. அது தான் சப்ஜுடிஸ் ஆப் தி கோர்ட் எனப்படும். இங்கே வந்திருக்கும் சட்டமுன்வடிவு மதுவிலக்கைப் பற்றி. இந்த மதுவிலக்கு சம்பந்தமாக, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் அதே குற்றச்சாட்டு சம்பந்தமாக, நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால், அதனை குறிப்பேட்டில் இருக்கலாமா வேண்டாமா என்பதை தாங்கள் தீர்மானிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசுகிறபோது அந்த வழக்கு சம்பந்தமாக ஒரு முடிவினை ஏற்படுத்தும் வகையில், ஒரு எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் பேசக்கூடாது. அங்கே விவாதம் தனியாக நடைபெறுகிறது. இங்கே விவாதம் தனியாக நடைபெறுகிறது. இங்கே நடைபெறும் விவாதம் எந்த வகையிலும் அந்த விவாதங்களை பாதித்து விடக்கூடாது. (குறுக்கீடு)

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவில் சட்டத்தில் எப்படி இடம் வகுக்கப்பெற்றிருக்கிறது, என்பதை ஆராயாமல் அதை ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா என்பதை பேச முடியாது. சட்டம் எதெதெற்கு இடம் கொடுக்கிறது என்பதை பேசும்போது பல்வேறு குற்றச்சாட்டுகள், குறைகள் வரத்தான் செய்யும். ஏற்கெனவே ஒரு குறறச்சாட்டு நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால் பேசக்கூடாது என்று சொன்னால், அப்படி சப்ஜுடைஸ் ஆகக்கூடிய மசோதாவை சட்டமன்றத்திலே கொண்டு வராமல் இருப்பதில் ஆளும் கட்சி முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். சட்டமன்றத்தில் விவாதிக்காமல் சட்டத்தை நிறைவேற்ற அனுமதித்து விட்டு—நீதிமன்றத்தில் இருக்கிற பிரச்னையை பேச கூடாது என்ற நிலைமை இருந்தால்—சட்டம் நிறைவேறுகிறபோது எப்படி குறைகள் ஏற்படாமல் இருக்கும். அவ்வாறு ஏற்பட்டிருப்பதையும் நாம் தான் பார்த்திருக்கிறோமே. இவைகளைப் பற்றி எல்லாம் அலுவல்

ஆய்வுக்குழுவில், வேறு பிரச்னைகளில்—வேறு சட்டமுன்வடிவுகள் சம்பந்தமாக குறிப்பாக, மதுரை காமராஜ் பல்கலைக் கழக திருத்த மசோதா பற்றி விவாதித்தபோது, பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்று கொள்ளவில்லை. நீதிமன்றத்தைக் குற்றம் சாட்டாமல், அதன் உள்ளே செல்லாமல், அதற்கு சம்பந்தப்பட்ட பிரச்னைகளை பேசுவது தவறு அல்ல என்று சொல்லப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** Rule 41 *(9)* says: It must not relate to any matter which is under adjudication by any court of law or to conduct the of a Judge of the Supreme Court or of a High Court in his judicial capacity; என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலேயே தெளிவாக இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, வில்லேஜ் ஆபிசர் நியமனம் சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டிலே கேஸ் பெண்டிங்காகத்தான் இருக்கிறது. ஆனால் நாம் இங்கே விவாதித்து இருக்கிறோம். அது எந்த வகையிலும் சப்ஜுடைஸ் ஆப் தி கோர்ட் ஆகவில்லை. It is not Sub judice.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, இம் மாதிரியான மசோதாக்கள் வருகின்றபோது, நீதிமன்றத்திலே யாராவது வழக்குக்குச் சென்றிருப்பார்களேயானால், நாம் இங்கே விவாதிப்பதின் காரணமாக அவர்களுடைய வழக்கின் முடிவு பாதிக்கப்படாதா என்று கேட்டபோது, அதெல்லாம் ஒன்றும் பாதிக்காது வழக்கின் உள்ளே சென்றுதான் விவாதிக்கக் கூடாது, நீதிமன்றத்தில் விசாரணை ஏதும் நடைபெற்றிருந்தால் அதைப் பற்றிகூட சட்டமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது என்ற கருத்து அலுவல் ஆய்வுக் குழுவில் தெரிவிக்கப்பட்டது. ஸ்டே ஆர்டர் வாங்கியிருந்தாலும் கூட, அந்தப் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் நாம் விவாதித்திருக்கிறோம். சட்டத்தின் மூலமாக பல குற்றங்கள் நடைபெறுகிற வாய்ப்பு இருக்கும் போது, இந்த மசோதாவை அப்படிப்பட்ட பிரச்னைகளை விவாதிக்காமலேயே நிறைவேற்ற ஒப்புதல் அளித்தால், அப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுவதற்கு இந்த மசோதாவின் மூலமாக எதிர்க்கட்சி ஒப்புக்கொள்கிறது என்று பொருளாகிவிடும். எனவே நியாயத்தை யோசித்து துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, எந்தக் குற்றச்சாட்டு இப்போது சொல்லப்பட்டிருக்கிறதோ, அதேக் குற்றச்சாட்டு பற்றித்தான் நீதிமன்றத்திலே இன்றைக்கு வழக்கு இருக்கிறது. அதே குற்றச்சாட்டை இங்கே மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்கிறபோது, நீதிமன்றத்தில் இருக்கும் குற்றச்சாட்டை சொன்னதாக தான் அர்த்தமாகிறது. ஆகவே, நீதிபதிகளின் மனதை இன்புளுயன்ஸ் செய்யும் வகையில் இத்தகைய குற்றச்சாட்டுகள் இடம்பெறுவது நியாயமா என்பதை துணைத் தலைவர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



[மாலை 4.40]

**திரு. க. அன்பழகன் :** அதே குற்றச்சாட்டுக்குரிய விஷயம் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அதற்காக ஒரு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்படுமானால் அந்தச் சட்டத்தைக் கண்டிக்கவேண்டியவர்கள் எந்தக் குற்றச்சாட்டு அடிப் படையில் கண்டிப்பார்கள் அந்தக் குற்றச்சாட்டை விட்டுவிட்டு அந்தச் சட்டத்தை கண்டிக்க முடியுமா ? அப்படி அந்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசுவதற்கான உரிமை ஸப் ஜுடீஸ் என்ற முறையில் பறிபோனால் அரசாங்கம் ஒரு வழக்கைப் பாட்டுவிட்டு அதற்கான ஒரு சட்டத்தை இங்கே கொண்டுவருவது முறை என்று கருதப்படுமானால் பேசமுடியாத நிலையில் இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்ற ஆளும் கட்சி விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கருத்துகளைச் சொல்ல உரிமை இருக்கிறது. ஆனால் கேஸின் மெரிட்ஸ்—க்குள் விவாதிக்க உரிமை இருக்கிறது. ஆனால் என்று சொன்னால் 'மெரிட்ஸ்' போக வேண்டாம். ஊழல் என்று சொன்னால் என்பதில் அது வருகிறது.

**திரு. க. அன்பழகன் :** ஊழல் என்ற சொல்லுக்கு என்ன விரிவான கருத்து விளக்கம் இருக்கிறது என்று கேட்டால், தொகையோ பணமோ கையில் வாங்கினால்தான் ஊழல் என்று பொருள் அல்ல. நிர்வாக முறையில் தவறாக நடை பெற்றாலும், முன்தேதியில் காரியங்கள் நடைபெற்றாலும் பொறுப்பற்ற தன்மையில் நடைபெற்றாலும், நிர்வாகச் சீர்குலைவு காரணமாக இருந்தாலும் அத்தனையையும் சேர்த்ததுதான் ஊழல். 'OOZHAL' is a general definition. ஊழல் என்று சொல்கிற காரணத்தால் பேசக்கூடாது என்று சொன்னால் ஊழல் இல்லாத வேறு எந்தக் குறையையும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அவர்கள் சொல்வது 'இரெகுலாரிட்டீஸ்' என்றுதான் அர்த்தம்.

**திரு. க. அன்பழகன்;** அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் லஞ்சம் வாங்குவது மட்டும் ஊழல ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேஸின் மெரிட்ஸ்—க்குள் போகாமல், வரம்பைத் தாண்டாமல் பேசுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நான் எதிர்க்கட்சியைச் சார்ந்தவன். நான் உங்கள் கட்சியல்ல, என்னை கடமையாற்றவிடுங்கள். அந்த அடிப்படையில் இந்த ஏற்கனவே சுட்டிக்காட்டினேன். காலதாமதம். ப்ளென்டிங் யூனிட்டுக்கு லைசென்ஸ் வழங்குதல் காலதாமதம். பிராந்தி, விஸ்கி போன்ற லைசென்ஸ் கொடுப்பதில் காலதாமதம் பிரந்தி, விஸ்கி போன்ற வற்றிற்கு மாவட்ட லைசென்ஸ் கொடுத்து கடைகள் திறப்பதில் காலதாமதம். இவற்றை வைத்து இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் ஒரு எடிட்டோரியல் எழுதினார்கள். என்ன

எழுதினார்கள் என்றால், ஏன் இப்படிக் கடைகளைத் திறப்பதில் இவ்வளவு நாட்கள் தள்ளி தள்ளிப் போடவேண்டும். இது கோடிக் கணக்கான ரூபாய் பெறக் கூடிய ஒரு கேள்வியாக இருக்கிறது தள்ளிப்போடக்கூடிய கேள்வி இருக்கிறதே, இந்தக் கேள்விக்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் பேரில் ஏற்கனவே இருக்கக் கூடிய ரே கமிஷனில் இதையும் சேர்த்து விசாரிப்பதுதான் பொருத்தம் என்று எக்ஸ்பிரஸில் சொல்லியிருந்தார்கள். நான் இந்த அரசின் பேரில் குற்றஞ்சாட்டுகிறேன்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பெர்மிட்ஸ் இருக்கின்றன, பெர்மிட்காரர்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்றும், பெர்மிட் இல்லாதவர்கள் குடிக்க முடியாது, போலிஸ் காரர்கள் பிடித்து விடுவார்கள் என்றும் சொல்கிறார்கள். ஆனால் இன்றையதினம் பெர்மிட் ஒன்றுக்கு ஏறக்குறைய 200 லிட்டர்ஸ் சாராயம் விற்பனையாகி கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில்இஷ்யூசெய்யப்பட்டுள்ள பெர்மிட்ஸ்க்கும் இன்றையதினம் இஷ்யூ செய்திருக்கக் கூடிய சாராயத்தின் கணக்கையும் பார்த்தால் ஒரு பெர்மிட் வைத்திருப்பவர் 200 லிட்டர் குடிக்கக்கூடிய ஒருவன் தமிழ்நாட்டில் இருக்கிறான். இதுதான் உலகத்தில் இருக்கக்கூடிய புதிய விந்தை, சொல்லுக்கும் செயலுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அத்திப்பழத்தைப் புட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு என்பார்கள். அதேபோல் இன்றையதினம் மாபெரும் தவறுகளை இந்த அரசு செய்திருப்பதால் நாங்கள் பிரதமர் அவர்களுக்கு தந்தி கொடுத்தோம்.

* * * * * *

அது சம்பந்தமாக திரு. வெங்கடசுப்பையா அவர்கள் சென்ற வாரத்தில் பாராளுமன்றத்தில் சொல்கிற சமயத்தில் திரு ஸி.டி. தண்டபாணி, கிருஷ்ணமூர்த்தி, ராமமூர்த்தி இவர்கள் சொன்னபிரகாரம் தமிழ்நாடு அரசுக்கு for your comments என்று கேட்டு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இவர்கள் என்ன பதில் எழுதி இருப்பார்கள்? நாங்கள் சட்ட பூர்வமாக ரூல்ஸ்படிதான் செய்கிறோம், முறைப்படிதான் செய்கிறோம் என்றுதான் இவர்கள் எழுதியிருப்பார்கள். ஆனால் முறைக்கு விரோதமாக செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று என்னால் சொல்லாமலிருக்கமுடியாது. திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் எங்கள் செயற்குழுவைக் கூட்டி இப்படிப் பட்ட தவறுகளைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறக்கூடாது என்ற நோக்கத்தில்

* * * * *மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களுக்கு எடுத்துச் சொன்னதோடு மட்டுமல்லாமல், எங்களுடைய கட்சியின் சார்பில் மாண்புமிகு கவர்னர் அவர் களுக்கும் இந்த ஆண்டு ஜூன் 17 ஆம் தேதி ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். அவைகள் எல்லாம் அமைச்சர் அவர் களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு வந்திருக்குமென்று கருதுகிறேன். * * * *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



இந்த முறைகேடுகளினால் இந்த ஊழல்களினால் லைசன்ஸ் வழங்குவதிலேதவறுகள் நடந்திருக்கின்றன என்று கவர்னர்அவர் களிடத்திலே மனுகொடுத்துஇருக்கிறோம் பிரதமர் அவர்களுக்கு தந்திகொடுத்திருக்கிறோம். பின்னர் பிரதமர் அவர்களிடத்திலே மகஜர் கொடுத்திருக்கிறோம். இவைகள் எல்லாம் நம்முடைய மந்திரி அவர்களுக்கு வந்திருக்கும். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நிரபராதி. நாங்கள் சுத்தமானவர்கள்என்று நிருபிக்க வேண்டுமென்றால், ஏற்கனவே இருக்கக்கூடிய....

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊழல் என்று சொல்வது இன்றைக்கு சப்ஜுடியாக இருக்கும் போது, அதைச் சொல்ல முடியாது; * * என்பதை வெளியிலே யாரிடத்திலேயும் சொல்லலாம்: ஆனால் கவர்னர் இடத்திலே சொல்லப்பட்டது வெளியிலேயும் சொல்லப் படுகிறது. கவர்னர் அவர்கள் இடத்திலே சொல்லிய பிறகு, இங்கே சொல்ல வேண்டுமென்பதல்ல. அவைகளை யெல்லாம் நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி .கிருஷ்ணமூர்த்தி; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் * *ஏற்கனவே இருக்கக்கூடிய இந்த ரே கமிஷனில் இதையும் சேர்த்து விசாரியுங்கள் என்று கூறவேண்டும், அவர்களுக்கு பிரதமர் அவர்களிடம் இருக்கும் உறவின் காரணமாக. இதைத் தீர்த்துக் சொள்வதுதான் முறை. இதிலே தவறுகள் நடைபெற்றிருக் கின்றன; ஊர் வாயை மூட முடியாது. ஆகவே, இந்த மசோதாவை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத்க தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, இதிலே உங்களுடைய உத்தரவு தேவைப்படுகிறது. * * * என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி இன்றைக்கு நீதி மன்றத்திலே வழக்கிருக்கிறது. ஆனால். அதைப்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். எனவே, அதை நீக்கவேண்டுமேன்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: * போன்ற வாசகங் களை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி:* * * *அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பொறுப்பேற்றுக் கொள் கிறோம் ஏன்று சொல்வது வேறு. இது வழக்கு மன்றத்திலே இருப்பதால், பொறுப்பெற்றுக் கொள்கிறேன் என்று சொன் னாலும், இங்கே அதைப் பேசக்கூடாது என்பதுதான் விதிமுறை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[மாலை 4-50]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதாவதொரு குற்றச்சாட்டை அவையிலே குறிப்பிட வேண்டுமென்றால், அதுபற்றி முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் சொல்லி, அனுமதி பெற்றிருக்க வேண்டும். திடீரென்று ஆதாரம் இல்லாமல் பெரிய குற்றச்சாட்டைச் சொல்வது என்பது முடியாது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நாங்கள் பிரைமினிஸ்டருக்கு இதைப் பற்றி டெலகிராம் கொடுத்திருக்கிறோம். அந்த டெலிகிராமில் குறிப்பிட்டுச் சொன்னவற்றைத்தான் இங்கே சொன்னேன். அவற்றை நீக்க முடியாது. (கூச்சல் குழப்பம்)

**டாக்டர். மு. கருணாநிதி:** துணைத்தலைவர் அவர்களே. மன்றத்தில் சில விஷயங்கள் விவாதிக்கப்படக்கூடாது என்பதற்காக நீதி மன்றத்தை ஒரு கேடயமாகப் பயன்படுத்துவது நல்லதல்ல. ஏற்கனவே, கப்பல் பேரத்தைப் பற்றி ஒரு வழக்கு கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்கு முன்பு போடப்பட்டு இன்னும் வழக்குப் போட்டவர்கள் நீதிமன்றத்திற்கு வராமல் இருக்கிறார்கள். ஒரு வருஷம் இரண்டு வருஷம் வழக்கை நீட்டிக்கிற தந்திர ஏற்பாட்டைச் செய்துவிட்டு இங்கே அதைப் பற்றிப் பேச முடியாமல் வாயை அடைப்பது நல்லது அல்ல. ஆகவே, இந்தப் பகுதியை நீக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொல்லும்போது அதற்கான ஆதாரத்தை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி, அவரது அனுமதியைப் பெற்றே சொல்ல வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்வது மட்டும் போதாது. அதற்கான ஆதாரங்களை முதலிலேயே பேரவைத் தலைவரிடம் காட்டி அவரது அனுமதி பெற்றுப் பேசியிருக்க வேண்டும்.

**டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் நீக்குவதாக முடிவு எடுத்த பிறகு, உங்களைப் பற்றி சில புகார்களைச் சந்திக்கத் தயாராக இல்லை என்ற காரணத்தால்—அதாவது இந்த அரசு அல்லது ஆளும் கட்சி தயாராக இல்லையென்ற காரணத்தால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்—இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும்போது, நடைபெற்றிருக்கும் முறைகேடுகளுக்கு எங்களையும் உடந்தையாக்கும் முயற்சிக்கு நாங்கள் உடன்பட மறுத்து வெளிநடப்புச் செய்கிறோம்.



(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்) (கூச்சல் குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்றைக்கு ஆளும் கட்சியினர் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று சொன்ன பிறகும் கூட ஜனநாயகத்தில் எதிர்கட்சிகளுக்கு இருக்கிற வாய்ப்பைப் பயன் படுத்தி இங்கே அவர்கள் எடுத்துச் சொன்ன குறிப்புகளவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறும் என்று சொன்னதை எதிர்த்து காங்கிரஸ் கட்சி இப்போது வெளிநடப்பு செய்கிறது.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)
(கூச்சல்—குழப்பம்)

**திரு ஜீ. மூர்த்தி:** லாபியிலிருந்துகொண்டு சட்டமன்ற நடவடிக்கைகளை நடக்கவிடாமல் கலித்தனம் செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் காவலாளர் மூலமாக அவர்களைச் சட்டமன்றத்திற்கு அப்பால் தூக்கியெறிய வேண்டுமாய் சபாநாயகர் அவர்களைச் நான் கேட்டுக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கே. சமரசம் அவர்களை பேச அழைக்கிறேன்.

[மாலை 5-00]

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இன்றையதினம் இந்த அரசின் சார்பாகக் கொண்டு வந்திருக்கின்ற மதுவிலக்குச் சட்டத்திற்கான மசோதாவின்மீது நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இந்த மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிக் குற்றம் சொல்லக் கூடியவர்கள், குறை சொல்லக்கூடியவர்கள் இந்த நாட்டிலே மதுவிலக்கு தேவையா, தேவையில்லையா என்பதற்கு ஏதாவது காரணம் வைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்கள், மதுவிலக்கு தேவை என்று சொல்கிறார்களா, அல்லது மதுவிலக்கு தேவையில்லை என்று சொல்கிறார்களா என்பது தெரியவில்லை.

மதுவிலக்கைப் பற்றிய அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்த பொழுது மிகத்தேவையான ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்தபொழுது, இந்தச் சட்டம் மிகக் கொடுமையான சட்டம், நாட்டுமக்களைப் பாதிக்கக்கூடிய ஒரு சட்டம் என்று வாதாடி

னார்கள். பிறகு மதுவிலக்கைத் தளர்த்துவதற்காகச் சட்டம் வருகின்றபொழுது அதிலே மிகப் பெரிய ஊழல் நடந்துவிட்டது என்று சொல்கிறார்கள். எனவே, நான் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது காங்கிரஸ் கட்சியோ மதுவிலக்கு கொள்கை தேவை என்று சொல்கிறார்களா அல்லது மதுவிலக்கை தளர்த்தியது தவறு என்று சொல்கிறார்களா என்பது புரியவில்லை. அதைப் பற்றி யாரும் எந்தவிதமான இலட்சியக் கருத்தும் எடுத்ததாகச் சொல்லவில்லை. அதற்குமாறாக இங்கே ஏதோ இதிலே தவறு செய்து விட்டது, அதிலே தவறு செய்துவிட்டது என்று அங்கலாய்க்கிறார்கள்.

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்ட பொழுது காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக இருந்த பொழுது அந்தக் காங்கிரஸ் கட்சி செய்யாத அளவிற்கு மிகப் பெரிய ஹர்த்தால்களையும், போராட்டங்களையும் செய்தார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த பொழுது மிகப் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிய கம்யூனிஸ்ட் கட்சி செய்யாத மிகப்பெரிய போராட்டங்களையும், ஹர்த்தால்களையும். ஆளுநர் ஆட்சியின்பொழுது செய்யாத பெரிய போராட்டங்களையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டவுடனே திராவிட முன்னேற்றக் கழகம், வருடத்திற்கு 365 நாட்கள் என்றால் 365 போராட்டங்களை அறிவித்து, இதுவரையிலே தேய்ந்து தேய்ந்து வந்திருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இந்த ஆட்சியிலே என்ன குறை இருக்கிறது என்று சொல்லி, அறிவிக்க முடியாதவர்களுக்கு மதுவிலக்கைப் பற்றி இந்த ஆட்சியைக் குறைசொல்வதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

காரணம் என்னவென்றால், மது விலக்கு என்பது ஒரு பருவ மங்கை, அதைக் கன்னி மாடத்திலே காங்கிரஸ் கட்சியினர் வைத்திருந்தார்கள். ஆனால் தற்பொழுது இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவர் முதலமைச்சராக இருந்தபொழுது அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் ரெட் லைட் ஏரியாவில் — சிகப்பு விளக்கு பகுதியில் கொண்டு வந்து வைத்துவிட்டு, மீண்டும் கொண்டு போய் கன்னிமாடத்தில் வைத்துவிட்டு குலப்பெருமை பேசுவது, பெண்ணின் பெருமை பேசுவது என்பது விந்தையாக இருக்கிறது. நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இத்தனை கோடி ரூபாய் ஊழல் என்று எந்த முறையிலேயாவது, எந்தக் கோர்ட்டிலேயாவது, எந்த நீதிமன்றத்திலேயாவது கொண்டு வந்தால் அதைச் சந்திப்பதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த அரசும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை எங்கு சந்திக்க வேண்டுமோ அங்கே சந்திக்காமல் இப்படி ஊழல் என்று கூக்குரலிடுவது ஜனநாயகத்தைப் படுபாதாளத்திற்கு அழைத்துச் செல்லுகின்ற நிலைமைகளைத்தான் ஏற்படுத்தும். இதனால் கருணாநிதி அவர்களுக்கும், இந்திரா காங்கிரஸ்காரர்களுக்கும் எந்த விதமான நன்மையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "Motiveless, motivated, Iyago" என்பதைப்போல.



காரணம் இல்லாமல், காரியம் இல்லாமல் அப்படியே இந்த ஆட்சியைக் கீழே இறக்கிப் பார்த்து விடுகிறோம் என்று சொல்லக் கூடியவர்களுக்கு மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான தகுதியிருக்கிறதா ? மக்களின் செல்வாக்கை இழந்தவர்கள் இதைப்பற்றிப் பேசலாமா ? எப்படிப் பேசலாம் ? ஏதாவது கலாட்டா செய்து கொண்டிருக்கலாம் என்பதற்காக இவ்வாறு செய்வது நியாயம் தானா ? இதை ஜனநாயகம் தாங்குமா ?

இங்கே பேசிய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பலப் பிரச்சனைகளைப்பற்றி எடுத்து வைத்தார்கள். நான் அவருக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்கு எந்தத் தேதியில் தளர்த்தப்படும் என்று சொன்னார்களோ அந்தத் தேதியிலே அதைச் செய்யவில்லை, நேரமானது, காலம் தாழ்ந்தது என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (நோயாளியைப் பார்த்து குறிப்பிட்ட நாளில் டிஸ்சார்ஜ் ஆவாய் என்று டாக்டர் சொல்கிறார் : அந்த நாளுக்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்து டிஸ்சார்ஜ் ஆனால் அது தவறா) டாக்டர் ஒருவர் நோயாளியைப் பார்த்து உனக்கு சனிக்கிழமை நோய் தீரும் என்று சொல்கிறார், ஆனால் இரண்டு நாட்கள் கழித்து திங்கட்கிழமையன்று நோய் குணமானால் அது குற்றமா? வானிலை அறிக்கை என்று சொல்கிறார்கள், இன்று மாலை பரவலாக மழை பெய்யக்கூடும், 5 மணிக்கு மழை பெய்யக் கூடும் என்று சொல்கிறார்கள். ஆனால் 7 மணிக்கு மழை பெய்தால் அது மிகப்பெரியத் தவறா ? எனவே, ஜூலை மாதம் 5 ஆம் தேதி வருகிறது என்றார்கள், அன்றைக்கு வரவில்லை, எனவே, அதிலே பலகோடி ஊழல்கள் என்று சொல்வது நான் சொல்லுகின்ற உதாரணங்களில் இருப்பதைப்போன்றதுதான்

அவர்கள் இன்னொன்றையும் சொல்கிறார்கள். உரிமம் பெறுவதற்கு முன்பே கட்டிடத் தக் கட்டினார்கள் என்று சொல்கிறார்கள். இது என்ன பெரிய விஷயமா ? அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கட்டியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்கிறேன், பெண் பார்க்கப் போகிறார்கள், நிச்சயமாகிவிடும் என்ற எண்ணத்தில் நகை நட்டுக்களைச் செய்து வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் நிச்சயமாகவில்லை என்றால், இன்னொரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து கொள்கிறார்கள். எனவே, எதைச் செய்ய வேண்டுமோ அதை முன்னெச்சரிக்கையோடு செய்து வைத்துக் கொள்வதுதான் தமிழ்நாட்டின் பண்பு. எனவே, இதற்கும் அரசாங்க நிர்வாகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் அவைகளைப் பற்றிச் சொல்கிறார்கள்.

நான் தெரிந்துகொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கை விரும்பகிறதா இல்லையா ? காங்கிரஸ் கட்சி மதுவிலக்குக் கொள்கையில் என்ன நிலையை எடுக்கிறது ? திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கை ரத்து செய்யக்

கூடாது என்றால், குடிப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக் கூடாது என்று சொல்வதற்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன். குறைந்த பட்சம் இந்த ஹோல்சேல், ரீடெயில் வியாபாரத்திற்கு எடுத்திருக்கிறார்களே அவர்கள் அதை விட்டு விடவேண்டுமென்று சொல்லுவார்களா என்று கேட்க விரும்பு கிறேன். இதை வைத்து இந்த அரசாங்கம் பல கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு ஊழல் செய்து செய்து விட்டது என்று இந்த அரசாங்கத்தின் மீது குற்றஞ் சாட்டுவது மிகப்பெரிய வேடிக்கையாக இருக்கிறது.

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் தேவையான வற்றை, தேவையான நேரத்தில், தேவைக்கேற்றவாறு கொண்டு வருவதில் எப்பொழுதும் பின்தங்காது என்பதைத் தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்ட முன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதனுடைய காரண—நோக்க விளக்கத்தில் 'இச்சட்டத்தின் கீழ் உரிமங்களை வழங்குகிற அதிகாரிகள், வெளிப்படையான ஆதாரங்கள் இருந்து கள்ளச் சாராயம் கைப்பற்றப்படும் பட்சத்தில், மேற்படி உரிமங்களை வைத்திருப்பவர் தமது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ள அவருக்கு வாய்ப்பளிக்காமலேயே அந்த உரிமங்களைத் தற்காலிக மாக நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் அளிக்கப்படலாம் என்றும், அந்தக் கள்ளச் சாராயத்தின் மாதிரிகளை நீதிமன்றத்தில் காட்டு வதற்காக எடுத்துக் கொண்ட பிறகு அச்சாராயத்தை அழித்துவிட அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படலாம் என்றுங்கூட அரசு முடிவு செய்துள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் நாட்டிலே பெருகுவதற்குக் காரணம் இல்லை. அரசாங்கம் அதற்குரிய விவரங்களைப் புரிந்துகொண்டு இந்த மது விலக்குச் சட்டத்தை மேன்மேலும் திருத்திக் கொண்டு இருப்பதை விட அதை ரத்து செய்ய அரசாங்கம் முன் வரவேண்டும். இதிலே வெட்கமே படக் கூடாது, ரொம்ப வெட்கப்படுகிறீர்கள். காங்கிரசும் டி.எம்.கே.யும் கூட்டாக ஆளுகின்ற பாண்டிச்சேரியில் அவர்களுக்கு வெட்கமே கிடையாது (மேசையைத் தட்டும் ஒலி). இங்கேதான் அவர்களுக்குக் கொஞ்சம் வருகிறது. வெட்கம் அவர்களுக்கு இங்கே வருகிறதே தவிர, பாண்டிச்சேரியிலோ, ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ அவர்களுக்கு வெட்கம் கிடையாது. அங்கே சுத்தமாகக் கடைகள் திறந்துதான் இருக் கின்றன. நீங்கள் கொஞ்சம் சங்கோஜப்படுகிறீர்கள், தேவையே கிடையாது. நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன், சைவ மீன் குழம்பு வைக்காதீர்கள். வைத்தால் மீன் குழம்பு வையுங்கள், இல்லாவிட்டால் சாம்பார் வையுங்கள். சாம்பார் வைக்க முடியாது. மீன் வாங்கியாயிற்று, அரிசியாயிற்று, புளி கரைத்தா



யிற்று, மீன் குழம்புதான் வைக்கவேண்டும். அவரவர்கள் எரிக்க ஆரம்பித்ததற்குப் பிறகு, அவரவர்கள் இறக்க ஆரம்பித்ததற்குப் பிறகு, அவரவர்கள் குடிக்க ஆரம்பித்ததற்குப் பிறகு, இனிமேலும் இந்தச் சட்டம் என்பது செல்லாக் காசாகிவிட்டது என்கிற முறையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியும் தெளிவாக மதுவிலக்கை ரத்து செய்யவேண்டு மென்று நாங்கள் வலியுறுத்தினோம். நீங்கள் மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்று தளர்த்தினீர்கள். தளர்த்தியதனுடைய விளைவு பர்மிட் சிஸ்டம் கொண்டு வந்தீர்கள். உண்மையிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும், நன்றாகத் தெரியும், விளக்கமாகத் தெரியும், விரிவாகத் தெரியும், விவரமாகப் புரியும். குடிக்கின்ற வர்கள் வாங்கியிருக்கிற பர்மிட்டை விட கடைக்காரர்கள் வாங்கி யிருக்கிற பர்மிட் அதிகம். கள்ளுக்கடைக்காரர்கள் 250 வாங்க வேண்டும், சாராயக் கடைக்காரர்கள் 300 வாங்க வேண்டும். குப்புசாமி குடிப்பதற்கு கோவிந்தசாமியா பர்மிட் வாங்குவது? பர்மிட் சிஸ்டத்தை கம்ப்ளீட்டாக நீங்கள் ரத்து செய்துவிட்டு, அதுபற்றி சங்கோஜம் இல்லாமல், மதுவிலக்குத் தளர்த்தல் என்பதற்குப் பதிலாக, நீங்கள் ரத்து செய்ய வேண்டும்.

கேரளாவில் இருப்பதைப் போன்று மது சம்பந்தப்பட்ட, மதுமர சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தமிழகத்திலே கொண்டு வந்து சுமார் 15 இலட்சம் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான முயற்சிகளைத் தமிழக அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். கேரளாவிலே இருக்கிற கள் இறக்குகின்ற முறையும் சரி, விநியோக முறையும் சரி, மிகச் சிறப்பான முறை. இப்பொழுது தமிழகத்திலே கள்ளைப் பவுடரிலிருந்து தயாரிப்ப தாகக்கேள்வி. கள்ளுக்கு ஒரு பவுடர் (குறுக்கீடு) கோயம்புத்தூரிலே தான் சொன்னார்கள். அங்கே ஒரு பிரபலமானவர், (குறுக்கீடு) 15, 16 ஆம் தேதியிலே நான் கோயம்புத்தூரிலே இருந்தேன். (குறுக்கீடு) அங்கே தென்னை மரம் இருக்கிறது. அங்கே குத்தகை எடுத்த ஒருவர்—ரொம்ப எக்கச்சக்கமான சில்லறை வசதி படைத்த ஒருவர்—திருப்பூர் போன்ற இடங்களிலே கடைகளை, பல இலட்சம் ரூபாய் அவர் காரிலேயே வைத்துக் கொண்டு, கடைகளை எடுத்து வந்ததாகக் கேள்வி. தற்போது அவர் சரண்டர் செய்ய முயற்சிப்பதாக அந்தப் பகுதியிலே பேசுகின்றார்கள். அவரிடம் கள்ளுக்கும் ஒரு பவுடர், சாராயத்திற்கும் ஒரு பவுடர், இரண்டுக்குமே இருக்கிறது. 10 தொட்டி தண்ணீரை வைத்துக் கொண்டு, 2 ஸ்பூன் பவுடரைப் போட்டால், அது கள்ளாகி விடும். அதே போல் 10 தொட்டி தண்ணீர் வைத்துக் கொண்டு, 2 ஸ்பூன்

பவுடரைப் போட்டால், அது சாராயமாகிவிடும். இப்படி, ரெடிமேட் சாம்பார் மாதிரி, ரெடிமேடாகவே கள்ளையும், சாராயத்தையும் உற்பத்தி செய்கின்ற நிலையை தற்போது கோவை மாவட்ட மக்கள் (குறுக்கீடு)......

[மாலை 5-10]

அந்த கான்ட்ராக்ட் எடுத்திருக்கின்றவர்களுடைய குறி கோவை மாவட்டத்தின்மேல் ஏற்பட்டிருக்கக்கூடிய அபிலாஷையின் விளைவு. கோவை மாவட்ட அமைச்சர்கள் மன்னிக்கவேண்டும். இந்தக் கடைகளில் இப்படி. தயாரிக்கப்படுகிறது என்று தெரிந்த மக்கள் அந்தக் கடைகளில் சாப்பிடுவதை நிறுத்திவிட்டார்கள். அதன் விளைவு, லைசன்சை சரண்டர் செய்ய அந்த முதலாளிகள் முன்வருகிறார்கள். காரணம் என்ன? நீங்கள் மதுவிலக்கை ரத்து செய்து கள்ளுக்கடையை முன்பிருந்தபடியே கள்ளுக்கு வேண்டிய டிக்ரி அதற்கு முறையான இயந்திரங்கள் இருக்கின்றன. சாராயத்திற்கும் இருக்கின்றன. அதைப்போல செய்யாததன் விளைவு, கள்ளுக்கடைகளிலும் சாராயக் கடைகளிலும் அதிக மோகம் கொண்ட சிலபேர் கலவை கள்ளையும் சாராயத்தையும் விற்க முற்பட்டதன் விளைவாக, சாராயத்தைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு மீதியை அழித்துவிட்டு கோர்ட்டிலே காட்டுவதற்காக இந்தச் சட்டம். கடைகளிலே விற்கக்கூடிய சாராயத்தை விட எரி சாராயத்தின் விலை குறைச்சல் என்று சொல்லப்படுகிறது. கர்நாடக மாநிலத்திலே சாராயம் போட்டு, ஊறல் போட்டு, தயாரிக்கிறார்கள். திராவிடத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற கர்நாடகம்—கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும், உன் உதரத்தே உதித்து, ஒன்று பலவாயிடினும், அழியா உன் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்துதுமே—என்று திராவிடத்தின் ஒரு பகுதியாகிய கன்னடத்தில் எரிசாராயம் சாப்பிட்டு 350, 400 பேர்களுக்கு மேல் எமலோகம் போயிருக்கிறார்கள். அங்கே சாராயம் தயாரிப்பதற்காக, குஷ்டரோகிகளைக் கொண்டு வந்து சாராய ஊறலிலே குளிப்பாட்டி, அதிலிருந்து தயாரித்தால் 'கிக்' இருக்கும் என்று கர்நாடக சட்டமன்றத்தில், ஒரு காங்கிரஸ் பெண் உறுப்பினர்— நான் சொல்லவில்லை—காங்கிரஸ் பெண் உறுப்பினர் கூறியிருக்கிறார்கள்.

எரிசாராயம் என்பது கர்நாடக அரசையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது நம் பகுதியிலும் எரிசாராயம் என்ற பிரச்சினை விளைவாகத்தான் இத்தகைய ஒரு சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு மதுவிலக்கைப் பொருத்தவரை, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய 15 இலட்சம் மது மரத் தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு வர வேண்டும்.





தமிழகத்தில் மதுவிலக்கு முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். அதன் மூலமாக வருமானங்களை அரசு ஈட்டி, படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும், விவசாய தொழிலாளர்களின் மேம்பாடு, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது, படித்த வேலையற்றிருக்கின்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை கொடுப்பது, விவசாயிகளுக்கு மேலும் உதவித் தொகை கொடுத்து நெல் கொள்முதல் செய்வது, இப்படிப்பட்ட சமுதாய முன்னேற்ற பிரச்சினைகளுக்கு இந்தப் பணத்தை செலவிடக்கூடிய வகையில் தமிழக அரசு மதுவிலக்கை முழுமையாக ரத்து செய்யவேண்டும். இது ஒன்று. இரண்டாவது தமிழகம் முழுவதும் இருக்கிற மதுமரத் தொழிலாளர்களுக்கு கேரளத்தைப்போல ஒருங்கிணைந்த ஊதியம் மற்றும் சட்டப்படிக்கான பாதுகாப்புகளைச் செய்வதற்கான சட்டங்களை உடனடியாக கொண்டு வரவேண்டும்.

மூன்றாவதாக, கோவில்கள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ரைஸ்மில்கள், குளக் கரைகள் போன்ற இடங்களில் எல்லாம் சாராயக் கடைகளும், கள்ளுக்கடைகளும் இருக்கக் கூடாது என்று நீங்கள் அறிவித்திருந்தாலும், கடைகள் திறந்து இருக்கின்றன. கல்லூரிக்குப் பக்கத்தில் இருக்கின்றது. மன்னார்குடி ராஜகோபாலசாமி கல்லூரிக்கு போகின்ற வழியில், வ. உ. சி. ரோட்டில் சாராயக் கடை இருக்கின்றது. அதைக் கடந்தால் கள்ளுக்கடை. முன்பு அதே பகுதியில் ராஜாத்தோப்பில் இருந்தது. இப்போது அது நெருங்கி காலேஜ் முன்னாடி வந்திருக்கிறது. ரைஸ் மில்லுக்குப் பக்கத்திலே இருந்தால் பெண்கள் நெல் அரைக்க போக முடியவில்லை. அதை மாற்றவேண்டும். பாண்டிச்சேரியில் குடித்து விட்டு ரோட்டிலே வர முடியாத நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

திருத்துறைப்பூண்டி தாசில்தாரைப் பார்த்து சட்டமன்ற உறுப்பினர் உத்திராபதி அவர்கள் கேட்டபோது வேறு இடம் இல்லை; ரைஸ் மில் பக்கத்திலேதான் இருந்தது, கொடுத்தோம் என்கிறார்கள். அங்கு ரைஸ் மில் இருக்க வேண்டுமா அல்லது சாராயக்கடை இருக்கவேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய பெர்மிட் முறையிலே உள்ள எக்ஸ்பீரியன்சை வைத்துச் சொல்லுகிறேன். குடித்துவிட்டு வெளியே வருகின்றவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். சில பேர்கள் ஏதோ கள்ளுக்கடை திறந்த உடனே கொலை கொள்ளை நடக்கிற மாதிரி பத்திரிகைகளிலே போடுகிறார்கள். அதற்கு முன்னாலேயும் 7 கொலை, 8 கொலைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றது நம்நாட்டிலே. எனவே பூரணமான ஞானம் பெற்று வந்த ஞானிகள் மாதிரி, மதுவிலக்கு இருக்க வேண்டுமா, இருக்கக்கூடாதா என்று சொல்லக் கூட சில கட்சிகளுக்கு தைரியம் கிடையாது.

பெர்மிட் முறைகளிலே ஏற்பட்டிருக்கிற ஒரு விளைவை இந்த சபையிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். கோவையிலே 15, 20 பேர்களை போலீஸ் பிடித்துக் கொண்டு போய் நான் சமீபத்தில் 2, 3 நாள் அங்கே போயிருந்தேன், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர், பெருந்துறை ஆகிய இடங்களுக்கு கோர்ட்டிலே நிறுத்தியிருக்கிறார்கள். ஏன் குடித்தீர்கள் என்று கேட்டிருக்கிறார், கடையிலே போய் பணம் கொடுத்தேன், அவன் கொடுத்தான், நான் குடித்தேன், என்று சொன்னார்கள். பெர்மிட் இருக்கிறதே தெரியுமா, என்று கேட்டிருக்கிறார். நான் அன்னத்தை கண்டேன், பணத்தை கொடுத்து குடித்தேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிபதி நல்லவர், போலீசை பார்த்து இதுமாதிரி கேஸ்களை இனிமேல் கொண்டு வராதீர்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார். எனவே பெர்மிட் சிஸ்டத்தினால் இப்படியெல்லாம் நடைபெறுகிறது. யதார்த்தம் நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு தெரியும். இன்றைக்கு பெர்மிட் சிஸ்டம் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். இதனுடைய விளைவு காவல்துறை அதிகாரிகள் மத்தியிலே மீண்டும் ஊழலை ஏற்படுத்த வழி செய்யும்.

கள்ளுக் கடையைப் பொறுத்த வரையில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் மரத்துக்கு தூர் வாரி என்பது 40 ரூபாய், 30 ரூபாய் என்று போட்டிருப்பதாக தெரிகிறது. அதனுடைய விபரம் சரியாகத் தெரியவில்லை. முன்பு 7, 8 ரூபாய்தான் இருந்தது. பாண்டிச்சேரியிலே 7 ரூபாய்தான் இருக்கிறது. மரத்திற்கு இங்கு 20 ரூபாய் போட்டிருப்பதாகத் தெரிகிறது. தென்னை மரம் என்பது 6 மாதத்திற்குத்தான் கள் கொடுக்கும். அப்படிப்பட்ட தன்மைதான் தென்னை மரத்திற்கு உண்டு. இந்த தொழிலை காப்பாற்ற வேண்டுமென்றால் தூர் வரியை குறைக்க வேண்டும்—முடிந்தால் ரத்து செய்ய வேண்டும், இல்லாவிட்டால் குறைக்க வேண்டும். பெர்மிட் சிஸ்டத்தை முழுமையாக ரத்து செய்யவேண்டும். இதன் காரணமாக சாதாரண ஜனங்களை போலீஸ் பிடித்துக் கொண்டு போகிறது. விவசாயத் தொழிலாளி 'பேக்' வாங்கியா பெர்மிட் வைத்துக் கொள்ள முடியும். அவனுக்கு சட்டையே கிடையாதே, டாலரிலா போட்டு விடுவது? விவசாயத் தொழிலாளிகள் வாரத்திற்கு ஒருமுறை ஏதோ சாப்பிடுவோம் என்று சாப்பிடுகிறார்கள். கள் சாப்பிடுவது யார்? லேண்ட் ஓனர்சா கள் சாப்பிடுகிறார்கள்? விவசாயத் தொழிலாளிகள், நகரசுத்தி தொழிலாளிகள், மூட்டை தூக்குபவர்கள்தான் கள் சாப்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள் பெர்மிட் வாங்குவது என்பது முடியவே முடியாது. ஆகவே பெர்மிட் முறையை ரத்து செய்யவேண்டும். தென்னை மரத்திற்கு தூர் வரியை குறைக்க வேண்டும். மது மர தொழிலாளர்கள் காப்பாற்றப்பட வேண்டும். லட்சக்கணக்கான தொழிலாளர்களை பாதுகாக்க, கேரளாவைப் போல பாதுகாப்பு சட்டம் கொண்டு வரவேண்டும். இந்த தொழிலிலே ஒரு சிறந்த நிலை ஏற்படுத்தும் போதுதான் கள்ளச்சாராயம் என்பதை அறவே ஒழிக்க முடியும். இந்தச் சட்டத்தைப் போட்டிருப்பதால் சில இடங்களில் சாராயம் காய்ச்சுவதற்கு ஊக்கம் கிடைக்கலாம்.





இத்தகைய சட்டங்களின் மூலமாக இதை கட்டுப்படுத்த முடியாது. பழையபடி லஞ்சம், ஊழல், காவல்துறையிலே சிலபேர் மாமூல் பெறுவது என்ற இந்த நிலைமைகள் எல்லாம் உருவாகும்.

இந்த சட்டத்தை தெளிவான முறையிலே கொண்டு வர வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி முடித்துக்கொள்கிறேன்.

[மாலை 5—20]

* திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு மீது நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்குப் பிரச்னை சம்பந்தமாக எங்கள் கட்சியின் கொள்கையை இந்த மன்றத்திலே எங்கள் கட்சித் தலைவர்கள் பலமுறை தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த மசோதாவின் மீது சில கருத்துக்களைச் சொல்லும்போது, சாராயம் காய்ச்சுவது சம்பந்தமாக சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு முழுமையாக வெளியிலே கள்ளச்சாராயம் காய்ச்சுவது தடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஒருபுறம் சாராயக் கடைகளைத் திறந்து, சாராயம் விற்பனை செய்யும் போது அதற்கு அருகாமையிலேயே கள்ளச்சாராயம் விற்பனை சர்வசாதாரணமாக நம்முடைய மாநிலத்தில் எல்லாப்பகுதிகளிலும் நடந்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, முதலில் இந்த கள்ளச் சாராயம் காய்ச்சுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு கள்ளச்சாராயம் விற்பனைக்கு காரணமாக இருப்பது எது என்றால், சாராயக் கடைகளில் விற்கப்படும் சாராயத்தின் விலை அதிகமாக இருப்பதுதான். அதனால்தான் வெளியே கள்ளச்சாராயம் விலை குறைவாக இருப்பதால்தான் மக்கள் அதை நாடி செல்கிறார்கள். ஆகவே. சாராயக் கடைகளில் விற்கும் சாராயத்தின் விலையைக் குறைத்து, சாதாரணமாக எல்லோரும் வாங்கிக் குடிக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, சாராயக் கடைகளிலே விற்பனைச் செய்யப் படும் சாராயம் நல்ல தரமுள்ளதாக இருக்கவேண்டும். ஏற்கெனவே இந்த சாராய விற்பனைக்கு லைசென்ஸ் வழங்கியபோது, நெல்லை மாவட்டத்திலும் குமரி மாவட்டத்திலும் அதை தடுத்த நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால் அதைக் குடித்தால் ஆபத்து விளைவிக்கும் தன்மை அந்த சாராயத்திலே இருந்தது. என்று கண்டறியப்பட்டது. எனவே, கடைகளில் நல்ல சாராய மாக விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, சாராயக் கடைகளும் கள்ளுக்கடைகளும் எந்த எந்த இடத்தில் வைக்கப்பட வேண்டுமென்று விதிமுறைகள் இருந்தாலும் கூட, பெருவாரியான கிராமங்களிலும் நகரங்களிலும் கும்பலாக மக்கள் வாழும் பகுதிகளில் இந்தக் கடைகளை வைத்திருப்பதால் இன்றைக்கு பல சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கும்பலாக மக்கள் வாழும் பகுதிகளிலே சாராயக் கடைகளையும், கள்ளுக்கடைகளையும் வைக்க அனுமதிக்கக் கூடாது, ஏற்கெனவே வைத்திருக்கும் கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவதாக, இந்த கள்ளச்சாராயம் நடமாட்டத்தைக் கண்டு பிடிப்பதற்காகவும், தடை செய்வதற்காகவும் 'எக்சைஸ் இலாகா' என்று ஒரு பிரிவை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையில் இருக்கும் எக்சைஸ் இலாகாவினர் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை கண்டுபிடித்தால் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வதில்லை. அங்கே இருக்கிற நம்முடைய பயணிகள் விடுதியின் ஒரு கேம்ப் ஷெட்டிலே அடைத்து வைத்து, என்னென்ன முறைகேடுகள் உண்டோ அத்தனையையும் செய்கிறார்கள். இந்தமாதிரியாக எக்சைஸ் இலாகாவினர் செய்யும் முறைகேடுகளை உடனே தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அவர்கள் கண்டுபிடித்தால், முறைப்படி நடவடிக்கை எடுக்க, குழித்துறையில் எக்சைஸ் இலாகாவுக்கு தனி போலீஸ் பிரிவும் அவர்களுக்கு தனி ஆபீசும் வைக்கவேண்டும்.

இந்தக் கள்ளச்சாராயத்தை தடுத்து நிறுத்துவதிலே இன்னொரு சங்கடம் இருக்கிறது. இன்றைக்குக் கள்ளச் சாராயத்தை போலீஸ் நிலையத்தில் பெருவாரியாக வைத்திருக் கிறார்கள். போலீஸ் நிலையத்திலிருந்து மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குக் கொண்டு போகும் போது அந்தச் சாராயத்தின் 'சாம்பிளை' மட்டும் எடுத்துவிட்டு, மீதி இருக்கிற சாராயத்தை மாஜிஸ்டிரேட் முன்னாலேயே வைத்து அழித்துவிட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை கையாண்டால்தான் போலீஸ் நிலையங்களில் முறைகேடுகளை தடுக்கமுடியும்.

ஏற்கெனவே போலீஸ் நிலையங்களில் இந்த மதுவிலக்குச் சட்டம் இருக்கும்போது எப்படி இருந்ததோ அப்படியேதான், அந்த நிலையிலேதான். இப்போதும் இருக்கிறது; எந்தவிதமான மாற்றமும் இல்லை. அந்த நிலை ஒழிக்கப்பட வேண்டுமென்றால், லஞ்சலாவண்யங்கள் தடுக்கப்பட வேண்டுமென்றால் 'சாம்பிளை' மட்டும் எடுத்துவிட்டு, மீதியை அழித்துவிடும் முறையை கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல சாராயம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லும் போது ஒரு கருத்தை குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகத்தில் இரண்டு



மாதங்களுக்கு முன்னால் நடந்த விபத்து நமக்கு தெரியும். மோசமான சாராயத்தை விஷம் கலந்த சாராயத்தை வாங்கிக் குடித்ததால் சுமார் 350 பேர்களுக்கு மேல் மாண்டுபோன சரித்திரம் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு முறைகேடு இங்கே நடக்காமல் இருக்க நல்ல சாராயத்தை விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த சாராயம் உற்பத்தி செய்வதை இன்றைக்கு தனியார்களுக்கு விட்டிருக்கிறார்கள். அப்படி தனியார்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருப்பதைப்போல எங்களுக்கும் வேண்டுமென்று பல கூட்டுறவு ஸ்தாபனங்கள் கேட்கின்றன. குறிப்பாக அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை—அதையும் கவனிக்க வேண்டும். இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் இருக்கிற ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் இந்த சாராயத்தை உற்பத்தி செய்கின்ற உரிமையை எங்களுக்கும் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்போன்று கூட்டுறவு ஸ்தாபனங்கள் சாராயம் உற்பத்தி செய்ய முன்வந்தால் அந்த ஸ்தாபனங்களுக்கும் லைசென்ஸ் வழங்கினால் அது முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மதுவிலக்குச் சட்டத்தைப் பொருத்தவரையிலே பெர்மிட் சம்பிரதாயம் இருக்கின்றது. அதாவது உரிமம் பெற்றுக் கொண்டுதான் குடிக்கவேண்டும் என்று இருக்கின்ற நிலைமை சரியில்லை. முழுமையாக இந்த உரிமம் முறையினை நீக்கி விட்டால் முறையாகக் காரியங்கள் நடக்கும். ஆகவே மது விலக்கு சட்டத்தை முழுமையாக ரத்து செய்கின்ற வகையிலே பெர்மிட் முறையினை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எக்சைஸ் இலாக்காவினர் கள்ளச் சாராயத்தைப் பிடிப்பதிலும் சரி, கடைகளிலே அரசாங்கம் வழங்குகின்ற சாராயத்திற்குப் பதிலாக வெளியிலே இருக்கின்ற கள்ளச் சாராயத்தை வாங்கி விற்கின்ற நேரத்திலும் சரி அவற்றை எல்லாம் கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை மேற்கொண்டால்தான் நல்ல சாராயத்தை விநியோகம் செய்கின்ற நிலைமை ஏற்படும். மேலும் இந்த மது சம்பந்தப் பட்ட வகையிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கள் இறக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பேணிப் பாதுகாத்து அவர்களுடைய உரிமைகளை எல்லாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

ஈ. நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மீதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதும் தனிப்பட்ட முறை யில் குற்றம் சாட்டிப் பேசிய பகுதிகள், பேரவைக் குறிப்பிலி ருந்து நீக்கப்படுகின்றன. முன்கூட்டியே தகுந்த ஆதாரங்களைப் பேரவைத் தலைவரிடம் காட்டி அவரது அனுமதி பெறாமல் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆகையினால் அவை பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பத்திரிகைகளும் அவற்றை வெளியிடக் கூடாது என்று தெரிவிக்கிறேன்.

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்.—தொடர்ச்சி
(இ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களிடைய மேலான ஆலோசனைகளை இங்கே சொல்லி இருக்கிறார்கள். இந்த சட்டமுன்வடிவு பற்றி இங்கே நான் விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை என்றாலும் சிலவற்றைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சட்ட முன்வடிவு இங்கே வரும் என்றும், இது பேசப் படும் என்றும், இது நிறைவேற்றப்படும் என்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றகத் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல முன்னாலே ஆளும் கட்சியாக இருந்து, முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுககும் மிக நன்றாகத் தெரியும். அப்படி எல்லாம் தெரிந்து, இங்கே பேசுவதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கும் என்று தெரிந்துதான் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்கினார்கள் என்பதை நான் மிக மிக வருத்தத்துடன் இங்கே சொல்ல விரும்புகிறேன். அவ்வாறு வருத்தத்துடன் சொல்வதற்குக் காரணம் இப்படி ஒரு பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டால் அதற்குப் பிறகு இங்கே பேச முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பலமுறை பேசுகிற போதெல்லாம் எழுதுகிற போதெல் லாம் இதிலே பெரிய ஊழல்கள் வந்திருக்கின்றன, சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன, இதிலே பல குறைகள் இருக்கின்றன என்றெல்லாம் தொடர்ந்து சொல்லியதோடு மட்டுமல்ல, நீதி மன்றத்திற்கு வரத்தயாரா, வந்தால் இவற்றை எல்லாம் நிரூபிப்பேன் என்று பலமுறை சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஆனால் நீதிமன்றத்திலே வழக்கு போட்டதற்குப் பிறகு இங்கே சட்டமன்றத்திலே வந்து பேசினால் அது எப்படிச் சரியாகும்





நீதிமன்றத்திலே வழக்கு போடுவதற்குக் காரணமாக இருந்தவரே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான். இல்லாவிட்டால் எங்களுக்கு நீதிமன்றத்திற்கு போகவேண்டும் என்ற அக்கறை என்ன இருக்கிறது.

ஆனால் நீதிமன்றத்திற்கு வாருங்கள் என்று சொன்னதன் காரணத்தால் நீதிமன்றத்திற்குச் சென்றோம். ஆனால் இப்போது சட்டமன்றத்திலே யாரும் இதைப்பற்றிப் பேசக்கூடாது என்பதற் காகத்தான் நீதி மன்றத்திற்குச் சென்றீர்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். இவ்வாறு நீதிமன்றத்திலே சந்திப்பதற்குத் தயார் என்று சொல்லிவிட்டு, நீதிமன்றத்திற்குப் போனால் ஏன் போனீர்கள் என்ற கேள்வியையும் அவர்கள் கேட்கிறார்கள்.

அடுத்து அவர்கள வெளியே போகின்றபோது கப்பல் ஊழல் என்ற ஒன்றைச் சொல்லிக்கொண்டு சென்றார்கள், ஆனால் வாங்காத கப்பலுக்கு பேரம் என்று இங்கே சொல்லப்படுகின்றது. நான் மிகச் சிறு வயதாக இருக்கும் போது நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கு வந்தது.

[மாலை 5.30]

அந்த வழக்குக்கும், அதை விசாரிக்கிற எதிர்க்கட்சி வகீல் கேள்விகளுக்கும் சம்பந்தமே இல்லை. ஒரு சாட்சியைப் பார்த்து முதலில் உனக்கு கல்யாணம் ஆகிவிட்டதா என்று கேள்வி கேட்கிறார். அந்த சாட்சி பதில் சொல்கிறார் எனக்கு திருமணம் ஆகவில்லை என்று. அதற்குப் பிறகு பல கேள்விகளை கேட்டுவிட்டு, உனக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்கிறார். அந்த சாட்சி கிராமத்துக் காரர். அதனால் ஒன்றும் புரியாமல், ஐயா திருமணம் ஆகாமல் எங்கள் ஜாதியில் எல்லாம் குழந்தைகள் பெறுவது வழக்கம் இல்லை என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகும் பல கேள்வி கள் கேட்டுவிட்டு, மறுபடியும் உனக்கு ஆண் குழந்தைகள் எத்தனை, பெண் குழந்தைகள் எத்தனை என்று கேட்கிறார். இதனால் அந்த சாட்சிக்கே கொஞ்சம் சந்தேகம் வந்து விட்டது, வழக்கறிஞர் நினைவோடுதான் பேசுகிறாரா இல்லையா என்பது (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோலத்தான் இன்றைக்கு நீதிமன்றத்திற்கு வாருங்கள் வாருங்கள் சொல்லிவிட்டு, நீதிமன்றத்திற்கு வந்தபிறகு, ஏன் நீதிமன்றத்திற்கு சென்றீர்கள், நீதிமன்றத்திலே இதுபற்றிய வழக்கு இருப்பதால் அதனை பேசக்கூடாது என்று எங்களைத் தடுப்பதற்காகவா என்று கேட்கிறார்கள். அதேபோலத்தான் வாங்காத கப்பலுக்கு பேரம் பேரம் என்று சொல்கிறார்கள். கடைசியாக அதாவது இந்த விஷயம் சம்பந்தமாக கடைசி என்று சொல்கிறேன்—ஒன்று சொல்லவிரும்புகிறேன். நாட்டிலே

இருக்கிற மக்களுக்கு நன்றாகத் தெரியும். முதல்வர் அவர்கள் ஏன் பணம் வாங்க மாட்டார் என்பது. யாருக்காக அவர் வாங்கவேண்டும் வாங்கித்தான் அதை என்ன செய்வது, முதல்வர் அவர்கள் பணத்தை வாங்கினார் பணத்தை வாங்கினார் என்று பேசுகிறார்களே, அவர் எதற்காக வாங்கவேண்டும் வாங்கி அதை யாருக்கு கொடுப்பது.

அண்ணனுக்கு கொடுப்பதா, தம்பிக்கு கொடுப்பதா, பிள்ளைகளுக்கு கொடுப்பதா யாருக்கு கொடுப்பது வாங்க வேண்டிய நிலைமை எப்படி ஏற்படும் இது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருப்பதினால்தான், எதிர்க்கட்சிகள் எவ்வளவோ சொல்லியும் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றே மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, இப்படி எல்லாம் சொல்வதற்கு என்ன காரணம் நாம் அந்த இடத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம் என்று கற்பனை செய்து பார்த்து, அதைத்தான் இவர்களும் செய்திருப்பார்கள் என்ற வகையில் பேசுகிறார்கள். மனிதனுக்கு கற்பனை தேவைதான். கற்பனை இருந்தால்தான் உணர்வுகள் நல்ல நிலையில் இருக்கிறது என்று பொருள். ஆகவே, கற்பனை இருக்கத்தான் வேண்டும், ஆனால் அதிகமாக அது போய்விடக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அருமை நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எவ்வளவோ விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். நான் அவைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கப் போவதில்லை என்றாலும், ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். கூட்டுறவு வங்கி மூலம், அதாவது கூட்டுறவு நிறுவனங்கள் மூலம், ஐ.எம்.எப்எல்–ஐ ஹோல் சேலில் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அவர் நன்றாகப் படித்தவர், வழக்கறிஞர். சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு விதிகளிலேயே போடப்பட்டிருக்கிறது கூட்டுறவுச் சங்கங்களோ, அல்லது நிறுவனமோ, மேன்யூபேக்சர்களிடத்திலேயிருந்து, உற்பத்தியாளர்களிடத்திலேயிருந்து, ஹோல்சேலாக அவைகளை வாங்கிக் கொள்ளலாம் என்கிற விதி இன்றைக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று இந்தச் சட்டமன்றத்திலேயேதான் நான் சொன்னேன், ஜூலை மாதம் 1 ஆம் தேதியன்று கடை திறக்கப்படும் என்று. இந்தச் சட்டமன்றத்திலேயே அப்படி அறிவித்த பிறகு அதற்கு முன் மாதம் திறக்கப்போவதாக நான் அறிவித்ததாக, சொன்னார்கள். ஜூலை மாதம் 1 ஆம் தேதியன்று நான் திறக்கப்படும் என்றுதான் நான் சொன்னேன். ஆனால் 15 நாட்கள் கழித்து திறக்கப்பட்டது ஜூலை 15 ஆம் தேதி கடைகள் திறக்கப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அப்புறம் இன்னொன்று சொன்னார்கள். பாட்டில் எப்போது வரும் பாட்டில் எப்போது வரும் என்று, பாட்டில் தான் வந்





விட்டதே. பாட்டில் வந்து நீண்டநாட்களாகிவிட்டது. பாட்டில்கள் எங்கே இல்லையோ, அதாவது பாட்டில்களில் வைத்து எங்கேயெல்லாம் வழங்கப்படவில்லையோ, அவர்கள் அவர்கள் மீது எல்லாம் இன்றைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றையும் சொன்னார்கள்.

நானும், முதல் அமைச்சர் அவர்களும், இங்கிருக்கிற அமைச்சர்களும் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பேசி முடித்து விட்டு இன்னாருக்குத்தான் லைசென்ஸ் கொடுக்கப்போகிறோம் என்று சொன்ன பிறகு இந்த உத்தரவை ஜீ.ஓ. வைப் போட்டுவிடுகிறோம், ஜீ.ஓ. போட்ட பிறகு அவர்கள் அங்கே போகிறார்கள், ஐயோ பாவம் கமிஷனர் என்றெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன். கமிஷனருக்கு அதில் எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால்

The matter may be taken into consideration by the Commissioner in granting the privilege. While granting the privilege of manufecturing arracks the Commissioner shall have recorded the following matters viz. The suitability of the applicant for the grant of privilege. Whether the applicant is a person who will abide by the provision of the Act and the Rules made thereunder. This are (a) and (b).

(c) Whethe the appicant is whether the applcat onismade bonafide on behalf of the applicant himself or the benamy of any other person.

இங்கே சொன்னார்கள், பினாமி பினாமி என்று. விதியில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

Suitability of the site and buildings selected or to be constructed. The availabilty of the pottable water in the manufact urer's premises.

கமிஷனரே இதைப்பற்றியெல்லாம் முடிவு எடுத்து செய்யவேண்டிய அதிகாரங்கள் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு என்ன ஜீ.ஒ. போடுகிறோம் என்றால் சட்டத்தில் இருக்கிறது. யாருக்குக் கொடுக்கவேண்டும் என்பதை பூர்ணமாக ஆராய்ந்து கொடுக்கிற பூர்ண அதிகாரம் ஆணையருக்கு இருக்கிறது. எங்கே கொடுக்கவேண்டும் என்று அந்த இடத்தைப் பார்வையிடுகிறார், அவரோ அல்லது அவர்கள் அதிகாரம் பெற்றவரோ. நேரடியாகக் கூப்பிடுகிறார்கள், கூப்பிட்டு நேர்முகத் தேர்வு செய்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுத்து இவர்களை தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள் அரசுக்கு. அரசாங்கம் சம்மதம் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் யாரையும் தேர்ந்தெடுக்கமுடியாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சம்மதம் தெரிவிக்கலாம்; இல்லை என்றால் முடியாது என்றுசொல்லிவிடலாமே தவிர வேறு ஒன்றுமல்ல.

பத்து ப்ளென்டிங் யூனிட் கொடுத்து விட்டார்கள், 16 ஹோல்ஸேல்–க்கு கொடுத்து விட்டார்கள் என்றார்கள். 1971-ல் என்ன நடந்தது என்பதை உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டே இரண்டு பேர்களுக்குத்தான் கொடுத்தார்கள். அவர்கள்தான் ஹோல்ஸேலர்ஸ், அவர்கள் தான் மானுபாக்சரேர்ஸ். எல்லாம் அவர்கள்தான். ஆனால் இன்றைக்கு சட்டதிட்டங்கள் இருக்கின்றன, ரூல்ஸ் இருக்கின்றன. செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்துகிறோம். அதற்கு மேல் கூப்பிடுகிறார்கள். இவைகள் எல்லாம் அன்று இல்லை. யாருக்கு வேண்டுமானாலும் அன்றைக்கு கொடுத்திருக்கிறார்கள். இன்றுள்ள நிலைமை அப்படியல்ல. இன்றைக்கு ஏன் இப்படியெல்லாம் கொண்டுவந்தோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலில் இரண்டே இரண்டு யூனிட்கள்தான். அவர்கள்தான் மானுபாக்சரர்ஸ், டிஸ்டிலேர்ஸ். டிஸ்ட்டிலரியிலிருந்து மானுபாக்சராகி அவைகளை ஊருக்கு அனுப்ப வேண்டும். இவைகளை இன்று மாற்றியமைத்திருக்கிறோம். ஏன் மாற்றியமைத்திருக்கிறோம் என்றால் உபயோகிக்கும் சாராயம் இவ்வளவு எரிசாராயம் இவ்வளவு இருக்கிறது என்று கணக்கில் காட்டமுடியவில்லை. ஒரேயிடத்தில்தான் இருக்கிறது. எவ்வளவு எரிசாராயம் பயன்படுத்தினார்கள், எவ்வளவு பயன்படுத்தப்படவில்லை என்று முதலில் கணக்கு இல்லை. கணக்கு வைத்துக் கொள்ளமுடியாது. எரிசாராயத்தை குறைவாகக் காட்டி விட்டு அதிகமாக உற்பத்தி செய்து அதைத் தவறாகப் பயன்படுத்துகிற வாய்ப்பு அதில் இருந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். கணக்கில் வராத எரிசாராயத்தைத் தவறாகப் பயன்படுத்துவது என்ற செய்திகள் எல்லாம் முதலில் வந்தது உங்களுக்குத் தெரியும்.

[மாலை 5. 40]

இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் எரிசாராயம், டிஸ்டிலரீஸ், பிளன்டிங்கு யூனிட் ஆகியவைகள் ஒரே இடத்திலே இருக்கக் கூடாது என்று இந்த அரசு எண்ணி, இப்படியெல்லாம் போடப்பட்டிருக்கின்றது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்னும் சொல்ல வேண்டுமானால், டிஸ்டிலரீஸ் இருக்கின்றது என்று சொன்னால், அதிலே எரி சாராயம், சாராயம், டிநேச்சர்ட் ஸ்பிரிட் ஆகியவை போகும். இவைகளெல்லாம் ஒன்றாக வைத்திருந்தால், எப்படி கண்டுபிடிப்பது, அதற்கான கணக்கைப் பார்ப்பது என்று கருதித்தான் இன்றைக்கு அதையெல்லாம் தனியாக போட்டிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தவறுகள் நடந்து கொண்டு வந்திருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் தவறுகளும் நடக்கவில்லை. அப்படித் தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காகத் தான், முன்பு சர்க்கரை ஆலைகளிலே அரசு அதிகாரியில்லை, இப்போது அங்கே தாசில்





தாரைப் போட்டிருக்கிறோம். அதேபோல், டிஸ்டிலரிகளில் முன்பு தாசில்தார் இருந்தார்; இன்றைக்கு ஆர். டீ. ஓ. போடப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 1971–72ல் சாராயம் செய்கின்றவர்கள் வைத்தது தான் சட்டம். அங்கே அரசு அதிகாரிகள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால், இன்றைக்கு அப்படியில்லை. ரௌண்ட் தி க்ளாக், 24 மணி நேரமும் அரசு அதிகாரிகள் இருப்பார்கள், தாசில்தார் இருப்பார், 3 துணை தாசில்தார்கள் இருப்பார்கள். அது மட்டுமல்ல. வெளியே எடுத்துச் செல்லும்போது, அரசு அதிகாரி இல்லாமல், எடுத்துச் செல்ல முடியாது. மூவ்மென்ட் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரவில்லை; மது திருத்தச் சட்டம்தான் கொண்டு வந்திருக்கிறோம். அதற்குக் காரணம். இன்றைக்குச் சாராயம் குடித்து பலர் கெட்டுப் போகிறார்கள்; அவர்களை இந்தக் குடிப் பழக்கத்திலிருந்து மீட்கவே முடியவில்லை; குடித்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் குறைகளைத் தீர்க்கக்கூடிய முறையிலே, அவர்களுக்கு நல்லது செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக இன்றைக்கு இந்த சட்டத் திருத்த மசோதா வந்திருக்கிறது. அப்படி வருகிறபோது கள்ளச் சாராயம் விற்கக்கூடாது; ஆகவே பாட்டிலிங் செய்வதால் கள்ளச் சாராயம் இருக்காது என்பதற்காகத் தான் பாட்டிலிங் செய்து வெளியே கொண்டு போகவேண்டும் என்று சொல்கிறோம். அப்படிச் செய்வதால், இடையிலே மாறாக வேறு சாராயத்தைப் போடுவதற்கும், அல்லது போதை குறைவாக இருக்கிறது என்பதற்காக போதையை அதிகப்படுத்துகின்ற வகையிலே வேறு எதையாவது போடாமல், சேர்க்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்கு இந்த பாட்டிலிங்கைக் கொண்டு வந்திருக்கிறோம். அதிலும், அந்த பாட்டிலுக்கு சீல் வைக்கப்படுகிறது. அதிலே யாருக்கும், எந்தவிதமான கஷ்டமும் இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு குற்றச்சாட்டையும் இங்கே சொன்னார்கள். எரி சாராயம் எங்கெங்கே அனுப்பப்படுகிறது என்பதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லவேண்டும். மத்தியப் பேரரசு இவ்வளவு எரி சாராயம் தர வேண்டுமென்று சொல்வார்கள். அதை நாம் கூட்டியோ, குறைத்தோ கொடுக்கலாம். 1975-76ஆம் ஆண்டில் நன்றாக ஞாபகம் வைத்துக் சொள்ளுங்கள், மத்தியப் பேரரசு மற்ற மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னது 46½ இலட்சம் லிட்டர் எரி சாராயமாகும். ஆனால், மற்ற மாநிலங்களுக்குப் போனது 143 இலட்சம் லிட்டர்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது எந்த அரசு இருந்தது என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு 1976-77ஆம் ஆண்டிலே எந்த அரசு இருந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும். 1975–76லே இருந்த அரசுக்கு மத்திய

அரசுஅனுமதித்தது 46 இலட்சம் லிட்டர்கள். ஆனால் கொடுக்கப் பட்டது 143 இலட்சம் லிட்டர்கள். ஆனால், 1976-77லே மத்திய அரசு கொடுக்கலாம் என்று சொன்னது 129 இலட்சம் லிட்டர்கள்; ஆனால் கொடுத்தது 100 இலட்சம் லிட்டர்கள் தான். அதேபோல், 1977-78லே எந்த அரசு இருந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும். மத்திய அரசு கொடுக்கலாம் என்று சொன்னது 114 இலட்சம் லிட்டர்கள், ஆனால் கொடுத்தது 40 இலட்சம் லிட்டர்கள்தான்.

1978-79ம் ஆண்டு மத்தியப் பேரரசு மற்ற மாநிலங்களுக்கு கொடுக்கலாம் என்று சொன்னது 178 லட்சம் லிட்டர்; கொடுத்தது 94 லட்சம் லிட்டர் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். வெளியே சாட்டப்படுகிற குற்றச்சாட்டு எல்லாம் உள் நாட்டுக்கு வேண்டிய எரி சாராயம் கொடுக்கப்படவில்லை என்பதுதான். தொழிற்சாலைக்கே மறுத்தார்கள் எட்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டு மென்றால் 1975-1976ல் 174 லட்சம் லிட்டர்; 1976-77ல் 200 லட்சம் லிட்டர்; 1977-78ல் 226 லட்சம் லிட்டர். வருஷா வருஷம் ஏறிக் கொண்டே போகிறது. உள்நாட்டுத் தேவைக் கிற்கு இங்கே இருக்கிற தொழிற்சாலைகளுக்கு 1978-79ல் 261 லட்சம்; 1979-80க்கு 280 லட்சம்; 1975-76ல் உள்நாட்டுக்கு பயன்படுத்தியது 280 லட்சம் லிட்டர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பர்மிட் வாங்கப்படவில்லை என்று பேசப்பட்டது நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—பல லட்சக்கணக் கான பர்மிட்டுகள் இன்றைக்கு வாங்கப்பட்டிருக்கும் செய்தி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வந்திருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

காலம் கடக்கிறது என்று சொன்னார்கள். எரி சாராயம் ப்ளெண்டிட் யூனிட் பத்தும் கொடுக்கப்பட்டு விட்டது. அதே போல் ஹோல்சேலுக்கு 16ல் பத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாறு கொடுக்கவில்லை. சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக் கிறார்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தால் இன்றைக்கு அவை எல்லாம் தடையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டியவர் களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆணையர் அவர்கள், தவறு செய்தவர்கள் மீது எல்ல விதமான நடவடிக்கை யையும் எடுத்திருக்கிறார்கள் என்ற சேதியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற மாதம் 25ஆம் தேதி வரை பாட்டிலிலே வரவில்லை. 25-ம் தேதிக்குப் பிறகு பாட்டிலிலேதான் கொடுக்கவேண்டுமென்று அரசு சொன்னது. கமிஷனர் அவர்கள் பல யூனிட்டுகளுக்கு ஐயாயிரத்



திலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரை முன் பணத்திலிருந்து பிடித் திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ப்ளெண்டிங் யூனிட் போட வேண்டுமென்றால் லைசென்ஸ் வாங்கிவிட்டால் 50,000 ரூபாய் பணம் கட்டவேண்டும். லைசென்ஸ் பெற்ற பிறகு ஒரு லட்சம் ரூபாய் டெபாசிட் செய்யவேண்டும். அதற்குப் பிறகு ஒரு லட்சம் ரூபாய் மார்ட்கேஜ் செய்யவேண்டும். ஆக, இரண்டரை லட்சம ரூபாய் கொடுக்கவேண்டும். சரியான முறையில் லைசென்ஸ் பெற்ற பிறகு சென்னையைப் பொறுத்து அந்தோணி என்பவர் நிபந்தனைக்கு உட்பட்டு காரியங்களைச் செய்யாததால் அவருடைய லைசென்சை ரத்து செய்திருக்கிறார்கள்.

[மாலை 5.50]

லைசென்ஸ் வாங்குவதற்கு 50 ஆயிரம், லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது என்றால் அந்த 50 ஆயிரம் போய்விடுகிறது. அது மட்டுமல்ல. அவர் கட்டியிருக்கிற ஒரு லட்சமும் பிடித்துக் கொள்ளப்படுகிறது. வேண்டியவர்கள் என்றால், எங்களைக் கேட்டுத்தான் செய்வார்கள் என்றால் ஏன் லைசென்ஸ் ரத்து செய்யவேண்டும்? அதற்குப் பிறகு 50 ஆயிரம் ரூபாய் எப்படி அதிலே போகும் அதற்குப் பிறகு ஒரு லட்ச ரூபாயும் போய் விடுகிறதே! இதிலிருந்து எப்படி காரியங்கள் நடக்கின்றன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இங்கே சொன்னார்கள் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் இவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்று. கேரளாவுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். கேரளாவுக்கு எல்லாம் கொடுத்த பெயர் இருந்தல் கொடுங்கள் என்று ஆணையரைக் கேட்டேன். அவர்கள் சொல்கிறார்கள். கே. ஆர். வர்கீஸ் என்ற ஒருவர் கேட்டு இருக்கிறார். பிளண்டிங் யூனிட்டுக்கு. அவருக்குக் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு ஐ.எம்.எப்.எல்—க்குக் கேட்டிருக்கிறார். ஒரு மாவட்டத்திற்கு அல்ல, பல மாவட்டங்களுக்குப் போடலாம், திருநெல்வேலி மாவட்டத்திற்கு, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மதுரை மாவட்டத்திற்குப் போட்டிருக்கிறார். கொடுக்கவில்லை. கே. ஜே. தாமஸ் போட்டிருக்கிறார், கொடுக்கவில்லை என்ற செய்தியை எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டப்படி இன்றைக்கு இன்ன மாநிலத்துக்காரர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற நியதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு, கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் முன்கூட்டியே பிளண்டிங் யூனிட் கட்டுகிறார்கள் என்று. சென்னையிலே உங்களுக்கு எல்லாம் தெரியும். இண்டியன் கேஸ் வாங்க வேண்டுமென்றால் ஒரு இடத்தை எடுக்க வேண்டும், தொலைபேசி வைக்கவேண்டுமென்று எல்லாம்வைத்திருக்கிறார் கள். சென்னையிலே இண்டியன் கேஸ் வைக்கவேண்டுமென்றால் முதலிலே ஒரு கடையை, ஒரு வாடகை இடத்தைப் பிடிக்க வேண்டும் அதற்குபகடி 50,000 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கும். அதற்குப் பிறகு கிடைக்காமல் போகிறது என்பது உங்களுக்குத் தெரியும். சில பேர்களுக்குக் கிடைக்கிறது.

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1981 ஆகஸ்டு 28

சட்டத்திலே, விதியிலே, யார் யார் விரைவிலே கொடுப்பார்கள். யார் யார் அதற்குத் தகுதியுடையவர்கள் ஆக இருப்பார்கள் என்பது எல்லாம் போடப்பட்டிருக்கிறது. 75 ஆயிரம் என்றார்கள். எப்படி 75 ஆயிரம்? கட்டடம் கட்டுவதற்கு 1 லட்சம் 1½ லட்சம் ஆகும். கட்டடத்தைக் கட்டிவைத்துவிட்டால் எதற்கும் பயன்படுத்த முடியும். ரிஸ்க் எடுத்துக்கொள்ள முடியும் என்ற முறையில் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யார் யார் பெயரையெல்லாமோ சொன்னார்கள், தென் ஆற்காடு மாவட்டத்திலே. அவர்கள் சொன்ன பெயர்களிலே கொடுக்கவில்லை என்று எனக்கு செய்தியை எழுதி அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒன்றைத்தெளிவாகச்சொல்லக்கட மைப்பட்டிருக்கிறேன். லைசென்ஸ் கொடுக்கிற பூர்ண அதிகாரம் ஆணையருக்கு இருக்கிறது. ஆணையருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதை நான் முன்னாலே உங்களுக்குப் படித்துக் காட்டினேன். அவர்கள் தான் கொடுப்பார்கள். எந்தத் தவறும் இல்லை. அவர்கள் கற்பனையாகச் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ரகுமான்கான் திரு. பொன்னுரங்கம் ஆகியோர் இருக்கையில் இல்லையாதலால் அவர்கள் கொடுத்த தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்டமுன்வடிவு எண். 71/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 71/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."



1981 ஆகஸ்டு 28]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

உ. ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு, 1981 (ஆ. இ)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு "தமிழ்நாடு 1981 (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 74/1981" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

ஈ. ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, (தமிழ்நாடு 1981.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 74/1981)" ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். ஏற்கனவே, ஒன்றியங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கி, அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகளெல்லாம் இவர்களுக்கும் கிடைக்கும் என்ற முறையில் அறிவிக்கப்பட்டு அது இப்பொழுது சட்ட ரூபத்தில் கொண்டு வந்து அதன் காரணமாக ஆசிரியர்கள் பயனடைவார்கள் என்ற முறையிலே இதை வரவேற்கிறோம்.

இந்தச் சட்டத்தைப் பராமரித்து அமல் நடத்த, இந்த ஆசிரியர்களைக் கண்காணிக்க பல்வேறு இடங்களில் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், குறிப்பாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு சார்பு நிலை அதிகாரி என்ற வகையில் 376 இடங்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அவர்களுக்கு இடம் ஒதுக்கும் ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோக ஃபர்னிச்சர் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிப்பந்திகளையும் இந்தப் பஞ்சாயத்து யூனியனி

*1981 மஆண்டு மாதம் மாதம் 26-தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

விருந்து ஒதுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே
ஊராட்சி ஒன்றியங்களிலே வேலை அதிகப்படியாகி, தன்னிறைவுத்
திட்டங்கள் பல்வேறு யூனியன்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன.
அதன் காரணமாக இருக்கின்ற வேலைகளையே செய்ய முடியாத
அளவிற்கு அந்தச் சிப்பந்திகளெல்லாம் மிகவும் கஷ்டப்படும்
நேரத்தில் அதிலேயிருந்து இவர்களுக்கு உதவியாக இரண்டு மூன்று
பேர்களை எடுக்கும் நேரத்தில் வேலைகள் தடைப்படும் என்ற
நிலைமை சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்து
யூனியன்களில் தன்னிறைவுத் திட்டம் வந்ததற்குப் பிறகு அதிக
சிப்பந்திகளைக் கொடுத்து குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க
வேண்டிய சூழ்நிலை இருக்கும்பொழுது அதிலேயுள்ள சிப்பந்தி
களையே எடுப்பதால் வேலைகள் தடைபடும் நிலையும், காலா
காலத்தில் முடிக்கப்பட வேண்டிய வேலைகள் தடைபடும்
நிலையும் இருக்கிறது. அத்தகைய நிலைகளைப் போக்கும்
முறையிலே, கல்வியதிகாரிகளை எப்படித் தனியாக நியமனம்
செய்தோமோ அதைப்போல அவர்களுக்குக் கொடுக்கும் சிப்பந்தி
களையும் தனியாக நியமித்து இந்தக் குறைபாடுகளைப் போக்கு
வதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பில் வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவை உதவித் தலைவரவர்களே,
தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச்
சட்டமுன்வடிவின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் சார்பில் சில
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 62—ஏ (2) புதிய பிரிவு,
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும்
(தலைமை ஆசிரியர்கள் உட்பட) அடிப்படைப் பணியாளர்களும்
அரசுப் பணியாளர்களாக மாற்றப்பட்டது சம்பந்தமாக இந்தச்
சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது. நீண்ட நாட்களாக
இப்படிப்பட்ட குறைபாடு அவர்களிடையே இருந்தது. எங்களை
யும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை
வந்தது என்பதை அரசு கணக்கில் கொண்டு, அவர்களுக்கு
வேண்டிய உதவிகளைச் செய்யும் முறையில் இந்தச் சட்டத்தைக்
கொண்டு வந்திருப்பதை தமிழ்நாட்டிலுள்ள அந்த ஆசிரியர்கள்
அத்தனை பேர்களும் வரவேற்பதோடு கம்யூனிஸ்ட் கட்சியும்
வரவேற்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1981ஆம் ஆண்டு ஜூன் முதல் தேதி முதல் அமலுக்கு வரும்,
இந்தச் சட்டம் நல்ல நிலையில் இருப்பதன் காரணமாக.
பஞ்சாயத்து யூனியனில் பல அலுவலர்கள் இருந்தாலும் அவர்
களுக்கு என்று தனியாக ஒரு அலுவலகம் ஏற்பாடு செய்யப்பட்டு,
அதற்குத் தனி அதிகாரிகள் ஏற்பாடு செய்யப் பட்டு, அவர்கள்
மூலம் இன்றைக்குக் கண்காணிக்கப்படுவது வரவேற்கத் தக்க
அம்சமாகும்.



[மாலை 6.00]

இருந்தாலுங்கூட, நல்ல முறையிலே அவர்கள் செயல்படுவ
தற்கு வேண்டிய அலுவலகங்கள் தேவையான அளவுக்கு இருக்க
ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். பஞ்சாயத்து யூனியனிலே அவர்களுக்கு தனியாகக்
கட்டிடம் கட்டி, அதன் மூலமாக அவர்களுக்கு வேண்டிய
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
தற்போதிருக்கக்கூடிய நிலையிலே அவர்களுக்கு அந்த வசதி
போதாது. ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களிலே, தலைவருக்கு
இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எம்.எல்.ஏ.வுக்குத் தனியாக
ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. தனியாக
ஆசிரியர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். போதிய இட வசதி இல்லாததன் காரணமாக
இருக்கிற சிக்கலான நிலைமைகளைப் போக்க, அவர்களுக்கு
இட வசதி அளிக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கணவன், மனைவியைப்
பிரித்துப் போடக் கூடாது என்று சட்டம் இருந்தாலுங்கூட,
அந்தச் சட்டத்தை அமுலாக்கும்படி பல கோரிக்கைகள் வந்தாலுங்
கூட இன்றைக்குக் கணவன் வேறு, மனைவி வேறு, என்று அவர்
களை வெவ்வேறாகப் போடும் நிலை இருக்கிறது. அவர்களிட
மிருந்து மனுக்கள் வந்தவுடனே, அவற்றைப் பரிசீலனை செய்து,
ஓரிடத்திலேயே அவர்கள் வேலை செய்ய ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பல ஆசிரியர்கள், வெவ்வேறு இடங்களி
லிருந்து காலை 9.20—க்கே பள்ளிக்கு வரவேண்டிய நிலைமை
ஏற்படுகிறது. அவர்கள் காலையில் 15 மைல், 20 மைல் தூரத்தி
லிருந்து சைக்கிளில் வருகிறார்கள். களைப்பு காரணமாக
பள்ளிக்கூடங்களிலே பாடம் ஒழுங்காக நடத்தமுடியாமல்
சோர்வாக இருக்கும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, பள்ளிக்கு
அருகிலேயே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் முறையிலே
ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு சில இடங்களிலே பள்ளிக்
கூடங்களுக்கு அருகில் வீடுகள் இருந்தாலும், எத்தனை
ஆசிரியர்கள் இருக்கிறார்களோ, அத்தனை ஆசிரியர்களுக்கும்
வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஆசிரியர்களது குழந்தைகள் படிப்பதற்கு
வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். பள்ளிகளுக்கு
அருகிலேயே வீடுகள் கட்டிக் கொடுப்பதன் மூலமாக, அவர்களது
குழந்தைகளுக்குப் படிப்பு வசதி அளிக்க முடியும்.

அது மட்டுமல்ல, ஓராசிரியர் இருக்கக்கூடிய பள்ளிகளிலே
குறிப்பாக பெண் ஆசிரியைகள், பிரசவ கால விடுப்புக்குப் போகிற

நேரத்திலே, அந்த இடத்திலே அவர்களுக்குப் பதிலாக
ஆசிரியைகள் போடப்படாமல் கிட்டத்தட்ட 3,4 மாதங்கள்
காலியாக இருப்பதன் காரணமாக, அந்தப் பள்ளியிலே படிக்கிற
குழந்தைகளுடைய படிப்பு பாழாகிறது, வீணாகிறது. ஆகவே,
அப்பள்ளிகளில் இருக்கும் ஆசிரியையோ, அல்லது ஆசிரியரோ லீவு
போடுகிற நேரத்தில் வேறு ஆசிரியரைப் போட்டு, அந்தக்
குழந்தைகளுடைய படிப்பு கெடாமல் இருக்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஓராசிரியர் பள்ளிகளிலே கிட்டத்தட்ட
40,50 பிள்ளைகள் இருக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்
டிருக்கிறது, பெயர் ஓராசிரியர் பள்ளி. அங்கு 23 பேர்களுக்கு
ஓராசிரியர் வீதம் இருக்க வேண்டுமென்று ஏற்கனவே கோரிக்கை
வைக்கப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்
டிருக்கிறது. அந்த அடிப்படையிலே தமிழகம் முழுவதும் 23
மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமித்தால். நிச்சயமாகப்
பல ஆசிரியர்களுக்கும் உத்தியோகம் கிடைக்க வசதி ஏற்படும்,
குழந்தைகளும் நல்ல முறையில் படிக்க வசதி ஏற்படும் என்று
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகளில் பணி
புரியும் ஆசிரியர்கள்கூட இன்றைக்குக் கஷ்டங்களுக்கு உள்ளாகி
இருக்கிறார்கள். அரசுதான் அவர்களுக்கும் சம்பளம் கொடுத்துக்
கொண்டிருக்கிறது. ஆகவேதான் அவர்களையும் இந்த அடிப்
படையிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரிக்கை
யிருக்கிறது. இன்றைக்குத் தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட
90,000 பேர்களை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதே
அடிப்படையிலே, மாநகராட்சி நகராட்சி ஆசிரியர்களையும்
தமிழாசிரியர்களையும் அரசாங்க ஊழியர்களாக்க வேண்டும்.
அந்த அடிப்படையிலே சட்டங்களைத் திருத்த வேண்டுமென்று
நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நல்ல முறையிலே பணிபுரியும்
ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி அவர்கள் விருதுகள் கொடுக்
கிறார்கள், பதக்கங்கள் கொடுக்கிறார்கள். அந்த அடிப்படையில்
தமிழக அரசும், நல்ல முறையிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு
விருதுகள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, திறமையாக பணி புரியும் ஆசிரியர்களுக்கு,
ரூபாய் அடிப்படையிலே பரிசுகள் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குத் தமிழகத்திலே ஆசிரியர்
களுடைய நிலைமை எப்படி இருக்கிறது, பள்ளிக் கூடங்கள் என்ன
நிலைமையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம்
ஓரளவு பார்த்தாலுங்கூட, அண்டை நாடுகளிலே எப்படி செயல்
பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்டைமாநிலங்களிலே எப்படி



செயல்படுகின்றன, படிப்பு எப்படி இருக்கிறது என்பதை
யெல்லாம் நேரடியாகக் சென்று பார்த்து கவனித்து, அதன்
மூலமாக' அந்த ஆசிரியர்கள் திறமையாகச் செயல்பட கமிட்டி
களுக்கு ஏற்பாடு செய்து, அந்த கமிட்டிகள் மூலமாக அயல்
நாடுகளுக்குச் சென்று, பார்ப்பதற்கும், அடுத்த மாநிலங்களுக்குச்
சென்று பார்ப்பதற்கும் ஏற்பாடு செய்தால், நிச்சயமாகத்
தமிழகத்திலே படிப்பு நல்ல முறையிலே இருக்கும். ஆரம்ப
ஆசிரியர்கள் நிலைமை உயரும் என்று தெரிவித்துக்கொண்டு,
அந்த அடிப்படையிலே செயல்படவேண்டுமென்று கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, கடந்த 1-6-1981-லேயிருந்து ஊராட்சி
ஒன்றியங்களிலே பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள், தலைமை
ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பேர்களையும், தமிழக அரசு,
நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், அவர்களை
எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கி இருக்கிறோம். ஏறத்தாழ 97
ஆயிரம் ஆசிரியர்கள் இன்று அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு,
அந்தப் பள்ளிகளெல்லாம் அரசுப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்
கின்றன.

குறிப்பாக இந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய
பள்ளிகளினுடைய கட்டடம், மதிய உணவுத் திட்டம், போன்ற
வற்றை பற்றி இந்த அரசு பரிசீலனை செய்ய முடிவெடுத்திருக்
கிறது. இதுவ ரயிலும் எப்படி நடந்தது கொண்டு இருந்ததோ,
அப்படியே நடந்து கொண்டு இருக்கும். ஆகவே அதற்குப்
பின்னர் கொள்கை அளவில் முடிவெடுத்ததற்குப் பின்னர் எப்படி
செய்வது என்பதைப் பற்றி அரசு அறிவிக்க இருக்கிறது என்பதனை
தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வரவேற்றுப் பேசிய அருமை நண்பர்கள் சொர்ணம்
அவர்களும், சிவசாமி அவர்களும் அரிய, பெரிய கருத்துக்களை
எல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்
களின் அடிப்படையில் உடனடியாக அரசு முடிவெடுத்து நல்ல
தகவல்களை அவர்களுக்குத் தரும் என்பதை இந்த நேரத்தில்
பணிவன்புடன் தெரிவித்து. இந்த சட்ட மசோதாவை ஏற்றுக்
கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "1981 ஆம் ஆண்டு
ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்டமுன்வடிவு எண். 74/1981) ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, "1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை) சட்ட முன் வடிவு எண், 74/1981) நிறைவேற்றப்பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

6. கவனவல் கோரல் (தொடர்ச்சி)

வேதாரண்யம் கரையோரம் பிணங்கள் ஒதுங்கியிருப்பதாக வந்துள்ள செய்தி—(தொடர்ச்சி)

மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, காலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே தெரிவித்தார்கள். அதாவது வேதாரண்யம் கடற்கரையிலே 12 பிணங்கள் ஒதுங்கி இருப்பதாகவும், அது தமிழர்களுடைய பிணங்கள் என்றும், அது இலங்கையிலே படுகொலை செய்யப்பட்டு, கரையிலே ஒதுங்கியதாகவும் ஒரு தந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியதாகவும் அந்தத் தந்தியைக் காட்டி இங்கே பேசினார்கள்.

இது பற்றி உடனடியாக உள்துறை செயலாளர் அவர்கள் மூலமாக தஞ்சாவூரில் உள்ள காவல் துறைக்கு இதுபற்றி விசாரிக்கும்படியாகத் தெரிவிக்கப்பட்டது. காவல் துறை அதிகாரிகள் உடனே இதுபற்றி விசாரித்த வகையில், அங்கே மாவட்ட காவல் துறை அதிகாரி அவர்கள் அதற்கு ஆதாரம் எதுவுமே இதுவரையில் கிடைக்கவில்லை என்றும், அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் இல்லை. பிணங்கள் எதுவும் அங்கே ஒதுக்கப்படுகின்ற நிலை, இதுவரையிலும் அங்கே எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், என்றாலும் இந்தச் செய்தி ஏன் வந்தது? எப்படி வந்தது என்பதைப் பற்றியும், யார் அந்தச் செய்திக்குக் காரணமாக இருந்தார்கள் என்பதும் எப்படி, இப்படிப்பட்ட ஒரு தந்தி அனுப்பப்பட்டது என்பதைப் பற்றியும் காவல் துறை தொடர்ந்து புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இதுபற்றி பீதி அடையத் தேவையில்லை என்பதற்காகவும். இதற்கு ஆதாரமே இல்லை என்றும் திட்டவட்டமாக தஞ்சை மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,



3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

உ. ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981

ஊ. ஊராட்சிகள் ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்). இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவு தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 75[1981 ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—அடுத்த சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 76/1981) ஆய்வுக்கு ** எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

[மாலை 6-10]

*திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூன்று மாதம் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கவேண்டும் என்பதும், இன்னொன்று 18, 15 என்ற விகிதாச்சார பிரதிநிதித்துவம் அளிக்கிறது என்ற வகையிலும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவின் பேரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

சென்ற முறை தேர்தலை ஒத்தி வைக்கவேண்டுமென்று வந்த போதே தேர்தலை ஒத்தி வைப்பதன் மூலம் எவ்வளவு நெருக்கடி ஏற்படுகிறது, மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள், அதனால் அரசு எடுக்கிற நல்ல நடவடிக்கைகள் மக்களுக்கு போய் சேர்வதில்லை என்று சொன்னோம். இந்த கூட்டத்திலே 3 மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள். அநேகமாக இதுவே முடிவாக இருக்க வேண்டும். மூன்று மாத கடைசியிலே தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் ஏற்பட்ட வறட்சியால் பல முறையீடுகள் வந்தபோது தமிழ்நாடு அரசு பல திட்டங்களை அறிவித்தார்கள் பல வேலைகளை எடுத்து செய்ய சொன்னார்கள். ஊராட்சி

* 1981ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

** 1981ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் இருந்திருக்குமானால் பொது மக்களுடைய பிரதிநிதிகள் சென்று கண்காணித்து மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கு உறுதுணையாக இருந்திருக்கும். இல்லாததால் தனி அதிகாரிகள் அவர்களே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்களை வாரி கொட்டியிருக்கிறார்கள். அவர்கள் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று கண்காணிக்கிற வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலிருந்து 2 மாத காலமாக மின்சார விளக்குகள் எரியவில்லை என்று எல்லா பகுதிகளிலேயிருந்தும் புகார்கள் வந்திருக்கின்றன. மின்சார வாரியத்தை சேர்ந்த ஊழியர்களுக்கு பல்ப் போட்டால் 50 பைசா, டியூப் லைட் போட்டால் ஒரு ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த பணம் அவர்களுக்கு போனஸ் போன்று கிடைக்கக்கூடியது; ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலிருந்து கொடுக்கப்படவில்லை, மேற்கொண்டு அந்த வேலையை செய்வதில்லை என்று அவர்கள் முடிவு எடுத்திருப்பதாக எங்கள் மாவட்டத்திலே கூறுகிறார்கள். ஆகவே மின்துறை அமைச்சர் அவர்கள் இதிலே தக்க நடவடிக்கை எடுத்து மின்னொளி கிடைக்க வழி செய்ய வேண்டு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

15, 18 பிரதிநிதித்துவம் என்பது வரவேற்கப்படக் கூடியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இதை வரவேற்கிறேன். உண்மையிலேயே நல்ல நோக்கத்தோடு நம்முடைய அரசு இதை கொண்டு வந்திருக்கிறது. அதேநேரத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் இது விஸ்தரிக்கப்படுமா? விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் இதிலே கொடுத்து விட்டு அதில் இல்லையென்று நிலை வருமானால் சரியாக இருக்காது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்டு என்று சொல்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, தேர்தலை வெகு விரைவில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், தெருவிலே லைட் எரியவில்லை ஏனென்றால் கால்வாயில் தண்ணீர் போகவில்லை என்றால், பள்ளிக்கூடத்திலே தகராறு என்று சொன்னால் கூட சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களிடத்திலே வந்து விடுகிறார்கள். எங்களால் இவை எல்லாவற்றையும் கவனிக்க முடியவில்லை. இடைப்பட்ட காலத்தில் ஏற்படக்கூடிய பல பிரச்சினைகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருகிற காரணத்தாலே உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் முடிந்த பிறகு பஞ்சாயத்து தலைவர்; ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள் இவைகளை கவனித்து கொள்வார்கள். அரசாங்கத்திடம் எங்கள் தொகுதிக்கு தொழிற்சாலை வேண்டும், இன்னும் பல பெரிய திட்டங்கள் வேண்டும் என்று கேட்பதை விட்டு, லைட் எரியவில்லை என்று கேட்கிற அளவிற்கு எங்களை போக விட்டு விடுகிறார்கள். மூன்று மாதத்தில் தேர்தல்கள் நடக்கவேண்டும், ஒத்தி வைக்கக்கூடாது என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.





திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து, மற்றும் ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் நீட்டிப்பதற்கான இந்த மசோதா மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள் ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் இல்லாத காரணத்தால் கிராமப்புற மக்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அனைவரும் நன்றாக அறிவார்கள். ஊராட்சிகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் இன்றைக்கு அரசு கிராமப்புறத்து மக்களுக்கு போடுகின்ற அனைத்துத் திட்டங்களும், செய்கின்ற அனைத்து நல்ல காரியங்களும் சரிவர அவர்களுக்குப் போய்ச் சேராத நிலைமை இருக்கிறது என்பதை பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த மன்றத்திலே எடுத்துக்கூறி இருக்கிறார்கள்.

வருகின்ற அக்டோபர் மாதத்தில் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தலை நடத்துவதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான மாறுதலும் இல்லாமல், மேலும் இந்த தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்காமல், தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கையிலே பொறுப்பை ஒப்படைத்து, இந்த அரசால் கிராம மக்களுக்குச் செய்யப்படுகின்ற அனைத்து நல்ல காரியங்களும் அவர்களுக்குப் போய் சேருகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த தனி அதிகாரிகள் பதவிக் கால நீட்டிப்பு மசோதா மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஊராட்சி நிறுவனங்களில் தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் கிராமப்புற மக்கள் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல அரசு கிராம மக்களுக்குச் செய்கின்ற நல்ல காரியங்கள் அந்த மக்களுக்கு போய்ச்சேராதது பெரும் குறையாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், வறட்சி நிவாரணப் பணியின்கீழ் தமிழக அரசு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டாலும் கூட, அந்தப் பணிகள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதை பார்வையிடுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி நிறுவனங்களிலே இல்லாத காரணத்தால்

கிராம மக்களின் நலனுக்காகப் போடப்பட்ட திட்டம் சரியாக நடைபெறவில்லை என்பதை அரசு நன்றாக அறிந்திருக்கும். எந்த வேலையை எப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னாலும் கூட அங்கே இருக்கிற அதிகாரிகள் அவர்களுடைய சௌகரியத்திற்கு ஏற்ற முறையில் செய்கிறார்களே தவிர மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப வேலைகளைச் செய்வதில்லை என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக என்னுடைய தொகுதியிலே கூட இந்த வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்கிறபோது, இந்த நீர் ஊற்று, குட்டைகளை அமைத்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லியும், குறிப்பாக சேப்பள்ளி, கல்லிபாடி போன்ற இடங்களில் நீர் ஊற்று, குட்டைகளை அமைக்க வேண்டும் என்று சொல்லியும் அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஏரி தூர் வாருதல் போன்ற பணிகளைத்தான் செய்தார்கள்.

அதேமுறையில், இன்றைக்கு பல்வேறு ஊராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை செயல்படுத்துகிறார்கள். அந்த தன்னிறைவுத்திட்டத்தை நிறைவேற்றுகிறபோது கூட எந்த எந்தத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று இப்போது இருக்கிற மக்கள் குழு ஆலோசனை சொன்னாலும், அந்தக் குழுவுக்கு ஆலோசனை சொல்லுகின்ற அதிகாரம் தான் இருக்கிறதே தவிர, செய்ய வேண்டுமென்று வற்புறுத்தும் அதிகாரம் இல்லாத காரணத்தால் பல்வேறு வேலைகள் தடைப்பட்டிருக்கின்றன, என்பது அரசுக்குத் தெரியும். ஆகவே, மக்கள் நலனுக்கான இத்தகைய வேலைகள் நடைபெற வேண்டுமென்றால் விரைவிலே ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தலை நடத்தி, மக்கள் பிரதிநிதிகள் கையிலே அந்தப் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப் போல பல்வேறு கிராமங்களில் விளக்குகள் கூட எரியாமல் இருக்கின்றன. விளக்கு எரிகிறதா இல்லையா என்று பார்க்கும் நபர் இல்லை. கிராம சேவகர்கள் பகலிலே போய், வந்துவிடுகிறார்கள். அதிலும் ஒருவருக்கு 10, 15 கிராமங்கள் இருக்கும். அவர் எங்கோ ஒரு இடத்தில் குடியிருப்பார்.

[மாலை 6.20]

ஆகவே விளக்கு எரிகிறதா இல்லையா என்று பார்ப்பதற்குரிய வாய்ப்புகள் கூட இன்றைக்கு இல்லை. ஆகவே இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் நன்றாகக் கவனிக்கவேண்டும் என்றால் விரைவாகத் தேர்தலை நடத்தியாக வேண்டும்.

அடுத்து ஊராட்சி ஒன்றியத் தேர்தலை நடத்துகின்ற நேரத்திலே அவற்றை அரசியல் கட்சிகளின் சின்னத்திலே நடத்துவதற்குரிய ஆலோசனையைச் செய்யவேண்டும். இதைப்பற்றி சர்வ கட்சிக் கூட்டத்திலே விவாதிக்கப் பட்டதாக சொல்லப் பட்டது. பெருவாரியான கட்சிகள் இதை ஆதரிக்கவில்லை என்று



சொல்லப்பட்டது. இருந்தாலும் கூட கிராமப் புறங்களில் அரசியல் கட்சிகளின் சின்னத்திலே தேர்தலை நடத்தினால்தான் அரசியல் உணர்வுகளை ஏற்படுத்த முடியும். எப்படி மாநகராட்சித் · தேர்தல்களிலும், நகராட்சித் தேர்தல் களிலும் அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றனவோ அப்படி ஊராட்சி மன்றத் தேர்தல்களிலும் அரசியல் கட்சிகள் போட்டியிட்டால் அதன் மூலம் அரசியல் உணர்வோடு மக்களை வளர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால் கிராமப்புறங்களில் ஜாதி உணர்ச்சிகளும், பணமும் ஆதிக்கம் செய்கின்ற நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும். ஆதிக்கக்காரர்கள் இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்வதன் காரணத்தால் தமிழகத்திலே நாம் விரும்பாத பல நிகழ்ச்சிகளுக்கு ஏதுவான நிலைமை எற்பட்டு விடக்கூடும். ஆகவே ஜாதி உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காத நிலைமை அகற்றப்பட வேண்டும் என்றால் அரசியல் கட்சி ரீதியாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஜனநாயகப் பண்பாட்டை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்த அடிப்படையிலே தேர்தலை விரைவிலே நடத்தி முடிப்பதற்கு தமிழக அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. தீர்த்தராமன்: துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களின் தனி அதிகாரிகளை நீடிப்பது சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மசோதாவின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று மாத காலத்திற்கு மட்டும் இப்பதவிக் காலத்தை நீட்டிப்பதன் மூலம் மூன்று மாதங்கள் கழிந்தவுடன் தேர்தலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இப்போது மக்களின் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மக்களின் குறைகளைப் பற்றி அதிகாரிகளுக்குச் சொல்கின்ற நேரத்திலே அவர்கள் பொறுப்பற்ற தன்மையில் தட்டிக்கழிக்கிறார்கள். ஆகவே தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களின் பிரதிநிதிகள் இருந்தால் அவர்கள் நிச்சயம் மக்களுக்குப் பயந்துதான் ஆகவேண்டும். அப்போது நடக்கின்ற காரியங்கள் முறைப்படி நடக்கும்.

இதுவரை இல்லாத அளவில் நல்லபல திட்டங்களை இந்த ஆட்சியினர் ஏற்படுத்திக்கொண்டு வருகின்ற நிலைமையில் அதாவது ஊரக ஒருங்கிணைப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்ற நல்லபல திட்டங்களை ஏற்படுத்தி இருப்பது பாராட்டத்தக்கதாகும். ஆனால் இந்தக் காரியங்களை நிறைவேற்றுகின்ற அதிகாரிகள் பொறுப்போடும், கடமையோடும் செய்வதாகத் தெரியவில்லை. ஆகவே இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டுவருகின்ற விதத்திலே உள்ளாட்சித் தேர்தல்களை கூடிய விரைவிலே நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற பல அரசியல் கட்சிகள் நினைத்துக்கொண்டிருக்கின்ற நல்ல காரியத்தை அமைச்சரவர்கள் செய்துள்ளதற்காக நான் பெண்களின் சார்பாகவும், அரிசன மக்களின் சார்பாகவும் மனம் திறந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 15 சதவீதம் பெண்களுக்கு என்று சட்டத்தைக் கொண்டுவந்தாலும் கூட பெண்கள் வருவதற்கான வழியினையும் நாம் வகுத்துக்கொடுக்க வேண்டும். ஏதோ ஒன்றிரண்டு பெண்கள் அரசியலிலே வந்ததற்குப் பிறகு அவர்கள் பல இன்னல்களை அனுபவிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அரசியல் மேடைகளிலே அவர்களைக் கண்டபடி பேசக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. என்னத்தைப் பேசப் போகிறார்கள், தொலைந்து போகட்டும் என்று இருந்தாலும் கூட அதன்மூலம் பெண்கள் அரசியலுக்கு வருவதற்கு தயங்குகின்ற நிலைமையைத்தான் இது ஏற்படுத்தும். ஆகவே சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களும் பெண்களைத் தரக்குறைவாகப் பேசாமல் இருப்பதற்குரிய வழி செய்தால் நல்லது. ஆகவே நல்ல திறமையோடு பல பெண்களை அரசியலுக்குக் கொண்டுவரவேண்டும் என்றால் அரசியல் கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றிய பெரிய வேண்டுகோள் விடுக்கவேண்டும் என்று நான் கருதினேன். அதற்காகவே இன்று ஒரு சில வார்த்தைகளைச் சொல்லவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். பெண்களுக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்திருப் பதைப்போல, அரிசன மக்களுக்கும் இடம் ஒதுக்கியிருந்தாலும் கூட, அவர்களுக்கு என்று தனித் தொகுதியில்லை என்றால், அவர்கள் தலைவர்களாக வருவது சாத்தியப்படாது. அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கும் அந்தச் சாதி அடிப்படையில் ஒதுக்கி கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இந்தத் தேர்தலைக் கொஞ்சம் சீக்கிரமாக வைக்க வேண்டும். இப்போது பஞ்சாயத்து யூனியன்களில் அதிகாரங்களே இல்லை. குடிதண்ணீர் பிரச்னை வாட்டர் போர்டுக்கு போய்விட்டது. பள்ளிக்கூடங்கள், வாத்தியார்கள் விஷயம் கல்வித்துறைக்கு போய்விட்டது. ரோடுகள் போடுவது கூட சில இடங்களில் பி. டபிள்யூ. டி. எடுத்துக் கொண்டு விட்டது. இனிமேல் மண்வெட்டுவதும், குளங்கள் வெட்டுவதும் தூர் எடுப்பதும் இன்னும் அது போன்ற சின்ன சின்ன வேலைகள் தாம் பஞ்சாயத்துக்களின் கண்காணிப்பில் இருக்கிறது.

கிராம ராஜ்யம் அமைக்க வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகள் கனவு கண்டார். அதை நேரு அவர்களும் காமராஜ் அவர்களும் நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அந்த எண்ணங்களை எல்லாம் செயல்படுத்தும்



வகையில் நல்ல முறையில் இந்த அரசு வேலைகளை செய்து வந்தாலும் கூட ஆங்காங்கே சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அதிகாரங்கள் அதிகம் இல்லாத சூழ்நிலையிலே இருக்கும் பஞ்சாயத்துக்களில் இன்றைக்கு, பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் ஒதுக்கீடுகள் செய்ய முன் வந்திருந்தாலும், இருக்கிற அதிகாரங்களையாவது அப்படியே விட்டுவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இருக்கும் வேலைகளையும் விவசாயத்துறைக்கோ, பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டுக்கோ அனுப்பிவிடாமல் பஞ்சாயத்துக்களிலே வைத்திருக்க வேண்டும் என்று கோருகிறேன்.

நிறைய பஞ்சாயத்துக்களில் இன்றைக்கு மின்சார இலாகாவிற்கு பணம் கட்டமுடியாத நிலைமை இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களில் எரியாத விளக்கிற்கு எதற்கு பணம் கட்ட வேண்டும் என்று நினைத்து, பஞ்சாயத்திலேயே பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்க வேண்டும். ஆகவே, கூடிய விரைவில் தேர்தலை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அக்டோபர் மாதத்திற்கு பிறகும் கால அளவை நீட்டிக்கொண்டு போகாமல் தேர்தலைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி தேர்தல் வரும்போது, நீங்கள் ஒதுக்கீடு செய்த அளவிற்கு பெண்கள் வரவேண்டும் என்றால், அவர்கள் மரியாதையை காப்பாற்றுகின்ற வகையிலே வழி வகைகளை இந்த அரசு செய்ய முன் வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி இருந்தால்தான் பெண்களை அரசியலில் கொண்டு வரமுடியும். குடும்பப் பெண்கள் வர பயப்படுகிறார்கள். அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பும், மரியாதையும் கொடுத்தால் வரமுடியும். ஆகவே, அந்த வகையில் அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வந்தால் எந்தவிதமான தவற்றையும் செய்யமாட்டார்கள். தவறு செய்ய பயப்படுவார்கள். பயந்து கொண்டு எது எது நியாயமோ அதைச் செய்ய முன் வருவார்கள். நல்ல திட்டங்களை நீங்கள் எப்படிச் சொன்னாலும், அவைகளை நிலை நிறுத்த, உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்று கூறிக்கொள்கிறேன். அதற்கு அவர்களுக்கு அரசியலில் மரியாதை வேண்டும். அரசியலில் உள்ளவர்கள் பெண்களை ஆபாசமான முறையில் பேசாமல் இருந்தால் நலம் ஏற்படும். அதற்கான வழி வகைகளை அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகச் செய்ய முன் வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்துக் களில் இருக்கும் அதிகாரங்களை—மீதியிருப்பதையாவது அப்படியே விட்டுவையுங்கள்; அவைகளையும் பறித்து வேறு துறைகளுக்கு கொடுத்துவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி ஒரு

சில வார்த்தைகளைச் சொல்லவிரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே இரண்டு யூனியன்களில் இந்த தன்னிறைவுத் திட்டத்தை எடுத்து வேலை செய்தார்கள். மிக நல்லமுறையில் சில பணிகள் நிறைவேறியிருக்கின்றன. இருந்தாலும் குடிதண்ணீர் பிரச்னை முழுமையாக தீர்க்கப்படவில்லை. வத்தலகுண்டிலே இப்போது தன்னிறைவுத் திட்டத்தை எடுத்திருக்கிறார்கள். அங்கே தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள் அனேகம் இருக்கின்றன. இதுமாதிரி பாக்கியான வேலைகள் எங்கெங்கே இருக்கின்றன என்று பார்த்து அந்த வேலைகள் அனைத்தையும் வரக்கூடிய அக்டோபர் மாதத்திற்குள்ளாகவே பூர்த்தி செய்தால், தன்னிறைவுத் திட்டமானது, தன்னளவில் தன்னிறைவு அடைந்ததாக, வரக்கூடிய தேர்தலுக்கு ஒரு முன்னோடித் திட்டமாக அமையும் நிலைமை ஏற்படும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகையினால் இருக்கிற குறைபாடுகளை எல்லாம் 3 மாதங்களுக்குள்ளாக களைந்து, தன்னுடைய தொகுதியில் எல்லாப் பணிகளும் நிறைவு பெற்றன, இனி பாக்கியில்லை என்று சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைவு கொள்ளும் வகையில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்த அரசாங்கமும் எடுத்துக் கொள்ளாத வகையில், இந்த தன்னிறைவுத் திட்டத்தை எடுத்து செயல்படுத்துகிறீர்கள், அதை முழுமையாக நிறைவேற்றி, ரோடுகள் போடுவது, சிறு சிறு பாலங்கள் கட்டுவது, குடிதண்ணீர் பிரச்னையே இல்லாமல் செய்வது போன்ற பணிகளை செம்மையாக எடுத்துக் கொண்ட ட்ஞ்சாயத்துக்களில் எல்லாம் முழுமையாக வேலைகளை நிறைவேற்றும் வகையில், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெருமைப்படும் வகையில் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று கோரி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(மாலை 6.30)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 75, 76 ஆகிய மசோதாக்கள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஊராட்சிகள் தனி அதிகாரிகளுடைய காலம் வருகிற 11-9-1981-க்குள் முடிவடைகிறது. அதேபோல் ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகளுடைய காலம் 30-9-1981 முடிவடைகிறது. வருகிற அக்டோபர் மாதம் ஊராட்சிமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்து அறிவித்திருக்கிறது. ஆகவேதான் இவர்களுடைய பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மூன்று மாத காலம் நீட்டிக்க இந்த மசோதாக்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனாலும் தேர்தல்கள் அதற்கு முன்னால் நடந்து ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அவர்கள் பதவி ஏற்புகளை





ஏற்றுக்கொண்டால் அதற்கு இரண்டு மாதத்திற்குள்ளாக இதை ரெஸ்ட்ரிக்ட் செய்வதற்குண்டான வழிமுறைகளைத்தான் இந்த மசோதாவில் செய்து இந்த மன்றத்தில் வைத்திருக்கிறேன். தேர்தல்கள் வெகுசீக்கிரம் நடைபெற இருக்கின்றன. அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. கடந்த 1970-ல் தேர்தல்கள் நடந்து 1975-ல் மீண்டும் தேர்தல்கள் நடந்திருக்கவேண்டும். 75-ல் நடக்கவில்லை. அதற்குப் பின்னால் தள்ளிப்போடப்பட்டு இன்று வருகிற அக்டோபரில் நடைபெறுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த இடைக்காலத்தில் 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்க அந்த மசோதாவையும் இந்த மன்றத்தில் நீங்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அதன் காரணமாக 1-1-1981-ல் யாரெல்லாம் 18 வயது அடைந்தவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் இந்த வாக்காளர் பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 40 இலட்சம் பேர்களுக்கு மேலாக வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வாக்களிக்கக்கூடிய ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு புரட்சி கரமான திட்டத்தை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் பெண்களுக்கும் தனி இட ஒதுக்கீடுகள் செய்ய வேண்டுமென்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தை இந்த ஊராட்சிமன்றத் தேர்தல்களில் கடைப்பிடிக்கவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்கேற்ப கடந்த 5-8-1981-ல் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும், அனைத்துக் கட்சித் தலைவர்களும்——திராவிட முன்னேற்றக் கழகம் தவிர——எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கேற்ப இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம் என்றும், பெண்களுக்கு 15 சதவீதம் என்றும் இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு அந்த மசோதாவையும் இங்கே தாக்கல் செய்திருக்கிறோம். அது நாளை அல்லது மறுநாள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. ஆகவே எவ்வளவு சீக்கிரமாக இந்தத் தேர்தல்களையெல்லாம் நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடத்த அதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம். இங்கே நன்றியையும் பாராட்டுதல் களையும் சொன்னவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அந்தச் சீரிய கருத்துக்களை எல்லாம் சிரமேற் கொண்டு தேர்தல்களை சீக்கிரம் நடத்த முற்படுவோம் என்ற உறுதிப்பாடோடு இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று வேண்டி கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 75/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 75/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 76/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 76/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முவன்டிவு நிறைவேற்றப்பெற்றது.



எ. வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு, 1981.

ஏ. வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 60/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த சட்டமுன் வடிவையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 72/19 1) ஆய்வுக்கு ** எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என்று மொழிகிறேன்."

* திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் தொழிலாளர்கள் சம்பந்தமாக தமிழக அரசின் சார்பிலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த இரண்டு சட்டங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன். இந்த நியாய ஊதியத்தைக் கொடுக்காத நில உரிமையாளர்கள்மீது தண்டனை வழங்க வேண்டுமென்ற முறையிலே அவர்களிடம் இந்த நியாய ஊதியம் கொடுக்காததுபோல் 10 மடங்கு அதிகமாக வசூல் செய்ய வேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்திருப்பதை வரவேற்பதோடு, இந்தச் சட்டத் திருத்தத்தினால் இன்றைய தினம் நிலச்சுவான்தார்கள் அந்த நியாய ஊதியம் கொடுக்காமல் இருந்தால், 10 மடங்கு அதிகமான தொகையை அந்த விசாரணை அதிகாரிகள் கோரலாம் என்றிருக்கிறது. இப்படி 10 மடங்கு என்று சொல்லப்பட்டிருப்பது பாராட்டக்கூடியது. அதே நேரத்தில், ஒரு குறைந்தபட்ச தொகையையக்கூட அதிலே நிச்சயிக்க வேண்டும். கொடுக்கப்படாத சம்பளத்தைப்போல் மூன்று மடங்குக்கு குறையாமல் வழங்க வேண்டும் என்று இந்தச் சட்டத்திலே திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இன்று இருக்கக் கூடிய அதிகாரிகள் இந்தச் சட்டத்தைப் பற்றி வியாக்கியானம் சொல்லுகின்றபோது கூலி என்கின்ற முறையிலே இருக்கக்கூடிய தொகையில் கால் பங்கு, அரை பங்கு தருவார்களானால், அதைப்பற்றி அதிகாரிகளிடம் முறையிட்டாலும்கூட, அது பயனற்றதாகி விடும். எனவே, இந்தச் சட்டத்தில் மூன்று பங்கிற்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்கின்ற முறையிலே ஒரு திருத்தம் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே

* 1981ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு கிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

** 1981ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

போல், இன்றைய தினம் இந்தக் கூலிச் சட்டத்தை அமுல் நடத்துகின்ற அதிகாரிகளிடம் முறையிட்டால், அவர்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். அவர்களிடம் இன்றைக்கு முறையிட்டால் ஒரு வாரமோ, ஒரு மாதமோகூட அவர்கள் நடவடிக்கை எடுக்காத சூழ்நிலை இருக்கிறது. விரும்பத்தகாத நிலச்சுவான்தார்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை எல்லாம் இந்த அதிகாரிகள் எடுப்பார்கள். எனவே அந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு ஒவ்வொரு ரெவின்யூ வட்டங்களிலும் அல்லது ஒவ்வொரு ரெவின்யூ பிர்க்காக்களிலும் விவசாயத் தொழிலாளர்களையும், அனைத்துக் கட்சி சார்பிலே உள்ள ஊழியர்கள் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, இந்தச் சட்டத்தை அமுல்நடத்துவதற்கு ஒரு விரிவான ஏற்பாட்டையும் செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த நியாய ஊதியச் சட்டத்தை தமிழகம் முழுவதும் விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கீழத் தஞ்சையிலே மட்டும் இல்லாமல், தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்களும் பெறக்கூடிய வகையிலே இந்தச் சட்டத்தை தமிழகம் முழுவதற்கும் நீடிக்கவேண்டும், விரிவுபடுத்த வேண்டும், அதற்கான முறையிலே இதனை அமுல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், வேளாண் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கூலி என்று சொல்லுகிறபோது, இன்றைக்குத் தமிழகம் முழுவதும் அறுவடை கூலி 8ல் ஒரு பங்கு என்றிருக்கிறது. ஆனால், கீழத் தஞ்சையில் 9ல் ஒரு பங்கு என்றிருக்கிறது. ஆகவே உடனடியாக கீழத் தஞ்சையில் 9ல் என்றிருப்பதை மாற்றி, 8ல் ஒன்று இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தை திருத்துகின்ற முறையிலே இந்தக் கூலி உயர்வை கொடுப்பதற்கான நடவடிக் கயையும் எடுக்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த சட்டத்தைத் தமிழகம் முழுவதும் அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டும். அதற்கான காரியத் தச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சட்டங்களை கொண்டு வருகிறபோது, இந்த தமிழக விவசாயத் தொழிலாளர்களை, அவர்கள் நலமான கணக்கில் எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும், இன்றைக்கு அரசாங்கத்திலே பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் போடப்படுகின்றது, விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்ற சூழ்நிலையில், இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்கள் என்று சொல்லக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள்தான் அரசாங்கத்தினுடைய எந்தவிதமான நன்மையும் பெற முடியாத நிலைமையிலே இருக் கிறார்கள். எனவே, அவர்கள் மேலும் நன்மை பெறக்கூடிய சூழ்



நிலையிலே அவர்களுக்கு ஒருங்கிணைந்த சட்டத்தைக் கொண்டு வந்து, அவர்களுக்கு மேலும் பல பாதுகாப்புகளைக் கொடுக்க வேண்டும்; அதற்கான சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 6-40]

வேலைக்கு உத்தரவாதம் வேண்டும். வேலை செய்யும்போது விபத்துக்குள்ளானால் நிவாரணம் தர வழிவகை செய்ய வேண்டும். இன்றைக்கு உள்ளூரில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் தங்களுக்கு கூலி வேண்டும், அரசின் சட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தால் வெளியூரில் இருந்து விவசாயத் தொழிலாளர்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். ஒரு ரெவின்யூ வில்லேஜ் என்று சொல்லுகிறார்கள். அதிலே இரண்டு மூன்று கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு தொழிலாளர்களை இறக்குமதி செய்து தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். அந்த விவசாயத் தொழிலார்களுக்கு முழு உத்தரவாதத்தையும் அரசாங்கமே கொடுத்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் முறையிலும், இடங்களைக் கொடுப்பதிலும் பொது இடங்களில் அனைத்துப் பகுதி மக்களும் சேர்ந்து வாழும் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய உபரி நிலம், பினாமி நிலம் தரிசு புறம்போக்கு நிலங்களை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க முன்னுரிமை கொடுத்து நிலம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒய்வு கால ஊதியம் என்று சமீப காலத்தில் அரசு அறிவித்திருந்தாலும் அது போதுமானதாக இல்லை, விவசாயத் தொழிலாளர்கள் 40, 50 வயது அடைந்து விட்டால் மிராசுதாரர்கள் அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வயது முதிர்ந்தவர்களுக்கு ஒய்வூதியம் கொடுப்பதை விரிவாக்கி அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒய்வூதியம் கொடுக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலியை நிர்ணயித்திருப் பதில் சட்டத்தில் சிறியவன், பெரியவன் என்று பாகுபாடுப் செய்திருக்கிறார்கள். பல்வேறு நிலைகளில் 14 வயதுக்கு கீழ் பட்டவர்கள் வேலை செய்தால் குற்றம் என்று இருக்கிறது. விவசாய வேலையை எடுத்துக் கொண்டால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—பெண்கள் நடவு நடும்போது பெரியவர்கள், சிறியவர்கள் என்று பாகுபாடு பார்ப்ப தில்லை, பத்து இருபது பேர் வயலில் இறங்கி வேலை செய்வார்கள். அதிலும் 16, 17 வயது வாலிபர்கள் பெரியவர்களைவிட சுறுசுறுப் பாக சிறப்பாக வேலை செய்வார்கள். அப்படி வேலை செய்கிற

16, 17 வயது வாலிபர்களை பெரியவர்கள் என்ற நிலையில் கூலி
கிடைக்காத நிலையில் நிலச்சுவான்தார்கள் அவர்களைச் சிறிய
வர்கள் என்றுச் சொல்லி கூலி யக் குறைத்துக் கொடுக்கிறார்கள்.
ஆகவே சட்டத்தில் பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு
இருப்பதை மாற்ற வேண்டும்,

அரசாங்கம் கொண்டு வருகிற கூலிச் சட்டம், பல்வேறு
உத்தரவுகள், அவர்களுடைய நன்மை கருதி கொண்டு வரப்படுகிற
திட்டங்கள் பற்றியெல்லாம் விவசாயத் தொழிலாளர்கள் தெரிந்து
கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. கிராமப்புற தொழிலா
ளர்களில் படித்தவர்கள் அதிக அளவு இல்லாத காரணத்தால்
அரசாங்கம் விவசாயிகளின் நன்மைக்காக கொண்டு வருகிற
சட்டங்கள், திட்டங்கள் இவற்றையெல்லாம் பெரிய அளவுக்கு
ரேடியோ மூலம் விளம்பரப்படுத்த வேண்டும், அரசாங்க
அதிகாரிகள் மூலமாக எடுத்துச் சொல்லவேண்டுமென்று கூறி,
இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன், நன்றி.
வணக்கம்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால்
வேளாண்மைத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டு கொண்டு வரப்
பட்ட இரண்டு சட்ட முன்வடிவுகளையும் இந்திய கம்யூனிஸ்டு
கட்சியின் சார்பில் வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலியைக்
கொடுக்காத நிலப் பிரபுக்களுக்கு தண்டனை ஆறு திங்கள் சிறை,
500 ரூபாய் அபராதம் விதிக்கலாம் என்ற முறையிலே சட்ட முன்
வடிவுகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம்.
அதிகாரி அது பற்றி விசாரணை செய்து அந்த விசாரணையின்
முடிவில் கோர்ட்டுக்கு அனுப்பலாம் என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. அறுவடைக் காலத்தில் அறுவடைக் கூலியைக்
கொடுக்காது களத்து மேட்டிலிருந்து மிராசுதான் மீறிச் சென்று
விட்டால் அதை விசாரணை செய்து தீர்ப்பு எழுதி
கோர்ட்டுக்கு அனுப்புவதற்குள் நெல் களத்து மேட்டிலிருந்து
வீட்டிற்குச் சென்று வீட்டுடில் இருந்து வேறு எங்கோ சென்று
விடும்.

ஆகவே கோர்ட்டுக்குச் சென்று தீர்ப்பு வருகிற வரையிலும்
அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அதனுடைய பலன்கள்
கிடைக்காது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கூலி
கொடுக்க மறுக்கின்ற மிராசுதாரர்களின் மனுக்கள் மீது
விசாரணை நடத்துறபோது ஒரு சில தினங்களில் கோர்ட்டிற்கு
போகவேண்டுமென்று அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு
அதிகாரம் வழங்கவேண்டுமென்ற முறையிலே இதை மறு
பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





சமீபத்திலே கீழத் தஞ்சையிலே 8 தாலுக்காக்களில் விவசாயத்
தொழிலாளர்கள் ஒன்றுபட்டு இன்றைக்குள்ள விலைவாசி
உயர்ந்துவிட்டிருக்கிறது, அரிசி விலை உயர்ந்துவிட்டது, எனவே
கூலியை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த ஆண்டு
விவசாய காலத்தில் கோரிக்கை வைத்து இயக்கம் நடத்தினார்கள்.
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சங்கமும், இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த சங்கமும் கோரிக்கை வைத்து அமைச்சரைச்
சந்தித்த பிறகு அதோடு 9 அம்சக் கோரிக்கையையும் முன்வைத்து
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த விவசாயத் தொழிலா
ளர்கள் சங்கம் இந்த மாதம் 24 ஆம் தேதியன்று சென்னையிலே
ஒரு பெரிய பேரணியை நடத்தி மகஜரை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். நம்
முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு அந்த
நேரத்திலே அவர்கள் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவு விவாதம்
நடந்து கொண்டிருந்த நேரமாக இருந்த காரணத்தினாலே
சந்திக்க இயலாமல் போய்விட்டது. நல்ல சட்டங்கள்
வருகின்றன. அமைச்சர் நல்ல எண்ணத்தோடு கொண்டுவரு
கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு அதிகாரிகள் சட்டத்தை
அமல் நடத்துகிறார்கள் என்பதை நம்மால் பார்க்க முடிகிறது.
இரண்டு தினங்களுக்கு முன்னாலே கிழக்கு தஞ்சையிலே இன்றைக்
குள்ள கூலியை உயர்த்தி வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்
ஆண்களுக்கு 9 ரூபாயும் பெண்களுக்கு 7 ரூபாயும் குறைந்த பட்ச
கூலியைக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே அறிவித்திருக்
கிறார்கள். நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். இதிலே
இன்னும் ஒரு நல்ல அம்சமும் இருக்கிறது. சென்ற ஆண்டு
வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கூலியை உயர்த்தி அறிவித்த
நேரத்திலே தஞ்சை ஜில்லாவிலே உள்ள 16 நிலப்பிரபுக்கள்
ஹைகோர்ட்டிற்குச் சென்று ஸ்டே வாங்கினார்கள். அப்படி
ஸ்டே வாங்கி கையிலே வைத்துக்கொண்டு கீழத் தஞ்சையிலே
அமலாக்க வேண்டிய கூலியை அமலாக்காமல் இடையூறாக
இருந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு கோர்ட்
டிற்குச் செல்ல முடியாத வகையிலே ஒரு தடங்கலான சட்டத் த
அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால்
நாங்கள் பாராட்டுகிறோம். இப்படிச் சட்டங்கள் எல்லாம் இருந்
தாலும்கூட இந்த கூலி அமல்படுத்தப்படுகிறதா என்பதை பார்க்க
வேண்டும்.

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் ஆண்களுக்கு 7 ரூபாயும்
பெண்களுக்கு 5 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. வட ஆற்காடு,
தென் ஆற்காடு மற்ற மாவட்டங்களிலே 2 அல்லது $2\frac{1}{2}$, 3 ரூபாய்
கூலி கொடுக்கிறார்கள். சட்டக் கூலியைக் கேட்க தொழிலாளர்
கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்திலே ஐந்து
மாதங்களுக்கு முன்னாலே ஒரு கிறிஸ்தவ பாதிரியார் பண்ணை
யிலே பணியாற்றிய தொழிலாளர்கள் 7 ரூபாய் ஆண்களுக்குப்,
5 ரூபாய் பெண்களுக்கும் வேண்டுமென்று கேட்டதற்கு கொடுக்க
மறுத்து அதிகாரிகளிடம் மனுக்கொடுத்து சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் அது ஒரு பாதிரியார் பண்ணை என்றும் சிறு
பான்மையோர் வைத்து இருக்கிற பண்ணைக்கு இந்தச் சட்டம்

அவர்களைக் கட்டுப்படுத்தாது என்றும் சொன்னார்கள்,
மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அன்றைக்கு
கலெக்டராக இருந்தவர் சீனிவாசன். தமிழகம் முழுவதும்,
இடையாத்தூர் சம்பவம், சீக்கனாங்குப்பம் சம்பவம் எல்லாவற்றிற்
கும் கூலிப் பிரச்சினைதான் காரணம். அமல்படுத்தவேண்டு
மென்று மாண்புமிகு உறுப்பினர் செல்லமுத்து அவர்கள்
சொன்னதைப்போல் அதிகாரிகளிடம் சொல்லிச் சொல்லி நாங்கள்
அலுத்துவிட்டோம்.

[மாலை 6-50]

இதை அமல்படுத்த வேண்டுமென்றால் ஒவ்வொரு தாலுக்கா
விலும் சம்பந்தப்பட்ட அதிகாரியோடு சேர்த்து ஒரு
சர்வகட்சி குழு அமைத்து, யார் மீறினாலும் அவர்கள்மீது
நடவடிக்கையெடுப்பதற்கான உரிமையைக் கொடுத்தால்தான்
இந்தச் சட்டம் உண்மையில் சாதாரண விவசாயத் தொழிலாளி
களுக்கு பலனை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

காலையிலே பேசிய நிதியமைச்சரவர்கள் 62 சதவீதம்
வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் என்று சொல்வது
சரியல்ல, வருமானம் குறைவாக இருப்பவர்கள் 47 சதவீதம்
என்று சொன்னார்கள். இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்க்குக்
கீழே உள்ளவர்கள், நமது நிதியமைச்சரவர்களின் வாதப்படி
தமிழகத்தில் பெரும்பகுதி விவசாயத் தொழிலாளர்கள்தான்.
அவர்களுக்குக் கிடைக்கின்ற வேலைநாட்கள் மிகக் குறைவான
தாகும். ஒரு ஆண்டுக்கு 3 மாதங்கள், 4 மாதங்களுக்கு மேல்
அவர்களுக்கு நிரந்தர வேலை கிடையாது. எனவே, இதையெல்
லாம் கணக்கில் கொண்டு வருவாய்த் துறை அமைச்சரவர்கள்
தமிழகம் முழுவதும் இன்றைக்கிருக்கின்ற விலைவாசி உயர்வைக்
கணக்கில் கொண்டு எதிர்காலத்தில் பரிசீலனை செய்து இன்றைக்
கிருக்கும் கூலியைவிட அதிகமாக உயர்த்தி அந்த விவசாயத்
தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் சட்டத்தைக்
கொண்டு வருவதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூலிப்பிரச்னையில் சமீபத்தில், தஞ்சை மாவட்டத்தில்
கொடவாசல், அரிச்சபுரம், சீலத்தநல்லூர் போன்ற பலயிடங்
களிலே வழக்குகள் இருக்கின்றன. அன்றைக்கு அமைச்சரவர்கள்
சொல்லியிருக்கிறார்கள்; முதலமைச்சரைக் கலந்து கொண்டு
அப்படி வழக்குகள் இருந்தால் அவைகளைப்பற்றிப் பரிசீலிக்
கிறோம் என்று சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன்.
வழக்கை வாபஸ் வாங்க வேண்டும். நில உச்சவரம்பு வந்தால்
யார் ஏர் பிடித்து உழுகிறார்களோ, யார் மண்வெட்டி எடுத்து
வெட்டுகிறார்களோ அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த
நிலத்தை ஒப்படைத்தால், பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நமது
மாநிலத்தில் அதிக உற்பத்தியைப் பெற முடியும். நில உச்சவரம்பு



வருகிறது, மிச்ச நிலம் பெறுகிறார்கள், ஆனால் அதிகாரிகள்
அவற்றை யாருக்கு வழங்குகிறார்கள், நிலமற்றவர்களுக்கு
வழங்குகிறார்களா என்று பார்த்தால், தொழில் நடத்தக்.
கூடியவர்கள் அல்லது மற்றத் தொழில்களில் ஈடுபடக் கூடியவர்
களுக்கு நிலம் இல்லாவிட்டால் அவர்களுக்கு அந்த நிலம் போய்ச்
சேருகிறது. அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் மற்றவர்களுக்குக்
குத்தகைக்கு விடுகிறார்கள். இந்த நிலையைப்போக்க விவசாயத்
தொழிலாளர்களுக்கே அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஒருங்கிணைந்த சட்டத்தைப்பற்றிச் சொல்ல
விரும்புகிறேன். எல்லாத் தொழிற்சங்கங்களிலும் உரிமை
படைத்தவர்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் விவசாயத்
தொழிலாளர்களுக்கு மட்டும் ஒருங்கிணைந்த சட்டம் கிடையாது.
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், மின்சாரத் தொழிலா
ளர்கள், இரயில்வே தொழிலாளர்கள், தபால் தந்தி ஊழியர்கள்
இதுபோல் இன்னும் மற்ற மற்றத் தொழிலாளர்களுக்கு இருப்
பதைப்போல, விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஒரு ஒருங்கிணைந்த
பாதுகாப்பான சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் எதிர்
காலத்திலே அவர்களைப் பாதுகாக்க முடியும் என்று பணிவோடு
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளிக்கு 60 வயது ஆகிறது என்றால்.
7-வது வயதிலே அவன் மாடு மேய்ப்பதற்காக கம்பு எடுக்கிறான்,
60 வயது வரை உழைக்கிறான். ஆனால் மற்றத் தொழிலில்
ஈடுபட்டிருப்பவர்களுக்கு 58 வயதாகி விட்டு, வீட்டிற்குச்
சென்றால் குறைந்தபட்சம் பென்ஷன் கிடைக்கிறது. மற்றபடி
பிராவிடன்ட் ஃபண்ட் பணம் எல்லாம் சேர்த்துக் கொஞ்சம்
பணம் கிடைக்கிறது. ஆனால் விவசாயத் தொழிலாளி 53
ஆண்டுகள் இந்தத் தேசத்திற்காக உழைத்து, மண்வெட்டி
எடுத்து உடலில் உள்ள எலும்பு நோக உழைத்து வயதாகி
வெளியேறும்பொழுது அவனுக்குப் பாதுகாப்பு கிடையாது.
ஆனால் நமது அமைச்சரவை அவனை அனாதை என்று அனாதை
லிஸ்டிலே சேர்க்கக்கூடாது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். எந்த விவசாயத் தொழிலாளியாக
இருந்தாலும் அவன் தன்னுடைய மகனையோ அல்லது மகளையோ
நம்பியிருக்க முடியாது. ஏனென்றால் எத்தனை மக்கள்
இருந்தாலும் அவர்களும் தங்கள் குழந்தைகளைத்தான் கவனிக்
கிறார்கள்; தந்தையைப் பார்ப்பது என்பது மிகக் குறைவு.
ஆகவே, அந்த வயதான விவசாயத் தொழிலாளிகளுக்குக்
குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்குக் கேரளாவைப்போல 50
ரூபாய் மாதாமாதம் கொடுக்கத் தமிழக அரசு முன் வர வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, உழைக்கும் விவசாய பெண்கள் வேலையை
லெகுவான வேலை என்று தமிழகஅரசு அறிவித்து இருப்பதுவருந்த
த்தக்கது. எனவே கடினமான வேலை என்று அறிவிக்கவேண்டு.
கிறேன். பெண் விவசாயத் தொழிலாளிகள் நிலைமை மோசமாக

இருக்கிறது. கிராமத்திலுள்ள அத்தனை பேர்களுக்கும் தெரியும்,
பத்துமாத கர்ப்பிணியாக இருந்தாலும் கூட இன்றைக்கு நடவு
நட்டு வந்தால்தான் குடும்பத்தை நடத்த முடியும். எனவே,
அந்த பத்து மாதக் கர்ப்பிணிப் பெண் காலையில் நடவு நட்டு
விட்டு மாலையில் வீட்டிற்கு வந்து படுத்தால், இடுப்பு வலி
எடுத்தால் காலையில் பிரசவம் ஆகும் நிலைமையிருக்கிறது.
ஆகவே, பிரசவமாகும் வரையில் அவர்கள் உழைக்க வேண்டிய
சூழ்நிலையில் அவர்களுடைய பொருளாதார நெருக்கடியில்
அந்தக் குடும்பமிருக்கிறது. ஆகவே, பெண் விவசாயத் தொழி
லாளிகளுக்குப் பிரசவ காலத்தில் இரண்டு மாதமோ மூன்று
மாதமோ மாதத்திற்குக் குறைந்தபட்சம் 30 ரூபாய் கொடுக்கவும்
குறைந்தபட்சம் இலவசமாக வைத்தியச் சிகிச்சை அளிப்பதற்கும்
அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், விவசாயத்தொழிலாளர்களில் பெரும்பகுதியினர்
அரிசனங்கள். 100-க்கு 70 பேர்கள் அரிசனங்கள். ஆனால்,
இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஜாதிக் கலவரம். மீனாட்சிபுரம்,
தோலார் என்று எங்கு பார்த்தாலும், அரிசனங்கள் தாக்கப்படு
கிறார்கள். நான இந்தச் சபையில் பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன், அரசியல் கட்சித் தலைவர்கள் வெளியே இருக்கிற
தலைவர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.
ஜாதிக் கூட்டங்களில் கலந்துகொள்ளாதீர்கள். ஜாதியின்
பெயரால் நடத்தக்கூடிய கூட்டத்திற்கும் ஜாதியின் பெயரால்
நடத்தக்கூடிய பேரணிக்கும் பெரிய அரசியல் கட்சித் தலைவர்கள்
பங்கு கொள்வதன் காரணமாகத்தான் தமிழகத்தில் ஜாதி
எண்ணமும், ஜாதி வெறியும் இன்றைக்குத் தலை தூக்கிக்
கொண்டிருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால்
அம்மாதிரி நிகழ்ச்சிகளில் அரசியல் தலைவர்கள் கலந்துகொள்ளக்
கூடாது. அரிசனங்கள், வன்னியர்கள், தேவர்கள், கள்ளர்கள்
என்று இப்படித் தமிழகம் முழுவதும் ஒரு நிலைமை வருவதற்குக்
காரணம். ஒவ்வொரு ஜாதியின் பெயராலும் மாநாடு நடக்கும்
போது, அரசியல் தலைவர்கள் பங்குகொள்வதுதான். எம்.பிக்கள்
எம். எல். ஏக்கள், அந்தப் பேரணிக்குத் தலைமை தாங்குவதன்
காரணமாக, ஜாதி எண்ணங்கள் இப்பொழுது தலை தூக்கி
யுள்ளன. அதற்கு அரசியல் தலைவர்கள் இடமளிக்கக்கூடாது
என்று கேட்டுக் கொள்கிறேன்: விவசாயக் கூலிகளைப் பாது
காப்பதற்கு, தமிழகத்தில் ஒரு ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு
வர வேண்டும். நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்து, தரிசுப்
புறம்போக்குகளை அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்குக்
கொடுத்து, சாகுபடி நிலம் கொடுத்து, இப்படிப் பல்வேறு சலுகை
களை நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எதிர்
காலத்தில் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இவ்விரண்டு
மசோதாக்களையும் ஆதரித்து அமர்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1969-ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்
களுக்கு நியாயக் கூலிச் சட்டத்தைத் திருத்துவதற்கான இந்தச்
சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே சில
நாட்களுக்கு முன்னால் கிழக்குத் தஞ்சாவூரிலே இருக்கக்கூடிய
விவசாயிகளுக்கு ரூ. 9, ரூ. 7 என்று கூலி அறிவித்தார்கள்



மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விவசாயத்
தொழிலாளர்களின் பல் கொண்டிருக்கக்கூடிய நல்ல கருத்துக்களை
நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இன்றையதினம் இந்த
நியாயக் கூலி சட்டம் ஓரளவு, கிழக்குத் தஞ்சாவூரிலே இருக்கக்
கூடிய உடன்பாடுகளுக்குத்தான் பொருந்தும். இந்தச் சட்டத்
தைப் பற்றி நாம் விவாதிக்கிறபொழுது, தமிழ்நாட்டிலே உள்ள
4 கோடியே 82 இலட்சம் மக்களில் கிட்டத்தட்ட 1 கோடி
பேர்கள் விவசாயத் தொழிலாளர்களாக கிராமப்புறங்களில்
இருக்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். 1971-ஆம்
ஆண்டு சென்சஸிலே, கிராமத்தில் வாழும்படியான ஜனத்
தொகையில் 21 சதவீதம் பேர் விவசாயத் தொழிலாளர்கள்
என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அது, இப்பொழுது 30 சதவீத
மாக உயர்ந்திருக்கிறது. ஆகவே, 1 கோடி பேர்கள் சம்பந்தப்
பட்ட விவசாயிகள் இன்று நியாயமான ஊதியம் பெறுவதற்கு,
கூலி பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று
இந்தச் சட்டத்திருத்தத்தை மிக உவப்போடு வரவேற்கின்ற
பொழுதே அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்
காவேரி பாயும்படியான சிதம்பரத்திலோ, திருச்சியிலோ அல்லது
திருநெல்வேலி ஜில்லா போன்ற பல்வேறு நஞ்சைப் பகுதிகளிலே
அல்லது தமிழ்நாட்டிலே கரும்பு, பருத்தி போன்ற பணப் பயிர்
உற்பத்தி பண்ணக்கூடிய பகுதிகளிலே உழைக்கும் விவசாயத்
தொழிலாளிகளுக்கும் இந்த நியாயக் கூலிச் சட்டத்தில், கூலி
எவ்வளவு நாம் கொடுத்திருக்கிறோமோ, அதையே தமிழ்நாடு
முழுவதும் கொண்டு வர முயற்சி எடுக்க வேண்டிய முக்கியமான
காலம் இது. இன்றைக்கு விலைகள் உயர்ந்து கொண்டிருப்பது
இந்தப் பகுதி மக்களுக்கும் கஷ்டங்களைக் கொடுத்துக் கொண்
டிருக்கிறது என்பதை அரசு கவனத்திலே கொண்டு விரவிலே
இந்தக் கிழக்குத் தஞ்சாவூரிலே அறிவித்திருக்கும் கூலிச் சட்டத்
தை, தமிழகம் முழுவதும் அமுல்படுத்துவதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[இரவு 7.00]

அடுத்து இந்த சட்டம் கொண்டு வருவதை நிறைவேற்றுவதற்
குள்ளஒருஅமைப்பு ஒன்று தேவப்படுகிறது அதிலே இந்தச்சட்டம்
ஒரு சில உதவிகளைச்செய்கிறது என்று நான் பார்க்கிறேன், ஆனால்
உண்மையிலே ரெவின்யு இலாகாவிலே இருக்கக்கூடிய, வருமான
வரி இலாகாவிலே இருக்கக்கூடிய, வருவாய்த்துறையிலே இருக்கக்
கூடிய, அதிகப்படியான பளுவினாலே அந்த வேலைகள் கவனிக்கப்
படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் உணர்வார். இந்த
விவாதம் நடக்கிறபோது தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும்
இங்கே இருப்பது நல்லதாக எனக்குப்படுகிறது. தொழிலாளர்
களுக்கு இன்றைய தினம் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்
படுகிறதோ அதைப்போல இந்த விவசாயத் தொழிலாளிகளுக்கும்
அவர்கள் நாளை வளருகிற ஒரு சக்தியாக இந்த நாட்டிலே
இருக்கின்றபோது, அவர்களுக்கு இந்த தொழிலாளர் நல இலாகா
மூலமாக இந்தச் சட்டங்களை அமல் நடத்துகின்ற நடவடிக்கை
களை எதிர்காலத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்கான

ஒரு சட்டமுன் வடிவு தேவைப்படுகிறது என்பதை வற்புறுத்து
கிறேன். இந்தச் சட்டத்திலே தண்டனை உள்பட வந்திருக்கிறது.
இது பாராட்ட வேண்டிய, வரவேற்க வேண்டிய ஒரு சட்டம்.
விவசாயத் தொழிலாளிகளுக்கு இந்தச் சட்டம் நம்பிக்கை
அளிக்கும். ஆனால் இதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள்
தேவைப்படுகின்றது. 2 ரூபாய், ஒரு ரூபாய் 50 காசுகூட தினக்
கூலி இன்றைக்கு பெருகிற ஒரு நிலை இருக்கிறது. நாம்
போடுகிற கூலிச்சட்டம் அமலாகாமல் இருக்கும் நிலை இருக்கிறது
விவசாயத் தொழிலாளர்களுடைய அமைப்பு இன்றைக்கு பலகீன
மாக இருப்பதால் இந்தச் சட்டம் அமலாகக் கூடியதில் இருக்கக்
கூடிய கஷ்டங்களைப் போக்கவேண்டும் என்று சொன்னால்,
உறுதியாக இந்தச் சட்டம் அமலாவதற்கு ஒரு சட்டமுன்வடிவு
தேவைப்படுகிறது. அதற்கான அதிகாரம் தேவைப்படுகிறது.

அடுத்து இன்று தமிழ்நாட்டிலே சுடந்த 24-ந்தேதி இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளிகள்
சென்னை நகரத்திற்கு வந்து பேரணி நடத்தி கோரிக்கையை
சமர்ப்பித்து இருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்த விவசாயத் தோழர்கள் அடுத்த 31-ம் தேதி வட்டத்
தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி அங்கே இருக்கக்கூடிய
தாசில்தார்கள் அல்லது துணைக் கலைக்டர்களைப் பார்த்து
மகஜர்களை கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது.
ஆகவே இந்தக் கோரிக்கைகள் தமிழ்நாட்டில் மிகவும் முக்கியமாக
இருக்கிறது. ஒரு ஒருங்கிணைந்த சட்டம் தேவைப்படுகிறது.
சமீபத்தில் கூட தமிழ்நாட்டில் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டு
பாவப்பட்டிருந்த கைத்தறித் தொழிலாளர்களுக்கு சட்டம்
கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை
கொண்டு வந்தால் அந்தச் சட்டத்திலே, இன்று உத்திராபதி
அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல பிரசவ கால சகாய
நிதி, கிராச்சுவிடி, விபத்தில் இறந்தால் நட்டஈடு, அவர்களுக்
குள்ள நியாயக்கூலிச் சட்டம், இவைகளை ஒன்றிணைந்து
இருக்கிற சட்டமாக அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால
அவர்களுக்கு உதவியாக இருக்கும். இன்று தமிழ்நாட்டிலே நாம்
அதிகமாக வற்புறுத்தவேண்டிய ஒன்றாக இருப்பது 60 வயதான
விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒய்வூதியம் 50 ரூபாய்
களை கொடுக்கும் முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும்.
இது அன்டைம நிலங்களிலே, நிறைவேற்றப்படுகிறது. அது
அவர்களுடைய ஈககளையும் பலப்படுத்துவதாகவும் இருக்கிறது.
உதவி செய்வதாகவும் இருக்கிறது.

இன்று அரிசன மக்கள் தாக்கப்படுகிறார்கள் என்று சொல்லு
கிறபோது அதற்கு மிக முக்கியமானது அவர்களுடைய வருவாய்
தான் என்பதை நாம் கவனிக்கவேண்டும். மதுரையிலே ஒரு
கூட்ஸ் மில்லிலே அரிசன தொழிலாளியா இல்லையா என்றெல்
லாம் பார்ப்பதில்லை. ஒரே கேன்டீனிலே இரண்டு பேர்களும்
ஒரே டேபிளிலே சாப்பிடுகிறார்கள். ஒரே சிப்டில் வேலை
செய்கிறார்கள். அவர்களுக்குக் கிடைப்பது ஒரே சம்பளம்,



இன்றைக்கு ஜாதி ஒழிப்புக்கு முக்கியமான
வருவாய்தான் என்பதை நாம் கவனத்தில்
அமைப்பாக இருக்கின்றது என்பதிலே
கொண்டால் அவர்களது கைகளைப் பலப்படுத்தும் தொழி
சந்தேகம் இல்லை. 60 வயதுக்கு மேற்பட்ட விவசாயத் பிச்சை எடுத்து
லாளிகள், அநாதைகளாக இருப்பது மட்டுமல்ல, வாழவேண்டுமா
தெருவிலே திரிகிற நிலை இனிமேல் உலகத்திலே விவசாயத்
என்ற நொந்து, வெந்து நிற்கின்ற ஒரு கூட்டமாக இருக்கிறது
தொழிலாளிகள் கூட்டம் நம்முடைய தமிழகத்திலே பலவிதமான
என்பதை மனதிலே கொள்ளவேண்டும். இன்று வேண்டியவர்களாக
சட்டங்களை நிறைவேற்ற முயற்சிக்க நிலங்களை
இருக்கிறோம். பினாமி நிலங்களை எடுத்து, உபரி ஏக்கர் ஒரு
எடுக்கவேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்கு ½ கிராமப்புறத்திலே ஒரு
ஏக்கர் வழங்கவேண்டும். அதன் மூலம் அமைக்கவேண்டிய
மறுமலர்ச்சிக்கு எதிர்காலத்தில் பாதை இருக்கின்றது. அதை
மகத்தான பொருப்பு இன்று நம் முன்னாலே வழியிலே அந்த விவசாயத்
இந்த அமைச்சரவை நிறைவேற்றுகிற அவர்களுக்கு ஒய்வு
தொழிலாளர்கள் 60 வயதுக்கு மேற்பட்டால் கொள்கையை அமல்
ஊதியம் கொடுக்கவேண்டும் என்ற ஒரு தொழிலாளர்
படுத்தினால் தமிழ்நாட்டிலே உள்ள விவசாயத் அப்படிப்
களுக்கு நாம்பெரிய உதவிகளைச் செய்தவர்களாவோம். வருவதற்கு
பட்ட ஒருங்கிணைந்த ஒரு சட்டத்தைக் கொண்டு இந்த சட்ட
இந்த அரசு முயற்சிக்கவேண்டும் என்று வற்புறுத்தி
முன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற வேளாண் தொழிலாளர்
நியாய ஊதியச் சட்டத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்
களைக் கூற விழைகிறேன்.

கிழக்குத் தஞ்சை மாவட்டம் நீங்கலாக தமிழ்நாடு பூராவுக்கும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய, விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாய
ஊதியம் வழங்கக்கூடிய சட்டத்தை இங்கே நம்முடைய
அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்திலே
விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாய ஊதியம் கிடைக்காத
இடங்களில், அவர்கள் அதற்கு போராடக்கூடிய முயற்சிகள்
செய்கிறபோது, நிலச்சுவான்தார்கள், இதுவரை ஆதிக்கம்
செலுத்தி வந்தவர்கள் எல்லாம் அடக்குமுறை செய்கிறதால்
இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டு வரு
கிறார்கள். இந்த நிலை வராமல் இருக்க தாழ்த்தப்பட்ட
மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் உரிமையை கேட்கிற
காரணத்தாலே, அடக்குமுறையினால் வழக்கு மன்றங்களுக்கும்
மற்ற நிலைகளுக்கும் செல்கிறபோது, வருவாய் இல்லாத
காரணத்தால் பாதிக்கப்படுகிறார்கள். இப்படி பாதிக்கப்பட்டு
இருப்பவர்களைப் பணத்தைக் காட்டி தன் பக்கம் இழுத்துக்
கொள்ளலாம் என்று நிலச்சொந்தக்காரர்கள் எண்ணு
கிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள் நியாய ஊதியத்தைப் பெற்று, அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நியாய ஊதியம் கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிற அதே நேரத்திலே விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய நியாய ஊதியத்திற்காக அதிகாரிகளிடத்திலே செல்ல வேண்டுமென்கிற சூழ்நிலையை மாற்ற வேண்டும். அதிகாரிகளே நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கிற வகையிலே, அடக்குமுறை செய்பவர்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதிகாரிகளே நேரடியாக, நியாயக் கூலி வழங்கப்படாத இடங்களிலே நடவடிக்கை எடுத்து அதன் மூலமாக நியாயமான ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும். அடக்குமுறை செய்பவர்களுக்கு சட்டம் தண்டனை வழங்குவதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு கூலி கிடைக்காத நிலையில் கஷ்டப்படுகிற அந்த மக்களுக்கு கூலியை விட அதிகமான பயனைத் தர நஷ்டயீட்டுத் தொகை பெற்றுத் தர வேண்டும் என்கிற வகையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை வரவேற்று, நியாயக் கூலி வழங்குவதற்கு அதிகாரிகளே நேரடியாக நடவடிக்கை எடுப்பதைப்போல, 'அன்-ஆர்கனைஸ்ட் செக்டார்' ஆக இருக்கிற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டு, அதன் மூலமாக நியாயக் கூலி வழங்க வேண்டும்.

கிடைக்காத இடங்களிலே, மாவட்ட அளவிலே, தாலுக்கா அளவிலே கமிட்டிகள் அமைத்து. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயக் கூலி வழங்க வேண்டுமென்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை வழங்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சட்டமுன் வடிவுகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டம் வருகிறபோது வரவேற்று பேசுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும். இன்னும் சில கோரிக்கைகளை வைப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும். இதற்கு என்ன காரணமென்றால், வைத்த கோரிக்கைகள் வீணாகாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதால் கோரிக்கைகள் வைக்கிறார்கள்.

கோரிக்கைகள் வைப்பதற்கு முன்னாலேகூட பல சட்டங்கள் வந்து நிறைவேற்றப்பட்டுவிடுமோ என்கிற, நாம் கோரிக்கைகள் வைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுமோ என்ற அச்ச உணர்வு காரணமாகக்கூட சில நேரங்களில் கோரிக்கைகளை வைப்பார்கள் என்று நான் கருதுகிறேன் கோரிக்கைகள் வைக்கிறபோது அரசு சட்டங்களை வேகமாக கொண்டு வருகிறபோது,



இன்னும் சிறிது வேகமாகக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக கோரிக்கைகளை வைக்கிறார்கள் என்று இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் சொல்கிறபோது சிலதினங்களுக்கு முன்னால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் விவசாயத் தொழிலாளர்களை இங்கே பெரிய ஊர்வலமாக அழைத்து வந்து கோரிக்கைகளைக் கொடுத்தார்கள். ஆனால் இது போதாது என்பதற்காக இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விவசாயத் தொழிலாளர்களை நாங்கள் மாவட்டந்தோறும், கோரிக்கைகளைக் கொடுக்க விருக்கிறோம் என்று சொன்னார்கள். உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கோரிக்கைகளை வைப்பதற்காக இந்தத் தொழிலாளிகளை இந்த விவசாய நேரங்களிலே திரட்டி, பல மைல்களுக்கு அப்பால் கொண்டு வந்து அவர்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, நீங்கள் வேதனைப் படுகிறீர்களோ, இல்லையோ, என்னைப் பொறுத்த வரையில் வேதனைப்படுகிறேன்.

(இரவு 7.10)

ஏன் அத்தனை பேர்களை நீங்கள் சென்னைக்கு அழைத்து வருகிறீர்கள்? நீங்கள் சென்னைக்கு வராமலே கூட உங்களிலே ஒருவர், இருவர் வந்து அந்தக் கோரிக்கைகளைக் கொண்டு வந்து கொடுத்தால்கூட ஆயிரக்கணக்கானவர்கள் வந்து கோரிக்கைகளைக் கொடுக்கிறபோது அதற்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறதோ அதே அளவுக்கு மதிப்பு கொடுக்கும், பிரச்சனைகளைக் கவனிக்கும் இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இங்கே இருக்கிற யாராக இருந்தாலும் அவர்கள் கட்சியின் தலைவர்களாக இருந்தாலும், தொண்டர்களாக இருந்தாலும் கோரிக்கைகளைக் கொடுக்கிறபோது, அந்த கோரிக்கைகளை யார் கொடுக்கிறார்கள் என்று பார்க்காமல் அதில் இருக்கிற நியாயமான எண்ணத்தைப் பார்த்து இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இன்றைக்குப் பல இடங்களில் இப்போதுதான் மழை பெய்கிறது; பல இடங்களில் தண்ணீர் வருகிறது. இந்த நேரத்தில் விவசாயத் தொழிலாளர்களை ஊர்வலத்திற்கு அழைத்தால், அவர்களுக்கு 2, 3 நாள் கூலி கிடைக்காமல் போவதுடன், பயிர் வேலைகளும் பாதிக்கும். ஆகவே அவர்களை ஊர்வலத்திற்கு அழைக்க வேண்டாம், அழைக்க வேண்டிய தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

ஊர்வலம் அழைப்பதற்குப் பதிலாக அந்தக் கோரிக்கைகளை என்னிடம் கொடுங்கள், அல்லது அரசிடம் கொடுங்கள், அல்லது முதலமைச்சரிடம் கொடுங்கள். உங்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிச்சயமாக கவனிக்கப்படும், கவனிக்கப்படும், கவனிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோரிக்கைகளை கவனிக்கிறோம் என்று சொல்லுகிறாரே, கவனிப்பாரா என்று நீங்கள் நினைக்க வேண்டாம். காரணம் உங்களுடைய கோரிக்கை எல்லாம், உங்களுடைய கோரிக்கை அல்ல; நம்முடைய கோரிக்கை; இந்த நாட்டினுடைய ஏழை எளிய விவசாயிகளுடைய கோரிக்கை. ஆகையால் அந்தக் கோரிக்கைகளை எல்லாம் இந்த அரசு நிச்சயமாகக் கவனிக்கும்.

மாண்புமிகு திரு. உத்திராபதி அவர்கள் சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மைனாரிட்டி சொசைட்டி என்பதால் அவர்கள் நியாயமான கோரிக்கைகளைக் கேட்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். நான் இங்கே அவை முன்னால் சொல்கிறேன். இன்றைக்கு மைனாரிட்டி, மெஜாரிட்டி என்பது பிரச்சனை அல்ல. யாராக இருந்தாலும் நியாயமான கோரிக்கை என்றால் நிச்சயமாக கவனிக்கப்படும். அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற கூலியை அளிப்பதில் யாருக்கும் விதிவிலக்கு இல்லை. உங்களுக்குச் சொல்லவேண்டுமென்றால் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு அரசுப் பண்ணைகளில் பல அதிகாரிகள் நிர்ணயித்த கூலியைக் கொடுக்காமல் இருந்தார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்தவுடன் ஏற்கெனவே கொடுக்காத நாட்களுக்கும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும். ஆகையால் இந்த சட்டத்தின் முன்னால் மைனாரிட்டி, மெஜாரிட்டி என்பது ஒரு பிரச்சனை அல்ல.

எல்லோருக்கும் வாய் இருக்கிறது. வயிறு இருக்கிறது. எல்லோருக்கும் பிள்ளை குட்டி இருக்கிறது. ஆகையால் எல்லோருக்கும் ஒரே மாதிரி சம்பளம்தான் கொடுப்பார்கள். யாருக்கும் குறைக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் வருவாய்த்துறைக்கு அதிகமான வேலை இருப்பதால் எங்கே கவனிக்கப் போகிறார்கள் என்று எண்ணத் தேவையில்லை. கீழ்த் தஞ்சையில் 7 தாலுகாக்கள்தான் இருக்கின்றன. 7 தாலுகாக்களிலும் 7 தாசில்தார்கள் தனியாக இந்தப் பணிகளைக் கவனிப்பதற்கென்றே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குறைந்த கூலி, உயர்ந்த கூலி என்ற பிரச்சனை வருகிறபோது, நிர்ணயித்த கூலி வழங்கப்படவில்லை என்று வருகின்ற வழக்குகளைக் கவனிப்பதற்காக, அந்த வழக்குகளைப் பற்றி முடிவெடுப்பதற்காக மட்டும் 7 தாசில்தார்கள் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதன் காரணமாக இரண்டு ஆண்டுக்குள் 333 வழக்குகள் எடுத்து முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி, உங்களுடைய விவசாயத் தொழிலாளர்களுடைய வேண்டுகோள்களை எல்லாம் இந்த அரசு நல்ல முறையிலே கவனிக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு நிர்ணயித்த கூலி கிடைக்கவில்லை என்றால் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களே நேரடியாக வழக்கு போடலாம். அதற்கான சட்டம் இங்கே வந்திருக்கிறது. தாசில்தார்கள் அதற்குத் தீர்ப்பு கூறுகிறார்கள், அதற்குத் தீர்ப்பு கூறிவிட்டால் மேல் முறையீட்டுக்காக கீழ் கோர்ட்டுக்குப் போக முடியாது. அதன் பிறகு வேண்டுமென்றால் நிலச் சொந்தக்காரர்கள் ஆர்.டி.ஓ. விடம் வழக்குப் போடலாம். அங்கேயும் தொழிலாளர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வந்துவிட்டால் அதன் பிறகு அவர்கள் சாதாரண கோர்ட்டுக்குப் போக முடியாது. உயர்நீதிமன்றத்திற்குத்தான் போக வேண்டும். அப்படிப்பட்ட சட்டம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6 மாதம் அல்லது 500 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்ற நிலை எல்லோருக்கும் தெரியும். அதுமட்டுமில்லாமல் கிரிமினல் கேஸும் அவர்கள் மீது போடப்படும் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. பாதி கொடுத்திருந்தாலும், அதைப் போல 10 மடங்கு வரையிலும் வசூல் செய்து கொள்வதற்கு இந்த சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு இந்த குறைந்தபட்சக் கூலி சட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது பலர் உயர்நீதிமன்றத்திற்குப் போனார்கள். அப்படிப் போனாலும் இனி அது அவர்களுக்கு வீண் செலவுதான். ஆகவே கூலியினைப் பிறகு எப்படியாவது வாங்கிவிடலாம் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம். முன்பு குறைந்த கூலியைக் கொடுத்திருந்தாலும் இப்போது அதை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்பதற்காக இந்த சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி கூலியைக் குறைத்துக் கொடுத்தால் 4 மாதமோ அல்லது 6 மாதமோ அல்லது ஒரு பசலிக்கு சம்பந்தப்பட்ட கூலியை அடுத்த பசலியிலே வாங்கிக் கொடுப்பதற்கும் இந்த அரசு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களின் மீதும் பின்தங்கிய மக்கள் மீதும் எவ்வளவு தூரத்திற்கு கவனம் கொண்டு இதை எல்லாம் செய்து வருகிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வருவாய்த்துறை அமைச்சர் இந்த சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார் என்றால் அதற்கு முதல்வர் அவர்களும்

கையெழுத்துப் போட்டுத்தானே இங்கு கொண்டு வர முடியும். ஆகவே, 6 மாதங்கள் அல்லது ஒரு வருஷத்திற்கு முன்னாலே உள்ள கூலியைக் கூட வாங்கிக் கொடுக்கவேண்டும் என்பதற்கு அவர்கள் தனது சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது உங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் அவர்கள் எந்த அளவுக்கு கவனித்து முடிவுகளை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை மட்டுமலல, மற்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றுவதற்காக அதுபற்றிய விவரங்களை எங்களிடத்திலே கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு அதற்குப் பிறகு வேண்டு மானால் நீங்கள் அவர்களை ஒன்று திரட்டுங்கள் என்று மீண்டும் உங்களிடத்திலே கூறிக்கொண்டு இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தின்படி கூலி கொடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்கக்கூடிய முறையில் வழக்குத் தொடர்வதற்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல் கிறார்கள்.

ஆனால் உள்ளூர் விவசாயத் தொழிலாளர்கள் அரசால் விதிக்கப்படுகின்ற குறைந்த பட்சக் கூலியினைக் கேட்கிறார்கள் என்பதற்காக வெளியூரிலே இருந்து மிகக் குறைந்த கூலிக்கு ஆட்களைக் கொண்டு வருகின்றார்கள். அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் நலன்களை எந்தெந்த முறையிலே சட்டங்களைக் கொண்டுவந்து அவர்களைப் பாதுகாக்க முடியுமோ அந்த அளவுக்கு பாதுகாக்கின்ற முறையிலே நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் சொல்கின்ற பிரச்சினைகள் நாட்டிலே இல்லை என்று நான் சொல்லவில்லை. சில ஊர்களில் உள்ள பெரியதனக் காரர்கள் அந்த ஊர்களிலே உள்ள அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கக்கூடியவர்களுக்கு எதிராக வெளியூர்களில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வருகின்ற நிலைமை உண்டு. ஆனால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் வந்தாலும் குறைந்த பட்சக் கூலியைக் கொடுத்துதான் ஆக வேண்டும் இந்தச் சட்டத்தின்படி, குறைந்தபட்சக் கூலி கொடுக்கா விட்டால் ஜெயில். கொடுக்காவிட்டால் பத்து மடங்கு வாங்கப் படும் என்று சட்டம் வந்திருக்கின்றது. ஆகவே இன்றைக்குக் கூலி கொடுக்காவிட்டால் கூட போய் வேலைசெய்யலாம். இப்போது குறைந்தபட்ச கூலியைக் கொடுக்காவிட்டால் கூட வேலையைச் செய்துவிட்டு வந்ததற்குப் பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள்





அந்தக் கூலியை வாங்கிக் கொடுப்பார்கள். ஆகவே ஆதிக்கம் படைத்தவர்கள் குறைவான கூலிதான் கொடுப்போம், அதற்கு சம்மதித்து வந்தால் தான் உள்ளூர்க்காரர்களை வேலைக்கு வைத்துக்கொள்வோம் என்று சொன்னாலும்கூட தொழிலாளர்கள் அவர்களிடம் அந்தக் கூலியை வாங்கிக்கொண்டு வேலைக்குச் செல்லட்டும். அதற்குப் பிறகு வழக்கு தொடர்ந்து அந்தக் கூலியை வாங்கிக்கொடுப்போம். முன்பெல்லாம் தொழிலாளர்கள் தான் வழக்கு தொடரவேண்டி இருந்தது.

[இரவு 7–20]

தொழிலாளர்கள் எப்படி வழக்குப் போட முடியும்? அவர்களே பட்டினி. கேஸ் போடுவதற்கு, வக்கீல்களுக்கு பணம் கொடுப் பதற்கு எங்கே போவார்கள், ஆனால் இப்போது அவர்களின் சார் பாக அரசே போடுகிறார்கள். அவர்கள் வேலை செய்து விட்டு கொடுக்கும் கூலியை வாங்கிக் கொண்டு, இவ்வளவு நான் கொடுத்தார்கள் என்று எழுதிக்கொடுக்கவேண்டியது. அதற்குப் பிறகு அரசே அவர்களின் சார்பாக வழக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டிய பணத்தை வாங்கிக் கொடுத்துவிடுகிறது. இப்போது அந்த வகையில் சட்டத்தில் பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திரபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நாட்டின் விவசாயக் கூலிகளின் சட்டத்திலே சிறுவர்கள், சிறுமிகள் என்று தனிப் பிரிவு கொடுத்து போட்டிருக்கிறார்கள். 10 வயது 15 வயதான பெண் குழந்தைகளாக இருந்தாலும், ஆண் சிறுவர்களாக இருந்தாலும், வேலையை ஒரே அளவில் தான்—பெரியவர்கள் செய்யக் கூடிய அளவில்தான் செய்கிறார்கள். வேலை வாங்கப் படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு பெரியவர்களுக்கு கொடுக்கும் அளவிற்கு கூலி கிடைப்பதில்லை, சிறுவர்கள் என்று பாதிக் கூலி கொடுக்கிறார்கள். ஆகவே அவர்கள் பயன்பெறும் வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,, நெடுங்காலமாக இருந்து வரும் சட்டம் இது. பெரியவர்கள், சிறியவர்கள் என்று அதிலே பிரிவுகள் உண்டு. அதிலே தற்போது சில சிக்கல்கள் இருக் கின்றன என்பது தெரியும். இருந்தாலும் ஏன் இதை மாற்றாமல் அப்படியே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டால், இதை எடுத்துவிட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விடும், என்பதற்காகத்தான் பழைய சட்டத்தின் இந்தப் பிரிவுகளை மாற்றாமல் அப்படியே கொண்டு வந்திருக்கிறோம். ஏனெனில் சில இடங்களில் வயதுக்கு வராதவர்களை, அதாவது, 13 லிருந்து 15 வயது வரை உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1981 ஆகஸ்டு 28

வேலைக்கு எடுத்துக் கொண்டு பாதிக்கூலி கொடுக்கிறார்கள். பாதிக்கூலி கொடுப்பதால் அதிக அளவில் அவர்களை வேலைக்கு எடுக்கிறார்கள். இன்னும் சிலர், அவர்கள் வேலை கற்றுக் கொண்டு, பின்னால் மிக உதவியாக இருப்பார்கள் என்ற நிலையில்-அப்பிரண்டிஸ்ஸாக எடுத்துக் கொண்டு, முழுச் சம்பளமும் கொடுப்பதுண்டு, ஆனால் எப்படி இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை மனதில் கொண்டு அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கும் வகையில், இந்த அரசு யோசிக்கும், நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 60/1981) ஆய்வுககு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழி லாளர் நியாய ஊதியத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 60/1981) நிறை வேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என். 72/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.



1981 ஆகஸ்டு 28]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு. பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 72/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29-8-1981 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

94. தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரிய (தகுதிகள், பதவிக்காலம், பயணப்படி வழங்கல், பணியின் ஏனைய வரம்பு நிபந்தனைகள்) விதிகளின் 7-வது விதியில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 6-1-1981 ஆம் தேதியிடப் பெற்ற 631 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு "தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 72 (4) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.

95. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பொதுப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25-4-1981 ஆம் தேதியிடப் பெற்ற 742 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு "தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது."

96. 1981 ஆண்டு மதுரை மாநகராட்சிப் பணி விதிகளுக்குச் சில விதிகள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 2-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற 788 ஆம் எண் ஆரசாணையில் வெளியான அறிவிப்பு (1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1981) 432 (2) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.

97. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்த (உபரி நிலங்களுக்கு இழப்பீடு வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 13-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற 1129 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு "தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்த்திருத்தங்கள் நில உச்சவரம்பு கட்டுதல் (சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 58/1961 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது."

98. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கிராமப் பணியாளர்ப் பணி விதிகள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 21-1-1981-ஆம் தேதியிடப்பெற்ற 141-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

21. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண். 60/1981),

22. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 61/1981).

23. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 62/1981).

24. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி மூன்றாவது திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 63/1981).

25. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 64/1981).

26. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண். 65/1981).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1981 ஆகஸ்ட் 29.

ஆவணி 13, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்."

ஒருவர் தாம் அடைய எண்ணியதை மனச்சோர்வு இல்லாமல், தொடர்ந்து நினைந்துவரக் கூடுமானால், தாம் எண்ணியதை அடைதல் அவருக்கு எளிய செயலாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்டம்

*வினா எண் 121—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் இரண்டாவது பழுப்பு நிலக்கரி எடுக்கும் சுரங்கத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) மூன்றாவது சுரங்கம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தி அதிகரிக்க வழி ஏற்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுக்க இரண்டாவது சுரங்கம் தோண்டும் திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 4-4-1981ல் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

(இ) ஆம். இத் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தித் திறன் 1,500 மெகாவாட்டுகள் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நெய்வேலியில் அதிகப்படியான மின் உற்பத்தி ஏற்பட்டு அது நமக்குக் கிடைப்பதன் மூலம் மின்சாரத் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்கு வழியாக இருக்கும். அது ஒரு நல்ல அம்சம். அதே சந்தர்ப்பத்தில் 150 மில்லியன் யூனிட் இப்போது கொடுத்துக்கொண்டு வருவதைக் கூட 1981—82-ம் ஆண்டில் நிறுத்தப் போவதாகவும், காரணம் சில மெஷின்கள் ஷட் டவுன், ரிப்பேர் செய்யப்போவதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியானால் நாம் எதிர்ப்பார்த்ததற்கு மாறாகக் கிடைக்கும் மின்சாரம் குறையும் அபாயம் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெய்வேலி நிறுவனமும் தமிழ்நாடு மின்வாரியமும் இணைந்து எந்தளவிற்கு நெய்வேலி நிறுவனம் மூலம் மின் உற்பத்தியைப் பெற இயலுமோ அதைத் திட்டமிட்டு மேற்கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு சில இயந்திரங்கள் பழுது பார்க்க வேண்டியுள்ள காரணத்தால் அந்தக் குறைவு ஏற்படுகிறது. அதனால் நமக்கு எந்தவிதமான குறைபாடும் வராது.

திரு. கு. ரமணி : மின்சார சப்ளை இந்த செப்டம்பரிலிருந்து, 1-ம் தேதியிலிருந்து கட்டுப்பாடு இல்லாமல் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் இதே மன்றத்தில் அறிவித்தார்கள். ஆனால், 150 மில்லியன் யூனிட் ஒரு நாளைக்குக் குறையும் பட்சத்தில்—இப்போது நம் கேரளாவிலிருந்து மின்சாரம் வாங்குகிறோம்—இது நம்மைப் பாதிக்காது என்று எப்படிச் சொல்ல முடியும் ? இந்தப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு இப்போதே வேறு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெய்வேலி மின் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அவர்களால் எந்தளவிற்கு அதிகமாகக் கொடுக்க முடியுமோ கொடுத்து வருகிறார்கள். ஆனால், சில இயந்திரங்கள், ரொட்டீன் மெயின்டெனன்ஸ் என்று ஷெட்யூலில் இருக்கிறது. அவர்கள் கொடுக்கக்கூடிய மின்சாரத்தை நம் கோடை காலத்தில் முழுவதும் கொடுத்தால் அதுவே போதும்.

திரு. மி. வின்சென்ட் : இந்தத் திட்டத்தின்மூலம் நெய்வேலியில் கிடைக்கும் மின்சார உற்பத்தி தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் தென் மாநிலங்களுக்கும் வழங்கலாம் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுதான் இப்போதிருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்னை. இப்போது இரண்டாவது சுரங்கம் வெட்டுகிற அந்தக் காரியம் மேற்கொள்ளப்படுவதால் 630 மெகாவாட்கள் கூடுதலாகக் கிடைக்கும். அதில் நமக்கு 175 மகாவாட்கள்தான் தமிழ்நாட்டுக்கு என ஒதுக்கியிருக்கிறார்கள். 630 மெகாவாட்கள் நமக்குக் கிடைத்தால் கூட நம் மின்சாரப் பற்றாக்குறை தொடர்ந்து இருக்கும். இந்த அடிப்படையையொட்டி அதில் உற்பத்தியாகக் கூடிய முழு மின் சக்தியும் தமிழ்நாட்டுக்குத் தரப்பட வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார்கள்.





திரு. என். வரதராஜன் : இவ்வாறு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுகிற திட்டத்தில் மாநில அரசின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு செய்யும்படியான ஆலோசனைகள் ஏதாவது இருக்கிறதா ? இல்லாவிடில் நம் மாநிலத்தில் நடைபெறுகிற இப்படிப்பட்ட வேலைகளில் மாநில அரசைக் கலந்துகொண்டு அதன் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொண்டு வேலைகளை முறைப்படுத்தவேண்டும் என்று நம் அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெய்வேலி நிலக்கரி நிர்வாகக் குழுவில் நம் அரசு அதிகாரிகள் இருவர் டைரக்டர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, நெய்வேலி நிலக்கரி நிர்வாகத்தில், நமக்கும் பொறுப்பு ஏற்படுகிறது. இரண்டாவது சுரங்கம் வெட்டுகின்ற வேலைகள் தொடங்குவதற்கு முன்பாக நம்முடைய அரசிடமிருந்து மத்திய அரசு ஒரு உத்திரவாதத்தைக் கேட்டார்கள். நெய்வேலியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற முழு மின்சாரத்தையும் நீங்களே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு உத்திரவாதம் தாருங்கள் என்பதற்கு அவர்கள் உத்திரவாதம் வாங்கிக் கொண்டு இப்போது உத்தரவுகள் வேறாக இட்டிருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே வெட்டப்படுகின்ற இரண்டாவது சுரங்கத்தின் விளைவாக உற்பத்தியாகின்ற 630 மெகாவாட் மின்சாரத்தில் தமிழகத்திற்கு 175 மெகாவாட்தான் கொடுக்க முடியும் என்று மத்திய அரசு சொல்வதாகவும், முன்பு சுரங்கம் வெட்டப்படுகின்றதன் விளைவாகக் கிடைக்கின்ற மின்சாரம் அனைத்தையும் தமிழகமே உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு தமிழக அரசைக் கேட்டிருந்ததாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், இன்று மத்திய அரசு அதிலிருந்து மாறி, சொன்ன வாக்குறுதியைக் கைவிட்டு, தமிழகத்தின் தேவையைப் புறக்கணித்து, தமிழக விவசாயிகளைப் புறக்கணித்து. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் இது; சொற்பொழிவு நேரமல்ல. என்ன ஆயிற்று என்பதை மட்டும் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தமிழகத்தின் தேவை போக, மீதம் இருப்பதைத்தான் கொடுக்க முடியும் என்று மத்திய அரசுக்குத் தமிழக அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசு நிறைவேற்றுகின்ற திட்டம். இதிலே மத்திய அரசு பார்க்கின்ற பார்வைக்கும், நம்முடைய அரசு பார்க்கின்ற பார்வைக்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு. மத்திய அரசு தென்னகம் முழுவதற்கும் என்ற பார்வையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் செய்கின்ற திட்டங்களில் எல்லாம் வருகின்ற மின்சாரத்தை எல்லோருக்கும் பங்கு

தரவேண்டுமென்று சொல்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில், தென்னகம் முன்னேற வேண்டுமென்ற அடிப்படைக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அதே நேரத்தில் ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய சமூக பொருளாதார அமைப்புகளுக்குப் பொறுப்புண்டு. ஆகவே. ஒவ்வொரு மாநிலமும் மின்சார உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டுமென்பது நம்முடைய கருத்தாகும். அதோடு மட்டுமல்லாமல், தென்னகத்திலே ஏற்படக் கூடிய பற்றாக்குறைக்கு பெரும் பங்கு, முழுமுதற் பங்கு தமிழகத்தில் பற்றாக்குறை தான் இருக்கிறது. ஆகவே தமிழகத்தைக் கைதூக்கி விடுவதன் மூலம், தென்னகமே மேலுக்கு வருகிறது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, இந்தத் திட்டத்தின் முழுப் பலன் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். பாரதப் பிரதமர் அவர்களோடு இதைப் பற்றிப் பேசுவதாக நம்முடைய முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், இதை 630 மெகாவாட்டிலிருந்து, 1470 மெகா வாட்டாக உயர்த்துவதற்கான உத்தேசம் மத்திய அரசின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு, அங்கே இருக்கின்ற ஏறத்தாழ 500 குடும்பங்கள் டிநோடிபைட் டிரைப்ஸ் என்று ஆங்கிலேயர்களால் அறிவிக்கப்பட்டு, அவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டு, இப்போது அவர்களுக்கு அந்த நிலங்களுக்குப் பட்டா கொடுக்கவில்லை என்பதால், அந்த நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காமல், அந்த நிலங்களிலே இருந்து அவர்கள் அகற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு அவர்களுக்கு அந்த நிலங்களுக்கு முழு நஷ்ட ஈடு கொடுக்க முன்வருமா ? அப்படி நஷ்டயீடு கொடுப்பதோடு, நெய்வேலியிலே முழுமையாகப் பெறுகின்ற மின்சாரத்தை இந்த அரசுக்கு ஒதுக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றமே அதைத் தான் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே உள்ள அஜீஸ் நகர் செட்டில்மென்ட் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். நிலமே அவர்களுக்கு உரிமையில்லாதபோது, நிலத்திற்கு நஷ்டஈடு கொடுப்பது என்பது எழவில்லை. இருப்பினும், அவர்களுக்குக் கொடுத்த நிலத்தை அவர்கள் மேம்பாடு செய்துள்ளதால், அதற்காக நஷ்ட ஈடு கொடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அஜீஸ் நகரைப் பற்றிச் சொன்னார்கள். அந்த அஜீஸ் நகர் குற்றப் பரம்பரையினருக்கு 25 நபர்களுக்கு மட்டுமே பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை. 1952 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கம் அவர்களுக்கு பட்டா கொடுக்காமல் இருப்பது இந்த அரசுக்குத் தெரிந்திருக்கும்.......



மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வி நிலக்கரி சுரங்கத்தில் உற்பத்தியைப் பற்றியது. அவர்களுக்குப் பட்டா கொடுத்தால் என்ன, கொடுக்காவிட்டால் என்ன ? மின்சாரத்தைப் பற்றிய கேள்வியாகக் கேளுங்கள்,

[முற்பகல் 9.10]

திரு. எல். இளையபெருமாள் : மின்சாரத்தைப் பற்றிக்கேட்கிறேன் 150 மிலியன் யூனிட் மின்சாரம் இயந்திரக்கோளாறால் நமக்குக் குறைவுபடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு மாற்றுத் திட்டமாக அதை ஈடு செய்ய அரசு என்ன வழிவகை செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

ஏழுமத்தூரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 122—திரு: ச. பாலகிருஷ்ணன : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சித் தொகுதியில் ஏழுமாத்தூருக்கு அருகில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டுவிட்டதா ?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ): ஆம். மொடக்குறிச்சித் தொகுதியில் ஏழுமாத்தூரில் ஒரு 110 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் தெரிவு செய்வதற்கான ஆரம்ப ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஏழுமாத்தூரில் ஒரு 110 கே.வி. மின் நிலையமும், பவானியில் ஒரு 110 கே வி. மின் நிலையமும் அமைப்பதற்கு கிராம மின் வசதிக் கழகம் ரூ. 88,124 இலட்சத்திற்கான திட்டத்தை ரூ. 52.94 இலட்சம் கடன் உதவியுடன் அனுமதித்துள்ளது.

திரு ச. பாலகிருஷ்ணன்: ஏழுமாத்தூரில் துணைமின் நிலையம் அமைப்பதற்கான இடம் மலை அடிவாரத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாததாக இருக்கும். ஆகவே, கூடுதல் நிதி ஒதுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தேவைப்படின் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

### சுருளியாறு பகுதில் மின் வாரியத்திற்குச் சொந்தமான பொருடகள் களவு போவதைத் தடுக்கும் திட்டம்

*வினா எண். 123— திரு. ரா. கிருஷ்ணன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சுருளியாறு, லோயரில் மின் வாரியத்திற்குச் சொந்தமான இரும்பு, சிமெண்ட் தகடுகள் களவு போயிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) களவு போவதை தடுக்கும் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும் மிரட்டப்படுவதும் உண்மையா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி மின் வாரியத்திடம் தகவல் ஒன்றும் கிடைக்கப் பெறவில்லை.

(இ) களவு போவதுபற்றிக் காவல்துறைக்குப் புகார் கொடுக்கப்பட்டு பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

திரு ஆர். டி. கோபாலன்: எந்த ஆண்டிலிருந்து களவு போக ஆரம்பமானது ? இந்தக் களவு சம்பந்தமாக நான் அமைச்சருக்குப் புகார் கொடுத்து எழுதியிருந்தேன். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்தப் பொருள்கள் களவு போயின. புகார்களின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சில பேர் தண்டனைக்குள்ளாகியிருக்கிறார்கள். சில பேர் சாமர்த்தியமாக விடுவித்துக் கொண்டார்கள்.

### மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் கலை அரங்கங்கள் கட்டும் திட்டம்

*வினா எண் 124— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி–அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் அரசே நாடகக் கலையரங்கங்கள் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாவட்டத்தின் தலைநகர் அல்லது முக்கிய இடத்தில் கலை அரங்கம் கட்டுவது பற்றிய கருத்துரு பரிசீலிக்கப்படுகிறது.

திரு.சு. பாலன்: சென்னை நகரில் தியேட்டர் கட்டுவது பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எத்தனை தியேட்டர்கள் இதுவரை கட்டப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அது மாநகராட்சி, நகராட்சிகளின் சார்பில் கட்டப்படுவது. அதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தக்





கேள்வி மாவட்டத் தலைநகரங்களில் நாடகம் நடத்துவதற்குக் கலையரங்குகள் கட்டுவது பற்றிய கேள்வி. அதற்குப் பதிலளித்திருக்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: நாடகக் கலை கடந்த காலத்தைவிட தற்போது கொஞ்சம் கொஞ்சமாகத் தொய்வு அடைந்து வருவது அரசுக்கு நல்ல முறையில் தெரியும். அதைப் போக்குகின்ற முறையில் மாவட்டத் தலைநகரங்களிலும் பெருநகரங்களிலும் அரசு நாடகக் கலையரங்குகள் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எவ்வளவு காலத்தில் அவை முற்றுப்பெறும்? எவ்வளவு விரைவாக அந்தத் திட்டத்தை அரசு கொண்டு வர முடியுமோ அந்த அளவுக்குத் தீவிரமான முறையில் அரசு கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நாடகங்களை நடத்துவதற்கு மாவட்டத் தலைநகரங்களில் அல்லது முக்கிய நகரங்களில் இதுபோன்ற நாடகக் கலையரங்குகள் வேண்டுமென்பதை, மிகவும் அவசியமான தேவை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அந்த இடங்களில் அத்தகைய கலையரங்குகள் அமைக்கவேண்டுமென்பதற்கு அரசு கொள்கையளவில் முடிவும் எடுத்திருக்கிறது.

இப்போது முதல் முயற்சியாக நம்முடைய அரசின் சார்பிலே நடத்தப்படுகிற பொருட்காட்சிகளில் வருகிற வருவாயை வைத்து அந்த அந்தத் தலைநகரங்களிலே இப்படிப்பட்ட அரங்குகளைக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே முதல் முறையாக கோவை நகரத்திலே 22 லட்ச ரூபாய் செலவிலே ஒரு கலையரங்கத்தைக் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்து இருக்கிறது. அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. அதை தொடர்ந்து வேறு நகரங்களுக்கும் இப்படிப்பட்ட கொள்கை முடிவுகள் விஸ்தரிக்கப்படும்.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, தாய்லாந்து நாட்டிலே ரோஸ் கார்டன் என்னும் இடத்திலே அந்த நாட்டினுடைய பழம்பெரும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக ஆக்கிடவிருக்கிறார்கள். அதைப் போன்று தமிழ்நாட்டிலேயும் இங்கே உள்ள கிராமியக் கலை நிகழ்ச்சிகளை ஏதாவது ஒரு இடத்திலே நடத்திக் காட்டி அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இது மாவட்டத் தலைநகரங்களிலே கலையரங்குகள் கட்டுவது பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது சுற்றுலாத் துறையைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் அது பற்றி அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முடிவுகளைப்பற்றி கொஞ்சம் விரிவாகவே பதில் சொல்ல முடியும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நாடகக் கலையைப் பேணிப் பாதுகாக்க அரசுக்கு இருக்கிற அக்கறையைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். நாடகக் கலையிலே சிறந்தவர் மன்னார்குடியிலே பிறந்த எம். ஜி. நடராஜப் பிள்ளை.

[திரு. மு. அம்பிகாபதி] [1981 ஆகஸ்ட் 29

அவர் பிறந்து வளர்ந்த மன்னார்குடியிலே கலையரங்கத்தைக் கட்டுவதற்கு அரசு பரிசீலனையில் அது இருக்கும் என்று நம்புகிறேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் நாடகக் கலைமீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். எனக்குத் தெரிந்த வரையில் அவரே கூட நடிகராக இருந்திருக்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே அவருக்கு இருக்கிற ஆர்வம் அரசுக்கும் இருக்கிறது, காலஞ்சென்ற புகழ்மிக்க எம். ஜி. நடராஜப் பிள்ளை வாழ்ந்த மன்னார்குடியிலே இன்னும் அவரைப்போன்ற கலைஞர்கள் வாழ்கின்ற, வாழ்ந்த மன்னார்குடியிலே அரங்கம் கட்டமுடியுமா என்பதைப்பற்றித் தலைநகரங்களிலே கட்டிவிட்டு அதற்குப் பிறகு அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாவட்டப் பெருநகரங்களிலே நாடகக் கலையரங்கங்கள் கட்டுகிற நிலையிலே சென்னை நகரிலே உள்ள கலைவாணர் அரங்கத்திலே சில நாடகங்கள் நடத்த வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே ஆர். எஸ். மனோகர் நாடகம் மாதிரியான நாடகங்களைப் போடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கம் பல்வேறு பணிகளுக்கு உரிய விதத்திலே அங்கே அந்த மேடை அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆர். எஸ். மனோகர் அவர்களுடைய நாடகத்தை நடத்துவதிலே மேடை அமைப்பிலே கொஞ்சம் பாதகங்கள் இருக்கின்றன. ஆனால் மற்ற நாடகங்கள் அந்த மேடையிலே நடந்து வருகின்றன. இதைத்தவிர வேறு பல அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள் எல்லாம் அந்த மேடையிலே நடத்துகிறபோது அந்த மேடை தோற்றத்தையே முழுவதும் அவ்வப்போது மாற்றியமைக்கக்கூடிய வகையிலே அது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆர். எஸ். மனோகர் அவர்களுடைய நாடகத்தை மாத்திரம் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலையில் கலைவாணர் அரங்கத்தினுடைய மேடையை இப்போது மாற்றும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான சம்பள விகிதம்.

*வினா எண். 125—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கம்பெனிகளில் கொடுக்கப்படும் சம்பள அளவு தமிழக அரசின் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா?



1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : இல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய தனியார் கம்பெனிகளில் வேலை செய்யக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்கும் சர்க்கார் தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான சம்பளம் இருக்கிறதா அல்லது குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய விடையைத்தான் இல்லை என்று பதிலளித்து இருக்கிறேன். அதற்கான விபரத்தை மாண்புமிகு உறுப்பினர் கேட்பார்களானால் நீண்ட காலமாக அவைகள் லாப நோக்கத்தோடு, வியாபார நோக்கத்தோடு நடத்தப்பட்டு வருகிற தோட்டங்கள் ஆகும்.

ஆனால் அரசு இப்பொழுது நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்பது 1976—ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலிருந்து நம் நாட்டில் குடியமர்த்தப்படுகின்ற அந்த மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தோட்டக் கழகமாகும். இந்த நான்கைந்தாண்டுக் காலங்களில் இன்னும் அந்தத் தோட்டக் கழகம் பெரிய இழப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1978-79—ஆம் ஆண்டில் 43.06 இலட்சம் நஷ்டமும், 1979-80-ஆம் ஆண்டில் 31.9 இலட்சமும் இழப்பு அடைந்துள்ளது. இந்தச் சூழ்நிலையிலேயும் பெரிய அளவில், பெருத்த வேறுபாடு தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும், அரசுத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இருக்கக் கூடாது என்ற உணர்வைக் கொண்டுதான் கடந்த டிசம்பர் மாதத்தில் நமது தொழிலாளர் அமைச்சரவர்களும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களும், தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளும் இணைந்து கூடி அறிவித்ததையொட்டி 7.16 காசாக இருந்த அந்த ஊதியத்தை 9.52 காசாக இப்பொழுது உயர்த்தியிருக்கிறோம். 20 இலட்சம் இதன் மூலம் இந்த ஆண்டு நம்முடைய இழப்பிலே அதிகமாகச் சேரும் என்று தெரிகிறது.

[முற்பகல் 9.20]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அரசின் தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய இலாப நஷ்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது பெரிய அளவிற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஐந்தாண்டுகளாக நடக்கும் இந்த வேலையில் இலாபம் சம்பாதிக்கும் தோட்டங்கள் பல உண்டு. அது அமைச்சரவர்களுக்கே தெரியும் என்று நான் நினைக்கிறேன். அப்படியிருக்கும்பொழுது திரும்பத் திரும்ப புதிய புதிய ஏரியாக்களில் மூலதனம் அதிகம் செய்வதாக அதையும் காட்டி இழப்பு ஏற்படுகிறது என்று சொல்லி அதனால் குறைந்த பட்ச ஊதியம் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தனியார்

தோட்டங்களாக இருந்தாலும், சர்க்கார் தோட்டங்களாக இருந்தாலும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரேமாதிரி ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதில் நியயம் இருக்கிறதா? இல்லையா? அதன்படி கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய ஊதியங்கள் என்பது பல்வேறு வேலைகளில், பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு தரங்களிலே நிர்ணயிக்கப்படுகின்றன. அது தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், அரசு பொறுப்பேற்றுக் கொண்டு இந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தை உருவாக்குகின்றபொழுது ஆண்டுக்காண்டு இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அந்த மக்களுக்காக நாம் தொழில் கொடுத்தாக வேண்டும்; குடியமர்த்தியாக வேண்டும். அவர்களுக்குத் தெரிந்த தொழில் தேயிலைத் தோட்டத் தொழில் என்பதால்தான் காடுகளிலேயுங்கூட மிகுந்த கஷ்டத்தோடு தேயிலைத் தோட்டங்களாக மாற்றலாம் என்ற முயற்சியை மேற்கொண்டு மத்திய அரசின் உதவியோடு விஸ்தரித்துக் கொண்டு வருகிறோம். அப்படி விஸ்தரிக்கப்படவில்லை என்றால் இலங்கையிலிருந்து வரும் மக்களுக்கு நாம் வேலை கொடுக்க முடியாது. ஆகவே, விஸ்தரிப்பை நாம் கைவிட்டுவிட இயலாது. அதே நேரத்தில் ஐந்தாண்டுக் காலத்தில், இளந்தளிராக இருப்பவைகளுக்கு எந்த அளவிற்கு வருமானம் வரும் என்பதும் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, முதலீட்டையும் ஏற்கனவே நடைபெற்று வரும் செலவுகளையும் மனத்தில் வைத்துத்தான் அரசு சில முடிவுகளை எடுக்கிறது. இருந்தாலும், இவ்வளவு இழப்பு இருந்தாலுங்கூட பெரிய அளவிற்கு வித்தியாசம் இல்லாத அளவிற்கு நாம் கூலியை நிர்ணயித்திருக்கிறோம். தனியார் தோட்டங்களில் இப்பொழுது எடுத்திருக்கும் முடிவுப்படி கொடுப்பது ரூ. 10.70; நாம் ரூ. 9.52 கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முயற்சிகள் மேலும் மேலும் வளர்ந்து நல்ல நிலைமையை அடைகின்றபொழுது விரைவிலே தனியார் தோட்டத்திலே தருகின்ற அந்தக் கூலியைக் கொடுக்கின்ற அளவிற்கு நாம் எல்லோருமே சேர்ந்து முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தேவகோட்டையில் வனத்துறை சரக அலுவலகம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 126—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் வனத்துறை சரக அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது தொடங்கப்படும்?





மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: தேவகோட்டையில் வனத்துறைச் சரக அலுவலகம் 1-4-1981 முதல் முறைப்படி செயல்பட்டு வருகிறது.

**குமரி மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்**

*வினா எண். 127—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் குமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) அவ்வாறென்றால் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்,

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கென சுமார் 200-300 ஏக்கர் நிலம் வேண்டி, அம் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கேட்டுள்ளது. நிலம் கிடைத்தபின் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாட்டில் மற்றப் பகுதிகளில் இல்லாத ரப்பர், கிராம்பு ஆகிய பிரத்தியேகப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன என்பதாலே, ரப்பர், கிராம்பு, நெல், தென்னை போன்ற பயிர்களுக்கு அதிகமான நோய்கள் ஏற்பட்டிருப்பதால் அந்த மாவட்டத்தில் அமைப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக அந்த மக்கள் சார்பிலேயும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலேயும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்படிப்பட்ட பிரத்யேகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக விரைவிலே அந்த ரிசர்ச் சென்டரை அமைக்க அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நிலத்தைக் கேட்டிருக்கிறோம், கிடைத்தவுடன் அமைக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசுக்கு, சொந்தமான இடங்கள் பேச்சிப்பாறை அரசு வேளாண்மைத் துறைக்குச் சமீபத்திலே இருப்பதன் காரணமாக, அந்த வேளாண்மைத் துறைக்குச் சொந்தமாக இருக்கிற அன்னாசி பண்ணையை ஒட்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசால் முடியும் என்ற காரணத்தினாலே, அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1981 அகஸ்ட் 29

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பையனீர் குடும்பத்தாரிடமிருந்து உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி வனத்துறை பெற்றுள்ள நிலத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேளாண்மைப் பல்கலைக் கழகம் முயற்சி எடுத்துள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: முயற்சி எடுத்தது என்பது உண்மை. ஆனால் பயனீர் பண்ணையினர் 1971 ஆம் ஆண்டிலேயே அது சம்பந்தமாக விவரங்களை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று விட்டார்கள். அது இன்னும் உச்ச நீதிமன்றத்திலேயே முடிவு செய்யப்படாமலிருக்கிறது. ஆகவேதான் வேறு நிலத்தைக் கேட்கிறோம்.

### விரிஞ்சிபுரத்திலுள்ள வாழைப் பண்ணை

*வினா எண். 128—திரு. இலா. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு விரிஞ்சிபுரம் வாழைப் பண்ணை அரசு ஏற்படுத்தியதா?

(ஆ) இதன் நோக்கம்?

(இ) இதனால் கன்றுகளை வாங்கிப் பயன் அடைந்த விவசாயிகள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) வாழை ரகங்களின் உற்பத்தித்திறனைப் பெருக்கவும் நோய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்திடவும் ஆய்வுகள் மேற்கொள்ளவும் இப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது.

(இ) சுமார் ஒன்பதாயிரம் விவசாயிகள்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, புகழ்பெற்ற சிறுமலை வாழை போன்றவைகள் எல்லாம் முடிக்கொத்து நோயினால் பாதிக்கப்படுகிற இக்காலத்தில் இந்த வாழைக்கு மாற்று வாழைகள் கண்டு பிடிக்கக்கூடிய ஆராய்ச்சி இந்தப் பண்ணையில் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாற்று வாழை கண்டு பிடிக்கின்ற முயற்சி இல்லை. இங்கே பயிரிடக்கூடிய பச்சை வாழை ரகங்களினுடைய உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலேயும் பச்சைவாழையினுடைய தரத்தை ஏற்றுமதிக்குத் தகுந்தவாறு உயர்த்துகின்ற வகையிலும் இங்கே ஆராய்ச்சி செய்யப்படுகிறது.



1981 ஆகஸ்ட் 29]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வாழையிலே எத்தனை வகை இருக்கின்றது? அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்குப் பயன் தரக்கூடியது எந்த வகை? அதிலே, சோகை, வாடை நோய் சில வாழைகளைத் தாக்குகிறது. அதை நிவர்த்தி செய்ய ஏதாவது ஆராய்ச்சி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது விரிஞ்சிபுரம் பண்ணையைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால், விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. நி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழை ஆராய்ச்சி விரிஞ்சிபுரம் அல்லாமல் வேறு ஏதாவது இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

திரு. ஏ. பி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் விரிஞ்சிபுரம் வாழைப் பண்ணை எப்பொழுது துவங்கப்பட்டது? எவ்வளவு ஏக்கர் பரப்பளவிலே பயிர் செய்யப்படுகிறது? எவ்வளவு வாழை உற்பத்தியாகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஏக்கர் பரப்பளவிலே இது துவங்கப்பட்டது. டிசம்பர் மாதம் முதல் இந்தப் பண்ணை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டு, வாழை சம்பந்தமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

### தமிழகத்தில் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள விதைகள் தட்டுப்பாடு.

*வினா எண் 129—திரு. எம். எஸ். மாணிக்கம், திரு. த. வீராசாமி, திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டதின் காரணமாக வேர்க்கடலை போன்ற விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விநியோகிக்க நிலக்கடலை மற்றும் நெல் கொள்முதலுக்காக அரசு முதலில் ரூ. 62 இலட்சமும், பிறகு ரூ. 50 இலட்சமும் செலவு செய்ய அனுமதி அளித்துள்ளது.

[1981 ஆகஸ்ட் 29

இதைத் தவிர மொத்தத்தில் வறட்சிப் பணிகளுக்காக ரூ. 380 இலட்சம் செலவிட அரசு உத்தேசித்துள்ளது. இந்த பணம் மானிய விலையில் விதைகள் மற்றும் பூச்சிக் கொல்லி உரம் முதலியவைகளை வறட்சிப் பகுதிகளில் விவசாயிகளுக்கு விற்பனைச் செய்ய பயன்படுத்தப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்பட்டதின் காரணமாக நல்ல பலன் அளிக்கக்கூடிய வீரிய விதைகள் கிடைக்காமல் பல இடங்களிலே விவசாயிகள் மிகவும் அல்லல்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது குறிப்பாக, நல்ல பலன் அளிக்கக்கூடிய கோயில்பட்டியில் நெட்டச்சோளம் மானாவாரியிலே பயிரிடப்படுவது. அங்கே உள்ள விவசாயிகள் எல்லா டெப்போக்களிலும் கேட்டும் ஓரிடத்திலும் கிடைக்க வில்லை என்று சொல்லப்படுகிறதே, ஆகவே அதை வரவழைத்து அந்தக் கோயில்பட்டி வட்டாரத்தில் நெட்டைச்சோளம் விதைக்கு கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9.30]

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் கொடுக்கப் படுகின்றன. ஆனால் மார்ஜினல் விவசாயிகளைத் தாண்டியவர் களுக்கு சாதாரண விதைகள் கிடைக்காமல் நேஷனல் சீட் கார்ப்பரேஷனிலிருந்து அதிக விலை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே இடைப்பட்ட குறைந்த விலையில் அவர்களுக்குக் கொடுக்க அரசு வகை செய்யுமா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்குத்தான் இந்த மானிய விலையில் கொடுக்கிறோம். மற்ற ஏற்பாட்டை செய்வது கடினம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த சீரிய விதைகள் வெளி மாநிலங்களில் இருந்து வருகின்றன. சில சமயங்களில் அவைகள் தனியார்களிடம் போய் சேர்ந்து விடுகின்றன. விவசாயிகள் அங்கே போய் வாங்கவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை இருக்கின்றது. கோவில்பட்டி போன்ற இடங்களிலே இந்த நிலை உள்ளது. இதை உடனடியாக அரசு கவனித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நம்முடைய துறையைப் பொருத்தவரையில் நமே நேரடியாக கொள்முதல் செய்து, விதைகளை வரவழைத்து தேசிய விற்பனைக் கழகம் போன்றவைகளிலே நாமே நிலக்கடலை போன்ற விதை களை வாங்கி மானிய விலையில் தந்து கொண்டிருக்கிறோம்.



1981 ஆகஸ்ட் 29]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, வறட்சி யால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகளுக்கும் மிகச் சிறிய விவசாயிகளுக்கும் மானிய விலையில் விதைகள் வழங்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல பெரிய விவசாயிகளுக்கும் தேவைப்படுகின்ற விதைகள், மானிய விலையில் இல்லாவிட்டாலும், முழு விலையில் வழங்க அரசு முன்வருமா? மாவட்ட ரீதியாக எவ்வளவு விதைகள் இப்படி மலிவு விலையில் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிப் பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் தந்ததுபோக அதிகம் இருந்தால் இப்படிப்பட்ட விதைகளை தர இயலும். மாவட்ட வாரியாக விவரம் தற்போது இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளிலே விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு சில உதவி செய்கிற வகையில் மணிலா விதைகள் போன்ற விதைகளை மானிய விலையில் அளிக்கும் உத்தரவை அரசு தக்க தருணத்திலே உத்தரவிடாத காரணத்தினால், அந்தக் காலதாமதத்தாலே உத்தரவு கிடைக்காத காரணத்தினாலே ஆரம்பத்திலே முழு விலை கொடுத்து விவசாயி வாங்கியவர் களுக்கு பிறகு அந்த மானியம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றி இதுவரையில் எந்தப் புகாரும் அரசுக்கு வரவில்லை. விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### பிள்ளையார் நத்தம் கிராமம் அருகே பழப்பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 130—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி பிள்ளையார்நத்தம் கிராமம் அருகே 100 ஏக்கரில் மேற்குத் தொடர்ச்சி மலை முன்னேற்ற திட்டத்தின் கீழ் மாபெரும் பழப்பண்ணை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திருவில்லிபுத்தூர் தாலூக்கா மேற்குதொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவில்லை. எனினும் திருவில்லிப்புத்தூர் தாலூக்கா விலுள்ள வெங்கடேசபுரம் என்னும் கிராமத்தில் 120 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் பழப்பண்ணை மற்றும் நாற்றங்கால் நிறுவும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றியதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்

கொள்கிறேன். ஆண்டாள் கோவிலில் தங்களுக்காக விசேஷ மரியாதை செய்கிறேன் என்று கூறிக்கொண்டு, இந்தப் பழப் பண்ணை எவ்வளவு ரூபாயில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. எப்போது முதல் இது செயலுக்கு வரும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 3½ லட்சம் ரூபாயில் பழப்பண்ணை செயல்பட இருக்கிறது. ஆணையிடப்பட்டிருக்கிறது, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. விசேஷ மரியாதை செய்வதற்கு நன்றி.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்தப் பழப் பண்ணை வரக்கூடாது என்று விஷமிகள் சிலர் அந்த இடத்தில் 7 லட்சம் ரூபாய் செலவில் கண்மாய் அமைக்க திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? அந்த பைல் ரெவின்யு இலாகாவில் உருவாகி இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தாமரைக்கனியின் துணை இருக்கும்போது விஷமிகளை முறியடிப்பது எளிதான காரியம்.

### மதுரை—தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம்.

* வினா எண் 131—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை-தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதுரை-தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவில்லை. தொண்டி—மதுரை—கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் வினாவில் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதி சாலையான மதுரை-தேனிசாலை அடங்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரையிலே இருந்து தேனி வரை செல்லுகின்ற 47 மைல் தூரத்தை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் திண்டுக்கல் தேனியை இணைத்து குமுளி வரை பாதை அமைத்தால் கூடலூர்-திருவனந்தபுரம் புதிய தேசிய நெடுஞ்சாலை ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்தப் பகுதியிலே தொழில் வளம் பெருகவும் ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் அதையும் இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றவேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஆனால் ஒரு கிலோ மீட்டர் சாலை கூட புதிய சாலையாக கொடுக்கப்படவில்லை. ஆகவே ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, வேண்டுகோள் விடுக்கப்பட்ட சாலைகளை முதலிலே கவனித்துவிட்டு பின்னால் இந்த சாலைக்கு வரலாம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட இந்த சாலைகளுடைய பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஏற்கனவே சேர்க்கப்பட்ட சாலைகளுக்குத்தான் என்று சொன்னேன். மதுரை-தேனி சாலையில் ஒரு பகுதி தேசிய நெடுஞ்சாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே தேசிய நெடுஞ்சாலைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்ட சாலைகள் 1981–82-ல் எத்தனை? அதிலே எத்தனை மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது? மற்ற மாநிலங்களிலேயிருந்து எவ்வளவு பரிந்துரை செய்தார்கள்? அவர்களுக்கு எவ்வளவு அனுமதி கிடைத்தது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 16 மாநில சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் இதுவரையில் ஒரு சாலை கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்கான நிதியும் கொடுக்கப்படவில்லை. ஆனால் இதற்கு மாறாக அசாம் மாநிலத்திற்கு புதிய சாலைகள் போடுவதற்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். அதே வேண்டுகோளை மையமாக வைத்து தமிழகத்திற்கு புதிய சாலைகளை நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு பணம் வேண்டுமென்று கேட்டோம். இதுவரையில் பதில் இல்லை. இருப்பினும் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். கடைக்கண் பார்வையை இந்த பக்கமும் திருப்ப வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்; கடைக்கண் பார்வை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எர்ணாகுளத்திலிருந்து என்னுடைய தொகுதி பார்டரான போடிமெட்டு வரை தேசிய நெடுஞ்சாலையாக கேரளா அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேனி வரையில் இருக்கிற சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற சிபார்சு செய்ததாகச் சொன்னார்கள்,

ஆகவே போடிமெட்டிலிருந்து தேனி வரையில் உள்ள சாலையை நெடுஞ்சாலையாக்குவதற்கு அரசு ஆலோசனை கூறுமா? இந்த சாலை கொச்சின் துறைமுகத்தை தூத்துக்குடி துறைமுகத்தோடு இணைக்கிற குறுகிய இடைவெளியாக இருக்கிறது. இது இந்த வகையில் அரசுக்கு நல்ல வாய்ப்பைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த சாலையை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதனுடைய முக்கியத்துவத்தை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு இணைப்புச் சாலையாக இருக்கும் என்கிற விவரத்தைத் தெரிவித்து இருக்கிறோம். ஆகவே தகுந்த ஆணைகள் வருமென்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோயர் கேம்பிலிருந்து குமளி வரையில் இருக்கும் மலைச்சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. சமீபத்தில் ஒரு விபத்து கூட அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக முனைப்பாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன். ஆகவே இந்த மாதத்திலேயே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று மாநிலங்களை இணைக்கும்படியாக நெடுஞ்சாலை திண்டுக்கல், பெரியகுளம், தேனி, கூடலூர், குமளி வரையில் போகக்கூடிய பாதை இருக்கிறது. சமீபத்திலே கூட அங்கே விபத்துக்கள் நடந்ததை நாம் அறிவோம். ஆகவே இந்த நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு சிபார்சு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் இவைகளைச் சேர்ந்த சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு தாக்கீது கொடுத்திருக்கிறோம். ஆகவே நீங்கள் கூட திண்டுக்கல் சேர்ந்திருக்கிறது என்பதில் பெருமை கொள்ளலாம்.

### திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம்

*வினா எண் 132—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருத்துறைப்பூண்டியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று சுமார் 19.5 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்த பேரூராட்சி உத்தேசித்துள்ளது.

[முற்பகல் 9-40]

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் திருத்துறைப்பூண்டிக்கு ஒரு பெரிய திட்டத்தை அறிவித்திருப்பதற்கு நன்றி சொல்லி, திருத்துறைப்பூண்டி பேரூராட்சி தகராட்சியாகக்கூடிய அந்தஸ்து பெற்றிருப்பதால் இந்த 19½ இலட்சம் ரூபாய்த் திட்டம் எந்த காலக் கட்டத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கடன் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்களை நியமிக்கும் திட்டம்.

* வினா எண்—133 திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்களை நியமிக்க அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கூடுதலாக எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 1981-82-ல் சேர்க்கப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் ஆணையர் (Additional Block Development Officer) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த கூடுதல் ஆணையாளருடைய பணி நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பார்த்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டம் செயல்படும அந்த ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஆணையாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு இந்த வேலைகளை பார்வையிட்டு, துரிதப்படுத்தும் வகையில் வாகன வசதி செய்துதரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜீப்பை பயன்படுத்தி இந்த வேலைகளை எல்லாம் பார்வையிடலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படுகிற வட்டங்களில் புதிதாக ஆணையர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒன்றியங்களில் இருக்கிற ஆணையர்களுக்கும் தனி அதிகாரிகளுக்கும் ஏற்கெனவே இருக்கின்ற வேலைகளைப் பார்ப்பதற்கே நேரம் சரியாகிவிடுகிறது. ஆகையால் இந்த தன்னிறைவுத் திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற தனியாக டி. டி. ஒக்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே இதற்கு தனியாக மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் தேவையில்லை. தன்னிறைவுத் திட்டத்தில் இப்போது வேலை அதிகமாக இல்லை. ஏனென்றால் கோட்டத்தில் கோட்டாட்சிப் பணிகளை எல்லாம் கவனிக்க இந்த அடிஷனல் பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்ஸ் போடப்பட்டிருப்பதால் மற்றவர்கள் ஏற்கெனவே இருக்கிற வேலைகளை கவனித்தால் சரியாக இருக்கும்.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டப்பணிகளைக் கவனிக்க கூடுதல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சில ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகளை அங்கே ஏற்கெனவே இருந்த ஆணையர் நான்தான் பார்ப்பேன் என்று சொல்லுகிறார்; கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆணையர் நான்தான் பார்ப்பேன் என்று சொல்லுகிறார். இப்படி இந்த இருவருக்கும் ஒரு போட்டா போட்டி ஏற்பட்டு வேலைகள் சரியாக நடக்க முடியாமல் இருப்பதால் யார் அந்த வேலைகளைச் செய்வது என்று வரன்முறை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது குறித்து ஏற்கெனவே கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், கூடுதல் கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ஒன்று கூட்டப்பட்டு அதிலே அவர்களுடைய பணிவரன்முறை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அவர்கள் பணியாற்றவேண்டும்



திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, தனி ஆணையர் நியமிக்கப்பட்டும் கூட அவர்களுக்கு உதவியாக டைபிஸ்ட், க்ளார்க் போன்ற பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் பணி முடக்கம் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அப்படிப் பட்ட பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அத்தகையப் பணியாளர்கள் ஏற்கெனவே வட்டாட்சி, கோட்டாட்சி. மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்களில் இருக் கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, அமைச்சர வர்கள் தன்னிறைவுத் திட்டம் செயல்படும்ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்; வரவேற்கிறேன். அந்த நேரத்தில் அந்த ஆணையருக்கும் ஏற் கெனவே இருக்கும் ஆணையருக்கும் அந்த வட்டாரத்தைச் சுற்றிப்பார்க்க ஒரு ஜீப்தான் இருக்கிறது. அந்த ஜீப்புக்கு கூடுதல் பெட்ரோல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாமல் அந்த ஜீப் ஓட்டுநர் இரவு பகலாக ஓட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதிகப்படியான பெட்ரோல் வழங்கு வதோடு, கூடுதலாக ஒரு ஓட்டுநரும் நியமிக்கப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை)

ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலை உருளைகள் வாங்கும் திட்டம்.

*வினா எண் 134— திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒவ்வொரு 'ரோட் ரோலர்' பொது நிதியிலிருந்து வாங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு நெடுஞ்சாலைப் பிரிவின் எந்த ஊராட்சி ஒன்றியத்தில் உபரிப் பொதுநிதியாக மூன்று இலட்சத்திற்குமேல் மிக அதிகமாக இருப்பு உள்ளதோ அந்த ஒரு ஊராட்சி ஒன்றியம் சாலை உருளை வாங்கிக்கொள்ளலாம் என்றும் மற்ற ஒன்றியங்கள் வாடகை செலுத்தி அதைப் பயன்படுத்தலாம் என்ற ஆணை இருக்கிறது.

திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவர் அவர்களே, பொது நிதி குறைவாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுத்து பிறகு பெற்றுக்கொள்கின்ற வகையிலே உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே எந்தெந்த ஒன்றியங்களிலே பொது நிதி உபரியாக இருக்கின்றதோ அவற்றுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலும் 50 உருளைகள் வாங்குவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அதற்காக 1,12,50,009 ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கின்றது. அந்த உருளைகள் எல்லாம் பெறப்பட்டு வருகின்றன. ஆனால் எவ்வளவுதான் சீக்கிரமாக உருளைகளைப் பெற வேண்டும் என்றாலும் அவற்றை உற்பத்தி செய்கின்ற கம்பெனிகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நமக்கு கொடுக் கின்றன, ஆகவே உடனடியாக 100 உருளைகள் தேவை என்று நாம் சொன்னால் அவர்களால் கொடுக்க முடிவதில்லை. ஆகவே வருகின்ற கால கட்டங்களில் கண்டிப்பாக இவைகளில் எல்லாம் தன்னிறைவை ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை அரசாங்கம் கவனித்து வருகின்றது.

**திரு. ஆனூர் பு.கோ. ஜெகதீசன்:** தலைவர் அவர்களே, ரோட் ரோலரின் விலை எந்த அளவுக்கு வருகின்றது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஒரு ரோலரின் விலை 2 இலட்சத்திலே இருந்து 3 இலட்சம் வரை வருகின்றது.

**திரு. தி. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவு திட்டம் செயல்படுத்துகின்ற வகையிலே ஓர் ஆண்டு காலத்திற்குள் சாலைகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்று அரசு சொல்லி இருக்கின்றது. ஆனால் ஒருசில இடங்களிலே ரோட் ரோலர் இல்லாததால் வேலைகள் தாமதப் படுகின்றன. ஆகவே அதுபோன்ற இடங்களில் தற்காலிகமாக உடனடியாக ரோட் ரோலர் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, சாலைப்பணிகளைப் பொறுத்தவரையில் அவற்றை எல்லாம் முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஊரக வளர்ச்சித் துறையினால் மட்டுமல்லாமல் நெடுஞ்சாலைத் துறையின் மூல மாகவும் 50 உருளைகள் பெறப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் வைத்து, என்னென்ன திட்டங்களைத் தீட்டி இருக் கிறோமோ அவற்றை எல்லாம் கண்டிப்பாக செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, ஒன்றியப் பொது நிதியிலிருந்து 5 ரோட் ரோலர்களை தஞ்சை மாவட்டத் திலே வாங்கி இருக்கிறார்கள். அனால் இவற்றை வாங்குகின்ற போது முறையாக பத்திரிகைகளில் கொட்டேஷன் கேட்கப்பட வில்லை என்று கூறப்படுகின்றது. அது உண்மையா? மேலும் அதிக விலை கொடுத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். அது உண்மையா?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இவைகள் எல்லாம் ரேட் கான்ட்ராக்ட் முறையிலே வாங்கப்பட்டிருக்கின்றது. கிரிவ்ஸ் காட்டன் என்ற கம்பெனியிலே இருந்து ரேட் கான்ட்ராக்ட் மூலம் சாலை உருளைகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரோட் ரோலர் வாங்கப்படும் என்று சொன்னார்கள். பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங் களில் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்ற டிராக்டர்கள் எந்தவிதப் பயனும் இல்லாத நிலையிலே வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவற்றை விற்றுவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு ரோட் ரோலர் வாங்கி உதவி செய்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இருக்கின்ற டிராக்டர்கள் எல்லாம் என்ன நிலையிலே இருக்கும் என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதும் தெரியும். கண்டிப்பாக, அவற்றை விற்றால் ஒரு ரோட் ரோலரைக் கூட நல்ல நிலையிலே இயங்குகின்ற வகையிலே வாங்க முடியாது.

ஆனால் இதுபோன்ற பழைய டிராக்டர்களை எல்லாம் நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**பெருந்துரை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.**

***வினா எண். 135 திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துரை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, பெருந்துரை ஒன்றியத்தில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவலை போய்விட்டது என்றால் தலை போய் விட்டது என்று சொல்வார்கள். அதேபோன்று பெருந்துரை ஒன்றியத்திலே விஜயமங்கலம் என்ற இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா என்பது கேள்வி. அந்த வகையிலே பெருந்துரை ஒன்றியத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம் பிக்க அரசிடம் செயறகுறிப்பு உள்ளதா என்று இருக்கின்றது. ஆனால் ஏற்கெனவே பெருந்துரை ஒன்றியத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது, ஆகவே ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற காரணத்தாலேயும்

பெருந்துறை வட்டம் தலைநகரம் ஆகிவிட்ட காரணத்தாலேயும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் விஜயமங்கலத்திலே ஆரம்பிக்கப்படுமா?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய சந்தேகம் உண்மையான சந்தேகம்தான். பெருந்துறையில் இருக்கும் மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக ஆக்கலாமா என்ற எண்ணம் அரசிடம் இருக்கிறது. பெருந்துறை தாலுக்கா தலைநகரமாக மாற்றப்பட்ட சூழ்நிலையில் ஒருவேளை அப்படிச் செய்யப்படுமேயானால், மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் சொல்லக்கூடிய அந்தக் கருத்தும் பரிசீலிக்கப்படும். அது மட்டும் அல்லாமல் குறிப்புகளையும் கேட்டிருக்கிறோம். அதாவது, இருக்கிற மருத்துவமனையை மாற்றி தாலுக்கா மருத்துவமனையாக ஆக்குகிறபோது, இப்போதிருக்கும் இடத்திலோ அல்லது வேறு ஏதாவது ஒரு இடத்திலோ ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சரியாக இருக்குமா; இடம் கிடைக்குமா என்பது பற்றி, டைரக்டர் ஆப் பிரைமரி ஹெல்த் டிபார்ட்மென்ட் அவர்கள், மெடிகல் ஆபிசரை கேட்டிருக்கிறார்கள். அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையம் கூட, மாவட்ட சுகாதார அதிகாரிகள் மூலமாக, விஜயமங்கலத்தில் ஆரம்பிக்கலாம் என்ற உத்தேசத்தோடு, அங்கே 5 ஏக்கர் நிலமும், அப்படி ஆரம்பிப்பதற்கு தேவையான பணம் 10,000மும் வசூலிக்க என்று திட்டம் இருக்கிறது. அது உடனே தெரிந்தால், மேற்கொண்டு இட வசதியையும் பெறுவதற்கும், பணம் வசூலிப்பதற்கும் எங்களுக்கு வசதியாக இருக்கும். அத்தோடு அந்த நடவடிக்கைகளையும் தீவிரமாக உடனடியாக அரசு எடுக்குமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நான் வாக்குறுதி கொடுக்க முடியாது. இருந்தாலும் கூட நான் சொல்லிய அந்த விடைகளை வைத்துக் கொண்டே, அதற்குரிய வேலைகளை அதிகாரிகள் எடுத்துக்கொள்ளக்கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தனிப்பட்டதாக இருந்தாலும் கூட, 1980-81ஆம் ஆண்டுக்கு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கவிருக்கிறீர்கள்? அதிலே 10,000 பணம் கொடுத்து, 5 ஏக்கர் நிலமும் கொடுத்து 1 லட்சம் ரூபாய் கட்டிடங்கள் கட்டவும், நன்கொடை கொடுத்திருந்தும், எத்தனை இடங்கள் இன்னும் சேங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றன என்பது போன்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவான கேள்வி. 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை இந்த 80-8 -ல் துவக்கவிருப்பதாக மதிப்பீடுகள் போட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடைபெற்று, ஆணைகள்—ஜி.ஓக்கள் கூட பிறப்பிக்கப்பட்டு விட்டன. பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அந்த 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை எந்த அடிப்படையில் எடுத்திருக்கிறோம் என்று உறுப்பினர் அறிய விரும்புவதாக தெரிகிறது. ஜனத்தொகை அடிப்படையிலே, அதாவது 1 லட்சம் ஜனத்தொகை இருக்குமேயானால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க முன் உரிமை அளிக்கப்படுகிறது. அது போலவே, 10,000 அளித்து நிலத்தையும் கொடுத்து முன் வருவார்களேயானால், அதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் தன்னுடைய ஒன்றியத்திற்கு வரவில்லை என்ற அடிப்படையில் கேட்கிறார் என்று நினைக்கிறேன். அதைக்கூட நிச்சயமாக அடுத்த கட்டத்தில் நிறைவேற்ற எண்ணியிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம் அரசினர் மருத்துவமனை.

*வினா எண் 136— திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கும்பகோணம் அரசினர் மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிக்கும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிப்புக்கான செயற்குறிப்புகள் அரசுக்குக் கிடைத்தவுடன் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கான தனிக்கட்டிடம் கட்ட, அங்கேயுள்ள ரோட்டரி சங்கத்தினர் 2 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் அவர்கள் முன்னாலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த நன்கொடையைப் பெற்றாவது, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்றை உடனடியாக கட்ட அரசு முன் வருமா? அத்தோடு அங்கே பொதுமக்களே கூட அந்த மருத்துவமனைக்கென ஒரு ஜெனரேட்டர் ஒன்றை வாங்கி நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். அது பொருத்தப்படாமல், உபயோகப்படாமல் இருக்கிறது. அதை உபயோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா? அத்தோடு கும்பகோணம் மருத்துவமனையை தஞ்சை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 3 கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். கடைசியாக கேட்ட கேள்விக்கு இல்லை என்பதுதான் என்னுடைய பதில். ஜெனரேட்டர் பற்றி கேட்டார்கள். ஜெனரேட்டர்களைப் பொருத்துவதற்கான எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. விரைவில் பொருத்தப்படும். அதற்கு முன்பாக முதல் கேள்வியாகா கேட்டதற்கு, 2 லட்சம் ரூபாய் ரோட்டரி சங்கத்தினர் நன்கொடையாகக் கொடுப்பார்களேயானால், அதை விரைவில் விஸ்தரிக்கஅரசு தயாராக இருக்கிறது. கொடுக்கவில்லை என்றாலும், அதற்கான பணிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள் நன்கொடை கொடுப்பார்களேயானால், அந்தப் பணிகள் விரைவில் முடிவுற வாய்ப்பு இருக்கும்.

திரு. ஏ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் இருக்கும் தாராபுரம் ஆரம்பச் சுகாதார மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக ஆக்கவேண்டும் என்று பலமுறை விண்ணப்பங்கள் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரைவில் அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கும்பகோணம் மருத்துவமனையைப் பற்றியது. இருந்தாலும் கேள்வியை எழுப்ப அனுமதித்துவிட்ட காரணத்தால்......(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வியை அனுமதிக்கவில்லை. இதற்குப் பதிலளிக்க வேண்டாம்.

வினா எண்கள் 137, 138 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறையில் நிரப்பப்படாமலுள்ள பதவிகள்.

*வினா எண். 139— திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் உதவி இயக்குநர், துணை இயக்குநர் பதவிகளுக்கு எத்தனை இடங்கள் நிரப்பப்படாமலுள்ளன?

(ஆ) அவை எப்பொழுது நிரப்பப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) உதவி இயக்குநர் பதவியில் ஒரு இடமும், துணை இயக்குநர் பதவியில் ஒரு இடமும் நிரப்பப்படாமலுள்ளன.





(ஆ) மாதவரம் பால்பண்ணையில் உதவி இயக்குநர் பதவி என்ற பதவி இருந்து வந்தது. அந்தப் பண்ணை கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் அதிகாரத்துக்குள் வந்த பிறகு இந்தப் பதவியினை பால் பண்ணையிலிருந்து பால்வளத் துறைக்கு மாற்ற வேண்டுமென பால்வளத் துறை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்தார். அந்தப் பதவியினை பால்வளத் துறைக்கு மாற்றுவதற்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் சம்மதம் தெரிவித்தார். அரசின் உத்தரவு பெற்று பால்வளத் துறை ஆணையாளரால் இந்தப் பதவி நிரப்பப்படும். இராணிப்பேட்டையிலுள்ள நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு துணை இயக்குநர் பதவி காலியாக உள்ளது. இந்தத் துணை இயக்குநர் என்கிற பெயரினை ஆராய்ச்சி அலுவலர் என பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பதவியினை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. எஸ். சிவராமன்: துணை இயக்குநர் பதவி, உதவி இயக்குநர் பதவி நிரப்பப்படாமல் இருந்தால் அது எவ்வளவு காலமாக காலியாக இருந்தது? எப்போது நிரப்பப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கால்நடை அலுவலர், அரசு பாற்பண்ணை, மாதவரம் 1–7–79–ல் இருந்து நிரப்பப்படாமல் உள்ளது. துணை இயக்குநர் பதவி, இராணிப்பேட்டை 3–10–80–ல் இருந்து நிரப்பப்படாமல் உள்ளது. இயக்குநரின் ஆணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் நிரப்பப்படும்.

திருநாகேஸ்வரம் பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவநிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 140—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் (I.C.D.P.) திட்டத்தின்கீழ் ஒரு கால்நடை மருத்துவநிலையம் அமைக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை,

(ஆ) இவ்வினா எழாது.

திரு. செ. இராமலிங்கம்: திருவிடைமருதூர் ஒன்றியத்தில் உள்ள திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கவேண்டும் என்று மாவட்ட வளர்ச்சிமன்றக் குழுவிலிருந்து அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்கு எட்டு கிலோ தொலைவிற்குள் வேறு கால்நடை மருத்துவமனை இல்லை. எனவே, உடனடியாக மீண்டும் இதுகுறித்து பரிசீலனை செய்து அங்கே ஒரு

கால்நடை மருக்துவமனை அமைக்க முடிவு எடுக்கப்படுமா? மேலும், அமைச்சர் அவர்களின் தொகுதியிலே வலங்கைமான் பேரூராட்சியில் ஐ. ஸி. டி. பி. சப்-சென்டர்-ம், அனிமல் ஹஸ்பென்ட்ரி ஹாஸ்பிட்டலும் ஒரேயிடத்தில் இருக்கின்றன. எனவே, பொதுநலன் கருதி இவை இரண்டும் ஒரேயிடத்தில் இல்லாமல் ஐ. ஸி. டி. பி. சப்- சென்டரை வேறு இடத்திற்கு மாற்றிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : திருவிடைமருதூர் ஒன்றியத்தின் எல்லையில் நாச்சியார்கோவில் மற்றும் ஆடுதுறையில் இரண்டு கால்நடை மருநதகங்கள் செயல்பட்டு வருகின்றன. தவிரவும் மேற்படி பஞ்சாயத்து ஒன்றியத்தின் எல்லைக்குள் ஏழு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு அப்பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன, அரசு வரும் ஆண்டுகளில் ஐ. ஸி. டி. பி. போன்ற திட்டங்களை அங்கீகரிக்கும்போது தஞ்சை மாவட்டத்தில் மற்ற இடங்களுக்கும் இந்தத் திட்டத்தைப் படிப்படியாக விரிவுபடுத்த ஆவன செய்யப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்கு எட்டு கிலோ தூரத்தில் நாச்சியார் கோவிலில் ஆடுதுறையில் இருக்கின்றன. எனவே, எட்டு கிலோ தூரத்தில் வேறு கால்நடை மருத்துவமனை இல்லாததால் உடனடியாக பொதுமக்கள் நலன் கருதி திருநாகேஸ்வரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா? எனக்குக் கிடைத்த தகவல்படி மண்டல துணை இயக்குநரிடமிருந்து இலவசமாகப் பேரூராட்சிக் கட்டடத்தை ஒரு ஆண்டு கொடுத்தால் நாங்கள் உடனடியாக ஆரம்பிக்கிறோம் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு முடிவு இருப்பதாக அறிகிறேன். எனவே மீண்டும் பரிசீலனை செய்து திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துமனை துவங்கப்படுமா?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது,

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டுகளில் கண்டிப்பாக அமுல் நடத்தப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 7 கிளை கால்நடை பராமரிப்பு நிலையங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதியில் அந்தக் கிளை நிலையங்களில் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், மூடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு உடனடியாக பணியாளர்களை நியமனம் செய்து அந்தக் கால்நடை நிலையங்களை உடனடியாகத் துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?





மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பு இல்லையென்றாலும், எங்கெங்கு கால்நடை பணியாளர்கள் ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றனவோ, அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் கொடுத்தால், அது விரைவில் நிரப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. ரா. உமாநாத்:பாயின்ட் ஆப் ஆர்டர்,தலைவர் அவர்களே நம்முடைய அவைக் கூட்டத்தில் நடந்த ஒரு விவாதத்திலே எரிசாராயம் விஷயமாக சில குறிப்பிட்ட பெயர்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மென்ஷன் பண்ணி, முதமைச்சர் அவர்கள் முன்னிலையில் உங்களுடைய டெசிஷனை கோட் பண்ணி இந்த மாதிரி அவையிலே இல்லாதவர்கள் பெயர்களைச்சொல்லக் கூடாது என்ற டெசிஷனை அப்-ஹோல்ட் பண்ணி, எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறீர்கள். அந்தமாதிரி உள்ள நடவடிக்கையைப் பற்றியும், முதலமைச்சர் நடவடிக்கையைப் பற்றியும் விசாரணை செய்ய வேண்டும் என்று ரே கமிஷன் உத்தரவிட்டது தெரியும். இதைப் பற்றி ஒரு உரிமை மீறல் நோட்டீஸ், இந்த அவையின் நடவடிக்கை பற்றி விசாரணைக்கு விட்டது சம்பந்தமாக நான் உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அது மிஸஸ் காந்தி, தண்டபாணி, எம்.பி., அன்பரசு, எம்.பி., ஆகியோர்மீது கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று, என்பது எனக்குத் தெரிய வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சட்டமன்ற நிகழ்ச்சி நடைபெற்ற அந்தச் சமயத்தில், எங்கள் கட்சித் தலைவர் பேசினார்கள், அந்தப் பேச்சிலே சில பெயர்களை மென்ஷன் பண்ணக் கூடாது. அதை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதிலே என்ன நடந்தது? என்னென்ன பெயர்களைச் சொன்னார்கள்? எதை எதை நீக்கினீர்கள்? அது எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்கும்போது, அதை அவர்கள் எப்படி ரெயிஸ் பண்ண முடியும்? அதை சட்டமன்றத்திலே தாங்கள் தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால், என்ன புரோசீடிங்ஸ் நடந்தது? என்னென்ன பெயர்களைச் சொன்னார்கள் என்பதை திரு. உமாநாத் அவர்கள் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த உரிமைப் பிரச்னையை ஏற்றுக் கொண்டால்தான் அது வரும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டீடெயில்சுக்குப் போகிறார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன். இப்போது அவர் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

உரிமைப் பிரச்னை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏற்றுக்கொண்ட பிறகுதான் அதெல்லாம் வரும்.

'ரே' கமிஷன் நடவடிக்கைகள் மீது திரு. சட்டநாதக் கரையாளர், திரு. உமாநாத்ஆகியோர் கொடுத்த பிரச்னைகளில் திரு. சட்டநாதக் கரையாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் கொடுத்த வழக்கின்மீது உயர்நீதி மன்றம் கமிஷன் நடவடிக்கைகள் மீது இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து உள்ளது. எனவே, கோர்ட்டில் இந்த நடவடிக்கைகள் மீது ஒரு முடிவு வரும் வரையில் இதை ஒத்தி வைக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: நான் தங்கள் தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறேன். ஆனால் அவை இன்னும் இரண்டு மூன்று நாட்கள் தான் நடக்க இருக்கிறது. அவை முடிந்த பிறகு உங்களுக்கு கோர்ட்டில் இருந்து ஏதாவது நோட்டீஸ் வந்தால் நீங்கள் என்ன செய்யவேண்டுமென்பதற்கு செட்யூல்டு லா, பார்லிமென்டரி டெசிஷன் இருக்கிறது. அதை மட்டும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபாநாயகருக்கு வழக்கு மன்றத்தில் இருந்து எந்த நோட்டீஸ் வந்தாலும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து முடிவு எடுக்கிறேன். அவையின் மரபுகள் என்ன, சட்டங்கள் என்ன என்பது பற்றியெல்லாம் ஆராய்ந்து அவையின் முன் கொண்டு வந்து முடிவு எடுக்கிறேன். அதைப் பற்றி பெரிதாக இப்போது விவாதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அவை முடியப் போகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி நோட்டீஸ் வரும்போது எந்த முறையில் அவைக்குத் தெரியப்படுத்த வேண்டுமோ அந்த முறையில் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில் சொன்னதற்காக நன்றி. இதிலே தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க முடியாது. அவை உறுப்பினர்கள் எல்லோரையும் கலந்துதான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே, உங்கள் எல்லோரையும் கலந்துதான் முடிவைத் தெரிவிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் ஒன்றுமே இல்லை. ஆனால் அது எந்த காண்டெக்ஸ்டில் சொல்லப்படுகிறது என்பதைப் பொறுத்தே இருக்கிறது.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலையில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில்....

(திரு. அம்பிகாபதி மற்றும் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

திரு. மு. அம்பிகாபதி: நான் முதலிலேயே ஒழுங்குப் பிரச்னை எழுப்பினேன். எனக்கு முதலிலே அனுமதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை எழுப்ப அனுமதி வேண்டுமென்று நான்கு பேர் எழுந்து நின்றனர். முதலில் முன்வரிசையிலிருந்த திரு. உமாநாத் அவர்களுக்கு அனுமதி கொடுத்தேன். அடுத்து இரண்டாவது வரிசையில் திரு. சித்தன் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். வரிசையாக ஒவ்வொருவருக்கும் அனுமதி கொடுக்கிறேன். அதற்குள் எதற்காக பதட்டப்பட வேண்டும்? நான் அனுமதி கொடுக்கவில்லை என்றால் கேட்கலாம். நான் கூப்பிடுகிறேன் என்று சொன்ன பிறகு இப்படி எழுந்து நின்று உடனே பேச வேண்டுமென்று கேட்பது எப்படி முறையாகும்?

[முற்பகல் 10.10]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலையிலே நடைபெற்ற சட்டமன்ற நடவடிக்கைகளிலிருந்து எங்களுடைய கட்சி ஒரு கட்டத்திலே வெளிநடப்பு செய்தது. அதைப் பற்றிய செய்திகள் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. ''தின மலர்', பத்திரிகையிலே அவையிலேயிருந்து வெளிநடப்பு செய்கிறபோது சாராயம் ஊழல் போன்ற சொற்களைப் பயன்படுத்தி இரு கட்சிகளும் எழுப்பிய கோஷங்கள் அவையையே குலுக்கியது என்றும் உயர எம்பி குதித்ததும், கைகால்களை வீசி மடக்கி உடலை வளைத்து நடனம் ஆடியதும், பாடிக்கொண்டே தாளம் போடுவதுமாக இருந்த அந்தக் கண்கொள்ளாக் காட்சி பத்திரிகையாளர்களையும் பார்வையாளர்களையும் புல்லரிக்கச் செய்துவிட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல; துரைமுருகன், ரகுமான்கான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே வருகிற செய்திகள் என்றால் உரிமைப் பிரச்சினை வேண்டுமானால் கொடுக்கலாம். உரிமைப் பிரச்சினை கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம். அதை பாயின்ட் ஆப் ஆர்டரிலே எடுத்துக் கொள்ள முடியாது. பத்திரிகையிலே வந்தது தப்பு என்றால் பத்திரிக்கை பேரிலே உரிமைப் பிரச்சினையைக் கொடுக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: நான் சொல்லி முடித்து விடுகிறேன், என்னைச் சொல்ல விடவில்லையே. நான் முழுமையாகச் சொல்லி முடித்த பிறகு நீங்கள் விரும்பினால் பூராவையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைப் பிரச்சினை கொண்டுவருவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. கொண்டு வரலாம். ஒவ்வொரு உறுப்பினரும் கருத்தைச் சொல்லிவிட்டு பின்னாலே தீர்ப்பு அளியுங்கள் என்று தீர்பபை என்னிடம் விட்டுவிடாதீர்கள். தினசரி ஒவ்வொரு செய்தியும் பத்திரிகையிலே வந்து கொண்டிருக்கிறது. வேண்டுமானால் உரிமைப்பிரச்சினை கொண்டுவாருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பெரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் அனுபவப்பட்ட உறுப்பினராவார்கள். வேண்டுமென்றே பத்திரிகைகளில் திரித்து வெளியிட்டிருப்பதாக அவர்கள் கருது வார்களேயானால் அதற்கென உரிமைப் பிரச்சினை கொண்டுவர சட்டசபை விதிகளிலே இடம் உண்டு. அதற்கு மாறாக வருகிற பத்திரிகையை எல்லாம் ஒவ்வொருவரும் இங்கே எடுத்துப் படிக்க ஆரம்பிப்போமானால் அது சரியாக இருக்காது. அவர்கள் குறிப்பிட்டார்கள், முழுவதையும் கேட்ட பின்னால் பேரவைத் தலைவராகிய தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று. குறிப்புகளை நீக்கிவிடலாம், ஆனால் இழந்த நேரத்தை மீண்டும் பெறமுடியாது.

(ஆ) இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து. ஒரு நாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வகட்சி கூட்டம் கூட்டுவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகர்களுக்கு இலங்கையிலிருக்கின்ற தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு பதட்டமான நிலையைப்பற்றி இந்த அவையிலே விவாதித்தோம். சர்வக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அர்த்தால் நடத்தவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சகல கட்சிகளும் அதை வரவேற்றன. தமிழ் மக்களுடைய உணர்வுகளை மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் எடுத்துக் காட்டுகிற முறையில் இங்கே எல்லோரும் அர்த்தால் நடத்த வேண்டுமென்று அறிவித்தார்கள். அதை தொடர்ந்து அதற்குப் பிறகு தனபதி கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த நிலை



யிலே சர்வகட்சி அர்த்தாலை நடத்த தமிழ் மக்கள் உணர்வை பிரதிபலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்க ஆரம்பித்தால் என்ன செய்ய முடியும்?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த அவையிலே அப்படி புரப்போஸல் வைத்ததும் எல்லாக் கட்சிகளும் தேதி குறிப்பதற்கு அழைப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். எங்கள் தலைவர் என்னிடம் சொல்லிவிட்டுப் போனார், அப்படி அழைத்தால் அந்தத் தேதிக்கு ஒத்துழையுங்கள் என்று சொல்லிப் போனார். ஆனால் அழைக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் எந்தக் கட்சியும் அதற்குப் பதில் சொல்லவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது சி. பி. ஐ. பார்டியிலே நாங்கள் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் தயார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதைப்பற்றித்தான் கேட்கிறார்கள். நாங்கள் தயார் என்று சி. பி. ஐ. சொல்கிறார்கள், நாங்களும் சொல்கிறோம் தயார் என்று.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நண்பர் அம்பிகாபதி அவர்களும், நண்பர் உமாநாத் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களையொட்டி, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் அரசு நிகழ்ச்சி ஒன்றிலே தெரிவித்துள்ள கருத்தினையொட்டி நானும் ஒன்றிரண்டு விவரங்களை இந்த அவையின் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் கடிதம் வரவே இல்லை என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இந்தச் செய்தியைச் சொன்ன பிறகு எனக்குக் கடிதம் வந்திருக்கிறதா என்று வீட்டிலேயெல்லாம் தேடிப்பார்த்தேன். இரண்டு, மூன்று நாட்களாக நானும் துணைத் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் இந்த அவையிலே தான் இருக்கிறோம்; ஒவ்வொரு நாளும் இந்த அவையிலே இருக்கிறோம். அல்லது எதிர்க்கட்சித் தலைவர் அறையிலே இருக்கிறோம். அவையிலே அவை முன்னவரோடு பேசிக் கொண்டிருக்கிறோம்; முதல்வரவர்களும் இங்கே இருக்கிறார்கள். எப்பொழுது தேதி வைத்துக் கொள்வது, சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது என்பது பற்றி எங்களிடத்திலே எதுவும் கலந்தாலோசிக்கவில்லை. ஆனால், இன்று தேடிப்பார்த்தபிறகு எனக்கு வீட்டிலே ஒரு கடிதம் கிடைத்தது. ஒரு அதிகாரியால் எழுதப்பட்டிருக்கின்ற கடிதம் அது. திரு. கிருபாகரன் என்ற அதிகாரியால் எழுதப்பட்டுள்ள கடிதம்.

அதில், ''அன்பார்ந்த திரு. கருணாநிதி'' — அவ்வளவுதான். இதை ஆங்கிலத்தில் எழுதினால் ''டியர் கருணாநிதி'' என்று எழுதுவதுபோல் அதையே தமிழ்ப்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஒன்றும் எனக்குக் குறைவாகத் தெரியவில்லை. அந்தக் கடிதத்தில்:

''அன்பார்ந்த கருணாநிதி, இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கும், அநீதிக்கும் கண்டனம் தெரிவிக்கும்வகையில் பொது ஹர்த்தால் ஒன்று மாநில அளவில் நடத்துவது என்று சட்டமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது. அவ்வகையில் அந்தப் பொது ஹர்த்தாலை என்றைக்கு நடத்துவது என்று முடிவு செய்வதற்காக சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நாளை பிற்பகல் 26-8-81-ல் வைத்துக் கொள்ளலாமா என்பது பற்றிய தங்களது கருத்தை முதலமைச்சர் அறிய விரும்புகிறார். தங்களது கருத்தைத் தெரிவிக்குமாறு அன்போடு வேண்டுகிறேன். உண்மையுள்ள கிருபாகரன்'' என்று இருக்கிறது.

''வைத்துக் கொள்ளலாமா'' என்ற கருத்தைத் தெரிந்து கொள்ள, அதாவது சர்வகட்சிக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்று என்னுடைய கருத்தை மட்டும் தெரிந்து கொண்டால் பிறகு சங்கரய்யாவின் கருத்தை, பிறகு ஹாஜா செரீப்பின் கருத்தை, மற்றுமுள்ள கட்சித் தலைவர்களுடைய கருத்தை ஒவ்வொருவராகச் சொல்லி, அவரவர்களும் ஒரு தேதியைச் சொன்னால், நிச்சயமாக அந்தக் கூட்டத்தைக் கூட்ட இயலாது.

''பிசினஸ் அட்வைசரி கமிட்டி''யிலேகூட இரண்டு நாட்களுக்கு முன்பு எல்லாத் தலைவர்களும் வந்த நேரத்தில் அங்கே பேசியிருக்கலாம், எப்பொழுது கூடிப் பேசுவது என்று. ஆகவே, அர்த்தாலை திராவிட முன்னேற்றக் கழகமோ மற்ற எந்தக் கட்சிகளோ நிராகரிக்கவில்லை ; எல்லோரும் ஒத்துழைப்புதான் கூறியிருக்கிறோம். இன்றைக்கும் அந்த ஒத்துழைப்பைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அர்த்தால் என்று முதலமைச்சர் அறிவித்த பிறகுகூட பல்வேறு ஆர்ப்பாட்டங்களைத் தமிழகத்திலே உள்ள மாணவர்கள், தொழிலாளர்கள், வேறு பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களையும், கண்டனக் கூட்டங்களையும் நடத்தியிருக்கிறார்கள்.

அதைப்போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஒரு மறியலை — அடையாள மறியலை — ஒரு நாள் அடையாள மறியலை நடத்துவதற்காக அனுமதி கேட்டது; அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையே காலையிலிருந்து நூற்றுக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், தொண்டர்கள் சென்னை மாநகரத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



இதெல்லாம் இங்குள்ள தமிழர் ஒன்றாய் இருக்கின்றோம் இந்தப் பிரச்னையிலே என்பதற்கு அடையாளமாகாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இதேபோன்ற கடிதம் எனக்கும் வந்தது. நான் மறுநாளே முதலமைச்சருடைய பிரைவேட் செக்ரட்டரி மிஸ்டர் பரமசிவத்தினிடத்திலே அந்தக் கூட்டத்தை நீங்கள் எப்பொழுது வைத்திருக்கிறீர்கள் என்ற தகவலைக் கொடுங்கள் என்று கேட்டேன். அவர் அதைப்பற்றி முடிவு செய்ததற்குப் பிறகு சொல்கிறேன் என்று சொன்னார். ஆகவே, அதுதான் அதன் நிலை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 26 ஆம் தேதியன்று பிற்பகலிலே இந்தக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டு, அரசு தரப்பினிடமிருந்து வந்த கடிதத்தை 26 ஆம் தேதியன்று காலை நான் சட்டசபைக்கு வந்த பின்னால் 11 மணிவாக்கில் என்னுடைய இல்லத்திலே கொடுத்திருக்கிறார்கள். நான் அன்று மாலை வீட்டுக்குப் போன பின்னால்தான் அந்தக் கடிதத்தைப் பார்த்தேன். அதற்குப் பின்னால் இப்படியொரு கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருக்கிறதா என்று நம்முடைய முதலமைச்சருடைய அலுவலகத்திலே கேட்டபொழுது, அவர்கள் இன்னும் ஏற்பாடாகவில்லை என்று தெரிவித்தார்கள், அந்தக் கடிதத் த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்புவதிலே ஏற்பட்ட தாமதத்தின் விளைவாகத்தான் யாருமே அரசாங்கத்திற்கு உரிய நேரத்திலே பதில் கொடுக்க முடியவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : சார், ஒவ்வொரு தலைவரிடமும், எப்பொழுது வைத்துக்கொள்ளலாம், எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம், எந்த நேரத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று கேட்பதற்குப் பதிலாக, ஒரு தேதி, ஒரு நேரம், ஒரு இடத்தைக் குறிப்பிட்டு எழுதினால் அந்தந்தத் தேதியிலே ஒத்துக்கொண்டு போகிறோம்; அதிலே எந்தவிதமான வேற்றுமையும் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் தமிழர்கள் படுகின்ற அவதி குறித்து எந்த நடவடிக்கையானாலும் அதில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட வேண்டும் என்கின்ற உணர்வினை இப்பொழுதும் அனைத்துக் கட்சியினரும் தெரிவித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வரவர்கள், இந்தப் பிரச்னையை அன்று எடுத்துப் பேசியபொழுது சட்டமன்றம் மட்டும் தீர்மானம் கொண்டு வந்து அதை ஒருமனதாக எடுத்துப் பேசுவதைவிட மக்களும் நம்மோடு இருக்கிறார்கள் என்கின்ற உணர்வினை நிரூபிக்கின்ற வகையில் ஒரு நாள் கதவடைப்பு செய்யலாம் என்கின்ற கருத்தினை எடுத்து வைத்தார்கள்.

அது சம்பந்தமாக அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் கலந்து பேசி அந்த நாளை நிர்ணயிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தை இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்துக் காட்டினார்கள். அந்தக் கடிதம் அரசினுடைய பொதுத் துறையிலேயிருந்து அவர்களுக்குப் போயிருக்கிறது. அதற்கு மாறாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கையெழுத்திட்டுகூட, அதாவது டி. ஓ. லெட்டர் என்று சொல்வார்கள், அந்த அடிப்படையிலே கடிதம் எழுதியிருந்தால் நன்றாக இருக்கும் என்கின்ற உணர்வினை அவர்கள் இங்கே பேசிய பொழுது என்னாலே உணர முடிகிறது. பேசுகிற அவர்கள் முதல்வராக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், பொதுத் துறையிலே ஃபைலிலே வந்து, அதை ஏற்றுக்கொண்டு முடிவெடுக்கின்ற பொழுது, அந்தக் கடிதத்தை நகல்களாக்கி அதிலே பொதுத் துறையைச் சேர்ந்த செயலாளர்கள் கையெழுத்திடுவது வழக்கம். அந்த வகையிலேதான் அது வந்திருக்கிறதே தவிர வேறல்ல. அதை அவர்கள் ஓரளவுக்குக் கண்ணியக் குறைவாகக் கருதுவார்களேயானால் அதற்காக நான் உண்மையிலேயே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தக் கடிதத்திலே, அவர்களே சொன்னதைப் போல, ஆங்கில நகலைத் தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார்கள். அதிலே டியர் என்று வரும் அதனாலே அன்பார்ந்த என்று போடப்பட்டுள்ளது. டியருக்குப் பிறகு ஹானரபில் என்றோ மிஸ்டர் என்றோ போடுவது ஆங்கில இலக்கணத்திற்கு ஏற்றதல்ல. அந்த வகையிலே நேர்ந்து விட்ட பிழையை தவிர வேறல்ல என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10.20]

அவர்கள், மற்ற கட்சி உறுப்பினர்கள் சொல்கிறபொழுது, குறிப்பாக, இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்கிறபொழுது, நீங்கள் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அழைப்பது தானே என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தேதி வசதியில்லையென்று வந்து விடுமேயானால் என்ன நிலை ஏற்படும் என்று சிந்திக்கவேண்டிய கட்டாயத்திலே இருக்கிற காரணத்தினாலே, எல்லோருடைய சம்மதத்தையும் உத்தேசித்து கூட்டினால்தான் சரி என்கின்ற முறையிலே தான் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறொரு பிரச்னையை எடுத்து வைத்தார்கள். இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் என்பது இதுதானா? எங்களுடைய அடையாள மறியலுக்கும் ஊர்வலத்திற்கும் தடைவிதிப்பது முறைதானா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்னையில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இங்கே பேசுகின்ற வாய்ப்பிருக்கிறபொழுது இங்குள்ள தமிழர்களாகிய நாம் எல்லோரும் ஒன்றாக இருக்கிறபொழுது நீங்கள் மட்டும் தனியே



ஊர்வலம் போடுவது முறைதானா? அடையாள மறியல் நடத்துவது சரிதானா? நாம் ஒன்றாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறபொழுது, நீங்கள் ஏன் உங்களைத் தனியாகப் பிரித்துக்கொள்கிறீர்கள் என்கின்ற கேள்விகளை எங்களாலே கேட்காமல் இருக்க முடியாது. ஊர்வலம், அடையாள மறியல் என்கின்ற செய்தி ஓரிரு தினங்களுக்கு முன்னாலேதான் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆகையினாலே சட்டசபை நடக்கிறபொழுது பிரதான எதிர்க்கட்சி என்கின்ற வகையில் பிரச்னைகளை எழுப்புகின்ற முழு உரிமையை அவர்கள் பெற்றிருக்கிறபொழுது வெளியிலே ஒரு ஊர்வலம் தேவைதானா? அதுவும் இந்த நேரத்தில் தேவைதானா? மற்றவர்கள் ஊர்வலம் நடத்துவது என்பது வேறு. ஏனென்றால், அவர்கள் சட்டமன்றத்திற்குள்ளே வர முடியாது. ஆனால் ஒரு பிரதான எதிர்க்கட்சி இந்தப் பிரச்னையைக் கட்சிப் பிரச்னையாக வெளியிலே நடத்துவது சரிதானா என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

கைதுபற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த ஊர்வலத்திலும், அதிலும் குறிப்பாக மறியல் என்று சொல்கிறபொழுது, அரசாங்கத்திற்கு அந்த மறியல் தொடர்ந்து நடக்கப்போவதாகத் தகவல் கிடைத்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடையாள மறியல் என்றுதான் சொன்னார்கள். ஆகவே, அடையாள மறியல், ஊர்வலம் என்று அவர்கள் மட்டும் தனித்து நின்று பிரச்னைகளைக் கிளப்புகிறபொழுது அதில் சமூக விரோத சக்திகள் உள்ளே சென்று எந்த அசம்பாவிதத்தையும் வளர்த்து விடக்கூடாது என்கின்ற அடிப்படையிலேதான் தடை உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதே தவிர வேறல்ல. இன்னும் உண்மையைச் சொல்லப்போனால், இலங்கைக்குச் சென்று இறந்து விட்ட தனபதி. * * *

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்ததற்குப் பிறகு, நானும் என்னுடைய பதிலை அளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். சட்டமன்றம் கூடுவதற்கு முன்பாகவே நம்முடைய அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் என்னைச் சந்தித்து தான் ஒரு தனி நபர் தீர்மானம் இலங்கையைப் பற்றி தரப் போவதாகவும், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய ஆதரவைத் தரவேண்டும் என்றும் என்ற நல்லெண்ணத்தோடு அணுகி கேட்டார். அப்போதே நான் அவரிடத்திலே சொன்னேன், இப்படி ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக தீர்மானங்கள் தருவதைவிட அரசாங்கத்தின் சார்பிலேயே ஒரு தீர்மானம் வந்தால் அது மெத்தவும் பயனுள்ளதாக இருக்கும். அனைவரும் வரவேற்றுப் பேசலாம், அதற்கு ஆவன செய்வோம் என்று அவரிடத்திலே சொன்னேன். ஆகவே இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம் இது தனித்தனிக் கட்சிகள்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கட்சி லாபத்தோடு கட்சி நோக்கத்தோடு நடத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு இதை நாங்கள் அணுகவில்லை என்பதை அவரும் அதற்கு ஒத்துக் கொண்டார், பிறகு அரசின் சார்பிலே அதை ஒத்துக் கொண்டு, அரசின் சார்பிலே தீர்மானம் வந்தது. அனைவரும் வரவேற்றுப் பேசினோம்.

அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே இருக்கிற ஒவ்வொரு கட்சியிலும் ஈடுபட்டுள்ள தமிழர்கள் தக்களுடைய உணர்வைக் காட்டுவது அரசு எடுத்துள்ள முடிவுக்கு மேலும் வலிவைத் தருமேயல்லாமல், வலிவைக் குறைக்க நிச்சயமாக அவைகள் பயன்படமாட்டா என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன் கட்சி கூட ஹை கமிஷன் முன்னால் ஒரு நாள் ஆர்ப்பாட்டம் செய்து, அவைகள் எல்லாம் பத்திரிகைகளில் புகைப்படங்களாக வெளி வந்திருக்கின்றன. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட பிறகு கூட, எனக்கு நினைவு-திராவிட முன்னேற்றக்கழகம் அல்லாத வேறு பல கட்சிகளும் சேர்ந்து இலங்கைத் தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுவதைப் பற்றி ஒரு கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.

ஆகவே அவரவர்களுடைய கட்சி சார்பிலே அவர்களுடைய கண்டனத்தைத் தெரிவித்தும், அரசின் சார்பிலே ஒட்டுமொத்த மாக ஒரு நாள் அர்த்தால் கடைபிடிப்பதும் இலங்கைத் தமிழருக்கு சாதகமான விவகாரமே தவிர, பாதகமான விவ காரம் அல்ல.

இப்போது சமூக விரோதிகள் கைது செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழக வட்டக்கழகச் செயலாளர்களும், பகுதிக் கழகச் செயலாளர்களும்-அவர்கள்தான், இன்றைக்கு காலையிலே இருந்து எனக்கு வந்துள்ள தகவலின் படி, இரவு 1.00 மணியில் இருந்தே கைது செய்யப்பட்டுருக்கிறார்கள். நான் கூட அறிக் கையிலே திட்டவட்டமாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். மறியல் செய்கின்ற இடமதில் போலீசார் சட்டம் ஒழுங்கு இவைகளைக் காப்பாற்றி, ஹை கமிஷன் அலுவலகத்திலே நுழைந்து விடா மல் பாதுகாக்கவேண்டும். மறியல் செய்யப்போகின்றவர்களைத் தடுத்து நிறுத்தி கைது செய்வது என்பது எப்போதும் நாங்கள் ஏற்றுக்கொள்கிற முறைதான். அதை நாங்கள் தவறு என்று கூறவில்லை. ஆனால் ஊர்வலம் புறப்படுகிற இடத்திலேயே தடை செய்வதும், இரவு 1.00 மணிக்கே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கைது செய்யப்படுவதும் முறைதானா என்று தான் கேட்கிறேனே தவிர வேறு அல்ல. இதற்கும் அர்த்தா லுக்கும் எந்தவிதமான வேற்றுமையும் கிடையாது. அர்த்தால் நடைபெறுகிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஒத்துழைப்பைத் தரும். ஆனால் நண்பர்கள் எல்லாம், எல்லாக் கட்சித் தலைவர்களும் எடுத்துக் காட்டியதை போல. 25 ஆம் தேதி கடிதம் எழுதி 26 ஆம் தேதி எங்களுக்த



அனுப்பப்பட்டு. 26 ஆம் தேதி சர்வகட்சிக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்று கேள்வி கேட்பது, இதிலே ஏதோ அர்த்தால் நடத்துவதிலே இந்த அரசுக்கு-எடுத்த எடுப் பிலே சொல்லாவிட்டாலும் கூட ஒரு மன நிறைவான கருத்து இல்லையோ என்கிற சந்தேகத்தைதான் எனக்குத் தோற்று விக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்:** தலைவர் அவர்களே, 25ஆம் தேதி கடிதம் எழுதி, 26-ந் வரவேண்டும் என்று அழைக்கப்பட்டது எப்படி நடத்துவதிலே அக்கறை இல்லை என்பதைக் காட்டுகிற என்பது எனக்குத் தெரியவில்லை.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சர்வகட்சிக் கூட்டத்திற்கு 26 ஆம் தேதி வரவேண்டும் என்று கடிதத்திலே குறிப்பிடவில்லை. 26 ஆம் தேதி கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா? இப்படி எனக்கு எழுதி, திரு ஹாஜாசெரிப்புக்கு எழுதி, சங்கரய்யாவுக்கு எழுதி, குமரி அனந்தனுக்கு எழுதி, நெடுமாறனுக்கு எழுதி, முஸ்லீம்லீக் தலைவருக்கு ஜனதா கட்சித் தலைவருக்கு எழுதி, இப்படி ஒவ்வொருவருக்கும் எழுதி அவர்கள் இந்தத் தேதி சௌகரியப்படாது நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று எழுதி விட்டால் இது தள்ளப்பட்டுக் கொண்டே போய்விடாதா? ஒரு நாளைக் குறிப்பிட்டுவிட்டால் நான் வருகிறேன், இல்லை என்றால் துணைத் தலைவர் வரு கிறார், அல்லது எங்கள் கட்சியிலே இருக்கிற பிரதிநிதியை அனுப்புகிறோம். அங்கே எடுக்கப்படுகிற முடிவுக்கு நாங்கள் கட்டுப் படுகிறோம். அப்படி செய்திருக்க வேண்டுமேயல்ல மல் 26 ஆம் தேதி கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமா என்பதற்கு ஒரு ஆலோசனையா? இது சிலை வைப்பதற்கு பீடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டலாமா என்பதைப்போல அல்லவா இருக்கிறது,

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்;** தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் எங்களுக்கு சௌகரியம் இல்லை என்று நீங்கள் சொல்லி விட்டால் என்ன செய்வது என்பதற்காகத்தான் உங்களுடைய சௌகரியத்தைக் கேட்கிறோம். 25 ஆம் தேதி கடிதம் எழுதி 26 ஆம் தேதி வைத்துக் கொள்ளலாமா என்று எழுதப்பட்டதே தவிர வேறல்ல. 26 ஆம் தேதி வைத்துக் கொள்ளலாம் அல்லது 26 ஆம் தேதிக்கு மேல் ஆகிவிட்டது இனி மேல் வைத்துக் கொள்ளலாம் என்று தங்கள் பதில் அனுப்பி னீர்களா?

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடித விவகாரம் வேறு. ஆனால் இந்த விவாதம் நடைபெறுகிற அதே நேரத்தில் ஆளும் கட்சி ஒரு நாளைச் சொன்னால் தமிழ் நாடு முழுவதும் நடைபெறும் அந்த அர்த்தாலுக்கு மறுப்பே இருக்காது. 31-ந்தேதி இந்த அர்த்தாலை நடத்தலாம் என்று சட்டமன்றத்திலே சொல்லிவிடுங்கள். அதிலே ஒன்றும் பெரிய

(திரு. க. அன்பழகன்) (1981 ஆகஸ்ட் 29

பிரச்சினை கிடையாது. இதற்கு கூட்டமே தேவையில்லை 31-ந் தேதி திங்கட் கிழமை நடத்தலாம் என்ற ஆலோசனையை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 31-ந்தேதி சட்டமன்றம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தத் தேதியை சட்டமன்றத்திலேயே அறிவிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

[முற்பகல் 10.30]

திரு. என். சங்கரய்யா: பேரவை தலைவர் அவர்களே, 31-ம் தேதி இந்த கூட்டத்தைக் கூட்டினால் அதற்கு நாங்கள் வருகிறோம். அதிலே வைத்து பேசி முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சொல்கிற போது எதிர் கட்சித்தலைவர் அவர்களுக்கு ஆங்கிலத்தில் இருப்பதை தமிழாக்கம் செய்கிறபோது அன்பார்ந்த கருணாநிதி என்று தான் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே எதிர் கட்சித் தலைவர் என்று கூட எழுதவில்லை—மேலும் முன்னவர் அவர்கள் சொல்கிறார், அது தவறு என்று கருதுவார்களானால் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொல்கிறார். தவறு என்பதை ஒத்துக் கொண்டாரா?. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் விவாதம் முடிந்துவிட்டது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, எதிர்கட்சி தலைவர் அவர்கள் தனக்காக கேட்க கூச்சப்படலாம், அல்லது வேண்டாம் என்று விட்டிருக்கலாம். இந்த அவையினுடைய கவுரவத்தையும், மரியாதையையும் பொறுத்த விஷயம் இது. எழுதிய அதிகாரிகள் செய்தது சரியல்ல என்பது—மேலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எப்படி தனக்காக வாதிட முடியும். ஒரு அரசாங்க அதிகாரி எழுதுகிறார், எதிர்கட்சித் தலைவர் என்று கூட எழுதவில்லை. . . .

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில இலக்கணத்திலே வருகிற மிஸ்டேக் இது. அட்ரசிலே டாக்டர் கலைஞர் என்று போட்டு, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் என்று போட்டிருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தமிழர்களுக்காக கவலைப்படுகிற பிரச்சினை, மரியாதைக்காக கவலைப்படுகிற பிரச்சினையாக மாறிவிடக் கூடாது என்பதில் நான் அக்கறை கொண்டவன். ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு



1981 ஆகஸ்ட் 29] [டாக்டர். மு. கருணாநிதி]

கூறிக்கொள்கிறேன், முதலமைச்சர் அவர்கள் எனக்கு கடிதம் எழுதினாலும் அப்படி எழுத மாட்டார்கள். அந்த அதிகாரி அப்படி தான் எழுதியிருக்கிறார். அப்படித்தான் எழுதுவார். ஆங்கில மொழிப் பெயர்ப்பை தமிழுக்கு கொண்டு வரக்கூடாது. எனக்கு மட்டுமல்ல, எந்தத் தலைவர்களுக்கு எழுதினாலும் சரி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுதினாலும் சரி, பண்போடு எழுதவேண்டும். அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட குறிப்புகளை அரசு தரப்பிலே தரவேண்டும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் அனைத்து கட்சிகளும் ஒன்றாகத்தான் இருக்கிறோம். அர்த்தால் என்றைக்கு நடத்துவது, என்றைக்கு தலைவர்களை அழைத்து பேசுவது என்று ஒரு சிறு பிரச்சினைக்காக, அந்த முக்கியமான பிரச்சினையை மறந்து விடக் கூடாது. மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் அமைச்சர் பன்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும் கேட்டுக் கொண்ட படி 31-ம் தேதியே அர்த்தால் நடத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் கூடி பேசுங்கள். அன்றைக்கு சட்டமன்றம் இருக்கிறது. அதற்கு ஒரு குழுவை நியமித்து அர்த்தாலைப் பற்றி அதிலே முடிவு செய்யுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபை நடக்க வேண்டுமென்றால் செகரட்டரியேட் நடக்க வேண்டும். அர்த்தால் என்று சொல்லி விட்டு சட்டசபை நடத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 31-ம் தேதி கூடி பேசி முடிவு செய்யுங்கள்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, சட்டசபையை ஒத்தி வைத்த பின்னால் அர்த்தால் நடத்தினால் சட்டசபை உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள். தயவு செய்து முடிந்தால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தந்த ஊரிலேயே இருந்தால்தான் நல்லது.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் 1-ஆம் தேதி முடிவடைகிறது. ஆகவே அதற்குள்ளே ஒரு நாள் சட்டமன்றத்தை ஒத்தி வைத்து உறுப்பினர்கள் அனைவரும் ஊர்வலமாக சென்று நம்முடைய எதிர்ப்புக் குரலை தெரிவிக்க முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 234 உறுப்பினர்களும் ஆளுக்கு ஒரு அபிப்பிராயத்தை சொல்வார்கள். இதை கூட்டத்திலேயே முடிவு செய்வதுதான் நல்லதாக இருக்கும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வடாற்காடு மாவட்டம் நாங்குநேரி கிராமத்தில் நக்ஸலைட்டுகள் மீது துப்பாக்கிச் சூடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், மு அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், மு. அம்பிகாபதி, கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். செல்லமுத்து, டி. மணி, அ. ரகுமான்கான், செ. சிவசாமி, பாபு ஜனார்த்தனம், பெ. சு. திருவேங்கடம், இல. பலராமன், பி. சுந்தரம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ''24. 8. 1981 அன்று வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் அருகே உள்ள நாங்குநேரி கிராமத்தில் நக்சலைட் என்று கூறி மூன்று இளைஞர்களைச் சுட்டுக்கொன்றுள்ளதால், அப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதிக் கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 23-ந் தேதி இரவு, 24-ந் தேதி அதிகாலை 3 மணி அளவில் வடாற்காடு மாவட்டம் ஆம்பூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நாங்குனேரி என்ற கிராமத்தில் 3 இளைஞர்களை நக்சலைட் என்று சொல்லி அவர்களைப் போலீசார் பிடிக்கச் சென்றதாகவும், அவர்கள் எதிர்த்து தாக்கியதால் தற்காப்புக்காக போலீசார் சுட்டதாகவும் போலீசாருடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த செய்தி கிடைத்த அன்றே அந்தப் பகுதிக்கு சென்று, அந்தப் பகுதியிலுள்ள பல்வேறு மக்களைச் சந்தித்து உண்மை என்ன என்று விசாரித்தேன். பொதுவாக அங்குள்ள மக்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்; ஆழமான கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு மகஜர் தயாரித்து மாண்புமிகு முதலமைச்சருக்கு சபாநாயகர் மூலமாகக் கொடுக்க இங்கே கொண்டு வந்திருக்கிறேன்; அதையும் கொடுக்கிறேன். இப்போது அங்கே நடந்த நிகழ்ச்சிபற்றி சில கருத்துக்களை மட்டும் சொல்லுகிறேன்.

23-ந்தேதி இரவு, 24-ந்தேதி அதிகாலை அங்கே துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்னால் தொடர்ந்து ஒரு வாரமாக ஆம்பூரிலிருந்து ஆலங்காயம் செல்லும் நடைபாதையில் போலீஸ் ஜீப்புகள் போய் வந்து கொண்டிருந்தன. 22-ந்தேதியும், 23-ந் தேதியும் அதேமாதிரி போயிருக்கிறார்கள். 23-ந்தேதி மாலை 7 மணி அளவில் 4 ஜீப்புகளும், 2 வேன்களும்—போலீசாருடையவை – போயிருக்கின்றன. இரவில் போலீசார் நடமாட்டம் இருந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சி நடந்த இடத்தில் இரண்டு



விவசாயிகளுடைய குடிசைகள் இருக்கின்றன. அவர்கள் அந்தக் குடிசைகளிலே குடும்பத்தோடு வாழ்கிறார்கள். அன்றைக்கு சுமார் 2 மணி அளவில், ஏதோ தகராறு என்று கருதி ஒரு குடிசையைச் சேர்ந்த பெண்மணி வெளியே வந்து பார்த்திருக்கிறார். உடனே போலீசார் அந்த பெண்மணியைக் கூப்பிட்டு, உனக்கு இந்த நேரத்தில் இங்கே என்ன வேலை என்று திட்டி அனுப்பியிருக்கிறார்கள். நான் போய் விசாரித்ததில் இப்படி ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

ஆனால் மீண்டும் அதே வீட்டில் போலீசார் போய், உள்ளே இருந்த தாய்மாரைக் கூப்பிட்டு, வெளியே தகராறு நடக்கிறது, நீங்கள் எல்லாம் வரமாட்டீர்களா என்று கேட்டதாகவும் அதற்கு அந்த அம்மா நான் கர்ப்பமாக இருக்கிறேன், பிரசவ நிலையில் இருக்கிறேன், வெளியே வரமாட்டேன் என்று சொன்னதாகவும் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஆனால் போலீசார் விசாரித்த அதே பெண்மணி 24-ந்தேதி காலையில் ஒரு குழந்தையோடு நிற்பதாக படத்திலே போட்டிருக்கிறார்கள். இரவு 3 மணிக்கு பிரசவமாக இருக்கிறேன் என்று சொன்ன பெண்மணி காலை 7 மணிக்கு குழந்தையோடு வந்து நிற்கிறார். அப்படி படத்திலே வந்திருக்கிறது.

இரண்டாவதாக நக்சலைட் என்று சொல்லி, சுடப்பட்ட தனபால் என்ற இளைஞர் – அவர் யார், எந்த ஊர் என்று தெரியாது – படம் தினத்தந்தி, மாலை முரசு, தினமலர் ஆகிய 3 பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அந்த போட்டோவில் அவர் கையிலே ரிவால்வர் உடன் இருக்கும்போது சுடப்பட்டு உயிரிழந்திருப்பதாகத் தெரிகிறது.

[முற்பகல் 10.40]

இன்னொரு பத்திரிக்கையிலே வந்த இன்னொரு படத்திலே அவர் நீண்ட துப்பாக்கியை வைத்துக் கொண்டிருப்பதுபோன்று வந்திருக்கின்றது. ஒரே நபர் சுட்டு வீழ்த்தப்பட்டதற்குப் பிறகு ஒரு பத்திரிகையிலே வந்த படத்தில் ரிவால்வர் வைத்துக் கொண்டிருப்பது போலவும், இன்னொரு படத்திலே நீண்ட துப்பாக்கியினை வைத்துக் கொண்டிருப்பது போலவும் படங்கள் வந்திருக்கின்றன.

இதை விடப் பெரிய அதிசயம் ஒன்று இருக்கின்றது. பெரிய கல்லை ரோட்டின் குறுக்கே வைத்தார்கள் என்று போலீசாரின் செய்தியிலே வந்திருக்கின்றது அந்த ரோடு நீண்ட போக்குவரத்து உள்ள பெரிய பாதை அல்ல. அது சிறிய வழிதான். படத்திலே வந்திருக்கின்ற அந்தக்கல்லை 20 பேர் சேர்ந்தாலும் கூட அசைக்க முடியாது. பூமியிலே புதைந்திருக்கின்ற கல் அது. அந்தக் கல் ரோட்டின் மையத்திலே இருக்கின்றது. அதற்கு அந்தப்பக்கமும், இந்தப்பக்கமும் இடையிலே சின்ன கற்களை வைத்திருக்கிறார்கள். இதிலே இன்னொரு அதிசயம் இருக்கின்றது. மூன்று பிணங்கள் முக்கோண வடிவிலே ஒரே இடத்திலே

விழுந்து கிடக்கின்ற வகையிலே படம் வந்திருக்கின்றது. தொடர்ந்து தற்காப்புக்காகப் போராடக்கூடியவர்கள் எப்படி இந்தமாதிரி கீழே விழுந்திருப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொரு கொடுமை அதிலே நிகழ்ந்திருக்கின்றது. போலீஸ் அதிகாரி திரு. தேவாரம் அவர்கள் இந்த இடத்திற்கு வந்து ஒரு ஃபோட்டோவிற்கு போஸ் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும் என்பது எனக்குத் தெரியாது தெரிந்திருந்தால் அந்தப் பத்திரிகைகளை எல்லாம் நான் இங்கே கொண்டு வந்திருப்பேன். இப்போது கொண்டுவரவேண்டும் என்றாலும் கொண்டு வந்து காட்டத்தயார். சினிமாக் காட்சியிலே வில்லன் நிற்பதுபோன்று அந்தப் பிணங்களின் பக்கத்திலே திரு. தேவாரம் அவர்கள் நின்று கொண்டிருப்பது போல் படம் வந்திருக்கின்றது.

இதைவிட இன்னொரு பிரச்சினை சொல்லப் படுகின்றது. அவர்களை 3.15 மணிக்கு சுட்டதாகச் சொல்லப் படுகின்றது. ஆனால் சுமார் 12 அல்லது ஒரு மணிக்குத்தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. அப்படி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவருகின்றபோது துர்நாற்றம் அடித்த தாக அங்கே இருந்த பொதுமக்கள் சொல்கிறார்கள். அவ்வாறு துர்நாற்றம் அடிக்கின்ற நிலைமையிலே பிணங்களின் மீது சென்டைப் போட்டு நாற்றத்தை மறைத்திருக்கிறார்கள்.

ஆகவே எங்கோ, எப்படியோ, அடித்துக் கொன்றுவிட்டு அந்தப் பகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில் தமிழகத்தின் வேறு எந்தப் பகுதிகளிலும் இல்லாத வகையிலே இப்படி 20 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்டவர் களை யாரை வேண்டுமானாலும் சுட்டுக் கொல்லலாம் என்ற அளவுக்கு நிலைமைகள் போய்க்கொண்டிருக்கின்றன.

நம்முடைய அரசாங்கத்தை மிகப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், இங்கே நடப்பது முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் ஆட்சியா அல்லது போலீஸ் ஆட்சியா? அந்த அளவுக்கு எங்கள் மாவட்டத்திலே யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் அடித்துக் கொன்று போடுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன அப்படி, கொன்றதற்குப் பிறகு இறந்தவர்கள் இன்னின்ன வகையைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருந்தால் இதற்கு ஒரு முடிவே இல்லையா? ஆகவே பிணம் நாற்றம் அடித்தது, ஒரே இடத்திலே கும்பலாகப் போடப்பட்டது, ஒரு தாய் கர்ப்பமாக இருந்தது, குழந்தையோடு ஃபோட்டோ எடுத்தது, இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன.



அடுத்து ஜீப்பை அவர்கள் சுட்டதாகவும் ஒரு ஃபோட்டோ வந்திருக்கின்றது. ஜீப்பின் உள்ளே தேவாரம் அவர்கள் இருந்தார்களாம். ஆனால் சுடுகின்றபோது யாருக்கும் அடி படாமல் தப்பிவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்த இடத்தினை நேரிலே சென்று பார்த்தபோது கண்ணாடித் துண்டுகள் கும்பலாக ஒரு இடத்திலே போடப்பட்டிருக் கின்றது. இப்படி தொடர்ந்து அந்த இடத்திலே பல நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. அதிகார பூர்வமாகப் பார்த்தால் இதுவரை இப்படி 11 பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கொல்லப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் என்று பொது மக்கள் பேசுகிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினைக்கெல்லாம் தீர்வு காணுகிற முறையிலே ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களையும், அதிகாரிகளையும் கொண்ட குழுவை அமைத்து இதுபற்றி விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி இல்லை என்றால் இந்த நிலைமை தொடர்ந்துகொண்டிருக்கும். ஆகவே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு போலீஸ் அக்கிரமத்தைக் கண்டித்து தடுத்து நிறுத்து கின்ற வகையிலே இதுபற்றி விவாதிக்கவேண்டி இருப்பதால் இந்த அவையின் இன்றைய அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் அருகே நடைபெற்றிருக்கக்கூடிய இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக, அவர்கள் நக்ஸலைட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, அவர்களைப் பிடிக்கச் சென்ற இடத்திலே அந்தப் பகுதியிலே யாரும் இல்லாத நேரத்திலே, திரும்பிப் போகிற வழியிலே வாகனங்களைத் தடுக்கிற முறையிலே கற்களை அடுக்கிவைத்து போலீசார்கள் ஜீப்பை நிறுத்தி இறங்கியவுடனேயே சுடப்பட்டதாகவும், தற் காப்புக்காகவே, இவர்கள் திருப்பிச் சுட்டதாகவும் பத்திரிகை களிலே செய்திகள் வந்திருக்கின்றன.

அந்த நாளிதழ்களிலே பின்னாலேயிருந்து சுட்டார்கள் என்று விளக்க பத்தியிலே குறிப்பிடப்பெற்றிருக்கிறது. படத்தைப் பார்த்தால், ஜீப்பின் முன் பக்கத்திலே உள்ள கண்ணாடி உடைந் திருக்கிறது. இது எப்படி சரியாக இருக்க முடியும் என்பதை சற்று யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, இப்படி நக்ஸலைட்டுகள் என்று சொல்லி, திருப்பத்தூர், ஜோலாப்பூர் போன்ற பகுதிகளிலே கடந்த சில மாதங்களாகவே இம்மாதிரி தாக்குதல்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன. நக்ஸலைட்டுகள் இயக்கத்திற்கும், அவர்களுடைய கொள்கை களுக்கும், மார்க்சிஸ்ட்டான எங்களுக்கு உடன்பாடு இல்லை என்றாலும், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அந்தப்பகுதியிலே இருக்கும் உள்ளூர்க்காரர்கள் அங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கும் பலவிதமான அக்கிரமங்களைப்பற்றி, சுட்டுக்கொல்வது உள்பட பலவிதமாக கருத்துக்களைக்

கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பல விஷயங்களைச் சொல்கிறார்கள். போலீசார்களே இவைகளைச் செய்து விட்டு நக்ஸலைட்டுகள் மீது போடுவதாகக் கூட பேசப்படுகிறது. இவைகளை எல்லாம் பகிரங்க நீதி விசாரணை நடத்தி, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்தி நீதி வழங்கியிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் அங்கே பதட்ட நிலை நிலவியிருப்பதை தவிர்த்திருக்கமுடியும். மக்களுடைய பயத்தையும் போக்கியிருக்க முடியும். எனக்கு முன்னால் பேசிய பூங்காவனம் கூட சொன்னார்கள். போலீசாருடைய வன்முறை நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று. அந்தப்பகுதியிலே இருந்து எனக்கு கிடைத்த தகவல் என்னவென்றால், இந்தச் சம்பவங்கள் நடப்பதற்கு 2, 3 தினங்களுக்கு முன்னாலேயிருந்தே போலீசார் அங்கே அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தனர் என்பதுதான்.

உதாரணமாக, துப்பாக்கிச்சூடு நடைபெற்ற தினத்தன்று நள்ளிரவில் போலீசார் சென்று அங்கேயிருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டி, வெளியேயிருந்து உங்களுக்கு ஏதும் சத்தம் கேட்கவில்லையா? நீங்கள் ஏன் வந்து பார்க்கவில்லை என்று கேட்டிருக்கிறார் என்று பத்திரிகை செய்தி இருக்கிறது. அதற்கு முன்பாக துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டு, வெளியில் வந்து பார்த்தவர்களை, உங்களுக்கு என்ன வெளியில் வேலை? உள்ளே போய் இருங்கள் என்று விரட்டிவிட்டு, அதற்குப்பிறகு அவர்களே வந்து, நீங்கள் ஏன் சத்தம் கேட்டும் வெளியில் வந்து பார்க்கவில்லை என்று கேட்டால், அவர்கள் பொது மக்களை இந்த நிகழ்ச்சிக்கு சாட்சியாக வைத்துக் கொள்ள வேண்டியே அப்படிச் செய்தார்கள் என்பது புரியவில்லையா?

முதலில் துப்பாக்கிச் சூடு நடந்தவுடன் வெளியே வந்தவர்களை உள்ளே விரட்டி விலக்கிவிட்டு, அங்கேயிருக்கும் பிணங்களை எல்லாம் சரியாகப்போட்டு, துப்பாக்கிகளையும் அங்கேயே போட்டு, ஏதோ நக்ஸலைட்டுகளுக்கும், இவர்களுக்கும் போர் நடந்ததுபோலவும் அதில் இறந்துவிட்டது போலவும் ஜோடனை செய்துதான், பிறகு சாட்சிக்காக மறுபடியும், அந்த வீட்டவர்களை எழுப்பி நீங்கள் ஏன் சத்தம் கேட்டும் வெளியில் வந்து பார்க்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆஸ்பத்திரி பணியாளர்கள், அந்தப்பிணத்தை இரண்டு, மூன்று தினங்களுக்கு வைத்திருந்திருக்கலாம், அதன்மீது துர்வாடை வீசிற்று என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், இது திட்டமிட்ட சம்பவம் தான் என்பது நிருபனம் ஆகிறதல்லவா

இந்த சம்பவத்தின் விளைவாக போலீசார் குண்டடி பட்டார்கள், காயம் பட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆஸ்பத்திரியில் பார்த்தால் போலீசார் அப்படி யாரும் சிகிச்சையில் இல்லை. ஆகவே, நக்ஸலைட்டுகள் சதி என்ற பெயரால், இப்படி அராஜகம் செய்யும் வேலை தமிழகத்தில் நடந்துக்கொண்டிருக்கிறது. அதைத்தான் நாங்கள் எதிர்க்



கிறோம். உண்மையாகவே நக்ஸலைட்டுகள் தான் செய்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் தவறு செய்திருப்பார்களேயானால், அவர்களை பிடித்து வந்து குற்றங்களை நிருபித்து, கோர்ட் மூலம் அவர்களுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் வாங்கிக் கொடுங்கள், அதிலே எங்களுக்கு ஆட்சேபணையே இல்லை. ஆனால் அப்படி முறையான தண்டனை கொடுப்பதற்குப் பதிலாக, போலீசார்களே தங்கள் கையில் நீதி வழங்கும் வேலையை எடுத்துக் கொண்டு கொடுமைகள் செய்வதை பணியாகக் கொண்டால், இந்தப் பிரச்னைக்கு முடிவே இல்லாமல் தமிழகம் பூராவும் இது பரவும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அங்குள்ள பதட்ட நிலையை போக்கவும், எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும், அதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இந்த அவையில் அது பற்றி விரிவாக விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களால் ஒழுங்குப் பிரச்னை எழுப்பப்பட்டு பேசியபோது, நான் பேசிக் கொண்டே வருகையில், இலங்கை தனபதி அவர்களைக் குறிப்பிட்டு ** **

என்று குறிப்பிட்டேன். அந்த, உணர்வு, நாம் இலங்கை வாழ் அகதிகள் மேல் கொண்டிருக்கிற உணர்வுக்கு மாறான கருத்தை தெரிவிப்பதால், அந்த வாக்கியங்களை நீக்கிவிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய வாக்கியங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

[முற்பகல் 10.50]

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர் அருகே நக்ஸலைட்கள் மூன்று பேர்கள் சுடப்பட்டிருக்கிற காரணத்தால் இந்த அவையை ஒத்திவைத்து அதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று அங்கிருக்கிற இளைஞர்கள் நக்ஸலைட்ஸ் என்ற பெயரால் சுடப்பட்டு அந்தப் பகுதியில் ஒரு பதட்ட நிலை இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். சாலையோரத்தில் நிற்கிற வேலையற்றவர்கள் மனதில் விபரீத எண்ணங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்த வகையில் நக்ஸலைட்ஸ் என்ற இயக்கத்தைச் சார்ந்த இளைஞர்கள்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தவறான முறையில் பல காரியங்களை அந்தப் பகுதியில் நடத்தியிருக்கிறார்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்த திருப்பத்தூர் ஒன்றியச் செயலாளர் காக்கணம் பாளையம் கோவிந்தசாமி என்பவர் முப்பதுக்கு மேற்பட்ட இடங்களில் கத்தியால் குத்தப்பட்டு அவர் தப்பிப் பிழைத்தார். அதேபோல் ஆளும்கட்சி உறுப்பினராகிய திரு. தி. அன்பழகன் அவர்கள் நக்ஸலைட்களால் தாக்கப்பட்டு அவர்களும் தப்பித்தார்கள். நேற்றையதினம் பேசும்போது சொல்லப்பட்ட டி. எஸ். பி. சண்முகநாதன் அவர்களால்தான் அன்பழகன் அவர்களைத் தாக்கிய இரண்டு நக்ஸலைட்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு அவர்கள் இறந்தார்கள். இப்படி நிலைமை நீடித்துக் கொண்டே போகிறது. என்னைப்பொறுத்தவரையில் அப்படிப் பட்ட எண்ணங்கள் உடைய இளைஞர்களும் அதேபோல் இதற்காக நடவடிக்கை எடுத்த காவல் துறையைச் சார்ந்தவர்களும் இதில் இருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. ஆகவே இப்படி நிலைமை நீடித்துக்கொண்டே போவதை விட பொது மக்களையும் நக்ஸலைட்களையும் அழைத்து இது குறித்து ஒரு முடிவிற்குக் கொண்டுவர—எப்படி ஜயப்பிரகாஷ்நாராயண் அவர்கள் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரர்களை சரண் அடைய வைத்தார்களோ அதேபோல் நக்ஸலைட்ஸ் சரணாகதியடைகிற ஒரு நிலையை உருவாக்க அரசியல் கட்சித் தலைவர்களும் அரசாங்கமும் முயற்சி எடுத்து இப்படி சுடப்பட்டு சாகடிக்கப் படும் நிலையெல்லாம் போக்க முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் அந்த பகுதியில் நக்ஸலைட்ஸ் தொல்லைகள் இப்போது கிடையாது. எடுக்கபபட்டிருக்கிற நடவடிக்கைகள் காரணமாக இன்றையதினம் அமைதியான நிலைமை ஏற்பட் டிருக்கிறது. இந்த நிலைமையில் நக்ஸலைட்ஸ் என்று இளைஞர் களைச் சுடுவது, இளைஞர்களை சாகடிப்பது என்பது உண்மையில் வேதனை தரக்கூடிய ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு பூங்காவனம் குறிப்பிட்டதுபோல்' வீரபராக்கிரமச் செயலைச் செய்து விட்டதைப்போல் பத்திரிகைகளில் படங்களைப்போட்டு பயமுறுத்துவது என்பது அவ்வளவு சிறந்த காரியமாகத் தென் படவில்லை. புலியைச் சுட்டுவிட்டு அந்த வேட்டையாடிய வேட்டைக்காரர் அதன் அருகில் நின்றுகொண்டு எப்படி தமது வீரத்தைக் காட்டுவாரோ அதேபோல் டி. ஐ. ஜி. சுடப்பட்ட இளைஞர்களின் பிணங்களின் அருகில் நின்றுகொண்டு புலி மீது காலை வைத்து புலியைச் சுட்ட, வேட்டைக்காரர் நின்று கொண்டிருப்பதக் காட்டுவதுபோல் சுடப்பட்டவர்கள் நின்று நின்று கொண்டு இவர்கள் தன்னால் சுடப்பட்டவர்கள் அருகில் வீரப்பராக்கிரம படங்கள் பத்திரிகையில் போடப்பட்டிருக்கின்றன. அது சரியான முறை அல்ல. ஆகவே அந்த இளைஞர்களை நல் வழிப்படுத்த நல்ல அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு ஆலோசிக்க வேண்டுமெனக் கூறி இதுபற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழ்நாட்டில் நக்ஸலைட்டுகள் தொல்லைகள் குறைந்திருக்கின்றன என்று பொது மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த இந்த வேளையில் ஆம்பூரிலிருந்து கிடைத்திருக்கிற செய்திகள் நமக்கு கவலை அளிப்பதாக உள்ளன. அங்கே நக்ஸலைட்கள் மீது நடத்திய தாக்குதலில் மூன்று நக்ஸலைட்கள் மரணமடைந்தார்கள் என்றும் ஒன்பது காவல்துறையினர் படுகாய முற்று இருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறி கிறோம். பலாத்காரம் மூலமாக அமைதிக்கு குந்தகம் விளை விப்பவர்கள் மீதும் உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளை விப்பவர்கள் மீதும் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அது அரசின் பொறுப்பும் கடமையுமாகும். ஆனால் அதே நேரத்தில் அந்தப் பகுதியில் இருக்கிற பின்தங்கிய தாழ்த்தப் பட்ட மக்களை, நிரபராதிகளை இந்த நக்ஸலைட்களை அடக்கு கிறோம் என்ற பெயரால் அவர்களுக்கு தொல்லை கொடுப்பது என்பது நிச்சயமாக நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும். ஆகவே இதுபோன்ற பல்வேறு பிரச்னைகள் உள்ளடக்கியிருக்கிற காரணத்தால் இதுபற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சி சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி ஆம்பூருக்கு அருகேயுள்ள நாயக்கநேரி குன்றுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் நக்ஸலைட்டுகளின் தலைமறைவு நடமாட்டம் இருப்பதாகத் தகவல் கிடைக்கப் பெற்று, வேலூர் சரகக் காவல்துறைத் துணைத்தலைவர் தலைமையில் ஒரு காவற் படை 24-8-1981 அன்று அதிகாலை நேரத்தில் நக்ஸலைட்டு களைத் தேடி இரண்டு ஜீப் வண்டிகளில் சென்றனர். நாயக்க நேரி மலைப் பகுதிகளில் தேடியபோது நக்ஸலைட்டுகள் யாரும் தென்படவில்லை. தேடி முடித்தபிறகு போலீசார் திரும்பி வரும் போது, ஆம்பூரிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் ஓரிடத்தில் சாலையின் குறுக்கே தடைக்கற்கள் வைக்கப்பட்டதால் போலீஸ் ஜீப் வண்டிகள் நின்றன. அப்போது திடீரென நக்ஸலைட்டுகள் கும்பல் ஒன்று போலீசாரின் மீது துப்பாக்கியால் சுட்டது. போலீசாரும் தற்காப்புக்காகத் திருப்பிச் சுட்டனர். நக்ஸலைட்டுக் கும்பல் போலீசாரின் மீது நாட்டு வெடி குண்டு களையும் வீசியது. இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஒன்பது போலீசார் இதனால் காயமுற்றனர். தனபால், அன்பு, சரவணன் என்னும் அருணாசலம் ஆகிய மூன்று நக்ஸலைட்டுகள் இம்மோதலில் உயிரிழந்தனர். அவர்கள் வைத்திருந்த ஒரு வெளி நாட்டு கைத்துப்பாக்கி உட்பட ஐந்து துப்பாக்கிகளையும் நக்ஸலைட்டுகளின் ரகசியக் குறிப்பேடுகள் அடங்கிய ஒரு துணிப் பையையும் போலீசார் கைப்பற்றினர். காயமுற்ற போலீசாருக்கு ஆம்பூர் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுகுறித்து ஆம்பூர் தாலுகா காவல் நிலையக் குற்ற எண் 181/81-ல் இ. பி. கோ. குற்றப் பிரிவுகள் 147, 148, 307, 427

மற்றும் இந்திய ஆயுதங்கள் சட்டத்தின் 25 (1) (எ) பிரிவின்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

கண்ணாமணி என்னும் நக்ஸலைட்டுகள் தலைவர் இறந்ததற்குப் பிறகு தளபால், தருமபுரி, வடஆற்காடு மாவட்டங்களில் தீவிரவாதிகளின் மிக முக்கியத் தலைவராக இருந்து வந்தார். வட மாநிலங்களில் உள்ள தீவிரவாதிகளுடன் இவருக்குத் தொடர்பு இருந்து வந்தது. இவர், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் 1979-ல் நடைபெற்ற கொள்ளை வழக்கில் தேடப்பட்டு வந்த குற்றவாளியாவார். அன்பு வட ஆற்காடு மாவட்டம் பொன்னேரியில் 1980-ல் நடந்த கொலை வழக்கிலும், சதிரப்பட்டியில் 1980-ல் நடந்த மற்றொரு கொலை வழக்கிலும் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஆவார். சரவணன், வட ஆற்காடு மாவட்டம் மடவாளத்தில் 1980-ல் ஜவுளிக்கடை ஒன்றில் நடந்த கொள்ளையோடு கூடிய கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளரால் காவலர் நிலையாணை எண் 145-ன் படி விரிவான விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது இவ்விசாரணை அறிக்கை கிடைத்த பிறகு இச்சம்பவம் குறித்து முழு விபரமும் தெரியவரும். ஆகவே, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : போலீஸ் விசாரணையைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவந்து, இது சம்பந்தமாக நீதி விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

### 4. கவன ஈர்ப்புகள்.

#### (அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் விவசாயிகளை வெளியேற்றுதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கே. உச்சி, என். சங்கரய்யா, ஏ.டி. கருப்பையா, எம். ஆறுமுகம், ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், என். பழனிவேல், எம். செல்லமுத்து, டி. மணி, கே. கல்லன், மு. அரங்கநாதன், இரா. தாமரைக்கனி





என். எஸ். வி. சித்தன், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு செய்திஅறநிலைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''நீலகிரிமாவட்டம் கூடலூர் வட்டத்தில் நிலங்களிலிருந்துவிவசாயிகளை வெளியேற்றுவதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறுத்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவில் வனத் துறையின் பொறுப்பில் உள்ள நிலங்களை நான்கு இனங்களாகப் பிரிக்கலாம். அவைகளின் நிலப்பரப்பும் ஆக்ரமிப்பின் தகவலும் பின்வருமாறு:—

| | | மொத்த நிலப்பரப்பு ஏக்கரில். |
|---|---|---|
| (1) | ஜன்ம ஒழிப்பு (குடிவாரமய் மாற்றும்)சட்டத்தின் பிரிவு 53இன் கீழ் வணங்களாக அறிவிக்கை செய்யப்பட்டவை. | 12,809 |
| (2) | வனச் சட்டம் விதி 26ன் கீழ் வனத் துறைக்கு மாற்றப்பட்டு, மேற்படி சட்ட விதி 16-ன் கீழ் சேமக் காடுகளாக அறிவிக்கை செய்யப் படாதவை. | 13,759 |
| (3) | வனச் சட்ட விதி 4-ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள். | 12,541 |
| (4) | வனச்சட்ட விதி 16-ன் கீழ் சேமக் காடுகளாக (Reserve Forest) அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள். | 1,237 |

மேற்கூறிய மொத்த நிலப்பரப்பில், 3,590 ஏக்கர் வனத்துறை நிலங்களில் ஆக்ரமிப்பு ஏற்பட்டுள்ளது சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்தவர்கள், காடுகளில் விலையுயர்ந்த மரங்களை அழித்து விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். இதனால் இதனைத் தடுத்து நிறுத்தி, காடுகளைக் காப்பாற்ற ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. இதில், 19-8-81 வரையில் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக வெளியேற்றப்பட்டு அரசினரால் மீட்கப்பட்ட நிலப்பரப்பு 1,344 ஏக்கர்களாகும். மீட்கப்பட்ட நிலங்களில் வனத்துறையினர் வனப்பயிர்களை நடும் பணியை மேற்கொண்டுள்ளனர். ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் நடவடிக்கை இந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் 19-8-81 முதல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிறுத்தி வைத்ததன் காரணம் நில ஆக்கிரமிப்பைப் பற்றிய அடிப்படை தகவல்கள் சேகரித்து இதைப்பற்றி மறு ஆய்வு செய்து மீண்டும் ஒரு முடிவு எடுக்கலாம் என்று அரசு கருதியதுதான். இந்த நில ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை மிக எச்சரிக்கையோடு வருவாய்த் துறை, வனத் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகளால் நடத்தப்பட்டது. எளிய மக்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட பொது மக்களுக்கும் தொந்தரவு கொடுக்காத வகையில் முன் அறிவிப்பு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

திரு. கே. உச்சி : கூடலூர் பகுதியில் நடைபெற்ற நில வெளியேற்றம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் தி. மு. க. ஆட்சிக் காலத்திலும் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இது புதிது அல்ல. ஏறக்குறைய 3590 ஏக்கர் அரசு நிலம் கையகப்படுத்தப்பட்டதில் 1344 ஏக்கர் அளவில் வெளியேற்றம் இருந்திருக்கிறது. நில வெளியேற்றத்தால் பெரும்பான்மையாக பாதிக்கப்பட்டவர்கள் ஐந்து ஏக்கருக்குக் குறைந்த அளவில் கையகப்படுத்திய சிறு விவசாயிகள்தான். வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற கருணையுள்ள புரட்சித் தலைவர் அரசு முன்வரவேண்டும். 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் நிலத்தைக் கைவசம் செய்தவர்கள் நிலையை உணர்ந்து குறைந்த அளவு நிலத்தையாவது அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க அரசு முன்வருமா? நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் இப்பிரச்சினையைத் தீர்க்க புரட்சித் தலைவர் அரசு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அரசு அதிகாரிகளையும் கொண்ட குழுவை ஏற்படுத்தி அதன் மூலம் நல்லதொரு முடிவு காண முன்வருமா? அண்டை மாநிலமான கோளாவிலும் இதுபோன்ற நில வெளியேற்றம் நடப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அந்த வகையில் உண்மை என்ன என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : இந்தக் கூடலூர் வனப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு என்பது தொடர்ந்து நடைபெற்று வருகிற ஒன்று. அரசாங்கத்தால் மிகுந்த அக்கறையோடு



நடவடிக்கை எடுக்கவேண்டிய மிக முக்கியமான நிகழ்சிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. அதையொட்டித்தான் அந்த வனப் பகுதிகளை ஆக்கிரமித்து இயற்கை வளம் மிகுந்த காடுகளை அழித்து மரங்களை வெட்டி அங்கே பயிரிடும் முயற்சியில் ஈடுபட்ட சட்ட விரோதமான ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் பணியில் அரசு ஈடுபட்டது. அப்படி ஈடுபட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் வைத்த வேண்டுகோளை ஒட்டி தாற்காலிமாக ஆக்கிரமிப்பாளர் வெளியேற்றுகிற நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வனத் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் அங்கு இருப்பவர்கள் வேண்டுகோள்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து அரசுக்கு விரைவில் ஒரு அறிக்கை தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையில் வேறு விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: 19-8-1981 முதல் இந்த வெளியேற்ற நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம் அந்த நீலாம்பூர் ஜன்மி நிலத்தில் ஏராளமான தோட்டக் காடுகளை வைத்திருப்பவர்களிடமிருந்து அதை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் ஏழை விவசாயிகளைப் பொறுத்த வரை 1978 ஆம் ஆண்டு வரை இந்த நிலங்களில் சாகுபடி செய்து விவசாயம் செய்து வந்தவர்கள் யார் யார் என்று விசாரித்து அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குப் பிறகு அங்கே புதிதாக வந்திருக்கக்கூடியவர்கள் யார் என்று பார்த்து வன நிலங்களை அவர்களுக்குக் கொடுக்காமல் அரசாங்கத்தின் கையில் இருக்கக்கூடிய வேஸ்ட் லாண்ட்சைக் கொடுத்து ஏழை மக்கள் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். மறுபடியும் டில்லி மாண்புமிகு ரமணி அவர்களும், அகில இந்திய விவசாய சங்கச் தலைவரும் அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்த அறிக்கையில் இதைப் பற்றிய விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வந்த மனுக்கள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விசாரணையின்போது பொதுமக்கள் பிரதிநிதிகளையும் சேர்ந்துக் கொண்டு கருத்துக்களைப் பெறவேண்டும், 1978 ஆம் ஆண்டு வரையிலே ஏற்கனவே அங்கே உள்ளவர்களுக்கு எல்லாம் அந்த நிலங்களை பகிர்ந்து அளித்துவிட்டு, பாக்கியிருக்கிறவர்களுக்கு அரசுக்கு சொந்தமான புறம்போக்கு, அஸஸ்டு வேஸ்டு நிலங்களைக் கொடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் அதன் மூலமாக இந்தப் பிரச்சினையைத் திர்ப்பதற்கும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** துணைத் தலைவர் அவர்களே, திரு. சங்கரய்யா அவர்கள் எடுத்துத் தெரிவித்தக் கருத்தின்படி ஜன்மம் என்ற முறையினை ஒழித்து சட்டபூர்வமாக அந்த நிலங்களை கைப்பற்றிய போது சுமார் 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொள்கிற உரிமையை அரசாங்கம் பெற்றது. அதிலே முன்னாலேயே தங்களுக்கு உரிமை இருப்பதாகவும் கிரையம் பெற்றிருப்பதாகவும் ஆகவே அவற்றிலே தங்களுக்கு உரிமை இருக்கிறது என்று உச்சநீதி மன்றத்திலும் உயர்நீதி மன்றத்திலும் வழக்கு போடப்பட்டு அந்த வழக்குகளால் பாதிக்கப்பட்டிருக்கிற நிலங்கள் 42 ஆயிரம் ஏக்கர் நிலங்கள்—வழக்கு நிலுவையால் தீர்க்கப்படவில்லை.

மற்றநிலங்கள், சில நிலங்கள் செட்டில்மென்ட் ஆபிசரால் விசாரிக்கப்பட்டு அவை வனத்துறை நிலங்கள் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. வனத்துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது, ரிசர்வ் பாரஸ்ட்டாக மாற்றப்பட்டு இருக்கிறது. அப்படி மாற்றப்பட்ட அந்த நிலங்கள், நிலங்கள் என்கிறபோது நாம் மற்றப் பகுதிகளிலே பார்க்கிற நிலங்களைப்போல் சாதாரண காட்டு நிலங்களோ சாதாரண நிலங்களோ அல்ல. நீண்ட நெடுங்காலமாக நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வளர்ந்த மரங்களைக் கொண்ட இயற்கையான செழிப்புமிக்க இயற்கைக் காடுகள் ஆகும். நாம் இன்றைக்கு நினைத்தால் இரண்டு தலைமுறைக்கு அப்படிப்பட்ட காட்டை வளர்க்க நம்மால் முடியாது. ஆகவே அந்தக் காடுகளைப் பாதுகாக்க வேண்டிய மிகப்பெரிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது.

அப்படிப்பட்ட அடர்ந்த காடுகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவது நம்முடைய மாநிலத்திலே மட்டும் நடப்பது அல்ல. பக்கத்திலே இதே நீலாம்பூர் ஜென்மம் சம்பந்தப்பட்ட நிலங்களிலிருந்து கேரள அரசும் இத்தகைய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை கடுமையாக எடுத்துக் கொண்டிருப்பதாக தகவல்கள் அங்கே சட்டமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட இயற்கைக் காடுகள் விலையுயர்ந்த நம்மால் வளர்க்க முடியாத மரங்கள் நிறைந்த உயர்ந்த மலை சிகரங்களிலே உள்ள காடுகளிலே குடியேற்றுவது என்பதோ மற்றக் காடுகளை அழித்துவிட்டு விளைநிலங்களாக மாற்றுவது என்பதே இன்றைக்கு உள்ள இந்திய அரசும் மாநில அரசும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். மக்களுடைய நலனை முன்னிட்டு அந்தக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டதாகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து பரிசீலிக்கப்படுகிறது. நீண்ட காலமாக அங்கே இருந்தார்கள் என்ற காரணத்தால் மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தி விட்டு அவர்கள் விரும்புகிற இஞ்சி, வாழை போன்ற பயிர்களைச் செய்ய அனுமதிக்கலாம் என்பது நமக்கு நாமே தீங்கு விளைவித்துக் கொள்கிற முறையாகும். ஆகவே அங்கே இருந்து அவர்களை அப்புறப்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று.





ஆனால் அதே நேரத்திலே ஏழைஎளியவர்களாக இருக்கிறவர்களுக்கு விவசாயிகளாக இருக்கிறவர்களுக்கு நிலமற்றவர்களாக இருக்கிறவர்களுக்கு எப்படிப்பட்ட பாதுகாப்புகளை நன்மைகளை வழங்கவேண்டுமென்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று வருவாய்த்துறையையும் வனத்துறையையும் இணைந்து ஆலோசனை வழங்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. டி. கருப்பையா:** துணைத் தலைவர் அவர்களே, கூடலூர் வட்டத்தில் நில வெளியேற்றம் சம்பந்தமாக நான் நேரடியாக அங்கே சென்று பார்த்தேன். அங்கே விவசாயிகள் சதுப்பு நிலங்களில் நெல் மற்ற பயிர்களை விவசாயம் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கமுடிந்தது. சிலோனிலிருந்து குடியமர்த்தப்பட்டவர்கள் அங்கே இருக்கக்கூடிய சாதாரண ஏழை எளிய மக்கள் நீண்ட நாட்களாக சிலோனிலிருந்து வந்த காலத்திலிருந்தே காபி, தேயிலை, முள்ளங்கியைப் பயிர்செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அப்புறப்படுத்திக் கொண்டு இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அவர்களுடைய வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதே டு தொன்று தொட்டு அங்கே விவசாயம் செய்துகொண்டிருக்கக்கூடிய விவசாயிகளை அங்கேயிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அந்த நில வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி அரசாங்கத்தினுடைய அதிகாரிகள், அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து அந்தப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11.10]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் கேட்ட கேள்வியினுடைய மறு பதிப்பாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் கேட்டிருக்கிறார்கள். இதேபதிலைத்தான் நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஏழை எளியவர்கள் அங்கே சதுப்பு நிலத்திலே பயிரிடுகிறார்கள் என்று இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும். ஆனால் அடர்ந்த காடுகளைச் சதுப்பு நிலங்களாக மாற்றியிருந்தால் அதை அனுமதிப்பதற்கில்லை. அப்படிப்பட்ட அடிப்படைக் கொள்கையை வைத்து வனத்துறையும் வருவாய்த்துறையும் நேரடியாகவே பரிசீலிக்க வேண்டும். உண்மையில் ஏழை எளியவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, இந்த வெளியேற்ற நடவடிக்கையைத் தற்காலிகமாக அரசு நிறுத்தி வைத்திருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் ஒரு சில விளக்கங்கள் அரசு அதிகாரிகளின்

விளக்கமாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்கு நான் நேரடியாகச் செல்லும் நேரத்திலேகூட இப்பொழுது நில வெளியேற்றம் செய்யப்பட்டிருப்பவர்களில் சாதாரணமாக உள்ள விவசாயிகள், ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக இருக்கின்றவர்கள் மட்டுமே நில வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்: கூடலூர் தாலுக்கா, நிலக்கோட்டா டவுன் பஞ்சாயத்து, கரியசோனா, தேவாலயம் கிராமத்தில் டி.பி. அப்துல்லா என்பவரை அவர்பட்டாபெற்ற என்ற பூமியிலேயிருந்தே நில வெளியேற்றம் செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 4 ஏக்கர் 30–6–81 இல் அவருக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பூமியிலேயிருந்து நில வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சாதாரண விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். நானும் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்த நேரத்திலே, நீலகிரி மாவட்ட விவசாய சங்கத் தலைவர்கள் சொன்னார்கள், முதலமைச்சரிடத்திலே விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம் என்று; எனவே, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளை பாதிக்கும் விதத்திலே நில வெளியேற்றம் செய்யாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் 15 ஆண்டுகளாக, 20 ஆண்டுகளாக காப்பி, இரப்பர், டீ ஆகியவற்றை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்ற சூழ்நிலயில் அவர்களது பட்டா பூமியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டிருப்பதால் அவர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்க முன்வருமா? ஐந்தாறு ஏக்கர்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அதே நிலத்தை—காடுகளுக்கு இடையூறு இல்லாத நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் இந்தியப் பாராளுமன்றத்திலே மத்திய அரசு நிறைவேற்றியுள்ள வனப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு மாநில அரசு இத்தகைய வனப் பகுதி நிலங்களை வேறு தேவைகளுக்கு மாற்றுகின்ற அதிகாரத்தை இழந்திருக்கிறது அப்படி மாற்றுவதற்கு எந்தக் கருத்தாவது ஏற்படுமேயானால் அந்த மத்திய அரசுக்கு எழுதி மத்திய அரசினுடைய ஒப்புதலை பெற்ற பிறகு தான் அப்படி மாற்ற முடியும்.

இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துக் காட்டிய பொழுது பட்டா பெற்றவர்களை வெளியேற்றியிருக்கிறார்கள் என்ற தகவலைச் சொன்னார்கள். இப்படிப்பட்ட தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி கௌடா போன்றவர்களெல்லாம் அரசின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்து தெரிவித்தார்கள். இந்தப் பட்டாவைப் பெறுவது என்பதிலே பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. செட்டில்மெண்ட் ஆபீசர் என்ற அதிகாரியால் இந்தப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே முறையாகவும் பட்டாக்களைத் தந்திருக்



கிறார்கள், முறையற்றும் பட்டாக்களைத் தந்திருக்கிறார்கள். அதற்கு மேலே சம்பந்தப்பட்ட அந்தத் துறை அப்பீல் செய்து, அந்தப் பட்டாவை ரத்து செய்திருக்கிறது. எப்படியோ உள்ளே போய் ஆக்கிரமித்தவர்கள் அங்கேயிருந்து கொண்டு, இருக்கின்ற இடத்திலேயிருந்து வெளியேறுவதற்கு மறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே ஒரு மொத்தமான சூழ்நிலையிலே எடுக்கப்பட்டிருக்கிறது. மிக முக்கியமான, அவசரமான, நாட்டின் நன்மைக்காக எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையாகும் இது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களை மனதில் வைத்துத்தான், அப்படி ஒருவேளை உண்மையிலேயே நியாயமாகப் பெறவேண்டிய உரிமைகள் யாருக்காவது இருக்குமேயானால் அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் நடைபெற வேண்டுமென்ற கருத்தைக் கொண்டுதான் இந்த வெளியேற்றம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய இந்த பரிந்துரைகள், கருத்துக்கள் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்படும்,

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளர்ச்சியில், அந்தப் பிரதேசத்தில் 5 பிரபலமான கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்துள்ளன. நமது இந்திரா காங்கிரஸ் கட்சியும் சென்னை மாநகரத்தில் உண்ணாவிரதம் இருந்தது உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட கிளர்ச்சிகள் சம்பந்தமாக, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், இந்த அறிக்கையிலே, 'நடவடிக்கை மிக எச்சரிக்கையோடு வருவாய்த் துறை, வனத் துறை, மற்றும் காவல் துறை அதிகாரிகளால் நடத்தப்பட்டது'. 'எச்சரிக்கையாக நடத்தப்பட்டது' என்று சொல்லப்பட்டிருக்கிறது, காவல் துறை அதிகாரிகள் எச்சரிக்கையாக நடக்கவில்லையென்பதுதான் உண்மை, ஏனென்றால், இந்த ஆக்கிரமிப்புச் சம்பந்தம் இல்லாத இடங்களிலே கூட, தேவாளையிலே லத்தி சார்ஜ் நடந்திருக்கிறது. சேரம்பாடியிலே எங்கள் ஆபீசுக்குள் நுழைந்து உடைத்திருக்கிறார்கள். முஸ்லீம் லீக் தலைவர் ஹம்மு ஹாஜி என்பவருக்குக் கை எலும்பு முறிந்திருக்கிறது. அவர்கள் பேரில் 307 செக்ஷன் போட்டு, கமிட்டி மெம்பர்கள் உட்பட ஜெயிலில் அடைக்கப்பட்டு, ஊட்டியில் இருக்க வேண்டுமென்று கண்டிஷனல் பெயிலில்தான் விட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, 'மறுபரிசீலனை செய்வதற்காக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது' என்று அறிக்கையில் இருப்பதனாலே, இந்த கேஸ்களை வாபஸ் வாங்குவதற்கும், உடனடியாக கண்டிஷனல் பெயிலை நீக்கி அவர்கள் ஊருக்குப் போகவும் வழிசெய்ய அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது, ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவது குறித்துக் கொண்டு வந்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது நான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற

துறையின் சார்பிலே இங்கே விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் ஒரு புதிய செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள், அந்த வெளியேற்ற நடவடிக்கைகள் எடுத்தபொழுது அங்கே நடைபெற்றிருப்பதாகச் சில சம்பவங்களைக் குறிப்பிடுகிறார்கள். அது எந்தச் சூழ்நிலையில் நடைபெற்றது ? அது உண்மையிலே நடைபெற்றதா? அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதெல்லாம் விசாரிக்கப்பட வேண்டிய விவரங்கள். மாண்புமிகு உமாநாத் அவர்கள் தந்திருக்கிற தகவல்களை வைத்து உடனடியாக விசாரித்து அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கல்லன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவல நிலை, குறிப்பாக வனத் துறை, வருவாய்த் துறை அதிகாரிகளால்தான் ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களை அவர்கள் அழியச் செய்ததுடன் வெளியில் இருக்கும் சிலருடன் ஒரு ராக்கெட்டை ஏற்படுத்தி, ஏறக்குறைய ரூ. 200, ரூ. 300 கோடி அளவில் நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார்கள். பினாமி பெயரில் பலர் 10 ஏக்கர், 20 ஏக்கர், 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று வைத்துள்ளார்கள். ஆகவே, அதனால நீலகிரியில் 'இக்கோலாஜிக்கல் பாலன்சே' பாதிக்கப்பட்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால், நீலகிரி அடுத்த 10 ஆண்டுகளில் வறட்சி மாவட்டமாகத் தானிருக்கும். அஃதக் கட்சி சார்பற்ற ஒரு தேசீய உணர்வோடு அணுகி, தவறு செய்த அதிகாரிகளைக் கண்டிக்க ஒரு என்கொயரி கமிஷன் ஏற்படுத்தி, மற்றவர்கள் பேரில் ஒரு கமிட்டி ஏற்படுத்தி, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே கொடுத்த விளக்கத்தை ஒட்டித்தான் மாண்புமிகு உறுப்பினர் கல்லன் அவர்கள் இங்கே விவரத்தைத் தந்திருக்கிறார்கள். அங்கே பட்டாக்கள் வழங்குவது என்ற பெயராலே மிகப்பெரிய தவறுகள், மோசடிகள் நடந்திருப்பதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளது. பட்டா பெற்றுக் கொண்டவர்கள்தான் தாங்கள் பட்டா பெற்றதாக அங்கே கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே ஏழை எளியவர்கள் என்கிறவர்களுடைய பெயரை முன்னாலே வைத்து மிகப்பெரிய பணக்காரர்கள், செல்வந்தர்கள், அங்கே காட்டை அழித்து மிகப் பெரிய தோட்டங்களையெல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே இயற்கை சூழ்நிலையே பாதிக்கப்படுகிற ஒரு மிகப் பெரிய கொடுமைகளை நாம் சந்திக்கிற சூழ்நிலை நீலகிரியைப் பொறுத்தவரையில் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் நம்முடைய மாநிலத்திலே மாத்திரமல்ல, பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலம்கூட அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதில் மிகுந்த கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் கல்லன் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்தக் கருத்துக்களை, இந்த நடவடிக்கை



களைப் பற்றி பரிசீலிக்கிறபொழுது சேர்ந்து பரிசீலித்து, தவறுக்கு உடந்தையாக அதிகாரிகள் இருந்திருப்பார்களானால் அவர்கள மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

*திரு. டி. மணி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கூடலூர் வட்டத்திலே நில வெளியேற்றம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு தகவல்களை இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு சம்பந்தப்படாத அங்கே இருக்கிற 5 எதிர்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அந்த நில வெளியேற்றத்திற்கு எதிராக தேவாலயா, சேரம்பாடி என்ற கிராமங்களிலே ஒரு அர்த்தாலை நடத்தியிருக்கிறார்கள். இந்த நிலை வெளியேற்றத்திற்கும் இந்த தேவாலயா, சேரம்பாடி என்ற இடங்களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்த அர்த்தாலின் போது அங்கிருக்கிற டி.எஸ்,பீ. பாண்டியன் என்பவர் அந்த பகுதிக்குப் போய் மிகுந்த மிருகத்தன்மையாக, கடினமான தாக்குதலை நடத்தி இருக்கிறார். பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் தாக்குண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல கைது செய்யப்பட்டவர்களை பஸ்ஸில் ஏற்றிச் செல்லும்போது அந்த பஸ்ஸிலேயே வைத்து அவர்களைத் தாக்கி இருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக ஒரு நீதி விசாரணையை நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் உமாநாத் அவர்கள் ஏற்கனவே சொன்ன கருத்துக்களைத்தான் மீண்டும் குமரி மாவட்டத்தில் இருந்து வந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உமாநாத் அவர்களுடைய கருத்தையே ஏற்றுக் கொண்டு இது புதிய தகவலாக இருக்கிறது மேலும் வனத் துறைக்கு தொடர்பில்லாத தகவலாகவும் இருக்கிறது ஆகவே இதை சம்பந்தப்பட்ட துறையோடு கலந்து பேசி அதை விசாரித்துத் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை முன்னாலேயே தெரிவித்து விட்டேன்.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியில் அடிக்கடி நில வெளியேற்றம் இருப்பதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அதற்கான முடிவு இல்லாததுதான் அங்கே அடிக்கடி இதுபோன்ற பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கிறது, வனத்துறைக்கு சொந்தமான 3,590 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருப்பதாகவும், விலை உயர்ந்த காடுகள் அழிக்கப்பட்டு உள்ளதாகவும் இங்கே அறிவிக்கப்பட்டது. ஆனால் வன இலாகாவுக்குத் தெரியாமல் இங்கே இதுபோன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த வன இலாகா அதிகாரிகளை என்ன

செய்யப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டும். அதே போன்று நில ஆக்கிரமிப்பு செய்தவர்களை வெளியேற்றுவதிலே எந்தவிதமான மாறுபாடான கருத்தும் இல்லை என்றாலும் அங்கே பல ஆண்டுகளாக காப்பி, டீ, தேயிலை போன்ற பயிர்களை விளைவிக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அரசு நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பாளர்கள் என்று குறிப்பிடுகிறபோதே அது புதிய ஆக்கிரமிப்பாளர்களா அல்லது பழைய ஆக்கிரமிப்பாளர்களா என்று பார்க்க இயலாது. ஆக்கிரமிப்பாளர்கள் என்றாலே சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டவர்கள் என்றுதான் பொருள். ஆகவே திருடி நீண்டகாலம் ஆகிவிட்டது, அதனாலே அவனுக்குத் தண்டனை தர வேண்டாம்; நேற்று திருடியவனுக்குத் தண்டனை தரவேண்டும் என்று எந்த நீதியும் சொல்லாது. ஆகவே அங்கே சம்பந்தப்பட்டிருக்கிற ஏழை எளிய மக்களுடைய பிரச்சினையைத்தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்கின்ற கருத்து அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, முன்னாலே ஆக்கிரமித்தவர்கள் பின்னாலே ஆக்கிரமித்தவர்கள் என்கின்ற வரம்பை வைத்து இதிலே தீர்வுகாண முடியாது. மேலும் அது ஒரு அடர்ந்த காட்டுப் பகுதி. அது நீண்ட காலமாக ஜென்மலாண்டு என்று இன்னொரு உரிமையாளர்களிடத்திலே இருந்து, சில ஆண்டுகளுக்கு முன்னாலே, சட்டத்தின்படி நம்முடைய அரசுக்கு மாற்றப்பட்டது. அரசுக்கு மாற்றியதற்குப் பிறகும் வருவாய்த் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வனத்துறை என்று அறிவிக்கப்பட்டு சில ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஆகவே அங்கே இருக்கிற பரப்பளவுக்கு ஏற்றவாறு அதிகாரிகளை வனத்துறையிலே நாம் போட முடியவில்லை. அதனாலே அங்கே காவல் இல்லாத வீட்டுக்குள்ளே புகுந்து விடுவதைப்போல திறந்து கிடக்கிற வீட்டுக்குள்ளே புகுந்து விடுவதைப்போல பல ஆக்கிரமிப்பாளர்கள் நுழைந்துவிட்டார்கள். அவர்கள் முன்னாலே நுழைந்துவிட்டார்கள் என்கின்ற காரணத்தாலே அவர்களுக்குச் சலுகை அளிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள், அந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அரசாங்கம் ஒரு தெளிவான முடிவு கொண்டு வரவேண்டும் என்று. தெளிவான முடிவைக் கொண்டு வந்துதான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனாலும் இடையிலே அரசியல் கட்சிகள் புகுந்து விட்ட காரணத்தால் அந்த தெளிவான முடிவிலே கொஞ்சம் சலனம் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சலனமும் அடங்கும் தெளிவான முடிவும் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் வனத் துறைக்குச் சொந்தமான 3,590 ஏக்கரில் 1981 வரையில் 1,044 ஏக்கர் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள்தான் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 1,044 ஆக்கிரமிப்பாளர்களும் ஏழை எளிய விவசாயிகள் என்று



சொல்லப்படுகிறது. மீதி உள்ளவர்கள் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று ஆக்கிரமித்துள்ள பெரிய விவசாயிகள், எஸ்டேட் ஓனர்கள் ஆவார்கள். அவர்களை அகற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அறியவிரும்புவதோடு, சில அரசியல் கட்சிகளின் பெரிய தலைவர்கள் பினாமி பெயரில் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு ஏழை எளிய மக்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இவைகளுக்கெல்லாம் தொடர்ந்து பதில் அளித்துக்கொண்டே இருக்கிறேன். உறுப்பினர்கள் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை முன்னாலேயே தெரிவித்து விட்டேன், ஏழை, எளியவர்களாக இருந்தால் அவர்களுடைய பிரச்சினையை அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும். அங்கே அதிகமான நிலங்களை வைத்திருக்கிறவர்களை வெளியேற்றவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அது அடிப்படையாக சரியாக புரிந்து கொள்ளாமல் சொல்கிற காரணமாகும். நான் முன்னாலே சொன்னதைப் போல 40 ஆயிரம் ஏக்கர்களுக்கு சொந்தக்காரர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தடை ஆணையை பெற்றிருக்கிறார்கள், நாங்கள் முன்னாலே உரிமை பெற்று விட்டோம் என்று. அப்படிப்பட்ட உரிமையாளர்களை இப்போது சட்டப்படி வெளியேற்ற முடியாமல் இருக்கிறோம். உச்ச நீதி மன்றத்திலே வழக்கு வரவிருக்கிறது.

ஏழை, எளியவர்களை பினாமியாக சில பேர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள், பினாமியாக யார், யார் வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் அவரிடத்திலே இருந்தால், அதைக் கொஞ்சம் அரசுக்குத் தெரியப்படுத்தினால், உடனடியாக எடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாட்டிற்கு வளம் சேர்க்கிற வனங்களை அழிக்கக் கூடாது என்பதிலே இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. கூடலூரிலே நீண்ட நெடும் நாட்களாக இருக்கிற ஏழை மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தாலே தான் எங்களுடைய கட்சியின் சார்பிலே, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய சக செயலாளராக இருந்து கொண்டிருக்கிற திரு. கே.ஆர். பால சுப்பிரமணியம் அவர்கள் அரசினுடைய, மக்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று சென்னையிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். இந்த வெளியேற்றத்தை நிறுத்தியும், இதனைப் பரிசீலனை செய்வதாக அரசு சார்பிலே உத்தரவாதம் தந்ததாலே உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொண்டார்கள். அரசு சார்பிலே உத்தரவு அளித்திருந்தாலும் கூட, வெளியேற்றங்கள் இன்னும் தொடர்ந்து ஓரிரு இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்தி வந்திருக்கிற காரணத்தாலே, அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வு

செய்து முடிக்கிற வரையில் வெளியேற்றத்தை நிறுத்தி வைத்தும் அதற்கு ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து அதற்குள் முடிக்கிறோம் என்ற உத்திரவாதத்தினை அந்த பகுதியிலே இருக்கிற மக்களுக்கு, இந்த மாமன்றத்தின் மூலமாக கொடுப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுகிற முக்கியமான பிரச்சினை குறித்து காங்கிரஸ் கட்சியிலேயிருந்து இரண்டு விதமான கருத்துக்கள் அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, நீலகிரி மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பின ராக இருக்கிற மாண்புமிகு கல்லன் அவர்கள்—காரணம் அவர்கள் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, நீலகிரி எப்படி கொஞ்சம், கொஞ்சமாக காய்ந்த கிரியாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிற காரணத்தாலே, இந்த நடவடிக்கை வரவேற்று முறையாக செய்யவேண்டுமென்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளர் பொறுப்பிலே இருக்கிற ஒருவர், நீலகிரி மாவட்டத்தில் இல்லையென்றாலும், அவர்கள் என்ன காரணம் கருதியோ சென்னையிலே வந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். இதிலே எந்த கட்சி முன்னாலே இந்த காரியத் திலே ஈடுபடுகிறது என்பதைக் காட்டிக்கொள்ள ஆர்வம் காட்டுகிற இந்த உணர்வை, அருள்கூர்ந்து எல்லா கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறேன். இந்திய அரசாங்கம் இன்றைக்கு வனங்களில் ஒரு அடி வனத்தைக் கூட வேறு வகைகளுக்கு மாற்றக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறது. குறிப்பாக இந்திய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள். இந்தியா மாத்திரமல்ல, உலகம் முழுவதும் கவனம் செலுத்துகிறார்கள்.

சமீபத்தில் வந்திருக்கிற செய்தி, ஜப்பான் நாட்டிலே இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றதற்கு பிறகு 'மேன் மேட் பாரஸ்ட்', என்று மக்களாலே உருவாக்கப்பட்ட காடுகளை 65 சதவிதமாக அந்த நிலப்பகுதியிலே இன்றைக்கு உருவாக்கி யிருக்கிறார்கள். நாம் மூன்றிலே ஒரு பகுதி கூட வனப்பகுதியை வைத்துக் கொள்ளவில்லை. 24 சதவீதம் நேஷனல் லெவலில் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 14 சதவீதம் தான் இருக்கிறது. இதிலே குறிப்பாக இருக்கிற பகுதியை நீலகிரி பகுதிகள்; அதிலேயும் கூடலூர் ஜென்மம் என்பது தான் இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டு மனம் மகிழ்ந்து கொண்டிருக்கிற காடுகள். இந்த தலைமுறை நினைத்தாலே வளர்க்க முடியாத காடுகள். இந்த காடுகளை வளர்ப்பதற்கு இன்னும் எத்தனை தலைமுறைகள் வேண்டுமோ, தெரியாது இயற்கை தந்த வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆகவே இதை பாதுகாக்க வேண்டுமென்பதிலே ஒரு கட்சியிலே இரண்டு கருத்துக்கள் தெரிவிக்கிற உணர்வைவிட்டு விட வேண்டும்.



இங்கே உண்ணாவிரதம் இருந்த காரணத்தாலே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உச்சி கவுடர் போன்றவர் களும், கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த மற்ற தலைவர்களும் இங்கே கொடுமைகள் நடக்கிறது, தவறுகள் நடக்கிறது என்று சொன்ன காரணத்தாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த காரணங்களை கண்டறிய வேண்டும என்பதற்காக தற்காலிகமாக நிறுத்தியிருக்கிறோம். மாவட்ட ஆட்சியாளர் அவர் களுக்கு தகவல் தந்திருக்கிறோம். அவரும் நிறுத்தியிருக்கிறார். அங்கே அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற வந்திருக்கிற தகவல் சரியான தகவலாக இருக்காது. ஒருவேளை அரசியல் அடிப்படையில் இந்த கருத்தை தெரிவிக்கிறவர்களாக இருக்கலாம். ஆக்கிரமிப்புகள் அகற்றுவது மேற்கொள்ளப்பட வில்லை, இதில் விசாரணை முடிவடைந்த பிறகு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.30]

(ஆ) கரூரில் நெசவாளர்களின் உண்ணாவிரதம் குறித்து.

திரு.எம்.சின்னசாமி : தலைவரவர்களே, ''கரூரில் நெசவாளர் கள் கூலிப்பிரச்சனை பற்றி உண்ணாவிரதம் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கரூரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் சுமார் 20,000 கைத்தறி நெசவாளர்கள், கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார் கள். 1-3-1981 முதல் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் ஊதிய விகிதங்கள் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவந்துள்ளது. 10-8-1981 முதல் கரூரிலுள்ள சுமார் 25 கைத்தறி நெசவுத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் களுக்குக் கூடுதலாகக் கொடுக்கப்பட்ட ஊதிய விகிதங்களைத் தொழிலதிபர்கள் குறைத்துள்ளார் கள் எனவும் தெரியவந்துள்ளது. இந்த நிறுவனங்களில் உள்ள சுமார் 450 தொழிலாளர்கள், 1-3-1981-ல் இருந்து கொடுத்து வந்த ஊதிய விகிதங்களைத் தரவேண்டும் எனக்கோரி 11-8-1981 முதல் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இத்தொழிலாளர்கள், 19-8-1981 முதல் உண்ணாவிரதமும் மேற்கொண்டனர். வருவாய்த்துறை மற்றும் காவல் துறை அதிகாரிகளின் முன்னிலையில் கரூரில் இதைப்பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்தன. அதன் விளைவாக, இந்த 25 நிறுவனங் களில் உள்ள தொழிலாளர்களுக்கு 10-8-1981 தேதிக்கு முன்னர் கொடுக்கப்பட்டு வந்த ஊதிய விகிதங்களை மீண்டும் கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த சுமுக முடிவின் பலனாக 24-8-1981 முதற் தொழிலாளர்களால் வேலை நிறுத்தம் மற்றும் உண்ணாவிரதமும் கைவிடப்பட்டு இப்பொழுது சகஜ நிலைமை நிலவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 5. அறிக்கை அளித்தல்

#### மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்ற முறையில், கல்வி (ஆரம்ப உயர்தரக் கல்வி) பற்றிய அறிக்கையில் கண்டுள்ள குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய மேற்படிக் குழுவின் ஆறாவது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

*(அ) பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981.*

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

*(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1981.*

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 7. அரசினர் தீர்மானம்

#### விதி 30 (3) ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30 (3)—ஐ தளர்த்தி, பேரவையின் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4, அரசினர் சட்ட முன்வடிவுகள் என்பதன் கீழ் வருகின்ற சட்ட



முன்வடிவுகளை கீழ்க்கண்ட வரிசைப்படி மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்:

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981).

(2) 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1981).

(3) 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981).

(4) தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981).

(5) பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981).

(6) 1981 ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1981).

(7) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981).

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

திரு. பா. ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1959 ஆம்ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு இங்கே மூன்று நோக்கங்களுக்காகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். இப்போது இருக்கின்ற அறநிலையக் கட்டுப்பாட்டில் மடங்கள் அடங்கி இருந்தாலும்

---

* 1981—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1981 ஆகஸ்ட் 29

மேலும் அவற்றை அரசின் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும், அந்த மடங்களுக்கான தலைவர்கள் தேர்தல் எப்படி நடக்கின்றன என்ற நிலைமைகளில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதாலும்' அந்த மடங்களிலே செய்யப் படுகின்ற செலவுகளுக்கு அரசின் அங்கீகாரத்தைப்பெற வேண்டும் என்பதாலும் இந்த சட்டத்தினை அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே மடங்களில் தலைவர்கள் தேர்தல் நடந்து முடிந்த பின் 30 நாட்களுக்குள்ளாக அதை அரசுக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஒரு கருத்து இந்தச் சட்ட முன்வடிவிலே தந்திருக்கிறார்கள். நியமனம் செய்யப்பட்டாலும் உடனடியாக அதையும் அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்ற கருத்தையும் இந்த சட்ட முன்வடிவிலே தெரிவித்திருக்கிறார்கள். அறங்காவலர்கள் இதுபற்றி 30 நாட்களுக்குள்ளாக ஆணை யாளருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்தை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். மடத்திலே இருக்கின்ற அறங்காவலர்களில் சிலர் கோளாறுகள் செய்பவர் களாக இருக்கலாம். இருந்தாலும் அதைக் கண்காணிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவினை, மடங்களின் ஆதிக்கங்கள் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, கொண்டு வந்தாலும் கூட இதை நடைமுறைப்படுத்துகின்றபோது ஏதோ குறிப்பிட்ட சில மடங்களுக்கு அங்கீகாரங்கள் கொடுப்பது, சிலவற்றிற்கு அங்கீகாரங்கள் கொடுப்பதில்லை என்ற வகையிலே நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது.

அடுத்து இந்த மடங்களிலே எப்படிப்பட்ட நிலைமைகள் என்றாலும் உடனடியாக ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கின்றது. அறங்காவலர்கள் செய்கின்ற செலவுகளுக்கான அங்கீகாரத்தை ஆணையாளரிடமிருந்து பெற வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் இங்கே கொண்டுவந்திருக் கிறார்கள். குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக 22,000 ரூபாய் அளவுக்கு ஒரே நேரத்திலே செலவு செய்வதாக இருந்தால் அதைப்பற்றி ஆணையாளருக்கு தெரிவித்தபின் அவர் அதை அங்கீகரிக்கவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை இதிலே கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் எல்லாம் வருகின்றபோது மடத்தினுடைய நோக்கங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக இந்த மடங்கள் இருக்கின்றதோ அதனுடைய கொள்கைகளுக்கு பாதகமில்லாமல் இருக்க வேண்டும், ஆகவே நடைமுறையிலே வருகின்றபோது அரசினுடைய அங்கீகாரம் வரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே அதற்கெல்லாம் இந்த சட்டத்தினை நல்லமுறையிலே பயன்படுத்த வேண்டும். சில மடங்களைப் பழிவாங்குகின்ற நிலையிலே இதைப் பயன்படுத்தக்கூடாது.

அடுத்து சொத்தினுடைய நிலைமைகளைப் பார்க்கின்றபோது பல மடங்களுடைய சொத்துக்கள் தமிழ்நாட்டிலே ஏராளமாக



1981 ஆகஸ்ட் 29] [திரு. பாபு ஜனார்த்தனன்]

[முற்பகல் 11-40.]

இருக்கின்றன. அகோபில மடத்தின் சொத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. அதேபோல ஆதீனங்களுடைய சொத்துக்களும் ஏராளமாக இருக்கின்றன. அவைகள் நல்லமுறையில் பயன்பட வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட சில சங்கடங்கள் இருப்பதை மறுக்க முடியாது. இதிலே ''ஒரு மடத்தினுடைய தலைமையிடம் இந்த மாநிலத்திற்கு வெளியேயிருந்து ஆனால், அம்மடத்தின் சொத்துக்கள் இம்மாநிலத்திற்குள் இருக்கிறபோது, இம்மா நிலத்திற்குள் இருக்கிற அச்சொத்துக்களைப் பொறுத்தமட்டில், இச்சட்டத்தின் விதித்துறைகளுக்கேற்ப அம்மடத்தின்மீது கட்டுப் பாடு செலுத்தப்பட வேண்டும்'' என்றிருக்கிறது. ஆனால் சில மடத்தினுடைய செத்துக்கள் வெளிமாநிலங்களிலேயும் இருக்கிறது. குறிப்பாக, அகோபில மடத்தின் சொத்துக்கள் இங்கே அவர் களுடைய ஜீயர் போன்றவர்கள் இருந்தாலும், ஆந்திராவைச் சேர்ந்த அகோபிலத்தில் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. இங்கேயிருக்கும் அவர்களுடைய சொத்துக்கள் இச்சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டாலும், வெளியிலே—வெளி மாநிலங்களிலே இருக்கக்கூடிய ஒரு மடத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் கட்டுப்பாடு முறையைப்பற்றி சரியான விவரம் எதுவும் இதில் இல்லை. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, அறங்காவலர்கள் நியமனம் அல்லது விலக்கி விடுதல் குறித்து பல்வேறு கட்டுப்பாடுகளை இங்கே ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அறங்காவலர் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று உறுதிக்கொண்டு, மணமாகாதவராக இருக்க வேண்டும். அல்லது பழக்கத்திற்கு முரணாக மணமுடித்துக் கொண்டிருக்கிறார் அல்லது ஒழுக்கக் கேடான வாழ்க்கை நடத்துகிறார் அல்லது மடத்தின் தலைமைப் பதவியின் பெருமைக்கு இழுக்கு ஏற்படும்படியாக வாழ்க்கை நடத்துபவர் .........என்று பல கட்டுப்பாடுகளை விதித்து, அரசு இந்தச் சட்டமுன்வடிவினை கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சொத்துக்கள் சரியாக நிர்வகிக்கப் பெறுகிறதா ? நல்லநோக்கத்தோடு பயன் படுத்தப்படுகிறதா என்பதை ஆராய்வதுதான் அரசின் நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர,—அந்த நல்ல நோக்கத்துடனேயே இந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருந்தாலும் கூட—அரசு அந்த ஆதீனங்களையும், மடங்களையும் தன்னுடைய ஆதிக் கத்தின் கீழ் கொண்டுவரக் கூடிய அளவிற்கு கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில நாட்களுக்கு முன்பு திருவாவடுதுறை ஆதினம் செய்கிற சில தவறான காரியங்களைப் பற்றி, கேள்வி பதில் நேரத்தின் போது அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். ஆனால் அந்த ஆதீனத்தார்களை அணுகி அதுபற்றி கேட்போகிறது அப்படிபட்ட தவறு எதுவும் ஆதீனத்தில் நடைபெறவில்லை என்றும் அதனுடைய வாரிசு சமையல்காரர் என்ற அளவிலே

நியமிக்கப்பட்டிருப்பதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் அது உண்மையல்ல. ஒரு பட்டாதாரிதான் வாரிசாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது. இருந்தாலும். இந்த மடங்களும், ஆதீனங்களும் நல்ல முறையில் நடைபெறுகிறதா என்று பார்க்க வேண்டிய நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் அரசின் நடவடிக்கைகளும் சட்டத்திட்டங்களும் இருக்க வேண்டுமே தவிர, இந்த மடங்களையும், ஆதினங்களையும் முழுமையாக கட்டுப்படுத்தி தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரும் மனப்பான்மை அரசுக்கு இருக்கக்கூடாது, அந்த வகையில் இந்த திருத்தச் சட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல மற்ற மடங்களைப் பற்றிச் சொல்லவருகிறபோது, குறிப்பாக தமிழ் துறையிலே அக்கறை கொண்டிருக்கிற மடங்களின் மீது அரசு அதிகாரம் செலுத்துவதாக, அவர்களை மற்ற மடங்களைப்போல் சுதந்திரமாக இயங்கவிடாத அளவிற்கு அரசு ஆதிக்கம் செலுத்துவதாக அந்த ஆதினங்களும், மடங்களும் கருதுகின்றன. மற்ற வேறு துறைகளில தொண்டாற்றும் மடங்களும், ஆதினங்களும், குறிப்பாக சங்கராச்சாரியார் போன்றவர்கள் நடத்துகின்ற மடங்களுக்கு கட்டுப்பாடு இல்லாமல் வைத்திருப்பதும், ஆனால் தமிழ் துறையில் அக்கறை காட்டும், இந்த மடங்களை அதிகம் கட்டுப்பாடு செய்வதாகவும் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அவர்களிடையே இருக்கிறது. ஆகவே, எல்லா ஆதீனங்களையும் சரிசமமாக நடத்த, தமிழ்துறையில் கவனம் செலுத்தும் ஆதினங்களும் மடங்களும், அரசு தங்களுக்கு உறுதுணையாகத்தான் இருக்கிறது என்ற எண்ணத்தைக் கொள்ளச் செய்யும் அளவில் நடந்துக் கொள்ள முன்வரவேண்டும் என்ற கருத்தைக் கூறி அமைகிறேன், வணக்கம்.

*திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) வரவேற்றாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மடம் என்று சொல்லும்போது ஏற்கனவே இந்த மடங்கள் பற்றி, இந்த மடங்களில் நடக்கிற அக்கிரமங்கள் பற்றி மறைந்த அண்ணா அவர்கள் 'வேலைக்காரி' சினிமாவில் ஒரு வசனத்தைக் குறிப்பிடுவார்கள். அதில் பாதி ராத்திரியில் பண்டாரசந்நிதியோடு சம்போகமா என்ற முறையில் அந்த வசனம் இருக்கும். அப்படியிருக்கிற அந்த மடங்களில் அரசு நிர்ணயிக்கிற அளவிற்கு இன்றையதினம் மாற்றங்கள் கொண்டு வருவதை முழுமனதோடு வரவேற்றாலும் ஒன்று கூற விரும்புகிறேன். அந்த மடங்களுக்கு இருக்கிற சொத்துக்கள்,——அந்த மடத்திலிருந்து ஏழை எளியவர்களுக்கு கருணை இல்லங்கள் என்ற பெயரால் இன்றைக்கு ஒரு சில நிலையங்கள் இருந்தாலும் முழுமையாக அந்தக் கருணை இல்லங்களில் முறையாக கல்விக்குப் போதிய





அளவு செலவிடக் கூடிய ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மடாதிபதிகள் ரூ. 25,000-க்கு மேற்பட்டு தொகை செலவு செய்கிறபோது ஆணையரிடம் முழுமையான அதிகாரம் பெற்று அதைப் பெறவேண்டும் என்று ஒரு திருத்தமும் இருக்கிறது. அப்படி ஆணையரிடமிருந்து பெறப்படுகிற அந்த நிதி முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிப்போடு கூட முறையாக மடத்தின் அலுவல்களை நல்ல முறையில் நடத்துபவர்களை கட்சி வித்தியாசம் இல்லாமல் போடவேண்டும்.

இன்று ஒரு சில மடங்களில் குடியிருப்புகளை மொத்தக் குத்தகைக்கு எடுத்து ஏழை எளியவர்கள் வாழும் அந்தக் குடியிருப்புக்களிலிருந்து வாடகை அல்லது வரியாகஅதிகத் தொகை வசூலிக்கக் கூடிய ஒரு நிலைமையும் இருக்கிறது. அதையும் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம், குளித்தலையில் உள்ள நீலமேகப் பெருமாள் கோவிலுக்கு சமீபத்தில் உள்ள நத்தம் புறம்போக்கில் ஏழை எளிய மக்கள் குடியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலம் கோவிலுக்குச் சொந்தம் என்ற நிலையில் வரி வசூல் செய்வதோடு கூட அவர்களை நிலத்தை காலி செய்யச் சொல்கிற ஒரு நிலைமையும் இருக்கிறது. பெருந்துறையில் அப்புச்சிபார் மடம் ஒன்றிருக்கிறது. அது ஒரு கோவில் என்ற பெயரில் இருக்கிறது. இந்த சட்டத்தை கொண்டுவரும்போது கோவிலா மடமா என்று பார்த்து பரிசீலனை செய்து திருத்திக் கொள்ளவேண்டும். அதோடு அந்த மடங்கள், கோவில்கள் இவற்றிலிருந்து வருகிற வருமானத்தை கல்விக்காகவும் ஏனைய தொழில்களுக்காகவும் செலவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உழைக்கிறவர்களுக்கே நிலம் என்று சட்டம் கொண்டுவருகிற காலத்தில், மடங்களில் கோவில்களில் உழைக்கிற ஏழை எளியவர்களுக்கும் ஏழை எளிய அரிஜன விவசாயிகளுக்கும் அந்த கோவில்கள், மடங்களின் நிலங்களை பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

[முற்பகல் 11.50]

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்காக இந்தச் சட்டமுன்வடிவு இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இம்மாநிலத்திலுள்ள மடங்களின் நிர்வாகத்தை திறமையாக மேற்பார்வை செய்ய இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறை ஆணையாளருக்கு அதிக அதிகாரங்கள அளிப்பதற்காக இந்தச் சட்டத் திருத்தங்கள் இங்கே கொண்டு வரப்பட்டிருப்பதாக, அரசுத் தரப்பிலே விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மடாலயங்களின் நிர்வாகத்தைச் சீர்படுத்துவதிலோ அல்லது மடங்கள் என்ன நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ, அந்த நோக்கங்கள் சரியான, சீரான முறையில் செயல்படுவதற்கான

நடவடிக்கைகளை இந்த அரசு எடுப்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் ஆட்சேபணை இல்லை. ஆனால். சில முக்கியமான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன, ஆணையாளர் அவர்களுக்கு நிறைய அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மடங்கள், கோயில்கள் நிர்வாகத்தைச் செம்மைபடுத்த வேண்டும் அல்லது நிர்வாகம் சீராக அமைய வேண்டும் என்பதற்காக இந்த அதிகாரங்கள் வழங்கப்படுவதில் என்னைப் பொறுத்தவரையில் ஆட்சேபணை இல்லை. இந்த அதிகாரங்கள் தவறான வழியிலே ஏதாவது ஒரு காலத்திலே, இன்றைக்கு இல்லாவிட்டாலும், நாளையோ அல்லது அதற்கு அடுத்த நாளோ இது தவறாக உபயோகப்படுத்தப்படாமல் இருப்பதற்கான வழிவகைகளை இந்தச் சட்டத்திலே சொல்லவில்லை. இந்தச் சட்டத் திருத்தத்திலே ஆணையாளருக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்திலே ஒரு மடத்தின் தலைவராக இருக்கக்கூடிய மடாதிபதியை, அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. என்னென்ன குற்றங்களுக்காக அவர் அப்படி நீக்கப்படலாம் என்பது வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே முதல்வராக, ''சித்த சுவாதீனமற்றவராக இருந்தால் நீக்கலாம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் மெடிகல் சர்டிபிகேட் வாங்கி, அதை முடிவு செய்யலாம். ஆனால், முடிவு செய்ய முடியாத சில விஷயங்களும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்து மதத்தை அல்லது மடத்தின் கோட்பாடுகளைப் போற்றி நடப்பதிலிருந்தும் விலகிவிட்டார்' என்ற குற்றச்சாட்டு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டை யார் முடிவு செய்வது? எந்தெந்த கோட்பாடுகள் என்று யார் முடிவு செய்வது? அந்தந்த கோட்பாடுகளிலிருந்து அவர் விலகியிருக்கிறார் என்பதை யார் முடிவு செய்வது? இதிலே தெளிவு இல்லை.

அடுத்து, இன்னொரு இடத்திலே 'சமய நிலையத்திற்குச் சொந்தமான யாதொரு சொத்துக்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட அறநிலையத்தின் பொறுப்பை மீறியிருக்கிறார், என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ரொம்ப 'வேகாக' இருக்கிறது. இதை எப்படி வேண்டுமானாலும் உபயோகப்படுத்தலாம். இந்தக் குற்றச்சாட்டை யார்மீது வேண்டுமானாலும், எந்த மடாதிபதியின் மீதாகிலும் சொல்லலாம். இன்னொரு இடத்திலே 'தனக்குப் பின்னர் பதவியில் வருகிறவரை நியமிப்பதற்குத். தமக்குள்ள அதிகாரத்தை செலுத்தி 6ஆம் பிரிவைச் சேர்ந்த (13)ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய திறமையில்லாதவரை அல்லது மடத்தை முறையாக நிர்வகிப்பதற்குரிய திறமையில்லாதவரை நியமிக்கிறார்' என்றுள்ளது. ஒரு வாரிசை ஒரு மடாதிபதி நியமிப்பாரானால், அவர் திறமையில்லாதவர் என்று ஆணையாளர் கருதுவாரானால், அவர்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திறமையுள்ளவர், திறமையில்லாதவர் என்பதை எதை வைத்து, எந்த அடிப்படையிலே





எந்த கோட்பாட்டை வைத்து முடிவுசெய்ய வேண்டுமென்பதில் தெளிவு இல்லை. இதனால், வேண்டாத விளைவுகள் பின்னால் ஏற்படலாம்.

அதைப்போலவே, இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு ஆணையாளர் அவர்கள் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றஞ் சாட்டுபவர் ஆணையாளர்; அவர்தான் விசாரணையை நடத்துகிறார்; நீதிபதியும் ஆணையாளர், விசாரணையின் முடிவிலே குற்றவாளியா இல்லையா என்று முடிவெடுத்து, தீர்ப்பளிக்க வேண்டியவர் ஆணையாளர் என்று இந்தச் சட்டத் திருத்தத்தின்படி ஆக்கப்பட்டிருக்கிறார்,

குற்றஞ் சாட்டுபவரும், விசாரணை நடத்துபவரும், விசாரணை முடிவு சொல்பவரும் ஒருவராக இருப்பது கொஞ்சம் கூட பொருத்தம் இல்லாதது, அதையும் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் சிந்தனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்று—இந்த விசாரணை முடிவில் ஆணையாளர் அவர்கள் ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டால் ஆணையாளர் அவர்கள் தீர்ப்பை எதிர்த்து எந்த நீதிமன்றமும் ஸ்டே வழங்க முடியாது. அதற்கு நீதிமன்றம் தடை வழங்குவது சட்டத்திருத்தத்தின் மூலம் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆணையாளர் முடிவை எதிர்த்து சிவில் கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிவில் கோர்ட்டுக்குப் போனால் என்ன ஆகும் என்று சொல்லத் தேவையில்லை. நான்கு ஆண்டுகள் ஐந்தாண்டுகள் பத்தாண்டுகள் கூட ஒவ்வொரு கோர்ட்டுக்கும் இழுக்கப்படலாம். அப்படி இழுக்கப்படுகிற காலத்தில் பதவியில் இருந்து விலக்கப்பட்டவருக்கு ஏராளமான பொருள் செலவாகும் சிரமங்களுக்கு ஆளாகி இந்தத் தீர்ப்பை எதிர்த்துப் போராட வேண்டிய நிலையில் இருப்பார். இதையும் அரசு சிந்திக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய இந்து சமயத்தைப் பொறுத்தவரை கோயில்களும் மடங்களும் இந்து சமயத்தின் முக்கியமான இரு அமைப்புகளாகும். — Two important institutions. இறைவனை வழிபட, பல்வேறு முறையில் வழிபட, கோயில்களும் சமயக் கல்வி, ஒழுக்கம், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பரப்ப மடங்களும் அந்த நாளில் ஏற்படுத்தப்பட்டன. எட்டாம் நூற்றாண்டில் வணக்கத்திற்குரிய ஆதிசங்கரர் முதலாம் மடத்தைஸ்தாபித்தது முதல் 13ம் நூற்றாண்டில் மெய்கண்டார் ஸ்தாபித்த சைவ சித்தாந்த மடங்கள் வரை ஏராளமான மடங்கள் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்றன.

இந்த மடங்கள் முறையாக நிர்வகிக்கப்பட வேண்டுமென்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. இதை நிர்வகிக்கின்ற வழிமுறைகளில் தான் கருத்து வேறுபாடு இருக்கிறது, மன்னர்கள் கோயில்களைக் கட்டினார்கள், மடங்களை நிர்வகித்தார்கள்.

மானியங்களை அளித்தார்கள். மன்னர்கள் மறைவிற்குப் பின்னர் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கையில் ஆட்சி வந்த காரணத்தால் அவர்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டார்கள். பிரிட்டிஷ் அரசு வந்தபிறகு அது அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது, அதற்குப் பின்னால் சுதந்திர அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மன்னர்கள் ஆண்ட காலத்திற்குப் பிறகு மக்கள் பிரதிநிதிகள் ஆண்ட காலம் வரை பல சட்டத் திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆனால் இதுவரை எந்த அரசாங்கமும் வழங்காத அளவுக்கு அதிகாரங்கள் ஆணையர் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆணையர் அவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசரே தவிர, அவர்கள் ஜுடிஷியல் ஆபீசர்கள் அல்ல. இதுபோன்ற பிரச்சினைகளில் முடிவு செய்கிற அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்குவது பின்னால் பல்வேறு சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் குறிப்பிட்டிருக்கிற பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் எந்த மடாதிபதியும் வருவாரானால் அவர் மீது குற்றம் சாட்டுகிற அதிகாரம் மட்டுமே ஆணையாளர் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அந்தக் குற்றச்சாட்டை விசாரிக்க தனியாக ட்ரிப்யூனல் அமைக்க வேண்டுமென்ற யோசனையை நான் அரசாங்கத்திற்கு அளிக்க விரும்புகிறேன். ட்ரிப்யூனல் அமைக்கப்பட்டால்தான் பாரபட்சமற்று அவர்கள் தீர்ப்பு வழங்க முடியும். அப்போது அரசாங்கத்தின் மீதோ, ஆணையாளர் மீதோ அவப்பெயர் வராது. ஆணையாளர் குற்றம் சாட்டலாம். தீர்ப்பு வழங்குவது ட்ரிப்யூனலாக இருக்கவேண்டும். அந்த ட்ரிப்யூனலுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படும்போது மத சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள். சாஸ்திரங்கள் ஆகியவற்றை உணர்ந்தவராக நியமிக்கப்பட வேண்டும். மதிப்பிற்குரிய சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் தலைமையில் இந்திய அரசு அமைத்த இந்து அறநிலைய கமிஷன் அறிக்கையில் இதை வலியுறுத்தி இருக்கிறார்கள். ட்ரிப்யூனல் மூலந்தான் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியிருப்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர வுரும்புகிறேன்.

[நண்பகல் 12.00]

இந்த ட்ரிப்யூனலின் தலைவராக நியமிக்கப்படக் கூடியவர் உயர்நீதி மன்ற நீதிபதியாக அல்லது அதற்குரிய அந்தஸ்து உள்ளவராக இருக்கவேண்டுமென்று அந்த கமிஷனரால் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ட்ரிபியூனலிலே இருக்கக்கூடிய மற்ற உறுப்பினர்கள் அரசாங்க நிதித்துறையிலே 10 ஆண்டுகள் அனுபவம் நிறைந்த மூத்த ஐ. ஏ, எஸ். அதிகாரியாக இருக்கவேண்டும், அதைப்போலவே மற்றவர்களும் மூத்த அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமான விஷயங்களிலே அந்த ட்ரிப்யூனலின் ஆலோசனைகளைப் பெறவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.





மடாலயத் தலைவர்கள், அற நிலையங்களின் தலைவர்களுக்கு வாரிசுகள் நியமனம், மதச் சம்பிரதாயங்கள் பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் முடிவுகள், கோயில்கள், மடங்கள் இவை சம்பந்தமான முக்கிய விஷயங்கள் ஆகிய அனைத்திலும் தலையிட்டு முடிவுசெய்யக் கூடிய அதிகாரம் ட்ரிபியூனலுக்குத்தான் இருக்கிறது, ஆணையர் எந்த விஷயமானாலும் டிரிபியூனலுக்கு ரெபர் செய்ய வேண்டுமே தவிர, அவர் முடிவான நடவடிக்கை எடுக்கக் கூடியவராக இருப்பது இந்து சமயத்தின் அடிப்படையே தகர்த்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆணையாளரின் ஆணையை எதிர்த்து சிவில் நீதிமன்றத்திற்குப் போகலாம் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திற்குப் போகலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் வீணான காலதாமதமும், பண விரையமும் ஏற்படும். இன்றைக்குள்ள நிலைமைக்கு இது பொருந்திவராது. இப்படி டிரிபியூனல் அமைப்பதின் மூலமாக இதைச் சீர்செய்ய முடியும், மத நம்பிக்கையுள்ளவர்களுக்கும் இதிலே நம்பிக்கை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். மடாதிபதியாக உள்ளவர் ஒருவரை ஆணையாளர் நீக்குகிறார். அதற்குப் பதிலாக உங்களால் நியமிக்கப்படுகிறவர் இருக்கிறார் என்றால் இந்த வழக்கை கோர்ட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் வழக்கை நீட்டிப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்யக்கூடிய முறையிலே டெக்னிக்கல் ஹர்டில்ஸ், லீகல் ஹர்டில்ஸ்—ஏற்படுத்திக்கொண்டே போகிற நிலைமைய இருக்கும். வழக்குகள் நீட்டிக்க நீட்டிக்க அந்தப் பதவியிலே நிலையாக அவர்கள் நீடிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். நேச்சுரல் ஜஸ்டில், இயற்கையான நீதிக்கு விரோதமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் இன்கம் டாக்ஸ் கமிஷனர்களை நியமிக்கிறார்கள். அவர்களுக்கு சகல அதிகாரங்களும் உண்டு. ஒரு நபருக்கு இவ்வளவு வருமானம் வந்திருக்கிறது, இவ்வளவு வரி கட்ட வேண்டுமென்று முடிவு எடுக்கிறார் என்றால் அவருடைய முடிவை எதிர்த்துசிவில்கோர்ட்டிற்குப்போகவேண்டுமென்றுசொல்லவில்லை அவர்கள். இன்கம்டாக்ஸ் டிரிபியூனலுக்கு அந்த ஆணையை எதிர்த்து போகக்கூடிய முறையை ஏற்படுத்தியிருக்கிறது இந்திய அரசாங்கம். அதைப்போல் ஒரு மடாதிபதி சம்பிரதாயங்களை மீறுகிறார் என்றால் அல்லது இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற மோசமான குற்றங்களிலே ஏதாவது ஒன்றைச் செய்கிறார் என்றால் அவர்மீது தவிர்க்க முடியாத நிலையில் நடவடிக்கை எடுத்து சஸ்பெண்ட் செய்கிற அதிகாரம் மட்டும் ஆணையாளருக்கு இருக்கவேண்டும். முடிவு எடுக்கக்கூடிய அதிகாரம் டிரிபியூனலுக்குத்தான் இருக்கவேண்டும். அவர்கள்

செய்கிற முடிவு தான் இறுதியானதாக இருக்கவேண்டும். அந்த முறையிலே அமைச்சர் அவர்கள் என்னுடைய ஆலோசனைகளை ஏற்று செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிறித்துவ மதத்திலே ஆர்ச் பிஷப் இருக்கிறார், இஸ்லாம் மதத்திலே மௌலிகள் என்ற மதகுருமார்கள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் நினைத்தாலும் நீக்கமுடியாது. வீணான கலவரங்களை அது உருவாக்கும். ஆனால் இந்து மதத் தலைவர்களை இந்தச் சட்டத்தின் மூலமாக நீக்கிவிடலாம். மதத்திலே உள்ள சீர்கேடுகளை அகற்றவேண்டுமென்ற நிலையை நானும் ஆதரிக்கிறேன். அதற்காக நானும் குரல் கொடுக்கிறேன். நிர்வாகச் சீர்கேடுகள் ஒழிக்கப்படவேண்டும். இந்துமதம் என்ன நோக்கத்திற்காக எற்படுத்தப்பட்டதோ ஸ்தாபித்தவர்கள் என்ன நோக்கத்திற்காக ஏற்படுத்தினார்களோ அதை நிறைவேற்றுவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் நான் மறுக்கவில்லை. ஆனால் இதுபோன்ற மத உணர்வுகள் உள்ள விஷயங்களில் ஜாக்கிரதையாகச் செயல்படுவது எல்லா வகையிலும் நல்லது ஆகவே, இதிலே ட்ரிப்யூனல் அமைக்க வழிவகை செய்ய வேண்டும். இதற்காக இந்தச் சட்ட முன்வடிவை அமைச்சரவர்கள் ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி தீர்க்கமாகப் பரிசீலனை செய்து மீண்டும் இங்கே கொண்டு வரும் படியாக நான் அவர்களுக்கு வேண்டுகோள் விட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இரண்டு மூன்று மணி நேரத்திற்கு முன்பு இந்த மாமன்றத்தைச் சேர்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திரு. புருஷோத்தமன் அவர்களும், திரு. என். வி. என். சோமு அவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அதைப் பற்றி இங்கே இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றி விசாரித்து அவைக்குச் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை நான் பொதுவாக ஆதரிக்கிறேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அறநிலையங்கள், சமயக் கட்டளைகள் ஆகியவைகளைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பொறுப்பானது, வரலாற்று ரீதியிலே ஏற்பட்டிருக்கிற காரணத்



தினால், மதச் சார்பற்ற அரசு என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே வரையறுக்கப்பட்டிருக்கின்ற பின்னணியிருந்தாலும், தமிழ்நாட்டிலே இந்தச் சொத்துக்களை, ஏராளமான சொத்துக்களை வைத்திருக்கும் இந்த அறநிலையங்களையும், அவற்றின் சம்மந்தப்பட்ட நிறுவனங்களையும் ஓரளவு கவனிப்பதற்கான ஒரு பொறுப்பைக் கடந்த பல ஆட்சிகள் இருந்த காலத்திலே அரசாங்கத்தினுடைய ஒரு துறையாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற யதார்த்த உண்மைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலேதான் அதிலே சில திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே, சொத்துக்கள் இல்லாத மடங்களையும், இந்தச் சட்டத்தினுடைய வரம்பிற்குள்ளே கொண்டு வரும் திருத்தம் ஒன்று.

அதைப்போல, மடங்கள் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அற நிலையங்களையும் இந்தச் சட்டத்தின் வரம்புக்குள்ளே கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய திருத்தம் மற்றொன்று.

அதைப்போல, இந்த மடங்களுக்கும் அதனுடைய அறநிலையங்களும் தங்கள் வசம் இருக்கின்ற நிதிகளைச் செலவழிக்கும் பொழுது ஒரு முறையாகச் செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அரசாங்கத்தின் முன் அனுமதியை சில நேர்வுகளில் பெற வேண்டுமென்ற திருத்தமும் இதிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இதேபோல அறநிலைய நிர்வாகத் துறை ஆணையாளருக்குச் சில அதிக அதிகாரங்கள் வழங்குகின்ற திருத்தமும் இதிலே வரப்பட்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிடும் பொழுது இதர மதங்களைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட வரையறை இல்லாத நிலைமையிலே இந்து அறநிலையங்களைப் பொறுத்தவரையில் மட்டும் இப்படிப்பட்ட வரையறைகளைக் கொண்டுவருவதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்திய அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு, மற்ற வகையிலே பொதுவாக ஏராளமான நிதியைக் கொண்டிருக்கின்ற இதர மதங்களின் நிறுவனங்களாக இருந்தாலும் அதிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கவனமும், ஒரு கண்காணிப்பும் இருக்க வேண்டியது பொறுத்தமாகத்தான் இருக்கிறது என்பதால் அவைகளுக்கும் இதை விரிவுபடுத்துவதற்கு வழிவகை காணவேண்டியது இன்றைய காலகட்டத்தின் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மசோதர அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். வக்ப் சொத்துக்களைப் பராமரிப்பு சம்பந்தமாக அதை ஏற்கனவே தவறான முறையில் எடுத்து வைத்திருப்பவர்களிடமிருந்து மீண்டும் பெறுவதற்கான முயற்சியாக திருத்தச் சட்டம் இங்கே பிரேரிக்கப்பட்டிருக்கிறது, அதுவும் இந்த வகையிலே சேர்க்கப்பட வேண்டியது தான்.

கிறித்தவ மதத்தைப் பொறுத்தவரையிலே எவ்வாறு அதிலே உள்ளவர்களால் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைக் காட்ட விரும்புகிறேன். சென்னையில் இருக்கும் அதன் பிஷப் அருளப்பா என்பவரிடம் யாரோ கணேச ஐயர் என்பவர், திருவள்ளுவர் ஒரு கிறித்தவர் என்று தான் ஆராய்ச்சி செய்து நிருபிக்கிறேன், அதற்காக பணம் ஒதுக்குங்கள் என்று கேட்டு அவர்கேட்டமாத்திரத்திலே அதற்காகலட்ச ரூபாய் ஒதுக்கி அவர் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி என்று செல்கிறார்.

[பிற்பகல் 12.10]

அவ்வளவையும் அவர் செலவழித்தற்குப் பிறகு இப்பொழுது வழக்கு போட்டிருக்கிறார், தன்னை ஏமாற்றி விட்டார் என்று. என்ன காரணம்? நான் பத்திரிக்கையிலே படித்தது, அந்த மதத்தைச் சேர்ந்த பலரே ஆர்ச் பிஷப் தங்களை மீறியும், தங்களுடைய சபையை மீறியும் இப்படிச் செய்து ஏராளமான நஷ்டத்தை உண்டாக்கி விட்டார்கள் என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இவ்வாறு ஏராளமான நிதியை வைத்திருக்கிற நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒருவகையான கண்காணிப்பும் மேற்பார்வையும் ஏற்படுத்தினால், அதிலே சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய அதற்காகப் பணம் ஒதுக்கங்கள் என்று கேட்டு அவர் கேட்ட மாத்திரத்திலேஅந்த மதங்களைப் பின்பற்றக் கூடியவர்களுக்கே கூட ஒரு பாதுகாப்பு கிடைக்கும் என்பதற்காகத்தான். ஆகவே, பொதுவாக, இந்தச் சட்டத்தை நிறைவேற்றியதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் எந்தத் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியும் இன்றி, விருப்பு வெறுப்புகளின்றி அரசாங்கம் இந்த பிரச்னைகளை நடுநிலையில் நின்று பரிசீலிக்கும் என்பதற்கான ஒரு ஏற்பாடு தேவை என்று நான் கருதுகிறேன். ஆகவே, ஆணையாளருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைக் கருதி, அரசாங்கத்தோடு ஏற்பாடு வைத்திருக்கக்கூடிய முறையில் ஒரு குழு என்ற முறையிலே ஏற்படுத்தலாம். ஆகவே ஒரு தனிப்பட்ட அதிகாரி அதைப்பற்றி முடிவு செய்கிறார் என்றில்லாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு இன்னும் சம்பந்தப்பட்ட, அந்தத் துறையிலே சம்பந்தப்பட்ட பல வல்லுநர்களுடைய ஆலோசனைகளோடும் செய்யும் முறை இருக்கலாம். ஆகவே, காழ்ப்புணர்ச்சிக்கு இடம் இல்லாமல் இருக்கும் என்ற ஏற்பாட்டைச் செய்வது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு வழி செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இச்சட்ட முன்வடிவின் 3—வது பக்கத்தில் 59 ஆம் பிரிவிற்குப் பதிலாகப் புதிய பிரிவுகள் என்பதில், ''59. மடத்தின் அல்லது மடத்தைச் சார்ந்த குறிப்பிட்ட அறக்கட்டளையின் அறங்காவலரை விலக்கி விடுதல்'' என்பதன் கீழ் ஆணையாளர் எப்பொழுது விலக்கலாம் என்ற காரணங்களைக் கூறி வேறு சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே சி பிரிவு ஒன்று. அதிலே 'இந்து மதத்தை அல்லது மடத்தில் கோட்பாடுகளைப் போற்றி நடப்பதிலிருந்தும் விலகிவிட்டார்' என்று சொல்லப்பட்டிருப்பது ஓரளவு விரோதமாக இருக்கிறது. இந்து மதம் கூட நாளாவட்டத்திலே, இந்த 20 ஆம் நூற்றாண்டிக்கேற்ப தங்களுடைய நிலைமைகளைத் திருத்திக் கொள்கிறது, பல்வேறு பிரச்னைகளைப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. அதிலுள்ளவர்களும் பல்வேறு சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்து மதம் என்றால், வேத காலத்திலே, உபநிஷத்திலே சொல்லியிருப்பதிலிருந்து ஒரு அட்சரம்கூட மாற்றக் கூடாது. அதை மாற்றி அவர் பேசுகிறார், ஆகவே அவர் இந்துமதக் கோட்பாடுகளிலிருந்து விலகிவிட்டார், என்று சொல்லக் கூடாது. இப்பொழுது உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன், குன்றக்குடி அடிகளார் ஒரு மடாதிபதி. அவர் மக்கள் சம்பந்தப்பட்ட பல விஷயங்களைப் பேசுகிறார், இலக்கியக் கூட்டங்களிலே கலந்துகொள்கிறார். ஆகவே, அது வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறதா என்று கேட்டு ஆகவே அவர் அதை மீறிவிட்டார் என்றில்லாமல், இந்து மதத்திலே உள்ளவர்கள், உலகத்திலே, இன்றைக்குள்ள விஞ்ஞான யுகத்திற்கு ஏற்றவாறு பல புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைப் பார்ப்பதும் கூடப் பொருத்தமாக இருக்கும். ஆகவே, அந்த சி பிரிவு தவறாகப் பயன்படுத்தக்கூடிய நிலையிலிருக்கக்கூடிய ஒருபிரிவு என்று நான் கருதுகிறேன். ஆகவே, அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், 'ஒழுக்கக் கேடான கெட்ட நடத்தையில் ஈடுபட்ட குற்றத்துக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்றால், டி பிரிவின் பிரகாரம், அவருக்கு இது பொருந்தும் என்று போடப்பட்டிருக்கிறது. கோர்ட்டின் மூலமாகவோ, அந்த மாதிரி ஏற்பாட்டிலே அப்படி குற்றத்தைச் செய்தார் என்று சொல்லப்பட்டதை இது குறிக்கிறது என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். அதை அடுத்து, இன்னொரிடத்திலே சொல்கிறார்கள், தங்களுடைய பெருமைக்கு இழுக்கு ஏற்படும் படியாக வாழ்க்கை நடத்துகிறார் என்று தெரிந்தால், அது நிரூபிக்க முடியாத ஒன்று. ஆகவே, அப்படிப்பட்ட பல காரணங்களை வைத்துக் கொண்டு பல தவறான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அது இடமளிக்கும். ஆகவே, இந்த டி பிரிவிலே இருப்பது ஒன்றே போதும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், எச் பிரிவிலே, 'அறங்காவலர் திருமணம் செய்து கொள்ள மாட்டார் என்று உறுதி பூண்டு மணமாகாதவராக இருக்க வேண்டும் என்னும் வழக்கம் அல்லது பழக்கத்திற்கு முரணாக மணமுடித்துக் கொண்டிரு

கிறார் அல்லது ஒழுக்கக்கேடான வாழ்க்கை நடத்துகிறார்....' என்று தெரிந்தால் அது குற்றமாகக் கருதப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு வளர்ந்திருக்கக்கூடிய யுகத்திலே மடங்களைச் சேர்ந்தவர்கள், பிரச்சாரம் செய்யக் கூடியவர்களாயிருந்தாலும், அவர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற அந்தப் பழக்கத்தை நாம் வற்புறுத்த வேண்டிய தேவையில்லை. ஒரு திருமணமாக இருந்தால் நன்றாக இருக்கும். அந்தத் திருமணத்தை நாம் அனுமதிக்காவிட்டால் அது பலதாரமாக அவதரிக்கும். அதுதான் சந்திரகாந்தா நாவலிலே வந்த சமாசாரங்கள். ஆகவே, மடாதிபதிகள் மடங்கள் சம்பந்தப்பட்ட இப்படிப்பட்ட பழக்கங்கள் இருக்கவேண்டுமென்றால் அதிகாரபூர்வமாக அவர்கள் திருமணம் செய்துகொள்வதை அனுமதித்துவிடலாம். கிறிஸ்தவ மதத்திலே ரோமன் கத்தோலிக்கர்களாக இருந்து பின்னாலே பிராடஸ்டன்டாக மாறியவர்களிடத்தில் அப்படிப்பட்ட திருத்தம் ஏற்பட்டது.

ஆனால் இந்த இந்து மதத்தைப் பொறுத்தவரையில் எந்த விதமான ரிபார்மேஷனும், சீர்திருத்தத்தையும் ஏற்படுத்தாமல் அந்தச் சூழ்நிலையில் பழமையை வைத்துக் கொண்டு இன்றைக்கும் சொல்லிக் கொண்டு இருந்தால் அதிலும் தவறு செய்கிறார்கள் என்று காரணம் காட்டி நீக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே 'எச்' பிரிவைப் பொறுத்தவரையில் இந்தத் திருமணம் என்ற விஷயத்திலே அவர்கள் திருமணம் செய்து கொள்வதே குற்றம் என்று கருதாமல் திருமணம் செய்யக் கூடாது என்பதை எடுத்துவிடவேண்டும். இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய சமுதாய இயல்புக்கு அது பொருத்தமாக இல்லை என்று அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி திருமணம் செய்ய அனுமதிக்கப்படாத காரணத்தால்தான் அவர்கள் பலவிதமான தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று அந்த மடங்களைப் பற்றி பொதுவாக நாட்டில் குற்றம் சாட்டி வருகிறார்கள். அதைத் தவிர்த்து விடலாம், ஆகவே இதைப் பற்றி அரசாங்கம் ஆழ்ந்து பரிசீலித்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல 'ஜே' பிரிவைப் பொறுத்தவரையில் ஒரு மடத்திற்கு தனக்குப் பின்னாலே வரக்கூடியவர்களை நியமிப்பதிலே அவர் திறமை இல்லாதவர்களை நியமித்தால் அந்தக் காரணத்தைக் காட்டி அவரை நீக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி திறமை இல்லாதவர்களை நியமித்தால் அந்த நியமனத்தை மட்டும் ரத்து செய்து விடலாம். அந்த அடிப்படையிலே அவர்களை நியமித்தவர்களுக்குத் தண்டனை என்ற முறை தேவையில்லை என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நான் சொல்லுகின்ற ஒன்று, அறங்காவலர்கள் தமக்குரிய அலுவல்களை செய்ய முடியாதவர்களாக இருந்தாலும்' என்ன 6-வது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது பொதுவாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் அதற்கான விதிமுறைகளை வகுக்கும்போது மிகுந்த கவனத்தோடு



காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, தனிப்பட்ட நபர்கள் பாதிக்காமல் இருக்கின்ற வகையில் அமைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் பொதுவாக இன்று இந்த சொத்துக்கள் நிறைய இருப்பதால்தான் பிரச்சினையே வருகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதைத்தான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறது. அவர்கள் அருள் காரியங்களில் ஈடுபடுவதற்காக பொருள்களை அவர்களிடத்தில் இருந்து எடுத்துவிடவேண்டும். ஏராளமான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை எல்லாம் அவர்கள் தலையிலே சுமத்தி அதை எப்படி நிர்வகிப்பது என்று தெரியாமல் அதைக் குத்தகை வாரத்திற்கு விட்டு விவசாயிகளுடைய உழைப்பை சுரண்டக்கூடிய காரியங்கள் தேவையில்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பே பேசியிருக்கிறார்கள். பல மாநிலங்களிலே சட்டம் நிறைவேற்றப்பட்டு, மடங்களுக்கு சொந்தமான நிலங்களை எல்லாம் உழுது பயிரிடுகின்ற விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டு அதற்குரிய நஷ்ட ஈட்டை அரசாங்கம் பெற்று அவர்களுக்கு ஆண்டுதோறும் தஸ்திக் அலவன்சாக அளிக்கவேண்டும். கேரளாவிலே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு நிலச் சொத்து இருந்ததோ அதற்கான வருமானத்தை ஆண்டுதோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நில சொத்துக்களைப் பொறுத்தவரை அந்த விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

அவர்கள் அருள் காரியங்களில் கவனம் செலுத்துவதற்கு நாம் உதவி செய்தவர்களாக ஆவோம். ஆகவே நிலச் சீர்திருத்தத்தை தீவிரமாக அமல்படுத்தி இந்த மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை, நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்ட விதிவிலக்குகளை ரத்து செய்து அந்த உழைக்கின்ற விவசாயிகளுக்கு அந்த நிலங்களைக் கொடுப்பதன் மூலமாக நாம் சரியான சீர்திருத்தம் செய்வோம் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு அரசாங்கம் இன்றைக்கு இந்தக் காரியங்களைச் செய்யும்போது ஒரு நியாயமான உணர்வுடனே இந்த சட்டத்தை அவர்கள் அமல் செய்வார்கள் என்ற அந்த நம்பிக்கையிலே இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்து சமய அறக் கட்டளை திருத்த சட்ட முன்வடிவை எதிர்க்கின்ற ஒரு நிலைமைக்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன். காரணம் இந்தச் சட்டத் திருத்தம் அரசியல் சட்டத்திற்கு முரணானது என்பது என்னுடைய அபிப்ராயமாக இருக்கிறது. இந்தச் சட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டாலும் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று அடிபட்டுப்போய்விடுமோ, அல்லது தவறானது என்ற சொல்லப்படுமோ என்று ஐயப்பாடு எனக்கு எழுந்துள்ளது.

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1981 ஆகஸ்ட் 29

அரசியல் சட்டத்தில் 25-வது ஷரத்தில் கொடுக்கப்பட்டிருப்பது Art. 25(2) (a): " regulating or restricting any economic financial political or other secular activity which may be associated with religious practice".

என்பதாகும். அதாவது சட்டத்தின் அடிப்படையில் நமக்கு வாரிசுதாரர்கள் யார்வருவார்கள், அல்லது மடாதிபதியை வீட்டுக்கு அனுப்ப முடியுமா என்ற அளவுக்கு அதிகாரம் எந்த அரசாங்கத்திற்கும் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அதே நேரத்திலே Art.26(a) "to establish and maintain institutions for religious and charitable purposes". என்று 26-வது ஷரத்திலே கொடுத்திருக்கிற காரணத்தினால் இப்படி அதிக அதிகாரங்களை நம் அரசாங்கம் இந்தச் சட்டமுன்வடிவினால் எடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இவைகள் உச்ச நீதிமன்றத்திலே வழக்காடப்படுமானால் whether it will be constitutional or not, என்பது எனக்கு ஐயப்பாடாக எழுந்துள்ளது.

[பிற்பகல் 12.20]

1959ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட இந்த சட்டமே, Hindu Religious and Charitable Endowments Act. 'எண்டோமெண்ட்ஸ் என்று சொன்னாலே, ஒன்றுமில்லாமல் என்டோமெண்ட்ஸ் வர முடியாது. சொத்துக்கள் இருக்க வேண்டும். ஆனால் இந்த சட்டத் திருத்தத்திலே என்ன கூறுகிறார்கள், 2(15) 'Math means a Hindu Religious Institution with or without properties' எண்டோமென்ட்ஸ் எப்படி வரும். இந்த சட்ட திருத்தமே எண்டோமென்ட்ஸ் இருக்கிறதினால் தான் இந்து ரெலிஜியஸ் எண்டோமென்ட் ஆக்ட். ஆண்டிகள் வைத்திருக்கிற மடங்களையா நாம் எடுத்துக் கொள்ளப் போகிறோம். will it come under the Hindu Religious Endowment Act? அதுவே எனக்கு ஒரு விந்தையாகத் தான் இருக்கிறது. அடுத்தப்படியாக கோவில்கள் என்பதற்கு பதிலாக Religious institutions including Mutts என்று சொல்கிறார்கள். கோவில்கள் என்பது வேறு; மடங்கள் என்பது வேறு. கோவில்கள் என்பது பொது சொத்துக்களாலே அல்லது பொது பணத்திலிருந்து, அரசாங்கத்தினாலும், ராஜாக்களினாலும் கட்டப்பட்ட இடங்கள். அங்கே யார் வந்தாலும், பிற சமயத்தை, பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் கூட வந்து தொழுகை நடத்துகிறார்கள். சமீபத்திலே திருப்பதி உண்டியலிலே ஒரு இஸ்லாமியர் ஒரு லட்ச ரூபாய் பணம் போட்டதாக பத்திரிக்கையிலே செய்தி வந்திருந்தது.

ஆனால் மடங்கள் என்று சொல்கிற போது, தனிப்பட்ட நபர்கள் தங்களிடம் இருக்கிற சொத்துக்களை ஒரு நம்பிக்கையுடன், அதைப் பரப்புவதற்காகவும் குறிப்பிட்ட ஆசாரங்கள், கலாச்சாரங்கள், கோட்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட நபர்களுடைய ஸ்தாபனமே தவிர



1981 ஆகஸ்ட் 29] [டாக்டர் கே. சௌரிராஜன்]

அது பொதுமக்களுடைய வரிப் பணத்திலிருந்தோ அல்லது அரசாங்கத்தினாலோ ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனம் அல்ல என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக Removal of Trustees by the Mutt or specific endowment attached thereto. ஆகவே எனக்கு முன்னாலே பேசியவர்கள் மிக அழகாகச் சுட்டிக் காட்டினார்கள். இப்படிப்பட்ட அபரிமிதமான, எல்லையில்லாத கட்டுக்கடங்காத நிர்வகிக்க வேண்டிய பொறுப்புடைய இவற்றை அதிகாரிகளாலே, ஒரு அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாலே நிர்வகிக்க முடியுமா என்றால் என்னை பொறுத்தவரையில் நியாயமாக பயன்படுவதை விட்டு, தவறாக பயன்படுவதற்கு தான் வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகம சாஸ்திர விதிகளை அறிந்தவர்கள் நிச்சயமாக இந்த அற நிலையங்களுடைய ஆணையாளர்களாக வருவத்றகு வாய்ப்பு இருப்பதில்லை. ஆகவே மடாதிபதிகளுக்கு பிறகு அவருக்கு வாரிசாக வரவேண்டியவர்கள் யார், அவர்களுக்குள்ள தகுதி என்ன? என்னென்ன தகுதிகளிலிருந்து அவர்கள் தவறிவிட்டார்கள் என்று நிர்ணயிக்க வேண்டியதை சாதாரணமாக சட்டத்தைப் படித்தவர்களாலே, அல்லது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஹெட்டால் செய்யக்கூடிய காரியமல்ல, என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயம்.

அடுத்தபடியாக 59.(f) Waste of the funds or properties of the institution or the wrongful application of such funds or properties for purposes unconnected with the institution. உதாரணமாக சொல்கிறேன். இப்போது மழை இல்லாத வறட்சி. எங்களுடைய இந்து தர்மப்படி 'ருத்ர ஜெபம்' செய்வோமேயானால் நிச்சயமாக மழை வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே ஒரு மடாதிபதி 'ருத்ர ஜெபத்திற்கு' பணம் செலவிடுகிறார் என்று சொன்னால் நிச்சயமாக அதை it is unconnected with the institution- என்று சொல்லி அவர் மேல் தவறான குற்றச்சாட்டுகளை சொல்லி அவரை அந்த நிலையிலிருந்து நீக்கக் கூடிய அளவிற்கு கூட அரசாங்கம் பயன்படலாம். ஆகவே இப்படி அதிகமான அதிகாரத்தை அரசாங்கம் குவித்து, குவித்து வைப்பதனால் வரக்கூடிய விளைவை இப்போதே முன் எச்சரிக்கையாக உங்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன். இதுகாறும் அரசாங்கத்தில் உள்ளவர்களையும், அரசியல்வாதிகளையும், அமைச்சர்களையும், தொழில் அதிபர்களும் மற்றவர்களும்தான் சுற்றிக் கொண்டிருப்பதை பார்க்கிறோம். ஆனால் இந்த சட்டம் வருமேயானால், மடாதிபதிகளும் கூட அமைச்சர்கள் வீட்டு வாசலில் அல்லது அரசியல்வாதிகள் வீட்டு வாசலில் பார்க்கக்கூடிய, இந்த காணத்தகாத காட்சியை நான் காண தயாராக இல்லை என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெற்று, இதை இந்து ரெலிஜியஸ் அண்ட் சாரிட்டபிள் எண்டோமென்ட்ஸ் ஆக்ட்டை மொத்தமாக ஒரு பொறுக்கு குழுவிற்கு விட்டு, a comprehensive Act must be framed again.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவ
ஙவர்களே, இன்று 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்
கட்டளைச் சட்டத்தை அரசு கொண்டு வந்திருப்பதற்காக
என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து, இந்த சட்டமுன்
வடிவை வரவேற்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அருமை டாக்டர் அவர்கள் பல
கஷ்டங்களை எல்லாம் சொன்னார்கள். அவர் கஷ்டங்களைச்
சொன்னாலும் முடிக்கும்போது ஒரு 'காம்பிரிஹென்சிவ் ஆக்ட்'
வரவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டார். குறைந்தபட்சம்
அதையாவது ஒப்புக்கொண்டதற்காக அவருக்கு என்னுடைய
பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து என்ற முறையில் என்னைவிட அவர் நிச்சயமாக
அதிகமாகத் தெரிந்திருப்பார். மடங்களில் நல்லவர்கள் இருக்
கிறார்கள். இல்லை என்று நான் சொல்லல்லை. ஆனால் அவர்
களிலே பலர் எவ்வளவு பாதகமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்
என்பதை டாக்டர் அவர்கள் மறைக்க மாட்டார்கள், மறுக்க
மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

நான் மடாதிபதிகளோடு அதிகத் தொடர்பு உடையவன்
என்ற முறையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.
அருமை சகோதரர் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த திரு.
சங்கரய்யா அவர்கள் இங்கே ஒரு நல்ல விளக்கத்தைச் சொன்
னார்கள். கிறிஸ்தவ மதத்தில் பிஷப்பாக இருக்கிற ஒரு
பெரியவர், மதத்திற்காகப் பாடுபட்டவர், திருவள்ளுவரையே
கிறிஸ்தவரா க மாற்றும் எண்ணத்தோடு ஆதாரங்களைத் திரட்ட
கணேச ஐய ர உலகம் சுற்றிவரச் செய்து, அதற்காக 15
இ ட்சம் ரூபாய் கொடுத்தார் என்ற செய்தி பத்திரிகையிலே
வந்தது, என்று சொன்னால் அது உண்மைதான். பண்போடு
பழகுகின்றவர்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்வார்கள். அந்த
மதத்தின் பிஷப் அவர்கள், மார்ட்டின்லூதர் கிங்குக்குப் பிறகும்,
பல இலட்சம் ரூபாய் கொடுத்து திருவள்ளுவரை கிறிஸ்தவராக
மாற்ற முயற்சி செய்து, வள்ளுவரை கிறிஸ்தவராக மாற்றலாம்
என்ற ஆசை வந்த பிறகு டாக்டர் கருத்தை நான் ஏற்றுக்
கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே அருமை சகோதரர் நெடுமாறன் அவர்கள்
பேசுகின்றபோது சர்.சி.பி. இராமசாமி ஐயர் நிலையை எடுத்துச்
சொன்னார்கள். அன்றைக்கு நான் டெல்லி சட்டசபையில்
உறுப்பினராக இருந்தேன். சர்.சி.பி. இராமசாமி ஐயரை நான்
நன்றாக அறிவேன். இந்து மதத்தை திருவிதாங்கூரிலே காப்
பாற்றிய பெருமை அவருக்கு உண்டு. அவருக்கு உண்மையி
லேயே நாம் எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்
தாலும் சிதம்பரம் கோவிலை அவர் ஏன் விட்டுவிட்டார்?
அன்றைக்கு சிதம்பரம் கோவிலில் 3,000 தீட்சிதர்கள் இருந்
தார்கள். இன்றைக்கு 300 பேர்கள் கூட இருக்கமாட்டார்கள்.



சர்.சி.பி. இராமசாமி ஐயர் அவர்கள் பரந்த நோக்கம் உடைய
வர்கள், நல்ல அறிவாளியும்கூட. ஆனால் என்ன காரணத்தால்
சிதம்பரம் கோவிலை விட்டுவிட்டார்? காரணம் என்னவென்
றால் சுப்ரீம் கோர்ட்டில் பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் அளித்த
தீர்ப்புதான். அன்றைக்கு இந்து மதத்தில் இருந்தவர்களே,
அதைப்பற்றி சரியாகத் தெரியாத நேரத்தில், அந்த தீர்ப்பை
ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்தார்கள் என்றால் அது
கிட்டத்தட்ட 'எக்ஸ்பார்ட்டி' தீர்ப்பு என்றுதான் சொல்ல
வேண்டும். சிதம்பரம் நடராஜர் கோவிலிலே தீட்சிதர்களுக்கு
பங்கு இருக்கிறது என்றால் நாங்கள் பிறந்த நந்தன் சமுதாயத்
திற்கும் அந்தக் கோவில் சொத்திலே பங்கு இருக்கிறது. எங்க
ளுக்கும் அதிலே உரிமை கொடுக்க வேண்டும். ஏனென்றால்
நடராஜரோடு வந்தவரும் உண்டு, நடராஜரோடு ஐக்கியமான
வரும் உண்டு. நடராஜரோடு வந்தவர் தீட்சிதர், ஐக்கிய
மானவர் நந்தனார். ஆகவே, நியாயம் என்ற முறையிலே
அதிலே எங்களுக்கு பங்கு இருக்கிறது. அதற்கு ஆதாரமாக
பராந்தகச்சோழன் பொன்னோடு வேய்ந்த சரித்திரம் இருக்கிறது;
அவன் கொடுத்த தங்க பாளம் இருக்கிறது. ஆகவே, தீர்ப்பிலே
தவறு இருக்கிறது.

இன்றைய அரசு மிக நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்த
சட்டத்தை, சட்டத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சிறு
பான்மையின் பெயரால் எதிர்த்து, ஹைகோர்ட்டுக்குப் போயி
ருப்பதினால் நான் அதிலே அதிகமாகப் பேச விரும்பவில்லை.
ரிட் போட்டு $1\frac{1}{2}$ மாதம், 2 மாதம் ஆகிவிட்டது. நம்முடைய
அரசாங்கம் இதிலே பல தொல்லைகள் வந்துவிடுமோ என்று
எண்ணி வாளா இருந்துவிடுவார்களோ என்ற பயம் கூட எனக்கு
உண்டு. நம்முடைய அமைச்சரவர்கள் பகுத்தறிவு பாசறையில்
இருந்தாலும் கொடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து
முடிப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இதிலே
அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

சகோதரர் நெடுமாறன் அவர்கள் சீர்திருத்தக் கருத்து உள்ள
வர்கள். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர்களே,
ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தவறுகின்றவர்களைக் கண்டிப்
பேன், இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன் என்று சொன்னாலும்
சர்.சி.பி. இராமசாமி ஐயர் உட்பட அத்தகைய பெரியவர்களும்
சிதம்பரம் கோவிலை விட்டுவிட்டார்களே என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்தச் சட்டத்திலே சொல்லியிருப்பது, சகோதரர்
நெடுமாறன் அவர்கள் சொன்னதைப்போல, விசாரணை செய்கிற
அதிகாரி ஒருவர், தண்டனை கொடுக்கும் அதிகாரி அல்லது
நீக்கம் செய்கிற அதிகாரியும் அவரே என்றால் அவருடைய முடிவு
எப்படி இருக்கும் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும்.
ஆகவே, அதற்கு ஒரு ட்ரிபியூனல் அமைக்கப்பட வேண்டும்.
ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக்கொண்டு, அல்லது ரிட்டயரான ஜட்ஜை

களைக் கொண்டு ஒரு ட்ரிபியூனல் அமைப்பது நல்லது என்று கருதுகிறேன். அமைச்சரவர்கள் அதற்கு அரசாங்கத்தின் சார்பி லேயே திருத்தம் கொண்டு வரலாம்; கொண்டுவருவார்கள் என்று நான் நம்புகிறேன்; அதை வலியுறுத்துகிறேன்.

[பிற்பகல் 12.30]

நல்ல காரியத்தைச் செய்கின்றபோது நல்ல முறையிலே செய்து நல்ல பெயரை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு கோயில் பெயராலே நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிதம்பரத்திலிருந்து காட்டு மன்னார் கோவிலுக்கு 25 மைல் தூரம் இருக்கும் வெள்ளைக் காரன் காலத்திலே 1894-ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட அந்த நிலத்தினை ஊரிலே பெரிய உத்தமர்களாக இருந்த கணக்குப் பிள்ளைகளும், மணியக்காரர்களும் அதை நடராஜன் கோயில் நிலம் என்று மாற்றிக்கொண்டு தற்போது 25 ஆண்டுகள் ஆகிய பிறகும் அங்கே இருக்கின்ற அரிஜனங்களுக்குப் பட்டா கொடுக்கப் படாத நிலைமைகள் இருக்கின்றன. ஸ்ரீரங்கத்திற்கும் லோயர் அணைக்கும் இடையே 90 மைல்கள் இருக்கின்றன. ஆனால், ஸ்ரீரங்கம் ரங்கநாதனுக்குச் சொந்தமான நிலம் என்று அதை வைத்துக் கொண்டு ஊரிலே உள்ள பெரியவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழை மக்கள் குடியிருக்கின்ற நிலத்திற்கு இன்னும் பட்டா கொடுக்கப்படாமல் இருக்கின்றது.

அடுத்து இப்போது மதமாற்றம் நடந்த மீனாட்சிபுரத்திலே 1,527 ஏக்கர் நிலம் திருவாவடுதுறைக்குச் சொந்தமாக இருக் கின்றது. அந்த இடத்திலே புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அதையும் திருவாவடுதுறைக்குச் சொந்தமானது என்று சொல்லிக் கொண்டு அந்தப் புறம்போக்கு நிலத்திலே குடியிருக்கின்ற மக்க ளுக்கு இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. ஆகவே இப்படிப் பட்ட நிலைமைகள் எல்லாம் இருப்பதன் காரணத்தால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவு நல்ல தொரு சட்ட முன்வடிவு. ஆனால் விசாரணை செய்வதும் நீக்கு கின்ற அதிகாரம் உடையவரும் ஒருவர் என்ற நிலை இல்லாமல் நல்லமுறையிலே விதிகளை ஏற்படுத்தவேண்டும்.

அடுத்து இதன் மூலம் கிடைக்கின்ற பணத்தை ஏழை மக்களின் கல்விக்காகவும், தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்திற் காகவும், கண் இழந்தவர்கள், கை இழந்தவர்கள், விதவைகள் ஆகியோருக்கு என சிறு தொழில்கள் ஏற்படுத்தவும் இந்தப் பணத்தை உபயோகிப்பதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அறக்கட்டளைகள் தகுந்த முறையிலே ஒழுங்காக நடைபெறுகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.





அடுத்து இங்கே பேசிய சகோதரர் அவர்கள், மடாதிபதிகள் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொன்னார். அது அவர்களுடைய சொந்த விஷயம். மேலும் கல்யாணத்திலே அக்கறை வருமானால் அவர்களுக்கு சந்ததிகள் ஏற்படும். அந்த நிலையிலே சந்ததிகள் வருமேயானால் பிறப்புரிமையின்படி சொத்துக்களைக் கொடுக்க வேண்டும் என்பது போன்ற நிலைமைகள் ஏற்படும். அருமை நண்பர் திரு. சங்கரய்யா அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்லியிருந்தாலும் கூட அந்தக் கருத்தை என்னாலே வரவேற்க முடியாது. அந்தக் கருத்தும் நல்லதும் இல்லை. ஆகவே அந்தக் கருத்தினை வரவேற்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே அதனால் பல தொல்லைகள் ஏற்படும் என்றும் அது நல்லதல்ல என்றும் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) அப்படி இல்லை என்றால் இல்லீகல் ஆக தவறுகள் செய்கின்ற நிலைமை ஏற்படும் என்று திரு. ரமணி அவர்கள் சொல்கிறார்கள். கல்யாணம் செய்து கொண்ட நாம் கூட லீகல்லாகவே இருப்போமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு சமயத்திலே ஒழுக்கக்கேடு வந்துவிட்டது என்றால் அதற்கெல்லாம் காரணம் அரசியல்வாதிகள் தான். ஆண்டவன் இருக்கின்றானோ இல்லையோ அந்தப் பெயரால் ஒரு பயத்தை மக்களுக்கு உண்டுபண்ணினார்கள் அல்லது சட்டத் திற்கு ஒரு மரியாதையையாவது வைத்திருந்தோம். அதையும் இப்போது கெடுத்து விட்டார்கள். ஜெயிலுக்குப் போனால் அவமானம் என்ற அந்த நிலைமையையும் மாற்றிவிட்டார்கள். இதுபற்றி எல்லாம் நான் பேசுகின்றபோது ஏதோ மடாதிபதி களுக்காக வக்காலத்து வாங்குவதாக எண்ண வேண்டாம். குர்ரானையும், பைபிளையும் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா? ஏதோ ஏமாந்த மதம் இந்து மதம் என்று சொல்கின்ற வகை யிலே ஒரு பாவமான காரியத்தைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் 60-ஏ என்று கொண்டுவந்திருப்பதைப் பாராட்டினாலும் மீண்டும் நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் நீக்குகின்றஅதிகாரமும், விசாரிக்கின்ற அதிகாரமும் ஒருவருக்குத்தான் என்று இருக்கக்கூடாது.

இங்கே பேசிய டாக்டர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன் னார்கள். நான் 41-ம் வருடத்திலே நேர்ந்த என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்லவிரும்புகிறேன்.

நான் பள்ளிப் பிள்ளையாக இருந்த காலத்திலிருந்து அரசிய லுக்கு வந்ததற்குப் பிறகும் செத்த மாமிசத்தைச் சாப்பிடக் கூடாது என்று சொல்லி வருகிறேன். அந்தக் காலத்திலே செத்த மாட்டுக்கறியை ஒருவன் ஆக்கினான், அதிலே இளையபெருமாள் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக் கொளுத்தினான் என்று கூறி எனக்கு தண்டனை கொடுத்தார்கள், 6 மாதம் ஜெயில் தண்டனை.

ஆனால் நான் உண்மையைச் சொன்னாலும் எனக்கு 6 மாதம் ஜெயில் என்று தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, பவன்நகர் மகாராஜா வந்த பிறகு, அவர் சொன்னார், இந்து சமயத்திலே இருக்கிறவர்கள் இறந்த மாமிசங்கள் உண்ணக்கூடாது. செத்த மாமிசங்கள் நோய்க்கிருமிகள் உற்பத்தியாக காரணமாகின்றன. ஆகையினால் இந்துமதம் அதை அனுமதிக்கவில்லை. ஆகவே, இந்துவாக இருக்கும் ஒருவன் அதை சாப்பிடக்கூடாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். அவர் படித்தவர், தெய்வ நம்பிக்கை உள்ளவர், மதத்திலே பற்றுள்ளவர், நல்லமனம் படைத்தவர். கடைசியில் எனக்கு அவர் சட்டத்தை வைத்துத் தான் 46லிருந்து 49 வரை கேஸ் நடந்து, அவருடைய சட்டத்தின் அடிப்படையிலே தள்ளப்பட்டது: ஹைகோர்ட்டிலே அவர் சொன்ன உத்தரவை வைத்துத்தான் எனக்கு விடுதலை கிடைத்தது ஒரு தங்க பதக்கமும் பரிசாக கிடைத்தது.

இதை ஏன் சொன்னேன் என்றால், சட்டங்களைக் கொண்டு வருவதிலேயிருக்கிற கஷ்டங்களை, அதிலுள்ள இடையூறுகளைச் சொல்லவேண்டுமே தவிர, அந்தச் சட்டம் செல்லாது. சுப்ரீம் கோர்ட் போகவேண்டும் என்றெல்லாம் சொல்லக்கூடாது. சட்டங்கள் மனிதனின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்றுதான், நாம் இங்கே கூடியிருக்கிறோம். மனிதனை ஏமாற்றுகிறவர்களுக்கும் மனித வர்க்கத்தை சுரண்டுகிறவர்களுக்கும், நாய்க்கும், கழுதைக்கும் கிடைக்கும் மரியாதை கூட கிடைக்காது. இந்த நாட்டிலே தீண்டாமை ஒழிப்பு சட்டம் கொண்டு வந்தால், கேட்கிறார்கள் இது சட்டப்படி செல்லுமா என்று. ஸ்ரீ சங்கராச்சாரியார் சொல்லுகிறார் 'ஆம்' இந்து சமுதாயத்திலே தீண்டாமை இருக்கிறது என்று. வேறொரு சங்கராச்சாரியர் சொல்லுகிறார் இல்லை இல்லை 5 வர்ணங்கள் இருக்கின்றன என்று. இன்னொரு சங்கராச்சாரியர் சொல்லுகிறார், இந்து சமயத்திலே 4 வர்ணங்கள் தான் இருக்கின்றன என்று. ஆனால் இந்த ஆதிதிராவிட மக்கள் எந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் என்று இன்னமும் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

நெற்றியிலேயிருந்து பிறந்தவன்-பிராமணன். தோளிலேயிருந்து பிறந்தவன் க்ஷத்திரியன், தொடையிலேயிருந்து பிறந்தவன் வைஸ்யன், காலிலேயிருந்து பிறந்தவன் சூத்திரன் என்று சொல்லுவார்கள். எங்களுக்கு பிறந்த இடம் சொல்லவில்லை. ஒருக்கால் நாங்கள் உண்மையான, இடத்திலிருந்து பிறந்தவர்கள் என்பதால்தான், சொல்லவில்லையோ என்னவோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. இந்தச்சட்டத்தைச் செல்லாது என்று கேட்கிற போது, எனக்கு பதஞ்சலி சாஸ்திரிகள் கொண்டு வந்த சட்டம் இன்றைக்கு நினைவு வருகிறது. 1952 ஆம் வருஷம் பாரதிநாள் கொண்டாடினோம். அன்று மறைந்து போன சகோதரர் ஈ.வி.கே. சம்பத் அவர்கள் இருந்தார்கள். ராமமூர்த்தி அவர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் இருந்தபோது பாரதிவிழா நடந்தது. அதிலே திரு. வெங்கடரமணன் அவர்கள் மறைந்துவிட்டார்கள், அவரை நான் குறை கூறுவதற்காக சொல்லவில்லை, நடந்த விவரத்தைச் சொல்லு



கிறேன்—இந்த மசோதாவை வரவேற்கிறபோது, அதற்கு உதவியாக இருக்கக்கூடிய எண்ணங்களையும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது—அவர் கூட சொன்னார்கள், நாங்கள் எல்லாம் நாடு கடத்தப்பட்டிருக்கிறோம் நாட்டைவிட்டு துரத்தப்பட்டிருக்கிறோம் என்று ஆரம்பத்தில் பேசினார்கள். அப்படி அவர் பாராளுமன்றத்திலே சொன்னபோது, நம்முடைய தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் யாராவது பேசுவார்களா என்று எதிர் பார்த்தேன். ஒருவரும் அதை பேசும்போது குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கடைசி சான்ஸ் எனக்குக் கிடைத்தது. நான் சொன்னேன், நீதிபதி வெங்கட்ரமணன் அவர்கள் எங்களுடைய தாலுக்காவைச் சேர்ந்தவர்கள், குமராட்சி கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மிகுந்த அறிவாளி. அவர்கள் எல்லாம் நாடு கடத்தப்பட்டு விட்டதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ஒன்றை நினைவு படுத்துகிறேன். பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் சிதம்பரத்தின் கோயிலை, நூற்றுக்கணக்கான தர்மிஷ்டிகள், செட்டிமார்கள் சேர்ந்து வளர்த்த கோவிலை, ராஜராஜசோழன்—பராந்தகச்சோழன் கொடுத்த கோவிலை ஒரு தனிப்பட்ட தீட்சிதருக்கு சொந்தம் என்று எப்படிச் சொன்னார்? ஆகவே இந்த லோகத்தில் மட்டும் அல்ல, மேல் லோகத்திற்கு போனாலும் கூட அவரிடம் போய் நியாயம் கேட்கவேண்டும். அதைத்தான் சொல்வார் என்று எதிர் பார்த்தேன், ஆனால் வெங்கடரமணன் அவர்கள் எப்படி இவ்வாறு சொன்னார் என்று கேட்டபோது, அவை முடிந்து விட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஏன் இதைச் சொன்னேன் என்றால், நம்முடைய டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னதுபோல, சட்டம் என்பது மனிதர்களுக்காக மக்களுக்காக மக்களால் அனுப்பப்பட்ட சர்க்காரால், சூழ்நிலை சந்தர்ப்பத்தை உத்தேசித்து, மனிதர்கள் மனிதர்களின் நலனுக்காக இச்சட்டங்களை நிறைவேற்றுகிறோம் என்பதை சொல்லி, அருமை சகோதரர் நெடுமாறன் அவர்களும் சங்கரய்யா அவர்களும் சொன்னதைப்போல அதிக அதிகாரங்களில் சற்று கவனம் செலுத்தவேண்டும், டிரிபியூனல் குழு ஒன்றை உண்டாக்க வேண்டும். இந்தச் சட்டங்களின் மூலமாக மடங்களிலும் ஆதீனங்களிலும் அக்கிரமங்கள் நடைபெறாமல் நாம் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அறங்காவலர்களை நியமிக்கிறபோது, அது எந்தக் கட்சியாளராக இருந்தாலும் சரி, அந்த மதத்திலே நம்பிக்கையுள்ளவராக அவர் இருக்க வேண்டும். அந்த மதத்தைப் பற்றி அவர் புரிந்திருக்கிறாரா என்பதைப் பார்க்கவேண்டும். அந்த மதத்தின் நலனிலே அக்கறை உள்ளவரா என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த மூன்றிலேஏதாவது ஒன்றாவது அவருக்கு இருக்கிறதா என்பதைப் பார்த்தாவது அந்த நியமனம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றுமே இல்லாமல், காங்கிரஸ் கட்சிக்

காரரான நான்சொல்கிறேன் என்பதற்காக சிலரையும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள் என்பதற்காக சிலரையும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள் என்பதற்காகச் சிலரையும் போடுவது கூடாது. நியாயமான அடிப்படையில் செய்வதற்கு நம்முடைய அரசையும் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு, கடைசியாக சர்.சி.பி.ராமசாமி அவர்களுடைய கமிட்டி ரிப்போர்ட்டை நான் அமைச்சரிடத்திலே கொடுக்கிறேன். அதைப்படித்து, என்ன சொல்லியிருக்கிறது என்பதை பார்த்து, மேலும் மத்திய அரசின் உதவி இதற்கென ஏதாவது தேவைப்பட்டால், இந்திய அரசாங்கத்திடமும், இந்திய பிரதமரிடமும், எடுத்துச் சொல்லி நிறைவேற்ற என்னுடைய சக்திக்கு முடிந்த அளவு செயல்பட, நானும் எங்களுடைய காங்கிரஸ் கட்சியும் உறுதுணையாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, டிரிபியூனல் குழு போடும்போது, சாஸ்திரம் படித்தவர்கள், மதத் தலைவர்கள் போன்றவர்கள்தாம் அதிலே இடம்பெறவேண்டும் என்று வைக்காமல் அப்படி போட்டால் இனிமேலும் ஆபத்து வரும்—ஆகையால் நன்கு படித்தவர்கள், அறிவாளிகள், கல்விமான்கள், ரிடையர்டு ஜட்ஜுகள் போன்றவர்கள் தான் டிரிப்பியூனலில் இருக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த பில்லை வரவேற்று வாழ்த்தி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12.40]

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் திருத்த சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மடாலயங்கள் மீது அதிக ஆதிக்கம் செலுத்துவதற்கு வழிவகை செய்கிற வகையில் ஆணையாளருக்கு அதிக அதிகாரங்களை அளிக்கிற வகையில் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கிருத்துவ மடாலயங்கள் மீதோ அல்லது முஸ்லீம் பள்ளிவாசல்கள் மீதோ நாம் கொண்டுவரமுடியாத ஒரு சட்டத்தை இந்து அறநிலயங்கள் மீது, மடாலயங்கள் மீது இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் இங்கே கொண்டுவந்திருக்கிறோம். நான் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறநிலையங்களை நிர்வகிப்பதற்கு அல்லது கண்காணிப்பதற்கு ஏற்கனவே நம் சட்டத்தில் வழிவகைகள் இருக்கின்றன. இந்த மடாலயங்களை கவனித்துக்கொள்ள அல்லது கணக்குகளை தணிக்கை செய்ய இந்து சமய அறநிலையத் துறையில் தனியாக ஆடிட் விங் என்று இருக்கிறது. தணிக்கைத் துறை தனியாக இருக்கிறது. எனவே இந்த மடங்களை அல்லது கோவில்களை கண்காணிக்க அல்லது ஆதிக்கம் செலுத்த மேற்கொண்டும் இந்தச் சட்டம் தேவை இல்லை என்று நான் கருதுகிறேன். காரணம், மடாலயங்கள் மீது நம் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு தனிக் கவனம் ஏற்பட்டிருக்கிறது, அண்மைக்





காலத்தில். எனவே குறிப்பிட்ட ஒன்றிரண்டு மடங்களைக் கவனத்தில்கொண்டு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இன்றையதினம் ஆணையருக்கு இந்த மடாலயங்களை ஆதிக்கம் செலுத்த அதிகாரங்கள் கொடுப்பதில் எனக்கு கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் முன்னமேயே ஆணையருக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முறையாகப் பயன்படுத்தப் படுகின்றனவா என்பதை நாம் இந்த நேரத்தில் கவனித்துப் பார்க்க வேண்டும். இன்றையதினம் குற்றாலத்தில் உள்ள ஆதிகேசவப்பெருமாள் கோவில், மன்மத ஈசன் கோவில் அறங்காவலர்களாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை ஆணையாளர் நியமித்திருக்கிறார்கள்.

அந்த அறங்காவலர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை நீக்கவேண்டும் என்றும் தனி அதிகாரியைப் போட்டு அந்தக் கோவில்களை நிர்வகிக்கவேண்டும் என்றும் கும்பகோணம் உதவி ஆணையாளர் ஆணையாளருக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். இருந்தாலும் ஆணையாளர் உதவி ஆணையாளரின் பரிந்துரையை மறுத்து மீண்டும் அதே அறங்காவலர்தள் பணியில் ஈடுபடவும், கூடுதல் அறங்காவலர்களை நியமித்தும் ஆணையிட்டிருக்கிறார்கள். இதைச் சொல்லக் காரணம், முன்னமேயே ஆணையாளருக்கு தேவையான அதிகாரங்கள் கொடுத்திருந்தும் இப்போது கூடுதல் அதிகாரங்களைக் கொடுப்பது மடாலயங்கள் அவர்கள் முறையாக நிர்வகித்துக்கொண்டிருக்கிற அந்த நிர்வாகப் பொறுப்புகளை அரசாங்க ஆதிக்கத்திற்கு திசை திருப்புவதற்காக இந்த அதிகாரம் ஆதிக்கம் செலுத்துவதற்காக இந்த சட்டம் வழிவகை செய்கிறது என்று கூற விரும்புகிறேன்.

அதேபோல் என்னுடைய திருவிடைமருதூர் தாலுகாவில் இருக்கிற குறிச்சியில் ஒரு அம்மன்கோவில் இருக்கிறது. அந்த அம்மன் கோவிலுக்கு ஆளும்கட்சியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரை அறங்காவலராக நியமித்திருக்கிறார்கள். அந்த அறங்காவலர் அந்த அம்மன் கோவிலுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் அவர்கள் இஷ்டப்படி தன் சொந்தப் பொறுப்பில் குத்தகைக்கு விடுவதும் ஏலம் விடுவதும் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தைத் திருத்துகிறபோது மடாலயங்களில் பொறுப்பில் இருக்கிறவர்கள், மடாதிபதியாக இருக்கக்கூடியவர்கள், தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் இன்னின்ன தகுதிகள் பெற்றிருக்கவேண்டும் எனச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இந்தக் கூற்றுப்படி மடாலயங்களில் அறங்காவலர்களாக பணியாற்றக்கூடியவர்கள் இந்து சமயத்தில் நம்பிக்கை உடையவராக இருக்கவேண்டும். மணமாகதவர்களாக இருக்கவேண்டும். ஆகமவிதிகள் எல்லாம் தவறாது கடைப்பிடிக்கவேண்டும். இப்படிப்பட்ட விதிகள் எல்லாம் போட்டிருக்கிறார்கள்.

ஆனால் இவைகளையெல்லாம் முறையாகப் பின்பற்றுகிறார்களா என்பதுபற்றி அல்லது இதுபற்றி வழக்கு வந்தால் அவர்கள் அதை விசாரிப்பதுபற்றி ஏற்கனவே நீதிமன்றம் விசாரித்திருக்கிறது. பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அண்மைக் காலத்தில் கூட திருப்பனந்தாள் மடம் பற்றிய ஒரு வழக்கு நடைபெற்றிருப்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். அந்த மடத்திற்கு மடாதிபதியாக வர தகுதியுடையவர் யார் என்பதுபற்றி உச்ச நீதிமன்றம் வரை சென்று மடாதிபதி யார் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் பல்வேறு முரண்பட்ட தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் ஆணையர் முறையான தீர்ப்பு வழங்கமுடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே, ஏற்கனவே இருக்கின்ற முறைப்படி இந்த மடாலயத் தலைவராக இருக்கக்கூடிய தகுதியானவர்களை அல்லது வாரிசாக வரக்கூடியவர்களை தீர்மானிக்கின்ற பொறுப்புக்கள் எல்லாம் நீதிமன்றத்திலே இருப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் கூறியதுபோல், மீண்டும் மடாதிபதிகளும் அல்லது அறங்காவலர்களும் அரசியல்வாதிகளையும் அல்லது அமைச்சர்களையும் சுற்றிக் கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்படும் என்பதை கவனத்தில் கொண்டு, எந்த ஒரு நல்ல நோக்கத்திற்காக இந்த அறநிலையங்களும், மடாலயங்களும் தோற்றுவிக்கப்பட்டனவோ, அந்தக் காரியங்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில், தன்னிச்சையாக செயல்பட அனுமதிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மடாலயங்களிலே சில தவறுகள் ஏற்படுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்திப்பதற்காக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ, அவைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், இன்றையதினம் பல்வேறு மடாலயங்களிலே ஏராளமான நிலச் சொத்துக்கள் இருக்கின்றன. அந்த நிலச் சொத்துக்கள் முறையாக மடங்கள் அல்லது மடாதிபதிகளால் நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அப்பேர்ப்பட்ட மடாலயங்களில் இருக்கின்ற நிலங்களை தக்க முறையில், முறையாக பயன்படுத்திக்கொள்ள நாம் சட்டங்களை கொண்டு வரலாம். மாறாக, இப்படி அறங்காவலர்களுக்குப் பதிலாக, மடாதிபதிகளுக்குப் பதிலாக ஆணையாளருக்கு நாம் அதிகாரம் வழங்கினால், நாம் நினைக்கின்ற அந்த முறையில் அந்த மடாலயங்கள் செம்மையாகச் செயல்பட முடியாது. மாறாக, அரசுக்குச் சாதகமாக, ஆளும்கட்சிக்கு சாதகமாக அமையுமே தவிர, நாம் எதிர்ப்பார்க்கின்ற அளவுக்கு செம்மையாக, அற நோக்கத்தோடு மடாதிபதிகள் நடத்த முடியாது. எனவே, இப்படிப்பட்ட அதிகாரங்களை ஆணையாளருக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக, முன்னரே அரசுத் தரப்பிலே





இருக்கின்ற தணிக்கையாளர் மூலமாக இந்த மடாலயங்களை நாம் செம்மையான முறையில் பாதுகாக்க முடியும்; கண்காணிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது 25,000 ரூபாய்க்கு மேல் செலவிட வேண்டுமானால், ஒவ்வொரு முறையும் ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் செலவிட வேண்டுமென்ற விதி முறையை இப்போது இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் வற்புறுத்துகிறோம். ஆனால், அப்படிப்பட்ட இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமாக ஒவ்வொரு தடவையும் அவர்கள் அரசாங்கத்தையோ அல்லது அமைச்சரையோ சம்பந்தப்பட்ட மடாலயங்கள் அணுகவேண்டிய நிலைமை ஏற்படும். மடாலயங்கள் தங்கள் இச்சையாக உடனடியாக இயங்க முடியாத நிலை ஏற்படலாம். எனவே, இப்படிப்பட்ட ஷரத்துக்களைபுகுத்துவதன் மூலமாக, மறைமுகமாக மடாலயங்களின்மீது ஆளுங் கட்சி தங்கள் ஆதிக்கத்தை, அதிகாரத்தைத் திணிப்பதற்குத்தான் இது உதவும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, மடாலயங்கள் அல்லது மடங்களில் நடைபெறுகின்ற ஒழுங்கீனங்களைக் கண்டிக்க நாம் தேவையான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். எனவே, தனிப்பட்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட இப்படிப்பட்ட அறநிலையங்களிலே நேரடியாக அரசாங்கம் தலையிடுவது முறையாகாது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, கடந்த மே மாதம் கும்பகோணத்திற்கு அருகாமையிலுள்ள நாச்சியார்கோவிலில் உள்ள ஆகாசமாரியம்மன் கோயிலிலே ஒரு தீ விபத்து ஏற்பட்டது. அந்த தீ விபத்திலே ஏறத்தாழ 55 வீடுகள் பாதிக்கப்பட்டன. அப்படி பாதிக்கப்பட்ட நேரத்திலே, அருகாமையிலே உள்ள மடாலயத்தின் மூலமாக உணவு அல்லது அங்கு தேவைப்படுகின்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டது. அரசுத் தரப்பிலேகூட உடனடியாக உதவி செய்யவில்லை. இதைக் கூறுவதற்குக் காரணம், இப்படிப்பட்ட சமயங்களிலே செய்யக்கூடிய தர்ம காரியங்களுக்குகூட, அரசின் அனுமதி பெற்றுத்தான் ஆகவேண்டுமென்ற ஒரு நிலை ஏற்படுமானால், அது பொதுமக்களை பாதிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த ஆகாசமாரியம்மன் கோயிலிலே ஏற்பட்ட தீ விபத்தினால், பாதிக்கப்பட்ட 55 வீடுகளிலே, அரசு 30 பேர்களுக்கு மட்டுமே 200 ரூபாய் வழங்கப்படுவதற்கான தகுதி இருக்கிறது என்று சொல்லி, 30 பேர்களுக்கு மட்டுமே வழங்கியிருக்கிறார்கள். மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதேபோன்று, கோயிலிலே 3 பூசாரிகள் இறந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கும் இந்த அரசு எந்த உதவியும் கொடுக்கவில்லை. உடனே, அவர்களுக்கெல்லாம் தக்க நிவாரணம் கொடுத்து உதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்திலேகேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.50]

எனவே, இந்தச் சட்டத்தின் மூலமாக எந்த நோக்கத்திற்காக இந்த மடாலயங்கள், ஆலயங்கள் துவக்கப்பட்டனவோ, அமைக்கப்பட்டனவோ அதற்கு மாறாகச் செயல்படுகிற நிலைமையை இந்தச் சட்டம் ஏற்படுத்தும் நிலைமையில் இந்தச் சட்டத்தை எதிர்த்து அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பெற்ற 1981ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் திருத்த சட்டத்தின் வடிவைப் பற்றி அநேகமாக எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக வரவேற்று அப்படி வரவேற்கிற நேரத்திலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு ஏதாவது தவறுகள் நடைபெற்று விடுமோ என்கின்ற ஐயப்பாட்டினையும் சில உறுப்பினர்கள் எழுப்பினார்கள். அதிலே ஒரு உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் மாத்திரம் இது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது, இந்திய உச்ச நீதிமன்றத்திற்குப் போனால் இது செல்லுபடியாகாது. தள்ளுபடி செய்யப்பட்டு விடும் என்ற வகையில் இங்கே கூறினார்கள். இங்கே கருத்தைத் தெரிவித்த பெரும்பாலானவர்கள் பொதுவாக வரவேற்றதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் நான் தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், இந்த அவையின் மூலம் நாட்டு மக்களுக்கும், குறிப்பாக இந்து சமயத்தைப் பின்பற்றுகிற கோடிக்கணக்கான மக்களுக்கும் ஒரு உறுதிமொழியை மனத் தூய்மையோடு சந்தேகமின்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் என்பது ஆண்டாண்டு காலமாக இந்து சமயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள் தாங்கள் வணங்குகின்ற, மதிக்கின்ற மதத் தலைவர்களை அல்லது ஆதீனத் தலைவர்களை இழிவு படுத்த வேண்டுமென்றோ, அவர்களுடைய நிர்வாகத்தில் குறுக்கிட வேண்டுமென்றோ, அவர்கள் சிறந்த முறையில் ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளை தடுத்து நிறுத்த வேண்டுமென்றோ, அவர்களை மக்கள் முன்னால் குற்றவாளிகளாக ஆக்கிக் காட்ட வேண்டுமென்றோ எந்த விதமான அடிப்படைக் எண்ணத்திலும் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை என்பதை நான் இந்த நாட்டு மக்களுக்கு, குறிப்பாக இந்து சமயத்தில் இருக்கிற மக்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் 1925 ஆம் ஆண்டில் தொடங்கி 55 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஒரு திருத்தம் வருகிறது. அதற்கு முன்னால் இந்து சமய அறக்கட்டளைகளுக்கோ, சமயத்திற்கோ ஒரு சட்டம் வேண்டும், விதிகள் வேண்டுமென்ற நிலைமையே இல்லாமல்தான் இருந்தது. 1925 ஆம் ஆண்டிலேதான் இந்து சமயத்தைப் பற்றிய நிர்வாக முறைகள் ஒரு சட்டதிட்டத்திற்குள்ளே கொண்டு வரப்பட வேண்டுமென்ற உணர்வு மாநிலத்திலே





ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு வளர்ச்சியைக் காட்டுகிறது. 1925 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அன்றைக்கு இருந்த இந்து சமய நிறுவனம்—போர்டு; அதற்குப் பிறகு 1935—36—ல் திருத்தப்பட்ட சட்டமாக வந்தது. அதற்குப் பிறகு 1959 ஆம் ஆண்டில் சட்டம் திருத்தப்பெற்று இப்போது நடைமுறையில் இருக்கிற இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் என்கின்றவகையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சட்டத்திற்குத்தான் இப்போது திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். அநேகமாக இங்கு பேசிய எல்லா உறுப்பினர்களும்-டாக்டர் சௌரிராஜன் அவர்களைத் தவிர, இந்தத் திருத்தம் வரவேற்கப்பட வேண்டியதுதான் என்று கூறியிருக்கிறார்கள். மடாலயங்களில் ஆதீனகர்த்தர்கள் மற்றவர்கள் நிர்வாகத்தில் ஏற்படக் கூடிய தவறுகள் களையப்பட வேண்டியதுதான் என்று பொதுவாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒத்துக் கொண்ட அடிப்படையில்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம். இதிலே வேறு எந்தவிதமான நோக்கமும் இல்லை. ஏதோ சில மதத் தலைவர்களுக்கு ஆதரவு அளிப்பது போலவும், சில மதத் தலைவர்களுக்கு ஆதரவு அளிக்காதது போலவும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பாபு ஜனார்த்தனம் அவர்கள் எடுத்துச் சொன்னதை நான் வன்மையாக மறுக்கிறேன். அப்படிப்பட்ட உள்நோக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் எதிர்பார்க்கவில்லை. காரணம், இந்த மடாலயங்கள் பற்றியும், மடாதிபதிகள் பற்றியும் நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் எப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கிறபோது நமக்கு வேண்டியவர்கள் யார், வேண்டாதவர்கள் யார் என்று நம் முன்னால் யாரும் வர மாட்டார்கள். அதையெல்லாம்விட இங்கே குறிப்பிட்டார்களே சந்திரகாந்தா நாடகம். அதிலே இருக்கின்ற சம்பவங்களை எல்லாம் பார்த்தால் இன்றைக்கு நாமெல்லாம் எண்ணிப் பார்க்க முடியாத பேசவே அஞ்சுகிற நிகழ்ச்சிகள் எல்லாம் அதிலே வந்திருக்கின்றன. அந்த நாடகங்கள், நாவல்கள் எல்லாம் நீண்ட காலமாக மதத் துறையில் மடாதிபதி என்ற பொறுப்பிலே இருந்த சிலர் தவறுகள் இழைத்திருக்கிறார்கள் என்பதை அவ்வப்போது மக்கள் மன்றத்தின் முன்னாலே சுட்டிக்காட்டப்பட்டு வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச் சட்டத் திருத்தம் அடிபட்டுப்போகும் என்று டாக்டர் சௌரிராஜன் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்தின் முன்னாலே சில வழக்குகள் சென்று அந்த வழக்குகளிலே எப்படிப்பட்ட தீர்ப்புகள் மடத்தின் சார்பிலே வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய்ந்து அருகிலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே எத்தகைய சட்ட திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள், எப்படி திருப்பதி புகழ்பெற்ற ஆலயம் ஒரு மகந்து என்கிற மடாதிபதியிடமிருந்து எடுக்கப்பட்ட ஆலயமாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் நிர்வாகத்தில்

ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தத் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று பார்த்து அந்த அடிப்படையிலேதான் திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறோம்.

அது எப்படி செல்லுபடியாகும், என்று பார்த்துக் கொண்டு நாம் சட்டங்களைச் செய்ய முடியாது. சட்டங்களைச் செய்கிறபோது திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதைப்போல் மக்களுடைய நன்மைக்காக செய்கிறோம், அது பின்னாலே நீதிமன்றங்களுக்குப் போகிறபோது அந்த அந்த நீதிமன்றங்களினுடைய உணர்வுகளுக்கு ஏற்றபடி அவர்கள் கருதுகிறபடி தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. ஆகவே என்ன தீர்ப்பு வழங்கப்படும் என்று முன்னாலேயே நாம் திட்டமிட்டு சில காரியங்களைச் செய்யவேண்டியதுதான்—இருந்தாலும் கூட முன் மாதிரிகளை வைத்துக்கொண்டு சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். அதிலும் சில நேரங்களிலே செல்லாது என்று வந்துவிடுகின்றது. அப்படிபட்ட சூழ்நிலைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் இங்கே ஒரு ஆணையாளர் ஒரு உத்திரவைப் போட்டால் நீதிமன்றங்கள் அதற்கு ஒரு இடைக்காலத் தடையைப் பிறப்பிக்கக்கூடாது என்றே விதியைச் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் அதை கடுமையாக எதிர்த்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்ன பிற்பகுதியிலே அதற்கு பதிலையும் சமாதானத்தையும் அவர்களே சொல்லிவிட்டார்கள். வழக்கு மன்றத்திற்குப் போனால் எத்தனை ஆண்டு காலமாகும் என்று அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு இடத்திலே தவறு இருக்கிறது என்று அரசாங்கம் கண்டுபிடித்து, அறநிலையத் துறை கண்டுபிடித்து அதைத் தடுப்பதற்கு ஒரு ஆணையைப் பிறப்பித்தால் உடனே ஒரு வழக்கறிஞரைப் பிடித்துக்கொண்டுபோய் ஒரு ஸ்டேயை வாங்கிவிட்டால் அது எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அவர்களே ஒத்துக்கொண்டார்கள். ஆகவே தான் இடைக்காலத் தடை என்கின்ற ஒரு பயங்கரமான முட்டுக்கட்டை சமுதாய முன்னேற்றத்திற்கு பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு வகைகளிலே போடப்படுகிற முட்டுக்கட்டையாக இன்றைக்கு ஸ்டே, தடையாணை பயன்படுத்தப்படுகிறது. அதை அவர்களே ஒத்துக்கொண்டார்கள். வழக்கு மன்றத்திற்குப் போனால்....

**திரு. ப. நெடுமாறன்:** ஸ்டே பற்றிய பிரச்சினையைக் குறித்து அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீதிமன்றத்திற்குப் போனால் நீண்டகாலமாகிறது, அது சமுதாய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகிறது என்று சொன்னார்கள். அதற்காகத்தான் டிரிபியூனல் போடவேண்டுமென்ற யோசனையை நானும் மற்ற நண்பர்களும் வற்புறுத்தியிருக்கிறோம். டிரிபியூனலுக்குப் போனால் வேலை உடனடியாக முடியும். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** அருள்கூர்ந்து என்னுடைய பேச்சை முழுமையாகக் கேட்டுவிட்டால் நீங்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு எல்லாம்நான்பதிலைத்தந்துவிடுவேன். இப்படி இடைமறித்து சந்தேகம் எழுப்ப வேண்டிய அவசியமிருக்காது. நான் சொல்வதற்குக் காரணம், ஒரு ஷரத்தை ஏன் சேர்த்து இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு நாம் அனுபவப்பட்டிருக்கிறோம், நாம்அடிபட்டு இருக்கிறோம், அதனாலே அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு சில திருத்தச் சட்டங்களைக் கொண்டுவருகிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். அதைப் போல் மடம், மற்றும் மதத் தலைவர்கள், ஆதீனத் தலைவர்கள் என்பதை பற்றி மாத்திரம் சுருக்கமாகக் கருத்தைச் சொல்கிறேன். இது ஏற்படுத்தப்பட்ட காலம் என்றைக்கு என்பதைப் பார்க்க வேண்டும். அன்றைக்கு சமுதாயத்தின் நிலைமை எப்படி இருந்தது. அன்றைக்கு அரசியல் சட்டம் இருந்ததா? அன்றைக்கு சட்டமன்றம் இருந்ததா? அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்களா? அன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு முறை இருந்ததா? ஒரு காலத்திலே ஏற்படுத்தப்பட்ட பல்வேறு முறைகளை, பல்வேறு நிகழ்ச்சிகளை சட்டங்கள் மூலம் மாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய தேவைக்கு ஏற்றவாறு காலத்திற்கு ஏற்றவாறு மக்களுக்கு ஏற்றவாறு சட்டத் திருத்தங்களைச் செய்து கொண்டு வந்திருக்கிறோம். அப்படி வருகிறபோது அறநிலையங்களுக்கு எல்லாம் சட்டம் வேண்டுமென்று ஒருகட்டுப்பாடு வேண்டுமென்று 1925 இல் முயற்சி எடுத்து இருக்கிறார்கள்.

[பிற்பகல் 1.00]

ஆகவே அது தொடர்பாக 55 ஆண்டுகள் கழித்து இன்றையதினம் 1981 ஆம் ஆண்டு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். அதுவும் நமக்கு ஏற்பட்ட அனுபவத்தின் விளைவாக நான் கேட்கிறேன், நம்முடைய மடத் தலைவர்களின் பெயரைச் சொல்லிக் குறிப்பிட நான் விரும்பவில்லை. அப்படிச் சொன்னால் இவர்களைக் குற்றம் சொன்னார்கள், அவர்களைக் குற்றம் சொல்லவில்லை என்ற உணர்வை எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் வெளியிலே சொல்லக்கூடும். ஆகவே, நான் பொதுவாகச் சொல்கிறேன்.

இன்றைக்கு இந்த ஆதீனங்களிடத்திலே எவ்வளவு பெரிய சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன ? இந்தச் சொத்துக்களை நிர்வகிப்பது ஒரு தனி மனிதருடைய பொறுப்பிலே இருக்கிறது. ஒரு காலத்திலே இந்த ஆதீனகர்த்தர்கள் ஆண்டவனின் மறு பிறப்பு என்று எண்ணப்பட்டது. நான் இன்றைக்கும் கேட்கிறேன். அந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்கிறோமா ? ஆண்டவனால் அனுப்பப்பட்ட மறு பிறவி, ஆண்டவனால் படைக்கப்பட்ட மறுபிறப்பு, ஆகவே, அவர்கள் சொன்னதுதான் சட்டம், அவர்கள் வாயால் என்ன சொன்னார்களோ அதுதான் இந்த நாட்டிலே நடைபெற வேண்டும் என்ற தத்துவத்தை ஒப்புக்கொண்[illegible] சட்டமன்றம் தேவையில்லை, நாடாளுமன்றம் [illegible]ரசியல் சட்டம் தேவையில்லை. ஆகவே,

மற்றவைகளுக்கு அப்படிச் சட்டம் கொண்டுவந்து, நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கும் காலத்தில், ஒரு தனி மனிதரிடத்தில், என்றைக்கோ நம்முடைய முன்னோர்கள் நம்பி ஒப்படைத்துப் போய் இருக்கின்ற சொத்துக்களை, செல்வங்களைப் பாதுகாக்கவும் அதைச் செலவழிக்கவும் ஒரு தனி மனிதரிடத்திலே உரிமையைக் கொடுக்கலாம், அதிலே அரசாங்கமோ, அறநிலையத்துறையோ தலையிடக் கூடாது என்று 1981 ஆம் ஆண்டிலே ஒரு சட்டமன்றம் சொல்லலாமா ? அப்படிச் சொல்லுகின்ற சூழ்நிலை உருவாக வேண்டுமா என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குத் திருவாவடுதுறை மடத்திற்கு 26,813 ஏக்கர் நிலம் இருக்கிறது. நஞ்சை நிலம் அல்லது புஞ்சை நிலம். இவ்வளவு ஏக்கர்கள் நிலமும் ஒரு தனி மனிதரின் பொறுப்பிலே, ஆதீனகர்த்தரின் பொறுப்பிலே இருக்கிறது. அவர் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று இருக்கின்ற அந்த முறையை நாம் இன்னும் ஏற்றுக்கொள்ள வேண்டும் ; கணக்கு வழக்கு கேட்கக் கூடாது ; யாரும் தலையிடக் கூடாது என்று இருக்க வேண்டுமா? நிர்வாக அதிகாரியைப் போட்டோம், அதற்கும் உச்சநீதி மன்றத்தில் தடை வாங்கிவிட்டார்கள். எக்சிகியூட்டிவ் ஆபீசரைப் போட்டோம். என்ன நடைபெறுகிறது என்று தெரிந்து சொல்வதற்காகப் போட்டோம். அதற்கும் தடையைப் பெற்று விட்டார்கள். நான் அதற்குமேலே போகவில்லை.

இன்றைக்கு மடங்களின் தலைவர்கள் இரண்டு தகுதிகளைப் பெறுகிறார்கள். ஒன்று, மடங்களின் தலைவராக, சமயத் தலைவராக இருக்கிறார். அதேநேரத்திலே அந்த மடங்களோடு இணைக்கப்பட்ட ஆலயங்களுக்கு அவர்கள் பரம்பரை அறங்காவலர்கள் — ஹிரடிட்டரி டிரஸ்டி. அங்கேதான் நமக்கு அந்த மடங்களின் தன்மைகளைப் பொறுத்தவரையில், சொத்துக்களைப் பொறுத்த வரையில்சிக்கல்கள் வருகின்றன. அந்த மடங்களைப் பொறுத்தவரையில் என்னைக் கேட்காதே என்று சொல்லிக் கொண்டிருந்தால், ஒரு வேளை மத நம்பிக்கையுள்ளவர்கள் இன்னும் கொஞ்சம் காலம்கழித்து வேண்டுமானால் தலையிடுகின்ற உணர்வைப் பெறலாம்என்று கூறக்கூடும்.

ஆனால், நிர்வாகியாக, அறங்காவலர்களாக இருக்கின்ற ஆலயங்களிலும்நாம்கணக்குகேட்கக்கூடாது;அதன்வருமானத்தைப் பற்றிக் கேட்கக் கூடாது என்று சொல்வதா ? அப்படி இன்றைக்கு நம் மடத் தலைவர்களின் பொறுப்பிலே இருக்கின்ற ஆலயங்களின் எண்ணிக்கை 55. அவர்கள் தந்திருக்கின்ற வருமானக் கணக்குப்படி —நம் கணக்குப்படி அல்ல — 65,29,373 ரூபாய் ஒரே ஒரு ஆண்டுக்கு. அந்த மடத்திற்கு வருமானம் 61,26,000 ரூபாய். ஆகவே, கிட்டத்தட்ட 1,26,55,000-த்துச் சொச்சம் ரூபாய் அவர்கள் தருகின்ற கணக்கின்படி வருமானம் வருகிறது. இந்த வருமானத்தை ஒருவர், அது திருவாவடுதுறை மடம் என்றாலும் தர்மபுரம் மடம் என்றாலும், அல்லது அகோபில மடம் என்று சொன்னார்களே, அதுவாக இருந்தாலும், இப்படி அவர்கள்



தங்கள் இஷ்டப்படி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஒரு உணர்வை நாம் ஏற்கிறோமா என்பது தான் இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் நான் கேட்கின்ற கேள்வி.

மடங்களில் தலையிடவேண்டுமென்ற உணர்வே எங்களுக்கு இல்லை. ஆனால், சமீபத்திலே தஞ்சையிலே ஒரு மடாதிபதி தன்னுடைய உடல்நிலையைக் குறித்து அவருக்கே சந்தேகம் வந்து, அவர் குற்றாலத்திற்குக் குடும்பத்தோடு போய் இருக்கிறார். இங்கே மடாதிபதிக்கி குடும்பம் இருக்கக் கூடாது என்பது மடத்தின் விதி. அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களுக்குச் சொல்லிவிடுகிறேன், எந்த மடத்தில் என்னென்ன பழக்க வழக்கங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதில் நாம் நுழையவில்லை. சில மடங்களில் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்க வேண்டுமென்பது விதி. சில மடங்களில், கல்யாணம் ஆனவர்களாக இருந்தால், மடத் தலைவராக ஆனபிறகு துறவறம் பூண வேண்டுமென்பது விதி. அந்த விதிகள் இருக்க வேண்டுமென்று சொல்கிறோமேதவிர, அந்த விதிகளில், மரபுகளில் பழக்கவழக்கங்களிலெல்லாம் நாம் நுழையவில்லை. திருவாவடுதுறை ஆதீனத்தைப் பொறுத்தவரை அவர்கள் குடும்பத்தோடு குற்றாலத்திற்குப் போய் சங்கரன்கோயிலுக்கு வந்து, கோயிலைச் சுற்றி வருகிறபொழுது, அங்கே மயக்கம் போட்டுவிழுந்து, ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு, அவசரம், அவசரமாக, அந்தத் திருவாவடுதுறை மடத்தினுடைய இவ்வளவு பெரியசொத்துக்களுக்கு வாரிசாகத் திருநெல்வேலியிலிருந்து — ஒரு குமாஸ்தா வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவரைக் கொண்டு வந்து விட்டார்கள் என்று —எங்களுக்குத் தெரியாது, — இந்த மடத்திலே நம்பிக்கையுள்ள சில முக்கியஸ்தர்கள், சில பெரியவர்கள், முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாயை இந்த மடத்திற்குக் கூட்டிக் கொண்டு போனவர்கள் எழுத்து மூலம் தகவல் தந்திருக்கிறார்கள். இப்படி ஒரு அநியாயம் நடந்திருக்கிறது திருவாவடுதுறைமடத்திலே. அவர் இயலாமையிலே இருக்கிறார். ஆகவே அவருடைய காலத்திற்குள்ளே அந்தச் சட்டதிட்டத்தின்படி, அவர் ஒருவரை நியமித்து விட்டால், செல்லுபடியாகும். யாரையும் நியமிக்காமல் அவர்கள் காலமாகிவிடுவார்களேயானால் அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும். அதற்காக ஒரு ஆளை, அங்கேயிருந்த தகுதி மிக்கவர்களை, படித்தவர்களை, ஆகமங்களைத் தெரிந்தவர்களை, வேறு நல்ல புலவர்களை, பண்டிதர்களை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, நீக்கிவிட்டு, திருநெல்வேலி மாவட்டத்திலேயுள்ள அம்பாசமுத்திரத்திலே மில்லிலே வேலை செய்து கொண்டிருந்த ஒருவரைக் கொண்டு வந்து அவருக்கு உரிய பட்டம் கட்டி, 5 மாதத்திற்குள்ளே அவரை அடுத்த வாரிசாக நியமித்து விட்டார்கள் என்கிற தகவலை எங்களுக்குத் தந்ததே சமயத்திலே ஈடுபட்டிருக்கிற மிகப் பெரியவர்கள் ; அந்த சமயத்தோடு, அந்த மடத்தோடு தொடர்புடையவர்கள் ; பிரதமர் மொரார்ஜி தேசாயைக் கொண்டு போய் விழா நடத்தியவர்கள். அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் நாங்களே

நோட்டீஸ் விட்டோம். உடனே அந்த மடத் தலைவர் சொன்னார், 'உனக்கு அதிகாரம் இல்லை போ. நான் எவரையும் நியமிப்பேன்,' என்று.

நான் இந்தத் திருவாவடுதுறை மடத்தினுடைய வரலாற்றைச் சொல்கிறேன். அந்தத் திருவாவடுதுறை மடம் இந்தத் தமிழ் நாட்டிலே சைவ சமயத்தை மாத்திரம் வளர்க்கவில்லை, தமிழையும் வளர்த்துக் காப்பாற்றிய மடம். அங்கேதான் மகாவித்வான்மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அங்கேதான் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர், அங்கேதான் வேதநாயகம் பிள்ளை இப்படி தமிழை வளர்ப்பதற்காக, தமிழ் அறிஞர்களுக்கெல்லாம் இடம் கொடுத்து வளர்த்த அந்த மடம், இன்றைக்கு எப்படியிருக்கிறது. அங்கே ஆதீனகர்த்தாவாக இருக்கிறவர் எவ்வளவு பெரிய தமிழ்ப் புலமை பெற்றவர் என்பதை நான் சொல்லக் கூடாது. சொன்னால் நான் யாரையோ பிரித்துப் பேசுகிறேன் என்று சொல்வார்கள். எப்படிப்பட்ட ஒரு தாழ்ந்த நிலைக்கு நம்முடைய சமயத்தையும் சமுதாயத்தையும் கொண்டு வந்து விட்டோம், மடங்களையும் கொண்டு வந்து விட்டோம். இந்த நிலைமை இன்னும் அனுமதிக்கப்படவேண்டுமா என்பதனாலேதான் இந்தச் சட்டத் திருத்தம் வருகிறதே தவிர, இந்தச் சட்டத் திருத்தம் வந்ததனாலே நாம் உள்ளே நுழைந்து எல்லா அதிகாரத்தையும் எடுத்துக்கொள்வது என்பது அல்ல என்பதை நான் நிச்சயமாக சொல்கிறேன்.

இங்கே என்னிடத்திலே இருக்கிற புள்ளி விவரங்கள் அத்தனையும், எந்த, எந்த மடங்களிலே ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன, கணக்கு வழக்குகளிலே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியவை தான். அனைத்தையும் சொல்ல நேரமில்லை. சிலவற்றைச் சொல்கிறேன், மறுபடியும் திருவாடுவதுறை மடத்தைப் பற்றித்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ரூ. 2,02,33,206 வசூல் பாக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கணக்கு தருகிறார்கள். ரூ. 2 கோடிக்கு மேல் வசூல் செய்யவில்லையென்று சொல்கிறார்கள், அவ்வளவுதான். அதற்கு மேலே நம்மாலே கேட்க முடியாது. அங்கே எந்த அதிகாரியையும் நாம் நியமிக்க முடியாது. கிராமக் கர்ணம் — அரசாங்கம் போடுகிறதே அந்தக் கர்ணம் அல்ல; அவர்களே, அங்கே ஒரு கர்ணத்தைப் போடுகிறார்கள்; அப்படிப்போடுகிற கர்ணத்துடைய பொறுப்பிலே ஒவ்வொரு ஊரிலேயும், ஒரு ஊரிலே ரூ. 33,615; ரூ. 26,379; இன்னொரு ஊரிலே ரூ. 29,520, ரூ. 19,609; இப்படிப் பல்லாயிரக் கணக்கில், பாக்கிகள் இலட்சக்கணக்கில் நிதி மாற்றங்கள் நடக்கின்றன. அதுவும் மடங்களிலே வருகிற பாத காணிக்கைகள் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்கிறார்கள். அவர்கள் பரம்பரை அறங்காவலர்களாகவும் இருக்கிறார்கள், அங்கேயிருந்தும் நிதியை எடுத்துச் செலவு செய்கிறார்கள், கேட்கக் கூடாது என்கிறார்கள். ஆகவே, அதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.



ஆணையருக்கு அதிகாரத்தைத் தந்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆணையர் என்பவர், ஏற்கனவே இருக்கிற சட்டத்திலேயே, நீதிபதிக்கு உள்ள அதிகாரத்தையும் பெற்றவர் தான். ஆணையர் நிர்வாக அதிகாரி மாத்திரம் அல்ல, அவர் குவாஸி ஜுடிஷியல் அதிகாரியுங்கூட. ஆகவே, அது இப்பொழுது செய்த சட்டம் அல்ல, முன்னாலே இருக்கிற சட்டம். ஆகவே, ஆணையருக்கு நீதிபதிக்குள்ள அதிகாரமும் இருக்கிறது. அதிலே இந்தத் திருத்தத்தை நீங்கள் கவனித்துப் பார்த்திருந்தால் தெரியும், ஒருவரை நீக்க வேண்டுமானால் அல்லது தற்காலிகமாக நீக்க வேண்டுமானால், அரசினுடைய அனுமதியைப் பெற்றதற்குப் பிறகுதான் நீக்க வேண்டுமென்றே இருக்கிறது. ஆணையாளர் இஷ்டப்படி செய்து விட முடியாது. ஆகவே, ஒரு தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்சியை, அரசை, இந்த நாட்டு மக்களுடைய நன்மையைக் கருதுகிற ஒரு ஆட்சியை, அது எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, கேட்டுத்தான் செய்ய வேண்டுமென்பதிலிருந்து, அரசே பொறுப்பேற்றுக் கொள்கிறது என்பதுதான் பிரச்னையே தவிர, ஆணையாளருக்கு தனியாக வேறு அதிகாரம், என்பதல்ல. இதுவும் ஆந்திராவின் சட்டத் திருத்தத்திலேயே இருக்கிறது.

[பிற்பகல் 1·10]

இன்னொன்றையும் சொன்னார்கள். நம்முடைய டாக்டர் சௌரிராஜன் அவர்கள் என்டோமெண்ட் என்று தானே இருக்கிறது நீங்கள் என்டோமென்டிலே இல்லாததையும் ஏன் கேட்கிறீர்கள் என்று அவர்களுக்கு நான் கவனப்படுத்த விரும்புகிறேன். அதற்குப் பெயரே இண்டு ரிலிஜியஸ் சேரிடபிள் அண்டு என்டோமெண்ட். அதை அவர்கள் மறந்துவிட்டார்கள், முன்னாலே இருப்பது சமயம், அந்த அறக்கட்டளைகள் அதற்குப் பிறகு அந்த நிறுவனம் என்டோமெண்ட். அது பொதுவாக ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நடைமுறையிலே என்ன நடைபெறுகிறது என்றால் முற்காலத்திலே அதற்கு அறக்கட்டளைக்கு ஏற்படுத்தாமல் போய் இருக்கிறார்கள். இப்படிப் பல நிறுவனங்கள் இருக்கின்றன. பெயரைச் சொல்வதற்கு நேரமல்ல. இப்போது ஜனங்கள் கொண்டுபோய் பணத்தைத் தருகிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவைக்குப் பக்கத்திலே ஒரு மடத்தைப்பற்றிப் பேசினார்கள். அதுவும் இப்படித் தான்பலபேர்கள் கொண்டுபோய்க் கொடுக்கிற பணத்தை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், இது எங்களுக்கு வருகிற பாதகாணிக்கை, எங்களுக்குத் தரப்படுகிற காணிக்கை இதிலே அரசாங்கம் தலையிடக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அதற்காகத்தான் அந்தப் பாராவையும் போட்டிருக்கிறோம். அதுவும் ஆந்திரா சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த உணர்வோடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஆகஸ்டு 29

ஆணையாளருக் கு ஏற்கெனவே அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தில் லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட அறநிலையங்களிலே அவைகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் அரசாங்கத்தினுடைய முன் அனுமதியைப் பெற்றாகவேண்டும். அரசாங்கத்தின் அனுமதிதான் இறுதி ஆணை என்று சொல்லி இருக்கிறோம். அதற்கு மேலே வழக்குமன்றம் போகலாம் என்று இருக்கிறது. அந்த ஸ்டே கூடாது என்று சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டு இருக்கிற வேதனைதான். பல முன்னேற்றத் திட்டங்களை பல சீர்திருத்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தடையாணைகள் மூலம் தடுக்கப்பட்டி ருக்கிறோம். கை கால்கள் கட்டப்பட்டு முடமாக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே அந்த உணர்வில் வளர்ந்து கொண்டு வருகிற ஜனநாயக யுகத்தில் மக்களுடைய தேவைகளை மனதிலே கொண்டு இந்த சமய நிறுவனங்களும் சமயத் தலைவர்களும் தங்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டும் என்பதுதான் இந்த சட்ட திருத்தத்தினுடைய அடிப்படை நோக்கமே தவிர, எந்தக் காரணத்தைக் கொண்டும் காரணம் இல்லாமல், அவசியம் இல்லாமல், இந்த சமுதாயத்தினுடைய மனதைப் புண்படுத்துகிற வகையில், அவர்களுக்கு ஊறு விளைவிக்கின்ற வகையில் மற்ற மதத்தவர்கள் முன்னாலேயே அவர்களைக் குறை கூறுகிற வகையில் இந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பதை நான் இங்கே உறுதி அளித்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோது நாச்சியார்கோவில் சம்பளிதைப் பற்றிச் சொன்னார்கள். நானும் அங்கே அடுத்த நாளே போய்ப் பார்த்தேன். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, அதிலே உயிரிழந்தவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் தக்க நிதி உதவி செய்யவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களும் சுற்றிச் சுற்றி அந்த நாச்சியார் கோவிலைப்பற்றி ஒரு காரியத்தைத்தான் சொல்ல முடிந்தது. பக்கத்திலே இருக்கிற மடம் செய்த உதவியைச் சொன்னார்கள். இன்றைக்கு எவ்வளவோ நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கிற நாச்சியார்கோவில் சாப்பாடு போட்டாது என்றுதான் சொல்ல முடிந்தது. 2 கோடிக்கு பாக்கி வைத்திருக்கிற மடம், ரூ. 1000க்கு சாப்பாடு போட்டத்தைத்தான் இராமலிங்கத்தால் எடுத்துக் காட்ட முடிந்தது. அவர் பக்கத்திலே இருக்கிறவர். நான் ஏதோ ஒரு மடத்தைக் குறிப்பிட்டதனாலே அவர் மீது காழ்ப்புணர்சியோடு அல்லது குற்றம் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை.



1981 ஆகஸ்ட் 29] [திரு, ஆர். எம், வீரப்பன்]

இன்றைக்கு எனக்கு வந்திருக்கிற பெயரே—நான் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய சீடன், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தம்பி என்று உரிமை கொண்டாடுகிற எனக்கு—அமைச்சர் ஆழ்வாராக ஆகிவிட்டார் என்று மற்றொரு பக்கத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையிலேயும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிறைவேற்றுவார்கள். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தம் எந்த உள்நோக்கத்தோடும் கொண்டு வரப்படவில்லை, சட்ட விதிகளின்படி கொண்டு வரப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான சொத்துக்களை முன்னோர்கள் நம்மை நம்பி விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இது தனி மனிதன் ஒருவனுடைய ஆதிக்கத்தினுள்ளே இருந்து சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குள்ளே நம்மாலே தலையிட முடியவில்லை. அதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து 'காம்ப்ரஹென்சிவ் லா' என்று சொன்னாரே டாக்டர் சௌரிராஜன், அது தயாராகிக் கொண்டிருககிறது. அது வரப் போகிறது. அப்படி வருகிற நேரத்திலே, மாண்புமிகு நெடுமாறன் போன்றவர்கள் சொன்ன கருத்துக்களெல்லாம் பரிசீலிக்கப்பட்டு, இதிலே இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இத்திருத்தம் அவசரமாக, உடனடியாகக் தேவைப்படுகின்ற ஒன்று. இன்று ஏன் தணிக்கையாளர்களை வைத்துப் பார்க்கக் கூடாது என்றால், தணிக்கையாளர்கள் போய்க் கேட்டால், விவரம் தர மாட்டேன் என்கிறார்கள். ஈ, ஓ. போட்டவுடனே, கோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கி விட்டார்கள். உங்களுடைய மடத்திற்கு ஈ. ஓ. வேண்டாம். எங்களுடைய கோவில்களுக்கு போடுகிறோம் என்று சொன்னால், வேண்டாம் இங்கேயே வராதீர்கள் என்று சொல்கிறார்கள் என்கிற சூழ்நிலையிலே தான் இந்த சட்ட திருத்தமே வருகிறது. நான் மீண்டும் சொல்கிறேன், தூய்மையோடு சொல்கிறேன் தமிழக அரசின் சார்பிலே சொல்கிறேன், இந்து மதத்திலே சம்பந்தப்பட்டவர்களை, இந்த மத உணர்வோடு வணக்கத்திற்கு உரியவர்களை, மதத் தலைவர்களை, ஆதீனத் தலைவர்களை புண்படுத்த வேண்டும், குறைவு படுத்த வேண்டும் என்கிற எந்த எண்ணத்தோடும் இந்த சட்ட திருத்தம் கொண்டு வரப்படவில்லை. அங்கே லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான சொத்துக்கள் முறையாக பயன்படுத்த வேண்டும்; முறையாக செலவழிக்க வேண்டும்; முறையாக நாட்டுக்கு பயன்பட வேண்டும்; அவர்களும் அரசியல் சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டும். என்றைக்கோ காட்டாட்சி தர்பார் நடந்த காலத்திலே இருந்ததைபோல ஒரு நிலைமை இருக்க அனுமதிக்கக் கூடாது. அது நாகரீகமும் அல்ல. அது அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதும் அல்ல என்கிற உணர்வோடு தான் இந்த சட்டதிருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஆகஸ்ட் 29

எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன அத்தனை கருத்துக்களும், அதற்கான விதிகளை வகுக்கிற காலத்திலே கவனத்தோடு வகுக்கப்படும்.

தேவையில்லாமல், அவசியமில்லாமல், வேறு உள்நோக்கத்தோடு எந்த மத நிறுவனங்கள், அறநிலையங்களிலும் அரசாங்கம் தலையிடாது என்ற உறுதியைச் சொல்லி, அவர்களுக்குள்ள மதிப்பையும், மரியாதையையும் என்றைக்கும் காப்பாற்றுவதிலே இந்த அரசாங்கம் நின்று நிலைத்து பாடுபடும்; யாருக்கும் குறைவாக இருக்காது என்று உறுதியை சொல்லி இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களை கேட்பது, இந்து மதத்திற்கு அறக்கட்டளை கொண்டு வந்ததைப்போல, இஸ்லாமிய மதத்திற்கு வக்போர்டு இருப்பதைப் போல, கிறிஸ்துவ மதத்திலும் பல பிரிவுகள் வந்து கொண்டிருக்கிறது. இதிலே புராட்டெஸ்டென்ட், கத்தோலிக்கர்கள் மட்டுமல்ல; இப்போது கிறிஸ்த்துவர்கள் இஸ்லாமியர்களாக மாறுகிற அவல நிலை திருப்பத்தூரிலே நடந்திருக்கிறது என்பதால் அவர்களையும் கருதி காம்ப்ரெஹன்சிவ் பில் கொண்டு வருவதிலே அரசு முன் கவனம் செலுத்தி ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பேற்றிருக்கிறது இந்து சமய அற நிலையங்களுடைய துறை. ஆகவே இதுபற்றி நான் இங்கே உறுதி அளித்திருக்கிறேன். வக்ப் போர்டை பற்றியும் சட்டதிருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இனிமேல் நீண்ட காலம் ஒரு சமயம் மட்டும் தான் கட்டுப்படுத்தப்படும், மற்ற சமயங்கள் எல்லாம் கட்டுப் படுத்தப் படாது என்று ஏதோ சட்டத்தைச் சொல்லி, அரசியல் சட்டத்தைக் காட்டி கூறிக் கொண்டிருக்கிற நிலைமை நிலைக்காது என்பதை இந்த நாட்டு மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த சட்டத் திருத்தமே இந்திய சர்க்காருடைய அனுமதியைப் பெற்றுத் தான் இங்கே வந்திருக்கிறது என்பதையும், டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இந்து சமயங்களிலே எந்த சமயத்தைப் பற்றிய எந்த சட்டமாக இருந்தாலும் மத்திய சர்க்கார் அனுமதியைப் பெற்று தான் இங்கே வரவேண்டும். ஆகவே எந்த பொது சட்டமும், எந்த பொது நியதியையும் இந்து சமயத்திற்கு மட்டும் தான், வேறு எந்த சமயத்திற்கும் இல்லையென்று இருக்கிற நிலை இல்லை. இந்தியாவிலேயே இனிமேல் அரசியல் சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம்; ஆண்டவனுக்கு முன்னால் அனைவரும் சமம். எம்மதமும் சம்மதம் என்று சொல்கிறவர்களும்



1981. ஆகஸ்ட் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

இதை ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே நான் இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் உறுதி அளித்து இருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்கனவே உறுதி அளித்து இருக்கிறார்கள். நீங்கள் எதிர்பார்க்கலாம்.

டாக்டர். கே. சௌரிராஜன்; மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்து ரெலிஜியஸ் அண்ட் சாரிட்டபிள் எண்டோமென்ட் ஆக்ட்என்று கொடுத்திருக்கிறது. அதனுடைய பொருள் எனக்குத் தெரிந்த வரையில் இந்து ரெலிஜியஸ் எண்டோமென்ட்ஸ், இந்து சாரிட்டபிள் எண்டோமென்ஸ் என்றுதான் இருக்க வேண்டும். சொத்தில்லாத கோவில்களுக்கு எப்படி அரசாங்கம் அதை பராமரிப்பதற்கு பணம் கொடுக்கிறதோ, அதைப்போல் ஆண்டிகளாக சேர்ந்துள்ள மடங்களுக்கு வசதியுள்ள மடங்களிலிருந்து பணம் கொடுத்து 'ரெலிஜியஸ் பெய்த்தை' அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேள்வியாக இல்லை, விளக்கத்திற்காக அமைச்சரிடத்திலே கேட்கிறேன். ஒரு மடத்தினுடைய தலைவர் தனக்கு பின்னே வாரிசு என்று, எல்லா குவாலிபிகேஷன்களும் உள்ளவர்களை விட்டு விட்டு திருநெல்வேலியிருந்து, தூத்துக்குடியிலிருந்து ஒருவரை கொண்டு வந்து போடுகிறார்கள் என்று சொல்கிறார்களே அதை எப்படி அவர்கள் நியமிக்கிறார்கள்? அதற்கு மதத் தலைவர்கள் ஏதாவது சொல்கிறார்களா? முறை கெட்டது என்று அமைச்சர் அவர்களோடு சேர்ந்து நானும் ஒத்துக் கொள்கிறேன். அந்த எப்படி நியமிக்கிறார்கள், ஏனென்றால் எங்கள் ஊரிலே மடம் கிடையாது, அதற்காகத் தான் கேட்கிறேன், எப்படி அவர்கள் நியமிக்கிறார்கள்.

[பிற்பகல் 1-20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதற்காகத்தான் இந்தச் சட்டத்திருத்தமே வருகிறது. இன்றைக்கு இருக்கிற சட்டவிதிகளின்படி நடைமுறையின்படி அந்த ஆதீனகர்த்தர் அவர் விரும்புகிற ஒருவரைக் கொண்டு வந்து நியமிக்கலாம். அவர் அவருக்கு காஷாயத்தைக் கொடுக்கிறார். காஷாயம் கொடுப்பது என்று பெயர். உள்ளே மடத்திலே சேர்த்துவிட்டு காஷாயம் கொடுப்பது என்ற பெயரால் அவருக்கு காவி உடை தரித்து, கழுத்திலே உருத்திராட்சம் போடுகிறார். அதிலிருந்து 3 மாதமோ அல்லது 6 மாதமோ ஆனவுடன் இவர்தான் என்னுடைய வாரிசு என்று சொல்கிறார்; பட்டத்து இளவரசர் என்று அந்தக் காலத்திலே சொல்லிவிட்டுப் போவார்களே அதைப்போல.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஆகஸ்ட் 29

திருவாவடுதுறை மடத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற நிபந்தனை என்னவென்றால், அவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்பதை ஒரு நியதியாக வைத்திருக்கிறார்கள். என்று தெரிகிறது அதற்காகவே திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவரை போய் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அங்கே இருந்த தம்பிரான் படித்தவர், பண்டிதர், நல்ல புலமை பெற்றவர்களை எல்லாம் வேலையை விட்டே நீக்கிவிட்டார்கள். காரணம் அவர் இருந்தால் அடுத்தவர் வரவேண்டும். அதற்காக வேலையை விட்டே நீக்கிவிட்டு, இப்படிப்பட்ட ஒருவரைக்கொண்டு வந்தார்கள். இது அரசாங்கம் சாட்டுகிற குற்றச்சாட்டு அல்ல. அங்கே மடத்திலே நம்பிக்கை உள்ளவர்கள், மடத்திலே தொடர்பு உள்ள மிகப் பெரியவர்கள் எழுத்து மூலம் தந்திருக்கிற குற்றச் சாட்டு. அதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் நோட்டீஸ் அனுப்பினோம். அரசாங்கத்திற்கு இதிலே உரிமை இல்லை; நான் யாரை வேண்டுமானாலும் — நீங்கள் சொன்னீர்களே யானை போய் கழுத்திலே மாலை போடுகிறது என்று அதைப் போல — நியமிப்பேன் என்று சொல்கிறார்கள். இந்த மடாதிபதி யார் கழுத்திலே மாலை போடுகிறாரோ அவர்தான் அடுத்த மடாதிபதி.

அவர் மடாதிபதியாக இருந்துவிட்டுப் போகட்டும். அதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால் இத்தனை கோடி சொத்துக்களுக்கும் அவர் அதிபதி. அவர் இஷ்டப்படி செலவு செய்யலாம். யாரும் கேட்கக் கூடாது. இது 1981 ஆம் ஆண்டிலே சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டிலே, 35-வது சுதந்திரதின விழாவைக் கொண்டாடுகிற நாட்டிலே இருக்கலாமா? அதற்காகத் தான் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, நாச்சியார் கோவில், ஆகாசமாரியம்மன் கோவிலிலே நடைபெற்ற தீ விபத்தில் உயிரிழந்த அர்ச்சகர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதைப் போல அந்த கோவிலுக்கு வழிபாட்டிற்காக வந்த ஒரு பெண் மணியும் ஆலயத்திற்குள்ளேயே கருகி, இறந்து கிடந்தார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கும் நிவாரண உதவித் தொகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவரவர் களே, அன்றைக்கு அங்கேசென்றபோது அந்தப் பூசாரிகளில் ஒருவர் இறந்துவிட்டார், ஒருவர் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் இருந்தார். இறந்துபோனவர் இன்னுமொருவர் என்று சொல்லப் பட்டது. அது பூசாரியா அல்லது வழிபாட்டிற்கு வந்தவரா என்று தெரியவில்லை. அப்படி இறந்திருந்தால் அவர்கள் குடும்பத் திற்கும் உதவித் தொகை வழங்கப்படும்.



1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவரவர் களே,

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

8. அறிவிப்பு.

சட்டமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சென்னை மாநகர காவல்துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி இன்று 12-58 மணிக்கு வரப்பெற்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

From Thiru S. Sripal. I have the honour to inform you that Tvl. N.V.N.Somu, MLA and D.Purushothaman, MLA, were arrested at abou 11.15 hours today (29-8-81) along with other DMK Partymen in 'X' Station Cr. No.477/81 u/s 143 IPC r/w 41 MCP Act and 7(1) Criminal Law Amendment Act near Anna Statue on Anna Salai for taking out a procession in violation of prohibitory order in force and causing obstruction to road users and free flow of traffic. They were sent for remand.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 31-8-1981 அன்று காலை 9-00 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

99. எந்தத் தேதியிலிருந்து தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனை வரி (கூடுதல் வரி) திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்பது குறித்து 4-6-1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 629-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (கூடுதல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

100. சென்னை—17ல் உள்ள பாலமந்திரின் (அனாதைக் குழந்தைகள் மருத்துவமனை) தச்சுப்பட்டறைத்தொழிற்பிரிவு விற்பனை செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து 15-6-1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள் அறக்கட்டளைகள் துறையின் 670ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொதுவிற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

101. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 2-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 1508 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

102. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான விதிகளில் சில விதிகளை உருவாக்குவது குறித்து 23-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 35 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

103. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 2-2-1981 ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 215 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

104. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு கிடங்குச் சட்டத்தில் சில விதிகளை உருவாக்குவது குறித்து 9-6-1981 ஆம் தேதியிடப் பெற்ற உணவு—கூட்டுறவுத் துறையின் 458 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு கிடங்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.



### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 27. 1981 ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக்கழக திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 68/1981).

* 28. 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 69/1981).

* 29. 1981 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 70/1981).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### திங்கட்கிழமை, 1981 ஆகஸ்ட் 31

### ஆவணி 15, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ கே ட்டையிலுள்ள சட்டமன்றப் பரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் லைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இன்றியமையாச் சிறப்பின ஆயினும்

குன்ற வருப விடல்.''

இன்றியமையாத சிறந்த செயல்களே ஆயினும் அவற்றால் ஒருவனுடைய நாட்டின் சிறப்புக்கு குறை உண்டாகுமானால் அந்தச் செயல்களை அவன் செய்தல் கூடாது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 101—திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு ஆன முதலீடு ரூபாய் எவ்வளவு?

(ஆ) மத்திய அரசு இதற்கான அனுமதி வழங்கிவிட்டதா?

(இ) இதன் மூலம் ஆண்டுக்கு எவ்வளவு மதிப்பீடு உள்ள மீன்கள் கிடைக்கும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) குமரி ம. வட்டத்தில் சின்னமுட்டத்தில் மீன்பிடிக்கும் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 278.00 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்திற்கான மத்திய அரசின் அனுமதி இன்னும் வழங்கவில்லை.

(இ) இத் துறைமுகத்தை முழுமையாக மீனவர்கள் பயன் படுத்துவர்களேயானால் படிப்படியாக ஆண்டுதோறும் அதிகரித்து ஐந்தாவது ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 857.00 இலட்சம் மதிப்புள்ள 34,000 டன் மீன்கள் இத்துறை முகத்தினைப் பயன்படுத்துபவர்களால் பிடிக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சின்ன முட்டத்தில் ரூபாய் 2 கோடிக்கு அதிகமான செலவில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதிலே அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கையை நான் பாராட்டி அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதிகப்படியாக மீன் கிடைக்கின்ற பூதத்துறை, எரேமியன்துறை, போன்ற இடங்களில் இப்படிப்பட்ட திட்டத்தை அமுலாக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்புக்கள் இல்லை. மேலும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்ததற்குப் பிறகுதான் மற்ற திட்டங்களைப் பற்றி ஆலோசிக்க வேண்டிவரும். அப்போது மத்திய அரசுடன் கலந்து ஆவன செய்யப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதால் கிடைக்கும் பலன் என்ன? மத்திய அரசின் அனுமதியை உடனடியாகப் பெறுகின்ற வகையிலே மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அங்கே துறைமுகம் கட்டுவதற்கான அளவுக்கு மதிப்பீடுகளும், வரைப்படங்களும் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைககப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் அந்தத் திட்டம் வேலை செய்யத் தொடங்கும். 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டத்தை செயல்படுத்தினாலும் சிறிய துறைமுகங்களை அதனதன் தேவையினைக் கருதி மாநில அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளும். மத்திய அரசு ஏற்றுக்கொண்டபின் இந்தத் திட்டத்தைத் துவங்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் தமிழக அரசு ஆயிரம் ரூபாயினை மாநில நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி இருக்கின்றது.

அந்தத் துறைமுகம் கட்டி முடிக்கப்படுமேயானால் அதன்மூலம் 34,000 டன் மீன்கள் அந்தத் துறைமுகத்தினைப் பயன்படுத்துபவர்களால் பிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றை நாம் விற்றால் அதன் மூலம் 8 கோடியே 57 இலட்சம் ரூபாய் கிடைக்கும்.

மன்னார் வளைகுடாப் பகுதியில் செயற்கை முத்து உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 102— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மன்னார் வளைகுடாவில் வணிக அடிப்படையில் செயற்கை முத்து உற்பத்திக்கான திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், இது பற்றிய விபரம் என்ன?

(இ) எந்த இடத்தில் அமையப்பெறும்?

(ஈ) எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) மன்னார் வளைகுடாப்பகுதியில் கிடைக்கும் முத்துச் சிப்பிகளைக் கொண்டு செயற்கை முத்துக்கள் உற்பத்தி செய்யும் முன்னோடித்திட்டம் (Pilot Project) ஒன்றை செயல்படுத்த மீன் துறை முனைந்துள்ளது. ஐந்து ஆண்டுகள் செயல்படவுள்ள இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 11,14,000. இதன் மூலம் ரூ. 14,75,000 மதிப்புள்ள சுமார் 1,09,000 முத்துக்கள் உற்பத்தி செய்யப்படும்.

(இ) திட்டம் தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ளது.

(ஈ) 1981–82-ம் ஆண்டு துவங்கி ஐந்து ஆண்டுகள் செயல்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை முத்துக்கள் தயாரிப்பதைப் பற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தூத்துக்குடியிலே இயற்கையான முறையிலே முத்து சேகரிக்கும் திட்டம் சமீபகாலமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதே, அதை மீண்டும் துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இயற்கை முத்துக்களைப் பொறுத்தவரையில். ஆண்டுக்கணக்கில் உற்பத்தி செய்ய இயலாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அவை முதிர்ச்சி அடைவதற்கு,10 ஆண்டு 15 ஆண்டுகள் கூட ஆகின்ற நிலைமை இருக்கிறது. தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் 15 ஆண்டுகள் ஆகின்றன. ஏனென்றால் கடலிலே இருக்கிற அந்த முத்துக்கள் முதிர்ச்சி அடையவில்லை என்று அறிஞர்கள். வல்லுநர்கள் தெரிவித்திருக்கிற தகவலின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

இருந்தாலும் செயற்கை முத்துக்களை உருவாக்குகின்ற பணியை நாம் மேற்கொண்டிருக்கிறோம். தூத்துக்குடியிலே இதற்கென ஒரு நிலையம் அமைக்கப்பட்டு. கடலிலேயிருந்து முத்துச்சிப்பிகளைக் கொண்டு வந்து. அதை செயற்கை முறையில் முத்துக்களாக உருவாக்கும் முயற்சி மத்திய சர்க்காருடைய உதவியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது வெற்றி பெருமேயானால். விரைவிலே அதிகமான அளவில் முத்துக்களை வெளிக்கொண்டு வரும் முயற்சிகளை எடுக்கலாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் ஏற்கெனவே இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிற நிலையத்தில் அந்தச் சிப்பிகளில் செயற்கை முறையில் முத்துக்களை உண்டாக்குவதற்கான நியூக்கிளியஸ் என்ற பொருள்

வெளிநாட்டிலிருந்து கிடைக்க தாமதம் ஏற்படுகிறது. இதனால் தான் முழு வளர்ச்சி அடையமுடியவில்லை என்று சொல்கிறார்களே, அந்த நியூக்ளியஸ் என்ற பொருள் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரக் குறிப்பும் என்னிடத்தில் இல்லை. ஆனால் அந்த செயற்கை முத்துக்களை உருவாக்குவதற்குத் தேவையான மூலப்பொருள் வெளிநாட்டிலிருந்துதான் வரவழைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதிலே தாமதம் ஏற்பட்டால் இதிலும் தாமதம் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. முழு விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் நிலைமைகளை ஆராய்ந்து பதில் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செயற்கை முத்தாகட்டும். அல்லது இயற்கை முத்தாகட்டும், கடலிலே ஆழமான இடத்திலே போய் எடுத்தால் ஓரளவிற்கு நல்ல முத்துக்கள், பெரும் அளவிலும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அப்படி போவதின் காரணமாக பல்வேறு தாக்குதல்கள், விபத்துக்கள் ஏற்பட்டு பாதிப்பும், உயிர் சேதமும் கூட ஏற்படுகிறது. ஆகவே அதிக தூரத்திலும், ஆழமான இடத்திலும் போய் எடுப்பதற்கு மீனவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே அப்படி விபத்து ஏற்பட்டால், பாதிக்கப்படுகிற குடும்பங்களுக்கு, நிவாரணம் அளிக்கும் வகையில் நஷ்டஈடு ஏதாவது வழங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படி முத்துக்குளிப்பவர்களின் இறந்துபட்ட குடும்பங்களுக்கு நிவாரணமளிக்க பாதுகாப்பு அளிக்க பல்வேறு ஏற்பாடுகள் எல்லாம் இருந்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் ஆழ்கடலில் வெகு தூரத்தில் முத்துக்கள் அதிகமாகக் கிடைக்குமா என்பது தெரியவில்லை. அப்படிக் கிடைக்கும் என்பது நிச்சயமாக இருந்தால் அவைகளை ஆழ்கடலிலிருந்து எடுத்து வர, பல்வேறு இயந்திர சாதனங்களை இட உபயோகிக்கலாம். ஆனால் அறிஞர்கள், வல்லுநர்கள் இப்போது முத்துக்கள் கிடைக்கும் இடங்களிலுள்ள சிப்பிகள் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை என்று சொல்கிறார்கள். அவைகளை அவ்வாறு முதிர்ச்சி அடையச் செய்யத்தான் நாம் பலவிதமான செயற்கை முறைகளைப் பயன்படுத்துகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் முத்துகள் உற்பத்தி எவ்வளவு சிறந்து விளங்கின. கடல் கடந்தும் அவைகள் எப்படி வாணிபம் செய்யப்பட்டன என்பதைப்பற்றி சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் எல்லாம் சிறப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. அவ்வளவு சிறந்த முத்து



எடுக்கும் தொழில் இப்போது நலிந்து போனதற்குக் காரணம் என்ன? ஜப்பானில் செயற்கை முத்துக்களைத் தயார் செய்ய சிப்பிகளுக்கு ஊசிமருந்து செலுத்துகிறார்களே அதுபோன்ற மருந்துகளை தமிழக அரசும் பயன்படுத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அந்த பெருமையும், புகழும் தமிழகத்திற்கு இன்றும் உள்ளது. இன்றும் ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற இடங்களிலிருந்து தமிழக முத்துக்களை பெரும் அளவில் வாங்கிச் செல்லுகிறார்கள். ஜப்பானில் செயற்கை முத்துக்கள் தயார் செய்யப்படுகின்றன என்றாலும், அவைகள் அவ்வளவு தரமானதாக இல்லை. சீக்கிரம் நசிந்து விடுகின்றன, கடல் கொல்லுயூஷன் போன்ற சில காரணங்களால் உற்பத்தி செய்யும் தன்மையும் குறைந்து விடுகிற நிலைமை அங்கேயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் இங்கேயிருந்துதான் பெரும் அளவில் முத்துக்களை வாங்குவதை விரும்புகிறார்கள்.

அதனால்தான் நாம் இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு இயற்கை முத்துக்களை எடுப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம். முயன்ற அளவில் செயற்கை முத்துக்களையும் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த முறைகள் வெற்றிப் பெறும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மேலவை செல்ல வேண்டியிருப்பதால் அவருடைய வேண்டுகோளுக்கிணங்க அவரது வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## தாளவாடி மலைப்பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண். 114—திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்தியமங்கலம் தொகுதி தாளவாடி மலைப்பகுதியில் மேற்கு நோக்கிச் செல்லும் பள்ளத்தாக்குகளை தடுத்து அங்குள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:— (அ) மற்றும் (ஆ) நான்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆய்வு நிலையில் உள்ளன. மதிப்பீடுகள் தயார்செய்து, சாத்தியமுள்ள திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்,

[1981 ஆகஸ்டு 31

[முற்பகல் 9.10]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: அந்தத் திட்டங்கள் எந்தக் காலத்திற்குள் எடுத்து முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: நான்கு திட்டங்களை இப்போது தான் ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறார்கள், ஆய்வு அறிக்கை வந்த பிறகு தான் எந்தத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியும். அதற்குப் பிறகுதான் கால நேரத்தை நிர்ணயிக்க முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன்: அமைச்சர் அவர்கள் நான்கு திட்டங்கள் அய்வில் உள்ளதாகச் சொன்னார்கள். அந்த நான்கு திட்டங்கள் எவை எவை என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தொட்டஹள்ள நீர்த் தேக்கத் திட்டம், பெலஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், சிச்ஹோளி நீர்த் தேக்கத் திட்டம், மல்லன்ஹளி நீர்த் தேக்கத் திட்டம். இந்த நான்கு திட்டங்களும் இப்போது ஆய்வு நிலையில் இருக்கின்றன.

## தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணி

*வினா எண் 115— திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்கால் நீண்டகாலமாக தூர் எடுக்கப்படாமல் இருப்பதால் கடைகோடியிலுள்ள விவசாயிகளுக்கு பாசன நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

## பாலாபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம்

*வினா எண். 116— திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியைச் சேர்ந்த பாலாபுரம் கிராமத்திற்கு புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது எடுத்துக் கொள்ளப்படும்



1981 ஆகஸ்டு 31)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டம், மேல்பாலாபுரம் கிராமத்தில் ஒரு குளம் அமைக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்பு தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

## முகவை மாவட்டம், கம்பிக்குடி கட்டிக்குளம் கண்மாய்களை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண். 117— திரு. எம். பிச்சை: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) முகவை மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் கம்பிக்குடி கண்மாயையும், மானாமதுரை தொகுதியில் கட்டிக்குளம் கண்மாயையும் உலக வங்கியின கடன் வழங்கு திட்டத்தின மூலம் மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேப்படும்?

மாண்மிகுபு திரு. கே. இராஜா முகமது:— (அ) ஆம்

"(ஆ) கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டத்தின்" கீழ் இக்கண்மாய்கள் முன்னோடி திட்டங்களாக எடுத்துக்கொள்ளப பட்டு கால்வாய்களில் சிமெண்ட் பலகைப் பதிக்காயல் ஏற்படும் நீர் கசிவு அளவு பரிசோதனைகள செய்யப்படுகின்றன. இப் பரிசோதனைகள் முடிவுற்றபின், திட்டங்கள் எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. க பாரமலை: இத்திட்டங்கள் பொறுத்து முன்னோடித் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசோதனைகள் செய்யப் படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவை மிகவும் பாதிக்கபபட்ட கண்மாய்கள் ஆகவே இந்த வேலைகள் விரைவில் துவக்கப்படவேண்டும். அப்போதுதான வருகிற மழைக் காலத்துல் தண்ணீரை தேக்கி வைக்க முடியும். சென்ற தடவை அந்தக் கண்மாய் பாசனம் முழுமையிலும் பயிர்கள் விளைய வில்லை. ஆகவே அதை கருத்தல் கொண்டு இந்த வேலைகளைத் தீவிரமாகச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்தத் திட்டம் உலக வங்கியன் நிதியுதவி பெற்று பட்ட ஏக்கருக்கும் அதற்கு மேலாக உள்ள ஏககர்களுக்கு பாசன வசதி தரககூடிய வகையில 490 கண்மாய்களை சுமார் 120 கோடி ரூபாய் செலவில் தூர் எடுத்து கண்மாய்களின் கொள்ளளவை அதிகப்படுத்தி நவீன முறையில் பாசனவசதி செய்து தருவதற்காக எடுத்துக் கொள்ளப் படயிருக்கிற ஒரு திட்டத்தின் முன்னோடி திட்டமாகும். ஆகவே அவர்களால் வரையறுக்கப்படுகிற நிலையில்தான் இந்தத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டம்

நிறைவேற்றப்படும்போது அந்த திட்டம் அந்தப்பகுதி மக்களுக்கு எவ்வளவு பெரியதொரு வரப்பிரசாதம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணருவார்கள். ஆரம்ப வேலைகளை விரைவில் முடிக்க அரசு உத்தரவிடும்.

திரு. எம். பிச்சை: அருப்புக்கோட்டைத் தொகுதியில் உள்ள கம்பிக்குடி கண்மாயை 'கண்மாய்களை' நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதற்கு அருப்புக்கோட்டை தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? மதுரை மாவட்டம் நிலையூர் கூத்தியார்குண்டு கண்மாய் வழியாக, வைகையில் நீர் நிரம்பி வழியும் போது மறுகால் மூலம் கூத்தியார்குண்டு கண்மாய் நிறைந்து வரும் தண்ணீரை கம்பிக்குடி கண்மாய்க்கு, உலகாணி கால்வாயை ஆழப்படுத்தி கம்பிக்குடி கண்மாய்க்கு தண்ணீர் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : இந்த முன்னோடித் திட்டத்தை விரைவில் முடித்துக்கொண்டு கூடுமான வரையில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல உபரித் தண்ணீரைத் கம்பிக்குடி கண்மாய்க்கு வரும் வகையில்தான் குறிப்புகள் இருக்கின்றன. முன்னோடித் திட்டத்தின் அறிக்கை வந்த பிறகுதான் அதுகுறித்த விரிவான தகவல்களைத் தர முடியும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக 50 ஏக்கர், அதற்கு மேற்பட்ட நீர்ப்பாசன கண்மாய்களை எடுத்துக்கொண்டு வேலைசெய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு 2,000, 3,000 7,000 ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி பெறும் கண்மாய்கள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. எப்படி இந்தக் கண்மாய்களை செலக்ஷன் செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே 8 இடங்களிலே இந்தக் கண்மாய்களை முன்னோடித் திட்டத்தின்கீழ் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கண்மாய்களின் வேலையை முன்னோடித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு, அதிலே ஏற்படக்கூடிய அனுபவத்தைப் பெற்று, மேற்கொண்டு இந்தத் திட்டத்தைத் தயாரிக்க எவ்வளவுதூரம் இந்த முன்னோடித் திட்டம் உதவுகிறது என்பதைப் பார்த்து, அதன்பின் பிற கண்மாய்களை எடுத்துக் கொள்வது என்பது அரசின் நிலை.

## பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்—

குறுகிய கால வினா எண். 2—. திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—



(அ) பலகோடி ரூபாய்செலவில் தாரபரணி, மணிமுத்தாறு, கோதையாறு, லோயர் கோதையாறு, கல்லணை ஆகிய பாசன மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது திட்டங்கள் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (அ), (ஆ) மற்றும் (இ) கோதையாறு பாசனத்தின் கீழ் வருகின்ற திருப்பரப்பு அணைக்கட்டு வலதுபுறக் கால்வாய் விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றும் அனந்தனார் கால்வாய் மேம்பாட்டுத்திட்ட வேலைகள் தொடங்கவிருக்கின்றன. ஏனைய திட்டங்கள் தலைமைப் பொறியாளர்களின் ஆய்வில் உள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் தாமிரபரணித் திட்டமும், மணிமுத்தாறுத் திட்டமும், கல்லணைத் திட்டமும் இருக்கின்றன. அவைகள் எந்த நிலையில் இருக்கின்றன. அவைகளிலே எப்போது வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி பாசன அமைப்பை நவீனப்படுத்த வேண்டுமென்று அங்குள்ள விவசாயிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அந்த பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதென அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டது முதல் நிலை. இரண்டாவதாக, மேற்படி பாசன அமைப்பில் கடைக்கோடி பகுதியை முதலிலே எடுத்துக் கொள்வதென்று சொல்லி, அந்த வேலைகளைத் துவங்குவதற்கு ஆய்வு வேலை இப்போது நடந்துகொண்டிருக்கிறது, மொத்தமாக தாமிரபரணி பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கு 20 கோடி ரூபாயாகும்; அதேபோல் மணிமுத்தாறு பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கு 3 கோடி ரூபாயாகும். ஆக இந்தத் தாமிரபரணி மணிமுத்தாறு பாசனத் திட்டங்களுக்கு 23 கோடி ரூபாய் செலவாகும் என்று ஓர் மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாமிரபரணி பாசனத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற வடக்கு கோடைமேலழகியன் கால்வாய் பகுதிக்கு எவ்வளவு தொகையாகும்? அதேபோல் தெற்கு கோடைமேலழகியன் கால்வாய் பகுதிக்கு எவ்வளவு தொகையாகும்? அதேபோல் நதி தண்ணீர் கால்வாய் திட்டத்திற்கு எவ்வளவு தொகையாகும் என்பதோடு, இந்த வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, தாமிரபரணி, மணிமுத்தாறு ஆகிய இரண்டு பாசனத் திட்டங்

ஊருக்கும் எவ்வளவு தொகை செலவாகும் என்ற தோராய மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஆரம்பக் கட்டத்தில் அதன் கடைக்கோடிப் பகுதியில் வேலை செய்ய வேண்டுமென்று, ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு, அந்த திட்ட மதிப்பீடுகளைப் பற்றிச் சொல்ல முடியும்.

## முதுகுளத்தூர் தொகுதியை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவிக்கும் திட்டம்

*வினா எண். 103 திரு. கே. தனுக்கோடித் தேவர்:— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதுகுளத்தூர் தொகுதியை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரணப் பணிகள் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் மாவட்டம், ஏற்கனவே மத்திய மாநில அரசுகளின் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் (Drought Prone Area Programme) சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது நிலவும் வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான நிவாரணப் பணிகளை அரசு செய்து வருகிறது.

திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் கேட்டிருக்கிற கேள்வி, முகவை மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியைப் பற்றியதாகும். ஆனால் அமைச்சர் அவர்கள் மொத்த மாவட்டத்தைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூர் தொகுதியும், கடலாடித் தொகுதியும் மிக மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. எனவே அவைகளை மற்ற தொகுதிகளோடு ஒப்பிடாமல், நிரந்தரமான தொழில் துறைகளை, மற்றும் ஆலைகள் போன்றவற்றை அங்கே ஏற்படுத்தி, அங்குள்ள மக்கள் இயற்கையையே நம்பிக் கொண்டிராமல், நிரந்தரமான ஒரு வாழ்க்கையை அந்த வறட்சிப் பகுதிகளிலே ஏற்படுத்தித் தரவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: முதுகுளத்தூரும் இராமநாதபுரம் மாவட்டத்திலேதான் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் வறட்சிப் பகுதிகளாக எடுத்துக் கொள்ளும் போது முதுகுளத்தூரும் அதிலே வந்துவிடும்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: இன்றைக்கு மற்றத் தொகுதிகளில் நீர் வளம் இருக்கிறது, தொழில் வளம் இருக்கிறது. முதுகுளத்தூர் தொகுதியில் நீர் வளம் இல்லை. தொழில் வளம் இல்லை. அங்கு வாழ்கின்ற மக்கள் இயற்கையை நம்பி வாழ்கிற காரணத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் பூராவுக்கும் விதிவிலக்கு அளித்து எடுத்துக் கொள்கிறபோது முதுகுளத்தூரும் அதிலே வந்துவிடுகிறது. அப்போது முதுகுளத்தூர் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பெற்று 30 இலட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. கிணறுகள் ஆழப்படுத்துவது, சாலைகள் அமைப்பது, ஊருணிகளைச் செப்பனிடுவது, பெரிய ஏரிகளை வெட்டுவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் முழுவதற்குமாக ஆறு கோடி நாற்பத்தோரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: கிழக்கு முகவை மாவட்டத்தில் ஓராண்டு விட்டு ஓராண்டு வறட்சி ஏற்பட்டு வருவது அரசுக்குத் தெரியும். இப்போது குடிதண்ணீர் லாரிகளின் மூலம் ஊர் மக்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ஆறு கோடி ரூபாய் செலவழிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிரந்தரமாக கிழக்கு முகவை மாவட்டத்திற்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வைகையாற்றிலிருந்து தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதற்காகத்தான் இராமநாதபுரம் மாவட்டம் ட்ரவுட் ப்ரோன் ஏரியா புரோகிராமில் சேர்க்கப்பட்டு குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்க பணம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. க. பாரமலை: நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் டி. பி. ஏ. பி. திட்டம் பற்றி சொன்னார்கள். அது நடைபெற்று வருகிறது; அதற்காக நன்றி. கிழக்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரை ஒன்று வறட்சியாகப் போய்விடுகிறது அல்லது வெள்ளம் வந்து வெள்ள நிவாரணம் பணிகள் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இயற்கையினால் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகிற அந்த மாவட்டத்தில் நிரந்தரமாக வறட்சிப் பணிகளைத் தொடர்ந்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தேவையான அளவுக்கு வறட்சிப் பணிகள் மேற்கொள்ளப் பெற்று செயல்படுத்தப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்படுகிற மாவட்டம், வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டம் என்று அறிவித்து பல காரியங்களைச் செய்திருந்தாலும் கூட ஆண்டுதோறும் தொடர்ந்து இந்த நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன. இதை மனதில் கொண்டு நிரந்தரமாக இந்த மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கு வழிவகைகள் செய்யும் வகையில் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து கிடை[illegible] தண்ணீரைத் திருப்பிவிடுவதற்கான முயற்சியில் அரசு ஈ[illegible]

செய்து தருவதோடு மத்திய சர்க்கார் மூலம் நடத்தப்படுகிற பெரும் தொழில்களை இந்த பிற்பட்ட பகுதியில் தொடங்கவும் அதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்கான உதவிகளைச் செய்யவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சியான பகுதி, பின்தங்கிய பகுதி என்று கருதி மாநில அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து நிரந்தரமான வளர்ச்சிப் பணிகளைச் செய்ய திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறது.

## பெரிய கிராமங்களுக்கு கூடுதல் தலையாரிகள் நியமிக்கும் திட்டம்.

*வினா எண்: 104 திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாக் கிராமங்களிலும் மூன்று தலையாரிகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளதா?

(ஆ) பெரிய கிராமங்களுக்குக் கூடுதல் தலையாரிகள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): முன்னாள் வருவாய் வாரியத்தின் நடவடிக்கைகளின்படி 4,500க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு மூன்று கிராமக் காவலர்கள் வரையிலும் நியமிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. 3 பேர்களுக்கு மேல் நியமிக்கக்கூடாது என்று உத்திரவு போடப்படவில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பல கிராமங்களைப் பார்வையிட வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தினால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இன்னும் அதிகமான அளவில் கிராம அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நிரந்தரமான கிராம அதிகாரிகளைப் போடுவதற்கு இன்றைக்கு அரசு திட்டங்களைப் போட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது.

திரு. வி. இராமலிங்கம்: கிராம அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்ட போது அரசுக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்த நேரத்திலே எல்லாம் தலையாரிகள் அரசுக்கு ஆதரவாக இருந்தார்கள். அவர்களுக்கு வெகுமதியாக அவர்களில் வயதானவர்கள் என்று சொல்லி ஒரு தாலுக்காவுக்கு 50 பேர்கள் வீதம் பணி





நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தலையாரிகள் இல்லாத கிராமங்களிலே அவர்களுக்குப் பணி கொடுக்கப்படுமா? அவர்களுடைய வாரிசுகளுக்கு அந்தப் பணியிலே முன்னுரிமை கொடுத்து நியமிக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறைமுகமாக பரிசா என்று கேட்டிருக்கிறார்கள். உதவி செய்தவர்களுக்கு பரிசாகாது. ஆனால் வயதானவர்களை வெளியே அனுப்புவது பற்றி சட்டதிட்டத்திலே இருக்கிறது. கீழ் நிலையிலிருந்து தலைமை வரையில் வயது ஆனவர்கள் அரசின் சட்டதிட்டப்படி வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூடச் சொன்னார்கள் தலையாரிகள் சம்பந்தமாக நிச்சயமாக முன்னுரிமை அளிக்கப்படும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று. கிராம அதிகாரிகளுக்கு சிறு சிறு விஷயங்கள் வந்தாலும் அவர்களையே விட்டுவிட்டு வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களை படிப்பு காரணம் காட்டி, பச்சையாகச் சொன்னால் ஜாதி காரணம் காட்டி பெரும் அநீதி இழைக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக தென் ஆற்காடு, வடஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள கீழ்த்தரத்தில் உள்ள சிப்பந்திகள் வேண்டுகோள் அரசுக்குக் கொடுத்து இருப்பது தெரியுமா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஜாதியைக் காரணம் காட்டி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசுக்கு குறிப்புகள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது கவனிக்கப்படும். அடிப்படை ஊழியர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் செய்ய அரசு தயாராக இருக்கிறது. அதற்கும் சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அதற்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி டி. யசோதா: தேவையான அளவுக்கு கிராம அதிகாரிகள் இல்லாததால் இலவசமாக மனைப் பட்டாக்கள் வழங்குவதிலே காலதாமதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலையாரிக்கும் பட்டாவுக்கும் என்ன சம்பந்தம்?

திருமதி டி. யசோதா: தலையாரிகள் இல்லாததால் தாமதம் அதிலே ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரம் என்ன? இந்த 4,500 என்பது எந்த ஆண்டு கணக்குப்படி குறிக்கப்பட்டது. அதைப்பற்றிய விபரங்களைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: வீட்டு மனை கொடுப்பதிலே எங்கேயும் தடங்கல் ஏற்படவில்லை. 4,500 என்பது 1921 கணக்குப்படிதான். இப்போது அதிகப்படுமானால் அதற்குத் தகுந்தபடி புதிய அலுவலர்களைப் போடலாம்.

[1981 ஆகஸ்டு 31

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் ஆண்டுக்கணக்குகள் தணிக்கை.

* வினா எண் 105—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் 1978-79, 1979-80 ஆண்டுகளுக்குள் தணிக்கை, செய்யப்பட்டனவா?

(ஆ) உள்நிதி தணிக்கையாளர்கள் குறிப்பிட்டுள்ள அறிக்கை என்ன?

(இ) குறைகள் களையப்பட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1978-79-ல் 21 தணிக்கைத் தடைகளும் 1979-80-ல் 29 தணிக்கைத் தடைகளும் கூறப்பட்டுள்ளன. எனினும் நிதி நிர்வாகத்திலும், கணக்குகள் பராமரித்ததிலும் இவ்விரண்டு ஆண்டுகளில் தணிக்கை முடிவுகள் ஓரளவு மனநிறைவு அளிப்பதாக உள்ளன என்று தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(முற்பகல் 9.30)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் நிர்வாக அதிகாரி பதவியும், அசிஸ்டன்ட் பதவியும் முறைப்படி நியமிக்கப்படவில்லை; அரசு விதிகளுக்கு மாறாக பென்ஷன் விதிகளுக்கு மாறாக ரிடையர் ஆனவர்கள்—ஓய்வு பெற்றவர்கள் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுக்குக் கூடுதலான சம்பளம் கொடுக்கப்பட்டதைத் தணிக்கைத் துறையினர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படுமா? அதோடு மட்டுமல்லாமல், அக்கவுண்டன்ட், விற்பனை கிளார்க் ஆகியோருக்குச் சட்ட விரோதமாக அதிகப்படியான சம்பளம் வழங்கப்பட்டதாகத் தணிக்கைத் துறையினர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டனவா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, ஒரேயொரு முறையில் தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். ஓய்வு பெற்றவர்கள் நியமனம் செய்யப்பட்டதைப் பற்றி எழுதப்பட்டுள்ள குறைகளைப்பற்றி அரசுக்கு விரிவான அறிக்கை இந்நூலக ஆர். சி. எண். 370/79 நாள் 9-12-80 கடிதத்தில் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் நியமனம் சரியானது என்றும் எந்த அரசு ஆணையையும் மீறி நியமனம் செய்யப்படவில்லை என்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசு உத்தரவு செய்ய வேண்டும். மற்றப்படி அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.



1981 ஆகஸ்டு 31]

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த நூலகத்தில் சுமார் நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள ஐம்பொன் சிலைகள் இருக்கின்றன. அங்கே 80 வயதானவர்கள், 70 வயதானவர்கள் பணிகளிலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, அங்கே பி.எச்.டி. பட்டம் பெற்றவர்கள் நேர்முகப் பேட்டித் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அப்பணிகளில் நியமிக்கப்பட்டார்களா என்பதையறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, சரஸ்வதி மகால் நிர்வாகத்தை முழுவதையுமே சீர்திருத்தியமைக்க ஒரு நடவடிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. அத்தகைய நடவடிக்கையை நாம் எடுக்கும்பொழுது இந்த பல்வேறு குறைபாடுகள் இல்லாமல் போகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏர்வாடி அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.

* வினா எண் 106—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டம் ஏர்வாடி அரசு பெண்கள் உயர் நிலைப்பள்ளி கட்டிடம் ஆபத்தான நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு ஓட்டுக் கட்டடம் பழுதடைந்துள்ளது. அது இப்பொழுது பயன்படுத்தப்படவில்லை. இக்கட்டிடத்தை மராமத்து செய்வதற்கு பொதுப்பணித்துறையினரிடமிருந்து மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. அவைகளைப் பெற்று மராமத்து பணியினை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, ரொம்பகாலமாகப் பழுதடைந்து மோசமாக இருப்பதால் வகுப்பறை நடத்தப்படாமல் இருக்கிறது. இதனால் இட நெருக்கடியும் அதிகமாக இருக்கிறது. எனவே, சீக்கிரமாக அந்த இடத்தைப் பழுது பார்ப்பதற்கோ அல்லது வேறொரு கட்டடத்தைக் கட்டுவதற்கோ அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1981 ஆகஸ்டு 31

**நிரந்தரமாக்கப்படாமலுள்ள குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிபதிகள்.**

*வினா எண் 107—திரு. மே. அ. இராஜ்குமார் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் நீதித்துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்த்தும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கும் குற்றவியல் இரண்டாவது வகுப்பு நீதிபதிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

(ஆ) அவர்கள் பணி எப்பொழுது நிரந்தரமாக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) 13 பேர்.

(ஆ) இப்பொருள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவரவர்களே, அலுவலகத்தில் பணியாற்றும் வழக்கறிஞர்களை விட்டுவிட்டு, நீதிமன்றத்தில்-வழக்காடி வழக்கப்பட்ட பழக்கறிஞர்களை இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாக நேரடியாக நியமித்து நீதித்துறையைச் சிறப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1965-லிருந்து கடைப்பிடிக்கப்படாமல் இருந்து வரும் இம்முறையை மாற்றி வருங்காலத்தில் வழக்காடுமன்றத்தில் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களுக்கு முன்னுரிமை தர அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபொழுது 1965-லிருந்து வழக்குமன்றங்களிலே வழக்காடுகின்ற வழக்கறிஞர்களைப் போட்டு நீதித்துறையை மேம்படுத்துவதிலே இனிமேல் அந்த வரைமுறை கடைப்பிடிக்கப்படும் என்று சொன்னார்கள். இதற்கு முன்னதாகப் பல குமாஸ்தாக்கள் பல்வேறு அலுவலகங்களிலே வேலை பார்த்தவர்கள்—பார்ட் டைம் ஆக எங்கோ சட்டக் கல்லூரிகளிலே பட்டம் பெற்றவர்களை நீதித் துறையிலே போட்டு, பலர் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் நீதித்துறையினுடைய நிலைமை குறைந்திருக்கிறதே, அவர்களை அவர்களுடைய டிபார்ட்மெண்டுக்கு அனுப்பிவிட்டு வழக்கறிஞர்களை மூன்று நான்கு ஆண்டுகள் என்று பணிபுரிந்தவர்களை அரசு நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965-க்குப் பின்னால், தற்காலிகமாக இதுபோன்ற துறைகளில் பணியாற்றுகின்ற அனுபவரீதியான, வழக்குரைஞர் பயிற்சி இல்லாதவர்களைத் தேர்ந்தெடுத்து, 5



1981 ஆகஸ்டு 31]

ஆண்டுக்காலம், 6 ஆண்டுக்காலம் ஆன பிறகு, அவ்வப்போது அவர்களை ரெகுலரைஸ் செய்து வந்திருக்கிறார்கள். வருங் காலத்தில் வழக்குமன்றத்திலே பணியாற்றுகின்ற வழக்குரைஞர் களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிகப்படியான பிரதிநிதித் துவம் கொடுத்து, அதை நடைமுறைப்படுத்துவதென அரசு உத்தேசித்திருக்கிறது. ஏற்கனவே பணியில் இருப்பவர்கள் பயிற்சி பெற உயர்நீதிமன்றம் ஏற்பாடு செய்து வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலே நீதிபதிகள் இல்லாமல், வழக்குகளில் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிப் பல கோர்ட்டுகளிலே நீதிபதிகள் இல்லாமல், இருப்பதற்குக் காரணம் என்ன மாண்புமிகு ஆண்டித் தேவர் அவர்கள் கூறியமாதிரி, ஏற்கனவே டெஸ்ட் எழுதிய டிபார்ட்மெண்டிலே உள்ள ஊழியர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, நீதிபதிகள் நிரந்தரமாக்கப்படுவதுபற்றி. ஆகவே, அதைப்பற்றி கேளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** ஆகவே, காலியான பதவிகளில் நீதிபதிகள் நியமிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் வகுப்பு நீதிமன்றங்களைப் பொறுத்த வரைக்கும் எந்த இடங்களும் காலியாக இல்லை. இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்களில் 26 நீதிபதிகள் இன்னும் தேவைப்படுகிறார்கள். சிலர் விடுப்பிலே செல்லும்போதெல்லாம் அந்த இடங்களை நிரப்ப வேண்டிய பிரச்னை ஏற்படுகிறது. ஆனால், அவற்றை நிரப்பத் தேர்வினை நடத்துகின்ற பொழுது, இலாகாவிலே பணியாற்றி வருகின்றவர்களை இதற்குப்போட வேண்டுமென்ற நடைமுறையைக் கொண்டு வரும்போது, நீதி மன்றத்தினுடைய திறன் குறைந்துவிடுகிறது என்று உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. எனவேதான் தேர்வாணைக் குழு மூலமாக விரைவிலே தேர்ந்தெடுத்து, பயிற்சி பெற்றவர்களை நியமிக்க அரசு உத்தேசித்திருக்கிறது.

**திரு என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இன்னும் 13 பேர் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார் கள் விரைவில் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படி நீண்ட காலமாக நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன இனியாவது குறிப்பிட்ட காலத்திற்குள், 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆனவுடனே அவர்களை நிரந்தரமாக்க அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால், 180 நாட்களுக்கு மேல் தொழிற்சாலைகளிலே வேலை செய்யும் தொழிலாளர்களையே நிரந்தரமாக்க வேண்டுமென்று சொல்லும் இந்த நேரத்திலே, நீதிபதிகளை நீண்டநாட்களாக நிரந்தரமாக்காமல் வைத்திருப்பது என்ன நியாயம் என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஆகஸ்டு 31

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, Indicial Subordinate Service பொறுத்தவரையில், அதற்காகச் சில விதிமுறைகளை இயற்றாமல், 1968-லேயிருந்து கிட்டத்தட்ட 1979 வரை நடவடிக்கை எடுக்க மல் இருந்து விட்ட காரணத்தால்தான் அவர்கள் நிரத்தரமாக்கப்பட மலிருந் திருக்கிறார்கள். தற்போது அந்த விதிகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. தற்போது அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் தனித் தன்மையைக் கருதி அவர்களை எடுத்த எடுப்பிலேயே நிரந்தரமாக வேலைக்குப் போட ஆவன செய்யப்படுமா என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனித் தன்மை ஒன்றும் கிடையாது. ஆகவே, அடுத்து, திரு. எல். இளையபெருமாள்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், 23 பேர் இரண்டாம் வகுப்பு மாஜிஸ் டிரேட்களாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதே சமயத்திலே மலைவாழ் மக்கள், ஷெடுயூல்டு வகுப்பினர் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டு களாக இருந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லையென்ற கோரிக்கை அரசுக்கு வந்திருப்பது உண்மையா? அப்படியிருந்தால் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? மேலும் அரசியல் சட்டத்தில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிற சதவீதம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக்கப்படுகின்றபொழுது கண்டிப்பாக கம்யூனல் ஜி. ஓ. கடைபிடிக்கப்படும். இது 1965 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகிற பிரச்சினை என்பதைப் பலமுறை கூறினேன். அதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சனையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கூட்டுறத் துறையில் பணிபுரியும் இளநிலை, மற்றும் முதுநிலை ஆய்வாளர்கள்.

*வினா எண். 108 செல்வி வி. விசயலட்சுமி; மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத்துறையில் இளநிலை ஆய்வாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் என்பதற்குப் பதிலாக கூட்டுறவுத்துறை ஆய்வாளர்கள் என ஒரே தகுதியாக்க சந்தானம் கமிட்டியின் சிபாரிசு செயல்படுத்தப்படுமா?



1981 ஆகஸ்ட் 31]

(ஆ) இல்லையெனில் சிபாரிசினை மறு பரிசீலனை செய்து செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இந்த பரிந் துரையை அரசு ஆராய்ந்தது. நிர்வாக காரணங்களுக்காக இதை ஏற்பதற்கில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது.

(ஆ) மறு பரிசீலனை செய்யும் எண்ணம் இல்லை.

கோவை மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பட்டதாரி எழுத்தாளர்கள்

*வினா எண். 109 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய கூட்டுறவு வங்கிகளில் அமர்த்தப் பட்ட பட்டதாரி எழுத்தர்களுக்கு ஆறு ஆண்டு காலமாக ஊதிய உயர்வு வழங்கப்படாதது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு பயிற்சி பெறாத 45 பட்டதாரி எழுத்தர் களையும் மாலை நேர கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பி, அவர்கள் வகிக்கும் எழுத்தர் நிலை பதவிக்கு அவர்களை தகுதி உள்ளவர் களாக்கி ஊதிய உயர்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9-40]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளிலே எல்லாம் இம்மாதிரி கூட்டுறவுப் பயிற்சி பெறாத பட்டதாரி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த கோவை மத்திய வங்கி ஊழியர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்ன? அங்கே உள்ள தனி அதிகாரி அங்குள்ள தொழிலாளர்களை இரண்டு பிரிவினராகப் பிரித்து கொண்டிருக் கிறார். ஆகவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணு வதைப்போல இது கோவைக்கு மட்டுமே உரிய பிரசினை அல்ல; இப்படி உதவி ஆய்வர்களைப் பொறுத்தவரையிலும் எல்லா மாவட்டங்களிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

உதவி ஆய்வர்களில் இருந்து இளநிலை ஆய்வர்களாக ஆக வேண்டும் என்று ஒரு கோரிக்கை இருக்கிற காரணத்தினாலும் தட்டெழுத்துப் பிரிவினர்களும்கூட அந்தப் பதவி உயர்வுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிற காரணத்தாலும்,

அரசே அதை ஆய்ந்து இதை வேண்டாம் என முடிவெடுத்திருக்கிறது. 1979-லே இந்த முடிவு எடுக்கப்பட்டிருச்கிறது. அதை இந்தக் கோவை வங்கிக்கும் அறிவித்திருக்கிற காரணத்தினால அரசின் முடிவை அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள்.

திரு. வெ. அரங்கராசன்: தலைவர் அவர்களே, பட்டதாரிகளை மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே எழுத்தர்களாக நியமித்து உள்ளதாகவும் அவர்களுக்குப் பயிற்சி அளித்து நிரந்தரம் ஆக்கப் போவதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விதிகளில் கூட்டுறவு மேற்பார்வையாளர்களையும் எழுத்தர்களாக நியமிக்க வேண்டும் என்று விதி இருந்தும் அதை மீற எந்த ஆண்டு இவர்களை நியமித்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு என்னிடம் தற்போது இல்லை. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர்கள் அப்படி வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. பல ஆண்டுகளாக பணியிலே அவர்கள் அமர்ந்து விட்ட காரணத்தினால், அவர்கள் எந்த முறையிலே அமர்த்தப் பட்டுவிட்டாலும் கூட அவர்கள் அந்தத் தகுதியினைப் பெற, அந்தப் பயிற்சியினைப் பெற்று, தகுதியைப்பெற்றுவிடுவார்களானால் போதும் என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தியாவிலேயே புகழ் மிக்க அங்காடியாக இருந்த சிந்தாமணி அரசியல் கட்சிகளின் தலையீட்டால், சீர்குலைந்து சின்னாபின்னமாக ஆகி கிடப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர். கேள்வி 6 ஆண்டுக்காலமாக அவர்கள் ஊதிய உயர்வு பெறாததைக் குறித்து.

திரு. கோவைத்தம்பி: இன்று மத்திய கூட்டுறவு மத்திய வங்கி பயன்படமால் முடமாக்கப்பட்டதும், அங்கே இருக்கின்ற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டதற்கு, கடந்த காலங்களிலே ஏற்பட்ட அரசியல் தலையீடு என்பதை ஆராய்ந்து அமைச்சர் அவர்கள் அங்கே பணியாற்றுகிறவர்கள் எந்த அரசியல் கட்சியிலும் ஈடுபடக்கூடாது என்று ஒரு சட்டத்தை கொண்டு வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கியிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஊதியம் இல்லை என்ற நிலை இல்லை. வங்கிகள், வங்கிகளின் கிளைகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியம் இருக்கின்றன. ஆனால், வங்கிகளை ஒட்டிய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் வேண்டும் என்றால் சம்பளம் பெறமுடியாத நிலையில் இருந்தார்கள். அதற்குக்



காரணம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வழங்கும் தகுதியினை இழந்து, வாங்கிய கடனை வசதி படைத்த விவசாயிகள், காலத்திலே கட்டாத காரணத்தினால், பைனான்சியல் வையபிலிட்டியினைக் கூட இழந்து இருந்தது. அந்த நிலையைக் கூட மாற்றி, தற்போது அந்த வங்கிகள் கடன் வழங்கும் தகுதியைப் பெற்று, ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கும் தகுதியினைத் தற்போது பெற்றிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பயிற்சியைப் பெறாத ஊழியர்கள் குறிப்பிட்ட ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பாமல் தனி அதிகாரி தாமதம் செய்கிறார்கள். அதைப்போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் அப்படி தாமதம் செய்வதாக தகவல் இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல, பல ஆண்டுகளுக்கு முன்னாலே பணியிலே அமர்த்தப்பட்டவர்கள், தகுதி இல்லாமல் அமர்த்தப்பட்டவர்களை, வீட்டுக்குக் கூட அவர்களை அனுப்பி இருக்கலாம். பல ஆண்டுகள் பணியில் இருந்து விட்டார்கள். பிள்ளைக் குட்டிகளைப் பெற்று குடும்பங்களோடு இருக்கின்ற அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளித்து வேலைக்கு சேர்க்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இது நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாடு விற்பனை இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்ட உரங்கள்.

*வினா எண் 70—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு (198 ) ஜூன் மாதத்தில் மத்திய அரசு உரங்களின் விலையை ஏற்றியபொழுது டான்பெட் மார்க்கெட்டிங் சொசைட்டியில் இரண்டு மூன்று முன் தினங்கள் வரையில் தனி வியாபாரிகளுக்கு விற்கப்பட்ட உரங்கள் எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு யாது?

(இ) இவ்விழப்பை தனி வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கும் எண்ணம் உள்ளதா?

மர்ண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மத்திய அரசு உரங்களின் விலையை 8-6-80 முதல் ஏற்றிய பொழுது தமிழ்நாடு விற்பனை இணையம் தனது சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் இரண்டு மூன்று முன் தினங்கள் வரையில் தனி வியாபாரிகளுக்கு உரங்கள் எதுவும் விற்கவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு.எஸ். டி. உகம்சந்த்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் தனி வியாபாரிகளுக்கு உரங்கள் எதுவும் விற்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் பல இடங்களில் உர விலை ஏறியபொழுது 'பிரின்சிபல் சர்டிபிகேட்' கூட இல்லாமல் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டதாக புகார்கள் என்னிடம் வந்திருக்கின்றன. அதுபற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா? பிரின்சிபல் சர்டிபிகேட் இல்லாமல் அந்த வியாபாரிகளுக்கு உரங்களை வழங்கிய அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுத்து, ஏற்பட்ட இழப்பை அரசு அவர்களிடமிருந்து வசூல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உரத்தைப் பொறுத்த வரைக்கும் தனி வியாபாரிகளுக்கு விற்க எந்த ஒரு இணையத்திற்கும் அனுமதி கிடையாது. ஆனால் இணையமே உற்பத்தி செய்கிற பாமணி உரத்தை மட்டிலும் விவசாய சங்கங்களுடைய தேவைக்கு மேல் அது இருக்கிற பொழுது வெளி மார்க்கட்டிலே விற்கலாம் என்ற நடைமுறை இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற வினா, மத்திய அரசு உரங்கள் விலையை ஏற்றியபொழுது உரங்கள் தனியார்களுக்கு விற்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி தனியார்களுக்கு விற்கப்படவில்லை. இருப்பினும் தவறு நடக்காமல் இல்லை. கிட்டத்தட்ட 115 கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும், அங்கே இந்த குறிப்பிட்ட தேதிக்கு பிறகு கூட அவர்களுடைய கையிலே அதிகமான பணம் இருந்தது என்று ஆய்விலே கண்டு பிடிக்கப்பட்டது. அதை தீர ஆய்ந்த பிறகு கிட்டத்தட்ட ஏழு சங்கங்களிலே மட்டும் இந்த தவறு செய்திருப்பதாக கண்டு பிடித்து அந்த ஏழு சங்கங்களின் மீது உள்ள தவறை புலனாய்வுத் துறைக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு.எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது பாமணி உரங்களை விற்பதற்கு 'பிரின்சிபல் சர்டிபிகேட்' தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் 'யூரியா' போன்ற மிக முக்கியமான உரங்களை இது போன்று 'பிரின்சிபல் சர்டிபிகேட்' இல்லாமல் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டிருப்பதாகப் புகார்ஏதாவது அரசிற்கு வந்திருக்கிறதா? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அத்தகைய புகார் இதுவரையும் வரவில்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஆதாரம் இருந்து அதைத் தருவாரானால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரசாயன உரங்கள் கூட்டுறவுத் துறையிலே விற்பதற்கும், தனியார் கடைகளிலே விற்பதற்கும் ஏராளமான விலை வித்தியாசம் இருக்கிறது. ஒரு மூட்டைக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் வித்தியாசம் இருக்கிறதே, இது என்ன காரணத்தினால் ஏற்படுகிறது? அதை குறைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, போக்குவரத்துச் செலவு சற்று அதிகமாக ஆகிற காரணத்தால் இது நேர்கிறது. தனியார் கடைகளைப் பொறுத்த வரைக்கும், விவசாயிகள் கிராமங்களிலிருந்து அவர்களுடைய சொந்த வண்டிகளை கொண்டு வந்து அருகாமையிலே இருக்கிற நகரத்துக்கு வந்து எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். 'டிரான்ஸ் போர்ட்டேஷன்' செலவு அவர்களுக்கு இருப்பதில்லை. தனியார் கடைகள் அந்த அளவிற்கு விலையை குறைத்து கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும் விநியோகிக்கப்படுகிற உரங்களை அந்த கிராமங்களிலே, பட்டிக்காட்டிலே இருக்கிற சங்கங்களிலேயே அந்த உரத்தைத் தருகிற காரணத்தால் அதற்கான கூடுதல் போக்குவரத்து செலவு ஆகிறது. இருந்தாலும், தற்போது கிட்டத்தட்ட மூட்டைக்கு ரூபாய் மூன்றிலிருந்து நாலு வரை உர விலையை குறைக்க வேண்டுமென்று அண்மையில் அரசு உத்தரவிட்டிருக்கிறது. அது விவசாயிகளுக்கும் பயனுடையதாக அமைந்திருக்கிறது.

### சைதாப்பேட்டையிலுள்ள ஜூடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம்.

*வினா எண். 71—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சைதாப்பேட்டை 2-ம் வகுப்பு ஜூடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், மாஜிஸ்டிரேட் இல்லாமல், வழக்குகள் தேங்கி கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பதவி எப்போது நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) 28-4-81 அன்று சைதாப்பேட்டையில் உள்ள ஜூடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றத்தில் ஒரு நடுவர் புதிதாகப் பதவி ஏற்றுள்ளார்.

(முற்பகல் 9-50)

திரு. பெ.சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் புதிதாக நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அங்கே நடுவர் இல்லாமல் எத்தனை மாதமாக இருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இப்படி அடிக்கடி நடுவர் இல்லாமல் நீதிமன்றங்கள் இருந்தால், அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும்தான். ஆகையால் இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, அங்கே தற்காலிகமாக இருந்த நடுவர் விடுப்பில் சென்ற காரணத்தால் 'வேக்கன்சி' ஏற்பட்டது. அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக 28-4-81-ல் ஒரு நடுவர் நியமிக்கப்பட்டார். அதனால் தேக்கம் அதிகம் ஏற்படவில்லை. தேவைக்குமேல் நடுவர்கள் இல்லாத காரணத்தால் ஒருவர் விடுப்பில் சென்றால், அவர் விடுப்பிலிருந்து வரும்வரையில் அந்த இடம் காலியாக இருக்கிறது. அதைக்கூட நிவர்த்தி செய்ய தற்போது உயர்நீதி மன்றத்துடன் ஆலோசனை செய்து வருகிறோம், நீதிபதிகள் எங்காவது விடுப்பில் செல்லும்போது அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய, ரிசர்வேஷன் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளை வைத்துக் கொண்டால் நல்லது என்று அரசு கருதுகிறது. அதுபற்றி உயர்நீதி மன்றத்துடன் அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. பின்னர் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சிதம்பரத்தில் சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 110 திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் நகரத்தில் சாக்கடை திட்டம் சரிவர பணியாற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் சாக்கடைத் திட்டம், அங்குள்ள பொதுமக்கள் வீட்டு இணைப்புகள் பெற முன்வராததால், நல்ல முறையில் இயங்கவில்லை. தற்போது சிதம்பரம் நகராட்சி வீட்டு இணைப்புகள் கொடுத்து, இத்திட்டம் நல்ல முறையில் இயங்க தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த திட்டத்திற்கு மூலதனமாக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு மக்கள் முன்வரவில்லை என்று சொன்னார்கள். மக்கள் இந்தத்



திட்டம் வேண்டுமென்று சொல்லி, அவர்கள் முனிசிபாலிட்டி மூலமாக தகவல் கொடுத்து, இங்கே அரசாங்கத்தில் அது சம்பந்தப்பட்ட கோப்புகள் நீண்ட நாட்களாக கவனிக்கப்படாமல் இருப்பதுதான் உண்மை என்று தெரிகிறது. அப்படி இருந்தால் உடனடியாக அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி அவ்வளவு சரியாக இல்லை என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தைக் கொண்டுவரும்போது மொத்தம் இத்தனை இலட்சம் ரூபாய் செலவாகும்; அந்தப் பணத்தை முனிசிபாலிடி திருப்பித் தந்தாக வேண்டும்; திருப்பித் தருவதற்கு என்னென்ன ரிசோர்ஸஸ் இருக்கின்றன என்று எழுதும்போது 'நாங்கள் இவ்வளவு பணம் தருவோம், இவ்வளவு ஹவுஸ் கனக்ஷன் கொடுப்போம். இவ்வளவு வாட்டர் டாக்ஸ் உயர்த்தப்படும்; அதனால் இவ்வளவு ரூபாய் அதிகமாக வரும்; அவைகளை எல்லாம் சேர்த்து கொடுப்போம்' என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள மக்கள் வீட்டு இணைப்பு எடுத்துக்கொள்ள முன்வரவில்லை. எங்காவது ரோட்டிலே சாக்கடை போகட்டும், போனால் நமக்கு என்ன என்று இருந்துவிட்டார்கள். அதற்குப் பின்னால் அதிகாரிகளின் முயற்சியினால் 1981-82-ல் 1033 வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் வழங்குவதாக இருந்தாலும், சாக்கடை வசதி செய்து கொடுப்பதாக இருந்தாலும அதிகமாக ஹவுஸ் கனக்ஷன் எடுத்துக்கொண்டால் அந்த அளவுக்கு அந்த முனிசிபாலிடிக்கு வருமானம் கிடைக்கும். அதனால் ரீப்பேயிங் கெபாசிட்டி அதிகமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தகவல் போதும் என்று கருதுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் அதிகப்படியான 'ரேட்' கேட்கப்பட்டதால் மக்கள் ஹவுஸ் கனக்ஷன் பெற முன்வரவில்லையா? அல்லது அதிகாரிகள் அல்லது ஸ்பெஷல் ஆபீசர்கள் அது சம்பந்தமாக அதிக அக்கறை காட்டவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, இந்த கனக்ஷன் பெறுவதால் நமக்கு ஏன் வீண் செலவு? நம் வீட்டிலிருந்து போகிற கழிவுநீர் எப்படியாவது போய்விடும், அல்லது எங்காவது போகட்டும் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்; அதனால் முன்வரவில்லை. அதன் பிறகு அதிகாரிகள் கொஞ்சம் வசதி படைத்தவர்களை அணுகி, இப்படி சாக்கடை போனால் சுகாதார கேடு அல்லவா, நீங்கள் ஹவுஸ் கனக்ஷன் எடுத்துக் கொண்டால் உங்களுக்கு வசதியாக இருக்கும் அல்லவா? அதனால் முதலில் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அதைப்போலவே குடிநீர் குழாய் தெருவிலே இருந்தாலும், வசதி படைத்தவர்களை அணுகி ஹவுஸ்

கனக்ஷன் எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். இப்படி அதிகாரிகள் சொல்வதற்குக் காரணம், ஹவுஸ் கனக்ஷன் எடுப்பதால் முனிசிபாலிட்டிக்கு பணம் வருகிறது. ஆகவே, முதலிலே மக்கள் முன்வரவில்லை. பின்னர் அதிகாரிகள் பேசி, 1981–82-ல் 1,000 ஹவுஸ் கனக்ஷன் பெறும் வாய்ப்பு எற்பட்டிருக்கிறது. இப்போது அந்த எண்ணம் ரொம்ப முன்னேறி வேலை நடந்து கொண்டிருக்கிறது.

நேர்த்தியாயிருப்பு கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண். 111—திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்கு குடி தண்ணீர் கொண்டு செல்லும் வழியிலுள்ள நேர்த்தியாயிருப்பு கிராமத்திற்கும் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று கிராம மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி கிராமத்திற்கு தண்ணீர் வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) நேர்த்தியாயிருப்பு கிராமத்தில் ஒரு திறந்த கிணறும் ஒரு ஆழ்துளை கிணறும் உள்ளன. இதில் கிடைக்கும் நீர் குடிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. எனவே ஊரகக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் அளிக்க இயலாது. இருப்பினும் அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்தின் கீழ் இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஊரிலே ஒரு திறந்த கிணறும் ஆழ் குழாய் கிணறும் இருக்கின்றது என்று சொன்னார்கள். அந்த நேர்த்தியாயிருப்பு கிராமம் உள்ளாய்த்துறை பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அந்தப் பஞ்சாயத்தின் பொது நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு அதன் மற்ற பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் கிடைக்கின்றபோது இந்தப் பகுதிக்கு மட்டும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த கிராமத்திற்கும் இதனை விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் கொடுப்பதற்காக கிராமங்களை 6 வகையாகப் பிரித்திருக்கிறோம். இந்தக் கிராமம் 6-வது வகையிலே வருகின்றது. அதாவது நல்ல தண்ணீர் வருஷம் பூராவுக்கும் அங்கே கிடைக்கின்றது. அதனால் தான் அந்த ஊருக்கு கொடுக்காமல் மற்ற ஊர்களுக்குக் கொடுக்கிறோம். அந்த



ஊரிலே 300 பேர்கள்தான் இருக்கிறார்கள். இருப்பினும் மேற்கண்ட கிராமத்திற்கு அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. ஆனால் அதற்கு அருப்புக்கோட்டை நகராட்சி ஒப்புதல் தர மறுக்கின்றது. இப்படிப்பட்ட சிக்கல் அதிலே இருக்கின்றது. மேலும் அந்தக் கிராமம் தண்ணீர் இல்லாத கிராமம் அல்ல, ஆழ் குழாய் கிணறு இருக்கின்றது. போதுமான தண்ணீர் இருக்கின்றது. பெரனியல் சப்ளை இருக்கின்றது.

திரு. க. பாரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமாக அந்த ஊரிலே தண்ணீர் இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது எப்படி என்பது தெரியவில்லை. கோடை காலங்களில் அந்தக் கிணறுகளிலே தண்ணீர் கிடைக்கவில்லை. உள்வாய்த் துறையிலேயும் கிணறுகள் இருக்கின்றன. ஆகவே ஒரே பஞ்சாயத்தைச் சேர்ந்த 4 வார்டுகளுக்கு தண்ணீர் கொடுக்கப்படுகின்றபோது ஒரு வார்டுக்கு மட்டும் தண்ணீர் கொடுப்பதற்கில்லை என்று சொன்னால் அது பாரபட்சமாகக் கருதப்படமாட்டாதா? ஆகவே அங்கே இருக்கின்ற மக்களின மனநிலையையும் தேவையையும் அடிப்படையாகக் கருதி இதைச் செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே பல்வேறு மேல்நிலைத் தொட்டிகள் இருக்கின்றன; ஆனால் அவை கட்டப்பட்டு திறக்கப்படாமல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும்

மாண்புமிகு பேரவை தலைவர்: கேள்வியை சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நிரம்ப சாப்பாட்டுக்கு வசதி உள்ளவர்களுக்கு சோறு போடுவதில்லை. சாப்பாட்டுக்கு வசதி இல்லாதவர்களுக்குத்தான் சோறு போடுகிறோம். அப்படியானால் அது பாரபட்சம் காட்டுவதாக ஆகாது. அதுபோன்று ஆண்டு பூராவுக்கும் தண்ணீர் அந்தப் பகுதியிலே இருக்கின்றது என்று நான் சொல்கிறேன். ஆகவே போதுமான தண்ணீர் இருப்பது உண்மை. ஆனால் ஆண்டு பூராவுக்கும் இல்லை என்று உறுப்பினர் சொல்கிறார். அப்படியானால் அது கேட்டகரி மூன்றிலே வரும். அப்படியானால் தண்ணீர் திட்டம் வருமேயானால் அந்தத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகின்ற காரணத்தால் கோடையில் தண்ணீர் இல்லை என்று சொல்வதன் காரணத்தால் அந்த ஊர் கேட்டகரி 3-லே வருமா என்று பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[1981 ஆகஸ்ட் 31

தூத்துக்குடி நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 112—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடி நகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1982 ஆம் வருட கடைசியில்.

(ஆ) ரூ. 150 இலட்சம்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு இறுதியில் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அந்த நகரின் பெரும்பகுதியில் இந்த சாக்கடைத் திட்டத்திற்கான அடிப்படைத் தேவைகள் கூட செய்யப்பட வில்லையே? இதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட நிலையில் இன்னும் ஓர் ஆண்டுக் காலத்தில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பது எந்த அளவுக்கு உண்மை ?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நகர் பூராவும நல்ல முறையிலே திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்னால், 547 இலட்சம் தேவைப்படும். அதற்கு இப்போது சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தால் 150 லட்சம் ரூபாயில் இத்திட்டத்திற்காக ஜனநெருக்கம் மிகுந்த பகுதிகளில் அதாவது கிரேஸ் காட்டன் ரோடு, பக்கிங்காம் காலவாய் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பரப்பு, மற்றும் பகுதி 1-ல் சில இடங்கள், அதாவது நியூ காலனி, கில்டன் புரம், இராமசாமிபுரம், பெரியார்புரம், மாசிலாமணி புரம், விரிவடைந்து வரும் சில பகுதிகள், ஆகிய இடங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அந்த நகரம் பூராவும் கிடைக்க வேண்டும் என்று சொன்னால். 547 லட்சம் தேவைப்படும். தற்போது 150 லட்சம் ரூபாயில் திட்டத்தை தொடங்கியிருக்கிறோம். பாக்கி இடங்களை பின்னால் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீர் திட்டத்தை முறைப்படுத்தக் கூடிய பகுதியிலிருக்கிற கிராமங்களில் வெள்ளப்பட்டு என்னும் இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு கொடுத்த காம்பன்சேஷன் தொகை அதிகமாக அளிக்கப்பட வேண்டும். அதுவரையில் திட்டத்தை நிறைவேற்ற விடமாட்டோம் என்று



1981 ஆகஸ்ட் 31]

சொல்லி அவர்கள் மனு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், அந்தக் குழாய்களை போடுகிற இடத்தில் அவைகளை உடைத்து விடுகிறார்கள் என்றும அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் திட்டம அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்படும என்பது எந்த அளவுக்கு உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. அப்படி அவர் சொல்லும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டாம் என்று அனைவரும ஆண்டவனை பிரார்த்திப்போமாக. (குறுக்கீடுகள்)

சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 113–திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை மாவட்டம் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிட்டுலொட்டி, பாரைப்பட்டிக் கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிட்டுலொட்டி மற்றும் பாரைப்பட்டி சிற்றூர்களுக்கு குடிநீர் வசதித் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு திருப்திகரமாக இயங்கி வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்களுக்கு சிறப்பாக குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடந்து வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த வேலைகள் இன்னும் அங்கே முறையாக செயல்பட்டு நடக்கவில்லை என்று தகவல் எங்களுக்கு கிடைத்திருக்கிறதே, அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா ? ஏனென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடிய தகவல் சரியாக இல்லை என்பது போல எங்களுக்கு தகவல் இருக்கிறதே, அதன் விவரங்களை ஆராய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு 3 எச்.பி. திறன் உள்ள மின் விசை நீரேற்று குழாய் மூலம் பாரைப்பட்டி, சிட்டுலொட்டி போன்ற சிற்றூர்களுக்கு 11 புதுக் குழாய்களை வைத்து குடிதண்ணீர் வழங்கப்படுகிறது என்கிற தகவல் என்னிடத்தில் இருக்கிறது. அது சரியாக இல்லை, முறை சரி இல்லை என்று பொதுவாகச் சொல்லாமல், எங்கு முறையாக இல்லை, சரியாக இல்லை என்பதை விளக்கிச் சொன்னால், குறையை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தனியாகக் கடிதம் எழுதி விவரம் கேட்டுக் கொள்ளலாம்.

திருப்பத்தூரிலுள்ள அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி

* வினா எண் 118—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள அரசாங்க ஆதிதிராவிடர் மாணவிகள் விடுதியில் சேர்ந்து படிக்கும் மாணவிகளுக்கு கொடுக்கும் உணவைத் தவிர மற்ற பொருள் ஏதாவது கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) இதனுடைய விலை மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) ஆதிதிராவிடர் நலத்துறை நடத்தும் எல்லா மாணவியர் விடுதிகளுக்கும் அனுமதித்துள்ளபடி திருப்பத்தூர் ஆதிதிராவிட மாணவியர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவியர்களுக்கு இலவசமாக பாடபுத்தகம் நோட்டுப்புத்தகம் மற்றும் பலகைகள் அவர்கள் படிக்கும் வகுப்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. மேலும் வருடத்திற்கு இரு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. மேற்படி பொருள் மதிப்பு அவர்களின் வயது, படிக்கும் வகுப்பு அடிப்படையை பொறுத்ததாகும். எல்லா மாணவியருக்கும் மாதம் ஒரு ரூபாய் சலவைச் செலவாக அளிக்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவியர்களுக்கு அளிக்கப்படுகின்ற பலவிதமான சலுகைகள் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பாடப் புத்தகங்கள் எல்லாம் அவர்களுக்கு உரிய காலத்திற்குள் வழங்கப்படவில்லை என்கிற புகார் நீண்டநாட்களாக இருந்து வருகிறது அந்தக் குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதுபோன்று விடுதிகளில் உணவிற்காக கொடுக்கப்படுகின்ற தொகை கூட, விலைவாசிகள் எல்லாம் அதிகமாகியிருக்கின்ற காரணத்தால் போதவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அதை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: சென்ற ஆண்டைப் பொறுத்த வரை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த புத்தகங்கள் காலத் தாழ்வில் வழங்கப்பட்டது என்று ஒரு குறைபாடு சொல்லப் பட்டது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் 30-6-81—க்குள் வழங்கப்படவேண்டும் என்று அரசு கண்டித்து ஆணை பிறப்பித்





திருந்தது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அத்தகைய குறைகளை உறுப்பினர்கள் யாரும் இதுவரையில் என் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் அந்தக் குறை நீக்கப்பட்டிருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிற உணவுச் செலவு பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு ரூ. 45 என்று கொடுக்கப்பட்டு வந்ததை இந்த அரசு ரூ. 60 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நி. அன்பழகன்: திருப்பத்தூரிலுள்ள ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியில் அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் அனுப்புகிற குறிப்புகளைப் பொருத்தும் அங்குள்ள தேவையைப் பொருத்தும் அரசு ஆவன செய்யும்.

திரு. இல. பலராமன்; இப்படிப்பட்ட விடுதிகளுக்கு அரசு வழங்கக்கூடிய பொருள்கள், பணங்கள் சரியாக விநியோகிக்கப் படவில்லை என்று கூறப்படுகிற பல புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்ததா? அமைச்சர் அவர்கள் சில விடுதிகளுக்குச் சென்று தவறுதலாக நடந்து கொண்ட ஒரு காப்பாளரை வேலைநீக்கம் செய்தார்களே, அது குறித்து மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: வேலை நீக்கம் செய்ய வில்லை. தாற்காலிக பதவி நீக்கம் செய்திருக்கிறோம், என்னைப் பொறுத்தவரையில் நான் செல்கிற இடங்களில் இது போன்ற குறைகள் எனக்குத் தெரிந்தால் திடீரென்று அந்த விடுதிக்குச் சென்று பார்வையிட்டு அத்தகைய குறைபாடுகளை நேரில் கண்காணித்து அவற்றைக் களையவேண்டும் என்ற எண்ணத்தால் இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறோம். பத்திரிகைகளில் இப்படிப்பட்ட செய்திகள் வருகிற போது அதைப் பார்த்தாவது மற்ற விடுதிக் காப்பாளர்கள் நல்லமுறையில் இனியாவது பணியாற்றுவார்கள் என்ற எண்ணத்துடனேயே நாம் இத்தகைய முயற்சிகளைச் செய்து வருகிறோம்.

திருமதி. த. இராசாம்பாள்; ப்ளஸ் 2 படிக்கும் மாணவர்கள் முதல் ஆண்டு ப்ளஸ் 1 படித்துக்கொண்டிருந்தபோது கிடைத்து வந்த ஸ்காலர்ஷிப் இரண்டாவது ஆண்டு கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் அங்குள்ள தலைமை ஆசிரியர்கள் அதற்கான பாரங்களைப் பூர்த்தி செய்து புதுப்பித்து அனுப்பாததால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உதவித் தொகை பற்றி அடுத்த வினாவில் வருகிறது, அப்போது கேளுங்கள்,

[1981 ஆகஸ்ட் 31

புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை.

*வினா எண் 119—திரு. த. மாரிமுத்து:—மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி. யூ. சி. மாணவர்களுக்கு அளித்த அதே உதவித் தொகையை மேல்நிலைப் படிப்பு படிக்கும் விடுதி மாணவர்களுக்கு அளிக்கப்படுமா?

(ஆ) அரசினர் மாணவர் விடுதிகளில் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கென்று தனி இடங்கள் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) புகுமுக வகுப்பு (பி.யூ.சி.) மாணவர்களுக்கு அளித்த அதே உதவித்தொகையை அதே விகிதப்படி மேல்நிலைப் படிப்பு படிக்கும் விடுதி மாணவர்களுக்கும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) தற்பொழுது மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் உயர்நிலைப்பள்ளி விடுதிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தனி விடுதி அமைப்பது பற்றி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நல இயக்குநர் பரிசீலனை செய்யும்படி கேட்கப்பட்டுள்ளார்.

திருமதி ந. இராசம்மாள்: தலைமை ஆசிரியர்கள் அதற்கான பாரங்களைப் பூர்த்தி செய்து புதுப்பித்து அனுப்பாததால் அந்த மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கவில்லை. இப்படி எங்கெங்கு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் இந்த ஆண்டு மட்டுமாவது விடுதியில் சேரவேண்டும் என்று எவ்வளவு பேர்கள் விண்ணப்பித்தார்களோ அவர்களில் தகுதி வாய்ந்தவர்கள் அனைவரையும் விடுதியில் சேர்த்துக்கொள்ள இந்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இதுபோன்ற குறைகள் எங்கெங்கே உள்ளன என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இதுபோன்ற ஒரு குறையை என்னிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறை குறித்து ஆவன செய்யப்படும். அடுத்ததாக, வறட்சி பற்றியும் அதன் அடிப்படையில் மாணவர்கள் சேர்ப்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிதிநிலையைப் பொறுத்துத்தான் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



1981 ஆகஸ்டு 31]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் பி. சி. மாணவர்களுக்கும் எஸ். சி. மாணவர்களுக்கும் தொகை கொடுப்பதில் ஏன் இந்தப் பாகுபாடு? எல்லோருக்கும் ஒரே மாதிரித்தானே சாப்பாடு போடுகிறோம். எனவே இந்த பாகுபாட்டை அகற்றி எல்லோருக்கும் ஒரேமாதிரியான தொகை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் நிலையைவிட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் வாழ்க்கைத் தரம் மிக வருந்தத்தக்க நிலையிலே உள்ளது. ஆகவே, அதன் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகை அமைந்திருக்கிறது.

திரு. த. மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு மாணவர் விடுதிகளில் சீட்டுக் குலுக்கல் முறையில் மாணவர்கள் சேர்க்கப்பட்ட காரணத்தினால், பெரும்பாலும் 6-ஆம் வகுப்பு மாணவர்கள் அதிலே இடம்பெற்று விட்டதால், மேல்நிலைப் பள்ளியில், மேல்வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் இடம் இல்லாமல் போய்விட்டது. இதனால் அவர்கள் 10 ஆண்டுகள் படித்த படிப்பு வீணாவதால், மேல்நிலை வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் அனைவரையும் விடுதியில் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு அரசு முன்னுரிமை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளை உணர்ந்து அரசு ஆவன செய்யும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நல விடுதிகளில் இந்த ஆண்டு குலுக்கல் சீட்டு மூலம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அந்த முறையில் குறிப்பாக உடல் ஊனமுற்ற மாணவர்கள், ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகள் இடம் கிடைக்காமல் விடப்பட்டிருக்கின்றனர். ஆகவே, இந்த குலுக்கல் சீட்டு முறையை ரத்து செய்ய அரசு பரிசீலனை செய்யுமா? அல்லது குறைந்தபட்சமாவது, உடல் ஊனமுற்ற மாணவர்கள் ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகள் ஆகியோர்களை இந்த குலுக்கல் சீட்டிலிருந்து விதிவிலக்கு கொடுக்கவாவது இந்த அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலுக்கல் சீட்டு முறையை அரசு கொண்டு வந்ததன் நோக்கமே முறையாக மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில்தான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற குறைகள் ஏற்படுவதால்,

தேவை அதிகமாகவுள்ள உடல் ஊனமுற்றோர் ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகள் அதிலே இடமளிக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இதனை உணர்ந்து வருகின்ற ஆண்டு இது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தனியாக விடுதிகள் ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். ஆனால், இப்போது ஏற்கனவே இருக்கக்கூடிய அரசு உணவு விடுதிகள் பல வாடகைக் கட்டிடங்களிலே இயங்கிக்கொண்டு வருகின்றன. அவைகளிலே போதுமான இட வசதி இருந்தால் அதிலே இந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கு அதிலே மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கென்று தனியான எண்ணிக்கையை ஒதுக்க, அடுத்த ஆண்டு முதல் அப்படிச் சேர்க்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி எண்ணிக்கையைப் பொறுத்து, நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருக்கிறது. விடுதிகளில் அத்தகைய மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற உணர்வை அரசும் கொண்டிருக்கிறது. வருகிற ஆண்டிலே இது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே இரண்டு யூனிபாரங்கள் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். செங்கை மாவட்டத்திலே தைக்கப் படாத இரண்டு இலட்சம் யூனிபாரங்கள் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதைப்போல், செங்கை மாவட்டத்திலே ஒரே ஒரு யூனிபாரம் தான் இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தவிர, விடுதிகளில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு பெண்கள் விடுதியானாலும், ஆண்கள் விடுதியானாலும், எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறதே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளிலே அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது நிதி நிலையைப் பொறுத்துத் தானே தவிர வேறு விதமான எண்ணத்தோடு அல்ல. செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரை, சீருடைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அத்தகைய குறைகள் என்னிடம் சொல்லப்படவில்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையில், அனுசரித்து விசாரணை செய்து, தவறுகள் நேர்ந்திருந்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு உதவித் தொகை ஆண்டு வருமானம் ரூ.3,000 என்று உள்ளது. அதனை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா? இந்த ஆண்டு எத்தனை விடுதிகள் துவக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இந்த ஆண்டு புதிதாக 15 விடுதிகளைத் துவங்க திட்டம் இருக்கிறது. உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்-காப்பாளர் வருமானம் மூவாயிரத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்று இருப்பதை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருவதை அரசு பரிசீலித்து அதை மூவாயிரத்திலிருந்து ஆறாயிரமாக உயர்த்த கொள்கையளவில் தீர்மானித்திருக்கிறது. கூடிய விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: அடுத்த ஆண்டில் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டார்கள். மேல் நிலைப் பள்ளிகள் சில குறிப்பிட்ட இடங்களில்தான், மாவட்டத் தலைநகரங்களில் மட்டுந்தான் இருக்கின்றன. பல்வேறு கிராமங்களில் இருந்து உயர் நிலைப்பள்ளிப் படிப்பு முடித்த மாணவர்கள் இந்த ஆண்டு மேல்நிலைப் படிப்புக்கு வரும்போது விடுதிகளில் இடம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் படிப்பையே நிறுத்தி விடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டிலேயே அந்த மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய அரசு ஏற்பாடுகள் செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதிலுள்ள சிரமங்களை மாணவர்களுக்கு இருக்கும் சிரமங்களை அரசு உணர்ந்து இந்த ஆண்டு முடிந்த அளவுக்கு அவர்களுக்கு இடம் ஒதுக்க முயற்சி செய்வதோடு தனியாக மேல் நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்காக தனி விடுதிகளையே அமைப்பது குறித்தும் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: அரிசன ஹாஸ்டல்களுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள் கொண்ட செலக்‌ஷன் கமிட்டியைப் போட்டுவிட்டு குலுக்கல் சீட்டு முறையில் இடம் ஒதுக்குவது எப்படி முறையானது? சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஹாஸ்டலில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப் பட்டிருப்பதற்கு நிதிநிலைமை காரணம் என்று சொல்லப்படுகிறது. நிதிநிலைமை இல்லையென்று சொல்லி அரிசன ஹாஸ்டல்களில் இடம் கொடுப்பதில்லை; வீடு கட்டக் கடன் கொடுப்பதில்லை, மற்ற சலுகைகளைச் செய்து கொடுப்பதில்லை. இந்த அரசு அரிசன மக்களுக்கு நன்மை செய்ய இருக்கிறதா அல்லது கெடுதல் செய்ய அரசு வந்திருக்கிறதா"?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீண்ட நேரமாகக் கேள்வி கேட்க வேண்டுமென்று விரும்பி கேட்கும் கேள்வி இதுதானா?

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் தகவல் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் தகவல் கொடுத்திருக்கிறார்........

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது போன்ற சில திட்டங்களைச் செயல்படுத்தாததற்கு நிதிநிலைமை காரணம் என்று எடுத்துச் சொல்லாத வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதோ இந்த அரசு ஆதித் திராவிடர்களுக்கு எந்த விதமான நன்மையும் செய்யவில்லை என்ற அடிப்படையில் பேசுகிறார்கள். அவர் எந்த கோபதாபத்தோடு பேசுகிறார் என்று தெரியவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரை இதற்கு முன் இருந்த அரசுகள் காட்டிய அக்கறையை விட சற்றுக் கூடுதலாக ஆதி திராவிடர் நலனில் இந்த அரசு அக்கறை காட்டி வருகிறது. வருங் காலத்திலும் இந்த உணர்வோடு அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்வில்வராயநல்லூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண். 120 திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு கலசபாக்கம் தொகுதியைச் சேர்ந்த போளூர் வட்டம் மேல்வில்வராயநல்லூர் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனை கொடுக்க தனியார் நிலம் எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்டுள்ள நிலம் எவ்வளவு?

(இ) மனை பிரித்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) மேல் வில்வராயநல்லூர் கிராமத்தில் பு. எண். 103/1-ல் 1.08 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டுள்ளது.

(இ) பு. எண். 103/1-ல் மொத்தம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 1·08 ஏக்கர் நிலத்தில் 0.67 ஏக்கர் நிலத்தை நிலத்தின் சொந்தக்காரர் அரசுக்கு சுமாற்றம் செய்துள்ளார். மீதியுள்ள 0.41 ஏக்கர் நிலத்திற்கு பதிலாக வேற்று நிலம் கொடுப்பதற்கு அரசின் அனுமதி கேட்கப்பட்டதின் பேரில் அரசு அதற்கு அனுமதித்துள்ளதாகவும் இது தொடர்பாக கருத்துரு பரிசீலனையில் இருப்பதாகவும் வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.



திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு அனுப்பிய தகவலைச் சொன்னார்கள். எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் இந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு பணம் உரிமையாளர்களுக்கு வழங்கப் பட்டு விட்டது. ஆனால் நிலத்தின் உரிமையாளர்கள் இன்னும் சொந்தமாக அனுபவித்துக் கொண்டு பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரிசன மக்கள் வீட்டு மனை கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரித்து அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, நிலச் சொந்தக்காரர் அரசுக்கு 0.67 ஏக்கர் நிலம் கைமாற்றம் செய்திருக்கிறார். மீதம் உள்ள நிலத்தை கொடுக்க இயலாது என்ற எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார். பழைய நில ஆர்ஜித சட்டப்படி இந்த நிலம் கையகப்படுத்தப் பட்டதாகும். தற்போது வருவாய்த் துறை வாரியம் சில கருத்துருக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டிருக்கிறது. அது மாவட்ட ஆட்சித் தலைவரிமிடருந்து 10 நாட்களுக்குள் அனுப்படும். அந்த அறிக்கை பெறப்பட்ட பிறகு இன்னும் 1 மாதத்திலே அந்த மக்களுக்கு அந்த வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்கள் வசதிக்காக வீட்டு மனைக்காகவும் சாலை வசதிக்காகவும் வசதி படைத்தவர்களிடமிருந்து நிலம் வைத்திருக்கிறவர்களிடமிருந்து நிலம் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அப்படி கொடுக்காதவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: கேட்கப்பட்டிருக்கின்ற இந்தக் கேள்வியிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற நிலம் 1978-க்கு முன்னால் இருந்த பழைய நில ஆர்ஜித சட்டப்படி கையகப்படுத்தப் பட்டது. அதன்படி 4/1 நோடிபிகேஷன் கெஜட்டில் பப்ளிஷ் செய்யப்பட்ட பிறகும் கூட சொந்தக்காரர் நிலங்களைத் திரும்பப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தற்போதைய சட்டப்படி அப்படிப்பட்ட வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாது. அதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று எண்ணினால் அவர்கள் கோர்ட்டிற்குத்தான் செல்ல வேண்டும்.

திரு. ஆர். [illegible]: சபாநாயகர் அவர்களே அரிசன நலத்துறை பல ஆண்டுக்காலமாக இயங்கியும் இன்னும் பல கிராமங்களிலே சுடுகாட்டைப் புறம்போக்கு நிலத்திலோ அல்லது அதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திலே

இல்லாமல் பட்டா நிலங்களிலே இருப்பதால் தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு நிறைய எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. அரிசன ஹாஸ்டல் மண்கட்டடத்திலே நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிய கேள்வி இது. பொதுவாகக் கேள்வி கேட்டால் பொது வகத்தான் பதில் வரும். பிரச்சனை தீரவேண்டுமென்றால் அதைப்பற்றி குறிப்பாகக் கேட்டால் அமைச்சர் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. தகவல் கோரல்.

**(அ) இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒரு நாள் அடையாள அர்த்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம் கூட்டுதல்**

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்துத் தமிழகமே அர்த்தால் செய்யவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புத் தந்தார்கள். அது சம்பந்தமாக சபையிலே கூட அன்றைக்குப் பேசப்பட்டது. 31 ஆம் தேதி என்று தேதியைக் கூடச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கூட்டம் எந்த இடத்திலே எந்த நேரத்திலே எந்தத் தேதியிலே நடைபெறும் என்று தெரியவில்லை. ஆகவே அது பற்றிய தகவல் தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தகவல் இப்போது தரப் படும். அன்றைய தினம் பேசியது, அலுவல் ஆய்வுக் குழுவிலே செய்வது போல் தங்கள் அறையிலேயே வைத்துக்கொள்ளலாம் என்பது. மேலவையிலே 12½ மணிக்கு மேல் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே 12½ மணிக்கு மேல் வைத்துக் கொள்ளலாம்.

**(ஆ). சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் வரும் தண்ணீர்.**

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற தண்ணீர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அன்றைக்கே திரு. ஆண்டித் தேவர் இதுபற்றி பிரச்சனை எழுப்பியபோது கவனிக்கச் சொல்லி யிருக்கிறேன். உட்காருங்கள். ஏதாவது இருந்தால் அறையிலே வந்து சொல்லுங்கள். இங்கே சொல்லக்கூடாது.



## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தேர்வு ஒத்தி வைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் என். பழனி வேல், கே. ஆர். சுந்தரம், திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் "சென்னை சட்டக் கல்லூரி மாணவர் களின் தேர்வுகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் அந்த மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து திரு. சொரணம் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சட்டக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அவர்களை கூப்பிட்டுப் பேசி தீர்வு காண்பதற்குப் பதில் சட்டக் கல்லூரித் தேர்வைத் தள்ளிவைத்து மூடு விழா நடத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு மூடு விழா நடத்தியிருக்கிறார்கள். சட்டக் கல்லூரி மாணவர்கள் என்பவர்கள் ஒரு பட்டப் படிப்பை முடித்து பட்டதாரியாக ஆகி அடுத்த பட்டம் பெற வருபவர்கள். ஆகவே, அவர் களுடைய குறைகளைப்பற்றிப் பேச அவர்களைக் கூப்பிட்டுப் பேசி தீர்வு காணும் முறையிலே அரசாங்கம் நட வடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவ ரவர்களே, சட்டக் கல்லூரி பகுதித் தேர்வுகளில் முதல் கட்டத் தேர்வுகள் 22—6—81 அன்று ஆரம்பித்தது. சென்னை சட்டக் கல்லூரியில் தேர்வுகள் அமைதியாக நடைபெற வேண்டுமென் பதற்காகப் போலீசார் காவல் இருந்தனர். போலீசாரை வெளி யேற்றிய பின்னரே தேர்வுகள் எழுதுவோம் என மாணவர்கள் நிர்ப்பந்தித்ததால் போலீசார் வெளியேற்றப்பட்டனர். தேர்வு கள் எழுதிய மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து (மாஸ் காப்பியிங்) எழுதுவதைத் தடுத்ததால் மாணவர்கள் சட்டக் கல்லூரியில் இருந்த சுமார் 42,000 ரூபாய் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான பொருள்களைச் சேதப்படுத்தினர். முதல் கட்டத் தேர்வில் மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து எழுதியதாகக் குற்றச்சாட்டுக்கள் வந்ததால் சென்னை சட்டக் கல்லூரியில் தேர்வுகளை வைக்காமல் இரண்டாம் கட்டத் தேர்வுகளைச் சென்னை மாநிலக் கல்லூரி, நந்தனம் கலைக் கல்லூரி மற்றும்

காயிதே மில்லத் கலைக் கல்லூரிகளில் நடத்தலாம் எனப் பல்கலைக் கழகம் அரசின் அனுமதி பெற்று அறிவித்தது. இந்தத் தேர்வு மையங்களை மாற்றியதை எதிர்த்து மாணவர்கள் கலகம் செய்ததால் பல்கலைக் கழகம் பகுதி நேர இரண்டாம் கட்டத் தேர்வில் தொடங்கி அனைத்துச் சட்டக் கல்வித் தேர்வுகளையும் நிறுத்தி வைத்து விட்டது. மேற்கொண்டு தேர்வுகளை எப்பொழுது ஆரம்பிப்பது என்பது பற்றியும், தேர்வு மையங்களைத் தீர்மானிப்பது குறித்தும் பல்கலைக் கழகம் தேவையான கருத்துரைகளை அனுப்பிய பின் முடிவெடுக்கப்படும்.

மாணவர்களிடையே அடிக்கடி ஏற்படும் அமைதியின்மையைத் தடுப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கல்வியமைச்சரவர்கள் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தக் கூட்டங்களில் மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து எழுதுவதைத் தடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தேர்வுகளைத் தள்ளி வைத்திருப்பதால் மாணவர்களிடையே பதட்ட நிலை இருப்பதாக அரசுக்குத் தகவல் எதுவும் வரவில்லை. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறுத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்.

(அ). மேலவைத் தலைவரிடமிந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம்திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 54/1981.)



ஆ. திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன்
காவலில் வைக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை மத்திய சிறைச்
சாலைக் கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி
30-8-1981 அன்று பிற்பகல்1.10 மணிக்கு வரப் பெற்றுள்ளது
என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

"I Submit that Thiruvalargal N.V.N.Somu, M.L.A., Son of Thiru N.
V.Natarajan, residing at No.11, Subramani Street, Madras-7 and Puru
shothaman, M.L.A., Son of Doraiswami, No.7, Main Road, Zackriah
Colony, Kodambakkam Madras 24 were admitted as Remand Prisoners
in this Prison on 29.8.1981. They were remanded by the Additional
Chief Metropolitan Magistrate, Egmore, Madras in X.Cr.No. 477/81
till 11-9-1981 under Sec.143 IPC 41 C,P. Act and 7 (1) (a) Dr. L.A,Act

2. Both of them are treated as Special Class Remand Prisoners.

## 5. கவன ஈர்ப்புகள்.

அ. மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, "மேட்டூர் அருகி
லுள்ள தொப்பையாற்றில் 15-8-1981 அன்று பரிசல் கவிழ்ந்த
தால் மூன்று பேர் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்
துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

15-8-81 அன்று மாலை சுமார் 6 மணி அளவில் தர்மபுரி
மாவட்டம் பெண்ணகரம் மருக்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த
சாமியண்ணன் மற்றும் எட்டுபேரும் தாங்கள் மேற்கொண்ட
மரக்கரி வியாபாரத் த முடித்துக்கொண்டு சேலம் மாவட்டம்
மேச்சேரியில் உள்ள மல்லிகுண்டம் பரிசல் துறையில் நல்லமணக்
காடு செல்வதற்காக கொக்கராபள்ளம் என்ற இடத்தில் ஒரு
பரிசலில் ஏறினர். நல்ல மணக்காட்டைச் சேர்ந்த நல்லப்பன்
என்பவரது மகனாகிய கொண்டையன் (வயது 40) என்பவர்
அவருக்குச் சொந்தமான இரண்டு பசுக்களையும் அப்பரிசலில்
ஏற்றிக்கொண்டு அப்பரிசலை ஓட்டினார். தொப்பையாறு
ஆற்றில் கொக்கராப்பள்ளம் என்னும் இடத்தில் சுமார் மாலை
6.15 மணிக்கு பசுக்களால் ஏற்படுத்தப்பட்ட தடுமாற்றம் காரண
மாக அப்பரிசல் நி ல குலைந்து கவிழ்ந்துவிட்டது. பரிசலில்
பயணம் செய்த 6 பேரும், மற்றும் பரிசலோட்டியும் இரண்டு
பசுக்களும் தப்பிவிட்டனர். கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூவர்
இவ்விபத்தில் இறந்து விட்டனர்:

1 குப்பன், வயது 30
தந்தை பெயர் திரு பொன்னப்ப கவுண்டர்

காயிதே மில்லத் கலைக் கல்லூரிகளில் நடத்தலாம் எனப் பல்கலைக் கழகம் அரசின் அனுமதி பெற்று அறிவித்தது. இந்தத் தேர்வு மையங்களை மாற்றியதை எதிர்த்து மாணவர்கள் கலகம் செய்ததால் பல்கலைக் கழகம் பகுதி நேர இரண்டாம் கட்டத் தேர்வில் தொடங்கி அனைத்துச் சட்டக் கல்வித் தேர்வுகளையும் நிறுத்தி வைத்து விட்டது. மேற்கொண்டு தேர்வுகளை எப்பொழுது ஆரம்பிப்பது என்பது பற்றியும், தேர்வு மையங்களைத் தீர்மானிப்பது குறித்தும் பல்கலைக் கழகம் தேவையான கருத்துரைகளை அனுப்பிய பின் முடிவெடுக்கப்படும்.

மாணவர்களிடையே அடிக்கடி ஏற்படும் அமைதியின்மையைத் தடுப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கல்வியமைச்சரவர்கள் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தக் கூட்டங்களில் மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து எழுதுவதைத் தடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தேர்வுகளைத் தள்ளி வைத்திருப்பதால் மாணவர்களிடையே பதட்ட நிலை இருப்பதாக அரசுக்குத் தகவல் எதுவும் வரவில்லை. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறுத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்.

### (அ). மேலவைத் தலைவரிடமிந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம்திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 54/1981.)





ஆ. திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன் காவலில் வைக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை மத்திய சிறைச் சாலைக் கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி 30-8-1981 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு வரப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

"I Submit that Thiruvalargal N.V.N.Somu, M.L.A., Son of Thiru N. V.Natarajan, residing at No.11, Subramani Street, Madras-7 and Puru shothaman, M.L.A., Son of Doraiswami, No.7, Main Road, Zackriah Colony, Kodambakkam Madras 24 were admitted as Remand Prisoners in this Prison on 29.8.1981. They were remanded by the Additional Chief Metropolitan Magistrate, Egmore, Madras in X.Cr.No. 477/81 till 11-9-1981 under Sec.143 IPC 41 C,P. Act and 7 (1) (a) Dr. L.A,Act

2. Both of them are treated as Special Class Remand Prisoners.

## 5. கவன ஈர்ப்புகள்.

### அ. மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, ''மேட்டூர் அருகிலுள்ள தொப்பையாற்றில் 15-8-1981 அன்று பரிசல் கவிழ்ந்ததால் மூன்று பேர் இறந்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

15-8-81 அன்று மாலை சுமார் 6 மணி அளவில் தர்மபுரி மாவட்டம் பென்னகரம் மருக்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த சாமியண்ணன் மற்றும் எட்டுபேரும் தாங்கள் மேற்கொண்ட மரக்கறி வியாபாரத்த முடித்துக்கொண்டு சேலம் மாவட்டம் மேச்சேரியில் உள்ள மல்லிகுண்டம் பரிசல் துறையில் நல்லமணக்காடு செல்வதற்காக கொக்கராபள்ளம் என்ற இடத்தில் ஒரு பரிசலில் ஏறினர். நல்ல மணக்காட்டைச் சேர்ந்த நல்லப்பன் என்பவரது மகனாகிய கொண்டையன் (வயது 40) என்பவர் அவருக்குச் சொந்தமான இரண்டு பசுக்களையும் அப்பரிசலில் ஏற்றிக்கொண்டு அப்பரிசலை ஓட்டினார். தொப்பையாறு ஆற்றில் கொக்கராப்பள்ளம் என்னும் இடத்தில் சுமார் மாலை 6.15 மணிக்கு பசுக்களால் ஏற்படுத்தப்பட்ட தடுமாற்றம் காரணமாக அப்பரிசல் நிலை குலைந்து கவிழ்ந்துவிட்டது. பரிசலில் பயணம் செய்த 6 பேரும், மற்றும் பரிசலோட்டியும் இரண்டு பசுக்களும் தப்பிவிட்டனர். கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூவர் இவ்விபத்தில் இறந்து விட்டனர்;

1 குப்பன், வயது 30
தந்தை பெயர் திரு பொன்னப்ப கவுண்டர்

2 கந்தசாமி வயது 25
தந்தை பெயர் வெள்ளப்ப கவுண்டர்,

3 அர்ஜுனர் வயது 35
தந்தை பெயர் பொன்னப்ப கவுண்டர்.

2. பரிசலை ஓட்டிய திரு. கொண்டையன் கைது செய்யப்பட்டு மேச்சேரி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார். பரிசலும் கைப்பற்றப்பட்டது. மேச்சேரி காவல் நிலயத்தில் குற்ற எண். 112/81-ல் இ. பி. கோ. 304 பிரிவின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு மேற் கொண்டு புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்விபத்தில் இறந்த மூவருடைய குடும்பத்திற்கும் தலா ரூபாய் 1,000 நிதியுதவி வழங்க சேலம் மாவட்ட ஆட்சியரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணம் இறந்தவர்களின் குடும்பத்ினருக்கு தர்மபுரி மாவட்ட ஆட்சியர் மூலம் கொடுக்கப்படும்.

[முற்பகல் 10–30]

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்ததற்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நிதி உதவி அளிப்பதும் விபத்துக்கள் நடக்கக்காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குகள் தொடருவதும் வந்த பின் காக்கும் நடவடிக்கையாக இருக்கிறது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கமே இது அந்த இடத்திலே ஏற்பட்ட முதல் விபத்து அல்ல இது. மூன்றாவது விபத்தாக நடந்திருக்கிறது. தொடர் நிகழ்ச்சியாக நடந்திருக்கிறது. சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட இருபது பரிசல் துறைகள் இருக்கின்றன. எனவே, இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்கவும் அல்லது குறைக்கவும் வாய்ப்புள்ள இடங்களில் விசைப்படகுகளை இயக்கவும், அல்லது பரிசல்கள் அனைத்திலும் உயிர்காக்கும் பெல்ட்டுகள் கட்டாயமாக வைக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, வருமுன்னர் காக்க வேண்டுமென்பதில் இவ்வரசு அதிக அக்கறை கொண்டுள்ளது, அதில் இயந்திரப் படகுகள் இயக்க இயலுமா என்பது தொழில் நுட்ப ரீதியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. விபத்துக்கள் நிகழ்கின்றபொழுது, தங்களைக் காப்பாற்றுகின்ற வகையில் 'லைஃப் பெல்ட்' வேண்டுமென்று கேட்டார்கள், அது பற்றி அரசு ஆராயும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. செ. செம்மலை:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்தப் பரிசல் துறைகள் ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிலே இருந்துவருகிறது. அந்த உரிமங்களை ஊராட்சி ஒன்றியங்கள், தனியார்களுக்கு ஏலம் மூலம் விடுகின்றன. அந்தத்



தனியார்கள், வியாபார நோக்குடன், பணம் அதிகம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்குடன, நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமல் அல்லது நிபந்தனைகளை மீறி, ஆட்களோடு ஆடுமாடுகளை ஏற்றுவது, அதிகபாரம் ஏற்றுவது போன்ற செயல்களைச் செய்து வருகிறார்கள். எனவே இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்கின்ற நோக்கோடு, தனியார்களுக்கு உரிமங்களைக் கொடுப்பதைத் தடுத்து, ஊராட்சி ஒன்றியங்களே, ஆட்களை நியமித்து அந்தப் பரிசல்களை விட அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மனிதர்களை ஏற்றுவதோடு பசுமாடுகளையும் ஏற்றுவதால்தான் இந்த விபத்தே ஏற்பட்டிருக்கிறது. தனியார்கள் சரியாக நடத்தவில்லையென்பது இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து. ஊராட்சி ஒன்றியமே நடத்தினால், அதன்மூலம் இந்த விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், அதைப்பற்றி அரசு நிச்சயமாகக் கவனிக்கும்.

(ஆ) வடாற்காடு மாவட்டம், விண்ணமங்கலம் 'டான்சி'

தோல் பதனிடும் தொழிற்சாலை மூடல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம். கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ந. குலசேகர பாண்டியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திறகுக் கொண்டு வருவார்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவர் அவர்களே, ''வாணியம்பாடி வட்டம விண்ணமங்கலத்தில் உள்ள 'டான்சி' தோல் பதனிடும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர் பாதிப்பு குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்தியாவில் தோல் தொழில் வர்த்தகமானது கடந்த 18 மாதங்களில் இதுவரையில்லாத அளவிற்கு ஒரு தேக்க நிலையினை அடைந்துள்ளது. இந்த தேக்க நிலையின் காரணமாக தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (டான்சி), விண்ணமங்கலத்திலுள்ள தோல் பதனிடும் நிலையமும் பாதிக்கப்பட்டுள்ளது. 1979-80ஆம்

ஆண்டில் இதன் உற்பத்தி மதிப்பான ரூ. 187.27 இலட்சத்திற்கு மாறாக, 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 93.10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை மட்டும் இந்நிலையம் உற்பத்தி செய்துள்ளது. இந்த நிலையத்தின் விற்பனையும், 1979-80 ஆம் ஆண்டில் இருந்த ரூ. 147.85 இலட்சத்திலிருந்து 1980-81 இல் ரூ. 82.40 இலட்சமாக குறைந்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் இந்த நிலயத்தின் ஏற்றுமதி மதிப்பு ரூ. 95.68 இலட்சமாக இருந்தது. ஆனல் இது 1980-81இல் ரூ. 11 இலட்சமேயாகும். 1980-81 ஆம் ஆண்டில் விற்பனையில் ஏற்பட்ட குறைவின் காரணத்தால் ரூ. 151 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் தேக்கமடைந்துள்ளன. இந்த அதிக இருப்புக்கு மாறாக இந்த நிலையமானது ரூ. 17.4 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை வழங்குவதற்குரிய ஆணைகளைத்தான் பெற்றிருந்தன. இவற்றில் டான்சி நிலயங்களிலிருந்து மட்டும் ரூ. 13 இலட்சம் மதிப்புள்ள பொருள்களுக்கு வழங்கல் ஆணைகளைப் பெற்றுள்ளன. வெளியார் நிறுவனங்களிடமிருந்து வந்த வழங்குதல் ஆணைகளின் மதிப்பு ரூ. 4.4 இலட்சமேயாகும். இவற்றில் ரூ. 1.7 இலட்சத்திற்கு கடன் வழங்கும் அதிகாரமான கடிதம் (Letter of credit) வரவேண்டியிருந்தது. இந்த நிலைகளின் காரணமாக இந்நிலையமானது தொடர்ந்து முழு அளவில் உற்பத்தி செய்ய முடியவில்லை. இருப்புகள் அதிகமாக உள்ளதாலும், வழங்குதல் ஆணைகள் மிகக்குறைவாகப் பெற்றிருந்ததாலும் இந்நிலையத்தின் தொழிலாளர்களுக்கு 'லே ஆப்' கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என டான்சி இயக்குநர்கள் குழு 12-6-1981இல் நடைபெற்ற கூட்டத்தில் கருதியது. அதன்படியே இந்த நிலையத்தின் தொழிலாளர்களை தொகுதிவாரியாக 'லே ஆப்' செய்வதற்கு நிர்வாகக் குழு முடிவெடுத்தது.

இம்முடிவின்படி தொழிலாளர்கள் நான்கு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் மூன்று தொகுதிகளுக்கு 7-7-1981 முதல் சுழல் முறையில் 'லே ஆப்' அளிக்கப்பட்டு வருகிறது, ஓரளவு பதனிடப்பட்ட தோலை முழுமையாக பதனிடப்பட்ட தோலாக மாற்றுவதற்கு மட்டும், அம்முறையில் ஒரு தொகுதிக்கு வேலை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 246 ஆகும். 'லே ஆப்' அளிக்கப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் 50 சதவீதம் ஈட்டுத் தொகையாக அளிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் போதுமான வழங்கல் ஆணைகள் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சந்தை நிலவரத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்த்து கச்சாத் தோல்கள் வாங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் அனுப்புவதற்காக விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பணி புரியும் ஒரு தொகுதி தொழிலாளர்களுடன் மேலும் ஒரு தொகுதி தொழிலாளர்கள் 26-8-1981 முதல் தொடர்ந்து வேலை செய்வதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். எனவே இரண்டு பிரிவு பணியாளர்கள்



முறைப்பணி வீதத்தில் பணியில் இருப்பார்கள். அதே சமயத்தில் இரண்டு பிரிவினர் மாற்றுதல் முறையில் 'லே ஆப்' இல் இருப்பார்கள். வெகு விரைவில் 'லே ஆப்' நீக்கப்படுமென நம்பப்படுகிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் தோல் பதனிடும் தொழிலிலே கையாண்டு வருகின்ற பொதுக் கொள்கையின் விளைவாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஹாஃப் டான்ட் டானரியை ஏற்றுமதி செய்யக்கூடாது. அதாவது, பாதி பதனிட்ட தோலை ஏற்றுமதி செய்வதை நிறுத்தியதன் காரணமாக, தமிழகத்திலே இத்தொழிற்சாலையிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு முழுமையான வேலை கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, இம்மாதிரியான மத்திய அரசாங்கக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டிருக்கிற இந்த நிலையில், மத்திய அரசு தன் கொள்கையை மாற்றுவதற்காக மாநில அரசு ஏற்கனவே இருந்த முறையிலே தோல் ஏற்றுமதி செய்த நிலைமையை உருவாக்க வேண்டுமென்பதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தோல் தொழிலில் ஏற்பட்டிருக்கிற தற்காலிகச் சிக்கல் அகில உலக தோல் சந்தையில் கடந்த 18 மாதங்களாகத் தொடர்ச்சியாக மந்த நிலை இருப்பதன் காரணமாக உருவாகி இருக்கிறது. அந்த வகையில் இன்றைக்கு டான்சியைப் பொறுத்தவரையில், டான்சி நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற விண்ணமங்கலம் தொழிற்சாலை மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே இருக்கிற பல தனியார்கள் நிறுவனங்கள்கூட, 'லே ஆஃப்' என்கிற நிலைமையில் கூட இல்லாமல், 'க்ளோஷர்' என்கிற வகையில் மூடப்பட்டிருக்கின்றன. என்றாலும் தமிழக அரசைப் பொறுத்தவரையில் டான்சியின் வாயிலாக இன்றைக்கு பேல்நாட்டிலும் இந்தியாவிலும் அதிக அளவு உத்தரவுகளை, ஆர்டர்களைப் பெறுவதற்குத் தீவிர நடவடிக்கை எடுத்து விரைவாக இந்தப் பிரச்னையைத் தீர்க்க தமிழக அரசு முயன்று வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் தொழிலிலே ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விண்ணமங்கலத்திலே உற்பத்தி செய்கின்ற தோல் பொருள்களைக் கொண்டு 'டான்சி' நிறுவனம் இன்றைக்கு சமீபத்திலே தோல் ஆடைகளை தயாரிக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு இவைகளை விற்க முடியாதா அல்லது இன்றைக்கு தோல் தொழிலிலே அடிக்கடி இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகிறதே.

இவைகளுக்குப் பரிகாரம் காணும் முறையில் அந்நிய நாடுகளில் இருந்து ஆர்டர்களைப் பெற்று விற்க முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல நம்முடைய தோல் பொருள்களை அந்நிய நாடுகளில் விற்பதற்கான சாத்தியக் கூறுகளை கண்டுபிடிப்பதற்காக, அடுத்த திங்கள் 5ஆம் நாள் பாரிசிலே நடைபெறவிருக்கின்ற உலக சந்தைகள் மாநாட்டுக்கு, தமிழ்நாட்டிலே இருந்து பொறுப்பு மிக்க அதிகாரிகளை அனுப்பிவைக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முடிவெடுத்து அந்த அதிகாரிகள் செல்ல இருக்கிறார்கள். அவர்கள் சென்று, உலகத்தில் பல்வேறு நாடுகளில் இருக்கின்ற வாய்ப்புகளை ஆராய்ந்து வருவதற்காக அந்தத் தூதுககுழுவை முதல் வாரம் அனுப்ப இருக்கிறது அரசு என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு விண்ணமங்கலத்திலே உருவாகின்ற மாட்டுத்தோல், அதேபோல மாதவரத்திலே உருவாகின்ற ஆட்டுத்தோல், இவைகளை மையமாக வைத்துக் கொண்டு, நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற தோல் அணிகளை சார்மன்ட்ஸ் பயன்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தற்கால நெருக்கடியின் காரணமாக ‘லே ஆப்’ செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு அரசு என்ன நஷ்டஈடு வழங்கி இருக்கிறது? அந்தத் தொழிலாளர்களுக்கு முழுமையான சமபளத்தை நஷ்ட ஈடாக வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, விண்ணமங்கலத்தில் உள்ள டான்சி தொழிற்சாலை முழுமையாக மூடப்படவில்லை. 50 சதவிகிதம் ஊழியர்கள் வேலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். மீதி 50சதவிகிதம் ஊழியர்கள் பாதி சம்பளத்திலே ‘லே ஆப்’ செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதாவது இருக்கின்ற ஊழியர்கள் முதலில் 15 நாட்கள் முழு சம்பளத்தோடு வேலை செய்வார்கள், மீதி 15 நாட்களுக்கு பாதி சம்பளத்தில் ‘லே ஆப்’ செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் மொத்தம் 264 தோல். பதனிடும் தொழிற்சாலைகள் தனியார் வசம் இருக்கின்றன டான்சி தொழிற்சாலையில் 50 சதவிகிதம் ஊழியர்கள் ‘லே ஆப்’. செய்யப்பட்டிருக்கிறார்கள். பல தனிப்பட்ட தொழிற்சாலைகளும் மூடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி மூடப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பற்றியவிவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்ப



தையும், தோல் பொருள்கள் வெளிநாடுகளிலே விற்பனை குறைவாக இருக்கிற காரணத்தால் பல தனிப்பட்ட தொழிலதிபர்கள் காலணிகளைச் செய்கின்ற தொழிற்சாலையை அவர்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு பக்கத்திலேயே வைத்திருப்பதைப் போல, ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் அவர்கள் வைத்திருக்கிறார்கள், அதைப்போல டான்சி நிறுவனமும் வாணியம்பாடியில் ஒரு காலணிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னதைப் போல பல்லாவரத்தில் திரு. நாகப்பச் செட்டியார் அவர்களுக்கு சொந்தமான குரோம் டேனரி, இராணிப்பேட்டையில் தனியார்களுக்குச் சொந்தமான இரண்டு, மூன்று தொழிற்சாலைகள், பல்லாவரத்தில் இருக்கிற கல்யாணம் அண்ட் கம்பெனி, கோவிந்தராஜுலு அவர்களுக்கு சொந்தமான டேனரீஸ், திருச்சியில் இருக்கிற சித்திக் அவர்களுக்குச் சொந்தமான டேனரி, ஆம்பூரில் அப்துல் வகீத் அவர்களின் டேனரி இப்படிப்பட்ட தனியார்களுக்குச் சொந்தமான டேனரிகள் ‘குளோஷர்’ செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்து விண்ணமங்கலத்தில் காலணி தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற உணர்வை சொல்லியிருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக்குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய, மேற்படி குழுவின் ஏழாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்** : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981

(ஆ) நிதி ஒதுக்க (எண் 4)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :— "தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 78/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. அ. ரகுமான்கான்** : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள், தொடங்கிய நிதி ஆண்டில் மேற்கொண்ட பணிகளுக்காக மாநில தொகு நிதியிலிருந்து 'கன்சாலிடேடட் பண்ட்ஸ்' சில கூடுதல் தொகைகளை ஒதுக்கீடு செய்யும் வகையிலே, நம்முடைய நாவலர் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை இங்கே இந்த மாமன்றத்தினுடைய ஆய்விற்கு வைத்திருக்கிறார்கள். இதிலே எவ்வளவு தொகை நம்முடைய மன்றத்திடமிருந்து ஒப்புதலாக கேட்கிறார்கள் என்று சொன்னால் 155 கோடியே 37 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் இந்த மாநில தொகு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை அனுமதிக்க வேண்டுமென்று நாவலர் அவர்கள் இந்த மசோதாவை இன்றைக்கு சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

சட்டமன்றத்திலே இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கீடு செய்யும் பொழுது, அரசு இதை முறையாக செலவு செய்ய வேண்டும்: பொறுப்போடு செலவு செய்ய வேண்டும் என்று கோடிட்டு காட்டுவதற்காக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற எங்களுக்கு தார்மீகக் கடமை இருக்கிறது. இந்த அரசிற்கு நினைவூட்ட விரும்புகிறேன், அப்ரோப்ரியேசன் என்பது மிஸ்-அப்ரோப்ரியேசனாக மாறிவிடக் கூடாது என்று கூறிக் கொள்கிறேன். 1977—78-ம் ஆண்டில் நீங்கள் தான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தீர்கள். இதுபோன்ற நிதி ஒதுக்கீடு அன்றைக்கு செய்யப்பட்டது பல்வேறு இனங்களுக்காக, விவசாயத்திற்கு, மருத்துவத்திற்கு, கல்விக்கு. நீர் பாசனத்திற்கு, போக்குவரத்திற்கு என்று பல்வேறு துறைகளாக இப்படிபட்ட தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் உங்களால் முறையாக, முழுமையாக செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லை. இந்த சர்க்காருடைய நிர்வாகம் கோளாறாக இருக்கிறது, சர்க்கார் சரியாக செயல்படவில்லை என்று நானல்ல; நான் சொன்னால் உங்களுக்கு கோபம் வரும், உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*1981-ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1977-78-ஆம் ஆண்டு 'ரிப்போர்ட் ஆப் தி கண்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல்' வருத்தத்தோடு தெரிவிக்கிறது. இந்த அரசு 199 கோடி ரூபாயை, அரசினுடைய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டத் தொகையை, மக்களுடைய நன்மைக்காக ஒதுக்கப்பட்டத் தொகையை செலவு செய்யவில்லை என்று அந்த ரிப்போர்ட் தெரிவிக்கிறது.

புள்ளி விவரங்கள் கூட கொடுத்திருக்கிறார்கள். ஆதி திராவிடர் நலன்களுக்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கார் ஆதி திராவிடர் மக்களுக்காக அதிக அக்கறை காட்டுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் ஆடிட்டர் ரிப்போர்ட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஆதி திராவிட மக்கள் காலனிக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயை செலவிடாமல், அந்த மக்களுக்குப் பயன்படுத்தாமல் சர்க்கார் திருப்பித் தந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

சென்னை மாநகர மக்களின் முக்கியமானப் பிரச்சனை குடிதண்ணீர் பிரச்சனை என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தை முதலமைச்சர் அறிவித்தார். தேர்தல் அறிக்கையிலே கிருஷ்ணா நதி நீரைக் கொண்டுவரும் திட்டத்தை அறிவித்தார்கள். ஆளுநர் உரையிலே கூட சொல்லப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதற்கு ஒரு ஆபீஸ் இருப்பதாகச் சொல்லப்பட்டது; அதிகாரிகள் எல்லாம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த கிருஷ்ணா நதி நீர் சென்னை மாநகருக்கு வந்ததா? என்ன ஆயிற்று ? அந்தத் திட்டத்திற்கு உயிர் உண்டா ? இன்றைக்கு நிலைமை என்ன என்று கேட்டால் 50 இலட்சம் ரூபாயையும் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். குடிநீர் பிரச்சனைக்காக ஒதுக்கீடு செய்த பணத்தை இந்த சர்க்கார் திருப்பிக் கொடுத்திருக்கிறது. ஆக இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது, இந்த மாமன்றத்திலே ஒதுக்கீடு செய்த பணத்தை திருப்பி அளிப்பது சரியல்ல; ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் முறைகேடு இல்லாமல் முறையாக செலவழிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே காவல் துறைக்கு நியமிக்கப்பட்ட 60 இன்ஸ்பெக்டர்களை இன்றைக்கு நீங்கள் பதவி இறக்கம்செய்து, சப்-இன்ஸ்பெக்டர்களாக நியமித்திருக்கிறீர்கள். பதவி இறக்கம் செய்வதற்கு ஏதாவது தவறு செய்திருக்க வேண்டும்; அல்லது வேறு என்ன செய்தார்கள் என்பதற்கு தகுந்த காரணம் காட்ட வேண்டும். ஆனால் எந்தவிதமான காரணமும் காட்டாமல், அவர்கள் எந்தவிதமான தவறும் செய்யாமல் இருக்கும்போது பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளம் குறைக்கப்பட்டிருக்கிறது; அந்தஸ்து குறைக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்பட்ட அவர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்ட காரணத்தால் இன்றைக்கு அவர்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்.

அந்த இன்ஸ்பெக்டர்களை சப் இன்ஸ்பெக்டர்களாக பதவி இறக்கம் செய்த ஆணையை எதிர்த்து மெட்ராஸ் ஹைக் கோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். ரிவெர்ட் செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர்கள் மீண்டும் அதே இன்ஸ்பெக்டர் பதவி வேண்டுமென்று கேட்டு ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்பட்டவர்களை எந்த விதமான காரணமும் சொல்லாமல் சப் இன்ஸ்பெக்டர்களாக ரிவெர்ட் செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஒரு அதிகாரியின் பதவிக்காலம் முடிந்து போகிறது. அதை ஒட்டி அந்த அதிகாரிக்கு பிரிவு உபசார விழா நடக்கிறது எழும்பூரிலே. அந்த அதிகாரி முதலமைச்சரைப் பார்த்து, வாழ்த்து சொல்ல வணக்கம் தெரிவிக்க வருகிறார். ஆனால் முதலமைச்சர் உடனடியாக, அவசரம் அவசரமாக அந்த அதிகாரியின் பதவி காலத்தை நீட்டித்து உத்தரவு போடுகிறார். இது என்ன வேடிக்கை! பிரிவு உபசார விழா காலையிலே நடக்கிறது. அந்த விழாவுக்கு முன்னாள் ஐ.ஜி. அருள் வந்திருக்கிறார் அதைப் போல உயர்ந்த பொறுப்பில் இருக்கிற திரு. நரசிம்மன் அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். அங்கே வந்த பிறகு அந்த அதிகாரி வந்து சொல்கிறார், இது பிரிவு உபசார விழா அல்ல; முதலமைச்சர் என்னுடைய பதவி காலத்தை எக்ஸ்டன்ட் பண்ணி உத்தரவு போட்டிருக்கிறார் என்று சொல்கிறார். இத்தகைய தர்பார் நடவடிக்கை தேவைதானா? அதற்கு அவசியம் இருக்கிறதா? அவசர உத்தரவு பிறப்பிக்க வேண்டிய தேவை இருக்கிறதா என்பதை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10,000 போலீசார் காவல் துறையிலே நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் அதற்கான இன்டர்வியூ நடத்தப்பட்டது. அவர்களுடைய ஆடைகளுக்கு பணம் வழங்கப் பட்டது. எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது அப்ரோபிரியேஷன் பில். இதிலே இவ்வளவு நீண்ட விவாதம் தேவையில்லை. ஏற்கெனவே உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 5 நிமிடம்தான். நேரம் அதிகமாகிவிட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்

திரு. அ. ரகுமான்கான் : இதிலே ஒவ்வொரு துறைக்கும் பணம் கேட்டிருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு துறை பற்றியும் பேசவேண்டியிருக்கிறது. எங்கள் கட்சியிலிருந்து நான் மட்டும் தான் பேசுகிறேன். எல்லா துறைகளும் இதிலே வருவதால் ஒவ்வொரு துறை பற்றியும் கருத்து சொல்ல வேண்டியிருக்கிறது; அதிலே இருக்கிற முறைகேடுகளை எடுத்துச்சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் எனக்கு நேரம் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இதிலே கட்சிக்கு இடமில்லை. நமக்கு நேரமில்லை. இன்னும் பல சட்ட முன் வடிவுகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. மேலும் இப்போது நீங்கள் சொல்லக்கூடியவை எல்லாம் ஏற்கனவே டிமாண்டில் சொல்லப்பட்டு, வாக்கெடுப்பும் முடிந்துவிட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இந்த அப்ரோபிரியேஷன் பில்லில் ஒவ்வொரு துறைக்கும் பணம் கேட்டிருக்கிறார்கள். ஆகையால் அந்தந்தத் துறையிலே இருக்கின்ற முறைகேடுகளை இதிலே சொல்லாமல் வேறு எங்கே போய் சொல்வது. குறிப்பாக காவல்துறை பணி சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக பணம் ஒதுக்கப்பட்டது. 10,000 போலீசார் நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அது எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் பதவி இன்னும் நிரப்பப்படவில்லை. இன்னொன்றையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

காவல் துறையிலே, போலீஸ் லாக் அப்பிலே பலர் கொல்லப் படுகின்ற சூழ்நிலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். குற்றவாளியைத் தண்டிக்கக் கூடிய அதிகாரம் போலீஸ் அதிகாரிகளுக்குக் கிடையாது. அந்த அதிகாரம் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. டனைவிடலி கிராமத்தைச் சேர்ந்த குணசேகரன் என்பவர் போலீஸ் லாக் அப்பிலே கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே குற்றம் சாட்டப் பட்டவர்களைத் தண்டிக்கின்ற அதிகாரம் போலீஸ் அதிகாரி களுக்குக் கிடையாது. ஆனால் இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆகவே குற்றம் சாட்டப் பட்டு போலீஸ் லாக் அப்பிலே இருப்பவர்கள் சாவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் மீது செக்ஷன் 302-ன்படி வழக்கு தொடரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். காவல் துறைக்கு தொகை ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும், அது சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் திருட்டுக்களும், கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. ஆட்டோவிலே சென்ற போலீஸ் அதிகாரியிடத்திலே வழிப்பறி செய்யப்பட்டிருக்கின்றது, மருத்துவமனையிலே பேஷண்டாகச் சேர்க்கப்பட்ட பெண் கற்பழிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. திருமங்கலம் கோவிலிலேயும், ராஜ ராஜ சோழன் கட்டிய கோயிலிலேயும் கொள்ளை அடிக்கப்பட்டிருக் கின்றது. ஆகவே காவல் துறைக்கு பணம் ஒதுக்கி என்ன பயன்

அது முன்னேற்றம் அடையவில்லை. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியவில்லை. ஆகவே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. மாலை முரசுப பத்திரிக்கை அலுவலகம் தாக்கப்பட்டிருக்கின்றது. தினகரன் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டிருக்கின்றது. சட்டமன்ற மேலவை உறுப்பினரை அவமானப் படுத்தவேண்டும் என்ற வகையிலே காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே காவல்துறைக்கு தொகை ஒதுக்கி என்ன பயன்? என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது காவல் துறையிலே?

சீன வெளிநாட்டு அமைச்சர் ஹூவான் குவா இங்கே சென்னைக்கு வந்திருந்தார். அவரை வரவேற்கவேண்டும் என்று சொன்னால் அமைச்சர் ராகவானந்தம் அவர்கள் அந்த விமானத்திலேயே போய் இடிக்கிறார். அதனால் அவர் மீது வழக்கு தொடரப்படவேண்டும் என்றால் அது முடியாது. ஆகவே அவருடைய டிரைவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஹூவான் குவா—விற்கு தமிழக சர்க்கார் சரியான பாதுகாப்பு கொடுக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. *** ஆகவே, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலையிலே இவ்வளவு தொகை ஒதுக்கி அந்தக் காவல்துறை என்ன செய்து கொண்டிருக்கின்றது? காவல்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

அடுத்து சட்டக் கல்லூரி மூடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பேச்சு வார்த்தைகளை நடத்தி விரைவாக சட்டக் கல்லூரியைத் திறந்து தேர்வினை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து பத்தாவது வகுப்பு பிளஸ் 2 பரீட்சை எழுதி அதன் கம்ப்யூட்டர் ரிசல்ட் வந்திருப்பதைப் பார்த்தால் பெரிய *** அது இருக்கின்றது. எல்லாவற்றிலும் நல்ல மார்க், ஆனால் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் அதாவது விஞ்ஞானப் பாடத்தில் தொடர்ந்து 4 பேர்களுக்கு 27 மார்க் என்று போடப்பட்டிருக்கின்றது. அதை எதிர்த்து கிட்டத்தட்ட 10,00 பேர் ரீவேலுயேஷன் கேட்டு எழுதியிருக்கிறார்கள். அதற்கு சர்க்கார் அனுமதி தரவில்லை. ஆகவே கம்ப்யூட்டரிலே தவறு இருக்கின்றதா இல்லையா என்று பார்ப்பதற்கு இந்த சர்க்கார் அனுமதி தர மறுப்பது சரியல்ல.

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அடுத்து சென்னை மாநகரிலே மின்சார இலாக்காவைச் சேர்ந்த ஊழியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கேசுவல் லேபராக டெம்பரரியாக வேலை பார்த்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் நம்முடைய அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் இரண்டு ஆண்டுகள் டெம்பரரியாக வேலைபார்த்திருந்தால் அவர்களை எல்லாம் பெர்மனெண்ட் ஆக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்களை பெர்மனெண்ட் ஆக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க 90 பேர்களை வீட்டுக்கு அனுப்பி இருக்கிறார்கள். 10 வருடங்கள் வேலை செய்தவர்கள் எல்லாம் இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டதன் காரணத்தால் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ஜ் மூலம்தான் வரவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அந்த நிலைமையை மாற்றி அவர்களை எல்லாம் உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து மஸ்டர்ரோல் வழக்கு பற்றி நம் அனைவருக்கும் தெரியும். அந்த வழக்கிலே அப்ரூவராக ஆனவர்களுக்கெல்லாம் இந்த சர்க்கார் பதவி உயர்வு கொடுத்திருக்கின்றது. இது எவ்வளவு பெரிய கொடுமை. அப்ரூவர் என்றாலும் தப்பு செய்தவர் என்றுதான் பொருள். நேரடியாகத் தப்பு செய்தவர் அவர். அவர் அப்ரூவராக மாறிவிட்டார் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக நீதிமன்றம் அவரை மன்னித்திருக்கின்றது. ஆனாலும் அப்ரூவர் தப்பு செய்தவர்தான். ஆனால் அப்படிப் பட்டவருக்கு ப்ரமோஷன் தரப்பட்டிருக்கின்றது. மேலும் அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்ட காலத்தை வேலை செய்த காலமாக கருதி அதற்குப் பணமும் கொடுக்கப்படுகின்றது. ஆனால் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் அந்தக் காலம் லீவுபீரியடாகக் கருதப்படுகின்றது. இதுபோன்ற அக்கிரமம் வேறு எங்கே இருக்கின்றது? இப்படி நடப்பது என்ன முறை? இது என்ன நியாயம்? (மணியடிக்கப் பெற்றது)

கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்களும் இங்கே இருக்கிறார்கள். தங்கள் மூலமாக அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன்.

மெடிக்கல் காலேஜ் அட்மிஷனைப் பொறுத்தவரையிலே 75 மார்க் என்பது இன்டர்வ்யூ மார்க்காக இருந்தது. அதை 35 மார்க்கா மாற்றி இருக்கிறார்கள். ஆகவே முற்படுத்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்காக இவ்வாறு இன்டர்வ்யூ மார்க்கைக் குறைத்தது முறையாகாது. ஒரு முறை ராஜாஜி அவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜெனரல் டிஸ்கஷனில் பேசுவது போல் பேசிக் கொண்டிருக்கிறார். தற்போது பேச எடுத்துக் கொண்டிருப்பது அப்பிரோப்பிரியேஷன் பில். விதிகளுக்கு உட்பட்டு உறுப்பினர்கள்

நடக்க வேண்டும். ஏனென்றால் விதியின்படிதான் அவையை
நான் நடத்த வேண்டும். விதிகளுக்கு உட்பட மறுத்தால்
இங்கே உட்கார்ந்து நான் அவையை நடத்த வேண்டிய
அவசியம் இல்லை. (குறுக்கீடு) 5 நிமிடங்கள் என்பது 10
நிமிடங்களாகிவிட்டன. தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள்
நான் எவ்வளவோ முறை மணியடித்தேன். நீங்கள் கேட்க
மறுக்கிறீர்கள். பேசுவதையும் எடுத்துக் கொண்ட பில்லில்
பேசாமல், ஜெனரல் டிஸ்கஷனாக பேசுகிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே,
நான் பேசுவதெல்லாம் பில்லுக்கு சம்பந்தப்பட்டது தான்.
வேண்டுமானால் எவ்வாறு சம்பந்தம் வருகிறது என்பதை
விளக்குகிறேன். மருத்துவத்திற்கென்று பண ஒதுக்கீடு செய்யப்
பட்டிருக்கிறது. அதில் தவறுகள் நடைபெறுகின்றன என்றால்,
அதை தட்டிக் கேட்க........(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் விதியை
வேண்டுமானால் படிக்கிறேன். தயவுசெய்து கொஞ்சம் கேளுங்கள்
If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in
respect of an existing service, the discussion shall be confined to the
items constituting the same, and no discussion shall be raised on the
original grant.....

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே,
உரையை உறுப்பினர்கள் சுருக்கமாகச் செய்ய வேண்டும் என்று
வேண்டுமானால் சொல்லிக் கொள்ளுங்கள். அதில் நான்
தலையிடத் தயாராக இல்லை. ஆனால் விதி என்று சொல்லாதீர்
கள். இங்கே 150 கோடி ரூபாய்க்கு பல சர்வீஸ்களில், பல
துறைகளில் நிதி ஒதுக்கம் கேட்டு அப்பிரோப்பிரியேஷன் பில்
வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அந்தந்த துறைகள் சம்பந்த
மாக பேச முடியும். காலத்தை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக
சொல்கிறீர்கள் என்றால், அது உங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை
அதில் நான் தலையிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலத்திற்காக மட்டும்
சொல்லவில்லை. விதி என்று இருக்கிறது. அதற்கு கட்டுப்பட்டு
நடக்க வேண்டும். ஜெனரல் டிஸ்கஷனில் பேசுவது போல்
குற்றச்சாட்டுக்களை எல்லாம், அப்பிரோப்பிரியேஷன் பில்லின்
மீது பேசும்போது சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. விதிக்கு
உட்பட்டு நடந்தால்தான் என்னால் அவையை செம்மையாக
நடத்த முடியும். நான் வேண்டுமானால் தொடர்ந்து படிக்கிறேன்
கேளுங்கள் nor the policy underlying it save in so far as it may be
necessary to explain or illustrate a particular item under discussion
என்று இருக்கிறது. பாலிஸியைப் பற்றி பேச முடியாது. நாம்
விதிகளுக்கு கட்டுப்பட்டு நடந்து அவையை நடத்தினால்தான்
சட்டசபை மாதிரி இருக்கும், ஒவ்வொரு நேரத்திற்கும் நம்
இஷ்டம்போல் நடத்திக் கொண்டிருந்தால் எப்படி? ஜெனரல்
டிஸ்கஷனை அனுமதிக்க முடியாது. எந்த விதிக்கும் உட்பட
மறுத்தால் எப்படி அவையை நடத்த முடியும்?





திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, மறுமுறையும் சொல்கிறேன். சுருக்கமாக விவாதிக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் விதியில் இல்லை என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. இங்கே பல தரப்பட்ட துறைகளுக்கும் சேர்த்து மொத்தமாக 150 கோடி ரூபாய்க்கு ஒதுக்கீடு கேட்கப்படுகிறது. அப்படி கோரப் படும் துறைகளில் பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு இடம் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின் அடிப்படையில் நான் சொல்ல விரும்புவது மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொல்வது போல ஒவ்வொரு துறைக்கும் பண ஒதுக்கீடு செய்யப்பெற்றிருக் கிறது. அந்த இலாக்காக்கள் சீராக செயல்படவேண்டும். கேட்ட பணத்தை நாம் ஒதுக்கிவிடுகிறோம். ஆனால் அதை எந்த எந்த முறைகளில் சீராக, செம்மையாக செலவழிக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லலாம். திருமணமான பெண்ணுக்கு வீட்டை விட்டு அனுப்புவதற்கு முன் தகப்பன் எவ்வாறு அறிவுரைகள் கூறி அனுப்புவாரோ, அதுபோன்றுதான், பணத்தை வழங்கிவிட்டு, அதை எந்த வழிகளில் வீணாக செலவிடக்கூடாது என்று அந்தந்த துறைகளுக்கு எடுத்துச் சொல்லும் நல்ல பணியாகத் தான் இதை கருதவேண்டுமே தவிர, வேறு மாதிரி தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

** கோர்ட்டிலே அது சம்பந்தப்பட்ட ரிக்கார்ட்டுகளைக் கேட்டால் அரசு கொடுக்கவில்லை. ஏன் கொடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல் வதற்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன். அவர் ஒரு வழக்கறிஞர். அவருக்கு நன்கு தெரியும் கோர்ட்டிலே எது கேட்டாலும் நாம் கொடுக்கவேண்டும். கோர்ட்டை மதிக்க வேண்டும் என்பது ஆகவே, அவர்கள் எந்த பேப்பர்ஸ்ஸை கேட்டாலும் கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். கொடுத்துக் கொண்டிருக்கிறோம் எந்த வழக்காக இருந்தாலும் எனக்கு கவலை இல்லை கோர்ட்டில் எந்த வழக்காக இருந்தாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன், கோர்ட்டிலே வந்தது என்பதற்காகவே அது பற்றி மகிழ்ச்சியும் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எந்த வித காரசாரமான விவாதமும் வேண்டாம் கருத்து பரிமாற்றம் என்ற வகையில் அமைதியாகவே சொல்லவிரும்பு கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் ஓபன் புத்தக மாகவே இருக்கிறது, இதிலே எந்த விதப் பிரச்னையும் கிடையாது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

கோர்ட் கேட்டால் கொடுக்கத்தான் வேண்டும்: கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது. ஆகவே ஏன் கொடுக்கவில்லை என்றெல்லாம் பேசுவது கோர்ட்டை அவமதிப்பது மாதிரியாகும்.

திரு. அ. ரகுமான்கான்: அப்படி என்றால் உங்கள் மூலமாகவே அந்த ரிக்கார்ட்டுகள் கோர்ட்டுக்கு அனுப்பியாகிவிட்டதா என்பதை அறியவிரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு ஆளும்கட்சி உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன். இதிலே ஒன்றும் பிரச்னையே கிடையாது. நாம் நம்முடைய பக்கத்தில் பலமாகவே இருக்கிறோம். கோர்ட்டைப் பொறுத்தவரையில், அது எந்த பேப்பர்ஸ்ஸைக் கேட்டாலும், எதைக் கேட்டாலும் உடனடியாக கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை.

[முற்பகல் 11.00]

ஆகவே இதில் எந்தப் பிரச்னையும் இல்லை. அது ஒரு விஷயம் ஊழல் நடைபெறுகிறது என்று யாரோ ஒருவர் கேஸ் போடுவார்கள் இயற்கையாக. ஆகவே கோர்ட்டில் சந்திக்கத் தயார். அதற்குப் பிறகு கோர்ட்டில் கேஸ் முடிந்த பிறகு மீண்டும் இந்தச் சட்டமன்றத்தில் கொண்டுவந்தால் இங்கேயும் நாங்கள் சந்திக்கத் தயாராயிருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான்: இன்னும் கோர்ட்டுக்குக் கொடுக்கவில்லை என்ற தகவலை உறுதிப்படுத்துகிறார். நன்றி.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கோர்ட் கேட்கிற பேப்பர்ஸ் பூராவும் கொடுக்கிற வழக்கம்தான். எந்தப் பேப்பர்களைக் கேட்டாலும் அவற்றைக் கொடுப்பதில் என்ன கஷ்டம்? Do you think the Government will subject itself to contempt of Court? Do you think it is possible in this modern world? எதைக் கேட்டாலும் கொடுக்க வேண்டியது எங்கள் கடமை. அவர்கள் கேட்கிற பேப்பர்களையெல்லாம் கொடுக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான்: மார்க்ஸ் லிஸ்ட் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நன்றி. * * *

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இவையெல்லாம் ஸப் ஜூடிஸ்.

I am prepared to discuss.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே நடப்பதைப் பார்த்தால் விதிகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டசபையை நடத்த முடியும் என்று தோன்றவில்லை. இந்தப் பில்லுக்கு உட்பட்ட விஷயங்களைப் பற்றித்தான் பேசவேண்டும் என்று இரண்டு மூன்று தடவை கூறியாகிவிட்டது.....

திரு. எல். இளையபெருமாள்: இந்த அவையில் தங்களுக்கு எல்லா விதமான அதிகாரங்களும் உள்ளன. தாங்கள்தான் காலத்தை வரையறுத்து ஒதுக்க வேண்டும். அதற்கு அனைவரும் கட்டுப் பட்டவர்கள்.

திரு. அ. ரகுமான்கான்; நான் முடிக்க விரும்புகிறேன், ***

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்த விவகாரம் கோர்ட்டில் இருக்கிறது. இது ஸப் ஜூடிஸ்

நான் பேசும்போது அதைப்பற்றியும் பேச வேண்டி வரும். ஆனால் இந்த 'மாட்டர்' சப் ஜூடீஸாக இருப்பதால் ஸப் ஜூடீஸ் என்று தெரிந்தே அமைச்சர் பேசுகிறார் என்றால் அந்தக் குற்றச்சாட்டுக்கு நான் ஆளாகவேண்டுமா? As an experienced Member I would like to suggest to my distinguished friend. There is no meaning in bringing a subjudice matter into the Assembly. As a friend I would like to suggest to the distinguished Member not to waste the available limited time in talking about sudjudice matters, which would automatically be expunged later.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்; ஸப் ஜூடீஸ் மாட்டர் பற்றிப் பேச வேண்டாம். அந்தப் பகுதியைப் நீக்கும்படி நான் உத்தரவிடுகிறேன்.

(கூச்சல் குழப்பம்)

திரு. ஏ. சி. சண்முகம்: திரு. ரகுமான்கான் அவர்கள் அளவுக்கு மீறிப் பேசிக் கொண்டிருக்கிறார். தாங்கள் அந்த இடத்திலே உட்கார்ந்துகொண்டு. நான் என்ன செய்ய முடியும் என்று சொல்லுகிறீர்கள் உங்களைக் கேட்டால், அவர்கள் மீறிப் பேசுகின்றார்கள் என்று சொல்லுகிறீர்கள். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? அப்படி எல்லோரும் பேசுவதற்கு தாங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா?

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியது வழக்கு சம்பந்தமாக, வழக்கின் உள்ளே போவதான் சப்ஜூடிஸே தவிர, இந்தமாதிரி வழக்கு போட்டிருக்கிறார்கள், வழக்கு ஃபைல் பண்ணப்பட்டிருக்கிறது என்று இது சம்பந்தமாக சொல்வது சப்ஜூடிஸ் ஆகாது. *** ***

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவில் எவ்வளவு விரைவாக முடித்துக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவு விரைவாக முடித்துக் கொள்ள வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் நாங்கள் கேட்டுக்கொண்டோம். இன்று நிறைய சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. நேரம் போதுமானதாக இல்லை. ஆனால், இந்த சட்டமுன்வடிவில் தனிப்பட்ட குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வருகிறபோது, — நம்முடைய விதிமுறைகளிலே ஏற்கனவே தெளிவாக இருக்கிறது — எந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டினைக் கொண்டுவர விரும்பினாலும், அவற்றைத் தங்களிடத்திலே தெரிவிக்க வேண்டும். அண்மையில் நாடாளுமன்ற மேல்சபையிலே, ராஜ்ய சபையிலே. இதுபற்றி அவர்கள் தெளிவாக தீர்ப்புத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அளித்த தீர்ப்பு என்னவென்றால், அந்த அமைச்சரிடத்திலே அந்த மாண்புமிகு உறுப்பினர் முன்கூட்டியே தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையிலே வர வேண்டுமென்பதற்காக பேசுவது என்பது வேறு. அதுவும், மருத்துவக் கல்லூரி அட்மிஷனில் ஊழல் ரகுமான்கான் குற்றச்சாட்டு என்ற தலைப்பிட்டு பத்திரிகையிலே வரவேண்டும் என்பதற்காக பேசவேண்டுமென்றால், பேசட்டும். ஆனால், இந்த சட்டமுன்வடிவில் என்னப் பிரச்னைகள் இருக்கின்றன, மக்களுக்கு என்ன காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன என்பதில் அவர்கள் பேசினால் பொருத்தமாக இருக்கும். அவையின் நேரத்தை இப்படிப் பயன்படுத்துவது சரிதானா என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எந்த ஒரு அமைச்சரைப் பற்றியும் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், திடீரென்று எழுந்து சொல்லக்கூடாது. சொல்லவும் முடியாது. ஒரு நோட்டீஸ் என்னிடம் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அமைச்சர் அதற்குண்டான பதிலோடு தயாராக வருவார். இது அவர்மீது சொல்லப்படுகின்ற பர்சனல் குற்றச்சாட்டு. பப்ளிசிட்டியைப் பற்றிப் பேசலாம். பர்சனல் குற்றச்சாட்டை திடீரென்று சொல்லக் கூடாது. (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்கள் பெருத்த அளவிலே இந்தக் குற்றச்சாட்டிற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஐ ஆம் ரெடி, எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறேன். எந்தக் குற்றச்சாட்டையும், மறுத்து ஆதாரத்துடன் பேசத் தயாராக இருக்கிறேன். நிலைமை என்னவென்றால், அது வழக்கு மன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால் .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாரும் என்னுடைய அனுமதி பெறாமல் எழக்கூடாது.





(முற்பகல் 11–10)

என்னுடைய அனுமதி பெறாமல் மாண்புமிகு உறுப்பினர் வரம்பு மீறிப் பேசக் கூடாது. இங்கிருக்கும் மற்ற உறுப்பினர்களும் உங்களை விட உணர்ச்சி உள்ளவர்கள் என்பதைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : குற்றச்சாட்டுகள் கூறுவதைக் கண்டு இந்தச் சர்க்கார் ஏன் பயப்பட வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாரும் பயப்படவில்லை. அரசுத் தரப்பில் எழுந்து விளக்கம் சொல்ல உரிமை உண்டு. அப்ரோபிரியேஷன் பில்லில் என்ன கருத்துக்களைப் பேச வேண்டுமென்று விதிகள் இருக்கின்றனவோ அந்த விதிகளுக்குப் புறம்பாகப் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது நடைமுறைக்கு உகந்தது அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : அப்ரோப்ரியேஷன் பில்லில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை முறையாகச் செலவழிக்கப்பட வேண்டும். திடீரென்று அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் தலைநகர் மாற்றம் பற்றி அறிவித்திருக்கிறார்கள். நான் சென்னை நகர மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன் — இங்கே செக்ரடேரியட்டில் வேலை பார்க்கின்ற ஆயிரக்கணக்கானவர்கள் வெளியே போகவேண்டிய நிலை ஏற்படும்; புதிய தலைநகருக்காக கட்டிடங்கள் மற்றவைகள் கட்டுவது என்றால் பல சிக்கல்கள் ஏற்படும். அந்த ஏற்பாடுகளைச் செய்வது சாதாரண காரியம் அல்ல. கல்கத்தாவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கே 500 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, 40 கோடி ரூபாயில் தலைநகர் மாற்றத்தை முடித்து விடலாம் என்று சொல்வது பொறுப்பற்ற காரியமாகும். சென்னை நகரத்தில் மீனம்பாக்கம் விமான நிலையம் இருக்கிறது; மத்திய சர்க்கார் ராணுவ அமைப்புகள் எல்லாம் சென்னையில் இருக்கின்றன. ஹைகோர்ட் மாநிலத்தில் கடைக்கோடியில் இருப்பதால் தெற்குப் பகுதியில் இருப்பவர்களுக்கு சிரமமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஹைகோர்ட்டின் பிராஞ்சு ஒன்றை மதுரையில் வைத்துக் கொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். தண்ணீர் வசதி பற்றிக் கூறப்பட்டது. கட்டளைக் கால்வாய்த் திட்டம்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்க்ளூட் பண்ணிப் பேச அனுமதித்ததால் பேசிக் கொண்டே இருப்பது முறையாகாது. உடனடியாக உறுப்பினர் அவர்கள் பேச்சை முடிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆகையால் எங்களுடைய குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்ல அனுமதிக்காமல் அரசுத் தரப்பில் பேசுவது முறையல்ல ; குற்றச்சாட்டுகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகையில் நீதிமன்றத்தின் முன்னுள்ள பிரச்சினை பற்றிக் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

திரு. அ. ரகுமான்கான் : எது குற்றச்சாட்டு, எது குற்றச்சாட்டு இல்லை என்பது எப்படித் தெரியும்?

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு பற்றி விவாதத்தில் குற்றச்சாட்டுக்கள் என்கின்ற வகையில் திரு ரகுமான்கான் அவர்கள் தன்னுடைய பேச்சின் ஆரம்பக் கட்டத்திலிருந்து இறுதிக் கட்டம் வரையிலே ஒவ்வொரு குற்றச்சாட்டாக எடுத்து வைத்திருக்கிறார்கள். ஏதோ ஆளுங்கட்சி குற்றச்சாட்டுக்களைக் கண்டு பயப்படும் என்பது அல்ல........

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....
தாங்கள் தீர்ப்பு..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே தீர்ப்பு அளித்து விட்டேன்.

திரு. ஆர். மணிமாறன் : ஏதோ குற்றச்சாட்டுகளைக் கண்டு ஆளுங்கட்சி பயந்து ஓடிக்கொண்டிருப்பதைப் போல திரு ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் யாரும் பயப்படவில்லை. ஆனால் அடிக்கடி ஓடிக்கொண்டிருப்பவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு விவாதத்தின்போது சொல்லப்பட்ட எந்தக் குற்றச்சாட்டுக்கும் பதில் சொல்வதற்கு ஆளுங்கட்சித் தயாராக இருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் மடியிலே கனம் இல்லை, வழியிலே பயம் இல்லை என்று சொன்னார்கள், எங்களுக்கு மடியிலே கனம் இல்லை, வழியிலே பயம் இல்லை. மடியிலே கனம் உள்ளவர்கள் வேண்டுமானால் பயந்து கொண்டிருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : எது எது நீக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முழுவதையும் படித்துப் பார்த்து நான் சொல்கிறேன்.



திரு. துரைமுருகன் : ஆளுங்கட்சியைச் சேர்ந்த திரு. மணிமாறன் சொன்னார், எங்கள் கட்சி குற்றச்சாட்டுகளைக் கண்டு பின்னாலே ஓடாது என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம், உட்காருங்கள்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு 78/198 ) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற இந்த வேளையில் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் தமிழகத்திலே மைய அரசின் உதவியோடு செய்யப்பட்டு வருகின்றன. நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற பருவ மழை தமிழகத்திலே சரியாக பெய்ய ஆரம்பிக்காத காரணத்தால் பல மாவட்டங்களிலே இன்னமும் வறட்சி நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே இந்த ஆண்டு விதைப்பிற்கான மழைகூட இல்லாத காரணத்தாலும், குடிநீர் கஷ்டமும் இருப்பதாலும் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. ஆனால் நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை குறிப்பாகக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல் அடிகுழாய்கள் போடுதல் போன்றவைகளுக்கு மதுரை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி — அங்கே அந்தப் பணிகள் இன்னும் முழுமையாக முடிக்கப்படாத நேரத்திலே — சேலம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது சரியான தகவல் தான் என்று நினைக்கிறேன். பருவ மழை சரியாகப் பெய்யாத நிலையில் வறட்சிப்பணிகள் அடுத்த மாதத்திற்குள் முற்றுப்பெற்றுவிடுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. வறட்சிப் பணிகளைச் செய்வதில் இருக்கின்ற மெத்தனப்போக்கை நீக்கி விரைவு படுத்தி வறட்சி நீங்கும் வரை அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். மதுரை மாவட்டத்திலே பொதுகுடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தியும் தண்ணீர் கிடைக்காத நிலை இருப்பதால் அங்கேயெல்லாம் அடிகுழாய்களைப் போட வேண்டிய நிலைமை இருக்கிறது, ஆகவே அந்த வேலைகளை அரசு உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிலே இன்றைய தினம் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினாலே என்னவோ பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து எவ்வளவு என்ன பணிகளுக்குச் செலவழிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அந்தப் பணிகள் அல்லாத வேறு சில பணிகளுக்காக கணிசமான தொகை அதிலிருந்து பயன்படுத்தப்பட்டிருப்பதாக — பல்வேறு ஒன்றியங்களிலே தொகை எடுக்கப்பட்டிருப்பதாக — எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது.

[முற்பகல் 11-20]

குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உள்ள சில ஒன்றியங்களில் எந்த இனத்திற்காகப் பொது நிதி ஒதுக்கப்பட்டதோ அந்த இனம் அல்லாத இனத்திற்கு செலவிடப்பட்டிருப்பதாக என்ற தகவல் கிடைத்திருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நேரத்தில் இப்படிப் பொது நிதி சூறையாடப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எனவே. பொது நிதியிலிருந்து பணம் பெற வேண்டுமென்றால் மாநில அளவில் உள்ள DRO அனுமதி பெற்றுத்தான் செலவழிக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தலைமைச் செயலாளராகப் புதிதாக ஒருவர் பொறுப்பேற்ற செய்தியைப் பார்த்தோம். அவருடைய உடல் நலக் குறைவின் காரணமாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. எனவே, கீழ் மட்டத்திலே இன்றைய தினம் கிராம அதிகாரிகள் இல்லாத நிலைமையிருக்கிறது. மேல் மட்டத்திலே உள்ள பொறுப்புள்ள அதிகாரியும் மருத்துவமனையில் இருக்கிறார்கள். அவர்கள் விரைவில் குணமாக வேண்டுமென்ற ஆர்வம் நமக்கு இருந்தாலும் கூட அரசாங்கப் பணிகள் தாமதப்படுத்தப்படக் கூடாது என்பதற்காக அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

பேசுவதற்கு அதிக நேரம் இல்லாத காரணத்தால் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான திருமங்கலத்தில் கடந்த ஜூலை மாதம் ஊராட்சி ஒன்றியக் கள்ளர் சீரமைப்புப் பள்ளியில் பணி புரிந்து வந்த பி. பாண்டியன் என்பவரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் குடிபோதையில் இருந்தார் என்று காரணம் காட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று நையப் புடைத்திருக்கிறார்கள். அவ்வாறு அவர் தாக்கப்பட்டு, பின்னர் மறுநாள் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் பொழுது லாங் செயின் என்று சொல்லப்படும் நீளச் சங்கிலியால் கைகளைப் பிணைத்து, அவரை ஒரு சமுதாயக் குற்றவாளியைப்போல, கள்ளக் கடத்தலில் ஈடுபட்டவரைப்போல, கள்ள நோட்டு அடித்தவரைப்போல, சமூக விரோதியைப் போல திருமங்கலம் தெருவிலே இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இது குறித்து ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் கேட்டபொழுது அவர்களை மேலும் கடுமையாக காவல் துறையினர் நடத்தியிருக்கிறார்கள் என்ற செய்தியினையும் இந்த மன்றத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். லாங் செயினால் பிணைத்து இழுத்துச் செல்லக் காரணமாக இருந்த அந்தக் காவல் துறை அதிகாரிகளின் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இது குறித்து ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த அந்தப் பகுதி பிரதிநிதிகளும், எல்லாக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து கண்டன ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள்; கண்டனக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். எனவே, இனிமேல் காவல் துறையினர், விசாரிக்கப்படுகின்றவர்மேல் வரம்பு மீறி நடந்து கொள்வது தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே ஆளுங்கட்சிக்கு ஆதரவாக அல்லது நடுநிலைமையாக அல்லது எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து கருத்துக்களைச் சொல்லுகின்ற பத்திரிகைகள் இருக்கின்றன. என்ன காரணத்தாலோ எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து அல்லது நடுநிலைமையோடு இருந்து கருத்துக்களைச் சொல்லுகின்ற பத்திரிகைகள் தாக்கப்படும் நிலைமை உருவாகியிருப்பது பற்றி வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மதுரையில் மாலை முரசு பத்திரிகை, அதைப்போல கோவையில் உள்ள தினகரன் பத்திரிகை தாக்கப்பட்ட நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் ஜனநாயகத்தின் பிரதிநிதியாக, ஆணிவேராக இருக்கின்ற பத்திரிகைகளின் மீது தாக்குதல் நடைபெறுவது என்பது இதுவே தமிழகத்தில் கடைசிமுறையாக இருக்க வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்காய்யா : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு முன்வடிவின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்த நிதி ஒதுக்கம் முடிந்த பிறகு அரசாங்கம் பல துறைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தப் பணத்தைப் பெற்றுச் செலவழிக்க வேண்டியிருப்பதால் சில முக்கியமான பிரச்னைகளை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கோயம்புத்தூரிலே அவினாசிலிங்கம் கல்லூரியில் நடக்கின்ற ஆசிரியர்களின் கிளர்ச்சி கடந்த பல நாட்களாக நடந்து வருகிறது. அதிலே பெண் ஆசிரியைகள் உட்பட பல ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட தனியார் கல்லூரிகளில் இன்றைக்கு அந்தப் படிப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் சங்கம் அந்தக் கோரிக்கைகளைப்பற்றிப் பேச வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். நம்முடைய அரசாங்கம் இதிலே சரியான கவனத்தைச் செலுத்தி இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் கல்லூரிகளிலே பொதுவாக எந்தவிதமான பாதுகாப்புமில்லாமல் ஆசிரியர்கள் அவதிப்படுவதால் அந்த நிர்வாகத்தை அரசாங்கம் தன்வசமாகக் கொண்டுவருவது மிகவும் அவசியம் என்பதை இந்த நிலைமைகள் காட்டிக் கொண்டு வருகின்றன. அவர்களுக்கு வேலை நிலைமைகளிலே பாதுகாப்பு இல்லை. பல ஊழல்கள் அங்கே நடக்கின்றன. அட்டானமஸ் பாடி

என்கின்ற வகையில், தன்னிச்சையாக இயங்கக்கூடிய கல்லூரி என்பதால் அரசாங்கம் தலையிட முடியாது என்பது இன்றைக்கு ஒத்துக் கொள்ளப்பட முடியாது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் இந்தப் பிரச்சனையைக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பல பெண் ஆசிரியர்கள் உட்பட ஏராளமான பேர் தொடர்ந்து சிறைச்சாலையில் இருப்பது தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களுக்குமே அல்லது அரசாங்கத்திற்கே சிறப்பாக இருக்காது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, இரண்டு நாளைக்கு முன்னதாகவே வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரிலே நக்சலைட்டுகள் என்று சொல்லப்படக்கூடிய 3 பேர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதைப் பற்றிப் பேசி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது நடந்த சம்பவங்களைப் பற்றி சபையிலே பேசப்பட்ட விஷயங்களைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அன்றைக்கு நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். முன்கூட்டியே அவர்கள் சுடப்பட்டு பிறகு போலீசாருடன் மோதல் என்று செய்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அபாயகரமான ஒரு போக்கு. யாராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு கோர்ட்டால் தண்டனை அளிக்கப்படுவது தான் சரியானதாகும். இன்றைக்கு நக்சலைட்டுகள் என்ற பெயரால் அவர்களுக்கு இந்நிலை ஏற்படுமானால், நாளைக்கு யார் மீதும் போலீஸ் இலாகாவிலே உள்ளவர்கள், இப்படியே செயற்கை முறையிலே ஒரு மோதுதல் ஏற்பட்டது என்று கூறி பலபேரைச் சுட்டுத் தள்ளிவிட்டு பிறகு அதற்கு வேறு வழி இல்லையென்று சொல்லிவிடலாம். ஆகவே, அது அபாயகரமான போக்கு. ஆகவே ஆம்பூர் சம்பவத்தைப் பற்றி போலீஸ் விசாரணை பிரயோஜனப்படாது. ஒரு மாவட்ட நீதிபதி அளவிலே உள்ள ஒருவரைக் கொண்டு ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்வது நியாயத்திற்கும் சட்டத்திற்கும், தமிழகத்திலேயிருக்கக் கூடிய மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், அவசியம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று, சிறையிலே நக்சல்பாரி கைதிகள் வைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் நம்முடைய கட்சிகளுக்கும் பல வித்தியாசங்கள் உண்டு. அவர்களையெல்லாம் பாதுகாப்பாக வைப்பது ஒன்று; ஆனால் அவர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படாமல் வைப்பது என்பது மற்றொன்று. அவர்களிலே சிலர் இந்திய நாட்டினுடைய உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அங்கே வழக்கு தொடரக்கூடிய அளவு நேற்று கூட நான் பத்திரிகையிலே பார்த்தேன். உச்ச நீதிமன்ற நீதிபதி தமிழக சர்க்காரிடத்திலே சில காரியங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தப் பிரச்சனையை வளர்க்க வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, மனிதாபிமான அடிப்படையில், அந்த



நக்சலைட் கைதிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்குத் தனிமைச் சிறை போன்ற கொடுமைகள் இல்லாமல், இன்றுள்ள சிறைச்சாலை விதிகளுக்கேற்ப அவர்களுக்கும் குறைந்தபட்ச வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அத்தியாவசியப் பணிகள் சட்டத்தைத் தமிழகத்திலே கொண்டு வந்தபொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எதிர்க்கட்சிகள் அணுகி, அதை உடனே கொண்டு வர வேண்டாம், அதை ஒத்தி வைக்கவேண்டுமென்பதற்காக, செலக்ட் கமிட்டி போட்டு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு செலக்ட் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி இன்னும் கூடவில்லை. இதற்கிடையிலே, தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், மத்தியிலே நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டத்திலே அந்தச் சட்டத்தை முழு மனதுடன் வரவேற்றிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதிக்கக்கூடிய, பறிக்கக் கூடிய, அந்தச் சட்டத்திற்கு தமிழ்நாடு சர்க்கார், அப்படிப்பட்ட ஒரு சட்டம் தமிழ்நாடு சட்டப் பேரவையினுடைய ஆய்வுக் குழுவிலே பரிசீலனையிலே இருக்கும்போது, முன்கூட்டியே இந்தச் சட்ட ஆய்வையே புறக்கணிக்கும் வகையில், ஒரு முடிவெடுத்து அதை ஆதரிப்பது என்பது மிகவும் வருந்தத்தக்கது.

அதே போல் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும், தமிழ்நாடு சட்டம் இங்கே கொண்டு வந்த பொழுது இங்கே வன்மையாக எதிர்த்தவர்கள், மத்திய சர்க்கார் கொண்டு வந்த இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டிக்காமல் இருப்பதும் பெரிதும் வருந்தத்தக்கது என்பதை நான் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வர விரும்புகிறேன். சென்னை மாநகராட்சி, பல்லவபுரத்திலே நீண்டகாலமாக நடத்தி வந்த கல் உடைக்கும் தொழிற்சாலையை மூடுகின்றது. அதுவும் மாநகராட்சிக்குத் தேர்தல் நடைபெறாமல், மாநகராட்சியிலே ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நேரத்திலே. ஸ்பெஷல் ஆபீசராக இருக்கக்கூடியவர் ஏன் குவாரியை மூடவேண்டும்? தொன்று தொட்டு இருந்து வந்த ஒரு குவாரி அது. இன்றைக்கு மாநகராட்சிக்கு ஏராளமான ரோடுகள் இருக்கின்றன, அவர்களுக்கும் ஏராளமான கற்கள் தேவைப்படும். கேட்டால் சொல்கிறார்கள், நாங்கள் விலைக்கு வாங்கிக் கொள்கிறோம், என்று. அப்படியென்றால், கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்கக் கூடிய சென்னை மாநகராட்சி

[திரு. என். சங்கரய்யா] [1981 ஆகஸ்டு 31

தனக்கு இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கற்களை வெளியிலிருந்து வாங்குவதா, தன்னிடம் குவாரி வைத்திருக்கும்போது? அந்த குவாரியை நாம் வைக்கவில்லை, நம்முடைய முன்னோர்கள் வைத்தார்கள். நாம் வைக்கவில்லையென்றாலும், முன்னோர்கள் வைத்திருந்த அந்த குவாரியை மூடுவது என்பது சிறப்புடைய காரியமா? அதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கிறார்கள். மத்திய சர்க்காருக்கு ஏதோ ஆய்வுக்கு மலை தேவைப்படுகிறதென்றால், வேறு மலையை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, அரசாங்கம் அந்தப் பிரச்னையைக் கவனித்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வருகிற வரையில் தனி அதிகாரி அந்தப் பல்லவபுரம் குவாரியை மூடுவதை நிறுத்தவேண்டும். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிப்பதைத் தடுக்கவும், பொதுத் துறையினுடைய பணம் தனிப்பட்ட முறையிலே மற்றவர்களுக்குச் செல்வதைத் தடுக்கவும், அது வரு, மாநகராட்சி தன் குவாரியைக் கொடுத்துவிட்டு தனக்கு தேவைப்படும் கற்களைத் தனியார்களிடம் வாங்கக் கூடிய அளவுக்கு அந்தப் பணத்தைச் செலவழிக்காமல் பாதுகாக்க வேண்டும். இன்றைக்குக் கார்ப்பரேஷன் குவாரி நடத்துகிறதென்றால், அது தன்னுடைய தேவைக்காக நடத்துகிறது. அது நல்ல ஏற்பாடு என்று சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

சமீபகாலங்களிலே போலீஸ் லாக்கப்பிலே மரணம் என்பது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. போலீஸ் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆகவே, அதுபற்றிச் சொல்கிறேன். இம்மாதிரியான மரணங்கள் குறையவில்லை. அது மிகவும் அபாயகரமான போக்கு. யார் இருந்தாலும் இன்றைக்குத் தெரியும், போலீசார் அடைப்பதற்கு முன்னால் அவர்களை தற்கொலை செய்து கொள்ள முடியாத அளவுக்கு பாதுகாப்பாக அடைக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு கேஸிலும் என்ன சொல்கிறார்கள்? தற்கொலை செய்து கொண்டார்கள் என்று சொல்கிறார்கள். அது நிச்சயமாக ஒப்புக் கொள்ள முடியாத ஒன்று. இன்றைக்கு அவர்களை அந்த வழக்குகள் சம்பந்தமாக அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் தவறான மனப்பான்மையிலே சில காரியங்களை செய்வதாலே மரணங்கள் ஏற்படுகின்றன. பின்னால் அதை ரோடிலே கொண்டு போய் போட்டு விடுவதோ, அல்லது தூக்கு போட்டுக் கொண்டார்கள் என்று சொல்வதையோ அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு சம்பவத்தின் பொழுதும் பிரிவு 302-ன் அடிப்படையிலே ஒரு வழக்கைப் பதிவு செய்வதோடு, பொறுப்பாக இருக்கக்கூடிய அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு அந்த வழக்குகள் நடைபெற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1931 ஆகஸ்டு 31] [திரு. என். சங்கரய்யா]

[முற்பகல் 11.30]

இன்றைக்கு நியாய விலைக் கடைகளைப் பற்றி தீவிரமாக பேசிவிட்டோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசாங்கமும் இது சம்பந்தப்பட்டவரை 500 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு கடை இருக்க வேண்டும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதை உடனடியாக அமல் நடத்த அரசு முன் வரவேண்டும். குறிப்பாக குமரி மாவட்டம் எல்லையோர மாவட்டமாக இருக்கின்றது. அது கேரள மாநிலத்தின் பக்கமாக இருக்கிற காரணத்தினால் ஏராளமான தானியங்கள் கேரளாவுக்குப் போகின்ற காரணத்தால் அங்கே, உணவு பொருள்களின் விலை அதிகமாக இருக்கின்றது. குமரி மாவட்ட மக்கள் தங்களுக்கு முழு ரேஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இன்று கூட காலையிலே எனக்கு தந்தி வந்திருக்கிறது. அவர்களுக்கு இந்த முழு ரேஷன் கொடுக்கின்ற பிரச்சினையை அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்றைக்கு அரசாங்கத்தைச் சேர்ந்த விவசாயத் துறைத் தொழிலாளர்கள் 200 பேர்களுக்கு மேல் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள், அது அவ்வளவு நல்லதல்ல. கருவூலத் துறையைச் சேர்ந்தவர்கள் மீதும் வழக்கு இருக்கின்றது. அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி அந்த சஸ்பெண்டை ரத்து செய்து அவர்களை மீண்டும் வேலைக்கு சேர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் சரியான கண்ணோட்டத்தோடு அரசாங்கம் இன்றைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த பிரச்சினைகளின் தன்மைக்குள்ளே நான் போகவில்லை. ஆனால் 200 விவசாயத் துறை ஊழியர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கிருக்கிறது. கருவூலத் துறை ஊழியர்கள் மீது வழக்கிருக்கிறது. அவர்கள் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதையும் இந்த அரசு கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டெக்னிக்கல் எக்ஸாமினேஷன் டிபார்ட்மெண்டில் அந்தப் பரிட்சை முடிந்து அவர்களுக்குப் பாஸ் அல்லது பெயில் என்று அறிவித்ததற்குப் பிறகு அவர்களுக்கு இன்னும் சர்டிபிகேட்கள் அல்லது டிப்ளமாக்கள் வந்து சேரவில்லை. மார்க்கு லிஸ்ட் அல்லது பட்டங்கள் வந்து சேருவதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. சென்ற ஆண்டில் படித்து தேறியவர்களுக்கு இதுவரையில் டிப்ளமோக்கள் வந்து சேரவில்லை. அவர்கள் வேலை வாய்ப்பு தேடுகின்ற நேரங்களில் இந்த டிப்ளமோக்கள் இல்லாமல் மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. எனவே கல்வித் துறையினரும், அமைச்சர் அவர்களும் உடனடியாக நட-

வடிக்கை எடுத்து, இவைகள் விரைவாக கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற நிதியை அரசாங்கம் பொதுமக்களுடைய பிரதிநிதிகளோடு கலந்து அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு எல்லா துறைகளிலும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக வறட்சிப் பணிகள் அனைத்தும் செப்டம்பர் 30 தேதியோடு அது முடிவடையும், அதற்குள் எல்லாப் பணிகளும் முடிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு செயல்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இன்னும் பல மாவட்டங்களில் வறட்சி நிலை தொடர்ந்து நீடிக்கின்றன. இது மட்டுமல்ல ஆயிரக்கணக்கான கிராமங்களில் குடி நீர் கொடுக்க முடியாத நிலைமையில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். அந்தக் காரணங்களினாலே உடனடியாக அதை செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என்பதை விட, அந்தப் பணிகளை செய்வதற்கான காலத்தை மேலும் இந்த வறட்சி நிலை நீடிக்கின்ற வரையிலே, நீட்டிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் ஒரு 2 மாதங்களுக்கு நீட்டிப்பதன் மூலமாக இந்த பணிகளை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய்களை கிராமங்களில் செலவிடுகிறோம். கிராமங்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும் என்று இந்தத் திட்டத்தின் நோக்கமாக இருந்தாலும், அதை நிர்வகித்து நிறைவேற்றுவதற்கான பொறுப்பை அதிகாரிகளிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அது எந்த முறையிலே செலவிடப்படுகிறது, அந்தப் பணிகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பது சம்பந்தமாக கண்காணிப்புக்காக அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பொது மக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்துவதன் மூலமாக நாம் செலவிடக் கூடிய கோடிக் கணக்கான ரூபாய்கள் அது முழுமையாகச் செலவிடப்படுகிறதா? சரியான முறையிலே செலவிடப்படுகிறதா என்பதைக் கண்டறிய முடியும். அந்தத் திட்டத்தை முழுமையாக நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கான ஒரு வாய்ப்பை நாம் ஏற்படுத்த முடியும். அந்த அடிப்படையிலே குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் 55 லட்சம் ரூபாய் தன்னிறைவுத் திட்டத்திற்காக, குடிதண்ணீர் தவிர, மற்ற இதர காரியங்களுக்கான, என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த வரம்பு நிர்ணயித்திருப்பது சரியல்ல. அந்த வரம்பைத் தளர்த்தவேண்டும். தேவையை பூர்த்தி செய்வதற்கு இன்னும் அதிகமான தொகைகள் ஒவ்வொரு ஊராட்சி





ஒன்றியத்திற்கும் எவ்வளவு தேவைப்படுகிறதோ, அதை முழுமையாக ஒதுக்கீடு செய்யக்கூடிய அடிப்படையிலே நிலைமைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலே அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற முடியாத நிலையில், கிராம வீடு கட்டும் சங்கங்களின் மூலமாக கடன் வழங்கப்பட்டு வந்தது. அந்த சங்கங்கள் வட்டாரத்திற்கு ஒன்றாக அமைக்கப்படும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. இந்த கொள்கையை நிறைவேற்றி இந்த ஆண்டே ஏற்படுத்தப்படும் என்று அறிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஜூன் மாதம் சென்று, இன்று தேதி வரையில் அம்மாதிரியான வீடு கட்டும் சங்கங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு மாறாக அதை நிறைவேற்ற முடியாது என்கிற அளவிற்கு கூறுவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இந்த அரசு அதை நிறைவேற்றும் என்று சட்டமன்றத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அதை நிறைவேற்றக்கூடிய வகையில் ஒவ்வொரு வட்ட தலைநகரிலும் வீடு கட்டும் சங்கத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் கூட்டுறவு அங்காடிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு 150 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இன்றையதினம் வரையில் அந்த ஊழியர்களுக்கு அந்த ஊதியம் கொடுக்கப்படவில்லை. அதற்கான நிதி ஒதுக்கீடும் இதிலே காணப்படவில்லை. எனவே மே மாதத்திலிருந்தே கொடுக்கப்படும் என்று அறிவித்ததை, அவர்களுக்கு கொடுப்பதற்கான முறையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு கடன் பாக்கியை செலுத்துவதற்கான காலக்கெடு டிசம்பர் 31-ம் தேதி வரையில் நீட்டிக்கப் பட்டிருக்கிறது. சென்ற ஜூன் 30-ம் தேதி வரையில் செலுத்தாத விவசாயிகளிடத்திலே அவர்களுடைய பொருள்களை ஜப்தி செய்திருக்கிறார்கள். விவசாயிகளின் டிராக்டர்கள், மற்ற பொருள்கள் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றன. காலக்கெடு நீடித்திருப்பதை உத்தேசித்து அவர்களுக்கு அவற்றை திருப்பி கொடுப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் பல கிராமங்களில் விவசாயிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அரசிற்கும், விவசாயி சங்கங்களுக்கும் இடையே ஒரு உடன்பாடு இது குறித்து ஏற்பட்டிருக்கிறது. சென்ற நவம்பர் மாதத்திற்கு பிறகு பிளஸ் 1 என்ற அடிப்படையில் மின்சார கட்டணத்தை செலுத்தக் கூடியவர்களுக்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது என்ற அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது ஏதாவது காரணத்தாலே, ஒரு மாதம் விவசாயி மின்சார கட்டணத்தை செலுத்த தவறினால், அவருக்கு பாக்கித் தொகையை முழுமையாக செலுத்தினால்தான் மின்சார இணைப்பு கொடுக்கப்படும் என்ற அளவில் மின் துண்டிப்பு நடைபெற்று வருகிறது. (குறுக்கீடு)

வடிக்கை எடுத்து, இவைகள் விரைவாக கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற நிதியை அரசாங்கம் பொதுமக்களுடைய பிரதிநிதிகளோடு கலந்து அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு எல்லா துறைகளிலும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக வறட்சிப் பணிகள் அனைத்தும் செப்டம்பர் 30 தேதியோடு அது முடிவடையும், அதற்குள் எல்லாப் பணிகளும் முடிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு செயல்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இன்னும் பல மாவட்டங்களில் வறட்சி நிலை தொடர்ந்து நீடிக்கின்றன. அது மட்டுமல்ல ஆயிரக்கணக்கான கிராமங்களில் குடி நீர் கொடுக்க முடியாத நிலைமையில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். அந்தக் காரணங்களினாலே உடனடியாக அதை செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என்பதை விட, அந்தப் பணிகளை செய்வதற்கான காலத்தை மேலும் இந்த வறட்சி நிலை நீடிக்கின்ற வரையிலே, நீட்டிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் ஒரு 2 மாதங்களுக்கு நீட்டிப்பதன் மூலமாக இந்த பணிகளை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய்களை கிராமங்களில் செலவிடுகிறோம். கிராமங்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும் என்று இந்தத் திட்டத்தின் நோக்கமாக இருந்தாலும், அதை நிர்வகித்து நிறைவேற்றுவதற்கான பொறுப்பை அதிகாரிகளிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அது எந்த முறையிலே செலவிடப்படுகிறது, அந்தப் பணிகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பது சம்பந்தமாக கண்காணிப்புக்காக அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பொதுமக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்துவதன் மூலமாக நாம் செலவிடக் கூடிய கோடிக்கணக்கான ரூபாய்கள் அது முழுமையாகச் செலவிடப்படுகிறதா? சரியான முறையிலே செலவிடப்படுகிறதா என்பதைக் கண்டறிய முடியும். அந்தத் திட்டத்தை முழுமையாக நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கான ஒரு வாய்ப்பை நாம் ஏற்படுத்த முடியும். அந்த அடிப்படையிலே குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் 55 லட்சம் ரூபாய் தன்னிறைவுத் திட்டத்திற்காக, குடிதண்ணீர் தவிர, மற்ற இதர காரியங்களுக்காக, என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வரம்பு நிர்ணயித்திருப்பது சரியல்ல. அந்த வரம்பைத் தளர்த்தவேண்டும். தேவையை பூர்த்தி செய்வதற்கு இன்னும் அதிகமான தொகைகள் ஒவ்வொரு ஊராட்சி



ஒன்றியத்திற்கும் எவ்வளவு தேவைப்படுகிறதோ, அதை முழுமையாக ஒதுக்கீடு செய்யக்கூடிய அடிப்படையிலே நிலைமைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலே அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற முடியாத நிலையில், கிராம வீடு கட்டும் சங்கங்களின் மூலமாக கடன் வழங்கப்பட்டு வந்தது. அந்த சங்கங்கள் வட்டாரத்திற்கு ஒன்றாக அமைக்கப்படும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. இந்த கொள்கையை நிறைவேற்றி இந்த ஆண்டே ஏற்படுத்தப்படும் என்று அறிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஜூன் மாதம் சென்று, இன்று தேதி வரையில் அம்மாதிரியான வீடு கட்டும் சங்கங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு மாறாக அதை நிறைவேற்ற முடியாது என்கிற அளவிற்கு கூறுவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இந்த அரசு அதை நிறைவேற்றும் என்று சட்டமன்றத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அதை நிறைவேற்றக்கூடிய வகையில் ஒவ்வொரு வட்ட தலைநகரிலும் வீடு கட்டும் சங்கத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் கூட்டுறவு அங்காடிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு 150 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இன்றையதினம் வரையில் அந்த ஊழியர்களுக்கு அந்த ஊதியம் கொடுக்கப்படவில்லை. அதற்கான நிதி ஒதுக்கீடும் இதிலே காணப்படவில்லை. எனவே மே மாதத்திலிருந்தே கொடுக்கப்படும் என்று அறிவித்ததை, அவர்களுக்கு கொடுப்பதற்கான முறையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு கடன் பாக்கியை செலுத்துவதற்கான காலக்கெடு டிசம்பர் 31-ம் தேதி வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஜூன் 30-ம் தேதி வரையில் செலுத்தாத விவசாயிகளிடத்திலே அவர்களுடைய பொருள்களை ஜப்தி செய்திருக்கிறார்கள். விவசாயிகளின் டிராக்டர்கள், மற்ற பொருள்கள் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றன காலக்கெடு நீடித்திருப்பதை உத்தேசித்து அவர்களுக்கு அவற்றை திருப்பி கொடுப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் பல கிராமங்களில் விவசாயிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அரசிற்கும், விவசாயி சங்கங்களுக்கும் இடையே ஒரு உடன்பாடு இதுகுறித்து ஏற்பட்டிருக்கிறது சென்ற நவம்பர் மாதத்திற்கு பிறகு பிளஸ் 1 என்ற அடிப்படையில் மின்சார கட்டணத்தை செலுத்தக் கூடியவர்களுக்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது என்ற அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது ஏதாவது காரணத்தாலே, ஒரு மாதம் விவசாயி மின்சார கட்டணத்தை செலுத்த தவறினால், அவருக்கு பாக்கித் தொகையை முழுமையாக செலுத்தினால்தான் மின்சார இணைப்பு கொடுக்கப்படும் என்ற அளவில் மின் துண்டிப்பு நடைபெற்று வருகிறது. (குறுக்கீடு)

[1981 ஆகஸ்ட் 31

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசுவதிலே குறுக்கிட வேண்டுமென்ற ஆவல் இல்லை. இருந்தாலும் நிலைமையை விளக்குவதற்கு அதை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அரசு மின் வரிய நிலுவையை வசூலிக்கிற பொறுப்பினை மின் வாரியத்திற்கு கொடுத்துவிட்டது. உள்ளூர் நிலைமையை உத்தேசித்து, அங்குள்ள மின் வாரியத்தைச் சேர்ந்த பொறியாளர்கள், எவ்வளவு வசூல் செய்தால் அங்குள்ள விவசாயிகள் தாங்குவார்களோ, அந்த அளவிற்கு வசூலை நிர்ணயிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இனிமேல் நீங்கள் உள்ளூர் பொறியாளர்களை சந்தித்தாலே இந்த பிரச்சினை தீரும்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, அரசு இம்மாதிரியான முடிவை, ஒரு நெளிவு சுளிவான அடிப்படையிலே வசூலிப்பதற்கான உத்தரவு கொடுத்திருப்பதை பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் ஆகவே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற சிக்கலை அரசிற்கு கொண்டு வருகிற முறையிலே நான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். முழுமையாக எல்லா பாக்கிகளையும் கட்டவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது இன்றைய தினம் விவசாயிகளை பாதிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதால் நான் அதைக் குறிப்பிட்டேன்.

அடுத்து இன்றைய தினம் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை அரசு அறிந்திருக்கிறது. அரிசி விலை உயர்ந்திருக்கிறது 500 கார்டுகளுக்கு ஒரு நியாயவிலை கடை என்ற அடிப்படையிலே அரிசி உத்திரவாதமான முறையிலே கொடுப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் தான் கொள்முதல் செய்கிறது என்பதை விட்டு தேவையான கொள்முதலை மாநில அரசும் செய்ய வேண்டும். 500 நபர்களுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற அடிப்படையிலே தேவையான பொருள்களை கொள்முதல் செய்து, குறிப்பாக அரிசி உத்தரவாதமாக கிடைப்பதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அடுத்தபடியாக, அரசு ஊழியர் சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய கொள்கையில் ஒரு மாற்றம் தேவை என்று குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் அரசாங்கத்தின் எதிரிகள் அல்ல. இன்றைக்கு அரசாங்கத்தின் நடவடிக்கை அவர்களை எதிரிகள் போல் பாவிக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஏதாவது ஒரு சிறு கிளர்ச்சி ஏற்பட்டாலும், போராட்டம் என்றாலும் அரசாங்கத்தை எதிர்த்து அவர்கள் போராட்டம் நடத்துவதாக கருதி, அவர்களை கைது செய்வது சிறையிலே அடைப்பது, தற்காலிக வேலை நீக்கம் செய்வது என்ற முறையில் அரசாங்கத்தின் நடவடிக்கை இருக்கிறது. சென்ற ஏப்ரல்



மாதம் கைது செய்யப்பட்ட வேளாண்மை தொழில் நுட்ப உதவியாளர்கள் 976 பேர்கள் மீதான வழக்குகள் 6 மாதமாக இருந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டு, தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல கருவூலத்திலிருக்கிற ஊழியர்கள் இயக்கம் சம்பந்தமாக அரசு உரிய முறையில் இன்னும் தீர்வு காணவில்லை. அவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அரசிடம் முறையீடு செய்திருக்கிறார்கள். அவர்களை சந்தித்துப் பேசி, தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்தது. ஆனால் இன்றைக்குக் கூட அவர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் வகையில் பழிவாங்கும் முறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்தப் போக்கிலே மாற்றம் தேவை. அவர்களுடைய வழக்குகளை வாபஸ் பெற்று, அவர்களை அழைத்து நேரில் பேசி ஒரு சுமூகமான தீர்வை காண நடவடிக்கை எடுக்க வேண்டும் அது மட்டுமல்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வடாற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து குறிப்பிட விரும்புகிறேன். அங்கே நக்சலைட் என்ற பெயரால் 3 பேர்களை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இதற்கு முன்னாலும் இப்படி பல்வேறு சம்பவங்கள் இந்த ஆட்சியில் நடைபெற்றிருக்கின்றன. அங்கே போலீசார் எதைச் செய்தாலும் நக்சலைட் என்ற பெயரைச் சொல்லி ஜனநாயக உரிமையை நசுக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தின் நடவடிக்கை இருக்கிறது, இது கூடாது. கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கோவையிலே அவினாசிலிங்கம் கல்லூரி ஆசிரியர்கள் இம்மாதம் 7-ந் தேதி முதல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஈடுபட்ட பெண்கள் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இல்லை என்று சொல்லி அதிக அதிகாரம் வேண்டும், சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் அட்டானமஸ் பாடி, சுயாட்சி அதிகாரம் என்ற அந்த அதிகாரத்தை அந்தக் கல்லூரிக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரத்தை அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி ஆசிரியர்களைப் பழி வாங்குகிறார்கள். ஆசிரியர்களுக்கு எதிராக ஒரு போராட்டத்தையே தொடங்கியிருக்கிறார்கள்.

அதைப்போல திருச்சியிலே செயின்ட் ஜோசப் கல்லூரி இருக்கிறது. அங்கே ஒரு ஆசிரியர் போராட்டக் குழுவில் இருப்பதால் அவருக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை; போராட்டக் குழுவிலிருந்து விலகிவிட்டால் பதவி உயர்வு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இந்தகைய போக்கு களை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற மாதம் 2?-ந் தேதியிலிருந்து இந்த மாநிலத்தி லிருக்கிற தனியார் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு ?0 கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. அதைக் கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சனையிலே ஒரு தீர்வு காண்பதற்கு, அவர்களை எல்லாம் அழைத்து, நேரில் பேசி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருக்கின்ற பல்வேறு பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காண முதலில் 'அட்டானமஸ் பாடி' அதிகாரம் கொடுத்திருப்பதை வாபஸ் பெற வேண்டும். அந்த அதிகாரத்தை வாபஸ் பெற்றாலே பல பிரச்சனைகள் தீர்ந்துவிடும் வாய்ப்பு இருக்கிறது.

**மாண்மிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, கல்லூரி களுக்கு தன்னாட்சி உரிமை தரப்பட்டிருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல கல்லூரி ஆசிரியர் கள் நடத்தும் போராட்டம் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தன்னாட்சி உரிமையை திரும்பப்பெற வேண்டும் என்ற அடிப்படை யில் அல்ல. நான் அவர்களைக் கேட்டபோதும் நங்கள் அப்படி போராடவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசும் போது நல்ல கருத்துக்கள் கிடைத்தால் அதை அரசுக்குத் தெரிவித்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா:** இப்போது நடைபெறும் போராட்டம் தன்னாட்சி உரிமையை வாபஸ் பெறவேண்டும் என்ற போராட்டம் என்று நான் கூறவில்லை. நடைபெறுகின்ற போராட்டம், ஆசிரியர்கள் பிரச்சனைக்கு தீர்வு காண, வேலையிலிருந்து நீக்கம் செய்தவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள, வேலைக்கு பாதுகாப்பு இருக்க புதிதாக பட்டப் படிப்புகளை தோற்றுவிக்கும் போது தடுத்து நிறுத்துவதான முயற்சிகளைத் தடை செய்வது போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்காக இன்றைக்கு போராட்டம் வந்திருக்கிறது. அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு இன்றைக்கு எந்த அளவுக்கு உணர்வு ஏற்பட் டிருக்கிறது என்றால் தன்னாட்சி அதிகாரம் தங்களுக்கு இருக்கிறது என்ற காரணத்தால், அதை வைத்து தாங்கள் எதை யும் செய்யலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் கல்லூரி ஆசிரியர்களை பழி வாங்குகிறார்கள்.





வஞ்சம் தீர்க்கிறார்கள் என்று கருதுகிறார்கள். ஆகவேதான் அவர்களுடைய அந்த எண்ணத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்த அடிப்படையில் இன்றைக்கு மாநிலம் முழுவதும் கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினை நீடித்துக்கொண்டிருக்கிறது. மற்ற பகுதிகளுக்கும் இது பரவக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். ஆகவே இன்றையதினம் இந்த அரசு அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை என்று கோரி பெற இருக்கின்ற தொகை யினைப் பயன் உள்ள முறையிலே எந்தத் துறைக்கு என்று ஒதுக்குகிறோமோ அந்தத் துறைக்கு சரியான முறையிலே பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற என்னுடைய கருத்தைக் கூறி உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். நான் அன்றே தெரிவித்தேன், நிதிநிலை அறிக்கையின்போது விளக்கங்கள், கருத்துக்கள், புதுவரிகள் போன்றவற்றைப் பற்றி எல்லாம் பேசுவதற்கு வாய்ப்பு உண்டு என்று. ஆகவே துணை மதிப்பீடுகள் வருகின்றபோது எந்தெந்த காரியங்களுக்கு எவ்வளவு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு என்ன காரணம் போன்ற விளக்கங்களைத்தான் தந்திருக் கிறோம். அந்தக் கட்டமும் முடிந்துவிட்டது. இது கடைசிக் கட்டம். இதனை விளையாட்டுக் கட்டம் என்று கூடச் சொல்லலாம். இதிலே நிதி ஒதுக்கீடு என்று சொல்கிறபோது எவ்வளவு நிதி ஒவ்வொரு துறைக்கும் என்றுதான் இருக்கும்.

ஆனால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லா துறைகளையும் பற்றிய எல்லாக் கருத்துக் களையும் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்தக் கருத்துக்கள் பற்றி எல்லாம் அந்தந்த துறையினைச் சேர்ந்த அமைச்சர்கள் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றபோது தேவையான விளக்கங்களை முறைப்படி தருவார்கள். ஆகவே அவை அத்தனைக்கும் விளக்கம் தருகின்ற சூழ்நிலை இப்போது இல்லை. ஆனால் நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக ஏதாவது ஐயப்பாடுகளையோ, அரிய வினாக்களையோ, அறியா வினாக் களையோ கேட்டால் வேண்டுமானால் அதற்கு விளக்கங்களைத் தரலாம.

திரு. இரகுமான்கான் அவர்கள் 1977–78 ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கைகளில் ஏற்பட்டுள்ள மீதங்கள் பற்றிக் குறிப்பிட்டார், இதில் பெரும்பகுதி சாட்டிய இனங்களைப் பற்றியதாகும். ரூ. 1,00 கோடி மத்திய அரசிடமிருந்து தேவைப்பட்டால் வழிவகை முன்பணம் பெற ஒதுக்கீடுசெய்யப்பட்டது.ஆனால் தேவை ஏற்படாத காரணத்தால

ரூ. 95·25 கோடி மீதம் ஏற்பட்டது. இவ்வகையில் ரூ. 21 கோடி முன் பணங்கள் மத்திய அரசிடமிருந்து தேவையில்லாத காரணத்தால் பெறப்படவில்லை. இவ்வகையில் மீதம் ஏற்பட்டது.

மேலும் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூபாய். ஒரு கோடி ஒதுக்கப்பட்டது. முதலில் இப்பணியை வீட்டுவசதி வாரியம் மேற்கொள்வதாக இருந்தது. ஆனால் இப்பணிகளை மாநகராட்சி, நகராட்சிகள் மேற்கொள்வது சிறப்பாக இருக்கும் எனக் கருதப்பட்டதால் இத்தொகை மாநகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டது. ஆகவே குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை நகராட்சிகள் மூலம் பயன்படுத்தப்பட்டது.

மேலும் கிருஷ்ணா-பெண்ணாறு திட்டம் குறித்த செலவுகள் மானியம் 19-ன் கீழ் குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளும் என கருதியதால் ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பணிகள் பொதுப்பணித் துறையால் செலவழிக்கப்பட்ட காரணத்தால், மானியம் 19-ன் கீழ் இத்தொகை திரும்பப் பெறப்பட்டது.

நிதி ஒதுக்கக் கணக்குகள் அவையில் வைக்கப்பட்டபின் பொதுக் கணக்குக் குழுவினால் முழுமையாக பரிசீலிக்கப்படும். அப்போது ஒவ்வொரு இனத்தின் கீழும் செலவிடப்பட்ட தொகைகள், மீதங்கள் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டு பொதுக் கணக்குக் குழுவால் ஆய்வு செய்யப்படும். பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்த பின்னர் குழுவின் அறிக்கை அவையில் மீண்டும் வைக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, 1977-78 ஆம் ஆண்டு ஆடிட்டர் ரிப்போர்ட்டிலே ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை செலவழிக்கப்படாமல் இந்த அரசாலே திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கு நாவலர் அவர்கள் பதில் சொல்கிறார்களா? மேலும் ஒன்றை அவர்களிடம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியினுடைய குடிநீர் திட்டத்திற்காக கிருஷ்ணா நதியிலிருந்து நீர் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது.

அதோடு வீராணம் திட்டம் பற்றி பரிசீலிக்கப்பட்டதா என்ன என்பதே தெரியவில்லை.

இந்த நிலையிலே கிருஷ்ணாநதி நீரைக் கொண்டுவருவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை என்ன ஆயிற்று? அந்த வேலைகள் நடக்கின்றனவா? அதற்கான அலுவலகம் இருக்கின்றதா? வேலை நடக்கவில்லை என்றால் அலுவலகம் எதற்கு? அதிகாரிகள் அவசியமா? அவர்களுககுக் கொடுக்க வேண்டிய சம்பளமும் அவசியமா?



(பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பப்பட்டது.)

[முற்பகல் 11.50]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இங்கே பல விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி தனிக் கேள்விகள் போட்டால் தான் விவரங்கள் தர முடியுமே தவிர விளக்கக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்விகளாக போட்டால் பதில் தரலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு துறைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் முதலிலேயே எடுத்துச் சொன்ன மாதிரி ஒவ்வொரு துறையைப் பற்றியும் பதில் கூறும் நிலையில் நான் இல்லை. ஆனால் அவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டு அந்தந்த துறையைச் சேர்ந்தவர்கள், தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள் என்பதை மட்டுமே இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே நிதி ஒதுக்கீடு என்று சொல்கிறபோது அதிக விளக்கங்கள் தருவதற்கில்லை. மேலும் சட்டம், ஒழுங்கு போன்ற பல பிரச்சனைகளையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த ஒரே ஒரு பிரச்சனையை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று காலையிலே வந்த செய்தி நாளிதழ்களிலே, இந்தியாவிலேயே குறைவான அளவிற்கு குற்றங்கள் நடைபெறுவது தமிழ்நாட்டிலேதான் என்றும் அதுவும் சென்னையிலேதான் என்றும் இருக்கிறது. இங்கே குற்றங்குறைகள் மிகுதியாக நடைபெறுகிறது என்று சொன்னார்களே அதற்கு இல்லை என்பதற்கு ஆதாரமாக தந்திருக்கிறார்கள், இன்று காலையிலே வந்த பத்திரிகை செய்திகளிலே, சாதாரணமாக டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலே நடைபெறுகிற குற்றங்களைவிட, சென்னையிலே பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தல், கொள்ளை அடித்தல், கற்பழித்தல், திருடு போன்ற குற்றங்கள் வெகுவாக குறைந்திருக்கின்றன என்று மத்திய அரசினுடைய உள்நாட்டு இலாகா நேற்று வெளியிட்டு இன்று காலையில் பத்திரிக்கையில் வந்திருக்கிறது.

இந்த ஆண்டு சென்னையில் பெண்கள் அல்லது குழந்தைகள் கடத்தல் எதுவும் நடக்கவில்லை என்றும், 7 கற்பழிப்பு குற்றங்கள் மற்றும் 24 திருட்டுகள், 2 பெரிய கொள்ளை போன்றவைகள் நடைபெற்றிருக்கின்றன; இந்த 6 மாதத்தில் என்றும் அந்தச் செய்திகள் சொல்கின்றன. டெல்லியில் இந்த 6 மாதத்தில் மட்டும் 41 கற்பழிப்புகளும் 101 கடத்தல் குற்றங்களும் 30 பெரிய கொள்ளைகளும் நடைபெற்றிருக்கின்றன. பம்பாயில்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1981 ஆகஸ்ட் 31

இந்த 6 மாதத்தில் மட்டும் 35 கற்பழிப்புகள், 27 கொள்ளைகள் முதலியவை நடைபெற்றிருக்கின்றன. சென்னையை விட கல்கத்தாவில் சற்று கூடுதலாக இருக்கிறது. அங்கே 15 கற்பழிப்பு குற்றங்களும், 26 கொள்ளைகளும் நடைபெற்றிருக்கின்றன. ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிறார்களே, எப்படிச் சொல்ல முடியும் என்று கேட்கிறேன். ஒப்பிட்டுத்தான் நாம் பார்க்க முடியும் இந்தியாவைப் பொறுத்தவரையில்.

ஆகவே டெல்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை என்று பார்க்கிறபோது சென்னையில் குறைகிறது. இது இருக்கலாமா என்று கேட்டால் அதுவும் இல்லாமல் பார்த்துக் கொள்வதுதான் மிகமிக நல்லது. ஆகவே, அந்த வகையில் காவல் துறையினர் கடமைகளை செய்து வருகிறார்கள். அவைகளைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லும் வாய்ப்பு ஏற்படும்போது எடுத்துச் சொல்கிறேன். என்று எடுத்துச் சொல்லி இந்த நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே மக்களுடைய நம்பிக்கையையும், அன்பையும், அரவணைப்பையும் பெற்றுத்தான் இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆகவே இரு சாராருடைய கருத்துக்களையும் நாடு நன்கு அறிந்திருக்கிறது, உணர்ந்திருக்கிறது என்று சொல்லி,

"முடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" என்றார் வள்ளுவர்.

ஆகவே குடிகளை தழுவி நடந்துக் கொள்வதில் பெரும்பான்மையான மக்களின் அன்பையும் அரவணைப்பையும் பெறுவோம் என்றென்றும் என்ற முறையில் இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 78/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



1981 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண் 4 சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 78/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 8. அரசினர் தீர்மானங்கள்

### அ. அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 6-அரசினர் தனித் தீர்மானம்" என்பது "இனம் 5—அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல்" என்ற தலைப்பில் நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் பின், எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

## 9. அரசினர் தனித் தீர்மானம்

### நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்துதல்) சட்டம், (மத்தியச்சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுதல்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :— "நீர் தூய்மைக் கெடுதலைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், நீரைப்பராமரிப்பதற்கும், சேமித்துவைப்பதற்கும் அது தொடர்பான அல்லது துணைக் காரியங்கள் எல்லாவற்றிற்கும் இடை நிகழ்வான பிறவற்றிற்கும் இந்தியா முழுவதற்கும் ஒரே சீரான சட்டம் இருப்பது விரும்பத்தக்கது என்று இப்பேரவை கருதியுள்ளதாலும்:

இச் சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையில் பட்டியல் II-லுள்ள 17-ஆம் பதிவுடனும் (நீர் அதாவது பட்டியல் 1 லுள்ள 17 ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டு, குடிநீர் வழங்கல், பாசனக் கால்வாய்கள், வடிகால். ஏரிகளுக்குக் கரை அமைத்தல், நீரைச் சேமித்து வைத்தல் மின்சக்தி) 6ஆம் பதிவுடனும் (பொதுச்சுகாதாரம்—துப்புரவு) தொடர்புடையதாக இருப்பதாலும்;

(டாக்டர் எச். வி ஹண்டே) [1981 ஆகஸ்ட் 31

நாடாளுமன்றம், சட்டத்தின் மூலம் அஸ்ஸாம், பீகார், குஜராத் அரியானா, இமாசலப் பிரதேசம், ஜம்மு, காஷ்மீர், கருநாடகம், கேரளம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மேற்சொன்ன வற்றை முறைப்படுத்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின் கீழ் தீர்மானங்களை நிறை வேற்றியதைத் தொடர்ந்து நாடாளுமன்றம், 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மைகெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டத்தை (மத்தியச் சட்டம் 6/1974) இயற்றியுள்ளதாலும்

மேற்சொன்ன 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றப்படுவது விரும்பத்தக்கது என்று சட்ட மன்றப் பேரவைக்குத் தோன்றுவதாலும்:

எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களால் இச் சட்டமன்றப் பேரவை. 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல்-கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றப்பட வேண்டும் என்று இதனல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறை வேற்றப் பெற்றது.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (இ) மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1981

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"30-6-1981 ஆம் தேதியன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித் துள்ள 1981 ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1981) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. சு. பாலன் : நான் இத்தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம், தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;—'1981-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/ 1981) ஆய்வுக்கு "எடுத்துக் கொளளப்பெற வேண்டும்."*

பல்கலைக்கழக அதிகாரமன்றங்களின் ஒரே நபர் நீண்ட காலமாகத் தொடர்ந்து உறுப்பினராக இருப்பது அப்பதவியில் அவருக்கு சில தனிப்பற்றுகள் ஏற்படுவதற்கு இடமளிக்கு

*1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1981 ஆகஸ்ட் 31] (திரு. செ. அரங்கநாயகம்)

மாதலால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங் களின் அதிகார மன்றங்களின் உறுப்பினர்களின் கால அளவை வரையறுத்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அரசு ஒரு கொள்கையை உருவாக்கியது. எனவே, இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் பேரவை, ஆட்சிக்குழு, கல்வி அவை ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மூன்றாண்டு காலத்திற்குப் பதவி வகிக்க வேண்டும் என்றும், மூன்றாண்டு காலத்திற்கு மேற்படாத மற்றொரு காலத்திற்கு அவர்கள் தேர்தலில் நிற்கவோ நியமனம் செய்யப்படவோ தகுதி பெறுவார்கள் என்றும் அரசு முடிவு எடுத்தது.

மேற்சொன்ன முடிவிற்கேற்ப மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் பேரவைக்கும் ஆட்சிக்குழு, கல்வி அவை போன்ற பிற அதிகார மன்றங்களுக்கும் நடைபெறுகிற தேர்தல்களில் எல்லோரும் போட்டியிடுவதற்கும் சம வாய்ப்புகள் அளிக்கும் நோக்கத்துடன் மேற்சொன்ன மூன்று அதிகார மன்றங்களின் உறுப்பினர்களும் மூன்றாண்டு கால அளவுக்கும் பதவி வகிக்க

வேண்டும் என்றும், மூன்றாண்டுகளுக்கு மேற்படாத மற்றொரு கால அளவுக்கு தேர்தலில் நிற்கவோ நியமனம் செய்யப்படவோ அவர்கள் தகுதி பெறுவார்கள் என்றும் வரையறை செய்து மதுரை-காமராசர் பல்கலைக் கழக சட்டம் 1965-யை உரிய முறையில் திருத்தி ஒரு அவசரச் சட்டம் ஆளுநர் அவர்களால் 30-6-81 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்ட முன்வடிவு எண் 68/81 மேற்சொன்ன தமிழ்நாடு 7-வது அவசரச் சட்டத்தை அதில் காணப்படும் ஷரத்துக்களை மேலும் தெளிவாகக் குறிப்பிடும் வண்ணம் சிற்சில மாற்றங்களோடு சட்டமாக மாற்றியமைக்க வகை செய் கிறது.

நான் இந்தச் சட்டமுன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளு மாறும் பின்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவைக்கு பரிந்துரைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: திரு.ரகுமான்கான், அவர்களின் தீர்மானமும் கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1965-ம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக் கிறார்கள். என் பேச்சைத் துவங்குவதற்கு முன்பே நடை

பெற்றிருக்கக் கூடிய சட்ட இலாகா சம்பந்தமாகவும், இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவருகிறபோது ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு தவறை ஒரு குற்றச்சாட்டாக நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு தங்கள் முலம் கொண்டுவரக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய த்ரீ டிக்கேட்ஸ், முப்பது ஆண்டு அனுபவம் நமக்குத் தெரிவிப்பது என்னவென்றால்...... என்று இருக்கிறது. முப்பதாண்டு அனுபவம் காரணமாக இந்தச் சட்டத்திற்கு திருத்தம் வந்திருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்திருக்கக்கூடிய அவசரச் சட்டத்தில் சொல் லப்பட்டிருக்கிறது. அதிலே தெளிவாகச் சொல்கிறார்கள். மிக விளக்கமாகவே அதில் போடப்பட்டிருக்கிறது. த்ரீடிக்கேட்ஸ் என்று போடப்பட்டிருக்கிறது. experience of the past three decades has shown that when once a person gets elected........ என்று துவங்குகிறது என்று சொன்னால், ஒன்றை நான் வருத் தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை—காமராசர் பல் கலைக்கழகம் துவங்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகவில்லை. 1965-ல் தான் துவங்கப்பட்டது. 15 ஆண்டுக்காலம் தான் ஆகியிருக்கிறது. ஒரு சட்ட இலாகா இருக்கிறது. சட்ட இலாகா அதிகாரிக்குச் சம்பளம். அவர் சட்ட முன்வடிவைத் தருகிறார். இந்த சாதாரண உண்மையை கூட முப்பது வருட காலமா 15 வருட காலமா என்று தெரியாமல் இந்த சட்ட முன்வடிவை சட்ட இலாகா தயாரித்துக் கொடுக்கிறது. அதை கல்வி அமைச்சர் பார்க்கிறார். அவசர அவசரமாக ஆளுநர் கையெழுத்து போடுகிறார். நான் கேட்கிறேன். இதற்குப் பெயர் என்ன இதை கல்வியமைச்சர் பார்த்தாரா அல்லது கையெழுத்து போட்டதோடு நிறுத்தினாரா என்று கேட்க விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

இந்தத் தப்பு நடைபெற்றதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே முதலிலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, பல்கலைக்கழகத் தினுடைய நிர்வாகம் பற்றி நமக்கெலாம் தெரியும். சிண்டி கேட், செனட், அகாடமிக் கவுன்சில் பிரிவுகள் மூலமாகவும் ஆட்சிமன்றக் குழுவின் முலமாகவும், கல்வி அவையின் குழுவின் முலமாகவும் ஒரு பல்கலைக்கழக நிர்வாகம் நடைபெறுகிறது. ஆனால், இன்று ஏற்கனவே உள்ள காமராஜ்—மதுரை பல்கலை கழகச் சட்டத்திலே இந்த 3 அமைப்பிற்கும் பிரிவுகளாக இருந்தாலும், ஆட்சிமன்றக் குழுவிலே இருந்தாலும், அகாடமிக் கவுன்சில் என்று சொல்லப்படுகின்ற குழுவிலே இருந்தாலும், கல்வி அவையின் குழுவிலே இருந்தாலும் அவர்களுடைய பதவிக் காலம் 3 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகு தேர்தலிலே நிற்கலாம். அதைப்போலவே, பழையபடி அவர்கள் நியமிக்கப்





படலாம். ஆனால், இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்த சர்க்காருடைய இந்த மசோதாவிலே இனி யாரும் ஒரு டெர்முக்கு மேலும், அதாவது பதவிக் காலம் 3 ஆண்டுகள் என்று சொல்லக்கூடிய காலத்திற்கு மேல் நியமனத்தின் மூலம் பதவிக்கு வர முடியாது. அதைப்போலவே, தேர்தல் மூலமும் வர முடியாத ஒரு நிலைமையை இன்றைக்கு இதிலே ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த விதி யாருக்கு இருக்கிறது என்று கேட்டால், மதுரைப் காமராஜ் பல்கலைக்கழகத்திற்கு மட்டும்தான் இந்த விதி இருக் கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், பல்கலைக் கழகம்தான். அதற்கு இந்த விதி பொருந்துமா என்றால், பொருந்தாது. அதேபோல், சென்னைப் பல்கலைக்கழகமும் பல்கலைக்கழகம் தான். அதற்கும் இந்த விதி பொருந்தாது. பின் எதற்குப் பொருந்தும் என்று கேட்டால், மதுரை-காமராஜ் பல்கலைக்கழகத்திற்கு மட்டும்தான் பொருந்தும். நான் ஒரு நியாயத்தை அமைச்சர் அவர்களிடம் உங்கள் முலமாகக் கேட்கிறேன்.

ஏற்கெனவே அண்ணாமலைப் பல்கலைக்கழக 1928-ஆம் வருஷச் சட்டம் குறைபாடுகள் உடையதாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால், அங்கே வைஸ் சான்சலர் என்று சொல்லக்கூடிய, இணை வேந்தர் என்று சொல்லக்கூடிய பதவிக்கு கல்வி அமைச்சர் தான் இருக்கவேண்டும். அதிலே இதுபோன்ற திருத்தங்கள் எல்லாம் வரவேண்டும். அந்தத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். அதை நாங்கள் உறுதி யாகச் செய்வோம் என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இதுபோன்ற உறுப்பினர் பதவிக் காலம் இந்த அளவிற்குத்தான் இருக்கவேண்டும், அதற்கு மேல் திரும்பத் திரும்ப வரக்கூடாது என்ற நோக்கத் தோடு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்றால், அதற்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்வது எந்தவிதத்திலே நியாயம் என்பது தெரியவில்லை. மதுரைப்-காமராஜ் பல்கலை கழகம் என்ன பாவம் செய்தது? அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்ன புண்ணியம் செய்தது? ஒருவேலை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உங்களுக்கு ஏதாவது புண்ணியம் செய்திருக்கலாம் அது எனக்குத் தெரியாது. ஆனால். நான் கேட்க விரும்புவதெல் லாம் தியாகச் சுடரின் பெயரை வைத்துள்ள மதுரை-காமராஜ் பல்கலைக்கழகம் மட்டும் இரண்டாந்தர பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டுள்ளது ஏன்? அப்படி ஆக்கப்பட்டுள்ளது நியாயமா, முறையா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்நாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. மதுரை-காமராஜ் பல்கலைக்கழகத்தைப் பற்றிய மசோதாவை எதிர்த்துப் பேசுவதிலே எனக்கு ஆட் சேபணை இல்லை, ஆனால், பேசுகின்றபோது, சில உணர்வு வெளியிடுகின்றபோது, பாதுகாப்பாக பேசவேண்டும். அண்ணா

மலைப் பல்கலைக்கழகம் உங்களுக்கு ஏதாவது புண்ணியம் செய்திருக்கும் என்று சொன்னார்கள். 7 ஆண்டுக் காலம் நீங்கள் பதவியில் இருந்தீர்கள், என்ன புண்ணியத்தை நீங்கள் வாங்கிக் கட்டிக் கொண்டீர்கள்? அப்போது ஏன் மாறுதல் செய்யவில்லை? என்ன நன்மையைப் பெற்றீர்கள்? என்ன தவறுகள் நடைபெற்றிருக்கிறது என்பதைப் பற்றி தெளிவாகச் சொல்லுங்கள்,

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக மேலும் அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம், இந்த விதி சென்னைப் பல்கலைக்கழகத்திற்குப் பொருந்துமா? அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் பொருந்துமா? இந்த விதி யாருக்குப் பொருந்தும் மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்திற்கு மட்டும்தான் பொருந்தும் என்றால், நீங்கள் இந்த அவையிலே உறுதி கொடுத்தீர்கள் முதல்வர் அவர்களும் உறுதி கொடுத்தார்கள், அது என்னவாயிற்று? அதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் நான் சட்டமுன்வடிவை ஏறி முகப்படுத்தும்போது நான் பேசியதைக் கேட்டிருக்கலாம் அல்லது இந்த மன்றத்திலே இருக்கின்ற கொள்கை விளக்கத்தைப் படித் திருக்கலாம். நாங்கள் எல்லாப் பல்கலைக்கழகத்திற்கும் பொதுவான கருத்தாகச் சொல்லி, இதைக் கொண்டு வந்திருக் கிறோம். உங்கள் கையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் பற்றிய மசோதாக்களைப் பார்த்தால் விளங்கும். அதிலே எங்களுடைய உணர்வுகள் தெரியும் எங்களைக் கேட்க வேண்டிய கேள்வி, எப்போது கொண்டு வரப் போகிறீர்கள் என்பதைக் கேளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி வேறு ; அமைச்சர் அவர்களின் கேள்வி வேறு.

All Universities the State இந்த விதியைப் பற்றி காரண காரிய விளக்கத்திலே போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் இன்றைக்கு இதற்கு அவசர அவசரமாக சட்டம் கொண்டு வருகின்ற நீங்கள். ஏன் உடனடியாக இதே அவசர உணர்வோடு இந்தச் சட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் போடவில்லை இந்த அவசரத்தோடு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் போடவில்லை என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குச் சொல்லப் படுகிற காரணம் கடந்த கால அனுபவம். பல்கலைக்கழக அதிகார மன்றத் தேர்தலாக இருந்தாலும், சின்டிகேட் தேர் தலாக இருந்தாலும் அகாடமிக் கவுன்சில் தேர்தலாக இருந்



தாலும், ஒருவர் ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், திரும்பத் திரும்ப தேர்தலுக்கு நிற்கிறார். திரும்பத் திரும்ப வெற்றி பெருகிற வாய்ப்பை பெறுகிறார்: இதனால் வெஸ்டட் இன்டரஸ்ட், சுயநல எண்ணங்கள், ஆரோக்கியமற்ற சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகையால் அதைத் தடுப்பதற்காக உறுப்பினர்கள் பதவிக் காலத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். என்று அமைச்சர் அவர்கள் இங்கே கருத்துக்களை விளக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு முறை தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர்கள் மீண்டும் நிற்க விரும்புகிறார்கள் என்று சொன்னால் இதே கல்வியமைச்சர் அவர்கள் முதல் தேர்தலோடு நின்று விட்டிருக்க லாமே, இரண்டாவது முறையாக ஏன் தேர்தலுக்கு நிற்க வேண்டும் முதல் முறை அமைச்சராக இருந்தவர் இப்போதும் அமைச்சராக இருக்க விரும்புகிறார். சட்ட சபைக்கு நிற்பவர்கள் ஒரு தடவை தான் நிற்க வேண்டுமென்று சொல்லத்தயாரா? பாராளுமன்றத்தில் நிற்கிறவர்கள் ஒரு முறைதான் நிற்கலாம் என்று சொல்லத் தயாரா ஒரு டர்முக்குப் பிறகு மீண்டும் வருவார்களானால் அது வெஸ்டட் இன்டரஸ்ட் ஆகாதா தொடர்ந்து இருந்தால் வெஸ்டட் இன்டரஸ்ட் ஆகாதா? இந்த ஆட்சி தொடர்ந்து இருந்தால் வெஸ்டட் இன்டரஸ்ட் வருமா, வராதா? தொடர்ந்து இருந்தால் ஆரோக்கியமற்ற சூழ்நிலை ஏற்படும், சிக்கல் ஏற்படும் என்கிறார்கள். அப்படி யானால் ஒருதடவை முதலமைச்சராக இருந்தால் பிறகு வேண்டா மென்று முதலமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரம் எங்களுக்குத் தரப்பட்டால் அதை பற்றியும் கூட நாங்கள் யோசிப்போம்.

திரு. அ. ரகுமான்கான்.—அது அவர்கள் முடிவு செய்ய வேண்டியது.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். எக்ஸ் அபிஷியோ மெம்பர்ஸ் இருக்கிறார்கள். அது பற்றி மதுரைப் பல்கலைக் கழகத்தில் விதிகளில் சொல்லியிருக்கிறார்கள்.

Ex- officio Members: The Senate shall cons st of the follow ng persons: Chancellor, Pro-Chancellor, V ce Chancellor.

யார் எக்ஸ் அபிஷியோ மெம்பர்களாக இருக்கக்கூடியவர்கள் சான்சலர் அவருக்கு எப்படி பதவிக் காலம் குறிப்பிடப் பட்டிருக்கிறது? இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற முறை கடைப்பிடிப்பது கிடையாது. ப்ரோ சான்சலருக்குக் கடைப் பிடிப்பது கிடையாது; வைஸ் சான்சலருக்குக் கடைப்பிடிப்பது கிடையாது.

The Secretary to Government in charge of Education, Director of Higher Education; Director of Secondary Eduation; Director of Technical Education; Principals of affiliated colleges who have served as principals for not less than 3 years; Whole time University Professors in charge of a Department, Members of the Syndicate who are not members of the Senate.

இதிலே எக்ஸ்—அபிஷியோ மெம்பர்ஸ் என்று சொல்லுகிறார்களே, அவர்களுக்கெல்லாம் அவர்களுடைய பதவிக் காலம் பற்றி இந்தச் சட்டத்தில் எதைக்கொண்டு வருகிறோமோ அதைக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது அல்லவா? அரசியல் சட்டம் 14வது பிரிவு விளக்கமாகச் சொல்லுகிறது.

The States shall not deny to any person equality before the law or the equal protection of the laws within the territory of India.

சட்டத்தின் முன்னால் எல்லோரும் சரிசமம். சட்டப் பாதுகாப்பு எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும்: ஒவ்வா விடி இருக்கவேண்டுமென்று சொல்லுகிறது. ஆனால் செனட்டுக்கு மட்டும் இதுபோன்ற நிலைமையை, அகடமிக் கவுன்சிலுக்கு மட்டும் இதுபோன்ற நிலைமையை, சின்டிகேட்டுக்கு மட்டும் இதுபோன்ற நிலைமையைக் கொண்டு வந்திருப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது. அரசியல் சட்டத்திற்கு புறம்பானது, இது யாரையோ பதவியிலிருந்து இறக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு வேடிக்கை துணைத் தலைவர் அவர்களே, ஐம்பதாயிரம் ரூபாய் டொனேஷன் கொடுத்தால் ஒரு பல்கலைக் கழகத்தில் ஆயுள் மெம்பராக இருக்கலாம். மதுரைப் பல்கலைக் கழகத்தில் 50,000 ரூபாய் கொடுத்து ஆயுள் மெம்பராக இருக்கலாம் என்ற விதி இருந்தது. இந்தச் சட்டத் திருத்தத்தில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? அந்த விதியை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். அந்த விதி செல்லாது என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இந்த விதி பொருந்துமா? அங்கே பொருந்தாது அங்கே ஒரு தொகை கொடுத்தால் ஆயுள் மெம்பராக இருக்கலாம்.

[பிற்பகல் 12.10]

நான் கேள்விப்படுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆயுள் மெம்பராக இருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே ஆயுள் உறுப்பினராக இருக்கலாம், ஆனால் மதுரைப் பல்கலைக் கழகத்திலே நான் இருக்கக்கூடாதா அல்லது மற்றவர்கள் இருக்கக்கூடாதா? என்ன நியாயம் இது? மதுரைப் பல்கலைக் கழகத்திலே 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து யாரும் ஆயுள் மெம்பராக இருக்கக்கூடாது என்று சட்டத் திருத்தம் கொண்டுவருகிற கல்வியமைச்சரை நான்கேட்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆயுள் மெம்பராக முதலமைச்சர் இருக்கிறாரே அதற்கு ஏன் நீங்கள் சட்டத் திருத்தம் கொண்டுவரவில்லை. வரும் என்று சொல்லுகிறீர் களே தவிர அதிலே காலதாமதம் ஏன்? வரும் என்று சொல்



கிறீர்களே தவிர என்ன காரணம்? அது முதலமைச்சருக்கு விரோதமாகப் போய்விடக்கூடாது என்பதற்காகவா? முதலமைச்சருக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதியா? என்பதை உங்கள் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் 6வது பிரிவைப் பார்த்தால் நான் சொல்கிற அந்த வாதம் எந்த அளவுக்கு உண்மை என்பதை நீங்கள் புரிந்துக் கொள்ளலாம். அதாவது இந்த அவசரச் சட்டம் அவசரம் அவசரமாக பிறக்கப்பிக்கப்படு வதற்கு முன்பாக, இந்தச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு முன் பாக அரசினுடைய கெஜட்டிலே வெளியிடப்படுவதற்கு முன் பாக மதுரைப் பல்கலைக் கழகத்திலே செனட்டுக்கு எங்கு தேர்தல் நடந்தாலும் அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருந்தாலும் ஆக்ஷன்ஸ் அன்ட் புரசீடிங்ஸ் எதுவாக இருந்தாலும் அவையெல்லாம் செல்லாது என்று அறிவித்திருக் கிறீர்கள். அதிலே பின்னாலே உள்ள மர்மம் என்ன? துணைத் தலைவர் அவர்களே உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவரு கிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்திலே உள்ள ரிஜிஸ்திரார் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கிறார். அரசாங்க கெஜட்டிலே 6-5-81 ஆம் தேதி மதுரைப் பல்கலைக் கழக செனட்டிற்கு தேர்தல் நடத்துகிறோம், ரிஜிஸ்டர்டு கிராஜுவேட்ஸ் கான்ஸ்டிடியு வன்சி, படித்து பதிவு செய்துகொண்ட பட்டதாரிகள் மத்தியில் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், நாமினேஷன் இன்ன தேதி, வித்டிராய இன்ன தேதி, போலிங் இன்ன நாள் வாக்கு எண்ணப்படுவது இன்ன நாள் என்றெல்லாம் மிகத் தெளிவாக மதுரைப் பல்கலைக் கழக ரிஜிஸ்தரார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டதற்குப் பிறகு அந்தப் பட்டதாரிகள் தொகுதியிலே இருக்கக்கூடிய வேட்பாளர்கள் மத்தியிலே எங்கள் கட்சியைச் சேர்ந்ததிரு பழனிவேல் ராசன் 19வது நபராக இடம் பெறுகிறார். வேட்பு மனுதாக்கல் செய்கிறார், அங்கே மிகுந்த அளவுக்கு எல்லேரையும் சந்திக்கிறார்கள் நாம் எல்லாம் தேர்தலில் செலவு செய்வதைப்போல். எல்லா வேட் பாளர்களும் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிறார்கள், சிரமங் களை ஏற்றுக்கொள்கிறார்கள், தேர்தல் நடக்கிறது. தேர்தல் தேர்தல் நடந்து முடிந்துவிட்ட பிறகு வோட்டுகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. வோட்டுகள் எண்ணி அறிவிக்கப்படுதற்கு முன்பு நள்ளிரவில் அகால நேரத்தில் அரசாங்கத்திடமிருந்து அறிவிப்பு வருகிறது. வோட்டுக்களை எண்ணாதே, முடிவைச் சொல்லாதே என்று வருகிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டால் இந்த அவசரச் சட்டம் வந்த நாளிலிருந்து அந்த செனட் தேர்தல் செல்லாது என்று நீங்கள் அறிவிக்கிறீர்களே நான் கேட்கிறேன், சர்க்கார் ஒரு பாலிசி டெஸிஷன், ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது, சர்க் காருடைய கொள்கை அடிப்படையிலே நாங்கள் ஒரு முடிவை, எடுத்திருக்கிறோம் என்று சொன்னால், நான் கேட்கிறேன் இந்த ஞானம் அன்றைக்கு ஏன் உங்களுக்கு வரவில்லை தேர்தல் அறிவிக்கும்போதே ஏன் வரவில்லை? கெஜட்டில் அறிவிப்ப தற்கு முன் வரவில்லை நாமினேஷன் போது ஏன் வரவில்லை,

போலிங் போது ஏன் வரவில்லை, வோட்டு எண்ணப்படுகிற சூழ்நிலையில்முடிவை அறிவிக்காதே என்று அவசரம் அவசரமாக நள்ளிரவிலே வரலாமா? ஆகவே இதுஉள்நோக்கம் நிரம்பியது, என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன். இது சட்டத் திருத்த மசோதா அல்ல, பழனிவேல்ராசன் பதவியைப் பறிக்கும் மசோதா என்பதைத் தெளிவாக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்செந்தூரிலே நம்முடைய அமைச்சர் பேசிய பேச்சு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. அதிலே அமைச்சர் சொல்லியிருக்கிறார். இந்த மசோதா தனிப்பட்ட யாருக்கும் விரோதமாக நாங்கள் கொண்டுவரவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்லுகிறேன், பழனிவேல்ராசன் மதுரைப் பல்கலைக் கழகத்திலே அரசியல் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த சர்க்காருடைய இரட்டை நிலையைத் தெரிவிககிறேன். ஒரு பக்கத்திலே தஞ்சாவூர் தட்டு, இந்த சர்க்கார் அவருக்குப் பாராட்டிக் கொடுத்திருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டை இந்தச் சர்க்கார் நடத்தியது. அந்த தமிழ்மாநாடு அவசியம் என்று சொன்னாலும் சில காரணங்களினால் நாங்கள் அதிலே கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில் மதுரைப் பல்கலைக் கழகத்திலே ஏற்கெனவே நிர்வாகத்திலே அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் அவருக்கு மட்டும் நாங்கள் விதிவிலக்கு வழங்கினோம். காரணம் அந்த மண்டபத்திற்குள்ளே அரசியல் வரக்கூடாது.

பல்கலைக் கழக மண்டபத்திற்குள்ளே அரசியல் அடிப்படையிலே பிரச்னைகளை அணுகக்கூடாது; பல்கலைக் கழக எல்லைக்குள்ளே அரசியல் இருக்கக்கூடாது என்பதால்தான் பழனிவேல்ராஜன் அவர்களுக்கு நாங்கள் விதிவிலக்கு வழங்கினோம். பல்கலைக் கழக நிர்வாகத்தில் இருப்பதால், உலகத் தமிழ் மாநாட்டில் பல்கலைக் கழகத்திற்கும் பங்கு இருந்த காரணத்தால் கொடுக்கப்பட்டது அந்தப்பாராட்டு. நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இந்தச் சர்க்காரின் சார்பாக நாவலர் அவர்கள் கப்பட கடிதம் எழுதியிருக்கிறார்கள். தஞ்சாவூர்த் தட்டு கொடுத்திருக்கிறார்கள். ஒரு புறத்திலே தஞ்சாவூர் தட்டைக் கொடுத்து, உலகத் தமிழ் மாநாடு நடத்த சேவை செய்தீர்கள் என்று சொல்லுகிறபொழுது அங்கே அரசியல் இல்லை நாங்கள் வரவில்லை, அவர் வந்தார். அதைப் பாராட்டி தஞ்சாவூர் தட்டு தருகிறார்கள். இன்னொரு புறத்திலே திருச்செந்தூரில் அமைச்சரவர்கள் வெளிப்படையாகச் சொல்கிறார்கள்,

Mr. Palanivel Rajan is engaging in politics in Madurai university என்று அங்கே தெளிவாகச் சொல்கிறார்கள். நான் கேட்கிறேன் இது அரசியல் உள்நோக்கம் இல்லையா?

சபையின் துணைத் தலைவரவர்களே, இன்றைக்குக் கடைசியாக உங்கள் மூலம் இந்த மன்றத்தில் நான் சொல்ல விரும்புவதெல்லாம், எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி



அவர்கள் அன்றைக்கு இந்தச் சபையிலே பேசுகின்றபொழுது மதுவகைகள் வழங்குவதில் தவறு நடந்திருக்கிறது என்று சொன்னபொழுது நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, எனவே, சப்ஜுடீஸ் ஆகிவிடும் என்பதால் அவர் பேசக் கூடாது என்று சொன்னீர்கள்.

அதைப்போலவே, இப்பொழுதுகூட நம்முடைய அமைச்சர் மாண்புமிகு ஹண்டே அவர்களின் இலாக்காவில் தவறுகள் நடந்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டைச் சொல்லியபொழுது இதிலே பேசக் கூடாது, வழக்கு இருக்கிறது, சப்ஜுடீஸ் ஆகிவிடும் என்று சொன்னீர்கள். ஆகவே, இப்பொழுது நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், இதில் பாதிக்கப்பட்ட திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் பதவி சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்திலே அஃபிடவிட் பைல் செய்திருக்கிறார்கள். அதில் வரும் விஷயங்கள் அவருடைய பதவிக் காலத்தைப் பற்றியது, சிண்டிகேட், செனட், அகாடமிக் கவுன்சில் பதவிக் காலத்தைப் பற்றியது. இன்றைக்கு வழக்கு தொடரப்பட்டு ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் கௌண்டைக் கூட—பதிலைக்கூட பதிவு செய்யவில்லை; இன்னும் ஸ்டே வெகேட் செய்யப்படவில்லை; இடைக்காலத் தடை நீக்கப்படவில்லை. ஆகவே, இதே பிரச்னையைப் பற்றி இங்கே பேசக் கூடாது; இந்த மசோதாவை இங்கே பிரேபிப்பதற்கு இந்த அரசுக்கு, இந்தச் சபைக்கு அதிகாரம் கிடையாது என்று சொல்லி, இதை ஒழுங்குப் பிரச்னையாகச் சொல்லி, இதற்குத் தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—அதைப்பற்றி இங்கே விவாதிப்பதற்கான முழு அதிகாரம் இருக்கிறது. நாம் செய்து கொண்டிருப்பது லெஜிஸ்லேட்டிவ் பிசினஸ். இதைப்பற்றிப் படித்து விடுக்றேன்.

"Rule of sub-judice cannot stand in the way of legislation"

அப்படிப் பார்க்கப் போனால் ஒவ்வொரு ஆர்டினன்ஸூம் நீதி மன்றத்திலே நிறுத்தப்பட்டால் நாம் இங்கே எந்தவொரு சட்டத்தையும் கொண்டு வர முடியாது. எனவே. இதுபற்றி விவாதிக்க இந்த அவைக்கு முழு அதிகாரம் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, உங்கள் தீர்ப்புக்கு எதிராக நான் சொல்லவில்லை. எதிர்காலத்திலே இந்தப் பிரச்னை மிக முக்கியமானது என்பதால் உங்கள் தீர்ப்பு இறுதியில் உதவி செய்ய இருக்கிறது. அக்காடமிக் இன்ட்ரஸ்டாக நான் சொல்ல விரும்புகிறேன். சட்டப் புத்தகங்களில் விதிகள் தெளிவாக இருக்கின்றன.

"if any matter pending before the court or tribunal or quasi-judiciary" என்று போடப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திலேயோ, அல்லது quasi-judiciary அல்லது/ட்ரிப்யூனலிலோ

'any matter'

என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். எந்த விஷயமாவது வாதத்திற்கு உரியதாக இருந்தால் அந்தப் பிரச்னையைப் பற்றி இந்தச் சபையிலே டிஸ்கஷன் இருக்கக் கூடாது என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "legislatures being supreme and soverein in the matter of makin law, there is no bar in their work in the field of legislation." நம்மை எந்த அதிகாரமும் கட்டுப்படுத்தவே முடியாது. (குறுக்கீடு) Our legislatiue business is different from the subject matter before the court.

நாம் செய்யும் பிசினஸ் லெஜிஸ்லேடிவ் பிசினஸ் இதற்குத் தடங்கலாகக் குறுக்கே யாரும் இருக்க முடியாது. இந்த அவைக்கு முழுக்க அதிகாரம் உண்டு. எந்த சட்ட முன் வடிவையும், பொறுத்தவரை. யார் ஸ்டே வாங்கினாலும் அதற்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் கிடையாது.

[பிற்பகல் 12-20]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளக்கத்தை சொல்லி முடித்து விடுகிறேன். இது சுப்ரீம் என்பதிலே நமக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் அந்த லெஜிஸ்லேச்சருடைய சுப்ரீம் பவர், ஒரு வழக்கு கோர்ட்டிலே இருக்கும் போது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் தான் தீர்ப்பு தந்து விட்டேன். என் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நீங்கள் உட்கார வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: ஏற்கனவே நீங்கள் கொடுத்த தீர்ப்புக்கு எதிராக இது இருக்கிறது என்ற காரணத்தால் எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்து, எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் படித்துக் காட்டியபடி விதிமுறை தெளிவாக இருக்கிறது இப்பொழுது உயர்நீதி மன்றத்திலே தெரிவித்திருப்பது அவசரச் சட்டத்திற்கு ஒரு ஸ்டே வாங்குகிற அளவுக்கு இருக்கிறது. இங்கே ஆக்ட் பாஸ் பண்ணுகிற அளவுக்கு நாம் கொண்டு வருகிறோம். அவசரச் சட்டத்திற்கு ஸ்டே கொடுத்திருக்கிற அளவோடு அது நிற்கிறதே தவிர, எந்த நோக்கத்திற்காக அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடாது என்று ஸ்டே வழங்கப்படுகிறது. இங்கே நாம் கொண்டு வருவது தனிப்பட்ட யாரையும் குறிப்பிட்டல்ல. இங்கே ஆக்ட் கொண்டு வருகிறோம். அந்த ஆக்ட்டைக் கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பதுதான் பிரச்னை. உரிமை இருக்கிறது என்பதற்கு லோக் சபாவிலே நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. ஆகவே, சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறோமே தவிர, அந்தச் சட்டத்திலே எந்த தனிப்பட்ட ஆள் பெயரோ, விவகாரமோ இடம் பெறவில்லை. இந்தச் சட்டத்தை இந்த மன்றம் ஏற்றுக்கொள்கிறதா, இல்லையா? மாறுபட்ட கருத்துக்கள் இருக்கிறதா, இல்லையா மாறுபட்ட கருத்துக்கள் இருந்தால், மன்ற உறுப்பினர்கள் அவற்றை எடுத்துச் சொல்ல உரிமை உண்டே தவிர, அந்தச் சட்டத்தைப் பற்றி விவாதிக்க கூடாது என்று சொல்வதற்கில்லை. அது வேறு, இது வேறு.

திரு. உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, சட்டம் இயற்றுவதைப் பற்றிய முடிவுக்கு இந்தச் சபைக்குத்தான் முழு அதிகாரம்—சுப்ரீம் பவர்ஸ்—என்று சொன்னீர்கள். மிக்க நன்றி. தனிப்பட்டவர் கோர்ட்டிலே ஒரு வழக்கு தொடர்ந்திருந்தால், அது சம்பந்தமாக பேசக்கூடாது என்று சொல்லும்போது, அந்த சுப்ரீமஸி, சுப்ரீம் பவர் உண்டா, இல்லையா என்பதற்கு தயவுசெய்து விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேசக்கூடாது என்பது சட்டசபையைச் சேர்ந்த நாமே நமக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிற கட்டுப்பாடு. கட்டுப்பாடு என்றால், கோர்ட்டிலே இருக்கிற வழக்கைப் பற்றி நாம் பேசுவதில்லையென்ற ஒரு மரபை வைத்திருக்கிறோம். அது நமக்குத் தரப்பட்டிருக்கிற உரிமை. நமக்குச் சட்டம் செய்யும் உரிமை இருக்கிறது. ஆகவே, சட்டம் செய்யப்படுமானால், அந்த வழக்குக்கூட சுலபமாக முடிந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: the rule 'sub-judice' does not ordinarily apply to the legislation. நாம் இப்பொழுது லெஜிஸ்லேஷன் செய்து கொண்டிருக்கிறோம், அரசு ஆர்டினன்ஸ் கொண்டு வந்து, வெளியிலே யாராவது நீதி மன்றத்திலே ஸ்டே வாங்கிவிட்டார்கள் என்றால், 234 உறுப் பினர்களுடைய அலுவல்கள், அவையினுடைய அலுவல்கள் பாதிக்கப்படும். அது தனிப்பட்ட விவகாரங்களுக்காகக் கொண்டு வருவது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதோடு மட்டுமல்ல, அவசரச் சட்ட மசோதாவே கூட 6 வாரத்திற்குள் அந்தச் சட்டம் நிறைவேற்றப் படாவிட்டால் அது தானே இறந்து விடுகிறது என்பது அரசியல் சட்ட விதி. ஆகையினாலே அவசரச் சட்டம் அரசாங்கம் பிறப்பிக்கக்கூடிய ஒரு சட்டம், தடை செய்யப்படுகிறது. சட்ட சபையும் கூடுகிறது. 6 வாரத்திற்குள் நாம் ஒன்றும் செய்ய வில்லையென்றால், நீதிமன்றத்தின் முன்னாலே கேசே கிடையாது. ஏனென்றால், அவசரச் சட்டமே செத்துப் போகிறது. ஆகவே, அது ஒரு பக்கத் தீர்ப்பாக அமைந்து விடுகிறது. ஆகவே, அந்த அவசரச் சட்டத்திற்கு உயிரே கூட வேண்டு மானால், நாம் சட்டம் இயற்றினால்தான் முடியும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கும் ஏற்கெனவே தனிப்பட்ட வகையிலே ஹைகோர்ட்டிலே யாராவது ஒரு வழக்கு தொடர்வார் களானால் அதைப்பற்றி பேசுவதும் ஒன்றாக இருக்காது. அந்த விஷயத்தைப் பொறுத்த வரையிலே இங்கே பேசுவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி பேசக் கூடாது என்று நாம்தான் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். ஏனென்றால் உறுப்பினர் குற்றச்சாட்டு சுமத்துகிறார், அது ஆதாரமற்றது என்று அரசாங்கத்தின் சாரபிலே சொல்ல வேண்டி யிருக்கிறது, சொல்வதற்கு நமக்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி நாம் சொல்கிற நேரத்திலே வழக்கிலே என்ன, என்ன விஷயங்கள் இருக் கின்றனவோ, அந்த விஷயங்களையெல்லாம் இங்கே விவாதிக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன், மாண்புகு உறுப்பினர் ரகுமான்கான் ஒரு குற்றச்சாட்டை சுமத்தினார்கள். இல்லை யென்று சொல்ல என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. அதைத் தான் நான் சொன்னேன். நாம் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. வாய்ப்பு தருவார்களானால் சொல்லிவிடலாம். ஆனால் நாம் சொன்னால், கோர்ட்டிலே இருக்கிற கேசை அது பாதிக்கும் என்பதற்காக நாமே ஒரு கட்டுப்பாட்டை வருத்துக் கொண்டிருக் கிறோமே தவிர, ஒரு தரப்பாகக் குற்றச்சாட்டு சுமத்தி, அரசாங்கத்தின் சார்பாகப் பதில் சொல்ல வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, அது பத்திரிகையிலே வரும் 'குற்றச்சாட்டு சுமத்தினார்கள்' என்று.



அதை இல்லையென்று மறுப்பதற்கு எல்லா ஆதாரங்களும் நம்மிடம் இருக்கின்றன. ஆகவே நான் சொன்னது கேஸ் முடிந்ததற்குப் பிறகு முழுமையாக அந்த விவாதங்களை வைத்துக் கொள்ளலாம். இதைத்தான் ரகுமான்கானிடம் சொன்னேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: சட்டப்பேரவை விதி 90 லே, i ''நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருள்களின் மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது. ii உறுப்பினர் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கக் கூடாது'' என்று தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த ஹவுசினுடைய சுப்பிரமசியைக் கொஸ்டின் பண்ணுகிற மாதிரி இருக்கிறது. கன்வென்ஷன் என்று சொன்னால் எல்லோரும் ஏறறுக் கொள்ளலாம். ஆனால் அதை சப்ஜுடிஸ் என்று சொல்லி நம்முடைய நடவடிக்கையை சட்டத்தின் மூலமாக கட்டுப்படுத்துவதற்கு நாம் உள்ளாக வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது, முடியாது. 'The rule of sub-judice does not ordinarily apply to legislation' லெஜிஸ்லேடிவ் பிசினசில் இண்டர்பியர் பண்ணுவதற்கு எந்த அமைப்புக்கும் அதிகாரம் கிடையாது. இந்த அமைப்புதான் சுப்ரீம்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலே பேரவை, ஆட்சிக் குழு, கல்வி அவை ஆகியவை எல்லாவற்றிலும் 6 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்றநிலை ஏற்பட வேண்டும். 50 ஆயிரம் ரூபாய் செலுத்துகின்றவர்கள் ஆயுட்காலம் முழுவதும் உறுப்பினராக இருக்கலாம் என்பதை நீக்கி இருப்பதையும் மிகவும் வரவேற்கிறேன்.

ஒன்றை மட்டும் கூற விரும்புவது, இந்த மாற்றமானது சமுதாய நோக்கத்தோடும், ஜனநாயக முறையிலே இயங்க. வழிவகை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. உயர் கல்வியில் பங்குக்கொள்ளக் கூடியவர்கள், முக்கியமாக ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள். ஆனால் இந்த அங்கத்தினர்களுக்கு எந்த விதமான பிரதிநிதித்துவமும் கிடை யாது. ஆகவே, ஜனநாயக ரீதியாக இந்த அமைப்பு இருக்கிறதா என்பதே பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது. மற்றப் பல்கலைக்கழகங்களிலே, குறிப்பாக மேற்கு வங்காளத்திலே உள்ள சட்டத்தில் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே

''Keeping in view the recommendations of the Planning Committee, the Bill has been drafted. Following the general pattern of other university Bills, this Bill provides a democratic constitution of the Court and the Executive Council with the elected representatives of students non-teaching staff and teachers. The cross-section of the society, that is, representatives of the peasants, registered trade unions, primary and

secondry school teachers has also been included in the university bodies as members. Instead of Academic Council Faculty Councils for Post-graduate studies and Councils for Under-graduate Studies have been formed and delegated with suitable powers and functions. Along with traditional subjects, the university will offer specialised courses in non-traditional subjects, such as, tribal languages, rural administration wild life management, marine resources development, etc. There is also a provision for organising honours colleges under the direct supervision of the university. In order to impose financial discipline the Bill also provides that prior approval of the State Government should be required the annual budget of the university."

என்றுஇருக்கிறது. மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.ஆனால் இப்போது இங்கே வைக்கப்பட்டிருக்கக் கூடிய திருத்தங்கள் எல்லாம் அந்த அடிப்படையில் இருக்கிறதா என்பது தான் நான் கேட்கக் கூடிய கேள்வியாகும்.

பொதுவாக இந்தப் பல்கலைக் கழகங்களில் செனட்டைப் பொறுத்த வரையில் மொத்தம் 55 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் எக்ஸ் அபிசியோ என்று சொல்லக் கூடியவர்கள் 10 பேர்கள் மட்டும்தான். நாமினேஷன் 8 பேர்கள் மட்டும்தான். மீதி 37 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பல்வேறு அங்கங்களிலே இருந்து வருகின்றனர். அதேபோல சிண்டிகேட்டைப் பொறுத்தவரையில் எக்ஸ் அபிசியா 6, மொத்தம் உள்ள உறுப்பினர்கள் 27, அதிலே நாமினேஷன் 3 மட்டும்தான். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 18 பேர்கள்.

[பிற்பகல் 12-30]

ஆகவே இது ஒரு ஜனநாயக பூர்வமாக அமைந்திருக்கிறது, ஆனால் அங்கே இருக்கக் கூடிய 'எக்ஸ்—அபிசியோவை' பொறுத்த வரை 3 ஆண்டுகள் பணியாற்றக் கூடிய கல்லூரி முதல்வர்கள் 'எக்ஸ்—அபிசியோ' என்ற முறையிலே வந்து விடுகிறார்கள் 85 சதவீதத்தை இப்படிப்பட்ட அமைப்புகளிலே இவர்களே ஆக்கிரமித்து கொள்கிறார்கள். ஆகவே அங்கே ஜனநாயகமே கிடையாது. பழிவாங்கும் நோக்கம் மேலோங்கி வருகிறது. இதை கட்டுப் படுத்துகிற முறையிலே இதில் செய்ய வேண்டியது அவசியம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று, பல்கலைக் கழக அமைப்புகளில் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பெரும்பான்மையானவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களை பாட சம்பந்தமாக கலந்து பேசி முடிவெடுக்க, ஆசிரியர்கள் மாணவர்கள் பிரதிநிதிகள் கொண்ட 'டிபார்ட்மென்ட் கவுன்சில்' ஒவ்வொரு கல்லூரியிலும் அமைக்க வேண்டும். கல்லூரி அவை தேர்ந்தெடுக்கப்பட



வேண்டும். காலேஜ் கமிட்டி அங்கே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பதவி காரணமாக கல்லூரி முதல்வர்கள் பல்கலை கழக அமைப்புகளிலே உறுப்பினர்களாக ஆவது தவிர்க்கப்பட வேண்டும். கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள் அலுவலர்கள், பட்டதாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகியவர்கள் அங்கம் வகிக்கிற அளவில் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படவேண்டியது அவசியம். பல்கலை கழகத்திலே 'ஸ்டூடண்ட்ஸ் கவுன்சில்' அமைக்க வேண்டியது மிக மிக அவசியம்.

ஆகவே இந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தான் ஜனநாயக ரீதியாக அந்த அமைப்புகளை அமைக்க முடியுமே தவிர நாமினேஷன் மூலமாக எக்ஸ் அபிஷியோ மூலமாக ஏற்படுத்துவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போன்று இன்றைக்கு கல்லூரிகளிலே அல்லது பள்ளிகளிலே இருக்கிற நிர்வாகிகள் ஜாதி, மத அடிப்படையிலே செயல்படுவதை நாம் உணர்கிறோம். அந்தந்த நிர்வாகங்கள் தாங்கள் செய்யக்கூடிய தவறுகளை மூடிமறைப்பதற்காக ஜாதி உணர்வுகளை தூண்டிவிடுகிற பரிதாப நிலையை பார்க்கிறோம்.

அதோடு 'அட்டானமஸ் காலேஜ்' என்று சொல்லக்கூடிய பல்வேறு அமைப்புகளிலே செய்யக் கூடிய பண மோசடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. குறிப்பாக அவினாசிலிங்கம் மன இயல் கல்லூரியைப் பொறுத்தவரை 'குப்புத்தா' என்ற ஒரு லெக்சரர் பதவி உயர்வு பெறுகிறார். ஒரே நேரத்தில் இரண்டு பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. யூ.ஜி.சி. மற்றும் அரசினுடைய மானியம் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு அந்த பணத்தை மோசடி செய்கிற முறையிலே நடந்திருக்கிறது.

7-7-77-ல் டெமான்ஸ்ட்ரேட்டர் இன் நியூட்ரிஷன் என்ற பதவி வருகிறது. அதற்கு பிறகு 15-3-79-ல் அதே நபருக்கு லெக்சரர் இன் புட் அண்ட் நியூட்ரிஷன் டிபார்ட்மென்ட் என்று என்.சி.ஆர் இ.டி.யிலே அமர்த்தி விடுகிறார்கள். 15-3-79-லே அமர்த்தப்படுகிற அந்த நபர் 1-7-77-லேயிருந்து 'ரெட்ராஸ்பெக்டிவ்' என்று சொல்லப்படுகிறது. இடைக் காலத்திலே இருக்கிற சம்பளம் எல்லாம் மோசடி செய்யப்படுவதாக சில அதிகாரப்பூர்வமான தஸ்தாவேஜுக்கள் என்னிடம் இருக்கின்றன.

அதேபோன்று கல்லூரி தேர்வுகள். தேர்வுகள் என்பதே பெரும் மோசடியாக இருக்கின்றன. நேற்றைய முன் தினம் பத்திரிக்கையிலே வந்திருக்கிறதை பார்த்திருக்கிறோம். பாட்னா யூனிவர்சிட்டியில் அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு, அல்லது துறை தலைவர்களுக்கு அவர்களுடைய குழந்தைகளுக்கு 'பர்ஸ்ட் கிளாஸ்' கொடுக்கப்பட்டிருக்கிற தேர்வு மோசடிகளை பார்த்திருக்கிறோம்.

இந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு செயின்ட் ஜோசப் கல்லூரியில் தமிழ் பேராசிரியர் அவர்களுடைய மகன், ஏற்கெனவே எம்.ஏ. வகுப்பில் இருக்கிறான். அப்படியிருந்தும் விடைத்தாளை திருத்தக் கொடுத்து, அவருடைய மகனுக்கு 'முதல் வகுப்பு' மார்க் போடப்பட்டிருப்பதை நான் கூற விரும்புகிறேன்.

அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரியைப் பொறுத்தவரை பேராசிரியர் ஒருவர் விடைத்தாளில் மதிப்பெண்ணை திருத்து வதற்கு, எழுத்துப் பூர்வமாக உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. கொங்குநாடு கலை கல்லூரியைப் பொறுத்தவரை முதல்வர் அவர்கள் மாணவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு காப்பி அடிக்கச் சொல்லியிருப்பதாக தகவல் இருக்கிறது. ஆகவே பாட்னா யூனிவர்சிடி கதை இங்கே தொடர்ந்து விட வேண்டாம் அதை அரசு உடனடியாக கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு பல்வேறு துறைகளிலே கல்லூரி மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை. வித்தியா கலைக் கல்லூரியில், கோயம் புத்தூரில் இன்றைக்கு பி.காம். வகுப்பிற்கு அதிக கிராக்கி இருக்கிறது. அப்படி இருந்தாலும் 81-ம் ஆண்டிலே பி.காம். வகுப்பிலே மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. 80-ம் ஆண்டிலே எம்.எஸ்ஸி. பிஸிக்ஸ். கணிதம் இப்படிப்பட்ட வகுப்புகள் மூடப்படுவதாக ஏற்பாடு இருந்தது. அரசு தலையிட்டு அது இப்போது தவிர்க்கப்பட்டிருக்கிறது.

அவினாசிலிங்கம் கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் பல இடங்களில் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. யூ.ஜி.சி. கிராண்ட்ஸ் வாங்கப்படுகிறது. அரசு மானியம் வாங்கப் படுகிறது. அப்படியிருந்தாலும், மாணவர்கள் சேர்க்கப்படாமல் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆனால் அதேநேரத்தில் ரெகுலர் காலேஜ்களில் அதிகமாக மாணவர்களைச் சேர்க்காமல் இருக்கிறார்கள்; மாலை நேரக் கல்லூரிகளில் அதிகமாக மாணவர்களைச் சேர்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால் மாலை நேரக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட கணக்கில் ஆடிட் இல்லையென்று சொல்லப் படுகிறது. ஆடிட் இல்லாத காரணத்தால் மாலைக் கல்லூரி களில் அதிகமாக மாணவர்களைச் சேர்த்து, அந்தப் பணத்தை மோசடி செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஃபீஸ் மோசடி செய்வதற்காகவே மாலை நேரக் கல்லூரி அதிகமாக ஆரம்பிக்க படுவதாகவும் சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசு தலையிடவேண்டும்; தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அது மட்டுமல்ல. இப்படி மாலை நேரக் கல்லூரிகளில் அதிகமாக மாணவர்களைச் சேர்க்கின்ற காரணத்தால் பல ஆசிரியர்கள் வேலை இழக்கின்ற சூழ்நிலையும் இருக்கிறது. ஒரு கல்லூரியில் வேலை இல்லை என்றால் இன்னொரு கல்லூரிக்கு அந்த ஆசிரியர் அனுப்பப்பட்டு, வேலை கொடுக்கப் படும் என்று நீங்கள் சொல்லலாம். அது எவ்வளவு காலத்திற்கு? 12 மாதங்களுக்குக் கொடுப்பீர்கள், அதற்குப் பின்னால் அவர் வெளியே போகவேண்டியதுதான்.

பி.யு.சி. அபாலிஷன் செய்யப்பட்ட காலத்தில் 600 ஆசிரியர்கள் தான் வேலையில்லாமல் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலை யில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இது ஒரு பூதாகாரமான சூழ்நிலையை உருவாக்கும். ஆகவே, அரசு உடனடியாக இதிலே தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னாட்சி அதிகாரம் என்ற முறையிலே அவினாசிலிங்கம் ஹோம்சயின்ஸ் காலேஜில் மிகவும் அக்கிரமமான காரியங்கள் நடைபெறுகின்றன. தஸ்தாவேஜ்கள் என்ன சொல்லுகின்றன என்றால் சில 'அரியர்ஸை' அனாமத்து ரசீதுபோட்டு வாங்கு கிறார்கள் என்று சொல்லுகின்றன. அதற்கு போட்டோ ஸ்டெட் காப்பி கூட இருக்கிறது. பெண் ஆசிரியர்கள் கோடை விடுமுறையில் மட்டும்தான் கருவுற வேண்டும், மகப்பேறு செய்ய வேண்டும். அதற்கு இடையிலே கருவுற்றால் கரு கலைக்கப்படும் என்ற நிலை இருக்கிறது. ஒரு பெண் ஆசிரியையை ஓடவிட்டு கருவை கலைத்திருக்கிறார்கள். அவ்வளவு கொடூரமான நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. அதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் ஜனநாயக முறையில் எல்லா பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் அனைத்துப் பிரிவினரும் அங்கம் வகிக்கின்ற முறையில் தேர்தல்கள் நடத்தப்படுவது மிக மிக அவசியம். அதையும் அரசு பரிவோடு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர் களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக் கின்ற 1955 ஆம் ஆண்டு மதுரை காமராஜ் பல்கலைக்கழக சட்ட மசோதாவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இந்த மசோத வரவேற்கத்தக்க முறையிலே இருந்தாலும் கூட இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிற கால நெருக்கடியைப் பார்க்கும்போது என்னைப்போன்றவர்கள் இதில் உள்நோக்கம் இருக்கிறதோ என்று மற்றவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்கு இடம் அளிப்பதாகத்தான் இருக்கிறது என்று எண்ணத்தோன்றுகிறது.

இன்றைக்கு மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய குழுவில் இரண்டுமுறைகளுக்குமேல் எந்த ஒரு நபரும் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்ற சட்டத் திருத்த மசோதா வானது கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கிற மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் இப்போது உருவாகக்கூடிய பாரதியார் பல்கலைக் கழகத்திற்கும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம்.

தமிழ்நாட்டில் இன்றைக்கு பல்கலைக் கழகங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கொந்தளிப்பான நிலைமையைப் போக்க அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இத்தகைய மசோதா கொண்டுவரப்பட இது ஆதாரமாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த மசோதா வந்திருக்கிற இந்த நெருக்கடியான நேரத்தில், இதைப்போன்றதொரு நெருக்கடி நிலை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உருவாகிய நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்களும் பொதுமக்களும் இப்படிப்பட்ட ஒரு திருத்த மசோதாவைக் கொண்டுவாருங்கள் என்று கேட்டபோது அன்றைக்கு தமிழக அரசு முன்வந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முன்னோடியாக இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருந்தால் வரவேற்கத் தக்கதாக இருந்திருக்கும். ஆனால் அப்படி எல்லாம் செய்யாமல் இன்றைக்கு மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் பெயரும் கூறப்பட்டு, வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, வாக்குகள் எண்ணி அறிவிக்கக்கூடிய நேரத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது ஜனநாயக விரோதமானது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இப்படி அள்ளித்தெளித்த கோலத்தில் ஒரு அவசர சட்டத்தைக் கொண்டுவந்ததன் மூலம் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் இன்றைக்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் எப்படிப்பட்ட இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.40)

பொதுவாக அங்கே இருக்கக்கூடிய சிண்டிகேட் மாதம் ஒரு முறை கூட வேண்டும். கடந்த இரண்டு மாதங்களாக அந்த சிண்டிகேட் சபை கூட முடியவில்லை.

அதுமட்டுமல்லாமல் பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய சிண்டிகேட் சபை கூடாததன் மூலமாக அங்கே இருக்கக்கூடிய ஒழுங்கு நடவடிக்கைக் குழு, கண்காணிப்புக் குழு, நிர்வாகக் குழு, கல்வித்துறைக் குழு, ஆராய்ச்சி பற்றிய குழு போன்ற குழுக்கள் எல்லாம் கூட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.



மேலும் அங்கே இருக்கக்கூடிய சிண்டிகேட் மெம்பர்களின் பதவிக் காலம் வருகிற செப்டம்பர் இறுதி வரை இருக்கலாம் என்று 3 பேர் சொன்னதற்குப் பிறகும் சிண்டிகேட் கூடவில்லை என்று சொன்னால் அங்கே நிர்வாகம் எப்படி இருக்கின்றன என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

அடுத்து 1981-ம் ஆண்டு நடைபெற்ற புகுமுக வகுப்பிலே 4,000 மாணவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். இந்த மாணவர்கள் எல்லாம் வேறு படிப்பிற்குச் செல்லவேண்டும் என்றால் அல்லது வேறு பணிகளுக்கு செல்லவேண்டும் என்றால் அவர்களுக்கு இன்னும் சான்றிதழ் வழங்கப்படாத நிலைமை இருக்கின்றது. அவர்களுக்கு சான்றிதழ் வழங்க வேண்டிய குழு கூடாத நிலைமையில் இருப்பதன் காரணத்தால் அந்த 4,000 மாணவர்களும் இன்றைக்கு எந்தவிதமான முடிவும் எடுக்க முடியாத நிலைமை இருக்கின்றது.

பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய பட்ட மேற்படிப்பாக இருந்தாலும் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட இளங் கலையிலே இருக்கக்கூடிய பட்ட மேற்படிப்பாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் சான்றிதழ் தருகின்ற உப குழு கூடாத காரணத்தால் பட்டமேற்படிப்பு படிக்கக்கூடிய மாணவர்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கின்றது.

அடுத்து நடந்து முடிந்த தேர்தலிலே தவறுகளைச் செய்ததாக சில மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். அந்த மாணவர்கள் பற்றி எல்லாம் பரிசீலனை செய்து அப்போதைக்கப்போது கல்லூரிகளின் நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டிய அந்த ஒழுங்கு நடவடிக்கைக் குழுவும் இன்றைக்குக் கூடாத காரணத்தால் அந்த மாணவர்களின் நிலைமையும் இன்றைக்கு பரிதாபமாக இருக்கின்றது.

இப்படிப்பட்ட நிலைமையிலே சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

சக பல்கலைக் கழகங்களிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவைகள் எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களுக்கு மட்டும் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாத காரணத்தால் அவர்கள் போராடக்கூடிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஏன் நாங்கள் சொல்கிறோம் என்றால், இந்தச் சட்டத்தை வரவேற்கிற நேரத்தில், காலத்தே இந்த சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கவேண்டும் என்பதுதான். பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய உயர்ந்த பதவியிலே இருக்கக்கூடிய ரிஜீஸ்ட்ரார் அதாவது தாளாளர் அவர்களுடைய பொறுப்பு காலாவதி ஆகக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருகின்ற இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற குறைந்த பட்ச ஜனநாயகத்தை இந்தச் சட்டத்தின் மூலமாக முழுமையான ஜனநாயகமாகக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக முன்வரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே. 1965ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே ஒருசில கருத்துக்களைச் சுருக்கமாக கூற விரும்புகிறேன். முதலாவதாக இந்தச் சட்ட முன்வடிவு முழுமையாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளபடியே இரண்டு பதவிக் காலத்திற்கு மேல் பதவியிலே தொடர்ந்து இருக்கக்கூடாது என்ற எண்ணம் இருந்திருக்குமேயானால் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்லாது தமிழகத்தில் இருக்கின்ற ஏனைய பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக இந்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கலாம்.

ஆனால் மதுரை–காமராசர் பல்கலைக் கழகத்திற்கு இது மாதிரி ஒரு சட்டம் கொண்டு வர வேண்டுமானால், அதற்கு முன்னதாக யோசித்து பரிசீலனை செய்து, அதற்குத் தேவையான போதுமான நேரத்தை எடுத்துக் கொண்டு, கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் ஜனநாயகத்திற்கு புறம்பான வழியிலே செனட் தேர்தலுக்காக தேதி நிர்ணயிக்கப்பெற்று, வாக்காளர்கள் போட்டியிடுவதற்கான மனுக்களை தாக்கல் செய்தபிறகு, தேர்தல் நடைபெற்று, வாக்குகளை எண்ணிக் கொண்டிருக்கக் கூடிய நேரத்திலே இந்த அவசர சட்டம் வந்திருப்பதை பார்க்கிறபோது, ஏதோ ஒரு தனி மனிதர் அந்தப் பதவியிலே வரக்கூடாது என்பதற்காகவே கொண்டு வரப்பட்ட சட்டமோ இது, என்று எண்ணக் கூடிய அளவிற்கு நிலைமையை இது தோற்றுவிக்கிறது என்பதைக் கூறவிரும்புகிறேன்.

தேர்தலிலே நின்று வெற்றிப் பெறக்கூடிய வாய்ப்பைப் பெற இருக்கிற இந்த சூழ்நிலையிலே, இது போன்ற அவசர சட்டத்தை கொண்டு வந்திருப்பதால், அதில் ஏதாவது அரசியல் உள்நோக்கம் இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே எத்தனையோ பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. எந்தப் பல்கலைக் கழகத்திலேயும் இது மாதிரி ஒரு உறுப்பினர் பதவியில் இரண்டு காலத்திற்கு பின்னாலே வைத்துக் கொள்ளக்கூடாது என்று இந்த மாதிரியான ஒரு உச்ச வரம்பு இல்லை என்று எண்ணுகிறேன். மாணவர்களை இது போன்ற ஒரு அவையில் பிரதிநிதித்துவம் கொடுத்து கொண்டு வருவது கூட சிறப்பாக இருக்கும் என்றும் ஒரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.





காரண விளக்க நோக்கத்திலே கூட, சொல்லியிருக்கக் கூடிய காரணம் பொருத்தமாக இல்லை. அதிலே "ஒரே நபர் நீண்ட காலமாக தொடர்ந்து உறுப்பினராக இருப்பது அப்பதவியில் அவருக்கு சில தனிப்பற்றுகள் ஏற்படுவதற்கு இடமளிக்குமாதலால் அவ்வாறு அவர் தொடர்ந்து உறுப்பினராக இருத்தல் உகந்ததல்ல என்பது வெளிப்படையாகவே விளங்கும்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் கேட்க விரும்புகிறேன். 3 ஆண்டு காலத்திற்கு பின்னாலே இன்னொரு 3 ஆண்டுகாலம் இடைவெளி விட்டு, அல்லது 6 ஆண்டுகளுக்குப் பின்னாலே திரும்பவும் அவர் அந்தப் பதவியிலேயே வந்தால் அந்தப் பற்றுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாதா. அல்லது, தேர்தலில் நிற்காத காலத்தில், தனக்கு வேண்டியவர்களை நியமனம் செய்து விட்டு, பிறகு மீண்டும் அதே பதவியில் தொடர்ந்து வர இடம் இல்லையா என்றும் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கம் இப்படிப்பட்ட பற்றுக்களை நீக்க வேண்டும் என்பது தான் என்றால், 6 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் தேர்தலில் நிற்கவே கூடாது என்று இருக்கலாம். அப்படி இல்லாமல், ஒரு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கொண்டு வர முடியும் என்று இருப்பது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே கூட சில நாட்களுக்கு முன்பாக கூட்டுறவு நிறுவனங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தலைவர்கள் பதவிக்காலம் நீட்டிக்கப்பட வேண்டும் என்று, 6 மாதம் அல்லது 1 ஆண்டு என்று சொல்லி, ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டபோது, என்ன காரணம் சொல்லப்பட்டது என்றால், இன்னும் விரிவான சட்டத்திருத்தங்கள் பின்னால் வர இருக்கின்றன, ஆகையால் இடைக்கால ஏற்பாடு என்று சொல்லிக் கொண்டு வரப்பட்டது. இதற்கு மட்டும் விரிவான மசோதாக் கொண்டு வர இருக்கின்றன என்று சொல்லிவிட்டு, ஜனநாயக முறையில் தேர்தல் கூட நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பெறும் நேரத்தில், அதை நிறுத்தும் வகையில் இப்படிப்பட்ட சட்ட திருத்தம் அவசரமாக கொண்டு வரப்பட்டது. அதுவும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் கொண்டு வருவது எப்படி நியாயமாகும்.

தற்போது தேர்தலில் வெற்றி பெறுபவரை பதவி ஏற்கச் செய்து விட்டு, பின்னாலே இந்த மசோதாவை, மதுரை–காமராசர் பல்கலைக்கழகத்திற்கு என்று மட்டுமில்லாமல், எல்லா பல்கலைக் கழகத்திற்குமே இதை ஏன் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிற நேரத்திலேதான், இதில் ஏதாவது உள் நோக்கம் இருக்குமோ என்ற எண்ணத்திற்கு ஆதாரமாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே இன்னொன்றையும் நான் முக்கியமாக கேட்க விரும்புகிறேன். இதர பொறுப்புகளிலே எல்லாம் 3 ஆண்டுகாலம், 6 ஆண்டுகாலம் என்று தொடர்ந்து இருப்பதற்கு சட்ட வசதிகளும்

வாய்ப்புகளும் ஜனநாயக அமைப்பிலே இருக்கிறபோது, கல்வித்
துறையிலே மட்டும் ஏன் இந்த உச்ச வரம்பைக் கொண்டு வர
வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டும் இல்லாமல், 3 ஆண்டுக்காலம், 6 ஆண்டுக்
காலம் இதுபோன்ற பதவியில் - செனட் உறுப்பினராக இருந்து
அனுபவம் பெற்று, பிறகு பதவி உயர்வு பெறுவது போல — இது
போன்ற பதவி யில் அமர்த்தப்பெறுவது. தமிழகத்திற்கும் நாட்
டிற்கும் விழுமிய பயன் அளிக்கும் வகையில் இருக்காதா என்பதை
யும் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும்
இந்தப் பல்கலைக் கழகத் திருத்த மசோதாவிலே பல பிரச்னை
களைப் பற்றி ஆய்வுச் செய்ய அவசியம் இருக்கிற காரணத்தால்
இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, தீர ஆராய்ந்து பின்னாலே
கூட சட்டமாகக் கொண்டு வரலாமே என்ற யோசனையை
அரசுக்கு கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்,

[பிற்பகல் 12-50]

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை-
காமராசர் பல்கலைக் கழக திருத்த மசோதாவின் மீது
தங்களது கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்
பினர்களுக்கு நான் நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச்
சட்டத் திருத்தம் ஒரு பல்கலைக் கழகத்தில் தனிப்பட்டவர்கள்
ஆதிக்கம் இருக்கக் கூடாது என்ற வகையில் தான் நாம்
இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறோம். அவர்
கள் தொடர்ந்து தேர்ந்தெடுக் ப்பட்டு வருகிற காரணத்தால்
அங்கே அவர்களுடைய ஆதிக்கம் வளருகிறது என்பது மட்டு
மல்லாமல் நாம் பல்கலைக் கழகத்தை எதற்காக வைத்துக்
கொண்டுருக்கிறோமோ அதற்காக அந்தப் பல்கலைக் கழகம்
செயல்படாமல், பல்கலைக் கழகத்தின் பயனை இந்த சமுதாயம்
பெற முடியாமல் இவர்களைப் போன்றவர்கள் தடையாகவே
இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற அனுபவத்தைத்தான் நாம்
பெற்றிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இதை மாற்ற
வேண்டும் என்ற முடிவை மேற்கொண்ட பிறகு நாங்கள்
கொண்டு வந்திருக்கிற முதல் மசோதா இது. இரண்டாவது
மசோதா பாரதியார் பல்கலைக்கழகம், மூன்றாவது பாரதி
தாசன் பல்கலைக்கழகம், நான்காவது எப்போது வரும், ஐந்தா
வது எப்போது வரும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம். ஆனால்
அவை நிச்சயமாக வரும். அவை வேறு சில திருத்தங்களோடு
வரும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொறுத்த வரையில்
அங்குள்ள தனிப்பட்ட நிலைமைகள் நமக்கு நன்கு தெரியும்.
ஆகவே இந்தத் திருத்தத்தோடு நிற்காமல் வேறு திருத்தங்கள்
வர இருக்கின்றன.

இப்போது மதுரைப் பல்கலைக் கழகத் தேர்தல்கள் நெருங்கு
வதால் ஆசிரியர்கள் என்னிடம் சொல்லி உடனடியாக நடவடிக்கை
கள் எடுக்க வேண்டும் என்று சொன்னதன் பேரில்தான் இந்த
அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தோமே தவிர தனிப்பட்ட





வர்கள் யாரையும் மனதில் வைத்துக் கொண்டு வரவில்லை.
அப்படி அவர்கள் நினைத்தால் தனிப்பட்ட ஒருவரின் ஆதிக்கம்,
அவருடைய ஆதிக்கம் அங்கேயிருந்து அகற்றப்படவேண்டும்
என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது
என்று சொல்வார்களேயானால் அதை குற்றச்சாட்டாக எடுத்
துக்கொள்ளமாட்டேன், என் வாதத்திற்கு ஆதரவாக ஏற்றுக்
கொள்வேன், நான் சொல்கிற கருத்துக்களுக்கு ஆதரவாக பேசிக்
கொண்டிருக்கிறீர்கள், இறுதியில் எதிர்ப்பதாக சொல்ல
லாமே தவிர நீங்கள் சொல்கிற நிலைமைகள் உண்மையாக
இருக்குமேயானால் இப்போது இந்தச் சட்டத்திருத்தத்தைக்
கொண்டு வருவதன் மூலம் இந்த சமுதாயத்திற்கு பெரும்
நன்மையைச் செய்திருக்கிறோம். அதைத்தான் ஒழிக்க வேண்டு
மென்கிறோம். அது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்.
சென்னைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும் சரி, அண்ணா
மலைப் பல்கலைக்கழகமாக இருந்தாலும் சரி, எந்தப் பல்கலைக்
கழகமாக இருந்தாலும் சரி பேராசிரியர்களின் கருத்துக்களுக்குத்
தான், அவர்களுடைய எண்ணங்களுக்குத்தான் ஒரு உயர்ந்த
இடம் இருக்கவேண்டுமே தவிர அவர்கள் அல்லாத மற்றவர்
வர்களுக்கு அங்கே ஆதிக்கம் செலுத்துகிற வாய்ப்பு எது இருந்தா
லும் அது தடுக்கப்பட்டேயாக வேண்டும். அப்படிப்பட்ட
வாய்ப்புகள் இருக்கிற நிலைமைகளைச் சுட்டிக்காட்டினால் அது
எங்களுக்கு நீங்கள் செய்கிற உதவியாகத்தான் கருதிக் கொள்
வோம்.

பல்கலைக்கழகம் என்றால் கல்லூரிகளை நிர்வாகம் செய்கிற
நிர்வாக அமைப்பு மட்டுமல்ல. நிர்வாக அமைப்பே அல்ல.
இன்று வளர்ந்திருக்கின்ற கல்வித்துறை நிபுணர்களின் கருத்துக்
களை வைத்து பார்க்கிற போது அது முழுக்க முழுக்க ஆராய்ச்சி
செய்கிற இடமாகத்தான் இருக்கவேண்டும். இன்றைக்கு இருக்கிற
சமுதாயப் பிரச்னைகளுக்கு தீர்வு காணக் கூடிய இடமாக
பல்கலைக்கழகம் இருக்கவேண்டும். சமுதாய முன்னேற்றத்திற்
காக எவ்வளவோ பிரச்னைகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்
கிறோம். ஏன், மதமாற்றம் பற்றிக் கூடப் பேசிக்கொண்டிருக்
கிறோம். எவ்வளவு பல்கலைக்கழகங்கள் அதைப் பற்றி ஆய்வு
நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஸோஷியாலஜி டிபார்ட்மெண்ட்
இல்லையா? அவர்கள் என்ன கருத்து சொல்கிறார்கள்? என்ன
ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு உரிய
உரிமைகளைத் தந்து அவர்கள் நல்ல முறையில் செயல்பட
விட்டால்தான் நம் பிரச்னைகளுக்கு தீர்வு காண்கிற ஒரு அறிவுக்
கேந்திரமாக பல்கலைக்கழகம் இருக்கமுடியுமே தவிர பண
ஆதிக்கத்தை வைத்துக்கொண்டு அல்லது அரசியல் கட்சிகள்
ஆதிக்கத்தை வைத்துக் கொண்டு அங்கே இடத்தைப் பெற்று
அந்த இடத்தை தொடர்ந்து பெற வேண்டும், யார் துணை
வேந்தராக வந்தாலும் என்னைக் கேட்டுத்தான் எதுவும் நடை
பெற வேண்டும்; நான் சொல்வதுதான் அங்கே நடைபெற
வேண்டுமென்கிற அளவிற்கு ஆதிக்கம் வளர்கிற நேரத்தில் அதை
நாம் அழிப்பதற்கும் ஒழிப்பதற்கும் உள்ள நடவடிக்கைகளை

எந்த நேரத்தில் எடுத்தாலும் முற்போக்கு கருத்து உள்ளவர்கள் அதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அவர்கள் எதிர்ப்பதைப்பற்றி நான் வருத்தப்படவும் இல்லை. அதைக் கேட்டு நான் ஆச்சர்யப்படவும் இல்லை. காரணம் அவர்களுடைய கோட்டை தகர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் காரணமாக, அவர்கள் என்ன நடத்திக்கொண்டிருந்தார்களோ அவையெல்லாம் இன்று தகர்க்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறபோது அந்தப் போராட்டத்தை எதிர்த்துப் பேசுகிற அளவிற்கு, எதிர்த்து எழுதுகிற அளவிற்கு அந்தக் கட்சி நடந்திருக்கிறது. நாங்கள் அப்படி அல்ல. எங்களை எதிர்த்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினாலும் அவர்களோடு அன்பாக, ஆதரவாக பேசக்கூடிய ஒரு நிலையில்தான் நாங்கள் இருந்திருக்கிறோமே தவிர எதிரிகளைப்போல் நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை என்ன? முழுக்க முழுக்க தனி நபர்களுடைய ஆதிக்கம், பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல அந்தக் கட்சியிலேயும் இருக்கிறது என்பதுதான் இது எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

ஆகவே ஒரு நாட்டின் நன்மையைக் கருத்தில் கொள்ளாமல் பல்கலைக் கழகத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளாமல் நாங்கள் எதிர்த்துப் பேசுவோம் வெளியேறுவோம் என்று சொன்னால் அந்த ஆதிக்கத்தன்மையைக் கண்டு ஆச்சர்யப்படுகிறேன். கட்சி மட்டத்தில் அதைப்பற்றிப் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கலாம். ஆகவே உங்கள் ஆதரவைக் கேட்பதின் நோக்கம் எல்லாம் — நீங்கள் மாணவர்களுக்கு உரிமை வேண்டுமென்று சொன்னீர்கள். திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் அதை எதிர்க்கவில்லையே. உரிய காலம் வரட்டும் என்று கருதிக்கொண்டிருக்கிறோம், எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நான்–டீச்சிங்ஸ்டாப்க்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சொன்னார்கள். நல்ல கருத்து. நாங்கள் உரிய காலத்தில் உரிய மாற்றத்தோடு கொண்டுவர வேண்டுமென்றுதான் விரும்பிக் கொண்டிருக்கிறோம், என்றைக்கு மாணவர்கள் கல்லூரிகள் மூடினால் தங்களுடைய படிப்பு கெடுகிறது. தாங்கள்தான் நஷ்டம் அடைகிறோம் என்ற பொறுப்பை உணர்ந்து கொள்கிறார்களோ அன்றைக்கே மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய முயற்சிகளை நாங்கள் நிச்சயமாக மேற்கொள்வோம். இன்றைக்கும் தொடர்புகொண்டு, பல காரியங்களை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற தகராறுக்கு போன மாதம் அவர்களைக் கூட்டிப் பேசினோம். நாங்கள் அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று. அவர்கள் அந்த கல்லூரி முன்னாலே இன்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களிடத்திலே நாங்கள் நல்ல



முன்னேற்றத்தைப் பார்க்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பேசி, இந்த யூனியன் தேர்தலுக்கான சில நடவடிக்கைகள் எடுத்தோம். அதிலே முழுக்க முழுக்க வெற்றி பெறவில்லையென்றாலும், ஓரளவுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய அளவுக்கு மாணவர்கள் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. அவர்கள் ஓரளவுக்கு பொறுப்பை உணர்ந்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்படும். ஆகவே, அத்தகைய கருத்துக்களை நாங்கள் நிச்சயமாக வரவேற்கிறோம். ஆகவே, இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்த வரம்பு மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமே கொண்டு வந்திருக்கிறோம் என்றாலும், நான் ஏற்கனவே சொன்னதுபோல் மற்றப் பல்கலைக் கழகங்களுக்காகவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்கள் கையிலே இன்றைக்கு இருக்கின்ற மற்ற இரண்டு பல்கலைக்கழக மசோதாக்களிலும் இது இடம் பெற்றிருக்கிறது. கூடிய விரைவிலே, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், அண்ணாமலைப் பல்கலைகழகத்திற்கும், அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் இது அவசியம், நிச்சயமாக வரும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

குறிப்பிட்ட ஆட்கள், அந்தப் பல்கலைக்கழகத்திலே, சிண்டிகேட்டிலே எத்தனை ஆண்டுகள் சேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற விவரங்களைப் பார்ப்பீர்களானால், அந்த உண்மை தெரியும். தொடர்ந்து அவர்களே வைத்து கொண்டிருப்பார்கள். எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இந்த குறைபாடுகள் இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது அங்கே நடைபெறுகின்ற காரியங்கள் பல்கலைக்கழகத்திலே நடக்கின்ற காரியங்களாக இல்லை. ஒரு பல்கலைக்கழகத்திலே நடக்கின்ற நிர்வாகம் அங்கே நடைபெறவில்லை. என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு சம்பள உயர்வைப்பற்றிச் சொன்னார்கள். திடீரென்று ஒரு பகுதியினர், ஒரு பகுதி ஆசிரியர்களின் சம்பளத்தை அவர்களாகவே அதிகரித்ததுடன், பணத்தைக் கொடுக்கின்ற சர்க்காரைக் கலக்காமல், அவர்களின் உணர்வுகளைத் தெரிந்து கொள்ளாமல், இஷ்டப்படி காரியங்களைச் செய்கிறார்கள். அதனால் பெரிய குழப்பம் ஏற்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படியெல்லாம் நடக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கின்றபோது, இப்படி தொடர்ந்து இருக்கின்ற அவர்களுடைய ஆதிக்கத்தைப் போக்க வேண்டுமென்றால், அந்த இடத்திலே ஆசிரியர்கள் வர வேண்டும், பேராசிரியர்கள் வரவேண்டும், அவர்களுடைய கருத்துக்கள் மேலோங்கி இருக்கவேண்டும்; அவர்களுடைய எண்ணங்கள் வெற்றி பெறக்கூடிய அடிப்படையிலேதான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே. இதற்கு உங்களுடைய பொதுவான ஆதரவைத் தெரிவித்துக் கொண்டதற்கு, நன்றி தெரிவித்து, இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஆகஸ்ட் 31]

திரு. அ. ரகுமான்கான் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "1981-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, "1981 ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு— இன்று (31-8-81) காலை சுமார் 11.50 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பிய,

(1) திரு. பரமன் (பி. டி. ராமு மகன்)

(2) திரு. சி. ராமகிருஷ்ணன் (சிதம்பரம் பிள்ளை மகன்)

ஆகிய இருவரும் தற்போது பேரவைக்காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு ப. பொன்னுரங்கம் அவர்களின் பரிந்துரையின் மேல்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டுவருவார்கள்.



1981 ஆகஸ்ட் 31]

[பிற்பகல் 1-00]

8. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "இன்று (31-8-81) காலை சுமார் 11-50 மணிஅளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள—

(1) மதுரை, பசும்பொன் நகர், மதுரை பாண்டியன் தெரு 78-சி, சந்திரன் இல்லத்தில் இருக்கும் திரு. பி. டி. ராமு என்பவரின் மகன் பரமன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்,

(2) மதுரை, 74, வைத்தியநாதபுரம் சித்தம்மாள் இல்லத்தில் இருக்கும் திரு. சிதம்பரம் பிள்ளை என்பவரின் மகன் சி. ராமகிருஷ்ணன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் தவறு செய்துள்ளனர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு செய்திருக்கலாம் என்ற காரணத்தால் மூன்று நாள் என்பதை ஒரு நாள் இந்த அவை காலையும் வரை தண்டனை என்று மாற்றும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் கூறியது, அவர்கள் செய்தது தவறு, தண்டிக்கப்பட வேண்டியது தான் என்பதை ஒத்துக் கொண்டார்கள். தண்டனையைக் குறைக்கக் குறைக்க மேலும் மேலும் கோஷங்கள் போடவும் துண்டு பிரசுரங்கள் போடவும் தைரியம் ஏற்பட்டு விடும், பயம் ஏற்படாது. அதற்கு ஊக்கம் தருவதுபோல் இருக்கக் கூடாது. ஆனாலும் ஒரு நாள் போதும் என்ற உணர்வு மன்றத்தினரிடம் இருக்கும் காரணத்தால் தீர்மானத்தில் 'மூன்று நாட்கள்' என்று இருப்பதை 'ஒரு நாள்' என்று திருத்திக் கொள்ளலாம்.

எனவே, நான் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"இன்று (31-8-81) காலை சுமார் 11.50 மணி அளவில் சட்டமன்றப்பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப் பட்டுள்ள—

(1) மதுரை பசும்பொன் நகர், மதுரை பாண்டியன் தெரு 78-சி, சந்திரன் இல்லத்தில் இருக்கும் திரு. பி. டி. ராமு என்பவரின் மகன் பரமன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்,

(2) மதுரை-74, வைத்தியநாதபுரம் சித்தம்மாள் இல்லத்தில் இருக்கும் திரு. சிதம்பரம் பிள்ளை என்பவரின் மகன் சி. ராமகிருஷ்ணன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஒரு நாள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

## 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

### (இ) பேரவை அலுவல்—அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பில் இன்னும் எட்டு சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படு வதற்காக இருக்கின்றன. இன்னும் அரைமணி நேரந்தான்



இருக்கிறது. நாளைக்கு தனியார் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் படவேண்டும். ஆகவே, இன்று மாலை 4.00 மணிக்கு அவை கூடி இந்த சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு முடித்து விடலாம்.

திரு. துரைமுருகன் : இன்று மாலையில் வைத்துக் கொள் வதற்குப் பதிலாக நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : இதைப் பற்றி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: 8 பில்களை எப்படி இரண்டு மணி நேரத்திற்குள் முடிக்க முடியும், முடியாது. இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரவர்கள் தொகுதிக்குப்போய் பார்க்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. ஆகவே மாலை 4 மணிக்கு வைத்து முடித்துவிடலாம்.

திரு. துரைமுருகன் : திடீர் திடீர் என்று வைக்கிறீர்கள்; ஏன் அலுவல் ஆய்வுக்குழுவை கூட்டியிருக்கக் கூடாது. கூட்டியிருந் தால் நாங்கள் அங்கே வந்து இன்று மாலை முடியாது என்று சொல்லியிருப்போமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர் என்று வைக்கவில்லை. அவைக்கு அறிவித்துவிட்டுத்தான் வைக்கிறோம்.

திரு. துரைமுருகன்: முடியாது சார். இன்று மாலை முடியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பத்து நிமிடத்திலே நாங்கள் அதைப்பற்றிப் பேசி தங்களுக்கு அதைப்பற்றி தெரிவிக்கிறோம். அதற்குள் அடுத்த சட்ட முன்வடிவை எடுத்துக்கொண்டு முடிக்கலாம்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(ஈ) பச்சையப்பன் பொறுப்புக்கழக (நிர்வாகத்தை மேற் கொள்ளுதல்) குறித்த 1981-ம் ஆண்டு திருத்த சட்ட முன்வடிவு.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற் கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

---

1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பச்சையப்பன் பொறுப்பக் கழகத்தின் பொறுப்பில் உள்ள சொத்துக்கள் அறக்கட்டளை (கல்வி நிலையங்கள் உள்ளிட்ட) நிலையங்கள் ஆகியவற்றின் நிர்வகத்தை தற்கலிகமாக 22-12-80 முதல் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது குறித்த தமிழ்நாடு சட்டம் 11/1981-இல் 3வது பிரிவில் (2)உட்பிரிவின்படி மேற்படி பொறுப்புக் கழகத்தின் அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளையும், பணிகளையும் நிறைவேற்றவும், சில அதிகாரிகளை உறுப்பினர்களகக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றை அரசு அமைத்தது. நடைமுறையில் ஏற்படுகின்ற இடர்ப்பட்டினை நீக்குவதற்காக மேற்படி உட்பிரிவைத் திருத்தக் கருதப்படுகிறது. சட்ட முன்வடிவைக்கொண்டு வருவதற்கான காரண நோக்க விளக்கம் சட்ட முன்வடிவுடன் இணைக்கப்பட்ட விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்ட முன்வடிவின் இணைப்பில் தற்போதைய பிரிவும் திருத்தத்தை உள்ளடக்கிய பிரிவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுமாறும் பின்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, சற்று நேரத்திற்கு முன்பு பேரவைத் துணைத் தலைவர் கோர்ட்டிலே இருக்கிற விஷயம்பற்றி, அதாவது சப்-ஜுடிஸ் ஆக இருக்கிற விஷயம் பற்றி இங்கே விவாதிக்கக்கூடாது என்ற முறையிலே " rule of subjudice does not apply to legislative procedures" என்று ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். சட்டத்தை விளக்கிக் காட்டினார்கள். அதேபோல் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் கூட, நாமாகவே, சட்டசபை உறுப்பினர்களாகவே ஒரு மரபை கடைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம், கோர்ட்டிலே இருக்கக்கூடிய விஷயங்களை சப்-ஜுடிஸ் ஆக இருக்கின்ற விஷயங்களை விவாதிக்கக்கூடாது என்பதை நாம் மரபாக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் சட்டத்தின் மூலமாகக் கட்டுப் படுத்த முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது இங்கே வந்திருக்கின்ற சட்ட முன்வடிவு சம்பந்தப்பட்ட விஷயம் ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திலே இருக்கிறது. ஏ. டி. வாசுதேவன் என்ற பெயரில் டபிள்யு. பி./4607/1981 ரிட் பெட்டிஷன் வழக்கில் இருந்து வருகிறது. அவர்கள் இந்தச் சட்டத்திற்கு இடைக்காலத் தடையுத்தரவு வேண்டுமென்று சொன்னபொழுது அந்த வழக்கும் செப்டம்பர் 3 ஆம் தேதி விசாரணைக்கு வர இருக்கிறது. அவசரம் அவசரமாக சட்டத்தை உருவாக்கி அதிலே உள்ள சில ஓட்டைகளை இப்போது அடைப்பதற்காக சில திருத்தங்களைக் கொண்டுவருவது முறைதானா என்ற ஐயப்பாடு எனக்கு எழுகிறது. இந்தச் சட்டத்திலே இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தான் பச்சையப்பன் டிரஸ்ட் போர்டுக்கு டிரஸ்டி





களாக இருக்கவேண்டுமென்று வரம்பு இருப்பதால் அவசரம் அவசரமாக சட்டத்தை உருவாக்குகிற நேரத்திலே 5 அரசாங்க உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்துவிட்டு இப்போது இந்தச் சட்டம் அடிபட்டுப் போய்விடுமோ என்று கருதி, அடிபட்டுப் போகாமல் காப்பாற்றுவதற்காக இப்போது திருத்தம் கொண்டு வருகிறார்கள் என்று நினைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது.

[பிற்பகல் 1.10]

It expresses an opinion on the merits of a specific issue which is before the court. yet it clearly probagates and incumbates among the public a definite opinion in utter disregard of the fact that the matter is subjudice. ஆகவே, கோர்ட்டின் அந்த முடிவை மாற்றக்கூடிய நிலையை எடுத்துக் கொண்டால் அது கோர்ட்டை அவமதிக்கும் குற்றமாகாதா? ஒரு ஸ்பெசிஃபிக் இஷ்யூவில், அந்தக் கிளாஸையே திருத்துவதன் மூலம் ஏற்கனவே செய்த தவறைத் திருத்திக்கொள்ளும் வகையில் ஆகிவிடும் என்பதால் இது கோர்ட்டை அவமதிக்கும் குற்றமாகாதா என்பதைக் கல்வியமைச்சரவர்கள் சட்ட வல்லுநராகவும் இருப்பதால் தெளிவு படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சட்ட சபைக்குச் சட்டம் செய்வதில் எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது? அதைத்தான் துணைத் தலைவரவர்கள் ஏற்கனவே எடுத்துக் காட்டினார்கள். நாம் சப்ஜுடிஸ் என்று சொல்வது, நாமாக நம் மீது எடுத்துக்கொண்ட கட்டுப்பாடு. அந்தக் கட்டுப் பாட்டின்படி நாம் பேசாமல் இருக்க வேண்டும், பேசக்கூடாது என்று சொல்கிறோம். லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி சுப்ரீம் என்பது எப்பொழுதும் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினரவர்கள், தவறைத் திருத்திக் கொண்டால் கன்டெம்ப்ட் ஆஃப் கோர்ட் ஆகாதா என்று கேட்டிருக்கிறார்கள். எந்த நீதிமன்றமும், யார் தவறைத் திருத்திக்கொண்டாலும் பாராட்டுமே தவிர, கன்டெம்ப்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நீதிக்குத்தான் நீதிமன்றம் இருக்கிறதேயொழிய அநீதிக்காக இருக்காது.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்களுடைய கட்சியின் சார்பாகத் திரு. துரைமுருகன் அவர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்களும் சட்டம் படித்தவர்கள்தான். 35 வக்கீல்கள் இருக்கிறார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் அபிப்ராயம் சொன்னால் எனக்கே குழப்பமாகிவிடும். திரு. துரைமுருகன் அவர்கள் பேசுவார்கள்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவின்மீது நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன; அந்தச் சிக்கல்களை அறுத்து செம்மைப்படுத்த வேண்டுமென்ற கருத்தில் அதை அரசாங்கம் மேற்கொள்கிறது, ஒரு இரண்டாண்டுக் காலத்திற்கு என்று சொன்னார்கள். இந்த மாமன்றத்தில் ஒரு மசோதாவைக் கொண்டுவந்த நேரத்தில் எப்படி அந்தச் சிக்கலை அறுக்கப் போகிறீர்கள் என்று கேட்ட நேரத்தில் அதிகாரிகளைப் போட்டு அறுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். எந்தெந்த அதிகாரிகளைப் போட போகிறீர்கள் என்று கேட்டோம். Joint Secretary, Law Department, Sports and Games, Director Joint Secretary, Home Department ஃபைலைக் கவனிக்கின்ற நிதித்துறை துணைச் செயலாளர் Director of Collegiate Education ஆகிய இந்த ஐவரைப் போட்டுக் குழு போட்டார்கள். அதைப் போட்டு ஒரு ஆண்டு ஆகவில்லை. அவர்கள் வந்து இப்பொழுது ஒரு அட்மிஷன் முடிந்திருக்கிறது. அதற்குள்ளாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இவர்களையெல்லாம் மாற்றிவிட்டு அரசாங்கமே போடும், நோட்டிபிகேஷன் மூலம் அறிவிக்கும் ஒருவரை அங்கே போடலாம் என்று மசோதா கொண்டு வந்திருக்கிறீர்கள், பச்சையப்பன் கல்லூரியில் தவறுகள் மலிந்துவிட்டிருக்கின்றன; அந்தத் தவறுகளை அல்லது அந்தச் சிக்கல்களை இந்தக் குழு எப்படி நிவர்த்தி செய்யாமலே போய் விட்டது என்பது விளக்கப்படவில்லை. இதைப் பார்க்கும் பொழுது எங்களுக்கு ஒரு எண்ணம்தான் வருகிறது. அரசாங்கத்தில் இவ்வளவு பெரிய அதிகாரிகளாக இருப்பவர்களை அந்தக் கல்லூரி நிர்வாகத்திலே போட்டார்களே, அந்த அதிகாரிகளுக்கு அந்தத் திறமை இல்லை என்பதை நீங்களே ஒத்துக் கொள்கிறீர்களா ? அல்லது இவர்கள் பேய், முதுகுவலி பேய் திருகு வலி வந்ததையாகச் செய்து விட்டார்கள் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? எந்த அடிப்படையில் அவர்களை எடுத்து விடுகிறீர்கள் என்று கேட்டால், ஒரு சிறு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். என்ன விளக்கம் தெரியுமா? உதாரணமாக, லா டிபார்ட்மெண்ட்டின் ஜாயின்ட் செகரட்டரியாக இருப்பவர் இதில் உறுப்பினராக இருக்கிறார் என்றால், நாளைக்குத் திடீரென்று அவரை மாற்றி விட்டால், அந்த இடத்திலே வேறொருவர் வரும்பொழுது அவர்தான் அந்தப் பதவியின் அடிப்படை காரணமாக அந்த மேனேஜிங் கமிட்டியில் போகப் போகிறார். ஒரே ஒருவர் தொடர்ந்து இருக்க வழி செய்யத்தான், நிர்வாகத்தில் அனுபவமுள்ள ஒருவரை போட்டால் தான் சரியாக இருக்கும் என்றுதான் கொண்டு வருகிறீர்கள். நான் கேட்கிறேன், அங்கே இருந்தவர்கள் ஓராண்டுக் காலம் இருந்ததால் பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தைப்பற்றிப் புரிந்திருப்பார்கள். எனவே, இப்பொழுது இருக்கின்ற நடராஜன் என்றோ, இராதாகிருஷ்ணன் என்றோ அல்லது இராமச்சந்திரன் என்றோ இவர்களை அந்தக் குழுவிலே நிரந்தரமாகப் போடு



கிறோம் என்று ஏன் சொல்லவில்லை? அதற்குமாறாக, அரசாங்கம் நினைக்கும் ஒருவரை, அமென்ட்மெண்ட் இல்லாமலே, நோட்டிபிகேஷன் மூலமாகப் போடுகிறோம் என்று சொல்வதன் மர்மம் என்ன? எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இந்த அதிகாரிகள் நீங்கள் சொல்கிறவைகளுக்குச் செவி சாய்க்கவில்லையா? பச்சையப்பன் கல்லூரியிலே அப்படி என்ன பெரிதாக இருக்கிறது. மிஞ்சிப் போனால் அட்மிஷன் இருக்கிறது. அதைவிட்டு விட்டால் நிறைய சொத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சொத்துக்களைப் பராமரிப்பதிலே, இப்பொழுது வந்திருக்கிற நிர்வாகம் என்ன செய்தது என்றுகூட நான் கேள்விப்பட்டேன். செவன் வெல்ஸ் போன்ற பகுதிகளிலே, மற்ற பகுதிகளிலே இருக்கிறவர்களெல்லாம் வாடகை ரூ. 5, ரூ. 10, ரூ. 20, ரூ. 30 என்று கொடுத்துக் கொண்டு வந்தார்கள், காலங்காலமாக. அவற்றையெல்லாம் மாற்றி அதிகமான வாடகை தரவேண்டும். இல்லாவிட்டால், தட்டுமுட்டு சாமான்களைத் தூக்கி வெளியிலே போடுவோம் என்று கொஞ்சம் கெடுபிடி செய்து, ரூ. 20/- இலட்சம், ரூ. 30/ இலட்சம் அளவுக்கு ஓராண்டு வருமானத்தை அந்த நிர்வாகம் பெருக்கி இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இப்பொழுது அரசாங்க அதிகாரிகள் போயிருக்கிறார்களே, அவர்கள்மீது எனக்கு ஒன்றும் தனியாகப் பிரியம் இல்லை. ஆனால், போனவர்கள் செம்மையாகச் செய்திருக்கிறார்களா என்றால், இந்த ஆண்டு செய்திருக்கிறார்கள் என்றுதான் நான் பார்க்கிறேன், கேள்விப்படுகிறேன்; அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், நான் அந்தக் கல்லூரியினுடைய பழைய மாணவன் என்ற வகையிலே, அந்தக் கல்லூரியினுடைய வளர்ச்சியிலே அதிகமான அக்கறை கொண்டிருப்பவன். எனவே, இந்தக் கல்லூரியினுடைய நிர்வாகம் அரசாங்கத்தினுடைய கரத்திற்கு மாற்றப்பட்டதற்குப் பிறகு எப்படி இருக்கிறது என்பதை நண்பர்கள் மூலமாக, ஆசிரியப் பெருமக்கள் வாயிலாக, மாணவச் செல்வங்கள் மூலமாக நான் அறிந்தேன். பரவாயில்லை, செய்திருக்கிறார்கள், அதிலே எனக்கு ஒன்றும் நட்டம் இல்லை. இன்னமும் கூடச் செம்மையாகச் செய்ய வேண்டும். அதற்குக் காலம் போதாது. அதற்குள்ளாக அவர்களை மாற்றி விடக்கூடாது. நீங்கள் யாரைக் கொண்டு வந்து போடப் போகிறீர்கள்?..

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இடையூறு செய்வதற்காக நான் வருந்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதாக இருந்தால்கூட இந்தத் திருத்தத்தை அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும்.

திரு. துரைமுருகன் : இதிலேயே ஒரு வரி சேர்த்துத் தந்திருக்கலாம். இப்பொழுது பதவி அடிப்படையிலேதான் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் பெயரை சொல்லக்கூடாது சபையிலே. இருந்தாலும் உங்களுடைய அனுமதியின் பேரிலே சொல்கிறேன். திரு. நடராஜனையும் திரு. இராதாகிருஷ்ணனையும், திரு. இராமச்சந்திரனையும்

திரு. ஆளுடையா பிள்ளையையும் போட்டோம். திடீரென்று ஆளுடையா பிள்ளை மாற்றப்படுகிறார், வேறொருவர் வருகிறார். 'ஏ', போய், 'பி' வருகிறார் என்றால், 'பி' தான் மானேஜிங் கமிட்டிக்குப் போவார். எனவேதான் அவர்கள் தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற நோக்கில், பதவியின் காரணமாக அல்லாமல், பர்சனாலிட்டி காரணமாகவே, அவர்களை நாங்கள் போடுகிறோம் என்று நீங்கள் ஒரு வரி போட்டு விட்டிருந்தால் நான் பேச வாய்ப்பில்லாமல் போயிருக்கும். எனக்குத் தெரிகிறது நீங்கள் எடுக்கிற முயற்சி. ஏனென்று கேட்டால், சென்னைப் பல்கலைக்கழகம் நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு முன்னாலே நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி, தமிழர்களெல்லாம் படித்து முன்னேற வேண்டுமென்பதற்காக, பச்சையப்பராலே கொண்டு வரப்பட்ட, பேரறிஞர் அண்ணா அவர்கள் படித்த, அந்தக் கல்லூரியினுடைய பெருமையும் புகழும் மங்கி விடக் கூடாது என்பதிலே உங்களுக்கு இருக்கிற ஆர்வத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன சென்ற முறை ஒரு நிர்வாகம் கெட்டுவிட்டது என்று வேறு? நிர்வாகத்தைப் போட்டு, அது ஃபைலைப் பார்ப்பதற்கு முன்னாலே, இன்னொரு ஆளைப் போடுவது என்றால், நாளைக்குத் திடீரென்று சொல்வீர்கள், அவர்கள் சரியில்லையென்று. இன்னொரு ஆளைப் போடமாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நான் ஒத்துக் கொள்கிறேன், எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. அவற்றிலேயெல்லாம் கவனம் செலுத்தாத நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியிலே இவ்வளவு பாசம் வைத்திருப்பதால் நான் அதை ஒரு குறையாக அல்ல, பெருமையாகவே கருதுகிறேன், எங்கள் கல்லூரியில் அவர் கவனம் செலுத்தியிருக்கிறார் என்பதற்காக.

ஆனால், அவருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். அரசாங்கத்தினுடைய கல்லூரி தானே மாநிலக் கல்லூரி. அந்தக் கல்லூரியினுடைய முக்கிய பாடமாக இருப்பது 'பாலிடிக்ஸ் அன்ட் பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன்'. அந்தக் கல்லூரியினுடைய முதல்வராக இருந்து திரு. இராமச்சந்திரன் தான் அத்துறைக்கு 'சீஃப் ப்ரொஃபஸராக இருந்தார், இப்பொழுது கலேஜியட் எஜிக்கேஷன் மெம்பராகப் போய்விட்டார். நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அந்தக் கல்லூரியிலே ஸுவாலஜி, கெமிஸ்ட்ரி, மற்றும் சைக்காலஜி போன்ற அனைத்துத் துறைகளுக்கும் சீஃப் ப்ரஃபசர் போஸ்ட் தேவைப்படுகிறது. இல்லாவிட்டால், அதற்காக அட்வர்ட்டைஸ்மென்ட் செய்யப்படுகிறது; அதற்காக இன்டர்வியூவுக்குக் கூப்பிடுகிறார்கள். ஆனால், அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்காது என்ற காரணத்தாலே, அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பாலிட்டிக்ஸ் டிபார்ட்டுமென்டுக்கு மட்டும்தான் சீப் ப்ரஃபசர் இல்லை. அத்துறை சீஃப் ப்ரஃபசர் இல்லாமல் இருப்பது மட்டுமல்ல, அந்த





போஸ்டை ஃபில் அப் செய்வதற்கு எந்தவிதமான இன்டர்வியூவும் கால் ஃபார் செய்யாமல் இருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? ஏன் அந்த போஸ்ட் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது? அதை நீங்கள் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? அது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வராமல் இருக்கலாம். அது நிர்வாகத்திலே சின்ன விஷயம். ஆனால், மாநிலக் கல்லூரியிலே இருக்கிற பாடப் பிரிவுகளிலே பாலிடிக்ஸ் அன்ட் பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன்தான் மிக முக்கியமான ஒன்று அந்தப் பிரிவுக்கு இன்றைக்கு சீஃப் ப்ரஃபசர் இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அது நிரப்பப்படாமல் இருப்பதில் பல்வேறு வேலைகள், தில்லுமுல்லுகள் இருக்கின்றன. ஒரே ஒருவர், இன்னும் எம்.லிட் கூட வாங்கவில்லை. அவரைக் கொண்டு வந்து அந்த இடத்திலே போட வேண்டுமென்பதற்காக, வேறு ஒருவரைப் போட்டு விட்டால் அவருக்கு அந்த சான்ஸ் கிடைக்காது என்பதற்காக, அவர் ஒரு பெரிய இடத்துப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறார் என்பதற்காக, முன்னாள் அமைச்சர்களுக்கு அவர் சொந்தக்காரர் என்பதற்காக, பல்வேறு நீதிபதிகளுக்குச் சொந்தக்காரர் என்பதற்காக, அவர் அந்தப் பதவிக்கு வர வேண்டுமென்பதற்காக, அந்த இருட்டடிப்பு செய்து கொண்டிருக்கிறார்களே. அதை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், உடனடியாக, சீஃப் ப்ரஃபசர் போட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.20]

பச்சையப்பன் கல்லூரியைப் பொருத்தவரையில் சொல்லுகிறேன். இந்த ஆண்டு நம்முடைய அரசாங்கத்தின் கரத்திற்கு இது வந்திருக்கிறது. தனியார் கல்லூரிகள் அரசாங்கத்தில் மானியம் வாங்குகிறது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனிடம் வாங்குகிறது. சொழுக்கிறது சட்டிட நிதி என்று வாங்குகிறது. லாப் (Lab) வைக்கவேண்டும் என்று வாங்குகின்றார்கள், அட்மிஷனுக்கு வாங்குகிறார்கள், எல்லாவற்றையும் வாங்கி இன்றைக்கு ஒரு பிசினசாகவே நடத்துகிறார்கள். ஆனால் பச்சையப்பன் கல்லூரி அப்படி இல்லை. அவர்களுடைய பணங்கள் பல்வேறு நிறுவனத்திற்குப் பயன்பட்டு, பல்வேறு கிளைக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பச்சையப்பன் கல்லூரி மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தனியார் கல்லூரிகள் அரசாங்கத்தினுடைய தலையாயச் சட்டமான கம்யூனல் ஜி.ஓ.வைப் பயன்படுத்தி இருக்கிறதா, கிடையாது. ஆனால் நான் அன்றைக்கே கூட குறிப்பிட்டுக் காட்டினேன். 130 பேர்கள் இருக்கிற அந்தப் பச்சையப்பன் கல்லூரியில் ஒரே ஒரு அரிசன ஆசிரியர்தான் குப்புசாமி என்கிறவர்தான் எக்கனாமிக்ஸ் டிப்பார்ட்மெண்டிலே இருக்கிறார். அந்த இடத்திலே இந்த கமிட்டி போட்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தினுடைய கமிட்டி, அந்தக் கல்லூரி இன்றைக்கு அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. எனவே ஸ்டிரிக்டாக ஆர்டர் போட்டு, ஆசிரியர்களை வேலைக்கு எடுத்தாலும் சரி மாணவர்களை சேர்த்தாலும் சரி, அங்கே கம்யூனல் ஜி.ஓ.

அடிப்படையிலே மாணவர்களைச் சேர்க்க வேண்டும், ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பெற்றது)

எனவே அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். துரைமுருகன் சொன்னதைப்போல இருக்கிற அந்த அதிகாரிகள் தொடர்ந்து இருக்கவேண்டுமானால் கூட இந்தத் திருத்தம் இருக்கும் என்று. ஆகவே இருக்கிற அதிகாரிகளே தொடர்ந்து இருப்பார்கள் என்ற வாக்குறுதியை அவர் கொடுத்ததை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருக்கின்றவர்கள் சரியாக இருந்தால் அவர்களே இருக்க வேண்டும் என்றாலும், அவர்கள் சரியாக இல்லை என்றால் வேறு அதிகாரிகளைப் போடவேண்டும் என்றாலும், இந்தத் திருத்தம் தேவைப்படுகிறது. அதற்கு துரைமுருகன் அவர்கள் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு: துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆதரவு தருவதைப் பற்றி இல்லை. ஒரே ஒரு விளக்கம்தான் தேவை. இருக்கிற அதிகாரிகள் சரியாக இருக்கிறார்கள், துரைமுருகா, எனவே நீ ஒன்றும் கவலைப்படாதே, நான் அவர்களை போடுகிறேன் என்று சொல்லுங்கள், இல்லை இருக்கிறவர்கள் சரியாக இல்லை மாற்றப் போகிறேன் என்று சொல்லுங்கள், எனக்கு ஒன்றும் இல்லை. I do not have any vested interest.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே எதுவும் இல்லாமல் நான் அவற்றை எல்லாம் சொல்ல முடியாது. இருந்தாலும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றாலும் இந்தத் திருத்தம் தேவைப்படுகிறது, அவர்கள் சரியில்லை என்றால் மாற்றவேண்டும் என்றால் அவர்களை மாற்றுவதற்கும் இந்தத் திருத்தம் தேவைப்படுகிறது. ஆகவே. ஆதரவு தாருங்கள்.

திரு. துரைமுருகன் : எனவேதான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதுமே தெளிவாக இருக்கவேண்டும். நம் சபைக்கு தெரிந்தாக வேண்டும். உள்நோக்கத்தோடு இருக்கக் கூடாது. அவர் அதிகாரி தவறு செய்தும் இருக்கலாம் ; செய்யாமலும் இருக்கலாம் ; போட்டாலும் போடுவேன் ; போடாமலும் இருப்பேன்—அப்படியெல்லாம் இருக்கக்கூடாது. இந்த அவைக்குத் தெரிந்தாக வேண்டும். அமைச்சருக்கு இந்த அரசாங்கத்திற்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கும்போது 'கல்வி அமைச்சர் செய்கின்ற காரியங்கள் சரி' என்று சொல்லுகின்ற அளவுக்கு இருக்க வேண்டும்,





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்வது ரொம்ப விளக்கமாக தெளிவாகச் சொல்லுகிறேன். சரியாக இருப்பார்கள் என்கிற வரைக்கும் அவர்கள் இருக்க வேண்டும் என்றாலும் இந்தத் திருத்தம் தேவை ; அவர்கள் சரியில்லை என்று நாம் மாற்ற வேண்டுமென்றாலும் இந்தத் திருத்தம் தேவை. ஆனால் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இருக்கின்றவர்களே இருக்க வேண்டுமென்று அழுத்தி, அழுத்தி பேசியதினாலே நான் அது குறித்து விசாரிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அமைச்சர் நியாயத்தின் பால் இருப்பார் என்ற திடமான நம்பிக்கையில் இதுநாள் வரை இருந்தது, என்று நான் சொல்லுகின்ற காரணத்தால்— பாவம், அவர்களுக்கு அந்த பதவி பறிபோய்விடக்கூடாது என்பதற்காச் சொல்கிறேன். சொல்லுகிறவர்கள் யார் என்பது அல்ல முக்கியம். சொல்லப்படுகிற கருத்து முக்கியம்தானா என்பதை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் எடுத்துக் கொள்வார் என்ற நம்பிக்கை பட்டுப்போகாத காரணத்தால்தான் திருப்பிச் சொல்லுகிறேன். எனவே, ஒரு உள்நோக்கத்தோடு இந்த மசோதா வரக் கூடாது, வெட்ட வெளிச்சமாக, திறந்த பெட்டகமாக இந்த மசோதா இருக்க வேண்டும். பூடகமாக இருப்பதிலே இருந்து நீங்கள் யாரை நியமிக்கிறீர்களோ அதற்குப் பிறகு அதனுடைய காரணத்தை இந்த அவையிலே கூற இருக்கிறேன் என்று கூறி, அமர்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அனுபவம் பயன் பெறும் வகையில் பச்சையப்பன் பொறுப்பு கழகத்தினுடைய நிர்வாகக் குழுவைத் தொடர்ந்து பொறுப்பு வகிக்கக் கூடிய அளவில் இந்த திருத்தத்தை வரவேற்கிறேன்.

இந்தக்குழுவினுடைய ஆளுகையில் 6 கல்லூரிகள் இருக்கின்றன. இந்த கல்லூரிகளில் கல்வியாண்டின் இடையில் ஆசிரியர்கள் டிரான்ஸ்பர் செய்யப்படுகிறார்கள். எந்த வரைமுறையோடு செய்கிறார்கள் என்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டால், அதற்கு சரியான பதில் கிடையாது. இதுதான் பெரும் குறைபாடு. டிரான்ஸ்பர் செய்யட்டும், 'மிடில் ஆப் தி இயர்' நடுவில் டிரான்ஸ்பர் செய்தால் என்ன முறை? ஆசிரியர்கள் பாதிக்கப் படுவார்களாதலால், ஒரு வரைமுறை பயன்படுத்தப்படவேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள் இல்லாத அமைப்பிலே ஒரு குழுவை அமைப்பது ஜனநாயக ரீதியாக சரியல்ல. ஆகவே இதை மனதில் கொண்டு இந்த அடிப்படையில் ஜனநாயக பூர்வமாக ஒரு அமைப்பை ஏற்படுத்தினால் தான் இதற்கு ஒரு தீர்வு காண முடியும். இருக்கக்கூடிய பிரச்சினைகளை மாணவர்களை இணைத்துக் கொண்டு, பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்க்கக் கூடிய அளவிலே வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கொண்டு வந்திருக்கிற பச்சையப்பன் கல்லூரி டிரஸ்ட் திருத்த மசோதாவினை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், அருமை சகோதரர் துரைமுருகன் அவர்கள் கூறியதைப் போல, இதன் கீழ், 6 கல்லூரிகள் இருக்கின்றன ; 15 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன ; 20 எலிமெண்டரி பாடசாலைகள் இருக்கின்றன. ஆனால் இந்த கல்லூரியை ஆரம்பித்த ஸ்தாபகர் அவருடைய சொத்தெல்லாம் ஏழைகளுக்கு, அவர்களுடைய கல்விக்காக அறக் கட்டளையை உருவாக்கினார். ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ, அல்லது அன்றைய சூழ்நிலைகள் காரணமாக மலைவாழ் மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு எந்தவித பயனும் கிடைக்கவில்லை. இன்று சொல்கிற இந்து மதம் அழிகிறது ; இந்து மதத்திற்கு எதிர்ப்பு வந்து விட்டது, மதம் மாறுகிறார்கள் என்று பேசுகிற சகோதரர்கள், படித்த, மேதைகள், அறிவாளிகள், இந்த ஆதி திராவிட மக்களுக்கு மலைவாழ் மக்களுக்கு, ஏன் அவர்கள் செய்ய வேண்டிய கடமையை தவறி விட்டார்கள் என்று புரியவில்லை.

இருந்தாலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் நிச்சயமாக சீர்திருத்த கருத்துக்களிலே, பின் தங்கிய மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், தன்னுடைய கடமையை செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையிலே தான் கேட்கிறேன், இன்று நிர்வாகக் குழுவை அமைக்கிற போது அரசாங்கப் பணியாளர்களை நியமித்தாலும், வருங்காலத்தில் அரசியல் சார்பற்ற சகோதரர்களை நியமித்தாலும், குறிப்பிட்ட அந்த சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு பங்கு கொடுக்க வேண்டும். ஏனென்றால், அரசாங்கமே எடுத்துக் கொண்டது—தன்னுடைய சட்டங்களை கவுரவிக்க, கடைபிடிக்க முழு பொறுப்புள்ளது என்ற வகையிலே இது அமையும், அங்கே இருக்கிறவர்கள், சகோதரர் துரைமுருகன் சொன்னதைப் போல பச்சையப்பன் கல்லூரியிலே 80-க்கும் மேற்பட்டவர்கள் ஆசிரியர்களாக, பேராசிரியர்களாக இருக்கிற இடத்திலே ஒரே ஒரு தாழ்த்தப்பட்ட மகன் தான் இருக்கிறார் என்பதைச் சொல்லி, வருங்காலத்தில் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் சௌரிராஜன் அவர்கள் கூறியதைப் போல இந்த மசோதா விதிகளின் கட்டுப்பாட்டிற்கு கீழ் இருப்பதால், இந்த மசோதாவை வரவேற்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.





அதே நேரத்தில் இந்த பச்சையப்பன் டிரஸ்ட்டை எடுப்பதற்கு எப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் கடந்த சட்டமன்ற கூட்டத்திலே விரிவான முறையிலே பேசியிருக்கிறேன். ஆகவே, அதை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, நியமிக்கிற அதிகாரிகள் யாராக இருந்தாலும், இந்த நிதியை நல்ல முறையிலே பயன்படுத்தும் அளவிற்கு பொறுப்பு மிக்க அதிகாரிகளை போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பச்சையப்பன் கல்லூரியிலே தாழ்த்தப்பட்ட மக்கள், மற்ற சமூகத்தினருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கிற அளவில் இந்த மசோதாவை கொண்டு வரவேண்டும், அதிலே பொறுப்புகளை காட்ட வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

[பிற்பகல் 1.30]

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவுக்கு பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை நாங்கள் நிச்சயமாக கருத்திலே கொண்டு, எதிர்கால நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் நலனைக் கருதி, அந்தக் கருத்தை நாங்கள் நிச்சயமாக கருத்திலே கொள்வோம். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் பல்கலைக் கழகங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள் பேராசிரியர்களாக வருகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று ஏற்கெனவே ஒருமுறை சொல்லியிருக்கிறேன்.

மேல்நிலைக் கல்வி என்று வரும்போது அங்கே எல்லாம் குறிப்பிட்ட அளவுக்கு முயற்சி எடுத்து, வாய்ப்பு தருகின்ற வகையில் தனிப்பட்ட முறையிலே கூட நான் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் திருத்தத்தை ஏற்று, சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) குறித்த 1981-ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, "பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

**(அ) இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒருநாள் அடையாள அடைப்பு நடத்த சர்வ கட்சிக் கூட்டம்கூட்டுதல் (தொடர்ச்சி).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்த அவையிலுள்ள அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் அன்று இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கின்ற கொடுமைகள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவந்து, தங்களுடைய உணர்ச்சிகளை இங்கே தெரிவித்தார்கள். அப்போது நீண்ட விளக்கங்கள் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் சார்பாக இந்த அவையிலே வைக்கப்பட்டு, தமிழக மக்கள் சார்பாக இந்த அவையில் இருக்கிற அனைத்துக் கட்சிகளுடைய பிரதிநிதிகளும் ஒருமித்த கருத்துக்களை உலகுக்கும், இந்திய பேரரசுக்கும், இலங்கை அரசுக்கும் தெளிவுபடுத்துகின்ற முறையில் கருத்துக்களைச் சொன்னார்கள். எல்லோருடைய ஒருமித்த கருத்துக்களுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களையும் கூட்டிவைத்துப் பேசி, முழு கடை அடைப்பு, முழு வேலை நிறுத்த நாள் ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் உணர்வுகளை அமைதியாகவும் ஆனால் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வெளியிட முடியும் என்று சொன்ன கருத்தை எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதற்கிணங்க இன்று பகல் 12-30 மணி அளவில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையில் வாழும் தமிழர்கள், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்க்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்படும் கொலை-கொள்ளை—கற்பழிப்பு-தீ வைப்பு-தொல்லை இழைத்தல்





போன்ற செயல்களுக்கு மனித பிமான அடிப்படையில் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தவும், எதிர் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படா வண்ணம் தடுத்து நிறுத்தும் நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட இந்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவும், உயிரிழந்து, உடைமையிழந்தும் உறுப்புகளிழந்து, வருந்தும் தமிழர்கள் அனைவருக்கும் இலங்கை அரசு நட்ட ஈடு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தவும், படுகொலைக்கு ஆளான தமிழர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்றும், உடைமையிழப்பு, உரிமையிழப்பு, ஆகியவற்றிற்கு ஆளாகி வருந்தும் தமிழர்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கவும் 8-9-1981 செவ்வாய்க்கிழமை முழு கடையடைப்பு, வேலை நிறுத்த நாளாகக் கடைபிடிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட முறைகளில் அந்த முடிவை நிறைவேற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(1) 8-9-1981 செவ்வாய்கிழமை முழு கடையடைப்பு—வேலைநிறுத்த நாளாகும்.

(2) அன்று தமிழ்நாடு முழுவதுமுள்ள எல்லா அரசு அலுவலகங்களும், அரசின் சார்பு அலுவலகங்களும், அரசு போக்குவரத்து உட்பட எல்லா போக்குவரத்துக்களும், தொழிற்சாலைகளும் எல்லாவிதமான கடைகளும் எல்லா வகையான வங்கிகள், பணிமனைகளும், அனைத்துப் பல்கலைக் கழகங்களும்-கல்லூரிகள்—பள்ளிகள் ஆகியவையும்—படப்பிடிப்பு நிலையங்கள் திரைப்பட அரங்குகள்—கலையரங்குகள்—வெளியார் உண்ணும் ஓட்டல்கள் போன்ற அனைத்தும் மூடப்படும்.

(3) மருத்துவ மனைகள்— குடிநீர் வடிகால்துறை—மின்சாரத்துறை—காவல்துறை பத்திரிகைகள் ஆகியவை மட்டும் வழக்கம் போல் பணியாற்ற அனுமதிக்கப்படும்.

(4) காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையில் முழு கடையடைப்பு—முழு வேலைநிறுத்தம் கடைபிடிக்கப்படும். (திரைப்பட கலையரங்குகள் அன்று முழுவதும் மூடப்படும்).

இந்த முழு கடையடைப்பு, வேலைநிறுத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சேர்ந்த தலைவர்கள் ஒருமித்த கருத்தோடு நிறைவேற்றிய தீர்மானத்தை இந்த அவையின் முன் வைக்கிறேன். எல்லோரும் அமைதியாக இருந்து இந்த முடிவினை நிறைவேற்றுவதன் மூலம் 4½ கோடி தமிழர்களின் உணர்ச்சிகளும் எப்படி இருக்கின்றது

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, "பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(அ) இலங்கைத் தமிழர்கள் இன்னல்கள் குறித்து ஒருநாள் அடையாள அடைப்புக்கு ஏற்பாடு செய்தால் நடத்த சர்வ கட்சிக் கூட்டம்கூட்டுதல் (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த அவையிலுள்ள அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் அன்று இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கின்ற கொடுமைகள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவந்து, தங்களுடைய உணர்ச்சிகளை இங்கே தெரிவித்தார்கள் அப்போது நீண்ட விளக்கங்கள் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் சார்பாக இந்த அவையிலே வைக்கப்பட்டு, தமிழக மக்கள் சார்பாக இந்த அவையில் இருக்கிற அனைத்துக் கட்சிகளுடைய பிரதிநிதிகளும் ஒருமித்த கருத்துக்களை உலகுக்கும், இந்திய பேரரசுக்கும், இலங்கை அரசுக்கும் தெளிவு படுத்துகின்ற முறையில் கருத்துக்களைச் சொன்னார்கள். எல்லோருடைய ஒருமித்த கருத்துக்களுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களையும் கூட்டிவைத்துப் பேசி, முழு கடை அடைப்பு, முழு வேலை நிறுத்த நாள் ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் உணர்வுகளை அமைதியாகவும் ஆனால் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வெளியிட முடியும் என்று சொன்ன கருத்தை எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதற்கிணங்க இன்று பகல் 12-30 மணி அளவில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையில் வாழும் தமிழர்கள், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்க்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்படும் கொலை-கொள்ளை-கற்பழிப்பு-தீ வைப்பு-தொல்லை இழைத்தல்





போன்ற செயல்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தவும், எதிர் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படா வண்ணம் தடுத்து நிறுத்தும் நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட இந்திய அரசு முன்வர வேண்டு என்று கேட்டுக்கொள்ளவும், உயிரிழந்து, உடைமையிழந்தும் உறுப்புகளிழந்து, வருந்தும் தமிழர்கள் அனைவருக்கும் இலங்கை அரசு நட்ட ஈடு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தவும், படுகொலைக்கு ஆளான தமிழர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்றும், உடைமையிழப்பு, உரிமையிழப்பு, ஆகியவற்றிற்கு ஆளாகி வருந்தும் தமிழர்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கவும் 8–9–1981 செவ்வாய்க்கிழமை முழு கடையடைப்பு, வேலை நிறுத்த நாளாகக் கடைபிடிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட முறைகளில் அந்த முடிவை நிறைவேற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(1) 8-9–1981 செவ்வாய்கிழமை முழு கடையடைப்பு—வேலைநிறுத்த நாளாகும்.

(2) அன்று தமிழ்நாடு முழுவதுமுள்ள எல்லா அரசு அலுவலகங்களும், அரசின் சார்பு அலுவலகங்களும், அரசு போக்குவரத்து உட்பட எல்லா போக்குவரத்துக்களும், தொழிற்சாலைகளும் எல்லாவிதமான கடைகளும் எல்லா வகையான வங்கிகள், பணிமனைகளும், அனைத்துப் பல்கலைக் கழகங்களும்-கல்லூரிகள்—பள்ளிகள் ஆகியவையும்—படப்பிடிப்பு நிலையங்கள் திரைப்பட அரங்குகள்—கலையரங்குகள்—வெளியார் உண்ணும் ஓட்டல்கள் போன்ற அனைத்தும் மூடப்படும்.

(3) மருத்துவ மனைகள்— குடிநீர் வடிகால்துறை—மின்சாரத்துறை—காவல்துறை பத்திரிகைகள் ஆகியவை மட்டும் வழக்கம் போல் பணியாற்ற அனுமதிக்கப்படும்.

(4) காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையில் முழு கடையடைப்பு—முழு வேலைநிறுத்தம் கடைபிடிக்கப்படும். (திரைப்பட கலையரங்குகள் அன்று முழுவதும் மூடப்படும்).

இந்த முழு கடையடைப்பு, வேலைநிறுத்தம் நிறைவேற்றப் பட வேண்டும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சேர்ந்த தலைவர்கள் ஒருமித்த கருத்தோடு நிறைவேற்றிய தீர்மானத்தை இந்த அவையின் முன் வைக்கிறேன். எல்லோரும் அமைதியாக இருந்து இந்த முடிவினை நிறைவேற்றுவதன் மூலம் 4½ கோடி தமிழர்களின் உணர்ச்சிகளும் எப்படி இருக்கின்றது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1981 ஆகஸ்ட் 31]

என்பதை உணர்ந்து அதற்கேற்றபடி இலங்கை அரசு தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளும் வகையில் தக்க முடிவுகளை எடுப்பதற்குரிய வகையில் அதற்கு உறுதுணை செய்கின்ற வகையில் சட்டத்திற்கு உட்பட்ட வகையில், இந்திய அரசு முறைகளை மேற்கொள்கின்ற வகையில் எந்த அளவுக்கு அந்த முறை பயன்படும் என்ற வகையில் இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு இந்த அறிக்கையை வைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, அர்த்தாவை ஒட்டி கடைகள் அடைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் கள்ளுகடைகள் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாவிதமான கடைகளும் என்று தெரிவித்திருப்பதன் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கடைகளும் அதிலே அடங்கும்.

8. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

(அ) அலுவல் வரிசையில் மாற்றம் (தொடர்ச்சி)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள மற்ற சட்ட முன் வடிவுகளுக்கு முன் 1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 79/1981) மற்றும் 1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 80/1981) ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பேற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஈ) பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ)

(உ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு. 1981 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 79/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவை தெரிவித்துள்ளார்.



1981 ஆகஸ்ட் 31]

1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 80/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இப்போதுதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள். ஆனால் யாரும் விவாதம் பண்ணத் தயாராக இல்லை. ஆகவே அதைப்பற்றிப் படிப்பதற்கு அவகாசம் வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அந்தச் சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்வது பற்றி, ஏற்கனவே அறிவிப்பு கொடுக்கப்பட்டு விட்டது. ஆகவே திடீரென்று எடுத்துக் கொள்ளவில்லை.

திரு துரைமுருகன்: எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு, அவகாசம் வேண்டும்.

7 அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(உ) பாரதியார் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1981.

(ஊ) பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 79/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 80/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

இவ்வமயத்தில் இச்சட்ட முன்வடிவுகள் பற்றி சில முக்கிய அம்சங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

---

*1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

*1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஆகஸ்ட் 31

பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் நிர்வாகம் குறித்து கஜேந்திர காட்கர் குழு பல்கலைக் கழகங்கள் இணைக்கப் பட்ட சுமார் 30 கல்லூரிகளுடன் கற்பிக்கும் துறைகளைக் கொண்டதாக அமைய வேண்டும் என்று பரிவுரை செய்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள 167 இணைக்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை, ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் எவ்வளவு கல்லூரிகள் இணைக்கப்படவேண்டும் என்று மேற் சொன்ன குழு பரிவுரை செய்ததோ அதை விட மிக அதிகமாக உள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இவ்வளவு அதிக அளவில் கல்லூரிகள் இருப்பதால், பல்கலைக் கழகத்தின் நிர்வாகத் திறமை மட்டுமின்றி கல்லூரிகளில் படிக்கும் மாணவர் கள் படிப்புத் திறனும் பாதிக்கப்படும். இந்த இடர்பாட்டை நீக்கி சென்னை பல்கலைக் கழகத்தைத் திறமையான முறையில் இயங்கச் செய்யும் பொருட்டு பாரதிதாசன், பாரதியார் என்ற புதிய பல்கலைக் கழகங்கலை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. இப்புதிய பல்கலைக் கழகங்கள் (1) கல்வி கற்பித்தல், (2) ஆராய்ச்சி, (3) வளர்ச்சிப் பணி நடவடிக்கைகள் ஆகிய முக்கிய துறைகளில் நாட்டம் செலுத்தும். மேற்சொன்ன பல்கலைக் கழகங்கள் பல கல்லூரிகள் இணைந்த பல்கலைக் கழகமாக இருக்கும்.

[பிற்பகல் 1.40]

இப்பல்கலைக் கழகங்களை ஏற்படுத்துவதன் மூலம் அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் விருப்பம் நிறைவேறுவதுடன், பட்ட மேற்படிப்பு நிலையங்களை வலுப்படுத்தவும் பகுதி நேரப் பாட முறைகள், அஞ்சல் வழிப் பாடமுறை மற்றும் அது போன்ற கல்வி முறைகளைப் பரவலாக்குவதற்கான கூடுதல் வசதிகளைப் பெறவும் வழி வகுக்கும்.

பாரதியார் பல்கலைக் கழகத்தில் கோவை மாவட்டத்திலுள்ள கல்லூரிகளும், நீலகிரி பெரியார் மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளும் அடங்கும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் திருச்சி மாவட்டத்தி லுள்ள கல்லூரிகளும், தஞ்சாவூர் புதுக்கோட்டை மாவட்டத்தி லுள்ள கல்லூரிகளும் அடங்கும்.

இரண்டு பல்கலைக் கழகங்களும் மற்ற பல்கலைக் கழகங் களைப் போல் இணைக்கப்படும் கல்லூரிகளைச் சார்ந்தவை யாகும். (அப்: வியேட்டிங் டைப்)

இப்பலகலைக் கழகங்கள் சென்னை, மதுரை-காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களிலிருந்து பெரும் பான்மையான அம்சங்களில் வித்தியாசப்படும். அவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.



1981 ஆகஸ்ட் 31] திரு. செ. அரங்கநாயகம்

பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர் அரசால் மூன்றாண்டுகளுக்கு நியமிக்கப்படுவார். மொத்தத்தில் பிறகு நியமிக்கப்படும் துணை வேந்தரின் பதவிக்காலம் 6 வருடங்களுக்கு மேல் இருக்காது.

துணை வேந்தர நியமிப்பதில் குழுவின் அங்கத்தினர்களில் ஒருவரை அரசு நியமிக்கும் என்று சேர்க்கப்பட்டுள்ளது.

துணை வேந்தர், அவசர நிலைமைகளில் மட்டும் இணை வேந்தருடன் அல்லது வேந்தருடன் கலந்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதை மாற்றி நிலைமைக்குத் தக்கவாறு துணை வேந்தர் தகுந்த நடவடிக் கைகளை எல்லாக் காலங்களிலும் எடுப்பதற்கு ஏற்றவாறு அவருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

டெல்லிப் பல்கலைக் கழகச் சட்டத்தில் துணை வேந்தருடைய வயது வரம்பு 65 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மிகவும் கடினமான பொறுப்பு துணைவேந்தருடைய பொறுப்பாகும் என்ற காரணத்தால் இவ்வாறு வயது வரம்பு குறிப்பிடப்பட் டுள்ளது. இதைப் பின்பற்றி இப்பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவுகளிலும் துணைவேந்தருடைய வயது வரம்பு 65 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வயது வரம்பு இப்பல்கலைக் கழகங்களில் அமர்த்தப்படவிருக்கும் முதல் துணை வேந்தருக்கும் பொருந்தும்.

தற்போதுள்ள பல்கலைக் கழகச் சட்டங்களில் வேந்தர் செனட் சபையின் தலைவராகவுள்ளார். இப்பல்கலைக் கழகங்களின் சட்ட முன்வடிவுகளில் துணை வேந்தர் செனட் சபையின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு வகை செய்யப் பட்டுள்ளது.

இணை வேந்தருக்கு செனட் சபையிலும் பிரதிநிதிகளை நியமனம் செய்வதற்கு மற்ற பல்கலைக் கழக சட்டங்களில் இருந்து வேறுபடுமாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள், கலாசார நிறுவனங்கள், வணிக மன்றத், தொழில்கள், நூலாசிரியர்கள், பத்திரிகையாளர்கள், வழக்குரைஞர்கள், விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகிய துறைகளில் 8 உறுப்பினர் களுக்கு மேற்படாமல் பிரதிநிதிகளை இணைவேந்தர் நியமனம் செய்யலாம். மேலும் இணை வேந்தர். 6 பேர்களில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோரிடையேயிருந்து பிரதி நிதித்துவம் அளிக்கும் வகையில் 3 பேருக்குக் குறையாமல் உறுப்பினர்களை நியமனம் செய்யலாம்.

முதல் பதிவாளரையும், நிதி அதிகாரியையும் அரசு நியமிக்கும். தேர்வுகள் நடத்தும் அதிகாரி என்ற முழுநேர அதிகாரி பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஆகஸ்டு 31

தனியார் கல்லூரி நிர்வாகத்தினருக்கு, செனட் சபையில் ஒருவருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிக்குழுவில் 2 பல்கலைக் கழகப் பேராசிரியர்களுக்கும் சிறப்புப் பேராசிரியர் ஒருவருக்கும், விரிவுரையாளர் ஒருவருக்கும் பிரதிநிதித்துவம் முதன்முறையாக அளிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்திலுள்ள எந்த அதிகாரி பற்றியும் ஆவணங்களைக் கேட்பதற்கோ, பரிசீலனை செய்வதற்கோ வேந்தருக்கும் அதிகாரம் இருக்கும்படி வகை செய்யப்பட்டுள்ளது. துணைவேந்தர் மற்றும் அவர்கீழ் பணிபுரியும் அதிகாரிகள் யாவரையும் பொது ஊழியர்களாகக் கருதி அவர்கள் மீது லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை எடுப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டமுன்வடிவுகளில் மற்ற பல்கலைக் கழகச் சட்டங்களில் உள்ளவாறு கல்விக்குழு என்ற சபை இல்லை. பல்கலைக் கழகத் துணை வேந்தர்களின் கூட்டத்தில் எடுத்த முடிவினையொட்டி கல்விக்குழுவும், ஆலோசனைக்குழுவும் ஒன்றாக இணைக்கப்பட்டு கல்விக்குழுவில் பங்கு பெறுகின்ற உறுப்பினர்கள் யாவரும் ஆலோசனைக்குழுவில் இடம் பெறுமாறு சேர்க்கப்பட்டுள்ளது. கல்விக்குழுவிற்குப் பதிலாகக் கல்வி விவகாரங்கள் குறித்த நிலைக் குழு என்ற ஒரு சிறு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் உறுப்பினர்களும் அதனுடைய அதிகாரங்களும் பணிகளும் பல்கலைக் கழகத்தால் தீர்மானிக்கப்படும். இதற்கேற்ப சட்டமுன்வடிவுகளில் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் செனட் சபை ஆலோசனைகளை கூறுகின்ற செயல்களைச் செய்யும் 'டெலிபரேட்டிவ் பாடி' என்று மாற்றப்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இப்பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவுகளில் இணைக்கப்பட்டுள்ள முதல் சட்ட திட்டங்களில் நவீன முறையில் உள்ளவாறு படிப்புத் துறைகள் அமைத்தல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் மத்திய அரசின் அதிகாரத்தின்கீழ் உள்ள பல்கலைக் கழகங்களில் உள்ளவாறு நிதிக் குழுவில் ஒருவர் வேந்தரால் நியமனம் செய்யப்படுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவர் ஆட்சிக் குழுவின் உறுப்பினர்களிடையே இருந்து நியமனம் செய்யப்படுவார். மற்றொருவர் பேராசிரியராக இருப்பார்.

முதல் முறையாகத் திட்டக்குழு ஒன்று இப்பல்கலைக் கழகங்களில் சட்டமுன்வடிவுகளில் இந்திய அரசின் ஆலோசனையின் பேரில் சேர்க்கப்பட்டுள்ளது.



[திரு. செ. அரங்கநாயகம்] [31 ஆகஸ்டு 1981

ஆலோசனைக் குழுவின் அதிகாரங்கள் ஆட்சிக் குழுவிற்கு மாற்றப்படுகின்ற வகையில் விதித்துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்சொன்ன கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பதே இப்பல்கலைக் கழகங்களின் சட்டமுன்வடிவுகளின் நோக்கமாகும்.

இந்தச் சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமாறும், பின்பு நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அவைக்கு பரிந்துரைக்கின்றேன்.

**திரு. துரைமுருகன் :** ஸ்பீக்கர் ஸார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு நீண்ட விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். இது ஒரு பல்கலைக்கழகம் சம்பந்தமானது. செனட் சிண்டிகேட் மற்றவை எல்லாம் வருகின்றன. இதை, அவசரக்கோலத்தில் அள்ளித்தெளித்தாற் பால் இரண்டு மணிக்குள் முடிக்கவேண்டும் என்று சொன்னால் இப்போதே மணி 1.45 ஆகிவிட்டது. கால்மணி நேரத்தில் முடிக்கமுடியாது. ஆகவே, அமைச்சர் அளித்த இந்த விளக்கங்களை எல்லாம் உறுப்பினர்களுக்கு சர்குலேட் செய்யவேண்டும். நாங்கள் அதைப் படித்துவந்து தெளிவாகப் பேச வாய்ப்பிருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பில்லில் உள்ள முக்கியமான சில கருத்துக்களைத்தான் நான் எடுத்துச் சொன்னேனே தவிர புதிதாக எதுவும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பில்லை படித்திருப்பார்கள். முக்கியமானவற்றை மட்டும்தான் கோடிட்டுக்காட்டினேன்.

**திரு. என். சங்கரய்யா :** இந்த மசோதாவை நாளைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதுதான் பொருத்தமாகயிருக்கும். இது பெயர் அளவில் இரண்டு பல்கலைக்கழகங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரச்னை அல்ல. ஏற்கனவே உள்ள பல்கலைக் கழகச் சட்டங்களுக்கு மாறுபட்டுள்ள பல அம்சங்களைப்பற்றி இந்த மசோதாவில் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று மாலை வைத்துக் கொள்ளலாம் என்றாலும் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். இப்போது இதைப்பற்றி விவாதிக்கலாம் என்றாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்.

**திரு. என். சங்கரய்யா :** நான்—அபிஷியல் டே அன்று பெரும் பகுதி நேரத்தை இதற்காக எடுத்துக்கொள்ளலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்.

**திரு. ரா. உமரநாத் :** நான்—அபிஷியல் டே அன்று இரண்டு பேர்களுக்கு இடம் ஒதுக்கிவிட்டு பாக்கி நேரத்தை இதற்காக எடுத்துக்கொள்ளலாம் என்று ஏற்கனவே சொல்லிவிட்டோம்.

1881 ஆகஸ்டு 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நான்கு மணிநேரம் வேண்டுமானாலும் தரத் தயாராயிருக்கிறேன். எதிர்க்கட்சியினர் ஆனந்தமாகப் பேசலாம். நல்ல கருத்துக்களை நிறைய பேச வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். அது நாட்டுக்கும் அவைக்கும் தேவை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியார் தீர்மானம் வருகிற அன்று பல மணி நேரம் விட்டுக் கொடுப்பதன் காரணமாகவும், கடைசியில் அரை அல்லது ஒரு மணி நேரம் கொடுப்பதால் போதும் என்று கூறுவதாலும், இப்போது பசி ஏற்பட்டு பல்கலைக்கழகம் பற்றி விவாதிக்க முடியாது என்று பலர் கூறுவதைக் கருதியும் இப்போது அவையை ஒத்திவைத்து நாளைக் காலை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1-9-1981 அன்று காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

15. வருவாய்த் துறையில் 7-9-1981 ஆம் தேதியன்று வெளியாகி 8-9-1981 ஆம் தேதியிடப் பெற்ற, தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-2, பிரிவு-1, பக்கம்-2ல் வெளியான II-1 39 7 (ஆ)/1971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 5-3-1981 ஆம் தேதியிடப்பெற்ற 514 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

106. தமிழ்நாடு 1964 ஆம் ஆண்டு மின்சார (பயன்பாட்டின் மீதான வரிவிதிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுப் பணிகள் (மின்சாரம்) துறையின் 25-2-19 1 ஆம் தேதியிடப் பெற்ற 257 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு மின்சார (பயன்பாட்டின் மீதான வரிவிதிப்பு) சட்டத்தின் 17 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது];

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

30. தமிழ்நாடு 19 1 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/19 1).

31. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்பு நிலங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1981),

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

செவ்வாய்க்கிழமை, 1981 செப்டம்பர் 1,

ஆவணி 16, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற''

ஒரு செயலைச் செய்வதில் உறுதிப்பாடு என்று சொல்லப் படுவது அச்செயலைச் செய்பவனுடைய உள்ளத்தின் உறுதியே ஆகும். மற்றன எல்லாம் இதற்குப் பிற்பட்டனவே ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பழனியிலுள்ள டான்சி மூலம் உற்பத்தியாகும் பொருள்கள்

*வினா எண். 141—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் உள்ள டான்சி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்வி எழாது.

திரு. என். பழனிவேல் : பழனியில் அரசுத் துறையில் இயங்கக்கூடிய ஒரே ஒரு தொழிற்சாலை ''டான்சி'' தொழிற் சாலை மட்டும்தான். அதிலே நூற்றுக்குக் குறைவானவர்களே

வேலை செய்கிறார்கள். ஆனால், அங்கே நல்ல தரமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் நமது தமிழகத்திற்கும் இந்திய நாட்டுக்கும் அந்நியச் செலாவணியை சம்பாதிக்க அரசு முயற்சிக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பழனியில் அமைந்திருக்கும் "டான்சி" இரும்பு எஃகு சாமான்கள் செய்யும் தொழிற்சாலை இன்றைய தினம் இலாபத்தில் இயங்கி வருகிறது. 1979–80-இல் ரூபாய் 3.20 இலட்சம் இலாபத்தை அந்த நிறுவனம் ஈட்டித் தந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற இரும்பு எஃகு சாமான்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலவாணியை ஈட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அங்கே உற்பத்தி செய்கிற இரும்பு எஃகு சாமான்களுக்கு நம்முடைய நாட்டிலேயே தேவை இருக்கிறது. 1979–80-ம் ஆண்டு அங்கே ஏறத்தாழ 24,23,000 ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகி இருக்கிறது. உற்பத்தி செய்கிற பொருளுக்கு உள்நாட்டிலேயே தேவை இருக்கிற காரணத்தால் வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியமும் இல்லை, கட்டாயமும் இல்லை.

திரு. என். பழனிவேல்: அந்தத் தொழிற்சாலை தற்போது இலாபகரமாக நடந்து கொண்டிருப்பதாகவும் இந்த ஆண்டு கூட 3.20 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இலாபகரமான தொழிலாக இருக்கக்கூடிய அந்தத் தொழிலை ஏன் அபிவிருத்தி செய்ய முயற்சிக்கவில்லை? அது ஆரம்பகாலத்திலிருந்தே ஒரே அளவில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆட்களையும் அதிகமாக எடுப்பதாகத் தெரியவில்லை. இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கும் அந்தத் தொழிலை மேலும் விஸ்தரித்து பல தொழிலாளர்களுக்கு அந்தப் பகுதியில் வேலைகொடுக்க அரசு இனியாவது முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நிச்சயம் அரசு தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கும்.

### பத்திரிகை நிருபர்களுக்கான அரசு அங்கீகாரம்

*வினா எண். 142—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகை நிருபர்களுக்கான அரசு அங்கீகாரம் (Press Accreditation) வழங்குவது தினசரியில் பணியாற்றுபவர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறதா?



(ஆ) ஆம் எனில், வார, மாத இதழ்களில் பணியாற்றுபவர்களுக்கும் வழங்கும் யோசனை அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) பத்திரிகை நிருபர்களுக்கான அரசு அங்கீகாரம் தற்பொழுது நாளிதழ்களில் பணிபுரியும் நிருபர்கள், புகைப்படக்காரர்கள், செய்தி நிறுவனங்களைச் சார்ந்த நிருபர்கள், வானொலி, தொலைக்காட்சியினைச் சார்ந்த செய்தி ஆசிரியர்கள், நிருபர்கள் ஆகியோருக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

(ஆ) வார, மாத இதழ்களில் பணியாற்றும் நிருபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அரசு அங்கீகாரம் அளிப்பது கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எத்தகைய பருவ ஏடுகளைச் சார்ந்தவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பது என்பதை அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: அந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா? அதைப் பற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்ற கேள்வி என்றாலும் அந்தச் சட்ட முன்வடிவு ஆளுநருடைய அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது பெறப்பெற்றவுடன் சட்டமன்றத்திலே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும்.

திரு. ரி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகாரம் பெற்ற நிருபர்களை கர்நாடகமும் டில்லியும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அனுப்புவதைப்போல தமிழக அரசும் அனுப்ப ஏற்பாடு செய்யுமா? பத்திரிகைகள் நாட்டுக்குப் பயனுள்ள செய்திகளையே பிரசுரம் செய்யக்கூடிய வகையில் மனவளம் பெறுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற கேள்வி இங்கே பணியாற்றுகின்ற பத்திரிகை நிருபர்களுக்கு எப்படிப்பட்ட வசதிகள் செய்து தரப்படுகின்றன என்பதுதான். அதற்கான பதிலை அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செண்ட் கேட்கின்ற கேள்வி அரசின் கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டிய கேள்வி.

திரு. ப. நெடுமாறன்: அவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு அரசு அங்கீகாரம் சென்னையிலிருந்து பதிப்புகளை வெளியிடும் பத்திரிகைகளுக்கு மட்டுந்தான் அளிக்கப்படு

கிறது. வெளி மாவட்டங்களிலிருந்து வெளியாகும் பத்திரிகையைச் சேர்ந்தவர்களுக்கும் பிரஸ் அக்ரடிட்டேஷன் கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலே இருந்து பத்திரிகை வெளியிட்டாலும் அவர்களுக்கும் அங்கீகாரம் கிடைக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 10-1-1979-ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாவட்டத் தலைநகரங்களில் இருந்து வெளிவருகின்ற அந்தந்தப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கும் இந்த அனுமதியை வழங்கலாம் என்று அரசு ஆணையிட்டு உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, அரசு அங்கீகாரம் செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்களுக்கு என்ன என்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றன்? என்ன என்ன் சலுகைகள் வழங்க உத்தேசிக்கபபட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த அனுமதி பெறப்பட்ட பத்திரிகை நிருபர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் போக்குவரத்து பேருந்துகளிலே பயணம் செய்யவும் அரசு நிகழ்ச்சிகளிலே, சட்டமன்றங்களிலே நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் அழைக்கப்பெற்று அங்கே வந்து கலந்து கொள்ளவும், அதுபோல் அரசு ஒதுக்குகிற வீடுகளில் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றபோது முன்னுரிமை பெறவும் வசதிகள் இது போன்ற வசதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு அரசு அங்கீகாரம் கொடுக்கிறது. ஆனால் அங்கீகாரம் கொடுத்தவுடன் திடீரென்று அந்தப் பத்திரிகைகள் நொடித்துப் போய் மூடிவிடுகிறார்கள். அதனால் அங்கீகாரம் பெற்ற நிருபர்கள் பிளாட்பாரத்திலே அலைந்து கொண்ருக்கிறார்கள். எனவே நொடித்துப்போய் விட்ட பத்திரிகைகளை அரசே மேற்கொண்டு அதன் மூலமாக வேலையிருந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் அரசிடத்திலே இல்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு அரசு எதன் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கிறது? தினசரி பத்திரிகைகளுக்கு அளிக்கப்படக்கூடிய அங்கீகாரம் வார, மாத இதழ்களுக்கு அளிக்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? பத்திரிகைகள் என்றால் நடந்த செய்திகளை தெளிவாக எடுத்துச் சொல்வனவாக இருக்கவேண்



டும். நடக்காத செய்திகளை, பல பிரச்சனைகளை உருவாக்குகிற முறையிலே வதந்திகளை உருவாக்கக்கூடிய முறையிலே போடுகின்ற நிலையும் இருக்கிறது. எனவே ஏதாவது பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து அதன் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களை அல்லது துணை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு என்று இப்படிப்பட்ட வசதிகளை அளிப்பதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவின் பரிசீலனையில் எந்த எந்தப் பத்திரிகைகள் தகுதி வாய்ந்தவை என்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனவோ அந்தப் பத்திரிகைகளுக்கு வழங்கப்படுகிறது. நாளிதழ்கள் அன்றாடம் செய்திகளைத் தரவேண்டிய அவசியத்திலே இருக்கின்ற காரணத்தினாலே இத்தகைய வசதிகளைத் தரவேண்டுமென்று முன்னாலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில வார இதழ்களும் நாட்டு நடப்புகளை சட்டமன்ற நிகழ்ச்சிகளை பல்வேறு நிகழ்ச்சிகளைத் தாங்களும் தொகுத்துத் தருகின்ற பணியிலே ஈடுபடுகின்ற காரணத்தினாலே அவர்களுடைய நிருபர்களும் அந்த வசதிகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதையொட்டி அரசு அவர்களுக்கும் வழங்கலாம் என்று கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. அதை அந்தக் குழுவில் வைத்து அந்த அந்தப் பத்திரிகைகள் அந்தத் தகுதிக்குள்ளே வருகிறதா என்று பார்த்து வழங்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, அங்கீகாரம் பெற்ற பத்திரிகை நிருபர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். நல்ல திட்டம். சிட்டிக்குள்ளேதான் போவதற்கு வழங்கப்படுகிறது என்பது எனக்குத் தெரிந்தவரையில் தகவல். வி.ஐ.பி.க்களுக்கு வழங்கப்படுவதைப் போல் வெளி மாநிலங்களுக்கும் மாவட்டங்களுக்கும் தாராள மனதோடு இந்த அரசு பஸ் பாஸ் தருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சென்னை நகரத்திலே இந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு அல்லது பத்திரிகையாளர்களுக்கு தரப்படுகின்ற வசதிகள், சென்னை நகரத்திலே செய்திகளைச் சேகரித்து அவர்கள் அனுப்ப வேண்டுமென்ற அடிப்படையில் தரப்படுகிறது. அதைப்போல் மாவட்ட தலைநகரங்களில் இருப்பவர்களும் மாவட்டகளுக்குள்ளே செல்வதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது. இதைத்தவிர பத்திரிகையாளர்களை செய்தி-மக்கள் தொடர்புத் துறையினர் நம் அரசாங்க செலவிலேயே கார்களில் அழைத்துக்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் வெளியூர்களுக்கும் அழைத்துச் செல்கிறார்கள், அவர்கள் பணியாற்ற வேண்டிய நேரங்களில். ஆனால், தனியாக அவர்கள் சுற்றுப்பயணம் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அதைப் போக்குவரத்துத்துறை தான் பரிசீலிக்க வேண்டும்.

## போடியிலுள்ள விவசாய நிலங்களுக்கு யானைகளால் ஏற்பட்ட சேதம்.

*வினா எண். 143— திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கேரளாவிலிருந்து தேவாரம்மெட்டு, போடிமெட்டு மலைப்பகுதி வழியாக கேரள யானைகள் வந்து போடியில் உள்ள விவசாயப்பகுதிகளை சேதம் செய்வது பற்றி அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அவ்வாறு சேதம் ஏற்படாமல் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம். 31–12–1978 ஆம் நாள் பரமசிவம்கோவில்கிராமம் பாதிக்கபட்டதாக உத்தமபாளையம் தாசில்தார் அறிக்கையும் 23–10–1979 ஆம் நாள் தொட்டிபுரம் கிராமம் பாதித்ததாக பொட்டிபுரம் ஊராட்சி மன்ற முன்னாள் உபதலைவரிடமிருந்தும் 28–2–1980 ஆம் நாள் அகமலை கிராமம் பாதிக்கப்பட்டதாக கிராம விவசாய சங்கத் தலைவரிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன.

(ஆ) மேற்கூறிய யானைகள் தாக்கியதன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட சேதம் மிகச் சொற்பம்தான். யானைகளைக் காட்டிற்குள் விரட்டியடிக்க கிராம மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான உதவிகளை காட்டிலாக்கா ஊழியர்கள் செய்து கொடுத்துள்ளார்கள்.

(முற்பகல் 9–10)

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி வருஷந்தோறும் கோடைக் காலத்திலே யானைகள் கேரளாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து இங்கு பயிராகிற விளை நிலங்களை அழிக்கின்றன. அவை நிரந்தரமாக வராமல் தடுக்க அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளுக்குள்ளே வாழ்கிற விலங்கினங்கள் ஒவ்வொரு பருவ காலத்திலேயும் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குப் பயணம் செய்வது என்பது வழக்கமாக இருந்து வருகிற ஒன்றாகும். சில நேரங்களில் சில பகுதிகளில்



தண்ணீர் கிடைக்கவில்லையானால், தண்ணீர் கிடைக்கிற பகுதியை நோக்கி யானைகளும் மற்ற விலங்கினங்களும் செல்கின்றன. ஆகவே, இயற்கையான அந்தச் சூழ்நிலையைப் பாதுகாக்கத்தான் அரசாங்கம் முயற்சி எடுக்கிறதே தவிர, அதை அழிப்பதற்கோ தடுப்பதற்கோ முயற்சி எடுக்க முடியாது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து வரக்கூடிய யானைகள் திரும்பிச் செல்லும்போது தமிழ் நாட்டு மலைப்பகுதிகளிலே இருக்கக்கூடிய நமது யானைகளையும் சேர்த்து அழைத்துச் செல்வதாக அறிகிறோம். அப்படியிருக்கும்போது இங்குள்ள யானை வளம் குறைகிறது. அதைத் தடுப்பதற்காக கேரள, தமிழ் நாடு அரசுகள் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றிய குறிப்புகள் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, யானைகளைப் பொறுத்தவரை அவை கேரள யானை அல்லது தமிழ்நாட்டு யானை அல்லது கர்நாடக யானை என்று பிரிக்க முடியாது. அவைகளெல்லாம் தொடர்ந்து மலைப்பகுதிகளிலே, காடுகளிலே வசித்து வருகின்றன. ஆகவே, இந்த மூன்று மாநிலங்களிலும் இந்த யானைகள் போக்குவரத்தும் வைத்துக் கொண்டிருக்கின்றன, உறவையும் வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த உறவைப் பிரிப்பது நம் இயற்கையைப் பிரிப்பது போலாகும். அந்தப் பாவத்திற்கு நாம் ஆளாகக் கூடாது.

## மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நீண்டகாலக் கடன்கள்.

*வினா எண். 144—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையில் மண்வளப் பாதுகாப்பு திட்டப் பிரிவு வேலைக்காக, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் திட்டத்தில் கடன் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், என்ன வேலைகளுக்காக கடன் வழங்கப்படுகிறது ?

(இ) எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது ?

(ஈ) உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ)—

| | |
|---|---|
| சம உயர வரப்பிடுதல் .. | ஏக்கருக்கு ரூபாய் 150 முதல் ரூபாய் 200 வரை. |
| நிலம் சமன் படுத்தல்.. .. | ஏக்கருக்கு அதிக பட்சம் ரூபாய் 1,000 வரை (தனிப்பட்ட நபருக்கு மொத்தம் அதிக பட்சம் ரூபாய் 5,000). |
| பாசனக்குழாய் அமைத்தல் .. | ஏக்கருக்கு அதிக பட்சம் ரூபாய் 1,000 (தனிப்பட்ட நபருக்கு மொத்தம் அதிக பட்சம் ரூபாய் 5,000). |
| படிமட்டம் அமைத்தல் மற்றும் சம உயர கற்சுவர் கட்டுதல் | ஏக்கருக்கு ரூபாய் 2,500. |
| நில நீர் வேளாண்மைப் பணிகள் .. .. .. | ஏக்கருக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 250 வரை. |
| ஓடை அரிப்பு, பராமரிப்பு பணிகள் .. .. .. | ஏக்கருக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 250 வரை. |

(ஈ) தற்போதைக்கு உயர்த்தும் உத்தேசம் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அறிவித்திருப்பது ரொம்ப காலத்திற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுது விலைவாசிகள் எல்லாம் ஏறிவிட்டன. ஆகவே, அந்த அடிப்படையில் மீண்டும் பரிசிலனை செய்து, இந்தத் தொகையினை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலைக்கேற்பத்தான் அத்தகைய ஏற்பாடுகளை நாம் செய்ய முடியும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை நாம் பரிசீலிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பொறியியல் துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் ஒரு போராட்டம் நடத்தி சிறைப்படுத்தப்பட்ட பின்னாலே அவர்கள் சொந்த ஜாமீனிலே வெளி வந்து இன்னும் சஸ்பென்ட் செய்யப்பட்ட நிலையிலே இருக்கிறார்களே, அவர்களை அழைத்து......



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேளாண்மைப் பொறியியல் துறையில் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் திட்டத்தில் கடன் வழங்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. நீங்கள் கேட்ட கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அதிகபட்சம் 5,000 ரூபாய்க்கு மேல் கொடுக்கமுடியாது, நிதி நிலைமையைப் பொறுத்து பார்க்கலாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே ஒரு கிணற்றிலே மண் அதிகமாகி அதனை அப்புறப்படுத்தவேண்டுமானால் குறைந்த பட்சம் 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் தேவைப்படுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவு செய்து மறுபரிசீலனை செய்து ஒரு நபர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ. 10 ஆயிரம் கொடுக்க வழி வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எதிர்பாராத முறையில் ஏற்படுகின்ற சூழ்நிலையில் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை அரசு கவனிக்கும். இப்போது அதை உயர்த்துகின்ற உத்தேசம் இல்லை என்றுதான் நான் சொன்னேன். இருந்தாலும் இப்போதுள்ள நிதிநிலையை வைத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, அண்மையில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு, அடிவெட்டு செய்வதற்கு நிறையபேர்கள் மனு கொடுத்துள்ளார்கள். கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அப்படி எவ்வளவு பேர்கள் மனு கொடுத்தார்கள். மனு கொடுத்த அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மண்வளப் பாதுகாப்புத் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தினால், கண்மாய்களுக்கு வருகிற தண்ணீர் தடை செய்யப்படுகிறது என்று ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஆட்சேபணை செய்யும் இடங்களிலாவது இது தவிர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, குறிப்பிட்டுக் கூறினால் அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

[1981 செப்டம்பர் 1

வடாற்காடு மாவட்டத்திலுள்ள பெருவிளக்கப் பண்ணைகள்.

*வினா எண். 145—திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எடுத்துக்கொண்ட பெரு விளக்கப் பண்ணைகள் எத்தனை ?

(ஆ) இதற்காக செலவு செய்த தொகை யாது ?

(இ) இதனால் கிட்டிய பலன் என்ன ?

(ஈ) கனியம்பாடி பெருவிளக்கப் பண்ணையில் செய்த காரியங்கள், திட்டங்கள் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பத்து இடங்கள்.

(ஆ) ரூபாய் 9.486 இலட்சம்.

(இ) பலன்கள்—

(1) சம உயர வரப்பிடுதலால் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

(2) நில நிரவல் மூலம் மேடு பள்ளமுடைய நிலங்கள் சம மட்டமாக்கப்பட்டு நல்ல விளை நிலமாக்கப்படுகிறது.

(3) பூமிக்கடியில் குழாய் பதிப்பதால் மேடான நிலத்திற்கு நீரைக் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் நீர் சேதமாவது தடுக்கப்படுகிறது.

(4) வண்டல்மண் ஏரிமண் சேர்ப்பதால் நிலத்தின் வளம் அதிகமாக்கப்படுகிறது.

(5) ஓடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டுவதன் மூலம் மழை நீரைத் தேக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும் பயன்படுகிறது.

(ஈ) 502 ஏக்கரில் ரூபாய் 43,858 செலவில் சம உயர வரப்பிடப்பட்டது (Contour bunding).

1-10 ஏக்கரில் ரூபாய் 1,445 செலவில் நில நிரவல் செய்யப்பட்டது.



1981 செப்டம்பர் 1]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் பெருவிளக்கப்பணியின் மூலம் 502 ஏக்கரில் 43 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அதில் என்னென்ன வேலைகள் செய்யப்பட்டன? அந்த வேலைகளில் மேலும் ஏதாவது குறை இருக்கின்றதா ? அந்த மாவட்டத்தில் சீர்திருத்தப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : புன்செய் சாகுபடி நிலங்களில் சம உயர வரப்புக்கள் அமைப்பது, ஓடை பராமரிப்புப் போன்ற பணிகளில், நீர் வசதியுள்ள சாகுபடி நிலங்களில் நிலங்களைச் சமப்படுத்துவது, வடிகால்களைத்தேவையான இடங்களில் வெட்டித்தருவது, பாசன நீர் வீணாகாமல் தடுப்பதற்கு, இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் புள்ளிவிவரங்கள் தற்போது இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த திட்டத்தில் 502 ஏக்கர் நிலத்தை எடுத்ததில் கனியம்பாடி பகுதியில் சில திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். அந்த அதிகார பூர்வமான வேலைகள், ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பணிகள் அனைத்தும் செய்யப்பட்டதா ? மேலும் ஏதாவது வேலைகள் அந்தப் பகுதிகளில் குறை வைக்கப்பட்டிருக்கிறதா ? அங்கே என்னென்ன திட்டங்கள் திட்டமிடப்பட்டன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைத்தான் குறிப்பிட்டுக் கூறினேன். 502 ஏக்கரில் 43,858 ரூபாயில் சம உயர வரப்பிடப்பட்டது என்றும், 1,445 ரூபாயில் நில நிரவல் செய்யப்பட்டது. இன்னும் முடிக்கப்படாத பணி ஏதாவது இருந்தால் அதை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருவிளக்கப்பணிகள் மூலம் பல இடங்களில் செய்ததாகச் சொன்னார்கள். அந்தப் பணிகள் தனியாருடைய நிலங்களிலும் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி செய்யப்பட்டிருந்தால் அதை மானியத்திலே செய்யப்பட்டதா அல்லது கடனிலே செய்து தரப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனியார் நிலங்களுக்கும் செய்யப்படுகிறது. சமவெளிப்பகுதிகளில் 25 சதவீதமும் மலைப்பகுதிகளில் 40 சதவீதமும் மானியமாக அரசு அளிக்கிறது. மீதி உள்ள தொகையை பணி முடிந்து இரண்டு வருடங்கள் சென்றபின் 10 ஆண்டுகளிலே நில வரியோடு சேர்த்து, அவ்வப்போது அனுமதிக்கின்ற வட்டிவிகிதத்தில் வட்டியோடு சேர்த்து வசூலிக்கப்படும்.

[1981 செப்டம்பர் 1

## தமிழ்நாடு மார்க்கட்டிங் கமிட்டி ஊழியர்களின் கோரிக்கைகள்.

*வினா எண் 146—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மார்க்கட்டிங் கமிட்டி ஊழியர்கள் பல வேறு கோரிக்கைகளை வற்புறுத்தி திருச்சி, வேலூர் போன்ற இடங்களில் ஊர்வலம் நடத்தி அரசுக்குக் கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) அரசுக்கு நேரடியாக மனு கொடுக்கப்படவில்லை ஆனால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவர்களிடம் மனுக்கள் கொடுக்கப்பட்டன.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

(முற்பகல் 9-20)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே மனு கொடுத்திருந்தாலும், அவர்கள் அதை அரசுக்கு அனுப்பி வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதிலே அவர்கள் என்னென்ன குறையினைக் காட்டி இருக்கிறார்கள். அரசாங்கம் அதில் ஏதாவது செய்திருக்கின்றதா ? செய்ய யோசித்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, திருச்சி விற்பனைக் குழு ஊழியர்கள் 17 கோரிக்கைகளையும், கோயம்புத்தூர் விற்பனைக் குழு ஊழியர்கள் ஏறத்தாழ 22 கோரிக்கைகளையும் தந்திருக்கிறார்கள். அது அரசுக்கு வந்திருக்கின்றது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அது பற்றிய விவரங்களைத் தனியாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமானால் தெரிவிக்கலாம்.

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, பல்வேறு மாவட்டங்களில் இருந்து கோரிக்கை வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விற்பனைக் குழுவின் ஊழியர்களும் கோரிக்கைகள் அனுப்பி இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது அரசுக்குக் கிடைத்திருக்கிறதா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் அரசாங்கத்திலே உள்ள வேளாண்மைத் துறை அதிகாரிகளால் ஒடுக்கப்படுவதாக ஒரு எண்ணம் பரவலாக இருக்கின்றது. அதை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்த அலுவலர்களையும் அரசாங்க அலுவலர்களாக எடுத்துக் கொள்கின்ற திட்டம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்குகின்ற எண்ணம் இருக்கின்றது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதிகாரிகள் ஒடுக்குவதாகச் சொன்னார்கள். மக்களாட்சி நடக்கின்ற நாட்டிலே யாரும் யாரையும் ஒடுக்க முடியாது.

திரு. ஏ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் பணியாற்றுகின்ற கண்காணிப்பாளர் போன்ற பணிகளை எல்லாம் வேளாண்மைப் பட்டம் படித்த அதாவது பி.எஸ்.ஸி. அக்ரி. படித்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பது பற்றி பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது உண்மையா ? தற்போது பணியாற்றுகின்ற அனுபவம் மிக்க கண்காணிப்பாளர்களே தொடர்ந்து கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றுவதற்கு அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள முறையினை இப்போது மாற்றும் உத்தேசம் இல்லை.

## குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை

*வினா எண் 147—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையை நவீன முறையில் விஸ்தரிக்க அரசு ஆலோசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, குடியாத்தத்திலே உள்ள கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப் பிறகு அந்த இடத்திலே மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே கரும்பு விஸ்தரிப்பு அதிகமாக ஆகி இருப்பதால் அந்த ஆராய்ச்சிப் பண்ணையையும் விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சிப் பண்ணை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தாலே நடத்தப்படுவதாகும். அங்கே ஆராய்ச்சிக்குத் தேவையான அத்தனை வசதிகளும் இப்போது இருக்கின்றன. எனவே அதை விரிவு படுத்த வேண்டிய தேவையில்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள பதிலில் அதனை விரிவுபடுத்தவேண்டிய தேவையில்லை என்று சொன்னார்கள். அங்கே என்னென்ன ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அந்த ஆராய்ச்சிகளின் பயனாக இதுவரையில் அடைந்த நன்மைகள் என்னென்ன? புதிய கரும்புகள் எத்தனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதிக மகசூல் தரக்கூடிய ரகங்கள், மாவட்டங்களுக்கேற்ற சாகுபடி முறைகள் இவைகளுக்காகத்தான் ஆராய்ச்சி கூட்டங்கள் நிறுவப்பட்டு அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடியாத்தம் ஆராய்ச்சிப் பண்ணையில் நோய் வராத கரும்புவிதைக் கருணைகளை அதிக அளவில் உற்பத்தி செய்து வடாற்காடு மாவட்டத்தில் விநியோகிக்கின்ற முழுத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்படி விதைக் கருணைகளை நீராவியால் பக்குவப்படுத்த போதுமான வசதிகள் அங்கே இருக்கின்றன. ஆகவேதான் அதை விரிவு படுத்தத் தேவையில்லை.

### ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 148—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல் ஆராய்ச்சிப்பண்ணை, வாழை ஆராய்ச்சிப் பண்ணையுள்ள ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஆடுதுறையில் தற்போது நெல ஆராய்ச்சி பண்ணை இருக்கின்றது. அங்கே வாழை ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. ஆடுதுறையை ஒட்டிய பகுதிகளில் தேவையான நன்செய், புன்செய் நிலங்கள் இருப்பதால் தமிழகத்திற்கு உணவு அளிக்கின்ற தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையை வேளாண்மைக் கல்லூரியாக மாற்ற அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆராய்ச்சிப் பண்ணை இருக்கும் இடத்திலேயெல்லாம் கல்லூரி அமைக்க முடியாது. வேளாண்மைக் கல்லூரியிலிருந்து 400 வேளாண்மைப் பட்டதாரிகள் ஆண்டுதோறும் வருகிறார்கள். அவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கொடுக்க முடிகிறது. அதிகப்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி இன்றுவரை வேளாண்மைப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இல்லைஎன்று கருதுகிறேன். எனவே, இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பி.எஸ்ஸி. (பாட்டனி), பி.எஸ்ஸி. (ஸுவாலஜி), படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். பி.எஸ்ஸி. (அக்ரி.) படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கலாம். எனவே, இதைப்பற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இன்றிருக்கின்ற நல்ல நிலையை நாளைக்குக் கெடுக்க வேண்டாம் என்பதுதான் அரசின் எண்ணம்.

### குளத்தூர் தாலூகா பேரம்பூர் கிராமத்திலுள்ள பாலத்தினை புதுப்பிக்கும் திட்டம்.

*வினா எண். 149—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா களமாவூர்-விராலிமலை செல்லும் சாலையில் (பேரம்பூர் கிராமத்தில்) உள்ள பாலத்தை புதிதாக கட்ட மதிப்பீடு தயார்செய்து அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இவ்வாண்டு இப்பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு உள்ளது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் சுமார் பதினைந்தாண்டுகளாகப் பழுதடைந்து மிகவும் சிரமமாக இருக்கிறது, போக்குவரத்து இதனால் தடைப்பட்டுள்ளது. பஸ், லாரி, ஆகியவை அடிக்கடி செல்ல வேண்டிய ரோடாக அமைந்திருப்பதால் இதற்கு முன்னுரிமை கொடுத்து விரைவில் பணி தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1981–82—இரண்டாம் பாகத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இதற்காக 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் குளத்தின் கரை மீது அமைந்துள்ளதால் குளத்திலிருந்து தண்ணீர் வெளியேறாமலும், பாசன வசதி பாதிக்காமலும் பாலம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இந்தப் பாலம் கட்டப்படும்.

**நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை பணியாளர்களை ஒரே தொகுதிமுறையின்கீழ் கொண்டு வரும் திட்டம்.**

*வினா எண். 150—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை இலாகா பணியாளர்களை 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் ஒரே தொகுதி முறையில் கொண்டுவரும்படி அரசு ஆணையிட்டுள்ளபடி செயல்முறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தாமதத்திற்கு என்ன காரணம் ?

(இ) எப்போதுமுதல் செயல்புரித்தப்படும் ?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) (ஆ) மற்றும் (இ) நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின்' ஒட்டு மொத்த முதுநிலைப் பட்டியல் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16-ஆம் நாளிட்ட பொதுப்பணித்துறை ஆணை (நிலை) எண். 411 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது இதை ஒரே தொகுதி முறையை செயல்படுத்துவதில் சில தவறுகள் நடந்துள்ளன என்று தமிழ் நாடு அரசு அலுவலர் (சி. மற்றும் டி.) பிரிவு 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசுக்கு மனு செய்தது. இதனால், 1979-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26-ஆம் நாள் அன்று அரசு அந்த ஆணையை செயல்படுத்துவதை தற்காலிகமாகவும் நிறுத்திடது. மார்ச்சுத் திகளில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஒன்றியம் என். ஜீ. ஓ. சகம் ஒருதொகுதி முறையை உடனே அமுல் செய்யும்படி அரசாங்கத்திற்கு மனு செய்தது. இவற்றையெல்லாம் அரசு பரிசீலித்து பொதுப் பணித்துறையில் ஒரே தொகுதி முறையை செயல்படுத்த கடைப்பிடிக்கும் வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நெடுஞ்சாலைத் துறையில் இதனை செயல்படுத்துவதற்கான அறிவுரைகளை அரசு தலைமைப் பொறியாளருக்கு 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள் அன்று அனுப்பியது. இதனைச் செயல்படுத்த தலைமைப் பொறியாளர் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நெஞ்டுசாலை ஊரகப் பணித்துறை இலாக்கா பணியாளர்களை ஒரே தொகுதி முறையில் கொண்டு வந்து செயல்படுத்துவதில் சில தவறுகள் நடந்துள்ளன என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நீக்குவதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அப்படி எடுப்பதால் பயன்பெறுபவர்கள் எவ்வளவு பேர் என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதிலிலேயே சொல்லிவிட்டேன். 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள் அன்று பொதுப்பணித் துறையில் இருப்பதைப்போல நெடுஞ்சாலைத் துறையிலேயும் அவைகளை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. அதனால், பலன் அல்லது பயன் அடைபவர்கள் எத்தனைபேர் என்ற குறிப்பு இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையில் காங்மேன்களாக வேலை செய்பவர்கள் ஆறாண்டுகள், எட்டாண்டுகளாகியும் இன்னும் நிரந்தரப் பணியாளகளாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 செப்டம்பர் 1

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதற்குரிய ஆணைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. என். வரதராஜன் : : தலைவரவர்களே, இந்த நெடுசாலைத் துறையிலிருக்கும் களப் பணியாளர்களை நிரந்தரப்படுத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். ஜனவரியில் போடப்பட்டு செப்டம்பர் மாதம் வரையிலேயும் கூட அந்த உத்தரவுகள் சரியாக அமல் நடத்தப்படுகிறதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? எனக்குக் கிடைத்த தகவல்களின்படி அவர்களால் அதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதைத் துரிதமாக அமல் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னாலே நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் தான் அவை தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில், இருந்து வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977-ஆம் ஆண்டுக்குப் முன்னாலே பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைப் பிரிவிலே ' ஓர்க் சார்ஜட் எஸ்டாபிளிஷ்மெண்ட்டிலே '' பணி புரிந்து வந்தவர்கள், 60 வயது ஆகி ஓய்வு பெற்ற பிறகும் ஓய்வூதியம் அவர்களுக்கு வழங்கப் பெறவில்லை என்று சொல்லப்படுகிறதே, அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 60 வயது ஆகிய ஓய்வு பெற்றவர்கள் என்று சொன்னார்கள், இப்போது ' ரிடையரிங் ஏஜ் ' 58. எப்படி 60 வயதிலே ஓய்வு பெற்றார்கள் என்று தெரியவில்லை ஆகவே தயவுசெய்து குறிப்பினை என்னிடம் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு அவசர நிலை வந்தபோது, சூப்பர்வைசர்களாக இருந்தவர்கள் எல்லாம், ஒட்டு மொத்தமாக ஒரு குறிப்பிட்ட பிரிவினர் வெளியேற்றப் பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட கோரிக்கைகள் வந்தால் பரிசீலிக்கப்படும்.



1981 செப்டம்பர் 1]

## தாயனூர் பள்ளத்தில் பாலம் கட்டும் திட்டம்

*வினா எண் 151—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மேட்டுப்பாளையம், காரமடை-பில்லூர் டேம் செல்லும் ரோட்டில் குறுக்கே தாயனூர் பள்ளத்தில் பாலம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 9.71 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணியினை எடுத்து செய்யப்பட உள்ளது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டத் தொகை புதிய மதிப்பீட்டிலே ஒதுக்கப்படவில்லை பழைய மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டுள்ளதாக சொன்னார்கள். ஏறி வருகிற விலைவாசியைக் கருதி புதிய மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தப் பால வேலை முடிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய மதிப்பீட்டின்படி எவ்வளவு செலவானாலும் இந்தப் பணி முடிக்கப்படும்.

## உப்பாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

*வினா எண் 152—திரு. ஏ. பி. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை காளியாபுரத்தில் உள்ள உப்பாற்றில் பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 12 இலட்சம்.

(இ) அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. பணி விரைவில் துவங்கப்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பாற்றில் பாலம் கட்டுவது சம்பந்தமாக திட்டமிட்டு, வேலை நடப்பதாக சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஆண்டு இந்த வேலை துவங்கப்படும். எத்தனை ஆண்டுகளில் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே துவங்கப்படும்; இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும்.

## சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பர பேனர்கள் வைத்துக்கொள்வதற்கான அனுமதி

*குறுகிய கால வினா எண் 3—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை நகரில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பர பேனர் வைத்துக் கொள்ள எந்த முறையில் எத்தனை ஆண்டுகளுக்கு விடப்பட்டுள்ளது ?

(ஆ) இதன் மூலம் மாநகராட்சிக்கு ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரம் செய்வதற்கான உரிமை குத்தகை மற்றும் கான்ட்ராக்ட் (ஏலம்) முறையில் அளிக்கப்படுகிறது. இவ்வகையில் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு வரை அளிக்கப்படுகிறது.

(ஆ) ரூபாய் 2,84,840.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பம்பாய் விமான நிலையத்திலிருந்து நகருக்குச் செல்லும் பாதை முழுவதும் நிறைய விளம்பரங்கள்



வைக்கப்பட்டுள்ளன. இதனால் மாநகராட்சிக்கு வருமானம் அதிகம் வருகிறது. அதைப்போல சென்னையிலும் விளம்பரங்கள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பம்பாயில் விமான நிலையத்திலிருந்து நகர் பகுதிக்குச் செல்லும் தூரம் வரையில் விளம்பரப் பலகைகள் வைத்திருப்பதைப் போல, சென்னையிலும் செய்வது மாநகராட்சியின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மாநகராட்சி விளம்பரப் பலகைகளை நடைபாதை ஓரமாக வைத்திருப்பது, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது. மேலும் விளம்பரப் பலகைகள் மிக உயரமாக இருப்பதால், பெரும் காற்று அடிக்கும் போது கீழே விழுந்து மக்களுக்கு சேதத்தை விளைவிப்பதால், விளம்பரப் பலகைகளின் உயரத்தைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் தான் விளம்பரம் செய்ய வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. எங்கெங்கே இடைஞ்சலாக இருக்கிறதோ, அவை அகற்றப்படும். பெரிய காற்று அடிக்கும்போது விளம்பரப் பலகைகள் விழுந்து விடுவதாகச் சொன்னார்கள். பெரிய கட்டிடங்கள் கூட சில சமயம் காற்றில் விழுந்து விடுகிறது, அதற்காக நாம் என்ன செய்ய முடியும்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாட்டின் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் போன்றவர்கள் வருகை தருகிறபோதும் விழாக்களிலே சிறப்புச் செய்யும் பொழுது அலங்கார வண்டிகளை அமைக்கிறார்கள். அவற்றை மாநகராட்சியே கட்டணத்தைப் பெற்று ஏற்பாடுசெய்து கொடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இதனால் சாலைகள் பாதிக்கப்படாமலும் இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்கார வளைவுகளை முக்கியமான சாலைகளில் அமைத்து அதன் மூலமாக சாலைகள் பாதிக்கப்படாமல் இருக்கும் திட்டத்தை மாநகராட்சி கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, எவ்வளவு சீக்கிரமாக அதிலே நடவடிக்கை எடுத்து, கொண்டு வர முடியுமோ அந்த அளவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட விளம்பரம் செய்வதற்கான பேனர்களுக்கு அனுமதி பெற்றுக் கொண்டு, அனுமதி பெறாத இடங்களில், அனுமதி பெறாத பேனர்களை வைத்து விளம்பரப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அதைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படி தகவல் இல்லை. ஆனாலும் கூட அங்கீகாரம் பெறாத விளம்பரங்களை யாராவது செய்திருந்தால், அவை அகற்றப்படுவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

### சென்னை அரசாங்க தோட்டத்திலுள்ள அரசுக் கட்டிடங்கள்

*வினா எண். 158.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை அரசாங்கத் தோட்டத்திலுள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மிக பழுதடைந்திருப்பது பற்றி அரசுக்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (அ) அரசாங்கத் தோட்டத்திலுள்ள கட்டிடங்கள் பற்றி பொதுவான அறிக்கை ஏதும் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் அரசுக்கு அனுப்பப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் தோட்டத்தில் இருக்கிற கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. குறிப்பாக அவைகள் கடந்த 10 வருட காலமாக வெள்ளையடிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. கேட்டால் பணம் இல்லை என்று காரணம் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு பிளாக்கிலும் 50 க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இருக்கின்றன. அவைகளில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தங்கியிருக்கிறார்கள். சில கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து மிகவும் ஒழுகுகிற நிலையிலே இருக்கின்றன. அவர்களைக் கேட்டால் 500



ரூபாய்தான் பண ஒதுக்கீடு செய்கிறார்கள் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவைகளுக்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக ரிப்பேர் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, குறைகளைப் பொதுப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகத் தகவல் தந்து இன்னின்ன கட்டிடங்கள் பழுதடைந்திருக்கின்றன என்று கேட்டவர்களுக்கெல்லாம் உடனடியாக ரிப்பேர் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பொதுப்படையாகச் சொல்லாமல் குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, கோஷன்பிளாக், பேண்ட்மென்ஸ் குவாட்டர்ஸ் எல்லாம் மிகவும் பழுதடைந்து ரிப்பேராக இருப்பது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அதிகாரிகளுக்குத் தகவல் வந்திருக்கிறதா? உடனடியாக ரிப்பேர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, மொத்தம் எஸ்டேட்டில் 215 வீடுகள் இருக்கின்றன பிளாக் மட்டும் சொல்லிவிட்டால் போதாது. அதிலே குறிப்பிட்டு இந்த வீட்டிற்கு ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது என்று தகவல் அளித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் தோட்டத்தில், ராஜாஜி ஹாலுக்குப் பக்கத்தில் உள்ள ஒல்ட் ஹாஸ்டல் மிகவும் பழுதான நிலைமையிலே இருக்கிறது. அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட மிகவும் ஆபத்தான நிலையிலேயே இருக்கிறார்கள். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், பொதுப்பணித் துறைக்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கட்டிடம் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி மனு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதை அரசு அறியுமா? அதைப்பற்றி ஏதாவது ஆவன செய்ய முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை மனதில் கொண்டு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்கக்கூடிய ஹாஸ்டலின் மூன்றாவது கட்டிடம் மழை பெய்தால் எப்பொழுதும் நீர் ஒழுகி கீழே தண்ணீர் தேங்கக் கூடிய அளவில் இருக்கிறது. அந்தக் குறையை நீக்க அரசு உடனடியாக முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ் என் இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும் ஆவன செய்யப்படும்.

[முற்பகல் 9—40]

திரு. மு. அப்பாத்துரை : நம் அரசாங்க எஸ்டேட்டிலுள்ள அண்ணா சாலையிலிருந்து வரும் மெயின் கேட்டினை யாரோ உடைத்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இரவு நேரத்தில் அது தூக்கியெறியப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக பழுது பார்க்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : என் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கூறிய கூற்றுப் பிரகாரம் சரியான முறையில் பணம் ஒதுக்கப்பெறவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டாகும். இந்தப் பொதுப்பணித் துறையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து இருந்த வந்த வழிமுறைகளை மாற்றியமைத்து இப்போது முன்பெல்லாம் பராமரிப்பதற்கான பண ஒதுக்கீடு செய்யும்போது பழைய கட்டிடம் கட்டிய காலத்தில் எந்தச் செலவில் கட்டினார்களோ அந்த தொகையை வைத்து பராமரிப்புக்கென நார்ம்ஸ் வைத்து ஒதுக்கினார்கள். இதனால் வெள்ளை அடிக்கக்கூடபணம்பற்றாக் குறையாக இருக்கிறது என்று பல முறையீடுகள் வந்ததால் சமீபத்தில் இதை மாற்றியமைத்து அரசால் ஒரு புதிய உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் பிளிந்த் ஏரியா நார்ம்ஸ் வைத்து அலாட் செய்யப்படுகிறது. ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட குறைபாடுகள் வராது.

**பர்மா அகதிகளுக்கு வழங்கப்படும் மறுவாழ்வுக் கடன்கள்**

***வினா எண். 159.—**

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு பர்மா தமிழர்களுக்கு அளித்து வந்த மறுவாழ்வுக் கடன்களை தள்ளுபடி செய்யும் செயற் குறிப்பு உள்ளதா?





(ஆ) இதுவரை பர்மா அகதிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(இ) இதனால் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை

(ஆ) இதுவரை பர்மா அகதிகளுக்கு ரூ. 10.5 கோடி கடனாக அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இதனால் பயன் பெற்ற குடும்பங்கள் 62,446.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் பர்மா அகதிகள் பற்றிச் சொல்லும்போது பணம் ஒதுக்கியதாகச் சொன்னார்கள். பர்மாவிலிருந்து வந்த படித்த பெண்கள் ஆண்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த அகதிகள் வங்கி மூலம் பணம் கொடுக்கப்படுகிறதா? அல்லது வேலை வாய்ப்பிற்கு முன் உரிமை அளித்து அரசு உத்தரவிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பர்மாவிலிருந்து வந்த அகதிகளில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 468 குடும்பங்கள் இன்னும் படிப்பு இல்லை என்றால் அவர்களுக்குக் கடன் தொகை கொடுத்து மத்திய அரசு மூலம் கடன் தொகையாக வழங்கி அவர்கள் வாழ்க்கை நடத்தும் அளவிற்கு மாநில அரசு செயல் பட்டு வருகிறது.

திரு. சு. பாலன் : வியாசர்பாடியிலுள்ள பர்மா அகதிகளுக்கு வீடு கட்டுவதற்காக தற்போது கொடுக்கப்படுகிற அந்த உதவித் தொகை போதாது என்று கூறுகிறார்கள். எனவே அதை அதிகப்படுத்தி, இன்றைய விலையேற்றத்திற்கேற்ப அதை உயர்த்தித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி ஸ்ரீனிவாசன் : இது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் மத்திய அரசு அனுமதி பெற்றுத்தான் வழங்கப்படும்.

திரு ப. பொன்னுலிங்கம் : பர்மா அகதிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தள்ளுபடி செய்யப்படுமா என்று கேட்டதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறு விவசாயிகளுக்கெல்லாம் நாம் கடன் தள்ளுபடி செய்கிறோம். அதே போல் கடன் பெற்று திருப்பிச் செலுத்த முடியாது அவல நிலையி

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் [1981 செப்டம்பர் 1

லுள்ள அகதிகளுக்கு தொழில் இன்றி வேலை இன்றி அவதிப் படும் அகதிகளுக்கு கடன் தள்ளுபடி செய்ய நலிந்து இருப்பவர் களுக்கு கடன் தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மத்திய அரசின் அதிகாரத்திற்குள் இருக்கும்போது அவர்கள் அனுமதி பெற்ற பிறகுதான் மாநில அரசு செயல்படும்.

**திரு. மு. அம்பிகாபதி :** இந்தக்கேள்வியில் பர்மா தமிழர்கள் என்றிருக்கிறது. தமிழகவில் பர்மா தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள், இலண்டன் தமிழர்கள் என்று கிடையாது. பர்மா விலிருந்து தாயகத்திற்கு திரும்பி வந்துள்ளவர்கள் என்ற அந்த உணர்வை நாம் வளர்க்கவேண்டும். கேள்வி மூலம் பர்மா தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள்என்ற வகையில் இருப் பதை மாற்றவேண்டும். திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொன்னது மாதிரி, இதுவரை 120 கோடி அளவிற்கு விவசாயி களுக்கு நாம் கடன் தள்ளுபடி செய்திருக்கிறோம். பர்மாவி லிருந்து வந்திருப்பவர்கள் வாழமுடியாமல் தவித்துக்கொண் டிருக்கிறார்கள். அங்கே அவர்கள் வேறு தொழில் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கேவேறு வேலை கொடுக்கப் படுகிறது. எனவே இதைப் பரிசீலித்து இந்தக் கடன் முழுவதை யும் தள்ளுபடி செய்வதற்கு மாநில அரசு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். சமூக நலத்துறை அமைச்சர் அவர்களை நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** இதைப் பற்றி மாநில அரசு சிபாரிசு செய்து கடிதம் எழுதும்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** இதுவரை பர்மாவிலிருந்து தமிழகத்திற்கு வந்து அகதிகளாகக் குடியேறி இருப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு எந்தந்த வகைகளில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** இதுவரை பர்மா விலிருந்து 1,44,260 நபர்கள் தாயகம் திரும்பியுள்ளார்கள். 1980-ல் 50 நபர்களும், 1981-ல் இதுவரை 3 நபர்களும் மட்டுமே வந்துள்ளனர். பர்மாவிலிருந்து தாயகம் வருபவர்கள் அநேக மாக முடிந்து விட்டது என்றே கொள்ளலாம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பர்மாவிலிருந்து தாயகம் வந் துள்ள தமிழர்களுக்கு அங்கு சொத்துக்கள் இருந்தால் அவற் றின் மதிப்புக்கு ஈடாக தொகை கிடைக்க வழிவகை செய்ய மத்திய அரசை இந்த அரசு கேட்குமா ?



1981 செப்டம்பர் 1]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அதைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. அ. செல்வராசன் :** என்னுடைய தொகுதியில்தான் பர்மாவிலிருந்து வந்த தமிழர்கள் ஏராளமாகக் கடை வைத் திருக்கிறார்கள். சுங்க இலாகாவினர் அன்றாடம் அவர் களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அவர்கள் கடைகளை அடைத்துவிட்டு ஓடிவிடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு இந்தத் தொந் தரவு ஏற்படாமல் உதவி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அதைப் பற்றிய தகவலை என்னிடம் கொடுப்பார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** பர்மாவிலிருந்து வந்தாலும் இலங்கையில் இருந்து வந்தாலும் அங்கிருந்து வருகிறவர்கள் அந்த நாட்டில் வேறு தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள் ; இங்கு அவர்கள் வந்த பிறகு விவசாயத் துறையில் அவர்களுக்குக் கடன் கொடுத்து அதிலே ஈடுபடுத்துகின்ற நிலைமை இருக்கி கிறது. அப்படி இல்லாமல் அவர்கள் அங்கே என்ன தொழில் செய்துகொண்டிருந்தார்கள் என்று பரிசீலித்து அந்த முறையில் அவர்களுக்கு இங்கே தொழில் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பர்மாவிலிருந்து தாயகம் திரும்புகிற அந்தத் தமிழர்களுக்கு அங்கிருக்கிற இந்தியத் தூதர் அவர்கள் என்ன எழுதி அனுப்புகிறார்களோ அதன் அடிப்படையில்தான் இங்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது

**திரு. இல. பலராமன் :** பர்மா அகதிகளுக்குச் சில வசதிகள் செய்து தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஹார்பருக்கு அருகில் ரிசர்வ் வங்கி வரையில் புதிதாகக் கடைகள் கட்டப்பட்டிக்கின்றனவா ? அந்தக் கடைகளுக்கு முதலீடு அரசு வழங்கியிருக்கிறதா ? வேறு என்ன திட்டங்களை அவர்களுக்குச் செய்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பர்மாவிலிருந்து வந்த தமிழர்களுக்கு வணிகக் கடன், நிலம் வாங்கக் கடன், குடியிருப்புக்கான திட்டம் ஆகியவை செய்து கொடுக்கப்படு கின்றன. அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது ; முதியோர் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

திரு. இரா. கருப்பையா : இந்த பர்மா அகதிகள் வியாபாரம் செய்வதற்காக சாலை ஓரங்களில் பெட்டிக் கடைகள் வைக்க அனுமதிக்கப்பட்டு வியாபாரம் செய்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக இடங்களை ஒதுக்கி நிரந்தரமாக வியாபாரம் செய்ய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க தனியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித்திட்டம்.

*வினா எண். 160— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கல்பட்டு மாவட்டத்தில் தீவிர கால்நடை திட்டத்தை செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்பட அரசு ஆணை நிலை எண். 1668, வேளாண்மை, நாள் 16–7–1981-ல் அனுமதி வழங்கியுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : செங்கல்பட்டு மாவட்டத்தில் தீவிர கால்நடைத் திட்டத்தைச் செயல்படுத்த எத்தனை தீவிர திட்டக் கிளைகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு கிளைக்கும் எவ்வளவு செலவாகும் ? மொத்தத்தில் எத்தனை கிளைகள் ? மொத்தத்தில் எவ்வளவு செலவாகும்?

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் மண்டல செயற்கை முறை கருத் தரிப்பு நிலையம் சித்தலப்பாக்கத்திலும் பூவிருந்தவல்லியிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மொத்தம் 50 கிளை நிலையங்கள் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தத் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் மூலம் மதுரை மாவட்டத்தில் 3 இடங்களில்—வாடிப்பட்டி உசிலம்பட்டி—திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்



கோட்டை, தாம்பரம் (செங்கல்பட்டு மாவட்டம்) பண்ருட்டி (தென் ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் நடப்பு ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் துவங்குவதற்கும் சுமார் 25 லட்சம் ரூபாய் செலவாகிறது.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரத்தில் தீவிரக் கால்நடைத் திட்டத்தை மல் நடத்தி வருகிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு இதுவரையில் அதிகாரிகள் யாரும் நியமனம் செய்யப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அரசு நிலையாணை எண். 1668 வேளாண்மை நாள் 16–7–1981 இன்படி தேவையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்தத் திட்டம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையங்களிலுள்ள கழிப்பிடங்கள்.

வினா எண். 137—திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையங்களில் கழிப்பிடங்களுக்குக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்களுக்குப் போக கட்டணம் வசூலிக்கப்படுவது அநியாயமாகும். டிக்கட் வாங்கிக் கொண்டு பஸ்ஸிலே பயணம் செய்கிறார்கள் கழிப்பிடங்களுக்குப் போகிற போது ** போல் நின்று கொண்டு கட்டணத்தை வாங்கிக் கொண்டு உள்ளே விடுவது என்பது அநியாயமாக இருக்கிறது. எனவே இந்த மாதிரிக் கட்டணம் வசூலிப்பதை அரசு நிறுத்துமா ? பாரினிலிருந்து வருகிறவர்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே இது குறித்து அரசு முடிவு என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ** : — என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அநியாயம் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்து நிலையங்களிலே வசூலிப்பது அநியாயம் இல்லை. எதற்காக வசூலிக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் மாத்திரம் வர வேண்டும், ஆனால் அந்த அந்த நகரங்களிலே இருக்கின்ற வெளியார்களும் அங்கே வருகிறார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்கும் சுத்தமாக அவைகளை வைத்துக் கொள்வதற்கும் இதை நாம் வசூலிக்கிறோம். பல பயணிகள் எங்களிடம் சொல்கிறார்கள், கட்டணத்தை உயர்த்தினாலும் பரவாயில்லை, சுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனால் தான் செய்யப்படுகிறது. ( ** ) போல் என்று சொன்னது வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் நம்முடைய தொழிலாளர்கள் தான்.

மாண்புமிகு பேரவை தலைவர் : இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன (** ) என்பதும் நீக்கப்படுகிறது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்களைத் தவிர வெளியார்கள் வருகிறார்கள், அவர்களைத் தடுப்பதற்காக செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் தங்கள் டிக்கட்டுகளைக் காண்பித்தால், அனுமதிக்கக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு சு. முத்துசாமி : பயணம் செய்கிறவர்கள் தான் டிக்கட் வைத்திருப்பார்கள். பயணம் செய்வதற்காகப் போகிறவர்கள் என்ன வைத்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே அதையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

காஞ்சிபுரம் கன்னியாகுமரி பேருந்துப் பணி

*வினா எண். 138—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சீபுரம் - கன்னியாகுமரி வழித் தடத்தில் பேருந்துகள் விட அரசு அனுமதித்துள்ளதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.



(ஆ) ஆம் எனில், எத்தனை பேருந்துகள் விடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இத்தடத்தில் 15–4–1981 முதல் விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

(ஆ) இரண்டு பேருந்துகள்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, தற்போது அந்த வழித்தடத்திலே பொது மக்கள் அதிகமாகப் பிரயாணம் செய்வதால் கூடுதல் பேருந்துகளை விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 15–4–1981 முதல் இரண்டு பேருந்துகளைத் துவக்கியிருக்கிறோம். அதற்குள்ளாக இன்னும் வேண்டுமென்று உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். மீண்டும் பரிசீலனை செய்து முடிந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

நகரப் பேருந்துகளுக்கு இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண். 153—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப் பெறும் நகர பேருந்துகளுக்கு (டவுன் பஸ்) இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் (உத்தேசிக்கும்) திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) அண்ணா, கட்டபொம்மன், பல்லவன் போக்குவரத்துக் கழகங் (மாவட்டப் பிரிவு)களைத் தவிர, மற்ற போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் நெரிசல் நேரங்களில் சில குறிப்பிட்ட வழிப்

தடங்களில் மட்டும் இரண்டு நடத்துனர்களை நியமித்துள்ளார்கள். எல்லா நகரப் பேருந்துகளுக்கும் இரண்டு நடத்துனர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளுக்கு இரண்டு நடத்துனர்களை நியமித்துள்ளமைக்காக என்னுடைய சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா, கட்டபொம்மன், போக்குவரத்துக் கழகங்களால் விடப்பட்டுள்ள நகரப் பேருந்துகள் கிராமபுரங்களுக்குச் செல்வதால் அங்கிருந்து அதிகமான கூட்டம் நகர பேருந்துகள் மூலமாக நகரங்களுக்குப் பயணம் செய்வதால் அங்கே இரண்டு நடத்துனர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, தேவையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணா போக்குவரத்துக் கழகத்தால் இப்பொழுது ஓட்டப்படும் டவுன் பஸ்கள் சிலவற்றிற்கு ஓட்டுநர்களும், நடத்துனர்களும், இல்லாமையால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படி நிறுத்தப்பட்டிருந்தால் உடனடியாக அவைகளை ஓட்டுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ? உதாரணமாக இராசிபுரத்தில் இருக்கின்ற டெப்போக்களில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுப்படையான கேள்வி. இராசிபுரத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இரண்டு நடத்துனர்களை நாங்கள் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நடத்துனர்கள் இல்லாமல் பேருந்துகள், நிறுத்தப்பட்டதாக இப்படிப்பட்ட சூழ்நிலை நிச்சயமாக இல்லை. அப்படி இருந்தால் கவனித்து கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளில் நெரிசல் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் குறிப்பிட்ட அளவிற்கு வசூல் இருந்தால் அப்படிப்பட்ட பகுதிகளில் ஓடும் நகரப் பேருந்துகளில் கண்டிப்பாக இரண்டு நடத்துனர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசு பரிசீலித்து நடவடிக்கையெடுக்கும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளில் நடத்துனர்களாகப் பெண்களை நியமிக்கும் திட்டம் இருந்தது. தற்போது அந்தத் திட்டம் எந்த வகையில் அமல் நடத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பெருநகர்ப் பிரிவிலே பெண்களுக்காக விடப் பட்டிருக்கும் பேருந்துகளில் எட்டு பெண்களை நடத்துனர்களாக நியமித்து ஓடிக்கொண்டிருக்கிறது. அது எப்படியிருக்கிறது என்று பார்த்து அதற்குப் பின்னாலே அதை நடை முறைப்படுத்தலாமா அல்லது போதுமா என்பதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சபாநாயகரவர்களே, நகரப் பகுதிகளில் விடப்படும் பஸ்களை நல்ல பஸ்களாக விடுகிறார்கள். ஆனால் கிராமப் பகுதிகளில் ஓடும் பஸ்கள் சரியான கண்டிஷனில் இல்லாத காரணத்தினால் நான்கைந்து நாட்களுக்கு ஒரு முறைதான் ஓடுவது என்ற நிலையில் உள்ளது. அந்தக் கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் பஸ் வரும் வரும் என்று காத்துக் கொண்டிருந்து, தாங்கள் செய்ய வேண்டிய காரியங்களுக்காகப் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு நேரத்தில் போய்ச் சேர்ய வாய்ப்பில்லாமல் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பல கிராமங்களில் விடப்பட்ட..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நடத்துனர்களைப் பற்றிய கேள்வி. கிராமப் பகுதிகளில் விடப்படும் பஸ்களைப் பற்றி இதில் வராது.

போக்குவரத்துத் துறையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான பணி இறுதிச் சலுகைகள்.

*வினா எண். 154—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு போக்குவரத்துத் துறையில் வேலை செய்து பிறகு கழகங்களுக்கு வந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய (Terminal Benefits) கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்படவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) இதை வழங்குவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தெரியும்.

(ஆ) மற்றும் (இ) இதுபற்றி 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்ட அரசு ஆணை அரசால் மறு பரிசீலனை செய்யப்பட்டு 31–3–80 அன்று புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்புதிய ஆணையின் மீது சிறப்பு அலுவலர், எஞ்சிய பணி போக்குவரத்துத்துறை சில விளக்கங்களைக் கோரினர். இது பற்றிய விளக்கங்கள் சென்ற மே திங்களில் அவருக்குக் கொடுக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு பணி இறுதிச் சலுகைகள் (Terminal Benefits) முடிவு செய்து கொடுப்பதற்கென பிரத்தியேகமாக அலுவலர்கள் எஞ்சிய பணி போக்குவரத்துத் துறையில் நியமிக்கப்பட்டு பதிவேடு சரி செய்தல், விடுப்புக் கணக்கு நிர்ணயம் செய்தல் முதலிய முதற்கட்ட பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. புதிய ஆணையின்படி தொழிலாளர்களிடம் புதிதாக விருப்பு (option) பெற்ற பின் அவர்களுக்கு பணி இறுதிச் சலுகைகள் வழங்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டால் 18–4–75 இல் வெளியிடப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா-விடை நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10–00)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : 378 ஆம் நெம்பர் ஜி.ஓ.வை மாற்றி, 284 ஆம் நெம்பர் ஜி.ஓ. போடுவதற்கு அதுவும் தொழிலாளர்களைக் கடினமான முறையில் பாதிக்கக்கூடிய முறையில் உள்ள அந்த ஜி.ஓ. போட காரணம் என்ன ? அதை வாபஸ் வாங்கி, 378 ஆம் ஜி.ஓ. படி தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? இப்பொழுது ஓய்வு பெறக்கூடியவர்களுக்கு, 1975-க்கு முன்னால் வேலை செய்த காலத்திற்கு எந்தவிதமான பணமும் கொடுக்கப்படவில்லையென்ற காரணத்தால், உடனடியாக, 1975-க்கு முன்னாலே உள்ள காலத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தைக் கணக்கிட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அல்லது அவர்களுக்கு ஒரு கணிசமான தொகை........



மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வியில் எத்தனை கேள்விகளை இணைக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1975-லே ஆணையிடப்பட்டு அதற்குப் பின்னாலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற சங்கடங்களைத் தொழிற் சங்கத் தலைவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி ஒரு தனி அலுவலர் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார். அவருடைய அறிக்கைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் மட்டுமல்ல, பல்வேறு கழகங்கள் அந்த அறிக்கைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே அறிக்கை வந்தபிறகு, இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தினால், தொழிற்சங்கத் தலைவர்களோடு கலந்து ஆலோசித்து, அதுபற்றி முடிவு எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இருந்த காலத்திலே பணிபுரிந்த பணியாளர்கள் இப்பொழுது போக்குவரதது்க் கழகங்களுக்கு மாற்றப்பட்ட காலத்திலே, முன்னால் பெற்ற பல சலுகைகளை அவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்திலே, அந்தச் சலுகைகளோடு, சில சலுகைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு, அப்படியே அமுல் நடத்தப்படும் என்று சொன்னதை மாற்றியதற்குக் காரணம் என்ன ? அவர்கள் அரசு போக்குவரத்துத் துறையிலேயிருந்து விலகுகிற காலத்திலே. அவர்கள் ஆற்றிய அந்தப் பணிக்காலத்திற்கு அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் வழங்கப்படாமல் இருக்கிறதே, அதை வழங்க வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே. போக்குவரத்துக் கழகங்களிலே பல சலுகைகள் உண்டு. அரசாங்க சம்பந்தப்பட்ட துறையிலே பல சலுகைகள் உண்டு. ஒரு சில சலுகைகள் அங்கே இருக்காது, ஒருசில சலுகைகள் இங்கே இருக்காது. அதிலே எது சிறந்தது என்று நாம் சொல்லிவிட முடியாது. பல நேரங்களிலே போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த சலுகைகள் மிகச் சிறந்ததாக இருக்கிறது என்று சொல்லி, தொழிலாளர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இங்கே இருந்தால் இந்தச் சலுகை, அங்கே இருந்தால் அந்தச் சலுகை. எனவே, அதிலே மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. ஆனால், தொழிலாளர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இருக்கிற பிரச்சினை அவர்கள் அங்கே இருந்த பொழுது இருந்த சில பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டு

மென்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை விசாரிக்க நாம் ஒரு தனி அலுவலரை வைத்து, அவருடைய அறிக்கையை எதிர்பார்க்கிறோம். அந்த அறிக்கை வந்தவுடனேயே தொழிற்சங்கத் தலைவர்களோடு பேசி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கனவே நான் தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ரூ. 15 கோடி தொழிலாளர்களுக்கு 'டெர்மினல் பெனிஃபிட்ஸ்' என்ற பெயரிலே கொடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இப்பொழுது கழகங்களைப் பிரிப்பதிலே, பெயர் வைப்பதிலேயே பிரச்சினைகளும் சிரமங்களும் ஏற்படுகின்றன என்ற காரணத்தினாலும் இந்தத் தொழிலாளிகள் விரும்பக்கூடிய முறையிலே மற்ற மாநிலங்களிலே இருப்பதைப் போல ஒரு ரோடு டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அவர்களுடைய முழு சர்வீசையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ பெயர் பிரச்சினை காரணமாகப் போக்குவரத்துக் கழகங்கள் பிரிக்கப்படக் கூடாது என்று சொல்வது அவ்வளவு முறை அல்ல. போக்குவரத்துக் கழகங்களைப் பிரிக்க வேண்டுமென்று எத்தனையோ பேர்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதே சட்டமன்றத்திலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அது அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அதனுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு இருக்கிற சலுகைகளைப் பிடுங்குவதற்காக அல்ல. அங்கே இருக்கிற மக்களுக்கு ஒரு தனிப்பட்ட அதிகாரி நேரடியாகப் பார்த்து, தன்னுடைய அதிகாரத்திலே மக்களுக்குப் பணி செய்வதற்காகப் போக்குவரத்து வசதியைச் செய்ய வேண்டுமென்பதுதான். இருந்தாலும் இந்த அரசு தொழிலாளர்களுடைய அந்தக் கருத்தை மனதிலே கொண்டு அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை நிச்சயமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும். எல்லா போக்குவரத்துக் கழகங்களிலேயும் ஒரே சட்டதிட்டம் இருக்கும் தன்மையிலே எல்லா தொழிலாளர்களும் இருப்பதற்கான நடவடிக்கையை நான் எடுத்திருக்கிறேன். அதைப் படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவர இருக்கிறோம்.



விபத்து ஏதுமின்றி அரசு பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு பரிசளிக்கும் திட்டம்.

*வினா எண். 155—திரு. எம். வி. இரத்தினம், திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்துக்கள் ஏதுமின்றி அரசு பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு பரிசளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், குறைந்த பட்சம் எவ்வளவு காலம் விபத்தின்றி பேருந்துகளை ஓட்டியிருக்க வேண்டும் ?

(இ) என்னென்ன பரிசுகள் அளிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பொதுவாக வெகுமதி பெறுவதற்கு ஒரு ஓட்டுநர் ஒரு நிதி ஆண்டில் குறைந்த பட்சம் ஒவ்வொரு 6 மாதங்களில் 100 பணிகள் விபத்தின்றி பேருந்தை ஓட்டியிருத்தல் வேண்டும்.

(இ) வெகுமதி பணமாகவே அளிக்கப்படுகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து ஏதும் இன்றி ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்குப் பரிசு வழங்குவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும் விபத்தின்றி ஓட்டுகின்றவர்களை ஊக்குவிக்கின்ற வகையில், குறிப்பிட்ட காலத்திற்குள் விபத்தின்றி ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு, அவர்களுடைய சம்பளத் தொகையையும், பேட்டா தொகையையும் அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சம்பளத்திலே மாறுபட்ட வித்தியாசத்தை ஏற்படுத்த முடியாது. பேட்டாவும், சம்பளமும் பொதுவாக இருக்கக்கூடியவை. அவைகளிலே வித்தியாசம் காட்ட முடியாது. அதிலே மாறுபாடான வித்தியாசங்கள் இருக்கக் கூடாது என்ற காரணத்தினாலே தான் அவர்களுக்குத் தனியாக ஒரு தொகை. ஊக்கத் தொகையாக

அளிக்கப்படுகிறது. காரணம் நாம் இந்த ஆண்டு கொடுப் போம். அடுத்த ஆண்டு அவர்கள் விபத்து செய்வார்களானால் அதைக் குறைக்க முடியாது. இதை அவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். வி. இரத்தினம் : தலைவர் அவர்களே, விபத்தின்றி ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு பரிசு கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு என்று அவர் குறிப்பிடவில்லை. அந்தப் பரிசுத் தொகை மிகவும் குறைவாக உள்ளது என்பதை அரசு கவனத்தில் கொண்டு, அதை அதிக மாக்கிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஓராண்டு விபத்தில்லாமல் ஓட்டினால் 100 ரூபாய் கொடுக்கி றோம். அதற்குப் பின்னாலே ஒவ்வொரு ஆண்டுக்கும் 25 ரூபாய் சேர்த்துக் கொடுக்கிறோம். தொடர்ந்து 2 ஆண்டுகள் விபத்தில் லாமல் ஓட்டினால் மூன்றாம் ஆண்டிலிருந்து 50 ரூபாய் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. படிப்படியாக உயர்ந்து கொண்டே போவ தினால் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தை விரும்பி மனநிறை வோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவர் அவர்களே, தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்களுக்கு விபத்தில்லா மல் ஓட்டுகின்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதைப்போல தனியார் துறையில் பணிபுரிகின்ற ஓட்டுநர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் பரிசுகொடுப்பதற்கு அரசாங்கம் தலையிட்டு ஊதிய உயர்வினை கொடுக்கச் செய்வதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களிலிருந்து வருகின்ற வரு மானத்தில் இருந்து அவர்களுக்குக் கொடுக்க முடியாது. சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அதை நிச்சயமாக கடைபிடிக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அதைக் கண்காணிப்பதற்கு நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய இலாக்காக்களும் இருக்கின் றார்கள். அவர்களும் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கி றார்கள். அதையும் மீறி, தவறு ஏற்படுமானால், அதை குறிப்பிட்டுச் சொன்னால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிற்றம்பலம் : தலைவர் அவர்களே, அரசாங்கப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், ஒரு சில சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பேருந்துகளை ஓட்டாமலேயே, விபத்தில்லாமல்



ஓட்டினோம் என்று பரிசினைப் பெற்றுள்ளார்கள். உண்மையி லேயே விபத்து இல்லாமல் ஓட்டிய ஓட்டுநர்களுக்கு அந்தப் பரிசை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏதோ எனக்கு ஒருவனுக்குத்தான் இந்த பொறுப்பு இருக்கிறது என்று சொல்லிவிடக் கூடாது. இந்த சட்டமன்றத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும், நடக்கின்ற தவறுகளைக் கண்டிக்கவும், திருத்தவும் பொறுப்பிருக்கிறது. என்ன தவறு நடந்தது என்று குறிப்பிட்டு இவர் இதைச் செய்தார், இன்றைக்கு செய்தார் என்று சொன்னால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை நிச்சயமாக எடுக்கும்.

திரு வி. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில் பரிசு அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று பிழை இல்லாமல் வசூல் செய்கின்ற நடத்துநர்களுக்கும் அந்த தொகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தக் கோரிக்கையை ஏற்கனவே தொழிலாளர்கள் கொடுத்திருக்கிறார்கள். பல தொழிற்சங்கத் தலைவர்களும் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் சில பணிகளை மனதிலே கொண்டு, இதைச் செய்யவேண்டும் என்ற அடிப்படை யிலேமுதலிலே இதைச் செய்திருக்கிறோம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தை மனதிலே கொண்டு, பின்னாலே முடிவெ டுக்கப்படும் இதையே முடிவாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, நீலகிரி போன்ற மலைப் பகுதிகளிலே பணியாற்றும் ஓட்டுநர்களுக்கு அனுபவம் என்பது மிக மிக முக்கியமான தேவை என்பதால் அவர்களை மலைப்பகுதியிலேயே பணியாற்ற அவர்களுக்கு வாய்ப்பளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே பணிபுரிகின்ற அந்தத் தொழிலாளர்கள் அங்கேயே வேலை பார்க்க வேண்டும் என்று முன்னுரிமை இருந்தாலும், அவர்களும் கீழேவந்து அதை ஓட்டிப் பழக வேண்டும், கீழே இருக்கின்ற தொழிலாளர்கள் மலையிலும் ஓட்டிப் பழகவேண்டும் என்ற அடிப்படையிலே நாங்கள் மாற்றிப்போடுகிறோம். எனவே கடைசியில் அவர்களுக்கு அங்கே அந்த வாய்ப்பு கொடுக்கப்படும்.

(முற்பகல் 10-10)

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விபத்தின்றி ஓட்டவேண்டுமென்று பாதுகாப்பாக ஓட்டுநர்கள் ஓட்டினாலும் கூட வேறு ஒரு வாகனத்தை ஓட்டுகிற டிரைவர்

சரியாக ஓட்டாமல் இருந்து விட்டாலும் விபத்தாகி விடுகிறது. அதனால் அந்த டிரைவர்களுக்கு பரிசு வழங்காமல் போய் விடுகிறார்கள். ஆகவே இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் நம்முடைய ஓட்டுநர்கள் வாகனத்தை நிறுத்தியிருந்தாலும் கூட மற்றவர்கள் இடித்து விடுகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். எப்படி, எங்கு நிறுத்த வேண்டுமென்று எல்லாம் இருக்கிறது. பாதையின் குறுக்கே நிறுத்தினால் இடித்துவிடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நம்முடைய டிரைவர்கள் மேலே தவறின்றி விபத்து ஏற்பட்டிருந்தால், அரசு எதிர்காலத்தில் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்.

**போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் உணவு விடுதிகள் அமைக்கும் திட்டம்.**

*வினா எண் 156—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள முக்கியமான பேருந்து நிலையங்களில் போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் உணவு விடுதிகள் நடத்த அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இல்லை.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சில முக்கியமான இடங்களிலே பயணிகள் செல்லும் பொழுது, அங்கே பக்கத்திலே இருக்கின்ற உணவு விடுதிகளில் சென்று சாப்பிட்டு வருகிற போது, காலதாமதம் ஏற்பட்டு குறிப்பிட்ட பேருந்துகளிலே பயணம் செய்கின்ற வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது ; அதைப்போலவே பயணிகள் தங்குவதற்கு பேருந்து நிலையம் அருகில் விடுதியில் இடம் கிடைக்காமல் போய் விடுவதால், பேருந்தை சரியான நேரத்தில் பிடிக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இனியாவது நமது போக்குவரத்துக் கழகங்களுக்கு என்று சில முக்கியமான இடங்களை ஒதுக்கி விடுதிகளையும், உணவு விடுதிகளையும் அமைத்துத் தர முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தின் மூலமாக, எங்கெங்கே அதற்கு தனியாக பேருந்து நிலையங்கள் இருக்கின்றதோ அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து வைத்திருக்கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும் செய்வதற்கு வாய்ப்பு, வசதி இல்லை. செய்ய வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு இருந்தாலும், இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு பேருந்து கொடுக்க வேண்டிய நிலைமையிலே நாம் இருக்கின்றபோது, அந்த அடிப்படை வசதியை முன்னாலே செய்து விட்டு, அதற்கு பின்னாலே மற்ற வசதிகளைப் பார்க்கலாம் என்று நாங்கள் தள்ளி வைத்திருக்கிறோம். முழுக்க, முழுக்க என்றைக்கு போக்குவரத்து கழகங்களே எல்லா பேருந்துகளையும் பயன்படுத்துகிற அளவிற்கு சூழ்நிலை வருகிறதோ அன்றைய தினம் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூர வழித்தடங்களில் பேருந்துகளை சமீப காலமாக மாமண்டூரில் வசதியற்ற இடத்திலே நிறுத்துகிறார்கள். அந்த இடத்திலே சரியான உணவு விடுதிகள் இல்லாததால், தரமற்ற பொருட்களை உட்கொள்ள வேண்டியிருக்கிறது. டெல்லியிலே பாராளுமன்றத்திலே ரெயில்வே கேண்டீன் ஒன்று தரமான உணவை வழங்குவதாக கேள்விப்படுகிறோம். அதைப் போன்று போக்குவரத்து கழகங்களில் மூலம் தரமான உணவு கிடைக்க வசதி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமண்டூரிலே நிறுத்துவதற்கு காரணம் எல்லா பேருந்துகளையும் ஒரே இடத்தில் நிறுத்தாமல், போகிற பேருந்துகளை ஒரு இடத்திலும், வருகிற பேருந்துகளை இன்னொரு இடத்திலும் நிறுத்தலாம் என்பதற்காகத்தான். பிரித்து நிறுத்தினால் கூட்டமும் குறையும் என்பதால்தான் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறோம். படிப்படியாகத்தான் நடைமுறைக்குக்கொண்டு வர முடியும்.

டெல்லியிலே ஒரு இடத்திலே செய்வதை வைத்துக்கொண்டு நாம் போக்குவரத்து கழகங்களிலே செய்துவிட முடியாது. அரசு உங்களுடைய கருத்தை பரிசீலனை செய்யும். அடுத்தக் கூட்டத்தில் நாம் இதுபற்றி விவாதிப்போம்.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் பேருந்துகளை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இருக்கின்ற தனியார் உணவு விடுதிகளுக்கு கொண்டு சென்று நிறுத்திவிடுகிறார்கள். இதனால் பிரயாணிகளுக்குதரமான

உணவு கிடைக்காமல் பல குறைகள் ஏற்படுகின்றன. இப்படிப் பட்ட பிரச்னைகளை தீர்க்கின்ற வகையில் போக்குவரத்து கழகத்தின் சார்பிலே உணவு விடுதியை நடத்த முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இலை போடுவதற்கு முன்னாலே சாப்பாடு பற்றிப் பேசுவது சரியா என்று. எல்லாக் கிராமங்களுக்கும் இப்போது பேருந்து வசதிகளை முழுமையாகச் செய்ய முடியவில்லை. ஆகவே, அதைச் செய்ததற்குப் பிறகுதான் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் எங்கெங்கே இந்த சிரமங்கள் இருக்கின்றனவோ அவற்றைத் தீர்க்கின்ற வகையிலே பிரயாணிகளுக்கு பிரியாணி கொடுக்கின்ற அளவுக்காவது ஓட்டல்களை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம்.

திரு. டி. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டுக்கு அடுத்து இருக்கின்ற மாமண்டூரில் திருவள்ளுவர் போக்குவரத்தின் பேருந்துகள் எந்த இடத்தில் நிறுத்த வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த இடத்திலே நிறுத்தப்படாமல் ஒதுக்குப் புறமாக இடங்களில்தான் நிறுத்தப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் இதுவரை இல்லை. எனவே, இதையே புகாராக எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. பேருந்துகள் எந்தெந்த இடங்களிலே நிறுத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் கூட அந்த அட்டவணையைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதைப் பார்த்து அதன்படி அவர்கள் நிறுத்தவில்லை என்று சொன்னால் அதனை என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, நெடுந்தூர வழித் தடங்களில் செல்லும் ஊர்திகள் எல்லா ஸ்டாப்களிலும் 5 நிமிடம், 10 நிமிட்டம் நிற்கின்றது. ஆனால் அவற்றை ஒரு குறிப்பிட்ட இடத்திலே அரை மணி நேரத்திற்கு நிறுத்தி உணவு அருந்துவதற்கு நேரம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நெடுந்தூரப் பேருந்துகள் 500 கிலோ மீட்டருக்கும் மேலாக 600 கிலோ மீட்டர் வரை கூட ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே





அவை எல்லா இடங்களிலும் நிறுத்தப்பட வேண்டும் என்றால் இரண்டு நாட்கள் கழித்துத்தான் போய்ச் சேரும் நிலைமை ஏற்படும். ஆகவே, எங்கேயாவது நிற்கக் கூடாத இடத்திலே அந்தப் பேருந்துகள் நின்றால் அது யாருடைய கண்ணிலேயாவது பட்டால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழகத்திற்கு ஒவ்வொரு மாதமும் ஒதுக்கப்படும் சேசிஸ்கள்.

* வினா எண் 157—திரு. இரா. சண்முகம், திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு மாதம் எத்தனை பஸ் சேசிஸ்கள் ஒதுக்கப்படுகின்றன ?

(ஆ) ஒதுக்கப்பட்ட பஸ் சேசிஸ்கள் எல்லாம் எடுக்கப்படுகின்றனவா ?

(இ) இல்லையென்றால் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 170.

(ஆ) இல்லை.

(இ) மாதம் சுமார் 81லிருந்து 156 வரை எடுக்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் சூன் 1980-ல் இருந்து மிகுந்த இழப்பில் இயங்கிக் கொண்டிருப்பதாலும், போதிய நிதி வசதி இல்லாமையாலும் மாதம் 170 பஸ் சேசிஸ்கள் எடுக்க முடியவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சேசிஸை எடுப்பதற்குப் பொருளாதார வசதி இல்லை என்று சொன்னார்கள். உலக வங்கியின் மூலம் கடன் பெற்று அதன் மூலம் அவற்றை எடுப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது உலக வங்கியினர் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் கொடுப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதன் மூலமாக 555 சேசிஸ்களை எடுப்பதற்கு இருக்கிறோம். ஆனால் மாதந்தோறும் எடுப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அது தனியாக அதிகமாக நமக்குக் கொடுக்கப்படுகின்றது. மாதம் 170-ஐ நமக்குக் கொடுப்பதற்கு அந்த நிறுவனங்கள் ஒத்துக்

கொண்டிருக்கின்றன. அந்த 170-ஐயும் இதற்கு முன்பெல்லாம் நாம் எடுத்துக்கொண்டுதான் இருந்தோம். ஆனால் டீசல் விலை உயர்வின் காரணமாகவும் அந்த அளவுக்கு நாம் கட்டணத்தை உயர்த்தாததன் காரணமாகவும் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆகவே முழு சேசிஸ்களையும் எடுக்க முடியவில்லை. 150, 125 என்று நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் முழுவதையும் எடுப்பதற்காக அரசு தீவிரமாக பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது.

**திரு. ஏ. சி. சண்முகம் :** தலைவரவர்களே, ஒரு சேசிஸ் எடுக்க எவ்வளவு தொகை ஆகின்றது? ஓர் ஆண்டில் சேசிஸ் விலை எவ்வளவு உயர்ந்துள்ளது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 1975–76ஆம் ஆண்டில் 99 ஆயிரம் ரூபாய் அதாவது கிட்டத் தட்ட ஒரு இலட்சம் ரூபாய் என்பது சேசிஸ் விலையாக இருந்தது. ஆனால் தற்போது 1 லட்சத்து 99 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வரையிலும் ஆகின்றது. அதாவது இரண்டு மடங்கு ஆகின்றது. அதேபோன்று டீசல் விலை 1976ஆம் ஆண்டு 1 ரூபாய் 30 பைசா என்றிருந்தது. இப்போது 2 ரூபாய் 90 பைசாவை எட்டிக் கொண்டு வந்திருக்கின்றது.

**திரு. கோவைத்தம்பி :** தலைவரவர்களே, சேசிஸ் ரொக்கப் பணம் செலுத்தி எடுக்கப்படுகின்றதா ? அல்லது கிரெடிட் நோட்டிலே அவர்கள் கொடுப்பார்களானால் அந்தச் சேசிஸ் தேவைல்லை என்று சொன்னால் அவற்றை லாரி சேசிஸ்களாக வும், வேன் சேசிஸ்களாகவும் எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ;** தலைவர் அவர்களே, சேசிஸ் தேவையில்லை என்ற நிலைமை இல்லை. பணம் தேவை என்ற நிலைமைதான் இருக்கின்றது.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்** [667ம் பக்கம் பார்க்க.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

---

143–667ம் பக்கத்தில் இணைப்பு Iஆக அச்சிடப்பெற்றுள்ளது.





(முற்பகல் 10–20)

**2. தகவல் கோரல்.**

**(அ) கைதான உறுப்பினர்களை விடுதலை செய்வது குறித்து.**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையினுடைய இந்தக் கூட்டத் தொடர் இன்றோடு நிறைவு பெறுவதாக இருக்கிறது. அண்மையிலே ஸ்ரீலங்காவிலே வாழும் தமிழர்களுக்கு இழைக்கப் பட்டிருக்கிற அநீதியை கண்டிக்கிற அளவிலே சென்னையிலே தடை உத்தரவை மீறிய காரணத்தாலே நம் பேரவையினுடைய உறுப்பினர்களாக இருக்கக் கூடிய திருவாளர்கள் சோமு, புருஷோத்தமன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வருகிற 8ஆம் தேதியன்று பொது ஹர்த்தால் என்ற வகையில் எல்லாக் கட்சிகளும் கலந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையை எடுக்க இருக்கிற காரணத்தாலே, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க, கைது செய்யப்பட்ட அத்தனைபேர் களையும் விடுதலை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**(ஆ) தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து.**

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தற்சமயம் நாம் சென்னையி லிருந்து கோயம்புத்தூர் போகவேண்டும் என்று டிக்கட் எடுத்தால் எமலோகத்திற்குத்தான் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ரயில்வே இலாகா அப்படி இருக்கிறது. இன்றைய தினம் தமிழ் நாடு எக்ஸ்பிரஸ் கவிழ்ந்து உயிர்சேதமும் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. இப்படி தினந்தோறும் 5 ரயில் விபத்துக்கள் 5 ஆயிரம் பேர் சாவுகள் என்று இருப்பதால், இரயில்வே இலாகா என்ன எமதர்மரின் வேலையை எடுத்துக் கொண்டார்களா ? அல்லது மத்திய அரசு எடுத்துக் கொண் டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது மத்திய அரசின் பிரச்னை. நீங்கள் பார்லிமெண்டுக்கு போனபிறகு கேட்டுக் கொள்ளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நம் மாநிலத்தி லிருந்து போனவர்களும் அதில் இருக்கிறார்கள். இந்த விபத்தி னால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்......(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் காட்டுகிற அனு தாபத்திற்கு நன்றி. ஆனால் அதைக்கேட்க வேண்டிய இடம் இது அல்ல.

**(இ) மணக்காடு கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் இரண்டு பேர் மறைவு.**

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நாகர்கோவில் கிராமத்தைச் சேர்ந்த மணக்காடு என்ற கிராமத்திலிருந்து 17–6–1981ஆம் நாள் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 4 பேர்களில் இரண்டு பேர்கள் மறைந்துவிட்டார்கள். திரும்பவே இல்லை. மற்ற இரண்டு பேர்கள் மயக்கமாக நிலையில் 5 நாட்கள் கழித்து தலைமன்னார் என்ற இடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை இலங்கை அரசு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்கும்போது, மாண்ட்ரோஸ் என்பவர் இறந்து விட்டார், மீதம் உள்ள ஒருவர் அருள்மணி என்பவர்......(மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஆளும்கட்சியின் உறுப்பினராகத்தான் இருக்கிறீர்கள். பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினால் வேறு வகையாகக் கொண்டு வந்து தீர்த்துக் கொள்ளலாம். இங்கே அவையில் அதைக் கொண்டு வந்து தீர்த்து வைக்க முடியாது. ஆகையால் தயவுசெய்து உட்காருங்கள்.

**(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 44ஆவது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்து பிரச்னை ஒன்றை திரு. உமாநாத் அவர்கள் அவையில் எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். .......(குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்)

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, ஆளும்கட்சிக்கு மட்டும் அனுமதி கொடுக்கிறீர்கள். எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு கொடுக்க மறுக்கிறீர்களே, இது நியாயமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுக்கு அனுமதிகொடுத்திருக்கிறேன். அவர்ஒன்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இல்லை. தவிர இருக்கும் மற்றப் பிரச்னைகளையும் பார்க்க வேண்டும். அங்கத்தினர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு இன்னும் 7, 8 பில்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. ஒவ்வொரு வரும் அதில் தங்கள் சிந்தனைகளை செலவழித்து பேச இருக்கிறீர்கள். அதை எல்லாம் விட்டு விட்டு இப்படி திடீர் திடீர் என்று பிரச்னைகளைக்கிளப்பிக் கொண்டிருந்தால் தீர்த்து விட முடியாது திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மிகவும் முக்கியமான பிரச்னையை நியாயமானதை எழுப்பினார். அதனால் அனுமதித்தேன்.



வின்சென்ட் அவர்களுக்கும் அனுமதி தர மறுத்திருக்கிறேன். அவரை வேறுவழியில் பிரச்னையை தீர்த்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறேன்.

அவை உரிமை மீறல் பிரச்னைகள் இரண்டு இருக்கின்றன. அவை உரிமை மீறல் பிரச்னைக்கு முன் உரிமை கொடுத்தாக வேண்டும்.

THIRU K. S. G. HAJA SHAREEF : I have given notice of a motion under Rule 55.

MR. SPEAKER : It is coming up. The hon. Member will please wait. First we must take up the privilege issue. Then only, adjournment motion will come.

**3. உரிமைப் பிரச்னை.**

**வானொலி நிலையத்தின்மீது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 246 வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையைப் பேரவையில் எழுப்ப இசைவு அளிக்கவேண்டும் என்றுகேட்டு ஒருமுன்னறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். இதற்கு ஏன் இசைவு அளிக்க வேண்டும் என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் ஒரு சக்திமிக்க ந்யூஸ் மீடியா ஆல் இந்தியா ரேடியோ என்பது தெரிந்ததே. அதற்கு எதிராக ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பினால் சில 'கான்ஸிக்வென்ஸஸ்' இருக்கலாம் என்று தெரிந்தே அவையினுடைய உரிமை என்று வருகிறபோது மற்ற 'கான்ஸிக்வென்ஸை' விட உரிமைதான், பேரவையின் உரிமைதான் பெரிது என்ற முறையில்தான் ஆல் இந்தியா ரேடியோவிற்கு எதிராக இந்த உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டுவருகிறேன்.

29–8–1981 தேதி அன்று கேள்வி நேரம் முடிந்ததும் நம் நாட்டின் பிரதமருக்கு எதிராகவும் இரண்டு எம்.பி.க்களுக்கு எதிராகவும் அவர்களை ரே கமிஷன் விசாரணைக்கு உட்படுத்தவது பற்றி ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் நான் கொடுத்தது பற்றி உங்கள் கவனத்திற்கும் இந்த அவையின் கவனத்திற்கும் கொண்டு

வந்து அது என்னவாயிற்று என்று கேட்டதும் உங்களுக்குத் தெரியும். ரே கமிஷன் நடவடிக்கைகளை ஹைகோர்ட் ஸ்டே செய்திருக்கிறது........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இப்போது கிளப்ப இருக்கும் உரிமைப் பிரச்னை இரண்டு நாட்களுக்கு முன்னதாக இந்த மன்றத்தில் வந்தது. நாங்கள் கூட அப்போது ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஏ.ஐ.ஆர். பற்றியது.

திரு. அ. ரகுமான்கான் : உரிமைப் பிரச்சினை என்னவென்று வாசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் வாசிக்க வேண்டியதில்லை.

திரு. அ. ரகுமான்கான் : ரூல்ஸைப் பாருங்கள். வாசிக்க வேண்டும் என்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அதை வாசிக்க வேண்டியதில்லை. நான் இதற்கு இசைவு கொடுக்கிறேனா இல்லையா என்பது அவர்கள் பேசிய பிறகுதான் தெரிய வரும்.

The Hon. Member must read the Rules and Regulations,

திரு. ரா. உமாநாத் : அந்த உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று என்று கேட்டபோது தாங்கள் ரே கமிஷன் நடவடிக்கைகளை ஹைக்கோர்ட் நிறுத்தி வைத்திருக்கிறது என்றும் ஹைகோர்ட் நடவடிக்கைகள் முடிந்த பிறகுதான் அது எடுக்கப்படும் என்றும் அதற்கிடையில் ஏதாவது கமென்ட்ஸ் வந்தால் அதன் மீது எங்களையெல்லாம் கன்ஸல்ட் செய்து இந்த அவையை கன்ஸெல்ட் செய்துதான் முடிவு எடுக்கப்படுமென்று அன்றைக்கு ஒரு முக்கியமான தீர்ப்பைக் கூறினீர்கள். ஆல் இந்தியா ரேடியோ இந்த அனைத்துச் செய்திகளையும் முழுக்க முழுக்க இருட்டடிப்புச் செய்து விட்டார்கள். அன்றைக்கு மாநிலச் செய்திகளில் பேரவையில் எழுந்த பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி ஈவினிங் நியூஸில்சொன்னபோது இந்தச்செய்தியைஉங்கள்முடிவை அவர்கள் மறைத்துவிட்டார்கள். சில சமயங்களில் மாநிலச் செய்திகளில் சொல்லாது சட்டமன்றத்தில் இன்று என்று இரவு 7–00 மணிக்குச் சொல்வார்களே, அதிலும் அது மறைக்கப்பட்டிருக்கிறது. சில சமயம் இரண்டிலும் இல்லையென்றால் மறுநாள் காலை ரீஜனல் நியூஸில் சொல்வார்கள், அதிலும் அது மறைக்கப்பட்டது.





உங்களுக்குத் தெரியும். இங்குள்ள நிருபர்களுக்குத் தெரியும் ஏதாவது தப்பு நடந்தால் கூட உடனே நான் ப்ரிவிலேஜ் மோஷன் கொண்டு வருவதில்லை. அவர்களைக் கூப்பிட்டு நேராக திருத்திவிட வேண்டுமென்று சொல்வேன். ஆனால் இந்த ஏ. ஐ.ஆர். ரைப் பொறுத்தவரையில் இந்த உரிமை மீறல் அவர்கள் தெரிந்தே செய்ததாக நான் கருதுவதால்தான், வேண்டுமென்றே செய்ததாக நான் கருதுவதால்தான் நான் இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன். ப்ரைமா பேஸிக்கு ஆதாரம் என்ன என்று கேட்டிருக்கிறீர்கள்.

அன்றைக்கு சட்ட மன்றத்தில் முதலில் எடுத்துக் கொள்ளப் பட்டது கேள்வி நேரம். இரண்டாவதாக, நான் ரெயிஸ் செய்த பிரச்சினை. மூன்றாவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூறிய ஒரு குறை, தினமலர் பத்திரிகையில் வந்தது சம்பந்தமாக. அடுத்தபடியாக ஹர்த்தால் விஷயம் வந்தது. நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், மாநிலச் செய்திகள் என்பதிலும், சட்டமன்றத்தில் இன்று என்பதிலும், மூன்று நிகழ்ச்சிகளிலும் இவ்வளவு செய்திகளைச் சொல்லி இருக்கக் கூடிய ஆல் இந்தியா ரேடியோ நம் நாட்டுப் பிரதமருக்கு எதிராக ரெய்ஸ் செய்திருக்கக்கூடிய ஒரு மோஷன், தாங்கள் சொல்லி இருக்கக்கூடிய அந்த முடிவு இவை செய்திகள் அல்லவா என்பதில் தான் பிரச்சினை வருகிறது.

(முற்பகல் 10–30)

ஒரு பத்திரிகைக்கு எதிராக திரு. சித்தன் குறை கூறியது செய்தியாக வந்திருக்கிறது. ஆனால், உங்களுடைய தீர்ப்பு வரவில்லை அந்தப் பிரச்சினை விடப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது, அதுவும் கூட பெண்டிங்காக இருக்கின்ற முதல் அமைச்சர் மீதுள்ள ஒரு பிரிவிலேஜ் மோஷன் பாக்கியிருக்கிறது என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். நிச்சயமாக ஆல் இண்டியா ரேடியோ இந்தச் செய்தியை நியூசாகச் சொல்லக்கூடிய நேரத்திலே வேண்டுமென்றே சொல்லவில்லை. வேண்டுமென்று சொல்லாமல் இருப்பதற்குக் காரணம், இதிலே பிரதமர் சம்பந்தப்பட்டிருப்பதினால் மக்களிடமிருந்து அதை மறைக்க வேண்டுமென்பதற்காக இந்த நடவடிக்கையை சப்ரஸ் செய்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஒருக்கால் இதை நாங்கள் எடிட் செய்தோம் என்று சொல்வார்கள். ஆனால், எடிட் செய்வதற்கும் சென்சார் செய்வதற்கும் வித்தியாசம் உண்டு, (குறுக்கீடு).

Mr. SPEAKER : The Hon. Member is asking me and I am going to answer.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், பிரிவிலேஜ் மோஷனிலே அவர் என்ன சொன்னார் என்பதே தெரியவில்லை. இந்த நிலையில் அவர்கள் பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்?

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அவர்கள் எடிட் செய்தோம் என்று சொன்னால், அதிலே வித்தியாசம் இருக்கிறது. அது எடிடிங் அல்ல. அது சென்சார் செய்யப்பட்டிருக்கிறது. இது வெளியே நடந்த சம்பவம் அல்ல; இது அவையிலே நடந்த சம்பவம். நடவடிக்கையாகும். (It is our own property) நம்முடைய பிராப்பர்ட்டியைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால் அதை நம்முடைய அவையின் முறைக்கு உட்பட்டு, நம்முடைய டிசிப்பிளினுக்கு உட்பட்டு ஆல் இன்டியா ரேடியோ செய்ய வேண்டும்.

They are not answerable to the Central Government with regard to our proceedings.

நம்முடைய புரோசீடிங்சைப் பற்றிச் சொல்வதில் அவர்கள் மத்திய அரசுக்குக் கடமைப் பட்டவர்கள் அல்ல. நமக்கு கடமைப்பட்டவர்களாவார்கள். ஆகவே, நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது, இது வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதை அவை உரிமை மீறல் கமிட்டிக்கு தாங்கள் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்னுடைய தீர்ப்பை கூறி விடுகிறேன்.

பேரவையின் நடவடிக்கைகளை மாற்றாமல், திரித்துக் கூறாமல் அப்படியே வெளியிட வேண்டியதுதான் மரபு. ஆயினும், திரு. கவுல், திரு சக்தர் அவர்கள் எழுதியுள்ள "பாராளுமன்ற வழக்கங்களும் நடைமுறைகளும், பற்றிய புத்தகத்தில் கீழ்க்கண்ட பகுதியை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

"No breach of privilege is involved, if a member's speech has not been covered in full or has been covered in a summary form in the Press or over the Radio or T.V. It is also not a breach of privilege, if a particular speech is not covered as adequately as other speeches, or is not given prominence."



எனவே, ஒரு உறுப்பினர் பேச்சு வெளியிடபடவில்லை என்பது உரிமை மீறல் ஆகாது. வேண்டுமென்றே அப்பேச்சு திரித்தப்பட்டோ, மாற்றப்பட்டோ வெளியிடப்படுமானால்தான் அவை உரிமை மீறல் பிரச்சினை எழும்.

ஆயினும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களை வானொலி நிலையத்தார் கருத்தில் கொண்டு செயல்படுவார் என்று நம்புகிறேன்.

எழுப்பப்பட்ட பிரச்சனையில் அவை உரிமை மீறல் எதுவும எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் நீங்கள் பிரச்சனை பற்றி முன்கூட்டியே சொல்லவில்லை. ரேடியோவிலே, பத்திரிகையிலே நான் கேட்கவும் இல்லை; படிக்கவும் இல்லை

திரு ரா. உமாநாத் : உங்களுடைய தீர்ப்பை நான் ரேலஞ் செய்யவில்லை. நான் கூறுவது இந்த நடவடிக்கை சப்ரெஸ் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு உங்களுடைய தீர்ப்பைக் கூறுங்கள். அதற்குத் தாங்கள் தீர்ப்புக் கூறவில்லை. அதைக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டசபை நடவடிக்கையை திரித்துக் கூறினாலோ அல்லது மாற்றிக் கூறினாலோ நாம் அதை கண்டிக்க முடியும். அப்போது அது அவை உரிமை மீறல் பிரச்சினையாக வரும். ஆனால், நடவடிக்கை குறிப்பை விடுவதோ அல்லது குறைத்துச் சொல்வதோ அந்தந்தப் பத்திரிகைகளுக்கு உரிமை இருக்கிறது; அதைப் போல் ரேடியோவிற்கும் உரிமை இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : பூரணமாக மறைக்கப்பட்டால் என்றிருக்கிறது. பார்சியலாக அல்லாமல், கம்பிளீட்டாக மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். எனவே அதற்குத் தங்கள் தீர்ப்பைக் கூறுங்கள்.

THIRU V. KRISHNAMOORTHI : I want to make a mention and I want your protection, Mr. Speaker, Sir.

நேற்றைக்கு முன் தினம் மாண்புமிகு திரு உமாநாத் அவர்கள் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்ததாகவும், உயர்நீதி மன்றத்தில் ஒரு பிரச்சினைக்குத் தடை விதித்து விட்டதால்அதை ஒத்தி வைத்ததாகவும் கூறினீர்கள். நான் கூட எழுந்து சபையில் கேட்டேன்.

The House cannot be kept in darkness.

சட்டசபையில் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தால்

What are the contents of the privilege motion.

என்பதைச் சொல்ல வேண்டும். நீங்கள் அனுமதிக்கிறீர்களா இல்லையா என்பது வேறு விஷயம். கன்டென்ட்ஸ் என்ன என்று சொல்ல வேண்டாமா? அது என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை. டெபனிட் மேட்டர் இல்லாமல் நீங்கள் இரண்டு பேரும் பேசிக் கொண்டால் எப்படி? This is very wrong.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே ராங் ஒன்றுமில்லை பிரிவிலேஜ் இஷ்யூ வந்தது..

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : We should not be kept in darkness. We should be told what is happeing in the House.

பிரைமா பாசி என்று சொல்லிவிட்டால் போதுமா? * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கூறியது நீக்கப்படுகிறது.

உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை கொடுக்க உரிமை உண்டு அதை அனுமதிப்பதோ, அனுமதிக்காததோ என்னுடைய உரிமை அதை நான் அனுமதிக்கவில்லை. ஆனால் கமிஷனில் இருந்து சம்மன் வந்தால் என்ன பண்ணுவீர்கள் என்று வெளிப்படையாக கேட்கப்பட்டதற்கு நான் அவையைக் கலந்து கொண்டு முடிவு செய்வேன் என்று கூறினேன். அதை ரேடியோவில் கூறவில்லை என்பது திரு உமாநாத் அவர்களுடைய குற்றச்சாட்டு.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் **ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**





## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### ஹோசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே.எஸ்.ஜி. ஹாஜா ஷெரீப், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். செல்லமுத்து, டி. மணி, கே. ஆர். சுந்தரம் ஆகியோர் "The unrest prevailing in the industrial area of Hosur and also inadequate infrastructure facilities, thereby causing loss of production. குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ஹாஜா ஷெரீப் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**Thiru K.S.G. HAJA SHAREEF :** Mr. Speaker, Sir, Under Rule 55 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice of the following motion to discuss the following matter of urgent public importance.

"The unrest prevailing in the industrial area of Hosur and also inadequate infrastructure facilities thereby causing loss of production".

Hence, I request that the other business of the House may be adjourned to discuss and take a decision on this important matter :

Sir, in the SIPCOT Complex at Hosur many major companies have established industrial units and accounts for a substantial number of employees in their employment and also accounts for very large and heavy investment. Particularly, for the last about a year there have been a lot of labour unrest and industrial indiscipline causing grave concesn for the managements. This has affected the productivity greatly. You will agree, Si , good industrial relations and harmory and fair standard of work cul ure are important factors for good production. I strongly belive in collective barganing as also the right of workers to trade unions and at the same time utilising statutory machinery of settle the disputes. Increase in violence both inside and outside the factories. are resorted to and thus productivity comes to a standstill, The dispute can be resolved by negotiating across the table in a peaceful manner.

I would like the State Government to immediately take such action that is necessary to bring the situation to normal, so that the industrial activities in these affected factories can proceed smoothly. I would also like the Government to ensure smooth industrial activities in that area continously hereafter.

Some of the basic needs which the State Government could do such as housing, transport, hospitals, schools, recreation and water availablity for industrial and domestic purposes etc., are not adequate enough to meet the growing needs of the area. I understand that the situation, of late, has further deteriorated rapidly and the industries situated there are finding it very difficult to carry on their normal manufacturing operations.

(முற்பகல் 10–40)

In fact the lack of these facilities have also led to labour unrest and industrial problems. These difficult problems and situation may also be fully exploited against the management. Hence, it is imperative that the Government should immediately take up the developmental works on a war footing, and reverse the situation.

In addition to the above, communication facilities, transport facilities and the provision of fire fighting equipments should be more immediately. For such a big complex there is no adequate police facility. There is no organised shopping centre. The rents charged are extremely high. This carries fear in the minds of the staff and workers working in the factories. These are required to be attended to immediately and I suggest the formation of the Board called the Hosur Township Development Board so that this authority can take up all these works and attend to all required amenities in that area.

Thank you, Sir.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே உள்ள ஒசூர் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் கடந்த பல மாதங்களாக தொழிலாளர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டு அவர்களுக்கு குறைந்த பட்ச தேவைகளைக் கூட பூர்த்தி செய்யாமல் ஒரு தொழிலாளர் விரோதக் கொள்கையை நிர்வாகம் கடைப் பிடித்ததன் காரணமாக தொழிற்சாலையிலே பிரச்சினைகள் ஏற்பட்டு தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்கிற நேரத்திலே அவர்களைப் பழிவாங்கக் கூடிய முறையிலே கடந்த பல மாதங்களாக கதவடைப்புகளைச் செய்து இருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்னாலே ஆனந்தா எலக்ட்ரிக்கல்ஸ், லட்சுமி டெக்ஸ்டூல்ஸ் தொழிற்சாலைகள் கதவடைப்புச் செய்கின்ற முறையில் செயல் பட்டார்கள். அது போன்று இப்போது அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்யாத நிலையில் கூட நிர்வாகமே கதவடைப்புச் செய்து இருக்கிறது. அங்கே இரண்டாயிரம் தொழிலளர்கள் வேலை





செய்கிறார்கள். அங்கே அதிலே 40 பேர்கள் தான் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1900க்கு மேற்பட்டவர்கள் அப்ரண்டிஸ், டிரெய்னீஸ் என்ற முறையிலே வைக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு கன்சாலிடேட்டட் சம்பளம் என்ற அடிப்படையிலே கொடுக்கப்படுகிறது. அந்த ஊழியர்களுக்கு வேலையின் அளவு, என்ன அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை எல்லாம் நிர்ணயிக்காமல் நிர்வாகமே தாங்களே ஒரு நார்ம்ஸை வைத்துக் கொண்டு அதை உற்பத்தி செய்யவில்லை என்பதற்காக அவர்கள் பெறுகிற 300 ரூபாய் சம்பளத்திலே ம தம் 100 ரூபாய் பிடிப்பு செய்யப்படுகிறது. இது சம்பள பட்டுவாடா சட்டத்திற்கு விரோதமாகச் செய்யப்படுகிறது. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் சொன்னதைப்போல் அந்த சிறிய நகர வட்டத்திலே குடிப்பதற்கு மக்களுக்கு குடிநீர் வசதி கிடையாது, சாப்பாடு வசதி கிடையாது அங்கே இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், ஆனால் ஒரு சிறிய கேண்ட்டின் இருக்கிறது, அங்கே தரமான உணவு தரப்படுவதில்லை, அதிகமான விலைக்குத் தரப்படுகிறது, தரமான உணவு வேண்டும், நியாயமான விலையில் கொடுக்கப்பட வேண்டுமென்று அந்தத் தொழிலாளர்கள் கேட்டார்கள் என்பதற்காக அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையை தொழிற் சங்கத்தினர் சேலம் டெபுடி லேபர் கமிஷனர் முன் கொண்டு போன போது பேச்சு வார்த்தை நடந்தது. அதற்குப் பிறகு சென்னையிலே உள்ள ஜாயிண்ட் லேபர் கமிஷனர் முன்னாலே 7–8–81 அன்று பேச்சு வார்த்தை நடந்தது. அவர்கள் சொன்ன ஆலோசனைகளை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டார்கள். கேன்டின் இல்லாத நேரத்திலே அந்த ஊழியர்களுக்கு 1.50 கொடுக்க வேண்டும். தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இவற்றையெல்லாம் நிர்வாகத்தினர் அங்கே ஒப்புக் கொண்டார்கள். அப்படி ஒப்புக் கொண்டவர்களைக்கூட அமல்படுத்தக்கூடிய முறையில் இன்றைக்கு அந்த நிர்வாகம் செயல்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது.

அதற்குப் பதிலாக ஜூலை மாதத்திலே வேலை செய்தார்களே. அந்த வேலைக் காலத்திலே நிர்வாகம் கூறிய உற்பத்தியைக் கொடுக்கவில்லை என்பதற்காக நூறு ரூபாய்க்கு மேல் உள்ள சம்பளத்தைப் பிடித்தம் செய்தார்கள். அப்படிப் பிடித்தம் செய்யக் கூடாது என்பதற்காகவும், ஜாயின்ட் லேபர் கமிஷனர் அவர்கள் கூறியபடி ஒரு நாளைக்கு ரூ. 1.50 எங்களுக்கு மானியமாகத் தர வேண்டும், எங்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற்று எங்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அந்த ஊழியர்கள் கேட்ட காரணத்தினாலே, ஜாயின்ட் லேபர் கமிஷனர் சொல்லியதையும் அமல் படுத்தாத நிர்வாகம், ஜாயின்ட் லேபர் கமிஷனர் சொல்லியதை அமல் படுத்த வேண்டுமென்று கேட்டதற்காக அங்குள்ள தொழிலாளர்

கள் ஆத்திரம் அடையும் வகையில், கேன்டீன் வசதிகளைக் குறைத்தும், கான்டீனில் கொடுக்கப்படும் அளவைக் குறைத்தும் தொழிலாளர் மத்தியிலே ஆத்திரத்தை உண்டாக்கியது. கதவடைப்பு செய்து, தொழிலாளர்கள் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை, உற்பத்தியைக் கொடுக்கவில்லை, அராஜகமாக நடந்து கொள்கிறார்கள் என்று தொழிலாளர்கள் மேல் பழியைச் சுமத்திக் கதவடைப்பு செய்திருக்கிறார்கள்.

அப்படிக் கதவடைப்பு செய்தது மட்டுமல்லாமல், அந்தத் தொழிற் சங்கத்திலே இருக்கின்ற வேலை செய்கின்ற முக்கியமான ஊழியர்களின் மீது போலீசிலே புகார் கொடுத்து அவர்கள் மேல் பல்வேறு வழக்குகளைச் சுமத்தியிருக்கிறார்கள்.

இந்த நிலைமை அசோக் லேலண்ட்டில் மட்டுமல்ல ; அங்குள்ள இதர பல்வேறு தொழிற்சாலைகளிலும் நடந்து வருகின்றன. ஆகவே, இன்றைக்கு உற்பத்தியின் பெயரால், தொழில் வளர்ச்சியின் பெயரால் தொழிலாளர்களின் குறைந்தபட்சத் தேவையைக் கூடச் செய்து கொடுக்காமல் அங்கே தொழில் நுணுக்கம் படைத்த தொழிலாளர்களின் சாதாரணக் கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றாமல் அங்குள்ள நிர்வாகங்கள் நடந்து வருகின்றன. இவைகளைப் பற்றி முறையாகப் பேசி அந்த வட்டாரங்களில் தொழில் அமைதி ஏற்படவும், உற்பத்தி பெருகவும், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கவும் சபையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி, மாவட்டம், ஓசூரில் உள்ள அசோக் லேலண்ட் நிறுவனத்தின் உணவு விடுதியின் ஒப்பந்தக்காரர் உணவு விடுதியைத் திடீரென்று மூடியதன் விளைவாக 26—5—81 அன்று வேலை நிறுத்தம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உணவு விடுதி மூடப்பட்ட பிறகு, நிர்வாகத்தினரால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொட்டலங்களைத் தொழிலாளர்கள் ஏற்கவில்லை எனவும் சொல்லப்படுகிறது. எனினும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அவர்களாகவே 26—5—81 அன்று மூன்றாவது ஷிப்டிலிருந்து வேலைக்குத் திரும்பினர்.

சேலம் தொழிலாளர் துணை ஆணையாளர் முன்னிலையில் தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் இது குறித்து பேச்சு வார்த்தை நடத்தினர். அந்தப் பேச்சு வார்த்தையின் போது உணவு விடுதி மறுபடியும் திறக்கப்படும் வரை இலவசமாகத் தேநீரும், வேலை செய்யும் நாட்களுக்கு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 1.50 வீதம் வழங்குவதென்ற நிர்வாகத்தின் கருத்தைத் தொழிலாளர் சங்கம் ஏற்றுக் கொண்



டது. தொழிலாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமாக, நிர்வாகத்தின் விசாரணையில் இருக்கும் சில தொழிலாளர்களைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்த உத்திரவை ரத்து செய்ய வேண்டுமென்றும், மேற்படி உணவு விடுதி விவகாரத்தில் சம்பந்தப்பட்ட வேலைமறுக்கப்பட்டதாகக் கூறப்படும் 63 தற்காலிகத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றும் தொழிற்சங்கம் நிர்வாகத்தைக் கோரியது. ஆனால் விசாரணையில் உள்ள சில தொழிலாளர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்த உத்தரவை ரத்து செய்யவும், நிரந்தரமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தற்காலிக தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கவும் நிர்வாகம் இணங்கவில்லை. இதன் பிறகு தொழிலாளர் இணை ஆணையர் சம்பந்தப்பட்டவர்களுடன் 27—7—81 மற்றும் 7—8—81 ஆகிய நாட்களில், இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால் எத்தகைய உடன்பாடும் காண முடியவில்லை.

இதற்கிடையில் தொழிலாளர்கள் வன்முறையில் இறங்கியதாலும் அமைதிக்கு ஊறு விளையும் எனக் கருதியதாலும் நிர்வாகத்தின் சொத்துக்குச் சேதமும், நிர்வாக அதிகாரிகளுக்கு ஆபத்தும் ஏற்படும் என்ற காரணங்களை முன்னிட்டு நிர்வாகம் 13—8—81 முதல் கதவடைப்பு செய்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

தொழிலாளர் நல ஆணையாளர், தருமபுரி மாவட்டத் தொழிலாளர் நல அலுவலரை இப்பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வு காணும்படி அறிவுறுத்தியுள்ளார். நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பொதுவாகத் தர்மபுரி மாவட்டத்தில் தொழிற் சங்கம் நடக்கக் கூடிய முறையும் அங்கேயிருக்கக் கூடிய நிலையும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்ற காரணத்தால் இதையொட்டி விசாரிப்பதற்காக ஒரு தனியாக அதிகாரியையும் அனுப்பி அவருடைய ரிப்போர்ட்டும் வந்திருக்கிறது. போலீஸ் துறைக்கும் சொல்லப்பட்டு அங்குள்ள நடவடிக்கைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளார்கள். மேல் மட்டத்திலும் பேச்சு வார்த்தை நடத்துவதாக உள்ளது. ஆகவே, இது குறித்து சட்டமன்றப் பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10–50.)

### 5. கவன ஈர்ப்புகள்.

#### (அ) திருவல்லிக்கேணி இந்து மேல் நிலைப் பள்ளி மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. வெங்கடசுப்பிரமணியம், ப. பொன்னுரங்கம், கு. பா. பழனியப்பன், த. ஆறுமுகம், எஸ். என். இராமசாமி, இ. முத்துராமலிங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, "சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள இந்து மேல்நிலைப் பள்ளி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் கல்வி பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

சென்னை திருவல்லிக்கேணி இந்து மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்த திரு. ஜே. பாலசுப்பிரமணியன் என்ற தமிழாசிரியர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் முடக்கு வாதத்தினால் பீடிக்கப்பட்டிருந்ததால் பள்ளி நிர்வாக குழுவின் தீர்மானத்தின்படி மருத்துவ குழுவிற்கு கடந்த 6–6–1981 அன்று அனுப்பி வைக்கப்பட்டார். மருத்துவக் குழு மேற்படி ஆசிரியர் இனிமேல் ஆசிரியப் பணிக்கு லாயக்கில்லாதவர் எனக் கருத்து தெரிவித்தது. அதன் அடிப்படையில் அன்னார் கடந்த 31–7–1981 பிற்பகலிலிருந்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அன்றே அவருக்கு கொடுக்கப்பட்ட ரூ. 3,300-க்கான காசோலையையும் பெறவில்லை. மாறாக பள்ளி நிர்வாகத்திற்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி வைத்தார். அதற்கு தகுந்த பதிலை பள்ளி நிர்வாகம் அனுப்பி வைத்தது. இது சம்பந்தமான அறிக்கை பள்ளி துணை இயக்குநருக்கு (இடைநிலைக் கல்வி) அனுப்பி வைக்கப்பட்டது. பள்ளி 4–8–1981-லிருந்து 21–8–1981 வரை மாமூலாக நடைபெற்று வந்தது. ஆனால், கடந்த 21–8–81 அன்று முன்னறிவிப்போடு தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கம் தர்ணாவில் ஈடுபட்டது. சம்பந்தப்பட்ட பள்ளியின்



ஆசிரியர்களான 31 பேர்களும் மேற்படி தர்ணாவில் சலந்து கொண்டனர். பள்ளி நிர்வாகக் குழு காவல் துறையின் உதவியை நாடியது. தர்ணாவில் கலந்து கொண்டவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். அன்றைய தினம் பள்ளி தொடர்ந்து நான்கு மணி நேரம் செயல்பட்டது. மேலும் தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒத்துழைப்பு பக்கோரி 24–8–81-லிருந்து தொடர்ந்து தர்ணாவில் ஈடுபடவிருப்பதாக அறிவித்ததின் அடிப்படையில் பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாதுகாப்புக் கருதியும், பள்ளிச் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு கருதியும், மறு அறிவிப்பு வரும்வரை கடந்த 24–8–81-லிருந்து பள்ளியை மூடியுள்ளது. சென்னை மாவட்டக் கல்வி அதிகாரி இந்தப் பிரச்சினை குறித்து பள்ளி நிர்வாகத்தினருடனும், ஆசிரியர் சங்கத்தினருடனும் ஓர் தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தமிழாசிரியருக்கு மீண்டும் அந்தப் பள்ளியில் வேலைவாய்ப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆசிரியர் சார்பாக அந்த ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். அந்த ஆசிரியரும் என்னை வந்து பார்த்தார். ஆகவே, அவருடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே அந்த பள்ளி 100 ஆண்டுகாலமாக நடத்தப்பட்டு வருகின்ற ஒரு சிறப்பான பள்ளி என்று பெயர் எடுத்த பள்ளி. அந்தப் பள்ளிசிற ஒரு ஆசிரியா எதற்காக நிறுத்தப்படுகிறார் என்பதை அரசு அறிக்கையில் பார்க்கும்போது, முடக்குவாத நோயினால் பாதிக்கப்பட்டார் ; ஆகையினாலே அவர் ஆசிரியராக இருக்கத் தகுதியில்லையென்று நிர்வாகம் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது. நான் ஆங்கிலம் படித்தது ஒரு முடக்குவாத ஆசிரியரிடம். ஒரு கையும் ஒரு காலும் கோணலாகத்தான் வருவார். ஆனால் திறமை பெற்ற ஆங்கில ஆசிரியர். பள்ளி ஆசிரியராக இருப்பதற்கோ, குமாஸ்தாவாக இருப்பதற்கோ முடக்கு வாதம் ஒரு பெரிய பிராபிளம் அல்ல. ஆக, நிலைமை இப்படி இருக்க முடக்குவாதத்தினாலே பாதிக்கப்பட்டார், ஆகையினாலே ஆசிரியரை நீக்கிவிட்டோம் என்று சொல்வது என்றால் எப்படி ? அதுவும் தமிழ் ஆசிரியர். தமிழ் ஆசிரியர் என்றால் கேவலமா ? அப்படிப்பட்ட ஒரு நிர்வாகம் அங்கே இருக்கிறது. இதனால் அனைத்து ஆசிரியர்களும் அங்கே தர்ணாவில் ஈடுபட்டிருக்கிறார்

கள் ; அதற்கு அனைத்து மாணவர்களும் ஒத்துழைப்பு தந்திருக்கிறார்கள் ; அக்கம் பக்கத்திலே இருக்கிற பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு தருகின்றனர். இப்படிப்பட்ட ஒரு அவல நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல, கடந்த ஒரு வார காலமாக அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகச் சொல்லப்படுகிறது. இன்று நாள் வரையில், ஒரு தனி ஆசிரியரைப் பொறுத்த பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. ஏன் இவ்வளவு காலதாமதம் ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுவே போராட்டமாகப் பரவி, இந்த ஓமியோபதி மெடிக்கல் காலேஜ் மாதிரி, லா காலேஜ் மாதிரி ஆகி, பிறகு இதற்கும் மூடுவிழா செய்யாமல், ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து மூடுவிழா நடத்தாமல், உடனடியாக ஆசிரியருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவும், பள்ளியைத் திறக்கவும் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரைப் பற்றிச் சொல்லிவிட்டு, கேள்வி கேட்பதற்குப் பதிலாக, ஒரு பெரிய பேச்சே பேசியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. மூடுவிழா நடத்த வேண்டுமென்கிற நோக்கம் யாருக்கும் கிடையாது. ஆனால், ஆசிரியர் நேற்றைய முந்தைய நாள் என்னை வந்து பார்த்தார். நேற்றைய தினம் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி அவர்களுக்கு இருக்கிற உரிமை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கிறது. ஒரு ஆட்சி தலையிடும்போது குறைந்தபட்சம் எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த அளவுதான் இந்த அரசு எடுத்துக் கொள்ளும். தகுந்த தீர்வைக் காண்பதற்கு முயற்சி எடுப்போம்.

திரு. ப. பொன்னுரங்கம் : மற்றப் பிரச்சினைகளில் அளிக்கின்ற உறுதியை இதில் தரவேண்டும். அவசியம் நிர்வாகத்தை வற்புறுத்தி அவரை மீண்டும் வேலையில் சேர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வியை நேராகக் கேட்டால் பதில் சொல்லுகிறோம். இப்போது இதிலே இருக்கிற பிரச்சினை அந்த ஆசிரியர், ஆசிரியர் பணி செய்வதற்குத் தகுதியற்றவர் என்று டாக்டர்களிடம் சான்றிதழ் வாங்கி, அவரை வேலையில் இருந்து நீக்கி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்போது என்னிடத்திலே வந்திருக்கிறார்கள். மூடுவதற்கு முன்னாலே, போராட்டம் நடத்துவதற்கு முன்னாலே என்னிடத்தில் யாரும் வரவில்லை. முந்நாள் இந்தப் பிரச்சினை நடந்து கொண்டு இருக்கிறபோது என்னிடத்தில் வந்தார்கள். அந்த ஆசிரியரை நேரில் வரச்சொல்லி நான் பார்த்தேன். நான் பார்த்ததற்குப் பின்னாலே அவர் சொல்லித் தருவதற்கு உரிய தகுதியோடுதான் இருக்கிறார் என்பதை நான் உணர்ந்ததற்குப் பிறகு நாங்கள் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



இந்த நிர்வாகம் செய்திருப்பது இப்போது இருக்கிற சூழ்நிலையில் மிகப் பெரிய தவறு. என்பது மட்டும் அல்ல அவருடைய குடும்ப நிலைமையைப் பார்க்கிறபோது ஒரு சாதாரண நிலையிலே இருக்கிற ஒரு மனிதன் கூட, இவ்வளவு மோசமான ஒரு முடிவை எடுக்கமாட்டார். ஆனால் இப்படி ஒரு முடிவை 100 ஆண்டுகாலம் பள்ளியை நடத்துகின்ற ஒரு நிர்வாகம் எடுத்திருக்கிறது என்பது, அந்த நிர்வாகத்தினுடைய தன்மையைத்தான் எடுத்துக்காட்டுகின்றது. அந்த நிர்வாகத்தின் முடிவைக் கண்டு நான் உண்மையிலேயே அதிர்ச்சி அடைந்தேன். 90 வயதான அவர் தந்தையையும், 85 வயதான அவருடைய சிற்றன்னையையும், மனைவியையும் படித்துக் கொண்டிருக்கின்ற 3 பெண்களையும—அதிலே ஒரு பெண் போலியோ வியாதியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்—வைத்துக் கொண்டு இருக்கிற ஆசிரியர். அந்த ஆசிரியருடைய சம்பளத்தை மட்டுமே நம்பி இருக்கிற ஒரு குடும்பத்தை, நடுத்தெருவிலே நிறுத்துகின்ற அளவுக்கு 100 ஆண்டு காலம் பள்ளியை நடத்துகின்ற ஒரு நிர்வாகத்தினுடைய மனப்பான்மை இருக்கிறது என்பதை நான், அந்த ஆசிரியரிடம் கேட்கின்ற போது, மிகவும் வேதனை அடைந்தேன். அத்தகைய போக்கினை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இத்தகைய நிலையிலே எந்த நிர்வாகமும் இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஆகவே இதிலே அரசு உடனடியாக தலையிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருவல்லிக்கேணியில் பெரிய தெருவில் இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியிலே வேலை செய்து கொண்டிருந்த ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்களை வேலை நீக்கம் செய்யப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட போராட்டத்தின் காரணமாக, அந்தப் பள்ளியிலே மாணவர்கள் மாணவிகள் அனைவரும் அந்த சுப்பிரமணியம் என்கின்ற ஆசிரியரை மீண்டும் உடனடியாக வேலைக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற போராட்டங்களை நடத்துகின்ற காரணத்தால் மாணவர்களின் படிப்பு கெடுவதைத் தடுத்து நிறுத்தும் வகையில் அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பள்ளிக் கூடம் இப்போது மூடப்பட்டிருக்கிறது. அந்த ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் அங்கே வேலைபோட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்த சுப்பிரமணியம் பேரில் உள்ள நடவடிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அரசுக்கு இது போன்ற நடவடிக்கைகளில் பெரிய சிக்கல் இருப்பதாக அமைச்சர் தெரிவித்ததை நான் கேட்டேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து திரு. பொன்னுரங்கம் அவர்கள் தெளிவாகப் பேசிவிட்டார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே அரசு தலையிட்டு இருப்பதன் காரணமாக ஆசிரியர்கள் பள்ளிக்குப் போகாமல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மாணவர்கள் படிப்பு பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே பள்ளிக்கூடம் நடைபெறுவதற்கான ஒத்துழைப்பை ஆசிரியர்கள் தரவேண்டும்.

## (ஆ) பொறியியல் கல்லூரிகளில் இடம் பெறுவதில் முறைகேடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. பாரமலை, திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ் நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களை மலைவாழ் மக்கள் எனப் பதிவு செய்து கொண்டு இடம் பெறுவதால், ஆதி திராவிட மலை சாதி மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைமுன் கீழ்க் கண்ட விபர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

பொறியியற் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்கள், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தங்களைக் கருத வேண்டுமென எண்ணினால், விண்ணப்பப் பாரத்துடன் இணைத்துள்ள வகுப்புச் சான்றிதழ் சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரியிடமிருந்து அதாவது துணைத் தாசில்தாருக்கு மேற்பட்ட அதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெற்று விண்ணப்பிக்கின்றனர். இவ்வாறு பெற்ற சான்றிதழை அடிப்படையாகக் கொண்டே, பொறியியற் கல்லூரிகளில் மாணவர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு தேர்வு செய்யப்படுகின்றனர். ஆனால் இதில் உண்மைக்கு மாறாக சான்றிதழ் கொடுக்கப்பட்டதாக நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்



பட்ட மாணவர் மீதும், சான்றிதழ் கொடுத்த அதிகாரி மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இச்சான்றிதழ் வழங்குவதில் தவறுகள் நேராவண்ணம் பார்த்துக்கொள்வதற்கு சமூக நலத்துறையிடமிருந்து அவ்வப்பொழுது வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆயினும், ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு என ஒதுக்கப்பட்ட 18 சதவிகித இடத்தில் முற்பட்ட சமூகத்தினர் பொய்ச்சான்றிதழ் அளித்து, இடம் பெற்று விடுகின்றனர் என்பதை சாதிச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு கண்டு பிடிக்க முடியாது. வருவாய்த்துறை அதிகாரி தரும் சான்றிதழின் அடிப்படையில்தான் தேர்வு செய்யப்படுகின்றதே தவிர, அச்சான்றிதழ் உண்மைதானா என்பதை தேர்வு சமயத்தில் உறுதி செய்ய முடியாது. இது பற்றிய புகார்கள் வந்தால்தான் விசாரணை செய்ய இயலும்.

திரு க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் பிரிவில் "கொண்டா ரெட்டி" என்று ஒரு பிரிவிருக்கிறது. "கொண்டா" என்றால் தெலுங்கில் மலை என்று பொருள். கொண்டா ரெட்டி என்ற மலை ஜாதியினர் சேர்வராயன் மலை, ஏற்காடு மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள் என்று அரசு குறிப்பு கூறுகிறது. அப்படிப்பட்ட அந்த ஜாதி 1961 ஜனத்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலே 8 பேர்கள் தான் இருந்தார்கள். 71-கணக்கெடுப்பின்படி 855 பேர்கள் ஆக ஆக்கப்பட்டார்கள். It is an abnormal growth அந்த 1971-கணக்கெடுப்பின்படி கூட அந்த ஜாதிகளே இல்லாத மாவட்டங்களில் இருந்து கொண்டா ரெட்டி என்று போலி சான்றிதழ் வாங்கி மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து இருக்கிறார்கள் என்பதை அரசு அறியும். இப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது? அதேபோல தமிழ்நாட்டில் உள்ள செல்வாக்கு பெற்ற பிரிவினர் கேரள மாநிலத்திற்குச் சென்று, கொண்டா ரெட்டி என்று பதிந்து கொண்டு, அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்களுடைய செல்வாக்கை பறிக்கிறார்கள் என்று தெரிந்ததற்குப் பின்னால், அரசாங்கம் "கொண்டா ரெட்டி" என்ற ஜாதிக்கு சர்ட்டிபிகேட் வழங்கக் கூடாது என்று தடை செய்திருக்கிறது. அதைப்போல தமிழ்நாடு அரசும் தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதிச் சான்றிதழை தவறான முறையிலே பெற்று இடத்தைப் பெறுவாரானால் அவர் மீது மட்டுமல்லா

மல், அந்தச் சான்றிதழை அளித்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க அரசு விரும்புகிறது. அதைத்தான் இங்கே சொல்லியிருக்கிறோம். தனிப்பட்ட புகாராக இல்லாமல், பொதுவான நிலையிலே இருக்கிறதாலே அரசு இதுகுறித்து பரிசீலிக்கும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1978 ஆம் ஆண்டு ஷெட்யூல்ட் கிளாஸ் 73·16 லட்சம்; அதாவது 17·76 சதவீதம்; ஷெட்யூல்ட் டிரைப் 3·11 லட்சம், அதாவது 0·76 சதவீதம்: ஆக இரண்டும் சேர்த்து 18 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக 18 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே அதிக எண்ணிக்கை இடங்கள் ஒதுக்கப்படுவதால் இதைப் பெறலாமென்ற நம்பிக்கையோடு இப்படிப்பட்ட போலி சான்றிதழ்களைப் பெறுகிறார்கள். ஆகவே ஷெட்யூல்ட் டிரைபுக்கு 0·76 என்ற இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு 1 சதவீத இடத்தை ஒதுக்கிட்டால் ''ஸ்கோப் ஆப் கெட்டிங் பாஸ்ட் அட்மிஷன்'' மிகவும் குறைவாக இருக்கும் என்பதாலே தனியாக அவர்களுக்கு ஒரு சதவீத இடத்தை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா? அதோடு அரசியல் சட்டம் 342 பிரிவு (2)-ன் கீழ் இப்படிப்பட்ட ஜாதி தமிழகம் முழுவதும் இல்லையென்று சொல்லி, ஒரு குறிப்பிட்ட பகுதியிலே உடையதாக மாற்றுவதற்கு மத்திய அரசிற்கு தமிழக அரசு சிபார்சு செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்களுடைய கருத்து நம்முடைய அதிகாரத்தின் கீழ் வருவது அல்ல. அது பற்றிய பிரச்சினைகளிலே தலையிடுகிற அதிகாரம் மத்திய அரசிற்குத்தான் இருக்கிறது. அதை அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் கொண்டுவரலாம். மற்றபடி இது பற்றி பரிசீலிக்கிறபோது தேவையான நடவடிக்கை எதுவாக இருந்தாலும் இந்த அரசு பரிசீலிக்கும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981–82-லே ''புரொபஷனல் கோர்ஸ்களில்,'' உயர்ந்த ஜாதிக்காரர்கள் தங்களை மலைவாழ் மக்கள் என்று சொல்லி மனு போட்டவர்கள் எத்தனை பேர்கள்? அதாவது மருத்துவம், என்ஜினியரிங், விவசாயம் என்ற இந்தப் பகுதிகளுக்கு மனு போட்டவர்கள் கொண்டா ரெட்டி என்று எத்தனை பேர்கள் போட்டிருக்கிறார்கள் ? அண்ணன் பாரமலை அவர்கள் மொத்தமாகச் சொல்லிவிட்டார்கள். 1961-ம் வருட சென்சஸ் பிரகாரம் கோவை, சேலம், தஞ்சை ஆகிய ஜில்லாக்களிலே ஒருவர் கூட



இந்த கொண்டா ரெட்டியினர் கிடையாது. 1971-ம் வருட சென்சஸ் பிரகாரம் சேலத்தில் மொத்தம் 507 பேர்களும், கோவையிலே 300 பேர்களும், தஞ்சையிலே 7 பேர்களும் தங்களை கொண்டா ரெட்டி என்று பதிவு செய்து கொண்டு அவர்கள் இந்த சலுகையைப் பெறுவதற்காக முயற்சி எடுத்திருக்கிறார்களே, இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைகள் என்னுடைய துறையின்கீழ் வருவதல்ல. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் இப்போது எவ்வளவு பேர்கள் என்ஜினீயரிங் கல்லூரியிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற கேள்வியை தனியாகப் போட்டால் அதற்கு பதில் சொல்ல முடியும். இப்போது விவரம் என்னிடத்தில் இல்லை. எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் சான்றிதழ் பெற்று, அதை வைத்துக் கொண்டு இடம் தருகிற அந்தப் பணியை செய்கிறவர்களாகத்தான் இருக்கிறோம். அதற்கு மேல் பொதுப் பிரச்சினை எல்லாம் உரிய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். எங்கள் முன்னாலே இருக்கிற பிரச்சினை சான்றிதழ் இருந்தால் அதை வைத்துக்கொண்டு இடம் தருவோம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கூட முற்பட்ட சமூகத்தினர் பொய் சான்றிதழ் பெற்று என்று— பொய் என்பதே ''அன்பார்லிமெண்டரி வேர்ட்'', ஆகவே அதை உண்மைக்குப் புறம்பான என்று திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொண்டா ரெட்டியை பற்றி மட்டும் இப்போது பேசுங்கள். அறிக்கையைப் பற்றி நேரடியாகப் பேசலாம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே, எந்தெந்த மாவட்டங்களிலே இப்படி கொண்டாரெட்டி என்று போட்டுக்கொண்டு மலைவாழ் மக்கள் என்று சொல்லிக்கொண்டு அரிசன மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருப்பது உண்மையா என்று கண்டுபிடிக்கின்ற வகையிலே சட்டமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற பேரவைத் துறையின் செயலாளர் அவர்களையும், அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற தாசில்தார் போன்றவர்களையும் கொண்ட ஒரு குழுவினை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே இங்கே பேசுகின்றபோது சான்றிதழ்தான் பொய் என்று சொன்னேன். உறுப்பினர்கள் பேசுகின்றபோது பொய் சொல்லப்பட்டது என்ற வகையிலேதான் பேசக்கூடாது. ஆகவே பொய் என்ற வார்த்தையே அன்பார்லிமென்டரி என்று சொல்வதற்கில்லை.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### 6. அறிக்கைகள் அளித்தல்.

#### (அ) உரிமைக் குழு.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் மீதுள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

#### (ஆ) மதிப்பீட்டுக் குழு.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிகைகைகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

#### (இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்களுடன் தொடர்பான பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1973–74) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மேற்படிகுழுவின் பத்தாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் வணிகத்துறைகள் மீதான அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த





நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினொன்றாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

### 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 79/1981)

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவு, 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 80/1981)

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகம், மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றை ஏற்படுத்துவது பற்றிய மசோதாக்களின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததிலே பெருமை அடைகிறேன்.

விடுதலை இயக்கம் ஊக்கம் பெறுகின்ற வகையிலே புரட்சிப் பாடல்களை உருவாக்கிய விடுதலை வீரர் அவர்களுடைய பெயரால் அரசு கொண்டு வந்ததைப் பாராட்டுகிறேன்.

மற்ற பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தி 100 ஆண்டுகள் ஆகி நூற்றாண்டு விழாக்கள் எல்லாம் கொண்டாடப்பட்டதற்குப் பிறகும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே பழைய முறைகளிலேதான் பாடத் திட்டங்கள் இருப்பதை நாம் பார்த்து வருகின்றோம். ஆனால் இந்த மசோதாவிலே அவற்றைத் திருத்தி அமைக்கின்ற வகையிலே சொல்லப்படவில்லை. இருப்பினும் இப்போது ஒன்றும் காலம் ஆகி விடவில்லை. அமரகவி பாரதியார் அவர்கள் என்னவெல்லாம் நினைத்தார்களோ, நாட்டிற்கு எப்படிப்பட்ட தொழில் வளங்கள் வேண்டும் என்றெல்லாம் நினைத்தார்களோ அவற்றை எல்லாம் வெறும் புத்தகப் படிப்பு என்ற வகையிலே இல்லாமல் உப பாடங்களாகக் கொண்டுவருகின்ற வகையிலே இந்த மசோதாவின் மீது திருத்தங்களை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆகவே பாரதிதாசன் அவர்கள் பெயராலும், பாரதியார் அவர்களுடைய பெயராலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதிலே நாம் பெருமை அடையலாம். ஆனால் அதே நேரத்திலே பாரதியாரும், பாரதிதாசனும் என்னென்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதையும் நினைவிலே கொண்டு அவற்றைப் பாடமாக வைத்தால் நன்றாக இருக்கும்.

பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் ஏற்பட்டிருப்பினும் நூற்றாண்டு விழாக்கள் எல்லாம் கொண்டாடப்பட்டிருப்பினும் தமிழகத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மகனோ, மலை ஜாதி

மகனோ இதுவரையிலும் வைஸ்-சான்சலராக வர முடியவில்லை,
இது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. ஒருவேளை அந்தச்
சமுதாயத்திலே படித்த மக்கள் இல்லையா ? அல்லது சுதந்திர
இந்தியாவிலே அவர்களை அவ்வாறு உருவாக்க முடியாத அவல
நிலையில் அரசு போய்விட்டதா என்பதை இந்தச் சமயத்தில்
சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

இதைக் குற்றமாக நான் சொல்லவில்லை. நாட்டிலே பல
பல்கலைக் கழகங்கள் வந்திருந்தும், பட்டம் பெற்றவர்கள்,
திறமையானவர்கள், தகுதி உள்ளவர்கள் அரிசன சமூகத்தில்
இருந்திருந்தும் ஏன் அவர்களுக்கு இடம் அளிக்கப்படவில்லை
என்று கேட்க விரும்புகிறேன்? ஏன், நம்முடைய அமைச்சர்
அவரிகளுக்கே தெரியும். சென்னை பல்கலைக் கழகத்திலே
கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் எடுக்கிறபோது, ஒரு டைரக்டர்
பதவிக்கு தாழ்ந்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, எல்லா வகை
யிலும் நல்ல முறையில் தகுதி பெற்ற, நல்ல அத்தாட்சி பெற்ற
ஒருவர் இருந்தும்கூட அவருக்கு அந்தப் பதவி அன்று கிடைகாதக்
சூழ்நிலை இருந்தது, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கே
தெரியும். இந்தச் சந்தர்ப்பத்திலே அதை நினைவுகூறும் முக
மாகவே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது ஏனென்
றால், இந்த இரண்டு பல்கலைக் கழகங்களிலாவது ஏதாவது
ஒன்றில் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு
வைஸ்-சான்சலர் பதவி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அப்படி தகுதி பெற்றவர்கள் அந்த சமுகத்தி
லேயே இல்லை என்று சொன்னால், இந்த அரசு தகுதியில்லாத
அரசு என்றுதான் சொல்ல வேண்டி வரும்.

ஆனால் பாரதிதாசன், பாரதியாருடைய பெயராலே வரு
கிற பல்கலைக் கழகங்களாதலால், அந்த இரு பெரும் புலவர்
களும் ஜாதியைப் பற்றியும், ஜாதி ஒழிப்பைப் பற்றியும்
அதிகமாக எடுத்துச் சொன்னார்கள் என்ற காரணத்தால்
அவர்களின் கருத்துக்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அதிகம் பற்றுக் கொண்டவர் என்ற அடிப்படையில், நிச்சயமாக
நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த அரசு தகுதியில்லாத
அரசு என்ற அவல நிலைமையை உண்டாக்க மாட்டார் என்று
நம்புகிறேன். அதிலே திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள், அனு
பவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அரசு பயன்
படுத்திக் கொண்டு, பாரதிதாசனும், பாரதியாரும் கண்ட கனவு
களை நினைவாக்கும் அஞ்சலியாக இந்த என்னுடைய கோரிக்கை
கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்த பில்லை முழுமையாக வரவேற்கிறேன். அதே நேரத்
தில் இன்னும் நாம் வெள்ளைக்காரர்கள் காலத்தில் வைத்திருந்
ததைப் போலவே 62, 65 கிளாஸ்கள் போட்டுத்தான் ஒரு சட்டத்
தைக் கொண்டு வருகிறோம். இதை கொஞ்சம் சிம்பிளாக
ஆக்கி எளிமையான முறையில் கிளாஸ்களை குறைத்து, கொண்டு
வர இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். இனி வருங்காலத்திலாவது அந்த முறையைக் கடைப்
பிடிக்க அரசு முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக, அட்டானமஸ் என்று ஒரு வார்த்தை இதிலே
போடப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையை அமைச்சர் அவர்
கள் மிக உன்னிப்பாக கவனித்துப் பார்த்து, சிந்திக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நம்முடைய மாநிலத்
திலே உள்ள கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அரசு
உத்தரவுகளை மதிக்காமல் இருக்கும் போக்கு வளர்ந்து கொண்
டிருக்கிறது. அதனால் இந்த அட்டானமஸ் என்ற வார்த்தையை
போட்டிருப்பதினாலேயே அவர்கள் எதையும் செய்யலாம் என்ற
துணிவு ஏற்படுமேயானால், அரசு அந்த வார்த்தை சட்டத்தில்
இருப்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். காரணம்
தனியார் துறைகளில் உள்ள கல்லூரிகளிலும் சரி, பல்கலைக் கழகங்
களிலும் சரி, மானியங்கள் வாங்கும் கல்லூரிகளானாலும் அரசாங்
கத்தை மதிக்காத போக்கு இருக்கிறது. ஆகவே அந்த வார்த்
தையை எடுத்துவிடுவதைப் பற்றி அரசு சற்று மறுபரிசீலனை
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எல்லாக் கல்லூரிகளிலும் இருக்கின்ற ஒரு பொதுவான
போக்கை நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுக்கு என்னைவிட மிக
நன்றாகத் தெரியும். அவர் ஆசிரியப் பெருமகனாக இருந்து
அனுபவம் பெற்றவர். அவர் மதுரை மாநகரில் இருந்தபோது
தான் அந்த மதுரைக் கல்லூரியிலே உள்ள இரண்டு மாணவர்கள்
கொலை செய்யப்பட்டார்கள். கொலை செய்யப்பட்டதற்கு
காரணம் என்ன? வேறு எந்த காரணம் இருந்தாலும், முக்கியமான
காரணம் ஒன்று உண்டு. அங்கே இருக்கும் மாணவர்கள்,
பல்ஸ் என்று சிலரை அழைப்பார்கள். மதுரை, இராமநாதபுரம்
கல்லூரிகளிலே உள்ள மாணவர்கள் சில பிரிவினரை பல்ஸ் என்
பார்கள். பல்ஸ் என்று சொன்னால், பள்ளர்கள் என்று பொருள்.
அது போலவே அண்ணாமலை யூனிவர்சிட்டியிலே ஷெட்டி என்
பார்கள், அப்படியென்றால் ஷெட்யூல்ட் கேஸ்ட், கும்பகோணம்
கல்லூரியிலே ஐ. ஆர். 8 என்று சொல்வார்கள். அது
நெல் ரகங்களிலேயே தரத்திலே கடைசி ரகம். ஆனால் பச்சை

யாக சொன்னால், கேரள பகுதியிலே உள்ள மக்கள் அந்த சிவப்பு அரிசியை மிகவும் விரும்பிச் சாப்பிடுவார்கள். அரியலூரிலே மட்ட நெல்லி என்பார்கள். நான் ஏன் இவைகளையெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னால்—பில்லுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையே என்று கேட்டால்—ஜாதி கலவரங்களுக்கு காரணம் என்ன என்பதை யோசிக்க வேண்டும். யார் அந்த கலவரங்களை தூண்டினார்கள்? அந்தக் கொலைகளுக்கு யார் காரணம்?

கல்லூரிகளில் இருக்கிற விடுதிகளை ஏன் அரிஜன விடுதிகள், பின்தங்கிய வகுப்பு மக்கள் விடுதிகள், ஜெனரல் விடுதிகள் என்று வைக்க வேண்டும்? ஆகவே இவைகளையெல்லாம் மாணவர்கள் இல்லம் என்றோ அல்லது ஏழை மாணவர்கள் இல்லம் என்றோ இருக்கிற நிலையை உருவாக்கவேண்டும்.

1966-க்குப் பிறகு மத்திய அரசு கொடுத்து வரும் உதவித் தொகைக்கு மேலாக மாநில அரசு உதவித் தொகை கொடுக்க வில்லை. 1967-க்கு முன்பாக மத்திய அரசு கொடுத்துவந்த உதவித் தொகையோடு மாநில அரசும் ரூ. 600, 700, 1,000 என்று கல்லூரிகளில் படிக்கிற ஆதி திராவிட மக்களுக்கு, அதிக மான தொகை அவர்களுக்கு செலவாகுமானால் அப்படிக் கொடுக் கப்பட்டு வந்தது இன்று சுத்தமாக நின்றிருக்கிறது. இப்படிப்பட்ட குறைகள் பாரதியின் பெயரால், பாரதிதாசன் பெயரால் ஏற் படக்கூடிய பல்கலைக் கழகங்களில் வரக்கூடாது என்று நினைவு படுத்த விரும்புகிறேன்.

எம். ஏ., எம். எஸ்ஸி., பி எச். டி., எம். எஸ்., எம். டி., ஆகியவற்றிற்கு இடங்கள் ஒதுக்கும்போது இந்தத் தாழ்த்தப் பட்ட வகுப்பு மாணவர்களுக்கு போதிய இடங்கள் ஒதுக்கப்பட வில்லை. ஏன் குஜராத்தில் கலவரம் வந்தது? ரொம்பப் பேர் களுக்கு அது தெரியாது. குஜராத்தில் எம். எஸ்ஸி., எம். எஸ்., எம். டி., பிஎச். டி., பாரின் ஸ்டடீஸ் இவற்றிற்கு பிள்ளைகளை சேர்ப்பதில் அவர்களுக்கு என்று 7 சதவிகிதம் கோட்டா கொடுக் கப்பட்டது. தமிழ் நாட்டில் ஆதி திராவிட மக்களுக்கு, மலை வாழ் மக்களுக்கு அரசாங்கக் கணக்குப்படி 18 சதவிகிதம் எம். ஏ., எம்.எஸ்ஸி., எம். எஸ்., எம். டி., பிஎச்.டி., பாரின் ஸ்டடீஸ்க்கு ஒதுக்கவேண்டும் என்று இருந்தாலும் அந்த அளவிற்கு அவர்களுக்கு கிடைப்பதில்லை. குஜராத்தில் அப்படிக் கொடுக்கிறார்கள், எவ்வளவு பேர் சதி செய்தாலும் இந்தியப் பிரதமரின், இந்திய அரசின் உறுதுணையோடு அது வெற்றியோடு நடந்து வருகிறது. அப்படி நாமும் செய்ய வேண்டும். உத்தியோக உயர்வுகளில் கூட அவர்களுக்கு போதிய விகிதாசாரம் கொடுக்கப்படவில்லை. அப் படிக் கொடுக்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.





**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகழுக்கு புகழ் சேர்க்கிற வகையில் சில தினங்களுக்கு முன்னால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கோவை நகராட்சி மாநகராட்சியாக ஆக்கப்பட்டு கோவை மாவட்ட மக்களுக்கு பெருமை சேர்ப்பதுபோல் இன்று கல்வித் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற நமது கல்வி அமைச்சர் அவர்கள் கோவை மாவட்ட மக்கள் அனைவரும் போற்றிப் புகழத்தக்க வகையில், கோவையில் தேசிய விடுதலைப் போராட்டக் காலத்தில் செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது செக்கிழுத்த அந்தச் சிறை உள்ள கோவைக்கு, திருப்பூர் குமரனைப பெற்றுத் தந்த கோவைக்கு, அந்த கோவை மக்கள் மேலும் பெருமை பெறுகிற வகையில் தேசியக் கவி பாரதியாரின் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தினை கோவையில் ஏற்படுத்தித் தந்ததற்காக இந்த அரசையும் அமைச்சர் அவர்களையும் பாராட்டுவதற்கு அங்குள்ள மக்களுக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை என்ற நிலை தான் இன்றிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் அமைய இருக்கும் கோவை பல்கலைக் கழகத்திற்கு பாரதி பெயரை பெறுகிற வகையில் அமைத்துத் தந்ததற்காக அந்த மாவட்ட மக்கள் சார்பிலும் என் சார்பிலும் அமைச்சர் அவர்களுக்கு பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அமைய இருக்கும் கோவைப் பல்கலைக் கழகப் ஏற்கனவே போஸ்ட் க்ராஜுவேட் சென்டர் அமைக்கப்பட்டி ருக்கிற மருதமலை அடிவாரத்தில் என் தொகுதியில் அமைய வாய்ப்பிருக்கிறது என்பதை எண்ணும்போது நான் எல்லோரையும் விட அதிகமாக மகிழ்ச்சியடைய வாய்ப்பிருக்கிறது. ஏற்கனவே போஸ்ட் க்ராஜுவேட் சென்டர் அமைக்கப்பட்டிருக்கிற இடத்தின் அருகில் பல்கலைக் கழகம் அமைய இருப்பதால் அங்கே அதற்காக இடம் எடுக்கும்போது அந்த நில உடைமையாளர்களின் நிலையை பரிவு செய்து இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மருதமலை அடிவாரம் கோவையிலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில்தான் இருப்பதால் அங்கு ஒரு ஏக்கர் நிலம் ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் போகக் கூடிய நிலை இருந்து வருகிறது. ஒரு சென்ட் ரூ. 3,000-ல் இருந்து ரூ. 5,000வரை மார்க்கட் விலை இருக்கிறது. அப்படி இருக்க அரசால் எடுக்கப்படுகிற நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ. 5,000, அதிகபட்சமாக ரூ. 10,000 கொடுத்கிற நிலைதான் இருந்து வருகிறது. ஏற்கனவே எடுக்கப்பட்ட நிலங் களுக்கு கிட்டத்தட்ட ரூ. 10,000தான் அதிகபட்சமாக கொடுத் திருக்கிறார்கள். அந்த நிலத்திற்குச் சொந்தமான மக்கள், ஏழை எளிய மக்கள் என்பதை கருத்தில் கொண்டு மற்ற பட்டாவை

கருத்தில் கொள்ளாமல் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கிற விலை உயர்வைக் கணக்கில்கொண்டு பல்கலைக் கழகத்திற்காக இடத்தைக் கையகப்படுத்தும்போது ஏழை எளிய மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-20)

இருக்கின்ற உண்மையை, யதார்த்த நிலையைக் கருத்தில் கொண்டு, ஒரு ஏக்கருக்கு 25,000 முதல் 50,000வரை கிடைக்கின்ற வகையில் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அதற்கான வரைமுறைகளை அரசு அதிகாரிகள் கணக்கிடும்போது, அவர்கள் தங்கள் கையிலிருந்து பணம் கொடுப்பதுபோல் 1965, 1970ஆம் ஆண்டுகளிலே உள்ள விலையை நிர்ணயிக்கின்றபோது, அந்தக் கிராமத்து மக்களின் மனக் கொதிப்பையும் நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். மேலும், விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கின்ற 2, 3 கிராமத்து மக்கள், எந்த வேலைக்குச் செல்வது என்று தெரியாமல் இருக்கிற நிலையிருக்கிறது. எனவே, இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கின்றபோது குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்காவது அந்தக் கிராமத்து மக்களுக்கு வேலை வழங்கும்படி இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால், அந்தக் கிராமத்து மக்களுடைய ஏற்றத் தாழ்வுகளில் பங்கு கொள்ளுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், நான் நம் அரசை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் நமது புரட்சித்தலைவர் அரசு நிச்சயமாக கருணை காட்டும் என்பதில், அதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்பயிருக்கிறது.

அடுத்து, அங்கு பல்கலைக் கழகம் அமைக்கப்படுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் நானும் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்தப் பல்கலைக் கழகம் அங்கே நிறுவப்படும்போது, மலைவாழ் மக்கள், ஆதிவாசி மக்கள் நலனுக்காக ஒரு தனிப்பட்ட இன்ஸ்டிட்யூட், மத்திய அரசின் ஆதரவோடு நிறுவ வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். காரணம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதியில், எனது தொகுதியில் 10க்கு மேற்பட்ட ஆதிவாசி பள்ளிகளில், கிட்டத்தட்ட ஆண்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டும், இந்த 10 பள்ளிகளிலும் சேர்ந்து இதுவரை எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் 10 பேர்களுக்கு மேல் இல்லை என்ற ஒரு நிலையிருக்கிறது. நான் ஒவ்வொரு பள்ளிக்கும் போய்ப் பார்த்திருக்கிறேன். ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கும் சென்றிருக்கிறேன். ஆனால், ஒரு ஆண்டிற்கு 20 இலட்ச ரூபாய் செலவிட்டும், 30 ஆண்டுகளில் 10 பிள்ளைகளை எஸ்.எஸ்.எல்.சி.யில் உருவாக்க முடியவில்லை என்று



சொன்னால், அந்த ஆதிதிராவிட மக்களுக்கு இதனால் என்ன பயன் என்பதை நாம் இன்று ஆராய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, கோவை மாவட்டத்தில் வால்பாறை, ஆனைக்கட்டி, சிறுவாணி. மற்றும் நீலகிரி மாவட்டத்தில் பல ஆதிவாசிகள் பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, இந்தப் பகுதிகளில்உள்ள ஆதிவாசி மக்களின் நலனைக் கருதி ஒருசிறப்பு நிறுவனத்தை இந்த பல்கலைக் கழகத்தோடு இணைத்து, அதிலே எலிமெண்டரி எஜூகேஷன் முதல் ஐ.ஏ.எஸ். தகுதி பெறக் கூடிய அளவுக்கு உயர் கல்வி பெறக்கூடிய அளவுக்கு அதிலே ஏற்படுத்தி, இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியான நிறுவனமாக, ஸ்பெஷல் இன்ஸ்டிட்யூஷனாக விளங்கக்கூடிய வகையிலே செய்வதற்கு அரசு ஆராய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஒரு கருத்தை நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோவை மாநகரத்தில் இன்று எழுந்துள்ள பிரச்னையை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஏற்பட்டிருக்கின்ற போராட்டத்தின் விளைவாக 30க்கு மேற்பட்ட பெண் ஆசிரியைகள் சிறையிலே இருக்கின்ற நிலையிருக்கிறது. இதில், நான் அவர்கள் பிரச்னைக்குள் போகவில்லை. ஆசிரியைகள் எடுத்துக் கொண்டுள்ள நிலைக்கும் நான் செல்லவில்லை. நிர்வாகத்திற்கு எதிராக கிளம்பியிருக்கின்ற போராட்டம் இது என்றாலும், எந்தக் காரணமாக இருந்தாலும் நமது அமைச்சர் அவர்கள் அவைகளை அன்புள்ளத்தோடு அணுகுகின்றவர் ; அவரைவிட ஒரு சிறந்த மந்திரியைப் பார்த்திருக்க முடியாது. அந்த அளவுக்கு ஆசிரியர்கள் பிரச்னையிலே கருணை உள்ளம் கொண்டவர். ஆகவே, நமது அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில், குறிப்பாக அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிப் பிரச்னையில், அங்கே பல்கலைக் கழகம் துவக்கப்பட இருக்கின்ற நேரத்தில் இந்த ஆசிரியர்களிடையே நல்லதொரு எழுச்சியை, உணர்வை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, இந்தக் கல்லூரியில் இந்த அரசின் அனுமதியில்லாமலேயே பி.காம் பட்டப் படிப்பை மூடியிருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. அதன் காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கின்ற, குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த பி.காம். கல்வியை அங்கு தொடர்ந்து நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையில் அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக ஆர்வம் காட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தின் கல்வி அமைச்சராக இருந்தாலும் கோவை மாநகரத்

திலே பல்கலைக்கழகம் அவர்து திருக்கரத்தால் ஆரம்பிக்கப்பட இருப்பது மேலும் பெருமை சேர்ப்பதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டி, வாழ்த்தி வணங்கி விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. என். சங்கரய்யா:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இரண்டு சட்ட முன்வடிவுகளையும்—தேசிய மகாகவி பாரதியார் பெயரிலும், அவருடைய சீடர் பாரதிதாசன் பெயரிலும் அமையக் கூடிய இரண்டு பல்கலைக் கழகங்களை ஏற்படுத்துவதற்கான சட்ட முன்வடிவுகளை வரவேற்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு மாபெரும் கவிஞர்களும் வெளியிட்டுச் சென்றிருக்கும் லட்சியங்களை, ஜாதிமத பேதமற்ற சமுதாயம், தீண்டாமை ஒழிப்பு, உழைப்புக்கு மதிப்புக் கொடுத்தல் போன்ற திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்த அவர்களுடைய பெயர்களை இந்தப் பல்கலைக் கழகங்களுக்கு வைத்திருப்பதால் அந்த லட்சியங்கள் பின்தொடரப்படும் என்று நம்புகிறேன். இந்தப் பல்கலைக் கழகங்களை நிறுவும்போது கல்வி கற்பிப்பதிலே பல புதிய துறைகளை இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் இல்லாத துறைகள் எல்லாம் இவற்றிலே இடம் பெற்றிருக்கின்றன. அது மிக மிக முக்கியமாக வரவேற்கப்பட வேண்டிய மாற்றம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், நாம் இதிலே மிக வேகமாக முன்னேற வேண்டியிருக்கிறது.

பொதுவாக, நம்முடைய நாட்டிலே கல்வி என்பது தியரிடிகல் எஜூகேஷன் என்று சொல்லப்படுவதாக அமைந்திருப்பதால் அதைப்படித்து முடித்தவர்களுக்கு நடைமுறையில் வேலை வாய்ப்புகள் இல்லாத நிலைமைகளைப் பார்க்கிறோம். பொறியியல், வேதியல் மற்றும் தொழில் நுட்பத் துறையிலும் இன்ன பிற துறைகளிலும் பலவற்றை எற்படுத்தியிருக்கிறார்கள். அதிலே, ஆழ்ந்த கவனம் செலுத்தி தமிழக விவசாய உற்பத்திக்கும் தொழில் உற்பத்திக்கும் சம்பந்தப்பட்ட துறைகளோடும் அந்த ஆராய்ச்சிகளை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் துறையில் இருக்கக்கூடிய தேக்கம், பயிர் வகைகள் தமிழகத்தில் குறைவாக இருக்கக்கூடிய நிலை ஆகியவற்றில் விவசாயப் பல்கலைக் கழகம் கவனம் செலுத்துவதுபோக, பல குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் இப்படிப்பட்ட துறைகளைப் பற்றி ஆய்வுகள் இருப்பது நடைமுறைக்கு ஒட்டியதாக இருக்க வேண்டும். அவைகளை வளர்க்கும் வகையில் பலப்படுத்தும் வகையில் இந்த இரண்டு பல்கலைக் கழகங்களும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



இந்த இரண்டு பல்கலைக் கழகங்களிலும் வேலை வாய்ப்புக்கான நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இதிலே பட்டம் பெற்றவர்களுக்கு ஆலோசனை கூறவும் வழிகாட்டவும் இந்த நிலையங்கள் செயல்பட வேண்டும். இது மிக மிக முக்கியம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை விளையாட்டரங்கத்தில் பின் தங்கி இருக்கிறார்கள். பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவ மாணவிகள் சிறந்த முறையில் முன்னேற முடியும். அதற்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

ஆராய்ச்சிகளைப் பொறுத்தவரை யதார்த்த உண்மைகள் அடிப்படையில் விஞ்ஞானங்கள் என்ன சொல்லுகிறதோ அந்த உண்மைகளைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவது பல்கலைக் கழகங்களின் கடமையாகும். உயிரின் தோற்றம், பூமியின் தோற்றம், பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றியெல்லாம் விஞ்ஞானம் சொல்லக்கூடிய கருத்துக்களைப் பரப்புவது மிக அவசியம். அப்படிச் செய்தால்தான் இன்றைக்கு மிகவும் பிற்போக்கான பழங்காலக் கருத்துகளையும் மூட நம்பிக்கைகளையும் போக்க உதவி செய்யும். அப்படிப்பட்ட நூல்களை வெளியிடவும், அப்படிப்பட்ட பிரச்சினைகளில் கருத்தரங்குகள் நடத்தி மக்கள் அறியச் செய்யவும் முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு செய்வது புதுமையான காரியங்களாக இருந்தாலும் பிற நாடுகளில் இந்தப் பல்கலைக் கழகங்கள் அறிவுத் துறைப் பிரசாரத்தில் முன்னணியில் இருக்கின்றன. அந்த உதாரணங்களை நம்முடைய இரண்டு பல்கலைக் கழகங்ளும் பின்பற்றவேண்டும்.

நான் ஒரு சேதி கேள்விப்பட்டேன். தமிழ்த்துறையில் பிஎச்.டி. ஆய்வினைச் செய்து அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட 'தீசிஸ்' பிரசிடென்சி கல்லூரியில் ஐம்பதுக்கு மேற்பட்ட உரைகள் யாராலும் வெளியிடப்படாமல் முடங்கிக் கிடக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். தமிழைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் தமிழின் வளர்ச்சிக்கு துணை செய்வோம். அப்படிச் செய்து ஆராய்ச்சியாளர்கள் செய்யக்கூடிய முயற்சிகளுக்கு பலன் இருக்கிறது. உத்தரவாதம் இருக்கிறது என்ற நிலை ஏற்படச் செய்ய வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

தன்னாட்சிக் கல்லூரிகளைப் பொறுத்தும் விதிகள் இருக்கின்றன. தன்னாட்சி அளிக்கப்பட்டிருப்பதை ரத்து செய்யவும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறேன். தன்னாட்சி கொண்ட கல்லூரிகளிலும் பலவற்றில் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பிரச்சினையை ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள்.

[முற்பகல் 11-30].

இப்படி தன்னாட்சிக் கல்லூரி ஏற்படுத்துவதன் மூலமாக உண்மையிலேயே தமிழ்நாடு அரசுக்குப் பயன் ஏற்பட்டிருக்கிறதா கல்வித் துறைக்குப் பயன் ஏற்பட்டிருக்கிறதா என்று பரிசோதனை செய்யவேண்டிய பொறுப்பு பல்கலைக் கழகத்திற்கு இருக்கிறது.

பல்வேறு பல்கலைக் கழகங்களினுடைய ஆய்வுக் கூடங்களிடையே ஒருவிதமான ஒத்துழைப்பு இணைப்பு ஏற்படுமானால் ஒரு பல்கலைக் கழகம் ஒரு துறையிலும், மற்றப் பல்கலைக் கழகங்கள் வெவ்வேறு துறைகளிலும் விசேஷமாக கவனம்செலுத்தி ஆய்வு செய்வது நாட்டுக்கு பலனுள்ளதாக இருக்கும். தமிழ் நாட்டிலே பல்கலைக் கழகங்கள் ஏற்படுகிறபோது அவைகளின் நடவடிக்கைகள் எல்லாம் அந்த ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் ஒருங்கிணைத்துச் செய்வதற்கு ஒரு ஏற்பாடு தேவைப்படுகிறது.

இதிலே 18-வது பிரிவில் திட்டக்குழு பற்றிச் சொல்லப்பட்டு இருக்கிறது. திட்டக்குழு என்று சொல்லக்கூடிய அந்த அமைப்பிலே பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி குறித்தும் கல்வியின் தரம் குறித்தும் பார்க்கலாம்என்று சொல்வதுஎப்படிப் பொருத்தமாகும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். கல்வி விவகாரங்கள் குறித்த நிலைக்குழு என்பதுதானே பொருத்தமாக இருக்கும். கல்வியின் தரம் குறித்தும், ஆராய்ச்சி குறித்தும் திட்டக்குழுவிலே கொண்டு போய்ச் சேர்ப்பது சரியா என்பதை அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்.

அத்தியாயம் 3 இல் செனட்டுக்கு — ஆலோசனைக் குழுவிற்கு—ஏனைய உறுப்பினர்கள் என்று கொடுக்கப்பட்டிருப்பதிலே இணை வேந்தர் 8 பேர்களை நியமிக்கலாம் சில துறைகளிலே என்று இருக்கிறது. அதுபற்றி என் யோசனை, வக்கீல்கள் மாநில சங்கம் இருக்கிறது. அதைப்போல் ஆசிரியர்கள் சங்கங்கள் இருக்கின்றன, அதைப்போல் பத்திரிகையாளர்கள் சங்கங்கள் இருக்கின்றன, அந்தநிறுவனங்களிலிருந்து அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை இவ்வாறு நியமிப்பது பொருத்தமாக. இருக்கும்.





இதிலே இன்றைக்கு தொழில் துறை சேர்க்கப்பட்டு இருக்கிறது, வணிகத்துறை சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் தொழிற் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்தால் என்ன ? இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய லட்சக்கணக்கான தொழிலாளர்கள் சார்பாக உள்ள மாநில ஸ்தாபனங்களுக்கும் இதிலே பங்கு இருக்குமேயானால் — நடைமுறையிலே அவர்கள் பணியாற்றுகிறார்கள் — ஆகவே அவ்வாறு இருப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அதோடு அந்த ஆலோசனைக் குழுவிலே போஸ்ட் கிராஜுவேட்ஸ், பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவர்களிடமிருந்து ஒவ்வொரு துறையிலும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து 6 பேர்களோ 7 பேர்களோ இந்த ஆலோசனைக் குழுவிலே இருப்பது உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதைப்போலவே நான்—டீச்சிங் எம்ப்ளாயீஸ் படிப்புத் துறையிலே சம்பந்தப் படாதவர்கள், அந்தப் பணியாளர்கள் நலன்களைப் பாதுகாப்பதற்காக அவர்களின் பிரதிநிதியை சேர்த்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

49-வது 'பி' பிரிவிலே—கடந்த காலகட்டத்திலே இருக்கலாம் — ஆனால் இது புதிய திருத்தம் என்று சொல்லப்படுகிறது, பல்கலைக் கழக உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவது பற்றிச் சொல்லப்படுகிறது. அதிலே கோர்ட்டிலே தண்டிக்கப்பட்டால் நீக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது, ஆனால் மிக ஒழுங்கீனமான குற்றஞ் செய்தவராக இருந்தாலும் என்று வேறு சொல்லப்பட்டிருக்கிறது. ஒழுங்கீனம் என்பதை யார் தீர்மானிப்பது ? ஒழுங்கீனம் என்பதற்கு பல அர்த்தங்கள் இருக்கும். பல பிரச்சினைகள் வரலாம், ஆகவே அந்த வாக்கியம் இருப்பது பொருத்தம் தானா என்பதைப் பார்க்கவேண்டும். அதோடு மாத்திரமல்ல குற்றம் செய்தால் அவர்கள் பட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ஒருவர் பெரிய குற்றத்தைச் செய்து விட்டாலும் — ஒருவர் டாக்டரேட் டிகிரி வாங்கியிருந்தால் — அந்தப் பட்டத்தைப் பறிக்கக்கூடாது. பட்ட மேற்படிப்பு படித்தவர் குற்றம் செய்தார் என்ற காரணத்தினால் அவர் பட்டத்தைப் பறிப்பது எப்படி முறையாக இருக்கும். ஆகவே இதை அரசு பரிசீலிக்கவேண்டும்.

கடன் செலுத்தச் சக்தியற்றவர்கள் — இன்சால்வன்சி — என்கிறபோது நீக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல பேராசிரியர்கள் இருக்கலாம், அவர்களால் கடன்களைக் கொடுக்க முடியாமல் இருக்கலாம், கொடுப்பதற்கு சக்தியற்றவர்களாக இருக்கலாம், அதனால் அவர்கள் ஸ்தாபனங்களிலே இருக்கக் கூடாது அதற்கு அது தடையாக இருக்கும் என்று சொல்வது எப்படி சரியாக இருக்கும். பணக்காரர்களாக இருந்தால் கடனைத் தீர்த்துவிடலாம். ஆகவே இது மிக அத்தியாவசியமான நிபந்தனையா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1981 செப்டம்பர் 1

அடுத்து, கவர்னர், வேந்தர், அவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையிலே அரசாங்கத்தைக் கலந்து ஆலோசித்து அவர்கள் முடிவு செய்தால் நல்லது. ஆனால் சில சந்தர்ப்பங்களிலே நாம் கேள்விப் படுகிறோம், அரசாங்கங்களைக் கலக்காமலே வேந்தர்கள், மத்திய அரசாங்கப் பிரதிநிதிகளாக இருக்கக் கூடியவர்கள் காரியங்களைச் செய்தால் அரசாங்கத்திற்கு கல்வித் துறைக்கு சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே இதைப்பற்றி ஆழ்ந்து யோசிக்க வேண்டும். வேந்தர்கள் முடிவுசெய்வதற்கு சம்பிரதாயமாக அதிகாரம் இருந்தாலும் நடைமுறையில் மாநில அரசாங்கம் தான் அதை யெல்லாம் நடத்துகிறது.

மாநில அரசின் ஒப்புதலோடு, ஆலோசனையோடு மட்டுமே வேந்தர் என்று சொல்லப்படும் ஆளுநர் அவர்கள் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் எந்த முடிவையும் எடுக்க வேண்டுமென்று பசய்வதுதான் சரியாக இருக்கும். ஏனென்றால் பொறுப்பு எனபது மாநில அரசுக்குத்தான் இருக்கிறது.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலுங்கூட இதுபோனற திருத்தச்சட்டம் கொண்டுவரவேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பல பிரச்னைகள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. அங்கே ஏராளமான தனியார் நலன்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலைமைகள் இருக்கின்ணறன. அதைப்பற்றி நீண்ட இயக்கங்கள் நடந்து வருகின்றன. எனவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் இதுபோன்ற திருத்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவினாசிலிங்கம் கல்லூரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நேற்றையதினம் கூட நிதி ஒதுக்க மசோதாமீதான விவாதத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டேன். அப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே இல்லை. அது பெரிய பிரச்னையாக ஆகிக்கொண்டிருக்கிறது. பல பெண் ஆசிரியைகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தனியார் கலைக் கல்லூரிகள் வியாபார நோக்கத்தோடு நடக்கின்றன எனறு ஆசிரியர்கள் பெருங்குற்றத்தைச் சாட்டுகிறார்கள். ஆகவே, அவினாசிலிங்கம் கல்லூரியிலும், கோயம்புத்தூரிலும் ஏற்பட்டிருக்கின்ற பிரச்னைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியைப் பொறுத்த வகையில் கொலைக் குற்றம் சாட்டப்பெற்றவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அது நியாயம்தான். ஆனால் யார்



1981 செப்டம்பர் 1] [திரு. என். சங்கரய்யா]

கொலை செய்யப்பட்டிருக்கிறாரோ அவர்கள் தரப்பிலே உள்ள மாணவர்கள் மீது எந்த வழக்கும் இல்லை ; கிரிமினல் வழக்கு எதுவுமில்லை, சில மைனர் பிரச்னைகளுக்காகச் சில மாணவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் ; அவர்கள் கல்லூரியில் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். இரண்டு நடவடிக்கைகளையும் ஒன்றாகப் பார்ப்பது சரியாகாது. இவர்கள்மீது எந்தவிதமான கிரிமினல் வழக்கும் இல்லாததால் அந்த மாணவர்கள்மீது இருக்கின்ற சஸ்பென்ஷன் உத்தரவை ரத்து செய்து தியாகராயர் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிபறன்.

முதலாவதாக இங்கே பேபய கோயம்புத்தூர் உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த இடங்களை வாங்கும்போழுது கோயம்புத்தூரிலிருந்து 15 மைல்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்குச் சற்று அப்பாலே இருந்தாலும்கூட அதையும் எடுக்கலாம். 25 கிலோ மீட்டருக்குள்ளே என்று ஒரு எல்லையைப் போட்டுக்கொண்டு அதற்குப் பிறகு வசதியான இடங்கள் கிடைத்தால்கூட எடுர்கக்கூடாது என்ற நிலைமைக்குச் செல்லக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடாது. இதைச் சட்டமாகப் போடாமல் அறிவிக்கையின் மூலம் காரியங்களைச் செய்யும் முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அதிக பெறுமானம் உள்ள நிலங்களை எடுக்கும்பொழுது அவர்களுக்கு நியாயமான விலையைக் கொடுப்பதோடுகூட மட்டுமல்லாமல், மற்ற சிலயிடங்களில் ஏற்படுத்துவதைப் போல அந்த நிலத்தைக் கொடுக்கின்ற குடும்பங்களில் உள்ளவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் வேலை கொடுக்கலாம் அல்லது மாற்று நிலங்களை வேறு தாலுக்காக்களில் அல்லது வேறு இடங்களில் கொடுக்கலாம். அவ்வாறு செய்வதால் இந்தப் பிரச்னைக்கு நீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே திரு. இளையபெருமாள் அவர்க்ள் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றிக்கூற விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு அரிசன மாணவர்களுக்கும், மலை வாழ் மக்களுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள். நான் கேள்விப்படுகிறேன், சென்னை சென்டரில் முழு நேரம் படிக்கின்ற மாணவர்கள் ஐந்து பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று. அதற்காகப் பல பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கொடுக்கப்படுகின்ற டெய்லி அலவன்ஸ் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால் எண்ணிக்கையும் பற்றாக்குறையாக இருக்கிறது. ஐந்து பேர்களுக்காக இவ்வளவு முயற்சியெடுத்துக்கொள்ளப்படுகிறது. நான் கூறுகிறேன், அரிசனங்களும், மலைவாழ் மக்களும் இன்னும் அதிக அளவில் வர வேண்டுமென்றால் பல்கலைக் கழகங்களும், பல கல்லூரிகளும் சிந்தித்து, அந்த மாணவர்களுக்கு அங்கேயே விசேஷ பயிற்சி அளிக்கின்ற ஒரு ஏற்பாட்டைச் செய்தால்தான் அவர்களுக்கு

ஒதுக்கப்படுகின்ற 18 சதவிகிதம் என்பதை நிறைவு செய்ய
முடியும் ; மேல்பட்டப் படிப்பு படித்து உயர்ந்த உத்தியோகங்
களுக்கு வர முடியும் ; அந்த இடங்களை அவர்களுக்கு ஒதுக்க
முடியும். எனவே, இப்படி அவர்களுக்குப் பயனளிக்கின்ற வகை
யில் பயிற்சி கொடுக்க வேண்டும். நூற்றாண்டுக் காலமாகப்
பின்தங்கியுள்ள அந்தச் சமுதாயத்தின் நிலைமை கடுமையாக
இருக்கிறது. எனவே, அதற்காக எவ்வளவு பணம் செலவழித்தா
லும் அது நியாயம்தான். அதையும் பல்கலைக் கழகங்கள் தங்க
ளோடு இணைந்துள்ள கல்லூரிகளில் அரிசனங்களுக்கும், மலை
வாழ் மக்களுக்கும் விசேஷப் பயிற்சிகளைப் பல்கலைக் கழகத்தின்
செலவிலேயே இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் வரவேற்று
அமர்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு துணைத் தலைவர்களே,
இன்றைக்கு இங்கே இருபதாம் நூற்றாண்டிலே தமிழகத்தின்
மறுமலர்ச்சிக்கு, கவிதை யுகத்திற்கு வழிகாட்டிய, வித்திட்ட
மகர கவிஞன் பாரதியார் அவர்கள் பெயராலும், அதைப்
போல, புரட்சிக் கவிஞன் பாரதி தாசன் பெயராலும் இரண்டு
பல்கலைக் கழகங்களை ஆரம்பிப்பதற்கு முன்வந்திருக்கின்ற இந்த
அரசை நான் உளப்பூர்வமாகப்பாராட்டுகிறேன். தமிழகத்திலுள்ள
அல்லது தமிழ்கூறும் நல்லுலகம் அத்தனையிலும் உள்ள அத்
தனைபேரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே கொஞ்சமும்
சர்ச்சைக்கு இடமில்லாத இரண்டு மகத்தான கவிஞர்களின் பெயர்
களை இந்த இரண்டு பல்கலைக் கழகங்களுக்கும் சூட்ட இந்த
அரசு முன்வந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது.

[முற்பகல் 11-40]

தமிழக மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கைகள் இன்றைக்கு
நிறைவேற இருக்கின்றன. திருச்சியிலே ஒரு பல்கலைக் கழகம்
வேண்டும். கோயம்புத்தூரிலே ஒன்று வேண்டுமென்ற கோரிக்கை
நீண்ட நெடு நாட்களாகத் தமிழக மக்களினாலே வலியுறுத்தப்
பட்டு வந்தது. இன்றைக்கு நிறைவேற்றியிருப்பது அடுத்த
மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்தப் பல்கலைக் கழகச் சட்டங்களைப்
பற்றி சில வார்த்தைகளை நான் இங்கே எடுத்து வைக்க விரும்பு
கிறேன். இதிலே பல முக்கியமான திருத்தங்கள் ஏற்கெனவே,
அமுலில் உள்ள சென்னைப் பல்கலைக் கழகச் சட்டமானாலும்,
மதுரைப் பல்கலைக் கழகச் சட்டமானாலும், அண்ணாமலைப்
பல்கலைக் கழகச் சட்டமானாலும், அவற்றில் இல்லாத புரட்சி
கரமான திருத்தங்கள், அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.
அதற்காக அமைச்சரவர்களை நான் உளப்பூர்வமாகப் பாராட்டு





கிறேன். அதிலே முக்கியமாக ஆட்சிக்குழு, அல்லது ஆலோசனை
குழு, இரண்டிலும் 6 ஆண்டுக் காலத்திற்கு மேலாக, இரண்டு
முறைகளுக்கு மேலாக, யாரும் உறுப்பினராக இருக்கக்கூடாது
என்று ஒரு திருத்தம். அதை, ஏற்கெனவே, மதுரை-காமராஜ்
பல்கலைக் கழகத்திலே, இந்த அரசு ஒரு அவசரச் சட்டத்தின்
மூலம் கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திருத்தத்தினை இந்தச்
சட்ட முன்வடிவிலே இடம் பெற வைத்திருக்கிறார்கள். என்ன
காரணத்தினாலே அதை என்னைப் போன்றவர்கள் ஆதரிக்கி
றோம். வரவேற்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். பல்கலைக் கழகங்களிலே துணை வேந்தர்களாக இருப்
பவர்கள் இரண்டு முறைக்கு மேலே ஆறு ஆண்டுக் காலத்திற்கு
மேலே, பதவி வகிக்கக்கூடாது என்ற முக்கியமான சட்டத் திருத்
தத்தினை இந்தத் தமிழக அரசு பல ஆண்டுகளுக்கு முன்னாலே
ஏற்றுக் கொண்டிருக்கிறது. பல்கலைக் கழகங்களிலே துணை
வேந்தராக இருக்கக் கூடியவர்கள் 6 ஆண்டுகளுக்கு மேலே இருக்கக்
கூடாது. ஆனால், அவற்றினுடைய ஆட்சிக் குழுக்களில், 20,
25, 30 வருடங்களுக்கு மேலாக, எத்தனையோ பேர்கள் நீடித்
திருக்கின்ற வகையில், ஏற்கெனவே இருந்த சட்டங்களில் வழி
வகை செய்யப்பட்டிருக்கிறது. அதன் விளைவு என்ன ஆகியிருக்
கிறது? ஆட்சிக்குழு என்று சொல்லப்படுகிற சின்டிகேட்டிலே
15 வருஷம், 20 வருஷம் இருப்பவர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து
கொள்கிறார்கள். 5 பேர்கள், 6 பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து
கொண்டு, புதிதாக வந்திருக்கிற துணை வேந்தர் எப்படியிருந்
தாலும் 6 ஆண்டுக் காலத்திற்கு மேலே, இருக்கமுடியாது என்ப
தால், அவரைவிட அவர்களுக்கு அனுபவம் அதிகம் இருக்கிறது
என்பதால், அவரைவிட அவர்களுக்கு பல்கலைக் கழகத்தின்
நெளிவுசுளிவுகள் அதிகம்தெரிந்திருக்கிற காரணத்தால், அந்தக்குழு
விற்கு அவர் அடங்கிப் போகவேண்டிய சூழ்நிலை பல பல்கலைக்
கழகங்களிலே இருப்பது எனக்குத் தெரியும். உண்மையிலே துணை
வேந்தர்களாக இருப்பவர்கள், துணைவேந்தர்களாக இருக்க முடி
யாது. சின்டிகேட்டிலே, ஆட்சிக் குழுவிலே 5, 6 பேர் சேர்ந்து
கொண்டு, துணை வேந்தரை ஆட்டிப்படைக்கின்ற சூழ்நிலை இன்
றைக்குப்பல பல்கலைக் கழகங்களிலே இருக்கின்றன. இந்த அவை
யிலே அவைகளைச்சுட்டிக்காட்டி இருக்கிறேன். அதன்விளைவாகத்
தான், பல்கலைக் கழக துணை வேந்தர் 6 ஆண்டுக் காலத்திற்கு
மேலாக அந்தப் பதவியிலே இருக்கக்கூடாது என்று முடிவெடுத்த
தற்குப் பின்னாலே, சின்டிக்கேட்டிலும், செனட் சபையிலும் 6
ஆண்டுக் காலத்திற்கு மேலாக யாரும் நீடிப்பதற்கு உரிமையில்லை
அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். ஏகபோக
ஆதிக்கம் என்பது இப்படித்தான் உருவாகிறது. பல சின்டி
கேட்டுக்களில் பல கொடுமைகள் நடந்திருக்கின்றன. 5, 6 பேர்
கள் அங்கே குழுவாகச் சேர்ந்துகொண்டு, துணை வேந்தரை
மிரட்டுவது, அங்கே வேலை செய்கின்ற பேராசிரியரை மிரட்டு
வது போன்ற பல காரியங்களிலே அவர்கள் ஈடுபடுகிறார்கள்.
அதன் விளைவாகப் பல்கலைக் கழக நிர்வாகங்களிலே பெருத்த
அளவு ஊழல்கள் நிகழ இரு ஒரு முக்கியமான காரணமாகத்

திகழ்கிறது. அதற்கு இந்தச் சட்ட முன்வடிவிலே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? 6 ஆண்டுக் காலத்திற்கு மேலே எத்தனை ஆண்டுக்காலம் வேண்டுமானாலும் அந்தப் பல்கலைக் கழக வாக்காளர்கள் விரும்பினால் அவர்கள் நீடிப்பதை ஏன் தடுக்கிறீர்கள். சட்ட மன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 ஆண்டுக் காலத்திற்கு மேலே நீடிப்பதை நீங்கள் தடுப்பதற்குத் தயாரா? முதலமைச்சர் 6 மாத காலத்திற்கு மேலே பதவி வகிப்பதை நீங்கள் தடுப்பதற்குத் தயாரா என்று சிலர் இங்கே பேசியதாக நான் அறிகிறேன். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. வெளியிலே நாம் எல்லோரும் மககளால் தேர்ந்தெடுக்கப்படுகிறோம். என்றால், 21 வயதானவர்கள், ஆண் பெண் யாராக இருந்தாலும், படித்தவர்களாகஇருந்தாலும், படிக்காதவர்களாக இருந்தாலும், எந்த மதத்தவராக இருந்தாலும், எந்த இனத்தவராக இருந்தாலும், வாக்குரிமை எல்லோருக்கும் அளிக்கப்பட்டு, அவர்கள் அளிக்கின்ற வாக்குகள் அடிப்படையிலே, சட்ட மன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக இந்த மன்றங்களுக்கு வருகின்றோம்.' சின்டிகேட் சபையிலே கிராஜுவேட் கான்ஸ்டிடுயன்ஸி என்று வைத்துக் கொண்டு, அதிலே படித்த பட்டதாரிகளுக்கு மட்டும் வாக்கு— அந்தப் படித்த பட்டதாரிகளிலே ரூ. 5 கொடுத்து யார் பதிவு செய்கிறார்களோ, அவர்களுக்கு மட்டுமே வாக்கு என்ற நிலை இருக்கிறது.

குறிப்பிட்ட எலக்டரேட். நான் இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் வைத்திருந்தால், 2 ஆயிரம் வாக்காளர்களைப் பதிவு செய்து கொள்வேன். அந்த 2 ஆயிரம் வாக்குகளைப் பெற்று செனட்டுக்கு வரலாம், அங்கே வாக்குகளைப் பெற்று சின்டிகேட்டுக்கு போகலாம். எல்லோராலும் அது போல செய்ய முடியாது. வசதி அற்றவர்கள் செனட் சபையின் உள்ளே போவது என்பது பெரிய விஷயம். ஆகவே அதையும், இதையும் ஒப்பிடுவது எந்த விதத்திலும் சரியானதல்ல. பொருத்தமானதல்ல.

மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி இந்த அவையிலே நான் ஒரு குற்றச்சாட்டை வைக்க விரும்புகிறேன். அண்மையிலே அங்கே செனட்டுக்கான தேர்தல் நடந்தது. சென்ற தடவை தேர்தல் நடந்த போது எனக்கு ஒட்டுரிமை இருந்தது. நான் பி.ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றவன். ஆனால் இந்தத் தடவை ஒட்டுப் பதிவு செய்த காலத்திலே என்னுடைய மனுவை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று 5 ரூபாய் பணம் கட்டினேன். ஆனால்





ஒட்டுப் போடுகிற நேரத்திலே பார்த்தால் என்னுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலே இல்லை. நான் ஒன்றும் செனட் சபைக்கு போட்டியிடப் போகிறவன் அல்ல. நான் அதை விரும்புகிறவனும் இல்லை. ஆனால் என்னைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுடைய பெயரையே வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கக் கூடியவர்கள் அந்தப்பல்கலைக் கழகத்தின்நிர்வாகத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் எப்படி அந்தத் தேர்தலை நடத்தி இருப்பார்கள் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தத் தேர்தல் போலித் தேர்தல், தனக்கு வேண்டியவர்கள் பேர்களை வாக்காளர்கள் பட்டியலை வைத்து கொள்வது, வேண்டாதவர்கள் பெயரை, தனக்கு ஒட்டுப் போடமாட்டார்கள் என்று தெரிகிற பேர்களை எல்லாம் அடித்துவிடுவது. வேண்டியவர்களை வைத்து வாக்குகள் பெற்று வெற்றி பெற நினைக்கின்ற ஆதிக்க புரியினருக்கு சம்மட்டி அடி கொடுப்பதைப்போல அவசரச் சட்டத்தை நம்முடைய அரசு பிறப்பித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இது போன்று ஒரு திருத்த சட்டம் வேண்டும். சின்டிகேட் சபையிலும், செனட் சபையிலும் உட்கார்ந்து கொண்டு அங்கே ஆதிக்கம் செய்து கொண்டு இருப்பவர்களின் ஆதிக்கத்திற்கும் அட்டகாசத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கிற வகையிலே வரவேண்டும் என்று வற்புறுத்தினோம் என்னைப்போன்ற நண்பர்களும், திரு. சங்கரையா போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வற்புறுத்தினோம். நாங்கள் வற்புறுத்தியதன் பேரிலே அரசாங்கம் இந்த அவசரச் சட்டத்தினைக் கொண்டு வந்தது. இந்த சட்ட முன்வடிவிலும் இந்தத் திருத்தம் இடம்பெற்றிருக்கிறது. அதை நாங்கள் வலியுறுத்திய காரணத்தினால், ஒருமுக்கியமான தலைவர்— அவரை நான் அரசியல் ரீதியாக மதிக்கிறேன்—அந்தத் தலைவர் மதுரைப் பல்கலைக் கழக அவசரச் சட்டம் வந்ததற்குக் காரணமான வில்லன் என்று என்னை வர்ணித்திருக்கிறார்கள். அதைப் பற்றி நான் வருத்தப்படவில்லை. மகிழ்ச்சி அடைகிறேன். I took it sportingly நான் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த சட்ட திருத்தத்தை 6 ஆண்டுகளுக்கு மேல் யாரும் பதவி வகிக்கக் கூடாது, இந்தப் பல்கலைக் கழக அமைப்புக்களில்-என்ற இந்த சட்ட திருத்தத்தை சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவைகளுக்கும் கொண்டு வாருங்கள். அதன் மூலம் என்னைப் போன்றவர்களை வில்லாதி வில்லன் என்று வர்ணிக்கக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்துங்கள் என்றுதான் உங்களைக் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

யாரோ வேண்டாதவர்களைப் பதவியில் இருந்து அகற்றுவதற்காக இந்தச் சட்டம் என்று எல்லாம் இங்கே சொல்லப்பட்டது. எனக்குக் கூட மிகவும் வேண்டிய நண்பர்கள் சின்டிகேட்டிலே

இருக்கிறார்கள். அவர்களும் இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம் பதவிகளை இழந்திருக்கிறார்கள். யாரோ ஒரு தனி நபருக்கு எதிரான சட்டமாக அதை இணைத்து வர்ணிப்பதற்கு முற்பட வேண்டாம். இது அதுவல்ல. ஒரு முற்போக்கான சட்ட திருத்தம். தமிழகத்தில் உள்ள சகல பல்கலைக் கழகங்களில் உள்ள சட்டங்களில் எல்லாம் இந்தத் திருத்தம் வரவேண்டும். இந்த முற்போக்கான கருத்துகள் இடம் பெற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இந்த சட்ட முன் வடிவையும் இந்த சட்ட திருத்தங்களையும் இன்றைக்கு ஆதரித்துக் கொண்டு இருக்கிறோம்.

ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்தில் அங்கே சிண்டிகேட்டில் 5, 6 பேர்கள் கூடிக் கொண்டு அங்கே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு என்னென்ன அநீதிகளை இழைத்தார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். அந்தப் பல்கலைக் கழகத்திலே மரியாதைக்குரிய டாக்டர் குழந்தைசாமி அவர்கள் துணைவேந்தராக இருந்தபோது தும்பா ஸ்பேஸ் சென்டரிலே 8 ஆண்டுகளாக விஞ்ஞானியாகப் பணிபுரிந்த சீனியர் சயின்டிபிக் ஆபிசராக அங்கே விளங்கிய திரு. ராமலிங்கம் என்ற விஞ்ஞானியை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வாருங்கள், உங்களுடைய சேவை இந்தப் பல்கலைக் கழகத்திற்குத் தேவை என்று சொல்லி இன்ஸ்ட்ருமென்டேஷன் என்ஜினியர் என்ற பதவியிலே அவரை அங்கே அமர்த்தினார்கள். அவருக்கு எடுத்த எடுப்பிலேயே 5 இன்கிரிமென்டுகளைத் தருகிறேன் நீங்கள் வாருங்கள் என்று சொல்லி, அங்கே அவர் வகித்து வந்த பதவியை விட்டுவிட்டு, மதுரைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி, 5 இன்கிரிமென்டுகள் கொடுத்து அவரை யுனிவர்சிடி சர்வீஸ் அன்டு இன்ஸ்ட்ருமென்டேஷன் சென்டரிலே இன்ஸ்ருமென்டேஷன் என்ஜினியராக அவர்களை நியமித்தனர்.

[முற்பகல் 11-50].

இவருடைய ஆராய்ச்சி நூல்கள் அமெரிக்க பல்கலைக் கழகங்களிலே பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர் ஒரு சிறந்த விஞ்ஞானி. கேரளாவில் இந்த டிபார்ட்மென்டில் 4 ஆண்டுகள் பணிபுரிந்து அனுபவம் இருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு பல்கலைக் கழகத்திலே இவருக்கு இழைக்கப்பட்ட சோகமயமான செய்தியை நான் இந்த சபையின் முன் வைக்க விரும்புகிறேன். யூ.ஜி.சி. தெளிவாக உத்தரவு போட்டிருக்கிறது : மேற்பார்வை பார்க்கக் கூடியவர்கள், வேறு துறைகளின் தலைவராக இருப்பவர்களை நியமிக்கக் கூடாது என்று—ஆகவே, திரு. இராமலிங்கம்என்ற விஞ்ஞானிக்கு ரீடருக்கு சமமாக பதவியை கொடுத்து நியமித்தார்கள். இவருக்கு மேலே யாரும் வேண்





டாம் ; பின்னால் இவருக்கு பதவி உயர்வு கொடுக்கலாம் என்று அன்றைக்கு இருந்த துணை வேந்தர் குழந்தைசாமி அவர்கள் முடிவு செய்தார்கள். அதற்கு பிறகு இப்போது ஆர்கானிக் கெமிஸ்ட்ரியிலே புரொபசராக இருந்தவர் ஒருவரை தலைவராக போட்டார்கள். அவர் இராமலிங்கம் அவர்களை பலவிதங்களிலும் " ஹோராஸ் " செய்தார்.

இதற்கிடையில் 3 ஆண்டுகளில் 4 ஆராய்ச்சி நூல்களை இராமலிங்கம் அவர்கள் எழுதியுள்ளார். இவைகள் உலக விஞ்ஞானிகளின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன. இப்படிப்பட்ட ஒருவரை திடீரென்று சிண்டிகேட்டிலே ஒரு கமிட்டி போட்டு, அந்த கமிட்டியின் முன்னால் நீங்கள் ஆஜராக வேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். விசாரணை எதற்கு என்று அவருக்கே தெரியாது ; தெரியாத நிலையில் அவர் கமிட்டியின் முன் ஆஜராகிறார். உங்களை வேலையிலிருந்து நீக்கி இருக்கிறோம்—நீங்கள் ' அன்பிட் பார் தி சர்வீஸ் " என்று நீக்கி விடுகிறார்கள். 8 ஆண்டு காலம் தும்பா நிலையத்தில் பணிபுரிந்த விஞ்ஞானியை, டாக்டர் குழந்தைசாமி போன்றவர்களால் பாராட்டப்பெற்ற அவரை, இன்றைக்கு எந்த காரணமும் சொல்லாமல் பதவியிலேயிருந்து அறவே நீக்குகிறார்கள் ; டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். சிண்டிகேட் முடிவு செய்தால் அதுதான் முடிவு, யாரும் தலையிட முடியாது, என்ற இந்த அதிகாரம் ஆட்சிக் குழுவிற்கு வேண்டுமா ? உறுப்பினர்கள் 6 ஆண்டுகளுக்கு மேலும் நீடித்து கொடுமைகள் புரிய வேண்டுமா ? என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கூட மதுரை பல்கலைக் கழகத்திலே சிண்டிகேட்டிலே ஆட்சிக் குழு இல்லை. துணை வேந்தர் மட்டும்தான் இருக்கிறார். ஆனால் அவசர அவசரமாக 18 துறைகளிலே இன்றைக்கு, ஒவ்வொரு துறைக்கும் 2, 3 பதவிகளுக்கு என்று " இண்டர்வியூ " நடத்தப்பட்டு, அதற்கு வேண்டியவர்கள் பேராசிரியர்கள், ரீடர்கள் இவர்களில் தேர்ந்தெடுக்கப்படுகிற வேலை நடக்கிறது. சிண்டிகேட் வந்த பிறகு உறுதி செய்தால் தான் இந்த பதவிகள் நீடிக்கும். சிண்டிகேட் இல்லாத இந்த நேரத்திலே ஆட்களை தேர்ந்தெடுக்கிற வேலை நடக்கிறது.

மதுரை பல்கலை கழகத்திலே அங்கே இருக்கக்கூடிய சமூக இயல் துறை, சோஷியாலஜி டிபார்ட்மென்ட்டில் " ஒரு ரீடர். மூன்று உதவியாளர்கள் தேவையென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. 18 துறைகளுக்கும் இது போல விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ரீடர் பதவிக்கு யூனிவர்சிட்டியிலே வேலை பார்க்கக்கூடிய அம்மையார், டாக்டர் தாராபாய் அவர்கள், மதுரை கல்லூரி சமூக இயல் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிற டாக்டர் சி. எம். நடராஜன் ;

17 ஆண்டு கால அனுபவம் இருக்கிறது. எம்.ஏ.யில் '' பர்ஸ்ட் கிளாசில் '' தேர்வு பெற்றிருப்பவர். எல்லா வகையான தகுதியும் இருக்கிறது. இன்னொருவர் அண்டை மாநிலமான கர்நாடகத்தில் இருப்பவர், சிவராமகிருஷ்ணன், எம்.ஏ., பட்டதாரி, அப்ளை செய்கிறார். இண்டர்வியூ வைக்கிறார்கள். அதிகமான அனுபவமும், யாருக்கு அதிக கல்வித் தகுதியும் இருக்கிறதோ, அந்த டாக்டர் நடராஜன் அவர்களுக்கு இண்டர்வியூ கார்டே வரவில்லை. குறைந்த தகுதி பெற்றவருக்கு இண்டர்வியூ கார்டு போகிறது. இரண்டு பேர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு துறையிலும் அவசர அவசரமாக இப்படி நடக்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. பட்டியல் அதிகம் இருக்கிறது. நான் தனியாக அமைச்சர் அவர்களிடம் அளிக்கவிருக்கிற காரணத்தாலே, அடுத்த விஷயத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.

இப்படி பல கொடுமைகள் சிண்டிகேட்டில் அதாவது 6 பேர்கள் சேர்ந்து கொண்டால் யாரை வேண்டும் என்றாலும் பதவியில் இருந்து நீக்கலாம், யாரை வேண்டுமானாலும் பதவிகளிலே நியமிக்கலாம் என்ற நிலைமை இருப்பதன் காரணமாக நடந்து வருகின்றன. 6 ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் பதவியிலே இருப்பார்களானால் அதன் மூலம் ஊழல்கள் ஏற்படுவதற்கு இடம் ஏற்படுகின்றது. இதை அனுமதிப்பதற்கு எங்களைப் போன்றவர்களாலே முடியவில்லை.

அடுத்து இன்னொரு முக்கியமான திருத்தத்தைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)..

நான் இன்னும் 5 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அடுத்தது பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினாலே எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் சரியானதுதானா என்று பரிசீலனை செய்கின்ற அதிகாரம் பல்கலைக் கழக வேந்தருக்கும், துணை வேந்தருக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றது. இதை நான் வரவேற்கிறேன். பல பல்கலைக் கழகங்களிலே முறைகேடான காரியங்கள் நடைபெறுகின்ற நேரத்திலே அவற்றைப் பரிசீலனை செய்வதற்குரிய அதிகாரங்கள் வேந்தருக்கும், துணை வேந்தருக்கும் இருக்க வேண்டும். ஆனால் மதுரைப் பல்கலைக் கழகத்திலே வேந்தர் அவர்களிடம் புகார் செய்தார் ஒரு பேராசிரியர் என்பதற்காக அவர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாரதிதாசன் பல்கலைக் கழகம் பற்றியும், பாரதியார் பல்கலைக் கழகம் பற்றியும் சொல்லுங்கள். மற்றவைகளைப் பற்றி வேண்டாம்.





**திரு. ப. நெடுமாறன் :** தலைவரவர்களே, துணை வேந்தர் வெளிநாடு போகின்ற நேரங்களிலே அதாவது அவர்கள் இல்லாத நேரத்திலே யார் அந்தப் பதவியை வகிப்பது என்பதில் இப்போது இருக்கக்கூடிய நிலைமையின்படி சிண்டிகேட்டிலே இருந்து நியமிக்கப்படுகிறார்கள். இது பல தவறான காரியங்களுக்கு வழி வகுக்கும். ஆகவே இதனை அறவே ரத்து செய்துவிட்டு பணி மூப்பு நிலையில் உள்ள பேராசிரியர்களைத் துணைவேந்தர்களாக நியமிக்கின்ற நிலைமை வர வேண்டும் என்ற வகையிலே திருத்தம் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். சீனியர் ப்ரபொசர் யாரோ அவர்தான் அப்போது பதவியை வகிக்க வேண்டும் என்றும், அவர் அந்தப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும் என்றும் இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டு இருப்பது மிகச் சிறந்த முறையாகும். இப்படி பல முற்போக்கான திருத்தங்கள் இந்தச் சட்டமுன்வடிவிலே இருக்கின்றது. இவற்றை நான் வரவேற்கிறேன்.

இப்படி கல்வித் துறையிலே பல முற்போக்கான காரியங்களைச் செய்து வருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

புதிய பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள் நியமிக்கப்படுகின்ற நேரத்திலே ஏற்கனவே இருக்கின்ற பல்கலைக் கழகங்களிலே துணை வேந்தர்களின் பதவிக் காலம் முடிந்து அடுத்து யாரை நியமிக்க வேண்டும் என்ற ஆலோசனை இருக்கின்றது. ஆகவே தயவு செய்து கல்வித் துறையிலே உள்ளவர்களை துணை வேந்தர்களாக நியமியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ரிட்டையர் ஆபீஸர்ஸ் போன்றவர்களை அவர்கள் எவ்வளவுதான் திறமைசாலிகளாக இருந்தாலும் அவர்களை இந்தப் பதவிகளுக்கு நியமிக்கக்கூடாது. இது ரொம்பவும் முக்கியமானது. அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். கல்வித் துறையிலே இருப்பவர்களுக்கு இன்சென்டிவ் வேண்டும். ஆகவே சீனியர் ப்ரபாஸர் யாரோ அவரை நியமிகக வேண்டும். அப்போதுதான் உற்சாகமாக இருக்கும். முழுமையாகத் தங்கள் வாழ்நாள் பூராவையும் கல்வித் துறைக்கு அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்களாகப் பார்த்து நியமிக்க வேண்டும். பெண்களில் யாராவது ஒருவரை ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திற்கு நியமிக்க வேண்டும். இதனை வற்புறுத்தி நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பல்கலைக் கழகங்களிலே புதிதாக அட்டானமஸ் காலேஜஸ் என்ற வகையிலே பல கல்லூரிகளுக்கு சுய ஆதிக்கம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்கள் அதை முறையாக செயல்படுத்துகிறார்களா என்பதில் சந்தேகம் வந்திருக்கின்றது. அட்டானமஸ் கல்லூரியைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய

மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார். இன்றைக்கு 30-க்கு மேற்பட்ட பெண்கள் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு சிறை சென்றிருக்கிறார்கள்.

[நண்பகல் 12-00].

அந்த சுய ஆதிக்கம் அந்தக் கல்லூரிக்கு வழங்கப்படுமேயானால் அது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக, ஆசிரியர்களின் நலனுக்காக பயன் பெறுமேயானால் ஆட்சேபம் இல்லை. ஆனால் ஆசிரியர்களை ஒடுக்க மாணவர்களை ஒடுக்க பயன்படுத்தப்படும் முயற்சியாக இருக்குமேயானால், அதை அரசு சிந்தித்து, அதைப் பற்றிய மறு பரிசீலனை செய்வதற்கு ஆயத்தமாக வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லி, இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் முழு மனதோடு வரவேற்று, அந்த சட்டமுன்வடிவுகளிலே எல்லாம் சொல்லப்பட்டிருக்கிற நல்ல திருத்தங்களை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வந்து, தமிழகத்தில் வேறுபாடு இல்லாமல், எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும், ஒரே மாதிரியான சட்ட திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பெயராலும், பாட்டுக்கு அரசன், பாரதியாருடைய பெயராலும் இந்த இரண்டு புதிய பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படுவதை, நான் எதிர்கட்சியைச் சார்ந்தவனாக இருந்தாலும், அவர்களுடைய பெயராலே உருவாக்குகின்ற இந்த பல்கலைக் கழக மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில், இங்கே உங்கள் மூலம் சில பிரச்சினைகளை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்க கூடிய இந்த மசோதாவிலே ஆப்ஜெக்ட்ஸ் ஆண்டு ரீசன்ஸ் படித்துப் பார்த்தேன். ஏற்கனவே இந்தியாவிலே 118 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அப்படி 118 பல்கலைக் கழகங்கள் சுதந்திர இந்தியாவிலே இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மதுரை காமராசர் பல்கலைக் கழகமும், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகமும், அதைப்போலவே அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், சென்னை பல்கலைக் கழகமும் தான் இருக்கின்றன. எனவே, புதிய பல்கலைக் கழகங்கள் அவசரமாக, அவசியமாக தேவை என்ற அடிப்படையிலேதான் மேலும் 2 புதிய பல்கலைக் கழகங்களை கோவை பகுதியிலேயும், திருச்சி பகுதியிலேயுதிம், இருக்கக்கூடிய கல்லூரிகளை இணைத்து. இந்த





இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை கொண்டு வருவதற்காக கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாக்களை, அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அதிலே குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஏற்கனவே 167 கல்லூரிகள் இருக்கின்றன. கஜேந்திர கட்கார் அவர்கள் அளித்த சிபார்சுகளில் இப்படி அதிகமான அளவில் கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின்கீழ் இருந்தால் நிர்வாகம் திறமையாக இருக்காது, அது சரியாக செயல் படாது, நிர்வாகத்திற்கு பெரும் இடையூறாக இருக்கும் என்பதோடு, கல்வி கற்கிற மாணவர்களின் திறமையும் பெருகுவதற்கு வசதியாக இருக்காது, ஆகையினால் அதிகமான அளவில் கல்லூரிகள் ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் இருப்பது சரியாகாது. 30 கல்லூரிகள்தான் ஒரு பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்படவேண்டும் என்று சொல்லியிருந்தார். அவருடைய சிபாரிசுகளில் ஒன்றை ஏற்றுக் கொண்டு, 30 கல்லூரிகள் ஒரு பல்கலைக் கழகத்திற்கு என்ற அடிப்படையில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அரசு இரண்டு பல்கலைக் கழகங்களையும் உருவாக்கியிருக்கிறது.

இதிலே சொல்லப்பட்டிருக்கிற காரணத்திலேயும், நிர்வாகத் திறமையை உயர்த்தவேண்டும் என்பதற்காகத்தான், கல்வியின் தரத்தை மேம்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான், இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாக, சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த மசோதாவிலே என்னுடைய கருத்தைச் சொல்லவருகிறபோது, நேற்று இங்கே நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக் கழக மசோதாவிலே அந்த விவாதத்திலே கலந்துகொண்டு என்னென்ன குற்றச் சாட்டுகளை சொன்னேனோ அதே குற்றச்சாட்டுகளைத்தான் திரும்ப திரும்ப சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அவையிலே பேசிய கருத்துகளோடு இந்தக் குற்றச்சாட்டுகளையும் இணைத்து, மேலும் உங்கள் மூலம் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புவதெல்லாம், இன்றைக்கு பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாக அமைப்பாக இருக்கக்கூடிய செனட்டிலேயும், சிண்டிகேட்டிலேயும் இருக்கக்கூடிய பதவிக்காலம் 6 ஆண்டுகளுக்குத்தான் இருக்க வேண்டும் என்று சொல்வது முறையாகாது. அது ஜனநாயகத்திற்கு விரோதமானது. It is undemocratic. ஆகவே, அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், நெடுமாறன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது ஒருவர் ஒரு 6 ஆண்டுக்காலத்திற்கு மேல் பதவியில்

இருப்பதை அனுமதிக்கிற காரணத்தால், அது ஊழலுடைய ஊற்றுக் கண்ணைத் திறந்து விடுவதற்கு காரணமாக அமைகிறது என்று சொன்னார்கள் ?

நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த ஆறு ஆண்டு பதவிக்காலம் சரி என்று அவர்கள் வாதித்தார்கள். அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அவர்கள் ஒரு கட்சித் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய குற்றச்சாட்டு, பொறுப்பில் இருந்தால் ஊழலுக்கு வழிவகுக்கும், பொறுப்பில் இருந்தால் அதிகார துஷ்பிரயோகம் ஏற்படும் என்று சொன்னார்கள். அப்படியானால் இன்று அவர்கள் ஒரு கட்சிக்குத் தலைவராக இருக்கிறார், அதற்கு அது பொருந்தாதா?

**திரு. ப. நெடுமாறன் :** ஆறு ஆண்டுகள் பொறுப்பில் இருந்தால் ஊழல் வரும் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதை அரைகுறையாகக் கேட்டுவிட்டு அவர் பேசுகிறார். மதுரைப் பல்கலைக் கழகத்தின் அல்லது சென்னை பல்கலைக் கழகத்தின் பல்கலைக் கழக துணைவேந்தர்களாக இருப்பவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேலே நீடிக்கக்கூடாது என்று ஏற்கனவே சட்டத்திருத்தம் பத்தாண்டுகளுக்கு முன்னால் வந்துவிட்டது. துணைவேந்தராக இருப்பவர் ஆறு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு ஆட்சிக் குழுவில் இருப்பவர்கள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று சட்டம் இருக்குமானால் அந்தத் துணை வேந்தரைவிட மற்றவர்கள் 15,20 ஆண்டுகாலம் சிண்டிகேட்டில் அங்கம் வகித்தால் அவர்கள் துணைவேந்தரைச் சுற்றிக்கொண்டு அவரை மிரட்டி தாங்கள் சீனியர்கள் என்ற முறையில் பல தவறுகள் நேரிடுவதற்கு வழிவகைகள் ஏற்படும். ஆகவே ஆறு ஆண்டுகள் என்று துணைவேந்தருக்கு இருக்கும்போது சிண்டிகேட் அல்லது செனட் உறுப்பினர்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருப்பது என்றால் எவ்வளவு ஆண்டுகள் வேண்டுமானாலும் இருக்கலாம் என்றிருப்பது பல ஊழல்களுக்கு இடம் கொடுக்கும் என்றுதான் நான் சொன்னேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** இந்த மசோதாவிலுள்ள முக்கியமான செக்ஷனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்கத் தவறிவிட்டார்கள் என்று கருதுகிறேன். பக்கம் 14, செக்ஷன் 13, பிரிவு 4-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்



'The Vice-Chancellor shall have power to take action on any matter and shall by order take such action as he may deem necessary but shall, as soon as may be, thereafter report the action taken to the officer or authority or body who or which would have ordinarily dealt with the matter:

இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் பல்கலைக் கழக துணைவேந்தருக்கு முழுமையான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. துணைவேந்தர் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கலாம். அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. சிண்டிகேட்டும் கட்டுப்படுத்த முடியாது, செனட்டும் கட்டுப்படுத்தமுடியாது. ஆனால் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறார் என்பதை அவர்கள் அறிவிக்கவேண்டும் ஒரு ரிப்போர்ட மூலமாக. இதற்கு என்ன பொருள்? துணைவேந்தருக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. துணைவேந்தராக இருப்பவர் ஊழல் செய்வார்களேயானால், தவறு செய்வார்களேயானால், துணைவேந்தர் எந்த நடவடிக்கையும் எடுப்பார்களேயானால் அதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் யாருக்கு இருக்கிறது. இதை அவர்கள் ஏன் சுட்டிக்காட்டவில்லை? ஆகவே நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், துணைவேந்தருக்கு அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் ஆறு ஆண்டுகள் என்று வைத்தாலும்கூட ஐம்பது ஆண்டுகளில் செய்யவேண்டிய காரியங்களை துணைவேந்தர் ஆறு ஆண்டுக் காலத்தில் செய்துவிட்டுப் போகமுடியும் என்ற வகையில் அப்படிப்பட்ட பிரிவுதான் இதில் இருக்கிறது'. ஆகவே துணைவேந்தருக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த அதிகமான அதிகாரங்கள் தேவையற்றது. ஜனநாயக அமைப்பு சிண்டிகேட், ஜனநாயக அமைப்பு செனட்.

**திரு. ப. நெடுமாறன் :** சிண்டிகேட்டின் அதிகாரங்களை ஒரே ஒரு உதாரணத்தின் மூலம் நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்,

"To suspend and dismiss University Lecturers, Professors and Teachers and other employees of the University."

சிண்டிகேட்டில் மெஜாரிட்டி இருந்து அவர்கள் ஒரு பல்கலைக் கழக பேராசிரியரை, அல்லது வேறு ஒரு அலுவலரை டிஸ்மிஸ் செய்யவேண்டுமென்று முடிவு செய்வார்களானால் அதில் துணைவேந்தர் தலையிடமுடியாது. இதிலிருந்து யாருக்கு அதிக அதிகாரம் என்பது விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

THIRU A. RAHMANKHAN : Sir, 'The Vice-Chancellor shall have power to take action on any matter.'

என்று சொல்லப்பட்டிருப்பதற்கான பொருளை இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கக்கூடிய அமைச்சர் விளக்கினால் நாங்கள் இருவரும் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள், அமைச்சர் பேசும்போது அதைப்பற்றி சொல்லட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இன்றைக்கு துணைவேந்தர் எடுக்ககூடிய நடவடிக்கைகள் பற்றி ரிப்போர்ட் செய்யவேண்டும் என்று தான் இருக்கிறதே தவிர சின்டிகேட்டுக்கோ, செனட்டுக்கோ அல்லது அகடமிக் கமிட்டிக்கோ முழுமையாக துணைவேந்தரைக் கட்டுப்படுத்த முடியாது. இதுதான் இந்த மசோதாவில் உள்ள ஷரத்துக்களின் முக்கியமான அம்சம். எனவே இப்படிப்பட்ட அமைப்பு இருக்கக்கூடாது. அதிகாரங்களை ஒருயிடத்தில் குவிக்கக்கூடாது.

(பிற்பகல் 12-10)

இன்றைக்கு மாநில சுயாட்சி கோருகின்ற அ.தி.மு.க., பல்கலைக் கழகத் துணைவேந்தர் கையில் 'கான்சென்டிரேஷன் ஆப் பவர்ஸ்' என்று சொல்லக்கூடிய முறையிலே அதிகாரம் இருக்கக் கூடாது. ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது. செனட் இருக்கிறது; அது ஒரு ஜனநாயக அமைப்பு. அதற்கு தேர்தல் மூலம் பிரதிநிதிகள் வருகிறார்கள். அதே போல், சிண்டிகேட் இருக்கிறது. அது ஜனநாயக அமைப்பு அதற்கும் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் இத்தனை ஆண்டு காலமாகத்தான் பதவியில் இருக்க வேண்டும் என்று ஏன் சொல்லவேண்டும்? காரணம் அவர்களை யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? இன்றைக்கு சிண்டிகேட்டிலே உள்ள உறுப்பினர்களை யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? அதேபோல், செனட்டிலே உள்ள உறுப்பினர்களை யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? அவர்களைத் தேர்ந்தெடுப்பது படித்தவர்கள்—விவரம் தெரியாதவர்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால், மதுரையில் நடைபெற்றது என்ன? அங்கு செனட்டு நடைபெற்ற தேர்தலில் ரிஜிஸ்திரேட் கிராஜுவேட்டுகள் தான்-அதாவது படித்தவர்கள், பட்டதாரிகள்தான், அவர்கள் தொகுதியிலே இருந்துதான் தேர்தல் நடைபெற்றது. அவர்கள் படித்தவர்கள்; பாமர மக்கள் அல்ல. அவர்களிடத்திலே பாமரர்களிடத்திலே தேர்தல் காலத்திலே வாக்குறுதி கொடுப்பதுபோல், இவர்களுக்கு



இந்தப் பட்டதாரிகளுக்கு 100 ரூபாய் கொடுப்போம் என்று சொல்லலாம். பாமரர்கள் நம்பலாம்; ஆனால், அதே நேரத்திலே படித்தவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தவறு செய்தவர்களை அடுத்த முறை தேர்ந்தெடுக்க மாட்டார்கள். 6 ஆண்டு காலத்திற்குள்ளாக அவர்கள் தவறு செய்தால், மீண்டும் பொறுப்புக்கு வராமல் அந்த பட்டதாரிகளால் தடுக்க முடியும். அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருக்கின்றபோது, சிண்டிகேட் உறுப்பினர்களுக்கும், செனட் உறுப்பினர்களுக்கும் 6 ஆண்டு காலம் என்ற உச்சவரம்பு ஏன் கொண்டு வரவேண்டும். எது எதற்கோ உச்ச வரம்பு கொண்டு வருகின்றபோது, இதற்கு உச்சவரம்பு கொண்டு வருவது சரியாகாது. முதலமைச்சர் அவர்கள் கூட 'ரைட் டு ரீகால்' என்பதைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களுக்குத் தெரியும்; மற்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். 5 ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், இடையில் அந்த உறுப்பினர் தப்பு செய்தால் அவரைத் தேர்ந்தெடுக்க மக்கள் சரியில்லை, என்று கருதுவார்களானால், அவரை அதிகாரத்திலிருந்து திரும்பப் பெறலாம் என்று சட்டசபை உறுப்பினர்களுக்கு மந்திரிகளுக்கு இந்த நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி 'ரைட் டு ரீகால்' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாடு முழுவதும் பேசிக் கொண்டிருக்கிறபோது, இங்கே இந்த விஷயத்திலேகூட முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் பின்பற்றி நமது கல்வி அமைச்சர் அவர்கள் 'ரைட் டு ரீகால்' கொண்டு வரலாம் சுவிட்சர்லாந்திலே இம்முறை இருக்கிறது. இங்கேயும் அதுமாதிரி வைத்துக்கொள்ளலாம். சிண்டிகேட் உறுப்பினர்கள், செனட் உறுப்பினர்கள், மற்றும் பொறுப்பிலே உள்ளவர்கள் தவறு செய்தால், அவர்களைத் திரும்பப் பெறுகின்ற அதிகாரத்தை ஏன் இந்தச் சட்டத்தில் கொண்டுவரக் கூடாது. அதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், இன்றைக்கு சிண்டிகேட்டிற்கும், செனட்டிற்கும் மட்டும் 6 ஆண்டு காலம் பதவி என்று வைத்திருப்பதை எங்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கவில்லை. அவசரச் சட்டம் கொண்டுவந்து, அதே நேரத்தில் இந்த சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வராமல், இதற்கு மட்டும் கொண்டு வந்திருப்பது என்பது 'ப்யூர்லி டிஸ்கிரிமேனடரி' என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தப் பல்கலைக் கழகங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத்திலே, மசோதாவிலே சில ஷரத்துக்களை போடப்பட்டிருந்தாலும், நடைமுறையிலே அவைகள் வேறுபடுகின்றன. உதாரணத்திற்கு, இதே மாமன்றத்திலே நான்

குறிப்பிட்டிருக்கிறேன். தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் துவக்கப்
போவதாக அறிவித்தார்கள், தஞ்சாவூரிலே அந்த தமிழ்ப்
பல்கலைக்கழகத்தைத் திறக்க அறிவிப்பு செய்திருக்கிறீர்கள்.
ஊரிலுள்ள மக்கள் எல்லோரும் அ.தி.மு.க. அரசு தமிழ்ப் பல்
கலைக்கழகத்தை திறக்கப் போகிறது என்ற பூரிப்போடு தஞ்சை
மாவட்டத்திலே பேசுகிறார்கள். ஆனால், யூனிவர்சிடி கிராண்ட்
கமிஷனோ உங்களுக்கு அனுமதி வழங்கவில்லை என்று கேள்விப்
படுகிறேன். அப்படி அனுமதி வழங்காதபோது, எதற்காக
விழா? சிலை இல்லாத கோவிலுக்கு, அனுமதி இல்லாத தமிழ்ப்
பல்கலைக்கழகத்திற்கு, நீங்கள் விழா நடத்துவது என்று சொன்
னால், மக்களிடத்திலே இப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை
உருவாக்குவதற்குத்தான் இது அமையுமே தவிர, எடுக்கப்
பட்ட நடவடிக்கைகள் முறையாக இருக்காது, அந்த நட
வடிக்கை முறையாக இருக்க வேண்டும் என்று நான் இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்
கொண்டுவந்திருக்கின்ற பாரதியார், புரட்சி கவிஞர் பாரதி
தாசன் அவர்கள் பெயராலே ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற
இரண்டு பல்கலைக்கழகங்களைப் பற்றிய மசோதாக்களை வர
வேற்பதோடு, என்னுடைய ஒருசில கருத்துக்களை இந்த
மாமன்றத்திலே வைக்க விழைகிறேன்.

உடலை வருத்தி, உழைப்போரையெல்லாம் தெய்வமாகத்
தொழுத தெய்வ மகாகவி—அவர்களுடைய பெயராலே ஒரு
பல்கலைக்கழகம் துவக்கப்படயிருப்பதைக் கண்டு, பாராட்டு
வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நெஞ்சிலே உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை செய்வோரை, தேவியர்
மானம் என்றும், தெய்வத்தின் பக்தி என்றும், தானைத் தலை
வன் என்றும், தமிழினத்தின் காவலன் என்றும் செப்பித் திரிந்து
நாட்டிற்குத் துரோகம் செய்யும் நடிப்புச் சுதேசிகளை அரசியல்
வாதிகளைச் சாடிய சித்திரக் கவிஞர், அவர்கள் பெயராலும்
ஒரு பல்கலைக்கழகம் துவக்கப்படயிருக்கிறது.

மறுமலர்ச்சித் தமிழன் சரித்திரத்திலே புதியதொரு சகாப்தத்
தைத் தோற்றுவித்து தமிழ் மொழியைப் புகழிலேற்றும் கனி
யரசர் தமிழ்நாட்டுக்கில்லையெனும் நிலையை மாற்றிய
பாரதியார்—சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகச் செம்மல்
களை எல்லாம் ஊக்குவித்த அந்த பாரதியின் பெயரிலும்
அவருடைய சீடர் பாரதிதாசன் பெயரிலும் வந்திருக்கிற இந்தப்
பல்கலைக் கழகங்களை மனப்பூர்வமாக விரும்பி வரவேற்கக்
கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரித்துக்
கொள்கிறேன்.



இன்று தமிழகத்தைப் பொறுத்த அளவு 34 ஆண்டு கால
சுதந்திர இந்திய வரலாற்றில் மிகப் பெரிய பொற்காலமாக
கல்வியின் காலம் இருக்கிறது என்பதையும், யார் வேண்டு
மானாலும் எதை வேண்டுமானாலும் பேசினாலும் இன்று கல்வி
யில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி, கல்வியில் ஏற்பட்டிருக்கும்
வேகம், கல்வியில் ஏற்பட்டிருக்கும் விவேகம், அந்தக்
கல்விக் கூடங்களுக்கு நம்முடைய மூதாதையர்கள், சுதந்திரத்
திற்காக, தமிழ் மொழியைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்ட
தியாகச் செம்மல்களின் பெயர்களை இந்தப் புரட்சிக் கவிஞர்
களின் பெயர்களை வைப்பதில், பெருமைப்படுவதில் தமிழக
அரசு முனைந்திருக்கிறது என்பதை எல்லோரும் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறோம்.

அருமை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 'ரைட் டு
ரிகால்' பற்றிக் குறிப்பிட்டார்கள். படிக்காதவர்கள் பற்றிக்
குறிப்பிட்டார்கள். படிக்காதவர்கள் ஓட்டுப் போட்டு வந்த
ஒரு ஆட்சி என்று சூசகமாகக் குறிப்பிட்டார்கள். அதைப்
பற்றி நாம் கவலைப்படவில்லை. படிக்காதவர்கள் ஓட்டுப்
போட்டார்கள்; படித்தவர்கள் ஓட்டுப் போட்டிருந்தால் என்ன
ஆகியிருக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றிக்
கூட நமக்குக் கவலை இல்லை. இந்த காமராஜ் பல்கலைக்
கழகத்தைப் பற்றி அதில் இருக்கிற சிண்டிகேட் உறுப்பினர்
களைப் பற்றி அரசு ஒரு சட்டம் கொண்டு வரும்போது தி.மு.க.
வின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாங்களும்
பார்த்துக் கொண்டிருக்கிறோம் அதற்கு அதிகமாக** வாங்கிப்
பேசுவதில் என்ன லாபம் இருக்கிறது என்றுதான் தெரியவில்லை
என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
மதுரை காமராஜ் பல்கலைக் கழக மசோதாவில் சிண்டிகேட்,
செனட், அக்டமிக் கவுன்சில் பதவிக் காலம் ஆறாண்டுகளுக்கு
மேல் நீடிக்கக்கூடாது என்று போட்டிருப்பதை எதிர்த்து திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசுகிறாரே. அவருக்கு இதிலே
என்ன அக்கறை என்று கேட்டார்கள். எல்லோருக்கும் இல்லாத
அக்கறை எனக்கு என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். நானே
பாதிக்கப்பட்டிருக்கிறேன். மதுரை காமராஜ் பல்கலைக் கழக
செனட் உறுப்பினராக இருக்கும் என்னுடைய பதவிக் காலமும்
முடிகிறது, அதற்காக மட்டுமல்ல; இன்றைக்கு பொறுப்புக்கு
வரலாம், நாளைக்கு வராமல் போகலாம் 'நத்திங் இஸ்
பர்மனென்ட்—ஆனால் அன்டெமக்ரட்டிக்காக இருக்கக்கூடிய
ஜனநாயகத்திற்கு எதிரான போக்கைக் கண்டிப்பதற்காகப்
பொதுவாகச் சொன்னேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[1981 செப்டம்பர் 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * போன்ற வார்த்தைகளைப் பேசுவது கூடாது. அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அண் டெமாக்ரடிக் என்று சொன்னார்கள். அவர்களுடைய பதவிக் காலம் முடிந்து மேலும் நீடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதே, அன்டெமாக்ரடிக் என்று சொன்னால் பல்கலைக் கழகத்தில் வாக்காளர் பட்டியலில் எனக்கிருந்த ஓட்டுரிமையைப் பறித் தார்களே, அது என்ன டெமாக்ரடிக்? 'இஸ் இட் டெமாக்ரடிக்'?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு உறுப்பினரைப் பார்த்துப் பேசக்கூடாது. உறுப்பினர்களுக்குள் நேரடியாக விவாதம் நடைபெறுமானால் நான் இங்கே இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஓட்டர் லிஸ்டில் இருந்து தன் பெயரை ஏன் பறித்தார்கள் என்று கேட்டார்கள். அதை யார் பறித்தது, எந்த அமைப்புக்கு உட்பட்டு பறிக்கப்பட்டது? அப்படிப் பறிக்கப்பட்டிருந்தால், நம்முடைய மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய இடத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் நான் அவரைக் கேட்கிறேன்—இதே பழனிவேல்ராஜன் பெயரும் பறிக்கப்பட்டதே அப்போது திரு. நெடுமாறன் அவர்கள் எங்கே போயிருந்தார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கோவைத் தம்பி : துணைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். தி.மு.க. கொள்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக அவர் தவறாக எடுத்துக் கொண்டு பேசினார்களோ என்னவோ தெரியாது. நாங்கள் கேட்பது அதிக அதிகாரம். 'ரைட் டு ரிகால்' பற்றிப் அவர்கள் பேசும்போது கொஞ்சம் புண்படுத்தியே பேசினார்கள். வாக்குப் பெட்டி வைக்கலாமா, தயாரா என்று தமிழகத்தின் முதலமைச்சர் கேட்கும்போது. எந்தச் சட்டத்தின் அடிப்படையில் வாக்குப் பெட்டியை வைக்கிறீர்கள் என்ற கேள்வியை அந்தத் தரப்பில் இருந்து எழுப்பியதை நாட்டுமக்கள் மறந்திருப்பதற்கில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 செப்டம்பர் 1]

(பிற்பகல் 12-20]

* * * * * *

திரு. அ. ரகுமான்கான் : என்னுடைய பேச்சுக்கு * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பில்லைப்பற்றி மட்டும் பேசுங்கள். * * * அந்த வார்த்தைகளை மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. கோவைத் தம்பி : கஜேந்திர கட்கர் சொன்ன அடிப்படையிலே கல்விக்குப் பொற்காலத்தை ஏழு ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தவர்கள் செய்யவில்லை என்பதையும் 1954 இல் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த அமரர் காமராஜர் அவர்கள் கல்வியில் ஒரு பொற்காலத்தை உருவாக்கினார் என்பதையும் அமரர் காமராஜர் உருவாக்கிய அந்ததன்மையை 1967ல் பேரறிஞர் அண்ணா தலைமையில் அது பீறிட்டுக் கிளம்பியது என்பதையும் வேகம் கொடுக்கும் விதத்தில் அவர் செயலாற்றியபோது அவர் நம்மை விட்டுப் பிரிந்தார் என்பதையும் 1969இல் கல்வியில் தமிழ்நாட்டில் ஒரு தொய்வு வேகமாக ஏற்பட்டது என்பதையும் 1977-க்குப் பிறகு 5, 6 பாலிடெக்னிக்கு துவக்கியிருக்கிறோம் பல்கலைக் கழகங்களைத் துவக்கியிருக்கிறோம் என்பதையும் உண்மையாகக் கல்விக்கு ஒரு பொற்காலமாக இன்று தமிழ்நாடு அரசு அந்த நிகழ்ச்சிகளை உருவாக்கியிருக்கிறது என்பதையும் யார் பெயரை வேண்டுமானாலும் தமிழக அரசு நினைத்திருந்தால் வைத்திருக்க முடியும், முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய மெஜாரிட்டியை பெற்றிருக்கிறார்கள் இந்தச் சட்ட மன்றத்தில் அவர்கள் விரும்பியிருந்தால் யார் பெயரை வேண்டுமானால் பாரதியார், பாரதிதாசன் பெயர்களுக்குப் பதிலாக வேறு பெயர்களை மாற்றியமைத்திருக்க முடியும். அவைகளை மீறி பல பேர்கள் கோரிக்கைகளை எழுப்பி, கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த எங்களைப் போன்றவர்கள் பெரியார் பெயரை வைக்கவேண்டுமென்று சொன்ன நேரத்திலே கூட புரட்சித் தலைவர் அவர்கள் அமைதியாக இருந்துவிட்டு சுதந்திர இந்திய வரலாற்றில் ஒரு அத்தியாயத்தை தனக்கு உருவாக்கிக் கொண்டு தமிழ் இனத்தை காப்பாற்றிக் கொள்வதற்கும் தமிழ் மொழியைக் சுதந்திரப் போராட்டத்தில் வளர்த்து தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் பாடுபட்ட தியாகச் செம்மல், புரட்சிக் கவிஞர் அமர கவி பாரதியினுடைய பெயரையும் பரதிதாசன் பெயரை திருச்சி பல்கலைக் கழகத்திற்கு வைத்திருப்பதையும் குறித்து தமிழ் மக்கள் பெருமைப்படுகிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ஒரு கால கட்டத்திலே மடங்களிலேயும் மன்னர் அவைக் களங்களிலேயும் பண்டிதர்களிடையும் சிறைப்பட்டு வளர்ச்சிக் குன்றி இருந்த நம்முடைய பழகு தமிழை அழகு தமிழை இன்று கோலோச்சி அரசாட்சி செய்யும் காலம் வரும் என்றும் அந்தக் காலத்தை நான் எதிர்பார்க்கிறேன் என்றும் பேசிய அந்தப் புரட்சிக் கவிஞன் அமரகவி, பாரதியினுடைய பெயரை கொங்கு மண்டலத்திலே உள்ள பல்கலைக் கழகத்திற்கும் அவருடைய அருமைச் சீடராக இருந்த பாரதிதாசன் பெயரை திருச்சி பல்கலைக் கழகத்திற்கும் வைத்ததற்காக தமிழக அரசை இதயம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு அருமை அண்ணன் திரு. நெடுமாறன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். துணைவேந்தராக நியமிக்கப் படக்கூடியவர்கள் கல்வித் துறையில் தேர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசு எந்த கல்வியை விரும்பி வற்புறுத்தி இந்த நாட்டு மக்கள் மத்தியில் பரப்புவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறதோ அந்தத் தரமான கல்வியின்மீது அந்த நோக்கத்தின் மீது அந்த அடிப்படைக் கல்வியின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் வெளியே இருந்தாலும் அல்லது உள்ளே இருந்தாலும் அவர்களை துணைவேந்தர்களாக நியமிப்பது நியாயமாக இருக்கும். அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அந்தக் கல்விக் கொள்கைக்கு வளம் ஊட்டுவதாக இருக்கும் என்பதைக் கூறி மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை வரவேற்று விடைபெற்றுக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற 'இதந்தரும் மனைநீங்கி இடர்மிகு சிறைபட்டாலும் சுதந்திர தேவி நின்னை வணங்கிடல் மறந்திலேனே' என்று சொன்ன, பாரதி, சுதந்திரம் பெற்ற நாட்டிலே எப்படிப்பட்ட சமுதாயம் அமையவேண்டுமென்று முறையிலே, முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை ஒப்பில்லா சமுதாயம் வேண்டும் என்றும் கேட்டாரே, அந்த பாரதி, அவர் கண்ட கனவுகளும் கொள்கைகளும் இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்படவில்லை என்றாலும் கூட சுதந்திர நாட்டிலே 33 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிற நேரத்திலே அந்த தேசியக் கவிஞரின், பொதுவுடைமைக் கவிஞரின் பாரதியின் பெயரில் இந்த நாட்டிலே பல்கலைக்கழகம் அமைவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம்.





அதைப் போன்று, தமிழ்நாட்டிலே புரட்சிகரமான முறையில் நம்முடைய பெரியாருடைய பகுத்தறிவுப் பாசறையில் உருவாக்கப்பட்டு, அப்படிப்பட்ட நல்ல இலட்சியத்திற்காகப் பாடுபட்ட பாரதிதாசன் பெயரால் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் நாங்கள் வரவேற்கிறோம்.

அதே நேரத்தில், இன்றைக்கு மாறி வருகின்ற அரசியல், சமுதாய சூழ்நிலைக்கேற்ப கல்வித் திட்டத்தையும் மாற்றியமைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தை ஆண்டுகொண்டிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மூன்று பல்கலைக் கழகங்களை உருவாக்கியது. மெக்காலே கல்வித் திட்டம் என்ற முறையிலே உருவாக்கப்பட்ட இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதைப் பற்றிச் சொல்லும்பொழுது அப்பொழுது அவன் சொன்னான், நான் இந்தியத் துணைக் கண்டத்திலே மூன்று பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருக்கிறேன், அவைகளிலேயிருந்து 3000 முட்டாள்கள் வெளியே வருவார்கள். அவர்களை வைத்துக் கொண்டு இந்திய துணை கண்டத்தில் நம்முடைய வியாபாரத்தை இலாபகரமாக நடத்தலாம் என்று நம்முடைய பல்கலைக் கழகங்களைப் பற்றி அவன் அன்றைக்கு அழகாக எடுத்துச் சொன்னான். நான், ஏன் இதை இப்பொழுது குறிப்பிடுகிறேன் என்றால், இந்தப் பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டங்கள் எந்த முறைகளை ஏற்படுத்தும் என்று சொல்லி அன்றைக்கு நம்மை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அவர்களால் உருவாக்கப்பட்ட கல்வித் திட்டத்தைப் பற்றித் தெளிவாக அவன் சொன்னான் ஆகவே, அப்படிப்பட்ட கல்விமுறைகளின் அடிப்படையிலே கடந்த 34 ஆண்டுகளாகச் சுதந்திர இந்தியாவினால் உருவாக்கப்பட்டதன் விளைவுதான் இன்றைக்கு மிகப் பெரிய வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே பரவிக் கொண்டிருக்கிறது. தமிழகத்திற்கும் அந்தத் தலையெழுத்து விதிவிலக்கு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மணம் கமழும் வகையில் பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் பெயர்களில் அமையவிருக்கின்ற இந்தப் பல்கலைக் கழகங்களில் இன்றைக்குப் புதிய பாடத் திட்டங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை நாங்கள் வரவேற்கிறோம் என்று சொன்னாலும் அவைகளில் அதிகமான தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நாம் புதிய சட்ட முன்வடிவுகளையும், திருத்தச் சட்டங்களையும் கொண்டு வந்தாலும் கூட, தனியார் கல்லூரிகளில் நடக்கும் அட்டூழியங்களைப்பற்றியும், நடக்கின்ற தில்லுமுல்லுகளைப்பற்றியும், நடக்கக்கூடிய

தவறுகள், குறைகளைப் பற்றியும் நாம் அதிமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அவைகளையெல்லாம் கட்டுப்படுத்துகின்ற அளவிற்குக் கூடுதலான அதிகாரங்களை, வரைமுறைகளை இந்த மசோதாவில் கொண்டு வந்திருந்தால், நல்லமுறையில் அமைந்திருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளில் இன்றைக்குப் பெரும்பாலும் நடக்கின்ற போராட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்திருப்பது அங்கேயிருக்கின்ற விடுதிகள், அவைகளைப்பற்றியும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மசோதாவில் சொல்லியிருந்தால் அதுவும் நல்லதாக இருந்திருக்கும். ஆனாலும் கூட இன்றைக்குக் கல்லூரிகளில் நடக்கும் விடுதிகளில் அவைகளெல்லாம் கொள்ளைக் கூடமாக, சுரண்டுவதற்கேற்ற கற்பகத் தருவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவைகளை ஒழுங்கு படுத்துகின்ற அளவிற்கு தவறாக நடக்கும் கல்லூரிகளில் அப்படிப்பட்ட விடுதிகளை அனுமதிக்காமல் இருக்கவும் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாநிலத்திற்கே சுயாட்சி கேட்டுக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் தன்னாட்சி என்ற முறையில்—அட்டானமஸ் காலேஜ்களாக இருக்க வேண்டும் என்று சொல்லி, அதன் மூலமாகத் தங்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு சில கல்லூரிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, அவினாசிலிங்கம் கல்லூரியில் நடப்பதைப் போன்று போராட்டங்கள் மீண்டும் இந்தப் பல்கலைக் கழகத்திலே உருவாகக் கூடாது; அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு உலகத்திலே வாழும் மூன்று கோடி மக்களில் இரண்டு கோடி மக்கள் தேர்ந்தெடுத்திருக்கும் கொள்கை, எங்களுக்குத் தெரிகின்ற வழியில் நாங்கள் சொன்னாலும், இன்றைக்குத் தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் அரசு நாங்கள் அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்ற, அவர்களுடைய கொள்கையின்படி தமிழ்நாட்டைச் சமைப்பதற்காக ஆட்சியில் இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுப்படையான சமுதாயக் கண்ணோட்டத்தில், அப்படிப்பட்ட சிந்தனையோடு செயல்படும் வகையில் இந்தப் பட்டதாரிகள் உருவாக்கப்படவேண்டுமென்றால் இந்தப் பல்கலைக் கழகத்தில் மார்க்சீயத்தைப் பாடத்திட்டமாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிமன்றக் குழுவில் இன்றைக்கு எத்தனையோ அடக்கு முறைகள் இருந்தாலும், பல்கலைக் கழகத்திற்கு அச்சாணியாக, அடித்தளமாக இருக்கின்றவர்கள் ஊழியர்கள். பக்கத்திலே இருக்கின்ற கேரளா மாநிலத்தில் மாணவர்களுக்கு சின்டிகேட், செனட் போன்ற சபைகளில் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் கலந்து பேசி, கல்லூரி முன்னேறவும், படிப்புத்தரம் முன்னேறவும், குடும்பமாக வாழவும், குடும்ப சூழ்நிலைகளை உருவாக்கவும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இவ்வாறு செய்திருக்கிறார்

(பிற்பகல் 12-30)

கள். அப்படி ஒரு நிலையை இங்கே உருவாக்கியிருக்கவேண்டும், உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இன்றைக்கு இந்தப் பல்கலைக் கழகங்களில் அதிகமான அளவிற்கு நம்முடைய தமிழ் அறிஞர்கள் இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பிற மொழிகளிலே உருவாக்கப்படுகின்ற நல்ல கருத்துக்களை கொண்ட விஞ்ஞானப் பிரிவு பாட திட்டங்களை வேகமாக இணைத்து, புதியதோர் தமிழகத்தில், புதியதோர் பாதையைத் தொடங்குவதற்கான பல்கலைக் கழகங்களாக இந்தப் பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை வாழ்த்தி வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, பாரதிதாசன் பல்கலைக் கழகக் சட்ட முன்வடிவு ஆகிய இவற்றின்மீது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றபொழுது அதற்கு பொதுவான ஆதரவைத் தந்து, வரவேற்றுப் பேசிய அத்தனை நண்பர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டு பெரும் புலவர்களின் பெயரில், இரண்டு பல்கலைக் கழகங்களை நாம் துவக்குகின்றோம். அதற்கான அடிப்படை காரணங்களில் முக்கியமான ஒன்றை நான் இந்த இடத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குச் சமுதாயத்திலே முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிற பல்வேறு சாத்தியக் கூறுகளை நாம் பார்க்கின்றபொழுது நம்மிடையே இருக்கிற பிரிவினை உணர்வுகள், அல்லது பிரித்து நிற்கின்ற போக்குகள்தான் காரணம் என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. முதலிலே அவற்றை நாம் ஒழித்தாக வேண்டும். நாம் அனைவரும் ஒன்று என்கின்ற நிலையை நாம் உருவாக்கவேண்டும். அதற்கடுத்து நாம் மேலே முன்னேறவேண்டுமானால் சமுதாயத்திலே விஞ்ஞான மனப்பான்மையை நாம் பெருக்கியாக வேண்டும்.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் உயிரோடு இருக்கிற போது, மக்களைச் சந்திக்கின்ற நேரத்திலெல்லாம் அவர்களைப்

பார்த்து அவர்கள் கேட்டுக்கொண்டது; விஞ்ஞான மனப்பான்மை ஏற்படவேண்டும் என்பதுதான். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் தந்தை பெரியார் அவர்களும், பேறறிஞர் அண்ணா அவர்களும் அத்தகைய கருத்துக்களைப்பரப்புவதில் முன்னணியிலே நின்றார்கள். இன்றையதினம் அவர்களைப் பின்பற்றி பலரும் அந்தப் பணியை செய்து கொண்டிருந்தாலும், போதுமான அளவிற்கு அந்தக் கருத்துக்கள் பரவுவதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியாகவேண்டும். பிரிவினை உணர்வுகள் போக்கப்பட வேண்டுமென்று நாம் சொல்கிறபோது, நம்மையெல்லாம் ஒருங்கிணைக்கின்ற உணர்வுகளை வளர்த்தாக வேண்டும்.

திராவிட இயக்கத்தைப் பொறுத்தமட்டில், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பொறுத்த மட்டில், ‘தமிழன்’ என்கிற வார்த்தையைப் பெரும்பாலும் நாங்கள் பயன்படுத்தியதெல்லாம், நம்மிடையே இருக்கிற வேறு பல உணர்வுகளைப் போக்குவதற்காகவும் நம்மையெல்லாம் ஒன்றுபடுத்துவதற்காகவும்தான்—அந்த வார்த்தையைப் பெரும் அளவிற்கு நாம் பயன்படுத்தி இருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே அந்த உணர்வுகள் வளர்க்கப்படவேண்டும். நாம் அனைவரும் ஒன்று என்கின்ற உணர்வு எந்த அளவிற்கு மேலோங்கி இருக்கிறதோ அந்த அளவிற்கு முன்னேற்றத்தை நாம் அடைந்து விட முடியும்.

நான் அண்மையிலே ஒரு கிராமத்திற்குப் போயிருந்தேன். சேலத்திற்கு பக்கத்திலே ஒரு குக்கிராமம். அங்கே உயர் துவக்கப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக ஆக்குவதற்கு நாம் அனுமதி தந்திருக்கிறோம். அது தாண்டரனூர் என்கிற ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் பள்ளிக்காக ரூ. 22,000-ஐ ஒரே நாளிலே கட்டியிருக்கிறார்கள். ரூ. 35,000 வசூல் செய்து, 5 ஏக்கர் நிலத்தை வாங்கித் தந்திருக்கிறார்கள். ரூ. 50,000 வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை நான் பார்க்கிறபொழுது உண்மையிலேயே அதிசயப்பட்டேன். அங்கேயிருக்கிற அந்தக் கிராமத்து மக்கள் ஜாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, பொது நன்மைக்கு ஒன்று திரண்டு இருக்கிறார்கள். ஒற்றுமையாகப் பணியாற்றுகிறார்கள். ஒரு நகரத்திலே கூட சாதிக்க முடியாத ஒரு பெரும் காரியத்தை அவர்களாலே சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஒன்றுபடுகிற உணர்வு என்பது மிக முக்கியமானது. அந்த அடிப்படையிலே நாம் பார்க்கிறபொழுது, இன்றைக்கு நம்முடைய தமிழ் சரித்திரத்தில், தமிழருடைய வரலாற்றில் மிக முக்கியமான இடம் பெற்ற இரு பெரும் புலவர்கள், பாரதியார் அவர்களும், பாரதிதாசன் அவர்களும். இன்றைக்கு அவர்களுடைய கவிகள் மட்டும் நல்லபடியாக மக்களிடத்திலே பரப்பபடுமானால் நான் சொன்ன அந்தக் கருத்துக்களெல்லாம் நிச்சயம் மக்களிடத்திலே ஆதிக்கம் பெறும், மக்களுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும். அந்தப் பாட்டுகள் எல்லாம் பாடப்படுமானால், இசை



அரங்குகளிலே பாடப்படுமானால், ஆயிரக்கணக்கான இசை அரங்குகளிலே அந்தப் பாடல்கள் பாடப்படுமானால் நிச்சயமாக ஒரு புரட்சிகரமான மாறுதலை, நல்லதொரு சமுதாய மாறுதலை நாம் தமிழ் நாட்டிலே பார்க்கமுடியும். அந்த ஆசையின் அடிப்படையிலேதான் இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவக்குகின்ற நேரத்தில் இரண்டு பெரும் புலவர்கள் சமுதாய மாறுதலுக்காகத் தமிழைப் பயன்படுத்திய புலவர்கள். தமிழை வேறு எதெதற்கோ பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், மக்களுக்காக, தமிழனுக்காக, தமிழனுடைய உணர்வுகளுக்காக, தமிழைப் பயன்படுத்திய இரு பெரும் புலவர்கள் பாரதியும் பாரதிதாசனும். தமிழுக்காக தமிழன் அல்ல. தமிழனுக்காக தமிழ் என்ற அடிப்படையில் அந்தத் தமிழ் மூலமாக, தமிழனுக்கு விடுதலையை வாங்கித் தரவும், தமிழனுடைய முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், அந்த வீறுகொண்ட தமிழை நல்லமுறையிலே பயன்படுத்திய இரு பெரும் புலவர்கள் நம்முடைய மனதை கவர்ந்த, நம்முடைய அபிமானத்திற்குரிய, நம்முடைய பற்றுதலுக்குரிய அமரகவி, தேசிய கவி பாரதியாரும், புரட்சிக் கவி பாரதிதாசனும் ஆவார்கள்.

ஆகவே, இந்த இரண்டு பேர்களையும் 2 பல்கலைக் கழகங்களுக்கும் நாம் வைக்கின்றபோது, அந்தப் பல்கலைக் கழகங்களுடைய அடிப்படை உணர்வுகளாக அவர்களுடைய உணர்வுகள் இருக்கட்டும் என்று நாம் விரும்புகிறோம். அங்கே இருந்து வளருகிற மாணவர்கள், அங்கே இருந்து பணிபுரிகின்ற பெரும் பேராசிரியர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த உணர்வுகள் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

அதுமட்டுமல்ல, அந்த 2 பேர்களும் தமிழர்களுடைய அறிவை வளர்க்க வேண்டும் என்பதற்காக தங்களுடைய கருத்துக்களைத் தந்தவர்கள். மேலை நாடுகளிலே இருக்கின்றவர்கள் நம்மைப் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்று சொன்ன பெரும் புலவர்கள். நான் பழைய முறையிலே கவிதை எழுத மாட்டேன். கழுதையும் எழுதும் கடவுள் பாடல் என்று சொல்லி தன்னாலே புதிய இலக்கியம் உருவாக்கிக் காட்ட முடியும் என்று சொன்னவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், புதியதைப் பாட முடியும் என்று சொன்னவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்; புதியதை உருவாக்க முடியும் என்ற உணர்வை தமிழகத்திற்குத் தந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். கம்பனைப் போல கம்பராமாயணம் எழுதுபவர்கள் இருக்கலாம், ஆனால் இன்னொரு கம்பன் இந்த நாட்டிலே உருவாக முடியாது என்று சொல்லக் கூடிய மிக பிற்போக்கான கருத்துக்கு அவர் தன்னுடைய எதிர்ப்பைத் தந்து கம்பன் அல்ல, அதைப் போல் இன்னொரு புலவன் தோன்ற முடியும் நானே எழுதிக் காட்டுகிறேன் என்று சொல்லி ஒரு புதிய இலக்கியத்தை அவர் தோற்றுவித்தார் என்றால் அது நம்முடைய கவனத்தை கவர வேண்டும்.

இன்றைக்குத் தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால் தமிழர்களுடைய பழம்பெருமையைப் பேசிக் கொண்டிருப்பதிலே புண்ணியமில்லை, இலாபமில்லை, அதைப் போல பெருமைக்குரிய காரியங்களை இன்றைக்கு ஒரு தமிழனாலும் செய்ய முடியும் என்கிற உணர்வுகளை இந்த நாட்டிற்குத் தந்த இரண்டு பெரும் புலவர்கள் பாரதியாரும், பாரதிதாசனும். ஆகவே, அவர்கள் பெயரால் அமைகின்ற இந்தப் பல்கலைக் கழகங்கள் இன்றைக்கு இருக்கின்ற இந்த தமிழ் இனத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே பெரும் நன்மை செய்து காட்ட முடியும் என்று பெருமைக்குரிய இனமாக மாறுவதற்கு இரண்டு அடிப்படை பல்கலைக் கழகங்களாக அவைகள் இருக்க வேண்டுமென்ற ஆசையிலே இந்தப் பெயரை நாம் வைத்திருக்கிறோம். அந்த ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அந்த அடிப்படையிலே அமைந்திருக்கின்ற இந்த இரண்டு பல்கலைக் கழகங்களினுடைய சட்ட முன்வடிவுகளை உங்கள் முன்னாலே நான் கொண்டுவந்து உங்களுடைய ஆய்வுக்கு வைத்திருக்கிறேன். உங்கள் கருத்துக்களை நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள்.

இதுபற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தாலும் ஒரிரண்டுக்கு மட்டும் நான் விளக்கங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கஜேந்திர கட்கர் குழு சிபாரிசு, குறைந்தது 30 கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக்கழகமாவது இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால், இன்றைக்கு வளர்ந்து வருகிற கல்வி முறையைப் பார்க்கிறபோது ஒவ்வொரு கல்லூரியும் ஒரு பல்கலைக் கழகமாக ஆகவேண்டுமென்பதுதான். இந்த இரண்டுக்கும் இடையிலேதான் தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் வந்திருக்கின்றன. ஆகவே, நம்முடைய நோக்கம் ஒவ்வொரு கல்லூரியும் பல்கலைக் கழகம்போல் தன்னாட்சியுடையதாக ஆக்கப்பட வேண்டும் என்பதுதான். அதற்குத்தான் இந்த அதிகாரங்களை நாம் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளுக்குத் தருகிறோம். அதிகாரங்களைத் தருகிறோம் என்று சொல்கிறபோது எல்லா அதிகாரங்களையும் அல்ல. அக்கடமிக் பவர்ஸ், கல்வி சம்பந்தமான ஆராய்ச்சி சம்பந்தமான பாட சம்பந்தமான அந்த அதிகாரங்களை மட்டும் அவர்களுக்குத் தருகிறோம். அவர்களுக்கு அவற்றைத் தருகிறோம் என்கிறபோது நிர்வாகத்திற்கு அல்ல, அது தவறாக எடுத்துக் கொண்டு இன்றைக்கு எதிர்த்துப் பேசுகின்ற அளவுக்கு எங்கெங்கோ கருத்துக்களை சொல்லிவிடுகிறோம். நாம் தந்திருக்கிற அதிகாரம் அக்கடமிக் பீல்டுக்கு, அதாவது கல்வி சம்பந்தமானதற்கு தந்திருக்கிறோம். கல்வி சம்பந்தமான அதிகாரத்தை கல்வித் துறையிலே உள்ள பேராசிரியர்களுக்குத் தந்திருக்கிறோம்.

அட்டானமி இல்லாத கல்லூரிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இல்லாத சில உரிமைகள் தருவதற்குப் பெயர்தான் தன்னாட்சி பெற்றிருக்கிற கல்லூரி என்பதாகும். ஆகவே, இன்றைக்கு அவினாசிலிங்கம் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள்.





நாம் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தாலும் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதற்காக அங்கே போராட்டம் நடத்துகிறார்களோ, அந்த நிலைமை உருவாவதற்கு காரணம் அவர்களே கையெழுத்து இட்டுத் தந்திருக்கிறார்கள். டிரிபிள் மேஜர் கொண்டு வர வேண்டும் என்று அங்கே இருக்கிற ஆசிரியர்களே கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறார்கள். இப்போது கேட்டால் நாங்கள் பயந்து கொண்டு போட்டோம் என்று சொல்லுகிறார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, ஆனால், மாற்றம் எப்படி வேண்டுமென்றால் அரசு வந்து டிரிபிள் மேஜர் வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்கு அகடமிக் பீல்டு இருக்கக் கூடாது. ஆனால் இந்த டிரிபிள் மேஜர் வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு இந்தப் பல்கலைக் கழகம் மீண்டும் பரிசீலிக்கலாம். பரிசீலிக்கலாம் என்பது மட்டும் அல்ல. தன்னாட்சி உரிமையை தவறாகப் பயன்படுத்துகிறார்கள் அல்லது தன்னாட்சி உரிமையினால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கருதுவார்களானால் அந்தத் தன்னாட்சி உரிமையை ரத்து செய்வதற்கும் அதிகாரம் இருக்கிறது. அதற்கும், அத்தகைய நிலைமை வருமானால் அதையும் நாம் கொண்டு வரவேண்டும் என்றுதான் விரும்புகிறோம்.

ஆகவே, நான் வலியுறுத்திக் கூற விரும்புவது, ஒவ்வொரு பல்கலைக் கழகமாக மாற வேண்டும் என்ற நிலைமையில் அங்கே. காரியங்கள் நடைபெற வேண்டும். அது ஒரு ஹை ஸ்கூல் அல்ல. வாத்தியார்கள் சொல்லி மாணவர்கள் கேட்டுக் கொண்டு போகிற இடமாகக் கல்லூரிகள் இருக்கக் கூடாது. மனப்பாடம் செய்து இரண்டு கேள்விகளுக்குப் பதில் எழுதுவதற்குத் தயார் செய்கின்ற இடம் கல்லூரி அல்ல.

(பிற்பகல் 12–40)

கல்லூரிக்கு வந்து விட்டாலே ஆராய்ச்சி மனப்பான்மை வந்து தீர வேண்டும். 10 பேர்களுக்காவது வர வேண்டும். இரண்டு பேருக்காவது வரக்கூடிய சூழ்நிலை அங்கே இருக்க வேண்டும். நான் சொல்கிறேன் நீ கேட்டுக் கொள்; மனப்பாடம் செய்து பரீட்சை எழுது என்று சொல்கிற நிலைமை கல்லூரிகளுக்கு வந்து விடுமேயானால் அதற்கு பிறகு தமிழ் சாதிக்கு விடுதலைத் தர யாராலும் முடியாது. பாரதியார் அல்ல, ஆயிரம் பாரதியார் பிறந்தாலும் முடியாது. நாம் நம்மையே சிறைப்படுத்திக் கொள்கிறோம்; நாம் நம்மையே கட்டுப்படுத்திக் கொள்கிறோம்; நாம் விடுதலையை அனுபவிக்க மறுக்கிறோம் என்பது தான் அதற்குப் பொருள். ஆகவே, இந்த அடிப்படையிலே நாம் இதைப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு துணை வேந்தருக்கு சில அதிகாரங்களைத் தந்திருக்கிறோம் என்றால், அது கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் அல்ல. அதை பரிசீலிக்கிற உரிமைகள் சிண்டிகேட்டிற்கு தந்திருக்கிறோம்.

ஜனநாயக உணர்வு இதற்கு முன்னாலே இருந்ததை விட அதிகம் இன்றைய தினம் இருக்கிறது. மேலும் இருக்கலாம் என்ற கருத்தைச் சொல்லலாம. ஆகவே, இன்றைக்கு இருக்கிற இந்த இரண்டு புதிய மசோத்தாக்கள் பல்கலைக் கழகங்களைப் பொறுத்த மட்டில் ஒரு முன்னேறறமான, முற்போக்கான மசோத்தாக்கள். உங்களுடைய முழுமையான ஆதரவை பெறத் தகுதியுடைய மசோதாக்கள் என்பதைச் சொலலிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு இரகுமான்கான் அவர்கள் ஒரு கருத்தைச் சொனனார்கள். தஞ்சையிலே தமிழ் பல்கலைக் கழகம் ; 15 ஆம் தேதி நீங்கள் நாள் குறித்திருக்கிறீர்கள் ; யூ. ஜி. சி. அனுமதி கிடைத்ததா ? என்ற கேள்வியை கேட்டார்கள். அவர்கள் எல்லாம் சொல்கிற அநத அடிப்படையிலேதான் நாங்களும் அனுமதிக்குப் போனோம். அங்கே போன போது அவர்கள் கேட்ட கேள்வி, எடுத்ததற்கு எல்லாம் இங்கே எதற்கு வருகிறீர்கள் ? என்று கேட்டார்கள். அப்போது நான் நினைத்துக் கொண்டது சொல்லவில்லை—ஏழு ஆண்டு காலம் மாநில சுயாட்சிக்கு இங்கே வசனம் பேசிக்கொணடு, அதிகாரங்களை கையில் வைத்துக் கொண்டு, நம்முடைய அதிகாரங்கள் என்ன என்றே தெரியாமல் ஆண்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களைப் பார்த்துக் கொண்டு போகிற போது, இங்கே நீ ஏன் வந்தாய் என்று கேட்கிறார்கள் ? யாரை நொந்து கொள்வது ? நம்முடைய அதிகாரங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு நாம் ஆட்சி நடத்த வேண்டிய ஒரு நிலைமைக்கு இன்றைக்கு வந்திருக்கிறோம். இன்றைக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியிலேதான் தமிழ்நாடு இதற்கு முன்னாலே இல்லாத, ஆனால தனக்கிருந்த அதிகாரத்தை, அனுபவிக்க முடியாத அதிகாரத்தை அனுபவிக்கப் போகிறது. அதனுடைய முதல் வெளியீடு தான் தமிழ் பல்கலைக் கழக அவசரச் சட்டம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமக்கிருக்கிற அதிகாரத்தை நாம் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறோம். வேண்டாத வீண் வாதங்களை பேசிக் கொண்டிருந்திருக்கிறோமே தவிர, அரசியல் சட்டப்படி நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதைப்பற்றிக்கூட தெரிந்து கொள்ளவில்லை. மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். ஒரே கட்சி அவர்கள் கேட்டு செய்து கொண்டிருக்கலாம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரிலே மாநில சுயாட்சி பேசிக்கொண்டு வந்ததற்கு பிறகு, நம்முடைய அதிகாரங்கள் பற்றி நாமே தெரிந்து கொள்ளாமல், ஏழு ஆண்டுக் காலம் என்ன ஆட்சி நடத்திக் கொண்டிருந்தீர்கள் ? உங்களை முன் மாதிரியாக வைத்து நாங்கள் கேட்கிற போது, அவர்கள் கேட்கிறார்கள், எடுத்ததற்கு எல்லாம் இங்கே எதற்கு வருகிறீர்கள் என்று. ''கன்கரண்ட் லிஸ்ட்டிலே'' உங்களுக்கும் அதிகாரம் இருக்கிறது ; எங்களுக்கும் அதிகாரம் இருக்கிறது.



என்றுதான் பொருளே தவிர, '' கன்க்ரண்ட் லிஸ்ட்டிலே '' இருப்பதற்கு எல்லாம் எங்களைக் கேட்டுக்கொண்டு தான் செய்ய வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே எங்கே சொல்லப்பட்டிருக்கிறது ?

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி, என்றால் என்ன என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டுதான் இங்கே அதற்கு பாடுபட்டு வருகிறது. இராஜமன்னார் கமிட்டி அமைத்தது, என்னென்ன அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்கிறது ; மத்திய அரசுக்கு இருக்கிறது ; இரண்டுக்கும் சேர்த்து '' கன்க்ரண்ட் லிஸ்ட்டிலே '' இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு என்னென்ன அதிகாரங்கள் நமக்கு வரும் என்பதை அறிவதற்காகத் தான். குறிப்பாக கல்வியைப் பொறுத்த மட்டில் 1935 ஆம் வருட அரசியல் சட்டத்தின் படி, கல்வி மாநிலத்தினுடைய பொறுப்பிலே தான் இருந்தது. அதற்கு பிறகு, கல்வி என்ற பட்டியல் மாநில சர்க்காரை விட்டு, '' கன்க்ரண்ட் லிஸ்ட்டிலே '' பொதுவான பட்டியலுக்கு போய் இருக்கிறது. அது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டிலே பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. '' கன்க்ரண்ட் லிஸ்ட் '' சம்பந்தமாக, மாநில சர்க்கார் எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி, இல்லை எங்களுக்குத்தான், மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது அதிகாரம் என்று சொல்லி, இதுபோன்ற பல்வேறு வழக்குகள் இன்றைக்கு இந்தியாவினுடைய சுப்ரீம் கோர்ட்டிலே தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே, கன்கரண்ட் லிஸ்ட் என்று சொல்லப்பட்டுவிட்ட காரணத்தாலே மாநில சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. கன்கரன்ட் லிஸ்ட்டிலே மாநில சர்க்காருக்கு அதிகாரம் இருக்கக்கூடிய அதே நேரத்தில் The Central Government voice is Final என்று மத்திய சர்க்கார் பார்த்து ''உங்களுக்கு தமிழ் பல்கலைக் கழகம்அமைக்க அனுமதி இல்லை'' என்று சொல்லி விட்டால் தமிழக அரசு ஒன்றும சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே நீங்கள் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்பது தேவையில்லை. அவர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அவர்களுக்கு அதிகாரம் இருக்கின்றது என்று தெரிந்தும் ஏன் அவர்கள் டெல்லிக்குப் போனார்கள்?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இவர்களைப் பார்த்து ஏமாந்துதான் நாங்களும் டெல்லிக்குப் போனோம். இதை ஒத்துக் கொள்வதில் நான் வெட்கப்

பட்டவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் 7 ஆண்டுக்காலம் போனதைப் பார்த்து அதைப் பின்பற்றி ஏமாந்துதான் போனோம். அப்படிப் போனபோது சொன்னார்கள் இதற்கெல்லாம் வரவேண்டியதில்லை என்று. ஆகவே, இனி போக மாட்டோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு ஆட்சியிலே இருந்தபோது கல்வித்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே அணுகுகிறபோது கல்வி மத்திய அரசின் பட்டியலிலே இருந்ததா, மாநில அரசின் பட்டியலிலே இருந்ததா ? அல்லது கன்கரண்ட் லிஸ்ட்டிலே இருந்ததா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, யூனிவர்சிட்டியைப் பொறுத்த மட்டிலே கன்கரண்ட் லிஸ்ட்டிலே தான் இருந்தது. மற்றவைதான் இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், கன்கரண்ட் லிஸ்ட்டிலே அது இருக்கக்கூடாது என்று நாங்கள் சொல்கிறோம். அது வேறு பிரச்சினை. ஆனால், இப்போது நான் விளக்க விரும்புவது என்னவென்றால் கன்கரன்ட் லிஸ்ட்டிலே இருப்பதற்கு டெல்லி அனுமதி பெறத் தேவையில்லை. மாநிலமே அதுபற்றிய சட்டத்தை ஏற்படுத்தலாம். அப்படி ஏதாவது ஒரு முரண்பாடு வந்தால் அதற்கு பிரெசிடென்ட் கையெழுத்து போட்டுவிட்டால் பார்லிமென்ட் சட்டத்திற்கு மேலே மாநில சட்டம் நிற்கும். அதை மறுபடி பார்லிமென்ட்டிலே சட்டம் கொண்டுவந்து ரத்து செய்தால் நான் மாநில சட்டத்திற்கு மேலே பார்லிமென்ட் சட்டம் நிற்கும். இதிலே இவர்கள் செய்திருக்கின்ற குழப்பத்தில் நான் மற்றவற்றை எல்லாம் படிக்காமல் கூட இருந்துவிட்டேன். இப்போது ஒழுங்காகப் படித்தேன். ஆக இந்த தமிழ்நாட்டின் மரியாதையையும் மானத்தையும், உரிமையையும் காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, நான் சொல்வது திராவிட முன்னேற்றக் கழகத்தை இழிவு படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. நம் நாட்டுக்கு வேண்டிய உரிமைகளைப் பற்றி கவனம் செலுத்தவில்லை என்பதைத்தான் சொல்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, எங்களைப் பற்றி குற்றச்சாட்டு சொல்லி இருப்பதால் எங்களுக்கு பதில் சொல்வதற்கு வாய்ப்புவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, நடந்துவிட்ட தவறைத்தான் சொல்கிறோம். 3 ஆண்டுக்காலம் நாங்களும் போய் இருந்தோம். ஆக தொடர்ந்து நடந்து கொண்டிருந்த தவறைத்தான் சொல்கிறேன். தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.



**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது நாவலர் அவர்கள்தான் கல்வி அமைச்சராக இருந்திருக்கிறார். இப்போது இங்கே முன்னவராக அவர் இருக்கிறார் என்பது ஒரு பக்கம் இருந்தாலும் இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் தமிழ் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு மாநில சர்க்காருக்கு அதிகாரம் இருக்கின்றதா அல்லது மத்திய அரசின் அனுமதி பெற வேண்டுமா என்பது, இது எழுந்ததற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால் கன்கரன்ட் லிஸ்ட்டிலே சேர்க்கப்பட்டிருப்பதால் இது குறித்து சட்ட இலாக்கா அந்தக் கருத்தைச் சொல்லி இருக்கலாம். இன்றைக்கு இருக்கக்கூடிய கருத்தையும் சொல்லி இருக்கலாம். இதையே கூட தவறு என்று வேறு ஒரு இலாக்கா சொல்லலாம். ஆகவே, இது ஒரு சட்ட சம்பந்தமான பிரச்சினை. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுய ஆட்சி பற்றி சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை என்ற பொருள் வராது.

(பிற்பகல் 12—50)

**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசு தனக்குள்ள அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்தி, தமிழ் பல்கலைக் கழகத்தை அமைக்கும் என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அனுமதி அளிக்க மத்திய அரசு மறுத்தால், திரு. இரகுமான்கான் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியினர், தமிழக அரசோடு சேர்ந்து, மத்திய அரசை எதிர்த்துப் போராடுவதற்கு முன் வருவார்களா என்பதை கேட்க விரும்புகிறேன் (கூச்சல், குழப்பம்)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மத்திய அரசாங்கத்தை இந்த விவாதத்தினுள் இழுக்க வேண்டிய அவசியமே இல்லை.... (மணியடிக்கப்பட்டது.)

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினர் முன் வருவாரா என்று கேட்டிருக்கிறார். நான் பதிலளிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

தமிழ் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்திலே எங்களுக்கு எந்தவித மாறுபாடும் இல்லை. இந்த அரசு அதைக் கொண்டு வருவதற்காக நான் வரவேற்கிறேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் மத்திய அரசு அனுமதி வழங்காவிட்டால், உங்கள் கட்சியின் சார்பாக என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். நல்ல காரியங்கள் நடைபெற வேண்டும் என்றால், அவைகளுக்காக

திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி போராட வேண்டும், எந்த போர் முறையைப் பயன்படுத்த வேண்டும். கேடயத்தை எப்படி பயன்படுத்த வேண்டும்? வாளைப் எப்படிப் பயன் படுத்த வேண்டும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் போர் பயிற்சியை நாங்கள் உங்களிடமிருந்து புரிந்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இல்லை. (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மட்டில் அப்படி ஒரு நிலைமை உருவாகாது. காரணம் அவர்கள் அனுமதி தந்துவிட்டார்கள் என்பது மட்டும் அல்ல, அரசியல் சட்டப்படி உங்களுக்கே அந்த உரிமை இருக்கிறது நீங்களே ஆரம்பிக்கலாம் என்று எழுதித் தந்திருக்கிறார்கள். ஆகவே, இதில் போராட வேண்டிய அவசியமே இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையே இதில் இருக்காது என்பதைக் கூறிக்கொண்டு, அந்தப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படும்போது, அதன் விழாவிலே நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு பங்கு கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, இன்று கடைசி நாளாக இருப்பதால், இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். அதற்கு அனுமதி அளிக்க வேண்டும், சிதம்பரத்திலே இருக்கிற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடைசி நாளாக இருப்பதால், பிரச்சினையை விட்டு போய் பேசலாம் என்பது பொருள் அல்ல. இது பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மசோதா, அதனால் நீங்கள் குறிப்பிடுவதெல்லாம் இதிலே வராது. மாண்புமிகு கல்வி அமைச்சர் தொடர்ந்து பேசலாம். மற்றவர்கள் உட்கார வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, இவ்வளவு நல்ல நோக்கத்தோடு தமிழ் சமுதாயத்திற்கு தொண்டாற்ற வந்திருக்கும் இந்த இரண்டு புதிய பல்கலைக் கழகங்களைப் பற்றிய மசோதாக்களை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்றிருப்பதற்காக மீண்டும் அவர்களுக்கு ஒரு முறை நன்றி கூறி, அவர்களுடைய ஆதரவோடு இவைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.





### (அ) பாரதியார் பல்கலைக்கழக சட்டமுன்வடிவு, 1981

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 79/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 65 வரை, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே "1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 79/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

### (ஆ) பாரதிதாசன் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு, 1981

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைமுன்னுள்ள கேள்வி :

"1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 80/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 65 வரை, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 80/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அறிவிப்பு

சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட
முன்வடிவு 1981

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 81/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் நமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(இ) சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட
முன்வடிவு 1981

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே. . . .

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்களால் டேபிளில் ப்ளேஸ் செய்யப்பட்ட-கலக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருந்தாலும் கூட தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் மசோதாக்கள் முதல் அமைச்சர் அவர்கள் பெயரால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே இப் பிரச்னைபற்றிக் கிளப்பப்பட்டு எந்த அமைச்சரும் கொண்டு வரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களே இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். எந்த அமைச்சரும் கொண்டு வரலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 81/1981) ஆய்வுக்கு† எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

† 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று *நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ''1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 81/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' இனம் 4 (IV) 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்
சுதாரர்கள், பேத்துவாரம்தாரர்கள் சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981)-க்குமுன்
4 (VIII) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம்
திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 77/1981) எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு
தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 77/1981) ஆய்வுக்கு † எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

* 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

8. அறிவிப்பு

சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட
முன்வடிவு 1981

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 81/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(இ) சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட
முன்வடிவு 1981

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே....

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்களால் டேபிளில் ப்ளேஸ் செய்யப்பட்ட-கலக்டீவ் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருந்தாலும் கூட தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் மசோதாக்கள் முதல் அமைச்சர் அவர்கள் பெயரால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே இப் பிரச்னைபற்றிக் கிளப்பப்பட்டு எந்த அமைச்சரும் கொண்டு வரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களே இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். எந்த அமைச்சரும் கொண்டு வரலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 81/1981) ஆய்வுக்கு† எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

† 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று *நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, "1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 81/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" இனம் 4 (IV) 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச் சுதாரர்கள், பேத்துவாரம்தாரர்கள் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981)-க்குமுன் 4 (VIII) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 77/1981) எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு
தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 77/1981) ஆய்வுக்கு † எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

* 1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஒருசில கருத்துக் களை இம்மன்ற உறுப்பினர்கள் முன்வைக்கக் கடமைப்பட்டி ருக்கிறேன். குறிப்பாக ஊராட்சிமன்றத் தேர்தல்களிலும் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களிலும் இட ஒதுக்கீடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டு கடந்த 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்று அதிலே ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவுகள் காரணமாக தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு 18 சத விகிதம், பெண்களுக்கு 15 சத விகிதம் இட ஒதுக்கீடுகள் செய்யலாம் என்ற சட்டத்திருத்தத்தை இங்கே நான் கொண்டுவந்திருக்கிறேன். இதுவரையிலும், குறிப்பாக ஊராட்சி மன்றங்கள் ஏற்பட்டு ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் இப்படிப்பட்டதொரு மாறுதலை, இடஒதுக்கீடை எந்த அரசும் செய்யவில்லை. ஆனால் தமிழக அரசு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு முன்வந்து இதைச் செய்திருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சில திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இவைகளையெல் லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருகிற அக்டோபர் திங்கள் ஊராட்சிமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஏற்கனவே தாக்கீதுகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஆகவே அந்தத் தேர்தல்கள் சுமுகமாக நடைபெறு வதற்கு ஏற்ற கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

(பிற்பகல் 1.00)

திரு சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை முன்மொழிந்தார்கள். அதனை வரவேற்ப தோடு மட்டுமல்ல ; சில கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நம்முடைய 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திற்குப் புதிய திருத்தத்தைக் கொண்டுவந்து, இன்றைய தினம் மக்கள் கணக்கெடுப்புத் தொகைக்கேற்ப ஆதித்திராவிட, பழங்குடி மக்களுக்கு 18 சதவீதம் என்றும், பெண்களுக்கு 15 சத விகிதம் என்றும் இட ஒதுக்கீடு அறிவித்திருக்கிறார்கள். அதற் காக இன்றையதினம் இந்த திருத்தச் சட்ட முன்வடிவைக்





கொண்டு வந்திருக்கிறார்கள். இதை வரவேற்கின்ற அதே நேரத்திலே, மாநகராட்சி மன்றங்களில் கடந்த இருபது ஆண்டு காலமாக எத்தகைய நிலைமை இருந்தது. இன்றையதினம் ஆளுங் கட்சியினரால் கொண்டு வரப்படுகின்ற சட்டத் திருத்தத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், திராவிட முன் னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலே மாநகராட்சியிலே அன்றையதினம் 100 வட்டங்களாக இருந்த காலத்தில், நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, 10 வட்டங்களுக்கு ஒரு ஆதி திராவிடர் இருக்க வேண்டுமென்ற சட்டத்தை உருவாக்கி, அதன்மூலமாக அமுல்படுத்தி வந்தோம். ஆனால், அதே நேரத் தில் 10 வட்டங்களில் எந்தவிதமான ஆதித திராவிட மக்களும் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தால், ஒரு ஆதித் திராவிட உறுப்பினரை கோ-ஆப்ட் செய்து, அன்றையதினம் அவர்களுக்கு உதவி வந்தோம். இன்றைய தினம் தேர்தல் நடத்துவதற்கு, இந்த மக்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற காரணத்தால் தான், இந்தத் தேர்தலைத் தள்ளி வைத்திருக்கிறோம் என்று சொல்லி, இன்றையதினம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, அக்டோபர் மாதத்தில் தேர்தலை வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

இந்தக் காரணகாரிய விளக்கத்தை வைத்து தேர்தலை நடத்த இருக்கிறார்கள். ஆனால், இன்றையதினம் 374 ஊராட்சி ஒன்றி யங்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. அங்கு தேர் தல் நடைபெறாத காரணத்தால், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் அவைகள் இன்றையதினம் நல்லமுறையிலே நடைபெறவில்லை. ஆனால், இப்போது இந்தக் காரண காரிய விளக்கத்தைச் சொல்லி தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். நீங்கள் இதுவரையிலே தேர் லை நடத்தாமல் தள்ளிக் கொண்டு வந் தீர்கள். இப்போது இந்தக் காரண காரிய விளக்கத்தைச் சொல்லி இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதால், உடனடியாக ஊராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அந்த மக்களுக்கு உருவாக்கித் தருவதற்கு எல்லா அரசியல் கட்சிகளின் சார்பிலும் எடுத்துக்கொண்ட முயற்சியை வரவேற்பதோடு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சோமணம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு நடைபெறயிருக்கின்ற தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மாதர்களுக்கும் இடங்கள் ஒதுக்கப் படவேண்டுமென்று அனைத்துக் கட்சிகளின் கோரிக்கையை கருத்தில் கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்த

அரசுக்கு மார்க்ஸீஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத்
தெரிவித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், இவைகளுக்கு
எவ்வளவு சீக்கிரமாகத் தேர்தல் நடத்த வேண்டுமோ,—
அக்டோபர் திங்களில் தேர்தலை நடத்தலாம் என்று சொல்லி
யிருக்கிறீர்கள்—அவ்வளவு சீக்கிரமாக நடத்த வேண்டும், அதற்
கான நடைமுறைகளைச் சீக்கிரமாக செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு, இந்த விகிதாச்சாரம் எல்லா மாவட்டங்
களுக்கும், எல்லா ஒன்றியங்களுக்கும் கொண்டுவர வேண்டும்,
அதற்கான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு
இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே
வரவேற்று அமர்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாற்றுத் தலைவர் அவர்களே,
1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தை இங்கே மூன்றாம்
முறையாகத் திருத்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்
டிருக்கிறது. பஞ்சாயத்து. பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஜன
நாயகத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஜனநாயக
அமைப்பு இருக்கவேண்டுமென்ற பெருநோக்கோடு அண்ணல்
காந்திஜி கண்ட கனவை, அமரர் நேருஜி, காமராஜ் போன்ற
பெரும் தலைவர்கள் எல்லாம் கிராமப்புற மக்கள் நல்வாழ்வு
பெற வழி செய்யும் வகையில் சட்டத்தை அன்று நிறைவேற்றி
னார்கள். அந்தச் சட்டத்தை அப்போதைக்கப்போது மாற்றிக்
கொண்டிருப்பது நல்லதொரு ஜனநயாகமாக இருக்காது.
ஒட்டுமொத்தமாக மாற்றுவது என்று சொன்னாலும் பொது
மக்கள் கருத்தறிந்து மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற
என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தைக் கூறிக் கொள்
கிறேன்.

ஆதித் திராவிட பழங்குடி மக்களுச்கு 18 சதவிகிதமும், பெண்
களுக்கு 15 சதவிகிதமும் என்ற ஓர் நிலையை உருவாக்கி இருப்
பதை ஒரு பக்கம் வரவேற்றாலும் மக்களுக்காக எந்த அளவுக்கு
ஒதுக்கீடு செய்யப் போகிறீர்கள் என்று சொன்னால் நலமாக
இருக்குமென்று கருதுகிறேன். 37 எண். என்ற பிரிவில் 'கள்ளத்
தனமாக' என்ற வார்த்தை இடம் பெற்றிருக்கிறது கள்ளத்
தனம் என்ற வார்த்தையை அதிலே இருந்து எடுத்துவிட அமைச்சர்
அவர்கள் முன்வருவார்கள் என்று கருதுகிறேன். ஏற்கனவே
இந்த அவையில் கூறும்போது அது ஒரு ஜாதிப் பிரிவினரைக்
குறிப்பிடக்கூடிய வார்த்தை என்று கூறப்பட்டது. அந்த
வார்த்தை இல்லாமல் வேறு ஒரு வார்த்தை போட அமைச்சர்
அவர்கள் முன்வரவேண்டும்.

1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தேர்தலை நடத்து
வோம் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருந்தாலும்
கடந்த காலத்தில் தந்த வாக்குறுதிகள் எல்லாம் பறிபோனவை
யாக ஆகிவிட்டாலும், இந்த வாக்குறுதியாவது நிலைக்குமா



என்ற ஐயம் ஏற்படுகிறது. அக்டோபர் திங்கள் மழைக்
காலம். கிராமப்புற மக்கள் விவசாயப் பணிகளில் இருப்பார்கள்.
ஆயினும் அந்தத் தேர்தல்களை நடத்தித்தான் ஆகவேண்டும்.
அப்போதுதான் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள்
நல்ல முறையில் செயல்படும், திட்டங்கள் நல்ல முறையில்
செயல்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் இல்லாத நிலை
மையில் கிராமங்களில் சீர்கேடுகள் பெருத்துக் கொண்டிருக்
கின்றன. ஆகவே, தேர்தலை நல்ல முறையில் விரைவாக நடத்து
வதற்கான சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, அண்ணல் காந்திஜி கண்ட கனவை, அமரர் நேருஜி
காமராஜ் போன்ற பெரும் தலைவர்கள் கொண்டு வந்து நிறை
வேற்றிய பஞ்சாயத்து ராஜ்யத்தை செயல்பட வழிவகை செய்ய
வேண்டுமென்று கூறி இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.
வணக்கம்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்
களே, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவிலுள்ள
பொதுவான அம்சங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக
வரவேற்கிறேன். நான் ஒருசில கருத்துக்களை பட்டும் கூறு
கிறேன். இந்தியாவில் இதுவரை இல்லாத அளவுக்கு ஆதி
திராவிட மக்களுக்கும், பெண்களுக்கும் இடம் ஒதுக்கிக் கொடுக்
கக்கூடிய நிலை தமிழகத்தில் முதல் முதலாகக் கொண்டு வரப்
பட்டிருக்கிறது. அதோடு 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை
அளிக்கப்பட்டிருக்கிறது. பதினெட்டு வயதானவர்கள் சொத்துக்கு
உரிமையுடையவர்கள் ஆகிறார்கள். அதே சமயத்தில் வாக்
களிக்க உரிமை இல்லை என்ற நிலைமை இருந்தது. கேரள,
மேற்கு வங்க அரசுகள் 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை அளிக்க
முன்வந்ததைப் போல் தமிழக அரசும் முன்வந்து அந்த உரிமை
யைக் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன். அடுத்து வருகிற
ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் ஏறக்குறைய 70 ஊராட்சி
ஒன்றியங்களில் ஆதிதிராவிடர்களும் பெண்களும் வந்து தலைமைப்
பொறுப்பை ஏற்பார்கள் என்ற நிலைமையை வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-10)

அந்த காலகட்டத்திலேயே தேர்தல் நடத்தினால் பயனுள்ளதாக
இருக்கும். ஏற்கெனவே தேர்தல்கள் நடைபெறாத காரணத்தி
னால் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு இருக்கிற சட்டமன்ற
உறுப்பினர்கள் பஞ்சாயத்துக் தலைவர்கள் செய்யவேண்டிய,
ஒன்றியத் தலைவர்கள் செய்யவேண்டிய வேலைகளையும் அதிக

[திரு. தி. கா. நல்லப்பன்] [1981 செப்டம்பர் 1

கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவு
மாகச் செய்து கொண்டிருக்கிறேன். மீண்டும் தனி அதிகாரி
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் தனி அதிகாரி
களுக்கு நீட்டிக்கவேண்டுமென்று இந்த மன்றம் கேட்கக்கூடிய
நிலைமை இல்லாமல் உடனடியாக தேர்தலைக் கொண்டுவர
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்தை
வரவேற்று அமர்கிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்
களே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மசோதாவை
இந்த அவையிலே கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களுக்கும், நம்முடைய அமைச்சர் திரு. குழந்தை
வேலு அவர்களுக்கும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
18 வயது பூர்த்தியடைந்த இளைஞர் பட்டாளம் வாக்குரிமை
பெற இருக்கிறது. அதைவிட முக்கியமாக தாய்க்குலத்தின்
பிரதிநிதிகள் 15 சதவீதம் ஊராட்சிகளிலே, ஊராட்சி ஒன்றியங்
களிலே பதவி வகிக்கப் போகிறார்கள். அதைவிட முக்கியமானது
எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் அவர்கள் எடுத்துச்
சொன்னதைப்போல் ஆதிதிராவிடப் பழங்குடியினர் 18 சதவீத
இடங்களை ஊராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் பெற
இருக்கிறார்கள். இதுவரை எந்த மாநிலமும் செய்யாத அளவில்
மிகப் பெரிய சாதனையை இந்த அரசு செய்திருப்பதற்காக
நான் பாராட்டைக் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக
சர்வகட்சி கூட்டத்திலே அனைத்துக் கட்சியினரும் இதை
ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அனைத்துக் கட்சியினரும் ஒத்துக்
கொண்டிருக்கிறார்கள் என்றால் தி. மு. க. வைத்தவிர. அந்த
அனைத்துக் கட்சியினருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன், சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்து கொள்ளாமல் தி.மு.க
பொறுப்பில்லாமல் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே பெண்
களுக்கும் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்கும் அது விரோத
மனதே என்று நான் சந்தேகிக்கிறேன். பாரதியார் சொன்னார்.
புதுமைப்பெண் என்று, அதைப்போல் உலகம் முழுவதும்
விமன்ஸ் லிபரேஷன் மூவ்மெண்ட் என்ற பெயரால் போராட்டம்
நடத்தி வெற்றிபெற்றிருக்கிறார்கள். தமிழக முதல்வர் புரட்சித்
தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியை இன்றைக்கு நிறை
வேற்றியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே எவ்விதப் போராட்டமும் இன்றி பெண்கள்
வெற்றிபெற்றிருக்கிறார்கள். 15 சதவீத இடங்களைப் பெற்றி
ருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே மாத்திரம்தான் இது செய்யப்
பட்டிருக்கிறது. அரிசனங்களுக்கு அங்கே 5 சதவீதம்தான்
கொடுத்திருக்கிறார்கள், ஆனால் தமிழ்நாட்டிலே ஆதிதிராவிட
பழங்குடியினருக்கு 18 சதவீத இடங்கள் கொடுக்கப்பட்டு இருக்
கிறது. ஆளுங்கட்சித் தலைவராக பெண் இருக்கின்ற இடத்திலே
5 கூட சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது, 18 சதவீதம்



1981 செப்டம்பர் 1] [திரு. கோ. விஸ்வநாதன்]

கொடுக்கப்படவில்லை. இங்கே இந்தச் சலுகைகள் அளிக்கப்பட வில்லையென்றால் ஒரிருவர்கூட ஊராட்சி ஒன்றியத் தலைவராக வரமுடியாது. தமிழ்நாட்டிலே தென் ஆற்காடு மாவட்டத்திலே ஒருவர் வந்திருந்தார். ஆனால் இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக 60, 70 பேர்கள் வரப்போகிறார்கள், 50 பேர்கள் பெண்களும் வரப்போகிறார்கள், இன்றைக்கு இந்த அரசு செய்திருக்கின்ற காரியம் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தம் வாழ்நாளில் செய்ய விரும்பியதை அவர்கள் விரும்பிய அந்த அந்தஸ்தை, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அரசு இன்றைக்குச் செய்திருக்கிறது. டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கனவை நனவாக்குகிறோம் என்று சொல்லி இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தைப் பொதுவாக நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் காரண காரிய விளக்கத்திலே அவர்கள் சொல்லிருப்பது மகளிருக்கு 15 சதவீதத்திற்கு மேற்படாத இடங்கள் ஒதுக்கப்படுமென்று. ஆனால் சட்டத் திருத்தத்தைப் பார்த்தால் 18 சதவீதம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்பதிலே 15 சதவீதம் என்று சொல்லிவிட்டு செக்‌ஷனைப் பார்க்கிறபோது அதிலே பெண்களுக்கு 18 சதவீதத்திற்கு மேற்படாத இடங்களை அவ்வப்போது ஒதுக்கலாம் என்று சொல்லியிருப்பது தவறுதலாக அச்சடித்துவிட்டார்களா அல்லது அரசாங்கத்தின் நோக்கமே அது தானா என்று புரியவில்லை. மேலும் இதிலே மேன்டேட்ரியாக இல்லை. அரசாங்கம் விரும்பினால் 18 சதவீதத்திற்கு மேற்படாத இடங்களை அவ்வப்போது ஒதுக்கலாம் என்று இருக்கிறது. அதாவது 'மே' என்று இருக்கிறது. 'மே மீன்ஸ் மே நாட்' ஆல்சோ. ஆகவே அரசாங்கம் எந்த எந்த இடங்களிலே விரும்புகிறார்களோ அந்த அந்த இடங்களிலே மட்டும் போடுவதற்காக இந்தச் சட்டத்தை வைத்திருக்கிறார்களா? உண்மையாக இதை அமல் படுத்த வேண்டுமென்ற எண்ணமிருந்தால் 18 சதவீதம் அரிசனங்களுக்காகவும், பெண்களுக்காகவும் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கவேண்டும்.

இப்பொழுது சுமார் பத்து நாட்கள் சட்டமன்றக் கூட்டம் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய சட்டத்தை முன்னதாகக் கூட விவாதித்திருக்கலாம். ஆனால் கடைசி நேரத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்களைப் பற்றிய, ஒரு பெரிய அமைப்பைப்பற்றி ஐந்தாறு நிமிடங்களில் எம். எல். ஏக்களிடத்திலே கொடுத்து இதைப் பரிசீலனை செய்யுங்கள் என்று சொல்வது அவ்வளவு சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 செப்டம்பர் 1

In our electoral roll 17 வயதுக்காரர்கள் ஏற்கனவே இருக்கிறார்கள். அசெம்பிளிக்கான ரோலில் 21 வயதுக்காரர்கள் என்று டெக்லேர் செய்து கொண்டு அவர்கள் இருக்கிறார்கள். 18 வயது என்று ஆக்கி விட்டதால் பத்தாவது படிப்பவர்கள்கூட வோட்டர்களாக வந்து விடுவார்கள்.

There should be a check for that.

அக்டோபர் மாதத்தில் தேர்தல் என்றால், நோட்டிபிகேஷன்கள் 20, 21 Statutory requirement இருக்கின்றன. அதைப்பற்றி என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. உண்மையாகவே அக்டோபரில் நடத்த விரும்புகிறார்களா என்று தெரியவில்லை, அந்த நோட்டிபிகேஷன்களுக்கெல்லாம் காலதாமதம் ஆகும் என்றே நான் கருதுகிறேன்.

முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் என்ன தப்பு செய்தன? பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு மட்டும் கொண்டு வந்த நீங்கள் முனிசிபாலிடிகளுக்கும், கார்ப்பரேஷன்களுக்கும் ஏன் கொண்டு வரவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த ஒதுக்கீடுகளையும் நாம் இந்தச் சட்டத்திலேயே ஒரேயடியாகக் கொண்டு வந்து காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷனாக இதைக் கொண்டு வரக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது இவைகளுக்கு மட்டும் தனியாக நடத்துவதால் பக்கத்திலே உள்ள முனிசிபாலிட்டியிலே இருப்பவர்கள் வந்து சேர்ந்து கொண்டு ஓட்டுப் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். எனவே, பஞ்சாயத்திலே இருப்பவர்கள் எவ்வளவு பேர் என்பதை எப்படி செக் செய்யப்போகிறீர்கள்? எனவே, இதை முன்கூட்டியே கொண்டு வந்திருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 374 பஞ்சாயத்து ஒன்றியங்களில் எவையெவைகளைப் பெண்களுக்காக ஒதுக்குவது, எவையெவைகளை ஆதிதிராவிடர்களுக்காக ஒதுக்குவது என்று அரசாங்கம் முடிவெடுத்து இந்த நோட்டிபிகேஷனையும் இந்தச் சட்டத்தோடு வைத்திருக்க வேண்டும். எந்தெந்த இடங்களில் தங்கள் கட்சிக்கு டெபாசிட் வராதோ அங்கே அவர்களுக்காக ஒதுக்குவது, வோட்டர் லிஸ்டில் அதிகப்படுத்துவது போன்ற நிலைமைகள் உருவாககப்படக் கூடும். எனவே, இப்பொழுது வோட்டர் லிஸ்டை வைத்து அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் எவையெவை என்பதைப் பற்றி நோட்டிபிகேஷன் கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காதது மிகப்பெரிய தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே இப்படிப்பட்ட குறைகள் இருந்தாலும்கூட, அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு 18 வயதாக ஆக்குவது ஆகியவற்றை நான் வரவேற்கிறேன், ஏனென்றால் அரிசனங்கள்



1981 செப்டம்பர் 1] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

தலைவர்களாக வராத காரணத்தால் அவர்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு ரோடு வசதி இல்லை. விளக்கு வசதியில்லை, தண்ணீர் செல்லவில்லை. எனவே, அரசனங்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக வந்தால் அவர்கள் சாதிக்காரர்கள் வசிக்கின்ற பகுதிகளில் நல்லது செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அதனால் அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் குறிப்பாக அரிசன மக்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்திருப்பதை நான் வரவேற்று அமர்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இட ஒதுக்கீடு பற்றிய இந்த மசோதாவை முழு மனதோடு ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெண்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், ஆங்காங்கே இடம் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படும்பொழுது பரவலாக அது இருக்க வேண்டும். எல்லா ஜில்லாக்களிலும் 4 பெண்கள், அந்த ஜில்லாவில் அரிசனங்கள் உருவாகும் வகையிலே அதை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் கொண்டு வரப்படுவது மிகப் பெரிய புரட்சி தான். நம்முடைய பெருந்தலைவர்கள் எல்லாம் சொல்லிய மக்களுடைய ஓட்டுக்கள் வரும் என்று சொல்லியும்கூடச் செய்ய முடியாத அளவில் இருந்த திட்டம் இது. மிகப் புரட்சிகரமான இந்த நிலையை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டக்கூடிய நிலையில் இருக்கிறேன். ஆகையால் இதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் கொடுத்திருக்கின்ற வேஷனை ஏற்கனவே அவர்களுக்குப் பிரித்துக் கொண்டு ரிசர் திருக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதுதான் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அடுத்து, தேர்தல் நடக்கின்ற காலங்களில் எங்கெங்கெல்லாம் மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே கொடுக்க வேண்டுமென்ற நிலையை உருவாக்கித்தான் கொடுப்பார்களே தவிர உடனடியாக அவற்றைக் கொடுக்க முடியாது.

நான் இன்னொரு கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே எம். எல். ஏ. க்களுக்கு என்று ரிசர்வேஷன் சீட் இருக்கிறதே அந்த இடங்களில் இதற்கு ரிசர்வேஷன் சீட்டாக இல்லாமல், மற்ற எம். எல். ஏ.க்கள் இருக்கின்ற இடங்களிலே கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறி இந்த பில்லை முழுமையாக ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1981 செப்டம்பர் 1

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ..........

திருமதி டி. யசோதா : தலைவரவர்களே, இதில் பேசுவதற்கு என்னுடைய பெயரையும் கொடுத்திருக்கிறேன். நானும் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினருடைய கட்சியைச் சார்ந்த திரு. பலராமன் அவர்கள் பேசிவிட்டார்கள்.

திருமதி டி. யசோதா : நானும் கொடுத்திருக்கிறேன்.

[பிற்பகல் 1–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்.

திருமதி டி. யசோதா : முதலிலே நான்தான் பெயர் கொடுத்தேன். என்னைப் பேச அழைக்கவில்லை........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மசோதா எண். 77/81-ஐ இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்று பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய ..................

(திருமதி டி. யசோதா நின்று பேசிக்கொண்டே இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையினுடைய நடவடிக்கையைத் தடுக்கக் கூடாது. காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா எங்கே ? அந்த அம்மையாரை உட்காரச் சொல்லுங்கள்.

திருமதி டி. யசோதா : இன்று நான்தான் முதலிலேயே பெயரைக் கொடுத்தேன். அது எப்படி மாறியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சொரணம் அவர்களும், தேசிய காங்கிரஸ் சார்பாக பலராமனும் அவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நல்லப்பன் அவர்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக விசுவநாதன் அவர்களும் காமராஜ் காங்கிரசின் சார்பாக திருமதி பொன்னம்மாள் அவர்களும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, எல்லோருமே வரவேற்று, இந்த மசோதாவினை, ஏற்றுக்கொண்டதற்காக முதலிலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கூச்சல்-குழப்பம்).



1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி யசோதா ஒரு சட்டமன்ற உறுப்பினராக நடக்க முயற்சி செய்ய வேண்டும். இது என்ன முறை, நான்தான் முதலிலே பெயர் கொடுத்தேன் என்று சொல்லிக் கொண்டேயிருப்பது ? உங்கள் கட்சியின் சார்பிலே ஒருவரைப் பேசவைத்தாயிற்று. நான்தான் முதலிலே பெயரைக் கொடுத்தேன் என்று சொன்னால் என்ன அர்த்தம் ? முறைகேடாக நடக்கக்கூடாது. இந்த முறையை நாம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) பெண்களுக்கு மரியாதை கொடுப்பது என்பது வேறு. நீங்கள் இஷ்டத்திற்குப் பேசக்கூடாது.

திருமதி டி. யசோதா : நான் இஷ்டத்திற்குப் பேசவில்லையே. நான்தானே முதலில் பெயரைக் கொடுத்தேன் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சியிலே ஒருவரைப் பேச வைத்தாயிற்று. திரு. பலராமன் பேசியாயிற்று.

திரு. மி. வின்சென்ட் : அவர்கள், தன் கட்சிக் கொறடாவை கேட்க வேண்டியதுதானே.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஆளுங்கட்சி சார்பிலேயே ஒருவரைத்தான் பேச வைத்தீர்கள்.

திருமதி டி. யசோதா : நான் முதலிலேயே பெயரைக் கொடுத்திருந்தும் இந்த முக்கியமான மசோதாவில் என்னைப் பேச அழைக்காததால் நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(திருமதி டி. யசோதா வெளிநடப்பு செய்தார்.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான சட்டத் திருத்தம். ஊராட்சி ஒன்றியச் சட்டத்திற்கு இந்தத் திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையிலும், இந்த 20 ஆண்டு காலமாக இப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான திட்டத்தை எந்த அரசும் கொண்டு வரவில்லை. ஆனால், தமிழக அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, இதைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இங்கே பேசிய அருமை நண்பர்கள் எல்லாம் ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக, இந்திய தேசிய காங்கிரசின் சார்பிலே பேசிய பலராமன் அவர்கள், வருகின்ற அக்டோபர் மாதத்திலே தேர்தலை வைத்துக் கொண்டால் மழைக்காலமாக இருக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும், மழை வந்தாலும்

கூட, அதைப் பொறுத்துக் கொண்டு நாம் தேர்தலை நடத்த
வேண்டுமென்கிற எண்ணத்தோடுதான் இந்த அரசு இருக்கிறது
என்பதனை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாது, அக்டோபர் மாதத்திலே
26-ஆம் தேதி தீபாவளியும் கூட வருகிறது என்று சொன்னார்கள்.
ஆனாலும், தீபாவளி வந்தாலுங்கூட, அந்த வெடி சத்தத்திற்கு
காது கொடுக்காமல், வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை
அளித்து அதன்மூலமாக மாமன்றத்தினுடைய உறுப்பினர்
களைத் தேர்ந்தெடுக்கின்ற முறையில் நாம் பணியாற்ற வேண்டு
மென்று அனைத்துக் கட்சி தலைவர்களையும் கேட்டுக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அக்டோபர் மாதத்திலே
தேர்தல் நடைபெற்றுத்தான் தீர வேண்டுமென்ற சூழ்நிலையில்
தான் 3 மாதங்களுக்கு மட்டுமே தனி அதிகாரிகள் பதவியை
நீடிக்கின்ற மசோதாவை, ஏற்கனவே இந்த அவை ஏற்றுக்கொண்
டிருக்கிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களின் தனி அதிகாரி
களுடைய பதவிக் காலம் வருகின்ற 11—9—1981-லே முடிவடை
கிறது. ஊராட்சி ஒன்றியக் குழுக்களில் தனி அதிகாரிகள் பதவிக்
காலம் வருகிற 30—9—1981 அன்று முடிவடைகின்ற காரணத்
தினால்தான் 3 மாதங்களுக்கு மட்டுமே நீடிப்பது, அதை
இரண்டு மாத காலத்திற்குச் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்
பதற்கான வழிவகைகளிலே இந்தத் திருத்தங்களை நாம்
கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக, இங்கே தாழ்த்தப்பட்ட
மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதமும் பெண்களுக்கு 15 சதவீத
மும் ஒதுக்குகின்ற இந்த புரட்சிகரமான மசோதாவை எல்லோரும்
ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அதே நேரத்தில் இன்னும் பல்
வேறு திருத்தங்களை இந்த மசோதாவிலே நான் கொண்டு
வந்திருக்கிறேன். அவைகளையும் நான் கோடிட்டுக் குறிப்பிட்
டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி உறுப்
பினர் பதவிகளுக்கு தற்போதுள்ள நியமன முறைக்குப்
பதிலாக, பெண்களுக்குத் தனி உறுப்பினர் பதவி ஒதுக்கீடு செய்யச்
சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அதே
போல் தற்சமயம் மக்கட் தொகை பற்றி சட்டத்தில் சரியான
விளக்கம் இல்லை. எனவே, இறுதியாக எடுக்கப்பட்டு வெளியீடு
செய்யப்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில்
நிர்ணயம் செய்யலாம் என்ற திருத்தத்தையும் இங்கே கொண்டு
வந்திருக்கிறோம். மக்கட் தொகையைப் பொறுத்த வரையில்
1981-லே எடுக்கப்பட்ட மக்கட் தொகைக் கணக்கெடுப்புப்
புள்ளி விவரங்கள் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை.

ஆகவேதான் அதற்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றால், வருகிற மார்ச் மாதம் அல்லது ஏப்ரல் மாதத்தில் அந்த புள்ளிவிவரங்கள் கிடைக்கும். ஆகவே, அந்த அடிப்படையில் இடம் ஒதுக்கீடுகளை செய்ய வேண்டுமென்று சொன்னால் இன்னும் ஆறு, ஏழு மாதங்கள் கழித்துந்தான் நாம் தேர்தலைப் பற்றியே சிந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும்.





அதன் காரணமாகத்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே எடுத்துச் சொன்னார்கள். 1971—லே ஜனத்தொகை கணக்கின்படி இந்த இட ஒதுக்கீடுகளைச் செய்யலாம் என்று அவர்கள் சொன்னதன் காரணமாக அந்த 1971-ன் ஜனத்தொகை அடிப்படையில், இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இங்கே திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக இட ஒதுக்கீடு செய்கிற நேரத்திலே ஒரே மாவட்டத்தில் பல உறுப்பினர்களுக்கு இட ஒதுக்கீடுகள் செய்கிற முறை இல்லாமல், இது பரவலாக்கப்பட வேண்டும்; எல்லா மாவட்டங்களுக்கும் சரியான முறையிலே இருக்க வேண்டும்; சரியான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பதனை எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் நாம் செய்ய இருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ஊராட்சி ஒன்றிய குழுவில் மூன்று பெண் உறுப்பினர்களும், 3 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களும் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற வகையில் நாம் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

தற்சமயம் ஊராட்சி தேர்தல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்திலே விசாரிக்கிறார்கள். அதன் மேல்முறையீடுகள் பற்றி, சட்டத்தில் வழியில்லாததால் உயர் நீதிமன்றத்திற்கு போகும் முறையைத் தடுக்க, மாவட்ட நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யும் திருத்தத்தை இதிலே கொண்டு வந்திருக்கிறோம்.

வாக்காளர் பட்டியல்களில் பெயர் சேர்ப்பதில் கடைசி நாள் குறித்து விளக்கம் பற்றிய திருத்தமும் இதிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதேபோல தேர்தல் சம்பந்தமான குற்றங்கள், அதற்கான தண்டனைகளும் மற்ற உள்ளாட்சி சட்டங்களிலே உள்ளதைப் போல ஊராட்சி சட்டத்திலேயும் வழிவகை செய்யும் திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

ஊராட்சி, மற்றும் ஊராட்சி ஒன்றிய தேர்தல்கள் சம்பந்தப்பட்ட அறிவிக்கைகள் அந்தந்த மாவட்ட அரசிதழ்களில் மட்டும் பிரசுரிக்க திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதைப்போல திருத்தங்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். இவைகளிலே பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் கூட, அவைகளை எல்லாம் திருத்திக் கொள்கிற வகையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை பணிவோடு தெரிவித்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய இந்த

மாமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். அவசரம், அவசரமாக ஏன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்? கொண்டு வந்து எல்லோருக்கும் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுக்காமல், ஒருசில நிமிடங்களிலேயே முடிவெடுக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கிக் கொண்டீர்களே என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். நான் அவர்களிடத்திலே தெரிவிப்பதெல்லாம், ஏற்கனவே அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் நடைபெற்றது. ஒவ்வொரு கட்சித் தலைவருக்கும் தாக்கீதுகள் அனுப்பி, கடிதப் போக்குவரத்து நடத்தி, 5–8–1981 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் தலைமைச் செயலகத்திலே நடைபெற இருக்கிறது. அதிலே இட ஒதுக்கீடுகள் பற்றி ஆய்வு செய்ய இருக்கிறோம். தயவுசெய்து உங்களது மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டோம். அப்படி கேட்டுக்கொண்ட நேரத்தில், எல்லா கட்சித் தலைவர்களும் வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர. திராவிட முன்னேற்றக் கழகம் அதிலே பங்கேற்கவில்லை. (குறுக்கீடு) அது உண்மை. உண்மையை மறுக்க வேண்டியதில்லை. நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே கலந்து கொண்டிருக்கலாம். இங்கே சில கருத்துக்களை நீங்கள் சொன்னீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பெண்களுக்கெல்லாம் இட ஒதுக்கீடு செய்வதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லையென்று சொன்னீர்கள். இந்தக் கருத்தை அங்கே வந்தும் கூட சொல்லியிருக்கலாம். ஆனால் சொல்லவில்லை. சொல்லாததற்கு என்ன காரணம், என்ன விளக்கம் என்று இதுவரையில் தெரிவிக்கவில்லை. ஆகவேதான் நான், பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *

என்பதைத்தான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் இந்த நேரத்தில் விவாதத்தில் சூடு ஏற்படுத்த வேண்டாம். நீங்கள் சொன்ன கருத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். ஆகவே அவர்களிடம் சண்டைக்குப் போகவேண்டாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(கூச்சல்-குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அவற்றை சபை குறிப்பிலே இருந்து நீக்குங்கள் அல்லது எங்களைப் பேச அனுமதியுங்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் சொன்ன கருத்துக்களை அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஆகவே இதில் சூடு வளர்த்த வேண்டாம்.

** **

** **

என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

(பிற்பகல் 1-30)

அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். கட்சி சார்பற்ற முறையிலே இந்தத் தேர்தல்களை நாம் நடத்த இருக்கிறோம். அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒப்புதலை அளித்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இந்த சட்ட மசோதாவை கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை கட்சி சார்புள்ள முறையில் நடத்த வேண்டுமென கேட்டார்கள். இருந்தாலும், பெரும்பான்மையான கட்சிகள் கட்சி சார்பற்ற முறையிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் காரணமாக, கட்சி சார்பற்ற முறையிலேதான் இந்த தேர்தல்களை நடத்த இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கோடிட்டுச் சொன்னார்கள். தேர்தல் நடந்து ஆளும்கட்சிக்காரர்கள், டெபாசிட் இழக்கிற தொகுதியாக பார்த்து அவைகளை எல்லாம் இட ஒதுக்கீடு செய்கிற நேரத்தில், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்து விடலாமென்ற எண்ணத்தோடுதான் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், தேர்தல் கட்சி சார்பற்ற முறையிலே நடக்கிறது என்று தெரிவித்த பின்னால் ஆளும் கட்சிக்காரர்கள், அல்லது

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எதிர் கட்சிக்காரர்கள் என்றும், இது சம்பந்தமாக எந்த குறிப்புகளும் தேவையில்லை. அவர்கள் இதை சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் அவர்களுக்கு புரிந்திருக்கும். எனவே அவர்கள் கலக்காததன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டு, குறிப்பிட்டு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த சட்ட மசோதாவை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சிகரமான முறையிலே கொண்டு வரப்பட்ட இந்த சட்ட மசோதா புதிதாக 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்காளர் பட்டியலிலே இடமளிக்கப்பட்டிருக்கிறது. 1—1—1981-ல் யார், யார் 18 வயதை முடித்திருக்கிறார்களோ, 18 வயதிற்கு மேற்பட்டு, 21 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக சுமார் 40 இலட்சம் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் முதல் முறையாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சி பொறுப்பிற்கு வந்ததற்கு பின்னாலே, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆட்சி செய்கிற நேரத்திலேதான் 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் பல்வேறு மாநிலங்களில்கூட இதுபோன்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நமக்கு தெரிந்ததெல்லாம் பக்கத்திலே இருக்கிற ஆந்திரா மாநிலத்திலேதான் இதுபோன்ற ஒதுக்கீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொண்டு வந்ததாக செய்திகள் படித்தோம். அதுவும் கூட உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று நிலுவையில் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் நம்மை பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் முதன் முதலாகக் கொண்டு வந்த மாநிலம் தமிழக மாநிலம் தான் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த மசோதாவை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்து உங்கள் ஆதரவோடு இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் மிக மகிழ்ச்சிகரமாக தாழ்த்தப்பட்ட சமுதாயமும், பெண்கள் சமுதாயமும் வரவேற்கிற நல்லதொரு. . ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் வரவேற்றதெல்லாம் முடிந்துவிட்டது. நீங்கள் கேட்க வேண்டுமென்று சொன்னீர்களே, அதை மட்டும் கேளுங்கள்.



**திரு. எல். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே 35-AA. Reservation of seats for Scheduled Castes and Scheduled Tribes in the office of chairman என்று போட்டிருப்பதிலே The Government may, from time to time, by notification Reserve for the members of the Scheduled Castes and scheduled Tribes-May....

என்று இருப்பது சந்தேகத்திற்கு 'Shall' இடமில்லாமல் என்று இருக்குமானால் நிரந்தரமாக பாதுகாப்பு அளித்து நல்ல பெயரைக் கொடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 'Shall' என்று போடவேண்டுமென அமைச்சர் அவர்களைகேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 77/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 77/1981) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(உ) திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள், பேத்துவாரம் தாரர்கள் சட்ட முன் வடிவு 1981

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

" 1981-ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் பேத்துவாரம்தாரர்கள் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981) ஆய்வு செய்வதற்காக 24

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 செப்டம்பர் 1

உறுப்பினர்கள் (16 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில், கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்".

1. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
2. திரு. ப. குருசாமி.
3. திரு. பெ. கலியமூர்த்தி.
4. திரு. வி. கருப்பசாமி பாண்டியன்.
5. திரு. மு. ஜான் வின்சென்ட்.
6. திரு. சீ, சிவப்பிரகாசம்.
7. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்.
8. திரு. என். இராமசுப்பிரமணியன்,
9. திரு. ரா. கு. பெருமாள்.
10. திரு. சி. த. சிதம்பரம்.
11. திரு. எஸ். ரெத்தினராஜ்.
12. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்.
13. திரு. ஏ. சந்திரசேகரன்.
14. திரு. மு. அப்பாதுரை.
15. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
16. திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(அ) அலுவல் வரிசையில் மாற்றம் (தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"அடுத்து வரும் அரசினர் சட்ட முன்வடிவுகளை நிகழ்ச்சி நிரலில் கடைசி இனமாக எடுத்துக் கொள்ளவேண்டும்".



1981 செப்டம்பர் 1]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள்.

ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை 970 ஆம் எண் அரசாணை, திருத்தங்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'தமிழ்நாடு நகராட்சி ஊழியர்கள் நடத்தை விதிகள் செய்வது குறித்து 10—12—1980 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 20—6—1980-ஆம் தேதியிடப் பெற்ற ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையில் 1970 ஆம் எண். அரசாணையில் வெளியாகி, 30—4—1981 ஆம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப் பெறவேண்டும்'.

*Rule*-5

Delete Rule 5 (1) (a) and (b)

*Rule*-8

Delete Rule 8 (4) and (5)

*Rule*-9

Delete Rule 9

*Rule*-11

Delete Rule 11

*Rule*-12

Delete Rule 12

*Rule*-14

Delete Rele 14

*Rule*-16

Delete Rele 16

*Rule*-21

Delete Rule 21 (1) and (2)

*Rule*-23.24 *and* 25

Delete Rule 23,24 and 25

*Supplementary Rule*-5

Delete Supplementary Rule 5

[திரு. ரா. உமாநாத்] [1981 செப்டம்பர் 1

இதிலே முக்கியமான அம்சத்தை மட்டும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை அக்சப்ட் பண்ணவில்லை என்றாலும், இதை சீரியஸாகப் பரிசீலனை செய்வதற்கு ஒத்துக் கொள்ள வேண்டும்.

நகராட்சி ஊழியர்களின் கண்டக்ட் ரூல்ஸை எடுத்துப் பார்த்தல் அவர்கள் எல்லா பிரஜா உரிமைகளையும் இழந்து ஒரு இயந்திரமாக ஆக்கப்பட்டிருக்கின்ற நிலைமை கண்டிஷன்கள் இருக்கின்றன. கசாப்புக் கடையிலே தோலுரித்து தொங்க விடப்பட்ட ஆடுகள் மாதிரி ஊழியர்களை ஆக்கக்கூடிய முறையில் அந்த கண்டிஷன்ஸ் இருக்கின்றன. ஒவ்வொரு அமென்மென்டாக நான் சொல்லவில்லை.

இலக்கிய வேலைகளில் நகராட்சி ஊழியர்கள் ஈடுபடுவதற்கு தடை அந்த விதியிலே உண்டு. அதுவும் டைரக்டாக இல்லை. கண்டிஷன்ஸ் போடப்பட்டிருக்கின்றது. அந்த நிபந்தனைகளை எல்லாம் அமல் நடத்தினால் இலக்கிய வேலைகளில் முனிசிபல் ஊழியர்கள் ஈடுபட முடியாது.

(பிற்பகல் 1-40)

ரேடியோ, பிரஸ், டெலிவிஷன் ஆகியவைகளுடைய நிகழ்ச்சிகளிலே அவர்கள் பங்கேற்கக் கூடாது. மாநில அரசினுடைய கொள்கைக்கோ அல்லது மத்திய அரசினுடைய கொள்கைக்கோ எதிராக விமரிசனம் செய்யக் கூடாது என்று இதிலே குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. நான் கேட்க விரும்புகிறேன். முனிசிபல் ஊழியர்கள் தங்களுடைய வேலைகளை பொருத்த வரைக்கும் கரெக்டாக செய்தால் போதாதா? அதைத்தானே பார்க்க வேண்டும். வேலையை சரியாகச் செய்யவில்லை என்றால் அவர் மீது டிசிப்ளனரி ஆக்ஷன் எடுங்கள். ஆட்சேபணை இல்லை. ஆனால் அவரை விமர்சனம் செய்யக் கூடாது என்று ஏன் சொல்லவேண்டும்? அவர் பிரஜை என்ற முறையில் அவருக்கு அதற்கு முழு உரிமையும் உண்டு. ஆகவே, அந்த உரிமைகளை அனுபவிப்பதை தடை செய்வது சரியாக ஆகாது என்பது ஒன்று மிக முக்கியமானது.



1981 செப்டம்பர் 1] [திரு. ரா. உமாநாத்]

இன்னொன்று, இந்த ரூல்ஸ் எந்த அளவில் போகிறது என்று சொன்னால். அப்படி மத்திய மாநில அரசுகளை விமரிசனம் செய்கின்ற கூட்டங்களிலேயும் அவர் கலந்து கொள்ளக் கூடாது என்பது, “அதுமட்டு அல்ல Even meeting which request the Government for something என்று அரசாங்கத்தை ஏதாவது கோரிக்கை வைத்து கேட்டுக்கொள்ளக் கூடிய கூட்டங்களிலே கூட நகராட்சி ஊழியர்கள் பங்கு பெற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னால் ரோட்டிலே ஏதாவது பொதுக்கூட்டம் அது மாதிரி நடந்துக் கொண்டிருந்தால், இவர் அங்கே நின்றுக் கொண்டிருந்தாலே, மறுநாள் கமிஷனர் அவரைக் கூப்பிட்டு, நேற்று நடைபெற்ற அந்தக் கூட்டத்திலே உன்னைப் பார்த்தேன் என்று சொல்லி சாட்சியத்தோடு, சார்ஜ் ஷீட் கொடுக்கலாமே. இது மாதிரியான ரூல்கள் இருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அனைவருக்கும் பண்டமென்டல் ரைட்ஸ் இருக்க வேண்டும். அதை தடை செய்யக் கூடாது.

இதிலே இன்னொரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால், அவர்களுடைய குடும்பங்களில் உள்ளவர்களையும் அரசியலில் கலந்துக் கொள்ளாமல் அவர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. குடும்பங்களில் இருப்பவர்கள் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாது என்று சொன்னல், மனைவி கலந்து கொள்ளக் கூடாது. மகன் அல்லது மகள் இருந்தால் கலந்துக் கொள்ளக் கூடாது. அப்படி அவர்கள் கலந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மீறி கலந்துக் கொண்டால், உடனே அவர் ரிப்போர்ட் பண்ண வேண்டும். என்னுடைய மனைவி என்னுடைய பேச்சைக் கேளாமல், அரசியலில் ஈடுபட்டிருக்கிறாள் என்று ரிப்போர்ட் பண்ண வேண்டும். இல்லையென்றால் அவருக்கு தண்டனை. அதற்காக அவர் தன்னுடைய சொந்த மனைவி மக்கள் மீது சி. ஐ. டி. வேலை பார்க்க வேண்டும். That means we are making employees to be C.I.D. against their own wife and Children. அப்படி இரகசிய போலீஸ் விசாரணை செய்ய வேறு டிப்பார்ட்மெண்ட் தனியாகத்தான் இருக்கிறதே, இவர்களை ஏன் அந்த வேலைக்கு ஏவ வேண்டும். அவருடைய தன்னுடைய மனைவிக்கு எதிராக, மகனுக்கு எதிராக சி.ஐ.டி. போலீஸ் வேலையை ஏன் செய்யச் சொல்ல வேண்டும். ஆகவே, அதை மறு பரிசீலனை பண்ணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு ரா. உமாநாத்] 1981 செப்டம்பர் 1

அடுத்து தொழிற் சங்கங்கள் ஒரே அமைப்பாகத்தான் இருக்க வேண்டும் என்பதை எல்லோரும் வரவேற்பார்கள். ஆனால் இதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், ஒவ்வொன்றிற்கும் தனித் தனித் பிரிவு பிரிவாகத் தான் சங்கங்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களை ஒன்று படுத்த வேண்டும் என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற சர்க்கார், பிரிவு பிரிவாக ஏன் சங்க அமைப்புகளை உண்டாக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அத்தோடு கூட மற்ற தொழிற் சங்கங்களோடு கூட தொடர்பு கொள்ளக் கூடாது என்றும் இதில் சொல்லியிருக்கிறது.

சமீபத்தில் பம்பாயிலே பெடரேஷன் ஆப் டிரேட் யூனியன்ஸ் என்று நடைபெற்றபோது, சென்டிரல் கவர்ன்மெண்ட்டில் இருக்கிற டிரேட் யூனியன் லேபர்களும், ஸ்டேட் கவர்ன்மெண்ட்டினுடைய டிரேட் யூனியன் லேபர்களும் கூட கலந்து கொண்டார்கள். ஆனால் இந்த ரூல்படி அது முனிசிபல் ஊழியர்களுக்கு இல்லாமல் போகிறதே, இது நியாயமா என்பதை அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஸ்டிரைக்கை தடை செய்யும் மசோதா, ஒன்று இங்கே கொண்டு வரப்பட்டு, இப்போது செலக்ட் கமிட்டியிலே இருக்கிறது. இன்னும் பெண்டிங்காகவே இருக்கிறது. அப்படி இருக்கிற போது, சட்டம் வருவதற்கு முன்னாலே, முனிசிபல் ஊழியர்கள் யாரும் ஸ்டிரைக்கில் கலந்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு ரூலை போட்டு அதை ஜி. ஓ-வாக பிறப்பித்து தடை செய்திருக்கிறீர்களே இது ஏன்? முனிசிபல் ஊழியர்கள் ஸ்டிரைக் பண்ணினால் பொது ஜனங்கள் பாதிக்கப் படமாட்டார்களா என்று கேட்கலாம்? பாதிக்கப்படுவார்கள். அதற்கு என்ன பண்ணவேண்டும். அவர்களிடம் இருந்து ஏதாவது கோரிக்கைகள் பிரச்சினைகள் எழும்பினால், உடனடியாக அவசர அவசரமாக அதை தீர்க்க அரசு முயற்சியில் ஈடுபட வேண்டுமே தவிர, ஸ்டிரைக் செய்யும் உரிமையை தடை செய்யக் கூடாது.

அதுமட்டும் அல்லாமல், இந்த ஊழியர்களுக்கு ஆதரவாக இதுவரையில் அரசாங்கம் கிட்டத்தட்ட 1 டசன் ஜி. ஓ.-க்கள் பிறப்பித்திருக்கின்றன. ஆனால் இன்னும் அவைகள் எல்லாம் அவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை. ரிபீட்டட் ஆக தொடர்ந்து ரெப்பரசன்டேஷன் கொடுத்தும் கமிஷனர் அவைகளை நடைமுறைப்படுத்தபபடவில்லை என்கிறபோது, ஏன் அந்த அரசு ஆணைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்று ஸ்டிரைக் செய்யும் உரிமையை மட்டும் தடை செய்வதற்கு, ஏன் ஆணை பிறப்பிக்க வேண்டும். அது மட்டும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமா ? அப்படி அவர்களை ஸ்டிரைக் செய்யக் கூடாது என்று சொல்வதற்கு அரசுக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று கேட்க விரும்பிகிறேன்.



1981 செப்டம்பர் 1] [திரு ரா. உமாநாத்]

அதுமட்டுமல்ல எல்லாவற்றிற்கும் மேலாக ரொம்பவும் அப்ரஸீவாக இருக்கக்கூடிய செக்ஷன் நீ சாப்பிடாமல் இருக்கக்கூடாது என்பதாகும். சாப்பிடாமல இருந்தால் தண்டனை. ஹங்கர் ஸ்ட்ரைக் தடைசெய்யப்பட்டிருககிறது. சம்பளம் வாங்காமல் இருந்தால் — நான் சம்பளம் வாங்கவில்லை என்றால் உங்களுக்கென்ன ? நான் சாப்பிடவில்லை என்றால் உங்களுக்கென்ன? நான் வேலை செய்கின்றேனா இல்லையா என்று பாருங்கள். என் குடும்பத்தைப் பற்றி என்னைவிட உங்களுக்கு என்ன கவலை? அதேமாதிரி ஊர்வலங்கள் கூடாது என்று தடை. அதில் மிக முக்கியமாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது என்னவென்றால் நட்பு நாடுகளிடையே உறவு பாதிக்கும் ஊர்வலங்கள் கூடாது. பாகிஸ்தான் நம் நட்பு நாடுதான். அண்டை நாடுதான். அதற்கு ஆயுதங்கள் கொடுப்பதை அமெரிக்கா கொடுப்பது நமது நாட்டின் நம் சுதந்திரத்திற்கு ஆபத்து வரும் என்பது ஏகமனதான நிலை நம் நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து விளையும் அந்த ஆயுதங்கள் சப்ளையால் என்று முனிசிபல் ஊழியர்கள் ஊர்வலம் போனால் அவர்களை டிஸ்மிஸ் செய்யவேண்டியிருக்கும்.

Ev n fo p tr otic duties you have to dismiss your own employees.

அதேமாதிரி டைகோகார்ஷியா தீவில் அணுகுண்டுகளை அமெரிக்கா வைத்திருக்கிறது. அமெரிக்கா நட்பு நாடு என்று அதிகாரபூர்வமாக அரசாங்கம் சொல்கிறபோது, அது நம் சுதந்திரத்தைப் பாதிக்கிறது என்றால் டைகோகார்ஷியா தீவில் அமெரிக்காவிற்கு இருக்கக்கூடிய இராணுவ தளத்தை எதிர்த்து முனிசிபல் ஊழியர்கள் ஊர்வலம் விட்டால் அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்படுவார்கள். அவர்கள் பெர்ஸனல் வாழ்க்கையில் கூட தலையிடுகிறோம். அவர்கள் கடன் வாங்கக் கூடாதாம். இரண்டு ஆண்டுகள் திருப்பிக்கொடுக்கக் கூடிய கடன் வாங்கினால் டிஸ்மிஸ் ஆகவே ஒட்டுமொத்தமாக இந்த அம்சங்களை மறுபரிசிலனை செய்யவில்லை என்றால் அரசாங்கத்தின் அடிமைகளாகவும் இலாகாவின் அடிமைகளாகவும் கமிஷனர்களின் அடிமைகளாகவும் அவர்கள் மாற்றப்படுவார்கள். இந்த அம்சங்களை எல்லாம மறுபரிசிலனை செய்யவேண்டும், டிலீட் செய்தால் நல்லது, இல்லை என்றால் மறுபரிசிலனை செய்த பிறகு மாற்றுவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நகராட்சி ஊழியர்கள் நடத்தை விதிகள் சம்பந்தமாக ஒரு சில திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமே அரசாங்கத்தின் ஊழியர்கள் நடத்தை விதிகளை அடிப்படையாக வைத்து செய்யப்பட்டதே தவிர ஒரு புதுச் சட்டம் அலல என்பதை

நான் அவர்களுக்கு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அரசாங்க ஊழியர்கள் நடத்தை விதிகளில் என்னென்ன விதிகள் இருக்கின்றனவோ அவைதான் இங்கே பின்பற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே இதற்கு திருத்தங்கள் எதுவும் தேவையில்லை. நீங்கள் என்ன திருத்தங்கள் வேண்டும் என்று கூறியிருக்கிறீர்களோ அவற்றையெல்லாம் பரிசீலனைக்கு கண்டிப்பாக எடுத்துக்கொள்வோம். ஆகவே யாருக்கும் அடிமைகளாக இருக்க வேண்டியதில்லை. அரசுக்கோ, கமிஷனர்களுக்கோ யாருக்கும் அடிமைகளாக இருக்கவேண்டிய அவசியம் கிடையாது. எங்களைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் சுதந்திரம் இருக்கிறது என்ற அடிப்படையில்தான் இந்த விதிகளைக் கூட நாம் அவர்கள் எதிர்பார்க்கிற முறையில், நீதிக்கு ஏற்ற முறையில் செயல்படுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தங்கள் தேவை இல்லை. அவற்றை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசாமி அவர்கள் நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகியகால விவாதம் சேதுசமுத்திரத் திட்டம் பற்றி நல்லதொரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். நேரமில்லாத காரணத்தால் பேரவையின் அனுமதியோடு அது ஒத்தி வைக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-50)

## 11. தனியார் அலுவல்கள்.

### தனித் தீர்மானம்.

#### மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்—(தொடர்ச்சி.)

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தின் மீது ஏற்கனவே நாம் விவரமாக இந்த அவையிலே விவாதித்து வருகிறோம். அந்த அடிப்படையில் இன்று நம்முடைய முன்னால் இருக்கக்கூடிய அனுபவங்கள் இந்த அதிகாரங்கள் அதிகமாக வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றன. நான் 1981 ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் இந்த சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தேன். என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்கள், ஐந்தாண்டுகளுக்கு இந்த சட்டமன்றத்திலே பணியாற்ற வேண்டுமென்று ஓட்டளித்தார்கள். அப்படி ஓட்டளித்ததன் அடிப்படையில், நாம் உருவாக்கக்கூடிய அரசு 1985 மே வரையிலும



இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று தமிழக மக்கள், தங்களுடைய ஆதிபத்திய உரிமையை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆனால், கடந்த சட்டமன்றம் முடிந்து, நான் என்னுடைய தொகுதிக்குச் செல்லுகின்ற காலத்தில், தெருவிலே எல்லாம் பேசுகிறார்கள். ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி, செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி இன்னென்ன தேதிகளில், இந்த அரசாட்சி கவிக்கப்படும், கவிழ்ந்துவிடும் என்ற பேச்சு இந்த நாட்டிலே அடிபடுவதைப் பார்த்தால், இன்று நம்முடைய மக்கள் தேர்தலில் ஓட்டளித்து, ஒரு மாநிலத்தின் அரசாட்சியை உருவாக்கக்கூடிய சக்திபடைத்த அம்மக்களின் ஓட்டுரிமை கேலி செய்யப்படுகிறது. ஏலம் போடப்படுகிறது. சில ஜோசியர்கள் இருக்கிறார்கள், அரசியல் ஜோசியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு மாநிலத்திலே 5 கோடி மக்களால் ஓட்டளிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாட்சியை கவிழ்ப்பதற்கு ஜோசியம் சொல்லக்கூடிய மகத்தான அரசியல் ஜோசியர்கள் இங்கே ஏற்பட்டிருக்கிறார்கள். மக்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய அரசியல் ஜோசியர்களை இந்த நாட்டிலே வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது நம்முடைய மக்களுக்கு ஏமாற்றமில்லை; அரசாட்சிக்கு ஏமாற்றமில்லை. நம்முடைய மக்கள் அதிகாரத்திற்கு ஏமாற்றம் ஏற்படுகின்ற அவலநிலை இருக்கிறது; அதை இந்த நாடு கண்டு கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவேதான், இந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற இந்த அடிப்படை உரிமையின்மீது ஏராளமான கருத்துக்களை நான் இணைத்து வைத்திருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். சில விவரங்களை இன்றைக்கு சொல்ல இருக்கிறேன். அடுத்த கூட்டத்தில் தொடர்ச்சியாக பேச வேண்டியவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கூட்டத்திலே நீங்கள் இதுகுறித்து தொடர்ந்து பேசுங்கள்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) கைதான உறுப்பினர்களை விடுதலை செய்வது குறித்து—தொடர்ச்சி.

திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்களே, காலையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் நாம் எல்லோரும் இலங்கைத் தமிழர் நிலை குறித்து ஒன்றுபட்ட கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் கொண்டுள்ள நல்லெண்ணத்தின் காரணமாக, இந்தஅவையினுடைய உறுப்பினர்கள் புருஷோத்தமன் அவர்களும், சோமு அவர்களும் கைதானது பற்றிச் சொன்னபோது, முன்னவர் அவர்கள் அந்தச் சமயத்தில் இங்கில்லை. அது சம்பந்தமான அறிவிப்பு ஏதாவது சொல்ல தாங்கள் அனுமதி தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்த நல்லெண்ணத்தோடு இந்த அவையிலே அதுகுறித்து அறிவிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

9. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25(1)ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ.) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

107. சென்னையிலுள்ள சென்னை பெட்ரோலியம் நிறுவனத்திற்கு மின்மாற்றி எண்ணெய் வழங்கல் இருப்பு விற்பனையின் மீது சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 400 கிலோ லிட்டர் மின் மாற்றி எண்ணெய் விற்பனை செய்வதன் மீது சென்னை பெட்ரோலியம் நிறுவனமும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 19–5–1981ஆம் தேதியிடப்பெற்ற 536ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

108. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உணவு—பான வகைகள் நீங்கலான வற்றின் விற்பனையின் மீது யாதொரு ஓட்டல் அல்லது உணவகம் செலுத்தத்தக்க வரியி-





லிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12–6–1981ஆம் தேதியிடப்பெற்ற 660ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

109. 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் அட்டவணையில் "மூக்கைச் பொடி தொழிற்சாலை"யை சேர்ப்பது குறித்து தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 16–7–1981ஆம் தேதியிடப்பெற்ற 1533ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 38 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது ]

110. சென்னையிலுள்ள தமிழ்நாடு கெமிக்கல் உற்பத்தி நிறுவனம் தயாரிக்கும் சோடியம் ஹைட்ரோ சல்பைட் விற்பனையின்மீது யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியை ஓரளவு குறைப்பது பற்றி, வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 27–7–1981ஆம் தேதியிடப்பெற்ற 843ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

111. இராமநாதபுரம் மாவட்டம், பள்ளத்தூரில் உள்ள ஸ்ரீ சாரதா சேவா ஆசிரமம் நடத்தி வருகிற பயிற்சி உற்பத்தி நிலையம், அந்த ஆசிரமத்தில் தங்கியுள்ளவர்களால் தயாரிக்கப் படுகின்ற பொருள்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் சிலவிலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 19–6–1981ஆம் தேதியிடப்பெற்ற 686ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

112. மதுரை நகரில் 1980 சனவரி 4ஆம் நாளன்று நடந்த காவலர் துப்பாக்கிச் சூடு பற்றிய திரு. டி. எஸ். சங்கரன் ஐ.ஏ.எஸ். அவர்களின் தனிநபர் விசாரணைக் கமிஷன் அறிக்கை (தமிழ்) [1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், மற்றும் ஏனைய தாள்கள்.

32. கல்வி (ஆரம்ப, உயர்தரக் கல்வி) துறை பற்றி மதிப்பீட்டுக்குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை (தமிழ்) (ஏழாவது சட்டமன்றப் பேரவை).

33. இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை (தமிழ்) (ஏழாவது சட்டமன்றப் பேரவை).

34. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி குழு அளித்த பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை (தமிழ்) (ஏழாவது சட்டமன்றப் பேரவை).

35. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970—71ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்களுடன் தொடர்பான பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1973—74) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை (தமிழ்) (ஏழாவது பேரவை).

36. 1972—73ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் வணிகத்துறைகள் மீதான அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977—78) அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை (தமிழ்) (ஏழாவது பேரவை).

37. 1981—82ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

38. 1981—82ஆம் ஆண்டில் துணை மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

39. 1981—82ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள பற்றிய நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

40. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மதுவிலக்கு இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1981).



41. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1981).

42. 1981ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சு தாரர்கள பேத்துவாரம் தாரர்கள் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1981).

43. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை முன்வடிவு எண் 74/1981).

44. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1981).

45. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1981).

46. கீழ்க்காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்துமூலமான சொத்துவிவரங்கள் (தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை 27-8-1969ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெறுகிறது).

31-3-1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு கே. ஆர். சுந்தரம்.
2. திரு. பி. எம். வெங்கடேசன்.
3. திரு. என். விஜயபாலன்.
4. திரு. என். சங்கரய்யா.
5. திரு. எம். செல்லமுத்து.
6. திரு எஸ். ரெத்தினராஜ்.
7. திரு. க. பாலசுப்பிரமணியன்.
8. திரு. இ. இராமசுப்பிரமணியன்.
9. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்).
10. திரு. இரெ. இராசமாணிக்கம்.

31-3-1981 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. என். சங்கரையா.

2. திரு. இரெ. இராசமாணிக்கம்.

47. கீழ்க்காணப்பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்துமூலமான சொத்துவிவரங்கள் (தமிழ் நாடு சட்டமன்ற மேலவை 28—8—1978ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது).

31-3-1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. ஜே. எம். மியாகான்.

31-3-1981 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. ஜே. எம். மியாகான்.

2. திரு. பி. மாணிக்கம்.

3. திரு. கே. அருணாசலம்.

4. திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து.

5. திரு. காடுவெட்டி கண்ணப்பன்.

6. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

7. திரு. எம். சங்கரலிங்கம்.

8. திரு. இ. எஸ். வெங்கடேசன்.

48. உடுக்குறியிடாத வினா—விடைப்பட்டியல் (61 முதல் 310 வரை).

49. உடுக்குறியிடாத துணை வினா—விடைப்பட்டியல் (311 முதல் 440 வரை).

50. உறுப்பினர் திரு. அ. இரகுமான்கான் அவர்கள் மீதுள்ள உரிமை மீறல் பிரச்னை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை (தமிழ்).



இணைப்பு I

உடுக்குறியிடாத வினாக்கள்.

அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியாக தொழில் நடத்துவதை தடை செய்யும் திட்டம்

வினா எண் 311—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர்கள் தனியாக மருத்துவமனைகளில் (Prv.e Prec ice) தொழில் நடத்துவதை தடைசெய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆம்.

கோவை டாடாபாத்தில் அறிஞர் அண்ணா ஹட்கோ காலனியில் கட்டப்பட்ட வீடுகள்

வினா எண் 312—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரம் டாடாபாத்தில் உள்ள அறிஞர் அண்ணா ஹட்கோ காலனியில் வீடு வைத்திருப்போருக்கு வீடுகளின் இறுதி விலை மதிப்பு என்ன என்பதை நாளது வரை தெரிவிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம் ?

(இ) எப்போது தெரிவிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மனைகளின் சீரமைப்பு செலவுத்தொகை கணக்கீடு முடிவடையவில்லை என்பதுதான் இதற்கு காரணம்.

(இ) இது விரைவில் முடிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு வீட்டின் விலை மதிப்பும் முடிவு செய்யப்பட்ட உடன் உரிய ஒதுக்கீட்டுதாரர்களுக்கு தெரிவிக்கப்படும்.

வினா எண் 313—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரம் டாடாபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா ஹட்கோ காலனியில் ஒவ்வொரு வீட்டுக்கும் மின்சார லைன் பொருத்துவதற்காக ரூ. 1,700 வீதம் வசூலிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) மொத்த வீடுகளுக்குமாக வசூலிக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு ?

(இ) இவற்றில் செலவு போக மீதமுள்ள தொகை எவ்வளவு ? அது திருப்பிக் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 1,80,000.

(இ) செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1,08,000. இதில் மீதமுள்ள ரூ. 72,000 உரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு வீட்டின் இறுதி விலை முடிவு செய்யப்பட்ட பிறகு திருப்பித்தரப்படும்.

### சேலத்தில் எரிசாராயத் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 314—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலத்தில் எரி சாராய தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இல்லை.



### குமரி மாவட்டத்தில் யானைக்கால் வியாதியைத் தடுக்கும் திட்டம்.

வினா எண் 315—திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் குளச்சல் தொகுதியில் தலக்குளம், இரணியல், கட்டுமங்கலம் பிள்ளையார்கோவில் ஆகிய ஊர்களிலும் சுற்று வட்டாரங்களிலும் பரவிவரும் யானைக்கால் வியாதியை தடுக்க தனி நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

குளச்சல் தொகுதி தலக்குளம் பகுதியில் செயல்படுத்த யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் ஒன்று தீட்டப்பெற்று, அது குருத்தங்கோடு ஊராட்சி ஒன்றிய ஆணையரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1973ஆம் ஆண்டிலிருந்து இரணியல் பகுதியில் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் ரூபாய் 10,250 மதிப்பீட்டில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

கூட்டுமங்கலம், பிள்ளையார்கோவில் மற்றும் சுற்றுபுற பகுதியில் யானைக்கால் நோய் பரவவில்லையாதலால் அப்பகுதியில் செயல்படுத்த எந்தவிதமான திட்டமுமில்லை.

### நெல்லை மாவட்டத்தில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் காலனி வீடுகளில் ஆக்கிரமிப்பு

வினா எண் 316—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் தாட்கோ மூலம் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் காலனி வீடுகளில் சம்பந்தமில்லாதவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அவர்களை வெளியேற்றி உண்மையானவர்களை குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் காரகுறிச்சி ஆதிதிராவிடர் காலனியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் சம்பந்தமில்லாதவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது, அரசின் கவனத்திற்கு, மாவட்ட ஆட்சித் தலைவரால் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) அவர்களை வெளியேற்றி உண்மையானவர்களை குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## இலங்கை கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்ட விசைப்படகு

வினா எண்—317 திரு. டி. இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கை கடற்படையினரால் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ஒரு விசைப் படகு இழுத்துச் செல்லப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்ட விவரம் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விடை—

(அ) மற்றும் (ஆ) கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழகத்து டாப்கோ ஐ. பி. 232 என்ற விசைப் படகு 13–1–1981 அன்று மாலை 4 மணியளவில் இராமேஸ்வரம் கரையை நோக்கி வரும்போது இலங்கை கப்பற்படையை சேர்ந்த 110 எண் கொண்ட படகு வேகமாக வந்து தமிழ்நாட்டின் மீன் பிடிப் படகின் வலது முன் பக்கத்தில் மோதியதால் தமிழக மீன்பிடிப் படகு கடலில் மூழ்கியது. படகிலிருந்து மீனவர்கள் தூக்கியெறியப்பட்டதால் கடலில் நீந்திய மீனவர்கள் நால்வரை இலங்கை கப்பற்படையினர் அவர்களின் படகில் ஏற்றி தலைமன்னார் காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றார்கள். தகவல் கிடைத்ததும் இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் அலுவலகத்தின் தலையீட்டின் பேரில் அவர்கள் காப்பாற்றப்பட்டு இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டார்கள். மேற்கொண்டு விவர அறிக்கை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்டு அது பரிசீலனையில் உள்ளது.



## ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் பணிபுரியும் ஆரம்ப ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியராக மாற்றும் திட்டம்

வினா எண் 318—திரு. சி. கோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உள்ள ஆரம்ப ஆசியர்களை (Higher Grade Teachers) Secondary Grade ஆசிரியராக மாற்றும் திட்டத்தில் நிபந்தனை ஏதாவது உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): ''இளநிலை ஆசிரியப் பதவியில் பணி புரியும் இளநிலை ஆசிரியர் இடைநிலை ஆசிரியருக்கான தகுதி பெற்றால் அவருக்கு இடைநிலை ஆசிரியருக்கான ஊதியம் அளிப்பதுடன் அவருடைய இளநிலைப் பணியிடத்தை அடுத்து வரும் கல்வி ஆண்டின் செப்டம்பர் முதல் இடைநிலை ஆசிரியர் பணியிடமாக மாற்ற வேண்டும்.'' என அரசு 1979-ல் ஆணையிட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் இளநிலை (Higher Grade) ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் தகுதியும் சம்பளமும் பெற வாய்ப்பளிக்கும் வகையில் அஞ்சல் வழி மற்றும் நேர்முகப் பயிற்சி மூலம் கல்வி அளிக்க மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் ஒரு தனிப் பிரிவு தொடங்கி செயல்பட்டு வருகிறது. 1980 செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் படி அனைத்து நிர்வாகங்களின் கீழ் பணி புரியும் ஆசிரியர்களுக்கு நீண்ட பணிக்கால அடிப்படையில் முன்னுரிமை அளித்து சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு அதிகபட்ச வயது வரம்பு 56 ஆண்டுகள் ஆகும். ஓர் கல்வி ஆண்டுக்கு 5,000 இளநிலை ஆசிரியர்களுக்கு இந்த பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இளநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை விகிதத்திற்கேற்ப இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

### விளவங்கோடு தாலுக்காவிலுள்ள அரசு நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி

வினா எண் 319—திரு. டி. மணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவில், சந்தைவிளைக்கடை, வெள்ளாட்சிப்பாறை கடை, படந்தால்மூடு கடை, ஆகியவற்றில் அரசாங்க நியாயவிலையில் வழங்கப்படும் அரிசி மிகவும் மோசமானதாக உள்ளது குறித்து அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தரம் குறைவாக இருந்ததாக புகார் 1980 அக்டோபர் நவம்பர் மாதங்களில் வந்தது. நல்ல தரமுள்ள அரிசியை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

### பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோவிலில் காணிக்கையாக வரும் முடியை ஏலம் விடல்

வினா எண் 320—திரு. இரா. தாமரைக்கணி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோவிலில் காணிக்கையாக வரும் முடி எவ்வாறு ஏலம் விடப்படுகிறது.

(ஆ) 1975 முதல் 1979 முடிய மேற்படி ஏலத்தினால் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை † அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

† 739-740-ம் பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



### சென்னை நகரில் இரவுநேரப் பேருந்துகள் ஓடும் வழித்தடங்கள்

வினா எண் 321—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவு நேர பஸ் போக்குவரத்து சென்னை நகரில் எத்தனை ரூட்களில் இப்பொழுது நடைபெறுகிறது?

விடை—

21 தடங்களில்.

### கல்லூரணி வைப்பார் கிராமக் கடற்கரைப் பகுதியில் கிடைக்கும் கறுப்பு நிற மணல்

வினா எண் 322—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் விளாத்திகுளம் தாலுக்கா கல்லூரணி வைப்பார் கிராமத்தில் கடற்கரைப் பகுதியில் கிடைக்கும் கருப்பு நிற மணலை பொது ஏலத்தில் விடாததால் அரசுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள டிராக்டர்கள்

வினா எண் 323—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் வசம் உள்ள டிரக்டர்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் பழுதடைந்துள்ளவை எத்தனை?

(இ) அவைகள் ஒவ்வொன்றும் எவ்வளவு காலமாக பழுதடைந்துள்ளது?

விடை—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் வசம் உள்ள டிராக்டர்கள் 340.

(ஆ) பழுதடைந்தவைகள் 185.

(இ) ஒரு விவர அறிக்கை † அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### ஊர் நல அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி

வினா எண் 324—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊர் நல அலுவலர்களுக்கு பயணப்படி தற்போது என்ன கொடுக்கப்படுகிறது?

(ஆ) அவர்கள் பயணம் செய்ய வேண்டிய தூரம் நாட்கள் குறித்து வரையறை ஏதாவது உள்ளதா?

(இ) அவர்கள் இரவில் பணி செய்ய வேண்டியுள்ளதா? அதற்கு நேர அளவு உள்ளதா?

† 741-ம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





விடை—

(அ) முதல்நிலை ஊர்நல அலுவலர்களுக்கு ரூ 25-ம் இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்களுக்கு ரூ. 20-ம் நிலைப் பயணப்படியாக மாதம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது.

(ஆ) தூரம் பற்றிய வரையறை இல்லை. ஒரு மாதத்திற்கு 25 நாட்கள் பயணம் செய்ய வேண்டும்.

(இ) இல்லை.

### தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் ஏற்பட்ட நஷ்டம்

வினா எண் 325—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் 1978–79 ஆம் வருடத்தில் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்காலிகமாக முடிக்கப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் 1978–79 ஆம் ஆண்டிற்கு ரூ. 995.72 இலட்சங்கள் வர்த்தக நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிர்வாக இயக்குனர் நுகர் பொருள் வாணிபக் கழகம் தெரிவித்துள்ளார். அரிசியின் அடக்க விலைக்கும் பொது விற்பனை விலைக்கும் இடையே உள்ள வேறுபாடே கழகத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்கு முக்கிய காரணமாகும்.

### குன்னூர் அருள்மிகு விநாயகர் கோயில்

வினா எண் 326—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகர் விநாயகர் கோயில் கல்யாண மண்டபம் கட்டும் வேலை பல ஆண்டுகளாக பாதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதற்கு காரணம் என்ன?

(ஆ) அந்த வேலை எப்போது முடியும்?

விடை—

(அ) நிதி பற்றாக்குறையினாலும், ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்படி கட்டிடத்தை சரியான காலத்தில் கட்டி முடிப்பதில் ஒத்துழைப்பு தராததாலும், கல்யாண மண்டபம் கட்டும் வேலையில் தாமதம் ஏற்பட்டது. மற்றும் 1978-79ம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடு இழந்த குடிசைவாசிகளுக்கு புகலிடமாக கொடுக்கப்பட்டு பின்பு அவர்களை வெளியேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், தாமதம் ஏற்பட்டது.

(ஆ) மேற்படி கல்யாண மண்டபம் கட்டும் பணி இன்னும் நான்கு மாதங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வினா எண் 327—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடிந்து விழுந்த குன்னூர் நகரம் வினாயகர் கோவில் வேலை ஆரம்பிக்கப் பட்டுவிட்டதா?

(ஆ) அந்த வேலை எப்போது முடியும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) குன்னூர் அருள்மிகு வினாயகர் ஆலயத்தின் வெள்ளத்தடுப்பு சுவர்கட்டும் வேலை சிமெண்டு கிடைக்காத படியால் தடை பெற்றிருந்தது. இப்போது சிமெண்ட் பர்மிட் கிடைத்துள்ளது. சிமெண்ட் மூட்டைகள் பெற்றவுடன் வேலை துவங்கி ஒரு மாத காலத்திற்குள் சுவர் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.



*Pledged Ration Cards detected by Thiruchy District Police.*

*Q. No.*—328 : Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether a large number of Ration Cards pledged have been detected by the Thiruchy District Police during August–September, 1980; and

(*b*) if so, the details thereof?

விடை—

(அ) 1–9–1980 அன்று குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத்துறையினரால் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியுடன் திருச்சியில் பல இடங்களில் போலி குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்களை கண்டுபிடிக்க சோதனைகள் நடத்தப்பட்டன.

(ஆ) இந்த சோதனையில் மொத்தம் 18 நபர்கள் கைது செய்யப்பட்டு, 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 17 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஒரு வழக்கு மட்டும் நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

*Investigation undertaken on filaria.*

*Q. No.*—329 : Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether any investigation into the incidence of filaria has been undertaken in recent years in this State; and

(*b*) if so, the details thereof?

விடை—

(அ) தேசிய யானைக்கால் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள யானைக்கால் தடுப்புப் பிரிவுகளும் கண்காணிப்பு பிரிவும் அந்தந்தப் பகுதிகளில் யானைக்கால் நோய் எந்த அளவிற்குப் பரவியுள்ளது என்பது பற்றி ஆய்வு செய்து வருகின்றது.

(ஆ) இந்த ஆராய்ச்சியின் விளைவாகவும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகவும் யானைக்கால் நோய் கணிசமான அளவு குறைந்துள்ளது.

### பெரம்பலூரில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 330—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் தொடங்குவது பற்றிய செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) ஆம். அதற்கான ஆணை 4–2–1981 ஆம் நாளிட்ட 230 இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 28–3–1981 ஆம் நாளிலிருந்து செயல் பட்டுக் கொண்டிருக்கிறது.

### நன்னகரத்திலுள்ள பட்டுப்பூச்சி வளர்ப்புப் பண்ணை ஊழியர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலி.

வினா எண் 331—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் நன்னகரத்திலுள்ள பட்டுப்பூச்சி வளர்ப்புப்பண்ணையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தினச் சம்பளம் ரூ. 2·50, 3.00, 3.50 என்ற விகிதத்தில் மட்டுமே வழங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?



(ஆ) குறைந்த பட்ச கூலி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) பல ஆண்டுகள் பணியாற்றியும் நிரந்தரம் செய்யப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஈ) நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) குறைந்த பட்ச ஊதியத்திற்கும் குறைவாக எவ்விடங்களில் கூலி அளிக்கப்படுகின்றதோ அங்கு பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்த பட்டுப் புழு வளர்ப்பு இயக்குனர் தக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

(இ) மற்றும் (ஈ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணைப்படி ஐந்து வருடங்கள் பணிபுரிந்த ஊழியர்களை நிரந்தரமாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஈரோட்டுக்கருகே கொடுமணல் என்ற ஊரில் கண்டெடுக்கப்பட்ட புதை பொருள்கள்.

வினா எண் 332—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு அருகே கொடுமணல் என்னும் இடத்தில் ரோமர் மண்பாண்ட சிதைவுகளும், ஆபரண கற்களும், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம் ஈரோட்டுக் கருகில் உள்ள கொடுமணல் என்ற ஊரில், 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆய்வு செய்யப்பட்டது. இங்கு 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடுகளும் ரோமானிய பானை ஓடுகளும் பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் மணிகள் செய்யப் பயன்படுத்தப்பட்ட வண்ண கற்களும், பெருங் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஈமச் சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டன.

வினா எண் 333—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் புதை பொருள் ஆய்வு நடத்தப்பட்டதா?

(ஆ) அதில் கண்ட பொருள்கள் யாவை?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம் ஈரோட்டுக் கருகில் உள்ள கொடுமணல் என்ற ஊரில் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆய்வு செய்யப்பட்டது. இங்கு 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடுகளும், ரோமானிய பானை ஓடுகளும், பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், மணிகள் செய்ய பயன்படுத்தப்பட்ட வண்ண கற்களும், பெருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டன.

வர்த்தகத்தை மாநில நுகர் பொருள் வாணிபக்கழகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் திட்டம்.

வினா எண் 334—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்தியாவசியப் பண்டங்களின் மொத்த வர்த்தகமும் மாநில சிவில் சப்ளை கார்ப்பரேஷனின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்று தமிழக அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





குளங்களில் மீன் பிடிக்கும் உரிமை

வினா எண் 335—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும பொதுப்பணித் துறைகளின் பராமரிப்பில் இருக்கும் குளங்களில் மீன் பிடிக்கும் உரிமை அக் குளங்களில் ஆயக்கட்டுத்தாரர்களிடமிருக்கிறதென்பது உண்மையா?

(ஆ) மீன் பாசித் தொகை ஏக்கருக்கு எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

(இ) இதனை உயர்த்தும் உத்தேசம் உண்டா? அல்லது

(ஈ) இம் முறையை மாற்றி மீன் பிடிக்கும் உரிமையை பொது ஏலத்தில் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

(அ) தற்பொழுதுள்ள ஆணைகளின்படி பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள குளங்களிலும், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையிலுள்ள சிறு பாசன குளங்களிலும் மீன்பாசிக் குத்தகை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே அளிக்கப்பட வேண்டும். மேலும் அந்தக் குளங்களை குத்தகைக்கு எடுக்க மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஏலம் கேட்க முன்வராதபோது மட்டுமே மீன்பாசிக் குத்தகை பொது ஏலத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். 1912 ஆம் ஆண்டில் செட்டில்மெண்ட் செய்தவாறு, வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி மீன் பிடிக்கும் உரிமையை ஆயக்கட்டுதாரர்களே சில ஊர்களில் தங்கள் வசம் வைத்துக் கொண்டுள்ளனர் என்ற விவரம் அரசின் கவனத்திற்கு கொணரப்பட்டுள்ளது. செட்டில்மெண்ட் சமயத்தில் தனியார்களுக்கு வழங்கப்பட்ட மீன் குத்தகையை நீக்கிவிடும் கோரிக்கை அரசின் ஆய்விலுள்ளது.

(ஆ), (இ), (ஈ) மற்றும் இவ்வினாக்களுக்கு இடமில்லை.

## திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக விரைவு பேருந்துகளில் ஏற்படும் விபத்துக்கள் பற்றிய வழக்குகள்

வினா எண் 336—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தில் விரைவு வண்டிகள் விபத்துக்குள்ளானால் அது குறித்த போலீஸ் வழக்குகளை ஓட்டுநர்கள்தான் நடத்துகிறார்களா ?

(ஆ) ஒவ்வொரு வழக்குக்கும் ஏற்படுகிற செலவுகளை யார் செய்கிறார்கள் ?

(இ) விபத்துக்காளாகும் ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட ஓட்டுநரே முதலில் செலவு செய்து, வழக்காடி, விடுதலை பெற்றுவிட்டால், அந்தத் தொகையை நிர்வாகத்திடம் இருந்து திரும்பப் பெறுகிறார்.

(இ) சிறு விபத்துக்களாக இருப்பின், எச்சரிக்கை, கடுமையான எச்சரிக்கை போன்ற தண்டனைகளும், உயிரிழப்பு மற்றும் பெரும் விபத்துக்களாக இருப்பின், ஆண்டு ஊதிய உயர்வு தள்ளி வைத்தல், வேலை நீக்கம் போன்ற தண்டனைகளும், ஓட்டுநர்களுக்கு வழங்கப்படுகின்றன. நடத்துனருக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படுவதில்லை.

## தூத்துக்குடி அனல்மின்நிலைய நிர்மாணப் பணிகள்

வினா எண் 337—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின் நிலைய நிர்மாணப் பணிகளில் சப்-காண்ட்ராக்ட் என்ற முறையில் பினாமி காண்ட்ராக்ட் வேலைகள் நடத்தப்பட்டதும், நடந்து வருவதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) அப்படி எனில் அவ்வேலைகளில் உள்ள ஊழலைத் தவிர்க்க அரசு தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படுள்ளது?



விடை—

(அ) மற்றும் (ஆ) இக்கேள்வி மின்வாரிய நேரடி நிர்வாகம் சம்பந்தப்பட்டது. அரசு மின்வாரிய நிர்வாகத்தில் தலையிட அதிகாரம் இல்லை.

## திருவல்லிப்புத்தூர் தொகுதி ரெவின்யூ கிராமக் கண்மாய்கள் குளங்களிலுள்ள மீன்பாசிகள் மூலம் கிடைக்கும் வருமானம்

வினா எண் 338—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம், வத்திராயிருப்பு கிராமம், கான்சாபுரம் கிராமம், சுந்தரபாண்டியம் ரெவின்யூ கிராமங்களில் உள்ள கண்மாய்களில் ( Tank ) குளங்களில் உள்ள மீன்பாசிகள் வருமானம் தனியாரே பல கமிட்டிகள் பெயரில், அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்த வருமானத்தை பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றிய வருமானத்தில் சேர்க்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் கல்விமண்டல நிலையங்கள்

வினா எண் 339—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் கல்வி மண்டல நிலையம் எத்தனை ?

(ஆ) எங்கெங்கு இயங்குகின்றன ?

(இ) ஒவ்வொரு மண்டல நிலையத்திற்கும் இணைக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை ?

விடை—

(அ) மூன்று.

(ஆ) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ளன.

(இ) (1) சென்னை மண்டலத்தில் இணைக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் :—

(1) சென்னை, (2) செங்கல்பட்டு, (3) வடாற்காடு,

(4) தென்னாற்காடு, (5) பாண்டிச்சேரி,

(6) காரைக்கால்.

(2) மதுரை மண்டலத்தில் இணைக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் :—

(1) திருச்சிராப்பள்ளி, (2) தஞ்சாவூர்,

(3) புதுக்கோட்டை, (4) திருநெல்வேலி,

(5) இராமநாதபுரம், (6) மதுரை,

(7) கன்னியாகுமரி.

(3) கோயம்புத்தூர் மண்டலத்தில் இணைக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் :—

(1) தர்மபுரி, (2) சேலம், (3) பெரியார்,

(4) கோயம்புத்தூர், (5) நீலகிரி.

அரசு உயர் கல்விக் கூடங்களில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு மாலை நேரங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் திட்டம்.

வினா எண் 340—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசின் உயர் கல்விக்கூடங்களில் வகுப்பில் பின் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாலை நேரங்களில் அக்கல்விக் கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களைக் கொண்டே பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?



விடை—

அரசுக் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த பின் தங்கிய மாணவர்களுக்கு மாலை நேரங்களில் அக்கல்லூரிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களைக் கொண்டே பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தொல்பொருள் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்பங்கள் வரலாற்றுச் சின்னங்கள்.

வினா எண் 341—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தொல்பொருள் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்பங்கள் ஏனைய வரலாற்றுச் சின்னங்களை அந்தந்த மாவட்டத் தலைநகரில் காட்சிக்கு வைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

விடை—

தொல்பொருள் ஆய்வுத்துறையால் அகழ்ந்தெடுக்கப்படும் பண்டைய பொருட்கள், சிற்பங்கள் ஆகியவற்றை அந்தந்த மாவட்டத் தலைநகர் அல்லது அந்தந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களில் காட்சிக்கு வைக்கும் திட்டத்தின்படி இதுவரை தரங்கம்பாடி, மதுரை, திருமலைநாயக்கர் அரண்மனை, தருமபுரி ஆகிய இடங்களில் தொல்பொருள் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், கங்கை கொண்டசோழபுரம், கோவலன்பொட்டல், கோவை, ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தொல்பொருள் அருங்காட்சியகம் வைக்க அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்கு அனுமதி அளித்துள்ளது.

நொச்சியம் கிராமத்தில் கட்டப்பட்ட கழிப்பிடம்.

வினா எண் 342—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மணச்சநல்லூர் ஒன்றியம் நொச்சியம் கிராமத்தில் பஞ்சாயத்தால் கட்டப்பட்ட பொது கழிப்பிடத்தை தனியார் அப்புறப்படுத்தி விட்டு தங்களுடைய நிலத்துடன் சேர்த்துக் கொண்டது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(இ) தற்போது அதற்கு பதிலாக வேறு கழிப்பிடம் கட்டப் பட்டுள்ளதா ?

விடை—

(அ) மணச்சநல்லூர் ஒன்றியம், நொச்சியம் கிராமத்தில் பஞ்சாயத்தால் கட்டப்பட்ட பொதுக்கழிப்பிடம் பொது மக்களுக்கு இடையூராகவும் உபயோகமற்றும் இருந்ததால், மாதவப்பெருமாள் கோவில் ஊராட்சியின் தீர்மானத்திற் கிணங்க இடிக்கப்பட்டது. அந்த இடம் தற்போது நொச்சியம் பொடிக்கம்பெனி உரிமையாளரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது.

(ஆ) மேற்படி ஆக்கிரமிப்பை காலி செய்ய உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(இ) நொச்சியம் கிராமத்தில் ஊராட்சிக்கு ஒப்படைக்கப் பட்ட ஆக்கிரமிப்பு இல்லாத வேறு புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் பொதுக் கழிப்பிடம் கட்டப்பட வில்லை.

பெருந்துறையை மையமாகக்கொண்டு நகரப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 343—திரு. நி. கா. நல்லப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருந்துறையை மையமாக வைத்து நகரப் பேருந்து விடும் திட்டம் எவ்வாறு உள்ளது ?

(ஆ) எப்போது முழுமையாக முடியும் ? எத்தனை பேருந்துகள் விட முடிவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெருந்துறையை மையமாகக்கொண்டு நகரப் பேருந்துகள் விடுவதற்கு ஐந்து வழித்தடங்கள் ஏற்க பட்டுள்ளன. இந்த வழித்தடங்களில் நகரப் பேருந்துகள் விடுவதற்கு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்படி நடைமுறை விதிகளைப் பின்பற்றி அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.



பொன்னகரத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 344—திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்ககண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொன்னகரம் தொகுதியில் தேவையான மூலப் பொருட்கள் உள்ள காரணத்தினால் அங்கு ஒரு பேப்பர் மில் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

ராதாபுரம் தொகுதியிலுள்ள ஆத்தாங்கரை பள்ளிவாசல் நிர்வாகம்.

வினா எண் 345—திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள முஸ்லீம்கள் திருத்தலமான ''ஆத்தாங்கரை பள்ளி வாசல்'' நிர்வாகம் வக்ஃபு போர்டின் கட்டுப்பாட்டில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்கப்பட்டது ?

(இ) அதன் ஆண்டு வருமானம் என்ன ?

(ஈ) நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளாரா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) அதன் ஆண்டு வருமானம் ரூ. 25,000 என வக்ஃபு வாரியம் தீர்மானித்துள்ளது.

(ஈ) இல்லை.

### சீனிவாச நல்லூர் கிராமம்.

வினா எண் 346—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் சீனிவாசநல்லூர் கிராமம் இனாம் கிராமமா அல்லது இரயத்துவாரியாக மாற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) இது சம்பந்தமாக உதவி நிலவரித்திட்ட அலுவலர், தஞ்சாவூர், வழங்கிய தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணம் என்ன ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சீனிவாசநல்லூர் இனாம் உடைமை (பரப்பளவு—1.27 சதுர கி.மீ.) தமிழ்நாடு சட்டம் XXV/48, பிரிவு 1(4)ன் கீழ் அரசினால் 3–6–1964 (பசலி 1373)ல் எடுத்துக்கொள்ளப்பட்டு 1385-ம் பசலியில் நிலவரித்திட்டம் அமுலாக்கப்பட்டது. மேற்படி கிராமத்தில் உதவி நிலவரித் திட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் யாவும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்பொழுது அக்கிராமம் ஒரு இரயத்துவாரி கிராமமாகும்.

### அன்னூர் நகரப் பேருந்து நிலையம்

வினா எண் 347—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம், அவினாசி தாலுகா, அன்னூர் யூனியன், அன்னூர் நகர பேருந்து நிலையம் எவ்வளவு தொகையில் புதுப்பிக்கப்பட இருக்கிறது?

(ஆ) எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?



விடை—

(அ) இதற்கான மதிப்பீடு இன்னும் தயாராகவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### அரசு பாலிடெக்னிக்குகளிலுள்ள ஆய்வகப் பணியாளர்களின் நடைமுறை வேலை குறித்து ஆலோசனை கூற அமைக்கப்பட்ட குழு.

வினா எண் 348—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பாலிடெக்னிக்குகளில் உள்ள ஒர்க்ஷாப் இன்ஸ்ட்ரக்டர்களின் நடைமுறை வேலை நிலைமையும், அப்பதவிக்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் பயிற்சி அனுபவம் இவைகளை மாற்றி அமைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அக்குழுவை நியமிக்க தொழில் நுட்ப கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(இ) குழு நியமிக்கப்பட்டது எப்போது ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) 1975ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அரசு பாலிடெக்னிக்குகளில் உள்ள ஆய்வகப் பயிற்சியாளர்களின் நடைமுறை வேலை நிலைமையையும் அப்பதவிக்கு தேவையான கல்வித் தகுதி மற்றும் பயிற்சி அனுபவம் இவைகளை மாற்றி அமைக்க தொழில் நுட்ப கல்வி இயக்குநரால் அவருக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப்பட்டது. இதற்கு அரசின் அனுமதி தேவையில்லை.

### விவசாயத்துறை களப்பணியாளர் மேற்கொண்ட உண்ணாவிரதம்.

வினா எண் 349—திரு. இல. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1981-ம் ஆண்டு ஜனவரியில் விவசாயத்துறை களப்பணியாளர்களில் ஒரு பகுதியினர் தங்கள் பதவிப் பெயர் குறித்து உண்ணாவிரதம் இருந்து அரசுக்கு மனு கொடுத்தனரா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த முடிவு யாது ?

விடை—

(அ) ஆம் ; வேளாண்மை அலுவலர்களுக்கும், துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் ஒரே பதவிப் பெயர் இருக்கவேண்டுமென உண்ணாவிரதம் இருந்தனர்.

(ஆ) வேளாண்மை அலுவலர்களும், துணைவேளாண்மை அலுவலர்களும் தனித்தனி பணி விதித் தொகுதிகளில் வருவதாலும், வேறான சம்பள விகிதம் உள்ளதாலும் இவ்விருவருக்கும் வேறுபாடு அறிய தனிப் பதவிப் பெயர்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதை மாற்ற தேவையில்லை.

உமறுப்புலவருக்கு நினைவுச்சின்னம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 350—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டயபுரத்தில் உமறுப்புலவர் அவர்களின் சமாதி அருகில் நினைவு மண்டபம் எழுப்பவும், சங்க கால முதல் ஆசான் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம் அதங்கோட்டில் ஒரு நினைவு சின்னம் அமைக்கவும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை

(அ) எட்டயபுரத்தில் உமறுப்புலவருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கும் செயற்குறிப்பும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அதங்கோடு என்னுமிடத்தில் அதங்கோட்டாசானுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கும் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) எட்டயபுரத்தில் உமறுப்புலவருக்கு ஒரு நினைவுச் சின்னம் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் முதலியன திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில், அதங்கோடு என்னும் இடத்தில் அதங்கோட்டாசானுக்கு நினைவுச் சின்னம் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் முதலியன பொதுப் பணித்துறைத் தலைமைப் பொறியாளரிடம், கேட்கப்பட்டுள்ளன. கேட்கப்பட்டுள்ள வரைபடங்களும், மதிப்பீடுகளும் கிடைக்கப்பெற்றவுடன் அவற்றைப் பரிசீலித்து இந்த இரு நினைவுச் சின்னங்களும் அமைப்பதற்கான அரசு ஒப்புதல் வழங்கப்படும்.



சித்தூர்நாடு—முள்ளுக்குறிச்சி சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 351—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கொல்லிமலையில் உள்ள சித்தூர்நாடு கிராமத்தில் இருந்து முள்ளுக்குறிச்சி வரை சாலை அமைக்கும் திட்டமாக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மேற்படி சாலை அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு ஆலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 352—செல்வி பி. விஜயலட்சுமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி அரசு சார்பில் ஆலை அமைக்க நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வேலூர் கல்வி மையத்தில் பணிபுரியும் மேற்பார்வையாளர் மீதான புகார்கள்.

வினா எண் 353—திரு. எஸ். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூர் கல்வி மையத்தில் மேற்பார்வையாளராக வேலை செய்யும் இராதாகிருஷ்ணன் என்பவர் மீது பல ஊழல் புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புகார்கள் மீது விசாரணை செய்யப்பட்டதில், அப் புகார்களுக்கு தக்க ஆதாரம் இல்லையெனத் தெரிய வந்தது. ஆகவே அப்புகார்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கத் தேவையில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

### கோவை காந்தி இர்வின் ஸ்டேடியம்

வினா எண் 354—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் சிதம்பரம் பூங்காவில் 1975-ம் வருடம் முடிய இருந்து வந்த காந்தி இர்வின் ஸ்டேடியம் இடிக்கப்பட்டதை திரும்பக் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் நகராட்சி தனது நிதியிலிருந்து ரூபாய் இரண்டு இலட்சம் செலவு செய்து காந்தி இர்வின் ஸ்டேடியத்தை திரும்பக் கட்டவும் இப்பணியை நகராட்சியே எடுத்து செய்யவும் தீர்மானித்துள்ளது. இதற்குரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### பருத்தி பெருக்கு திட்ட அலுவலகத்திலிருந்து கொள்முதல் செய்யப்பெற்ற விதைகள்.

வினா எண் 355—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் உதவி வேளாண்மை இயக்குநர், பருத்தி பெருக்குத் திட்டம் அலுவலகத்தில் இருந்து கொள் முதல் செய்த MCU 5 பல்க் சீட்ஸ் விதைகளில் பல முறைகேடுகள் நடந்துள்ளதாக 1981-ம் ஆண்டு அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



விடை—

(அ) ஆம்.

(ஆ) குற்றச்சாட்டுகள் குறித்து தீவிரமாக ஆராயப் பட்டதின்பேரில், பருத்தி விலை நிர்ணயக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே பருத்தி விதைகள் விற்கப்பட்டது என்றும் அவ்வாறு விற்பனை செய்ததில் எவ்வித முறைகேடுகளோ அல்லது தீய எண்ணங்களோ இல்லை என்றும் விதைகள் தரம் குறித்து பெரிய அளவில் சந்தேகம் ஏதும் இல்லை என்றும் தெரிய வந்தது. மேலும் எந்த வியாபாரிக்கோ அல்லது இடைத்தரகர்களுக்கோ அவற்றால் அளவுக்கு மீறிய இலாபம் ஏதும் இல்லை.

### தீர்த்த தொட்டி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்.

வினா எண் 356—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடி—தேனி நெடுஞ்சாலையில் உள்ள தீர்த்த தொட்டி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை என்றால் உடனடியாக சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) மேற்படி கோவிலின் முன் மண்டபம் இடிந்து உள்ளதை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) போடி—தேனி நெடுஞ்சாலையில் உள்ள தீர்த்த தொட்டி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆளுகைக்குட்பட்ட கோவிலாகும்.

(இ) மேற்படி கோவிலின் முன் மண்டபத்தை திரும்பக் கட்ட திருப்பணிக்குழு அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1981 செப்டம்பர் 1

ஆலங்குடியில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 357—திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆலங்குடியில் ''வனஸ்பதி'' தொழிற்சாலை தொடங்குவது பற்றி அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

இல்லை.

இ. எஸ். ஐ. ஊழியர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான நிபுணர் குழு.

வினா எண். 358—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள இ.எஸ்.ஐ. ஊழியர்கள் 1979 ஜூலை மாதத்தில் வேலை நிறுத்தம் செய்தபோது அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயிக்க ஒரு நிபுணர் குழு அமைக்க ஒப்புக்கொண்டு அறிவிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அந்த நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) அந்த ஊழியர்களுக்கு போனஸ் என்ற பேரால் ஏதாவது தொகை வழங்கப்பட்டதா ?

விடை—

(அ) (ஆ) மற்றும் (இ) இ.எஸ்.ஐ. ஊழியர் இருவகைப்படுவர்.



1981 செப்டம்பர் 1]

(1) மாநில மருத்துவப்பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் அலுவலகங்கள், ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் இவற்றில் பணிபுரியும் அலுவலர்களும், பணியாளர்களும்—இந்த அலுவலர்களும், ஊழியர்களும் மாநில அரசு ஊழியர்கள் இவர்களுள் எவரும் ஜூலை, 1979-ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை.

(2) மத்திய அரசு நிறுவனமா தொழிலாளர் ஈட்டுறுதி கழகத்தில் (E. S. I. Corporation) பணியாற்றும் அலுவலர்களும், பணியாளர்களும். இந்த அலுவலர்களும், பணியாளர்களும் ஜூலை, 1979-ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்களது பிரச்சினைகளை மத்திய அரசு நிறுவனமான தொழிலாளர் ஈட்டுறுதி கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இதில் மாநில அரசிற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை.

பெரியகுளம் நகரில் நகராட்சி மூலம் சினிமா கொட்டகை கட்டும் திட்டம்.

வினா எண். 359—கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியகுளம் நகரில் நகராட்சியால் சினிமா கொட்டகை கட்டும் திட்டம் அரசிடம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டும் பணி துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பெரியகுளம் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

நத்தம் தொகுதியில் காகித ஆலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 360—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நத்தம் தொகுதியில் கறந்தமலை, சிறுமலை, அழகர் மலைப்பகுதிகளில் மூங்கில் அதிகமாக கிடைக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் மூங்கிலை மூலப் பொருளாகக்கொண்டு ஒரு காகித தொழிற்சாலை துவக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### மொடக்குறிச்சி தொகுதி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி

வினா எண் 361—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியில் மொடக்குறிச்சி, அரச்சலூர், அவல்பூந்துறை, வடுகப்பட்டி ஆகிய பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

(ஆ) அத்திட்டத்தை விரைவாக நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இக்கூட்டு குடிநீர்த் திட்டம் இன்னும் அரசின் ஒப்புதலைப் பெறவில்லையாதலால் அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

(ஆ) இத்திட்டம் இன்னும் பரிசீலனையில் உள்ளது.

### காஞ்சிபுரத்திலுள்ள மார்க்கெட்டுகளை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா எண் 362—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

காஞ்சீபுரத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு, ராஜாஜி மார்க்கெட்டுகளை விரிவுபடுத்த வேண்டுமென்ற பொதுமக்களின் நீண்ட நாளைய கோரிக்கை பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?



விடை—

நகராட்சியால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சி.

வினா எண் 363—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாராயத்தால் கார்களை இயக்குவதற்கு எரிசாராயம் பயன்படுத்துவது பற்றிய ஆராய்ச்சி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், ஆராய்ச்சிப் பணியின் முடிவு என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) " எத்தனால் " (Ethenol) என்னும் பொருளைத் தனியாகவோ பெட்ரோல் அல்லது டீசலுடன் கலந்தோ உந்து வண்டிகளில் பயன்படுத்துவதற்காக இதுவரை அப் பல்கலைக் கழகத்தில் நடந்துள்ள ஆராய்ச்சிப் பணிகள் ஊக்கம் தருவதாக உள்ளது. இப்பரிசோதனைகளை மேலும் விரிவாக முழு அளவில் நடத்தவும் எத்தனாலை பயன்படுத்தும் வகையில் உந்து வண்டி எஞ்சின்களில் செய்யவேண்டிய மாற்றங்களைக் கண்டறியவும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### முதுகுளத்தூரில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் துணைப் பணிமனை அமைக்கும் திட்டம்.

வினா எண் 364—திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் பி.ஆர்.சி. சப்-டெப்போ திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தாமதத்திற்கான காரணம் என்ன ?

விடை—

(அ) ஆம். இச்செயற்குறிப்பு பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதில் தாமதம் ஏதுமில்லை.

### லிங்கத்தூர் உப்பிடமங்கலம் இடையே ஓடையைக் கடக்க பாலம் கட்டும் திட்டம்.

வினா எண். 365—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் வட்டம் கரூர்-மணப்பாறை சாலையில் லிங்கத்தூருக்கும் உப்பிடமங்கலத்துக்கும் இடையே ஓடையைக் கடக்க பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### வேலூரில் கொசுத் தொல்லை.

வினா எண். 366—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழிகளில் கொசுத் தொல்லை அதிகமாக இருப்பதால் அப்பகுதியில் யானைக்கால் நோய் அதிகமாக பரவுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?



விடை—

(அ) வேலூர் நகரப் பகுதியில் (கோட்டைப் பகுதி உட்பட) யானைக்கால் நோயைப் பெரிய அளவில் பரப்பும் வகையில் கொசுத் தொல்லை கடுமையானதாக இல்லை.

(ஆ) நகரப்புற மலேரியா திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமும், தேசிய யானைக்கால் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இரண்டு யானைக்கால் கட்டுப்பாட்டுத் திட்டமும் கொசு ஒழிப்புப் பணிகள் செயல்பட்டு வருகிறது.

### நன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதல் பொறியாளர்கள் நியமிக்கும் திட்டம்.

வினா எண். 367—திரு. சி. கோபால் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாகப் பொறியாளர்கள் நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பொறியாளர்கள் ஒரு ஒன்றியத்திற்கு நியமிக்கப்படுவார்கள் ?

விடை—

(அ) தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றியப் பொறியாளர் (Union Engineer) மற்றும் மேற்பார்வையாளர் (Overseer) தவிர, கூடுதலாக நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற பணித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

(ஆ) ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பொதுவாக அவைகள் எடுத்துக்கொண்ட பணிகளின் மதிப்பீட்டிற்கு இணங்க கூடுதலாக ஒரு உதவி கோட்டப் பொறியாளர் (Assistant Divisional Engineer) ஒரு மூன்றாம் நிலை வரைபடம் எழுதுபவர் (Draughtsman, Grade III) ஒரு உதவி வரைபடம் எழுதுபவர் (Assistant Draughtsmen) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

### போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு.

வினா எண். 368—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பல்லவன், கட்டபொம்மன், திருவள்ளுவர் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் முந்தைய அரசு போக்கு வரத்துத் தொழிலாளர்களின் வருங்கால வைப்புப் பற்றிய கணக்கு முறையாக இல்லையென்று புகார் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) இது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### உடையார்பாளையத்தில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 369—திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் உடையார் பாளையத்தில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.



### செஞ்சியில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் கட்டப்படும் தானியக் கிடங்கு.

வினா எண். 370—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் (சார்பில்) ஒரு தானியக் கிடங்கு கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சியில் ஒரு தானியக் கிடங்கு கட்டும் திட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இத்திட்டத்தைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ் வெள்ளிமேடு பேட்டைக்கு சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 371—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் தென்னாற்காடு மாவட்டம் செஞ்சியிலிருந்து அவியூர் வழியாக வெள்ளிமேடு பேட்டைக்கு சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1981 செப்டம்பர் 1

### வல்லம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தாழ்த்தப்பட்ட குடியிருப்புகளுக்கு வானொலி பெட்டி வழங்கும் திட்டம்.

வினா எண். 372—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட குடியிருப்புகளில் இருந்து வானொலிப் பெட்டி வேண்டும் என்று கோரி மனுக்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) வரவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### பொள்ளாச்சி நகராட்சியில் வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணம்.

வினா எண். 373—திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொள்ளாச்சி நகராட்சியில் மின் விநியோகம் நகராட்சியால் வழங்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) நகராட்சியால் விநியோகிக்கும் மின்சாரத்தின் கட்டணத்திற்கும் மின் வாரியத்தால் விநியோகிக்கும் கட்டணத்திற்கும் வித்தியாசம் என்ன ?

(இ) மேற்படி விநியோகத்தை மின்வாரியமே ஏற்க நடவடிக்கை எடுக்குமா ?



1981 செப்டம்பர் 1]

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்வாரிய மின் கட்டணங்களும் பொள்ளாச்சி முனிசிபல் மின் வழங்கு நிறுவன மின் கட்டணங்களும் விவசாயத்திற்காக விநியோகிக்கப்படும் மின் கட்டணம் தவிர மற்ற கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு வித்தியாசப்படுகின்றன —

| இனம். (1) | தமிழ்நாடு மின் வாரிய கட்டண விவரம் (1—5—79 முதல்) (2) | பொள்ளாச்சி முனிசிபல் மின் வழங்கு நிறுவன கட்டண விபரம் (1-3-79 முதல்) (3) |
| --- | --- | --- |
| குறைந்த அழுத்த மின் விசை பெறுவோர் — | | |
| 1. குடியிருப்பு உபயோகங்கள் | 38 பைசா யூனிட் ஒன்றுக்கு | 40 பைசா யூனிட் ஒன்றுக்கு |
| மாதாந்திர குறைந்தபட்ச கட்டணம் | ரூ. 3 | ரூ. 4 |
| 2. கடைவிதி மற்றும் தொழிற்சாலை விளக்கு | 73 பைசா யூனிட் ஒன்றுக்கு | 85 பைசா யூனிட் ஒன்றுக்கு |
| மாதாந்திர குறைந்த பட்ச கட்டணம். | ரூ. 8 | ரூ. 8.50 |
| 3. பொது வீதி விளக்கு | 35 பைசா யூனிட் ஒன்றுக்கு | 34 பைசா யூனிட் ஒன்றுக்கு |
| 4. பவர் இணைப்புகள் | 31 பைசா யூனிட் ஒன்றுக்கு | 50 பைசா யூனிட் ஒன்றுக்கு |
| மாதாந்திர குறைந்தபட்ச கட்டணம். | ரூ. 8 குதிரைத் திறன் ஒன்றுக்கு. | ரூ. 10 குதிரைத் திறன் ஒன்றுக்கு. |
| 5. ஆடம்பர விளக்கு | முதல் 20 யூனிட்டுக்கு ரூ. 2.03. அதற்கு அதிகப்படியான ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 5.03. | முதல் 20 யூனிட்டுக்கு ரூ. 2. அதற்கு அதிகப்படியான ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 5. |
| 6. விவசாயம் | ஒரே கட்டண விகிதம் | |

(இ) இல்லை.

**கோடைக்கானல் ஏரிக்கு குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.**

வினா எண் 374—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடைக்கானல் ஏரியின் குறுக்கே பாலம்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(ஆ) ஏரியை அழகு படுத்தும் திட்டம் தீவிரப்படுத்தப்படுமா ?

(இ) ஏரியில் விசைப்படகுகள் விடப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) அழகுப்படுத்தும் வேலைகள் சுற்றுலாத் துறையால் 1979-80 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

**தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரோடு ரோலர் வாங்க அனுமதி.**

வினா எண் 375—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தன்னிறைவுத் திட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் வேலைகளைத் துரிதமாகச் செய்வதற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ரோடு ரோலர் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அரசு துறைகளிலுள்ள சாலை உருளைகள் தன்னிறைவுத் திட்டத்திலுள்ள வேலைகளைத் துரிதமாகச் செய்ய ஒரு வளர்ச்சிக் கோட்டத்திற்கு ஒரு ரோடு ரோலர் வீதம் ஊராட்சி ஒன்றியங்களின் உபரி நிதியிலிருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.





**தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக உச்சமட்டக்குழு அமைக்கும் திட்டம்.**

வினா எண் 376—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசினுடைய திட்டங்களின்முழுப் பயனும் கிடைக்கிறதா என்பதைக் கண்காணிக்கவும், அவர்களைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றுவது பற்றி ஆலோசனை கூறுவதற்கும் உச்ச மட்ட கமிட்டி ஒன்று அமைக்கப்படுமா ?

விடை—

மாநில ஆதி திராவிடர் நலக்குழு (State Adi Dravidar Welfare Committee) ஒன்று ஏற்கெனவே இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் தலைவர் ஆதிதிராவிடர் நல அமைச்சராவர். இதன் பணி ஆதிதிராவிடர் நலன் பற்றி அவ்வப்போது அரசுக்கு ஆலோசனை கூறுவதாகும். இக் குழுவைத் தவிர, குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்க, மாநில அளவில் அமைந்த குழுவை மீண்டும் திருத்தி அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. மேலும் அரசுப்பணிகளில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆராய முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் ஆதிதிராவிடர் நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட உயர் நிலைக் குழு (High Level Committee) ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வுயர் நிலைக் குழுவின் நிலையான துணைக் குழுவாக (Standing Sub-Committee) பணியாளரைமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு '' High Level Monitoring Committee) ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந் நிலையில் ஆதிதிராவிடர்களின் நலனுக்காக மேலும் ஒரு உச்ச மட்டக் குழு தேவை இல்லை என்று கருதப்படுகிறது.

### சட்டம் பயின்ற அரசுத்துறை பணியாளர்களுக்கு முன்சீப் மாஜிஸ்டிரேட்டு பதவிகள்.

வினா எண் 377 : திரு. செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத்துறைகளில் பணிபுரியும் சட்டம் பயின்றவர்களை மாவட்ட முன்சீப் மற்றும் மாஜிஸ்டிரேட்டுகள் பொறுப்புக்கு அனுப்புகிற முறை தற்போதும் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) அரசுத்துறைகளில் பணிபுரியும் சட்டம் பயின்றவர்கள் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிக்கு, தற்காலிகமாக நியமிக்கப்பட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள், தகுதி அடிப்படையில் மாவட்ட முன்சீப் பதவிக்கும், தற்காலிகமாக நிலை உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

(ஆ) நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக தரம் உயர்த்தி, அவற்றை மாவட்ட முன்சீப் பதவித்தரத்தோடு ஒருங்கிணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருவதால், மாவட்ட முன்சீப் மற்றும் மாஜிஸ்டிரேட்டு பதவிகளுக்கு கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் மூலமாக வழக்குரைஞர்களிலிருந்து நேரடி நியமனங்கள் செய்யப்படவில்லை. ஒருங்கிணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் தேர்வாணைக் குழுவின் மூலம் முறையான நேரடி மற்றும் பணியாற்ற நியமனங்கள் செய்யப்படும்.

### காஞ்சீபுரம் விற்பனைவரி மேல் முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகம்.

வினா எண் 378—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் உள்ள விற்பனை வரிமேல் முறையீட்டு உதவி ஆணையாளர் அலுவலகம் மூடப்படவிருக்கிறதா ?



விடை—

இல்லை.

### பத்திரம் எழுதும் பணி.

வினா எண் 379—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பத்திரம் எழுதுவதை (Documentary Writers) வழக்குரைஞர் தொழிலில் உள்ளவர்களே எழுத வேண்டும் என்று அரசு கட்டாயமாக்குமா ?

விடை—

இல்லை.

### சமையல் எண்ணெய் ஆலை துவக்கும் திட்டம்.

வினா எண் 380—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமையல் எண்ணெய் ஆலை ஒன்று துவக்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எந்த இடத்தில் துவக்கப்படும் ?

(ஈ) எப்பொழுது செயல்படத் துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) (இ) மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

[1981 செப்டம்பர் 1

**தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்ப் பெரியார் ஈ. வெ. ரா. கப்பல்.**

வினா எண் 381—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசிற்குச் சொந்தமான ஈ. வெ. ரா. என்ற பெயருடைய கப்பலை விற்பனை செய்ய அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) என்ன விலைக்கு வாங்கப்பட்டது ?

(ஈ) என்ன காரணத்தால் விற்கப்படுகிறது ?

(உ) புதிய கப்பல்கள் வாங்க உத்தேசம் உள்ளதா ?

விடை—

• (அ) எம். வி. " தமிழ்ப் பெரியார் ஈ. வெ. ரா." ஏற்கனவே சிதைவுக்கு (Scrapping) பிப்ரவரி 81ல் விற்கப்பட்டுவிட்டது.

(ஆ) கல்கத்தாவிலுள்ள மெட்டல் ஸ்கிராப் டிரேட் கார்ப்பரேஷன் (ஒரு இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்) மூலமாக கல்கத்தாவிலுள்ள சௌத்திரி ஷிப் பிரேக்கிங் கம்பெனிக்கு இக்கப்பல் 1981 பிப்ரவரி 4-ந் தேதி விற்கப்பட்டது.

(இ) 1974-ல் இக்கலம் ரூ. 75 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது

(ஈ) 23 வயதான இக்கலத்திற்கு அதிக செலவில் பழுதுகள் செய்ய வேண்டியிருந்தது. பழுதுகளுக்காகும் செலவையும் கப்பலின் வயதையும் எண்ணி, கப்பலை சிதைவுக்கு விற்பதே பொருளாதார ரீதியில் ஆதாயமாக கருதப்பட்டது.

(உ) ஆம்.



1981 செப்டம்பர் 1]

**டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர் கூட்டம்.**

வினா எண் 382—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் டில்லியில் கூடிய முதல் அமைச்சர்களின் கூட்டத்தில் மாநில அரசுகள் விற்பனை வரி விதிக்கும் பண்டங்களில் சிலவற்றை மத்திய அரசின் எக்ஸைஸ் தீர்வை விதிப்பின் கீழ் கொண்டுவர வேண்டுமென மத்திய அரசு கூறியதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றி விவரம் என்ன ?

(இ) தமிழக அரசு என்ன கருத்து கூறியுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை விதிக்கும் திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களைக் கொண்டு வரலாம் என தனது கருத்துருவை மத்திய அரசு தெரிவித்தது :

(1) அனைத்து மருந்து வகைகள்.

(2) பருத்தி நூல்.

(3) சிமெண்ட்

(4) சுத்திகரிக்கப்படாத இரும்பு, எஃகு பாளங்கள் மற்றும் எஃகிலான பொருட்கள்.

(5) காகிதம் மற்றும் காகித அட்டைகள்.

(6) பெட்ரோலியப் பொருட்கள்.

(இ) விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை விதிக்கும் திட்டம் மத்திய அரசினால் செயல்படுத்தப்பட்டால் மாநிலங்களனைத்தும் உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கோ அல்லது மத்திய அரசின் நிர்வாகப் பிரிவின் தரத்திற்கோ குறைக் கப்பட்டுவிடும் என்றும், இத்திட்டம் மத்திய அரசின் ஆயத்

தீர்வைகளோடு மாநில அரசுகளின் விற்பனை வரி வருமானத்தின் ஒரு பகுதியை மொத்தமாக இணைக்க முயற்சிக்கும் செயலாகும் என்றும், மத்திய அரசின் இந்தச் செயற்குறிப்பினை ஏற்றுக்கொண்டால் ஆண்டொன்றுக்கு இம்மாநிலத்திற்கு மேற்குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது கிடைத்துவரும் கணிசமான வரி வருவாயை இவ்வரசு இழக்க நேரிடும் என்றும், உத்தேசிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் மீது மாநிலத்தின் வரிவிதிக்கும் அதிகாரத்தினை தடை செய்வது அரசியல் சட்ட அமைப்பினால் உறுதியளிக்கப்பட்ட மாநில அரசுகளின் வரி விதிப்பு அதிகாரத்தில் அவசியமற்ற ஒரு தலையீடு ஆகும் என்றும், முடிவாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்க உத்தேசித்திருக்கும் இத் திட்டத்தினை கைவிடுமாறு மத்திய அரசினை இம்மாநில அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

### சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வீட்டு மனை நிலப்பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 383—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவின் விடுதலைக்காக சிறைசென்ற சுதந்திர போராட்டவீரர்களுக்கு, வீடு, நிலம், இல்லாதவர்களுக்கு வீட்டு மனை, நிலப்பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

### தமிழ்நாட்டில் எண்ணெய் வித்து வளர்ச்சிக்குத் தனித்துறை அமைக்கும் திட்டம்.

வினா எண் 384—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எண்ணெய் வித்து வளர்ச்சிக்கு தனித் துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?





விடை—

(அ) மற்றும் (ஆ) 12—9—1980 அன்று புதிய எண்ணெய் வித்துத் துறை அமைக்க ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இத் துறை 3—11—1980 முதல் இயங்கி வருகிறது. இதன் முக்கிய நோக்கம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரித்து அதன் மூலமாக தாவர எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும். இதனால் தமிழ் நாட்டில் தாவர எண்ணெய் தேவையை பூர்த்தி செய்வது மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கலாம் என்று நம்பப்படுகிறது. முதல் கட்டப் பணியாக பின் தங்கிய செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் ஒரு சிறப்புத் திட்டம் தேசிய பால்வள வாரியத்தின் உதவியோடு செயல்படுத்தப்படவிருக்கிறது. இத் திட்டம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் இணையத்தின் மூலமாக செயல்படுத்தப்படும்.

### கரூர் தொகுதி மூர்த்திபாளையம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கல்.

வினா எண் 385—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தொகுதியில் மூர்த்தி பாளையம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் நடவடிக்கை கடந்த 15 ஆண்டுகளாக நிலுவையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம் மூர்த்தி பாளையம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க புன்செய் தோட்டக்குறிச்சி கிராம நில அளவை எண். 789/பி2ல் 1·82 ஏக்கர் புன்செய் நிலம் 1973ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் நாளிட்ட குளித்தலை ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியரின் இழப்பீட்டுத் தொகை தீர்ப்பு எண். 6·73ன்படி கையகப் படுத்தப்பட்டு அந்நிலச் சொந்தக்காரர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளதென்பதை அரசு அறியும்.

(ஆ) கையகப்படுத்திய நிலத்தின் சொந்தக்காரர்கள் அந் நிலத்தை காலி செய்ய மறுத்து விட்டனர். குளித்தலை ஆதி திராவிடநல தனிவட்டாட்சியர் கையகப்படுத்திய நிலத்தைக் காலி செய்து விடும்படி நிலச் சொந்தக்காரர்களுக்கு அறிக்கையை 1976 மே மாதத்தில் அனுப்பி வைத்தார். ஆனால் நிலச் சொந்தக்காரர்கள் அப்படிச் செய்யவில்லை. மைய அரசின் நிலம் கையகப்படுத்தும் சட்டம் பிரிவு 47ன்படி நடவடிக்கை எடுக்கும்படி கரூர் வட்டாட்சியர் கோரப்பட்டார். அவர் அவ் வண்ணமே அறிக்கைகளை 1976 அக்டோபர் மாதத்தில் அனுப் பினார். ஆனால் நிலச் சொந்தக்காரர்கள் காலி செய்யவில்லை. நிலம் ஆக்கிரமிப்பு சட்டத்தின்படி கையகப்படுத்திய நிலத்தி லிருந்து வெளியேற மறுக்கும் நிலச் சொந்தக்காரர்களை அகற்ற கரூரில் உள்ள வருவாய்க் கோட்டாட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## புதூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 386—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தாலுகா புதூர் பேரூராட்சியில் நிதி இல்லாத காரணத்தால் குடிதண்ணீர் வழங்க முடியாத நிலை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதே ஒன்றியம் கம்பத்துப்பட்டி ஸ்கீம் மூலம் புதூருக்கு குடிதண்ணீர் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) & (இ) முத்தலாபுரம், கம்பத்துப்பட்டி கிராமக் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்குவது பற்றிய செயற் குறிப்பு திருநெல்வேலி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.



## கல்வி நிலையங்கள், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தாழ்த்தப் பட்டோருக்கான இட ஒதுக்கீடு.

வினா எண் 387—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பு அலுவலகங் களிலும் தாழ்த்தப்பட்டோருக்கு தற்பொழுதுள்ளசதவிகிதத்தை மாற்றி அமைக்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எப்பொழுது அமுல் நடத்தப்படும் ?

விடை—(அ), (ஆ), மற்றும் (இ) :

1980ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டதையடுத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினருக்கான இடஒதுக்கீட்டினை 18 விழுக்காட்டிலிருந்து உயர்த்த வேண்டும் என்று பல கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இவை அரசின் பரிசீலனையில் உள்ளன. பிற்பட்டோருக்கான ஒதுக் கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டதையடுத்து உயர்நீதி மன்றத்திலும் (High Court) இந்திய உச்சநீதி மன்றத் திலும் (S preme Court of India) வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் மீதான தீர்ப்புகள் வழங்கப்பட்ட பின்னரே, இத்தீர்ப்புகளுக்குத் தக்கவாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டினை உயர்த்துதல் பற்றி அரசு முடிவெடுக்க ஏதுவாகும்.

## குழித்துறை ஆற்றில் கணபதியான் கடவு என்னுமிடத்தில் பாலம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 388—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா வில் குழித்துறை ஆற்றில் கணபதியான் கடவு என்னுமிடத்தில் பாலம் அமைப்பதற்கான திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வி லுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆய்வின்மீது அரசு என்ன முடிவு எடுத்துள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பெரியாண்டாங் கோவிலில் கட்டப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 389—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் தாந்தோணி ஒன்றியம் பெரியாண்டாங் கோவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதில் முறைகேடு நடந்துள்ளதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) பெரியாண்டாங்கோவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதில் முறைகேடு நடந்துள்ளதாக அரசிற்கு புகார் ஏதும் இதுவரை வரவில்லை.

(ஆ) அறியும்.

(இ) தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் மேல்நிலைப் நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலையை விரைவில் செய்துமுடிக்க ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.



கம்பம் பகுதியில் வாழைப்பழத்தை பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்

வினா எண் 390—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாழைப்பழத்தை பக்குவப்படுத்தி அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையை கம்பம் பகுதியில் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை: இல்லை.

கம்பம் தொகுதியில் சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

வினா எண் 391—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியில் சர்க்கார ஆலை நிறுவ அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை : இல்லை.

குலசேகரம் பகுதியில் காகித ஆலை அமைக்கும் திட்டம்

வினா எண் 392—திரு. டி. மணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மூங்கில் அதிகமாக கிடைக்கின்ற காரணத்தால் குலசேகரம் பகுதியில் காகிதத்தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

விடை : இல்லை.

கொடைக்கானல் மூனாறு சாலையை செப்பனிடுதல்.

வினா எண் 393—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலிலிருந்து மூனாறுவரை செல்லும் சாலை கேரளா எல்லைவரை பழுதடைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை செப்பனிட அரசு உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

அர்ஜீனா நதியின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

வினா எண் 394—திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகர் தாலுகாவில் எம். புதுப்பட்டி—எரிச்சநத்தம் சாலையில் ஓடும் அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

குழித்துறை நகராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம் கட்டும் திட்டம்

வினா எண் 395—திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குழித்துறை நகராட்சிக்குப் புதிய பஸ் நிலையம் கட்டக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?



விடை —

(அ) மற்றும் (ஆ): நகராட்சியின் பரிசீலனையிலுள்ளது.

சேடப்பட்டி பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்.

வினா எண் 396—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மதுரை மாவட்டம்-சேடப்பட்டிப் பகுதியில் பெருமளவில் தரமான சுண்ணாம்புக்கல் கிடைப்பது பற்றிய தகவல் அரசுக்குக் கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனைப் பயன்படுத்தி அப்பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க அரசு திட்டமிடுமா?

விடை—

(அ) சேடப்பட்டி பகுதியில் சுண்ணாம்புக்கல் கிடைப்பது பற்றி தகவல் இதுவரை இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

கல்பட்டு கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 397—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் தாலுகா காணை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கல்பட்டு கிராமத்தில் நல்ல குடிநீர் கிடைக்காததால். காலரா நோயினால் சில நபர்கள் இறந்து விட்டது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இனி நல்ல குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

### விக்கிரமங்கலத்தில் அரசு மருத்துவ மனை கட்டும் திட்டம்.

வினா எண் 398—திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் விக்கிரமங்கலத்தில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

ஏதும் தற்போது ஆய்விலில்லை.

### கால்நடை மருத்துவமனைகளில் தவறான முறையில் பயன்படுத்தப் படும் மருந்துகள்

வினா எண் 399—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருவாடனை கால்நடை மருத்துவமனையில் கால் நடைகளுக்கு முறையான வைத்தியம் செய்யப்படவில்லை என் பதையும் அங்குள்ள மருந்துகள் தவறான முறையில் பயன் படுத்தப்படுவதையும் அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) திருவாடனை கால்நடை மருந்தகத்தில் உரிய முறை யிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. எந்த மருந்தும் தவறான முறையில் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.



வினா எண் 400—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் கால்நடை மருத்துவமனையில் மருந்துகள் சரியான முறையில் பயன்படுத்துவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) அது பற்றி புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) தேவகோட்டை கால்நடை மருந்தகத்தில் மருந்துகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) அது பற்றி புகார் எதுவும் வரப்படவில்லை.

(இ) இவ்வினா எழாது.

### அரசு ஊழியர் பிள்ளைகளுக்குச் சட்ட மேற்படிப்பு படிக்கும் போது தகுதி அடிப்படை உதவுத் தொகை வழங்கல்.

வினா எண் 401—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்ட மேற்படிப்பு (M.L.) படிக்கும் அரசு ஊழியர் களின் பிள்ளைகளுக்கு mirit scholorship வழங்கும் முறையில் தற்போது நடைமுறையில் உள்ள முதல் வகுப்பு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்த அரசுஆவன செய்யுமா ?

விடை—

கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் தகுதி அடிப்படையில் வழங் கப்படும் தேசிய படிப்பு—உதவித் தொகைத் திட்டம் மத்திய அரசுத் திட்டமாகும். இத்திட்டத்தின் விதியைத் தளர்த்த மாநில அரசு ஏதும் செய்ய இயலாது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனி தொழில் விரிவாக்க அலுவலர்கள் நியமிக்கும் திட்டம்

வினா எண் 402—திருவாளர்கள் வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனியே தொழில் விரிவாகக அலுவலர்கள் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இப்போது இல்லை.

ஒழுங்குமுறை விற்பனைத் கூடங்கள் மூலம் விளை பொருட்களை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு விற்பனை செய்யும் திட்டம்

வினா எண் 403—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்களை நேரடியாக கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு விற்பனை செய்ய அரசிடம் செயற்குறிப்பேதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





கால்நடைத்துறையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு விடுப்புச் சலுகைகள் வழங்கல்.

வினா எண் 404—திரு. வேடந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் பணிபுரியும் B.V. Sc டாக்டர்கள் மேல்படிப்பு (M.V.Sc) படிக்க வசதியாக Extra Ordinary Leave அரசால் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த விடுப்புக் காலம் பணிக் காலமாகக் கணக்கிடப் படுகிறதா?

(இ) இல்லையெனில் காரணம் என்ன?

விடை :

(அ) ஆம்.

(ஆ) இல்லை

(இ) அரசு விதிகள் இடமளிக்காததால் அந்த மாதிரியான விடுப்புக் காலத்தைப் பணிக்காலமாக எடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை.

சிறியகண்கள் கொண்ட வலைகள் மூலம் மீன் பிடிப்பதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 405—திரு. சு. புருஷோத்தமன் : மாண்புகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவர்கள் சிறிய கண்கள் கொண்ட வலைகளைக் கொண்டு மீன் பிடிப்பதினால் மீன் வளர்ச்சி பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது ?

விடை—

பொதுவாக உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளம் பாதிக்கப்படாமல் இருக்க ஒரு குறிப்பிட்ட அளவு நீர்மட்டம் (Water Level) இருக்க வேண்டும். அந்த நீர்மட்டத்திற்

கும் கீழே தண்ணீர்வற்றிவிடும் போது சிறிய கண்கள் உடைய வலைகளை உபயோகித்து மீன் பிடித்தால் வளரும் சிறு மீன் குஞ்சுகளும் பிடிபட்டு மீன்வளம் பாதிக்கப்படும். அப்போது பெரிய கண்களை உடைய வலைகளைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று மீன் துறையினர் மீனவர்களுக்கு அறிவுரை வழங்குவதோடு கண்காணிப்பும் செய்கின்றனர். கடல் மீன்பிடிப்பின் போதும் இது போன்ற பாதிப்புகள் நேராவண்ணம் மீன் துறையினர் அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

கொடைக்கானல் வட்டம் பூலத்தூரில் ஆதி திராவிடர்களுக்கென கட்டப்படும் வீடுகள்.

வினா எண் 406—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் வட்டம் பூலத்தூரில் ஆதி திராவிடர்களுக்கு எனக் கட்டப்படும் வீடுகள் எத்தனை?

(ஆ) இதுவரை கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

விடை—

(அ) கொடைக்கானல் வட்டம் பூலத்தூரில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு எனக் கட்டப்படும் வீடுகள் 28.

(ஆ) இதுவரை கட்டப்பட்ட வீடுகள் 19.

காவிரி நதி நீரை வெள்ளாறு கோமுகி ஆற்றில் திருப்பிவிடும் திட்டம்.

வினா எண் 407—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது திருச்சிராப்பள்ளி—தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருக்க காவிரி நதிநீரைச் சேலம், தென்னாற்காடு மாவட்டம் வெள்ளாறு கோமுகி ஆற்றில் திருப்பிவிடும் திட்டம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எத்தனை ஏக்கர் பாசனம் பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

நிலவள வங்கி மூலம் கிணறுகள் வெட்டவும், ஆழப்படுத்தவும் வழங்கப்படும் கடன் தொகை.

வினா எண் 408—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலவள வங்கிகள் புதிய கிணறுகள் வெட்டுவதற்கும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

(இ) வறட்சி ஏற்பட்டுள்ள இந்நேரத்தில் மீண்டும் கடன் வழங்க அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) அதிகமான தவணை தவறிய நிலுவையின் காரணமாக கடன் வழங்கும் தகுதியை இழந்துள்ள நிலவள வங்கிகள் கடன் வழங்க இயலாத நிலையில் உள்ளன.

(இ) தவணை தவறிய கடன் பாக்கிகளைக் குறிப்பிட்ட அளவு வசூல் செய்து அதன் மூலம் கடன் வழங்கும் தகுதிபெறும் நிலவள வங்கிகள் மீண்டும் கடன் வழங்கும்.

சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் தங்கும் நிழற்குடைகள் கட்டும் திட்டம்.

வினா எண் 409—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பிராட்வே பேருந்து நிலையத்தில் தங்கும் நிழற்குடைகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

(அ) பிராட்வே பஸ் நிலையத்தில் நிழற்குடைகள் கட்டும் உத்தேசம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

### கடம்பத்தூர் ஒன்றியத்திலுள்ள வேளாண்மை பொறியியல் மையம்.

வினா எண் 410—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம் கடம்பத்தூர் ஒன்றியத்தில் வேளாண்மை—பொறியியல் மையம் செயலற்று இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

(அ) கடம்பத்தூர் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையத்தில் பணி புரிந்த நிர்வாகஇயக்குநரும் எழுத்தரும் பணியை விட்டுச் சென்றதால், பூந்தமல்லி வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மைய நிர்வாக இயக்குநரின் கூடுதல் பொறுப்பில் இம்மையம் செயல்படுகிறது.

(ஆ) மையத்திற்கு முழுநேர நிர்வாக இயக்குநர் நியமனம் செய்தபின் இம்மையம் முழு அளவில் செயல்படும்.



### உடுமலைப் பேட்டையில் பருத்தி அரவை ஆலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 411—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டையில் பருத்தி அரவை ஆலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### மதுராந்தகம் வட்டத்தில் மணிலாப்பயிர் பூச்சிகளால் தாக்கப் படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை.

வினா எண் 412—திரு. எஸ். டி. உக்ரம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகாவில் மணிலாப் பயிர் பூச்சிகளால் தாக்கப்படுவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் மணிலாப் பயிர்கள், பூச்சிகள் விழுவதை தடுப்பதன் பொருட்டு வருமுன் காக்கும் நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன.

மணல் ஏரி ஓடையின் குறுக்கேயுள்ள சிறிய பாலம்

வினா எண் 413—திரு. இ. கணேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இளம்பிள்ளை-சின்னப்பட்டி போகும் சாலையில் ''மணல் ஏரி ஓடை'' யின் கீறுக்கே உள்ள சிறிய பாலம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது பழுது பார்க்கப்படும்?

விடை—

(அ) இப்பாலம் தற்போது நல்ல நிலையில் உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

ஆரல்வாய் மொழியில் தீக்கிரையான ஆதி திராவிடர்கள் வீடுகள்.

வினா எண் 414—திரு. டி. மணி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 5—3—1981ல் குமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியில் ஆதி திராவிடர்கள் வசித்து வந்த பல வீடுகள் தீக்கிரையாயினவா?

(ஆ) ஆம் எனில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக்கொடுக்க திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

(அ) 5—3—1981-ல் கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஆதி திராவிடர்கள் வசித்து வந்த பல வீடுகள் தீக்கிரையாயின.

(ஆ) தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக்கொடுக்க திட்டங்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.



அரசு கண்மாய்களை குறைந்த குத்தகைக்கு எடுத்து மீன் பிடிக்கும் சங்கங்கள்.

வினா எண் 415—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர்கள் இல்லாத இடங்களில் மீனவர்கள் சங்கம் என்றபெயரில் சங்கங்கள் அமைத்து அரசு கண்மாய்களில் குறைந்த குத்தகை எடுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அப்படிப்பட்ட இடங்களை எல்லாம் பகிரங்க ஏலத்திற்கு கொண்டுவர அரசு முயற்சிக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள மீனவர்கள் உள்ள இடங்களில்தான் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு மீன்பாசி குத்தகை வழங்கப்படுகிறது. மீனவர் அல்லாதாரை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு கண்மாய்களையோ மற்ற உள்நாட்டு நீர் நிலைகளையோ குத்தகைக்கு அளிப்பதில்லை. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் செயல்படும் இடங்களில் உள்ள மீன் துறை மற்றும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான நீர் நிலைகளின் மீன்பாசி குத்தகைகளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. சங்கங்கள் குத்தகை எடுக்க முன்வராதபோதுதான் மீன்பாசி பொது ஏலத்தில் விற்கப்படும்.

ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் பகுதி நேர ஊழியர்களை முழுநேர ஊழியாகளாக்க திட்டம்.

வினா எண் 416—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களில் பகுதிநேர ஊழியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கும் ஊழியர்களை முழுநேர ஊழியர்களாக்கும் உத்தேசம் அரசுக்குள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து அரசு நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கிராமப்புற நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படும் நுகர் பொருட்கள்.

வினா எண் 417—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறத்தில் துவங்கப்பட்ட நியாயவிலைக் கடைகளுக்கு சரியான முறையில் சாமான்கள் போகவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதை நிவர்த்திக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

விடை—

(அ) சென்ற ஆண்டு மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 2176 மதிப்புள்ள நுகர் பொருட்கள் கிராம அங்காடிக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. எனவே, இக் கேள்விக்கு ஆதாரம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Synthetic and Polyster Cloth materials produced by the Tamil Nadu Textile Corporation Units.*

வினா எண் 418—திரு. சோ. இராசாராமன்: will the Honourable the Minister for Industries be pleased to state .

(a) whether the Units of the Tamil Nadu Textile Corporation has been producing synthetic and Polyster Cloth materials;

(b) if so, the details thereof?

விடை—

(அ) No.

(ஆ) Does not arise.



மத்திய வங்கிகள் மூலம் வழங்கப்படும் நகை கடனுக்கான வட்டி.

வினா எண் 419—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய வங்கிகளின் மூலம் வழங்கப்படும் நகை கடனுக்கு வட்டி குறைக்கின்ற உத்தேசம் உண்டா ?

விடை—

இல்லை.

பேராவூரணி கேந்திர கிராமக் கால் நடைத் திட்டம்.

வினா எண் 420—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் கேந்திர கிராமக் கால் நடைத் திட்டம் வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆனால், அத்திட்டம் அரசினால் அங்கீகரிக்கப்படவில்லை.

நில உச்சவரம்புச் சட்டம் மூலம் கைப்பற்றப்பட்ட நிலங்கள்.

வினா எண் 421—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் கைப்பற்றப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு அப்படி எடுக்கப்பட்ட நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன ?

விடை—

1—4—1981 ஆம் நாள் நிலவரப்படி—

(அ) 1,27,390 ஏக்கர்கள்.

(ஆ) 63,750 பேர்கள்.

**ஆம்பூர்-வாணியம்பாடி இடையில் அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டம்.**

வினா எண் 422—திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர்-வாணியம்பாடி இடையில் ஒரு அனல்மின் நிலையம் அமைக்க வேண்டி ஏதேனும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அனல் மின் நிலையம் அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**கள், சாராயக் கடைகளை ஏலம் எடுப்பதற்கான விதி முறைகள்.**

வினா எண் 423—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"1972–73, 1973–74-ம் ஆண்டுகளில் கள், சாராயக் கடைகளை ஏலம் எடுத்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் பாக்கி உள்ளவர்கள் இவ்வாண்டு விடப்படும் கள், சாராய ஏலங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவார்களா ?



விடை—

1981-ம் ஆண்டு தமிழ்நாடு கள், சாராயக் கடைகளை (ஏலத்தில் விடுதல்) விதி 12-ன் கீழ் இதற்கு முன் சாராயம் மற்றும் கள்ளுக்கடை ஏலம் எடுத்து கிஸ்தீ கட்டத் தவறியவர்களின் ஏலக் கோரிக்கையை விற்பனை அலுவலர் ஏற்றுக் கொள்ள மறுக்கலாம்.

**திருச்சி மாவட்டத்தில் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் வியாபாரக் கடன்.**

வினா எண் 424—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த வியாபார கடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு காரணம் என்ன ?

(இ) மீண்டும் அக்கடனை வழங்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பி திருச்சி மாவட்டத்தில் வசிப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த வியாபாரக் கடன் நிறுத்தி வைக்கப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

**பம்பப்படையூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.**

வினா எண் 425—திரு. இ. எஸ். எம். பக்கிர் முகமது : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணம் வட்டம் பம்பப்படையூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தில் (Z. 755) நிர்வாகக் குழுவை கலைக்க அரசு செயற் குறிப்பு ஏதேனுமுள்ளதா ?

(ஆ) திருச்சி பால்வள கூட்டுறவு துணை இயக்குநர் தவறான தகவல் அனுப்பியிருந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

### காஞ்சிபுரம்—தருமபுரி பேருந்துப் பணி

வினா எண் 426—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சிபுரம்—தருமபுரி வழித்தடத்தில் பேருந்துவிட அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பேருந்துகள் விடப்படாததின் காரணம் என்ன ?

(இ) உடன் பேருந்துகள்விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) தற்போது காஞ்சிபுரத்தையும் தருமபுரியையும் இணைக்கும் வகையில் துரிதப் பேருந்துகளின் இயக்கம் போதுமானதாக உள்ளதால் காஞ்சிபுரம்-தருமபுரி, புதிய நேரடி தடத்தை இயக்கத் தேவையில்லையென திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கருதுகிறது.





### மானிஹாடா மஞ்சக்கம்பையிலுள்ள அருள்மிகு எத்தையம்மன் ஆலயம்.

வினா எண் 427—திரு. கே. உச்சி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் ஊட்டி தொகுதி மானிஹாடா மஞ்சக்கம்பையிலுள்ள பிரசித்திப் பெற்ற எத்தையம்மன் கோயிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம் ஊட்டி தொகுதி மானிஹாடா மஞ்சக்கம்பையிலுள்ள அருள்மிகு எத்தையம்மன் ஆலயம் இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறையின் கீழ் இதுவரை கொண்டுவரப்படவில்லை. தற்போது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கடலூர் நிலவள வங்கி.

வினா எண் 428—திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் நிலவள வங்கி சட்டமன்ற உறுப்பினர் யார் மீதாவது வழக்கு தொடர்ந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எதற்காக தொடரப்பட்டுள்ளது ?

(இ) அதன் தற்பொழுதைய நிலை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

இராயகிரி கிராம ஆற்று புறம்போக்கு நிலத்தை மயானமாக மாற்றும் திட்டம்.

வினா எண் 429—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி துணைத் தாலுகா, இராயகிரி கிராமம் 0.134 இராயகிரி பனைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் தொழில் செய்து வரும் ஆற்றுப் புறம்போக்கு சர்வே எண். 610/2, 611/2 ஆகிய இடங்களை மயானமாக மாற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

புல எண் 610/2-ல் மொத்தப் பரப்பு 3.94 ஏக்கரில் ஒரு பகுதியை மட்டும் மயானம் புறம்போக்காக மாற்றும் செயற் குறிப்பு திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரியின் பரிசீலனையில் உள்ளது.

கிராமப்புற வீட்டு வசதி சங்கம் மூலம் வீடுகள் கட்ட வழங்கப்படும் கடன்.

வினா எண் 430—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

கிராமப்புற வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக வீடுகள் கட்ட கடன் வழங்கும் போது தற்போது இருக்கிற ஒரே இடத்தில் 10 வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற விதிமுறையைத் தளர்த்தி தனிப்பட்ட ஒருவருக்கு வீடு கட்ட கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை :—இல்லை.



அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள உதவி அலுவலர் பதவிகள்.

வினா எண் 431—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கி வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் வேலை பயில்வோர் பயிற்சித் திட்டத்தில் (Apprentices Training Scheme) எத்தனை உதவி பயிற்சி அலுவலர் பதவிகள் காலியாய் உள்ளது ?

(ஆ) எப்போது அந்த இடங்கள் நிரப்பப்படும் ?

விடை—

(அ) உதவி பயிற்சி அலுவலர் (தொழிற் பழகுவோர்சட்டம்) பதவி ஒன்றும் தற்சமயம் காலியாக இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தமிழக நீதி மன்றங்களில் சாட்சிய மளிப்பதை டேப் மூலம் பதிவு செய்யும் திட்டம்.

வினா எண் 432—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடைஅளிப்பாரா—

தமிழகத்து நீதிமன்றங்களில் சாட்சியமளிப்பதை டேப் மூலம் பதிவு செய்யும் முறையை அமுல் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—இல்லை.

பேரம்பாக்கம் கிராம பின்தங்கிய வகுப்பினருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை.

வினா எண் 433—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா:—

(அ) திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் பின் தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்பட்ட வீட்டு மனை பட்டா இன்னும் அவர்களுக்கு (கையில்) கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் 48 பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இது தவிர 236 ஆதி-திராவிட மக்களுக்கும், 3 மலை சாதியினருக்கும், 4 முற்பட்ட வகுப்பினருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு மனைப் பட்டா வழங்கத் தகுதியான இடங்கள் ஏதும் இல்லை.

கோவை மாவட்டத்தில் தெர்மல் நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 434—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தெர்மல் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

(இ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.



காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை விஸ்தரிக்கும் திட்டம்.

வினா எண் 435—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை விஸ்தரிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அத்திட்டம் தொடங்கப் படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இவ்வாலையை விரிவு படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

தமிழக கூட்டுறவு சங்கங்களிலுள்ள வசூலிக்க இயலாத கடன்கள்.

வினா எண் 436—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79, 1979–80 ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் வசூலிக்க முடியாத கடன்கள் (Bad debts) ரத்து செய்ய வேண்டுமென்று அரசுக்கு அனுப்பிய கடன் (proposal) எத்தனை ?

(ஆ) அக்கடன்களின் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) இது தொடர்பாக அரசுக்கு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரிடமிருந்து கருத்துரு எதுவும் வரவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

சென்னை மீன் காட்சி சாலையை நவீனப்படுத்தும் திட்டம்.

வினா எண் 437—திரு. இ. கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள மீன் காட்சி சாலையை நவீனப் படுத்த அரசு எண்ணியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சேலத்தில் மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 438—திரு. இ. கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று ஏற் படுத்த அரசு எண்ணியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.



கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் செய்து வரும் ஆராய்ச்சி.

வினா எண் 439—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னை மரத்தையும், பனை மரத்தையும் (cross polination) ஒட்ட வைத்து தென்னை மரத்தைப் போலவே பனை மரத்தை உருவாக்கும் ஆராய்ச்சியை கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் செய்து வருவது உண்டா ?

விடை—இல்லை.

பொட்டனேரி ஆராய்ச்சி நிலையம்.

வினா எண் 440—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை (பொட்டனேரி)யில் தண்ணீர் பற்றாக் குறை இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) பொட்டனேரி ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது தேவையான தண்ணீர் வசதி உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

இணைப்பு-II.

[672-ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினா எண் 320-க்கான விடையைக் காண்க.]

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில் பக்தர்களால் காணிக்கையாக செலுத்தப்படும் முடியை சேகரித்துக் கொள்ளும் உரிமை பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், முடி சேகரித்துக் கொள் ளும் உரிமை சரியான தொகைக்கு ஏலத்தில் போவதில்லை. அப்பொழுது திருக்கோயில் நேரடி நிர்வாகம் மூலம் சேகரிக்கப் பட்ட முடி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) 1975 முதல் 1980 (நவம்பர் முடிய) காணிக்கையாகக் கிடைத்த முடியின் மூலம் மேற்படி திருக்கோயிலுக்கு கிடைத்த வருமான விவரம் கீழ்வருமாறு :—

| | காலம். | ஏலமுறை. | முடியின் மூலம் கிடைத்த குத்தகை தொகை அல்லது கிரயத் தொகை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | | ரூ. |
| 1. | 1–2–75 முதல் 31–1–76 முடிய | பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது. | 1,51,000.00 |
| 2. | 1–2–76 முதல் 31–1–78 முடிய | ஷ்டி | 3,02,000.00 |
| 3. | 1–2–78 முதல் 28–2–78 முடிய | திருக்கோயில் நேரடி நிர்வாகம் மூலம் சேகரிக்கப்பட்ட முடியை பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. | 13,51.000 |
| 4. | 1–3–78 முதல் 31–8–78 முடிய | பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது. | 90,300.00 |
| 5. | 1–9–78 முதல் 31–8–79 முடிய | ஷ்டி | 2,20,000.00 |
| 6. | 1–9–79 முதல் 30–11–79 முடிய. | திருக்கோயில் நேரடி நிர்வாகம் மூலம் சேகரிக்கப்பட்ட முடியை ஏலத்தில் விற்பனை செய்யப் பட்டது. | 55,250.00 |
| 7. | 1–12–79 முதல் 30–11–80 முடிய. | பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப் பட்டது. | 3,10,000.00 |



## இணைப்பு-III

[674-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 23-க்கான விடையைக் காண்க.]

ஊராட்சி ஒன்றியங்களின் வசமுள்ள பழுதடைந்துள்ள டிராக்டர்களைப் பற்றிய விவர அறிக்கை.

### விவர அறிக்கை.

| | | |
|---|---|---|
| (1) | ஓராண்டிற்கு குறைவான காலமாக பழுதடைந்தவை. | 36 |
| (2) | ஓராண்டு காலமாக பழுதடைந்தவை .. | 17 |
| (3) | ஈராண்டு காலமாக பழுதடைந்தவை .. | 7 |
| (4) | மூன்றாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 28 |
| (5) | நான்காண்டு காலமாக பழுதடைந்தவை | 26 |
| (6) | ஐந்தாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 23 |
| (7) | ஆறாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 16 |
| (8) | ஏழாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 12 |
| (9) | எட்டாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 5 |
| (10) | ஒன்பதாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 7 |
| (11) | பத்தாண்டு காலமாக பழுதடைந்தவை .. | 1 |
| (12) | உபயோகமற்றது என ஒதுக்கப்பட்டவை .. | 7 |
| | மொத்தம் | 185 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty St. A. Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 F. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate. Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagchaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-17.

R.C. 2773 3590 72/RF

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.